12

Presented to

Srimath. Dakshinamurti Swamigal.

by

C. R. Namasivayam

28. 4. 06.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வடமலையப்ப பிள்ளையன்

அருளிச்செய்த

மச்சபுராணம்.

இது

திருமயிலை வித்வான்

சண்முகம்பிள்ளை யவர்கள்

பரிசோதித்தது.

முதற்பதிப்பு : 1000 பிரதி.

ம-ள-ள-ஸ்ரீ,

ஒதிக்காடு - கந்தசாமி முதலியாரவர்களால்

தமது

சென்னை :

மினர்வா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1900

Registered Copyright.

இதன் விலை : ரூபா 2 - 8 - 0.

உ

திருச்சிற்றம்பலம்.

மச்சபுராண பிரகடனம்.

பாண்டியநாட்டிற் சிறந்த செல்வப்பதியாகிய திருநெல்வேலியில் இருநூறு வருடங்களுக்கு முன்னே அரசுபுரிந்த சைவகுல சிகாமணியெனத்தகும் ஸ்ரீமான் வடமலையப்ப பிள்ளையன் அருளிச்செய்த இவ்வரிய புராணகாவியம் நெடுநாளாய் இரண்டொருவர்க்கே பயன்படும் ஏட்டுப்பிரதியாயிருந்தது. அதனல் அப்படியொன்றுண்டென்றே அநேகர் அறியாராயிருந்தார். ஏழுவருடங்களுக்கு முன்னே அவர் வமிச நற்றேன்றலாகிய ம-ா-ா-ஸ்ரீ, சுப்பிரமணிய பிள்ளையனவர்கள் இந்நூலை வெளிப்படுத்த வேண்டுமெனத் தம்மனத்துதித்த ஆசைமிகுதியால் பிரதிகள் சம்பாதித்து நூலித்தகையதென உலகிற்குப் புலப்படுத்த வேண்டிப் பாயிரம் நைமிசாரணியச் சிறப்பு அநுக்கிரமணி என்னும் மூன்றையுஞ் சஞ்சிகை ரூபமாக வெளிப்படுத்தினர். பின்னர்ப் பல காரணங்களை முன்னிட்டு அவர் நூலைப் பூரணமா வெளியிடுஞ் சுதந்தரத்தை எமக்குத்தந்தனர். யாமும் அவ்வாறே சுதந்தரத்தைப்பெற்று அவர் வேண்டுகோளையும் அநுமதியையுந் துணையாக்கொண்டு இதனை வெளிப்படுத்தலாயினேம். நூலைப்பரிசோதிக்க வெண்ணி ம-ா-ா-ஸ்ரீ சண்முகம்பிள்ளையவர்களை வேண்ட அவர்களும் பரிசோதித்துத்தந்து எமக்குப் பேருதவி புரிந்தார்கள். நூல்முழுதும் அச்சாயும் சிற்சில காரணங்களால் பிரசுரிக்கத் தடைப்பட்டிருந்தது. அப்போழ்து ம-ா-ா-ஸ்ரீ கல்குளம் குப்புசாமி முதலியாரவர்களிடத்தி லிதனைக்குறித்துப் பேசியபொழுது தாம் உதவிபுரிவதாய் வாக்களித்து, ம-ா-ா-ஸ்ரீ அனவரத விநாயகம்பிள்ளையவர்கள் தந்த முகவுரையோடு நூற்பிரசுரத்திற்கு அத்தியாவசியகமான வேறு விஷயங்களையு முடன் சேர்த்து இந்நூல் சீக்கிரம் வெளிவருமாறு செய்தனர். இதில் முயற்சியெடுத்துக்கொண்ட மற்றைக் கனவான்களுக்கும் மனப்பூர்வமாய் வந்தனஞ் செலுத்துகின்றேம். இந்நூல் கற்பவர்க்கெல்லாம் நன்மைபயந்து நிலவுலகில் நீடூழி வாழ்கவெனச் சிவபெருமானது திருவருளைநோக்கிப் பிரார்த்திக்கின்றேம்.

சாம்ஸன் கம்பெனி,
1900ஸு நவம்பர்மீ 24உ. ஓ. கந்தசாமிமுதலியார்.

With Messrs. Thompson & Co.'s
COMPLIMENTS.

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto

https://archive.org/details/gc-sh19-0041

உ

கணபதிதுணை.

மச்சபுராண முகவுரை.

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்திலே பிறக்கும் பெரும் பேறுபெற்ற மாந்தர்க்கெல்லாம் இயற்கையிலேயே உரிமையாயமைந்த பொருள்கள் பொன்னல்ல வெள்ளியல்ல விடல்ல மாடல்ல அவ்வவர் உடல்தானுமல்ல முத்திநெறியை எளிதினும் விரைவினுந் தலைக்கூடுவிக்கும் ஞானநூல்களேயாம். அந்நூல்கள்தாம் பண்டிதர் மட்டுமே பயிலுந்தன்மையதாய ஸம்ஸ்கிருத பாஷையினும், பண்டிதர் பாமரரென்னு மிருவகையினரும் பயிலுந் தன்மையதாய தமிழ் மொழியினும் அமைந்தனவாம். தமிழ் மொழியிலமைந்தனவற்றிற் பெரும்பான்மை நூல்கள் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள முதனூல்களின் வழித்தாய்ச் செய்யப்பட்டனவாயிருக்கின்றன. உதாரணமாக, சித்தாந்த சைவசாத்திரங்களுள்ளே தலைமைபெற்ற சிவஞானபோதம் வடமொழி ரௌரவாகமத்துக் கிடந்த பன்னிரண்டு சூத்திரங்களின் மொழிபெயர்ப்பென அந்நூலே கூறுகின்றது. தமிழ்மொழித் தருக்க நூல்களெல்லாம் வடமொழியைச் சார்ந்தனவென்பது பிரசித்தம்.

இனி, ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள நூல்கள் வேதாகம புராணேதி காசங்களென வொருமுறையாற் றெகுத்துக் கூறப்படும். இவற்றையன்றி வேறு நூல்களின்றென்பது கருத்தன்று. வேறுள்ளனவெல்லாம், இவற்றின் வழி வந்தனவும் இவற்றை விளக்க வந்தனவுமாகின்றன வென்பதே கருத்தாம்,

வேதங்கள் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என நான்காம். வேதம் என்னும் பதம் வித் (விஃ) என்னும் தாதுவினின்றும் பிறந்தமையின் 'பண்டையோர் அறிவு' எனப் பொருள்படும். வேதங்களின்மூலத்தை யறிவாரொருவரு மின்மையானும் நெடுங்காலம் அவைகேள்வி முறையாற் கற்பிக்கப்பட்டு வந்தமையானும் அவற்றை ச்ரு (ஶ்ரு) என்னுந் தாதுவினின்றும் பிறந்த சுருதிப்பெயரானழைப்பதுமுண்டு. மேற்கூறிய வேதங்கள் நான்கனுள் ஒவ்வொன்றும் மூன்றுவகைப்படும். வேதோக்தமான தெய்வங்களை நோக்கியெழுந்த ஸ்தோத்திரங்களையுடைய ஸ்துதி பாகம் மந்திரங்கள் அல்லது ஸம்ஹிதைகள் என்று பெயர்பெறும். பல வகைப்பட்ட

யாகங்களில் மந்திரப்பிரயோகஞ் செய்யவேண்டிய முறைகளையும், இவ்யாகங்களின் இயல்புகளையும், இவற்றின் உற்பத்தி யர்த்தங்களையும், சரித்திரங்களும் பழங்கதைகளுங் கலந்து விளக்கிக் காட்டும் கருமபாகத்தைப் பிராஹ்மணங்கள் என்று கூறுவர். வானப்பிரஸ்தர்களுக்கே பயன்படுவதாய், வனத்தில் வைத்தெழுதப் பட்டதெனக் கருதப்படும் மூன்றாம் பாகம் ஆரண்யகங்கள் என்று சொல்லப்படும். வேதாந்தமென்று வழங்கும் உபநிஷதங்களெல்லாம் இம்மூன்றாம் பாகத்தினுள் அடக்கமாம். இவற்றுள், வீட்டு நெறி விழைந்த பக்குவர்க்கடுத்த பாகம் இறுதியினின்ற உபநிடதங்களே. மற்றையவற்றாற் பெரும்பயனின்று. இவ்வேதங்களைக் கற்குமுன்னர் ஒருதலையாக் கற்கவேண்டிய நூல்கள் சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், சற்பம், என்னும் ஆறுமாம். இவை வேதாங்கமெனப்படும். இவற்றி னியல்பை "அறங்கமாவன, உலகியற் சொல்லை யொழித்து வைதிகச்சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராயும் ஐந்திரியத் தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் ஆபத்தம்பம் ஆத்திரையம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வாராகம் முதலிய கணிதங்களும் (சோதிடங்களும்),எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும் (சிக்ஷையும்), செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம்" எனவரும் நச்சினார்க்கினியருரையா னுணர்க. உலகவிய லறிவிக்குமாற்றலுடையனவாய் விளங்கும் பெருநூல்கள் நான்கனை உபவேதமென வழங்குகின்றனர். அவை ஆயுள்வேதம், அர்த்தவேதம், தநுர்வேதம், காந்தருவவேதம் என்பன. முதற்கணின்றது உடற்பிணி நீக்கு மருந்து முதலியவற்றி னியல்பு வகைகளையும், அடுத்தது பொருளீட்டு முறைமையினையும், மூன்றாவது வில்வித்தையினையும், இறுதியினின்றது இசைபேதங்களையும் பற்றிக் கூறுவது. மற்று, இவ்வேதங்களையும் உபவேதங்களையும் விளக்கவந்த நூல்கள் ஸ்மிருதிகளென்று வழங்கப்படுகின்றன. அவற்றின் பெயரா,

"மநுவே யத்திரி விண்டு வாசிட்டம்
யமம் ஆபத்தம்பம் யாஞ்ஞவற்கியம்
பராசரம் ஆங்கிரசம் உசனம்மே
காத்தியாயனம் சமவர்த்தம் வியாசம்
பிரகற்பதி சங்கலிதம் சாதான்மம்
கௌதமம் தக்கம் ஈரொன் பானும்
தருமநூலின் பெயரெனச் சாற்றுவர்."

எனவரும் பிங்கலந்தையிற் காண்க. கிருதயுகத்தில் மநுவும், திரேதாயுகத்தில் கௌதமமும், துவாபரத்தில் சங்கலிதமும், கலியுகத்

தில் பராசரமும் முக்கியமாயிருக்குமென்று சொல்லுகின்றனர். இதுபற்றியே புராணங்கள் ஸ்மிருதிகள் கிருஹ்ய சூத்திரங்கள் முதலியவற்றினின்றும் வேண்டியமட்டில் பிரமாணங்கள் எடுத்துதகரித்து ஸ்ரீ வித்யாரண்யர் பராசர ஸ்மிருதிக்கு மாதவீயம் என்னுஞ் சிறந்த பாடியமொன்று செய்துபகரித்தனர்போலும். அவற்றுற் பெறப்படும் விஷயங்களை 'அறமாவது மநுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம் வழக்குத்தண்டமென மூவகைப்படும். [இவற்றை வடநூலார் முறையே ஆசாரம் வியவகாரம் பிராயச்சித்தமென்பர்.] அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியமுதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல். வழக்கமாவது ஒரு பொருளைத்தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முண் மாறுபட்டு அப்பொருண்மேற் சொல்வது. அது கடன்கோடன் முதற்பதினெட்டுப்பதத்ததாம். தண்டமாவது அவ்வொழுக்கநெறியினும் வழக்கு நெறியினும் வழிஇயினாரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தகவொறுத்தல்"எனவரும் பரிமேலழகரது திருக்குறள் உரைப்பாயிரத்தா லுணர்க. இனி, உபநிடதங்களைச் சாரத்தோன்றிய நூல்கள் சிலவுள. அவை வியாசர், ஜைமினி, பதஞ்சலி, கபிலர், கணாதர், அக்ஷபாதர் என்னும் அறுவர் முனிவராற் செய்யப்பட்டு அறுவகை மதக்கொள்கைகளையுங்காட்டி நிற்றலின் சாத்திரமெனவும் தரிசனமெனவும் பெயர்பெறும். இவ்வறுவகை நூல்களும் சூத்திர ரூபமாகச் செய்யப்பட்டு அவ்வம்மதத்தினர்க்கு அரிய ஆதார கிரந்தங்களாய் வைத்துப் போற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் வியாசர்செய்த நூல் வியாச சூத்திரம் என்றும் வேதாந்த சூத்திரமென்றும் சாரீரக சூத்திரமென்றும் பெயர்பெறும். இதனையே உத்தரமீமாஞ்சை யெனவும் வழங்குவர். இந்நூல் வேதாந்தங்களாகிய உபநிஷதங்களிற் காணப்படும் சாரங்களைப் பிழிந்து எடுத்துத் தந்தாலன்ன தன்மையது. ஆயினும் பல்வேறு சமயத்தார் பல்வேறு பொருளுடையதாக விதனைக் கொண்டிடர்ப்படுதல் மிக்க வியப்புத்தருகின்றது. ஸ்ரீகண்டரென்பவர் ஸ்ரீருத்ரம், பிருகதாரண்யம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினிருத்திரம், முதலாகிய சைவோபநிஷதங்களையும் சைவாகமங்களையுந் துணைக்கொண்டு வேண்டியவிடங்களில் வேறு உபநிஷதவாக்கியங்களையுந் தழுவிக்கொண்டு ஒரு சைவபாஷ்யஞ்செய்தனர். ஸ்ரீ சங்கரர் ஈசாவாசியம், கேனம்,

கடவல்லி, பிரசினம், முண்டகம், மாண்டுக்கியம், தைத்திரீயம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருகதாரண்ணியம், என்னும் தசோபநிஷதங்களையும் தம்மதத்திற்குப்பொருந்திய வேறுஉபநிஷதங்களையும் எடுத்துக்கொண்டு ஒரு அத்வைத பாஷ்யம் செய்தனர். இப்பாஷ்யம் பிரமத்தைத் தவிர வேறு பதார்த்த மெங்கணுமில்லையென்று சாதிக்கு நீர்மைத்து. ஸ்ரீராமாநுஜர் தமது வைணவமதக்கொள்கைகளை எடுத்துக்காட்டி ஒரு விசிஷ்டாத்வைத பாஷ்யஞ் செய்தனர். ஸ்ரீமத்வர் தமது துவிதக்கொள்கைக் கிணங்க ஒரு துவைதபாஷ்யஞ் செய்தனர். இவையெல்லாம் அவ்வம்மதத்தாரால் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு சமயாசாரியரும் வேதாந்த சூத்திரத்திற்குப் பாஷ்யஞ்செய்துதான் தம்மதம் வேதாந்த மதமென்று காட்டல்கூடும் என்று அபிப்பிராயப்பட்டாரென இதனாற் றெரிகின்றமையின், அந்நூலின் பெருமைக்களவில்லையென்பது தேற்றம். இவ்வேதாந்த சூத்திரம் உபநிஷதங்களையாதாரமாக்கொண்டு ஞானேத்கிருஷ்டமே கூறுதல்போல, ஜைமினிசெய்த மீமாஞ்சைநூலும் கருமத்தையே பிரதானமாகக் கூறும். அதனை ஜைமினி சூத்திரமெனவும் வழங்குவர். பதஞ்சலிமுனிவர் முத்திபேற்றிற்கு நேர்வழி யோகமேயெனக்காட்டி யோக சூத்திரம் செய்தனர். இதற்கு வியாசர் பெயராலும் போஜர் பெயராலும் இரண்டு பாஷ்யங்கள் வழங்கிவருகின்றன. கபிலமுனிவர் செய்தது சாங்கிய சூத்திரம். கணாதர் செய்தது வைசேஷிக சூத்திரம். அக்ஷபாதர் செய்தது நியாய சூத்திரம். இவ்வாறு சாத்திரங்களுந் தத்துவஞான வுணர்ச்சிக்கு ஒப்பச் சிறந்தனவாம்.

ஆகமங்கள் சைவாகமங்களென்றும் வைணவாகமங்களென்று மிருவகையாம். அவற்றுள் முதற்பிரிவிற் படுவன காமிகமுதல் வாதுள மிறுதியாகவுள்ள இருபத்தெட்டுமாம். வைணவாகமங்கள் பாஞ்சராத்திரம் வைகானசமென்னு மிரண்டுமேயாம். வேதங்களுக்கே ஆகமமென்னு மொரு பெயருண்டு. அன்றியும், தருக்கநூல்களிற் சிறப்பித்துக் கூறப்படும் காண்டல், கருதல், உரை என்னும் அளவை மூன்றனுள் உரையாகிய ஆகமமும் ஒன்றுதல்பற்றி ஆகமத்தின் உயர்வு நன்கு புலப்படும். சைவாகமங்களுள் ஒவ்வொன்றும் நான்கு பிரிவினதாய் முறையே சரியை கிரியை யோகம் ஞானமென்னும் நால்வகைப் பாதங்களையும் அறிவுறுத்தும் வகையால் பதிபசுபாசம் என்னும் திரிபதார்த்த லக்ஷணத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதின் விளங்கச் செய்யும். இவ்வளவு தெளிவாகச் சிவபரத்துவங் கூறுதல்பற்றி யிவற்றைச் சிறப்புநூலென்றும் வேதங்களைப் பொதுநூலென்னுங்

கூறுவர் சைவருட் பெரும்பாலார். மற்று, இவ்வாகமங்கள் வேதங்கட்குப் பின்னே தோன்றியன என்பதே எமது கருத்தாக லின் வேதங்களுள் இடையிடையே காணப்படும் அசம்பாவிதங் கள் ஆகமங்களு ளில்லையென்றே யாம் துணிகின்றோம். ஆயி னும் தற்காலத்தகப்படுவது ஆகமங்களுட் கிரியாபாகமே. ஞான பாகம் மிக அற்பம். வேதங்களுள் உபநிடதங்கள் வேண்டியமட் டுங் கிடைக்கின்றன. அவை போதாவென்று பாடியங்களு முள் ளன. ஆகலின் ஆகமங்களை வேதங்கட்கு நிகரென்று எங்ஙனஞ் சொல்லுவது? ஆகமங்களுட் கிரியாபாகங்களே மிக வழங்கி வரு கின்றமைபற்றியே போலும், அவற்றைத் தந்திரமென் றுரைத்தனர் பிராமணருட் பல்லோர். ஞானபாகத்தைக்கண்டு சிவானந்தப் பேறெய்தும் பாக்கியம்பெற்ற பண்டைக்காலத்துச் சைவப்பெரி யோர் அவற்றை மாந்திரமெனவும் சித்தாந்த மெனவும் வழங்கி மகிழ்ந்தனர். சைவாகமங்களின் வழித்தோன்றிய நூல்கள் உபாக மங்களெனவும் சார்பாகமங்களெனவும் பெயர் மாத்திரையாற் பல வழங்கிவருகின்றன. அவற்றை யீண்டெடுத்துக் கூறுதல் மிகையே. இவ்வாகமங்களைப் பிரயோகிக்கு நெறிகாட்டு நூல்க ளுக்குப் **பத்ததி**யென்று பெயர், சோமசம்பு, அகோரசிவாசாரி யர், திரிலோசன சிவாசாரியர் முதலிய பெரியோர்கள் பெயரால் பல பத்ததிகள் நடைபெறுகின்றன. சைவர்க்கடுத்த கிரியைகளை நடத்துவிப்பது இப்பத்ததிகளே.

புராணங்கள் மச்சமுதலாகப் பிரமாண்ட மீறாகவுள்ள பதி னெட்டுமாம். புராணம் என்னுஞ் சொல்லுக்கே பழைமை யென் பதுபொருள். [புராணம் - பூர்வகாலத்தில் உண்டானது. இது **குருபாலப் பிரபோதிகை** யுடையார்கோள்.] அது இவ்விடத்து நூல் களுட் கூறப்படும் பழைய வரலாற்றைப்பற்றிநின்றது. பழைய வரலாற்றை யொருமுறையால் ஐந்து விதமாகப் பிரிக்கலாம்; உலகத்தோற்றம், ஒடுக்கம், மன்வந்தரம், முனிவர் அரசர் மரபு, அவர் சரித்திரங்கள் என. இதனைத் "தோற்ற மூலக மீண்டொ டுங்க றுகடீர் மன்வந் தரமுனிவ, ராற்ற லரசர் மரபவர்தஞ் சரித மென்னு மோரைந்துஞ், சாற்றும் **புராண** விலக்கணமென் றறிஞ ருரைப்பர்" எனவருங் **கூர்மபுராணச்** செய்யுளானு மறிக. இவ் வைந்தையும் முறையே ஸர்கம், ப்ரதிஸர்கம், மந்வந்தரம், வம்ஸம், வம்ஸாநுசரிதம் என்பர் வடநூலார். இதுபற்றியே "புராணம் பஞ்சலக்ஷணம்" என்னும் முதுமொழியும் வழங்கி வருகின்றது. இப்புராணங்கள் வேதங்களுள்ளும் ஆகமங்களுள் ளும் விதி நிஷேதங்களாகக் கூறப்பட்டனவற்றைத் திருஷ்டாந்த

மூலமாக விளக்கிக்காட்ட வெழுந்தனவாம். ஆதலின் அவ்விதி நிஷேதங்களும் ஆண்டாண்டு எடுத்துக் கூறப்படும். ஆயினும் பெரும்பான்மை சரிதங்களாகவே யிருக்கும். உதாரணமாக ஒரு விரதத்தை யெடுத்துக்கொள்வோமாயின், இவ்விரதத்தின் இலக்கணம் இது, இவ்விரதத்தை யனுஷ்டித்தார் பெறும்பயன் இது, இவ்விரதத்தை முற்காலத்து அநுஷ்டித்துப் பயன்பெற்றுரின்னோர், இவர் சரிதம் இவ்வாறு என்றித்தகைய விஷயங்களெல்லாம் விரித்துக்கூறுவதே புராணத்தினியற்கை. புராணங்கள் எழுதப்பட்டிருக்கும் நடையும் சாமானிய கல்விமான்களுக்கும் பொருள் எளிதின் விளங்கக்கூடிய நடையாம். சாமானிய மாந்தரை வசப்படுத்தி யன்னோரை நல்வழிப் படுத்தற்கண் பலவித தந்திரங்களும் பிரயோகித்தல் அவசியமாகலின் நவரஸங்களும் அமையப்பெற்றதாயிருக்கின்றது புராணமென்பது. உலகத்து நிகழவொண்ணுத விஷயங்கள்பல புராணத்துக் காணப்படுவதுவழக்கம். அவற்றைக் கேட்குங்காலத்துச் சாமானியர்க்கு அவற்றில் ஐயுறவுதோன்றுவதில்லை. அதனல் புராணகர்த்தாவும் தன்கருத்து நிறைவேற்றிக் கொள்ளுகின்றுர். பாவச்செயல்களில் அச்சத்தொடுபட்ட வெறுப்பு நிகழக்கடவதென்று அவரெண்ணுவராயின் அவ்வாறே யாகின்றது. புண்ணிய கருமங்களில் மகிழ்வொடுபட்ட ஊக்கம் நிகழக்கடவதென்று அவரெண்ணுவராயின் அவ்வாறே யாகின்றது. இதனலெல்லாம் புராணங்கள் சிறந்த நூல்களென்று விளங்குகின்றது. வறிதே புராணம் பொய் புரட்டெனை விகழ்வதிற் பயனென்னே? கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணப் பிரசங்கங்களில்லையாயிற் சைவமும், பாகவதம், இராமாயணம், பாரதம் முதலிய புராணேதிகாசப் பிரசங்கங்க ளில்லையாயின் வைணவமும் இருந்தவிடம் புன் முளைத்துப் போய் விட்டிருக்குமே! இன்றைக்கும் சாஸ்திரவுணர்ச்சி இலக்கண விலக்கியப் பிரசங்கமென்றுல் எத்தனைபேர் ஒளிந்து கொள்ளுகிறுர்கள்? புராண மென்றுல் மூலை தேடியும் கூட்டங் கூட்டமாய்வந்து கூடுகின்றனரே! புராணத்தின் மாட்சியைவிளக்க இவ் விஷய மொன்றுமே போதாதா? இனிப் புராணங்களது பெயருந் தொகையும்,

"மச்சம் கூர்மம் வராகம் வாமனம்
பதுமம் வைணவம் பாகவதம் பிரமம்
சைவம் இலிங்கம் பௌடியம் நாரதீயம்
காருடம் பிரம கைவர்த்தம் காந்தம்
மார்க்கண்டேயம் ஆக்கினேயம் பிரமாண்டம்
பாற்படு பதினெண் புராண மாகும்"

எனவரும் பிங்கலந்தையா லறியப்படும். இவற்றுள், சைவம்-காந்தம் - இலிங்கம் - கூர்மம் - வாமனம் - வராகம் - பௌடியம் - மச்சம் - மார்க்கண்டம் - பிரமாண்டம் என்னும் பத்தும் சைவபுராணங்களாய்ச் சைவர்களாற் பயிலப்பட்டு வருகின்றன. நாரதீயம்-பாகவதம் - காருடம் - வைணவம் என்னும் நான்கும் வைணவர்க்குரியனவாம். பிரமம் - பதுமம் என்னுமிரண்டும் பிரமனைப் பற்றிக் கூறுதலிற் பிரமபுராணமாம். பிரமகைவர்த்தம் சூரியனைப் பற்றியும் ஆக்கினேயம் அக்கினியைப் பற்றியுங் கூறுதலின் அவை முறையே சூரியபுராண மெனவும் அக்கினி புராணமெனவும்படும். இப்புராணங்களையே வேறொரு வகையானும் பிரிப்பர். காந்தம்-ஆக்கினேயம் - சைவம் - கூர்மம் - மச்சம்-இலிங்கம் இவை தாமத புராணம். பிரமாண்டம் - பிரமகைவர்த்தம் - மார்க்கண்டேயம் - வாமனம் - பிரமம் - பௌடியம் இவை இராசத புராணம். பாகவதம் - பதுமம் - வராகம் - வைணவம்-காருடம்-நாரதீயம் இவை சாத்துவிக புராணம். அவ்வப்புராணங்களில் மேலிட்டுத்தோன்றுங் குணம்பற்றி யிவ்வாறும் புராணங்கள் வகுக்கப்பட்டனபோலும். இனி நாரசிங்கமுதற் பிரமாண்டமீறாக உபபுராணங்கள் பதினெட்டுள. அவற்றின் பெயர்முறைகள் விரிப்பிற் பெருகும்.

இதிகாசங்கள் இராமாயணம் மகாபாரதம் சிவரகசியம் என மூன்றும். இவற்றுள் இராமாயணம் செய்தார் வான்மீகமுனிவர். மகாபாரதம் செய்தார் வியாசர். சிவரகசியம் புராணங்களோடொப்பக் குறிப்பிட்ட நூலாசிரியனைப் பெற்றிலது. இதிகாசம் என்னும் பதமானது பாரம்பர்யோபதேசங்கள் தன்னிடத்தி லமையப்பெற்றது எனப் பொருள்படும். இது குருபாலப்பிரபோதிகையிற் கண்டது. இவையும் சரித்திரங்களே கூறினும் உலக நீதிகள் மிகக் கலந்துகூறும். இம் மூன்றனுள்ளும் பாரதம் நீதிபுகட்டுவதிற் சிறந்தமை குறிக்கவேபோலும் அதனை ஐந்தாம் வேதமென வழங்குகின்றனர். இராமாயணம் சிறந்ததொரு பெருங்காவியமா யிருக்கின்றது. சிவரகசியத்துள் சிவனடியார்கள் சரித்திரங்களி லனேகங் கூறப்பட்டன.

இவ்வாறு 'வேதாகம புராணேதிகாசங்க' ளெனப் பகுத்துக் கூறப்பட்ட நூற்றொகுதியைவிட்டு வேறு நூல்கள் தோன்றுதற்கிடனில்லை. எத்தகைய நூல் தோன்றினும் அது இவற்றுட் கூறப்படாத விஷயங்கூறப் புகுதலரிது. இதனால் மேலைத்தேசத்துப் பண்டிதர்களா லெழுதப்படும் கலைஞான வகைகளெல்லாம் இவற்றுள்ளேயே காணப்படும் என்று சொல்வாருட்படுவேம்

யாமும் என்று கருதற்க. மற்று, லௌகிக வைதிக அந்தரங்க ஞான விஷயங்களில் எதனைப்பற்றி யெழுதினும் இவற்றுள் அது காணப்படு மென்பதே யெமது கருத்தாம்.

இதுகாறுங் கூறிய நூல்களெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையி லுள்ளனவாம். அவை தமிழ்மொழி பேசுவோர்க்குப் பயன்படுத லெப்படி? பூர்வகாலத்து, தமிழ் நாட்டாருள்ளும் விதி நிஷேத நூல்கள் தரும நூல்கள் புராணங்கள் முதலியன வழங்கிவந்தன. ஆயினும் நமது ஞாபகத்துக் குட்படாக் காலத்து வடமொழியுந் தென்மொழியுங்கலந்து வடமொழியிலுள்ள நூல்களுட் பல தமிழ் மொழியுள் மொழிபெயர்ப்பு வகையாற் புகநேர்ந்தது. அதனற் றமிழ்மொழிக் கிழுக்கின்று. இலக்கணங்கள், நீதி நூல்கள், காவியங்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள் என்றிவை தமிழ்மொழிக்கே சிறப்பாகப் பலவுள்ளன. அவற்றை வேறு மொழியினின்றும் வந்த வழிநூல்களென ஒருவருஞ் சொல்லார். சில பாகங்களில் அவை இதரபாஷை நூல்களினுஞ் சிறந்தனவெனப் பொதுநோக்க முடையார் அபிப்பிராயப் படும்படி மாட்சிமையுற்று விளங்குகின்றன. தமிழ் நூலாரிடத்திருந்த தத்துவ ஞானத்தினையே வடநூலார் கடன் வாங்கினரென எத்தனையோ சரித்திர நுட்பமறிந்த புலவர்க ளறைகின்றனர்.

இனி, இவ்வேதாகம புராணேதிகாசங்களில் தமிழுள் வந்து கலந்தவை எவை? வேதத்து உயர்ந்ததென மதிக்கப்படும் உபநிஷதங்கள் அநேகம் மொழிபெயர்க்கப்பட்டு வழங்குகின்றன. ஸ்மிருதிகளுள் பராசரம் மனுஸ்மிருதி யென்பவை மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. வேதத்தின் வழிப்பட்டனவென்று சொல்லத் தக்க நூல்களுள் அநேகம் தமிழுள் வந்து கலந்திருக்கின்றன. மூலாகமங்களுட் காமிகம் மட்டும் பூரணமாகவும், ஏனையவற்றுட் சிலபாகங்கள் சிவஞானபோதம் நிஷ்டாநுபூதி முதலியனவாகவுந் தோன்றியிருக்கின்றன. உபாகமங்களுட் சிலவும் பத்ததிகளுளநேகமும் தமிழில் வந்து வழங்குகின்றன. புராணங்களுள் மச்சம் கூர்மம் பாகவதம் இலிங்கம் என்பவை தமிழ்ச் செய்யுள் ரூபத்திலும் வைணவம் சைவம் என்பவை தமிழ்வசனரூபத்திலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. சைவபுராணத்துள்ள வாயுசங்கிதை தமிழிலும் வாயுசங்கிதையெனவும், சாந்தத்துட் சில பாகங்கள் கந்தபுராணமெனவும் உபதேச காண்டமெனவும் தமிழ்ச் செய்யுள் ரூபத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. மார்க்கண்டேய புராணத்திற் சிலபாகமும் வசனத்திற் றோன்றியிருக்கின்றது. இவையன்றி, பிரமாண்டம் பௌடியம் என்பவற்றுள்

உள்ளன வென அநேகந் தனிச்சரிதங்கள் தோன்றியிருக்கின்றன. சிவனடியார்கள் சரிதங்களுட் பல பௌடியத்திற் கூறியிருப்பதாகச்சொல்கின்றனர். பட்டினத்துப்பிள்ளை, சந்தான குரவர் இவர்கள் புராணம் ஆண்டுள்ளதாம். அன்றியும், தென்னாட்டிற் காணப்படும் ஸ்தலங்களுக்கெல்லாம் பதினெண் புராணங்களுள் இடங்காண வேண்டுமென்பதே நமது புலவர்களுட் பெரும்பாலார் கொள்கை. இக்கருத்தையே துணையாகக்கொண்டு நோக்குவமாயின், ஸ்தல புராணங்களுளெல்லாம் இது பௌடியத்திற் கண்டது இது பிரமகைவர்த்தத்திற்கண்டது முதலாகிய வாக்கியங்கள் காணலாம். ஸ்தல மாகாத்மியங்க ளெல்லாம் புலவர்கட்டு கதையே யென்பது எல்லாருக்குந்தெரிந்த இரகசியம். ஆயினும், சிதம்பரம் காசி முதலிய ஸ்தலங்கள் இத்தொகுதியுள்வாரா; அவை மிகப்பழைய க்ஷேத்திரங்களாகலின். மற்று, நேற்றுதித்த ஆலயங்களுக்கு ஆதிப்புராணங்களுள் அமைவு காட்டுதல் எவ்வாறு பொருந்தும்? தற்காலத்து ஸம்ஸ்கிருத பாஷைநடைக்கும் புராணபாஷை நடைக்கும் வேற்றுமை சிறிதேயாகலின் ஸம்ஸ்கிருதம் வல்ல தற்காலத்துப் பண்டிதர்களிடத்துக் கொடுத்தாலும் தமிழ்க்கதையை ஸம்ஸ்கிருத புராணமாக எளிதிற் செய்துவிடலாம். வேதநடையில் மிகப்பயின்று வேதங்களையே மாற்றவல்லுநருள்ள விக்காலத்து இதுவுமோர் அற்புதமா? அன்றியும் ஸ்தலப்பெயர் ஒன்று வந்தாலேபோதும் உடனே அதன் மாகாத்மியம் புராணத்துள் வந்ததென்று சொல்லத்துணியாரோ நம்மவரெல்லாம்? ஆகலின், தலபுராணங்களைக் கற்றல் கேட்டல் மாத்திரையிலேயே அவற்றுட் கூறியதத்தனையும் உண்மையே யென்று நம்புவோரது நிலைமை மிகப் பரிதபிக்கத்தக்கதே யன்றோ? ஸ்தல மாகாத்மியங்கள் மட்டில் எடுத்து நோக்குவமாயின் அவையும் மிகப்பயன் றருவனவேயாம். அவை புராணங்களுட் கிடந்தாலென் கிடவாமற் போயினென்? இலக்கிய வுணர்ச்சிக்குச் சிறந்தனவாதலோ டமையாது அவை ஏகதேசமாய் அரசர் சரித முதலியனவுங் கூறி மகிழ்விக்கின்றன. ஸ்தலங்களிடத்துச் சிரத்தையை விளைப்பதில் அவற்றிற்கு நிகராக எதனைத்தான் சொல்லலாம்? இனி இதிகாசங்களுள் இராமாயணமும், பாரதமும் முழுதும் தமிழில் மொழிபெயர்த்து வந்திருக்கின்றன. இவ்விரண்டு நூல்களையும் செய்யுள் ரூபத்திலாயினும் வசனரூபத்திலாயினும் தமிழ் வாசிக்க அறிந்த ஒவ்வொருவர் அகத்துங் காணலாம். சிவரகசியத்துள் மூன்றும் அம்சம் தமிழ்ச்செய்யுளாக வெளிவந்திருக்கின்றது. அது பன்னிரண்டு அம்சங்களுடையதொரு பெருநூலாம்,

சைவபுராணம் பத்தனுள்ளே சைவபுராணம் வசனரூபமாக வெளிவந்துலவுகின்ற தெனக் கூறினோம். அவ்வசனஞ்செய்து நெடுங்காலமாகவில்லை. சுமார் மூன்று வருஷங்களுக்குமுன் ஆரம்பித்து இப்போழுது முடிக்கப்பட்டு வேண்டுவோர் அச்சுப்பிரதி பெற்றுக்கொள்ள விலைக்குச்சித்தமா யிருக்கின்றது. இலிங்கபுராணஞ் செய்தவர் சில நூற்றாண்டுகட்குமுன் திகழ்ந்த குலசேகர பாண்டியனென்னும் ஓர் அரசர். கூர்மபுராணஞ் செய்தவரும் பதினாறு நூற்றாண்டிற்றிகழ்ந்த அதிவீர ராம பாண்டியனென்னும் மன்னவர் தலைவர். அந்நூல்களும்வெளிவந்து வெகுகாலமாயிற்று. கந்தபுராணம் உபதேசகாண்டம் வாயு சங்கிதை முதலியன பாகங்களே யாகலின் அவற்றைக் குறித்து ஈண்டுப் பிரஸ்தாபித்தல் அநாவசியகம். தனிப்பெரும் புராணங்களாய் விளங்கும் சைவ புராணங்களுள்ளே மொழிபெயர்த்து உதவப்பட்டிருக்கும் இரண்டு நூல்களுக்கும் ஆசிரியர்கள் அரசபுலவர்களாயிருத்தல் மிக்க அதிசயமும் ஆனந்தமுந் தருகின்றது. இவ்விஷயம் நந்தமிழ்நாட்டு மன்னவர்க்குத் தமிழ்மொழியிடத் திருந்த அபிமான மிகுதியை விளக்கு முகத்தான் இக்காலத்து அம்மொழி யடைந்திருக்கும் அநாதரவு நிலையை எடுத்துக்காட்டித் தமிழபிமானிகள் யாவர்க்கும் மனவருத்த முண்டுபண்ணுகின்றது. இன்னும் இவ்விருபுராணங்களினுங் கிரந்த மிகுதியுடைய தனிப்பெரும் புராணமாகிய மச்சமும் சில நூற்றாண்டுகள் முன்னர்த் திருநெல்வேலிச் சீமையை யரசுபுரிந்து வந்த ஸ்ரீமான் வடமலையப்ப பிள்ளையன் செய்ததுவே யெனக்கேட்டமாத்திரையில் நம்முள்ளம் உவகை மீக்கூர்ந்து பரவசப்படுதல் உரைக்கவும் வேண்டுமோ? ஆயினும் ஒன்றுமட்டும் விசனிக்கத்தக்கது. இவ்வரியகிரந்தம் தமிழில் மொழிபெயர்த்து *நெடுங்காலமாயும் இதுகாறும் அச்சில் வாராதொழிந்தமை நம்மனோர்க்குள்ள தவக்குறையேபோலும். இப்போழ்து ஊக்கங் கிளர்ந்து அதனை வெளிப்படுத்த முந்துறும் ம-௱-௱-ஸ்ரீ கந்தசாமிமுதலியா ரவர்களுக்குத் தமிழுலகம் எந்நாளும் கடன்பட்டதாயே யிருக்கும். நூலோ சிறு நூலன்று. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பாட்டுக்களையுடையதொரு பெருங்காவியம். அதனை வெளிப்படுத்தற்கண் அவர் தாமே யெடுத்துக்கொண்ட சிரமமும் பிறரை யூக்குதலினால் அப்பிறர்

*அதிவீரராம பாண்டியன் திருநெல்வேலியைச்சார்ந்த தென்காசியிலிருந்து அரசுபுரிந்த காலம் சாலிவாகன சகம்-1485 (1562 A.D) எனவும் வடமலையப்பர்க்குப்பின் திருநெல்வேலியிலிருந்து மதுரைநாயக்கர்க்குப் பிரதிநிதியாய் அப்பதியை யாண்டவராகிய அரியநாயக முதலியார்காலம் சாலிவாகனசகம்-1488 (1565 A.D) எனவும் பூர்வ சரித்திரங்களானறிகின்றோமாகலின், கூர்மபுராண முண்டாதற்குச் சிலகால முன்னரேயே மச்சபுராண மியற்றப்பட்டிருந்ததெனத் தோன்றுகின்றது.

எடுத்துக்கொண்ட சிரமமும் அவர்க்கு நேர்ந்த பொருட்செலவும் மிகவாம். அவற்றையெல்லாம் ஒரு பொருட்படுத்தாது புராணம் வெளிக்கொணர்தலாகிய உத்தமோத்தம சிவ புண்ணிய மொன்றையே நாடியுழைக்கும் இவர்க்குச் சிவபிரானே தக்க பிரதியுபகாரம் செய்யக் காத்திருக்கின்றனரென யாம் உறுதியாக நம்பி யிருகின்றேம்.

இனி, இம்மச்ச புராணம் கற்கப்புகுவோர் மனத்து இந்நூல் எத்தன்மையது, இது கற்றலாற் பயனென்னை, இதனைச்செய்தார் யாவர், அவர் எத்தன்மையர் முதலாகிய ஆசங்கைகள் நிகழக்கூடும், நிகழவேண்டியதும் அவசியமே. அவ்வாசங்கைகள் நிகழாதவிடத்து அவரிந்நூல் கற்றலினுற் பெரும் பயனின்றும். மற்று அவைகளைத் தெளிவித்தலே பாயிரத்தின் விசேஷ இலக்கணமாதலின் அவை யின்னவென ஆராயப்புகுவாம். வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவாயுள்ள மச்சபுராணசம்பந்தமானவிஷயங்கள் ஒருவாறு முன்னரே கூறப்பட்டன. தமிழ் மொழிபெயர்ப்பைச் சிறப்பானுராய வேண்டுவதே இனி எஞ்சி நிற்பது. இந்நூலுள் வரும் காண்டம் அத்தியாயம் செய்யுள் முதலியவற்றின் தொகையை நூலாசிரியரே,

> "இப்பெரும் புராணங் காண்ட மிரண்டுநாற் கிரந்தஞ் சொல்லிற்
> றுப்புறு மீரே ழாயி ரத்துறுந் தொகையத் யாயந்
> தப்பினூற் றெழுப தின்மே லிரண்டுசார் பதிகத் தோடுந்
> திப்பிய விருத்த மையா யிரத்தினுற் செப்பி னேமால்"

எனக்கூறி இப்பெரும் புராணம் பூர்வகாண்டம் உத்தரகாண்டமென விரண்டு பெரும் பகுதிகளாலும் 172 அத்தியாயங்களானும் 5000-க்கு மேலிட்ட செய்யுள்களானும் ஆயதென்று சுட்டிக்காட்டினர். அன்றியும் வடமொழியில் இது 14,000 கிரந்தங்களால் (சுலோகங்களால்) ஆயதென்றுங் குறித்தனர். பூர்வகாண்டம் 114 அத்தியாயங்களாலும் உத்தரகாண்டம் 58 அத்தியாயங்களாலும் ஆயது. இக்காண்டங்கள் தொடங்குமுன்னர்ப் பாயிரம், நைமிசாரணியச் சிறப்பு, அநுக்கிர மணியென மூன்று பாகங்கள் இருக்கின்றன. இம்மூன்றனுள் முதலிரண்டுமே ஆசிரியர் தம் கல்வித்திறம் கற்பனு சாமர்த்தியம் முதலியன காட்டத்தக்க பாகங்களாம், அநுக்கிரமணி புராணத்துள் வந்த அத்தியாயங்கட்கு அட்டவணையாயும் புராணமுழுதும் மொழிபெயர்ப்பாயு மமைந்தனவாகலின். நமதாசிரியரும் அக்குண சிரேஷ்டங்கள் தம்மிடத்து மிகுதியு மிருந்தனவென்பதைப் போதுமானவரை காட்டியிருக்கின்றூர். கற்பனைகள்

சுத்தமாயும் உயர்ந்த பொருளினவாயு மிருக்கின்றன. கவிகளோ இவ்விடங்களின் மட்டுமன்றி நூலெங்கணுமே மிக்க இன்னோசை யோடு ஒழுகுந் தன்மையவாய் ஆசிரியர் தொல்காப்பியங்களில் மிகத்திளைத்தும் பத்திஞான நலங்கள் உடைமையினாலும் வாக்குப் பழுத்தவரென்பதை நன்கு நாட்டா நின்றன. நூலுள் நோக்கு வோர்க்கு வடமொழிச் சந்த விருத்தங்களி னிலக்கணத்தைக் கொண்ட அநேகந் தமிழ்விருத்த வகைகளும், எத்துணையரிய வட மொழியுந் தமிழ்போலுச்சரிக்குந் தகைத்தாய்த் திரிக்கப்பட்டு வழ ங்கு முறையும் விஷயங்கள் கூறுவதில் சில நூல்களைப்போலப் பொருள் சுருகல் முதலிய குற்றங்களின்றித் தெளிவான நடைகொ ள்ளப்பட்டமையும் புலப்படாமற் போகா. தமது சாமர்த்தியஞ் சிறிதுங் காட்ட விடந்தராத புராணத்துட்பாகத்திலும் சொன்ன யம் மலியப் பாக்கள் யாத்துப் பொருளும் மிக இனியனவாமாறு செய்திருக்கின்றார். இப்புராணத்துள் வரும் விஷயங்களாவன: காசிபர், சூரியன் முதலியோர் மரபும்; வசுருத்திரர் சந்திரன் சோமவமிசம், யயாதிபுத்திரர், நாரசிங்கர், வயிரவர், தாரகா சுரன், குமாரசுவாமி முதலியோர் உற்பத்தியும்; மதனத் துவா தசி, ஆதித்த சயனம், கிருஷ்ணாட்டமி, வீமத்துவாதசி கல்யாண சத்தமி முதலிய சத்தமிபேதங்கள், சிவ சதுர்த்தசி, சங்கிராந்தி, விபூதித்துவாதசி, சஷ்டி, முதலிய விரத நியமங்களும்; சிராத்த வகைகளும் அவற்றை யனுஷ்டிக்கு முறையும்; தெய்வயானி, யயாதி, இரணியகசிபு, பிரகலாதன், திரிபுரத்தசுரர், தாரகன் முதலியோருடைய பூரண சரிதமும்; போஜன், பவுரவன், அக் கினி முதலியோர்வமிச வரலாறும்; நவக்கிரகங்கட்கு முரிய விரத நியமமும்; தீர்த்தசிராத்தம், சந்திர சூரிய கிரஹண தானம், தீர்த்த யாத்திரை, சாந்தி கிரஹபஞ்ஞும் முதலியவற்றிற் குரியவிதிக ளும்; ஸத் பிரயோஜனந் தருந்தன்மையவாகிய அநேக ஸம்வா தங்களும்; மேரு, இமயம், பாரத வருஷம் முதலிய வற்றின் வரு ணனைகளும்; கவுரிநாம அஷ்டோத்தரசதகம், பரமேசுவர ஸ்தோ த்திரம் முதலிய ஸ்தோத்திரங்களும்; பத்திமான்மியமும்; கரும யோகம், யோகசாத்திர வண்மை, யோகவிக்கின மென்பவற்றைப் பற்றிய விளக்கங்களும் இவைபோன்ற பிறவுமாம். இவ்விஷயங் களை யறிந்து கொள்ளுதல் எத்தகையினர்க்கும் நன்மை பயக்கு மென்பதிற் சிறிதும் ஐயப்பாடில்லை.

இனி, இவ்வரிய காவியத்தை யியற்றித்தந்த மகான் இத்தன் மைய ரென்று ஆராயப் புகுங்கால் ஏமாற்றமே நம்மை வந்தெதிர் கொண்டு துன்புறுத்துவதா யிருக்கின்றது. "யாவர் செய்தா

லென் ? நூலின்றன்மையை யுணர்ந்து அதனை நன்கு கற்றுப் பய னடைதி" என்றுரைப்பார் உரையினையே பிரமாணமாகக் கொள்வ மாயின் விரைவிற் றிருப்தியடைந்து களிக்கலாம். அவ்வுரையுஞ் சாமானியவுரை யன்று. ஏனெனின், நூலாசிரியரின்னா ரெனத் தெரிந்த வக்கணமே கற்போர் மனம் விகாரப்பட்டுப் போகின்றது. அதனால் உயர்ந்த நூலைத் தாழ்ந்த நூலாகவும் தாழ்ந்த நூலை யுயர்ந்த நூலாகவு மதிக்கவிடனுண்டாகி, உயர்ந்த நூல் கற்போர் தொகை சுருங்கவும் தாழ்ந்த நூல் கற்போர் தொகை பெருகவும் பலமுறை நேருகின்றதை நல்லறிவாள ரெல்லா மறிவர்.

பலவித நலங்களும் பொருந்தப்பெற்ற இந்நூல்மட்டுமே ஆசி ரியர் குணாதிசயங்களை விளக்குதற்குப்போதிய சான்றாகு மேனும் இவர் ராஜ்யபாரம் தாங்கிய ஒரு பிரபு வென்றும், பிரபல வித்வா னென்றும், பக்திஞானங்கள் வாய்க்கப் பெற்ற உத்தம புருஷரென் றும் கேள்வியானும் இவரே செய்த பாயிரத்தானு மறிகின்றோம். அக்காலத்துப் புலவரொருவர் செய்த நூற்சிறப்புப் பாயிரத்துள் அரசரேறே என்னப்பட்டமை இவர் அரசரென விளக்கியது. சுவைபழுத்த மொழிக்கவிதை செய்தல் புலவனாலன்றி முடியாது. ஆகலான் இவர் புலவரென்பதும் கண்டோம். இனி இவரது ஸ்தோத்திரங்கள் பேரின்பநலங்களையே மிகவும் வியந்து சிறியோர் பகட்டிச் செய்யும் போலிக்கற்பனைகள் யாண்டும் விரவப்பெறாது அமைந்தமை இவர் கடவுள் வழிபாட்டிற்சிறந்து நன்ஞான முற்ற வரென்று தெள்ளிதிற் காட்டிற்று. பாயிரத்துள்ள சண்முகக் கட வுள் வணக்கம் இவர் உபாசித்த மூர்த்தி அவரேயோ வென ஐயம் நிகழ்த்தும். குருவணக்கத்தால் இவருக்கு ஞானோபதேசஞ்செய்த பெருந்தகை கஞ்சனூர் - சுப்பிரமணிய தேசிகரெனத் தெரிகின் றது. இவரது நாமம் வடமலையெனப் பாயிரத்துள் வந்ததேனும் வடமலையப்பரென்றே வழக்காறுண்மையான் அதுவேபூரண நாமம் போலும். வடமலையென்பது திருவேங்கடம். அது முருகக் கடவு ளது வரைப்பு எனத்தமிழ்நூல்களுட் காண்கின்றோ மாதலின் அந் நாமம் முருகக் கடவுளது நாமங்களு ளொன்றாகின்றது. அன்றி வடமலை கைலாய மெனவும் பொருள் படுதற் கிடனுண்மையின், சிவபெருமானது நாமமாயினு மாகுக. இவர் கார்காத்த வேளா ளர் குலத்துள் நாரணக்குடைக் கோத்திரத்தி லுற்பவித்தவரெனவும், இளையூர் இவர் பிறந்தவூர்ப்பெயர் எனவும் அச்சிறப்புப்பாயிரத் தாற் றோன்றுகின்றது.

இந்நூலாசிரியர் சரித்திரச் சுருக்கம் வருமாறு:—இவர் சற்றேறத்தாழ இருநூறு யாண்டுகட்கு முன்னர் நீர்வள மென்பது தன்னகத்தே நிரம்பவுடைத்தாய் சைவசமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தர மூர்த்திகள் என்னும் நாயன்மார் மூவரும் வைணவ சமயாசாரியர்களாகிய ஆழ்வார்களும் பாடியருளிய மான்மியமுடைய சைவ வைணவதேவாலயங்களைத் தன்னிரு மருங்கினுமுடைத்தாய்த் திருக்கைலாய பதியாகிய சிவபெருமான் முனிபுங்கவராகிய அகத்தியனார்க்குதவிய கலசத்தினின்றும் பிரவகித்ததாய்ச் சர்வலோக பாலராகிய திருமால் திருக்கோயில் கொண்டருளிய திருவரங்கத்தினைத் தனது நாப்பணுடைத்தாய்ப் புண்ணிய தீர்த்தமாகிய நவநதிகளு ளொன்றாகிய காவேரி தீரத்தின்கண் அத்திருவரங்கத்தி னருகாய் ஓர் சிறு கிராமத்தில் பரம்பரைச் சுத்த சைவ வேளாளருள் ஓர் குலமெனச்சொல்லப்படுகின்ற கார்காத்த வேளாண்குலம் விளங்க இவரது தாய் தந்தையார் செய்த அருந்தவப்பயனாய்த் தோன்றினர். இவரது பெற்றோர் இவர்க்குச் சாதகரும முதலாகச் செயற்பாலன செய்வித்து வடமலையப்ப னென நாமகரணஞ் செய்து தங்கள் குலநிதியாய் நாளுநாளும் சீராட்டிப்பாராட்டி வளர்த்துவருவா ராயினர். இவரிங்ஙனம் வளர்ந்து வித்தியாரம்பஞ் செய்யப்பெறும் பருவமாகிய ஐந்தாம் பிராயத்தில் இவரது தாய்தந்தையர் இவரைப்பிரிந்து சிவலோகஞ் சென்றனராக இவரது சிறியதந்தையார் இப்புதல்வரை யெடுத்து வளர்த்து வருவாராயினர். யாது காரணத்தினாலோ இவரது சிறியதந்தையார் தம்பாலோரங் காட்டக்கண்ட இப்புதல்வர் அவரறியாது ஓரிராத்திரியிலே அவரது கிரகத்தினைத் துறந்து வெளியேபோயினார். இப்புதல்வ ரிங்ஙனம் நெடுந்தூரம் நடந்தறியாராகலின் களைத்து வழியின் கணுள்ள ஓர் வட விருக்கத்தினீழலில் அயர்ந்து நித்திரை செய்வாராயினர். மறுநாட் காலையில் ஆதவன் தோன்றி வெங்கதிர் வழங்கி வருத்தியும் நித்திரை யுணராராயிருப்பக்கண்ட ஓர் நாகம் தனது பெரிய படத்தை விரித்து, பார்த்தவரை வசீகரிக்கும் இப்புதல்வரை மறைத்து நீழல் செய்தது. (இதனால் குழந்தைகளின் நிலை பொதுவானும் இவரது நிலை சிறப்பானு முணரப்படும்.) இஃதிங்ஙனமாக நாயக்கர் குலகுருவாகிய தாதாசாரியர் காவேரி நதியிற் காலைக்கடன் கழித்துச் சிவிகையி லாரோகணித்துப் பரிவாரம் புடைசூழத் திரும்பும் வழிக்கண் இவரைக் கண்ணுற்றார். இங்ஙனம் குரவர் வருதலாலுண்டாயபேரொலி கேட்டு அரவம் புதல்வரை நீங்கி விலங்கிற்று.

அரவம் விலகியபின்னர்த் தேசிகர் சிவிகையினின்று மிறங்கிப்போந்து புதல்வருடைய வதன சோதியும் மேனிக்கட்டும் அவர்பால் அரிதாயமைந்து கிடந்த சாமுத்திரிக இலக்ஷணத்தையுங் கண்டு "இப்புதல்வன் தன் வாழ்நாளுள் மன்னனுவா" னென்றூகித்து உடனின்ற தமது பரிவாரத்தால் இவரது வரலாற்றினை நன்று கேட்டு இரங்கித்தாமே எடுத்து வளர்த்து வருவாராயினர். ஆசாரியர் இவரை யாதரவு செய்து வளர்த்து உசித சமயத்தில் தென்மொழிமுதலாய நான்கு கலைகளைக் கற்பித்து இவரது அன்பும் அறிவும் ஆற்றலுங் கண்டு அக்காலத்து அரசுபுரிந்த நாயக்கருக்கு இவரைப் பரிபாலிக்குமாறு அநுமதி செய்தார். அதுகண்ட நாயக்கர் இம்மைந்தருக்குத் தம் மரண்மனையில் வளந்தக்க லோர் உத்தியோகந் தந்து புரந்தார். வடமலையப்பபிள்ளை தம் உத்தியோகத்தை வழுவின்றி நடாத்துந் திறல்கண்டு நாயக்கர் அவரைத் தமது சேனாசமூகங்கட்கு அதிபதியாக்கினர். அங்ஙனம் இவர் சேனாதிபதியாயிருக்குநாளில் அரசர்க்கு விளைத்த நன்மையும் அவர்பால் வைத்த விசுவாசமும் முதலாகிய நற்குண நற்செய்கைகளைக் கண்டு அரசன் மகிழ்ந்து அவரைத் தாங்கரும்பேறுகிய தமது பிரதிநிதியாக்கி ஐயன் என்னும் பட்டமுஞ் சூட்டிச் சைவ நலமும் தமிழ் வளமும் தானே நிகரின்றிப்படைத்த பாண்டி வளநாட்டிற்குக் கண்போலும் விளங்காநின்ற திருநெல்வேலிக்கு அநுப்பினர். வடமலையப்பபிள்ளையனும் இங்ஙனம் தம்மை வளர்த்து மகிமை செய்த அரசனைப் பிரிய மனமியைந்திலராயினும் அவனது ஆணையை மறுத்தற்கஞ்சி அவன்பால் விடைபெற்று அச்செல்வத் திருப்பதியாகிய திருநெல்வேலியை யடைந்து தமக்கெனவோர்*அரண்மனை கோலி வீற்றிருந்து பல்வேறு சாதிகளாகிய குடிகளும் அரசனும் ஒக்க மகிழ்ந்து களிக்க அரசுபுரிந்து வந்தார். இவர்க்கு இங்ஙனம் உரிமைபல நல்கிய அரசன் திரிசிரபுரத்தின்கண் அரசுபுரிந்த † சோக்கநாதநாயக்கன் ஐயன் என்று கூறுப. வடமலையப்ப பிள்ளையனுகிய இவர் இங்ஙனம் யாவரும் போற்ற அரசுபுரிந்துவரும் நாளில் அரிதாகிய புத்திரப் பேறின்றி மனம்வருந்திப் பின் ஒருவாறு தேறித் தமது

---

* இவ்வரண்மனை திருநெல்வேலிப் பதியில் மேலை ரதவீதியிற் குறுக்கிட்டுச் செல்லும் சுடலைமாடன்கோவிற் றெருவில் தற்காலம் பிள்ளையன் கூட்டத்தார் வசிக்கும் மாளிகைகளமைந்த விடமேயென்றும் வடமலையப்ப பிள்ளையன் கச்சேரி யிப்பொழுது பிள்ளையன் கட்டளையாபீஸ் வைத்திருக்கும் நவரங்கப்பட்டசாலையென்று பேர்போன விடமென்றுங் கேள்வி.

† இவ்வரசன் தனக்குரிய ஐயன்பட்டத்தையே வடமலைப்ப பிள்ளைக்கு மீந்தானென்பது தெரியவரும். பிள்ளை ஐயன் பிள்ளையனென்றாயிற்று.

சகோதரிமகனைச் சுவீகரித்து அப்புதல்வர்க்குச் செய்கருமமெல்லாம் முட்டின்றி நடாத்தி வித்தைமுதலிய பிறவுங்கற்பித்து அவர் திறங்கண்டு மகிழ்ந்திருந்தார். பிள்ளையன் இங்ஙனம் அரசுபுரியினும் தங்கருத்தெல்லாம் சிவபெருமானிடத்தே வைத்து வாழ்ந்து சின்னாள் சழிந்து சிவலோகஞ் சென்றார். அவர் புத்திரர் தந்தையாலெல்லா நலமும் ஒருங்கே பெற்றவராதலான் தாமும் அவர் போன்று பிரதிநிதியாக மன்னனால் நியமிக்கப்பட்டுச் சீமையை அரசு புரிந்து வந்தார். இவர் அரசு வருவா யெல்லாந்தம்மை யாளுடைய பிரானார்க்கே யுரிமையாக்கி அவர்தந் திருவடிப் பத்தி பேணி வழிபட்டு வாழ்ந்து வந்தார். அது சண்ட அரசன் மனம் பொறுனய் அவரை யவ்வுன்னத பதவியினின்று நீக்கிப் பரம்பரைச் சுத்தசைவவேளாளருள் ஒரு வகுப்பினராகக் கூறப்படுகின்ற ‡ தளவாய் முதலியாரவர்கள் மரபின் முன்னோர்க்கதனையளித்தானென்ப. என ஒரு பிரகாரந் தெரிவித்தபடி. இங்ஙனமன்றிச் சிறிது வேறுபடக் கூறுவாருமுளர். இவர் சரித்திர விருத்தியும் கோத்திர வாலாறும் பிறவும் இப்பொழுதும் திருநெல்வேலியின் கண்ணேயுள்ள இவரது நன் மரபினரால் நன்கு அறியப்படும். இங்ஙனம் பிள்ளையன் அரசு புரியுங் காலத்து மேலைத்தேச மிலேச்சருளொருவராகிய போர்த்துக்கேசியர் தமது துன்மத வெறியினால் ஸ்ரீகுமாரக் கடவுளின் முதன்மைப் பதியாகிய திருச் செந்திலம் பதியின்கணுள்ள ஆலயத்துட் புகுந்து தேவார்கமான ஆபரண முதலாய நிதிகளை வலிந்தெடுத்து மமையாது ஆறுமுகக் கடவுளையுந் தூக்கிச் சென்றாராக அக்கடவுள் கிருபையால் சுழல் காற்றுப் படகினை மோதியடிக்கக் கலங்கித் திருவுருவைக் கடலில் விடுத்துத் தம் வழியே சென்றார். பின்னர் முருகக் கடவுள் பிள்ளையன்றன் கனவிற்றோன்றி யுண்மையை யறிவிப்ப அவரும் மனமகிழ்ந்து ஆஞ்ஞாபித்தபடி சென்று கடலினின்றும்

---

‡ யாம் அறிந்தவரை தளவாய் என்னும் பட்டம் முதற்கட் கொடுக்கப்பட்டது அரியநாயக முதலியார்க்கேயாம். இவர் காலம் கொல்லம் ஆண்டு 681-க்குச் சரியான கி. பி. 1565-என்பதே மதுரை வரலாறு எழுதிய நேல்ஸன் துரையவர்கள் கருத்து. பத்தாம்பக்க அடிக்குறிப்பில் இவரையே பிள்ளையனரசாட்சிப்பின் நெல்லையையாண்டவ ரெனக்கொண்டு வடமலையப்பர் காலத்தையும் அவ்வாண்டை யடுத்ததாகக் கூறினோமெனினும் அது ஒரு திறத்தார் கொள்கையை விளக்குவதாகக் கொள்க. மச்சபுராணத்துள்ளேயே இந்நூல் இருநூறு வருஷங்களுக்குமுந்திய தன்றென் றறுதியிட் டுரைத்தற்குச் சான்றுளதாகலின் அக்கொள்கை தவறுடைத்து. இவ்விடத்துக் குறித்த தளவாயும் பிள்ளையன்காலத்துச்குப் பின்றோன்றிய முதலியாரேயாவர். தளவாய்=சேனாதிபதி.

ஆறுமுகக் கடவுளை யெடுத்து வைதிக சைவமுறையிற் பிறழாது மகா கும்பாபிஷேகஞ் செய்து பிரதிஷ்டை செய்தார். அது முதலாக ஆறுமுகக் கடவுள் திருவிழாக் கொண்டருளுங் காலத்து வருடம் இரண்டு முறை (மூலஸ்தானத்துச் சண்முக மூர்த்தியே) பிள்ளையன் மண்டபத்து வீற்றிருந்து அவர்க்கும் அவர் மரபினர்க்குங் கதியளிக் கின்றாரென்ப. மற்றை மண்டபங்களில் முருகக் கடவுள் (உற்சவமூர்த்தி) வீற்றிருந்து காட்சி தருகின்றாரென்ப. இதன் விரிவெல்லாம் திருச்செந்தூர்த் தல புராணமியற்றிய வென்றிமாலைக் கவிராசர் செய்த கும்மியிற் காணப்படும்.*

இனி இவ்வாசிரியர் இம்மச்சபுராண மியற்றிய காலம் நூலிறுதியிலேயே ஒரு செய்யுளிற் றெளிவாகக் கூறப் பட்டமையின் அதனைப் பற்றிய வாராய்ச்சி யநாவசியகம். அச்செய்யுள் :—

"மைப்புயல் வண்ணன் மச்சமா யுரைத்த
மச்சமாம் புராணத்தைத் தமிழா
லிப்புவிக் கெண்ணூற் றெண்பத்தி ரண்டாண்
டிசைந்திடு மவ்விய வருடத்
தைப்பசி மதியி லொப்பிலாத் தினத்தி
லமுதெனக் கனியென வார்க்குஞ்
செப்பிய விரைசை வடமலை மகிபன்
செல்வமோ டினிதுவா ழியவே"

என்பது. இதிற் கூறப்பட்ட காலம் கொல்லம் ஆண்டு 882. [சாலிவாகனசகம் 1628; கலியப்தம் 4807; கி. பி 1706-1707.] கொல்லம் 882-வது ஆண்டாகிய வியவருஷம் ஐப்பசிமாசத்தில் ஒரு சுபதினத்தில் இந்நூல் அரங்கேற்றப்பட்டதென்றும் அரங்கேற்றுங்காலத்து வந்திருந்த புலவரொருவர் இச்செய்யுளைச் செய்து கடைசியிற் சேர்த்தாரென்றும் ஊகிக்கவேண்டி யிருக்கின்றது. கி. பி. 1706-வது வருஷத்தில் மார்ச்சுமீ 28உயில் வியவருஷம் ஆரம்பித்தது. அவ்வருஷம் ஐப்பசிமாசம் கி. பி. 1706-வருஷம் அக்டோபர்மாசத்துக்குச் சரியானது. அக்காலத்தில் பாண்டி நாட்டரசாட்சி சொக்கநாதநாயக்கர் மனைவி மங்கம்மை வசத்திலிருந்தது. [மங்கம்மை காலம் 1691-1710 கி. பி.] ஆயினும் வடமலையப்பபிள்ளையன் இவ்வம்மை காலத்தும் அதற்குமுன்னர்ச் சொக்க

* ஈண்டுக் கூறிய விபரங்க ளெல்லாம் பிள்ளையன் வமிசத்தில் தற்காலம் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கும் ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை யனவர்களால் எமக்குக் கிடைத்தன.

நாதநாயக்கர் காலத்தும் அதற்குப்பின்னர் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தும் பிரதிநிதியாயிருந்தாரென்று கூறுதற்குச் சரித்திர ஆதாரங்களுள, [சொக்கநாதநாயக்கர் காலம் 1660-1682 கி. பி. விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலம் 1704-1731.]

தருமநீதி வழுவாது அரசுபுரிந்து சிவபெருமான் திருவடிப் பத்தி பேணிப்புகழ்புண்ணியங்கள் நிறுத்திய வித்வத்பிரபுகுல சிகாமணியாகிய வடமலையப்பபிள்ளையன் செய்த மகாபுராணங்களு ளொன்றாகிய இம்மச்சபுராணத்தினைச் செந்தமிழபிமானமும் சிவ நேசமுமுடைய அன்பர்கள் பெற்றுப் பத்திசிரத்தையோடு விதி த்தபடிபடித்து இகபரசுகந்துய்த்துப் பேரின்ப மெய்துவாராக.

திருசிற்றம்பலம்.

சென்னை,
20-11-'00. } எஸ். அனவரதவிநாயகம்பிள்ளை, எம். ஏ.

சிறப்புப்பாயிரம்.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

பிரமஸ்ரீ

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ.

சொல்லிய

நேரிசையாசிரியப்பா.

திருவளர் செல்வத் தருள்வளர் தவத்தின்
மகத்துவஞ் சான்ற வகத்திய முனிவ
னினிதுவீற் றிருக்குங் கனிமரப் பொதியமு
மெண்ணீர் மிக்க தண்ணீர்ப் பொருநையுந்
தன்பான் மேவிய தென்பாண்டி நாட்டி
னுரைசான் மரபி னரைசா ளுரிமை
பெற்றோங் கியசீர் நற்றோன்ற லாகிய
வடமலை யப்பனென் றடமலைத் தோளா
ஞாணக் குடையெனும் பேரணிக் கோத்திர
விளக்கெனப் போந்த துளக்கமி லறிவினன்
பிள்ளைய னென்னுங் கொள்ளும் புகழ்க்குலத்
துதித்த வள்ளன் மதித்திற மிகுந்தோன்
சொற்பயில் பாவலர் பொற்புற வளிக்குங்
கற்பகம் போன்றோன் விற்பொர லான்றோன்
செந்தமிழ்க் கடலிற் சந்ததந் திளைத்து
விளையாட் டயர்ந்து களியாத் திரிதரு
களிறெனப் பொலிந்த வொளிறுவாட் படையான்
றெய்வத் தகைமிகு சைவத் தவமுனி
வியாத னென்போ னயாதி செறியவீ
ரொன்பான் புராண மன்பா னியற்றின
னவையிற் றொருபது நவையிற்று மணிமிடற்
றண்ண லுக் குரியவாய் மண்ணினும் விண்ணினு
மேதக வெய்தி யோதப் படுமியன்
மதிதேறி முன்ன ரதிவீர ராமன்
கூர்ம புராண மோர்மலிந் திலங்கப்
பைந்தமிழ் மொழியிற் றந்தமை மான
நச்சும் பொருணல மச்ச புராணமஃ
திச்சையிற் செந்தமிழ் நற்செய்யு ளாக
வையா யிரம்பா மெய்யாக யாத்துப்.
பெருங்காப் பியவிய லொருங்கே யமையப்
பாடிய நூலினை நாடிய புலவ
ரருந்தமி ழருமை தெரிந்த பெருந்தகை

குணக்குன் றன்னார் மணக்குங் குவளைத்
தாராளர் மிக்க சீராள ராகுங்
கந்தசா மிப்பேர் விந்தையிற் கொண்ட
முதலியா ரரன்றா ணுதலிப் புகுந்து
கயிலைநா தற்றொழு மயிலை வித்துவான்
சண்முகக் கவிஞனை யண்மியிந் நூலைப்
பிழையற வாய்ந்து விழைதர யாவருந்
தருதி யெனவவன் றிருதி யுளத்தொடு
மாராய்ந் தளிப்பச் சீராந் தகவுறக்
கரத்தேற் றஃதுயர் தரத்ததம் பொறிதிகழ்
* கலைமக ளச்சுத் தலைமைகொள் சாலையி
லெழுதா வெழுத்தினில் விழுமி தாகச்
சிவகைங் கரியமாச் சிந்தித்
தவகையிற் றீட்டி யுதவினர் மகிழ்ந்தே.

திருமயிலை - வித்வான்

சண்முகம்பிள்ளையவர்கள் மாணாக்கர்

ம-௱-௱-ஸ்ரீ,

காவேரிப்பாக்கம்-நமச்சிவாய முதலியாரவர்கள்

பாடிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்பூத்த மகரந்தம் பிலிற்றும்பைங் கமலத்துப் பொறியு மேங்கு
மின்பூத்த பேரழகின் பொன்னனையார் தமக்குள்ள மிகவி ழைந்து
சொன்பூத்த விரதவா தம்புரிந்து தன்னுருவங் குழைந்து காட்டும்
தென்பூத்த விசைபூத்த தென்னவர்கோன் கோலோச்சுஞ் செய்ய நாட்டில்.

பிறவாத நெறியுதவும் பெருந்தகைவேய் முத்தமெனப் பிறங்கவன்று
பிறவாமற் பிறந்ததன்றி யருணெறியா ரெஞ்ஞான்றும் பேசா நிற்கும்
நறவாருங் குழற்கவுரி காணத்தா மிரசவையை நயந்து நாளும்
அறவாண னடங்குயிற்று நெல்வேலி யெனும்பதிதா னவிரு மாலோ. (2)

அன்னதிருப் பதிவயினிஞ் ஞான்றறுபான் மும்மையருந் தொண்டர் கீர்த்தி
நன்னயச்செந் தமிழினிற்காப் பியமாகப் பாடியநா வல்லோன் குன்றைத்
தொன்னகராதிபன்சேவைகுலாதிபன்றோன்றியமரபிற்றோன்றியோன்செம்
பொன்னனைய குணக்குரிசில் வடமலையப் பன்பெரிய புலவ ரேறே. (3)

* The Minerva Press.

இணையனகத் தியந்தொல்காப் பியமுதலா மிலக்கண நூல் வரம்பு கண்டு
தனைநிகரா மொருசிந்தா மணிமுதலா மிலக்கியநூ றகலி னோர்ந்து [ன்றை
கனைகடல்சூழ் வரைப்பினர சுரிமையுங்கைக் கொண்டோச்சிக் கமழுங் கொ
புனைசடிலத் திறையருளும் பெறநாடி யருந்தமிழோர் போற்ற மாதோ. (4)

வர்தரா யணன்வகுத்த புராணமொன் பானிரண்டின் மன்னுஞ் சீர்த்தி
போதவில கியமச்ச **புராண**மதை மொழிபெயர்த்துப் புரிவினல்கக்
கோதிலவன் மரபில்வருஞ் **சுப்பிரமண் ணிய**க்குரிசில் குறுகிக் கேட்ப [து.
நாதனையோர் மயிலுருக்கொண் டுமைவழிபா டாற்றுகிற்கு நலஞ்செய் தேத்

நிலவுலகிற் றோன்றியருந் தமிழ்ப்புலமை நிரம்பியர னேய மெய்திப்
பலபடச்செந் தமிழ்க்கவிதை யவனடித்தா மரைமலர்க்கே பரிந்து பாடி
நலமருவு முல்லைமான் மியம்புகன்றெம் போல்வார்க்கு நாடிச் சால
வலகினூல் கற்பித்த **சண்முகநா வலனை**க்கொண் டன்பி னம்மா. (6)

பனைமடலி னின்றெடுத்துப் பரிசோதிப் பித்தச்சிற் பதிப்பித் தியார்க்கும்
கனைகடல்சூ ழுலகிடைநல் கினனியாவ னெனினென்று கதிர்செய் மாடந்
தனையென்றுங் கடவாத வொதிக்காட்டிற் றுளுவவேளாண் டனிக்கு லத்துப்
புனையருஞ்சீர் பெறவந்தோன் **கந்தசா மி**ப்பெயர்கொள் புனித னம்மா. (7)

ம-ள-ள-ஸ்ரீ

கல்குளம் - குப்புசாமி முதலியாரவர்கள், பி. ஏ.,

இயற்றிய

நிலமண்டிலவாசிரியப்பா.

சொல்வளர் மதுரை நல்வளப் பதியிற்
சங்கந் தழைப்ப வெங்கணும் பெருகு
மமுதம் போன்ற வகப்பொருட் டெளிவை
யறுபது சூத்திரத் தளித்தபே ரிறைவன்
பெருமையை வியாச முனிவரன் புகன்ற
பதினெண் புராணத்துட் பத்து முழங்கு
மெஞ்சிய வெட்டனுள் விஞ்சிய மாயனை
யுயர்வா யுரைப்ப தொருநான் காகும்
பிரமன் றன்னைப் பேசுவ திரண்டாம்
பரிதியை யங்கியைப் பகர்வதொவ் வொன்றே
பரமனைப் பரவும் புராணம் பத்தனுட்
செந்தமிழ்ச் செய்யுளில் வந்தன தாமே
பீடுசால் பிரம குலவிளக் கெனவெழிற்
காஞ்சிப் பதிவரு கச்சி யப்பன்செய்
காந்தத்தின் பாகமாங் கந்த புராணமும்

குலசேக ரன்றந் திலங்கு மிலிங்கமும்
அரசர் பெருமான் அதிவீர ராமன்
சீர்பெறச் செய்த வேர்பெறு கூர்மமும்
சைவ புராணத்து வாயு சங்கிதையும்
இச்சைகொள் புலவர் மச்சமு மிதனைத்
திருவளர்ந் தோங்குந் திருநெல் வேலியிற்
செங்கோல் செலுத்திய திருத்தகு செம்மல்
நாரணக் குடையெனும் பூரணக் கோத்திரத்
தடல்பெற வுதித்த வடமலையப்ப
பிள்ளைய னென்னும் பெருமைசா ஞமம்
பண்பிற் படைத்த பாவலர் சிகாமணி
யின்புறு பாவா லியற்றின னதுதான்
கவின்பெறு காண்ட மிரண்டினிற் புனைந்து
நூற்றேடேற்ற வெட்டுற ழொன்பா
னத்தி யாயத் தமைத்தினி தியாத்த
விருத்த மையா யிரத்தினை யுடைத்தே
இப்பெரும் புராணத்தைத் துப்புறு தளுவ
வேளாண் குலத்தில் விளங்குநன் மணியாய்க்
கந்த சாமிப் பெயரின் வந்தவன்
மயிலூருக் கொண்டுமை மனமுற வழிபடு
மண்ணல் தங்குறு மெண்ணரு மயிலைவாழ்
சண்முகப் பாவலன் தன்றுணை கொண்டு
அச்சிடு வித்தனன் அனைவருங் களிக்கவே.

சேற்றூர்
சமஸ்தான வித்துவான்
ம-ா-ா-ஸ்ரீ,
மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்
இயற்றிய
அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தங்கள்.

காவரசங் கரவெனநம் பெருமானைக் கைகுவிக்குங்
கருத்த ரான
மூவரசர் தமக்குளுயர் நிலைநின்றோ னிவனென்ன
மொழியா நின்ற
கோவரச ரோருகமா முகமலர்ந்து செங்கோல்கைக்
கொண்டு நாளுங்
காவரசங் கடமுழுதுந் தன்னுயிர்போற் புரந்தருளு
தமிழ்நாட் டின்கண். (க)

* அனவரத தானர்மூ விருபதினா யிரவருட
    மரசு செய்த
நனவரத மலிகவிக ளூறுதிருநெல் வேலியெனு
    நகரை யந்த
மனவரதர்த் தோன்றலெனு முறைக்கியையக் கங்கைகுல
    மரபின் வந்த
கனவரத நம்பயில்பூ ணணியும்வட மலையப்பன்
    காக்கு நாளில் (௨)

ஓங்குசெல்வம் போற்கல்வி யுடையானென் பதுபின்றோ
    றொருங்கு தேர்வான்
பாங்குபெறு மீரொன்பான் புராணங்கட் குட்சைவ
    பரமா வுற்ற
தாங்குவலை யம்புகழு மச்சபுரா ணந்தன்னை
    யன்பு மீக்கொண்
டோங்குதமிழ் மொழிவிருத்தப் பாக்களாற் பாடியற
    மெய்தி னானால் (௩)

அனையபெருங் காப்பியமெங் குள்ளதெனத் துருவவா
    ராமன் றானா
யெனையறிவிற் சிறந்தநீர் கொண்மினென வதுநேடி
    யேகும் வண்ணந்
தனையனைய புகழ்த்துளுவ வேளாளர் குலக்கந்த
    சாமி மேலோன்
வினையமிகுந் தனதச்சி லாயிரம்புத் தகமாக்கி
    விடுத்தான் மன்றோ (௪)

---

* அனவரததானநாதர் - சிவபிரான்.

மச்சபுராணம்.

பொருளடக்கம். பக்கம்.

1.	பாயிரம்	... 1
2.	நைமிசாரணியச்சிறப்பு	... 5
3.	அநுக்கிரமணி	... 11

பூருவகாண்டம்.

1.	மச்சாவதார வத்தியாயம்	... 17
2.	பிரமாண்டபேத வத்தியாயம்	... 20
3.	பிரமமுகவுற்பத்தி யத்தியாயம்	... 23
4.	ஆதிசிருட்டி யத்தியாயம்	... 26
5.	வசு ருத்திரோற்பத்தி யத்தியாயம்	... 30
6.	காசிபர் மரபுரைத்த வத்தியாயம்	... 33
7.	மதனத் துவாதசிவிரத வத்தியாயம்	... 37
8.	சர்வாதிக்க பட்டாபிஷேக வத்தியாயம்	... 40
9.	மன்வந்தர வகுப்பத்தியாயம்	... 42
10.	பூமியினிடத்தில் தேவராதியர் இரசங்கரந்த வத்தியாயம்	... 45
11.	இளாசங்கம வத்தியாயம்	... 48
12.	சூரியன் மரபுரைத்த வத்தியாயம்	... 51
13.	சவுரிநாம அட்டோத்தரசதக வத்தியாயம்	... 55
14.	சத்தியவதி சொரூபகதன வத்தியாயம்	... 61
15.	பிதிர்வமிசானுவர்ணனை அத்தியாயம்	... 63
16.	அக்கினிமான் சிராத்த வத்தியாயம்	... 66
17.	பொதுச்சிராத்தவிதி யத்தியாயம்	... 69
18.	சபிண்டீகரண சூதகாசுச அத்தியாயம்	... 73
19.	சிராத்தானுகமன அத்தியாயம்	... 79
20.	திதிமான்மியத்தி லெறும்புச்செய்கை அத்தியாயம்	... 81
21.	பிதிர்மகிமை யத்தியாயம்	... 83
22.	தீர்த்த சிராத்தவிதி அத்தியாயம்	... 86
23.	சந்திரோற்பத்தி அத்தியாயம்	... 90
24.	சோமவமிசோற்பத்தி அத்தியாயம்	... 94
25.	கசன்வித்யாப்பியாச அத்தியாயம்	... 97
26.	தெய்வயானிசாப அத்தியாயம்	... 100
27.	தெய்வயானிகோப அத்தியாயம்	... 101
28.	தெய்வயானி ஆட்சேப அத்தியாயம்	... 103
29.	தெய்வயானி சீந்தோட வத்தியாயம்	... 104
30.	தெய்வயானி கல்யாண வத்தியாயம்	... 106
31.	யயாதி புத்திரோற்பத்தி அத்தியாயம்	... 108

பக்கம்.

32. யயாதிசாப அத்தியாயம் ... 110
33. யயாதிசுதர்சாப வத்தியாயம் ... 112
34. பூருபட்டாபிடேக வத்தியாயம் ... 114
35. யயாதி சுவர்க்கஞ்சேர்ந்த வத்தியாயம் ... 120
36. யயாதி இந்திரசம்வாத அத்தியாயம் ... 123
37. யயாதி சுவர்க்கம் விட்டுவிழுந்த அத்தியாயம் ... 124
38. யயாதி அட்டகசம்வாத அத்தியாயம் ... 126
39. கர்ப்பசொரூப விசார வத்தியாயம் ... 128
40. ஆச்சிரமதன்ம வத்தியாயம் ... 131
41. யயாதி பிரமதத்தன் சம்வாத வத்தியாயம் ... 134
42. வசுமான்சிபியுடன் சம்வாத அத்தியாயம் ... 136
43. கார்த்தவீரியன் மகிமை யத்தியாயம் ... 139
44. போசன் வமிசமுரைத்த வத்தியாயம் ... 141
45. விருட்டுணிவமிசத்தில் கண்ணனவதார வத்தியாயம் ... 145
46. பிருகுவிட்டுணுவைச் சபித்த வத்தியாயம் ... 149
47. சுக்கிரன் வரமடைந்த வத்தியாயம் ... 156
48. அசுரசாப கலியுக தன்மமுரைத்த அத்தியாயம் ... 164
49. தீர்க்கதமசுக்குக் குருசாபவிமோசன வத்தியாயம் ... 168
50. பவுரவ வமிச வத்தியாயம் ... 172
51. பவுரவ வமிசத்தில் அருச்சுனன்வமிச வத்தியாயம் ... 179
52. அக்கினிவமிச வகுப்பத்தியாயம் ... 184
53. கருமயோக அத்தியாயம் ... 189
54. புராணவனுக்கிரமணி யத்தியாயம் ... 192
55. நட்சத்திர புருடவிரததான அத்தியாயம். ... 197
56. ஆதித்தசயன விரத வத்தியாயம் ... 200
57. கிருட்டிணாட்டமி விரதவத்தியாயம் ... 204
58. உரோகணி சந்திரசயனவிரத வத்தியாயம் ... 205
59. தடாகவிதி யத்தியாயம் ... 210
60. விருக்கவுச்சவ வத்தியாயம் ... 213
61. சவுபாக்கிய சயனவிரத வத்தியாயம் ... 215
62. அகத்தியர் பூசை யத்தியாயம் ... 217
63. அனந்த திரிதிகைவிரத வத்தியாயம் ... 222
64. ரசகல்யாண விரத வத்தியாயம் ... 226
65. ஆர்த்திரானந்தகரி திரிதிகைவிரத வத்தியாயம் ... 229
66. சரசுவதிவிரத வத்தியாயம் ... 232
67. சந்திரசூரிய கிரகணதானவிதி யத்தியாயம் ... 234
68. சத்தமிசாந்திவிதி யத்தியாயம் ... 236
69. வீமத்துவாதசி விரத வத்தியாயம் ... 239
70. அனங்கதான விரத வத்தியாயம் ... 244
71. அசூனிய சயனவிரத வத்தியாயம் ... 249

பக்கம்.

72. அங்காரகவிரத வத்தியாயம் ... 251
73. குருசுக்கிர பூசைவிரத வத்தியாயம் ... 254
74. கல்யாண சத்தமிவிரத வத்தியாயம் ... 255
75. விசோகசத்தமி விரத வத்தியாயம் ... 257
76. பலசத்தமி விரத வத்தியாயம் ... 259
77. சற்காரசத்தமி விரத வத்தியாயம் ... 260
78. கமல சத்தமிவிரத வத்தியாயம் ... 262
79. மந்தாரசத்தமி விரத வத்தியாயம் ... 263
80. சுபசத்தமிவிரத வத்தியாயம் ... 264
81. விசோகத் துவாதசிவிரத அத்தியாயம் ... 266
82. தான்ய பருவதாதி தசபருவத தானமான்மிய வத்தியாயம் ... 269
83. சாந்திகிரக யஞ்ஞவிதி யத்தியாயம் ... 277
84. கிரகசொரூபானு கீர்த்தன வத்தியாயம் ... 285
85. சிவசதுர்த்தசி விரத வத்தியாயம் ... 287
86. சருவபவத்தியாக வத்தியாயம் ... 290
87. ஆதித்தபூசை யத்தியாயம் ... 292
88. சங்கிராந்திவிரத வத்தியாயம் ... 294
89. விபூதித் துவாதசி விரத வத்தியாயம். ... 298
90. சஷ்டிவிரத வத்தியாயம் ... 300
91. ஸ்நானவிதி யத்தியாயம் ... 306
92. மார்க்கண்டர் தன்மர் சம்வாத வத்தியாயம் ... 311
93. பிரயாகா கமனபல வத்தியாயம் ... 313
94. கோதானபல வத்தியாயம் ... 314
95. தீர்த்தயாத்திராவிதி யத்தியாயம் ... 316
96. பிரயாகையில் தேகபரித்தியாக வத்தியாயம் ... 319
97. யமுனுமான்மிய வத்தியாயம் ... 320
98. பிரயாகையில் பவ சொரூபகதன வத்தியாயம் ... 322
99. தருமபுத்திரன் பட்டாபிஷேக வத்தியாயம் ... 324
100. பூகோள மேருவருணனை யத்தியாயம் ... 327
101. இரம்மியக வருடாதி வருணனை யத்தியாயம் ... 331
102. பாரதவருட வத்தியாயம் ... 332
103. புரூரவ சரித்திர வத்தியாயம் ... 337
104. இராவதி நதி வரலாறத்தியாயம் ... 338
105. இமயகிரி வருணனையத்தியாயம் ... 340
106. அத்திரியாச்சிரம வருணனை யத்தியாயம் ... 341
107. விஷ்ணுதரிசன வத்தியாயம் ... 343
108. மத்திரராஜன் வரமடைந்த வத்தியாயம் ... 346
109. சம்புத்தீவு வர்ணனை யத்தியாயம் ... 349
110. சாகத்தீவாதி பூறுதீவுளாத்த வத்தியாயம் ... 353
111. சூரிய சந்திரகதி யத்தியாயம் ... 357
112. சூரியரத வர்ணனை யத்தியாயம் ... 362

பக்கம்.
113. துருவப் பிரசங்கிதை யத்தியாயம் ... 365
114. புவனகோச சமாத்தி யத்தியாயம் ... 370

உத்தர காண்டம்.

1. இரணியகசிபு வரமடைந்த வத்தியாயம் ... 376
2. விஷ்ணு புருடபாரசெய வத்தியாயம் ... 382
3. இரணியகசிபு சபாப்பிரவேச அத்தியாயம் ... 387
4. சக்கரபாணி தேவர்க் கபயப்பிரதானஞ்செய்த வத்தியாயம்.. 390
5. பிராமணர் சொரூபமுரைத்த வத்தியாயம் ... 393
6. ஆயுதவெட்டுப் பரிகார வத்தியாயம் ... 397
7. சர்ப்பதிட்ட பரிகார வத்தியாயம் ... 399
8. திக்கயங்கள் வீறழிந்த வத்தியாயம் ... 401
9. ஆபிசார வீறழிந்த வத்தியாயம் ... 402
10. பிரசாதபதன வத்தியாயம் ... 404
11. சோடணன்வத வத்தியாயம் ... 405
12. பிரகலாத தேவேந்திர சம்வாத வத்தியாயம் ... 407
13. விட்டுணுதெரிசன வத்தியாயம் ... 410
14. நாரசிங்கவுற்பத்தி யத்தியாயம் ... 412
15. சங்குலயுத்த வத்தியாயம் ... 414
16. சேனுவத வத்தியாயம் ... 415
17. துர்ச்சகுன தெரிசன வத்தியாயம் ... 417
18. இரணியகசிபுவத வத்தியாயம் ... 418
19. பிரகலாதன் பட்டாபிடேக வத்தியாயம் ... 420
20. சிவசொரூபகதனமுரைத்த வத்தியாயம் ... 423
21. யோக சாத்திரத்தின் வண்மையுரைத்த வத்தியாயம் ... 426
22. யோகவிக்கின முரைத்த வத்தியாயம் ... 434
23. பத்திமான்மியவத்தியாயம் ... 438
24. பிரமவிட்டுணு சம்வாத அத்தியாயம் ... 443
25. வயிரவவுற்பத்தி யத்தியாயம் ... 445
26. பரமேசுவரர் தேவர்கட் கபயங்கொடுத்த வத்தியாயம் ... 449
27. கபாலமோசன வத்தியாயம் ... 452
28. மகாவிட்டுணு சேடற்குபதேசஞ்செய்த வத்தியாயம் ... 457
29. கலாசொரூப வருணனை யத்தியாயம் ... 460
30. இருபத்தைந்து பேதமுரைத்த வத்தியாயம் ... 463
31. திரிபுர நிருமாணமுரைத்த வத்தியாயம் ... 471
32. திரிபுரநிருமாண வருணனை வத்தியாயம் ... 473
33. துர்ச்சொப்பன தெரிசன வத்தியாயம் ... 475
34. பரமேசுரர் தோத்திர வத்தியாயம் ... 478
35. இரதநிருமாண வத்தியாயம் ... 482

			பக்கம்.
36.	நாரதர் திரிபுரத்தில்லந்த வத்தியாயம்	...	485
37.	வித்துன்மாலி வத வத்தியாயம்	...	487
38.	தயித்திய சேனுபங்க வத்தியாயம்	..	495
39.	திரிபுரம் சமுத்திரத்திலோடிய அத்தியாயம்	..	497
40.	தாரகாட்சன்வத வத்தியாயம்	...	499.
41.	தானவர்சம்போக வத்தியாயம்	...	504
42.	வித்துன்மாலிவத வத்தியாயம்	...	508
43.	திரிபுரவிசய வத்தியாயம்	...	512
44.	புரூரவாமகிமை யத்தியாயம்	...	514
45.	மன்வந்தரானுகற்பச் சக்ரவர்த்திலட்சணமுறைத்தவத்தியாயம்		520
46.	தேவரிருடியர் சம்வாத வத்தியாயம்	...	524
47.	மன்வந்தரயுக வர்ணனை யத்தியாயம்	...	527
48.	இருடி மான்மிய வத்தியாயம்	..	533
49.	தாரகாசுர உற்பத்தி யத்தியாயம்	...	540
50.	தேவாசுரர் படையெழுச்சி யத்தியாயம்	...	545
51.	சங்குலயுத்த வத்தியாயம்	...	550
52.	காலநேமி பார்செய வத்தியாயம்	...	552
53.	கிரசனன்வத வத்தியாயம்	...	559
54.	விஷ்ணுபராசெய வத்தியாயம்	...	561
55.	செம்பன்வத வத்தியாயம்	...	565
56.	தாரகன் விசய வத்தியாயம்	...	574
57.	குமாரசாமி யுற்பத்தி அத்தியாயம்	...	581
58.	தாரகாசுரவத வத்தியாயம்	...	594

உ

திருச்சிற்றம்பலம்.

மச்சபுராணம்.

பாயிரம்.

விநாயகர் காப்பு.

மழைபூத்த கருநிறத்துச் செம்மணிபூத் தொளிர்நிறத்து வனத்து ழாய்ப்பைந்
தழைபூத்த முகுந்தனருண் மச்சபுரா ணத்தையருந் தமிழாற் பாட
வுழைபூத்த திருக்கரத்தென் னுளம்பூத்த பரஞ்சுடர்பா லுமையா ளீன்ற
புழைபூத்த நெடுந்தடக்கைக் கற்பகக்குஞ் சரத்திருதாள் போற்றல் செய்வாம்.

கடவுள்வாழ்த்து.

சிவபிரான்.

மாமறையின் முழுமுதலாய் வளரொளியா யானந்த மயமா யன்பர்
தாமகிழு நுண்ணுணர்வாய்ப் பூரணமா யகிலசரா சரங்க ளாகிப்
பூமலிபைந் துணர்க்கடுக்கை மதிநதிதாங் கியசடிலப் பொருளின் செய்ய
தேமருவு சததளப்பூஞ் செழுங்கமலப் பொற்பாதஞ் சிந்தை செய்வாம். (க)

உமாதேவியார்.

பூரணசிற் பரமான மெய்ப்பொருளி னிடப்பாகம் பொருந்தி யாதிக்
காரணசித் துருவாகி யனைத்துலகும் விளக்கொளியாய்க் கருணை பூத்த
வாரணவித் தாகிமல ரயன்முதலா வுலகமெலா மருளி னீன்ற
வாரணவு களபமுலை வடிவுடைய கவுரிபத மனத்துள் வைப்பாம். (உ)

விநாயகர்.

தழைத்தமலர்க் கொன்றைபுனை சடாமகுடத் தெம்மானைத் தழுவிக் கொங்கை
குழைத்தமலை மகளீன்ற கழைசுளிக்குஞ் சிறுபிறைவெண் கோட்டு நால்வாய்
மழைத்தடக்கார் மேகமென வூற்றிருந்தா றுவட்டிமதத் தாரை சிந்தும்
புழைத்தடக்கை விகடதடக் கரடமதக் களிற்றிணைத்தாள் போற்றல் செய்வாம். (௩)

சண்முகக்கடவுள்.

குமரகுரு பரமுருக சரவணசண் முகவிபவ குகவென் றேவாழ்த்
துமரனெதிர் கேட்பவுப தேசித்த பரஞானச் சுடரா யப்பாற்
றமரநெடுந் திரைக்கடலு ளொளித்தகொடுஞ் சூருடலந் தடிந்து வானத்
தமரர்சிறை மீட்டருளு மறுமுகத்தெம் மான்மலர்த்தா ளகத்துள் வைப்பாம். (௪)

சண்டேசுரர்.

சிந்தைதனி லஞ்செழுத்தின் றிறமோர்ந்தா னந்தவெள்ளந் திளைத்து மேவு
முந்தைவினைப் பயனுதவ முதல்வர்திரு முடிமீதின் முறைவ ழாமல்
விந்தைபெறப் பாலாட்டும் வேளையினில் வந்திடறு விளக்குஞ் செய்ய
தந்தைபதத் திணைதடிந்த தண்டீசர் பதத்துணையைத் தலைமேற் கொள்வாம். (௫)

திருநந்தி தேவர்.

விரிந்தகொடு முடிதாங்கி விண்ணுலகு மெண்டிசையும் விளக்க வெண்மை
புரிந்துயர்ந்த திண்கயிலைப் பொருப்பிடத்திற் பச்சைமயில் பொருந்தும் பாகம்
பரிந்துசெழுங் கதிர்பரப்பு பவளநிறக் கருமிடற்றெம் பரமன் வேலை
தெரிந்தமரர்க் கருள்புரியு நந்தீசர் பாதமலர் சென்னி சேர்ப்பாம். (௬)

திருஞானசம்பந்த சுவாமிகள்.

பொருகயற்கண் ணுமைமுலைப்பா லருந்தியருந் தமிழ்ப்பதிகம் புரமூன் றெய்த
வொருவனைப்பா டிச்சமணக் குறும்பகற்றிக் கைதவன்கூ னொழித்தே யென்பைத்
திருவுருவாச் செய்துசிவ சமயமே சமயமெனச் செகத்தி லோங்கக்
கருணைபுரி பிரமபுரக் கவுணியர்கோ னிருசரணங் கருத்துள் வைப்பாம். (௭)

திருநாவுக்கரசு சுவாமிகள்.

பெருநாவ லிருநிழற்கீழ்க் குளிர்ப்புனற்குண் முளைத்தெழுந்த பெம்மான் செம்மை
தருநாவுக் கிசைத்தமிழா லலைகடலி னிடைப்பிணித்த தனிக்கற் றூணன்
றொருநாவா யெனமிதப்ப வீற்றிருந்தங் கஞ்செழுத்தி னுண்மை யோதுந்
திருநாவுக் கரசரிரு பிரசமலர்ச் சேவடியைச் சிந்தை செய்வாம். (௮)

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

மாதுயரப் பவக்கடலை யொழித்தடிய ரிடத்துறையு மழுவ லாளன்
மீதுசெழுந் தமிழ்மாலை பாடியுளத் துறுமாலை விரைசேர் கஞ்சப்
போதுநிகர் பதம்வருந்தப் பரவைமனைப் புறத்தணைந்து புகல்வீ ரென்று
தூதுசெலப்பணித்தருளுஞ் சுந்தரர்செந்தளிர்த்துணைத்தாள் தொழுதல் செய்வாம்.

மாணிக்கவாசக சுவாமிகள்.

கறைமிடற்றெம் பரற்போற்றி நரிபரியா வரவழைத்துக் கயற்கண் மூங்கை
யிறைவனையைப் பேசுவித்துப் புத்தரைவென் றம்பலத்தி னினிதி னுடும்
பிறைமுடித்த பிரானெழுதக் கோவைதிரு வாசகப்பேர் பிறங்கு பாடன்
மறைவகுத்த வாதவூர் மாணிக்க வாசகர்தாள் மனத்துள் வைப்பாம். (௧௦)

அறுபத்துமூவர்.

பச்சைநிறக் கொடியொருபாற் படர்ந்தமுழுப் பவளவரை பரவி னோர்க்கு
விச்சைதழை யக்கொடுக்குந் தந்திமுகத் தெந்தைதந்தை விரிபூந் தேன்பாய்
செச்சைமணி மார்பனிரு செம்மலர்த்தா டுதைமருமச் செம்மல் பாதத்
திச்சைபெறு பத்தியறு பத்துமூ வரையுமனத் திறைஞ்சு வாமே. (௧௧)

திருத்தொண்டர்கள்.

ஆறணிந்து மணிமன்றத் தானந்த நடம்புரியு மமலற் காளாய்
நீறணிந்தஞ் செழுத்தோதி யக்கவடம் புனைந்தன்பு நிறைந்தே நீடு
வீறணிந்த மனத்தன்ப ரிடத்தன்பு கடைப்பிடியாய் விளைந்தே மேன்மைப்
பேறணிந்தோ ரெவருளர்மற் றவரிருதாட் டாமரைகள் பேணு வாமே. (௧௨)

திருமால்.

கண்ணகன்ஞா லந்தருமெண் கட்கடவு ளையுந்திக் கமலம்பூத்த
பண்ணவன்பார் முழுதுமளந் துண்டுமிழ்ந்த பரமனுயர் பச்சை மேக
வண்ணன்மதக் கரிக்கருளுங் கடவுணெடுந் தடங்கடற்குள் வளரா நின்ற
வண்ணலஞ்சேல் வடிவெடுத்த நாரணன்பொற் றுமலைத்தா ளகத்துள் வைப்பாம்.

இலக்குமி.

கந்திருவ ரியக்கர்விஞ்சை வல்லவர்வா னகத்தமரர் கருவியாழ்ப்பண்
முந்திருவ ராயிரங்க ணிந்திரனுன் முகன்மறையோர் முனிவர் நாகர்
வந்திருதாண் மலர்துதிப்ப மாயவன்செம் மணிமார்பின் மருவி வாழுஞ்
செந்திருவி னறுங்கமலச் சுந்தரப்பொற் பாதமலர் சென்னி சேர்ப்பாம். (௧௪)

சரஸ்வதி.

வெண்மலரும் வெண்பணியும் வெண்கலையும் வெண்மணியும் வேய்ந்து வாச
வெண்மலரின் வீற்றிருந்து பழங்கருணை பூத்துவண்டு விளரி பாடக்
கண்மலரு மாயிரந்தோ டவிழ்த்துமுகை நெகிழ்த்தகம லத்தில் வாழெண்
கண்மலருஞ் சதுமுகத்தோ னுவில்வளர் வாணிபதங் கருத்துள் வைப்பாம். (௧௫)

குரு வணக்கம்.

இருவினையும் மலம்போர்த்த வந்தகா ரப்படல விருணீத் துண்மை
யுருவினைமுற் றினுமுணர்த்த வுதித்தகதிர்ப் பரிதியென வுபதே சித்த
குருவினைநற் றுகிற்கஞ்ச னூர்வாழும் கோதின்மறைக் கொழுந்தின் செய்ய
மருவினைச்சுப் பிரமணிய தேசிகனை யனுதினமு மனத்துள் வைப்பாம். (௧௬)

அவையடக்கம்.

உறும்பொரு டருநன் மச்ச புராணமென் றுலக மேத்தப்
பெறும்பொருள் வடநூ றேர்ந்து பெருமைசேர் வியாதன் சொற்ற
நறும்பொரு டமிழாற் செய்கே மென்றியா நயத்த லோர்சிற்
றெறும்பொரு குடத்தேன் முற்றுந் துய்ப்பலென் றெண்ணல் போலும். (௧௭)

பன்மொழி திசைச்சொல் பஞ்ச விலக்கண மிலக்கி யங்கூர்
தென்மொழி வடசொல் யாவுந் தேர்ந்தறி புலவர் யாரு
மென்மொழி பொருட்சொற் பாக மியலிசை பொருந்தச் சேராப்
புன்மொழி யெனினுங் கொள்வர் புங்கவன் புராண மென்றே. (கஅ)

இப்பெரும் புராணங் காண்ட மிரண்டுநற் கிரந்தஞ் சொல்லிற்
றுப்புறு பின்மூ வாயி ரத்துறுந் தொகையத் யாயந்
தப்பினூற் றெழுப தின்மே லிரண்டுசார் பதிகத் தோடுந்
திப்பிய விருத்த மையா யிரத்தினூற் செப்பி னேமால். (கசு)

மங்கலவாழ்த்து.

வாழி நான்மறை யாகம புராணங்கள் வாழி மாமழை மகிதல முழுவதும்
வாழி மாமனு முறைதெரி மன்னவர் வாழி யோது மறையவர் தாபதர்
வாழி சைவநூன் மழுவலா னடியவர் வாழி தென்றிசை மலயமேற் குறுமுனி
வாழி யானினம் வானவர் மானிடர் வாழி செந்தமிழ் மச்ச புராணமே. (உ0)

பாயிரம் முற்றும்.

ஆகச்செய்யுள் - உ0.

சிறப்புப்பாயிரம்.

மடலவிழ்செங் கமலமலர் பூத்தகருங் கடல்போலு மாயன் மச்ச
வுடலுடன்வந் தவதரித்த மச்சபுரா ணந்தமிழா லுலக மேத்தக்
கடலமிழ்தந் துளித்தொழுகத் தெளித்தசுவை பழுத்தமொழிக் கவிதை செய்தா
னடல்கெழுதிண் புயனிரையூர் வடமலைநா ரணக்குடையா னரச ரேறே.

நைமிசாரணியச் சிறப்பு.

காருற வளர்ந்து திசையெலா மடர்ந்து கதிர்களோ ராயிரத் திரவி
தேரினிற் கட்டும் பரிகளேழ் நடக்கச் செந்தளிர்க் கரங்களா லோச்சும்
பேருறு தருக்கண் மிடைந்திடு நைமி சாரணி யத்துயர் பெருமை
யேருறு வகையாய் வரன்முறை தவரு தியன்றவா றியம்புது மாதோ. (க)

மணிவெயி லெறிக்க விளங்குகோ புரங்கள் வயின்வயி னிலவுமா டங்க
ளணிபெறக் குயிற்று மோவியத் தெற்றி யாடகப் புரிசையுப் பரிகை
கணிதமொன் றின்றி மிடைந்திடும் வீதி கவின்பெற வழிவில வாகித்
தணிவிலா துயர்ந்தே யுலகெலாந் துதிக்குந் தகைமைசேர் சத்திய வுலகில். (உ)

மாணிக்கம் வயிர மரகத நீல மணிவயி டூரியம் பவள
மாணித் தண்டரளம் புட்பரா கங்கோமே தகமணி யிவையழுத்திப்
பாணித்த வேதமண் டபநாப்பண் பைம்பொனாற் புரியரி யணைமேற்
பூணுற்ற தவள நிறத்தெழில் வாணி பொற்புற வோர்புறத் திருப்ப. (௩)

அருமறை நான்கு மவற்றவற் றினுக்கே யணியெனு மங்கமோ ராறு
மொருசத கோடி விரிவதாய்ப் பரந்தே யோங்கிய புராணமு நீங்காத்
திருமுக மொருநான் கிடத்தினும் விளங்கச் சிருக்கொடு குண்டிகை தாங்கி
மருவிய முந்நூன் மார்பிடத் திலங்க மலரய னினிதுவீற் றிருந்தான். (௪)

இருந்திடுங் கொலுவிற் சவுனக ராதி முனிவர ரெய்திமுன் னிறைஞ்சி
யருந்தவம் புரிதற் கோரிட மெங்கட் கமைத்திட வேண்டுமென் றறையத்
திருந்திய தருப்பை நேமியாய் முடிந்து செலுத்திநீர் யாவரு மிதுபோய்ப்
பொருந்திய தலமே நைமிச மதிலே புரிந்திடு வீர்தவ மென்றான். (௫)

என்றலுஞ் சென்ற நேமியின் பின்னே யேகியங் குறுதவ மியற்றித்
துன்றின ரந்த வனத்தெழு பெருமை சொல்லுதற் கரிதரி தேனு
மொன்றிய மதியா லறிந்தவா றுரைப்பா முரவுநீ ருடுத்தபார் மகட்கு
மன்றலந் திலத மாமென வயங்கி வளம்பெறு நைமிசா ரணியம். (௬)

சந்தனம் வேங்கை நரந்தமந் தாரஞ் சண்பகஞ் சரளமா நெல்லி
குந்தம்வேட் பாலை யாசினி பலாசு கொங்குமா துளைபலாக் கோளி
சிந்துவா ரந்தே மாப்புளி மாப்பா திரிகுரா மராவிளாத் தெங்கு
கந்திய லரசு காஞ்சிகுந் திருக்கம் கழைபனை கடுக்கையார் தான்றி. (௭)

புன்னைகூ விளங்குங் குமமகில் புன்கு புளியிர வெரிமகி ழசோகு
முன்னைதேக் காச்சா மதூகமா விலங்க மூங்கிலே றழிஞ்சின்முள் ளிலவம்
பன்னிவே ணுவல் கடம்பொடு வீரை பாலைகல் லத்திதோ தகத்தி
வன்னியீந் திலவ மருதொடு தாழை வாழைநிம் பங்கருங் காலி. (௮)

முதலிய தருக்க ளலகில நெருங்கி முகிலுற வளர்ந்துநீள் சினைவான்
புதையுற மிடைந்து பூநறு வொழுக்கப் பொருந்திய கானெனக் கருதிச்
சதிமுறை மயில்கள் சிறைவிரித் தாடச் சஞ்சரீ கம்மிசை பாட
மதுமலர்க் கொன்றைபொன்மழைபொழியக்காந்தள்கண் மலர்க்கையால்வாங்கும்.

கடலென விரிந்து நறியசெங் கழுநீர் கரியநீ லோற்பல நெய்தன்
மடலவிழ் கமல மலர்தரு தடாகம் வரம்பில வெங்கணு நெருங்கப்
படர்தரு முல்லை மல்லிகை சிறுசெண் பகமிரு வாட்சிநற் பிச்சி
மிடைதரு நந்த வனம்பல பலவாய் வீறுறு நைமிசா ரணியம். (௧௦)

வேறு.

ஒருநேமி யமைந்தவையத் துறைத லானு மொள்ளியகண் மலர்ச்சாயை யுறுதலானு
மரியேழு மிசைத்துலவு மழகி னானு மந்தரத்தி லேசெல்லு மடைவி னானுந்
தருராசி சேர்ந்திருக்குந் தன்மை யானும் தராதலமும் பொன்னுலகுந் தயங்கலானு
மிருளோட வொளிவிரிக்கு மியல்பி னானு மிரவெரியு மரங்கள்பல விரவி போலும்.

நிலவியபூ மீதிலென்று மிருத்த லானு நீங்காத திசைமுகத்தைப் பொருந்த லானு
மிலகியவா ரணத்தொகுதி யியைதலானு மெந்நாளும் பல்லுயிரைப்படைத்தலானுந்
தலைமையுறும் படியுயர்ந்து தழைத்தலானுஞ் சத்யவுல குற்றிருக்குந் தன்மை யானு
நலமுதவுங் கலைமானு நண்ண லானு நான்முகனைப் போலுமா னைமிசா ரண்யம்.

வனமருவி யரவணையிற் கிடத்த லானும் வண்டுசிலை திகிரிதரித் திருத்த லானும்
புனைசடையோ ரிடத்திருக்கும் பொற்பி னானும் பூவினைத்தன் வயினடக்கி யுமிழ்த [லானுங்
கனமருவி நீலநிறங் காட்ட லானுங் ககனமள விடநிவந்த காட்சி யானு
நனைமலர்ப்பூங் கணியிருக்கு முரத்தி னானு நாரணனைப் போலுமா னைமிசா ரண்யம்.

மானினொடு மம்பரசு தரித்த லானும் வடுக்கண்ணி யகலாத மெய்யி னானு
மூனமிலா வும்பர்மலர் தூவி யார்ப்ப வொருகாலி னின்றொடு முண்மை யானுந்
தேனிதழி குழைதோலி னுடையி னோடுஞ் சீறரவு மம்புலியுஞ் சேர்த லானு
நானிலத்தோ ரும்பர்புகழ்ந் தேத்த லானு நம்பனையே போலுமா னைமிசா ரண்யம்.

வேறு.

கலைபயின் றிடலால் வெண்மை காட்டிய மெய்யா லன்னங்
குலவிய நடையாற் பூமேற் கொள்ளலாற் குழைக டம்மா
னிலவுநான் மறையோர் தம்மை நீங்கிடா திருத்த லாற்சீர்
நலமிகு நைமி சந்தா னுமகட்பொருவு மாதோ. (௧௫)

விண்டுரத் திருத்த லானும் விரிந்தபூ வாசத் தானு
மண்டலத் துதித்த லானு மதியொடு தோன்ற லானு
மண்டர்வை யகத்து ளோருக் காக்கமுண் டாக்கலானுந்
தண்டலை நெருங்கு நைமி சாரணி யம்பொன் னுமால். (கசு)

உலகெலாம் பெற்றே பச்சை யுடம்பொடு விளங்க லானு
நிலைபெறு முதலி னேரோ நின்றுவா தாட லானு
மலைமக வாகை யானும் வண்டிரி மலர்க்கண் ணனுந்
தலைமைசே ருமையை நேரா நைமிசா ரணியந் தானே. (கஎ)

பகர்புரா ணங்க ளீரொன் பதுமுறை பயின்று பாடுஞ்
சுகமருந் தவத்தின் மிக்க சூதமா முனிவ னாக
வகமுறு மயிலின் மேவு மஞ்சிறைப் பறவை யாவும்
புகரறு முனிவ ராகப் பொங்கரின் வயங்கு மாதோ. (கஅ)

எரிபணி மணியா வண்டி னிசைகண்மந் திரமாப் புன்கின்
விரைமலர் பொரியாச் செந்தேன் விடுநறு நெய்ய தாகப்
பெரியநற் காவுஞ் சொல்விப் பிரமுனி வரரே போலத்
துரிசற யாகந் தன்னைத் தொன்முறை யியற்று மாதோ. (கக)

கொடியது வலியே கூகூ வென்பன குயிலே யென்றுங்
கடியன மலர்க ளேகண் ணீருகுப் பனபைங் காவே
பிடியடி யேனம் யானைப் பெண்பதப் பெயர்ப்பே நைந்து
படிமிசை வெண்பல் காட்டிப் படர்வன தளவந் தானே. (உ0)

வேறு.

தாம ரைகள் செறியுந் தடம்புனல்
தாம ரைகள் செறியுந் தடம்புனங்
காமர் வல்லியங் காடு படர்ந்தன
காமர் வல்லியங் காடு படர்ந்தவே. (உக)

அஞ்சு தங்க ளடைவி னறைவன
அஞ்சு கங்களுள் ளானஞ் செழுத்துமே
மஞ்சு கஞ்செறி யும்பொழில் வாய்நிய
மஞ்சு கஞ்செறி யுந்தவர் வாயரோ. (உஉ)

வேரி காண்மலர் சூற்றிடும் வேங்கையே
கோர மின்றிக் குலவிடும் வேங்கையே
சார லெங்குஞ் சரிக்குமா தங்கமே
பாரின் மன்னிப் பரம்புமா தங்கமே. (உங)

கமல மெங்குங் கடிவண் டுலாவுமே
கமல மெங்குங் கடிவண் டுலாவுமே
யமல ரெங்கு முறுவ தசோகமே
யமல ரெங்கு முறுவ தசோகமே. (உச)

ஆர மெங்கு மடர்ந்து செறிந்தன
ஆர மெங்கு மடர்ந்து நிறைந்தன
ஆர மென்ன வரும்பின புன்னைபொன்
ஆர மென்ன வலர்ந்தன கொன்றையே. (உரு)

கோம திக்குநற் கொள்கையி னோங்கிய
கோம திக்குக் குடியிருப் பாகுமாற்
கோம திக்கிணை நித்திலக் குப்பையாற்
கோம திக்குங் குவளை யலருமால். (உசு)

நாக வீருரி நாகனை நஞ்சுமிழ்
நாக நாண்சிலை நாகனை நாடியே
நாக மும்மறி யாதுயர் நாகவீ
நாகர் கொய்துமுன் னூகச் சொரிவரே. (உஎ)

வண்டு லாவு மடுக்க ளிடந்தொறும்
வண்டு லாவு மலர்ப்பொழி லெங்கும்வெள்
வண்டு லாவ வருத்திடு சோகமாம்
வண்டு ருதுயர் மாதவஞ் செய்வரால். (உஅ)

வன்னி நீடி வளரும் வனமெலாம்
வன்னி பாட மயிலின மாடுமால்
வன்னி நாளும் வளர்ப்பர் முனிவரர்
வன்னி மாதவ ரும்மவண் வைகுவார். (உகூ)

அரியி னோடு கரியுற வாகுமால்
அரியி னோடு மரியுற வாகுமால்
அரியி னோடுதரக்குற வாடுமே
அரியி னோடுசெந் நாயுற வாடுமே. (௩0)

வேறு.

தென்றலந் தேர்ப்பைங் கிளிப்பரி யிருளாஞ் சிந்துரங் கோகிலச் சின்னந்
துன்றுபூ வம்பு கருப்புவில் லிசைக்குஞ் சுருப்புநாண் டடத்தலை முரச
மன்றிலாங் கான மனைத்தையும் பெருமை யருந்தவ முனிவரர் மதனை
வென்றிவண் கவர்ந்து வைத்தது போல விளங்குமா னைமிசா ரணியம். (௩க)

விரைசெறி கூந்தற் காரறல் காட்டி விழியெனக் கருங்கயல் காட்டித்
திரைநெடுங் கரத்தில் வளைபல காட்டிச் சிறந்தநித் திலநகை காட்டி
மரைமலர் வதனங் காட்டுகோ மதிய மாநதி மாதவ முனிவர்
புரையறு கற்பின் மனைவியர் தங்கள் புகரறு வடிவினைப் பொருவும். (௩உ)

இப்பெரு வண்மை யினிற்பொலி வெய்தி யிலங்கிய நைமிசா ரணியத்
தொப்பிலா துயர்ந்தே விதிமுறை தவறு துஞற்றிய சாலையி னிடத்திற்
செப்பரு வருடம் பன்னிரண் டியற்றுந் திருந்திய சத்திர யாகந்
தப்பிலா தாற்றிச் சவுனக ராதி தவப்பெரு முனிவர ரிருந்தார். (௩௩)

ஆயகா லையிலோர் குடைகரத் தேந்தி யழகுறு குண்டிகை தூக்கித்
தூயவெண் பூதி துகளற வணிந்து தொடுத்திடு மக்கமுந் தாங்கி
யேயதோ லுடுத்தே யஞ்செழுத் தோதி யிலங்கிய சடைமுடி புனைந்து
மாயனுன் முகத்தோற் கிறையவற் போற்றுஞ் சூதமா முனிவரன் வந்தான். (௩௪)

அருகுறு சூத முனிவரன் றன்னை யழகுற வாதனத் திருத்தி
யொருமையிற் பாத்தி யாசம னர்க்ய முதவியொண் பூசனை யுஞற்றிப்
பொருவினல் வரவு வினவியே முகமன் புகன்றியாம் புரிந்தமா தவத்தான்
மருவினை நின்பாற் புராணங்க ளனைத்தும் வளம்பெறக் கேட்கவேட் டனமால். ()

தெளிதர வுரைத்தி யென்றலு முரைப்பான் றிசைமுகன் வேதசாத் திரங்க
ளளியொடு முரைக்கு முளநினைத் திடலாற் புராணமென் றொருபெய ரமைத்தாங்
கொளிர்சத கோடி விரிவுறு மதைநா விலக்கமாங் கிரந்தத்து ளடக்கி
விளிவிலீ ரொன்பான் புராணமா வேத வியாசமா முனிவரன் விதித்தான். (௩௬)

நிலவிய சர்க்கம் பிரதிசர்க் கஞ்சேர் நீங்கிடா வம்மிச மன்றி
யலகிலா மன்வந் தரம்வம்மி சானு சரிதமிவ் வைந்துமே புராணத்
திலகிலக் கணமாம் புராணத்தின் பெயர்க ளியம்புதும் பிரமியம் பதும
மலிதரு விண்டு வாயுவே பாக வதநார தீயமார்க் கண்டம். (௩௭)

கருதுமாக் கிநேயம் பவுடிகம் பிரம கைவர்த்த மிலிங்கமே வராக்
மருவிய காந்தம் வாமனங் கூர்மம் மச்சங்கா ருடம்பிர மாண்டந்
தெரிதரு மிவற்று ளொருபது துதிக்குஞ் சிவனைமா யவனைநான் குரைக்கும்
பிரமனைப் பகரு மிரண்டுசூ ரியனைப் பேசுமொன் றொன்றனற் பேசும். (௩௮)

*இப்புரா ணங்கட் குபபுரா ணங்க ளிருடிகள் வகுத்திசைத் திடுபேர்
செப்புநற் சனற்கு மாரமே நார சிங்கங்காந் தந்துரு வாசங்
கைப்பறு சிவத ருமநார தீயங் காபிலங் கருதுவா மனநல்
வைப்பெனும் வவுதன் சம்பிர மாண்டம் வாருணங் காளிக மயேசம் (௩௯)

சவுமியங் சவுரம் பராசர மாரீ சம்பார்க்க வம்மெனச் சாற்று
மிவைகண்மு னுரைத்த மகாபுரா ணங்க ளிசைத்திடும் பொருளெலா மிசைத்தே
யவையனு சரிக்கு மென்றுமெய்ப் புராண மனைத்தையும் விரித்தினி தறைந்தா
னுவமையில் வேள்விச் சவுனக ராதி முனிவர்கேட் டுளமகிழ்ந் துரைப்பார். (௪௦)

---

* "நவையில்சனற் குமாரம்வளர் நாரசிங்கம்புகழ்நந்தி துருவா சஞ்சொற்
சிவதரும மியனார தியங்கா பிலம்புகழ்மா னவஞ்சேர் வாய்ந்த
வவுசனம்வா சிட்டலைங்கம் வாருணங்கா ளிகமுலகத் தருள்சாம் பேசஞ்
சவுமியமங் கிரஞ்சவுரம் பரா சரமா ரீசம் பார்க் கவ மாஞ்சாற்றின்" எனக்கூர்ம புரா
ணத்திக் கருத்தேபற்றி யோதுதல் காண்க.

அறிவினுற் றெளிவாற் றவத்தினுற் புராணத் தரும்பொரு டெரிந்துசொல் வகையா
னெறியினு னிறையா னின்னேயொப் பவர்யார் நினக்குமுன் வாதரா யணன்று
னறியதா யுரைத்த புராணங்க ளனைத்து நவின்றனே கேட்டுள நயந்தாம்
பிறிவிலா தவற்று ணெடியமால் மச்ச வடிவமாய்ப் பிறங்கியே முன்னாள். (சக)

உலகுறு முயிர்கள் யாவையுங் காத்த லுழைமழுக் கரத்துறு மண்ண
லலகிலா வசுரர் முப்புர மெரித்த லழகுறும் வயிரவ ராத
னிலவுல களித்தல் கபாலமேந் திடுதன் முதலிய நிகழ்மச்ச புராண
மிலகிட வின்னம் வரன்முறை தவறு தெமக்குநீ விரித்துரை யென்றார். (சஉ)

நன்றுநீர் கேட்ட திதுபதி னாறும் புராணமா நாரணன் முன்னாள்
வன்றிறல் வைவச் சுதமனு கேட்ப மச்சமாய் வழங்கின னதனல்
வென்றிகூர் மச்ச புராணமென் றாறும்பேர் மெல்லிய லுமையொரு பாக
ஞென்றிய சரிதை யென்றுல கெல்லா முவந்திட வோங்கிடு மன்றே. (சங)

இப்பெரும் புராணப் பெருமையை யுரைப்போ ரேட்டினிற் றீட்டிமுப் பொழுதுஞ்
செப்புவோ ரன்பா யருச்சனே புரிவோர் சிறப்புறப் படித்திடக் கேட்போர்
வைப்புற நிதியங் கொடுத்துமே வரைவோர் வந்தனே புரிபவர் பணிவோ
ரொப்பிலாச் செல்வ மியாவையும் பெற்றே யுலகில்வாழ்ந் திருப்பர்க ளன்றி. (சச)

ஆழ்புனற் கங்கை முதலிய தீர்த்த மறுபத்தா றுயிரங் கோடி
மூழ்கிய பேறு மசுவமே தாதி முதலிய மகம்புரி பலனுஞ்
சூழ்புனல் வையஞ் சூழ்தரு பலனுந் துலங்கிய சிவதரு மங்க
டாழ்விலா துஞற்றும் பலனுமிங் கடைவர் சத்திய ஞானமுந் தழைக்கும். (சரு)

வகுத்துரைத் திட்ட சிவபுரா ணங்கள் வழங்குமோர் பத்தினின் மச்சந் [ர்
தொகுத்திடு விருத்தத் தொகையிலோர் விருத்தத் தோர்பதந் துலங்கிட வரைவோ
பகுத்தினி துரைப்போர் பண்புறக் கேட்போர் பார்முழு தொருகுடை நிழற்றி
மிகுந்தநற் கணத்தின் வடிவதாய்க் கயிலே வெற்பில்வீற் றிருப்பரோர் கற்பம்.

ஒருபதங் கொடுக்கும் பலமிது வென்னி லுவப்புறும் விருத்தமொன் றெனினும்
பொருவரு மத்தி யாயமொன்றெனினும் புகலுவோர் பெறும்பயன் புகழ்தற்
கரிதரி தென்றே நைமிசா ரணியத் தருந்தவ முனிவரர்க் கருளி
விரிவுறு மச்ச புராணமேன் மையினே விளக்குவான் சூதமா முனிவன். (சஎ)

நைமிசாரணியச்சிறப்பு

முற்றிற்று.

ஆகச்செய்யுள்-கூஎ.

அநுக்கிரமணி.

சீர்பெறு மச்ச புராணவத் தியாயச் சிறப்புறு பெயரினை வகுத்தே
யேர்பெற வுரைப்ப விதன்பெயர் புராணத் தநுக்கிர மணியென விசைப்பர்
வார்பெறு களபத் தனத்துமை பாகன் மலரடி யனுதினம் வழுத்தப்
பேர்பெறு தவத்து முனிவிர்கா ளென்று பேசினன் சூதமா முனிவன். (க)

வேறு.

மாதவன் மச்ச மாகி மனுக்கரத் துதித்த வாறும்
பேதமில் பிரமாண் டத்தின் பேதன முரைத்த வாறு
மோதிய பிரமனுக்கு முகங்களுற் பவித்த வாறு
மாதியின் றிருட்டி மேன்மை யமைவுற வறைந்த வாறும். (உ)

ஒருதக்கன் மரபி லேவ சுருத்திர ருதித்த வாறும்
வருமுனி காசி பன்றன் மரபினை யுரைத்த வாறும்
பொருவின்மா மதனத் துவாத சியினைத்தான் பொற்பி னேற்றுத்
திருவனுள் திதிவ யிற்றின் மருத்துவர் செனித்த வாறும். (ங)

பகர்தரு சர்வா திக்க பட்டாபி டேக மேன்மை
புகரறப் புகன்ற வாறும் போற்றுமன் வந்த ரத்தின்
வகையினை வகுத்த வாறும் வளர்புவி பசுவே யாகக்
ககனமார் தேவ ராதி ரசத்தினைக் கறந்த வாறும். (ச)

புதனிளை யோடுங் கூடும் பொற்பினைப் புகன்ற வாறு
முதிர்கதிர்ச் சூரி யன்றன் மரபினை மொழிந்த வாறுங்
கதிதரு கவுரி யட்டோத் தரசத கத்தி னுமம்
விதிமுறை தக்கற் கேதாட் சாயணி விளம்பு மாறும். (ரு)

வருசத்ய வதிசொ ரூப கதனத்தை வகுத்த வாறும்
பெருகுபி திர்வம் சானு வருணனை பேசு மாறும்
விரியுமக் கினிமான் போற்றுஞ் சிரார்த்தத்தை விதித்த வாறுந்
திருவுறு பொதுச்சி ரார்த்த விதியினைத் தெரித்த வாறும். (சு)

விதிமிகு சீர்ச்ச பிண்டீ கரணத்தை விளம்பு மாறுங்
கதிபெறு பிதிர்ச்சி ரார்த்தத் தனுமக னத்தி னுறுங்
திதியின்மான் மியத்தெ றும்பின் செய்கையைத் தெளிந்த வாறும்
பிதிர்மகி மையின்றன் மேன்மை பிறழ்ந்திடா துரைத்த வாறும். (எ)

தீர்த்தத்திற் சிரார்த்தஞ் செய்யுந் திறத்தினைத் தெரித்த வாறு
மோத்திகழ் சோமன் றேன்று முற்பத்தி யியம்பு மாறுங்
கூர்த்தவெண் கதிரார் சோமன் மரபினைக் கூறு மாறு
மார்த்திடும் வெள்ளி தன்பாற் கசன்விஞ்சை யடைந்த வாறும். (அ)

சாற்றிய கசனைத் தெய்வ யானிமுன் சபித்த வாறும்
போற்றுமத் தெய்வ யானி கோபத்தைப் புகன்ற வாறும்
பார்கவன் றனைக்கு மாரி யாட்சேபம் பகர்ந்த வாறும்
வேற்கணாள் தெய்வ யானி சந்தோடம் விளம்பு மாறும் (கூ)

கன்னியத் தெய்வ யானி கடிமணம் பகர்ந்த வாறு
மன்னனும் யயாதி வேந்தன் மைந்தரைப் பெற்ற வாறும்
மன்னவன் றன்னை வெள்ளி யழன்றுடன் சபித்த வாறும்
பன்னிய யயாதி வேந்தன் பாலரைச் சபித்த வாறும். (க0)

புகழ்பெறு யயாதி மோலி பூருவுக் களித்த வாறுந்
திகழ்தரு யயாதி சொர்க்கஞ் சேர்ந்தினி திருந்த வாறு
மகபதி யுடன்ய யாதி வழங்குசம் வாதவாறு
மிகுதவ யயாதி சொர்க்கம் விட்டிவண் விழுந்த வாறும். (கக)

அட்டகன் யயாதி சம்வா தத்தினை யறைந்த வாறு
மட்டிலா யயாதி கர்ப்பச் சூழ்ச்சியை வகுத்த வாறு
மொட்டுமாச் சிரம தன்மத் துயர்ச்சியை வகுத்த வாறுஞ்
சட்டமாம் பிரம தத்தன் சம்வாதஞ் சாற்று மாறும். (கஉ)

சொற்றிடும் வசுமான் கீர்த்தி சிபியுடன் றெுன்மை ஞானங்
கற்றிடும் யயாதி சம்வா தத்தினைக் கழறு மாறும்
வெற்றிசேர் யதுகு லத்திற் கார்த்தவீ ரியப்பேர் மேவும்
பொற்றிர டிணிதோண் மன்னன் மகிமையைப் புகன்ற வாறும். (கங)

போசனன் மரபின் வேந்தர் மகிமையைப் புகன்ற வாறும்
பேசிய விருட்டி ணிப்பேர் பெற்றவன் மரபிற் கண்ணன்
றேசொடுற் பவித்த வாறுந் திகிரிவிண் டுவினை யன்று
காசறு பிருகு சாபங் கனன்றெதிர் சபித்த வாறும். (கச)

சுக்கிரன் றவங்க ளாற்றித் தொல்வர மடைந்த வாறுந்
தக்கநல் லசுரர் சாபக் கலியுக தன்ம மெல்லா
மிக்குற வுரைத்த வாறும் விழிதீர்க்க தமசு தன்னைத்
தக்கநற் குருமுன் னிட்ட சாபமோ சனத்தி னுறும். (கரு)

துரிசறு பவுர வன்றன் மரபினைத் தொகுத்த வாறும்
விரிபவு ரவர்கு லத்தின் விசயன்றன் மரபி னுறு
மெரியழற் றெுகுதி யாவு மியல்புற வியம்பு மாறு
தெரிதரு கரும யோக விலக்கணந் தெளித்த வாறும். (கசு)

பங்கமில் புராணத் தெல்லை யிலக்கத்தைப் பகர்ந்த வாறும்
பொங்குநட் சத்தி ரத்தின் புருடமா விரதப் பான்மை
யங்கமா யுரைத்த வாறு மாதித்த சயன மென்றே
சங்கைதீர் விரதந் தன்னைத் தகைபெறச் சாற்று மாறும். (கஎ)

கிட்டின வட்ட மிப்பேர் விரதத்தைக் கிளக்கு மாறுஞ்
சிட்டர்சொ லுரோணி சந்த்ர சயனத்தைச் செப்பு மாறுங்
கட்டுறத் தடாக மாற்றும் விதியினைக் கழறு மாறு
மட்டலர் விருக்க மேன்மை வழுவற வுரைத்த வாறும். (கஅ)

நிகரில்சௌ பாக்கி யத்தின் சயனமா விர்த நீதி
புகரறப் புகன்ற வாறும் புகழகத் தியன்றன் பூசை
திகழ்தரு மாறு மிக்கா மனந்தமா திரிதி கைப்பேர்
பகர்தரு விரதத் துண்மை பழுதற மொழிந்த வாறும். (கக)

விரிதரு ரசகல் யாணி விரதத்தை விளம்பு மாறுங்
கருதரும் ராத்திரா னந்த கரிதிரி திகையி னேன்பைப்
பரவுறு மாறும் வாணி விரதத்தைப் பகர்ந்த வாறு
மிருகதிர்க் கிரண தான விதியினை யிசைத்த வாறும். (உ0)

சத்தமிச் சாந்தி தான விதியினைச் சாற்று மாறும்
வித்தக வீம னுற்றுந் துவாதசி விரதந் தன்னை
யொத்திட வுரைத்த வாறு முருவிலா வனங்க தானம்
பத்தியாம் விரத மேன்மை பழிச்சியே பகர்ந்த வாறும். (உக)

சூனிய மணுகி டாத வசூனிய சயனத் தொன்மை
யானநல் விரதஞ் சொற்ற வாறுமங் கார கப்பேர்
தானுறு விரதந் தன்னைச் சாற்றிய வாறு மேலை
வானவர் குருவோ டோங்கு கவிபூசை வகுத்த வாறும். (உஉ)

தரைபுகழ் தருகல் யாண சத்தமி விரத வாறு
மருளறு விசோக சத்த மியினோன்பு வகுத்த வாறு
மொருபல சத்த மிப்பேர் விரதத்தை யுரைத்த வாறும்
விரிதரு சற்கார் சத்த மிப்பெயர் விரத வாறும். (உங)

கமலசத் தமியென் றோதும் விரதத்தைக் கழறு மாறும்
விமலமந் தார சத்த மிப்பெயர் விரத வாறு
மமர்சுத சத்தமிப்பேர் விரதத்தை யறைந்த வாறு
மமதையைத் தவிர்வி சோகத் துவாதசி விரத வாறும். (உச)

தானியம் லவண மோங்கித் தழைத்திடு கரும்பின் கட்டி
யூனமில் சொன்னங் காரெள் ளொளிதரு பருத்தி துய்ய
வானுமி ழிழுது மற்று மணிபெறு மணிகள் வெள்ளி
தூநறுஞ் சதக ரைப்போர்த் தொன்மலைத் தான வாறும். (உரு)

சாந்திநற் கிரக வெஞ்ஞ விதியினைச் சாற்று மாறு
மாய்ந்தநற் கிரக ரூபத் தனுகீர்த்த னத்தி னுறுங்
தேய்ந்தவெண் டிங்கண் மோலிச் சிவசதுர்த் தசியென் றோதும்
வாய்ந்தநல் விரதப் பான்மை வகுத்தினி துரைத்த வாறும். (உசா)

தருசரு வப்ப லத்தி யாகத்தைச் சாற்று மாறும்
பெருகுமா தித்த பூசை பெட்புறப் பேசு மாறும்
விரிவுறு சங்கி ராந்தி விரதத்தை விளம்பு மாறு
மருளற விபூதி தத்து வாதச மறைந்த வாறும். (உஎ)

அறுபதென் றுரைக்குஞ் சட்டி விரதத்தை யறைந்த வாறு
முறுபுனற் ருனஞ் செய்யும் விதியினை யுரைத்த வாறு
மறுவின்மார்க் கண்டர் தன்மன் வழங்குசம் வாத வாறு
நறியநீர்ப் பிரயா கைக்கே நண்ணிடு கமன வாறும். (உஅ)

ஏர்ப்பொலி கோதா னத்தின் பலத்தினை யியம்பு மாறு
மார்த்திடு தீர்த்த யாத்ரா விதியினை யறைந்த வாறுந்
தீர்த்தமாம் பிரயா கைத்தே கப்பரித் தியாக வாறுங்
கீர்த்திசேர் யமுனை மான்மி யத்தினைக் கிளத்து மாறும். (உகூ)

சொற்றிடும் பவசொ ரூப கதனத்தைத் தொகுத்த வாறும்
விற்பொலி தருமன் செம்பொன் மோலிவேய்ந் திட்ட வாறு
முற்றுபூ கோள மேரு வருணனை மொழியு மாறு
மற்றுரம் மியக மாதி வருடவா னத்தி னுறும். (௩0)

நேருறு மறிவு கல்வி நிகழ்த்திய தரும மெல்லாம்
பேர்பெறு கரும மாற்றிப் பிறங்குபுண் ணியங்கள் சாரும்
பாரத வருடப் பான்மை வருணனை பகர்ந்த வாறுந்
தார்புனை புரூர வாவின் சரித்திர முரைத்த வாறும். (௩க)

இராவதி நதியின் பொற்பை யியல்புற விசைத்த வாறும்
பராவரு மிமைய வெற்பின் வருணனை பகர்ந்த வாறு
மராகமி லத்தி ரிப்பேர் முனிவனுச் சிரம வாறுந்
தராதல மளந்த விண்டு தரிசனஞ் சாற்று மாறும். (௩உ)

மத்திர ராசன் போற்றி வரத்தினை யடைந்த வாறும்
பத்தியாய்ச் சம்புத் தீவு வருணனை பகர்ந்த வாறு
மொத்தசா கத்தீ வாதி வருணனை யுரைத்த வாறும்
வித்தகச் சூரி யன்சந் திரன்கதி விளம்பு மாறும். (௩௩)

சூரிய ரதத்தின் மேன்மை வருணனை தொகுத்த வாறு
மாரியன் றுருவன் செய்கை யமைவுற வறைந்த வாறுஞ்
சீரிய புவன கோச சமர்த்தியைத் தெரித்த வாறு
மேர்பெறு பூர்வ காண்ட மிவைதொகை யியம்பு வேமால். (௩௪)

பன்னிய பூர்வ காண்டம் பகர்ந்திடு மத்தி யாய
மன்னிய நூற்றுப் பத்தி னுன்கென வழுத்த லாமா
லின்னுமே லுரைப்பா மோதி லிருமையுஞ் சிறக்க வெய்து
நன்னிலை பெற்று நானு நயம்பெறுத் தரகாண் டத்தை. (௩௫)

இரணிய கசிபு வீர னியல்வரம் பெற்ற வாறும்
பரவுவோர்க் கருளும் விட்டு ணுபுருட பார்செ யந்தான்
விரவிட வுரைத்த வாறு மிரணிய கசிபு வேந்தன்
றரைபுகழ் சுதன்மை யென்னுஞ் சபாப்பிர வேச வாறும். (கசு)

சக்கர பாணி தேவர்க் கபயப்ர தான வாறு
முக்கிய மறையோர் மேன்மை மகத்துவ மொழிந்த வாறுந்
தொக்குறு மாயற் போற்றிச் சொற்றிடு பிரக லாதன்
மெய்க்கிடும் படைகள் யாவும் வீறழிந் திட்ட வாறும். (கள)

பகர்ந்திடு சர்ப்ப திட்ட பரிகார முரைத்த வாறும்
திகந்தமார் கயங்கள் தந்தத் திறமழிந் திட்ட வாறும்
மகம்பெறு மாபி சார வண்மைவீ றழிந்த வாறும்
புகழ்ந்துகூர்ந் தொனிர்ப்ர சாத பதனத்தைப் புகன்ற வாறும். (கஅ)

கார்நிறச் சோட ணன்றன் வதத்தினைக் கழறு மாறுஞ்
சார்பிர கலாத னிந்த்ரன் சம்வாதஞ் சாற்று மாறுந்
தேர்பிர காலதன் விண்டு தெரிசனஞ் செய்த வாறு
நாரசிங் கத்தி னுற்ப வத்தினை நவின்ற வாறும் (கக)

தரணியி லசுரர் தேவர் சங்குல யுத்த வாறு
மரணுறு தயித்யர் சேனை வதத்தினை யறைந்த வாறு
முரணுறு மிரணி யன்றூர்ச் சகுனத்தை மொழிந்த வாறு
மிரணிய கசிபு வீரன் வதத்தினை யியம்பு மாறும். (சo)

சேகறு பிரக லாதன் மோலிசேர்த் திட்ட வாறு
மேகமாஞ் சிவசொரூப மிசைத்ததை யியம்பு மாறும்
யோகசாத் திரத்தின் வண்மை யுணர்ந்திட வுரைத்த வாறு
மோகமார் யோக விக்கி னந்தனை மொழியு மாறும். (சக)

செயிரறு பத்தி மான்மி யத்தினைச் செப்பு மாறு
மயனுயர் திருமால் சம்வா தத்தினை யறைந்த வாறும்
வயிரவ சொரூப மான வுற்பவம் வழுத்து மாறு
மயிலுறு சூலி தேவர்க் கபயமீந் திட்ட வாறும். (சஉ)

மொழிந்திடு வயிர வன்கைக் கபாலமோ சனத்தி னாறுஞ்
செழிந்திரு மார்பன் சேடற் குபதேசஞ் செய்த வாறும்
வழங்கிய கலாசொ ரூப வருணனை வகுத்த வாறுங்
குழங்கலா மிருபத் தைந்து பேதத்தைக் கூறு மாறும். (சஙு)

அருந்தவ மிகவு மாற்றித் தயித்தியர்க் கதிப ரான
பெருந்தகை வித்துன் மாலி பிறங்கிய தாரு காட்சன்
வருந்திறன் மயனிம் மூவர் வரத்தினை யடைந்த வாறும்
பொருந்திய திரிபு ரத்தி னிருமாணம் புகன்ற வாறும். (சச)

முப்புர நிருமா ணத்தின் வருணனை மொழிந்த வாறுஞ்
செப்புதுர்ச் சொப்ப னத்தின் றெரிசனந் தெரித்த வாறு
மப்பணி சடிலப் பெம்மான் ருேத்திர மறைந்த வாறுந்
துப்பித மூமைபா கற்கி ரதத்தினைத் தொகுத்த வாறும். (சரு)

நாரதன் புரத்தி லேகி நவின்றதைப் புகன்ற வாறும்
வார்கழல் வித்துன் மாலி மரித்துட னெழுந்த வாறுஞ்
சேர்தயித் தியர்தஞ் சேனு பங்கத்தைச் செப்பு மாறு
நேருமுப் புரங்கள் வாரி நீரிடைப் புகுந்த வாறும். (சசு)

வல்வலித் தாரு காக்கன் வதத்தினை வகுத்த வாறும்
புல்லுதா னவருண் டாட்டுப் புணர்ப்பினைப் புகன்ற வாறும்
வில்வலி வித்துன் மாலி வதத்தினை விரித்த வாறுஞ்
சொல்லிய திரிபு ரத்தின் விசயத்தைச் சொற்ற வாறும். (சஎ)

அரியதோர் புரூர வாவின் மகிமையை யறைந்த வாறும்
மருவுசக் கரவர்த் திப்பே ரிலக்கண வாறுந் தேவ
ரிருடியர் சம்வா தத்தை யியம்பிய வாறு மன்வந்
தரயுக வாறு மேன்மை தருருடி மான்மிய வாறும். (சஅ)

தாரகா சுரனுற் பத்தி தகவுறச் சாற்றுமாறு
மேர்பெறு தேவ ரோடு மசுரர்போர்க் கெழுந்த வாறு
மோருரு வசுரர் தேவர் சங்குல யுத்த வாறுங்
கார்நிறக் கால நேமி பார்செயங் கழறு மாறும். (சகூ)

போர்வலிக் கிரச னன்றன் வதத்தினைப் புகன்ற வாறும்
பாரினை யீர்ந்த விண்டு பார்செயம் பகர்ந்த வாறும்
வீரரில் வீரன் செம்பன் வதத்தினை விரித்த வாறுந்
தாரக னரசி னுட்சி விசயத்தைச் சாற்று மாறும். (ருo)

கந்தனுற் பவித்த வாறுங் கறைகெழு மயில்வே லோச்சி
வந்ததா ருகன்ற னுவி மாய்த்திடு மாறு மாக
மூந்திரண் டாவ தாக மொழியுமுத் தரகாண் டத்தி
னந்தலி லத்தி யாய நவிலைம்பத் தெட்டே யாமால். (ருக)

ஆகவிவ் விரண்டு காண்டத் தமைந்திடு மத்தி யாயத்
தேகமாந் தொகையைப் பார்க்கி னூற்றெழு பத்தி ரண்டோ
டோகைகூர் தவத்தின் மேன்மை யோர்ந்திடு முனிவர் கேட்பத்
தோகைபா கனையே போற்றுஞ் சூதமா முனிவன் சொன்னுன். (ருஉ)

அநுக்கிரமணி.

முற்றிற்று.

ஆகச்செய்யுள் — ககக.

பூருவகாண்டம்.

முதலாவது

மச்சாவதார வத்தியாயம்.

மறைப்பொருள்க டெளித்தெடுத்து வகுத்துரைத்த புராணத்தின் வரலா றெல்லா
முறைப்படிசொற் றிடக்கேட்ட முனிவர்களுண் மகிழ்ச்சியொடு முகுந்தன் முந்நீர்
நிறைப்புனலின் மச்சவடி வெடுத்தருளு நெறியெமக்கு நிகழ்த்து கென்னப்
பிறைச்சடிலக் கடவுளடித் துணைபோற்றிச் சூதமுனி பேசு வானால் (க)

விரிதிரைத்தெண் கடன்முகட்டி லுதித்தெழுந்தோ ராழித்தேர் மீதி லேறிக்
கரியவிருட் குறும்பகற்றுங் கதிர்களா யிரம்பரப்பிக் கனக மேருப்
பெரியவரைப் புறஞ்சூழ்ந்து பனிப்புனலுண் டளிமுரலப் பிரசக் கஞ்சத் [ன்.
துரியமுகை நெகிழ்த்தலர்த்தி யுயிர்க்குறுநா ளளவைவிளைத் தொளிரும் வெய்யோ

செய்தவத்தி னவதரித்துச் செகமெல்லா மோராழி செலுத்தித் தீய
கைதவத்தை யொழித்துலகிற் செறியுமுயி ரெவற்றினுக்குங் களைக ணாகி
மைதவக்கூ ரெயிற்றுரகச் சுமைப்புவிதன் புயத்தேந்தி மறைவ ழாத
மொய்தவத்தி னுயர்வைவச் சுதமனுவென் றுலகேத்து மோலி வேந்தன் (௩)

இன்னுயிர்த்தா யினுமன்பா யரசாட்சி முறைவழாஅ தியற்றி யென்றுந்
தன்னுயிர்போன் மன்னுயிருக் கருள்சுரந்தே யளவிலின்பச் சலதி மூழ்கி
மன்னிளமை கழிந்ததற்பின் மைந்தனுக்குச் சுந்தரப்பொன் மவுலி வேய்ந்து
மின்னிடைத்தன் றேவியொடுந் தவம்புரிவான் பொதியவரை மேவி னானால் (௪)

தண்ணறும்பொற் கமலமுறை சதுமுகத்தோன் றனைநோக்கித் தவம்பத் தென்றே
யெண்ணிலக்கத் தாண்டுவிடா தியற்றலுமோ திமமுகைத்த விறைவ னீறில்
விண்ணவர்வித் தியாதரர்கந் தருவர்சித்தர் முனிவர்புடை மிடைய மேவித் [முன்
திண்ணெடும்பொற் றடவனத்தோட் குரிசின்முகத் தெதிர்கருணை செனித்தே நின்

புரிந்ததவப் பேறின்று கிடைத்ததெனக் கருதிமயிர் பொடிப்பக் கண்கள்
சொரிந்திடத்தண் புனல்வாயுந் தழுதழுப்பச் சரோருகத்தாட் டுணையில் வீழ்ந்தே
விரிந்தமறைக் கிழவோனே பல்லுயிரும் படைத்தோனே வினையேற் கின்று
பரிந்தருள்வா யெனத்துதிப்ப வேண்டியதே துரையென்றான் பதுமத் தோனே (௬)

மண்புனறீக் கால்வான மழியுமாப் பிரளயத்தில் வானோ ரேனோ
ரெண்பெறக்காத் தளித்தருளும் வரமெனக்கின் றருடியென வெண்கட் கோமா
னண்புறப்பெற் றிடுதியெனக் கொடுத்தனமூர்ந் தேகினன்விண் ணாடரெல்லாம்
பண்புறத்தண் மலர்மாரி பொழிந்துநெடும் பனிவிசும்பிற் படர்ந்தா ரன்றே.

பனிமதித்தண் குடைநிழற்றிப் பார்புரந்தோ னாச்சிரமம் படர்ந்து பன்னாள்
புனிதமுறுந் தவம்புரிந்தாங் கிருக்குநாள் பிதிர்த்திவசம் பொருந்த லோடு
மினியபுனற் கரையணுகித் தருப்பணமாற் றிடக்கரத்தி லெடுத்த நீரிற்
றனியொருமீன் குதித்திடலுங் கைப்புனலை மீனோடுந் தடத்தில் விட்டான் (அ)

அச்சிறுமீ னப்புனலை யகலாம லுறநோக்கி யதிச யித்தே
யிச்சையுறுந் தயாவினொடு மெடுத்ததனைக் கமண்டலத்து ளினிதின் விட்டா
னிச்சயமா யிருமுப்பா னாழிகைக்குட் பதினாறங் குலமாய் நீண்டே
மச்சமிடம் போதாது மற்றெனக்கின் றருடியென மன்னர் கோமான் (கூ)

தாழியிடத் துய்த்திடலு மோர்தினத்தின் முழமூன்றாய்த் தடித்து நீண்டே
பாழிநெடும் புயத்தரசே யிடம்போதா தருடியெனப் பரிய கூவல்
வாழியெனத் தனிவிடுப்ப வளர்ந்தகலம் போதாது மனுவே யென்ன
வாழிநெடுந் தடத்துவிட யோசனைநீண் டடன்முன்போ லறைந்த தன்றே. (க0)

அதிசயித்துக் கங்கையிடத் துய்த்திடலு மிகவளர்ந்தே யரசற் போற்றி
யிதுவெனக்கிங் கிடம்போதா தெனவதனைத் தடங்கடலி லெடுத்தே விட்டான்
முதிருமிரண் டிலக்கமெனும் யோசனையாய் வளர்ந்ததன் மொய்ம்பு நோக்கிப்
புதுமையிது வெனமனத்தில் வெருக்கொண்டு புவியனைத்தும் புரந்த வேந்தன். ()

அடல்கெழுதா னவர்க்கிறையோ வோராழித் தேரேறி யகில மெல்லாம்
படருமிருட் பிழம்பறுக்கும் பண்ணவனோ கண்ணாறு பத்துளானோ
மடலவிழ்தா மரைப்பொகுட்டு வட்டவளை யுட்டிகழும் வரதன் றானோ
தடநெடுங்கைத் தலத்தாழிப் படைதரித்த பசுந்துளபத் தாமத் தானோ. (கஉ)

எனத்தனிநின் றையுற்றுத் தன்னறிவிற் பன்முறையு மெண்ணி யெண்ணி
வனத்தினிடைத் தினந்தொறுமெய்த் துறிதடவித் திரள்வெண்ணெய் வாரி யுண்ட
புனத்துளபத் தொடைபுனைந்த விறைவனெனத் தெளிந்துடலம் புளகித் தேவிற்
பனத்துயர்ந்த தவப்பெருமை முனிமனுவட் டாங்கமுறப் பணிந்து நின்றே. (கங)

ஆதியாய் நடுவாகி யந்தமா யருவாகி யகில ஞானச்
சோதியா யகண்டபரி பூரணமா யகிலாண்டத் தொகுதி யாகிக்
கோதிலாச் சுயவிச்சாச் சொருபமாய்ப் பாற்கடலுட் குலவும் பாந்தண்
மீதிலே யறிதுயில்கூர் வித்தகனே பத்துருக்கொள் விமலா போற்றி. (கச)

ஞாலமனைத் தையுமளந்துண் டுமிழ்ந்தவனே போற்றிவெற்றி நாதா வாதி
மூலமெனக் கைவரைநின் றோலிடமுன் கராந்தடிந்த முதல்வா போற்றி
கோலமெனத் திருக்கோலங் கொள்வதன்றி யிக்கோலங் கொண்டாய் போற்றி
சீலமுறச் சிறியேனுக் கின்னருள்கூர்ந் துன்னருளே செய்தி யென்றான். (கரு)

திரைக்கடலு ளீரிலக்கம் யோசனைநீண் மச்சவுருத் திகழா நிற்கும்
விரைத்துளபத் தாமமணி மணிமார்பன் மனுமுகத்தை வியந்து நோக்கி
யுரைத்தமறை முறைபிறழா துலகளித்தோ னுசையினை லுணர்ந்தாய் நம்மை
வரைத்தடந்தோண் முடிவேந்த கேட்டியென மீட்டுநெடு மாயோன் சொல்லும்.

கணித்திடுமோண் டீண்டுசில கழிந்ததற்பி னெழுந்துபெருங் கடல்களேழு
மெணித்தொலையாப் பலவனைமுன் ஞம்பொருளும் புவியனைத்து மிறப்ப மூடுந்
தணிப்பினெடும் பிரளயத்திற் சராசரமா முயிர்ப்பகுதி தம்மைக் காக்கப்
பணித்திடுவேந் தனித்தெய்வத் தகைமைபெறு மொருநாவாய்ப் பண்பாய் நின்பால்.

முட்டையினுற் பீசத்திற் சுவேதசத்திற் சராயுசத்தின் முளைத்தே வேறு
பட்டவுயிர்த் தொகையனைத்தும் பீருவரலற் றிடவதனிற் பரிவா யேற்றி
மட்டறவே யெழுந்தட்ட திசைமுட்டும் பெருஞ்சண்ட வாயுத் தாக்கா
திட்டமுடன் விட்டொளிரு நங்கொம்பிற் றங்குறவே யிசைத்தி யென்றே. (கஅ)

செப்பிமுதற் கிரேதயுகா தியினுயிர்கட் கினிதருளுஞ் செம்ம லாகி
யெப்புவியுந் தொழுதேத்தும் புரந்தரனே முன்னுய விமையோர்க் கெல்லாம்
வைப்பெனும்பூச் சியனுகி நீட்டியுறுஞ் செய்யசடை மகுடந் தாங்கி
யொப்பரிய தவம்புரியு முனிவரும்பூச் சியஞ்செய்முனி வோனு மாகி. (கக)

அலைகடற்றூ சுடுத்தபுவி யளிக்குமன்வந் தரபதியு மாகி வாழ்கென்
றுலவில்புகழ்த் திருமாயோ னுரைத்தனனென் றுயர்மகங்க ளுஞற்றுஞ் செல்வத்
தலைமைபெறு மாதவத்துச் சவுனகா தியர்கேட்பச் சகத்தை யீன்ற
மலைமகள்பா கனைக்கருத்தில் வழுத்தும்விழுத் தவச்சூதன் வழுத்தினுல் (உ0)

முதலாவது

மச்சாவதார வத்தியாயம் முற்றிற்று.

ஆ் திருவிருத்தம். சருகூ.

இரண்டாவது

பிரமாண்டபேத வத்தியாயம்.

இருவினை தணந்து பஞ்ச விந்திய மடக்கி வேள்விச்
சருவினை யமரர்க் கூட்டுந் தவத்துயர் முனிவ ரெல்லாம்
பெருகிய பிரமாண் டத்தின் பேதங்க ளுரைப்பா யென்ன
வொருமைதேர்ந் துணர்ந்தே சூத முனிவர னுணர்க்க லுற்றான். (க)

வன்றிறன் மனுமாற் போற்றி வந்திடு முகாந்த மெப்போழ்
தொன்றுயிர் காத்த லெவ்வா றுனைக்காண்ப தெந்நா ளென்ன
வின்றுதொட் டனுவி ருட்டி யெய்துநூ றுண்டி வற்றுள்
வென்றிவெங் கதிரோன் காய வெந்திடுந் தரணி யெல்லாம். (உ)

வடவைவெங் கனலால் வற்றும் வாரிநீர் முழுதுங் கோரத்
திடமுடைத் தாய சங்க ரிடணச்சே டன்றன் சீற்றப்
படிமுகத் தெழுந்த தீயாற் பாதலம் வெந்து நீறு
நடநவி லுருத்தி ரன்ற னெற்றியி னோட்டந் தன்னில். (ங)

எழுந்தவெங் கனல்வி யாபித் திரும்புவி வான்பா தாளம்
விழுந்துக வெரிக்கு மிந்த வெவ்வன னன்குங் கூடிக்
கொழுந்துபட் டழன்று நீறக் குவலயம் பொருள்கள் யாவு
மழிந்திட நிரந்தே யெங்கு மாமையின் வெம்போ லாமால். (ச)

களங்கமி லுலகிற் சீவன் யாவையுங் கனலே யுண்ணத்
துளங்குதா ரகையும் விண்ணோர் தொகுதியு நாச மாகும்
வளர்ந்ததீ வோவின் வித்துற் பதாகஞ்சம் வர்த்தஞ் சோணம்
விளங்கயிந் திரந்து ரோண மவலாக்கம் வீம னாதம். (ரு)

இவ்வகைச் சத்த மேக மெழுந்துநீர் பொழிய வற்றிக்
கவ்வைகொள் கடனி ரம்பிப் பூமியிற் கனலு மாறப்
பவ்வமா யுலகம் யாவும் பரந்திடுங் காலை நாவாய்
செவ்விதா யெய்துஞ் சீவன் யாவையுந் தெரிய வேற்றாய். (சு)

ஏற்றுதற் கிசையும் வண்ண மெம்மிடத் துற்ற வாயுத்
தோற்றியே யுனக்கு முன்னாள் சொற்றிடும் யோகத் தாலே
யாற்றலா கரிட ண்ஞ்செய் தார்க்கயி றமைய வீக்கிப்
போற்றிநங் கொம்பிற் சேர்த்துப் பொருந்துதி யென்று கூறி. (எ)

அண்டர்க ணசித்தா ரேனு மமைகுவே மானும் யாமு
மண்டலத் தொருவ நீயே வைகுவை யிரவி சோமன்
பண்டுள சனலோ காதி நான்கொடு பதுமத் தோன்மார்க்
கண்டன்மெய்ப் புராணந் தூய நிருமதை கருது வேதம். (அ)

அனைத்துள விஞ்சை யாவு மவாந்தரப் பிரளை யத்தி
னினைத்துணை யாகச் சேரு நிகழ்த்துச்சாக் குடப்பேர் பெற்று
வனப்புற மருவுமிம்மன் வந்தர முடிந்தான் மற்றை
வினைப்பயன் வளிசிருட்டி யாதிநாண் மேவு மந்நாள். (கூ)

மெய்ப்பொருள் வேதம் யாவு நின்னிடை விளக்கஞ் செய்வா
மொப்பிலித் திறமெனைத்து முளுற்றுதி மனுவே யென்று
மைப்புயல் வண்ண னீண்ட மச்சரூ பத்தி னின்று
செப்பியே மறைந்து போக மனுவுளந் தெளிந்து நின்றான். (க0)

செங்கண்மா லருளிச் செய்த செய்வினை யனைத்து மெண்ணிப்
பொங்கும்வா யுவினுற் பெற்ற யோகத்தை பொற்பி னூற்றித்
துங்கமார் நீதி வைவச் சுதமனு வேந்து தேர்ந்தே
மங்குமாப் பிரளை யந்தான் வரும்வழி பார்க்கு ஞான்று. (கக)

துண்ணென வெய்த வெங்குந் தோயமீக் கொள்ள வாங்கண்
டிண்ணிய மச்சரூபி கொம்பொடுஞ் சேர நாவாய்
நண்ணுறப் பாங்கர்க் கண்டே நால்வகைத் தோற்ற மாக
வெண்ணுபல் லுயிரனைத்து மியம்பிய யோகத் தேற்றி. (கஉ)

பாங்கரி லனந்த னென்னும் பாம்பொரு தாம்பா யெய்த
வாங்கது தெரிந்த கொம்பி னணைத்தபி னதன்மே லேறித்
தேங்கமழ் துளப மாலைத் திருமறு மார்பி னனைப்
பூங்கழல் வணங்கி யேத்திப் புகழ்மனுப் புகல லுற்றான். (கந)

அங்குரித் துயிர்கள் யாவு மமைவது மகிழ்த ரூனும்
பங்கமில் சீர்த்தி சோமன் வந்தரப் பான்மை தானும்
புங்கமார் மரபுந் தூய சரிதையும் புவனப் பொற்புந்
தங்கிய தானந் தன்ம நித்திய சிரார்த்தந் தானும். (கச)

குலவிய வருண பேதங் கூறுமாச் சிரம பேத
மிலகிய யாக கன்ம மிருந்தடஞ் சோலை கோயி
னிலவிய மடங்க ளோடு தேவதை நிருமா ணஞ்சீ
ரலகிலாப் பூசை மற்று மருள்கென வருளிற் சொல்வான். (கரு)

சாருமாப் பிரளை யத்திற் றூபர சங்க மங்கள்
சேருமிப் புவன மந்த காரத்தின் செய்கைத் தாகிக்
கூருநித் திரையைப் போன்று குறிகுண மெண்ண மிக்காய்
நேருறு புத்தி யானு நிகழ்த்துசாத் திரத்தி னானும். (கசு)

அறிவதற் கரிய தாகி யமையநல் வினையின் கூற்றுற்
செறிதரு மந்த காரஞ் சிதைத்ததீந் திரிய மாகிப்
பிறிவிலா மாயை மீறிப் பிறங்குமுள் வியாபி யாகி
யுறுசநா தனராய் நாரா யணரென வுலவித் தோன்றி. (கஎ)

உலந்தவிப் புவன மெல்லா முருப்பெற வகுப்பா னெண்ணி
நலங்கெழு புனலுண் டாக்கி நண்ணுவீ ரியத்தை விட்டார்
கலங்கலில் பரமாய் மிக்க காஞ்சன வடிவ் மாகித்
துலங்குமண் டமதா யாண்டோ ராயிரந் தொலைந்த பின்னர். (கஅ)

வேறு.

இலங்கு சொன்ன ரூப மாகி யிருள்வ ளைந்த கூடமா
யலங்க லின்றி நின்ற வண்ட மளவை காண வுள்ளுலாய்த்
துலங்கி விண்டு வாய்வ யங்கு சூரி யச்சொ ரூபமாய்
நலங்கொ ளாதி யாகை யாலா தித்த னென்னு நாமமாய். (ககூ)

பிரம மிஞ்சு பரத்தின் மிக்க பிரம மென்னு நாமமா
வரமி குந்த வண்டம் விண்டோர் பேழை மூடி யொப்பநீ
டிரமி லங்கு சோதி கொண்டு திக்கெ லாம்வ குத்தமால்
வரமி குந்த கர்ப்ப கோள கைக்கு ளேவ திந்தனன். (உ0)

அரிய வெற்பு வடிவமா யமர்ந்த கர்ப்ப கோளகைக்
குரிய வுட்பை மேக மாக வொன்று கர்ப்ப சலநிதி
விரிம டுக்க ணதமி குத்த வேலை யேழ்ப ணிக்குடந்
தெரிய வுற்ப விக்க மால்சி றந்த வேத னுயினுன். (உக)

ஆன வேத னுலக மேழு மண்டவி னிற்ப டைத்திடத்
தாணி ணைப்ப வளவில் சோதி தபன ரூப மாகியே
மேன்மை தங்கு மோர்கு ணத்தின் மேவு நான்மு கத்தினுல்
வ்வானி லும்ப ரசுரர் மக்க ளுலகெ லாம்வ குத்தனன். (உஉ)

என்று மச்ச ரூப மாயெ டுத்த மால டுத்தெதி
ரொன்று வெற்றி மனுவி னுக்கு ணாத்த காதை யீதென
நன்று ளுற்று முனிவ ரர்க்கு நவையின் ஞான முழுதுமோர்
துன்று கற்றை வேணி சுற்று சூத ஞேதி னனரோ. (உங)

இரண்டாவது

பிரமாண்டபேத வத்தியாய முற்றும்.

ஆக திருவிருத்தம். சகூஉ.

மூன்றாவது

பிரமமுகவுற்பத்தியத்தியாயம்.

வேறு.

வனசமலர் மேவுபிர மன்முகவுற் பத்தியைப்
பனசமுத னீடுதருப் பம்பு நைமிசத்தி
லினசமதி யாகமக மீட்டுதவர் கேட்டலுந்
தனசயில வில்லிபதந் தாழ்ந்துசூதன் சாற்றுவான். (க)

வேறு.

தெரித்தவேத னுக்குநான் முகஞ்செனித்த செய்கையும்
பெருத்தநற்பி தாமகப்பெயர்நரித்த பெற்றியு
நிரைத்தமைந்த புவனகோடி நினைவினிற்ப டைத்தது
முரைத்தியென்னு மனுவின்முன்ன ருற்றமாய னேதுமால். (உ)

கமலநற்பொரு குட்டின்மேவு கடவுண்மெய்த்த வத்தினி
னமலமுற்று மேயபின்ன ரங்கமோடு பாங்கமும்
விமலமுற்று பதமுமிக்க சிரமமுஞ்செல் வேதமு
நமலமற்றி டும்படிக்கு நண்ணுசாத்தி ரங்களும் (௩)

உவமையொப்பி லாறுகோடி யுற்றநற்பு ராணமும்
புவனியுற்ற தர்க்கமும் பொருந்தியமீ மாஞ்சையு
மவமறப்பி றந்தபின் மரீசியோடு மத்திரி
தவமிகுத்த வங்கிராத் தவப்பெரும்பு லத்தியன். (ச)

வேறு.

தீமையில் புலகர் ஞானக் கிருதுமெய்ப் பிரசே தாநல்
வாய்மைசேர் வசிட்டர் மிக்க பிருகுநா ரதரு மாறுந்
தூய்மைசேர் மனத்தி லிந்த மானதர் பதின்மர் தோன்ற
வேமுறு வலக்கை யங்குட் டத்தினி லெழுந்தான் றக்கன் (ரு)

நாபியிற் றருமன் மார்பின் மன்மதன் புருவ நாப்பண்
கோபன்வா யதர மீது லோபன்புத் தியினிற் கூறுந்
தாபனு மோக நுங்கா ரத்தினின் மதம் காதிற்
சோபனப் பிரமோ தன்கண் மிருத்திவர் தோன்றி னூரால் (சு)

இங்குறென் பதின்மர் பின்னோ ரேந்திழை யங்கை துற்றுட்
கங்கைசை யென்னு நாம மவளொடும் பதின்ம ரென்னப்
பங்கமில் புத்தி யாது பகருமாங் காரம் யாது
பொங்கிய வவற்றின் சேயா துரையெனப் புகலு மாயோன். (எ)

சத்துவ மிராச தந்தா மதமெனுங் குணமோர் மூன்று
மொத்துற றுனே யோங்கி யுயர்பிர கிருதி யென்றும்
வித்தகர் சிலர்பிர தானம் விளங்குமவ் வியத்த மென்பர்
வைத்தமுக் குணச மத்தாற் சமதிட்டி வகுத்துப் பின்னும். (அ)

விசேடமாஞ் சிருட்டி செய்வான் விகுதிமுக் குணத்தின் மூவர்
நிசேதமி லயன்மா லீச னிலையுற வடுத்தான் மேலோ
னசேதன பிரதா னத்துண் டாமக தத்து வங்கூர்
திசாதிசை யுள்ளோ ரித்தை மகானென்றுஞ் செப்பு வாரால். (கூ)

சொன்மக தத்து வத்திற் றோன்றுமாங் காரம் புத்தி
யின்வழி யியங்கும் பஞ்சேந் திரியங்க ளிவற்றி னுமம்
பன்னுகா துடல்கண் ணுக்குப் பகர்ந்திடு மூக்கென் றுகு
மன்னவை கட்கே ஞானேந் திரியப்பே ரமையு மாதோ. (கய)

ஆசன முபத்தங் கைகால் வாக்கிவை யைந்தாங் கன்மம்
பேசுமிந் திரியஞ் சுத்தம் பரிசமே பிறங்கு ரூப
மாசறு மிரதங் கந்த மகிழ்ஞான் விடைய மாகு
நாசமில் விசர்க்கத் தோடானந்தமா தான நண்ணி. (கக)

நாடிய கமனத் தோடு வசனமா நவைதீ ரைந்து
நீடிய கன்ம விந்தி யத்தினோர் விடைய மாகும்
பாடுறிந் திரியம் பத்து மனத்தொடு பதினொன் றெல்லாம்
பீடுறு புத்தி யோடும் பிறங்கிநின் றுலவு மாதோ. (கஉ)

இவ்வகை யுலகந் தேரு மிந்திரி யத்தின் கூறு
தவ்வலி வான மாதி யெனுந்தன்மாத் திரைக ளோடும்
வவ்வியா சினையஞ் செய்யு மரபினுற் சீர மாகு
மவ்வுடல் பொருந்துஞ் சீவ னதனையே காப்பன் மேலோன். (கங)

மனஞ்சிருட் டிக்க வேண்டு மேவலின் வழியே நிற்கு
மினந்தரு சத்த தன்மாத் திரையினி னின்றுஞ் சத்தங்
கனந்தரு குணத்தி னோடா காயமங் குரிக்கு மல்லா
னனந்தலைச் சத்த மாதி யிருகுண வாயு நண்ணும். (கச)

வாயுவின் பரிச தன்மாத் திரையினின் வழியே நின்றுந்
தேயுமுக் குணங்க ளோடுஞ் செனித்திடு மதனி னின்று
மேயநாற் குணத்தி னப்பு விளங்கிடுங் குணங்க ளைந்தோ
டாயதிற் கந்த தன்மாத் திரையினின் றமையும் பூமி. (கரு)

இவ்விரு பத்து நான்காந் தத்துவத் தொகுதி யாவுங்
கவ்வையி லிருபத் தைந்தாம் புருடனே கருதி யுண்பா
னவ்வகைப் புருட னாத னருள்பெறற் கமைந்து நிற்பன்
றவ்வலில் சடான்மா வென்றே சாற்றுவர் தகைமை யோரே. (கசு)

தத்துவ மிருபத் தைந்தே சரீரமோ டிருபத் தாறு
முத்திசேர் கபில ராதி முனிவர்சா ங்கியரோ யென்ப
வொத்தவிவ் வுருவால் வேதன் சகத்தினை யுஞற்றித் தேவர்
மெய்த்திறன் வகுத்து லோக மனத்தையும் விதிப்பா னண்ணி. (கஎ)

மனத்தினி னினைந்து சாவித் திரிதனை மதித்து மிக்க
கனச்செபம் புரியக் காயத் தன்னவ டோன்றிக் கன்னி
யெனப்புரம் பாதி யானோ டிருவகைத் தோற்ற முற்று
டனைச்சத ரூபி சாவித் திரிசரச் சுவதி யென்றும். (கஅ)

திகழ்பிர மாணி காயத் திரியென்று முறைப்ப ரன்னோ
டுகளறப் பணிந்து சுற்றி வருதலுஞ் சுருதி வல்லோன்
மகளென வறிந்துங் காம மயக்கினன் மனங்கூ ரன்பாற்
றகும்வெளுப் புறுமோர் சென்னி தென்றிசை தழைத்த தன்றே. (கக)

மேற்றிசைக் காம வெப்பான் மிகுத்தசெவ் வதரத் தோடுந்
தோற்றிய தொன்று சென்னி துன்னிய வடபாற் சென்னி
யாற்றலி னொன்றுண் டாக வன்னவ னப்பா லேக
நாற்றலை நாப்பண் சென்னி நண்ணலு மறைத்தே வேதன். (உ0)

தன்மக ளிடத்திற் காதல் சனித்தலுந் தவங்க ளியாவும்
பின்மறைந் தொழிய நாணிப் பிறங்கிய வமரர்ப் பார்த்துப்
பன்முறை தேவ ராதி மன்னுயிர் படைப்பீ ரென்னச்
சொன்முறை தவறு தன்னோர் தொழில்செயப் பிரிந்து போனார். (உக)

பிரிதலு மகன்று நின்ற பெண்மக டன்னை நோக்கி
யுரியகா தலினாற் கூடி வதுவையு முய்த்து நாணி
விரிதரு கமல நாள வீட்டினு ளுண்டு நீங்கான்
மருவிய சுவாயம் புப்பேர் மனுவினைப் பயந்தான் மன்னோ. (உஉ)

மேவிய சுவாயம் பூவாம் விராட்புரு டன்பாற் றோன்று
மோவறும் வயிரா சர்க்க னுத்தம சுவாயம் பூவாந்
தாவருஞ் சுவாயம் பூவே யாதியாய்ச் சாற்றீ ரேழென்
றேவரு மனுக்கள் கஞ்சத் திருக்குநான் முகனை யொப்பார். (உங)

இப்பெரு மனுக்க டம்மி லிருப்பவ னேழா மன்னென்
றெப்பிலா மச்ச ரூபி மனுவினுக் குரைத்த வண்ணந்
துப்பினன் மகங்க ளாற்றுந் தூயமா முனிவர்க் கேற்பத்
தப்பிலா வாய்மைச் சூத முனிவரன் சாற்று மன்னோ (உச)

மூன்றாவது
பிரமமுக வுற்பத்தியத்தியாய முற்றிற்று,
ஆகத் திருவிருத்தம்-கஅசு.

நான்காவது

ஆதிசிருட்டி யத்தியாயம்.

முக்குறும் பெறிந்து ஞான மோனத்தின் யோக மாற்றித்
தொக்குறுந் தவத்தோ ராதி சிருட்டியைச் சொல்லீநீ யென்ன
வக்குறும் புயத்து முக்க ணமலனைப் போற்று மன்பு
மிக்குறுந் தவத்துச் சூத முனிவரன் விளம்பு மன்றே. (க)

ஆதியாம் பிரம கோத்திர மறைந்திடி லிறுழ்பூ தன்னோ
னேதிய குமாரி யென்னு துவந்ததுங் குமரர் தாமும்
பேதமின் மரபி லாற்றும் வதுவையும் பிறங்கச் சொல்கென்
றேதமின் மனுமுன் கேட்ப வியம்பிடு மாயன் மாதோ. (உ)

விளைத்துண ரலங்கற் றேவ ரகசியம் விரிக்க லாகா
நிளைத்தவர் செய்கை தீதே யாயினு நிட்டேத மன்று
விரித்தநீ ருடுத்த பாரின் மானிடர்க் கெளிதோ முன்ன
ருளைத்திடு மாதிசிருட்டி யுயர்ந்தரா சதத்திற் றேன்றும். (௩)

அறிவினுன் மிக்க வேதன் விஞ்சைக ளனைத்தும் வல்லோன்
மறிநிகர் விழியாள் காய்த் திரியெனு மங்கை தானுங்
குறிபடு வடிவ மின்றிக் குலவினும் பிரம தேவ
னுறுமிட முறைவ ளாங்குப் பிரமனு முவந்து வாழும். (௪)

பன்முறை யுளைக்குங் காயத் திரிபரி சுத்தை வேதன்
றன்னிடத் துதித்தா டன்னைத் தழுவிய தன்மை யோர்ந்து
மன்மதன் றன்னைப் பார்த்திம் மயக்கத்தை வருவித் தாயா
னின்னுட லிறைவ னெற்றிக் கண்பட நீறு மென்றான். (௫)

என்றசா பத்துக் கஞ்சி யிரங்குமன் மதன்று னிந்தப்
புன்றொழி லெனக்கு நீயே பொருந்திட வகுத்தாய் சிந்தை
கன்றனீ யென்று காலில் வணங்கலுங் கமலத் தண்ணல்
மன்றல்வை வச்சுதம்மன் வந்தரம் வந்த போது. (௬)

துலங்கிய புவியின் மிக்க துவாரகை தன்னின் மாய
விலங்கிய விராமனோடு மிளையநங் கண்ண னுவன்
பொலங்கெழு கண்ணன் றன்பாற் புத்திர னாகிச் சிந்தை
மலங்கிடா தெதிர்ந்த தெவ்வர் வாளுயிர் கவர்ந்து கொண்டும். (௭)

அஞ்சொலா ரிடத்தின் மிக்க காமங்க ளனுப வித்தும்
வஞ்சமில் வச்ச னென்றே பரதனன் மரபிற் றேன்றி
விஞ்சைகட் கதிபனாகிப் பிரளய மேவு ஞான்று
நஞ்சமீ பத்தில் வாவென் றுரியமோ சனந வின்றான். (அ)

சொன்னமோ சனத்தைக் கேட்டுச் சோகசோ பத்தி னேடு
மன்மதன் போனு னென்ற வாசக முனிவர் கேட்டுப்
புன்மையா மதவே ளீசன் பொருந்திடத் தெதிர்ந்த வாறு
நின்மல னெற்றிக் கண்ணி னெருப்பெழப் பொடிந்த வாறும். (கூ)

உருப்பெறத் துவார கைக்க ணுதித்ததும் பரத ராசன்
திருப்பொலி மரபில் வச்ச னுகமுன் செனித்த வாறு
மருப்பொலி துளவோ னன்று மனுவினுக் குரைத்த வண்ணம்
விருப்புட னுரைப்பா யென்ன விளம்புகேன் பின்னரன்றே. (க0)

மறைகளை யுரைக்குங் காயத் திரியென்பாண் மனுவின் மாதர்
நிறைசத ரூபை யாகி நிகழ்சதேந் திரியை ரேந்தி
யறைதரு மனந்தான் புத்தி தவசுதிக் கந்த கார
முறைபெற வெழுவர் மக்கள் பெற்றனன் மொழியின் முன்னர். (கக)

ஓதுமா னதர்க ளென்றே யுரைத்திடு மரீசி யாதி
நாதரே யுலகுக் கெல்லா மாதிபர் நளின வேதன்
காதலா னுலகம் யாவுங் கருணையிற் படைப்பா னெண்ணித்
தீதின்முத் தலைவேல் வாம தேவரைச் சிருட்டி செய்தான். (கஉ)

வேறு.

மிக்க வாம தேவர் தம்மு கம்புயம் மிளிர்தொடை
தக்க தாணி னும் முறை யுதித்த சாதி நான்கலாற்
றிக்கி லங்கு மின்னிடி மேக மிந்தி ரன்றனு
வொக்க வாழெண் பத்து நான்கு கோடியா முருத்திரர். (கங)

துலங்கு தேவர் சாத்திரியந்தி ராணியுந் தொகுத்தன
னலங்கொள் வேதன் மாய்விலிருட்டி நன்றதல்ல வென்றுபின்
மலங்கொண் மானி டத்தினை வகுக்க வேண்டி மாற்றின்
னிலங்கு கற்ப மாதி ருத்தி ரன்ப டைத்த தென்பரால். (கச)

அரிய மெய்த்த வச்சுவா யம்பு வென்னு மரசர்கோ
னுரிய வாழ்க்கை மனைவியா மனந்தை யோடு டந்தையாய்ப்
பிரிய விரத னேடுத்தான் பாத னிருவர்ப் பெற்றனன்
றரும கன்னி யானகுளி ரூதை மங்கை தன்னையே. (கரு)

மணந்துத் தான பாதன்கீர்த்தி மான்வி ளங்க யம்பதி
யிணங்கு மேன்மை யயமதத்தன் றுருவ னென்னு நால்வரைக்
கணங்கொ ளப்பெற் றுன்னேரிற் றுருவன் வீடு கருதியே
குணங்க ளாண்டு பத்துநூறு கூறு மாத வஞ்செய்தே. (கசு)

வரமி குத்த ககனலோக மகிழ்வின் மேவி மனுமகள்
பரவு கன்னி யைப்புணர்ந்து சிருட்டி யைப்ப யந்தன
னுரைசெய்தாது மகள்சுச் சாவை தன்னை வேட்டோர் சிருட்டிதான்
விருக லன்வி ருத்திரன்மெய் விருக தேச னனொடும். (கஎ)

துதிசெய் ரிபுரி புஞ்சையன் சொலவ ராத்தொ குத்தனன்
வதிரி புஞ்சை யன்சொலாதி மறைய வற்கு மகண்மகள்
விதிகொள் வயிர ணியைமணந்து மேவு சாக்கு டப்பெற்றான்
மதிகொண் டடுவ லையைமேவி மன்னு சாக்கு டனென்போன். (கஅ)

வேறு.

கருதரு மூருப் பூருக் கவிசத்த துமினன் கீர்த்தி
தருகொடைத் தமதி யோங்கு சத்திய வாகு மேன்மை
யருடிராத் திரனெ ழிற்சீ ரக்கினிட் டோமன் மிக்காய்
வருமபி மன்னியு சுத்தி மபினபதிமாமைந்தர். (கக)

அன்னவர் தம்மி லூரு வனவரு ளுஷையை மேவித்
துன்னிய சுமன னங்க னங்கிர சன்சு வாதி
மன்னிய கிரது வோடு சிவியறு வரையும் பெற்றான்
மின்னுகா சுனீதை யங்கன் புயந்தழீஇ வேனற் பெற்றான். (உ0)

கொடுந்திறல் வேன னென்போன் கொலைத்தொழிற் செய்கை நோக்கி
நெடுந்தகை முனிவ ரன்னோ னுவியை நீத்தோர் தோலைக்
கடைந்திடு காலை முந்நீர்க் கனைகடல் வளாகஞ் சூழுந்
தடம்புவி யனைத்துங் காக்கத் தனையிகர் பிருது வுற்றான். (உக)

சொற்றிடு பிருது வென்போன் சூதன்மா கதனை யீன்றான்
மற்றவச் சூதன் றானந் தரத்தியை மகிழ்ந்து பெற்றான்
குற்றமின் மாக தன்சா தியையெழில் குலவப் பெற்றா
னுற்றவந் தரத்தி மைந்த னுலவவிர்த் தான னென்பார். (உஉ)

புகழவிர்த் தான னங்கி புத்திரி கிஷ்ணை தன்பாற்
பகர்தரு சுக்கி ரன்சேர்ப் பார்சீன பருகி பாரி
னிகல்விரு கயன்கி ருட்டி ணன்னெழிற் சீன னென்னத்
திகழறு வரைப்ப யந்தான் பார்சீன பருகித் தேய்ந்தே. (உ௩)

தடங்கடற் கரசன் செல்வி சவுரணை தன்னை மேவித்
திடங்கெழு புயப்பி ராசே தசரெனச் சிறந்த மைந்தர்
நெடுந்தனு விஞ்சை வல்லோர் பதின்மரை நிரையிற் பெற்றான்
மடங்கலே றனையார் நீரின் மாதவம் பலநாள் செய்தார். (உச)

அவர்தவஞ் செய்யுங் காலை யவனிகாத் தளிப்பா ரின்றிக்
குவலயங் காடு கொள்ளக் கூர்ந்தமெய்த் தவங்கண் முற்றிப்
புவியினை நோக்கித் தத்த முகத்திடைப் பொழிதீக் காற்றாற்
கீவர்வனந் தகிக்க வானிற் கலைமதி புவியி னண்ணி. (உரு)

பதின்மனா நோக்கி நீவிர் பசுமரந் தகிக்க வேண்டா
மதியுளீ ரென்றே கானின் மரங்களின் கூறு தன்கூ
றதிககாந் தியிளு லோர்பெண் ணுனமா ரிழையை யன்பின்
விதியொடும் பதின்மர்க் கீய மேதினி விளங்கக் காத்தார். (உசு)

சொல்லுமா ரிழையை வேட்ட பதின்மருத் தோய்ந்து தக்க
னல்லெழிற் பிரச னேடு நவுடத னனந்த னுல்வ
ரல்லடர் கூந்தற் பத்தி ரவதியோ டைவர்ப் பெற்று
ரெல்லொளித் தக்க னென்போ னியன்றமா னதத்தி லூற்றுர். (உஎ)

பெயர்ந்தெழு முகத்திற் கொள்ளிப் பிசாசொடு முழையிற் காதும்
வியந்திடு முறம்போற் காதும் வேங்கையின் முகமும் பொன்னி
னயம்பெறு முகமும் பன்றி முகமுநாய் முகமு மற்றை
யயந்திகழ் முகமும் போல்வார் மிலேச்சர்க ளனேக சாதி. (உஅ)

இவ்வகைச் சிருட்டி யன்றி யெழிற்பிரி தியைப்பின் கூடி
யவ்வயின் மடந்தை மார்க ளறுபதின் மனைமுன் பெற்றே
தவ்வலி றரும தேவர் தமக்கொரு பதின்மர் நல்கிச்
செவ்விய காசி பற்கே திகழ்பதின் மூவ ரீந்தே. (உகூ)

சந்திரன் றனக்கு மூவொன் பதின்மனைத் தயவினல்கி
நந்தலி லரிட்ட நேமி நயப்புற நால்வ ராய்ந்து
மந்திரத் திருவர் தம்மை வருகிரு காச்சு வர்க்கீந்
தந்தமில் பிருகு மைந்தர்க் கிருவனை யன்பி னீந்தான். (கூ0)

பங்கமி லங்கி ராயுக் கிருவனைப் பரிவி னீந்தா
னிங்கிவ ரிடத்தி னின்று மிமையவ ரசுரர் மாந்தர்
மங்கிடா துதித்தா ரென்று மச்சமான் மனுவை நோக்கிப்
புங்கமா யுரைத்த காதை முனிவர்க்குப் புகன்றுன் சூதன். (கூக)

நான்காவது

ஆதிசிருட்டியத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உகஎ.

ஐந்தாவது

வசுருத்திரோற்பத்தி யத்தியாயம்.

சூதனை நோக்கித் தக்கன் றொன்மர பதனிற் றோன்றுங்
கோதறு வசுவு ருத்திரர் குலவுமுற் பத்தி கூறென்
றேதமின் முனிவர் கேட்ப விருங்கட னடுவுண் மச்ச
மாதவன் மனுவுக் கோதும் வகையினை வகுத்துச் சொல்வான். (க)

உரைத்தசங் கற்பத்தி னாலு மொன்றிய பரிசத் தாலு
நிரைத்தரி சனத்தி னாலு நிகழுமுற் பவமுன் மூன்றும்
வரப்பிரா சேத சற்கோர் மைந்தனாந் தக்கன் றேவர்
திரத்துறு முனிவ ரோடுந் திகழ்தரு மியக்கர் நாகர். (உ)

மருவுகாந் தருவர் மற்ற மானிட ரென்போ ரெல்லாந்
தெரிதர மான தத்திற் சிருட்டியைச் செய்த காலை
யுருவுயிர் விருத்தி யின்மை யோர்ந்துமீ ரணன்ற வத்தா
லருளசிக் கினிபா லையா யாயிரா ரியசுவர்ப் பெற்றான். (௩)

மக்களை நோக்கித் தக்கன் மன்னுயிர் படைமி னென்னத்
தொக்கவர் படைப்பா னெண்ணுங் காலையிற் சுருதி நல்யாழ்
கைக்கொணா ரதன்வந் தெய்திக் காசினி யளவை காணப்
புக்குமீண் டுஞற்றி யொன்று புகன்றனன் வினைய மாக. (௪)

அவ்வுரை கேட்டுப் பத்துத் திசையெலா மளக்கச் சென்றார்
செவ்விதிற் றிரும்ப வந்து சேர்ந்திலர் பின்னுந் தக்கன்
கவ்வையில் புதல்வ ரோரா யிரவரைக் கருதி யீன்றா
னிவ்வகை மைந்தர் போக பளாச்சுப ரென்பர் மாதோ. (௫)

அன்னவர் தம்மைத் தக்க னனைத்துயிர் படைமி னென்று
பன்னலு மவர்செய் காலை நாரதன் பகர்வான் பூமி
யின்னள வறிந்து முன்னோ ரேகிய விடங்க டேர்ந்து
பின்னர்நீர் படைமி னென்னப் பேர்ந்தன ரணுகி லாரால். (௬)

ஆதலான் முன்னோர்த் தேடிப் பின்னவ ரகல லாகா
தீதிலா மக்கள் போன செய்தியைத் தேர்ந்து தக்கன்
கோதினா ரதனை நோக்கிக் கூர்ந்திடு மரண மெய்தி
மாதர்தங் கருப்ப மேவி வருந்தெனச் சபித்துப் பின்னர். (௭)

தான்பெறு மைந்தர் மீளாத் றன்மையை யோர்ந்து தக்க
னூன்பயில் வேற்கண் மாத ரோரறு பதின்மார்ப் பெற்றான்
வான்பெறு தருமன் காசி பன்மதி யரிட்ட நேமி
கான்பெறு மங்கி ராப்பார்க் கவன்கிரு சாச்சு வன்னே (௮)

என்யவர் தமக்கு முன்சொ றொகைப்படி யீந்த மைகூர்
கொன்பயில் வேற்க ணல்லார் தம்பெயர் குறிக்கு மாறு
மன்பொடு சராச ரங்க ளவரிடத் துதித்த வாறு
நன்பெறு முனிவர் கேட்பச் சூதனே நவில லுற்றான். (௯)

தேவரோ முதலா யுள்ள பிரசையின் சிருட்டி தேர்ந்து
மேவுதற் கரும ருத்து விதிவசு விசுவை பானுத்
தாவில் சீ ரிலம்பை சாத்தி யையருந் ததிசங் கற்பை
பாவையா முகூர்த்தை சாமி பதின்மரைத் தருமன் வேட்டான். (௧௦)

நல்லெழில் விசுவை மக்க ணவிலரும் விசுவ தேவ
ரல்லடர் கூந்தற் சாத்தி யைபெற்ற மக்கள் சாத்தியர்
சொல்லிய புகழ்ம ருத்து வதிமருத் துவர்க ளோடும்
வல்லிகண் மரங்க ளீன்றாள் வசுவுயர் வசுக்கள் பெற்றாள். (௧௧)

பானுமைந் தர்கள் பானுக்கள் முகூர்த்தை பாலகர் முகூர்த்தர்
நானவார் குழலி லம்பை பாலர் நன்கோஷர் கற்பின்
மானருந் ததிதன் மைந்த னருந்ததன் வரிவண் டார்க்குங்
கானமர் குழலாள் சாமி கன்னிகை நாக வீதி. (௧௨)

ஓதுசங் கற்பை மைந்த னுயர்ந்தசங் கற்ப னாகு
மாதர வசுவின் மக்க ளாபன் சீர்த் துருவன் சோமன்
றாதணி யனலன் மிக்க தரனொடு மனிலன் காந்தி
நீதிசேர் பிரத்தி யூட ணிகர்பிர பாச னெண்மர். (௧௩)

சாற்றிய வாபன் பாற்சாந் தனமுனி பெப்பு ருச்சீர்
தேற்றும்வை தண்டியன் மெய்யாச் சிரமன்னிந் நால்வர்
தோற்றியே யாகந் தன்னைப் போற்றுவர் துருவன் பால
னாற்றல்சால் கால னென்போ னருந்தரு மத்த னானான். (௧௪)

பெரியமெய்த் திரன்றன் மக்க ளவ்விய வகன் பிராணன்
றிரவண னிரவ ணன்சொற் சிசிர சிரன்சீர் மனோக ரன்றான்
மருவிய சோமன் மைந்தன் வற்சன னனிலன் மைந்த
ரரியபேர் மனோச வன்சீர் விஞ்ஞாத கதியி னோடும். (௧௫)

ஆவில னனமு னிப்பிர யாகண னென்ப ரப்பா
லோவிலாச் சுசாப னாதி யுதித்தன ரனலன் றன்பாற்
பூவுறு சரவ ணத்திற் பொருந்திய குமரன் றன்னைப்
பாவலர் கார்த்தி கேய னெனப்பெயர் பகர்வர் மன்னோ. (௧௬)

உமைபிரத் தியுடன் மைந்த ருயர்முனி தேவ லன்சீர்
கருதிய பிரபா சன்ருன் கனமணி மாட கூடம்
வினையொடு நிருமா ணஞ்செய் விசுவகன் மாவை யீன்ருன்
சுரபியென் றுரைக்குந் தேவி துயகா சிபரைத் தோய்ந்தே. (௧௭)

புகலரு மசைக பாதன் கிபுத்தினி யனசீர் போற்றப்
பகர்விரு பாட்ச னன்மையி லவன்வெகு ரூபன்ருன்
றிகழ்விரிச் சிகன்சு ரேசு ரன்சவி தாசே யந்தன்
றகுபரா சிதன்பி னுகி னைவத னென்று சாற்றும். (௧௮)

ஓங்கிய பத்தோ டொன்ரு முருத்திரற் பயந்தா ளென்றே
பாங்குற வணங்கிக் கேட்டு மனுவினைப் பரிவிற் பார்த்துத்
தேங்குநீர் மச்ச ரூபச் செங்கண்மா லுரைத்தா னென்று
தூங்குகுண் டிகைக்கை ஞான முனிவரர்க் குரைத்தான் சூதன். (௧௯)

ஐந்தாவது

வசுருத்திரோற்பத்தி யத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௨௩௯.

ஆறுவது

காசிபர் மரபுரைத்த வத்தியாயம்.

வருமற்புத வுரவோனென வளர்காசிபன் மரபைத்
திருவிற்பொலி வைவச்சுத மனுவுக்குயர் திருமா
லருளிச்செய்த வகைநீயுரை யென்றேயருந் தவர்க
ளுருகிப்பரி வொடுகேட்டிட வுயர்சூத னுரைப்பான். (க)

சீரிற்பொலி யதிதிக்கொடி திதிதாம்பிரை வினதை
தார்மெய்த்தனு வரிட்டைசுர சைப்பேர்பெறு சுரபி
கூர்கத்துரு வருடைக்கொடி மெய்க்குரோதவ சைப்பெண்
கார்மைக்குழ லிரைநன்முனி யிவர்காசிபன் மனையோர் (உ)

இன்னோரில திதிமாதுபன் னிரண்டாதவற் பெற்று
ளன்னோர்பெயர் தாதாபக னருளிந்திரன் றுவட்டா
மன்னுஞ்சவி தாமித்திரன் வருணன்விச் சுவானோ
டுன்னுமம னொளிர்விட்டுணு பூடாவுய ரஞ்சுமான். (ங)

வயவோர்பணி வைவச்சுத மனுவந்தர மதனி
லியல்சேர்பணி ரண்டாதவ ரெனவும்பெய ருடையார்
வெயிலாயிர கிரணத்தொளி மேவித்திகழ் தருவா
ருயர்சாக்ஷுஷ மனுவந்தரத் துஷிதப்பெய ரிவர்க்கே. (ச)

வேறு.

வருகிரு சாசு வப்பேர் மாமுனி தன்பா லுற்றுப்
பெருகிய தவத்தோர் தெய்வப் பிரகர ணப்பேர் பெற்றார்
பருவமன் வந்த ரங்க டொறும்பகர் முனிவ ராகி
யருகுகற் பாந்த ரத்தி லழிந்துபின் னமைவ ரன்றே (ரு)

இளங்கொடி திதிதன் மைந்த ரிரணிய னிரணி யாட்சன்
விளங்கிர ணியன்றன் பாலர் தம்பெயர் விரித்துச் சொல்லிற்
களங்கமில் பிரக லாதன் கருதிய வனுக லாதன்
வளங்கெழு சங்க லாத னுடன்கரு மலாத னுமால். (சா)

ஆயுண்மாண் விரோச னன்னோ டமர்சிவி பாட்க ளன்னென்
றேயுமிப் புதல்வர் நால்வ ரீன்றனன் பிரக லாதன்
மேயசீர் விரோச னன்மா வலியினை வியந்துபெற்றான்
மாயமா வலிதன் மைந்தர் நூற்றுவ ரவரில் வல்லார், (எ)

திவளொளி நிகுஞ்ச நாபன் திருதராட் டிரனற் குட்சி
நவில்குறு வட்சன் வீமன் வீடண னவையில் வாண
னிவர்களிற் குணவா னென்ப வினியமெய்த் தவத்தின் வாணன்
கவிரிதழ்க் கவுரி பாகக் கடவுளுக் கடிமை யானுன் (௮)

பூசனை மிகவுஞ் செய்து புண்ணியன் வரத்தி னலே
காசறு களத்திற் சோம காளனென் றெருபேர் பெற்று
னசைகொ ளிரணி யாட்சன் றிரிவற்கன் சகுனி யாதி
தேசுறு பூத சம்பா தனன்றிறற் சீர்மா நாதன். (௯)

நால்வகைப் பயந்தா னன்னோர் நாட்டியற் கல்லாற் றன்ம
பாலருக் கீதல் செய்தா ரவர்மக்கள் பவுத்தி ராதி
சாலவே யெழுபத்தேழு கோடியென் றுரைப்பர் தக்கோர்
மாலுரு மலைபோ லாகம் வயம்பெறு வயத்தின் மிக்கார். (௧0)

தனுவெனுந் தேவி பெற்றோர் நூற்றுவர் சரிதை பார்க்கிற்
புனைதவ மனேகஞ் செய்து புடவியை நலிவு செய்வோ
ரனலினைச் சொரியுங் கண்ணு ரவரில்விப் பிரசித் தென்போன்
சினநெடுங் கண்க ளோடுஞ் சிரமிரண் டுடையன் மாதோ. (௧௧)

கன்னிகா சகுனி சங்கு சிரோதான கபில கேது
வன்மயன் மரீசி விந்தி யர்பதி வாம னன்றான்
மின்னதோ முகன்றான் கேது வீரியன் சம்ப ரன்சீர்
கன்னிகா தால சங்கு சிரன்சத கிருதன் வீரன் (௧௨)

தந்திரத் தனுலோ மன்வச் சிரநாபன் றூர கன்பே
ரிந்திர சித்தோ டேம னேகவத் திரன்மா வாகு
முந்தசி லோமன் சீர்த்தி முதிர்ந்தசத் தியசித் துச்சீ
ருந்துசொற் பானு வாண னுயர்விட பருவ னுதி (௧௩)

இவர்முத லீன்றமக்க ளனேகரி னெழில்கூர் பானுத்
துவரிதழ்ச் சசிபா னேடு சுப்பிர பையையும் பெற்றுன்
றவமய னுபதை மண்டோ தரிகுகுத் தனையும் பெற்று
னவையில்சுந் தரிசன் மிட்டை சந்திரா யெனுநல் லோரை. (௧௪)

புகழ்விட பருவன் பெற்றுன் வைசுவா னம்பு லோமை
மகிழுங்கா லகையும் பெற்றுன் மாரீசன் றன்னைக் கூடித்
திகழுமவ் விருவர் மிக்க திறனுடை வலிபெற் றேங்க
வகமகிழ்ந் தாறு பத்தா மாயிர வசுரர்ப் பெற்றார். (௧௫)

வந்தவப் புதல்வர் தாமே வளர்பவு லோம ரென்று
மந்தமில் கால கேய ரென்றுமா யயன்வ ரத்தா
லிந்தநீர்க் கடலுள் வைகு மிரணிய புரத்தில் வாழ்ந்து
முந்தவே பார்த்தன் கையான் முற்றுற முடிந்தா ரன்றே. (௧௬)

விப்பிர சித்தி யென்பான் விளங்குசிங் கிகையென் றேது
மிப்புவி யதனில் வாழு மிரணிய கசிபு தங்கை
செப்புறு தனத்திற் சேர்ந்து சிங்கவீ ரியரென் றேசொ
லொப்புறு நாகன் வச்ச னுடனரான் விக்கி யாதன். (௧௭)

சல்லியன் கால நாபன் சாமாபன் சுசிடு த்ன்று
னில்வலன் மூசி கற்ப வீரிய னெழில்வா தாவி
வில்வலி யஞ்ச னென்னும் விறற்பதி மூவர்ப் பெற்றான்
வல்லெழிற் சங்க லாத னிவர்தக வசரை யீன்றான். (௧௮)

தெரித்திடு தேவ ராலு மசுரர்கள் தருவ ராலும்
பரித்தவா ளரக்க ராலும் வெலற்கரும் பான்மைக் கீர்த்தி
தரித்திடு திறனி வாத கவசர்க டனுவின் மிக்க
வருச்சுன னுடன்போர் செய்தங் காவிவிட் டகன்று ரன்றே. (௧௯)

இயற்றுதாம் பிரையேமிக்க காசிபற் கினிய சேனி
துயக்கறு சுசியே பாகி திருத்திரி சுக்கி ரீவி
மயற்சுகி தனையும் பெற்று ளனையமங் கையர்க டம்முள்
வியப்புறு சுகியே மிக்க தருமத்தின் விதிவ ழாமல் (௨௦)

வேறு.

மேவிப் பொருந்து கிளியினமுங் கோட்டா னினமு மிகப்பெற்றாள்
சேவற் செறியும் பாற்றினத்தைச் சேனி பெற்றாள் கிருத்திரியுங்
காவிற் பயிலும் புறவினொடு பாரா வதஞ்சொற் கழுகீன்று
வேற் செறியு மனந்தாராச் சுசியாங் கினிது பயந்தனளால் (௨௧)

அழகிற் பொலிசுக் கிரிவிகர மாடொட் டகங்கண் மிகப்பெற்றாள்
விழைவிற் பரசி குராவப்பேர் மேவும் பறவை தனைப்பெற்றாள்
குழைவிற் புருவத் தாம்பிரைதன் மரபு சொற்றுங் கூர்வினதை
பழியற் றுயர்செள் தாமினியோ டருணன் கலுழ னிவர்ப்பயந்தாள். (௨௨)

அருணன் கழுகுக் கரசனெனு மழிவில் புகழ்சம் பாதியொடு
வருநற் சடாயு தனையீன்று னவருள் வயங்கு சம்பாதி
பெருமை பிறங்கும் பெப்புருவை யீன்று களித்தாள் பேருலகிற்
கருது புகழை நிலைநிறுத்தக் கவின்சேர் கன்னி காரணையே. (௨௩)

உரைக்குஞ் சடாயு வுயிர்த்தனனக் கன்னி கார னுயர்சாக
னிரைச்சு பாலன் பேருண்டன் மூவர்ப் பயந்தா னிவர்மரபிற்
றரைக்கு ளனந்த கோடிவிதம் பட்சி சாலந் தழைத்தோங்கும்
பரக்கு நாக மாயிரத்தைப் பயந்தாள் சுரசை கத்துருவும். (௨௪)

உளங்கொள் பாந்த ளாயிரத்தைப் பணமா யிரத்தோ டுறப்பெற்று
டுளங்கு மிவரு ளனந்தன்வா சுகியே திருத ராட்டி ரன்சீர்
வளங்கொள் சங்கன் மாசங்கன் மணியார் பதுபன் மாபதுமன்
களங்க நீலன் கார்க்கோட னயிரா வதன்கம் பளநகுடன். (௨௫)

அணங்கு புரியுந் தனஞ்சயனோ டசுப தரன்றட் சகனெழிற்பே
ரிணங்கு சங்கு பாலனுறு புட்ப தந்த னியல்வாமன்
குணங்கொள் கமலன் பதஞ்சலிபிற் கூறு சுபானன் றுன்முகனீள்
பணங்கொள் சங்க ரோமன்பா ணினியோ டேலா பத்திரனே. (௨௬)

வேறு.

இப்பில வந்த மான விருபதிற் றறுவர் கூடச்
செப்பிய தொகையி ரண்டா யிரவர்க்குஞ் செனித்த பேர்க
ளொப்பில ரனேகர் முன்ன ருயர்சனி மேசயன்செய்
வெப்புறு மோமத் தீயில் வீந்தன ரனேகங் கோடி. (௨௭)

ஏசற்ற வெழிற்கு ரோத வசையிராக் கதரை யீன்று
ளாசற்ற வீமன் கையா லவரிலெண் ணிலர்முன் வீந்தார்
தேசுற்ற சுரபி கோடி யுருத்திரர் சிறந்த கோக்கண்
மாசற்ற வெருவை யோடும் வார்ங்கனை தனையும் பெற்றாள். (௨௮)

காசிப முனிபாற் றெய்வக் கணிகையர் முனிவர்ப் பெற்றார்
நாசமி லருட்டை யேகந் தருவர்கின் னரரைப் பெற்றாள்
பேசிறை செடிம ரங்கள் பிணங்கிய கொடியைப் பெற்று
ரேசறு வருடை யாங்குப் பிசாசினத் தொகுதி பெற்றாள். (௨௯)

இங்கினி துரைத்த யாவு மிலங்குகா சிபராற் றோற்றி
யங்குறு மரபாஞ் சுவாரோ டசிதம னுவந்த ரத்திற்
றங்கிய சிருட்டி யென்பர் தழைக்கும்க் காசி பற்கே
பங்கமி றூற்பத் தொன்பான் மருத்துவர் திதிப யந்தாள். (௩௦)

எனுமுறை மச்ச ரூபத் தெழின்முகில் வண்ணன் முன்ன
மனுவினுக் குரைத்தா னென்ற வரன்முறை மகங்க ளாற்றித்
தனுவின்மும் மலமு ருக்கி யிருவினை தடிந்து வேதப்
பனுவறேர் முனிவர் கேட்கப் பகர்ந்தனன் சூதன் மாதோ. (௩௧)

ஆறாவது

காசிபர் மரபுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௪௭.

ஏழாவது

மதனத்துவாதசிவிரத வத்தியாயம்.

தரையுளோர் புக்ழு மாம தனத்துவா தசியை நன்கா
யுரைசெய வேண்டு மென்றே யுயர்தவத் தோர்கள் கேட்ப
விரைசெறி கடுக்கை கங்கை வெண்ணிலா வணிந்த வேணி
நரைவிடை யானைப் போற்றி நவில்கிற்குஞ் சூதன் மாதோ. (க)

துறந்தமெய்த் தவங்க ளாற்றுந் தொன்மனுக் காசி பற்கே
சிறந்திடு நாற்பத் தொன்பான் மருத்துவர் திதிபான் முன்னர்ப்
பிறந்ததுந் தேவ ரோடுஞ் சினேகந்தான் பெற்ற வாறு
மறந்தர வுரைத்தி யென்ன வச்சுத னறைவ னன்றே. (உ)

அசுரருந் தேவர் தாமு மருஞ்சமர் விளைக்கும் போழ்து
நிசிநிறத் தசுர ரெல்லா நேருமிந் திரனால் வீந்தா
ரிசைவுறு சோகத் தோடு மிந்திரற் கொல்வா னெண்ணி
வசையறு மகாரை வேண்டி மாதவந் திதிசெய் தாளால். (ங)

வேறு.

சுற்றிக் கிடக்குங் கடற்புவியிற் றேன்று நதியாஞ் சரசுவதி
யுற்றுத் திகழுஞ் சமந்தபஞ்ச கப்பேர்ப் பெற்ற வோர்துறைக்கை
பற்றிப் புணர்ந்த காசிபனைப் பரிவி னெண்ணி நூறாண்டு
முற்றத் தவந்தான் புரிந்துயர்ந்து முனிவர் வசிட்ட ரிடத்தெய்தி. (ச)

மக்கட் சோக மாற்றுதற்கோர் வகைநீ ருரைக்க வேண்டுமென
முக்கட் பகவ னுதல்விழியான் முனிந்த மதனத் துவாதசிநின்
றுக்கக் கடலை யொழிக்குமெனச் சொல்ல வந்த விரதத்தின்
மிக்குப் பெறுமக் கற்பவகை விளம்பு மென்ன வேண்டுதலும். (ரு)

ஓங்கி வளர்சித் திரைமாத முயர்ச்சி பெறுபூ ருவபக்கப்
பாங்கிற் சிறந்த துவாதசியிற் பனிநீ ராட்டி நியமமுறை
தாங்கிக் கும்பந் தனிற்சம்பா வரிசி நிரப்பி யிரண்டுகலை
வீங்கப் புனைந்து சந்தணிந்து விளங்கு மணிபொன் னுள்ளிட்டு. (சு)

தாபித் ததன்முன் கனிகரும்பு சால வபூப மிகப்படைத்துச்
சோபித் தொளிர்தாம் பிரத்தளிகை நிறையச் சொரிந்து சருக்கரையை
யாபத் தறுக்குங் கும்பமிசை யிருத்தி யரம்பை யிலைவிரித்து
மாபத் தியினிற் பொற்றகட்டின் வாமத் திரதி மதனமைத்து. (எ)

ஈரெட் டான வுபசார மியற்றிப் பணிய வியலாதேன்
மாரப் பதுமை தனைமாயன் வடிவ மாகப் பாவித்து
நீரிற் பொலிசந் தனக்குழம்பா லாட்டி நிறைவெள் ளரிசியெள்ளா
லார்வத் துடனே முறைவழுவா தக்கபூசை புரியும்வகை. (அ)

பாதங் கணைக்கா லூருநடுப் பண்டி மார்பு முகம்புருவ
மோது முடிகா மாயசவு பாக்கியதாய மாராய
சோதி மன்ம தாயசுவ சோத ராய வனங்காய
நீதி பற்ப முகாய பஞ்சமராய சர்வான் மநேநமவால். (கூ)

என்றே யங்கம் பாதாதி யேத்தி யரியை மதனுக
நன்ருய்ப் பூசித் திருங்கனியை நயந்து துய்த்துப் படிதுயின்று
குன்று ரிரவி யுதிக்குமுனங் குளிர்நீ ராடிப் பூசித்தே
யன்று ரணவே தியர்கடமக் கருள்சேர் கும்ப மினிதளித்து. (க0)

தன்னு லியன்ற மாத்திரமெய்ச் சதுர்மா மறையோர்க் கனங்கொடுத்துத்
தின்னு துப்பு மறுத்துண்டு திகழ்தாம் பூலந் தக்கணையு
மன்னோர்க் களித்துப் பன்னிரண்டு மாதந் தப்பா தனுட்டித்துப்
பின்னு வருசித் திரையின்முன்போற் பெருகப் பூசை தனையாற்றி. (கக)

அரிவை யுடனே ரந்தணனுக் கணிதூ சணிந்து பூசித்துக்
கிருத தேனுப் பொன்மெத்தை கிளர்ந்து பதுமை வெண்பசுவும்
பெருகக் கொடுத்து வெள்ளெள்ளாற் பிறங்கு நெய்யாற் பாயசத்தா
லெரியை வளர்த்த மந்திரத்தி லினிய வோமந்தனை யியற்றி. (கஉ)

அருந்த மறையோர்க் கமுதுகொடுத் தவிர்சந் தனப்பூங் கரும்பளித்துப்
பொருந்து மதனத் துவாதசியிற் பூசை புரிந்தாற் றுயர்நீங்குந்
திருந்து புதல்வர்ப் பேறுண்டாஞ் செல்வம் பெருகுந் திருநெடுமா
லிருந்த பதமு மவர்க்கெளிதா மென்று வசிட்ட னிசைத்திடலும். (கங)

வேறு.

செப்பு விரதந் தனையத் திதிதா
னொப்பிற் புரிய வுயர்கா சிபர்தா
மெய்ப்பின் னுறுபுத் திரகா மேட்டி
யைப்பண் ணுதியென் றருள்செய் தனனல். (கச)

ஆபத் தம்ப னெனுமந் தணனல்
யூபத் துறுமம் மகமே யுஞற்றிக்
கோபத் தொடுமிந் திரனைக் கொல்லத்
தாபத் தாவி சாரம் புரிந்தாள். (கரு)

செய்யுந் தவத்தாற் கருப்பஞ் செறிய
மெய்யுங் கருவும் விளையும் படிநீ
யுய்யுந் திறநன் குரைப்பேங் கேளென்
றையன் புகழ்கா சிபனங் கறைவான். (கசு)

வேறு.

கருப்பமுற் றிடுவோர் சாயங் காலத்தி லன்ன முண்ணார்
விருப்புடன் மரத்து நீழன் மேவிடார் நீரினீந்தா
ரிருப்பிலா மனையிற் சேரா ரிருநில மூகிரிற் கீறார்
நெருப்பிடை நேரார் கையா னீடுர லுலக்கை தீண்டார். (௧௭)

காட்டிடைச் சேரார் புற்றின் கண்ணிடை வாரார் நெஞ்சில்
வாட்டமுற் றிடவுஞ் செய்யார் வாதமேற் படவுஞ் செல்லார்
நீட்டிய சயன மைந்தி னின்றடி நடவார் மிக்க
தோட்டுமி யிரும்போ டென்பு சுடுகரி துவைக்க நாடார். (௧௮)

சண்டையிட் டிடவு மாகா தலைவிரித் துலவ லாகா
துண்டை மெய் யுடுக்க லாகா துக்கம துரைக்க லாகா
தண்டுமா சூச மாகா தலைவடக் கரம தாகா
தொண்டொடி மாத ரோடு மிகுநகை யுறுத்த லாகா. (௧௯)

அரையினிற் றூசு சாவ தானமா யமைக்க வேண்டுங்
குரவர்தம் மிடத்தின் மிக்காம் பணிவிடை கூர்தல் வேண்டும்
விரவிய தானி யங்கள் கூட்டிநீ ராட வேண்டும்
குரம்பியப் பாகச் செம்பொற் பூடணம் பூண வேண்டும். (௨0)

கணவனைப் பணிதல் வேண்டுங் கதிர்முக மலர்தல் வேண்டுந்
துணரணி யணிதல் வேண்டுந் தொழும்பினர்க் கிதமே சொல்லிப்
பணிவிடை கொண்டு மூன்றும் பக்கநா ளுமையாள் பற்ப
விணையடி தொழுதோர் சந்தி யிரவிலுண் டிருத்தல் வேண்டும். (௨௧)

இவ்வகை கருப்ப மூற்று ரியற்றிடி லீசற் கொப்பாஞ்
செவ்விய புதல்வர்ப் பெற்று மனத்துயர் தீர்ந்து வாழ்வ
ரவ்வகை யனுட்டி யாருக் கழிந்திடுங் கருப்பந் தள்ளித்
தவ்வலில் புவியிற் றேன்றித் தளருந்தீர்க் காயு ளன்றி. (௨௨)

என்றுரைத் திருடி யேக வினியநா ளுண்டு தன்ம
மொன்றுதப் பில்லா வண்ண முனூற்றியாங் கிருத்த லோடும்
வன்றிறன் மகவான் றேர்ந்து மயங்கித்தன் வாழ்வை நீக்கி
யொன்றிய சிற்றுய் பாங்க ருறுதொழில் புரிந்தா னன்றே. (௨௩)

மனமதிற் கவடு வைத்து முகமனுய் வணக்கஞ் செய்தே
யனுதின மேவல் பூண்டே யமையம்பார்த் திருந்தா னுங்கண்
டினமொரு மூன்று நிற்பச் சென்றது நூறுண் டன்று
புனைகுழல் விரித்துக் காலும் புனல்கொடு கழுவ லின்றி. (௨௪)

கால்விரித் தயர்ந்தே யெல்லிற் கண்டுயி லற்ற நோக்கி
மேல்வரு கரும மெண்ணி விரைந்து தரத்திற் சென்று
சூலினை யேழு கூறாய்த் துணித்தலு மலறக் கண்டப்
பாலவை யேழு மொவ்வொன் றேழதாய்ப் பகுத்திட் டானல். (௨௫)

சொல்லிய வுருவே ழேழுந் துலங்கிய குழவி யான
வல்வலி கண்டே யங்கண் வாசவன் மயங்கி யாதோ
நல்வர மீதென் றெண்ணி ஞானதிட் டியினு னோக்கி
வில்வலி யதனு லுற்ற துவாதசி வீறென் றெண்ணி. (உ௬)

நந்துரு வேழேழ் மைந்தர் நளிர்முக நோக்கித் தேவர்
தந்திறத் தவிகளுண்டு தம்முடன் வாழ்வீ ரென்று
புந்தியின் மொழிந்து சிற்றுய் பொன்னடிக் கமலம் போற்றி
வந்தவே குற்றம் யாவு மனத்திடைப் பொறுத்தி யென்றுன். (உ௭)

என்றித மியம்பி யந்தத் திதியையும் விமானத் தேற்றித்
துன்றிய நாற்பத் தொன்பான் றுணைவருஞ் சூழப் புக்குத்
தன்றுறக் கத்தி னெய்தி யிருந்தனன் சசிம ணாளன்
வன்றிற லிவர்க்கு நாம மருத்துவ ரென்றுன் சூதன். (உ௮)

ஏழாவது.

மதனத் துவாதசி விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - உ௧௫.

எட்டாவது

சர்வாதிக்கப்பட்டாபிஷேக வத்தியாயம்.

விண்ண வர்க்கு மணிமுடி வேய்ந்தர
சண்ணல் வேத னளித்தது கூறெனத்
தெண்ணி லாவணி சென்னிய னஞ்செழுத்
தெண்ணு சூதன் முனிவர்க் கியம்புவான். (௧)

வேதன் மன்னுயிர் யாவும் விதித்தபின்
பேதி யாது புவிக்குப் பிருதுவை
நாத னுகவு நாட்டின னிந்துவை
யேத மில்பயிர் யாகம் விரதங்கள். (உ)

மிக்க தாரகை வேதியர் பாதப
மிக்கு ழாத்துக் கிறையென்று மேழ்கடற்
றெக்க காவல் வருணற்குஞ் சொன்னவா
திக்க வாழ்வு குபேரற்குஞ் செய்தனன், (௩)

பகரு மாதித்தர் பன்னிரு வோர்தமிற்
புகரில் விண்டுவைப் போற்றர சாக்கினு
னிகரி லட்டவ சுக்கட்கு நேரிலாத்
தகைமை யக்கினி தன்னை மன் னாக்கினன், (ச)

பெருத்த சிட்டித் திசைப்பிர மர்க்கெலா
மருட்ட குந்தக்க னுதிபன் வாசவன்
மருத்து வர்க்கிறை மற்ற சுரர்க்கெலாங்
கருத்த னுப்பிரக லாதனைக் கற்பித்தான். (ரு)

பெருக்குந் தெய்வப் பிதிர்க்குப் பிரமனுந்
தருக்கும் பூத பிசாசுக்கீ சானனும்
பொருப்புக் கம்பொற் பொருப்பு நதிக்கெலாம்
விருப்பின் வேலையும் வேந்தென வாக்கினன். (சு)

வித்தி யாதரர் கின்னரர் மேதகு
சித்தியர்ழ்வர் கோச்சித் திரரதன்
வைத்த நாகங்க ளுக்கிறை வாசுகி
தத்தி யூர்பணி கட்கிறை தட்சகன். (எ)

அட்ட திக்கிபத் துக்கயி ராவதம்
பட்ட வர்த்தன மோது பரிக்கெலா
மட்டி லாவுச்சி ரச்சிர வாவிறை
கட்ட ரும்பற வைக்குக் கலுழனே. (அ)

அணங்கு செய்விலங் குக்கரி யாவினுக்
கிணங்கு மேன்மை யிடப நருவுமிழ்
மணங்கொள் பூவின் மரத்தினுக் கிச்சில்கூர்
கணங்கொள் வேந்தென வேபட்டங் கட்டினன். (கூ)

தோற்று கீழ்த்திசைக் குச்சுதன் மாவுஞ்சீர்
சாற்று தெற்கிற்குச் சங்க பதனனு
மேற்றி சைக்கு விளங்கு சுகேதுவு
மேற்று தக்குக் கிரணிய ரோமனும் (க0)

பிறங்கு பேரர சாக்கினன் பெட்பினிவ்
வறங்கொ ளுல்வ ரணிமுடி சூட்டவே
திறங்கொள் சீர்த்திப் பிருதுவுஞ் சீர்பெற
மறந்த டிர்துயர் மாநிலங் கர்த்தனன் (கக)

வளங்கொள் சாட்சுஷ மன்வந்த ரந்தவிர்ந்
துளங்கொள் வைவச் சுதமனு வுற்றவன்
விளங்கு மோலியந் நால்வரும் வேய்ந்திடக்
களங்க மில்புவி காத்தன னென்பவே. (கஉ)

6

மச்ச மாயன் மனுவுக் குரைத்ததை
விச்சை கூர்தரு மெய்த்தவச் சூதனே
துச்ச நீக்கித் தொகுத்து வகுத்தன
னெச்ச மாற்று மிருந்தவத் தோர்கட்கே. (கரு)

எட்டாவது

சர்வாதிக்க பட்டாபிஷேக வத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-ரு௦அ.

ஒன்பதாவது

மன்வந்தர வகுப்பத்தியாயம்.

திரைக்கட லுதித்த மாயன் றிசைபுகழ் மனுவுக் கன்று
விரைத்துணர் மனுவின் றேற்றம் விரித்தவா றுரைத்தா யின்ன
நிரைத்தமன் வந்த ரங்க ணிகழ்ந்தது நிகழு மாறு
முரைத்திநீ யென்று கேட்ட முனிவரர்க் குரைப்பான் சூதன். (க)

மன்னிய சுவாயம் பூமன் வந்தரந் தன்னின் மன்னு
மின்னுயிர்த் தேவர்க் கெல்லாம் யாமரொன் றிசையு நாமம்
பன்னிய மரீசி யாதி முனிவரர்ப் பகரு நாம
முன்னியின் றுரைக்கு மாபோ லன்றுமே யுரைப்பர் மாதோ. (உ)

சொல்சுவா யம்பூ மைந்தர் துதிமானவ் வியன்மே தாதி
நல்வசு மேத வாக்கி னீத்திர னவிலும் புத்திரன்
வல்லமைச் சவனன் சோதி மானொடு மக்கினி வாகென்
றெல்லுமிப் பதின்மர் நாம மோங்கிய சுவாயம் பூவார். (ங)

மற்றவர் சிருட்டி செய்தே வயங்குமிப் பதத்தைச் சேர்ந்தார்
சொற்றிடு மிரண்டே மன்னே சுவாரோட்ட னென்னும் பேரா
னுற்றிடு மவன்றன் மைந்த ரொளிர்பிர பிருதி பாநு
கற்றிடு நபன்வச் சீயன் கருதுமிந் நால்வ ராமால் (ச)

காசிபன் றத்தன் றம்பன் கருதவு றுவன்பி ராணன்
பேசுநிச் சியவ னன்சீர்ப் பிருகற்பதி யென்ன வோங்கி
யேசிலா துரைக்குஞ் சத்த விருடிக ளும மாகுந்
தூசறு தேவர் நாமந் துசிதரென் றுரைப்பர் மாதோ. (ரு)

அருந்தவ வசிட்டன் மைந்த ரயிந்திர னாபன் மூர்த்தி
பொருந்திய சுகிர்தன் சோதி மயனய னெழுவர் பொற்பிற்
றிருந்தவே படைப்போர் மூன்றாந் திகழுமன் வந்த ரத்தில்
வருந்திற லுத்த மிப்பேர் மனுவையுத் தமனே யென்பார். (௬)

உத்தம மனுவின் மைந்த ரிசன்சுசி யூச்சன் சுக்கிலன்
வைத்திடு தனுச னோடு மதுநாப னபசி மற்றைச்
சத்தியச் சசியே மாத வன்னொடும் பதின்மர் சத்த
வித்தக ரிடிகு ரண்டி விளங்கிய கவுட்ச துண்டி. (௭)

தாத்தியன் சங்கன் சம்மி தன்பிர வாக னன்னோ
டேத்திய மிதனோ டேழு பெயர்நால்வர் மனுவெ னும்பேர்
பார்த்திபன் றாயன் சன்னான் பயந்திடு மவன்றன் பாலர்
சீர்த்திகொ டவசி மூலன் றிகழ்தபோ தனன்றன் னோடும். (௮)

பரந்தபன் சுதபன் கீர்த்தி பகர்தவ சியனே மற்றும்
வரந்தரு தாம சன்சீர்த் தபோரதி யகன்ம சன்றா
னாரந்தரு தபன னின்னோ ரோதிய பதின்ம ராகும்
புரந்திடும் பிருது மற்றும் புகலுமக் கினிதன் னோடும். (௯)

கவியக வியனே போற்றுங் கபியெழி லகபி யிந்தப்
புவிபுக ழவவி யன்சீர் புகலுமேழ் முனிவர் பேரா
மவிரொளித் தேவர் நாம மரியசாத் தியரென் றாமுற்
பவிதரு மைந்தா மன்பேர் பகரிரை வதனென் றாமால். (௧௦)

தரைபுக ழன்னோன் மைந்தர் தத்துவ தரிசி யுத்தன்
றிரிதிமான் வியவ னன்சொற் றிறல்கொள் சத்துவன்பிர காசன்
வருநிதிச் சுகனின் மோகன் மன்னிய சுவித்தி னோடு
மருணணிப் பதின்மர் கேள்வி யறந்தரு செய்கை மிக்கார். (௧௧)

சொல்லிய வேத பாகுச் சுபாகுச்சத் தாச்சு வன்சீர்
வல்லபற் சன்னி யன்சோம் பன்முனி யிரண்ய ரோம
னெல்லொளி யிவரே சத்த விருடிக டேவர்நாம
நல்லெழிற் பூத ரேசு நவில்பிர கிருதி யாமால். (௧௨)

வளங்கொள்சாட் சுஷனே யாறு மனுவவன் மைந்த ரானோர்
களங்கறு குருவே யாதி பதின்மர்பேர் கருதி முன்னர்
விளம்பினஞ் சுவாயம் பூவின் வியன்மர பிடத்துத் தேவர்
துளங்குபேர் காம சூனர் சொற்றிடு பிரவா சன்னர். (௧௩)

தருமெழிற் றிபால ரேயை சாகமார் போக சன்ன
ரொருமைகொ ளவர் சத்த விருடிக னாறுபேர் கூறிற்
பிருகுதா தாவே நாதன் பெருகிய விவச்சு வான்சீர்
நிரசனத் திரிச யுட்டிணு நிகழ்த்துவ ரந்த நாளில். (௧௪)

வேறு.

ஏழா மனுவை வச்சுத னுரு மிவன்மைந்தர்
வாழ்வா ரிக்கு வாமுத லொருபதின் மருமாகுந்
தாழா துயருந் தேவர்க ளுமந் தான்ருத்திரர்
கேழா ரதபர விச்சுவ தேவர் கிளர்சாத்தியர் (கரு)

வெல்புகழ் நல்ல மருத்துவ ரேயசு வினிகள்ளோ
டல்கலி லட்டவ சுக்களு மெனுமற் றவரேழாஞ்
சொல்லும் வசிட்டன் காசிப னத்திரி துகளில்லா
வல்லமை சேர்சம தக்கினி யேவிசு வாமித்திரன் (கசு)

சொற்றிடு கோதம னுேடும் பாரத் துவாசன்னென்
றுற்றிடு மிவரே ழிருடிகள் வைவச் சுதனுேங்கப்
பெற்றிடு மகளப் பதின்பரு மின்பம் பெறுமுத்தி
பற்றுவ ரிம்மனு வந்தர வந்தம் பகருங்கால். (கஎ)

எட்டா மனுசா வன்னிய னுரு மிவன்மைந்தர்
மட்டார் மாலை வரியான் வசன வசுசித்திரன்
முட்டா வின்ப விச்சியன் வர்த்தி மொழிநிர்த்தி
கட்டார் சுமதி சருட்டுணு சுவனன் கணிபத்தே. (கஅ)

அசுவத் தாம னபரத் துவாச னணிராமன்
விசுவக் கோசிக னற்கா சிபனே விறல்கூரும்
பசுமைக் காலவ னுேடும் பன்னு சதானந்தன்
றிசையெட் டும்புகழ் சத்த ரிடிப்பெயர் திகழ்வாரால். (ககூ)

ஒன்பான் மனுவே ருச்சிக னென்பா னுறுமன்னே
னன்பா மைந்தன் ரவுச்சிகன் பத்தா மனுவன்னேன்
றன்பால் வந்த நன்மகன் மேரு சாவன்னியன்
வன்பார் காக்க வருபதி னென்ரு மனுவாவான். (உ0)

ஈரா றென்றே யெண்ணுறு மனுவே ரிபுவென்பார்
கூரார் பதின்மூன் ருமனு கூறு மரிதாமன்
வாரார் பதினு லாமனு வேவிசு வச்சேனன்
சீரார் தருமிம் மனுவனே வோருஞ் செகமெல்லாம். (உக)

தத்த மனுவந் தரமுறு காறுந் தாய்போல
வொத்துறு சிட்டி யுளுற்றி யளித்தே யுயர்வேத
வித்தக லோக மேவி யிருந்தே விதிநாளில்
வைத்த பகற்போய் வருமிர வடைவார் மறுநாளும் (உஉ)

உற்றிடு பிரளய மொருவிய பின்ன ருடன்றேன்றி
முற்றிடு சிட்டியு முன்போற் பிரமன் முறைசெய்தே
பெற்றிடு முலக மனைத்து மளித்தே பிரமாயு
மற்றிடு காலத் தரிபத மயனே டடைவாரே. (உங)

மன்னிய விம்முறை மனுவந் தரநல் வரலாறு
துன்னிய வைவச் சுதமனு முறையிற் றெழுதேத்தப்
பொன்னுர மாயன் மச்சம தாகிப் புகல் காதை
யின்னலில் சூத மாமுனி முனிவர்க் கெதிர்சொன்னான். (உ௪)

ஒன்பதாவது

மன்வந்தரவதுப்பத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். ௬௬உ.

பத்தாவது

பூமியினிடத்தில்

தேவாதியர் இரசங்கறந்த வத்தியாயம்.

அரும்புவி யிடத்துத் தேவ ராதிய ரசத்தை முன்னாள்
விரும்பியே கறந்த வாறு விளம்புகென் றுறுவர் கேட்பக்
கரும்பினைப் பழிக்குந் தீஞ்சொற் கன்னியோர் பாகற் போற்றி
யிரும்பொருட் புராணச் சூத முனிவர னியம்பு வானால். (க)

வரும்பிரு துவியைக் காத்து மன்னவ ரநேகர் மேன்மை
தரும்பெயர் தழைக்க வேபார்த் திபரெனத் தாம்பேர் பெற்றார்
பெரும்புவி தனக்கு நாமம் பிருதுவி யான வாறு
மரும்பெயர் கோவென் றேது மமைதியு மறைக வென்றே (உ)

கேட்டிடு மனுவைப் பார்த்துக் கிளரொளி மச்ச ரூபத்
தோட்டலர்த் துளவ மாய னுரைத்தது தொகுத்துச் சொல்வான்
கோட்டமில் சுவாயம் புப்பேர் மனுவழிக் கொற்ற மைந்தன்
பாட்டளி துதையும் பைந்தார்த் தமனெனும் பண்பின் வேந்தன். (௩)

மிருத்துவின் குமாரி யான சுநீதைதுன் முகியை வேட்டுத்
திருத்தகு வேனன் றன்னைச் சிறப்பினி னளித்தா னன்னோ
னருத்திகொள் புவிக்கு வேந்த னாகிக்கா முகரின் மிக்கு
முருக்கிதழ் மடவார் காமம் வரைவின்றி முயலா நின்றான். (௪)

முரண்மிகு வேனன் றன்னை முனிவர்க டொடர்ந்து பற்றிப்
புரமது கடைய வாமப் புறத்தொடை மிலேச்ச ருற்றா
ரூரமுறு வலக்கை தன்னி லோர்கைவில் லோர்கை பாணம்
வரமிகு கவசத் தோடும் பிருதுவந் துதித்தான் மன்னோ. (௫)

வேதியர் முனிவர் கூடிப் பிருதுநற் புவிக்கு வேந்தென்
ருேதியே மோலி சூட்ட வுலகெலா முறைந டாத்தி
மாதவ மநேகஞ் செய்தே மாயாநுல் வரங்கள் பெற்று
ஞதியில் வேனன் செய்த வதன்மத்தாற் பொருது பூமி. (சு)

வறுமையை யடைதல் கண்டு பிருதுமா மன்னன் சீறி
யுறுபுவி யதனைக் காய்ந்தே யுரத்தொடுந் தொடர்ந்து பொங்குந்
தெறுசினத் தீமேற் கொண்டு பாணமாஞ் செந்தீ மூட்டி
யறிவினற் பசுவா யோட வாங்கவன் றொடர்ந்து சென்றான். (எ)

ஓடிய விடங்க டோறுந் தொடர்ந்திடப் போக்கொன் றின்றி
நாடுறு பிருது வென்பான் றன்முக நயந்து நோக்கிப்
பாடுற வென்னை வாட்டல் வேண்டுவ பகர்தி யென்னக்
கோடுநால் வகைத்தோற் றத்துக் குணவுீ கொடுத்தி யென்றான். (அ)

நன்றெனக் கோவுஞ் சொல்லச் சுவாயம்பூ நாதன் றன்னைக்
கன்றெனத் தழுவி யேந்திப் பாத்திரங் கரம தாக்கி
யன்றுபல் லுயிர்க டுய்ப்பக் கறந்தன னரும்ப யிர்ப்பா
றுன்றிய முனிவர் துய்ப்பச் சொன்மறைக் கலங்கை யேந்தி. (கூ)

பொன்மதி கன்றாய் ஞானம் பொலிதவப் பால்க றந்தான்
முன்னுள தேவர்க் கெல்லா மிந்திரன் கன்றாய் முட்டிப்
பன்னுபாத் திரம்பொன் னுக ரவிபலப் பால்க றந்தான்
றுன்னிய பிதிர்க டுய்க்கச் சுதையினை யமன்கன் றாக. (க0)

அந்தகன் கறந்தான் வெள்ளிப் பாத்திரத் தாவங் கட்குச்
சிந்தைகூர் தக்கன் கன்றாய்த் திரிதராட் டிரனே யென்போ
னிந்தனை விஷப்பான் மிக்கு நிழல்சுரைக் கலத்தி லேற்றான்
விந்தையி னசுரர்க் கெல்லாம் விளங்கிய பாத்திரத்தில். (கக)

மாயைதான் மிகவும் வல்ல வல்வலி விரோச னன்றான்
மேயதோர் கன்ற தாக விருதலை விருத்தி ரன்கூர்
காய்சின மாயப் பாலைக் கறந்தன னியக்கர்க் கெல்லா
மேயசொற் றனதன் கன்றாய் நனுபன்மட் கலத்தை யேந்தி. (கஉ)

யாவர்கட் புலனுஞ் செல்லா ரசங்கறந்தன ரரக்கர்
மேவிய பிசாசர்க் கூட்டம் விளம்பிய சுமாலி கன்றாய்த்
தாவுருப் பியநா பன்வெண் டலைக்கலங் கையி லேந்தி
யோவிலா வுதிரப் பாலை யுவப்புடன் கறந்தா னன்றே. (கங)

தேவத கணிகை மார்க்குஞ் சிறந்தகாந் திருவருக்கு
மாவசு ருசியென் பான்று மரையிலைக் கலங்கை யேந்தி
மேவுசித் திரர தன்றான் விளங்கிய கன்ற தாகப்
பாவுறு கந்தப் பாலைப் பரிவினற் கறந்தா னன்றே. (கச)

அத்திரி யினங்கட் கெல்லா மமைவுறு மிமவான் கன்று
யுத்தர மேரு வென்பா னேங்குகற் பாத்தி ரத்திற்
பத்திமா மணிம ருந்தின் பகுதிகள் பால தாக
வித்தல வரைப்பின் மல்க வியல்பொடுங் கறந்தான் மன்னோ. (கரு)

வளர்ந்தெழு மரங்கட் கெல்லாம் வளங்கெழு மிச்சி லென்றே
விளங்கிய மரங்கன் ருக வெட்டுவான் றழைக்கும் பாலைக்
களங்கமற் றுயர்ந்த பச்சை யிலையெனுங் கலங்கை யேந்தித்
தளங்கொள்பூ மராம ரந்தான் தகைபெறக் கறந்த தன்றே. (கசு)

இவ்வண்ண முயிர்கள் யாவு மிச்சையாம் பொருள்க ளெல்லா
முய்வண்ணங் கறந்துண் டின்ப வுவகைமென் மேலு மோங்கி
மெய்வண்ணம் பொற்பு வாணுள் வீறுறப் பிருது வேந்தன்
செவ்வண்ணச் செங்கோ லெட்டுத் திசையிலுஞ் சென்ற தன்றே. (கஎ)

அன்னவன் புரக்கும் பூவி லச்சநோய் சோக பாவந்
துன்னிய வயிரந் துன்பம் விக்கினந் துயரொன் றின்றி
நன்னயம் பொருந்த வில்லி னுதிகொடு நகங்கள் யாவுந்
தன்னுடை வலியாற் றள்ளித் தரைசம தளஞ்செய் தானல். (கஅ)

பொருந்திய சிரார்த்தம் யாகம் புகழ்பெற முடிப்போ ரிங்குத்
திருந்தி வுரைத்த நற்பாத் திரத்தினில் ரசத்தைச் சேர்த்தே
யருந்திட வகுத்த வண்ண மவரவர்க் களிக்க நன்றும்
விரிந்தபார் பிருது வேந்தன் மகனென விளங்க லாலே. (கசு)

பிருதிவி யாகிக் கோவின் வடிவினுற் கோப்பேர் பெற்று
விரிவுறும் பூமி யென்றே மச்சமாய் மேவு மாயன்
றெரிவுறு மனுவுக் கன்று செப்பிய காதை யாவும்
பரிவுறு முனிவர் கேட்பப் பகர்ந்தனன் சூதன் மாதோ. (உ0)

பத்தாவது

பூமியில் தேவாதியர் இரசங்கறந்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். கூடுஉ,

———

பதினோன்றாவது

இளாசங்கம வத்தியாயம்.

சொல்லும் பவவினை வேரறு சூதன் றனைநோக்கி
யெல்லின் குலவழி யாகு மிளாசங் கமமுறையை
வெல்லுந் திறன்மனு வுக்கரி வின்னுங் கதைமுழுது
நல்லன் பொடுமுரை செய்யெனு முனிவோ ரெதிர்நவில்வான். (க)

ஓதுந் தவமுயல் காசிபர்க் குறுகற் புடையதிதி
மாதென் பவடவ மேசெய வரத்தா தவனுதித்தே
பேதந் தவிர்சங் ஞிக்கினை யொடுராக் கினிபிரபை
யேதந் தவிருயர் கற்புடை யிவர்மூ வரையணைந்தான். (உ)

இவர்மூ வரினுவ ராக்கினி யையா வதற்பெற்று
ளவிர்பூ ணணிபிர பைப்பிர பாதன் றனையளித்தா
டிவர்வா யெழிற்சங் ஞிக்கினை வைவச் சுதற்பெற்றே
கவினார் தரும்யம னோடியர் காளிந் தியையீன்றாள். (ங)

செய்யோன் கதிர்வெப் பந்தனைத் தேகஞ் சகியாளாய்
மெய்யார் நிழலினைத் தன்னுரு வியன்மா தெனவமைத்தே
பொய்யா மொழிநீ யானென வெய்யோ னுடன் புணர்ந்தே
னையா திருமக வைத்தின நானென் னவளர்ப்பாய். (ச)

என்றே யுரைத்தியல் சங்ஞிக் கினையா னவளேகக்
கன்றார் தருகைச் சாயைவெங் கதிரோ னுடன்கூடிக்
குன்றார் புயமனுச்சா மன்னி சூறுஞ் சதிதமதி
மின்றா னிகரும் விட்டியும் வியப்பா கவுயிர்த்தாள். (ரு)

மக்வா னவரெழு வோரினும் வளர்நால் வரிடத்தே
மிகுமா தரவைக் கண்டியர் சண்டன் மனம்வெம்பிப்
புகழ்தா யையுதைப் பேனென வரும்போ துபொருளாய்
நிகழ்கால் வழிபுழு வோடுசெந் நீரோ டிடச்சபித்தாள். (சு)

சாபந் தனைக்கதி ரோனிடஞ் சார்ந்தே யமன்சொல்லக்
கோபந் தணியுயர் பூமியி லுறுகோ கரணத்தி
னீபண் பொடுதவ மேபுரி நிகழ்சா பமுநீங்கி
யேபங்க மிலா தேயுயர் பதமே வுவையென்றான். (எ)

நடுவானவ னற்கோகர ணத்திற்றவ மியற்றித்
தொடராயொரு பதுகோடியெண் வருடந்தொழு தேத்தப்
படர்நீள்சடை முடிவானவன் பரிவோ டெதிர்வந்தே
யிடர்நீயுறல் வரம்வேண்டுக வெனவேயம னிசைப்பான். (அ)

என்காலிடை யுறுசாபமிங் கொழித்தேயிரு நிலத்துத்
தென்பாலுறு திசைப்பாலனம் பிதிர்ப்பாலனஞ் செய்யு
நன்காகிய வரசாமிரு வினைதேர்ந்தறி நடுவு
நின்காதலி னருள்வாயென நிமலன்னருள் செய்யும். (சு)

கதிரோனிவன் சங்ஙிக்கினை யவளென்று கனன்றம்
முதிராமுலை தனைப்பேறுதொட் டடராமுன மேயத்
துதியாகிய முகமன்சில சொல்லிச்சுட ரோய்நின்
கொதியாவெழுத் தீயாற்றலள் குதிரைத்திரு வுருவாய். (கo)

வந்தாடனை மறுத்தேனுனை மருவும்வகை நினைந்தே
சிந்தாகுல மொழியும்படி செம்பொன்வரை யருகே
கொந்தார்குழல் புரிகின்றனள் குலவுந்தவம் வெய்யோ
யெந்தாயொரு வரம்வேண்டுவ லினிநீயரு ளென்றான். (கக)

வேறு.

செங்கதிர்ப் பருதி கேட்டு நன்றெனச் செப்ப மெய்மேற்
றங்குவெங் கதிரைக் கேட்கத் தருதலுங் கடைந்து நம்ப
னங்கையிற் சூல மொன்று மால்கையி லாழி யொன்று
மங்குல்வா கனன்கை யார்வச் சிரமொன்றும் வகுத்தானன்றே. (கக)

மெய்க்கதிர் கடைந்த தல்லால் விளங்குபொற் பதத்திற் காந்தி
யைக்கடைக் கண்க ளாலும் பார்ப்பதற் கஞ்சித் தோட்டா
மைக்கடல் வரப்பில் வெய்யோன் மலர்ப்பதம் வரைந்த பேர்க
டுய்க்கருங் குட்ட மேவிச் சுடுநிரை யத்தில் வீழ்வார். (கூ)

என்றவன் சபித்தான் செய்ய விளங்கதிர் வெம்மை நீங்கி
வென்றிகொண் மேருச் சார்பில் விளங்குமாண் குதிரை யாகிச்
சென்றுறு வடவை தன்பாற் சேர்ந்துமோந் திட்ட மூக்கி
லன்றுறு கலினந் தன்னி லசுவினி தேவ ருற்றார். (கச)

உற்றவர் தமக்கு நாம முரைத்திடு தெசிர ரென்றுஞ்
செற்றமில் லாத நாசத் தியரென்றுஞ் செப்பு வார்கள்
குற்றமில் வடவை தேர்ந்து பதியுடன் கூடலோடு
மற்றமில் விமானத் தேறித் தம்பத மடைந்தா ரன்றே. (கரு)

அன்னசூ ரியன்றன் மக்க ளருந்தவ மாற்றி னாராற்
றன்னிக ரில்லா மேன்மைச் சாவன்னி மனுத்த வத்தான்
மன்னிய கிரகந் தன்னில் வருசனி பகவா னானு
னன்னிலத் துயர்கா ளிந்தி தபதிநன் னதியே யானார். (கசு)

உரைத்திடும் விட்டி யென்பாள் கரணத்தி னுயர்ச்சி பெற்று
டரைக்குள்வை வச்சு தற்குச் சனித்தவர் பதின்மர் தம்மிற்
பெருத்தபுத் திரகா மேட்டி பிறந்துய ரிளனே முன்னோ
னரிட்டனே ரிட்ட னிக்கு வாகுவோ டான்ம நாபன். (கஎ)

புருடதச் சிவனு பாகன் புகனரு டியந்தன் கீர்த்தி
யருளிராக் கதனரூச னுகவொன் பதின்மர் பின்னோர்
மருளற வுலகந் தாங்க விளனுக்கு மகுடஞ் சூட்டி
யிருளறு தவத்தின் வைவச் சுதனிம யத்தி லுற்றான். (கஅ)

கிர்த்திசே ரிளனென் பானெண் டிசையெலாம் விசயஞ் செய்தான்
கூர்த்தகற் பகத்தி னோடு குலவுகாச் சரவ ணத்தின்
மூர்த்திமெய்க் கவுரிகீரிற் கிரீடையின் முயலும் போழ்தி
னுற்றிடு சுற்றும் பத்து யோசனை யணுகு மாண்பால். (ககூ)

பெண்ணுரு வாக வென்ன வுமையன்று பேசுஞ் சாப
மெண்ணுற வறிகி லாதா னிளனேறு குதிரை யோடு
நண்ணுறும் பெண்ணா தாகி யிளையெனு நாமம் பெற்றுக்
கண்ணுறு மழகா யுள்ளங் கலங்கியக் கானி லுற்றே. (உo)

முன்னையி னுணர்ச்சி நீங்கி மொழிந்ததாய் தந்தை முன்னோர்
பின்றையுங் கணவன் யாரோ வெனக்கெனப் பிதற்றும் போழ்தி
லுன்னுசந் திரன்கு மாரன் புதனுறு மோகத் தோடுங்
கன்னிகை தன்னை வேட்டுக் கானகத் தயலே சார்ந்து. (உக)

குண்டலந் தரித்துத் தெண்டுங் குலவுபொத் தகமுந் தாங்கி
மண்டலத் தழகின் மிக்காய் வருசிறு மறையோ னுகிக்
கண்டவக் கன்னி தன்னைக் காடுவிட் டழைத்துச் சொல்வா
ளெண்டொடி முயங்குங் கால முற்றதென் றறிந்தி லாய்கொல். (உஉ)

என்றுபல் விதங்கள் கூறி யிளையென்பா ணீயா ரென்னத்
துன்றுதண் கதிரோன் மைந்தன் புதனெனச் சொல்வர் நீயும்
வன்றிறன் மனுவின் மைந்த னிளனென்பா னிமய வல்லி
யன்றிடு சாபஞ் சற்று மறிந்திலாய் பெண்மை யானாய். (உரு)

இங்குறு கிருகந் தன்னி லிருவருங் கூடி வாழ
மங்கையே வாவென்றோத மகிழ்ச்சியின் மனையை நோக்கித்
துங்கநன் மணியும் பொன்னுஞ் சுடரொளி விரித்த லானுந்
தங்களி லொத்த ரூப சவுந்தரி யத்தி னானும். (உச)

வியந்ததி சயங்க ளெய்தி விருப்புறு கணவன் றன்னை
முயங்கிநற் கிருகந் தன்னின் முறைவழா திருந்தா ளென்ன
மயங்கெழு மச்ச ரூபி மனுவொடும் பயந்த காதை
நயந்துமா தவர்க்குச் சூத நன்முனி யுரைத்தா னம்மா. (உரு)

பதினேன்றவது
இளாசங்கம வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ரூஎஎ.

பன்னிரண்டாவது

சூரியன்மரபுரைத்த வத்தியாயம்.

வாரியின் முகட்டெழுமொர் வண்டிலூறு திண்டேர்ச்
சூரியன் வழிக்குலவு தொன்மரபு முற்று
மாரிய வுரைத்திடுதி யென்றவர்கள் கேட்பத்
தேரிய புராணமொழி சூதனுரை செய்யும். (க)

திரைக்கட லுதித்துலவு செங்கதிர் வழித்தாம்
விரைத்துண ரலங்கல்புனை வேலினனொர் மின்னாய்
வரித்தபுத னேடுறலு மற்றுநிகழ் காதை
யுரைத்தியெனு மாயன்மனு வுக்கெதி ருரைக்கும். (உ)

ஒப்பறு வனத்திலிள னொண்டொடி யுருக்கொண்
டப்புதன் மணக்கணி னமைந்திடலு மன்னோன்
வைப்புறு பின் வந்தவிக்கு வாகுமுதல் வேந்த
ரிப்புவியி னிற்றுருவி யெய்தியவண் வந்தார். (௩)

வந்திடலு மந்தவிளன் வாழ்புரவி யைக்கண்
டெந்தவகை மேவுசந்தி ரப்பிரவக மிவ்வா
றந்தமில்பெண் ணானவகை யாதென வசிட்டன்
முந்துறலும் வந்தவர வீதென மொழிந்தே. (ச)

போதமக லாதுநெறி சேர்புத னிடத்தின்
மாதுருவ மாகியிளன் வாழ்கொடிய சாபத்
தீதகல நீவிர்சிவ னைப்பணிமி னென்றே
யோதியிட மெய்த்தவ முனூற்றினர்கண் மன்னோ. (ரு)

அன்னவர் தவத்தினர னம்பிகையொ டெய்தி
யுன்னரிய பெண்ணுரு வொழிக்கவரி தேனு
மன்னர்தொழு தேத்துமிக்கு வாகுவெனும் வேந்தன்
மின்னிய திறற்புரவி மேதமக மாற்றின். (சு)

மாதுருவ மாணுருவ மாகுமொரு மாதம்
பேதமுறு மாண்வடிவு பெண்வடிவொர் மாத
நீதிபெற நம்மருளி னிகழு மென்றுன்
மேதகு வயப்புரவி வேள்விமுறை செய்தான். (எ)

அப்பொருள் வரத்திலிளை யாணுருவ மெய்தி
யிப்புவி புரந்துமறு திங்களிளை யாளுள்
செப்புமிளை முன்னமதி சேயென வுதித்த
மெய்ப்புதனை மேவியவண் மேயினள் கருப்பம். (அ)

மாதவ மெனப்புருர வாவினை யளிக்க
வேதிலவ னும்மாதிட் டானபுர மெய்திக்
கோதின்மதி யின்குலம் விளக்கினனோர் கோவா
யோதுபுதன் விண்ணிலகு தன்னுல்கை யுற்றான். (௯)

இவ்விளையா ணுகிமு னிருந்து புவியாளு
மவ்வருட மெய்ப்பெய ரிளாவிரத மாமாற்
செவ்வியபெண் ணுண்வடிவு சேர்ந்துதிகழ் ஞான்று
தவ்வலி லசுத்திம்மின னெனப்பெயர் தரித்தான். (க0)

களங்கமி லசுத்திம்மின னென்கருணை வேந்தன்
விளங்குமரி தாசுவனு முற்கலனு மேல்ராய்
வளங்கொள்கய னேடுமெழின் மைந்தரை யளித்தா
னுளங்கொள்புக ழுற்கலன்மின் னுற்கலையை யீன்றான். (கக)

செப்புமரி தாசுவன்பெண் டிக்குவற்சை யீன்ற
னெப்புறுக யன்கயை யெனுங்கொடி யுயிர்த்தான்
றப்பில்புக ழுந்தவிளன் றம்பியரை யோதி
லிப்புவி துதிக்குமிக்கு வாகுமுதல் வேந்தர். (க௨)

சிறந்தபுவி மத்தியநற் றேயமுறை செய்தா
ரறந்தழைய வாழ்நருடி யந்தனெனு மன்னன்
மறந்தவிர் சகன்றனை வரத்தினி னளித்தா
னுறைந்தநர பாகனம்ப ரீடனை யுயிர்த்தான். (க௩)

நாடுதிட்ட னீடுரண திட்டன் சத்திரநாத
னேடுதிட்ட கேதுவிவர் மூவரை யுயிர்த்தான்
பாடுறுசை யாதியுயர் பண்புறு பாரித்த
னீடெழில்கொள் சுக்கிரபை நேரிழைபொ டீன்றான். (க௪)

வேறு.

ஆனித்த னென்போன் ரோச பானனை யளித்தா னன்னோன்
றானுற்ற தேயந் தானு மானித்த மெனப்பேர் சாருங்
கானுற்ற குசத்தலியென் றவன்பதி கருதுங் கல்வித்
தேனுற்ற ரோச மானன் சிறப்பொடு மிரேவற் பெற்றான். (க௫)

காவல்செய் ரேவன் றானும் ரைவதன் கருத்து மானன்
மேவிரு பெயரோ டுற்ற மைந்தனை விருப்பி னீன்று
தாவிறெண் ணூற்றேன் பானு மைந்தர்க டமையும் பெற்றுப்
பாவைரோ வதியென் றோது மாதையும் பயந்தா னன்றே. (க௬)

பிறங்குரே வசியே மிக்க பெலராமன் றன்னைச் சேர்ந்தாண்
மறங்கெழு கருச னுக்குக் காருசரென்னு மைந்தர்
சிறந்தன ரலகிலாதார் சீர்த்திசேர் பிருகுக் கோக்கொண்
றறங்கெழு குருசா பத்தாற் சூத்திர ராயி னாரால். (க௭)

மன்னிய விக்கு வாகு மரபினை முறைவ ழாமற்
பன்னுவன் முனிவிர் நீவிர் பரிவொடு மினிது கேண்மி
னன்னவன் மைந்த ராஞேர் நூற்றுவ ரவரின் மூத்தோ
னென்னுமோர் விகுட்சி யைம்மூன் ருகிய மகவை யீன்ருன். (க௮)

அப்பதி னவர் மேரு வுக்குத்தக் கரச ராஞர்
துப்புறு விகுட்சி பின்னுந் துலங்குநூற் றீரே ழாகத்
தப்பில்சீர் மகவைப் பெற்ருன் றக்கணத் தரசர் முன்ஞேன்
செப்புகா குத்த னென்போன் றிகழ்சுயோ தனனை யீன்ருன். (க௯)

அன்னவன் பிருது வீன்ரு னவன்மகன் விசுவ சாகன்
றன்னிகர் விசுவ சாகன் றழைக்குமாத் திரவற் பெற்ருன்
மன்னிய வன்ஞே னேயு வஞசுவன் றன்னை யீன்ருன்
பின்னவ ன்பெற்ரு ன்கீர்த்தி பெற்றசா வத்தி வேந்தை. (௨0)

சாவத்தி கவுட தேயந் தன்னிற்றன் பேர்பெற் ரேங்க
மேவுற்ற நகரஞ் செய்தோ ரிளகஞம் வேந்தைப் பெற்ருன்
பூவுற்ற வவனை வத்தாச் சுவனென்றும் புகல லாகும்
பேவற்ற வன்ஞேன் மைந்தன் பிரகதச் சுவனென் பாரால். (௨க)

பிரகதச் சுவனென் பான்கு சலாச்சுவன் றன்னைப் பெற்ரு
னரியதுந் துவினை வீட்டி யவன்றுந்து மார ஞகித்
திரமிகு தெண்டன் சீர்த்தி ரடாச்சுவன் சிறப்பின்மிக்க
வரகபி லாச்சு வன்கூர் மைந்தர்மூ வரையும் பெற்ருன். (௨௨)

மழையெனப் பொழியுஞ் செந்தேன் மாலிகை தரித்த திண்டோ
டழைதிர டாச்சு வன்சீர் தருபிர மாதற் பெற்ருன்
விழைபிர மாத னென்பான் விறலரி யசுவற் பெற்ருன்
குழைவொடு நிகும்பன் றன்னை யன்னவன் குலவப் பெற்ருன். (௨௩)

சாற்றிய நிகும்பன் மைந்தன் சங்கிதாச் சுவனே யன்ஞேன்
போற்றக்கிரத் தாச்சு வன்பார் புகழரு ணச்சு வன்சீ
ரேற்றிய விருவர்ப் பெற்ரு னெழிலரு ணச்சு வன்ரு
ஞற்றருந் தவத்தி ஞலு வஞச்சுவன் றன்னைப் பெற்ருன். (௨௪)

அவனுயர் மாந்தா தாவை யரிதினிற் பயந்தா னன்ஞேன்
றவமுசு குந்தன் சீர்த்தி தருபுரு குச்ச ஞேடு
பவமறு தரும கேது வென்னுமூ வரைப்ப யந்தான்
சிவமிகு புருகுச் சன்சீர்த் திரசதன் றன்னை யீன்ருன். (௨௫)

தரையினிற் றிரச தன்சம் பூதியைத் தந்தா னன்ஞ
ஞுரைசெயுந் திரிதன் மாவை யுயிர்த்தனன் றவத்தின் கீர்த்தி
நிரைபெறு திரிதன் மாத்திரா யாருணன் றன்னை நேர்ந்தான்
புரையக லவனுஞ் சத்ய விரதனைப் பொற்பி னீன்ருன். (௨௬)

சத்திய விரதன் மைந்தன் சத்தியா தனனன் ஞன்சே
யுத்தம வரிச்சந் திரன்மற் றவனுரோ கிதனை யீன்றான்
வித்தக ரோகி தன்றன் விருகனை விருப்பி னீன்று
னத்தகை விருகன் மைந்தன் வாகுவென் றறைவர் மாதோ. (உஎ)

வாகுநற் சகரற் பெற்றான் வருமவன் மனைவி யோராம்
போகமார் பிரபை பானு மதியுயர் தவங்க ளாற்றி
யாகுபா னுமதி யென்பா ளசமஞ்சி தனைப்ப யந்தாள்
சேகறு பிரபை யென்பாள் செல்வரா றயுதர்ப் பெற்றாள். (உஅ)

வேறு.

சகரன் புரவி மகமாற்றத் தாவு மசுவங் காணமை
யகிலங் கிளைக்கு மறுபதினா யிரவர் தம்மை யரிசபிக்கத்
துகள்கொண் டுடலம் படவீந்தார் சொல்லு மசமஞ் சிதன்மைந்தன்
புகழ்சே ரஞ்சு மானவன்சேய் போர்த்தி லீப னவன் புதல்வன். (உக)

வாகு வலையம் புனைதிண் டோண் மன்னன் பகீர தன்றவத்தாற்
பாகி ரதியென் றெல்லோரும் பரவக் கங்கை நதியை யொரு
நாகஞ் சுமந்த புவியிடத்து நண்ணப் புரிந்தா னவனளித்த
யோக நரபா லனுக்கம்ப ரீடன் மகவா யுதித்தனனால். (௩0)

தெருளு மம்ப ரீடன்மகன் சிந்துத் தீப னவன்மைந்தன்
மருவும் புகழ்சே ரயுதாயு வவன்சே யிருது வருணனென்போன்
கருது மவன்பாற் கன்மாட பாத னுதித்தா னவன்காளை
பரிவில் சறுவ கன்மனவ னனரண் ணியனைப் பயந்தனனால். (௩க)

அந்த வேந்த னனிக்கினனை யளித்தா னவன்சீ ரிரகுவுடனே
வந்த வன்மித் திரற்பயந்தா னவனத் திவன்மித் திரனென்போன்
சிந்தை களிகூர் தவத்தகன்றான் றிலீபன் றன்னை ரகுவீன்றான்
முந்து திலீப னசன்றன்னை முறைமை யாக வளித்தனனால். (௩உ)

அசனற் றீர்க்க வாகுவினை யளித்தா னவன்சே யசபாலன்
விசையம் பெற்ற வச்பாலன் மேவுந் தசர தனையீன்றான்
வசையிற் றசர தன்றனக்கு மைந்தர் நால்வர் தமிலுயர்ந்தோன்
றிசைகொள் கீர்த்தி யிராவணனைச் செற்ற விராம னென்றுரைப்பார். (௩௩)

உரைக்கு மிராமன் சரிதமெலா முலக மிராமா யணமென்னத்
தரைக்குள் வழங்க வான்மீகி வடசொற் றெரிந்து சாற்றினனு
னிரைக்குங் கீர்த்திச் சிலைராம னிகரில் குசனை யளித்தனனால்
விரித்த குசன்சேய் திதியவனி விளங்கு நிடதன் றனையீன்றான். (௩ச)

நிடத னளனை யுயிர்த்தனன்சீர் நிகரி னளன்சேய் நபனவன்சே
யிடர்தீர் புண்ட ரீகாட்ச னிவன்சே யேம தனுவென்பார்
படருங் கீர்த்தி புரியன்னன் றேவா னீகன் றனைப்பயந்தா
னடைவின் மனுவின் முறைதவறு தவனி முழுதுங் காத்தனனால். (௩ரு)

இப்பேர்ப் பெற்றேன் கினகுவை யீன்று னன்னுற் கெழின்மைந்தன்
றப்பா தறத்தின் வழிநின்ற சகச்சு வான்மற் றவன்புதல்வ
னெப்பா ரில்லா தருள்சந்தி ராவ வோவ னுவன்மைந்தன்
மைப்போ தனைய விழியார்வே டாரா பீடன் மற்றவன்சேய். (கக)

விளங்குஞ் சந்திர கிரியவன்சேய் விறல்கொள் பானு சித்திரன்சீர்
வளங்கொ ளவன்சேய் சுருதாயு வவன்பா ரதத்தின் மடிந்தொழிந்தான்
களங்க மறுகா சிபன்மரபில் வீர சேனன் கான்முளைவே
வுளங்கொ ணிடத னிவர்மிக்கோ ரிரவி மரபிற் பலருய்ந்தோர். (எக)

செய்ய கதிரோன் மரபுதித்துச் செம்பொன் மோலி புனைந்திந்த
வய்ய முழுதும் புரந்தவிக்கு வாகு முதலோர் மகிமையெலா
மய்யன் சூத முனியுரைப்ப வரிய தவத்து முனிவோரு
மெய்யுஞ் சிலிர்ப்ப விழிததும்ப நயந்து கேட்டு வியந்தார்கள். (கஅ)

பன்னிரண்டாவது

சூரியன் மரபுரைத்த வத்தியாய முற்றும்.

ஆகத் திருவிருத்தம் - சகரு.

பதின்மூன்றுவது

கவுரிநாம அட்டோத்தர

சதக வத்தியாயம்.

கதிதரு மதிமுகக் கவுரியட் டோத்தர
சதகநா மத்தினைச் சாற்ற வேண்டுமென்
றிதமுறு முனிவர ரினிது கேட்டலும்
விதமுறச் சூதமா முனிவி ளம்புமால். (க)

திரைக்கடன் மச்சமா யுதித்த செங்கண்மால்
வரைத்தடம் புயமனு மகிழ்ந்து கேட்பநன்
குரைத்ததும் பிதிர்க்களி னுயர்ந்த வம்மிச
நிரைத்ததண் கதிரவன் மரபு நீதிதான். (உ)

செய்திடு சிராத்தநற் றேவ வம்மிச
மையறு பவமெலாம் வழங்குங் கேட்டிடி
னையமி லாமனீ ரறியும் வண்ணமே
துய்யவிவ் வரன்முறை சொல்லு வாமரோ. (ங)

சொற்றிடு பிதிர்க்கண மேழிற் ரேன்றுரு
வற்றவர் மூவர்மெய் யவர்க ளல்வரே
பற்றுரு விதிவயி ராச பாலர்கள்
பொற்புறு சுரர்வயி ராச் பூச்சியர். (௪)

அன்னவ ரிவ்வுல கதனில் யோகத்திற்
பின்னம்வந் தெய்திடாப் பிரம லோகத்தின்
மன்னுவர் விதியுடன் மடிந்து பின்னரு
முன்னருஞ் சிருட்டியி னுற்ப வித்துமேல். (௫)

மருவிய சாத்திரம் யோகம் வல்லராய்த்
திருவளர் முத்தியைச் சேர்வ ராதலா
னொருமையி னெறிவழா துரைத்த யோகியர்க்
கிருமைசேர் சிராத்தநேர்ந் திடுதல் வேண்டுமால். (௬)

அனையவர் மனத்தினுண் டான மேலையோர்
பனிவரைக் கின்றனள் பயின்மை நாகனைத்
தனைநிக ரவன்கிர வுஞ்சற் றந்தன
னினையவன் பெயரினோர் தீவி லங்குமால். (௭)

பனிவரைக் குமையுநல் லேக பர்ணனையோ
வனைகுழற் பர்ணனையு மற்று மேனையீன்
தினமலர்க் கருங்குழ லுமையை யீசற்குந்
தனியெழிற் பர்ணனை யைச்சைகி டற்குமே, (௮)

ஏகபர்ன னையையெழிற் பிருகு வுக்குமே
மாகத ரிசைபயின் மணிப்பொற் சேகர
மேகவான் றொடு மிமவானு மேனையும்
பாகழற் சான்றதாய் பரிவி னீந்தனர். (௯)

என்றலு மிறையிடத் திறைவி மேனையோ
டொன்றிய பனிவரை யிடத்து தித்தவா
நன்றுற நவிலெனத் தக்கன் வேள்வியிற்
றுன்றுட லொரீஇவரைத் தோன்றி னளென்றான். (௧௦)

வேறு.

தக்கன்றன் குமாரி தாட்சா யணிதவ யோகத் தாலே
மிக்கமெய் தகித்த வாறும் வெற்பிடத் துதித்த வாறுஞ்
செக்கர்வான் சடில னேடுந் தேவியைத் தக்கன் பார்த்தன்
றெக்கநிந் தித்தவாறும் விரியென வுரைப்பதானான். (௧௧)

அருந்தவ முனிவர் கேண்மி னுற்றிய தவத்தாற் றக்கன்
பொருந்திய போது தேவி புரிசடை யண்ணல் வாரா
திருந்தவா றென்னை நீபோ யழைத்திடா திருந்த தென்னை
திருந்தநீ யுரைத்தி யென்னத் திகம்பரன் றிரிசூலத்தால். (௧௨)

உலகினி லுயிரை மாய்க்குந் தொழிலுள னுறும யானத்
தலகையோ டாடி யெங்கு மையமேற் றுண்பான் மிக்கா
யிலகுவா கனமொன் றின்றி யெருத்தின்மேற் றிரிவா னுகம்
பலபல வென்பு பூண்பன் பண்பின்யோக் கியமே யில்லான். (கங)

ஆகையா லியற்றும் வேள்விக் கரன்வர வாகா தென்னத்
தோகைமெய்ந் நடுங்கி நீசெய் யாகத்தைச் சூல பாணி
வேகமொ டழிக்க நீயு மேபிரா சேத சற்கு
வாகுறு புதல்வ னாகி மன்னுக வெனச்ச பித்தே (கச)

தானுயர் தவயோ கத்தாற் றழற்பிழம் புருவிற் றோன்ற
வானவ ரசுர ரோடு கின்னர ரியக்கர் மற்றோ
ரானவர் நடுக்க மெய்தத் தக்கனுங் கனுகித் தாழ்ந்தே
யூனமி லுலகை யீன்றோ யுஞற்றுமென் றவத்தா லுற்றாய். (கரு)

அன்னைநீ யுலகத் துள்ள வாருயிர்க் குயிராய் நின்று
யென்னைநீ யளித்தி யென்ன விறைவனை நிந்தை செய்தா
யுன்மக வல்லேன் யானிங் குரைத்திடு சாபந் தப்பா
மன்னுமன் றோத்தி ரத்தால் வருமறு சனனந் தன்னில். (கசு)

பிரமரோர் பதின்மர் கூறும் பேதமுற் றிடாம லொன்று
யுறைசெயும் பிரம னென்ன வுதிப்பநீ தவத்தின் மிக்காய்
பரவிய யோகத் தென்னைப் பணித்தியென் றுமையாள் கூறத்
தரையிலெத் தலத்தி லெந்த நாமத்தாற் றாழ்வ தென்றான். (கள)

என்றவ னியம்ப வம்மை யெழுவகை யுலகி னென்னை
யன்றியோ ரிடமு மில்லை யாருயிர்க் குயிரும் யானே
துன்றுநூற் றெட்டுத் தானந் துலங்குமென் பெயர்வெவ் வேறு
மொன்றுறு செல்வம் வேட்டோர் பணிவருள் ளுன்னு வாரால். (கஅ)

அவ்வகைத் தலங்க ணூற்றெட் டமைந்ததா னங்கள் யாவுஞ்
செவ்விதி னுரைப்ப லென்று தேவியங் கெடுத்துச் சொல்வா
ளெவ்வமொன் றிலாத வார ணசிவி சாலாட்சி யென்றும்
தவ்வலி னைமி சத்தி னிலிங்கதா ரணியே யென்றும். (கக)

அணிபெறு பிரயா கைக்கு ளமர்ந்திடும் லளிதை யென்றும்
பணிகந்த மாத னத்திற் பரவுகா மிகையே யென்றும்
பிணிதவிர் மான தத்திற் பிறங்கிய குமுதை யென்று
மணிதிகழ் விசுவே சத்தில் வழங்கிய விசுவை யென்றும். (உ௰)

பொன்னவிர் புட்க ரத்திற் புருகூதை கேதா ரத்திற்
றன்னிக ரில்லா மார்க்க தாயினி யிமைய வெற்பி
னுன்னரு நந்தை யூர்க்கோ கருணத்திற் பத்திர கன்னி
பன்னருந் தானே சத்திற் பதிவுறு பவானி யென்றும். (உக)

விரவுவில் வலத்த டத்தில் வில்வபத் திரிகை யென்றும்
வரமிகு பருப்ப தத்தில் வழங்குமா தவியே யென்று
முரைதரு பத்தி ரேசத் துயர்ந்தபத் திரையே யென்றுந்
தரைதனில் வராக வெற்பிற் றழைத்திடு சேயை யென்றும். (உஉ)

சீர்தரு கமலை தன்னிற் சிறந்தமெய்க் கமலை யென்றும்
பேருருத் திரகோ டிக்கட் பிறங்குருத் திராணி யென்றுஞ்
சார்முகின் மேவு காளாஞ் சனக்கிரிக் காளி யென்றுங்
கார்தரு சோலை மாலிங் கத்தினிற் கபிலை யென்றும். (உ௩)

மருவிய குக்கு டத்தில் வளர்மகு டேசை யென்றும்
பரவுசா ளக்கி ராமப் பதிமகா தேவி யென்றுந்
திரமிகு சிவலிங் கத்திற் றிகழ்சிவப் பிரியை யென்றுந்
புரிகளி லுயரு மாயா புரிதனிற் குமாரி யென்றும். (உச)

முந்திய லளிதை தன்னின் மூன்னுகூ நத்தை யென்றுஞ்
சந்தமார் சகத்தி ராட்சந் தன்னிலுற் பலாட்சி யென்று
மிந்துசே ரிரணி யாட்சத் தினின்மகோற் பலையே யென்று
நந்தலில் கயையி டத்தி னுமமங் கலையே யென்றும். (உரு)

நிறைபுரு டோத்த மத்தி னிகழ்ந்தசீர் விபுலை யென்று
மறைதரு விபாசை தன்னி னமர்மோக ரட்சி யென்று
நறைநிகழ் சுபாரி சத்தி னண்ணுநா ரணியே யென்று
மறைதிகழ் விகுடத் தோங்கு மத்திரசுந் தரியே யென்றும். (உசு)

புண்டர வளுத்த னத்திற் பொருந்துபா டலையே யென்றுந்
தண்டலை விபுலந் தன்னிற் றயங்கிய விபுலை யென்றும்
வண்டிமிர் மலையுந் தன்னின் மருவுகல் யாணி யென்றுந்
தெண்டிரைக் கோடி தீர்த்தந் திகழ்ந்தகோ டாட்சி யென்றும். (உஎ)

மருவுமா கதவ னத்தில் வளர்தரு சுகந்தை யென்றும்
பெருகிய கிருச்சி ராமப் பிரகத்திர சத்தி யென்றும்
சுருள்கங்காத் துவார மேவு சுகரதிப் பிரியை யென்று
மருள்சிவ குண்டந் தன்னி லமர்சுபா னிந்தை யென்றும். (உஅ)

தேவிகா தடத்தின் மேவித் திகழுநந் தினியா மென்று
மேவிய துவார கைக்கண் விளங்குருக் மணியே யென்று
மாவுற வருபி ருந்தா வனத்தினி லிராதை யென்றும்
பூவுயர் மதுரை தன்னிற் பொருந்துதே வகியே யென்றும். (உகு)

பதிதிகழ் பாதா ளத்திற் பயில்பர மேசை யென்று
மதிதவழ் சித்திர கூட மருவிய சீதை யென்றும்
விதிவிந்தை மேவும் விந்தி யாதிவா சினியா மென்று
நிதிதரு சையந் தன்னி னிகழ்சக்கிர வீரை யென்றும் (௩0)

வளரரிச் சந்தி ரத்தின் மருவுசந் திரிகை யென்றுங்
கிளர்மகா தீர்த்தந் தன்னிற் கேண்மைசேர் வருணை யென்று
மிளிர்புனல் யமுனை வாழு மிருகாவதி தேவி யென்றுந்
தெளிகர வீரஞ் சோமா லட்சுமி தேவி யென்றும். (௩க)

திகழ்விநா யகத்த லத்திற் சேர்ந்திடு முமையே யென்றும்
புகழ்வளை தயித்திய நாசத் தன்புறு மரோகை யென்று
மகிழ்வுறு மாகா ளத்தில் வளர்மகே சுவரியா மென்றும்
புகழுமட் சணபீ தத்திற் பொருந்திடு மமையை யென்றும். (௩உ)

அருமறை பயின்ற விந்தி யாகந்தாத் தமிர்தை யென்றும்
விரைபுனல் பெருகு மாண்ட வியத்தின்மாண் டவியே யென்றுஞ்
சுரர்தினம் பணியு மாயே சுவரிபாச் சுவாகை யென்றுந்
தருபிர சண்ட கத்திற் சார்பிர சண்டை யென்றும். (கங)

ஏர்மரு குண்ட லத்தி லிலங்குசண் டிகையே யென்றும்
வார்பெற மருவு சோமே சுரவரா ரோகை யென்றும்
பூரணப் பிரவா சத்திற் புட்கரா வதியே யென்றுந்
தேர்சர சுவதி தன்னிற் றேவமா தாவே யென்றும். (கச)

மணங்கமழ் பாரா வாரத் தடத்தினின் மதையே யென்று
மணங்குசேர் மகாளே யத்தி லமர்மகா பாகை யென்றும்
பிணங்குநீர்ப் பயோட்டி னிக்கட் பிங்கலே சுவரியே யென்று
மெனுங்கிரு தசவு சத்தி லெழில்கொள்சிங் கிகையே யென்றும். (கரு)

ஆழ்கடற் கார்த்தி கேயத் தமர்ந்தசங் கரியே யென்றுந்
தாழ்புன லூர்ப வாவிற் றத்துவ லோலை யென்றுஞ்
சூழ்சிந்து சங்க மத்திற் சொல்சுபத் திரையே யென்றும்
வாழ்வுற வீடு சித்த வனத்தினின் மாதா வென்றும். (கசு)

இரும்பர்தாச் சிரமத் தின்க ணிலட்சுமீ சுரகை யென்றும்
விரும்பிய சலந்த ரத்தில் விச்சுவ முகியே யென்று
மரும்பவிழ் கிட்கிந் தைக்க ணமர்ந்திடு தாரை யென்றும்
வரும்புனற் றேவ தாரு வனத்தினிற் புட்டி யென்றும். (கஎ)

மேவுகான் மீர மண்ட லத்தினின் மேதை யென்றுங்
காவிமாத் திரியி னுளுங் கருதிய வுமையே யென்றுந்
தாவரும் பெருமை வற்சே சத்தினிற் றுட்டி யென்றுந்
தூவிசேர் கபால மோச னத்தினிற் சுத்தி யென்றும். (கஅ)

வயங்கொளி சேர்ந்த காயா ரோகண மாதா வென்றுந்
தயங்கிசை விளங்குஞ் சங்கோத் தாரத்திற் றெனியே யென்று
மயன்பணிந் தேத்தும் புண்ட ரகத்தினிற் றிருதி யென்றுங்
கயங்கெழு முயர்ந்த சந்தி பாகையிற் கபிலை யென்றும். (கக)

திருவளர் மற்சி யாடச் சித்தசா ரணியே யென்று
மருமறை வயிணை தன்னி லமர்ந்திடு மமுர்தை யென்று
மருவளர் வதரி தன்னில் வரமுறு வசியே யென்று
முரிமையுத் தரகு ருக்க ணுற்றவொண் சதியே யென்றும். (ச0)

வளங்கெழு குசத்தீ வத்தில் வளர்குசோ தகையே யென்றும்
விளங்கிய வேம கூட மேவுமன் மதையே யென்றுந்
தளம்பெறு குமுதந் தன்னிற் சத்யவா தினியே யென்றுந்
துளங்கலி லரிச்சந் திரத்திற் றேற்றுவந் தனியே யென்றும். (சக)

ஆர்வயிச் சிரவ ணால யத்தினில் விதியே யென்று
மேர்வேத வதனந் தன்னி லியல்காயத் திரியே யென்று
மோர்சிவ சந்நி திக்க ணுற்றபார்ப் பதியே யென்றுஞ்
சார்புறு தேவ லோகந் தன்னிலிந் திராணி யென்றும். (சஉ)

சதுமுகன் முகங்க டோறுந் தழைசர சுவதி யென்றுங்
கதிரொளி மண்டி லத்திற் கருதரு பிரபை யென்றும்
வதியுமா தாக்க ளுக்குள் வளர்வயி ணவியே யென்று
மதிகமாங் கற்பு ளோரி லமரருந் ததியே யென்றும். (௪௩)

கிரவுஞ்சக் கிரித்த லத்திற் கிளர்ந்தகா ளிகையே யென்று
மரவிந்தச் சோம தீர்த்தத் தமர்வரப் பிரதை யென்று
முரமிகு கைலா யத்தி லுறைமந்திர ரூபை யென்றுந்
திரைமிகு பாற்க டற்பாற் சிறந்தலட் சுமியே யென்றும். (௪௪)

தரையினிற் சிறந்த புண்ணியத் தலமிளா விரதந் தன்னில்
விரைமலர்க் கூந்தற் செவ்வாய் மின்னிடை நயன வாரித்
திரைசெறி காம தாத்தி ரியையென்றுஞ் சேர்ந்த வண்கை
வரைசெறி சுவேத வெற்பிற் சுவேதமா லிகையே யென்றும். (௪௫)

சிறுத்தநுண் மருங்கு லார்க்குட் டிகழ்திலோத் தமையே யென்று
மறத்திற னீங்காச் சித்தத் தமர்ந்திடு பிரம மென்றும்
பிறர்க்கரு முயிர்க டோறும் பிறங்கிய சத்தி யென்று
பொறித்தநூற் றெட்டுப் பேருந் தலங்களும் புரிந்து சொன்னாள். (௪௬)

அவ்வகைத் தலநூற் றெட்டோ டுறைந்திடு நாமந் தன்னைச்
செவ்விதிற் பூசை செய்வோர் நினைப்பவர் தெரியச் சொல்வோர்
கவ்வையற் றிதனைக் கேட்போர் கருதுகா மியங்கள் பெற்று
மெவ்வமில் கயிலா யத்திற் கற்பமொன் றினிது வாழ்வார். (௪௭)

இத்தலத் தினிய தீர்த்த மியம்புவோர் தானஞ் செய்வோர்
பத்தியி னெம்மை யன்பாய்ப் பரவுவோர் பதிந்தெஞ் ஞான்று
துத்தியஞ் செய்தே வாசம் பண்ணுவோர் சுருதி வேதன்
மெய்த்தவ வுலகின் மேலாஞ் சிவலோக மேவு வாரால். (௪௮)

அட்டமித் திதியி னோடு திரிதிகை யவற்றி னோர்நூற்
றெட்டெனு நாமந் தானு மிசைந்தநற் றலத்தின் பேரு
மட்டவிழ் கடுக்கை மாலை மழுவலான் றிருமுன் னோதிற்
கட்டழ குறவே மிக்காங் காதலர்ப் பெறுவர் மாதோ. (௪௯)

அரியதென் புலத்தோர் தங்கட் கருங்கடன் கழிக்கும் போதுந்
தருமநன் னெறியி னூர்க்கே தானங்கள் புரியும் போதும்
புரிசடை விமல னாதி பூசனை புரியும் போதும்
பரவுதோத் திரங்கள் செய்வோர் பரனுருப் பெறுவ ரன்றே. (௫௦)

என்றுதன் சரித மெல்லாந் தக்கனுக் கியம்பித் தேவி
துன்றுமெய்த் தவயோ கத்திற் றோன்றிய வழலிற் போக்கி
யன்றிம வான்ற வத்தா லமர்ந்துபார்ப் பதியே யானாள்
வென்றிகொ ளரனைச் சேர்ந்து பாதிமெய் மேவி வாழ்ந்தாள். (௫௧)

கறையறு மனத்தி லிட்ட காமியம் பொருந்த வேண்டின்
மருவிலிவ் வத்தியாய மகிமையை நினைக்க வெய்தும்
பொறையொடு மிதனை யேத்திப் புரூரவா வுலகம் பெற்று
நிறைபுகழ் யயாதி யென்பா னிகரிலாம் மகவைப் பெற்றான். (௫௨)

அறைதரு பார்க்க வன்பொன் னளப்பில வடைந்தா னூரு
நிறைசுர ரசுரர் பின்பு நிகழ்ந்தநால் வருணத் தோர்கண்
முறைபெற வோதி யுள்ள முன்னுகா மியங்கள் பெற்றுக்
குறைவிலாப் பதவி யெய்திக் குலவின ரளவி லாதோர். (௫௩)

இத்திறந் தேவி நாம மியம்பத்தி யாயந் தன்னைப்
புத்தகத் தெழுதி வைத்துப் பூசிக்குந் தலங்க டோறுஞ்
சத்தியம் வாய்மை தூய்மை தனமழை தவங்க ளோங்க
வைத்திடு மென்று சூதன் மாமுனி வரர்க்குச் சொன்னான். (௫௪)

பதின்மூன்றவது

கவுரிநாம அட்டோத்தரசதகவத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௪௯௩.

பதினான்காவது

சத்தியவதி சொரூபகதன வத்தியாயம்.

திகழ்மாதவர் சூதன்றனை நோக்கிப்பிதிர்த் தேவர்
மகிழ்மானதத் துதித்தாள்சத்திய வதியாயிழை மடந்தை
புகழ்மேவுசொ ரூபக்கத னத்தைப்புகல் கென்ன
வகழார்கட லுறுமாயவ னருள்செய்வகை யறைவான். (௧)

நிறைசேரம்ப தத்தேயக்கினி சுவரத்தர்க ளென்ன
வுறைவார்சில பிதிர்த்தேவர்க ளுயர்வேள்வியர் வாத
மறைதேர்மனத் தச்சோதைமென் மடுவப்பெயர் மருவும்
பிறைவாணுத லுடன்றோன்றிய பெயர்மேவுநன் மடுவில். (௨)

வருநல்லெழி லச்சோதைநற் றவமாயிர வருடம்
புரிகின்றிட மகிழ்ந்தேயவண் பிதிர்த்தேவர்கள் போந்தார்
விரிகற்பக நறுமாமலர் விரைசந்தமு மணிந்தே
யருமன்மத னனையாரவர் களின்மாவசு மீதில். (௩)

வேறு.

மாலுறு மனந்தான் சோர்ந்து வருந்துமச் சோதை தந்தை
மேலுள முறவாற் செய்த மெய்த்தவங் குன்றி மண்மேற்
சால்புறத் தளர்வி னோடு வீழ்ந்தன டன்மே லன்னோ
னாலுமன் பின்மை யாலே யமர்வசு வாயி னானல். (௪)

விளங்கமா வசுவின் கன்னி மேவுமச் சோதை யென்பா
டுளங்கமா வாசை யாகித் துலங்கினு ளுலக மெல்லாங்
களங்கமில் பிதிர்க்கட் கெல்லாங் கன்னிமெய்ப் பிரியத் தாலே
வளங்கொடன் றினச்சி ராத்தம் வழங்கிற்பே றருள்வ மன்னே. (ரு)

தான்புரி தவமுங் குன்றித் தலைவணக் குற்று நாணி
வான்புரி வரத்தாற் சாவித் திரிதனை மனத்தி னெண்ணுந்
தேன்பயில் கோதை வாட்டந் தெரிந்துயர் பிதிர்க்க டோன்றிக்
கூன்பிறை நுதலா யுள்ளங் கோடல்யாங் கூறக் கேட்டி. (சு)

யாவரே யெனினுந் தத்த மிருவினைப் பயன்வி டாது
தீவினை யொழித்து நீசெய் தத்துயர் வீடு சேர்வாய்
பூவினி னுலே ழென்னப் பொருந்திய சன்னந் தன்னின்
மேவுமூன் றும்யு கத்தில் விறல்வசுச் சுக்கி லத்தால். (எ)

எம்மிடத் தவமா னத்தா லிலங்குமீன் வயிற்றிற் றோன்றிச்
செம்மையின் வலையன் வீட்டிற் சேர்வைநீ யாங்க ணோர்நாள்
வெம்மையில் பராச ரப்பேர் வியன்முனி தன்னை மேவித்
தம்மையே நிகரும் வேத வியாசனைத் தவத்தி னீன்றே. (அ)

இருநிலந் தன்னின் மீட்டுங் கன்னியா யிலங்கு பூமிக்
குரியசந் தனுவின் றேவி சத்திய வதியா யுற்று
வெருவில்சித் திராங்க தன்சீர் விசித்திர வீரி யப்பே
ருருமக வுயிர்த்து மிக்க பிதிருலோ கத்த டைந்தே. (கூ)

அமர்புரட் டாசிக் கிட்டின பக்கத்தட் டகையென் றுகிக்
கமையுளோர் வணங்க மேவிச் சத்திய வதிப்பேர் காட்டித்
தமரவெண் டிரைய சோதை நதியெனத் தழைத்துச் சேடன்
சுமைபெறு முலகின் வாழ்வா யென்றிவை சொல்லிப் போனார். (கo)

நல்லவச் சோதை யென்பா ளுடுதென் புலத்தோர் முன்னஞ்
சொல்லரும் பயன்க டுய்த்துத் துலங்கிய மனத்தி னுனுஞ்
செல்லரு முலக மெய்திச் சிறந்தன ளென்று மிக்கா
மல்லொளி மச்ச ரூபி மனுவினுக் கியம்பி னுனல். (கக)

என்றிருந் தவத்துச் சூத னென்னுமா முனிவ னுனேன்
வன்றரு நைமி சத்தின் மறைமுறை நெறிவ ழாமற்
றுன்றருஞ் சிறப்பின் மிக்க தொன்மைசான் முனிவர்க் கெல்லா
மொன்றரு மகிழ்ச்சி பொங்க வுவகையோ டுரைத்தா னன்றே. (கஉ)

பதினன்காவது

சத்தியவதி சொரூபகதன வத்தியாய முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம். சஅக.

பதினைந்தாவது

பிதிர்வம்சானுவன்னன் அத்தியாம்.

விரிகட லுடுத்த பாரில் விதிமுறை செங்கோ லோச்சு
மொருமனு கேட்ப மிக்கா வுயர்பிதிர் வருண னத்தைத்
திருமறு மார்ப னுன செங்கண்மா லுரைத்த வண்ணந்
துரிசறுந் தவத்தின் மிக்க முனிவர்க்குச் சூதன் சொல்வான். (க)

உரைதரு சுவர்க்கந் தன்னி லொளிகொள்விப் பிரச மென்றே
நிரைதிகழ் சிவலோ கத்தி னிறைந்திடு பிதிர்க்க டம்பேர்
பருகிடத் தென்பர் பாந்தட் பஃறலை கிழித்த கூர்வாய்
விரிசிறைத் தோகை பூண்ட விமானங்கள் பலவு முண்டால். (உ)

சாலவே யருள்சங் கற்ப மருகியர் தாமங் குள்ளார்
வாலிய சிராத்தஞ் செய்தோர் மணிமயச் சால வாழ்வார்
மேலவ ரசுரர் நாகர் விளங்குகந் தருவர் கோல
நீலமெய் யரக்கர் காவித் தியாதரர் பணிவர் நித்தம். (௩)

புலத்தியர் புதல்வ ருண்டாங் கவர்மனப் புதல்வி மிக்காங்
குலத்தியல் புற்மோர் கன்னி பீவரி குரூர மான
சொலற்கருந் தவமே யாற்றச் சூரியன் வரங்கே ளென்ன
நிலத்துவந் திடநற் கேள்வ னருளென நிகழ்த்தி னுளால். (ச)

வேதநூல் வியாசர் மைந்தர் சுகர்நினை வேட்பார் நீயு
மாதர்நற் சீர்த்தி மாதை வழங்குவை யன்னு டானுந்
தீதில்பாஞ் சால தேயத் தனுகனைச் சிறக்கக் கூடி
யோதிய யோகம் வல்ல பிரமதத் தனையு யிர்ப்பாள். (ரு)

பின்னுநீ சுகரைக் கூடிச் சுப்பிரன் மான்பேர் பெற்ற
நன்னெறிக் கவுரன் கிட்டின னல்வரைப் பெறுவை யன்னே
ருன்னுபூச் சியர்க ளாகி யுயர்கதி யடைவர் யோகத்
தின்னுயிர்க் கொழுந னேடு மிருங்கதி யடைவா யென்றான். (சு)

வருமொரு வகைப்பி திர்க்கள் வசிட்டர்புத் திரர ரூப
ரூரியமா னதர்சொர்க் கத்தி னுயர்பதச் சுகாலி கள்கூர்
தெரிவுறு சிராத்தஞ் செய்வோர்ப் பழிச்சின ருடுவிற் சேர்வார்
பரவிய மறையோர் தெய்வ மானத்திற் பரிந்து வாழ்வார். (எ)

அப்பெரும் பிதிர்க்கண் மான தத்திலன் றுதித்த கன்னி
செப்பெனப் புடைத்து விம்மித் திரண்டிரண் டிளநீ ரென்ன
வொப்புறு புளகக் கொங்கை யொண்டொடி யுயர்கோ வென்பா
டுப்புடைச் சுவர்க்க மெய்திச் சுக்கிரன் மனைவி யானாள். (அ)

வருகதிர் மண்டி லத்தங் கிராமைந்தர் மரீசி கற்பர்
தெரிதரு பிதிர்க்கள் வாழ்வார் சிராத்தீர்த் தத்திற் கூர்ந்து
பரிவுசெய் வேந்தர் தாமப் பதந்தனை யடைவ ரன்றோ
ரிருமையுங் கொடுப்பார் தம்மை யிறைஞ்சிட வேண்டு மாதோ. (௯)

சொன்னவர் மான தத்திற் றோன்றிய வசோதை யென்பாண்
மன்னிய வஞ்சு வான்சீர் மனைவிபஞ் சதனென் றோது
மின்னவன் மருகி கீர்த்தி யெழிற்றிவீ டனுக்கு நற்றாய்
பன்னிய பகீர தற்குப் பாட்டியப் பாலுங் கேட்டி. (௧௦)

வேறு.

காமத்தொடு போகந்தரு காமப்பல னென்னுந்
தாமப்பத மதிலச்சுவ தாவாகிய பிதிர்க்க
ளாமப்புதல் வர்ப்பேறிலர் நற்காத்தம ருலகிற்
சேமப்புல கன்றன்பவுத் திரராசிப ரவரே. (௧௧)

வணிகக்குலத் தவர்யாவரும் பணிவார்வரன் முறையா
யணிபெற்றசி ராத்தந்தனைப் புரிவோரனை தந்தை
பணிவுற்றிடு முன்னோர்முதற் பதினாயிரஞ் சனனக்
கணிதத்திறந் தோர்தம்மையு மவனுற்றெதிர் காண்பார். (௧௨)

வருபெற்றியி னிவர்மானத மகள்பேர்புகல் விரசை
தரையிற்புகழ் நகுடன்றனக் குறுதாரம் யயாதி
பரிவுற்றிடு தாயன்னவ ளேகாட்டகை பதுமப்
பிரமற்கினி தெனுஞ்சத்திய லோகம்புகப் பெற்றாள். (௧௩)

ஓங்கும்விதி லோகந்தனி லுயர்மானதர் கன்னி
தாங்கும்பெயர் பெற்றேநிரு மதைநாமத்தண் ணதியாய்
வீங்குங்கொடு முடிமேருவின் மேவித்திகழ் தென்பா
லாங்கன்புறு முயிர்யாவுநற் புனிதம்பெற வருளும். (௧௪)

உனுமெய்த்தவ மிகவேபுரி யுயர்மானதர் கும்பான்
மனுமிக்கபல் லுயிர்யாவையும் வருமத்திற மதனாற்
றினமிக்க சிராத்தஞ்செய னன்றேயது செயுங்கா
லனலற்புத மதிகாலனுக் கழலாகுதி யுரித்தால். (௧௫)

மறையோர்வலக் கைநீரயச் செவிவாம்பரிச் செவிமா
லிறையோன்திரு முன்னிங்கிவை யியம்பித்தல மதனி
லுறைவாகுமக் கினியாதலி னுறவாகுதி செயலாம்
பொறையோகிக டமைப்பூசனை புரிதற்கிணை யிலதால். (௧௬)

சிருட்டித்திறஞ் செயுமாதியிற் பிதிர்த்தேவரா முன்னே
பொருட்டிட்டிசெய் தளிக்குந்திறம் புகழ்மாமறை புகலு
மருட்பெற்றசி ராத்தஞ்செய வுவப்போடமை யுறுவோர்க்
கிருட்டைத்தரும் வெள்ளிக்கல மியல்பாத்திர விதியே. (௧௭)

வருதென்றிறை யதன்கீழ்த்திசை வரம்பாகிய தானம்
புரிநூலினை யிடமாய்வலப் புயமாறுதல் புகழ்சே
ருரியோனிட முழங்காறனா யுரமேவலெள் ளுடனீர்
பரிவாகிய தருப்பைநெடும் பாடீனமென் மீனம். (கஅ)

வாழைக்கினி பலவின்கனி வளர்மாங்கனி காரை
வாழைத்தழை பூமுன்னைபி ரண்டைக்கொடி மாட்டம்
வாழைத்தடி கோதும்பைவெண் மயநெற்பொறி முசுட்டை
வாழைக்குலை யின்காய்மரு வளர்வுற்றிடு துளபம் (கக)

ஆவின்பய மதுரம்பெறு ரசவர்க்கமொ டடர்கான்
பாவின்புறு கடகங்கடம் பைச்செந்தசை நறவந்
தாவுஞ்சிறு சாமையவை தூய்நெற்குசை செந்நென்
மேவுஞ்சிறு பயறிக்குநெய் வெண்பூவிவை மிக்காம். (உ0)

சுனைகத்தரி பனைநற்கனி சொல்லுமரைக் கீரை
வனைவுற்றிடு பெரும்பூசணி வள்ளைத்தழை கொவ்வை
யெருமைத்ததி பாலானயி னிலைசர்க்கரை வள்ளி
கரிசுற்றமுக் காயமுருங் கைக்காய்சொன் முள் ளங்கி. (உக)

கடலைவர கவனைபெரும் பயறேடுறு காண
மடலார்கம லங்கூவிளை மத்தம்விள வெருக்கோ
டடர்தேற்றுறு பாரித்தழை யப்பாலுருட் கமர
னெடிதாமிருப் பைச்சாறுபிண் ணாக்கிங்கிவை நீக்கே. (உஉ)

சிராத்தம்பிதிர்க் கட்கேசெயிற் றிகழாயுண்மெய்ச் சுபஞ்சீ
ரராத்தங்கிய முடியோனரு ளமர்சந்ததி யெய்து
மிராப்பண்புறு கொடுந்தீவினை யிடர்நல் குரவொழிந்தே
வராச்செல்வரும் வரவாழ்குவர் மனத்தெண்ணமு முடியும். (உந)

உயர்தேவர்கள் கருமஞ்செயு முனமேபிதிர்க் கூட்டிச்
செயல்வேண்டிடுங் கொடும்பார்வரம் பிதிர்த்தேவர்க ளிவர்க்கே
வியனார்கதி ரிறையிக்கதை விரிப்போர்செவி மருப்போ
ரியலார்புவி புரப்பார்பின்னு மீசன்பதத் திருப்பார். (உச)

எனநான்மறை முறையாமக மினிதாய்மிகு முகமன்பல மொழியப்
முனிவோருள மகிழமிகு முகமன்பல மொழியப்
பணிமாமதி முடியோனடி பரவும்பணி யுடைய
தனிமாதவ முனிசூதனற் றயவோடுரை செய்தான். (உரு)

பதினைந்தாவது

பிதிர்வமிசானுவன்னன் வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், ருoகூ,

பதினாறாவது

அக்கினிமான் சிராத்த அத்தியாயம்.

திரையார்கடற் புவிமீதினி னுறுவிதச் சிராத்தம்
பெரிதாகிய காலம்பல பேதம்மதிற் புசிப்போர்
வரைவோர்த்தின மதிலேசெயும் வேளைவரு விதிசீ
ருரையார்பிதிர்க் கிதுபோயுறும் வகையாவையு முரைப்பாய் (௧)

எனவேமனு வினவத்திரு மறுமார்ப னியைந்தே
முனமோதிய படியேயுரை செய்வேனென மொழிவா
னனமாதிய புனல்பாறயி ரகழ்மூலமுக் கனியா
வனவாமிவை களிலேயுத வினகொண்டு மகிழ்ந்தே. (௨)

அடைவான சிராத்தஞ்செய லாகுமஃ தறையும்
படிநித்திய நைமித்தியம் பகர்காமிய மூன்றில்
வடியற்கிய மாவாகனம் வருதேவரு மின்றித்
திடமாய்த்தினந் தொறுஞ்செய்வது திகழ்நித்த சிராத்தம். (௩)

நிறையும்பரு வத்தேசெய நிகழ்பாரண மதுதா
னுறுமூவகை யென்பாரதி திக்குண்ணும மையவர்தா
மறுவின்றியம் மறைமந்திர மொருமூன்றையும் வல்லோர்
குறைவின்றுயர் விரதன்குண மாறங்கமு முடையோன். (௪)

பஞ்சாக்கினி வேதத்துயர் பகர்சாகை யொன்றறிவோ
னஞ்சாதுயர் சருவிக்கின னமர்வேதவித் தனையா
னெஞ்சாதுபு ராணந்தெரி வோன்யாக மிழைப்போன்
றுஞ்சாதுயர் பஞ்சாக்கரஞ் செபிப்போன்மறை துதிப்போன். (௫)

வேறு

மிருதிசாத் திரங்க டேர்ந்து விதித்திட வல்லோ னீண்ட
மருதடர் மாயற் போற்ற வயங்குமெட் டக்க ரங்கர்
கருதுப தேசம் பெற்றுக் கறைமிடற் றெம்மா னாதி
யிருவினை கடியுந் தேவை யிகழ்ந்திடா தமைந்தே யுற்றோன். (௬)

சொல்லிய பிரமந் தேர்ந்தோன் குவித்துளான் சுடர்மா மேரு
வில்லிதாட் கடிமை பூண்டோன் பிதிர்பத்தி மிகவே யுள்ளோ
னல்லொளி யவ்வ னத்திந் திரியநிக் கிரகஞ் செய்ய
வல்லவ னிவர்கண் மிக்காய் வரித்திடற் குரிய ராவர். (௭)

திதிசெய்வோன் மருகன் மாமன் செல்விதன் புதல்வ ஞசான்
மதிதிகழ் புலவன் சுற்ற மறைமுனி யுபதே சித்தோன்
விதியினி லிவர்கண் மிக்காம் விளங்குசாத் திரங்கள் வல்லோன்
கதிதரு சாம வேதி கலங்கலி றருமி நன்ரும். (அ)

அறிவிலான் பதிதன் மூடன் பொய்மொழி யறைவோன் மைந்தன்
மறையின்மந் திரத்தை யோதி வழிமுறை நில்லா னங்கங்
குறையுளா னலிமா ரோகி கூறுதன் மனைவி யில்லான்
பொறையிலி பிரம சாரி யிவர்களைப் போற்ற லாகா. (௯)

வேதத்தின் வழிமிக் காரை மேன்மையாய் நென்ன லன்ஞு
ளாதன்முன் வரிக்க வாயு வாய்ப்பிதி ரவர்பாற் சேர்வர்
மூதறி வுடனே போற்றி யவர்கடம் முழங்கை பற்றித்
தீதில்யான் செயுஞ்சி ராத்தங் கொண்டருள் சிறப்பா யென்றே. (௧0)

கோபமா சூச மின்றிக் கோதிலாச் சுசிய தாகித்
தாபமி னியமத் தோடும் பிரமச ரியத்தை நண்ணி
மாபரத் துலக நல்கி வாழ்விக்க வேண்டும் யானும்
பாபமுற் றிடாம லிந்த விரதத்தின் பான்மை நிற்பேன். (௧௧)

என்றுரை நன்மை யாலே யியல்புற வரிதே யற்றைத்
துன்றுகா லத்த ழைத்துச் சுருளொடும் பாகு நல்கி
நன்றிகொ டயில மாட்டி நயந்தவர் பதம்வி ளக்கி
யொன்றுமா சனத்தில் வைத்தே யுவப்பினுற் செய்ய வேண்டும். (௧௨)

செய்வதற் குரிய பூமி தென்றிசை தணிய வேண்டுந்
துய்யநீர்த் துறைநற் கோட்டந் துன்னுமில் சுத்த மாக
மையற்று கோம யத்தான் மெழுகியே சிராத்தம் வாய்ப்பப்
பையவப் பெரியோர் தம்மை யனுமதி பண்ணி யப்பால். (௧௩)

சங்கற்பஞ் செய்து பச்சைத் தண்டுலஞ் சருவுக் கேந்திச்
செங்கையிற் குழிந்து முன்கை நீளமாய்த் தெருவி மூன்று
மங்கைநால் விரல்வி சால மகன்முகம் விரிய வெள்ளிப்
புங்கமாய்க் கட்டிக் கஞ்ச பாத்திரம் பொருந்த வைத்தே (௧௪)

மண்கலஞ் சமிதை தர்ப்பை வத்திரஞ் சந்த மாலை
யெண்கலத் தெண்குணய்யு மிவையழ லுக்குத் தெற்காய்ப்
பண்புடன் றருப்பை மீது பையவே வைத்தின் முன்னர்த்
தண்பெறு கோம யத்தாற் சதுரமாய் வட்ட மாக. (௧ரு)

பாதங்கள் விளக்குந் தானம் பண்புடன் மெழுகிச் சந்த
மேதங்கை கொடுத்து மென்பூ வக்கதை யருச்சித் திங்குப்
போதங்கண் மிக்கோர் பாதம் விளக்கியே பூசித் திப்பா
னிதங்கொ டருப்பை சேர்ந்த வாசனத் திருத்தி நின்றே (௧௬)

இயம்பிய விசுவ தேவர்க் கிருவர்மற் றொருவர்க் கேனு
நயங்கொடா சமன மீந்து கரத்தினக் கதையை நன்காய்
வியன்கொளா வாக னஞ்செய் தருக்கியம் விளங்க நல்கிப்
பயன்பெறு கருமங் கையாற் செவ்வையிற் பரிவாய்ச் செய்தே. (௧௭)

ஓதிய பிதிர்க்கண் மூவ ரிருவர்மற் றொருவர்க் கேனுந்
தீதிலா சமன நல்கித் திலத்திலா வாக னஞ்செய்
தேதமி லருக்கி யங்கைக் கீந்துசெய் கருமம் யாவு
மூதறி வுடனே யங்கை மறித்துநேர் முடித்த பின்னர் (௧௮)

வத்திர முந்நூல் சந்த மயிரணி தூப தீபம்
பத்தியி னல்கி யோமம் பண்ணுதல் கருதி யாக
நித்தியஞ் செய்வோன் றக்க ணுக்கினி நேர்கூ றிட்டே
யுத்தமச் சருவை மட்டவ் வுயருமக் கினியி ணுதல். (௧௯)

பிறித்தபா தியினி லாதல் பெருமதி யியம னங்கி
குறித்தழற் கருமஞ் செய்து குறைச்சரு வறுகூ றாக்கி
மறுத்தழ லதற்குத் தெற்காய்த் தென்வட வரைமூன் றிட்டுப்
பொறித்ததிற் றருப்பை வைத்துப் புனிதநீர் மறித்து விட்டே. (௨௦)

மேலுறு தெறுவி மூன்று பாத்திரம் விளங்க வைத்துச்
சாலநீர் மறித்து விட்டுக் கோத்திர நாமஞ் சாற்றிச்
சீலமுப் பாத்தி ரத்திற் பிண்டங்கண் மூன்றுஞ் சேர்த்தி
வாலிதாய்த் தருப்பை மீதின் மலர்க்கரந் துடைத்தே யப்பால். (௨௧)

எள்ளுநீர் மறித்து விட்டு மையெண்ணெ யிழைநூல் வேய்ந்து
கள்ளவிழ் மலருஞ் சாந்துஞ் சாத்திக்கை முகிழ்த்துத் தாழ்ந்து
தெள்ளிய பிதிர்க்கு வைத்த பிண்டத்தின் றென்பா லாக
வொள்ளியபிண்டமூன்றுமவர்பெண்டிர்க்குவப்பின்வைத்தே. (௨௨)

ஆறெனும் பிண்டந் தன்னி னடைவிற்சற் றெடுத்தே யாங்கட்
கூறிய பிதிர்த்தா னத்தன் குடங்கைப்புற் பவித்தி ரத்தைத்
தேறவைத் தெடுத்தே யந்தச் சேடத்திற் சிறிது வைத்து
வீறுடன் பூமி சுத்தி செய்திலை விரித்த பின்னர். (௨௩)

அங்கையில் வைத்த பிண்ட மிலையினி லமைக்கக் கூறிப்
பங்கமில் பண்ணி காரம் பாறயிர் பாய சந்நெய்
தங்குற வமைத்து முன்னே சாற்றிய சேட முன்னர்
நுங்குற வருத்திப் பின்னர் விருப்பினை நுகர்வி ரென்றே. (௨௪)

இங்கித வாய்மை கூறி முனிவின்றிப் பதரு தாட்டி
யங்குறு விகரம் பண்ணி யன்னநீர் கையி லேந்தித்
தங்குப சாரஞ் சொல்லிக் கைப்புன றரையில் விட்டே
பொங்கறு தொழிலோர் செங்கைப் புனிதமாய்ச் செய்த பின்னர். (௨௫)

அருக்கியப் புனல்கை விட்டே யரியதாம் பூலத் தோடும்
பெருக்குதக் கணைப்பொ னீந்து பிரியநல் வரங்கள் கேட்டுத்
தருக்குதென் புலத்தோர் முன்னர்ச் சார்ந்திட மனுப்பித் தேவர்
வருக்கமும் பின்னர்ச் செல்ல வனுப்பியே வழிபட் டேத்தி. (உ௬)

தானுறு மனையிற் போந்து சால்புறு பிண்டந் தன்னை
யானினுக் காதன் முன்றா லந்தணர்க் காதன் முல்லைக்
கானில்வெள் ளாட்டுக் காதல் கன்னெடும் புனலி லாதன்
மேன்மையி னளித்த லின்றேல் வேதியர் முன்னர்ச் சிந்தல். (உ௭)

நடுவிரு பண்ட மேதன் னுரியின் செங்கைக் கீந்தால்
விடலையின் பேறுண் டாகும் விளங்குவை சுவதே வந்தான்
சடுதியி னியற்றித் தக்க தமரொடும் புசித்தல் வேண்டுந்
தொடுமதி பன்னி ரண்டு மிச்செய றொலையா தென்னில். (உ௮)

இலங்குவை காசி மாசி யெதிர்புரட் டாசித் திங்க
ளலங்கொளு மமாவா சைக்க ணனிபெறச் செய்ய வேண்டும்
பலங்கொளச் செய்வோ னுண்டோன் மீட்டுணல் பருக லோதல்
கலங்களி லாறு சேற லிகல்கித்தல் சங்க மாகா. (உ௯)

தானமேற் பதுவு மாகா தான்கொடுப் பதுவு மாகா
வானதோர் பகலிற் கண்க டுஞ்சிட லாகா திவ்வா
றூனமில் சிரார்த்த மிக்கா மென்றுயர் மனுவுக் கன்று
சூன்மழை வண்ணன் சொற்ற முறைமையைச் சூதன் சொன்னான். (௩0)

பதினறவது
அக்கினிமான சிராத்தவிதி யத்தியாயம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௫௩௬.

பதினேழாவது

பொதுச்சிரார்த்தவிதி யத்தியாயம்

திதிமுறை பொதுச்சி ராத்தஞ் செங்கண்மான் மனுவுக் கோதும்
விதியினை முனிவோர் கேட்பச் சூதனே விளம்பு வான்செங்
கதிரைவெண் கதிரோன் வந்து கலக்குநாட் பன்னி ரண்டு
மதியின்மார் கழிதை மாசி பங்குனி மாத நான்கில். (௧)

கிட்டிண பக்கந் தன்னிற் கிளர்ந்தசத் தமியி னேடு
மட்டமி நவமி யென்னு மட்டகை பன்னி ரண்டு
பட்டவை திரியும் வீதி பாதமு மிருபத் தாறு
மொட்டிய சங்கி ராந்தி யுற்றநாட் பன்னி ரண்டும். (உ)

கார்த்திகைப் பூர்வ பக்க நவமி நாட் கன்னி மாதத்
தார்த்திடு மமர பக்கத் தமர்ந்திடு பதின்மூன் ருநாட்
சீர்த்தவை காசிப் பூர்வ திரிதிகை மாசி மாதங்
கூர்த்திடு மமாவா சைப்பேர் குலவுமிவ் வுகாதி நான்கும். (௩)

விலங்கிலா வணியிற் கிட்டிண வட்டமி மீன மாதத்
திலங்கமா வாசை தேளி னியன்றபூ ருவபக் கத்து
நலங்கொளும் பன்னி ரண்டா நாண்மேடங் கன்னி தன்னில்
வலங்கொளுந் திரிதிகை கூர்ம மகரத்திற் பதினென் ருநாள். (ச)

ஆடியிற் றசமி சீரத் துலாத்தினி னவமி யாடி
மேடமீன் மிதுனந் தேளின் மேவுபூ ரணைகும் பத்திற்
றேடுசத் தமியி னேடுஞ் சிறந்திடும் பதினுன் காகி
நீடுமன் வாதி யென்ன நிகழ்த்துமித் தினத்தி னேடும். (ரு)

கன்னியா மாதந் தன்னிற் கலந்திடு மமர பக்கத்
துன்னிய முதனு ளாதி யுரைத்திடு மமாவா சைப்பேர்
மன்னிய நாளீ ருன மாஙயம் பதினு ரேடும்
பன்னிய தொண்ணூற் ருறும் பகர்ந்திடு சிராத்த நாளாம். (சு)

உரைத்திடுந் திங்க டோறு மூரோகணி மகமோ டாதி
நிரைத்துறு மமர பக்கச் சதுர்த்தசி நிகழ்வை காசி
தெரித்தபூ ரணவெண் டிங்கள் செங்கதிர்க் கிரண மாங்கண்
விரித்தபுண் ணியதீர்த் தஞ்சீர் மிகுத்தநற் றலங்க டானும். (எ)

கன்னியின் மகநாட் கூடிக் கலந்திடு மமர பக்கத்
துன்னிய பதினுன் காநா ளுற்றவக் கேசச் சாயை
மன்னுமுற் சபங்கல் யாணம் வரன்முறை செய்யு முன்னுட்
பன்னுதென் புலத்தோர்க் கூட்டல் பலவின்காய் முதற்ப தார்த்தம். (அ)

சொல்லுநான் மறைகள் வல்ல தூய்மையோ னணுகும் போதும்
புல்லிய சிராத்தஞ் செய்யிற் புத்திரன் முத்தி யுண்டா
மல்லிய கிரக நந்தா வனநதிக் கரைகாத் திட்டு
நல்லவே காந்தத் தான நவையற மெழுகி நன்காய். (கூ)

பூவினின் முதனு ளாதல் பொருந்துமத் தினத்தி லாதன்
மேவுமுத் தமரைத் தேடி விருப்புடன் வரிக்க வேதான்
தேவருக் கிருவர் மிக்க பிதிர்கட்கு மூவர் செம்மை
யோவிலிவ் விருபான் மைக்கு மொவ்வொரு வருமா மன்றே. (க0)

தேவரை யமைபுட் பத்தா லருச்சித்தா சனத்திற் சேர்த்திச்
தாவரு தருப்பை மீதி லிரண்டுபாத் திரந்தான் வைத்து
நீவிய பவித்தி ரத்தை யதில்வைத்து நிறைய நீர்வார்த்
தோவறு கந்த புட்பத் தருச்சனை யுஞற்றி யன்னோர். (கக)

முன்வைத்தா வாக னந்தான் முறைமையாற் பண்ணித் தர்ப்பை
யின்வைத்தா தனந்தான் கந்த புட்பத்தி னினிதா யெத்தி
நன்மைத்தா கியவ ருக்கிய வகைநல்கி யருளைப் பெற்று
பின்வைத்த பிதிரை யாவா கனமுறை பிறங்கப் பண்ணி. (கஉ)

தருவிலை வெள்ளி சங்கந் தமணியந் தாம்பி ரந்தான்
மருவிய முத்துச் சிப்பி வழங்குமின் னவற்றின் மூன்றாய்ப்
பரிவுறு பாத்தி ரத்தி லருக்கியம் பாலித் தெள்ளுத்
தெரிமலர் சந்தாற் பூசை செய்துபின் னருக்கி யத்தை (கங)

பிதிர்கையிற் கொடுத்து வத்தி ராதியாற் பேணித் தேவர்
மதிபெறு மருக்கி யத்தின் மிகுந்தவை வருபி திர்க்கள்
விதியருக் கியத்தி னென்றாய் விட்டபாத் திரத்தை யப்பாற்
கதிதர வடக்கே வைத்துப் பிதிரனு மதிகைக் கொண்டே (கச)

அழலினை யமைத்தே யாங்க ணமர்பரித் திரண மாதி
விழைவொடு மிருபான் மைக்கும் விதித்திடும் விதியிற் செய்து
தழைதரு பிதிர்க்கட் கட்ட வன்னத்தின் சருமீட் டோமம்
பிழையறப் பண்ணிப் பின்னந் தணர்ப்புசிப் பித்தல் வேண்டும். (கரு)

பொன்வெள்ளிப் பாத்தி ரந்தான் தேவர்தென் புலத்தோர்க் காகு
மன்னவை யின்றே லப்பே ரறைகுக வான்கண் வெள்ளி
முன்னுதித் திடலா லோங்கும் பிதிர்க்குமுக் கியமாம் யாக
நன்மையாந் தேவ காரி யங்கட்கு நன்ற தன்றால். (கசு)

இருநிலந் தருப்பை யெண்ணீ ரிடஞ்சுற்றி யிலைநீர் வார்த்தே
விரவுசர்க் கரைபா லூய வெண்டயிர் பொருப்புச் சாகம்
பொருவிலாப் பண்ணி காரம் பொருந்திய சித்தி ரான்ன
மருவுமோ தகத்தி னோடு ரசாயன மிவைக்கோர் மாதம். (கஎ)

மச்சமா னுடும்பு பட்சி மருவில்வெள் ளாடு மிக்கா
மிச்சையி னுலோக மென்மா னிரலைபுள் ளியின்மா னேனங்
கொச்சையான் முயன்மோட் டாமை கூர்திங்க ளொன்றுக் கொன்று
மிச்சமித் தசைபி திர்க்குத் திருத்தியா முறையின் மிக்காம். (கஅ)

ஆவின்பாற் பாய சத்துக் காண்டொன்று திருத்தி யாகுந்
தாவிலா ருருமான் மிக்க தசைக்குமூ வைந்து திங்கள்
வாவுவாத் திரணை சத்துக் காறிரு வருட மாகு
மேவிலைக் கருவேம் புக்கு விருப்புறு மனந்த காலம். (கக)

அறைந்திடு கடக மான்மென் றசைக்குமே யனந்த கால
நிறைந்தநெய் பாலுந் தேனு நிரப்பிய பரமா னத்துக்
குறைந்திடு மறுந்த காலந் திருத்தியென் றுரைப்பர் மேலோர்
சிறந்திடு திதிகள்வேத புராணங்கேட் பித்தல் செய்கை. (உ0)

உச்சிட்ட மாற்று முன்னே யுற்றுமுன் மெழுகித் தெற்கே
வைச்சிட்ட நுனியார் தர்ப்பை மேலுற மறையோர்க் கிட்ட
மிச்சத்திற் பிண்டஞ் செய்து விளங்குகோத் திரநா மங்க
ளச்சிட்ட முறையே முன்னஞ் சொற்படி விளம்பி யப்பாற் (உக)

சொற்பிண்டப் பிரதா னந்தான் றுலங்கவே பண்ணி முன்ன
ரற்புத வருக்கி யங்கொண் டதையிடஞ் சுற்றி யப்பார்
பொற்புற வளைத்துப் பிண்டப் பிரதானம் புரிந்து போற்றி
நற்கரங் கழுவிச் சேட வருக்கியங் கையி னல்கி (உஉ)

தக்கணை யடைகா யோடு மியன்றவை தயவி னல்கி
மிக்கவர்க் கியகீர் கொண்டு விதிப்படி சிரார்த்த ததங்
தக்கதாம் பூல தானந் தகைபெறு பூரி தானந்
தொக்கவற் றியன்ற வெல்லாந் துகளறச் செய்ய வேண்டும். (உங)

திலத்தொடும் பொன்னீ ரோடு நாமகோத் திரங்கள் செப்பி
நலத்தொடு சிராத்தந் தன்னிற் கொடுப்பது நன்மை யாகுஞ்
சொலத்தகு கோதா னம்பூ தானநற் சொன்ன தானம்
விலைப்படு துகினெய் கட்டின் மெத்தையித் தான மிக்காம். (உச)

தனக்கினி தாம்ப தார்த்தந் தந்தைவேண் டியப தார்த்த
மனத்தொடு மறையோர் வேண்டு மரும்பதார்த் தங்கள் யாவுந்
திணைத்துணை யேனுந் தேடுந் திரவிய லோப மின்றி
மனத்தொடு பிதிர்ப்பி ரீதி யாகவே வழங்க வேண்டும். (உரு)

தேவர்தென் புலத்தோர்ப் போற்றி வேண்டிய செல்வம் பெற்றுப்
பாவகத் துடனே பின்ன ரேழடி பரிவிற் சென்று
மேவுற வனுப்பி யோமத் தழலினை வியந்தர்ச் சித்தே
யோர்வறு தேவ பூசை முதலிய வுஞற்ற வேண்டும். (உசு)

இவ்வகை முடித்த பின்ன ரதிதிதன் சுற்ற மில்லோன்
செவ்விய புதல்வ ரோடுந் திருந்தவே புசிக்க வேண்டும்
வெவ்விய படைகைக் கொண்டு வேந்தரை வணங்கி நின்று
கவ்வைகொண் மறையோ ஞஞ்சே வகனுமிக் கருமஞ் செய்க. (உஎ)

துலங்குமுச் சபமா னந்தஞ் சொற்றசற் காரி யங்க
ளிலங்கிய வதுவை யாற்றுந் தினங்களுக் கிசையு முன்னு
ணலங்கொளப் புரிசி ராத்தம் விருத்தியா நாந்தி யென்று
மங்கலில் பெயரா மன்ன தாற்றும்வா றியம்பு வேமால், (உஅ)

முன்னமே மாதிர் வர்க்க மொழிபிதிர் வர்க்கம் பின்ன
ரன்னைதன் பிதாவின் வர்க்க மதன் பின்னர் விசுவதேவ
ரின்னபன் னிருவ ருக்கு மிரட்டியாய்த் திறதுப் பூசை
மன்னிய பிதிர்க்கட் காற்றும் வகைப்படி செய்தி டாமால். (உகூ)

தேவருக் கியற்று மாபோற் றிலமின்றி யரிசி கொண்டே
தாவிலர்ச் சனைகள் செய்து தருப்பையிற் பிண்டம் வைத்து
மேவுகீழ்த் திசையை நோக்கி விதியிற்றர்ப் பணங்கள் செய்தே
யோவற வியற்றல் வேண்டும் வரங்கள்பெற் றுயர்வர் மாதோ. (௯௦)

இயன்றுநற் சிராத்தம் யாவு மிலங்குசூத் திரர்க டாமும்
வயங்குறு நாம கோத்திரம் வரன்முறை மரபி னோதி
வியங்கொளோ மத்தி னாலே வேதமந் திரங்க ளின்றி
நயங்கொள வியற்ற லாகு நமவெனு மந்தி ரத்தால். (௯௧)

இன்னணஞ் சிராத்தஞ் செய்வோர்க் கிருநிதி யாயுள் செல்வம்
பன்னுநற் கல்வி யாவும் பகர்பிதி ரளிப்ப ரென்றே
பொன்னுறு மார்ப னன்று மனுவுக்குப் புகன்ற வண்ணந்
தன்னிக ரிலாத சூதன் முனிவர்க்குச் சாற்றி னானால். (௯௨)

பதினேழாவது

பொதுச்சிராத்தவிதி அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். ௫௯௮.

பதினெட்டாவது

சபிண்டீ கரணசூதகா சூச அத்தியாயம்.

சூதகா சூசத் தோடு துலங்கிய வேகோ திட்ட
மாதவன் மச்ச மாகி மனுவினுக் குரைத்த வண்ண
நீதியா யுரைப்பா யென்று முனிவரர் நிகழ்த்தப் போத
மோதரும் பெருமைச் சூதன் விதிமுறை யுரைக்க லுற்றான். (௧)

சொல்லிய மறையோர்க் காகுஞ் சூதகம் பத்து நாள்வேல்
வில்லர சருக்கீ ராறு விதிவணி கருக்கோர் பக்க
நல்லுழ வருக்கோர் மாத நவைசெயா சூசந் தானுஞ்
சொல்லுமிவ் வண்ண மென்னத் தெளித்தனர் திறத்தின் மிக்கோர். (௨)

தந்தைதாய் ஞாதி வர்க்கத் தார்மரித் தார்க ளென்றே
முந்துமீ ரைந்து நாண்மேன் முத்திங்கட் குள்ளாய்க் கேட்கின்
வந்தவா சூச மூன்று நாண்மூன்று மாதத் தின்மே
னந்தினா ரென்று கேட்கி னாளொன்றே டாயா சூசம். (௩)

அறுதிங்கட் பின்னர்க் கேட்கி னுளொன்றே யாண்டொன் றின்மே
லுறுமொரு ஞாதி செத்தா னென்னினோர் நாளிற் பாதி
குறுகுமொன் பானுள் கேட்கிற் கூறுபத் தானு டீருஞ்
செறியொரு பதினுள் கேட்கிற் றீரும்பன் னிருநா ளோடும். (ச)

சூதகங் கழிந்த பின்னர்த் துஞ்சினு ரென்று கேட்டே
யோதுசஞ் சயனஞ் செய்யி னுரைத்தநா ளளவு முண்டாற்
றீதிலா மகவு தோன்றி யுடனிறந் திடிற்செவ் வாய்பற்
கோதற வருமுன் வீயிற் குளைபுனன் மூழ்கத் தீரும். (ரு)

மயிர்குறைத் திடுமுன் வீயி னோர்தின மயிர்கு றைத்தாற்
பயிலுமுத் தினமுந் நூலைப் பண்புறத் தரித்த பின்ன
ருயிருலந் திடின்முன் சொற்ற பத்துநா ளளவு முண்டாற்
செயிரறு குரவர் பொன்றி னுண்மூன்று செல்லிற் றீரும். (சு)

குருமணி மரிக்கினோர்நாண் மற்றவன் குமரன் வீயின்
மருவுமுத் தினந்தாய்த் தார மாண்டவொண் பதினுண் மற்றோர்
பொருவிரு யத்தார் பொன்றிற் போகுமே லொருநா ளோடு
மொருபதிற் கேட்கின் மேலீ ருறுதின மதனிற் றீரும். (எ)

மரணவா சூசத் துள்ளே மகவுயிர்த் திட்டா னென்னி
னுரைதரு மரணஞ் சூத கத்தொடு மொழியு மாமன்
புரையறு மாமி பொன்றின் மூன்றுநாள் புகலோ ரில்லிற்
றுரிதமோ டயலான் பொன்றிற் சூதக மூன்று நாளே. (அ)

மறைவல்லோன் பொன்றி னவ்வூர் மறையவர்க் கொருநா ளாகு
முறையும்வே தியருக் குற்ற சூதக முரைக்கி லன்னோர்க்
கிறையவர் வணிகர் பின்னோ ரெனுங்குல மாத ரீன்ற
சிறுவருக் கொருப தாகுந் திகழ்முடி யரசர்க் குற்ற. (கூ)

சூதக மன்னோ னீன்ற சுதரெனும் வணிகர் பின்னோர்க்
கோதிலீ ராறு நாளா முரைத்திடும் வணிகர்க் குற்ற
றீதிலா சூச மன்னோர் திகழுஞ்சூத் திரக்கு லத்து
மாதினை மணந்து பெற்ற வணிகர்க்கு நாண்மூ வைந்தே. (க0)

வேறு.

அந்தண ரரசர் வணிகர்தந் திடுமன் னவர்க்குச்சூ தகமொடா சூசம்
வந்திடின் மறையோர்க் கொருதின மரசர்க் கிருதினம் வணிகர்க்கு முந்நா
ணந்தவின் மறையோர் மன்னவர்க் குதித்துப் பின்னவர்ப் புணர்ந்துநன் மதலை
தந்திடும் வணிகர் தமக்குவந் திடுசூ தகமொடு மருவுமா சூசம். (கக)

மற்றவ ரீன்ற பின்னவர்க் கொருமூ வைந்துநாண் மன்னவர்க் கறுநா
ளுற்றிடு மறையோன் றனக்குமுத் தினமா மோதிய மறையவர்க் குதித்துப்
பொற்புறும் வணிக மடந்தையைக் கமலப் பூங்கொடி யனையபின் னவளைத்
தற்புபந் தெடுத்த வன்றனக் கொருநாள் சொல்லுசூ தகமொடா சூசம். (கஉ)

வேறு.

ஓதிய விவன்பி தாவா யுயருமா மறையோ னுக்குக்
கோதிலு ளிருமூன் ருகுங் குருதிவேன் மன்ன னீன்ற
வேதிலா வணிகர்க் கீரைந் தென்னுநா ளளவு முண்டாம்
பேதியா தரச னீன்ற பின்னவர்க் கிராறு நாளே. (கரு)

ஓதுவித் திடுவோர்க் கோர்நா ளுற்றிடு ஞாதி யல்லாற்
பேதமுற் றிடுவோ ரில்லிற் பிறங்குசூ தகநா டம்மிற்
கோதிலா னருந்தி லன்னோர்க் குற்றசூ தகந்தான் கொள்ளு
மேதிலான் மரிக்கி லன்னோற் கீமேத்துக் கடன்க ளாற்றி. (கச)

மரித்தவன் மனைக்க ணுண்ணில் வழங்குமா சூச மன்னோர்க்
குரித்தெனு மளவு முண்டு தன்மனைக் கண்ணுற் றுண்டாற்
பொருத்துமா சூச மூன்று நாளொடும் போகு ஞாதி
தெரித்தவேழ் தலைமு றைக்குச் சூதகா சூசஞ் சேரும். (கரு)

தலைமுறை யேழுக் கப்பாற் சாற்றிய பதினுண் மட்டு
மலைவில்சூ தகநாண் மூன்று மவரைச்சோ தகரா மென்பர்
நிலையிலா வனாத னுக்கு நிகழ்தழற் கரும மாற்றி
னுலைவினீ ராடத் தீரு மோதுமா தாவர்க் கத்தே. (கசு)

இறந்துளோர் தமக்கு மூன்று நாளென வியம்புங் கூலி
நிறைந்திட வாங்கித் தத்தங் குலத்தினி னிகழு மீமத்
துறைந்திடு கரும மாற்றி னுறுமவர்க் குளவா சூசஞ்
சிறந்தமேற் சாதிக் காற்றிற் செத்தவர்க் குளதுண் டாமால். (கஎ)

திருந்தவே கீழோர்க் காற்றி னவர்களா சூசஞ் சேரும்
பொருந்துமோர் மறையோன் பொன்றி னவன்பின்னர்ப் போனுர் மூழ்கி
யருந்தவ மறையோ ராகின் மூவர்நீ ராடத் தீரும்
வருந்திறன் மன்னர் பொன்றிற் பின்னர்ப்போ மறையோர்க் கோர்நாள். ()

வணிகர்சூத் திரர்கள் பொன்றிற் பின்செலு மறையோ ருக்குக்
கணிதரு மிரண்டு மூன்று நாளுறுங் காடாற் றுமுன்
னணிமுடி யரசர் நாய்க ரிவ்வயி னணுகி னோர்நாள்
பணியுறு பின்னோ னில்லிற் படரின்முத் தினமா சூசம். (கக)

ஈமத்தீ யாற்று முன்ன ரிறையவர் வணிக ரில்லி
னேமத்தீ மறையோர் சொல்லி னோர்பொழு தமையும் பின்னோர்
தாமத்தீ யாற்றும் பின்னர்ச் சார்ந்திடு மறையோர்க் கோர்நாள்
வேமத்தீ மறையோ ரிற்போம் வேந்தரா தியர்மூழ் கப்போம். (உ0)

இச்சையாச் சூத கத்தோ ரில்லிடத் துண்டா னுகி
னிச்சய மாகச் செத்தோன் சூதக நிகழு மில்லான்
றுச்சமென் றெண்ணு துண்ணிற் றுய்க்குநா ளளவு முண்டாய்
விச்சைகொள் சாந்தி செய்யின் மேவுமா சூசந் தீரும். (உக)

மகம்புரி மறையோர்க் கந்த வோமத்தீ மரிக்கி னூட்ட
நிகழ்ந்தநாண் முதலா சூச நின்றவர்க் கெந்தத் தீயும்
பகர்ந்தன ரன்னோர் செத்த நாண்முதற் படரா சூசம்
புகுந்திடு மென்றே யோர்நாள் மறைகளும் புகலு மாலோ. (உ௩)

மறையவர் வேட்க வந்த மன்னவர் வணிகர் பின்னோ
ரிறைவனைப் பயந்த மைந்த ரிடுதலா காது பிண்ட
மறையுமுத் தலைமு றைக்கு மணிமுடி சூட்டு மன்னர்
முறைமகம் புரிந்தோர் சீவன் முத்தர்நீர் மூழ்கத் தீரும். (உ௩)

வேள்விகல் யாண மிக்க திருவிழா விதியிற் செய்வோ
ராழ்தரு புனலின் மூழ்க வகலும்பஞ் சத்தின் மாய்ந்தோர்
சூழ்புனன் மூழ்கத் தீரு முறுமக் வின்றே லில்லா
டாழ்விலில் லின்றேல் வீந்தோன் றன்னொடும் பிறந்தோர் செய்க. (உச)

உடற்பிறப் பின்றேன் ஞாதி யுடுத்திடு மீரத் தோடே
கொடுத்திடப் பிண்ட நீர்தீ யிடிபடை குலவு பாந்த
ளடுத்திடு மரச ராலே யழிந்தவ ராவுக் காகத்
தொடுத்திடு மறையோர்க் காகத் துஞ்சினோர்க் கிலையா சூசம். (உ௫)

துறவிவா னப்பி ரத்தன் சொல்லிய பிரம சாரிக்
கறையுமா சூச மில்லை யறிவொடு நஞ்சு தின்றோன்
குறைவினீர் வீழ்ந்தோ னுன்று கொண்டுயிர் வீழ்ந்தோர்க் கெல்லா
முறையிற்றீக் கரும மாதிமுடித்திட லாகா தன்றே. (உசு)

மாய்ந்தநா ளுல்வர்க் கூட்ட மற்றைநாண் மயிர்க ளைந்தே
யேய்ந்திடு மிடுகா டாற்றி யியன்றவர்க் கன்ன மூட்ட
வாய்ந்தமூன் றைந்தே ழொன்பா னுகிய தினத்தின் முந்நூல்
வேய்ந்திடு மறையோ ரொற்றைப் படவரித் தூட்ட வேண்டும். (உஎ)

கருமத்துக் குரியோர் பிண்டங் கருதிய வுதக தானம்
பருவத்திற் செய்யி னன்னோர் வழிப்பசி தாக மாற்றுந்
தருமத்தின் புதல்வ ரில்லா டன்கிளை ஞாதி வர்க்கத்
துரிமைப்பேர் செய்வ ரொன்றே பார்த்தத ருறுவார் நித்தம். (உஅ)

இப்படி யியற்றி னோர்தங் குலமபி விருத்தி யெய்து
முப்புரி நூலோர் மன்னர் வணிகர்சூத் திரர்க்கு முன்னஞ்
செப்புநாள் பதினொன் றேடு திகழ்பதின் மூன்றீ ரெட்டுத்
தப்பிலா முப்பத் தொன்றாய்ச் சாற்றுமா சூசந் தீர்நாள். (உகூ)

அத்தொகை மறையோர்க் கன்ன மளித்தன்மூ வகைப்பேர் செய்கை
வைத்தவே ளாள ராமம் வழங்கலா மிரண்டா நாளி
னித்திறத் தேகோ திட்ட மியற்றிலா வாக னங்கூர்
முத்தியின் விசுவ தேவ வானந்தீ முறைமை மாற்றி. (௩௦)

ஒருபுல்லுப் பவித்தி ரத்தோ டருக்கியம் பிண்ட மொன்று
வருமுறை செய்தே யெண்ணீர் வழங்குக மாதந் தோறும்
பொருவின்மா சிகந்தப் பாது போற்றிய தினத்தோர் வேத
னருமனைக் கிழத்தி யோடு மலங்கரித் தியன்ற வெல்லாம். (௩௧)

கொடுத்துநற் கட்டின் மெத்தை குலவிய புருடா கார
மெடுத்தபொற் பதுமை யோடு மீந்துபின் னிடப மொன்றை
விடுத்திடச் சூலஞ் சாத்திக் கபிலையை விருப்பி னீக
வடுத்ததோ ராண்டு மட்டு நித்தமோ ரந்த ணற்கே (௩௨)

அனத்தொடு பன்னி கார மமைத்தவர்க் கன்பா யூட்டிப்
புனற்குட மொன்றி னோடு தக்கணை பொருந்த நல்கித்
தினப்புன லெள்ளோ டாற்றிச் செய்யுமோ ராண்டு சென்று
வினத்தொடு சேர்ச பிண்டீ கரணமங் கியற்ற வேண்டும். (௩௩)

அன்னது முடித்த பின்னர்ப் பிரேதனு யமைந்தோன் சொல்லற்
குன்னரும் பிதிர்க்க ளோடுங் கூடியே விருத்தி யோதி
மன்னிய சிராத்தந் துய்க்கப் பூசிக்கப் படுவன் வாகா
யின்னணந் தான்ச பிண்டீ கரணத்தை யியற்றும் போதில். (௩௪)

தேவரைப் பிதிரை முன்னஞ் சொற்றிறம் வரித்துச் செத்தோ
னுவரு மறையோன் றன்னை வரித்தருக் கியம்வி தித்த
தாவரு மூன்று மல்லாற் பிரேதற்குத் தனியொன் றேத்திப்
பூவுறு மன்னோ ரர்க்கியந் தனித்தனி பொருந்திப் போற்றி. (௩௫)

பிதிரனு மதியைப் பெற்றுப் பிரேதன்ற னருக்கியத்தை
மிதியொடு மூன்றிற் கூட்டி வருபிண்டப் பிரதா னந்தான்
கதிபெற நன்காய் வைத்துக் கலந்திட மூன்றோ டொன்றை
விதியருக் கியநீர் பிண்ட மேலிடம் வளைத்துக் கட்டி. (௩௬)

தக்கணை முதல வீந்து தான்செய்யிற் பிதிர்க்க ளோடு
மொக்கவுண் டிடப்பி ரேத னுறுவனக் கினிசு வாத்தா
மிக்குணு மமுத நாலா வான்றுய்த்து விளங்கு வான்மேற்
றெக்கதாய்ச் சேர்ச பிண்டீ கரணத்தின் பின்பு தோன்றி. (௩௭)

பிண்டமோ டுதக தானம் பிறங்கிடச் செய்யார் யாரும்
விண்டிடு பிண்டந் தன்னை விரவிய பிதிர்க்கே யீவ
ருண்டிட வுயர்ச பிண்டீ கரணமங் கொழிந்த பின்னர்க்
கொண்டிடு கிரண மாதப் பிறப்பமா வாசை கூறும். (௩௮)

பிதிர்த்தின மதனின் முன்சொல் பிரேதன்பே ருரைத்தி டாமன்
மதிபெறு பிதிர்மூ வர்க்கும் வழங்குக பிண்டந் தன்னைக்
கதிபெறச் செய்ச பிண்டீ கரணமுன் மாசி யங்கள்
விதிமுறை யேகோ திட்ட மொருவன்முன் வரிக்க வேண்டும். (௩௯)

மாசிய நிமித்தற் கல்லால் வருபிதிர்த் தேவர்க் கூட்டிற்
பேசிய தந்தை தாயைப் பின்னவர் மூத்தோர் தம்மை
யேசறக் கொன்ற தோடத் தெய்துவன் பிரேத னுக்குத்
தூசறுவருட மட்டுஞ் சொல்பசி தாகந் தீர. (சo)

பிண்டமோ டுதக தானம் பிழையறச் செய்யான் கோத்திரந்
தண்டலி லுசமெய்து மாதலாற் சார்பி ரேத
னண்டுஞா தியிலொ ருத்த ஞயினும் பிதிர்த்துவ மெய்தி
யுண்டிடும் பொருட்டுப் பிண்டம் புனலொடு முதவ வேண்டும். (சக)

இன்னண மறைகள் யாவு மியம்பிடும் யாவ னேனுந்
தன்னுளப் பகையெண் ணுது தன்குலத் துதித்து ளோர்க்கு
நன்னெறி யுதக பிண்ட நல்கிடி னசுவ மேதப்
பன்னரும் பலத்தைச் சேர்வ ரென்றனர் பண்பின் மிக்கோர். (சஉ)

ஆமத்திற் சிராத்தந் தானும் பிண்டமா மத்திற் செய்தே
யோமத்தீக் குறையா மத்தா னுஞற்றுக வுலகங் கூறுங்
காமுற்றுச் செய்ச பிண்டீ கரணத்தி னிமித்த பிண்டந்
தோமற்ற பிதிர்க்கள் பிண்ட மாமத்திற் றுலங்க வைத்தே. (சங)

வைத்திடு பிண்டங் கூட்டி மேற்சலம் வார்க்கும் போதி
லுத்தமத் தந்தை யாதி மூவர்க்கு முதகம் வார்க்க
வித்தக நாலா வானுக் கிடுபிண்டம் விதியே யில்லை
யித்தகை நாலா வான்ருெட் டியம்பிடு மூவர்க் கம்மா. (சச)

விருப்புறு பிண்டம் வைத்த கரத்தைமெய்ப் பிண்டத் தின்கீழ்த்
தருப்பையிற் றடவ வந்தத் தன்மையாற் றயவு கூர்வா
ருரைத்திடு மறுவர் பிண்ட முதவுவோ னெழுவர்க் கீண்டுப்
பெருக்கிசை தருச பிண்ட ரெனப்பெயர் பிறங்கு மன்றே. (சரு)

இன்னவை யுயர்ச பிண்டீ கரணத்தி னியற்கை தேர்ந்தே
பொன்னிற மிலங்கு மாயன் மச்சமாய்ப் புகன்ற வெல்லா
நன்னெறி மகங்க ளாற்றி நைமிசா ரணிய நண்ணுந்
தொன்மைசார் முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொன்னுன். (சசு)

பதினேட்டாவது

சபிண்டீகரண சூதகாசூச அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கூகச.

பத்தோன்பதாவது

சிராத்தானுகமன அத்தியாயம்.

அவ்விய கவ்வி யங்க ளளித்திடுமாறு சொற்றீர்
தவ்வலி லோமந் தானுஞ் சாற்றுநான் மறையோர்க் கீவு
மெவ்வகை பிதிர்க்கட் கெய்து மியம்புவீ ரென்று கேட்குஞ்
செவ்விய முனிவர்ப் பார்த்துத் தெரிந்துநற் சூதன் சொல்லும். (க)

பிதிர்வசுப் பிதாம கன்ருன் பிறங்குருத் திரரே மற்றைக்
கதிபிர பிதாம கார்நற் கதிர்செயா தித்த ராக
விதிதரும் வேதந் தத்தம் விளங்குகோத் திரநா மத்தால்
வதியுமவ் வியகவ் வியத்தை வளரழன் மறையோர்க் கீயின். (உ)

சொல்பிதிர்க் கதிப ரான வக்கினி சுவாத்த ராதி
பல்விதப் பிதிர்க்கட் கெல்லாம் பிரீதியாம் பலசன் மங்கண்
மல்கினும் பிதிர்க்க ளுண்ண மந்திரந் தானே யூட்டு
நல்வினைப் பயனுற் றேவ ராயிடி னமுதாய் நண்ணும். (ங)

செய்ததீ வினையாற் றேவர்க் கிடுக்கணே செய்து நித்தங்
கைதவ மாற்றிப் பொல்லாக் கருமமே யாற்றி நாளும்
பொய்தவி ராது செய்யு மசுரரேற் புசிக்க வன்னோர்க்
கெய்துமாற் போக மாகி யியற்றிய சிராத்தந் தானே. (ச)

நல்வினைப் பயனு லீசற் குவந்துநற் கவ்வி யம்பால்
வல்விதி னூட்ட நல்கும் வளம்பெறு தேனு வாகச்
சொல்லுநற் சனனத் துற்முற் றூயதோர் புசிப்புக் கான
புல்லும்வைக் கோலு மாகம் பொருந்துமாற் செய்சிராத்தம். (ரு)

ஏயுமோர் வினையாற் காள விடத்தொடு மியைந்து சீறிப்
பாயுமோர் பணத்தி னுற்ற பையர வாகத் தோன்றின்
வாயுவா கார மான விளக்கத்தா லரவ முண்ணப்
போயுறும் பத்தி யோடும் போற்றிய சிராத்தந் தானே. (சு)

முதுதவப் பெருமை யானு மொழிபிதிர் மாதா மற்ருேர்
நொதுமலர் புனைவி யக்கா ராயிடி னுேன்மை யோர்க்குக்
கதுமெனப் புசிக்க வெய்துங் களிப்புறு சுவையின் மிக்கா
மதுவெனப் பொருந்து நாளும் வழங்கிய சிராத்தந் தானே. (எ)

வசையுறு தீமை செய்தோன் மானிடர்க் கிடுக்கண் செய்யுந்
திசையுறு மரக்க னுகிச் செனித்திடிற் புசிக்க லான்று
மிசையுமா கார மாகி யியைந்துமே பொருந்து கின்ற,
தசையென வணுகு மிச்கோன் முன்புரி சிராத்தந் தானே. (அ)

ஆயையே யெனினும் பெற்ற வத்தனே யெனினு மற்ருேர்
தூயையே யெனினும் பொல்லாத் தொழிலுறு கருமத் தாலே
தீயைநேர் செய்ய குஞ்சி திகழ்தயித் தியராய்த் தோன்றின்
மாயையாய்ப் புசிக்க வெய்தும் வழங்கிய சிராத்தந் தானே. (கூ)

பொருதிரைக் கடல்சூழ் பூமி தனிற்புகல் பவங்க ளாற்றில்
வருதிரை நீர்ரா வுண்ண வரியதா வழங்கு பேயாய்க்
கருதிய வுருவிற் ருேன்றிக் கலங்கிடுங் காலே யுண்ணக்
குருதியாய் நணுகு நன்காய்க் கொடுத்திடு சிராத்தந் தானே. (கo)

ஈனமில் தந்தை மாத ரிருவர்தங் குலத்தி லுள்ளோ
ரூனமின் முன்னோர் பின்னோ ருவப்புறு முரிமை யோர்கண்
மானிட ராகத் தோன்றின் மற்றவர் புசிப்புக் கான
தானிய மாக வெய்துந் தயவுளோன் செய்சி ராத்தம். (கக)

எக்கரு மங்கள் செய்தோ ராயினு மிரண்டாஞ் சன்ம
மக்கரு மத்திற் றக்க தாகவே சனிப்ப ரன்னோ
ரொக்கவுண் டிடுமூ ணுக வொருங்குறப் பொருந்திச் சேருந்
தொக்கநன் மரபி லுள்ளோன் றூய்மையாய்ச் செய்சி ராத்தம். (கஉ)

ஆயிரங் கோடி கோக்க ளமர்ந்திடுங் கிடையிற் காப்போன்
மேயகன் றென்றை விட்டான் மேவுதன் றுயைத் தேடிப்
போய்முலை யுண்ணு மாபோற் புகன்றகோத் திரநா மத்தா
லோய்விலா வவ்விய கவ்ய முரியவாச் சேரு மாதோ. (கரு)

பலவிதஞ் சிராார்த்தஞ் செய்வோர்க் குறல்புட்பம் பலனி ரண்டா
நிலவுநல் வனிதை போக நெருங்கிய செல்வங் காந்தி
யலகிலாப் புசிப்புச் சத்தி யருள்பெறு தான சத்தி
குலவிய வழகா ரோக்கியம் புட்பத்தின் கூறென் றுமால். (கச)

பிரமத்தைத் தேர்தன் மக்கட் பேருயு டன்மம் வித்தை
யொருமைப்பே றின்பஞ் சொர்க்க முனைத்திடும் பரத்தின் கூறு
மிருமைப்பே றளிப்ப ரிவ்வா றிசைத்திடும் பிதிர்க ளாமே
தருமக்கோ சிகன்றன் மைந்தர்க் காற்றிய சிராத்தஞ் செய்தே. (கரு)

ஐந்துறு சனனந் தன்னில் வைகுந்த மடைந்தா ரென்றே
முந்திய மனுவின் முன்னர் முகுந்தனன் றுரைத்த வாறே
யிந்தியக் குறும்பு செற்ற வெழின்முனி வரர்க்குச் சூதன்
புந்திகூர்ந் துரைத்தா னன்னோர் வியந்துமெய் புளகித் தாரால். (கசு)

பத்தோன்பதாவது

சிராத்தானுகமன அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கூருo.

இருபதாவது

திதிமான்மியத்திலெறும்புச் செய்கை

அத்தியாயம்.

திரையெறி கடல்சூழ் வைப்பிற் சிறந்திடு சிராத்தஞ் செய்தே
புரையறு மோட்சத் தூற்று ரென்றுநீர் புகன்றீ ரீது
வரைவிலாச் சிறியேங் கேட்க வகுத்துரைத் திடுதியென்ன
வுரைபெறு முனிவர் சொல்லச் சூதனன் றுரைப்ப தானுன். (க)

சொல்குருக் கேத்தி ரத்திற் கவுசிகன் சுதாகன் ஞானம்
வல்லமெய்ச் சூயன் மிக்க குரோதனன் வாக்கு ருட்ட
னல்லவீஞ் சிறனே தப்பில் கவியொடு பிசின னுளும்
வெல்பிதிர் வர்த்தி யேழ்பேர் தம்பிதா வீய வன்னோர் (உ)

கற்கர்மா ணுக்க ராய காலத்துச் சாம மெய்தப்
பொற்புறு கன்று மேய்க்கப் புகன்றனர் கற்க ரன்னோர்
பற்பல புசித்து மாற்றுப் பசித்தழ லுதரம் பற்ற
நற்பசு வதனைக் கொன்று புசித்திட நாடு ஞான்று (ங)

பிதிர்வர்த்தி யென்போ னந்தப் பசுவினைப் பிதிர்க்கட் கூட்டிற்
கதிபெற்றுய்ந் திடலா மென்ன வெழுவருங் கருத்தொன் றாகி
யதிபுத னுச நாமப் பிதிர்வர்த்தி பாக மாக்க
விதிபற்றி யிருவர் தேவர் விளங்கிய பிதிர்க்கண் மூவர். (ச)

ஒருத்தனங் கதிதி மற்ற வொருத்தனே கர்த்தா வாக
வரத்தமா சிராத்தந் தன்னை மறைமுறை நெறிவ ழாது
வரித்தவர் தம்மைத் தானத் திருத்திமந் திரத்தி னேடுங்
கருத்துறப் பிதிர்கட் கீந்து கற்கர்முன் னெய்திச் சொல்வான். (ரு)

ஆவினைக் கொன்று தின்ற வடர்புலிக் கன்றீ தென்றூர்
தாவிய கொடரே கன்ம மென்பதைச் சற்றெண் ணூமே
தீவினை புரிந்து போற்றும் வைதிகச் சிராத்தஞ் செய்தக்
கோவினைப் புசித்தோ ராங்கண் சிலதினங் குலவி வீந்தார். (சு)

வீந்தவ ரறிவாய்த் தாச புரத்தினில் வேட ராகி
வாய்ந்திடப் பிறந்து ஞானப் பிதிர்ப்பத்தி பண்ணி வாணு
ளோய்ந்துகா ளாஞ்ச னத்தின் மிருகமா யுதித்து நீதி
யாய்ந்துபல் காலம் போக்கி யாயுளங் கழிந்த பின்னர் (எ)

மருப்பொலி தருவி னீழல் விண்ணவர் வந்து லாவுந்
திருப்பொலி கமலம் பூத்த மானச சரசிற் சன்ம
முருப்பொலி சக்கர வாக மாகவே யுதித்தார் நாமம்
விருப்புறு சுமனன் மிக்க குமுதனவ் வசுவே ஞாதா, (அ)

சித்திர தரிசி மிக்க சுதரிசி சீர்பெற் றேங்கு
மித்தகை யெழுவர் தம்மில் ஞானத்தி னிறுதி கண்டு
வித்தகம் பெற்றோர் நால்வர் விளங்கும்யோ கத்தை விட்டுப்
பித்தொடு தவறி னோர்கண் மூவராங் கெழுவர் தாமும் (கூ)

வளம்பெறு பாஞ்சா லத்தின் மன்னவ னவிப்பி ராசன்
தளம்பெறு சேனை மிக்க தனங்கனத் தனத்தா ரோடும்
விளங்கிய சோலை மேவி விலாசமா யுலாவும் போது
களங்கமில் சக்கர வாகம் பிதிர்வர்த்தி யவனைக் கண்டே (கo)

இப்படி யிருக்க வேண்டு மென்மனத் தாசை யுற்று
னெப்பின்மந் திரிபா லாக்கண் டியரிரு வர்கண்மா லுற்றார்
மெய்ப்பிதிர் வர்த்தி யந்த விப்பிரா சன்சே யாகித்
தப்பில்சீர்ப் பிரம தத்த னெனப்பெயர் தரித்திட் டானால். (கக)

மந்திரி யிடத்துக் கந்த ரீகன்சு கால வன்னென்
றிந்தநா மங்கள் பெற்றங் கிருவர்க ளுதித்தார் முன்னாள்
பிந்தலி னுணர்ச்சி ஞானப் பிதிர்வர்த்தி பிதிர்க்கண் மீது
சிந்தைவைத் தனுகூ லஞ்செய் சிராத்தத்தின் பலத்தி னாலே (கஉ)

பெருகிய வனங்கள் சேர்காம் பிலியநன் னகரந் தன்னின்
மருவிய சுடர்நி லாக்கான் மணிமுடி சூடி நீதித்
தருமசாத் திரமும் யோக சத்தியுஞ் சகலான் மாக்க
ளிருமனக் கருத்தை யோரு முணர்வொடு மிருக்கு ஞான்று (கங)

முன்னுறு கபிலை தானு முடித்துயர் பிதிர்க்கட் கூட்ட
மன்னிய வுபயோ கத்தாற் றேவசின் மடந்தை யாகி
நன்னலஞ் சிறக்க வேசன் னிதியெனு நாமம் பெற்றுத்
தன்னுளப் பிரமந் தன்னை யறியுஞா னத்த ளாகி (கச)

பிறங்குசன் னிதியா மாதை மணந்தணன் பிரம தத்த
னறங்கெடா தவளோ டாங்க ணரசுசெய் திருக்கு ஞான்று
நிறங்கிளர் சோலை வாயி னேசமா யுலாவும் போதி
லெறும்பிரண் டாணும் பெண்ணும் புலவியோ டியம்பக் கேட்டான். (கரு)

கண்டிடு மெறும்பிற் பெண்ணு மெறும்பினைக் கணவ னேக்கி
யொண்டொடி முகமுங் கண்ணுஞ் சகனமு மொசிநு சுப்பு
மண்டல முகத்தின் மந்த காசமு மண்ணிற் பெண்ணிற்
கொண்டிடு மழகி னின்போ லெவருளார் கூறுங் காலை. (கசு)

நீரிணு னுடும் போதி னீயுநீ ராடி யானு
ஞரினி தானு முண்டி யருந்துவை யகன்ற போதிற்
சோருவை யான்சி னத்திற் றுணுக்கெனத் துடிப்பை யென்க
ணுரியாய் வருங்கல் யாணி கோபந்தாழ் நயந்து நீயே. (கஎ)

என்றடி வீழ்த லோடுந் துனியொடு மெதிர்த்துச் சீறி
மன்றன்மோ தகப் ராகம் வாங்குவ ரடியிற் றுமென்
றன்றவ ளுரைக்க நீயென் றவடனக் கறியா தீந்தேன்
கன்றனீ தவறி யானோர் காலத்துங் கருதே னென்றே. (கஅ)

நல்விர தத்து மேவு நாரியே நினது தாளைப்
புல்லிய வென்மேற் கோபம் பொறுத்தரு ளென்ன வாதச்
சொல்வள முகமன் கூறிச் சொருபசிங் காரஞ் செய்த
வில்வளை மதன்போர் செய்ய மோகமேன் மேலுஞ் செய்தான். (கக)

காவுறு பிரம தத்தன் கரியமா லருளைச் சேர்ந்து
மேவிய பாடை யாவு முணர்ந்திடும் விரகி னாலே
தாவிலா வெறும்பு பேசுஞ் சரிதங்கண் டதிச யித்துப்
பூவினி னகைத்தா னென்று முனிவர்க்குப் புகன்றான் சூதன். (உ0)

இருபதாவது

திதி மான்மியத்தி லெறும்புச் செய்கை

அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். - கூ௫0

இருபத்தோன்றுவது

பிதிர்மகிமை அத்தியாயம்.

ஏதமில் பிரம தத்த னெறும்புரை யறிந்த தெவ்வா
றோதிய சக்கர வாக மற்றநான் குதித்த தெங்ஙன்
பேதமில் பிதிர்க்க டங்கண் மகிமையைப் பேசு கென்றே
போதமிக் குயர்ந்தார் கேட்பச் சூதனே புகல்கின் றானல் (க)

பூம்பொரி சிதறும் புன்னைப் பொதும்பரின் மஞ்ஞை யாலத்
தேம்பொதி நறவ மாந்திச் செவ்வழி யளிகள் பாடுங்
காம்பிலி யப்பேர்க் காட்டு நாட்டிலந் நால்வர் கல்வி
தாம்பயின் றுயர்ந்த நற்சு தரித்திர னனைய ராவார். (உ)

திருதிமான் வித்தியா சந்திரன் றத்துவன் றேரின் மிக்க
வுரைபெறு தபோச்சு கன்னென் றுரைத்தவிந் நால்வர் தாமும்
புரையின்முற் சனன மெண்ணித் தந்தையைப் போற்றி யாங்கள்
விரகுறு தவத்தின் செல்வம் விரும்பினோம் விடைநல் கென்றார். (௩)

என்றலுந் தந்தை மக்கண் முகத்தினை நோக்கி யெம்மை
யொன்றுறக் காத்தன் மிக்காந் தவமென வுருமன் ஞேர்க
டுன்றுமுற் சனனத் துற்ற தந்திரத் தொடர்ச்சி யாவு
நன்றிகூர் கிரந்த மொன்றை நவின்றுதந் தாதைக் கீந்தே. (௪)

இக்கவி தன்னை யிந்நாட் டரசன்முன் னியம்பு வீரே
லொக்கநல் குரவு தீர வுதவுவன் வேண்டுஞ் செல்வந்
தக்கது தவமே மிக்குத் தந்தைநீ யருள்வா யென்று
தொக்கவர் வணங்கிச் சென்று மானச சரசிற் சூழ்ந்தார். (௫)

சிறந்தது நிற்கப் பாஞ்சா லத்துவிப் பிராசன் சேயாய்
நிறந்தரு மனுகன் மிக்க மகப்பெற நெடுமாற் போற்றி
யறந்தரு தவத்தை யாற்றி யம்புவி யானை யாதி
குறும்பொறி யெறும்பீ ரேறுதுங் குரலறி குமரற் பெற்றான். (௬)

பெற்றவக் குமர னுமம் பெரும்புகழ்ப் பிரம தத்தன்
சுற்றுறு தரணி காக்கு மரசெனத் துலங்கு நாளி
லுற்றசன் னிதியென் றேது மனைவிதன் னுடன்கா வுற்றுச்
சிற்றெறும் பியம்பல் கேட்டுச் சிரித்தலு மயர்த்துத் தேவி (௭)

வறிதுநீ நகைத்த வாறின் வகையெனக் குரைத்தி யென்றாள்
செறிகழ லரசன் றானுஞ் சிற்றெறும் பியம்பல் கேட்டு
முறுவல்யான் செய்தே னென்ன ரூபக மொழிந்தி டாயே
லிறுதிதன் னுயிர்க்கின் றென்ன மயங்கியங் கேங்கிப் பின்னர் (௮)

எண்ணிய பிரம தத்தன் மாயனைப் போற்றி யேழ்நாட்
கண்ணுறும் போது காணுங் கனவினிற் கண்ண னுற்று
மண்ணுறழ் முழவுத் தோளாய் மயங்குறன் மறையோ னானை
யண்ணுவ னவன்சொற் கேட்கிற் றெளியுநின் னறிவி லென்றான். (௯)

ஆங்குறு தவத்தி னிட்டை யொழித்ததி காலத் தாலே
யோங்கமைச் சர்களில் லாள்சே யுடன்வெளி வந்து பார்க்கத்
தாங்குகை யேட்டிற் பாட்டுக் கொண்டுசு தரித்தி ரன்றான்
றேங்குமா தரத்தி னெய்தச் சென்றெதிர் வணங்கிச் சொல்வான். (௧௦)

என்றுயர் நீக்கு வாய்நீ யெனலும்வே தியனி சைப்பா
ஞென்றும்வே தியர்க ளாகி யுயர்குரு சாங்கா லத்தில்
வென்றிநல் வளஞ்சேர் தாச புரத்தினில் வேட ராய்ப்பி
னன்றறி மிருக மாய்மா னசத்தினி னேமிப் புள்ளாய். (௧௧)

இவ்வகை நான்கு சன்ம மெடுத்தபின் மனித ராஞேங்
கவ்வையின் மறந்தா யென்னுங் கவிதையெம் புதல்வ ரீந்தார்
தவ்வலி லறிவா யென்னத் தன்மனை யமைச்ச ரோடு
மவ்வகைச் சனனத் துற்றோர் தாங்களென் றறிந்து கொண்டே (௧௨)

மறையவன் றனக்கு வேண்டும் பொருளெலாம் வழங்கிப் பூமிக்
கிறையென விசுவ சேன னெனும்புதல் வனையி ருத்தித்
துறுமிரு வினைக டீர்த்துத் துறவியிற் சென்ற நால்வ
ருறையிடம் பிரம தத்த னுடன்செல வொருப்பட் டானால். (கரு)

இருவர்மந் திரிமா ருக்குட் சுகாலவ னென்னும் பேரோன்
மருவிய புகழ்ப்பாஞ் சால மந்திரி யென்று பேராய்த்
தருமசாத் திரங்கள் வல்லான் காமசாத் திரத்தைச் செய்தோன்
றிருவுறை கந்த ரீகன் வயித்திய நூலைச் செய்தோன். (கச)

இப்படிப் பெயர்பெற் றோங்கு மந்திரி யிருவ ரோடு
மெய்ப்புவி வேந்து மாது மானச சரசின் மேவி
யொப்பிலந் நால்வ ரோடங் குற்றபி னுலக நீதி
தப்பின னமைச்சி ராத்தங் காத்தது சாற்றற் பாற்றே. (கரு)

என்றுவேந் திசைத்த போதிற் சன்னிதி யினிது சொல்வாள்
வன்றிற லுரவோ யிந்த மகிமையை யறிய வந்த
தன்றுநீர் நகைத்த வண்ணந் தன்னையா னயந்து கேட்ட
நன்றியை யுணரீ ரென்ன நங்கையை வாழ்த்தி னானால். (கசு)

மாதுட னெண்மர் தாமு மானச சரசில் வைகி
யோதிய யோகந் தேரு முணர்வொடுந் தவங்க ளாற்றிப்
பேதியா மனத்தர் தங்கள் பிரமரந் தரத்தாற் சீவன்
சோதிபெற் றழிவின் மாயன் றுறக்கத்திற் றுன்னி னாரால். (கஎ)

இன்னணம் பிரம தத்தன் மகிமையை யாவ ரேனு
நன்னலம் பெறவே கற்போர் நவையறப் படிப்போர் வேள்வி
யுன்னுதொன் மறையோர் வாக்காற் கேட்பவ ருலப்பில் கோடி
மன்னிய கற்பம் வேத னுலகினில் வாழ்வ ரன்றே. (கஅ)

மனத்தினைப் பரத்தி னென்ற வைத்துமா தவங்கள் செய்விற்
பனத்துயர் முனிவர் கேட்பப் பருப்பத ராச னீன்ற
வனத்தினை யொருபால் வைத்த வமுதினை யகத்துட் கொண்டே
சினத்தினை யகற்றுஞ் சூத மாமுனி செப்பி னானால். (கக)

இருபத்தோன்றவது

பிதிர்மகிமை அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-ருருக.

இருபத்திரண்டாவது

தீர்த்த சிரார்த்தவிதி அத்தியாயம்.

சீர்பெறு சிராத்தஞ் செய்வோர் செப்புநன் முகூர்த்தந் தானு
மேர்பெறு சிராத்தஞ் செய்தற் கிசையுநற் றீர்த்தந் தானு
நீர்தெரிந் துரைப்பி ரென்று முனிவரர் நிகழ்த்த லோடு
மாரமு தென்னச் சூத மாமுனி யறைகு வானல். (க)

தருபகன் முச்சா மத்துச் சாரப ராண மீண்டு
மருவித்து ரோக ணப்பேர் முகூர்த்தத்தெவ் வளவீந் தாலும்
வருமுயர் பிதிர்க்கட் கொன்றட் சயமென மன்னு மன்னோர்
பெருகுமன் புற்ற தீர்த்த மகிமையைப் பேசு கேமால். (உ)

இவ்வுல கிற்பி திர்க்கட் கினியது கயையாந் தீர்த்தந்
தவ்வலில் புனித நல்குஞ் சானித்திய விதியங் காகுங்
கவ்விய மருந்து மிக்க பிதிர்க்கள்கா மியத்தை வேண்டிச்
செவ்விதாங் கோத்தி ரத்திற் புத்திரர் செனிக்க நேர்வார். (ங)

தங்கணன் மரபி னுற்ற தனையரி னொருவ ரேனும்
பங்கமில் கயையைச் சேர்ந்து பார்புகழ் சிராத்த மெட்கொண்
டங்கையிற் றருப்ப ணுதி யசுவமே தங்க ளாற்றி
மங்குநே ரிடபந் தன்னை விடுத்திடின் வாழ்வோ மென்பார் (ச)

அன்னநற் கயைநேர் வார ணசியிற் புத்தி முத்தி
மன்னவி முத்த கேத்திரம் பிதிர்க்கட்கு மகிழ்ச்சி நல்கு
மின்னவை தமக்கொப் பான வெழில்விம லேச தீர்த்தந்
துன்னிய பிரயா கைப்பேர் துலங்குமோர் சுத்த தீர்த்தம். (ரு)

விரும்புகா மியமு முத்தி வீட்டையுங் கொடுக்கு மந்தப்
பெருந்தலந் தான்பிர யாகை மாதவ னெனும்பேர்ப் பத்த
னரும்பணி கூர வாள்வா னுங்கரி துயில்வ னன்மை
பொருந்து பத் தசுவ மேத மென்றொரு புனித தீர்த்தம். (சு)

நந்தைமா லளிதை மாயா புரிமித்திர பதநற் கீர்த்தி
தந்தகே தாரங் கங்கா சாகர சங்க மந்தான்
முந்துநற் பிரம வோடை மொழிசத்த துருவர் மாற்றி
யந்தமாஞ் சலில தீர்த்த மமலமா நைமி சந்தான். (எ)

கோமதி கங்கை யொன்றுய்க் கூடல்காஞ் சனத்து வ்வார
மேமுறு கிருத மிக்கு மதிகங்கை யமுனு சங்க
நாமநீர்க் கங்கை சேருஞ் சரயுவா வதிநற் காளி
தாமுறு யமுனே தேவி கைசந்திர பாகை தானே. (அ)

தேர்ந்ததே னுமதி மிக்க திருடத்து வதிசிர் யவ்வை
வார்ந்தமா தோய நேத்திர வதிசம்பு நதியின் மன்னுஞ்
சார்ந்தசீர் நீல கண்டம் பத்திர சரசு நீடி
நேர்ந்தமா னசமச் சோதை நிகழ்மந்தா கினிவி பாசை. (கூ)

சரசுவதி பூர்வ மித்திர பதம்வயித் தியநா தந்தா
னுரைசிவை வேலிக் காளாஞ் சனத்தொடு வருசொற் பேதம்
பரவரோற் பேதங் கங்கோற் பேதம்பத் திரேசு ரங்கூர்
விரைநரு மதைத்து வாரம் விளங்கிய விண்டு பர்தம். (க0)

உன்னுமோங் காரம் பொன்னி யுயர்கபி லோத சங்கம்
பன்னிய சண்ட வேகை பகர்மரு கண்ட கஞ்சீர்
துன்னுநீர்ச் சக்கர தீர்த்தந் துலங்குசோ பேசு ரம்பார்
மன்னுகா யாவ ரோகஞ் சருமனு வதியொ டப்பால். (கக)

கோமதி வருணை யங்க வயிரவங் குலவு நன்னீர்
சேமமா மபிரு துங்கங் கவுரியைங் கரனுர் தீர்த்தங்
காமுறு சந்தி ரேசங் கலுழ்திரைப் பாவ நாசந்
தாமவேத் திரவதி மூலா பாலிநன் னதிக டாமே. (கஉ)

பஞ்சரை பிருது துந்தம் பாவக தீர்த்தம் பான்மை
விஞ்சுத சாரு ணைப்பேர் விளங்கிரா வதியாந் தீர்த்த
மெஞ்சலி லுருத்தி ராய தனஞ்சல கந்த மேத்து
மஞ்சலந் தாகி ரிப்பேர் மலந்தர நதிய யிந்திரம். (கங)

ஆனதோர் சர்ப்ப தீர்த்தத் திந்திர னிருதனுவி
யூனறக் கொன்ற தோடந் தீர்ந்ததென் றுரைப்பர் மேலோர்
தானிக ரில்லாச் சம்பு நதியினிற் சனங்கள் யாரும்
வானுறு துறக்கத் தேகும் வழியினைக் காண லாமால். (கச)

வந்தபா லாற்றிற் சங்க மஞ்சீர்மா போதி பாட
லைந்தலை நாக தீர்த்த மயிந்தினி நதிநீர்வேணு
வுந்துமா காள மாருத் திரோதக சலில நன்னீர்
பந்தமாந் தசார்ச்ச சைப்பேர் பகர்சத ருத்திரை தானே. (கரு)

மேன்மையாஞ் சதாரு வைப்பேர் விளங்கிய விண்டு பாதம்
பான்மையங் கார வாகி கைசோணந் தம்பன் னூரு
மான்மியச் சசுவங் காளி கைவாரா நதிநீர் மல்குந்
தூநறுஞ் சிரேணி பாதஞ் சொற்றுரா சரசு பின்னும். (கசு)

தழைத்தபா லாறு மிக்க தாரகை கிட்டிண தீர்த்தம்
வழுத்துமம் புதத்தி னேடுஞ் சரசுவதி மணிந திப்பேர்
சுழித்தெழு புனல ருமணிகன்னிகை தாத பாவை
விழுப்பமாந் தெற்கு வேலை மிக்ககோ கருணை தானே. (கஎ)

நற்கச கன்ன நன்னீர் நறும்புரு டோத்த மஞ்சீ
ருற்பன மேக லைக்க ஞுரியமே கோத கந்தான்
றற்பரன் மகிழு மண்டோ தரிபம்பை சக்ர கூடஞ்
சொற்றவை நல்குஞ் சொற்பே சுரமரிச் சுனங்க சேந்திரம். (கஅ)

திரிபுர தகனஞ் சித்தே சுரந்திருச் சயிலஞ் சாங்கிர
மரியதோர் நார சிங்க மங்குரே சுரங்கா வேரி
விரிதரு துங்க பத்திரை மேவும்வீ ருதரை வீமே
சுரங்கண்ண வேணி பஞ்ச நதிகோதா விரிநற் றூய. (கசு)

திரிசந்தி யாதி தீர்த்தந் திரியம்பகஞ் சிரீபன் னிப்பேர்
பரவிய வியாச தீர்த்த மத்தியந்தி மேயப் பான்மை
யுரைசெய்தா ராநதிப்பே ருரோகவ திசிதத் தாரை
யிருமைசேர் பவதீர்த் தப்பா ரிலங்கிய புண்ணிய தீர்த்தம். (உ௦)

மேவிரா மேச மேலா புரமலம் புரம்வி தர்ப்பை
பூவினி லங்கா பூதிப் புரத்தின்மா மத்த கந்தான்
மாவிற லிந்திர தீர்த்த மாமதி தகமா நாதந்
தாவிரும் பிரத்திரி கேச்சு ரம்புருச் சந்திர தீர்த்தம். (உக)

நிறைந்தகோ வர்த்த னஞ்சீர் நிகழரிச் சந்திர கேத்திர
மறந்தரு சகத்தி ராக்க மெகாம்புக மிரணி யாட்ச
மறங்கெடப் புனித நல்கு மாபிரு தூத கஞ்சீர்
பிறங்குபா குதைநன் னீர்சேர் பிரியமே கலமாந் தீர்த்தம். (உஉ)

சந்தனு தீர்த்த மாதி வாசஞ்சித் தவனந் தண்ணீ
ருந்துசவு மித்திரி சங்க மோங்கிய சகத்திர லிங்கங்
கந்தமார் சேன பாதம் புட்கரஞ் சந்திரி கையே
முந்துசா ளக்கி ராமங் கவுசிகை முன்னீர் விந்தை. (உங)

பம்புபற் படிகை பஞ்ச நதிபனி நதிசீ ரோங்கு
மிம்பரிற் சுவாமி தீர்த்த மாயிர முகமா யேகிக்
கம்பலை நிறையுங் கோதா வரிவட கரையிற் சேர்ந்த
வம்புவி புகழு மிக்க சமதக்னி தீர்த்த மாமால். (உச)

இந்திர தீர்த்தம் பிண்டா சிகமார்க வேசு ரஞ்சந்
துந்துகீழ் முகம்ப யோட்டினி யோங்குமுத் தரகா வேரி
நந்தலில் கால விந்தியா நதிநந்தி நதிநீ ரோங்கு
பந்தமா லோக தண்டம் பராவருஞ் சித்திர கூடம். (உரு)

இரணமோ சனஞ்சங் கார மோசன மிடர்சேர் சன்ம
மரணமில் வசிட்ட தீர்த்தம் வயங்குபா ரததீர்த் தந்தான்
றரணிசேர் பிரம தீர்த்தந் தரங்கநீர்ச் சங்கோத் தார
முரணறு பதரி தீர்த்த மொழிந்திடு மிராம தீர்த்தம். (உசு)

சயந்தமே விசயஞ் சுக்கிரந் தாங்கலி லுலக தீர்த்தங்
கயந்தரப் பருப்ப தந்தான் கடகேச மசுவ தீர்த்தம்
நயந்தரு யதக தீர்த்த நல்குவை குண்ட தீர்த்தம்
பயங்கொளுத் திரகா ளேசு ரம்பகர் சாத தீர்த்தம். (உஎ)

சீர்தரு புரம தேவ சிரசுபோ கவதி தீர்த்தம்
பாரில்வத் திராப தந்தான் பகர்சல கந்த தீர்த்தம்
நேரமா கிரக தீர்த்த நீணகர்க் கரவீ ரந்தான்
கூர்தரு சத்த கோதா விரியெனக் குலவு தீர்த்தம். (உஅ)

உறுவசி புளின மட்ட காசங்கங் காவித் தியோகம்
மறுவில்குச் சரம்பிர கப்பிர மாவர்த்தம் வாண வேகை
பெறுசர ரசுத தீர்த்தம் பிண்டாக ரமஞ்ச தீர்த்த
நிறைபுனற் கவுத மேச நிறைந்தசீ பதிதீர்த் தந்தான். (உகூ)

இத்தகை நதிக ளூர்த்த மிலங்கிய தலங்க டம்மிற்
பத்தியாய்ச் சிராத்தஞ் செய்யி னுறுபலன் பகரற் பாற்றே
வொத்தநால் வருணத் தார்க்கு மருணடு வொருசொல் வாய்மை
சித்தவிந் திரிய நிக்கிர கங்கடம் மிடத்திற் றீர்த்தம். (௩௦)

எவ்வகை வருத்தப் பட்டு மித்தலந் தீர்த்தந் தம்மிற்
றிவ்விய சிராத்தஞ் செய்யி னுத்தமஞ் செப்புங் காலந்
தவ்வலில் பிராதக் காலஞ் சங்கம மத்தி யான
மவ்வப ரான்னஞ் சாயான் னம்மொன் றுக் காறுங் கன்னல். (௩க)

முகூர்த்தமொன் றிரண்டு நாடி யெனப்பகன் மூவைந் தாகும்
பகுத்தவிம் முகூர்த்த மெட்டிற் பகர்ந்திடுங் குதப காலம்
வகுத்தசெங் கதிரோன் மெல்ல நடத்தலான் வழங்கு மிப்பேர்
தொகுத்தந சிராத்த மிந்த வேளையிற் றொடங்க னன்றாம் (௩உ)

மறையவர்க் கீரொன் பான்மேன் மன்னிரு பத்தி ரண்டு
னிறையவர்க் கீரெட் டின்மே லிருப்பது னீரேழ்க் கப்பா
லறைவணி கருக்கீ ரொன்பா னளவுபன் னிரண்டுக் கப்பான்
முறைபெறு சதுர்த்தற் கீரெண் கடிகையுட் சிரார்த்த முக்கியம். (௩௩)

சாற்றிய சாயங் காலந் தாமதங் கடிகை யாதிற்
போற்றிய சிராத்தந் தெய்வ கருமங்கள் புரிய லாகா
தேற்றிய தேப காலத் தியற்றிட வேண்டு மிக்காய்
மாற்றருஞ் சிராத்தஞ் செய்ய வேண்டுவ வகுத்துச் சொல்வாம். (௩ச)

கட்கபாத் திரமவ் வூனுக் குசைவெள்ளி தருப்பைப் புற்சா
ரெட்குல மருக னிந்த வெட்டுங்குச் சிதபா வத்தை
மட்கிட வகற்று மிந்த மகிமையாற் குதப மெட்டும்
பெட்புறு குதப கால மும்பிதிர் கட்கு வேண்டும். (௩ரு)

நாடிய குதப கால நவமெனு முகூர்த்தந் தானு
நீடிய சிரார்த்த கால நேமியான் மேனி தன்னிற்
பீடுயர் குசப்புற் காரெட் பிறந்ததாற் பிதிர்க்கு நேய
மோடிய தீர்த்தப் பாங்கர்த் தருப்பண் முஞற்றன் மிக்காம். (கசு)

செப்பிய முகூர்த்த காலஞ் சிரார்த்தமில் லிடத்தா மெண்ணீ
ரொப்பிலாத் தீர்த்தத் தன்றி யில்வயி னுஞற்ற றீதா
மப்பினி லிடக்கா லூன்றி யங்கையிற் றருப்பை யேந்தி
மெய்ப்படு கரையி லங்கை மறித்தெண்ணீர் விடுத்த னன்றும். (கஎ)

விருப்புட னுரைக்குந் தீர்த்தச் சிரார்த்தத்தின் விதியு மிக்காந்
தருப்பண நெறியு மிந்தப் புராணமே சாற்ற லன்றி
யுருப்பெற வுரையா தொன்று முருத்திரன் பிரமன் பானு
வருத்திகொண் மகிமை யென்று லதன்பய னுரைக்கற் பாற்றே. (கஅ)

சொன்னதீர்த் தச்சி ரார்த்தந் தொகுத்தவிவ் வத்தி யாய
நன்னதி யாலே யங்க ணற்றல மதனிற் சொல்வோ
ருன்னிய சிரார்த்த கால மோதுவோ ருவந்து கேட்போர்
மன்னுவர் செல்வ மென்றே வகுத்தனன் சூதன் மாதோ. (கக)

இருபத்திரண்டாவது

தீர்த்தசிரார்த்தவிதி அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். எ0அ.

இருபத்துமூன்றுவது

சந்திரோற்பத்தி அத்தியாயம்.

விண்ணிற்பொலி தருதண்கதிர் வரலாற்றினை விரித்தென்
கண்ணிற்றய வொடுநீயுரை யெனவேமனுக் கழற
வண்ணற்கயல் வடிவானவ னந்நாண்மொழி காதை
மண்ணிற்பொலி முனிவோர்பெற வருசூதனும் வகுப்பான். (க)

பதுமத்தய னுறுமத்திரி வதனத்தெதிர் பார்த்து
விதியிற்படை யெனவத்தொழின் மேவும்படி யெண்ணி
மதியுற்றனுத் தீமநற்பெயர் வருமாதவ மதனைத்
துதிபெற்றிடு மரன்மாலயன் சுடராதபன் மகிழ. (உ)

ஓவாதுறு தருவீரிய மேலாகவுள் ளடக்கி
மூவாயிர வருடம்விழி முகிழாம லிருந்தே
தாவாதுத வஞ்செய்வது கண்டேசது முகன்முன்
மேவாவவன் வயினன்பொடு விதுவாகவு முதித்தான். (௩)

எவ்வாறவ னுதித்தானெனின் முனிவோன்விழி வழியே
தவ்வாதுயர் தருவீரியந் தான்வைகறை யொழுக
வவ்வீரியந் தனையையிரு திசையங்கனை வடிவாய்ச்
செவ்வாய்மகப் பெறுமாசையிற் சேர்ந்தேசவர்ந் தனவால். (௪)

உதரத்துறு கருவைத்தரித் துயர்மூவயு தத்தாண்
டிதமற்றுறு சுமையெய்த்தவர் புவியிற்செல விடுத்தார்
பதுமத்திறை யவைபத்தையு மொருமித்தொளிர் படிவ
மதியக்கட வுளைவெற்றிகொள் படையோடும் வகுத்தான். (௫)

குரமுற்றிடு கதியைந்தொடு குலவித்திரி தருவெண்
புரவிக்கண மோராயிர மணிபொற்பொடு பூட்டு
வரமுற்றருள் புரிசத்தியின் வடிவானவி மானந்
திரமுற்றொளிர் கதிர்மொய்த்திடச் செய்தேயதன் பின்னர். (௬)

வேறு.

அன்னவெண் புரவித் தேர்மே லன்னவன் றன்னை யேற்றித்
தன்னுடை யுலகத் துய்ப்பச் சதுமறை முனிவ ரெல்லா
மன்னிய வயனைக் கேட்டே யிறையென வரித்தார் வானோர்
துன்னிய துறவோர் யாழ்க்கந் திருவர்கள் சுவர்க்க மாதர். (௭)

மலரயன் திருமால் செங்கை மான்மழுக் கடவுள் யாருங்
குலவுசந் திரனை வாழ்த்தித் துதித்தனர் குறைவி லாமற்
பிலமதி பிரமை மேன்மேற் பிறங்கிடப் பெற்று னன்றே
னுலவிய கதிராற் பாரிற் பயிரெலா முயர்ந்த வன்றே. (௮)

இன்னநன் னெறியாற் பாரிற் பயிர்க்கெலா மிறைவ னாகிப்
பன்னிய மறைவ லோர்க்கும் பார்த்திப னாகி வேதந்
துன்னிருப் பிடமா யோங்குந் தெள்ளமு துருவ மாகி
மன்னிய பக்க மொன்றிற் றேய்ந்தொன்றின் வளர்வ னாகோ. (௯)

பிரமன்முற் பெறுபி ராசே தசதக்கன் பெறுமூ வொன்பா
னரிவையர் தம்மை வேட்டே பதுமமென் றறையுஞ் சங்கை
தெரிவுறு பத்துக் கோடி வருடமா யவனைச் சிந்தித்
துரியநற் றவங்க ளாற்ற வுளத்தவத் திருமா றென்றி. (௧௦)

வேண்டிய வரங்க ளீவன் கேளென விண்ணில் யான்மெய்
பூண்டமா ராச சூய யாகத்தைப் புரிய வேதன்
கூண்டநாற் கணங்கண் முன்னே வந்தவி கொள்ள வேண்டுந்
தாண்டவம் புரியு மெந்தை வேள்விக்குக் காக்க வேண்டும். (௧௧)

என்றலுந் திருமா லுந்தான் யாகத்தைத் தொடங்கிச் சோமன்
வன்றிறல் வசுக்க ளத்து வரியுநற் பிருகு வோதா
வொன்றுநான் முகத்தோன் மிக்க பிரமனுற் காதா மேன்மை
துன்றிய விசுவ தேவ ரூபத்திரட் டாச்சொன் மாயோன் (கஉ)

சாய்விலாச் சனக ராதி சனுதிய ராக ராச
சூயமா மகமி யற்றித் துலங்குமூ வுலக மெல்லாம்
வாயன தானத் தோடும் வழங்குதக் கணையா யீந்தே
யாயதொர் செய்கை முற்றி யவபிருத நானஞ் செய்தான். (கங)

செய்தசந் திரனைப் பார்க்கச் செந்திரு முதலா வொன்பான்
மைதவழ் கரிய கூந்தன மானனார் வந்தன் னோன்றன்
மெய்யெழில் காண்ட லோடும் விரகத்தீ வெதுப்ப வில்வேண்
மொய்யலர் வாளி பாய முயங்கின ரவன்ற னோடும் (கச)

இந்திரை கொழுநன் மாய னெழிற்சினீ வாலி கேள்வன்
விந்தைசேர் காத்த மன்று தீநண்பன் விபாவ சுச்சீர்
நந்தலில் புட்டி நாதன் ருதாநற் பிரபை பத்தா
வந்தமி லிரவி கீர்த்திக் காதிபன் சயந்த னோடும். (கரு)

அலங்கல்சேர் குருவின் கொண்கண் விட்டுணு மானந் தீஞ்சொ
லிலங்கிய வசுமா னுக்குக் கணவன்சாச் சுவன்றி ருதி
துலங்கிய காந்த னந்தி சொற்றவொன் பதின்மர் தேவர்
நலங்கொடம் மனையோர்த் தேடி நாடிவந் தணுக லோடும். (கசு)

இத்தகை மாதர்க் கூடி யிணங்குசந் திரனைக் கண்டு
வைத்தசா பஞ்ச பிக்க வல்லரல் லாம னின்று
ரத்தகை யபசா ரந்தா னன்னவன் செய்துந் திக்குப்
பத்தினு மதிக காந்தி பரப்பிமேல் விளங்கி னானல். (கஎ)

விளங்குசந் திரனே யார்க்கு மேவரு முலகம் பெற்று
வளங்கெழு காவில் வந்த பொன்னவன் மனைவி யான
விளங்கொடி மருங்குற் றாரை யிளமுலைப் போகம் வேட்டே
யுளங்கனிந் தினிது கூடித் தன்பதி தனிற்கொண் டுய்த்தான். (கஅ)

தேவர்தங் குருமெய்த் தேவி தாரையைத் தேடிச் சோமன்
காவல்செய் யுலகி னுய்த்தா னென்பதைக் கருதிச் சாப
மேவல்செ யாவி சார வெரிவிட மிவைக ளானு
மேவுறு சயமொன் றின்றி யின்னுரை விளம்பி னானல். (ககூ)

குருவினன் மொழிகள் கேட்டுக் குவிமுலை வனப்பிற் றாரை
யுருவினைப் பிரிய மாட்டா துடுபதி மறுத்த லோடும்
பிரமனோ டமரர் வாம தேவர்பாற் பேசக் கேளா
தருகுறும் வாம தேவர் கோபத்தா லறைய லுற்றார். (உ0)

எம்மிடத் துபதே சங்கொ ளங்கிரா வினிதி னல்குஞ்
செம்மைசேர் குருவின் றேவி தாரையை விடுத்தி டாயே
லம்பொடும் பொருவர் வென்றே யசகலத் தனுநா ணேற்றி
வெம்முனைப் பூத நாதர் விறல்வலிச் சித்த ரோடும். (உக)

கணங்கட்கு நாதர் நான்கோ டெண்பது கோடி காவ
லிணங்குதே ரிரண்டி லக்க மீரிரண் டயுதம் பூத
ரணங்குறு மிரத மேறு மளவிலா வியக்க ரோடுந்
தணந்திடத் தழற்கண் சிந்தச் சார்ந்தனர் வாம தேவர். (உஉ)

வருதலுஞ் செவ்வாய் மைந்தன் றயித்தியர் வரிப்பைந் நாக
ருருமுவெந் திறல ரக்கர் கின்னர ரொடும்வே தாளஞ்
செருமுதா ராக ணங்க ளசுரர்கள் சேனை பற்பந்
தருரத முப்பத் தாறி லக்கஞ்சூழ் தரவே சந்திரன. (உங)

எதிர்ந்துபோர் மலைய வீரே ழுலகமுங் கடலோ ரேழும்
வந்தவான் கிரிக ளேழு மன்னுயிர்த் தொகுதி யாவு
மதிர்ந்தன திசைகள் செந்நு ளார்த்தன வனல்வாய் கக்கி
முதிர்ந்தவத் திரங்க ளாலு முக்கணன புரிந்த போரால். (உச)

சந்திரன் சேனை யோடு முக்கணன் சேனை தாக்க
நந்தலி லனேக கோடி மன்னுயிர் நாச மான
வெந்தழற் பொழிந்த வன்னோர் விரிசுடர்ப் படைகள் யாவு
முந்துமிவ் விருவர் சேனை யொன்றொடொன் றிறந்த மாதோ. (உரு)

அரனடர் கோபத் தோடு மழற்சொரி யகோரப் பிரம்ம
சிரசெனு மத்தி ரத்தை விடுத்திடத் தெரிந்து சோம
னுரமிகு சோம பாணம் விடுத்திட வொன்றொ டொன்று
பொரவுல கங்கள் யாவும் பொடித்தவக் கணத்தின் மாதோ. (உசு)

அப்பொழு தன்ன மூர்த்தி யமரர்மா தவத்தோர் சூழத்
துப்புறழ் மேனி யண்ணல் சோமனிவ் விருவர் நாப்பண்
மெய்ப்புறத் தோன்றி வெம்போர் விலக்கித்தண் கதிர்க்கு நன்மை
செப்பிநீ பரதா ரந்தான் விடுத்திடல் சீரி தாமால். (உஎ)

என்றுசொல் பிரமன் சொல்லை யிகழ்ந்திடு மதியைப் பாவந்
துன்றிய கிரக நீயே யாகெனச் சொற்ற லோடு
மொன்றிய தாரை தன்னை விடுத்தன னெனவோ ரைந்தும்
வென்றமா தவர்க்குச் சூத மாமுனி விரித்தா னம்மா. (உஅ)

இருபத்து மூன்றாவது

சந்திரோற்பத்தி அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். - எகசு.

இருபத்து நான்காவது

சோமவமிசோற்பத்தி அத்தியாயம்.

தாமரைத் தவிசின் மேய தளிரியல் கொழுநன் றனே
மாமனு வினுக்கு முன்னுள் வளம்பெற வகுத்த வண்ணஞ்
சோமனன் மரபு முற்றுஞ் சொல்கென முனிவர் கேட்பக்
காமனை வென்றோற் போற்றுங் கருணைகூர் சூதன் சொல்வான். (௧)

திருவினை நிகருந் தாரை குருமனை யிடத்திற் சேர்ந்தோர்
வருடமங் கொழிந்த பின்றை வயங்குமா பரணத் தோடு
முருவின்மன் மதனுக் கொப்பா விஞ்சைகட் குரிய னுகித்
தருமநற் பிலத்தின் மிக்க புதன்றனைத் தயாவி னீன்றாள். (௨)

தேவர்தங் குருவி னில்லின் முனிவரர் தேவ ரோடும்
பூவலர் மறையோ னெய்திப் பொருவிரு ரையைமுன் னோக்கித்
தாவரும் பெருமை மைந்தன் யார்க்குத்தான் சனித்தா னென்னக்
காவல்செ யரச னுமச் சோமன்கான் முளையே யென்றாள். (௩)

என்றலு மகவைக் கையா லெடுத்தயன் மகுடஞ் சூட்டி
யொன்றிய புவிகாத் தொன்பான் கிரகத்து ளொருவ னுக்கித்
துன்றிய வரங்கள் யாவுங் கொடுத்தருள் சுரந்து போத
வென்றிகொ ளுலகங் காத்து விதுக்குலம் விளக்கி னுனல். (௪)

விளங்கிய புதன்சின் னுண்மே லிளையினை விருப்பின் மேவிக்
களங்கமில் புரூர வாவை யீன்றனன் கன்னல் வேளைத்
துளங்கவெல் புரூர வாவுஞ் சொற்றிடு கடற்றீ வேழும்
வளங்கெழு முறையாற் காத்து நூறுமா மகஞ்செய் திட்டான். (௫)

மெய்த்தவப் பலத்தா னித்தம் விண்ணர சிடத்தின் மேவி
யுய்த்தசிங் காத னத்தோர் பாதியி லுறையப் பெற்றான்
மைத்தடங் குவளைக் கண்ணி யுருப்பசி புரூர வாவின்
மொய்த்ததிண் புயத்தை நச்சி மோகத்தான் முயங்கி னுளால். (௬)

புவிபரித் திடுமஞ் ஞான்று புரூரவா வென்னும் வேந்த
னவிரொளித் தரும மத்தங் காமமு மடைவாய் நித்தந்
தவிர்தலைச் செய்யா வண்ணம் புரத்தலுஞ் சார்ந்திம் மூன்றுங்
குவிகரத் தியற்றும் பூசை கொண்டிடப் போந்த வன்றே. (௭)

வந்திடுந் தரும மத்தங் காமத்தை வணங்கிப் பூசை
நந்திடா வண்ணஞ் செய்த போழ்தினிற் றருமந் தன்னைச்
சிந்தைகூர் பூசை மிக்காச் செய்தலுஞ் சீறி ரண்டிற்
றந்திடா லோபத் தோடுந் தாழெனச் சபித்த தத்தம். (௮)

தருப்பொலிந் துயர்ந்த கந்த மாதனச் சயில மேவி
யுருப்பசி யூடி நீங்கப் பிரமைகொண் டுழல்வா யென்றே
விருப்பறு சாபங் காமம் விளம்பலுந் தருமம் போற்றி
மருப்பொலி மார்ப நீதீர்க் காயுளாய் வாழ்தி யென்றே. (கூ)

நின்குல மாசந் திரார்க்க ஞான்றுநின் றிலங்க வென்றே
யின்குண மொழியுஞ் சொல்லி யேகலு மிரவி யோடுந்
தன்கொடித் தேரி லேறிச் சஞ்சரித் துலவ வாங்க
ணன்குருப் பசியைக் கொண்டு கேசிமுன் னடத்தல் கண்டான். (கo)

கண்டகே சியைவென் றந்சக் கனங்குழை தன்னை மீட்டுக்
கொண்டுவா னுலக மெய்த விந்திரன் முகமன் கூறி
மண்டுமா தரத்தின் மிக்க வரங்களுங் கொடுத்து மீண்ட
வொண்டொடி தன்னை யீந்தங் குவகையொ டிருத்திக் கொண்டான். (கக)

வானர சிடத்தின் மன்னு புரூரவா மகிழ்ச்சி கூர
வீனமி னூட கஞ்சே ரிலக்குமி சயம ரத்துக்
கானமங் கலத்தைப் பாடி யரம்பைமே னகையும் விண்ணோர்
கோனனு மதியி னூலே கூடிநின் ருடி னூரால். (கஉ)

பொன்மக ளுருவத் தோடு முருப்பசி புரூர வாவி
னின்னெழில் வடிவின்மாலா யபிநய மறப்ப வேந்தன்
றன்னைவிட் டுயர்கு மார வனத்திலேம் பத்தை யாண்டு
மன்னிய கொடியா கென்னச் சபித்தனன் பரதம் வல்லோன் (கங)

உரைத்திடு சாபந் தன்னு னுருப்பசி கொடியாய் மன்னி
நிரைத்திடு மைம்பத் தைந்து வருடமு நிறைந்த பின்னர்
விரைத்தொடைப் புயப்பு ரூர வாவினை மேவி யாயு
வரத்திடா யுவச்சு வாயு வோடுநற் றிரிதி மானே. (கச)

சொல்வசு வனுயு வோடு திவோசாதன் சுதாயு வென்னு
மெல்லொளிப் புதல்வ ரெண்மர்ப் பயந்தன ளிவர்க்கு ளாயு
மல்வலி நகுடன் விருத்த சருமன்மா ரெசியே தம்ப
னல்லெழில் விபரு வாவொ டைவரா நலத்தி னீன்றான். (கரு)

அவர்க்குண்மா ரெசியா மன்னன் மகவுநூ றிரிதிற் பெற்றுப்
புவிக்குண மாரு மிக்க புயவலி பெற்று வாழ்நாள்
தவத்தம ரேசன் விண்ணோர் தயித்தியர் பிரக லாத
னிவர்க்குப்போர் மூந்நூ ருண்டு விளைந்தன விடைய றுமல். (கசு)

தேவரு மசுரர் தாமுந் திசைமுக னிடத்திற் சென்று
யாவர்போர் வெல்வ ரென்று கேட்கமா ரெசியே யென்பான்
மாவலி யுடைய னன்னோன் மருவிடம் வெல்லு மென்னத்
தாவரு மசுரர் வானோர் மாரெசி தன்னைச் சார்ந்தே. (கஎ)

எங்கணு யகனீ யாகி யிப்பெரும் போர்செய் கென்ன
வங்கவ ஞோர்ந்து தேவர்க் காதிப ஞகி யப்போர்
துங்கமா மசுரர்ச் சிந்தத் துணித்தலு மகிழ்ந்து வானோர்
தங்களுக் கிறையன் ஞேன்றன் சந்ததி யாயி ஞுல். (கஅ)

சந்ததி யான விந்தி ரன்றனக் குவந்தப் பூமி
யந்தர மிவையு மீன்று தவத்தினுக் ககன்ரு னன்ஞேன்
மைந்தர்நூற் றுவர்த வத்தால் வானவ ரரசை வென்றே
யுந்தவிப் புவிவா ஞேடும் பதித்தர சுஞற்றி ஞரால். (கசு)

பறித்திடக் கொடுத்த வேந்தன் பகர்குரு விடத்திற் சென்று
குறித்தமா ரெசிகு மார ரரசவி கொண்டார் தம்மை
யொறுத்திட வேண்டு மென்ன வுயர்நவக் கிரக சாந்தி
பொறுத்திடு பவுட்டி கந்தான் புரிந்துமா பலத்தை யீந்தே. (உ0)

சின்னெறிப் பவுத்த ஞகி ரெசிமைந்தர் தம்பாற் சேர்ந்து
மன்னுறும் வேதம் யாவு மற்பமா மாயை செய்தா
னன்னதன் மையினை யெண்ணி யமரர்கோ னவர்க டம்மைத்
துன்மணி வச்சி ரத்தாற் றுணித்துத்தன் போகந் துய்த்தான். (உக)

தனிமுடி நகுடன் யாதி யயாதிசம் பூதி மாலை
புனையுமுற் பவன்கை யாதி புருமேதை யாதி யென்னுங்
கனைகழ லெழுவர் மைந்தர்ப் பெற்றனன் கருதும் யாதி
மனமகிழ் யோகி யாய்வை கானச மருவி ஞுல். (உஉ)

அரியசீர் யயாதி வேட்ட சன்மிட்டை தெய்வ யானி
யிருவரிற் றெய்வ யானி யெதுத்துரு வசுவை யீன்ருள்
துரியுகு வனுமெய்ப் பூருத் துலங்குசன் மிட்டை யீன்ரு
ளுரியவோ ரைவர் தம்முட் பூருப்பா ருரிமை பூண்டான். (உங)

விதுக்குலம் விளக்கிப் பூரு விண்ணவர் மகிழப் பூமி
மதிப்புற வொருகோ லோச்சி வாழ்ந்தன னென்று மாயன்
றுதித்திடு மனுவுக் கோதுந் தொன்மையைத் தேர்ந்து சூத
னதிச்சடை யோனைப் போற்று முனிவர்க்கு நவின்ரு னன்றே. (உச)

இருபத்து நான்காவது

சோமவமிசோற்பத்தி அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். எகூ0.

இருபத்தைந்தாவது

கசன் வித்தியாப்பியாச அத்தியாயம்.

ஓங்கிய பூரு வமிசத் துயர்ச்சியு முரிய மோலி
தாங்குத லின்றி மூத்தோன் யதுகுலந் தாழ்ந்த வாறும்
பாங்குறும் யயாதி காதை யனைத்தையும் பகர்வா யென்னத்
தேங்கிய தவத்தோர் கேட்பச் சூதனுந் தெரிந்து சொல்வான். (க)

முன்னமே யயாதி காதை சதானிகன் முறையிற் கேட்பத்
தன்னிக ரில்லா மேன்மைச் சவுனக ருரைத்த வண்ணம்
பன்னுமத் திரிதொட் டேழா வானிசை பகர்ய யாதி
மன்னுசுக் கிரன்றன் மாதை மணம்புரி காதை தானும். (உ)

புரந்தரன் றனக்கு நேராய்ப் புவிபுரந் தருள்ய யாதி
வரம்புரி விடபன் மாவின் மகளென வருசன் மிட்டை
யுரம்படப் புணர்ந்த வாறு முயர்மக வுயிர்த்த வாறும்
பரந்தரு சுவர்க்கந் தன்னில் யயாதிமுன் படர்ந்த வாறும். (ங)

சொல்லுவன் முனிவர் கேண்மி னசுரர்க்குஞ் சரர்க்கு முன்னு
ளெல்லையி லாப்போர் வெல்ல விருவரும் வெள்ளி பொன்னை
நல்லருட் குரவ ராக வரித்தனர் நாட்டு போரிற்
புல்லிய வசுர ரெல்லாம் பொன்றிடத் தேவர் வென்றார். (ச)

பொன்றிய வசுரர் தம்மைப் புகர்சஞ்சீ வினியி னாலே
யன்றவ னெழுப்ப வன்னோ ரமரர்தங் குழுவை யெல்லாங்
கொன்றன ரவரைத் தேவர் குருவெழுப் பிடாமை யாலே
வென்றவர் வீயத் தம்மில் வீந்தவ ருய்ய வேண்டி. (ரு)

குருமைந்தன் கசன்பாற் றேவர் யாவருங் குறுகி வெள்ளி
யருகினிற் சார்ந்து சஞ்சீ வினிவிஞ்சை யனைத்துங் கற்று
வருதியேல் யாங்க ளுய்வே மென்னலு மனத்துட் கொண்டு
பொருவிலா விடபன் மாவின் புரியசு ரேந்தி ரத்தில். (சு)

பொருந்திய வெள்ளி தன்பாற் போந்தனன் புடவி மீதி
லுரம்பட வணங்கி யன்னோ னுயிர்நிகர் புதல்வி யாகுந்
திருந்திழை தெய்வ யானி தன்னையுஞ் சென்று கண்டா
னருந்திறல் விஞ்சை கற்பா னெண்ணியங் கடைந்தா னன்றே. (எ)

தேவர்தங் குருவின் மைந்த நின்னுளத் தெண்ணம் யாது
நீவர னன்மை யாக நின்னையாம் பூசை செய்கேந்
தாவரும் பொன்னீ யாக வென்றலுந் தாழ்ந்து நின்பா
லேவலுக் குரித்தாய்ப் பிரம்ம சரியத்தை யியற்று கேனல். (அ)

ஆயிரம் வருட நின்பாற் பணிவிடை யமர்வேன் விஞ்சை
நீயருள் புரிய வேண்டு மெனச்சொலி நியமம் பூண்டு
வேய்நிகர் தோளி தெய்வ யானிபால் விளங்கு பாட
லோய்விலா துரைத்தே யாடி யாழ்நரம் பொலித்தல் செய்தும் (கூ)

பூவகை பலன்கள் கொய்து பொருந்துகைக் கொடுத்தும் போற்று
மேவல்கள் செய்துஞ் சின்னா ளிதயசந் தோடஞ் செய்தான்
றேவயா னியுமன் னேன்செ யேவலு நோன்புந் தேர்ந்து
மேவருந் தயவு கூர்ந்து விருப்பொடும் போற்றி னாளால். (க0)

இவ்வண்ண மைஞ்ஞூ றாண்டங் கியற்றிய கசனைக் கண்டு
கவ்வைகொ ளசுரர் போந்து கசன்விஞ்சை கற்றா னாகிச்
செவ்விய வானோர் வெல்வ ரெனமனந் தேர்ந்தன் னோன்புல்
வவ்வுறு பசுவைக் காக்கு மெல்லையில் வந்து பற்றி. (கக)

பிடித்தறுத் தெட்கூ றாகப் பிறங்கிய செந்நாய் தின்னக்
கொடுத்தனர் காப்பா னின்றி கோமனை குறுகக் கண்டு
வடுத்தரு கண்ணி தெய்வ யானிவாழ் புகர்பான் மன்னி
விடுத்தவிப் பசுவைக் காக்குங் கசனெங்கே மேயி னானல். (கஉ)

குலவிய கசன்ச ரீரங் குலைந்ததோ வாரா னாகி
லுலவிடா தொழிவன் யானு மென்னலு முள்ளத் தோர்ந்து
விலகரும் வெள்ளி சஞ்சீ வினிவிஞ்சை விடுத்து வாவென்
றிலகிட வழைக்க வுற்றா னேந்திழை விளித்துச் சொல்வாள். (கங)

இத்தனை நேரம் வாரா திருந்ததென் கசநீ யென்னப்
பித்துறு மசுரர்க் கொன்றா ரென்றனன் பின்னு மோர்நாள்
கொத்தலர் மலர்கொய் தெய்தப் போதலு மசுரர் கோரப்
புத்தியாற் கொன்று சுட்டுப் பொடியினை மதுவிற் கூட்டி. (கச)

தங்குருப் புகருக் கீயத் தானுமே யறியா துண்டான்
மங்கையத் தெய்வ யானி கசன்றனை வரவு காணா
ளெங்கொழிந் தனனோ வென்ன வெள்ளிதன் னிதயத் தோர்ந்து
பங்கமில் கசனி றந்தான் மதுவொடும் பானம் பண்ண. (கரு)

எமக்குறு மசுர ரீய வுண்டன மினிவா வெள்ளி
நமக்குயிர் போவ தாக வுதரத்தி னுப்பண் கீறி
யமைக்கருந் துயர்வி ளைப்பா னென்றலு மழுதே மங்கை
சுமக்கருந் துன்பத் தாழ்ந்து தன்னுயிர் துறப்ப லென்றும். (கசு)

அக்கசன் றந்தை யோடு பிதாமக ரங்கி ராவுந்
தொக்கபுத் திரசோ கத்தாற் றுளங்குவர் கசன்வ னப்பான்
மிக்கவ னெனக்குத் தோழன் விரும்பிய கருமஞ் செய்வா
னிக்கண நேர மேனும் பொறுக்கிலே னெந்தை நீயும். (கஎ)

ஒழிந்திட லாகா தன்னோன் றனையுமுய் விப்பா யென்ன
மொழிந்தவிஞ் சையினு லன்னோ னழைத்திட முறையிற் சொல்வான்
வழிந்திடு கருணை வாரி வள்ளனீ யுஞற்று மேவல்
கழிந்திடா வண்ணஞ் செய்யக் காத்தரு ளென்ன லோடும். (கஅ)

இந்திரன் வஞ்சஞ் செய்திங் குற்றன னாகி விந்த
மந்திர முரைக்கி லேமெம் வயிற்றிடைப் புகுந்து நீயோ
ரந்தண னாகை யர்லே யுய்ந்திட வருள்வேம் யாமெம்
புந்திகூர் புதல்வ னென்றே புகலுது மென்று செப்பி. (க௯)

தன்னிடத் திருந்த விஞ்சை யவன்றனக் குபதே சித்தே
யுன்னையா மழைத்த பின்னென் னுதரத்தை வகிர்ந்து போந்திங்
கென்னைநீ யெழுப்பு கென்ன வியம்பிவா வென்ன லோடு
மன்னவ னுதர நீங்கி யவனையு மெழுப்பி னானல். (உ0)

வெள்ளிதன் னடியிற் றாழ்ந்த கசன்றனை விரும்பி நோக்கித்
தெள்ளிய விஞ்சை கற்றுத் திகழ்குரு தக்க ணைக்கென்
னுள்ளுயி ருதவி செய்தா யாதலா லுவந்தே மேன்மை
தள்ளுறு மதுபா னத்தின் மயக்கத்திற் றளர்ச்சி கூர்ந்தாம். (உக)

வேதியர்க் கெல்லா மீதோர் வரம்பென விதித்து விண்ணோர்
மாதவ மறையோர் விஞ்சை வல்லவர் மகிழ்ச்சி கூற
வோதினு மதுவை யுள்ள முவந்தினி மறையோ ருண்ணிற்
சாதியா லீன ராகித் தழனிர யத்தி லாழ்வார். (உஉ)

என்றுசுக் கிரன்ச பித்தா னிமையவர் குருவின் மைந்த
னன்றறி குருவைத் தம்மி லொருவனே யாக நாடிற்
பொன்றுவர் செல்வம் போக்கிப் புகுவர்புன் னரகி லென்றே
யன்றுகொள் விரத மாண்டோ ராயிர மனுட்டித் தப்பால். (உ௩)

குருவனு மதியாற் றேவர் குழாத்தொடுங் கயன்வந் தெய்த
வொருமையி னினைந்தான் கோரத் தறுபவத் தசுரர் பார்த்துத்
திருவிலி ரும்மா லேசஞ் சீவினி விஞ்சை தன்னை
யிருமைசேர் கசன்கற் றுய்ந்தா னென்றனன் வெள்ளி யென்றே. (உச)

சற்குணச் சதானீ கற்குச் சவுனக ருரைத்த வண்ணஞ்
சிற்குண மச்ச மாயன் றெளியுற மனுவுக் கோதுஞ்
சொற்குண முறைதெ ரிந்தே சூதமா முனிவன் மேலா
நற்குண முனிவர் கேட்டு நயப்புற நவின்று னன்றே. (உரு)

இருபத்தைந்தாவது

கசன் வித்தியாப்பியாச அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் எஅரு.

இருபத்தாறுவது

தெய்வயானி சாப அத்தியாயம்.

அயிலினைக் கயலை வாளை யம்பினைப் பழித்த மைக்கண்
மயிலியற் கருமென் கூந்தன் மதிநுதற் பவளச் செவ்வாய்க்
குயின்மொழித் தெய்வ யானி சபித்ததைக் குறைதீர் வேள்வி
பயிலுமா தவத்தோர் கேட்பச் சூதனும் பகர்வ தானன். (க)

கசனெனுங் குருவின் மைந்தன் கருதுமோ ராண்டு முற்றி
வசையில்சுக் கிரனைப் போற்றி வானுல கடைய வெண்ணி
விசையொடு விடைகொண் டன்னோன் மெல்லியற் றெய்வ யானி
யிசைதரு மிடத்திற் சென்றே யெனக்குநீ விடைநல் கென்றான். (உ)

வானவ ருலகத் தெய்த மகிழ்ச்சிகூர் கசனைத் தெய்வ
யானிநீ யங்கி ராவின் பௌத்திர னிலங்கு மன்னோன்
றனிகர் புகர்க்குப் பூச்சிய னத்தன்மை குருவெ மக்கா
மூனமி னெறியான் மிக்க தவத்தினு லுயர்வ னப்பால். (ங)

எல்லொடுங் கியவ்வ னத்திந் திரியநிக் கிரகஞ் செய்ய
வல்லவ னுகை யாலு மென்னைநீ வதுவை செய்து
புல்லுதற் குரியை யென்னக் குரவன்றன் புதல்வி யாயிச்
சொல்லைநீ சொல்ல லாமோ வெனக்கசன் றுலங்கச் சொல்வான். (ச)

நீயவ தரித்த தந்தை யுதரத்தி னின்று யானும்
மேயவ தரித்த தன்மை யாலுடன் பிறப்பா மேன்மை
யாயது புகர்போ னீயும் பூச்சியை யான்விண் ணோர்பாற்
போயவர்க் கோப மின்றி யனுமதி புரிதி யென்றான். (ரு)

உரைத்தவக் கசனைத் தெய்வ யானிதா னுருத்து நீமுன்
மரித்திடுந் தோறும் யான்செய் நன்மையை மறந்தா யென்சொ
லருத்தியாய்க் கொள்ளாய் சற்று மாகையாற் கற்ற விஞ்சை
யுருப்பெற யுதவிசெய்யா துனக்கெனச் சபித்தா ளன்றே. (சு)

காமத்தை விரும்பி யிந்தச் சாபநீ கருதிச் சொற்றாய்
தோமற்ற வெள்ளி கேட்கிற் றுயர்க்கட லாழ்வர் விஞ்சை
யாமத்தை யெனக்கா காவென் றியம்பினை யாகை யால்யா
னேமத்தாற் பிறருக் கோதிற் பலிதமா மென்று சொல்லி. (எ)

காரண மின்றிச் சாபங் கழறினை நின்னை நான்கா
மாரண மறையோர் வேட்டற் குரியவ ரல்ல ரென்னப்
பூரண மான சாபம் புகன்றவக் கசன்போய் வெள்ளை
வாரணக் குரிசி றன்பால் வானுல கடைந்தான் மன்னோ. (அ)

விண்ணவர் குழுவி னோடு மிந்திரன் விரைந்து மேவி
நண்ணிய கசனைப் பொன்போ லாடிவந் தனைசெய் தேத்தி
யெண்ணிய வெண்ணம் யாவு முடித்தனை யிடர்தீர்ந் துய்ந்தேம்
புண்ணிய குருவின் மைந்தா வாழ்கெனப் போற்றி செய்தே. (௯)

பாத்தியா சமன நல்கிப் பாரிசா தப்பூ மாலை
சாத்தியே யுயர்ந்த சிங்கா சனத்தினி லிருத்தி முன்னின்
றேத்தினு னென்று சூத னிருநில முதன்மூன் றுசை
நீத்தமா தவத்தோர் வேட்ப நேசமாய் நிகழ்த்தி னானல். (கo)

இருபத்தாறவது

தெய்வயானிசாப அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். எகடு

இருபத்தேழாவது

தெய்வயானி கோப அத்தியாயம்.

செப்பெனப் புடைத்து விம்மித் திரண்டுசெல் வஞ்சேர் புல்லர்க்
கொப்பென விறுமாந் தோங்கி யொளிர்முகங் கறுத்த கொங்கைத்
துப்பிதழ்த் தெய்வ யானி கோபத்தைச் சொல்வா மென்றே
தப்பின்மா தவத்தோர் கேட்பச் சாற்றுவ தானன் சூதன். (க)

மந்திரம் விஞ்சை வல்ல கசனடி வணக்கஞ் செய்தே
நந்தினே ருய்யச் செய்யும் விஞ்சையை நயப்பி னோடு
மிந்திர னொழிய வானோ ரியனுப தேசம் பெற்றுத்
தந்தமா குலத்தை நீங்கித் தழைத்தசந் தோடம் பெற்றார். (உ)

மணிமுடி புனைந்த வைசேர் வச்சிரா யுதனை விண்ணோ
ரணுகிநீ யைய விந்த வேலையி லசுர ராகந்
துணிபடப் பொருதால் வெல்வேந் துணைவினீ யெழுக வென்று
பணிதலு மபய மீந்து பாகசா தனன்றே ரேறி. (ங)

வானத்தின் வரைப்பின் மேவி யேகலு மண்மே லுத்தி
யானத்தின் மேவி நாப்ப ணமர்ந்துகன் னியர்க ளேம
நானத்திற் கமழு நன்னீ ராடலு நண்ணி வானோர்
கோனத்தின் வாயு வாகி யவர்துகில் கூட்டி னானல். (ச

தேவர்கோன் விந்தை செய்து செல்லநீ ரோடு மின்னு
ரியாவருந் துகின்மா ருடி யுடுத்தன ரெழிலின் மிக்காண்
மேவருந் தெய்வ யானி துகில்விட பன்மன் கன்னி
தாவில்சன் மிட்டை யென்பா ளுடுத்தலுஞ் சகியாளாகி. (ரு)

குருப்புகர் குமாரி தெய்வ யானிதன் கூறை சேர்த்தங்
கிருப்பவ டன்னை யென்றன் கூறைநீ யெடுக்க வென்போல்
விரும்புறும் புனிதை யல்லை யென்றலும் வெறுத்துப் பைந்தார்
மருப்பொலி கரிய கூந்தற் சன்மிட்டை மதியா ளாகி. (சு)

என்றந்தை யிடத்தின் மேவி யாசித்துச் சமயம் பார்க்கு
முன்றந்தை மகிமை சற்று முணர்ந்திலை யென்னை யோக்கிய
மன்றென்று சொற்ற தென்னென் றடித்துப்பாழ்ங் கிணற்றிற் றள்ளி
மின்றந்த விடைச்சன் மிட்டை பதியினில் வெகுண்டு சென்றாள். (எ)

ஏவற்கன் னியர்கள் சூழச் சன்மிட்டை யேக வேபாழ்ங்
கூவற்கண் விழுந்த தெய்வ யானிமெய் குலைந்து நிற்பக்
காவுற்ற வனத்தில் வேட்டைக் கெய்திய யயாதி கண்டு
மேவுற்ற கன்னி நீயா ரென்னலும் விளங்கச் சொல்வாள். (அ)

இறந்தவர் தம்மை யெல்லா மக்கணத் தெழுப்பும் விஞ்சை
சிறந்தசுக் கிரன்கு மாரி யென்பெயர் தெய்வ யானி
மறந்தழைத் திலங்கு வைவேன் மன்னவென் வலக்கை பற்றித்
துறந்துயிர் போகா வண்ண மேற்றுதி யென்னச் சொன்னாள். (கூ)

வேதியர் கன்னி யென்னும் வாசகம் வியந்து கேட்டே
யாதரத் தோடு மேற்றி யகன்றனன் யயாதி யாங்கண்
காதல்கூர் பாங்கி தன்னைத் தந்தைபாற் கழறி விட்டாள்
மாதவ வெள்ளி கேட்டு வந்துதன் மகளைக் கண்டான். (க0)

காண்டலுந் தழுவிக் கொண்டிங் குற்றதென் கழறு கென்ன
வாண்டகைக் கன்னி மாரோ டாவிநீ ராடும் போழ்திற்
கூண்டநற் றுகிலி லென்றன் கூறைசன் மிட்டை கொண்டா
ளீண்டுநீ யென்றன் கூறை யெடுக்கயோக் கியமோ வென்றேன். (கக)

சமயம்பார்த் தெந்தை தன்பாற் சார்ந்துபஞ் சாங்கஞ் சொல்லிக்
கமைபெற விரப்போன் பெற்ற கன்னிநீ கொடுக்கும் வள்ள
லெமையளித் தவன்றன் மேன்மை யறிந்திலை யென்கை கீறி
யமைவறு கோபத் தோடு மடித்துப்பாழ்ங் கிணற்றில் வீழ்த்தாள். (கஉ)

எந்தைநின் னருளா லிங்஗ன் யயாதியென் றியம்பும் வேந்தன்
வந்தனன் வேட்டைக் காழ்ந்த கிணற்றிடை வருந்து மென்னை
வெந்துயர் தீரச் செங்கை பற்றிமே லெடுத்து விட்டான்
முந்துற நடந்த வுண்மை யீதென மொழித லோடும். (கந)

இரந்திடுந் தொழிலெ மக்கே யில்லையிச் செய்கை வான்வாழ்
புரந்தரன் விடபன் மாவிப் புவியில்வாழ் யயாதி யென்னுந்
துரந்தர ரறிவ ரீசன் சொற்றிடும் வேத வுண்மை
நிரந்தரம் வல்லே னெற்கு நிகரெவ ரென்று பின்னும். (கச)

இருநிலக் கிழமை பொன்னே டிளமைபெண் மதிய வற்றி
னொருவகைப் போழ்துந் தீமை யுறுத்துதற் குரைத்த ஞான்று
மருவிலள் செய்யுந் தீமை வரம்புண்டோ வென்று ளென்று
சுருதிதேர் முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொன்னான். (கரு)

இருபத்தேழாவது

தெய்வயானிகோப அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். அகo.

இருபத்தேட்டாவது

தெய்வானி யாட்சேப வத்தியாயம்.

சீற்றங் காம மயக்கமெனச் செறியு மொருமுக் குறும்பெறிந்திட்
டாற்றும் வேள்வி முனிவர்தெய்வ யானி யாட்சே பித்ததனைச்
சாற்ற வேண்டு மெனச்சிவன்பொற் றாட்டா மரைக்க டமையுணர்ந்து
போற்றுஞ் சூத மாமுனிவன் பொருந்தத் தெரிந்து புகல்வானல். (க)

பெருமை பிறங்கும் பார்க்கவனிவ் வுலக மதிக்கப் பெற்றெடுத்த
வருமை மகளாந் தெய்வயானி யாற்றுச் சீற்றங் கண்டவடன்
பொருமை றவிரும் படிக்கின்சொல் புகல்வா னெண்ணிப் புகன்மறையின்
றருமை நீதி முறைசிறிது தயவி னோடுஞ் சாற்றுவனல். (உ)

வேறு.

சத்தியம் பொறுமை தாழ்ந்த வார்த்தையைத் தரிக்க வல்லோ
னுத்தம னவா னென்றே யுரைத்தன வேதம் யாவு
மித்திறந் தெரிதி கோபத் தியற்கைமேற் கொண்டார் செல்வம்
புத்திமெய்ஞ் ஞானங் கல்வி புகலருந் தவமும் போமால். (ரு)

யாவரே யெனினு மக்க ளியற்றுதுர்க் கருமந் தன்னைப்
பாவக மாக வெண்ணிற் பகரரும் பவத்தி லாழ்வார்
பூவுறு நீதி யென்றே புகர்சொலத் தெய்வ யானி
மேவருஞ் சற்ச னத்தில் விரவிடி னன்மை யாமால். (ச)

செம்மையி லசுரர் மன்னன் செல்விசன் மிட்டை யென்னும்
வெம்மைசேர் குணத்தாங் காரி தன்னுடன் மேவு மாற்ரு
லிம்மையிற் றுயரம் யானே யெய்தின னிமையோர் போற்று
மும்மைவந் தடைந்த பேர்க்கு முறுதுயர் விளைவ துண்டோ. (ரு)

காரண மின்றி யென்றன் கூறையைக் கவர்ந்து கொண்டு
பூரண விஞ்சை யெண்ணெண் கலைகளும் பொருந்தி வாழு
மாரண வித்தா மும்மை யவமதித் துரைத்து மாழ்ந்த
நீரண வொண்ணுக் கூவல் வீழ்த்தியு நெறியை நீத்தாள். (சு)

தன்னிடத் துபதே சங்கொண் மாணுக்கன் றலைமை யாக
மன்னிட வவன்பாற் ருழ்தல் வல்லவர் செய்கை யென்ரு
லென்னிடத் தவமா னத்தை யெண்ணிலே னிகழ்ந்த வார்த்தை
துன்னிட வும்மைக் கூறுந் துயரெனைச் சுடுவதென்ருள். (எ)

என்றலும் வெகுண்டு கண்ணா டெழுந்ததீப் பொறிகள் சிந்தத்
துன்றிய புருவ நெற்றி முரித்திடத் துளங்கெண் டிக்குங்
கன்றிடக் கடல்க ளேழுங் கலங்கிட யுகாந்த கால
மன்றுவந் ததுவோ வென்ன வணைவருந் துணுக்க மெய்த. (அ)

தெறுவலி யசுர ரெல்லாஞ் சேரசு ரேந்தி ரத்திற்
சருவொடுஞ் சென்ரு னென்னக் கறைமிடற் றிறைவன் ருனே
யுறுதியென் றுணர்ந்து வேள்வி யுஞற்றுமா தவத்தோர் கேட்ப
மறுவறு மறிவின் மிக்க மாதவச் சூதன் சொன்னன்.

இருபத்தேட்டாவது

தெய்வயானியாட்சேப வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், அகக௯.

இருபத்தோன்பதாவது

தெய்வயானிசந்தோட வத்தியாயம்

ஐயுற்றிடு மிடையாடெய்வ யானிப்பெய ருடையாண்
மெய்யுற்றசந் தோடத்தினை விளம்பீரென வினவப்
பொய்யுற்றவிவ் வாழ்வைத்தவிர் பொறையுற்றுயர் முனிவோ
ருய்வுற்றிட வருசூதன்மெய் யுணர்வுற்றுரை செய்வான். (க)

உருத்தேயெழு கோபத்தொடு முறுமாமுனி யுள்ளக்
கருத்தேதென வறியானுளங் கலங்கித்துணை வோடு
மருத்தாவிட வன்மாவெதிர் வந்தேமிக வஞ்சிக்
குருத்தாமரை மலர்ச்சேவடி குறுகப்புகர் சொல்வான். (உ)

பொல்லாப்பெரும் பொய்வாசகம் புகல்பாதகம் புன்மைக்
கெல்லாமிருப் பிடமாயுறு பழிதாணிழைத் திடுவீ
ரொல்லாதிவை யெனவேபுரி தருமந்தனே யுணரீர்
கொல்லாதொழி குணமேசிறி தில்லாக்கொடுங் குலத்தீர். (௩)

ஏவற்றொழில் களையாற்றியு மென்பாலுறு கசன்றன்
கோவைப்புனந் தனின்மேய்த்திடக் கொன்றீரது வல்லாற்
பூவைத்தரு போதிற்கொன்று சுட்டப்பொடி மதுவிற்
றூவிக்கொள வெமக்கேயளித் துறுதுன்பம் விளைத்தீர். (௪)

எமக்காந்தெய்வ யானிக்குயி ரீறுற்றிட விளைத்தீ
ருமைத்தேறி னிமைப்போதினிற் றகிப்பேனென வுரைப்பக்
கமைக்கோர்கட லனையாயிவை கருத்தாலறிந் திலன்யா
ருமைத்தான்விடிற் கதியாதுள தெமக்கேபுக லுதிரால். (௫)

நீரேயெமைத் தகிப்பீரெனிற் கடனீரிடை யாழ்கேம்
வாராழுலை மணபாக்கிய மதயானைகள் வாசி
தேராளிவை மிடைவாகிய சதுரங்கநற் சேனை
பாரோடெம தெல்லாமும தன்றோவெனப் பகர்ந்தான். (௬)

ஆனற்பிழை பொறுத்தேந்தெய்வ யானித்திரு மகள்பாற்
போனற்றம துள்ளக்குறை புகல்வாளது தீர்க்கி
னுமகிழ்ச் சியின்மேவுவ மெனவேபுக ரறைய
மானளம ரிடத்தேவிட பன்மாவும்வந் தனனல். (௭)

மானேயெமக் குறுதீவினை மாற்றுங்குரு மகளே
தேனேயுமக் கடிமைத்திறஞ் செய்கேங் குலமுழுதும்
யானேதினி யியற்றும்பணி யெனவாயிர மகளிர்
தானேபணி சன்மிட்டையைத் தனியேவலுக் கருள்வாய். (௮)

என்றேயவ னுரைசெய்வதற் கியைந்தேவிட பன்மாத்
தன்றுதியை விட்டேயவ டன்னைத்தரு கெனலுஞ்
சென்றேகொடு வரலும்மவ டிகழ்தாதையை நோக்க
வின்றேதெய்வ யானிக்குறு பணிசெய்கென விசைத்தான். (௯)

இசைத்தானடி வணங்கித்தெய்வ யாணிக்கெதிர் வந்து
நசைத்தாழ்குழ லினராயிர ரொடுநான்பணிக் கமைவேன்
றிசைப்பால்கவர் கொடுத்தேயருள் செயநீசெலுந் தேய
மிசைத்தானும்பின் வருவேனென விளம்பத்தெய்வ யானி. (௧௦)

வரையாதுயர் பொருளீபவன் மகணீவறு மையினு
னிரைவாயுறு கடைவாயிலி னிற்போன்மகள் பணிக்கே
முரைநீசெயுந் திறமென்கொலென் றுறுபுன்னகை விளைக்கத்
தரைமீதெமர் வாழப்பணி செய்கேனெனத் தாழ்ந்தாள். (௧௧)

யாழுங்குழ லும்போன்மொழி யாணற்றெய்வ யானி
தாழுங்குழற் சன்மிட்டையை நோக்கிக்களி தயங்கி
வாழும்புகர் தனைநோக்கியென் மனத்தாகுலந் தவிர்ந்தேன்
சூழும்புரி சைத்தொன்னகர் செல்வேமெனச் சொல்ல. (கஉ)

சன்மிட்டையொ டோராயிர மடவார்பணி தரவே
மின்னிட்டிடை மகள்பின்வரப் புகர்கூவலை விடுத்தே
பொன்னிட்டொளி ரசுரேந்திர புரியுற்றன னென்றே
மன்னிட்டமொ டியர்சூதன்முன் வகுத்தான்முனி வரர்க்கே. (கங)

இருபத்தோன்பதாவது
தெய்வயானி சந்தோடவத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். அங௨.

முப்பதாவது
தெய்வயானி கல்யாண வத்தியாயம்.

வெள்ளிதன் வரத்தில் வந்த மெல்லியல் கல்யா ணத்தை
யொள்ளிய சதானீ கற்குச் சவுனக னுரைத்தா னென்றே
துள்ளிய மச்ச ரூபி மனுவுக்குச் சொற்ற வாறே
தெள்ளிய முனிவர்கேட்பச் செப்புவான் சூதன் மாதோ. (க)

பொன்னவிர் சுணங்கு பூத்த புணர்முலைப் புரிமென் கூந்த
லன்னமென் னடையா டெய்வ யானியா மண்ணங்கன் னாட்குக்
கன்னிசன் மிட்டையோடு மாயிரங் கருங்கட் செவ்வாய்
மின்னனு ரேவல் செய்ய விளங்குசின் னாளி லோர்நாள். (உ)

விரைசெறி மலர்ப்பூம் பைந்தார் வேய்ந்துலம் பொருது விம்மும்
வரைசெறி புயன்ய யாதி வனத்தினில் வேட்டை யாடித்
திரைசெறி நீர்பெருமற் றேடியாங் கணையு நன்னீர்க்
கரைசெறிந் துலவி யாடுங் கன்னியர் குழுவைக் கண்டான். (ங)

வானம ருடுவி னுப்பண் வளர்திங்க ளொன்றே போன்று
நானவார் கூந்தற் றெய்வ யானியாங் குறைய நண்ணி
யூனவேல் விழிச்சன் மிட்டை யுவந்தடி வருடக் கண்டு
தேனனுர் யார்கொ லென்னத் தன்மனந் தெளியக் கேட்பான். (ச)

கன்னிநீ யார்கு மாரி காலினை வருடு மங்கை
தன்னிக ரில்லா டானு ரெனவவள் சாற்று நீயார்
மன்னவர் குலத்து ளானோ மறையவர் குலத்து ளானோ
பன்னுக வெனப்பார் வேந்தன் பார்புகழ் யயாதி யென்பேர். (ரு)

அரியநால் வேத மோதி யமர்ந்திடும் பிரம சாரி
விரதம்யா னனுட்டித் தேனல் வேட்டைமேற் போந்து நன்னீர்க்
கரைதனி னுடி யுற்றே னென்ன லுங் கருமென் கூந்தல்
வரிவிழித் தெய்வ யானி மனமகிழ்ந் தினிது சொல்வாள். (சு)

விஞ்சைகள் பலவும் வல்ல சுக்கிரன் மகள்யான் மேவி
நஞ்சணி விழிச்சன் மிட்டை யசுரர்க்கு நாதன் கன்னி
யெஞ்சலி ரேழி யென்றன் பணிவிடைக் குரிய ளென்னப்
பஞ்சணி பதத்தாய் பாங்கி பணிவிடைக் கான தென்கொல். (எ)

முன்னமே வறிய கூவல் வீழ்த்திய முறையாற் றானே
யென்னிடத் தேவல் செய்தற் குரியளா யியற்று கின்றாள்
மன்னனீ யாண்டே யென்கை பிடித்தனை மற்றோ ரென்கை
தன்னையே பற்று வாரோ வெனைவேட்கை தரும மென்றாள். (அ)

இவண்முதற் பெண்கள் யாரு நின்பணி கேட்டி யென்றே
துவளுறு மிடையாள் கூறச் சுக்கிரன் புதல்வி நீயே
கவளமால் யானை மன்னர் குலத்துளேன் கருதே னென்ன
வவிரிழை வரித்தே னுன்னைப் புகரெனை யளிப்பா ரென்றே. (கூ)

பொன்னனு ளொருத்தி தன்னைத் தந்தைபாற் போக்கத் தந்தை
தன்னையே யழைத்து வந்து சார்தலு மடியிற் றாழ்ந்தே
யென்னைமுன் வலக்கை பற்றும் யயாதியா மிறைவர்க் கின்று
சொன்னநீர்த் தாரை வார்த்துக் கொடுத்தரு ளென்னச் சொன்னாள். (கO)

அவ்வுரை கேட்ட மன்ன னுள்ளத்தி லச்ச மெய்திக்
கவ்வையில் புகரைப் போற்றிக் கருதிலேன் கன்னி தன்னை
யெவ்வமி லிமார கோத்திர மியானென யயாதி கூற
நவ்வியுண் கண்ணி னுளை நல்குவேம் யாமே யென்றார். (கக)

நினக்கதிற் றோட மில்லை நீயவட் குரியை யென்றே
கனைத்துவண் டிமிருங் கூந்தற் கன்னியை விதிவ ழாமற்
புனற்பெய்து கொடுத்து நீயிப் பொருந்துசன் மிட்டை தன்னை
மனத்தினில் விரும்பே லென்று வருபுகர் வழுத்தி னுனல். (கஉ)

தகவுடைத் தெய்வ யானி தன்மணம் பெற்ற பின்னர்ப்
புகர்தனை வலஞ்செய் தேத்திப் போற்றியே விடைகொண் டேகித்
திகழ்மணி வீதி சூழுந் திருவளர் பிரதிட் டான
நகர்தனின் மனைவி யோடு நண்ணிய யயாதி வேந்தன். (கரு)

உலகெலாம் பொதுமை நீக்கி யொருகுடை நிழற்றி நாளு
மலகிலாச் செல்வந் துய்த்தே யரசிய னடாத்தி னுனென்
றிலகுநான் மறைதேர்ந் தெச்ச மியற்றுமா முனிவர் கேட்ப
நலமெலாந் தெரிந்த சூத நன்முனி நவின்று னன்றே. (கச)

முப்பதாவது

தெய்வயானிகல்யாண வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் அசகூ.

முப்பத்தோன்றுவது

யயாதிபுத்திரோற்பத்தி யத்தியாயம்.

ஒன்னலர்க் கடந்த வைவே லுயர்புகழ் யயாதி வேந்த
னன்மகப் பயந்த காதை நற்சதா னீகற் கன்பாய்
முன்னமச் சவுன கன்சொன் முறைமையை முனிவர்கேட்பத்
தொன்முறைப் புராணச் சூத முனிசொலத் தொடங்கி னுனல். (க)

புகழெனு மடந்தை செல்வப் பூமகள் வாணி விந்தை
யகலுறு தென் றுங் கூடி யமர்ந்திடும் யயாதி வேந்தன்
திகழ்மதி நுதலா டெய்வ யானியைச் சேர்ந்து நாளு
மகபதி போல வின்ப மருவியே வாழு ஞான்று. (உ)

அனநடைத் தெய்வ யானி யனுமதி பெற்ற சோக
வனமரு குறவே கோல மணிசில வமைத்து மாலே
புனேகருங் குழற்சன் மிட்டை மடந்தையைப் பொருந்த வைத்து
நினேவரு மாடை யன்ன நிரப்பியே நடத்தி னுனல். (ங)

ஆயிரங் கன்னி மாரொ டமர்ந்தசன் மிட்டை பச்சை
வேயுறு தோளி தெய்வ யானிபான் மேவி யேவ
லோய்வுறு தியற்ற வேந்த னுலம்பொரு குவவுத் தோளா
லேயுற மருவித் தெய்வ யானிபால் யதுவை யீன்றுன். (ச)

திருந்திய வருட மோரா யிரத்தொகை சென்ற பின்னர்
முருந்தன நகைச்சன் மிட்டை முதிர்முதுக் குறைவை யெய்தி
வருந்துறு நாளி லோர்நாண் மருவிய ரிதுகா லந்தான்
பொருந்தநற் கணவ னின்றிப் போயிற்றென் னிளமை யென்றே. (ரு)

மனத்துறு துயர்மேற் கொள்ள மயங்கிப்பின் மக்கட் பேறு
தனேத்தின நினேந்து காந்தற் றகவுற வரித்தி லேனு
லினித்துய ருறுவ தென்கொல் யானுமத் தெய்வ யானி
நினேத்துமுன் வரித்த வண்ணம் யயாதியை நேர்தல் வேண்டும். (சு)

என்றுதன் மனத்தி னெண்ணி யிருக்குமந் நாள்ய யாதி
துன்றிய வசோக கானத் தொருவனே தனித்துத் தோன்றச்
சென்றுமுன் வணங்கிச் சோமன் றேவர்கோன் வருணன் விண்டு
வன்றிற லியம னின்னேர் மனேயினு மனேயின் மேவி. (எ)

சார்ந்தமர் கின்ற கன்னி தன்னேயார் நோக்க வெல்லாம்
தேர்ந்தவன் குலமொ ழுக்கஞ் செய்கைநீ ரறிவீ ரும்மைக்
காந்தனு வரித்து மைந்தர் தமைப்பெறக் கருதி னேனென்
முய்ந்துமுன் கூற வேந்த னவண்மொழி தடுத்துச் சொல்வான். (அ)

சொல்லரும் விரதம் பூண்ட கன்னிநீ தூய்மை வேட்டுப்
புல்லுதற் குரியை யன்று புகர்புகன் றிட்ட வாய்மை
யெல்லை க் கடக்க லாகா தென்ன லு மெழுந்து விம்மி
வல்லெனப் புடைத்த கொங்கைச் சன்மிட்டை வழுத்த லுற்றாள். (க)

அருந்தவப் புகர்கு மாரிக் கியான்சகி யாகை யான்முன்
வரைந்துமை வரித்தாள் யானும் வரித்திட வழக்கா மன்றித்
திருந்திழை யாரை மிக்க வதுவைகள் செய்யும் போதும்
பெருந்தன முழக்கும் போதும் பேதைய ரூடற் போதும். (கo)

தன்னுயிர்க் கிறுதி வந்த காலத்துஞ் சரசப் போதுஞ்
சொன்னபொய் யதனாற் றோட மிலையெனச் சுருதி கூறும்
நன்மொழிச் சான்று கேட்கிற் பொய்சொல்ல னன்க தன்றா
லுன்னரு ளூதி யந்தா னுறிற்பொய்க ளுரைத்த லாமால். (கக)

யாவரே யெனினும் வேந்த ரிளத்தினி லிரக்கி லில்லைப்
போவென வியல்போ வென்னப் புவிபுரந் தருளு நீதிக்
காவலன் பொய்யு ரைக்கிற் கலங்குமெய்த் தருமம் யானும்
நாவினா னுரையேன் பொய்மை நாசம்வந் துறினு மென்றான். (கஉ)

அவ்வுரை கேட்டுத் துன்பத் தழுங்குசன் மிட்டை தன்னைச்
செவ்விதி னோக்கி யென்னைச் சேர்ந்தவ ரெதுகேட் டாலும்
வவ்விட வளிப்ப லென்ற மனத்தொரு விரத முண்டா
னவ்வியொண் கண்ணி யுன்ற னபீட்டமு நல்கு வேனால். (கங)

பாரிதன் மைந்த னோடு மடிமையும் பணிம ருத
காரியஞ் செய்வ தன்றிச் சுதந்தரங் கருதா ளுன்றன்
னாரியாந் தெய்வ யானி யவட்குநல் லடிமை பூண்டேன்
றேரின்மற் றவளோ டென்னைத் தெரிந்துநீ காத்தல் வேண்டும். (கச)

என்னுமம் மொழியைக் கேளா யயாதியா மிறைவ னுள்ளத்
துன்னியே மணந்து தன்மத் துறுதியிற் கூடி யேகத்
தன்னிகர் சுதனை யீன்றாள் சன்மிட்டை யென்று சூத
னன்னல வேள்வி யாற்று முனிவர்க்கு நவின்றா னம்மா. (கரு)

முப்பத்தோன்றாவது

யயாதி புத்திரோற்பத்தி யத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். அசுக.

முப்பத்திரண்டாவது

யயாதிசாப வத்தியாயம்.

தருமத் தியல்பிற் புவிமுழுதுஞ் சயிலத் தடந்தோ டனிற் றாங்கும்
பெருமைப் புகழ்சேர் யயாதிமன்னன் பெற்ற சாபஞ் சவுனகர்தா
மருமைச் செயல்கூர் சதானீக னறிய வறைந்த வம்முறையே
யிருமைப் பயன்றேர் முனிவர்க்குச் சூத முனிவ னெடுத்திசைப்பான். (க)

நஞ்சிற் கருகி வெளுத்தகன்று நளின மெனச்செவ் வரிபரந்து
மிஞ்சிக் கனகக் குழைகிழித்து மேவிக் குமிழின் மிசைமறிந்து
வெஞ்சொற் கொடுங்கூற் றுடன்பழகி வேலைப் பழிக்குந் துணைநெடுங்கட்
பஞ்சிற் பதத்தாள் சன்மிட்டை பாலற் பயந்தா ளெனப்பகர்ந்தார். (உ)

மின்னிற் சிறந்த தாதியர்கள் விரைந்து பகர்ந்த மொழிகேட்டுப்
பொன்னிற் பொலிந்த தகைத்தெய்வ யானி மனந்தான் பொருளாகி
யுன்னற் கரிய வசோகவனத் தருகா முறையு ளிடத்தெய்திக்
கன்னிக் கியல்போ சன்மிட்டை யென்று முனிந்து கழறினளால். (௩)

முனிய வெதிர்ந்து சன்மிட்டை முறையால் வணங்கி முகநோக்கிக்
கனியி னியல்பு தடுமாறிக் காமம் விரும்புஞ் சகியல்லேன்
நனிநன் முனிவன் மிகவுயர்ந்த தவத்தோ னொருவ னனகெய்த
வினிய மகவை யளிப்பாயென் றிரந்தே னிரங்கி நல்கினனால். (௪)

என்றே யுரைக்க வவன்யாவ னியல்கோத் திரமே தெனவினவக்
கன்றே யணிசெங் கைம்மானே கதிரோ னிகர்க்கு முரவோனை
யன்றே யாவ னெனக்கேட்ப வஞ்சி யொழிந்தே னென்றிடலு
நன்றே புரிந்தாய் நின்னுரைக ணவைதீர் வாய்மை யாமெனவே. (௫)

இவ்வா றுரைத்தே யெழிற்றெய்வ யானி மணக்க ணேகியபின்
செவ்வாய் மழலைக் குழவியொன்று தன்னை யுயிர்த்தாள் செவ்வாம்ப
லொவ்வா விதழ்ச்சன் மிட்டைபின்னு மிரண்டு மகவை யுயிர்த்திட்டாள்
மைவா ரிதிசூழ் புவிபுரக்கும் யயாதி வேந்தன் மனமகிழ்ந்தே. (௬)

பொன்பூத் தலர்ந்து குவிந்துவிம்மிப் புடைத்துத் திரண்டு பூரித்து
மின்பூத் தொளிர்சிற் றிடைதுவண்டு மெலிய வருத்துந் தனபாரக்
கொன்பூத் திலங்கு மயில்வேற்கட் கோதை தெய்வ யானியொடு
நன்பூத் தருநீ டண்டலையி னுப்ப னோர்நா ணண்ணினனால். (௭)

நண்ணும் பொழுது விளையாட்டு நயந்த குமரர் மூவரையுங்
கண்ணின் புறவே பார்த்திவர்க ளியாவர் குமரர் கழறென்ன
வெண்ணந் தெரிந்தாங் கரசனென்று மியம்பா திருப்பக் குமரர்தமை
பண்ணும் படிக்கங் கழைத்துமது தந்தை தாயா ரறைதியென்றாள். (௮)

தாயாங் குறையுஞ் சன்மிட்டை தந்தை யிவரே யாமென்று
வாயா லுரைத்துத் தற்சனியால் வகுத்துக் காட்டி யருகுறக்கண்
டோயா நோக்கி வேந்தனெழிற் கொப்பா மென்று மனத்தயிர்த்து
வேயார் தோளி சன்மிட்டை யிருக்குந் தலத்தில் விரைந்தெய்தி. (௯)

சீற்ற மிகுத்துக் கண்சிவந்து செவ்வா யதரந் துடிதுடிப்பக்
கூற்றிற் கொடிய வசுரர்பெற்ற கொடியை யாதல் காட்டியற
மாற்றற் கரிய முனியொருவ னளித்தான் மகவென் றறைந்தணைபொய்
சாற்றற் கரிய வஞ்சகியை நின்போற் றறையிற் காண்கிலனால். (௧௦)

வேறு

என்றுரைத் திட்ட தெய்வ யானிதன் னிணைத்தாள் போற்றி
நன்றிய லாது செய்யே னயந்துநீ வரித்த காந்தன்
தன்றிறத் தன்றி யானும் வரித்திட றகுதி யன்றாற்
றுன்றுநம் வேந்தி ராச ரிடியெனச் சொல்ல லாமால். (௧௧)

இவ்வகை யுரைத்த லோடு மேந்திழை யயாதி முன்னர்
மெய்வெயர்ப் புறவே சென்று வேந்தநீ வஞ்சஞ் செய்தாய்
கவ்வையொ டுன்பாற் சென்று மிருக்கலன் கவியின் மைந்தன்
றிவ்விய தானஞ் சேர்வ லென்றவற் றுறந்து சென்றாள். (௧௨)

வென்றிகொள் வேலி னுன்பின் மென்மொழி மொழிந்து செல்லத்
தன்றிருத் தாதை தாளிற் பணிந்தனள் வேந்துந் தாழ்ந்து
நின்றிட மகளை நோக்கி நிகழ்ந்ததென் னுரைத்தி யென்ன
வன்றுறு தன்மந் தன்னை யதன்மமே வென்ற தன்றே. (௧௩)

என்னிடத் திருவர் மைந்த ரளித்துச்சன் மிட்டை யென்பா
டன்னிடத் திரண்டோ டொன்று மகவினைத் தயவிற் பெற்றா
ருன்னிடத் துற்ற செய்தி யுரைத்தனன் யயாதியென்னு
மன்னிடத் துறுகோ பத்தாற் புகர்முறை வகுத்துச் சொல்வான். (௧௪)

இருநிலத் தறிவின் மிக்கா யென்றுனைத் தேர்ந்து பெற்ற
வரிவளைக் கன்னி தெய்வ யானியை வழங்கு மந்நாட்
புரிசுரி குழற்சன் மிட்டை போகத்தை வேண்டே லென்ற
வுரிமையை மறந்தே விட்டா யுனக்குமூப் புறுக வென்றான். (௧௫)

ஆங்கவன் வணங்கி யேத்தி யையநீ தவிர்தி கோபந்
தீங்குறு காமம் வேட்டுச் செய்திலன் ரிதுகா லத்தைத்
தாங்குறு மிராச கன்னி யென்னிடஞ் சார்ந்து போற்றி
யோங்குறு மகவைத் தன்பா லுதவென வேண்டி னாளால். (௧௬)

உரைத்ததோ ரிராச தன்மத் துறுதியை யோர்ந்தி யானும்
விரைக்கருங் குழளால் வேட்ட மென்மக வளித்தே னென்பா
னரைப்பெரு மூப்பு நீங்க நல்கியித் தெய்வ யானி
வரைப்பெருங் கொங்கைப் போக மாந்திட வளித்தி யென்றான். (௧௭)

அன்னவ னுரைப்ப வெள்ளி யறைதரு சாப மாறு
துன்னிடத் துற்ற மூப்பை யொருவர்பாற் கொடுத்து மாற்றி
மன்னுக போக மென்ன மைந்தரில் யாவ ரேனு
மென்னுடை மூப்புப் பெற்று விராச்சியம் பெறுதல் வேண்டும். (கஅ)

இத்திற முரைத்த செய்தி நன்றென வியம்பி யுன்றன்
புத்திர ரைவர் தம்மிற் பொருந்தினோர்க் கீதி யென்று
மெய்த்தவ வெள்ளி சொற்றான் யயாதியும் விடைகொண் டானென்
றுத்தம குணத்துச் சூதன் முனிவருக் கோதி னானல். (கசு)

மூப்பத்திரண்டாவது
யயாதி சாப வத்தியாயம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். அஅ0.

முப்பத்து மூன்றாவது.
யயாதி சுகர் சாப வத்தியாயம்.

மன்னிய புகழ்ய யாதி மன்னவன் வரத்தி னீன்ற
முன்னிய மைந்தர் தம்மை முனிவொடு சபித்த காதை
தன்னிகர் சதானீ கற்குச் சவுனக னுரைத்த வண்ணந்
துன்னிய முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொல்வான். (க)

நரைதிரை யணுகு மேனி நாமவேல் யயாதி மன்னன்
விரைவுட னகரிற் சார்ந்து வெள்ளிதன் புதல்வி பெற்ற
தரைபுகழ் யதுவை நோக்கித் தளர்ச்சியேற் றிளமை தந்தால்
வரையுறும் வருட மோரா யிரமின்ப மாந்திப் பின்னர். (உ)

நின்னிடத் துற்ற மூப்பைக் கொண்டுநின் னிளமை யீவே
னென்னலு மூப்புத் தாங்கி யிகழ்ச்சியொ டிளைப்பு மெய்திக்
கன்னலின் சொல்லா ரின்பங் கலத்தற்கு மரிது வாங்கேன்
மன்னிலென் னினுமன் பான மைந்தருக் கீதி யென்றான். (ங)

நொந்தவன் யதுவை நோக்கி நுவன்முடி நினக்கின் றென்றே
நிந்தனை யுறச்ச பித்து நேர்தெய்வ யானி யீன்ற
பிந்துறு குமர னான பெயர்த்துரு வசுவைப் பார்த்து
நந்திரை நரைநீ பெற்று நல்குதி யிளமை யென்றான். (ச)

துருவசுப் பிதாவை நோக்கிச் சுந்தரங் காம மாண்மை
பிரிவுறு மூப்பை வாங்கே னென்றலும் பெரிது சீறி
யருமக வின்றி யீனர்க் கதிபதி யாகி நாளுங்
குருமனை கவர்ந்து கண்ட யோனிக டோறுங் கூடி. (ரு)

துற்கன்மம் புரிமி லேச்சர் தொகைக்கெல்லா மன்னு கென்றே
யொற்கமில் சாப நல்கி யுறுபுரி குழற்சன் மிட்டை
தற்குறு குமர னென் துருகுவைத் தயவி னேக்கி
யெற்குநின் னிளமை யீந்தா லீரைஞ்ஞூ ருண்டின் பின்னர். (௬)

நரைதிரை வாங்கி யுன்ற னிளமையை நல்கி னிந்தப்
புரைதவி ருலகம் யாவும் போற்றுதற் கருள்வே னென்ன
விரிவுள பரிதேர் யானை மேற்கொளற் கரிதா யோங்கும்
வரைமுலை மகளிர் காம மாந்தர்க்கு மரிதா மூப்பு. (௭)

தாங்கிடே னெனய யாதி தழைத்திடு காமம் போக
நீங்கிப்பின் மிதவை நாவாய் நிரைத்தவ ரார்க விக்க
னோங்கிய போச னுகென் றுரைத்தனன் சாபம் விம்மி
வீங்கிய முலைச்சன் மிட்டை விருப்புற வீன்ற பின்னோன். (அ)

அனுவெனு மைந்தன் றன்னை யமையுநின் னிளமை யீந்தென்
றனுவுறு மூப்பை வாங்கிற் சாருமா யிரமாண் டெண்ணி
னினைவுறக் கழித்துப் பின்ன ரிளமையை நினக்கே நல்கிப்
புனைகுவன் மோலி யென்ன வனுவென்போன் புகல்கிற் பானுல். (௯)

மூப்புறிற் காலை நீரின் மூழ்கிமா மகத்தை முற்றி
நாப்பெறு சுவையின் றுய்த்தற் கரியவா நயவே னென்னச்
காப்பரு மித்துன் பத்துட் பட்டிக்கா தலர்கண் மாளத்
தீப்பொறி விழியிற் சிந்தத் தினந்தினம் வருந்திச் சோர்வாய். (௧0)

என்றுவெஞ் சாப மீந்தே யிளையவன் பூரு வென்பான்
றன்னையே முகத்தை நோக்கிச் சுக்கிரன் றந்த சாப
மொன்றிநின் னிளமை யீந்தா லுவந்தொரா யிரத்தி னுண்டு
சென்றபி னிளமை யோடுந் திருவர சுனக்கே யீவேன். (௧௧)

ஒன்றிய வென்றன் மூப்பைத் தாங்குதி யுரவோ யென்னத்
தன்றிருத் தாதை தாளிற் பணிந்துநீ தயவு கூரத்
துன்றுமென் னிளமை யீந்தேன் மூப்பெனைச் சூழ்க வென்றான்
வென்றிகொள் யயாதி வேந்தன் விருப்பினுற் புகல லுற்றான். (௧௨)

என்மன மின்ப மெய்த விசைந்தனை யிதனு னுளு
முன்மக வனைத்தும் வாழ்வுற் றுயர்புவி முழுதுங் காக்கப்
பொன்மணி மகுட மென்றும் பொருந்துக வென்று னென்றே
தொன்மைசால் வேள்வி யாற்று முனிவர்க்குச் சூதன் சொன்னுன் (௧௩)

முப்பத்து மூன்றவது
யயாதி சுதர் சாபவத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். அ௧௩.

முப்பத்துநான்காவது

பூருபட்டாபிடேக வத்தியாயம்.

மட்டாரும் வாகை மாலை வணிபுயப் பூரு வுக்குப்
பட்டாபி டேகஞ் செய்த பான்மையைச் சதானீ கற்கு
முட்டாது சவுன கன்சொன் முறைமையை முனிவர் கேட்ப
வட்டாத சாபு ராண மறைமுனி யருள்செய் வானல். (க)

மன்னிய பூரு மெய்யி னிளமையை மகிழ்ந்து வாங்கித்
தன்னுடல் பொருந்து மூப்பை யவனுட றழுவ வைத்துப்
பொன்முடி யயாதி வேந்தன் பூவையர் போகந் துய்த்தே
யிந்நிலஞ் சிறக்க வாண்டாண் டாயிர மிருந்தா னன்றே. (உ)

தேவர்கட் கியாகத் தாலும் பிதிர்கட்குச் சிராத்தத் தாலும்
பூவுல குற்று வாழும் பூசுரர் முதலி னோருக்
காவன திருத்தி யாக வளித்துமா நுலருக் கீந்துந்
தாவரு கள்வர்ச் செற்றுந் தனிக்குடை நிழற்றி னானல். (௩)

தருமத்தின் வழிதப் பாது புரந்தரன் றனையத் தொன்னூர்
செருமத்திற் றதியில் வென்றுந் திகழ்மறை மனுவிற் சொன்ன
கருமத்தி னுறுதி யாற்றி யாசைகள் கழிந்த பின்னர்ப்
பருமத்த யானை வேந்தன் பூருவைப் பார்த்துச் சொல்வான். (௪)

அறிவினாற் றெளிவாற் சொல்லும் வாய்மையா லன்பான் மிக்க
நெறியினா லமைவாற் பூத யவினா னிகழ்த்தும் பொற்பிற்
குறியினாற் பொறையால் ஞானப் புணர்ப்பினாற் குணத்தா னீதிச்
செறிவினா லொழுக்கந் தன்னான் மனுமுறை தேர்ச்சி தன்னால். (௫)

புத்தியாற் பிறர்க ளுள்ளப் புணர்ப்பறி வினயந் தன்னான்
மத்தமா தங்க மேறும் வகையினா லிரத மேறித்
தத்துவாம் பரிந டாத்துந் தகைமையாற் கலினப் பாய்மா
வித்தகக் கதிக டேர்ந்து வியப்புறு பயிற்சி தன்னால் (௬)

வில்வலிப் பிண்டி பாலம் வேல்தண்டங் குலிச மீட்டி
சொல்வலிப் பிடையங் கைவாண் முசுண்டிதோ மரம்வாள் தோட்டி
கல்வலிக் கவண்க டாரி கப்பண முசலம் வாங்கு
கொல்வலிப் பரிகஞ் சூலங் குந்தஞ்சக் கரங்கை யம்பு. (௭)

முதலிய படைகள் யாவும் பயிற்சியா னென்னார் மோலி
சிதறிடப் பொருது வெம்போர்க் களத்தினிற் செந்நாய் காகங்
கதழெரிப் பேழ்வாய்ப் பூதங் கழுகுவே தாளஞ் சம்பு
விதம்வித முண்டு தேக்க விருந்துண வருத்து நீரால், (௮)

சதுமறை கணிதங் காமந் தத்துவஞ் சரநூல் ஞான
முதுமொழி வாக டஞ்சொன் மூவறு புராண நீதி
பொதுமொழி தருக்கஞ் சுத்தம் பூததந் திரமெ ணைத்தும்
விதிமுறை பயின்று தேர்ந்த மேன்மையாம் விஞ்சை தன்னால். (கூ)

நின்னையொப் பவர்யா ரிந்த நீள்புவி வான்பா தாளத்
தென்னையே சிறக்க வைத்துன் னிளமையை யீந்தென் மூப்பி
னுன்னுட றளர்ச்சி யெய்த வுவப்பினு னுவப்பி னுற்று
யன்னையை யொப்பா மன்பி னத்தனே யுரைப்பல் கேண்மோ. (க0)

கார்விடங் கக்கும் பேழ்வாய்க் கனல்விழிக் கவைநாச் சூட்டுப்
போர்முகத் தாயி ரந்திண் புகழ்முடிப் பாந்த ளேந்திச்
சீர்மிகும் படத்தி னேங்கச் சிறப்பொடு மினிது தாங்கும்
பார்மனுத் திறத்தா லிந்நாள் காறுமே பரித்தல் செய்தேன். (கக)

பழுதுறு மமைச்சு நீக்கிப் பரிவுடை யமைச்சு நாட்டி
வழுவிலா நீதி நூலின் வழிமறை யோர்க ளாதி
யொழிவினற் றவர்க ளீறு யாவரு முவப்பச் செய்துஞ்
செழுமணி மார்பன் முக்கட் சிவன்பூசை சிறப்ப செய்தும். (கஉ)

சீலமா தவர்கள் செய்யு மருந்தவஞ் சிறந்து வாழக்
கோலமா ரறந்த ழைக்கக் குவலயஞ் செழிக்க நித்தம்
பாலனஞ் செய்தும் வேங்கை பசுவுமோர் துறைநீ ருண்ண
ஞாலமா தகம்பூ ரிப்ப நடுமுறை நெறிவ ழாமல். (கங)

இப்பெருப் புவியைத் தாங்கு மிலக்கண முடையோ னீயென்
றொப்புர வோர்ந்தே யிப்போ துவப்பினின் னிளமை யீந்தேன்
வெப்புறு முதிர்ச்சி யானே விருப்பின்மேற் கொண்டு மேன்மை
செப்பிய தவத்திற் செல்வா னென்னுளத் தெண்ணி னேனால். (கச)

என்னுரை தவறு வண்ண லிவ்வர மெனக்கே யீந்து
மன்னிநீ டூழி காலம் வாழ்புவிப் பாரந் தாங்கித்
துன்னுபூ மறையோர் மன்னர் வணிகர் சூத்திரர்க ளாதி
பன்னிய சனர்க ளெல்லாம் பரிந்துநீ யளிக்க வேண்டும். (கரு)

சுக்கிர னந்நாள் சாபஞ் சொற்றிடு காலை யென்னை
நெக்குறு மூப்பைப் பன்னு ணேற்றுமே நேர்ந்து பெற்ற
மக்களி லொருவன் பால்வைத் தவன்றன்வா லிபத்தை வாங்கி
மிக்கநல் லிளமை யோடும் வேண்டுநா ளின்பந் துய்த்தே. (கசு)

மனத்துறு மாசை தீர்ந்து ஞானம்வந் துற்ற போது
நினக்குறு முதுமை தாங்கி நேர்ந்தவர்க் கிளமை யோடுங்
கனத்தபொன் மோலி யீந்து கடற்புவி காக்க வைத்துப்
புனத்துறு வனத்தி னெய்தி நற்றவம் புரிதி யென்றான். (கஎ)

ஆதலான் மைந்த வென்ற னனுக்கிர கத்தி ஞனீ
தீதறுன் னிளமை பெற்றுச் சிறந்தவிவ் வுலகந் தாங்கி
மூதறி வுடனே வாழ்ந்து மூவுல கத்து ளோர்நின்
னீதியைப் போற்றி யேத்த நீடூழி வாழி யென்ருன். (கஅ)

என்றலுந் தந்தை பாதத் திணைக்கம லத்திற் ருழ்ந்து
வன்றிற லுரவோ யெற்கிவ் வகையெல்லா முரைப்ப தென்னே
துன்றநீ யென்பால் வைத்த மூப்பினுற் றுயரொன் றில்லேன்
கன்றிலேன் முன்ன மீந்த விளமையைக் கருதே னென்றும். (கசு)

அய்யநீ யடியேன் மீதி லளித்திடுங் கருணை தப்பா
துய்யவே யருள்வா யென்ன வுறுதிசொன் மகவை நோக்கிச்
செய்தவங் குன்று மென்சொன் மறுத்தியே லென்று சீற
வெய்துயிர்த் தலக்க ணெய்தி விரைந்தடி வீழ்த லோடும். (உ௦)

கையினு னெடுத்துக் கட்டிக் கருணைகூர்ந் துச்சி மோந்து
மெய்யுற வணைத்து மூப்பை மேற்கொடு விருப்பின் மைந்தற்
கையுறு திளமை நல்கி யரியமா மோலி சூட்ட
வையக மறியும் வண்ண மகிழ்முர சறைந்திட் டானுல். (உக)

முரசுறு குணிலி னேசை முழைச்செவி புகுத லோடு
மரசர்மந் திரிமார் சேனைத் தலைவர்க ளறிஞர் மேன்மை
யுரைசெயுங் குரவர் நாட்சொல் புரோகித ருலகோர் யாரும்
விரசியே யாதி வேந்தன் முன்வந்து விருப்பி னேடும். (உஉ)

மனுமுறை தவறி லாத மன்னனீ யெதுவி னேடு
தனுசெறித் துருவ சுப்பேர் சாற்றிய துருகு மற்று
மனுவிவர் முன்னர்த் தோன்ற லவர்க்கன்றிப் பின்னர்த் தோன்றும்
புனைமலர்ப் பூரு வுக்குப் பொன்முடி சூட்ட லென்கொல். (உ௩)

தருமத்தின் முறைவ ழாத தன்மையோ யதன்ம மான
கருமத்தை நீயே செய்யிற் கழறுவ தென்கொ லொன்னூர்
பருமத்த யானை மத்த கம்படப் பிளக்கும் வேற்கை
மருமத்தார் வேந்த வென்றே துதிநிந்தை வழுத்தி னூரால். (உச)

வழுத்தலும் யயாதி வேந்தன் மந்திரித் தலைவர் மற்றும்
விழுத்தக வுடையோர்ப் பார்த்து வெள்ளிசா பத்தின் செய்தி
முழுத்ததன் னுள்ளத் துள்ளன் முயற்சிமூ தறிவு யாவும்
வழுத்தியே யுரைத்தா னந்த வாய்மைகேட் டன்னோர் சொல்வார். (உரு)

பன்னுமெம் மொழிகள் யாவும் பழுதுநீ பொருந்தி வெள்ளி
முன்னமே யுரைத்த சாப மன்றியு முதல்வநாளு
நின்னுளத் திருத்தி யீதே நிகழ்த்துவ தென்கொ னீதி
மன்னநின் னுள்ளத் தெண்ணு மகிழ்ச்சியே மகிழ்ச்சி யென்றும். (உசு)

எம்மனோர்க் குரைத்த பூருக் கறிகுண மியற்கை யாவுஞ்
செம்மையே தவறென் றில்லைச் செய்து நீ முடிக்க மன்னர்
வம்மினென் றருளு கென்று மரபுளோர் மற்றோர் யாருந்
தம்முளத் தருத்தி யோடுஞ் சாற்றினர் யயாதி வேந்தன். (௨௭)

மெய்புள கித்தே யந்த வேதிய ராதி யானோர்
செய்பரு வங்கள் யாவுந் திறத்தொடுஞ் செப்பி யோதும்
பொய்யிலா மறையோ ராய்ந்து பொருந்துநாண் முகூர்த்தம் பார்த்து
வையகத் துள்ளோர் யாரும் வம்மினிந் நாளி லென்றே. (௨௮)

முடங்கல்கள் போக்க வந்தார் முன்னிய கங்கை யாதித்
தடங்கட னீரும் வானிற் றயங்குமா னதமாம் வாவி
யிடங்கொணன் னீரு மற்றை நதிநதத் திலங்கு நீரு
மடங்குபுட் கரணி வாவி முதலிய வசும்பி னீரும். (௨௯)

கொடுவர மனிதர்ப் போக்கக் கொணர்ந்தனர் பதிகள் யாவும்
கடிமுர சறைந்து வாழை கமுகுதோ ரணங்க ணட்டி
முடிபுனை மண்ட பத்தை முதிர்தவ மனைக ளாலும்
வடிவுறு சொன்னத் தாலு மகிழ்ந்தலங் காரஞ் செய்தே. (௩0)

ஆயிரங் கம்ப நாட்டி யமைந்தமண் டபத்தி னுப்பண்
காய்கதிர்க் கிரணங் கோடி யுதித்தது கடுப்பப் பத்தி
பாயரி யணையொன் றுங்கண் பதிவுற வமைத்து மாலைத்
தூயநற் சரங்க டேக்கித் தூநறும் புகைக ணட்டி. (௩௧)

ஓரைநன் முகூர்த்தம் பார்த்தே யயாதியா முரவோ னண்ணிப்
பூருவைக் கொணர்மி னென்ன வருதலும் பொற்பி னன்னீ
ராருற வாட்டிச் சுத்த வத்திர மணிகள் பூட்டி
யேருறு மண்ட பத்தி னரியணை மீதி லேற்றி. (௩௨)

பேரிமல் லாரி பம்பை பெருந்தவி னவுரி சின்னம்
பூரிகை தவளச் சங்கம் பொருகுட முழவு கொம்பு
தாரைமத் தளம்வீ ராணந் தவண்டைகா களஞ்சே கண்டி
வார்கடன் முழக்கி னார்ப்ப மங்கலத் திசைக ளோங்க. (௩௩)

மணிமுடி கொணர்மி னென்று வாங்கியே யயாதி வேந்த
னணியணி பூரு வுக்கங் கழகுற மோலி சூட்டிக்
கணிதமின் மகிழ்ச்சி யோடுங் காளையா னனத்தை நோக்கித்
திணிபுவிப் பாரங் காத்துச் சிறந்துநீ டூழி வாழ்தி. (௩௪)

என்றுவாழ்த் தெடுத்து வாழ்த்தி யிருநிலஞ் சிறப்ப வாழ்ந்து
துன்றிய மறையோ ராதி சொற்றிடு சாதி பேதத்
தொன்றிய மாந்த ரெல்லா முவப்புறத் தாய்போற் காத்து
நன்றிகொ ளுயிர்கள் யாவு நயம்பெற வளித்தி யென்றும். (௩௫)

வானுல கத்திற் றேவர் மகிழ்ந்திட வேள்வி யாற்றி
யூனமில் பிதிர்கட் கெல்லா முவப்புறச் சிராத்த மீந்துந்
தானநான் மறையோர்க் கீந்துந் தரணிவாழ் சனங்கட் கெல்லா
மானநற் பொருள்க ளீந்து மனந்தநாள் வாழ்தி யென்றான். (கசு)

என்றலும் வானோர் வானி லெழுந்துபூ மாரி பெய்தார்
நன்றுபூ மறையோ ரெல்லா மாசிக ளனேகஞ் சொன்ன
ரொன்றிய தாரை சின்ன மொலித்தபல் லியத்தி னோதை
துன்றின திசைக ளெட்டுஞ் சூழ்கட லார்ப்பி தென்ன. (கஎ)

நாடுறு யயாதி வேந்தன் பூருவை நயப்பி னோக்கிக்
கோடுறு தரசர் நீதி குறையற நடாத்தென் றுள்ளம்
வாடுறு தருளி வானப் பிரத்தமாந் தவசின் மன்னிக்
காடுறு மிமையச் சார னண்ணினன் கதிக ணாடி. (கஅ)

புகழுறு யயாதி வேந்தன் பொருப்பிடஞ் சார்ந்து பன்ன
டுகளறு தவங்க ளாற்றிச் சொற்றிடு பதவி சேர்ந்தா
னிகழ்கதை யாவும் பின்னர் நிகழ்த்துவா நெடுநீர் வாரி
யகழுறு புவிதொ டங்கி யரியணை யமர்ந்தான் பூரு. (கக)

செவ்வரி பரந்து மைதோய் செவியிடைப் புகுந்து மீண்ட
நவ்வியொண் கண்ணி தெய்வ யானியா நங்கை முன்னர்த்
தவ்வலில் பெற்ற மைந்தன் யதுவென்போன் றரணி காக்குங்
கவ்வையொன் றில்லா னாகிக் கருதும்யா தவனை யீன்றான். (உ0)

கொடுமரங் குழைய வாங்கிக் கூறுமொன் னார்கள் சேனை
படுகளம் பட்டு வீழப் படுத்திடும் வலியின் மிக்க
வடுவகிர்க் கண்ணார் மோக மதனனாந் துருவ சுத்தா
னிடுகொடுஞ் சாபத் தானே யவனனை மகவாய்ப் பெற்றான். (உக)

கழைசுளித் தொன்னா ராவி கருதியே யுண்டு சாடி
விழைவொடு களத்திற் காளி விருந்துண வெம்போர் செய்யு
மழைமதக் களிற்றிற் செல்லுந் துரியுரு மன்னன் முன்னர்ப்
பழவினைச் சாபத் தானே போசனைப் பயந்திட் டானல். (உஉ)

பனுவல்கள் பலவுந் தேர்ந்து பகைஞரைப் படையில் வெல்லுந்
தனுவலி யுடையோன் வில்வே டனக்குநே ரழகு வாய்ந்தோன்
மனுநெறி யயாதி வேந்தன் வழங்குசா பத்தி னானே
யனுவெனு மைந்தன் றானு மிலேச்சனை யரிதிற் பெற்றான். (உங)

பூருவென் றுரைக்கும் வேந்தன் புகழொடு வான்பா தாளம்
பாருல கனைத்துஞ் செங்கோல் பரிவொடு நடாத்தி யொன்னார்
நேருறு காலை யன்னார் நெடுமுடி தடிந்து வெற்றித்
தார்புனை பவுர வப்பேர்த் தனையனைப் பெற்றா னன்றே. (உச)

வரிசிலை கரத்தி லேந்தி வலியநாண் குழைய வாங்கித்
தெரிகணை விடுத்துச் செற்றார் மணிமுடி சிதறச் செய்தும்
புரிகொலை களவு கன்னம் பொய்பிழை தவிரச் செய்து
மரியணை மீதிற் பூரு வமர்ந்துவீற் றிருந்தான் மன்னே. (சரு)

விண்ணவர் திசைகாப் பாளர் விரும்பியே களிக்க யாகம்
பண்ணியே திருத்தி செய்தும் பாருறு மறைவல் லோர்க
ணண்ணவே பொருள்கள் யாவும் வேண்டுவ நயப்பி னீந்து
மண்ணிலா துலர்கட் கீந்து மகிழ்ச்சியொ டரசு செய்தான். (சசு)

மண்ணிநிற் பகைகள் வென்ற தன்றியு மறைவல் லோரை
யெண்ணிலா திடரு செய்யு மசுரர்தம் முடல மெல்லாம்
புண்ணுறப் பிளந்தும் பொல்லாத் தயித்தியற் போரிற் செற்று
நண்ணிலா ரில்லை யென்ன நாசமே புரிந்திட் டானால். (சஎ)

வானவ ரசுரர் திண்டோள் வலியிராக் கதர்க ளோடு
மூனமில் வெம்போ ரேற்றங் குடற்றியாத் தலர்க ளாகித்
தானவர்க் கிடைந்தோ நின்னைச் சார்ந்தன மென்ன வொன்னார்
சேனையைக் கடிந்து காப்ப லெனச்செப்பித் தேர்மே லேறி. (சஅ)

திசைதொறுஞ் செலுத்தித் தேவர் தங்களுக் கிடுக்கண் செய்தே
வசையுறு பகைக ளெல்லா மாண்டிடச் செற்றுத் தேவர்
நசையுறப் பிரீதி செய்து நல்வர மவர்பாற் பெற்று
விசையமொ டிருந்து பூரு வேந்தர சியற்றி னானால். (சகூ)

தரியல ரகந்தை நீக்கித் தனிமணி மகுட கோடி
பரியணைப் புறத்தில் வீழ வவர்திறை கொணர்ந்து போற்றக்
கரிபரி யிரதங் காலாள் கணிதமில் சேனை காவல்
புரிதரு முழவர் சூழப் பூருவீற் றிருந்தான் மன்னே. (ருo)

கடுவெனக் கறுத்து வெண்மை யமுதென வெளுத்துக் காதைத்
தொடுவன நீண்டு வாரி விரிவெனத் துலங்கி மாவின்
வடுவகிர் கண்ணி னார்கண் மயங்குற வனப்பின் மென்பூ
விடுகணை மதனவே ளென்ன விளங்கிவீற் றிருந்தான் பூரு. (ருக)

கச்சினை யறுத்துக் கைக்கு ளடங்கிடாக் களிநல் யானை
யச்சுரு கொம்பை வென்று குடமென வழகுவாய்ந்து
வெச்செனக் குளிர்ச்சி யென்ன விளங்குகார் வேனிற் காலத்
திச்சைகூர் தனத்தார் வேண்டி விரும்பவீற் றிருந்தான் பூரு. (ருஉ)

திங்கண்மும் மாரி பெய்யச் சிறந்தநற் குடிக ளோங்கப்
பங்குறு மாறி லொன்று கடமையைப் பரிவின் வாங்கி
மங்குறு தரசு செய்து மனுநெறி முறைவ ழாமற்
புங்கமாஞ் செங்கோ லோச்சிப் புவியெலாம் பரித்தான் பூரு. (ருங)

பற்றலர்க் கிடியே றென்னப் பகர்தரும் பிரசை யானோர்க்
குற்றநற் றாயே போல வுலகெலா மொருகோ லோச்சி
வெற்றிகூர் மாலை வேய்ந்து வேலினை நிகர்க்குங் கண்ணா
ரற்றமோர்ந் தாசைகூர வனங்களை நிகர்த்து வாழ்ந்தான். (ருச)

ஆரியன் பூரு வென்பா னரியணை மீது வைகிப்
பேரிய வுலகம் யாவும் பிழையறச் செங்கோ லோச்சிக்
காரியத் தியற்கை குன்றா தாளுநாள் கலைமாள் சீறு
மூரிவெம் புலியுங் கூட முறையிலோர் துறைநீ ருண்ணும். (ருரு)

திரைபொறி முத்தந் தானே சிறந்துவா லுக்குன் றேய்க்குங்
கரையினிற் குருகு கோடி கருவுயிர்த் தடைகள் வைகும்
விரைசெறி கடப்ப நீழல் வியப்புறு வாரி சூழ்ந்து
தரையொரு குடைக்கீ ழாண்டு தனியர சிருந்தான் பூரு. (ருசு)

தாதலர்த் தொடையல் வேய்ந்து தண்குடை நிழற்று மேன்மை
மூதறி வுடைய பூரு வேந்தனீண் மோலி வேய்ந்து
கோதற வுலகை யாண்டு கூர்ந்தினி திருந்தா னென்று
மாதவ முனிவர் கேட்பச் சூதனே வகுத்திட் டானல். (ருஎ)

முப்பத்து நான்காவது
பூருபட்டாபி டேகவத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் கூரு௦.

முப்பத்தைந்தாவது
யயாதிசுவர்க்கஞ் சேர்ந்த வத்தியாயம்.

நிவப்புறு புகழின் மிக்க யயாதியா நிருபன் மேலாஞ்
சுவர்க்கம துற்ற செய்தி துகளற மொழிதி யென்றே
யுவப்புற மகங்க ளாற்றி யொருவனை யுளத்தி லுன்னுந்
தவப்பெறு முனிவர் கேட்பச் சாற்றுவான் சூதன் மாதோ. (க)

புனைமணி மகுடஞ் சூட்டிப் பூருவை வைத்த பின்னர்க்
கனைகழல் யயாதி வேந்தன் கானிடைத் தவங்க ளாற்றி
யினையவா னுலக மெய்தி யிருக்கவிந் திரன்பொ ருமல்
வினயமாய்க் கேட்ட சொல்லை மெய்யென விளம்ப லோடும். (உ)

வாசவ னிகழ்ந்து பாரின் வீழ்க்கவந் தரத்தின் மன்னிக்
காசறு வசுமா னட்ட கன்பிர தத்தன் சீரத்
தேசுறு சிபியோர் நால்வர் தம்முடன் சிலசொற் பேசி
மாசறு தவத்தோன் மீட்டும் வானுல கடைந்தா னன்றே. (௩)

கேட்டன மென்ன வாய்மைச் சவுனகர் கிளத்த லோடு
நாட்டிய புகழ்ய யாதி தவமுத லான நண்ணுங்
கோட்டமில் கதைவி ரித்துக் கூறெனுஞ் சதானீ கற்குத்
திட்டமுத் தரய யாதம் விளங்கவே செப்பு வேனல். (௪)

சொற்றநற் பூரு வுக்குத் துலங்குபொன் மகுடஞ் சூட்டி
நற்புவி நாப்ப ணுள்ள நானிலம் புரக்க நல்கி
மற்றுள பாரி சத்தின் மகிதலம் யதுவே யாதி
வெற்றிசேர் புதல்வர் நால்வர் புரந்திட விருப்பி னீந்தே (௫)

அருந்தவ மனத்தி னுன்னி யருமறைக் கிழவ ரான
பெருந்தவத் தினர்பாற் சென்று பிதிர்கட்குப் பிரீதி செய்வான்
பொருந்துநாட் சிரார்த்த நாந்தி புரைதபப் புரிந்து வேதந்
தெரிந்திடும் வகையே யவ்ய கவ்வியஞ் சிறப்பச் செய்தான். (௬)

பிதிர்கடன் முறைக ளாற்றிப் பிறைநுதன் மனைவி யோடு
மதிர்கழல் யயாதி வேந்த னருவரைச் சார லெய்திச்
சதுமறை முனிவோர் சூழத் தகுமிடந் தெரிந்து நோக்கிப்
புதியநற் பன்ன சாலை பொற்புற வமைத்திட் டாங்கண். (௭)

ஆசனம் விரித்து மீதிற் சமாதியி னமைந்தே யன்பிற்
காசறு மனைவி செய்யும் பணிவிடைக் கரும மாற்றித்
தேசிக ருரைத்த வண்ண மட்டமா சித்தி யோக
நேசமொ டிருந்து சித்தி யாகவே நிகழ்த்தி னானல். (௮)

உதிர்நெல்லுப் பொறுக்கி யுஞ்ச விருத்தியோர்ந் தாற்றி யந்தப்
புதுநெல்லுப் பசுவுக் கூட்டிக் கோமயம் புனலிற் பெய்து
கதுமெனக் கரைத்த நெல்லைக் கழுவியே யுலர்த்திக் குற்றி
யதிலுறு மரியை யட்டுப் பூசுரர்க் கருத்தி யுண்டும். (௯)

உறுமமா வாசை நாளி லுபவாச மாற்றி மற்றை
மறுதினங் கவள மொன்று மதித்துண்டு பின்னுட் டொட்டு
நிறைபவு ரணமட்டாக நித்தமோர் கவளங் கூட்டிக்
குறைவின்மூ வைந்து நாளு முண்டுகூ ரபர பக்கம். (௧௦)

வந்தநாள் பிரத மைக்கோர் கவளத்தைக் குறைய வாங்கி
நந்தலில் துதி கைநாளுக் கதிலொன்று குறைத்து நன்னா
ளுந்திய திரிதி கைக்குங் கவளமொன் றுவப்பிற் றள்ளிப்
புந்திகூர் சதுர்த்திக் கொன்று தள்ளியே புசித்துப் பின்னாள். (௧௧)

பஞ்சமி தினத்தி னொன்று தள்ளியே கவளம் பத்து
மெஞ்சிடப் புசித்துச் சட்டி தினத்தினிப் பத்தி லொன்றை
விஞ்சையிற் றள்ளி யொன்பான் கவளத்தை விரும்பி யுண்டு
செஞ்சொல்சத் தமிநா ளெட்டுக் கவளமே சிறக்க வுண்டும். (௧௨)

அட்மி கவள மேழு மடுத்துறு நவமி ஞான்று
மட்டுறு கவள மாறு மறுதினந் தசமி நாளி
லிட்டமாங் கவள மைந்து மருந்தியே காத சிப்பேர்
தொட்டநா ளுபவா சந்தான் றுலங்கவே யாற்றிப் பின்னர். (கங)

துவாதசி தினத்தி னூலு கவளமே துய்த்து மற்றை
யவாவுறு பதின்மூன் றூநா ளருந்துக கவள மூன்றை
யுவாமுதற் சதுர்த்த சிக்க ணுறுமிரு கவளந் துய்த்துத்
திவாமதி சேரு ஞான்று தேர்ந்துப வாச மாற்றி. (கச)

இவ்வகைத் திங்க ளொன்று மியற்றிடி னிதன்பேர் தானுஞ்
செவ்வைகொள் சாந்தி ராய ணம்மென்பர் திகழிவ் வாறு
துவ்வமு தருந்திக் கோடி சொற்றசாந் திராய ணந்தா
னவ்வியொண் கண்ணி ணுள்செய் பணிவிடை நயந்து செய்தான். (கரு)

நண்ணிய சமாதி யோக நாடுறு நியமத் தோடும்
பண்ணியே சித்தி யான தற்பினற் பனுவ றேர்ந்த
திண்ணிய யயாதி வேந்தன் றெளிவொடு மனத்தி னெண்ணிப்
புண்ணிய தினங்க டோறும் பொருந்துப வாச மாற்றி. (கசு)

மனமொருப் படுத்தி யைந்து புலன்வழி மனம்போக் காது
சினநசை மற்ச ரஞ்சேர் மதமோகஞ் செப்பும் யாவுங்
கனவினு மணுகா வண்ண மொழித்துளக் களிப்பி னேடும்
புனலினைப் பருகி யாண்டாண் டாயிரம் போற்றி னூல். (கஎ)

வலதுகால் விரலை யூன்றி யாயிரம் வருட நின்று
நிலமிசை யிடது காலி னங்குலி நிரப்பி நின்றும்
புலனொருப் படுத்தி யாண்டோ ராயிரம் பொருந்தி நின்று
மலகிலாத் தவங்க ளெல்லா மாற்றினன் புகழின் மிக்கான். (கஅ)

ஆர்புன லருந்தி மூந்நூ றுண்டருந் தவங்க ளாற்றிப்
பார்புகழ் பஞ்ச கவ்யந் தன்னையே பருகி நித்தங்
கூர்தரு மூந்நூ றுண்டு குறைவிலா தாற்றி நின்று
கார்மழை பொழியுங் கால நினைந்துளங் கலங்கா நின்றே. (கக)

வாயுவைப் புசித்து நூறு வருடநற் றவமே யாற்றி
யேயநற் சருகு பன்னம் புசித்துமோ ராண்டி யற்றித்
தூயநற் புசிப்பை யெல்லாந் துறந்துமா யிரமாண் டாற்றிக்
காய்கதிர்ப் பருதி தன்னைக் கண்ணினு னோக்கி நின்றும். (உ0)

ஐந்தழ லுப்ப னோராண் டருந்தவ முளுற்றி யிவ்வா
றுந்துமா தவங்க ளெல்லாங் குறையற வுஞற்றிப் பின்னர்
நந்தலில் சுவர்க்கஞ் சேர்ந்தான் யயாதிநல் வேந்த னென்றே
பந்தமின் முனிவர்க் கெல்லாம் பகர்ந்தனன் சூதன் மாதோ. (உக)

முப்பத்தைந்தாவது

யயாதி சுவர்க்கஞ்சேர்ந்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கூஎக.

முப்பத்தாறுவது

யயாதி இந்திர சம்வாத அத்தியாயம்.

எழுவுறழ் தோள்ய யாதி யிந்திர ஞெடுசம் வாத
மொழிதரல் வேண்டு மென்னும் முதிர்தவச் சதானீ கற்குப்
பழுதறு சவுன கன்சொற் படியிது வென்னச் சூதன்
வழுவற வேள்வி யாற்று மாதவர்க் கோத லுற்றான். (க)

எரிகதிர் மணியிற் காந்தி யிளவெயி லெறிப்ப வோங்கும்
புரிசையுப் பரிகை மாடம் புனையெழிற் றெற்றி மிக்காய்
விரிதரு சினக ரங்கள் வியப்புற விசுவ கன்மன்
றெரிவுற நிருமித் துள்ள தெய்வலோ கத்தி னெய்தி. (உ)

ஆயிர மணிப்பொற்றூண மமர்ந்தமண் டபத்தி னுப்பண்
ஞாயிறு விளங்கிற் றென்ன நண்ணிய யயாதி வேந்தன்
சேயிரு விசும்பி னும்பர் மருத்துவர் சிறந்த சாத்தியர்
மாயிரு ஞாலம் போற்று முனிவரும் வழுத்தி யேத்த. (௩)

இன்பமுற் றினிது பன்னு ளிருந்தபின் பிரம லோகத்
தன்பொடு மளப்பில் கால மமர்ந்துபல் போகந் துய்த்துப்
பின்புவா னுலக மெய்தி யிந்திரன் பெரிது போற்றி
நன்பெருஞ் சிறப்புச் செய்ய நயந்துபாங் கிருந்த ஞான்று. (௪)

காதைகள் பலவுங் கேட்ட புரந்தரன் கருதி யுன்றன்
மேதகு புதல்வன் பூரு வியன்முடி புனைந்த போது
நீதிநீ யுரைத்த வண்ண நிகழ்த்துதி யெனய யாதி
வேதியர் விரும்பப் பூமி முறைசெய விளம்பி னேனால். (௫)

தெண்டிரை கொடுத்த கங்கைத் தீர்த்தவான் கரைக்குத் தென்பா
லெண்டிசை புகழ நீடும் யமுனையின் வடபா லுள்ள
மண்டல முனக்குத் தந்தே மற்றிதன் மருங்கிற் பூமி
தண்டலி னினக்கு முன்னோர் தாங்குதற் குரிய ரென்றேன். (௬)

கோபமேற் கொண்டி டாதார் கூறிய பெருமை யுள்ளார்
தாபம்வந் துறினுந் தங்கண் மானுடந் தவறி லாதார்
பாபமே தவிர்க்கு நன்னூல் பயின்றுளா ரிவர்கள் பார்க்கோர்
தீபமாய் விளங்கு வாரிச் செய்கைநீ யறிதி யென்றும். (௭)

யாவரோ யெனினுங் கோபத் திகழ்ந்திடப் பொறுத்தோர் வைதோர்
மேவிய தருமம் யாவுங் கவர்ந்துதம் மீதிற் பாவ
மோவுற வற்றனுக் கிவோ ரொருவன்செய் பாவந் தன்னை
நாவினு னுரைக்க லாகா கொடியன நவில லாகா. (அ)

சிறந்துளோன் றன்னைச் சற்றுந் தீங்குற விகழ்த லாகா
வறந்தழைத் திடாதான் றன்னை யளியனென் றுரைக்க லாகா
மறந்தழைத் தச்சஞ் செய்யும் வன்மொழி யுரைக்க லாகா
நிறம்பிளந் திடவே கோப மொழிகளை நிகழ்த்த லாகா. (கூ)

வாக்கினுற் கொடியன் றன்பான் மலர்மகண் மகிழ்ந்து செல்லா
டாக்குறுந் தடந்தேர் வேந்த சற்சனந் துதிக்க வேண்டு
நீக்கமி லுயிர்கள் யாவு நிரந்தரம் புரக்கவேண்டு
மூக்கமுள் ளவர்கள் செய்கை யொழுக்கமே வளர்க்க வேண்டும். (கo)

நேசநல் வசன மீகை சத்திய நித்தம் வேண்டு
மாசிலா மேலோர் தம்மை மகிழ்ந்துபூ சிக்க வேண்டுந்
தேசமுஞ் சிறப்ப நீதி செய்திட வேண்டு மென்று
மாசற வுரைத்த நீதி யறிவித்தே னவனுக் கென்றான். (கக)

தெரிந்திடு தரும நீதி சிறந்தநல் லொழுக்கம் யாவும்
புரிந்திட யயாதி வேந்தன் பூருவுக் குரைத்தே னென்ன
வுரம்பெறு மகவான் கேட்ப வுரைத்தன னென்று சூதன்
வரம்பெறு முனிவர்க் கெல்லாம் வகுத்தனன் றொகுத்து மாதோ. (க௨)

முப்பத்தாறவது

யயாதி இந்திர சம்வாத வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கூஅரு.

முப்பத்தேழாவது

யயாதி

சுவர்க்கம்விட்டு விழுந்த அத்தியாயம்.

திரையெற்றிய கடல்வாயுறு திகழ்மச்சநல் லுருவா
யுரைபெற்றிடு திருமான்முன முயர்வானில்ய யாதி
தரையுற்றிடு வகைமாமனு தனக்கோதிய படியே
புரையற்றுயர் முனிவர்க்கெதிர் சூதன்புகல் குவனால். (க)

கானத்தொடு தேன்மொய்த்திடு கமழ்கற்பக நீழல்
வானத்தவர் தொழவாழ்வுறு மகவானரு குறையு
ஞானத்தவ வடிவீனய யாதிக்கெதிர் நவில்வான்
மோனத்துயர் தருமாதவ நின்போலெவர் முயல்வார். (௨)

நேருற்றெதிர் பொருவோருர நிணநெய்த்தொளிர் வேலோய்
பாரிற்புரி மகமெய்த்தவம் பகரப்படு வாய்மை
தேரிற்பொலி ஞானத்தொடு சீரைத்தரு நீதி
காரைப்பொரு கொடைமற்றுள கருமத்துனை நிகராய். (௩)

கடல்சுற்றிய புவியிற்பிறர் கருதற்கெவ ருரையென்
றிடவெற்றிய யாதிப்புர வலனும்மெதிர் சொல்வான்
புடவிக்குள்விண் ணகருக்குண்மெய் புகழ்பாதல வைப்பிற்
றிடமுற்றவ ரிலரெற்கெதி ரெனமேன்மை தெரித்தான். (௪)

என்றிப்படி புகலச்சுரர் பணியிந்திர னிசைப்பான்
வென்றித்தவ முனிவோருயர் விண்ணோரை யிகழ்ந்தே
நின்றொப்புயர் வாகப்புக னிலையிற்றவ மெல்லாங்
குன்றிப்பவ மொன்றிக்கதி குலையத்திரை வீழ்வாய். (௫)

என்னைப்பெரி யவர்தம்மை யிகழ்ந்தேனுப வரத்தா
னுன்னர்க்கரி தாமிப்பத மொழியப்புவி வீழ்வே
னன்மைத்தவ முடையாரவை நண்ணப்புரி கென்ன
மன்னித்தவ முயல்வோரெதிர் மருவப்பெறு கென்றான். (௬)

வேறு.

புகழ்பெறு பெரியோர் தம்மைப் போற்றுத லின்றிச் சற்று
மிகழ்தலைச் செய்ய லாகா தென்பதை யறிதி யென்றே
யகழ்கடல் வரைப்பிற் போகென் றறைதலும் யயாதி முன்செய்
துகளறு தருமஞ் சின்னாட் டுய்த்துவா னீங்குங்காலை. (எ)

நல்வினை யணுக லாலட் டகன்பிர தத்த னன்சீர்
புல்லிய வசுமான் கீர்த்திச் சிபியுடன் புகன்ற நால்வர்
மல்கவை மீதே வீழும் யயாதிதன் வதன நோக்கி
வில்லுமிழ் வயிரத் திண்டோ ளட்டகன் விளம்ப லுற்றான். (அ)

யாவனீ யரியோ காந்தி யிரவியோ விமையோர் வேந்தோ
தேவர்கட் கவியை நல்குந் திகழழற் கடவு ளேயோ
தாவிலா யயாதி யேயோ வெனுமையந் தவிர்ந்தே யுன்றன்
பாவக மறிய வேண்டிப் பகர்ந்தன னென்று பின்னும். (௯)

இருளினை யகற்ற வல்ல விரவியே போலும் பொல்லாத்
துரிசினை யறுக்க வல்ல சுடுதழற் கடவுள் போலும்
புரிசரா சரங்கட் கெல்லாம் பூமியே போலு நெஞ்சில்
விரிவுறு துன்புற்றோர்க்கு மேவுநல் விருந்தே போலும். (௰)

விளங்கிடு முருவத் தோடும் விண்ணிடை மேவு முன்னைக்
களங்கமின் மகவா னேனுங் கருதுதற் கெளிதோ சற்றுந்
துளங்குத லொழிந்து துக்க மோகமுந் துறந்தே யச்ச
முளங்கொளா திவணீ யுற்ற காரிய முரைக்க வேண்டும். (கக)

நீதியாய் நின்னை யாங்கள் பூசனை நிகழ்த்த வேண்டு
மாதலாற் கேட்கின் றேனென் றட்டகன் புகன்ற தெல்லாம்
போதமார் சதானீ கற்குச் சவுனகன் புகன்று னென்று
சூதமா முனிவன் சொன்னான் றூயநற் றவத்து ளோர்க்கே. (கஉ)

முப்பத்தேழாவது
யயாதி சுவர்க்கம் விட்டு விழுந்த அத்தியாயம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௬௬௫.

முப்பத்தெட்டாவது

யயாதி அட்டக சம்வாத வத்தியாயம்.

மட்டலர் வாகை வேய்ந்த வளர்புய யயாதி மன்ன
னட்டக னுடுசம் வாத மானதை யறைதி யென்ன
வெட்டுட னிரண்டு தேர்ந்த விருந்தவ முனிவர் கேட்ப
முட்டறு கேள்விச் சூத முனிவரன் மொழிகு வானால். (க)

நேர்ந்தெதிர் முகமன் கூறு மட்டக னிலைமை நோக்கித்
தேர்ந்தநற் புகழ்ய யாதி தேவர்கோன் சபையின் முன்னர்க்
கூர்ந்துயர் தவத்தின் மிக்காய்க் கூறியும் பெரியோர் தம்மை
யோர்ந்திடா திகழ்ந்தும் யான்செ யுயர்தவ மனைத்துங் குன்றி. (உ)

இப்புவி வீழ்வேன் யான்செய் தவத்தினு மெதிர்வந் துற்றேன்
றுப்புறு வயதில் யான்மூப் பாதலாற் றெழுத னீத்தே
னொப்பறு கல்வி ஞானந் தவமுயர் சனனத் தானு
மெய்ப்புறு பெயர்ச்சி யுள்ளேன் யாவர்க்கு மேன்மை யாவேன். (௩)

என்றுரைத் திடலும் பின்ன ரட்டக னிசைப்பான் மூப்ப
தன்றியுங் கல்வி ஞானந் தவத்தினு மதிக நீயே
வென்றிகொள் பெரியோ யென்னத் தருமத்தின் விபரீ தந்தா
னென்றிய பாவந் தன்ம முனுற்றுவோ ருளுற்று விப்போர். (௪)

துதித்திடற் சூரியர் சிட்டர் செய்வினை துட்டர்க் காகா
மதித்திடும் பொருள்க ளிம்மைக் கன்றியு மறுமைக் காகா
விதித்திற மறிந்து தன்மஞ் செய்பவன் மேலோ னென்றே
கதித்திறம் யயாதி கூற வட்டகன் கருதிச் சொல்வான். (ரு)

நவிலுமிவ் வுலகிற்றெய்வ வசத்தராய் நண்ணு வோர்கள்
குவிவுறு நன்மை தீமை கூர்ந்திடின் மகிழ்தல் குன்ற
றவிர்தலே செய்கை யென்னத் தளர்ந்திடேன் மகிழ்ச்சி கூரே
னவிரொளிப் பிரம தேவ னமைத்ததே யமையு மென்பேன். (சு)

நால்வகைத் தரும மெல்லா நண்ணிய கரும மேதுய்த்
தாலுறு சுபாவத் தன்மை யடைந்திடு மாகை யால்யான்
மேல்வரு கரும மெண்ணி விசாரத்தை யடையே னென்று
சால்புறு யயாதி கூற வட்டகன் சாற்று மன்றே. (எ)

ஞானத்தின் கூறு யுள்ளோய் நாடிநீ நண்ணு லோகத்
தானத்தின் வகையே யெல்லாஞ் சாற்றுக வெனய யாதி
யூனத்தை யுஞற்றி டாதிவ் வுலனெலாம் புரந்த பின்னர்
மோனத்தின் றவத்தை யாண்டோ ராயிர முயன்றிட் டேனுல். (அ)

முயன்றிடு தவத்தாற் றெய்வ வுலகத்தை முற்றி யாங்க
ணுயர்ந்திடும் பத்து நூறு வருடமாங் குறைந்து மேன்மேற்
பயன்றரு பிரம லோகப் பதத்தினிற் பத்து நூறு
நயம்பெறு வருட மேவித் தேவர்த முலக நண்ணி. (கு)

ஆங்கவ ருறையுந் தானத் தமர்ந்தவர் பூசை செய்யப்
பாங்குடன் மனத்தின் வேட்ட பதவிக டொறும்யான் வைகி
தேங்கமழ் மலர்க்கா வெய்திச் சிறந்திடும் பத்தி லக்க
நீங்கரும் வருட நண்ணி நிலவுநற் போகந் துய்த்தே. (க0)

துய்த்துறு பொழுதிற்றேவர் கோனவை துன்ன வன்னேன்
மெய்த்தவர் நின்போல் யாவர் விளம்பென விதியால் யானும்
பொய்த்திடாப் பெரியோர் தம்மைப் புகழ்செயா திகழ்ந்த வாற்றாற்
பைத்தலை யரவந் தாங்கும் பாரிடை வீழ்தி யென்றான். (கக)

சொல்லிய போதில் யானுஞ் சுரர்களுக் கிறையைப் போற்றி
வல்வினை வயத்தாற் புத்தி மயங்கியீ துரைத்தேன் மிக்கா
நல்லவை நாப்பண் வீழ நல்கென நல்க வுங்கள்
வில்லமு லோமத் தூம வழியினில் விரைந்து வேந்தன் (கஉ)

வந்துறுந் தவங்கள் வேள்வி வாய்மைநல் லறிவு செய்கை
புந்திநல் விரத மேன்மை போற்றிய குணங்கள் யாவும்
முந்துற வறிந்தே யுள்ள மகிழ்ந்தனன் முறையி னென்று
சிந்தைதேர் யயாதி வேந்தட் டகற்குரை செய்கா னன்றே. (கரு)

பற்றுறு பாச மேனும் படர்களைப் பறித்து ஞானத்
துற்றுறு பயிரை யோங்க வளர்த்திடுந் துரியா தீத
நற்றவர் மகிழ்ந்து கேட்ப நறைவிரி கடுக்கை மாலை
யுற்றசெஞ் சடையோற் போற்றி யுரைத்தனன் சூதன் மாதோ. (கச)

முப்பத்தெட்டாவது
யயாதியட்டக சம்வாத வத்தியாயம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் சooகூ.

முப்பத்தோன்பதாவது

கர்ப்பசொரூப விசார வத்தியாயம்.

தோற்றுமெய்க் கருப்பத் துற்ற சொருபத்தின் வகைகள் யாவும்
போற்றுமட் டகனுக் கன்றே புகழ்பெறும் யயாதி வேந்த
னாற்றலொ டுரைத்த வண்ண முனிவர ரருள்வா யென்ன
நீற்றொளி பழுத்த மேனி நெடுந்தவச் சூதன் சொல்வான். (க)

புனிதமா மகங்க ளாற்று மட்டகன் புகல்வான் சொற்ற
மனுநெறி முறைவ ழாமன் மன்னுயி ரனைத்துங் காத்துத்
தனிமதிக் குடைநி ழற்கீழ்த் தராதலம் புகழ்ந்து மேன்மை
நனிபெறு தேவ லோக மாதியா முலக நண்ணி. (உ)

நந்தன வனத்திற் பத்தி லக்கமாண் டினிது நண்ணி
விந்தைகூர் நாம ரூப மேவியே துய்த்து மீட்டு
மிந்தமா நிலத்தி லுற்ற கார ண மெவன்கொ லென்னப்
பந்தமில் யயாதி வேந்தன் பரிவுடன் பகரு மன்றே. (ங)

சொற்பொரு ளில்லான் றன்னை யாவருந் துறக்கு மாபோற்
பற்பல தவங்கண் மாண்பாற் றேவர்தம் பதியை நீக்கி
முற்படு புவியிற் றள்ளி முனிருவ ரென்ன லோடும்
விற்பொலி சுவர்க்கந் தன்னின் மேவினோர் தரும மாளில். (ச)

எப்படி யாவ ரப்பா லெவ்வுல கடைவ ரென்னச்
செப்பிய வட்ட கற்குத் தேர்ந்துணர் யயாதி சொல்வா
னெப்புறு புவியென் றோது நரகத்தி லோல மிட்டுக்
குப்புற விழிந்து தத்தங் கொடுவினைக் கீட தாக. (ரு)

நரியொடு கழுகு காக்கை தின்றிட நண்ணு மாக்கை
திரிவுறப் பெறுவா ரற்றுற் றெளிந்துளோர் தீங்கு செய்யார்
பரிவொடு தருமஞ் செய்த னன்றென்றுன் பரத்தி னின்றும்
விரிதரு முலகி யாக்கை மேவியே விளங்குஞ் செய்கை. (சூ)

புவிமிசை வீழுங் காலத் தளவைமெய் பொருந்துந் தானந்
தவறிலா மாதர் கர்ப்பந் தன்னினுற் பவித்த ஞன்கு
நவிலுக வெனய யாதி மன்னவ னயந்து சொல்வான்
பவவினைக் கருமத் தான்மெய் படைத்துப்பா ருலவு வாரால். (எ)

விண்ணினின் றிழிந்து பூமி தன்னிட மேவுங் கால
மெண்ணிலா றயுதத் தோடு மெண்பதாண் டென்ப ராங்கட்
கண்ணில்வெவ் வழலைச் சிந்தும் வெள்ளெயிற் றரக்கர் கைபட்
டுண்ணிறை யழித லாலிவ் வுலகமு நிரைய மென்பார். (அ)

பிறங்குமா காயம் வாயுப் பிருதிவி யிருக்க நன்னீர்
திறம்படு மிந்த வைந்துந் தானத்தின் வழியிற் சேர்ந்தே
யறம்பிழை யாம லாண்பா லமர்ந்துசுக் கிலத்தி னேடு
திறங்கிளர் பெண்பான் மாத ரிதுவந்து நிகழுங் காலே. (கூ)

கருப்பத்தில் வாயுச் சேர்க்குங் கரசர ணாதி யான
வுருப்பெற வளரு மென்ன வுலவிமுன் னுள்ள வாக்கை
யிருப்பெனக் கருப்பந் தன்னின் மேவுமோ வதனை விட்டுத்
திருப்பிவே றுருவ மாமோ சேர்ந்ததே கத்தி லங்கம். (க0)

நிறைவொடு குறைவு சக்கு வாதியிந் தியங்க ணீதி
குறைவறு ஞான மெவ்வா றுதிக்குமிவ் வகையைக் கூறென்
றறைதர யயாதி வேந்த னட்டகன் றனக்குச் சொல்வா
னுறையுமான் மாவி லிங்க தேகத்தி னேடு நேர்ந்தே. (கக)

நேர்ந்தசோ ணிதத்தி னேடு நிகழ்ந்தசுக் கிலத்தை வாயு
கூர்ந்திடு கர்ப்ப கோள கைக்குளே கூட்டக் கர்ப்ப
மார்ந்திட வளர்ந்தே யிந்த வவனியிற் பிறப்பன் பின்ன
ரோர்ந்திடச் சோத்தி ராதி யிந்தியத் துணர்ச்சி பெற்றே. (கஉ)

சத்தமா தியதா யுள்ள விடயத்தை யறிந்து சாற்றும்
வித்தக மான சீவன் விளங்கிய சரீர மிக்காய்
வைத்தவிப் புவியி னேங்கி வளர்வதாச் சரிய மென்றே
பத்தியா னறிவா யென்ன வட்டகன் பகரு மாலோ. (கங)

மரித்திடின் யாக்கை யோடும் வன்னியிற் புகுமோ மண்ணிற்
பரித்திடி னெரியி னுன்மா விருக்குமோ பரத்திற் போமோ
தரித்திடற் கரிதாய் மாண்டோ னெவ்வகை யுடலிற் சார்வன்
விரித்துரைத் திடுதி யென்ன யயாதியாம் வேந்து சொல்லும். (கச)

மன்னிய வாழ்நாண் முற்றி லுறங்குமா போல மண்ணிற்
றன்னுடல் கிடத்தி யான்மாத் தான்செயுங் கருமந் தானே
முன்னதாக் காட்டத் துய்க்கும் வினையுடன் முறையி னண்ணித்
துன்னரு முலகந் தன்னை வாயுவின் றுணையிற் சேர்ந்தே. (ரு)

செய்ததீ வினையி னோடு நல்வினைப் பயன்க டீர்ந்தா
லெய்திய புவியிற் றத்தம் வினைவழி யெடுப்பன் சன்ம
மைதரு கடல்சூழ் பாரின் மருவிய சனன பேத
மெய்தரு திறத்தை முற்றும் யாவரே விளம்ப வல்லார். (கசு)

ஆயினுந் தருமஞ் செய்தோ ரரியமா னிடர்கோ வாதி
யேயுறு சனனத் தெய்தி யிலங்குவ ரிழிவு செய்தோர்
நாய்நரி முதல நான்கு பதத்துறு மிருகம் பட்சி
தீயபுன் புழுக்க ளோடு தத்துறு செந்து வாவார். (கஎ)

என்றவவ் யயாதி தன்னை யட்டக னினிது நோக்கித்
துன்றுமெக் கரும நல்ல வுலகத்தைத் துணைவிற் சேர்க்கு
நன்றறி தவமோ மிக்காய் நவையறு கல்வி தானோ
வொன்றினை யொன்றச் செய்யு முறையென வுரைக்கு மாலோ. (கஅ)

தவந்தன்மந் தானம் லச்சை சமமொடு தயவு வாய்மை
யுவந்தவிவ் வேழுஞ் சொர்க்கத் துறும்வழி யென்பர் மேலோர்
நிவந்தவச் சமந்த வத்தி னிற்பவன் பிரம சாரி
பவுந்தனை யொழிக்குந் தானங் கிருகத்தர் பண்ப தாமால். (ககூ)

தருமமா தவங்கள் வானப் பிரத்தன்சன் யாசிக் காகு
முரிமையா மிலச்சை வாய்மை யுற்றிடு தயவிம் மூன்றும்
பெருமையாச் சிரமர் நால்வர் பேணுதற் குரிய வாகுங்
கருமைமயஞ் ஞானத் தோர்வான் கடைப்பிடித் தணுகார் மன்னோ. (உo)

வேதசாத் திரங்கள் வல்லான் மிகத்தனை வியந்து மற்றோர்க்
கேதமே யுரைக்கிற் கல்வி யிணங்கிய தவமும் போமா
லோதலோ மத்தைச் செய்தல் வேள்வியை யுஞற்றன் மோனந்
தீதறக் கேத மின்றிச் செய்திடன் மிக்கா மன்றே. (உக)

அகந்தையஞ் ஞான மற்றோ ரவனியிற் பெரிய ராவர்
மகந்தனி விரதந் தான மறையினை யோத னான்கு
முகந்திடு பலனை யெண்ணு தனுற்றுதல் கரும மாசை
மிகுந்திடப் புரியிற் சன்ம மேவிடு மென்பர் மேலோர். (உஉ)

தெளிதரு ஞானத் தோடு பிரமத்தைத் தெரிந்து ளோர்க
ளொளிர்தரு முத்தி வீடிங் குறுவர்மற் றவரைச் சேர்ந்தோ
ரளியராய் வாழ்வ ரென்றே யட்டகற் குரைத்த தெல்லா
நளிதவ முனிவர் கேட்ப நவின்றனன் சூதன் மாதோ. (உ௩)

முப்பத்தோன்பதாவது

கர்ப்பசொரூப விசாரவத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கo௩உ.

நாற்பதாவது

ஆச்சிரமதன்ம வத்தியாயம்.

திருவிற் பொலியாச் சிரமத் தெளிவைச்
சுருதிப் பொருண்மா றுகொடீர் மனுவுக்
குருவுற் றிடநன் குரைசெய் நெறிமை
யருமைச் சூதன் முனிவர்க் கறைவான். (௧)

திகழ்பெற் றிடுமாச் சிரமத் தினுளோர்
தகளற் றுயர்நற் கதிதுன் னுதலை
நிகழ்வுற் றிடுமட் டகனேர் சொலெனப்
புகழ்பெற் றபயா திபுகன் றிடுமால். (௨)

பிரமச் சரியத் துறுபெட் புடையோன்
குருவைத் தொழுதோ தல்குறிப் பையறிந்
தரிமைத் தொழில்செய் தலுறங் கியபின்
றருநித் திரைசெய் தவர்தா மெழுமுன். (௩)

புலர்கா லையெழுந் தடிபோற் றுதறன்
னிலையா கியவிந் தியநிக் கிரக
முலையா மைமனக் குழைவுற் றிடுதன்
மலையா மைமறத் தொழிதந் திடுதல். (௪)

விதிபெற் றிடுகா லமெலாம் விரகின்
மதிபெற் றிடவோ துதல்வண் மையதாந்
துதிபெற் றவில்வாழ் வுதுலங் கிடுவோ
னிதியைத் தருமத் தொடுநே டிடுதல். (௫)

மகமாற் றுதலாற் றவகுத் திடுத
றுகடீர் தரவோ துதல்சொற் றிடுதல்
புகழே பெறவீந் தறம்போற் றிடுத
லகமே வதிதிக் கனமே யிடுதல். (௬)

பிறர்சொத் தைவியந் துபெரு தொழித
லறமுற் றிடுசெய் கையதா மடைவிற்
றுறவுற் றுவனத் திடைதுன் னிடுவோ
னிறைநெற் கதிர்நின் றுதிர்நெற் கவர்தல். (௭)

அந்நெற் கொடுவந் ததிதிக் கிடுதல்
பின்னர்ப் பதினா றுபெறுங் கவளந்
தன்மெய்க் கிடருன் பரபீ டைவிடல்
கொன்மைத் தொழில்கூர் தல்விடுத் திடுதல். (௮)

வனமுற் றிடல்வீண் டொழின்மாற் றிடுதல்
சினம்விட் டிடலின் னவைசெய் கைதா
நினைவுற் றசன்யா சநிகழ்த் திடுவோ
னனமிக் கவர்பிட் சையருந் திடலாம். (கூ)

ஒருநன் மனையுண் டலொழித் திடுதன்
மருவும் மனைதற் குவடுப் பொழித
றெரியிந் தியநிக் கிரகந் தெளிதல்
புரிபற் றுவிடுத் தருள்பூண் டிடுதல். (க0)

பொய்யே நினையா துபுகன் றிடுதல்
மெய்யே யுணர்வோ ரொடுமே விடுத
னெய்யோ டுணுநே யமொழிந் திடுத
னையா துதனித் தலநண் ணிடுதல். (கக)

துறவித் தொழில்பூண் டிடுமுன் றுறவா
யுறுநட் பினர்பாந் தவியத் திலு ளோர்
கறைபெற் றிடுகன் னியர்கா தலர்தம்
முறையைக் கருதா துமுனிந் திடுதல். (கஉ)

வனமுற் றுயர்நீண் மரமூ லமதிற்
றினமுற் றுறுநித் திரைவிட் டுயருங்
கனநற் பிரமத் தினையே கருதல்
புனையற் பொழுதைத் தனிபோக் கிடுதல். (கங)

முதிர்நற் றுறவிக் கிவைநன் முறையா
மதியுற் றிவைநா ளும்வழா துசெயிற்
பதிவுற் றிருபத் தொருதலை முறையுங்
கதிபற் றிடநற் கதிகாட் டுவனால். (கச)

முனிதன் மமுமோ னமுநீ மொழியென்
றினிதேத் தியயா தியிசைத் திடுவே
னனிமன் னியகா னகநண் ணினுமூர்
தனிலூ ணுறிலன் னதுதா னகரே. (கரு)

நகர்மே விடுவோ னவைதீர் துகிலுந்
துகடீ ருடலோம் பிடுநற் சுகமும்
பகரா தரவார் பயில்வு மிடமார்
அகமே வதியன் புமொழித் துறுதி. (கசு)

ஒருமெய்ப் பொருளே யுணர்விற் பழகி
யருமைத் தவமே செயுமங் கவனுக்
கிருமைத் திருநன் னகரெய் திடினுங்
கருமைப் பொழில்சேர் கரனைத் தருமே (கஎ)

காமந் தருவன் கலையைம் புலனுஞ்
சேமம் பெறநிக் கிரகஞ் செய்தே
நாமம் பெறுதன் மனநாட் டமமைத்
தேமம் பெறுசொன் னியமத் தியல்பாய். (கஅ)

இவ்வா றமையும் மிவனே முனிவ
னவ்வா றறினற் கதியே யடைவான்
செவ்வா கியமெய் திகழக் கழுவித்
தவ்வா நகையைத் தவளஞ் செய்தே. (கக)

உயிரைக் கொய்துள் ளுறுகண் மிடமாய்த்
திகழ்வுற் றிடுசந் நியாசஞ் செய்வோன்
புகழ்பெற் றிடுநற் கதியிற் புகுதா
னகிலத் துறவோர் தொழுதற் கமையான். (உ௦)

உயர்மா தவத்தா லுடலூன் வற்றத்
தயவார் சுகதுக் கமுமோர் சமமாய்
மயறீர் பசுப்போல் வாயா வினிதுண்
டியலார் மவுனத் திசைவோன் மவுனி. (உக)

எல்லாப் பதத்து மின்பந் துய்த்துப்
பொல்லாப் பிறவிப் புணரித் தொடரி
னில்லான் பரத்தி னிற்பா னென்றே
வல்லா னட்ட கனுக்கும் வகுத்தே. (உஉ)

இன்ப யயாதி யெடுத்துரை செய்த
நன்பொருள் யாவையு நன்னய மாகப்
பொன்புரை வேணிபு னைந்தருள் சூத
னன்பொடு மாதவ ருக்கருள் செய்தான். (உ௩)

நாற்பதாவது

ஆச்சிரமதன்ம விதி யத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௦௫௫.

நாற்பத்தோன்றுவது

யயாதி பிரதத்தன் சம்வாத வத்தியாயம்.

தன்னிக ரில்பிர தத்தன் வேந்தற்கு
மன்னனும் யயாதிக்கும் வருசம் வாதமா
மன்னெறி யினையெமக் கறைதி யீண்டெனத்
துன்னிய முனிவர்க்கு சூதன் சொல்லுமால். (௧)

ஏர்பெறும் யயாதியை யிறைஞ்சி யேத்தியே
சீர்பெறு மட்டகன் செப்பு வானெழி
லூரிடத் திருந்துதான் மனத்தி னெண்பொரு
ளாருறும் யோகிவீ டடைதன் முன்னரே. (௨)

வனத்திடை மன்னியூர் வழங்கு மொண்பொரு
டினத்தயின் முனிசுதி சேர்த றிண்ணமோ
வெனப்புகழ் மேவும்ய யாதி சொல்லுவான்
புனத்துறு பொருள்களைப் புசித்து நாடொறும். (௩)

இல்லறத் துறுபவ ரிடத்து மன்னியும்
பல்பல போகத்திற் பற்றி லாமலே
நல்லெழி னகரத்தி னண்ணு மாமுனி
யொல்லையின் முத்திவீ டுறுவன் றிண்ணமே. (௪)

தழைவுறு யோகத்தைத் தாங்கிப் பின்னரும்
விழைவினிற் கருமத்தை விரும்பி மீட்டுமுட்
குழைவொடு நேர்ந்துமுன் கூர்ந்த யோகத்தை
யிழைதரு முனையுமோர் கதியை யெய்துவான். (௫)

மனத்திணிற் பாவமே வைத்து மாண்பின
ரெனத்தவ மியற்றுவோ ரிழைத்த மாதவந்
தினைத்துணை யாயினும் பலத்தைச் சேர்த்திடா
வினைக்கொடு நிரயத்தில் வீழ்த்து மென்பரால். (௬)

பொய்யுரைத் திடுவதே புன்மை போற்றிய
மெய்யுரைத் திடுவதே மேன்மை மேவினேன்
வையகத் திருந்தவன் சமாதி வானுளோர்
செய்தரு பூச்சியஞ் சேர்வ னென்பரால். (௭)

உறுபொரு ளின்றியே யூணி ழந்துமெய்
வறியனும் விரதத்தின் வரம்பி னண்ணினேன்
பெறுபல னடைகுவ னென்று பேசுறு
மறிவுடை யயாதியை நோக்கி யட்டகன். (௮)

சொலத்தகும் வாலிப சுந்த ரத்தொடு
மலர்த்துணர் மாலிகை யணிந்து நண்ணினீர்
நலத்தகு முலகெது நண்ணு திக்கெது
செலத்தக வனுப்பிய தேவர் யாவரே. (கூ)

நீர்புகு வ்மைப்பினி னீடு புண்ணியப்
பாரக முண்டுகொல் பகர்தி யென்னலுஞ்
சீர்தரு புண்ணியஞ் சிதைந்து திண்புவிக்
கூர்தரு நிரயத்திற் குறுகி னேனரோ. (க0)

இத்திற முங்களுக் கியம்பி நன்றவத்
துத்தம சபைநடு வுறுவ லுற்றிடி
னத்தகை யவரெமை யளிப்ப ரென்றுவான்
மெய்த்தரு மரசைமுன் வேண்ட னல்கினன். (கக)

என்னலு மட்டக னெனக்கு மூவுல
கன்னவற் றியல்புற வமைத்த துண்டுகொல்
பன்னுக வென்னவிப் பாரி லாமுதன்
மன்னிய விலங்கினேன் வருத்த தத்தனே. (கஉ)

புண்ணிய வுலகமுண் டென்று பொற்புறு
மண்ணலாம் யயாதியு மறைய வட்டக
னெண்ணுறு தவத்தினு னெனக்க மைத்துள
கண்ணுறு புண்ணிய வுலகங் கைக்கொண்டே. (கஙு)

இப்பெரும் புவியினி லிறங்கண் மாற்றிநீ
யப்பெரும் பதவியை யணுகு வாயெனத்
துப்புறு குலத்துளோன் றொன்மை நான்முறை
கைப்பொருள் கொடுத்துளேன் வாங்கல் கைக்கொளேன். (கச)

பிரமனன் மரபுளோர்க் கோடல் பெற்றியா
மரசநற் குலத்துளோர்க் கடாது கைக்கொளல்
விரிகடற் புவியின்முன் போல வேட்டவர்க்
கருநிதி கொடுத்துமே லுலகை யண்ணுவேன். (கரு)

வேறு

என்று புகன்ற யயாதியை யன்பொடு மினிதேத்தி
நன்றிகொள் காசியில் வாழ்பிர தத்த னரபால
னொன்றுமு வுலகி லெனக்கொரு புண்ணிய வுலகுண்டேல்
வென்றிகொள் வேலோ யின்றுணை யென்ன விரிப்பானுல். (கசு)

எத்தனை யுலகமு மும்பரி லுளவவ் விடனெல்லா
முத்தம மாயொவ் வொன்றினி லேழிட முளவாகு
மத்தலம் யாவு நறுந்தே னெய்பா லாறோடு
நித்திய மாகு நின்வர வென்றெண நேசிக்கும். (கஎ)

என்னும் யயாதியை வாழ்பிர தத்த னெதிர்பார்த்தென்
றன்னுயர் தருமத் துறுமூல மெல்லாந் தந்தேன்யான்
மன்னுக பதவியி னென்ன யயாதியு மகிழ்கூர்ந்து
நன்னில மன்னவன் யானத னூற்கொள னன்றன்றால். (கஅ)

செய்வினை வழியே தெய்வ வசத்தாற் றீங்குற்றால்
வையக மீதினின் மெய்வழி நிற்பார் வழிதப்பா
ரையமி லாதே நல்வினை நவமா யாராய்ந்தே
யுய்வகை செய்குவ னென்றன னென்றா னுயர்சூதன். (கக)

நாற்பத்தோன்றாவது
யயாதிபிரதத்தன் சம்வாத வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் க௦௪௪.

நாற்பத்திரண்டாவது

வசுவான் சிபியுடன் சம்வாத அத்தியாயம்.

புவிபுகழ் யயாதி வேந்தன் புனைகழல் வசுமா னோடுஞ்
சிவியொடு நிகழ்ந்த சம்வா தத்தினைத் திருமா லன்பி
னவில்புகழ் மனுவுக் கன்றா னவின்றவா நவில்கென் றும்பர்க்
கவியருண் முனிவர் கேட்ப வருந்தவச் சூதன் சொல்லும். (க)

மருவுகத் தமன்றன் பாலன் மன்னிய வசுமா னென்பேர்
திரிபுவ னத்தி லெற்கோர் சிறந்தநல் லுலக முண்டேற்
பரிவுடன் பகர்தி யென்ன யயாதிமன் பருதிச் செங்கேழ்
விரிகதிர் விளக்கும் பூமி யத்தனை விரிவுண் டாமால். (உ)

புண்ணிய வுலகம் யாவு நின்வரல் போற்று மென்ன
நண்ணுமென் றவத்தினுற்ற வுலகெலா நல்கி னேன்யா
னண்ணுக வறிதே கொள்ள லன்றெனிற் றிரண மேனு
மெண்ணுறு கிரய மாக வீந்தவ ணெய்து மென்றே. (௩)

பரிவொடு வசுமான் செப்பப் பாலனு வாடும் போதும்
புரிவுறு பெரும்பே றன்றிப் பொய்யிலை கொள்ளே னென்னத்
தெரிவினன் பெற்ற லோக முமக்கெனச் செப்பி விட்டேன்
மருவிடேன் கிரயந் தானம் வகுத்துநீ வாங்கி லாயேல். (௪)

பொதுவுல காத லானீ பொருந்துதற் குரித்தா மென்று
மதிபெறு வசுமா னென்னு மன்னவன் சொற்ற பின்னர்த்
துதிபெறும் யயாதி வேந்தன் றூயவாண் முகத்தை நோக்கிக்
கதிபெறு முசினன் மைந்தன் சிபியெனுங் காளை வேந்தன். (ரு)

முப்பெரும் புவனந் தன்னி லென்றவ முயற்சி யாலே
யொப்பினல் லுலகமுண்டே லுரையென மனவாக் கானு
மெய்ப்புறக் கணித்து விள்ளற் கரியவாய் விரிந்து மின்போற்
றப்பிலா விளக்க மாகித் தழங்குறு மியத்தி ளேடும். (சு)

சீர்பெறு துறக்கந் தன்னிற் புண்ணியஞ் சிறந்த லோக
மேர்பெற வனேக முண்டென் றிசைத்தலு மின்று மக்கே
கூறுமவ் வுலகம் யாவுங் கொடுத்தனன் கொள்ளா யேனு
மார்வம்வைத் திடவல் லேன்யா னடைந்துறு மெனய யாதி. (எ)

இந்திரன் றனக்கு நேரா யிசைபெறுஞ் சிபியு னக்கு
நந்திடா தனந்த லோக நண்ணுமா போல வெற்கும்
விந்தையா மனந்த லோக மிருந்தன விழைவால் யானீ
தந்திடக் கொள்ளே னென்ன வட்டகன் சாற்று மாலோ. (அ)

அன்பொடு யாங்க ளுல்லர்க் கமைந்தநல் லுலக மெல்லா
மின்புற வுனக்குத் தந்தோ மிசைதிநீ யினிமே லெங்கண்
முன்புறு முனக்கே யார்வ முழுதறக் கொடுத்தி லேமேற்
றுன்புறு நரகந் தன்னைத் துய்த்துழன் றிடுது மென்றான். (கு)

என்றலும் யயாதி வேந்த னெனக்குப்பே ராசை யில்லை
நன்றியி னெற்குத் தக்க தீந்திடு நவைதீர் தன்மைக்
கொன்றிய தளித்தன் மிக்கா முலப்பிலா தளிக்க லாகா
துன்றுமட் டன்றிக் கோட நீதெனத் துறக்க நின்றும். (க0)

ஆயிரங் கதிர்க ளொன்று யவிரொளி விரித்த தென்னத்
தூயசெம் மணியும் பொன்னுந் துலங்கிய விமான மைந்து
மேயுறக் கண்ட போழ்தி லட்டகன் யயாதி தன்னை
மேயவிவ் விமானம் வந்த காரணம் விளம்பு கென்ன. (கக)

உமதுநல் வரவு நோக்கி யுற்றன விமான மென்று
கமைபெறும் யயாதி வேந்தன் கழறலுங் கதிர்வி மானத்
தமைவொடு மேவ வேண்டு முலகத்தி னடைதி யாமு
மெமதுறு கால நீபோம் வழியினி யெய்து வேமால். (கஉ)

என்னுமட் டகனை நோக்கி யெதிர்ந்தவிவ் விமான மீதின்
மன்னியே துறக்க நன்கு மருவுதும் யாமெல் லோருந்
துன்னுமிப் பொழுதி னென்ன வட்டகன் வசுமான் றேற்றும்
பன்னுபிர தத்தன சேரச் சிபியெனப் புகரு நால்வர். (கங)

ஆற்றிய வேள்வி முற்றி யவபிருத நானஞ் செய்து
தோற்றிய விமானத் தேறித் துலங்கிய யயாதி யோடு
நாற்றிசை விளக்கு நல்ல காந்தியை நண்ணி வானின்
மேற்றலை யதனிற் செல்லு மேல்வையிற் சிபிவி மானம். (கச)

முந்துறச் சேறல் கண்ட வட்டகன் மொழிவான் வானத்
திந்திரன் முனெல் லோர்க்குஞ் சமானமா யிருப்பப் பின்னே
னுந்துமுன் விமான மென்கொ லுரையென வுசீன வேந்தன்
மைந்தன்றன் னிதிய மெல்லாம் வரைவின்றி மறையோர்க் கீந்தான். (கரு)

தானத்தாற் றவத்தாற் போற்றுந் தருமத்தாற் சத்தியத்தான்
ஞானத்தா னித்தி யத்தா னேமித்தி யத்தாற் சொல்லு
மானத்தாற் பொறையா லார்க்கு நன்மையான் வணக்கந் தன்னான்
மோனத்தாற் சிபியே மிக்கோ னூழலான் முன்னர்ச் சென்றான். (கசா)

எனச்சொலும் யயாதி வேந்தை யட்டக னிறைஞ்சி நீயார்
நினைப்புறு தந்தை யார்நும் புதல்வரார் நிகழ்த்து மூர்யா
தனற்கரு மங்க டாமு மந்தணர் முதலோர் செய்பாக்
கனத்திறற் கருமம் யாவுஞ் செய்துளாய் கருதிச் சொல்வாய். (கஎ)

என்பெயர் யயாதி தந்தை யிறைவனு நகுடன் மைந்த
னன்புறு பூரு வுங்க ளன்னை யென் குமரி பூமி
முன்பொரு குடைக்கீழ்க் காத்தே னிதனைமுன் மொழிந்தி லேன்யா
னன்பனி வரைக்க னுற்றோர் பரிமக நயந்து செய்தேன். (கஅ)

ானியதோ முகியான் கோடி நயப்புற வளித்துத் தேனு
வினையொரு நூறு கோடி முறைநிதி யோடு மீந்தேன்
றனியுறு புவிவான் சுவர்க்கந் தானிலை பெற்று நின்ற
வெனவொரு சத்தி யத்தைத் தவறில னிந்நாள் காறும். (சக)

சத்தியந் தன்னாற் றேவர் முதலியோர் தானும் பெற்று
ரித்திற நீங்கள் கேட்ப யான்றெரிந் தியம்பு காதை
யைத்தனி யந்த ணாளர்க் கறைந்துளோர் படிப்போர் கேட்போர்
முத்தியா மடைந்த லோக மடைகுவர் மொழியு மொன்று. (உ௦)

இவ்வறம் புகல்ய யாதி யெல்லையி லுலகம் பெற்றுஞ்
செவ்விதிற் புவியில் வீழ்ந்துஞ் சேர்தவுத் திரராற் சுவர்க்கந்
தவ்வலி லாது சேர்தல் சவுனகன் சதானீ சற்குத்
துவ்வமு தெனச்சொல் காதை முனிவர்க்குச் சூதன் சொல்லும். (உக)

நாற்பத்திரண்டாவது
யயாதி
வசுமான் சிபியுடன் சம்வாதவத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம். க௦கரு.

நாற்பத்து மூன்றாவது.

யதுவமிசத்திற்

கார்த்த வீரியன் மகிமையத்தியாயம்.

முனிவரர் கேட்ப வருந்தவச் சூதன் யதுகுல மொழிகுவா னெதுவின்
றனையர்க ணீல னஞ்சிகன் குரோட்டி ரகுவொடு சகத்திர சித்தாங்
கனையரை வரிலோர் சகத்திர சித்துச் சதசித்தை யளித்தன னவன்றன்
வனைகழ லயனுத் தரகப னோடே கயன்றனை மனமகிழ்ந் துயிர்த்தான். (௧)

ஏகயன் றன்மநேத்திரற் பெற்றா னன்னவன் குந்தியை யீன்றான்
வாகுறு குந்தி சங்கதற் பயந்தான் சங்கதன் மகிமனற் றந்தான்
பாகுறு கீர்த்தி மகிமனென் பேரன் பத்திர சிரேணியைப் பயந்தா
னாகுறு மவன்றுத் தமன்றனை யீன்றான் றுத்தமன் கனகனை யளித்தான். (௨)

கனகனே கிருத வீரியன் கிருதாக் கினிகடுங் கிருததன் மாவோ
டினமிகு கிருத சன்னெனு நால்வ ரீன்றனன் கிருதவீ ரியனே
மனவலிக் கார்த்த வீரியார்ச் சுனனை வரத்தினி லளித்தன னன்னோன்
றினகரன் போலோர் திகிரியை நடாத்தித் திரைகட லுலகெலாம் புரந்தான். (௩)

அரியமெய்த் தவஞ்சேர் தத்தரை நோக்கி யையிரண் டாயிரம் வருட
முரியமா தவஞ்செய் தனலவ னருளா லுயர்கர மாயிர மதன்மம்
புரிகுவோன் றன்னை யறிந்துடன் றெறுதல் பொருமடன் மன்னரை வென்று
தருமநன் னெறியை நிறுத்துத றன்னி லுயர்ந்தவன் றன்கையாற் சாதல். (௪)

இவ்வர நான்கும் பெற்றபின் புவனம் யாவையும் வென்றன னினைக்கிற்
செவ்விய கரங்க ளாயிரம் வரவுந் தேர்கொடி விருதுவந் துறவும்
பவ்வமே ழுடுத்த தீவினும் யாக மொருபதி னாயிரம் புரிந்து
மவ்வகை மகத்தின் வேதிகை யூப மவிரொளிப் பசும்பொனி னமைத்தும். (௫)

வழங்குதக் கணைக ளளவிலா தளித்தும் வானவர் வயங்குதுந் துமிகண்
முழங்கவா னகத்தின் விமானமே லிவர்ந்து மொய்ம்புறு திறலொடு மமைந்தான்
றழங்கிசை மகதி யாழ்முனி யாகசாலையின் மன்னவன் சரிதை
பழங்கணீத் திசையான் முறைபிற ழாமற் பரிவொடும் பாடின னென்பார். (௬)

நாற்றிசை யுள்ள நவையெலா மொழித்துச் சக்கர வர்த்தியா நாம
மேற்றுதற் கமைந்தோ ரெண்பதோ டையா யிரவரு டத்தொகை யிருந்து
தோற்றிய மழைக்கோ ரிந்திர னாகித் துலங்குசெங் கதிரென விளங்கி [வி
யாற்றல்சால் கார்க்கோ டகன்மைந்தர் தம்மைவென் றருச்சுன னெனும்பெயர் நிறு

வளங்கிளர்ந் துயர்ந்த மாயிட மதியா மாநகர் வகுத்தினி திருந்து
துளங்குநீர்த் திரளோ ராயிரங் கரத்தாற் சொரிமழைக் காலத்தின் மறித்துக்
களங்கமில் வேகத் தெதிர்கொளா நின்று கரைபொரு நருமதை யாற்றி
னுளங்களி சிறப்ப மடந்தைய ரோடு முறுபுன லாட்டினி தயர்ந்தான். (அ)

துலங்குதெண் கடலை யாயிரங் கரத்தாற் றுளக்குறக் கலக்க வத்தோயங்
கலங்குறு போழ்திற் பாதலத் தசுரர் கணபண மணிமுடி நாகர்
மலங்கெழு கயல்வான் றிமிங்கில முதலாய் மலங்கின வானுரிஞ் செயில்சூ
ழிலங்கையிற் புகுந்தவ் விராவணன் றடந்தோ ளிறுக்கிமா யிடமதி யுய்த்தான். ()

புலத்திய னிரக்க வரக்கனை விடுத்தான் பொருந்திய வாயிரங் கரத்தா
லிலக்குவிற் சிறுநா ணொலிக்கமூ தண்ட மிடிபடப் பொடிபடுந் திசைகள்
குலத்திறு பவன்றன் வனத்தினைத் தெகிப்ப வன்னவன் கூறுசா பத்தா
னிலத்தவன் கரத்தை யறுத்திடை குவித்தா னிறைகதிர்ப் பரசுரா மன்றான். (சo)

தன்னிலு முயர்ந்தோன் றன்கையிற் படையாற் றன்னுயிர் மாய்ந்திட வேண்டு
மென்னுமுன் வரத்தாற் பரசுரா மன்று லிறந்தனன் கார்த்தவீ ரியன்றா
னன்னவன் புதல்வர் நூற்றுவ ரவரிற் சூரசே னன்றிட வரக்கன்
பண்ணிய சூரன் கிருட்டிணன் செயத்து வசனெனப் பகர்ந்திடு மைவர், (கக)

படைக்கலத் தொழிலில் வல்லவ ரவரிற் செயத்துவ சன்மிகப் பரிவா
யடற்பரி களிறு சேனைதே ருடைத்தா யவந்தியாந் திருநக ரமைத்தோர்
குடைத்தனி நிழற்றிக் குலவிய தால சங்கனைக் குமரனென் றளித்தான்
றிடத்திற லன்னோ னூற்றுவர் மைந்தர் சிறப்புறப் பயந்தன னன்றே. (கஉ)

அவர்களில் வீதி கோத்திர சங்கி யாதரோ டவந்தியர் யோசர்
திவளொளி துண்டி கேரரென் றைந்து பேருறுஞ் செங்குல மைந்து
புவனியிற் றால சங்கர்தங் குலமே பொருந்தின வீதிகோத் திரன்சே
யுவமையில் செயந்த னன்னவன் மதலை துர்ச்செய னென்னலர்த் தெறுவோன். ()

உரைத்திடு கார்த்த வீரியன் சரிதை யுரைப்பவர் கேட்பவ ருணர்வோர்
வரப்பெரும் பொருளு மடைகுவ ரிழந்த வான்பொரு டிரும்பவந் தெய்துந்
திரைக்கடற் புவியி லெதிர்த்தவொன் னலரைச் செயிப்பர்மா மகத்தினைச் செய்து
நிரப்பிய பலனும் பெறுகுவ ரென்றே நெடுந்தவர்க் குரைத்தனன் சூதன். (கச)

நாற்பத்து மூன்றாவது
யதுவமிசத்திற்
கார்த்த வீரியன் மகிமையத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ககoகூ.

நாற்பத்து நான்காவது

போசன்வமிச முரைத்த வத்தியாயம்.

இலங்கிய கழற்காற் போசனன் மரபை யியல்புற வியம்புதி யென்றே
யுலங்கொளும் புயவை வச்சுதன் வினவ வுலகெலா மோரடி யளந்த
வலங்கல்சேர் துளபத் திருமறு மார்ப னன்றிசைத் திட்டவா றதனைக்
கலங்கிடா துரையென் றருந்தவர் கேட்பச் சூதனே கவின்பெற வுரைப்பான். (க)

இரவியோர் மறையோன் வடிவினை யமைந்தாங் கிறைபுரி யருச்சுனன் றன்பால்
விரைவுடன் வந்து தேகியென் றிரப்ப யாவனீ வேண்டுவ தென்கொ
றிரமுற மொழியென் றுரைக்கயா னிரவி தாபர மனைத்தையுந் தகித்து
நிரவிய பசிதீ ரென்றலு மிசைந்தே நெடுங்கணை யவன்வயி னேர்ந்தான். (உ)

கதிர்தரப் பெற்ற கணைகளாற் புவியிற் ருபர மனைத்தையுங் காய்ந்து
முதிர்தரு சுல்லி யாக்கலுங் கதிர்க ளாயிர முகங்கொடு தகித்தே
பதிநகர் மரங்க ளாயர்தஞ் சேரி பட்டின மடவிக ளனைத்தும்
புதியதா மமுத மாமெனக் கதிரோன்பு சித்திட னுபவ முனிவோன். (௩)

தேங்கிய கடனீர் நாப்பண்மெய்த் தவங்கள் செய்தன னயுதமாம் வரு—
மாங்கவை முடித்து முன்னமே யுறையு மாச்சிர மந்தணி னண்ணிப்
பாங்குறு பன்ன சாலையும் வனமு மருச்சுனன் பகழியாற் றீந்த
வீங்கென முனிந்து முன்னமே சொற்ற வகைப்படி சபித்தன னென்ருன். (ச)

வேறு.

யதுகுலக் குரோட்டு மைந்தன் சினீவர னிவன்றன்மைந்தன்
மதிபெறு சுவகா வன்னோன் மைந்தனும் விசங்கு சித்திர
ரதனையே யீன்ருன் சித்திர ரதன்சயித் திராதி தன்னைக்
கதிதரப் பெற்ரு னன்னோன் கான்முளை யயுத மென்பார். (ரு)

அவர்களி னூறு மைந்த ரதிகரென் றுரைப்பார் தம்பேர்
திவளொளிப் பிருது வென்னும் பெயர்முன்னுற் செப்புங் கீர்த்தி
தவமிகு சிரவ ணோடு மெகன்றெசன் வர்த்தன மான்
புவிமத்து வன்செ யன்ருன் பொலங்கெழு பிரிய னுதி. (கூ)

என்றவர் தம்முண் மிக்காம் பிருதுச்சிர வாவை யேத்தும்
வென்றியுத் தமனு மென்பர் விளங்கினர் தமக்குப் பின்னோன்
நன்றிகொ ணயக்கிய னுகு நன்மைந்தன் சுயக்கின னென்பார்
துன்றுசீ ரவன்றன் மைந்தன் சொல்லரு முசனு வென்பார். (எ)

சொல்லரு முசனு மைந்தன் றுலங்கிடு திதிட்சு வென்பா
னல்லடர் கீர்த்தி யன்னோன் மித்திர கனைப்ப யந்தான்
வல்வலி யவனுஞ் சீல மருத்தனைப் பயந்தான் வெற்றிக்
கல்லுறழ் புயத்தன் னோன்சேய் கம்பள பருகி யாமால். (௮)

கம்பள பருகி மைந்த னுருக்கும கவச னன்னோ
னிம்பரி னுருக்கு மெட்சுப் பிருதுருக் கமனே ரில்லா
வம்பரி னகசி யாம கன்புக ழரியன் னோனை
யும்பர்கள் புகழப் பெற்றா னுரைக்குமிவ் வைவர் தம்மில். (௯)

அரியொடு பரிக னுக்கு விதர்ப்ப நாட் டரசை நல்கித்
தரைபுக ழுருக்கு மெட்சுத் தனக்குத்தன் னாட்டை யீந்து
பிருதுருக் குமனென் போனைப் பிறங்கிள வரசாய் வைத்தான்
விரிபுகழ்ச் சியாம கன்றான் விளங்கமெய்த் தவத்தை மேவி. (௧௦)

புரையறு தவஞ்செய் போதோர் பூசுர னருளப் பெற்று
வரிசிலை தூணி தாங்கி மாநிலத் தவாமீக் கொண்டு
நருமதைப் பாங்கு ரிட்ச வானெடு வரைப்பி னண்ணிப்
பரிவொடு புரந்து வாழ்ந்தான் சயித்திரைப் பாரி யோடும். (௧௧)

பல்பசற் புதல்வ ரின்றி யிருக்குநாள் பகைஞை வென்றோர்
சொல்லிருங் கூந்தன் மாதைக் கொணர்ந்துதன் றேவி முன்னம்
வல்லிநின் மருகி யாவ ளென்றலு மகவி லேற்குச்
சொல்லிய தென்கொ லென்னத் தோன்றுவன் குமரன் மாதோ. (௧௨)

ஆங்கவன் றனக்குப் பாரி யாகுவ ளென்னக் கன்னி
யீங்கிது நன்றென் றெண்ணிச் சயித்திரை யினிய பாலன்
றீங்கறப் பெறவே மிக்க செய்தவ மியற்ற மூப்பி
னோங்கிய பருவந் தன்னில் விதர்ப்பனென் றொருசே யீன்றான். (௧௩)

தரைபுகழ் சியாம கற்குச் சயித்திரை தயவி னீன்ற
புரையறு விதர்ப்ப னந்தப் பூங்கொடி தன்னை வேட்டுக்
கிரகநற் கவுசி கன்சீர் கிளர்புக ழுலோம பாத
னுரைசெயிம் மூவர்ப் பெற்றா னிவர்களி லோம பாதன். (௧௪)

பெப்புரு வெனப்பேர் பெற்ற பிள்ளையைப் பயந்தான் மேதி
யைப்பயந் திட்டா னன்னோ னவன்கவுசி கனைப்பெற் றானு
லொப்பிலாக் கவுசி கன்சேய் சேதியன் னோனைத் தொட்டுத்
தப்பில்சீர் மன்னர் தம்மைச் சயித்திய ரென்று சொல்வார். (௧௫)

கூர்புகழ்க் கிரதன் மைந்தன் குந்தியக் குந்தி தன்சேய்
சேர்விருச் சனியன் னோன்சேய் திருடனுங் கவன்றன் செல்வன்
நேர்நிறு விருதி சொற்சேய் நிகழ்தசா ருகனன் னோன்றன்
பேர்விடு ரதனே யென்னும் பேசிடப் பிறங்கு வானால். (௧௬)

திரள்புய விடூர தன்சேய் வியோமனு மவன்சேய் கீர்த்தி
விரிதரு சிமூதன் மற்ற வன்மகன் விமல னன்னோன்
றருமகன் றானே வீமா தன்னவன் றனையன் றன்பேர்
வரிசிலை நவர தன்றான் மகிழ்திட ரதனைப் பெற்றான். (௧௭)

திடரதன் சகுனி யென்னுஞ் செல்வனைத் தந்தா னன்னோன்
படர்தரு காம்பன் றன்னைப் பயந்தனன் காம்பன் மைந்த
னடல்புரி தேவ ராத னவன்சுதன் றேவ சத்திரன்
புடவியி லன்னோ னீன்றான் புகழ்பெறு மதுவைத் தானே. (௧௮)

மதுவெனு மன்னன் மைந்தன் றுரவச னன்னோன் மைந்தன்
முதுவலிப் புருத்து வான்மற் றவன்மகன் முறைகூர் செந்துத்
துதிதரு செந்து வென்போன் றுகளறு சரதற் பெற்றா
னதிர்கழற் சரதன் சத்து வதன்றனை யளித்தா னன்றே. (௧௯)

சத்துவ தன்றன் மைந்தன் சாத்துவ தன்றன் றேவி
பத்தினிக் கோசலைப்பாற் பசின்னமா பசமா னன்சீ
ருத்தமத் திவியின் றேவா விரதனென் னிருப னோடும்
வித்தையந் தகன்மா போசன் விருட்டினி யெண்மர்ப் பெற்றான். (௨௦)

இவர்தங்கோத் திரமோர் நான்கு விதத்தினை யெடுத்து ரைப்பாந்
திவர்சிலைப் பசமா னன்றான் சிஞ்சைவா சியையென் பாளைப்
புவனியின் மணந்து நற்பா புரஞ்சயன் றிரும ணன்போ
ருவமைசே ரரிமி விருட்ணி நால்வரை யுயிர்த்தா னன்றே. (௨௧)

சொலுந்தேவா விரதன் றான்ற லின்றிநற் றவத்தைச் சூழ்ந்து
சொலுந்தினங் கழிந்த பின்னர் நதிக்கரை சேர்தெண் ணீரை
வலங்கையி லெடுக்க வந்த நதியிவன் வடிவை நோக்கிப்
புலம்பெறு கன்னி யாகிப் புணரப்பெப் புருவைப் பெற்றான். (௨௨)

பெப்புருத் தந்தை தேவா விரதனற் பெரியோர் சுற்ற
மொப்பியே ழயுதத் தோடு நூற்றறு பானென் றாற்றோர்
செப்பருந் துறக்க நாடு சேர்ந்தனர் தவமிக் குள்ளா
ரப்பெருங் குலத்தைப் போற்றி னமரர்கள் போற்ற வாழ்வார். (௨௩)

வரிசிலைத் திரண்மா போசன் கங்கனன் மகளைத் தோய்ந்து
பார்புகழ் குரூரன் கீர்த்திப் பசமானன் சமிநற் கீர்த்தி
கருதலர் பரவி யேத்துங் கம்பள பருகி யோடு
முரமிகு நால்வர்ப் பெற்றா னோங்கிய குருநன் மைந்தன். (௨௪)

விருட்டிணி யவன்சேய் மிக்க திருதிமெய்த் திருதி மைந்த
னருட்டரு கபோத ரோம னவன்சுதன் றயித்தி ரன்றான்
பொருட்சொடை வழங்கி யிந்தப் பூதலம் புரக்கு ஞான்றே
யுருட்டிய திகிரிச் செங்கோ ளளனையே யுயிர்த்தான் மன்னோ. (௨௫)

ஒல்லையி னளன்றான் சந்த னேதர துந்து மிப்பேர்
சொல்லிய மகவைப் பெற்றா னன்னவன் றூகடி ரன்பின்
மல்கிய தவங்க ளாற்றி மாநில முழுதுங் காக்க
வெல்புணர் வசுவென் றேதும் வீரனைப் பயந்தா னன்றே. (உசு)

புனர்வசுப் புதல்வ ரின்றிப் புத்திர யாகஞ் செய்தே
கனமணி வேதி கைக்க ணனுவினைக் கனிந்து பெற்றா
னனுமக ளாகு கன்பின் னாகுதி யுதித்தா ளந்தக்
கணிகையா குதியை வெற்றி யவந்திகா வலனுக் கீந்தான். (உஎ)

தீங்கிலா குகன்றன் மைந்தன் றேவக னுக்கிர சேன
னோங்குதே வகன்றன் மைந்தன் றேவவா னுபதே வன்சீர்
தாங்கிய சுதேவன் றேவ ரட்சுதன் றாமோர் நால்வர்
வீங்கிளங் கொங்கைப் பெண்க டேவகி மித்திர தேவி. (உஅ)

அரியமெய்ச் சாருத் தேவி யசோதரை யழகு வாய்ந்த
தெரிவைநேர் சத்ய தேவி சிரிதேவி சுதேவி யென்றும்
பரிவுறு மேழுபெண் கள் வசுதேவர் பாரி யானார்
வருமுறை சொல்வேம் பின்னர் மருவு மம்மரபு தன்னில். (உகூ)

உக்கிர சேனன் மைந்த ருயர்கஞ்ச னியக் குரோதன்
றிக்கடர் சுலீமன் சங்கு சுவிகரன் றிகழ்மெய்ச் சங்கு
கக்குநெய்ப் படையி ராட்டிர பாலனன் மருவு கானற்
சக்கர வுய்த்த முட்டி சுமுட்டியோர் பதின்மர் தக்கோர். (கூ0)

கஞ்சையோ ரட்டிற் பாலி சுதனுக்கஞ் சவதிகங்கை
யெஞ்சலி லஞ்சு பெண்க ளீன்றன னன்றி மறறு
மஞ்சலில் வீரே தப்பே ரரசனன் மரபி லுற்றோன்
விஞ்சைசார் சாதி தேவன் சூரனை வியந்து பெற்றான் (கூக)

சொன்னரா சாதி தேவன் சுவேதவா கனன்சோ னச்வ
னென்னுமிவ் விருவர்ப் பெற்றா னிவரிற்சோ னச்சு வன்றான்
மன்னுகே தசனே சத்திர சித்துவாழ் சக்ர சித்து
பன்னிய சமுத்ரி மூர்த்தி யெனுமைவர்ப் பயந்தான் மன்னோ. (கூஉ)

சமிமகன் பிரதிட் டித்திர னவன்மகன் சாற்று போச
னமைவுறு போசன் மைந்த னிருநிதி யவன்பான் மிக்க
சமைவுறு கிருத வன்மன் சத்தமன் கருது வீமன்
மமதையில் விடணன்றே வாருகன் காம்ப கன்றான். (கூகூ)

மாபலன் சாத னேடு மிசாதன்க ளுய கன்வாழ்
பூபலத் ததிக ராய் புத்திரர் பதின்ம ருற்றார்
தாபமில் லாதுதேவா ருகன்மைந்தன் றழைத்த கற்ப
காபதி நிசருங் கீர்த்திக் கம்பள பருகி யென்பார். (கூச)

அன்னவன் முன்ப யந்த வசபவு சன்ற னோடும்
பின்னுறு சவுச மன்றன் பிறங்கிய விவரின் முன்னோ
னுன்னருஞ் சாதன் சாத னென்றிரு வோரைப் பெற்றான்
பன்னிய சன்ம சன்றன் சுதேங்கிட்ரன் பகர்சு நாசன். (ருரு)

பரிக்குங் கண் ணன்ற னோடு மூவரைப் பயந்தா னல்லோர்
விரிக்குஞ்சீ ரந்த காளர் குலத்தினை விளங்கச் சொல்வோர்
தரிக்குஞ்சிந் தையினுற் கேட்போர் தனிப்பொரு ளிடத்தி லேயங்
குரிக்குமெய்ஞ் ஞான மெய்தி யுய்வரென் றுரைத்தான் சூதன். (ருசு)

நாற்பத்து நான்காவது

போசன் வமிசமுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ககசரு.

நாற்பத்தைந்தாவது

விருட்டுணி வமிசத்தில்

கண்ணனவதார வத்தியாயம்.

மாதவ மியற்றுமுனி வோர்மகிழ் சிறப்பக்
கேதமறு கண்ணன்வரு கேளிர்முறை யெல்லா
மோதுக வெனச்சொலவவ் வுண்மை நெறிஞானச்
சூதனெனு மாமுனி தொகுத்துரை வகுப்பான். (க)

பேர்பெறு விருட்டிணி பிறங்கிட மணந்த
காரள மாத்ரிகாந் தாரியிவர் தம்மி
னோர்பெறுகாந் தாரியோர்சு புத்திரனை யீன்றாள்
வார்பொரு குரும்பைமுலை மாத்ரிகன் வரத்தால். (உ)

வேறு.

தேவமீ செனயுதா சித்துமிக்க சினியுடன்
பாவனமித் திரன்னொடு நால்வரைப் பயந்தன
டாவில்கீர்த்தி யன்மித்திர னின்பின்னைத் தந்தன
னேவினின் மின் னன்பிர சேன னோடு வந்துபின். (ரு)

சத்திசேன னென்றிரண்டு தனையரைப் பயந்தனன்
சித்திபெற்ற நற்பிர சேனன் பானு வரத்தினுற்
பத்திசேர் சமந்தகப் பருமணி தரித்தன
னத்தையிந்த்ர னோடுகண்ணன் வேட்டுமே யடைந்திலான். (ச)

மார்பகத்தின் மணியணிந்து மன்னுநற் பிரசேன
னோர்வ னத்தின்வேட்டை செல்லவங்கெ திர்ந்தசாம்பவ
னேர்மலைந்து கொன்றுமென்று நீள்சமந்த கத்தினைச்
சார்பிறங்கன் முழையமர்ந்து தானணிந்து கொண்டனன். (ரு)

மன்றினிற் பிரசேனன்றன்னை மன்னுகண்ணன் முன்னமே
குன்றிடாச் சமந்தகத்தைக் கேட்டலுங் கொடாமையாற்
றன்றமர்க்கு ளானெனத் தயாவிலாத கண்ணனே
சென்றுவேட்டை யின்கணே செகுத்தனன் கா ணென்பரால். (சு)

இத்தகைசின் னாட்கழிந் திலங்குகண்ணன் வேட்டைமே
லைத்துப்போதி லெண்கின்வேந்த னானசாம்ப வனெதிர்த்
தொத்தபோர் விளைத்துவென்ற போதிலுற்ற சாம்பவன்
பைத்தகு ட்டராவினித் ரை பண்ணுமாலென் றெண்ணியே. (எ)

பணிந்துபெற்ற கன்னியோடுபொன்மைசேர் சமந்தக
மணிந்துகொள்ள வேண்டுநின்கை யாழியா லடர்க்கமெய்
துணிந்தருட் பதம்பெறத் துணைசெய்வர யெனச்சொலத்
தணிந்தடர்ந்து பெண்ணொடுஞ் சமந்தகங் கவர்ந்தனன். (அ)

கவர்ந்துப ட்டினத்தில்வந்த காலையாத வக்குலத்
தவம்பொருந்து சீர்த்தியை யகற்றவந்த பிணியையே
சிவந்தவாய் மலர்ந்துசத்திர சித்திடத் தளித்தன
னுவந்துசத்ர சித்துக்கேகை யன்பெண்ணோர் பதின்மரை. (கூ)

வேட்ட னேக மைந்தரை வியப்பினீன்ற தற்குளே
யீட்டுகீர்த்தி மூத்தபிள்ளை பங்ககாள னென்பவன்
வாட்டமற்ற சொல்விரத வதியிடத் தளித்தசீர்
பாட்டுணர்ந்த சத்யபாமை விரதினி பத்மாவதி. (க0)

என்னுமூன்று பெண்கள்பெற் றிலங்குபட்டி னன்றனக்
குன்னருங் கனற்றொழிச்செய் துதகம்வார்த் தளித்தனன்
மின்னுவேற் சினிபெற்றான் விளங்குசத்திய கன்றனை
யன்னசத்தி யகன்பெற்றா னடல்கொள்சாத் தகிதனை. (கக)

பகர்ந்தசாத் தகியும்யுதா னனைப்பயந்து நின்றன்ன்
மகிழ்ந்தவன் சங் கனையுயர் வனப்பினோ டளித்தனன்
சுகந்தருமச் சங்கனுந் துயுமினியை யீன்றன
னுகந்தரன் றனைப்பயந்து வந்தன னிருந்தனன். (கஉ)

இன்னவாறன் மித்திரன் சினியென விசைத்திடு
மன்னுகீர்த்தி மன்னர்தங் குலமுறை வழுத்தினே
முன்னரோது மன்னருக்குண் மூவுலகும் பேர்பெறப்
பன்னுசீ ருதரசித் தின்றனையரைப் பகருவாம். (கங)

வேறு.

உற்கல னாரி யன்சத் துருக்கினன் றிடமெ னன்பின்
விற்சதா பட்சன் றன்ம விருத்திரி மேசரி யன்றான்
வற்றிலாச் சீர்த்தி பெற்றே வளர்ந்திடுந் தரும வன்மா
செற்றமி லசுவத் தாமா வேட்டனன் றிருட்ட நேமி. (கச)

தேவவான் றவிட்டன் மிக்க சுரபாரி சன்சிர வண்ணன்
தாவில்சீ ருபதே வன்பி ருதுவிசு சன்மனோடு
மேவுசு பாரிசன்பி ருதுபிரு துச்சு வன்மா
மாவெகு பூமியோடு மருவுசு பூமி யென்றே. (கரு)

வேறு.

மூவொன்பான் புதல்வர்ப் பெற்றான் முகுந்தனாங் கண்ணன்றானே
மேவிய வபவா தத்தைத் தீர்த்ததை விளங்கச் சொல்வோர்
பூவினி லபவா தத்தைப் பொருந்திடா ரிக்கு வாகு
பாவையாம் புதல்வி தவத்திர கிக்கொரு சூரன் பாலன். (கசு)

ஆங்கவன் பாரி போசை யருள்வசு தேவ னாடல்
வீங்குதோட் டேவ பாகன் விறற்றேவச் சிரவன் றன்னோ
டோங்குறு திருட்டிச் சங்கு சிருஞ்சய னுயர்ச மீகன்
பாங்குறு சவிசங் கூடன் சாமனற் பதின்ம ரோடு. (கஎ)

சுதகீர்த்தி பிருதை மிக்க சுததேவி சுதசா வைப்பே
ரதிகார சாதி தேவி பெண்மக்க ளைவர்ப் பெற்றா
ணிதிதரு கிருத னுக்குச் சுததேவி யிடத்து நீதி
முதிர்சுவி ரதன்பி றந்தான் முயல்சுத கீர்த்தி தன்பால். (கஅ)

தயவுறு கைகன் பெற்றான் சயிந்தவன் றனைச்ச யித்ய
ணியல்சுத சாவைத் தன்பாற் சுசேனனை யினிதி னீன்றான்
செயலரி மர்த்த னன்ரா சாதிதே வியினி டத்தின்
மயலறு மறிவு சேர்தன் மாசியைப் பெற்றான் மன்னோ. (ககூ)

முன்னாளைத் திட்ட சூரன் மொய்குழற் பிருதை தன்னைத்
தென்னுறு குந்தி போசன் றனக்குத்தெத் தெனவ ளித்தா
னன்னநற் பிருதைக் கும்பேர் குந்தியென் றறைவ ரந்தப்
பன்னருங் குந்தி தன்னை வசுதேவர் பாண்டுக் கீந்தார். (உ௦)

பாண்டுவுக் குற்ற சாபத் தாற்பெறு பால ரின்றி
யாண்டகை யருளி னாலே தருமதே வதைக்குக் குந்தி
யீண்டுயர் தரும ராசன் வாயுவுக் கெழில்கொள் வீமன்
றூண்டுசீர் வாச வற்கர்ச் சுனனையுந் துலங்கப் பெற்றாள். (உக)

அணிசெய்மாத் திரவ திப்பெண் ணசுவினி தேவர் கட்குக்
குணநகு லன்ச காதே வனைநனி குலவப் பெற்றாள்
புணருரோ கணியா மாது தேவகி பொருந்து மேழாங்
கணமுறு கருப்பந் தன்னைக் கஞ்சன்ற னிமித்த மாக. (உஉ)

மாயனு பாயத் தாற்றன் வயிற்றினி லிருத்தப் பெற்ற
தூயநற் பலரா மன்சா ரணனோடு துரத்து மன்றான்
மேயக மன்ன பிண்டா கரன்மகா வனுவி னோடு
மேயசுப் புருவாம் பால ரெழுவர்பின் சித்தி ராட்சி. (உ௩)

எனுமொரு புதல்வி யோடு மீன்றனள் வசுதே வர்க்கு
வனிதைதே வகியி டத்திற் சுடேணனற் கீர்த்தி மான்சீர்
புனைதரு பத்திர சேனன் புடதாசன் பொருவு தாசி
வினவுபத் திரவி தேக னறுவரும் வியந்துற் றாரால். (உ௪)

உற்றிடு புதல்வ ராறு பேரையுங் கஞ்ச னெங்குஞ்
செற்றமோ டறுத்தொ ழித்தான் சிராவண மாதந் தன்னி
லற்றமில பர பக்கத் தட்டமி நிசியு ரோணி
பற்றிய தினத்திற் கண்ணன் பாரிடைப் பிறந்தான் மன்னோ. (உ௫)

பிறந்தபி னழகு வாய்ந்த சுபத்திரை யென்றோர் பெண்ணு
நிறந்தரு சூர னென்றோர் பாலனு நெடிதிற் பெற்றான்
சிறந்தபத் திரைவ யிற்றிற் றிகழ்சகா தேவன் வந்தான்
மறந்தவி ருபாசங் கற்றான் றேவகாட் சிதைபால் வந்தான். (உ௬)

கிருட்டினன் றனக்குப் பின்பு பிறந்தமூ வரையுங் கீறி
யுருட்டினன் கஞ்சன் மற்ற வுபருப தேவி மாது
மருட்டில்சீர் விசையன் ரோச மானனல் வர்த்த மானன்
பொருட்டரு தேவ லன்சீர்ப் புதல்வர்நால் வரைப்ப யந்தாள். (உ௭)

சக்கர தேவி யங்கா வகன்றனைத் தயவிற் பெற்றாள்
மிக்குயர் விருக தேவி நந்தனை வியந்து பெற்றாள்
திக்கிரு நான்கும் போற்றுந் திறல்வசு தேவர் முன்னாண்
மைக்கடற் கட்சி ரத்தா தேவிதன் னுடன்கா மன்னி. (உ௮)

மகிழ்தர விளையா டுங்கால் வணிகமா திடத்தில் வண்மை
தருகவு சிகனை மஞ்சு ருதந்தரா தன்பால் வெற்றி
யிகல்செய்புண் டரனை யுஞ்சீ ரிராக்கினை யிடத்தில் வாய்மை
மிருகபி லனையும் பெற்றார் பிண்டர னென்னு மேலோன் (உ௯)

சிரனெனும் பெயராய்க் கானில் வேடனாய்ச் சென்றான் பின்னும்
தருசபத் திரன்ப லன்சீர் தழைத்தவிவ் விருவ ருற்றார்
பரவருந் தேவ பாக னுத்தவர் தமைப்ப யந்தா
ளூரவினுத் தவர்க்குத் தேவ சிரவரென் றுரைப்பர் நாமம். (௩0)

இப்பெருங் குலத்த ளுதி சிட்டிய சுமதி யின்பாற்
றுப்புற விளங்கு மிச்சு சுவியெனுஞ் சுதனைப் பெற்றான்
மெய்ப்புறு சந்து ருக்கன் கிராதனை வியந்து பெற்று
னெப்பில் கண்ணனுஞ்சே யின்றிப் புலவுகண் சே னுக்கு. (கூக)

சுசந்திர னென்னுஞ் சேயைத் தத்தெனத் துணைவி னீந்தான்
இசைந்திடு கண்ணன் சாம்ப வதியெனு மேமை தன்பா
னிசம்பெறு சாறு தெட்டிணன் சாம்பனென் றிருவர் நேர்ந்தார்
வசுந்தரா நந்த னன்றந் திரிபாலன் மன்னு தந்திரி. (கூஉ)

சொல்லுமிப் புதல்வர்ப் பெற்றான் சமிதனற் றெழில்வி ராசன்
வில்லுமிழ் சிருஞ்ச யன்சா மன்றனு விளங்கின் னோரை
யொல்லையிற் பயந்தா னந்தச் சாமனன் புறுசே யின்றிச்
செல்லுமிழ் சமிக னுட்டை வெறுத்துநற் றவத்திற் சென்றான். (கூங)

அம்புவி தன்னில் யாருங் கண்ணன்ற னவதா ரத்தின்
செம்பொருட் கதையைக் கேட்போர் சிந்தனை செய்வோர் சொல்வோ
ரிம்பரி லியற்று பாவ மியாவையு மெளிதி னீங்கி
யும்பர்வீ டடைவ ரென்றே யுரைத்தனன் சூதன் மாதோ. (கூச)

நாற்பத்தைந்தாவது
விருட்டிணி வமிசத்திற்
கண்ணனவதார வத்தியாயம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம், ககளகூ.

நாற்பத்தாறுவது

பிருகு விட்டுணுவைச் சபித்தவத்தியாயம்.

மடங்கலே றனைய மனுவுளங் களிப்ப மச்சமால் புகன்றிடும் வகையே
யடங்கிடா நசைகூர் பிருகுமா முனிவ னரியினைச் சபித்திடு கதையைத்
திடம்பட வுரைத்தி யெனமலக் குறும்பு செயிர்த்தழற் கருமமே தினமு
முடங்கிடா தியற்று முனிவரர் கேட்பச் சூதமா முனிவரன் மொழியும். (க)

விரைசெறி துளவோன் றேவகி யிடத்தின் விளங்குநாற் புயங்களு நிவந்த
வரைபொரு மார்பின் மறுவொடு முதிக்க மகிழ்வசு தேவனுங் கெய்திப்
புரைபடுங் கஞ்சன் கண்டிடிற் றுணிப்பன் முன்னமோ ரருவரைப் போழ்ந்தான்
றரையிலிவ் வடிவை மறைத்தொரு வகையே சார்ந்திடு கென்றலு நெடுமால். (உ)

நாலுசெங் கரத்தி லிருகர மறைத்து நவையறு நந்தகோ பாலர்
சீலநன் மனைக்க ணசோதைபா லெம்மைச் சேர்த்தவண் பிறந்துள செல்வி
மாலினி தனையிங் குய்த்திடு கென்ன வெடுத்துயர் மதுரையிற் சேர்க்க
வேலவார் கூந்த லசோதையே வளர்த்தா ளென்றலுஞ் சூதனை நோக்கி. (௩)

மும்மலக் குறும்பின் முரணறுத் துயர்ந்த முத்திவீ டடைகுவா னெண்ணி
யம்மர்நோ யகற்றுந் தவத்தினை யுஞற்று மகப்பெறு முனிவர ருரைப்பார்
கொம்மைவெம் முலையா டேவகி யாவள் கூர்வசு தேவன்முன் யாவன்
செம்மைகூர் யசோதை யார்திகழ் நந்த கோபனார் செப்பென வுரைப்பான். (௪)

வனிதையா மதிதி கூறுதே வகியே மாதவக் காசிபர் கூறு
புனிதமாம் வென்றி புகல்வசு தேவர் பூமியின் கூறதா விளங்குங்
கனிமொழி யசோதை கமலநான் முகத்துக் கடவுடன் கூறதா மதுரைக்
கினிமைசெய் நந்த கோபரா மிவர்க ளிடத்தினி லுதித்தனன் றிருமால் (௫)

நண்ணிய மாயன் மேல்வருங் கரும நாடியே மதுரையி லசோதை
கண்ணகன் மனையில் வளர்ந்தன னந்நாள் காறுமே தேவகி மனத்தி
லெண்ணிய கருமம் யாவையுங் கொடுத்தாங் கிருந்தன னிகல்வசு தேவ
னண்ணலு முருக்கு மணிசத்திய பாமை யழகுறு சத்தியை சுபாமை. (௬)

தலம்புகழ் நசுசி ஞச்சினி செவியை சாற்றுகாந் தாரிலட் சுமினை
நலம்பெறு மித்திர விந்தைகா லிட்சி நங்கைசாம் பவதியோ டசிமை
யிலங்குமாத் திரையே கவுசலை விசையை யிவர்முத லீரெண்ணு யிரமாய்
நிலம்புகழ் கன்னி மார்தமை வேட்டா னேர்பெறு புதல்வரை யுரைப்பாம். (௭)

சொல்லிய வுருக்கு மணிதிகழ் சாரு தெட்சணன் சுசாருவே துரும
னெல்லொளி சேர்பிரத் துய்ம்மினன் பத்ர சாருவே சதசிவன் பரசு
நல்லனுக் குத்தன் சாருகன் சாரு காசர னலங்கொள்சா ருகுத்த
னல்லுறழ் கூந்தற் கயல்விழிச் சாரு மதியெனு மணங்கையும் பெற்றாள். (அ)

விளங்கிய சத்திய பாமைதான் வீமா தெட்சணன் விறல்வலிப் பானுக்
களங்கமில் சீர்த்தி மானுரோ சிதன்சீர்க் கணைகழற் றும்பிர வத்திரன்
றுளங்கலில் கீர்த்திச் சலந்தம னிவர்க டம்மொடுந் தோகையர் நால்வர்
வளங்கொளப் பயந்தாள் சாம்பனைச் சாம்ப வதியெனு மடந்தையீன் றனளால். ()

மித்திர விந்தை யாமெனு மடந்தை மித்திர விந்தனைப் பயந்தாள்
புத்திர மித்திர வாகுமெய்ச் சுனீதன் புகழ்பெற நக்கினி யீன்று
ளித்திரம் வாசு தேவர்தொன் மரபி லிலக்கநூற் றெண்பதோ டொன்று
மொத்தவா யிரவர் மைந்தர்க ளுதித்தே யுலப்பிலாக் கீர்த்தியி னுறைந்தார். (க௦)

வேறு.

வருமுபா சங்க னுக்கு வச்சிரி வளர்சங் கித்தன்
பொருவரு மகவு சொற்ற கெவேணன் பூரி யோடுந்
தெரிவுறு பூமி யிந்திர சேனனைத் திகழப் பெற்று
ளருள்பிரத் துய்ம்மி னன்சி ரனிருத்தன் றன்னை யீன்றான். (கக)

சாம்பன்சாத் தியனே யாதி யையவரைத் தயாவி னீன்றான்
வாம்பரி நடவுங் கீர்த்தி யதுவழி மரபின் மிக்கா
யாம்படி மூன்று கோடி யறுபது விலக்க மைந்தர்
பூம்புன லுலகி லுற்றுத் துட்டரைப் போரிற் செற்றார். (கஉ)

அவரெலாந் தேவ ராகு மிளங்கொடித் திதியின் மைந்தர்
திவளொளித் தேவ ரோடும் போர்செய்து மடிந்தா ரெல்லாம்
புவனியின் மனித ராகி யூறுறப் புரித லாலே
யவனியி லிவரைக் கொல்ல வுதித்தன ரந்நாண் மற்றும். (கரு)

யதுகுல மரபி னூற்றெண் றேற்றிய வகுப்பி னுள்ளார்
மதுமலர்த் துளப மாயன் சொன்முறை யொழுகி வாழ்ந்தா
ரிதுமுறை யென்னுஞ் சூதன் றன்முக மினிது நோக்கிச்
சதுமுக னிகருஞ் சத்த விருடிக டனதன் சித்தன். (கசு)

சாலகி யியக்கன் மாணி சான்றன்வந் திரிகை வீணை
யேலுநா ரதனே யாதி யிவரொடு முதித்த மாயன்
மேலுறு கருமம் யாதும் விளங்கிய தேவ ராஞோர்
ஞாலமீ துதித்தோர் யாவர் நாரண னிந்நாள் காறும். (கரு)

உதித்திடு மவதா ரங்க ளெத்தனை யுதிக்க வின்னு
மதித்திடு மவதா ரங்க ளெத்தனை மண்ணிற் பாவம்
விதித்துள யாக்கை தன்னின் மேவிய தெவன்கொ லென்று
துதித்துயர் முனிவர் கேட்ப வரன்முறை சொல்வ னன்றே. (கசு)

முற்சொலு முகத்திற் றன்ம முழுவது மழியத்தோன்றி
யெற்பொரு மோலி சூடு மிரணிய கசிபு கோர
மற்பொலி திணிதோள் வீர மாபலி யிவர்க ளிந்தச்
சொற்புவி யுடற்ற லானுந் தேவர்துன் புறுத லானும். (கஎ)

பிருகுமா முனிவன் றன்னாற் பிறங்கிய சாபத்தானு
மரிதிரு வுருவம் வைகுந்தத்தினில் வைத்து வந்திங்
குரியநற் புவியிற் றோன்றி யுலகினைக் காத்தா ரென்னச்
சுரரொடு மசுர ரேற்ற போர்த்தொகை சொல்லு மென்றார். (கஅ)

வளர்வுறு நார சிங்கம் வாமனம் வராக முந்நீர்க்
கிளர்சுதை மதனந் தார கன்சமர் கீர்த்தி யோங்கித்
தளர்பீச கன்பேராத திரிபுர தகனம் பாவத்
துளமலி யந்த கன்போர் விருத்திர னுடற்ற லோடும். (கக)

கூறிய துவசத் தோடு மாலாலங் கோலா லந்தே
ரேறிய வசுர ரோடு மிழைத்திடும் போரி லக்க
மாறிரு தொகையென் றேமு னறைந்தன ரவற்றின் மாயன்
வீறுடு நார சிங்க மாயிர ணியனை வீய்த்தான். (உ0)

வாமன ரூப மாகி மாபலி வலியை மாய்த்தான்
றாமமே யிரணி யாட்சன் றன்னைமுன் வராக மாகிப்
பூமிசூழ் வாரி புக்குப் பொருதுயி ருண்டா னிந்திர
னேமுறு பிரக லாதன் றனைச்சுதை மதனத் தேற்றே. (உக)

தளர்வுற வென்று னம்பன் குமரன்று ரகனைக் கொன்றான்
வளர்மக பதிபோ ரேற்று மாவிரோ சனனைச் செற்றான்
கிளர்தரு முயிர்கள் யாவுங் கேதமுற் றழுந்தச் செய்தாங்
குளர்வுறு மூன்று லோக முறுதிரி புரங்கண் மாய. (உஉ)

முக்கணெம் பெருமான் சற்றே முகிணகை நகைத்து வென்றான்
கக்குநெய்ச் சூலி யந்த காசுரர்க் களைந்தா னந்நா
டொக்கவிண் ணவர்கண் மண்ணோர் துலங்குதென் புலத்தோர் கூடித்
தக்கபோ ரசுரர் நீள்பி சாசர்தா னவரைக் கொன்றார். (உக)

விருத்திரன் றன்னை யிந்திரன் விண்டுவின் சகாயத் தாலே
யுருத்துயி ருண்டான் மற்று முரைசெயுந் துவசப் போரிற்
பொருப்பென நிவந்த தேரிற் றுவசத்துட் கரந்து புக்குச்
செருக்கிளர் வீர விப்பிர சித்தியைச் செற்று னிந்திரன். (உச)

ஆலால மென்னும் போரி லசுரரோ டமர ரேற்றார்
கோலாலந் தன்னி லிந்திரன் குலவிய மகத்தந் தத்தின்
மாலான சண்டன் மர்க்கன் மடிந்திடப் பொருது வீழ்த்தான்
மேலான முனிவீ ரிவ்வா றுற்றிரு வெம்போ ரேற்றான். (உரு)

இரணிய கசிபி ரண்டற் புதம்பதி னோந்தி லக்கந்
தருமிரண் டாயிரத்தாண் டுலகெலாந் தானே யாண்டான்
பொருவின்மா பலியென் பானோ ரற் புத நாலி லக்கம்
வருமுறை யறுபத் தாறுயிரமெனும் வருடங் காத்தான். (உசு)

ஆனமா பலியைப் போதப் பிரகலா தனுமே யாண்டா
னூனமில் யுகங்க ணூறு மசுரர்மூ வுலகுங் காத்தார்
வானர சவரை வென்றே யுகம்பத்து மகிழ்ந்து காத்துப்
போனபின் பிரக லாதன் புரந்தனன் சிறிது காலம். (உஎ)

உலகுசில் காலம் போக்கி யும்பர்கோன் புரத்த லோடும்
பலவித மகங்க ளெல்லா மசுரர்தம் பாக நீங்கிப்
புலவர்தம் மிடத்திற் சார வசுரர்சுக் கிரன்பாற் போந்தே
யிலகுமிப் புவியை நீங்கிப் பாதலத் துறுது மென்றார். (உஅ)

அம்மொழி கேட்டு வெள்ளி யசுரர்க்கா தரவு கூறி
யெம்மிடத் துளவா மந்திர மோடதி யிரும்பொன் றுப்பு
மும்மையே காப்பா னெண்ணி வைத்தன முயறி யென்னுஞ்
செம்மொழி யமரர் கேட்டுச் சிந்தையுட் டியங்கி யோர்ந்தே. (உகூ)

அசுரர்தங் குழுவிற் சேர்ந்து தேவர்போ ராற்ற லோடு
நிசிசர ருடைந்து வெள்ளி தன்னிட நேடிச் செல்ல
வசையறக் காத்தல் கண்டு வானவ ரகன்றார் வெள்ளி
திசைமுகன் முன்னர்ச் சொற்ற திறமெலாந் தெரிந்து சொல்லி. (௩௦)

பூமியந் தரசொர்க் கத்தைப் புணர்ப்பின்மூன் றடிய தாக
வேமுற வளர்ந்து மாய னிடர்செய்தான் பலிக்கு நெய்கூர்
நாமவேல் விலோச னன்ற னல்லுயிர் மகவா னுண்ணத்
தோமறு சகாயஞ் செய்து தொலைத்தனன் போரீ ராலும். (௩௧)

நெடியமா லுபாயத் தாலே நேர்ந்துவா னவரே வென்றார்
மடிவுறு தொழிந்தீர் நீவிர் மற்றுளார் மாண்டா ரேற்றுக்
கடியுறு தேவ ரோடும் பொருந்திடல் கருத லாகா
முடிவிலா மாயன் றானே முன்னர்நின் றுதவ லாலே. (௩௨)

தேவரை வெல்ல மாட்டீ ராதலாற் சிவன்பாற் சென்று
காவன்மந் திரத்தைப் பெற்று வருகுவ லன்று காறு
நீவிரெங் குரவ னண்ணு நிகரிலாச் சிரமஞ் சார்ந்து
பாவகத் தவங்கள் செய்மி னென்றுரை பகர்ந்திட் டானால். (௩௩)

அவ்வுரை யசுரர் கேட்டுத் தேவர்த மவையை நோக்கிச்
செவ்வையா யுதந்தேர் யானை திரள்பரி யெமக்கொன் றில்லை
யெவ்வமில் சீரை சேர்த்தி யிருந்தவ மியற்றப் போதுங்
கவ்வைதீர்ந் தேகு மென்னத் தேவருங் களிப்பிற் சென்றார். (௩௪)

தவப்பெறு முனிவ னான புகர்தயித் தியர்கள் வாழ்வி
னுவப்புறு மணிமா டங்க ளோங்குசு ரேந்தி ரத்தை
யிவர்ப்புற வொருவி யெட்டுத் திசையிரு ளகற்றும் வெள்ளி
நிவப்புறு கயிலை முக்க ணிமலனா லயத்தின் முன்னர். (௩௫)

எய்திமா தவச்சி லாதன் புதல்வனந் தீசற் போற்றி
மைதவழ் கண்டத் தண்ணல் பதத்தினெம் வரவை யான்செய்
கைதவ மொழிய வோதிக் கடைக்கணித் தருள வேண்டும்
பொய்தவிர் மூர்த்தி யென்னப் புகரினை நிறுவிப் போந்து. (௩௬)

கறைமிடற் றண்ணல் பாதங் கரகம லங்கள் கூப்பிக்
குறைவறத் தொழுது வெள்ளி கோபுர வாயிற்சார்ந்து
யறைகழல் பணிய நின்றா னமையம்பார்த் தென்ன லோடு
மறைதுதித் தின்னுங் காணா வள்ளல்வாய் மலர்ந்தன் னேனை. (௩௭)

தருதியென் றருள நந்தி தமனியக் கோயில் வாயின்
மருவிய புகரை வள்ளல் வருகவென் றருள்செய் தானென்
றருகுற வழைத்துப் பெம்மா னரியணைத் தவிசின் வைகிப்
பெருகுசந் நிதியைக் கண்டு பெட்புற விடுத்தா னன்றே. (௩௮)

வேறு.

விடுத்தலு நவமணி குயிற்றிட விளங்கி
யடுத்திருள் பருகிய வரித்தவி சமர்ந்த
கடுப்பொலி மிடற்றலர் கடுக்கையந் தொடையோன்
வடுப்பொலி கணியொடு மருப்பவுண் மகிழ்ந்தே. (௩௯)

அடித்தல மறுமர மெனத்தனி யழகார்
படித்தல மிசையுடல் படப்படப் பலகான்
முடித்தலை கரமுற முகிழ்த்தடி பணியா
நடத்துமெய் பொடித்திதழ் துடித்திட நவில்வான். (௪௦)

முடப்பிறை நதிப்புனன் முடிச்சடை முடித்தாய்
கடற்பொலி விடத்தினை யடக்கிய களத்தாய்
மடக்கொடி யிடப்புறன் வதிந்திடு மனத்தாய்
திடப்படு புரத்தழல் செலுத்திய திறத்தாய். (௪௧)

உருத்தெழு மதக்கரி யுரித்தணி நகத்தாய்
பரப்பிரம மெனத்தொழில் பகுத்துயிர் படைத்தா
யரிப்பொரு ளெனப்புவி யனைத்தையு மளித்தாய்
செருக்கிட வுருத்திர னெனக்கடை செகுப்பாய். (௪௨)

வேறு.

மறைகளா யிரமுந் தேடி மலர்ப்பதங் காணு ணாத
விறைவனே யிருவர் காண விலங்கழற் பிழம்பாய் நின்றாய்
நிறைதவத் தடிய ரன்பாய் நினைக்கிலெஞ் ஞான்றுந் தோன்று
மறைகழற் பதங்கள் போற்று மடியனேற் கருள்செய் வாயால். (௪௩)

எனத்துதித் தாடிப் போற்றி யிமையவர் வேந்தோ டேற்றுச்
சினத்துறு வெம்போ ராற்றிச் செயம்பெறு தசுர ரெல்லாந்
தனித்தனி யிளைத்து வீந்தார் தானவர் வீபா வண்ண
மனக்கொடுங் கவலை தீர்சஞ் சீவினி மந்தி ரத்தை (௪௪)

அருள்செய வேண்டு மென்ன வரும்பொருள் புகரை நோக்கித்
தெருளுறு முரவோய் போற்றுஞ் செந்தழற் கண்ணு மத்தை
மருளற வாற்றி லாங்கண் வந்துனக் கருள்வே மென்னப்
பொருள்விடை பெற்று மேருப் பொருப்பிடை விருப்பிற் சார்ந்தே. (௪௫)

விதிப்படி குண்ட மாற்றி விளங்கனல் வளர்த்து மீதே
கதித்திடு தருவிற் கால்கள் கட்டியே தலைகீ ழாகக்
கொதித்தெழும் புகையை யுண்டு குலவுகுண் டோத ரன்றான்
மதிக்கனி யருளா லாட்ட மாதவஞ் செய்யா நின்றான். (௪௬)

ஆற்றருந் தவத்தி னிவ்வா றுங்கவ னிற்க விப்பா
ஞற்றிசை யோரும் போற்று நான்மருப்பியானை யூரும்
பாற்றினஞ் சுழலும் வச்சிர பாணியே முதலாந் தேவர்
மாற்றல ரசுரர் செய்கை வகுத்தினி துரைப்பாம் வெள்ளி. (சஎ)

முன்னுரை தவத்தின் மேவி யசுரர்கண் முயல வன்றோ
ருன்னிய கப்ட மோர்ந்து வானவ ருறுபோ ராற்ற
வென்னிது நினைத்திர் யர்க்க ளிராயுதர் குரவ னில்லைத்
துன்னிநீ ருடற்ற றீதென் றேடலுந் தொடர்ந்து சென்றார். (சஅ)

தம்பெருங் குரவன் றாய்பாற் சரணென வடைய வன்னை
யும்பரால் வருமு பாதி காப்பனிங் குறைவி ரென்றாள்
வம்பவிர் தருவி னீழல் வானவர் வளைந்து பின்னு
மம்புவெம் படைக ளேவ வன்னவன் கோபத்தோடும். (சகூ)

அனலுறு மாபி சார முஞற்றியே யமரர் கோமான்
றனைவெறு மூங்கை யாக்க மூங்கைமா றனது பொற்று
டினைவொடு நினைக்க வன்னான் றேன்றலுஞ் சீற்றம் பொங்கிக்
கனலென விழித்து நின்று கருதியே முகமன் சொல்லும். (ருo)

அறிதுயி லமர்ந்து லோகத் தாருயிர் காத்தெஞ் ஞான்றும்
பிறிவிலா தளிக்கு நீதிப் பேரருட் கடலே யிங்ஙன்
வறியரா யமரர்க் கஞ்சி யசுரர்மா ணுக்க ரென்பாற்
குறுகினார்க் கபய மீந்தேன் கோதணி கொள்கைத் தன்றால். (ருக)

என்றலுந் துளபத் தாரோ னிமையவர் வேந்த னுள்ளக்
கன்றலு மூங்கை யாகிக் கையுடன் காலா டாமை
னின்றதுங் கண்டன் னேனை நேர்ந்தெம துடலிற் சார்ந்தா
லுன்றனைக் காத்து மென்றே யுரைத்தன னுரைத்த லோடும். (ருஉ)

வெள்ளிதாய் மாயோற் பார்த்து விண்டுநீ விண்ணோர் வேந்தைத்
தெள்ளிதாய்க் காத்த லென்கொ லென்றவத் திறத்தா லும்மை
யெள்ளிமெய் தகிப்பெ னென்ன விருவரு மஞ்சி யுள்ளத்
துள்ளிய காலை வானோர்க் கிறையவ னுரைப்ப தானான். (ருகூ)

கருணையங் கடலே யிங்ஙன் காத்தளித் தருள்கி லாயேன்
மரணமா மென்ற ளூவி பெண்ணென மதியே லிந்நாண்
முரணறப் புரியா யாகி னின்னையு முடிப்ப னென்ன
வரணுறு மனத்தி லோர்ந்தாங் கரியசக் கரத்தை விட்டான். (ருச)

விட்டசக் கரந்தான் கோடி வெங்கதிர் விரிந்த தென்ன
வட்டதிக் குலக மூன்றும் விளக்கியே யசுரர்க் காத்துக்
கட்டுறும் புகர்மா தாவின் கழுத்தினை யரிந்து மீண்டு
சிட்டர்போற் றிடுமால் கையிற் சிறந்திட விருந்த தன்றே. (ருரு)

பிருகுமா முனிவன் மாலைப் பெண்வதை புரிந்த தானீ
தருநிலத் தெழுகால் யோனி தனிற்பிறந் திடுதி யென்றே
யொருவிடாச் சாபங் கூறி யுதிக்குமோர் சென்ம மேழு
மருவுமிவ் வுலகங் காக்கைக் காமென வழுத்தி னுனல். (ருசு)

அன்றுறு சாபந் தன்னு லரியவ தாரஞ் செய்தே
துன்றிய வுலகங் காக்கத் துணிந்தனன் பிருகு வென்போன்
றன்றிரு மடந்தை யாகந் தலையொடு கூடி மிக்கா
யொன்றுமந் திரத்தி னலங் கெழுப்பின னுலகம் போற்ற. (ருஎ)

தவமுறு பிருகு சாப மிதுவெனத் தரணி காத்துத்
திவளொளி வெய்யோன் மைந்தன் சிறந்தவை வச்சு தற்கன்
றுவகையொ டுரைத்தா னென்றே யுயர்தவ முனிவர்ப் பார்த்து
நவரத மறிந்த சூத முனிவர னவின்றிட் டானுல். (ருஅ)

நாற்பத்தாறவது

பிருகுவிண்டுவைச்சபித்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கஉ௲எ.

நாற்பத்தேழாவது

சுக்கிரன் வரமடைந்த வத்தியாயம்,

ஆறொடு கொன்றை தும்பை யணிந்திடு மமலற் போற்றிப்
பேறுமிக் கெய்திடுஞ்சுக் கிரன்வரப் பேறு சொல்கென்
றூறுமெய்த் தவத்தின் மிக்க முனிவர ருவந்து கேட்ப
நீறுகண் டிகைத ரித்த நிருமலச் சூதன் சொல்வான். (க)

அருந்தவப் பிருகு மேன்மை நோக்கி விண் ணரசு மஞ்சி
விரிந்தவிண் ணுலகி லெய்தி வெள்ளியை வெல்வா னெண்ணிப்
பொருந்திய கமல வீட்டிற் பொன்னிவ ளென்ன வாசை
திருந்திய விருப்பி னின்று சிறந்திடுஞ் செவ்வி யான. (உ)

தடமுலைக் கருங்கட் செவ்வாய்த் தரளவா ணகைப்பொன் மேனித்
துடியிடைப் பரும வல்குற் சுதை மொழிக் காந்த ளங்கைப்
பிடிநடைக் கமலச் செந்தாட் பிறைநுதற் பசிய கூந்தன்
மடமயிற் செயந்தி தன்னை வருகவென் றழைத்துச் சொல்வான். (ங)

மாதவப் பிருகு மைந்தன் சுக்கிரன் மகேசன் சொன்ன
நீதியிற் றவஞ்செய் கின்றா னிவப்புறு மேருப் பாங்க
ராதர வுடனே வானத் தைந்தரு நிழலி னுப்பண்
மீதிலா வரசு செய்து தேவரோ டிருக்க வேண்டி. (ச)

நின்னையப் புகர்க்க ளித்தே னின்னுயிர்க் கொழுந னன்னோன்
றன்னையே பொருந்தி யேவற் பணிவிடை தாழ்வி லாம
லன்னைநீ புரிந்தெந் நாளு மளவிலா வின்பந் துய்த்தே
மன்னுக வென்று வச்சிர வாசவன் வழங்க லோடும். (ரு)

அழகொடு படிவ மான வமுதொடும் விடத்தி னோடும்
பழகிய நெடுங்கட் செவ்வாய்ப் பணைமுலைச் செயந்தி யென்னு
மழலைமென் மொழியா டோழி மாரொடு மீன்ற தந்தை
கழலிணை பணிந்து போற்றிக் காதலால் விடையுங் கொண்டாள். (சு)

கருணையோர் படிவ மான கடவுள ரிருக்கு மேரு
வரையினைக் கண்டு போற்றி மகேச வென்னுளத்தி லெண்ணும்
பெருமையை முடிப்பா யென்றே பிரார்த்தனை பண்ணி வானத்
தருவொடு மிகலி யோங்கு தபோவனத் தருகு சார்ந்தாள். (எ)

தோழியர் தம்மை யின்சொல் சொல்லியே யனுப்ப வன்னோ
ரேழிசைக் குதலைத் தீஞ்சொ லிறைவியைப் பணிந்து போற்றி
வாழியென் றாசி கூறி வாசவ னகரிற் சாரச்
சூழிருங் கான நீங்கித் தூய்தபோ வனத்திற் புக்காள். (அ)

அண்டமும் போர்த்தப் பானு மளாவுமோர் தருவிற் பாசங்
கொண்டுகால் கட்டி யங்கை குவித்துயர் தலைகீ ழாக
மண்டுமா தரத்திற் றாம மடுத்தவா யடுக்க நின்றே
பண்டரு மொழியா கன்சொற் படிகுண்டோ தரனின் றாட்ட. (கூ)

அருந்தவம் புரியும் வெள்ளி யதிசயந் தன்னை யுள்ளம்
விரிந்தபே ரன்பி னோடு மெய்ம்மயிர் பொடிப்பக் கண்டே
பொருந்திய கணதூ மத்தைப் போற்றிநா டோறு மில்லை
முருந்திள மூரற் கன்னி பணிவிடை முயலா நின்றாள். (க௦)

மாதவ மிந்த வண்ணம் வருடமா யிரமுஞ் சென்ற
வாதலால் வெள்ளி வெற்பி னமர்ந்திடு மமலன் வாசத்
தாதவிழ் மலர்மென் கூந்தற் சங்கரி கவுரி மாயன்
சோதரி யுலக மீன்ற சுந்தர வல்லியோடும். (கக)

வெள்ளியங் கிரியின் மீது பவளமா மேரு வொன்றே
யொள்ளிய மரக தக்குன் றோடும்வீற் றிருந்த தென்னக்
கள்ளவி ழிதழி சூடுங் கறைமிடற் றண்ண லேறித்
துள்ளிய விடைந டாத்தத் துந்துமி படக மார்ப்ப. (கஉ)

ஆடல்சேர் மயிலி லேறி யறுமுக னருகு செல்ல
மூடிக மீதி லானை முகவன்முன் செல்ல நல்ல
நாடக மாடிப் பூத நாதர்க ளனேகர் செல்ல
வேடவிழ் மலர்க ளேவி யிமையவர் சூழ்ந்து செல்ல. (கங)

கின்னரர் யாழ்பே சப்பிங் கிருடிகூத் தாட வந்து
மன்னின னந்த ரத்தின் மாதவ வெள்ளி கண்டே
துன்னிய கணதூ மத்திற் றூங்குத லொழிந்து தாழ
மின்னொரு பாகன் சஞ்சீ வினிவிஞ்சை விளம்பிப் பின்னும். (கச)

நினைத்துள கருமம் யாவு மெய்துவை நேரு மொன்னார்
வினைப்பகை வெல்வை விஞ்சை வேற்றுவர்க் குரைக்க லாகா
வுனக்குறும் பிரசே சத்துவ மோங்குமீ சத்து வந்தான்
மனக்குறை யொழுதி யென்ன வருபர னருள ளோடும். (கரு)

வேறு.

அருள்பெறு புகர்சிவ னடியைப் போற்றியே
மருள்பெறு பவக்கடன் மாற்றி யென்வயிற்
றெருள்பெறு பெருமையும் விஞ்சைத் திண்மையும்
பொருள்பட வளித்தனை யென்று போற்றியே. (கசு)

வேறு.

மறைநான் கொடுமா லயன்றே டியுமே
பிறையார் முடிசே வடிபெற் றிலரென்
குறையா வுமொழித் தருள்கூர்ந் தென்முன்
னிறைவோ டுவிளங் கியநின் மலனே. (கஎ)

அடியார் பவமாற் றிடுமற் புதனே
கொடியா ரையொறுத் தருள்கொற் றவனே
பிடியார் முமைபெற் றிடுபெற் றியனே
படிமீ தெனையாண் டபரஞ் சுடரே. (க௮)

அருவா யுருவா யறிவாய் மருளா
யுருளாய் வெளியாய்ப் பகலா யிரவாய்
மருவாய் ரசமாய் மறைதேர் முடிவாம்
பொருளா யுலகாண் டபரம் பொருளே. (கக)

பொன்போன் மணிபோற் புகல்வெள் ளியைப்போன்
மின்போன் மதிபோல் விரிசெஞ் சுடர்போ
லன்போ டுறுமெய் யடியா ருளத்தி
னின்போ லுறைவோ ரெவர்நின் மலனே. (உ0)

பந்தார் முலையோர் பாகா சரண
மந்தா கினிசேர் மலையே சரணங்
கொந்தா ரிதழிக் குழகா சரண
மெந்தாய் சரண மிறைவா சரணம். (உக)

அரனே சரண மமலா சரனம்
பரனே சரணம் பதியே சரணம்
வரனே சரண மதியோய் சரணந்
திரனே சரணஞ் சிவனே சரணம். (உஉ)

ஓரா னையினீ ருரியாய் சரண
மேரார் முக்கண் ணிறைவா சரண
நாராய ணனுன் முகனே சரணஞ்
சீரா ரெழுத்தஞ் சினனே சரணம். (உரு)

ஆறு யெழுநீ றணிவாய் சரண
மேறு வுடையெண் டிசையாய் சரண
மாறு நவசோ மதரா சரணம்
பேறூர் பேரின் பத்தாய் சரணம். (உச)

வேறு.

உள்ளுவார் தம்மை யுள்ளு மொருவனே சரண மெண்ணு
தெள்ளுவார் தம்மை யெள்ளு மிறைவனே சரண மன்னப்
புள்ளுவ ராகந் தேடும் புங்கவா சரணங் கங்கை
துள்ளுவார் சடையாய் ஞானச் சோதியே சரணம் யானே. (உரு)

கங்கையா றணியும் வேணிக் கருணையாய் சரணம் வேதன்
கங்கையார் கடவுட் கெல்லாங் கடவுளே சரண மென்றுங்
கங்கையா யிரஞ்சூழ் சூலக் கையனே சரணம் போத
கங்கையா றிரண்டொத் தந்தக் கயிலையாய் சரணம் யானே. (உசு)

காலனைக் காலா லெற்றுங் காலனே சரண மால
காலமித் தரணி யுய்யக் கவர்ந்தவா சரண மூன்று
காலமுங் கடந்தோ ருள்ளக் கருத்தனே சரண மந்தக்
காலனைக் காய்ந்த நெற்றிக் கண்ணனே சரணம் யானே. (உஎ)

புண்டரீ கத்தை யீர்ந்த புனிதனே சரண மாயோன்
புண்டரீ கக்கண் சாத்தும் புங்கவா சரண மெண்ணி
லண்டமோ டகண்டம் யாவு மமர்ந்தவா சரணங் கோபித்
தண்டலார் புரமூன் றெய்த வமலனே சரணம் யானே. (உஅ)

சங்கரா சரண ஞான சாகரா சரணங் காதார்
சங்கரா சரணந் தூய தற்பரா சரணம் பாவ
சங்கரா சரணம் பத்த சுந்தரா சரண மாதே
சங்கரா சரணஞ் சந்திர சடாதரா சரணம் யானே. (உகூ)

வேறு.

திங்களு மரவு முடித்தாய் சரணஞ் செம்பவ ளச்சடை முடியாய் சரண
மங்கமு நீறு மணிந்தாய் சரண மன்பொடு நினைவார்க் கணியாய் சரணம்
பங்கினின் மங்கை பதித்தாய் சரணம் பல்லுயி ருக்கோர் பதியாய் சரணந்
தங்கவரைச் சிலை தரித்தாய் சரணந் தாழாருள்ளந் தரியாய் சரணம். (௯0)

ஒருகையி லேந்து முடுக்காய் சரண முடையென வாசை யுடுத்தாய் சரண
முருகலர் பதுமத் தடியாய் சரண முனிவொடு பகலை யடித்தாய் சரணந்
திருமதி பகலழல் விழியாய் சரணந் திருமக னெரிய விழித்தாய் சரணம்
பொருவறு மிமயப் பிடியாய் சரணம் பொருதிரி வேல்கை பிடித்தாய் சரணம். ()

அண்டா பரண சரணஞ் சரண மயன்மா லறியாய் சரணஞ் சரணந்
துண்டா கியவெண் பிறையாய் சரணந் துணையா ருமிலா வொருவா சரண
முண்டா லமுறை கண்டா சரண மொன்று கியபே ரொளியே சரணந்
தண்டா வெண்டோ ளிறைவா சரணந் தமியே னுயிரே சரணஞ் சரணம். (௯௨)

வேறு.

உலகெலா மேத்த நின்ற வொருவனே போற்றி வாகை
யிலகுமுத் தலைவே லேந்து மிறைவனே போற்றி கங்கை
குலவிய செஞ்ச டாம குடத்தனே போற்றி நாயேற்
கலகிலா வின்சை நல்கு மமலனே போற்றி போற்றி. (௯௩)

பழமறைப் பொருளே போற்றி பணியணிந் தருள்வாய் போற்றி
தழனிறக் கிரியே போற்றி தண்ணளிக் கடலே போற்றி
மழவிடைப் பாகா போற்றி மானிடப் பாகா போற்றி
குழகவித் தகனே போற்றி கொன்றைமா லிகையாய் போற்றி. (௯௪)

அண்ணலே போற்றி போற்றி யமோகனே போற்றி போற்றி
பண்ணவா போற்றி போற்றி பங்கயா சனன்மால் போற்றி
யெண்ணுறும் பொருளே போற்றி யெங்குமாய் நின்றாய் போற்றி
கண்ணுதற் சிவனே போற்றி கடவுளே போற்றி போற்றி. (௯௫)

குவளையங் கண்ணி பங்கிற் குழகனே போற்றி போற்றி
கவளமா கரியு ரித்த கபாலியே போற்றி போற்றி
தவளவெண் ணீற ணிந்த சம்புவே போற்றி போற்றி
பவளமால் வரையே ஞானப் பரவையே போற்றி போற்றி. (௯௬)

வந்திர தனைநீ ருக்கு மாதவ யோகி போற்றி
சுந்தர வடிவா போற்றி துதித்தறி யாத நாயேன்
சிந்தையி னிலைத்த வெல்லாஞ் சிறப்புட னருள்வாய் போற்றி
சந்தனை யளித்த நீல கண்டனே போற்றி போற்றி. (௯௭)

ஆரறு கிதழி தும்பை யம்புலி காந்தை மத்தஞ்
சீர்மதிக் கண்ணி வேதன் சிரந்தலை மாலை யானை
யீருரி யாமை பன்றி யெயிறெனும் பக்க மாலை
நீரர வணிந்த முக்க ணிமலனே போற்றி போற்றி. (௩௮)

சம்புசங் கரமா தேவ சடாதர நீல கண்ட
நம்பகங் காள வேத நாயக கால கால
வம்பிகை பாக வாதி த்ரியம்பக சிவம கேச
வும்பர்நா யகநா தாந்தத் தொருவனே போற்றி போற்றி. (௩௯)

முக்கணு யகநி ரீச முப்புர தகன வீச
செக்கர்வா ணிறத்த சந்திர சேகர பரமா னந்த
நக்கதி யான ரூப நடேசநித் தியச பேச
கொக்கிற கணிந்த வேணிக் குரிசிலே போற்றி போற்றி. (௪0)

பாலலோ சனலோ கேச பராபரா னந்த ரூப
நீலமா மிடற்ற சோதி நிருமல நிருத்த பாத
காலகா லாந்த காகங் காதர பரம யோகி
சூலினி நீலி மோக சோபன போற்றி போற்றி. (௪௧)

தத்துவ ரூப வேத தத்துவா தீத ஞான
வித்தக வாந்ம நாத வியாபக ரூபா ரூப
நித்திய விதாகி தத்தி னின்றுயிர்க் கெல்லா மூட்டும்
பித்தனே மத்த வேணிப் பிஞ்ஞகா போற்றி போற்றி. (௪௨)

வேறு.

தெண்டிரை கடலுட் டுயில்கொளு மாயன் றிசைமுக னிருவருந் தேடிக்
கண்டில ரின்னு மறையுநின் பெருமை காண்பதற் காசையா லிரங்குந்
தொண்டருக் கெளிய னென்பதற் கென்முன் ஞேன்றிய தேகரி யன்றே
வண்டருக் கரியா யாருயிர்க் குயிரே யமலனே போற்றிநின் சரணம். (௪௩)

திர்க்கொடு முடிக ளாயிர நெருங்கிச் சிறந்திடு கயிலையை யெடுத்த
வரக்கனை நகத்தா லழுத்திடச் சாமத் தரற் றிடத் திருவுளத் திரங்கி
யாத்தொடு வரங்க ளளப்பில வருளு மொண்ணுதற் கண்ணனே யடியேன்
விருப்புறு வரங்கள் யாவைவு மீந்த விமலனே போற்றிநின் சரணம். (௪௪)

வேறு.

மந்தர கிரிமத் தாக மதிநடுத் தம்பமாகச்
செந்தழற் பகுவாய்ச் செங்கட் சீறராக் கயிற தாக
விந்திரன் முதல்வா னோர்க ளிருங்கடல் கடையத் தோன்றி
முந்துறும் விடத்தை யுண்ட முதல்வனே போற்றி போற்றி. (௪௫)

தவப்பெருஞ் செருக்கி ஞனின் சரணமா மலரை யெண்ணு
தவத்தொழில் புரியு மோன முனிவர ரகந்தை நீக்கி
சிவப்புறு மழகு வாய்ந்த நிலவுகங் காள வேட
முவப்புறு பரனே போற்றி யுருத்தழ னகையாய் போற்றி. (சசு)

மாயையின் புணர்ப்பி ஞலே மறைப்பொரு ளுணேயெண் ணுது
தூயமா மகத்தை யாற்றத் தொடங்கிய வகந்தைத் தக்க
ஞயவன் றலையைக் கொய்தன் றயத்தலே யமைத்து விண்ணோர்க்
கேய்வுறு நடுக்கஞ் செய்த விறைவனே போற்றி போற்றி. (சஎ)

சனகனே முதல நான்கு தவப்பெரு முனிவ ரன்பா
யுனதடிக் கமலம் போற்றி யோகமுத் திரைகாட் டென்னச்
சினேசெறி கல்லா னீழற் றெக்கணு மூர்த்த மாகி
மனமொருப் படவே காட்டும் வள்ளலே போற்றி போற்றி. (சஅ)

மருமலர்க் கரிய கூந்தன் மழைநெடுந் தடங்கட் செவ்வாய்
பெருகொளிப் பச்சை மேனிப் பிறங்கு வெண் மூர லாரம்
பருமணித் தரளக் கொங்கைப் பார்ப்பதி தன்னே யன்பாய்த்
திருமணஞ் செய்த முக்கட் செல்வனே போற்றி போற்றி. (சகூ)

நாமமந் திரங்களாலு நவையறப் போற்றி மேலா
யேமுறு மிருக்கு வேத மெழில்பெறு மெசுரு வேதஞ்
சாமமாம் வேத மிக்காய்ச் சாற்றதர் வணமாம் வேதத்
தாமுயர் மந்தி ரத்தா லருள்பெறத் துதித்தா னன்றே. (ருo)

வேறு.

என்றிப் படியே துதிசெய் திருதா
ளொன்றிப் பணிசெய் துருகும் புகர்மெய்
வென்றித் தனிமால் விடையோன் கரத்தாற்
றுன்றித் தடவித் துதிகொண் டனமால். (ருக)

செய்யுன் றவமுந் திகழ்தோத் திரமு
மெய்யன் பினேயும் வியந்தா மினிநீ
யுய்யும் படிசெல் லுதியென் றருளு
மையன் சரணம் விடைகொண் டனனுல். (ருஉ)

விரிவா ருதியின் விடமுண் டருள்வோன்
பரிவாய் மறையைப் பகரும் புகர்பாற்
பிரியா தசெயந் திபெருங் குணமு
மரியா தையும்வண் மையுநா ணமுமே. (ருங)

கண்டே சிறுகன் னிகையார் மகணீ
தண்டா திவண்வந் ததுசாற் றெனலும்
வண்டே றுகருங் குழன்மா னனேயாள்
விண்டே வர்பதிக் குறுமென் மகள்யான். (ருச)

என்பே ரோர்செயந் தியெனப் புகல்வார்
நின்பே ரருள்வேண் டினநின் மனனு
லன்போ டுமெனெண் ணமறிந் திடென
வுன்பே ரறிவோ டுளநேர்ந் தன்மால். (௫௫)

போகந் தனைநீ புரியும் படியென்
னுகந் தழுவ லெவரு மறியா
தேகும் படிசே ரீரைந் தாண்டு
தேகம் பிரியா மனைசே ருதுமால். (௫௬)

வேறு.

எனறவன் விடுத்து வெள்ளி யேந்திழை தன்னைக் கொண்டு
தன்றிரு மனையிற் சேரப் புகர்பெற்ற தன்மை யாவும்
வென்றிகொ ளசுரர் கேட்டு வெள்ளியைக் காண்கி லாரா
யன்றுறை யிடங்கள் சார மாயையோ டமர்ந்தான் வெள்ளி. (௫௭)

இவ்வகை விவர மெல்லா மிந்திரன் குருவு மோர்ந்து
தவ்வலில் வெள்ளி யாகித் தாமவண் குறுகித் தேடிக்
கவ்வைகொ ளசுரர் தம்மைத் தவத்தினுற் கருதும் விஞ்சை
தெவ்வர்தா மறியா வண்ண முரைத்தும்பாந் தெளிவி ரென்றே. (௫௮)

கூட்டியே கபடஞ் செய்து கூர்ந்திடும் பொழுதில் வெள்ளிப்
பாட்டளி துதையும் பைந்தார்ச் சயந்தியைப் பரிவிற் பத்தா
நாட்டிய வருட மாயை சூழ்ந்திட நயக்கு நாண்மை
தீட்டிய கருங்கட் டெய்வ யானியைத் திறத்திற் பெற்றே. (௫௯)

பத்தெனும் வருடந் தீர்ந்து சயந்தியைப் பார்த்து விஞ்சை
நித்திய மசுரர் கேட்ப நிகழ்த்தயாம் போது மென்ன
வத்திற நன்றே யென்றென் னுயிழை விடுப்ப வஞ்ச
வித்தையை யசுரர்க் கோதும் விண்ணவர் குருவைக் கண்டே. (௬௦)

அழுங்கிய மனத்த னாகி யசுரரை யழைத்து வானே
ரொழுங்கிய குருவெம் போல வொருவடி வெடுத்து நும்பால்
வழங்கிய வஞ்சந் தன்னை மதித்திடேல் வெள்ளி யான்கை
தழங்கிய தமரு கந்தா னருள்விஞ்சை சாற்று வேனுல். (௬௧)

எனப்புகர் நவில மாயப் புகரையும் பார்த்தின் னேர்த
மனக்குறை முடித்துந் தங்கள் குரவரை மதிக்க லாற்றார்
சினக்கொடு மசுர ரென்றே தேர்ந்தறி முனிவர்க் கெல்லாந்
தனக்கிணை யில்லாச் சூத முனிவரன் சாற்றி னுனல். (௬௨)

நாற்பத்தேழாவது
சுக்கிரன் வரமடைந்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௨௬௬.

நாற்பத்தெட்டாவது

அசுர சாபகலியுக

தன்மமுரைத்த வத்தியாயம்

சாற்றிய வசுரர் சாப கலியுக தன்ம மென்றே
தோற்றுறு மத்தி யாயந் தொகுத்துமால் விரித்த வண்ண
நீற்றொளி பழுத்த மேனி நிமலனை வழுத்தி யோக
மாற்றிய முனிவர் கேட்ப வறைகுவான் சூதன் மாதோ. (க)

புகலுறு மசுரர்ப் பார்த்துப் புங்கவர் குரவன் மாயம்
பகர்தலை நிசமென் றெண்ணு தெம்மிடம் பகர்வி ரென்னத்
துகளற வருடம் பத்துந் தொகுத்து மந்திரத்தை யோது
நிகரிலான் றனே யாசான் யாவனீ யென்னச் சீறி. (உ)

தேவரோ டேற்று நீவிர் போர்செயிற் றியங்கித் தோற்றும்
பூவல யத்தில் வாழ்தி ரெனச்சபித் தெழுந்து போய்த்தங்
காவல்கொண் மனையிற் சார்ந்தா னத்திறங் கண்டு வஞ்ச
மேவிய குருவு மெண்ண முடிந்ததா மெனவி யந்தே. (ங)

தம்முரு வெடுத்து வானிற் சார்தலு மசுர ரோடும்
விம்முறு மனத்த னாகி வேந்தனும் பிரகலாத
னம்மையின் றளிப்ப னென்னே நண்ணுறு மென்று சென்று
செம்மைசேர் பார்க்க வன்ற னடியிணை சேர்ந்து சொல்வான். (ச)

மாயையின் வயத்த ராகி வயங்கியே வியாழ மெங்க
ணாயக னென்ற நம்பி கேட்டன ஞான மில்லேங்
காய்வுறே லென்னப் புத்தி கேட்டிளீர் கலங்கித் தெவ்வர்க்
காயினீ ரென்னுள் வெள்ளி யட்டிபணிந் தசுரர் வேந்தன். (ரு)

நின்பத மன்றி வேறு நிலையிலே னீகோ பித்தா
னன்பெரு நிலத்தை விட்டுப் பாதல நண்ணு வேமால்
வன்பவ வினையே யன்றி மனமறி வஞ்ச மில்லே
முன்பெ ஞானக் கண்ணு ணர்ந்தரு ளென்ன லோடும். (சு)

ஞானத்தி லறிந்தே தாழ்ந்த வசுரர்பா னவையி னுற்ற
வானத்தார தேவர் தங்கள் குரவன்வஞ் சனையா மின்று
மோனத்தர் லுறைய லாகா தென்றவன் மொழிவன் வண்டு
கானத்தார் மாலை மார்பி ரஞ்சலிர் கழறு வேமால் (எ)

ஊழ்வினைப் பயனு லுற்ற சாபம்விட் டகலா தங்க
டாழ்வினை விட்டுத் தேவர் தங்களை யொருகால் வென்றே
யாழ்பணிப் பாத லத்தி லமருதிர் பிரக லாதன்
வாழ்பவுத் திரனு லுங்கண் மரபெலா மேம்பட் டோங்கும். (௮)

முன்னமே பிரம தேவன் மொழிந்தவா றுரைத்தேன் சாப
மின்னண முலக மூன்று மென்வரத் தரசு செய்தே
பன்னிரு யுகங்க ளும்பர் தாழ்ந்திடப் பணிப்பீர் நீவிர்
துன்னிய தேவர் வென்றே தொல்லுல காள்வர் பின்னும். (௯)

மன்னுசா வன்னி தாவந் தனில்வலிப் பிரக லாத
னின்னுட மருமா னென்னு மாபலி நிலமீ துற்றுத்
தன்னுட வலியா லாண்டு பின்னரி தனக்கே நல்கி
யுன்னரும் பாத லத்தி லுறைவனென் றுரைசெய் தெம்மை. (௧௦)

நீயுமிக் காலந்தன்னி னிகழ்த்திய வசுரர்க் காகப்
போயொரு சகாயஞ் செய்யேல் புகலுமா பலிமுன் பூமிக்
கேயுமா றுனக்கேயீந்தே மென்னுமுன் னேகாந் தத்திற்
றூயமெய்ப் பிரம தேவன் சொற்றன னென்றுங் கூறி. (௧௧)

இவனுறு சண்டன் மர்க்க னெம்முழைக் கற்றோர் வானத்
தவர்குரு வனையர் நுங்கள் மனோரத மனைத்துஞ் செய்வர்
கவனநீ ரொழிக வென்ன வசுரருங் களித்து நீங்கிப்
புவனமீ தணுகி வெம்போர் தேவர்க்குப் புகல லோடும். (௧௨)

தேர்பரி யானை யேறித் தேவர்வந் துற்ற பின்னர்ப்
போர்பொரு தொருநூ றாண்டு போன்பி னசுரர் வெற்றி
கூர்தரத் தேவ ரோர்ந்து குலவிய சண்ட னோடு
பேர்பெறு மர்க்கன் றன்னை மகத்தவி பெறுக வென்றே. (௧௩)

புகறலு மவரவ் வாறு பொருந்திடக் கூட்டிக் கொண்டே
யிகலவண் வென்றார் பூமி யிருப்பிட மிரிந்து தாழு
மகன்பெரும் பாத லத்தி லடைந்தன ரசுரர் மாய
னிகரிலாப் பிருகு சாப நேர்ந்துமிப் புவிக்கோ ரூறு. (௧௪)

வருபொழு தவதா ரங்கண் மருவியே காத்தான் வேதன்
கருதிய பிரக லாதன் வாய்மொழி கடந்து ளோர்க
ணரர்களுக் கேனும் போரி னசித்திடச் சபித்த லாலே
திருமறு மார்பன் மச்ச ரூபத்துஞ் செயித்தா னென்றே. (௧௫)

தருமதே வதைபான் முன்னஞ் சாட்சுடி மனுவின் காலத்
தரியுந்த னமிசமாக வெடுத்தன னவதா ரந்தான்
தெரிவைவச் சுதமன் வந்த ரத்தினிற் றிவ்ய மாக
வருமவ தார மூன்று மனுடாவ தார மேழும். (௧௬)

எடுத்தனன் றவத்துண் முன்மூன் றியம்புவ மமரர் யாகந்
தொடுத்தசெந் தழலி லெஞ்ஞு வராகமாய்த் தோன்ற லோடு
மடுத்தமர் புரோகி தன்மு னம்புயத் தயனே யாக
மடுத்துறை நான்கென் றேதுஞ் சதுரமா யுகத்தில் வானோர். (கஎ)

இடைந்திட வசுர ரேற்ற காலத்தி லிரணி யாக்கன்
கடந்தபே ராற்றல் வெற்றி யிரண்ய கசிபு மானத்
தடங்கட னுப்ப ணூர சிங்கமாய்ச் சனிக்க ருத்ர
னடைந்தனன் புரோகி தம்மா யமர்ந்துள வுலக மெல்லாம். (கஅ)

மிகுத்தமா பலியே யாள விளங்குமே ழாந்தி ரேதா
யுகத்தினின் மூன்றுஞ் சன்மம் வாமன வுருவி னுற்றான்
மகத்துவத் தரும தேவன் புரோகித னாக வந்தான்
சகத்தினி லிந்த மூன்றுந் திவ்யாவ தார மாமால். (கக)

பிருகுவின் சாபத் துற்ற மானிடப் பிறப்போ ரேழு
முறைசெய்வா ராதி யான திரேதமா யுகத்தின் மிக்காந்
தருமமே பிறப்பத் தத்தாத் திரையனுச் சனித்தா னந்நாள்
வருபுரோ கிதரே யாக மார்க்கண்டர் வதிந்தா ரன்றே. (உ0)

செப்பிய பதினைந் தென்னுந் திரேதமா யுகத்தி லைந்தா
மொப்பில்சீ ரவதா ரந்தா னுரைத்தமாந் தாதா வானான்
றுப்புறு புரோகி தம்பே ரையிப்பிய ரென்பர் தூயோர்
மெய்ப்புறு பத்தொன் பானுந் திரேதமெய் யுகத்தில் விண்டு (உக)

மன்னவர் குலத்தை விட்ட வாழ்சம தக்கி னிக்கோர்
துன்னிளங் குமர னாகத் துலங்கிய வாறுஞ் சென்ம
மின்னிய பரசு ராமன் புரோகிதன் விசுவா மித்திர
னுன்னிரு பத்து நான்காந் திரேதமா யுகத்துப் பார்மேல். (உஉ)

இலங்கையர் கோனை வெல்லத் தசரத ரிடத்தி ராமன்
றுலங்கின னேழாஞ் சென்மஞ் சொற்புரோ கிதன்வ சிட்ட
னலங்கொளு மிருபத் தெட்டாந் துவாபர யுகத்தி னன்காய்க்
கலங்கலி றருமங் காத்தே யசுரரைக் கடிவா னெண்ணி (உ௩)

பராசர ரிடத்தி லெட்டாம் படிவமே வியாச னானன்
புரோகித னாகிச் சாது கன்னியே பொருந்தி னானற்
றராதலந் தன்னி லந்த யுகந்தனில் வசுதே வன்பா
லிராவினிற் கண்ண னென்பான் சென்மமே யெடுத்தா னன்றே. (உச)

அந்தநாள் புரோகி தர்த்தொய் பாயனர மர்ந்தா ரின்னும்
வந்துறு மிருபத் தெட்டாங் கலியுக வரைப்பிற் பத்தா
யுந்திய சன்மம் விட்டு னுசாவென்போ னிடத்தி லோங்கி
நந்தலில் கற்கியாக நண்ணு வனன்ன னான்று. (உரு)

அறந்தரு கற்கி தன்பாற் புரோகித மமர்வி யாசர்
மறந்தவிர்க் கின்ற மாக்கிய வற்கிய ரிருவ ராவார்
திறந்தரு கற்கி மேனாள் சென்மித்தோ ரையைந் தாண்டு
பிறந்திடு நாளுள் வேலை பெரும்புவி வரைப்பு ளோரில். (உ௬)

வரம்பிகழ்ந் திழிவோர் பாவம் வஞ்சக மறங்கள் செய்வோர்
தரம்பெறு சமய வாதர் சதுமறை சாற்று வோரை
நிரந்தரம் பழிப்போர் பொல்லா நீதிசெய் நிருபர் மிக்க
வுரம்பெறு வலியர் நித்தம் பொய்களை வுரைசெய் மாந்தர். (உ௭)

இன்னவர் தம்மை யெல்லா மிருங்கரப் படையால் வீட்டிப்
பின்னருஞ் சக்க ரத்தாற் பிழையுளோர்த் தேடிச் செற்று
மன்னுமிப் புவிக்கு வேண்டு மைந்தரை வைத்துக் கற்கி
யுன்னருங் கடலி னுப்பண் யோகநித் திரைசெய் வானால். (உ௮)

புவிபுரப் போர்க ளின்றிப் பொருதொழில் வீணிற் செய்துங்
குவிமுலைக் கன்னி மாரைக் கற்புக்கூர் மாதர் தம்மைச்
சவிபடப் பிடித்துந் தத்தந் தருமஞ்சந் தையினில் விற்று
மவிரொளிக் கடைக டோறு மன்னவிக் கிரயஞ் செய்தும். (உ௯)

சாதிகள் வரைவில் லாமற் சரங்கரங் கலந்துந் தத்தம்
போதமும் வேறு வேருய் வனத்தினிற் பொருந்தி வாழ்ந்தும்
பாதிமெய் பகரும் வானாள் குறுகியும் பரவை ஞால
மீதினி லத்த மின்றித் துன்புற்று வீவ ரன்றே. (௩0)

கலியொடுஞ் சனங்கள் மாளக் கற்கியுங் கருத்தி னோர்ந்து
மெலிவில்சீர்க் கிரேத மென்னும் யுகம்வர விளங்கு மைந்தர்
நிலைபெறப் படைத்தே யந்தர்த் தானமாய் நேர்ந்து போவா
ருலகின்மான் மனிட சன்ம மேழிவை யுரைத்தா மன்றே. (௩௧)

வகைபெறு மசுரர் சாபம் வருகலி யுகத்தின் றன்மந்
தொகைபெற மாயன் வைவச் சுதமனு மகிழ்ந்து கேட்பத்
தகைபெற வுரைத்த வண்ண நைமிசா ரணியத் துற்றுப்
புகையுறு வேள்வி யாற்று முனிவர்க்குப் புகன்றான் சூதன். (௩௨)

நாற்பத்தேட்டாவது

அசுரசாப கலியுகதன்ம முரைத்த வத்தியாயம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம், ௧௬௩௧.

நாற்பத்தோன்பதாவது

தீர்க்க தமசுக்குக்

குருசாப மோசன வத்தியாயம்.

உரைதீர்க்க தமசு சாப மொழிந்ததும் யயாதி மைந்தர்
துருவசுத் துருயுக்குக் சொல்லவே பூரு மரபுதானு
நிரைபெற வுரைப்பா மென்று சூதனை நேர்ந்து நோக்கித்
தரைபுகழ் முனிவர் கேட்ப வரன்முறை சாற்று வானால். (க)

துருவசு வன்னி தன்னைப் பெற்றனன் றுலங்கும் வன்னி
யரியகோ பானு வீன்ற னவன்மகன் றிருசா ரிப்பேர்
வருமவன் றன்சேய் காந்த மன்னவன் மருத்தற் பெற்றான்
பெருமைசேர் மருத்த னென்போன் றுச்சந்தன் றன்னைப் பெற்றான். (உ)

பூருவ மிசத்திற் றத்த புத்திர னாகை யாலே
சாருமத் துச்சந் தற்குப் பவுரவ ரெனும்பேர் தானே
சேருமப் பவுர வன்றன் சேயினை வருத னென்பார்
பாரின்மற் றவனு மாண்டி ரன்றனைப் பயந்தா னன்னோன். (ந)

பாண்டியன் சோழன் கீர்த்திப் பௌண்டிரன் கேர ளன்சீர்
வேண்டுமிந் நால்வர் மைந்த ரிவர்பெயர் விளங்குந் தேய
மாண்டகை துருகு பெப்புரு வமர சேதுப் பெற்றான்
காண்டகு சேது மைந்தன் சாட்டன்காந் தாரற் பெற்றான். (ச)

சொல்லிய காந்தா ரன்பேர் தேயமுந் துலங்கு மன்னோன்
மல்லலா ரிட்ட தேய வாசிக ளனேகஞ் சேர்த்து
வில்வலித் தன்மன் றன்னைப் பெற்றனன் விறல்சேர் தன்மன்
கல்லுறழ் திணிதோட் கீர்த்தி கிருதனைக் கருதிப் பெற்றான். (ரு)

கிருதன்வித் துருமற் பெற்றான் கிளர்ந்தவன் பிரசே தாவை
யருமையி னளித்தா னன்னா னமைந்தநூற் றுவரே யன்னோர்
பெருமையுத் தரதே யத்திற் பிறங்கிய மிலேச்சர்க் கெல்லா
மொருமைசே ரரச ராகி யுற்றன ரென்ப மன்னோ. (சா)

துலங்குநற் கீர்த்தி சேர்ந்த வனுப்பெற்ற தோன்ற றன்பேர்
கலங்கலில் சபான ரன்பிற் கருதிய சாட்சு சன்சீ
ரிலங்கிய பரமே ஷோடு மியல்பெறு மூவ ரென்பு
புலம்பெறு சபான ரன்கோ லாகலற் பெற்றா னன்றே, (எ)

தாவில்கோ லாக லன்சஞ் சயன்றனை யீன்று னன்னோற்
கோவில்சீர் மைந்த னாகும் புரஞ்சய னுரைக்கு மன்னோன்
மேவருங் கிர்த்தி ராஜ ருடிசன மேசற் பெற்றான்
றேவர்கோ னேர்ம காசா லன்றனைத் திறத்திற் பெற்றான். (

தனிமுடி மகாசா லன்றான் மகாமனற் றந்தா னன்னோன்
கனவுசீ நரன்றி திட்சு விருவரைக் கருத்தி னீன்றான்
வினவுசீ நரன் மின்னார்க ளைவரை வேட்டின் னோரி
லனநடை நிருகை தன்பா னிருகனை யளித்துப் பின்னும். (கூ)

கிருமிபாற் கிருமி கேண்மை நவைவயி னவின்ற கற்புப்
பெருதசேருவியை தன்பாற் சுவிரதன் பேர்பெற் றோங்குந்
தெரிவைநற் றிருடத் தோரி யிடத்தினிற் சிவியோ டைவர்
மருவுற வளித்தா னந்த மைந்தரிற் சிவிபெற் றார்கள். (க0)

பகர்விட தர்ப்பனோடு சுவிதன்கே கயன்பார் மேவித்
திகழ்பத்தி ரகனே யென்னு நால்வரைச் சிவிகளென்பார்
துகளறு மவர்க டேயஞ்சொல் விடதெர்ப்ப மிக்கா
யகழுறு சுவீரம் பத்திர மமர்ந்தகே கயமு மாமால். (கக)

நிருகன்சேய் நிருக னென்னு நிகரிலாக் கிருமி மைந்தர்
முருகவிழ் தொடையன் மொய்த்த கிருமிய ரென்று மிக்காய்
வருகழ லவன்றன் மைந்தர் வாழர வராட்ட ரென்றும்
பெருகிய சுவீரன் சேய்கள் பிறங்குமம் பட்ட ரென்றும். (கஉ)

உதித்தனர் புவியின் மிக்கா முசீனனர்க் கிளையோ னான
திதிட்சிதென் றறையும் வேந்தன் றிகழ்கிழக் கரச னானான்
மதித்திடு மிவன்றன் மைந்தன் வளர்பிரு சத்தி ரன்றான்
கதித்திடு மவன்றன் காளை காமனேர் சேன னென்பார். (கங)

சேனன்சேய் சுதப னன்னோன் சேய்திறற் பலியே முன்னா
ளானமி லுலக மூன்று மாண்டன னுரைக்கு மாயன்
றானவன் வலியை மாய்க்கத் தவயோகி யாகிப் பின்னர்
மானிட யோனி யுற்றுப் பிறந்தன னென்பர் மன்னோ. (கச)

பெலியென்போன் மக்க ளின்றிப் பிறங்குதன் மனைவி தன்பான்
மலிதவ முனிவ னீந்த வரத்தினான் மைந்த ரைவர்
நலிவுறு வகையே பெற்றா னவர்பெயர் நவிலி லங்கன்
பொலிவுறு வங்கன் சும்மன் புண்டரன் கலிங்க னென்பார். (கரு)

அப்பெலி தவத்தான் முன்ன ரமருமா யோக மாயுண்
மெய்ப்புறு பிரம கற்ப வாயுத்த மதனில் வென்றி
பொய்ப்புலை யன்றி நல்ல புத்திசொன் மூன்று காலத்
தொப்பன வறிதன் மிக்கா மோங்கவர் பிரசா சிட்டி. (கசு)

வருணத்தை நிறுத்த விந்த வரமெலா மெய்னே யீந்த
தருணத்தா னெனலுஞ் சூதன் றன்முக முனிவர் நோக்கிக்
கருணைக்கோர் கடலே யந்த முனியாவன் பெலிதன் காத
லிருண்மைக்கூர் குழலி யாவ ளென்றலு மிசைப்பான் மன்னோ. (கஎ)

முன்னமே குருத்தன் சேட்ட னுசிசர்தம் முதன்மைத் தேவி
யென்னுமோர் மமதை தன்னை விரும்பலு மிணங்கி லாளைத்
துன்னிய பலத்திற் கூடித் தோய்ந்திட வவள்கர்ப் பத்துண்
மன்னிய மைந்த னுற்ற வார்குருத் தன்னை நோக்கி. (கஅ)

யானுமுன் றமையன் மைந்த னிவ்வயி றமையா துன்ற
னூனமில் கருப்ப நீயின் றூர்த்தவிந் திரிய னுகென்
றுன்சொன் னநவிலும் போது குருடனு ய்மைதி யென்ன
ஞானமோ டவனுந் தீர்க்க தமசனு ஞாலத் துற்றான். (கக)

உற்றவன் றந்தை பின்னே னுசத்திய னென்போன் மைந்தன்
வெற்றியாச் சிரமந் தன்னி விந்திய மிகவ டக்கிச்
செற்றமி றவந்தான் செய்தா னவனேயே பின்னேன் சென்னுள்
பற்றிய வன்பி னேடும் பரிவுடன் காத்திட்டானல் (உ௦)

அவ்விடத் திருக்கு நாளி விடபமொன் றணுகி யாகத்
திவ்விய தருப்பை தின்னத் தேடித்தன் கையாற் கொம்பை
வவ்வுறுபொழுது சத்தி குன்றலும் வலியை நோக்கி
யெவ்வமின் முனியைப் பார்த்தே யெங்குலத் தருமங் கேண்மோ. (உக)

களவுதான் கோறல் பொய்மெய் சண்டவர்ச் சேர்தன் மிக்கா
யளவிலாப் பவங்கள் செய்த லமைந்ததே தேனுங் கொள்ள
லுளதுநீ யென்னை விட்டா லுன்மனத் தெண்ண மீவேன்
வளமுறு வலியோ யென்ன விடுத்தனன் வலியின் மிக்கான். (உஉ)

கோவினைப் பூசை செய்து விடுத்தனன் குலதன் மத்தின்
மேவிய மனத்த னுகி விரும்புசத் தியன்முன் பெற்ற
தாவிலா வசீன னென்னுந் தம்பிதன் மனைவி தன்னை
யோவில்கோ தன்ம மெண்ணி யுளத்துறு வலியி னலே. (உங)

பிடித்தலு மினையோ னுகிப் பிறங்கிய வசீனன் யாவும்
படித்துளீர் கிரமந் தப்பாய்ச் செய்ததென் பழியீ தென்றே
துடித்திடா வண்ணங் கட்டித் துலங்குதெப் பத்தி லேற்றி
நடித்தனம் பயிலுங் கங்கை நனைந்தலை விடுத்திட் டானல். (உச)

ஓடிய கங்கைமீதி லுலாவிய தெப்ப நாட்பண்
வாடிய முனியை யாங்கண் மாபலி யென்போன் கண்டு
தேடியே காணுச் செல்வங் காண்டல் போற் றெளிந்து வவ்வி
நீடிய கரையி லேற்றி நிறைந்ததன் மனையிற் சேர்த்தே. (உரு)

பூசனை புரியத் தீர்க்க தமசெனும் புனிதன் வேண்டு
மாசறு வரங்க ளென்ன மக்களென் மனைவி தன்பா
லாசற வளித்தி யென்ன நன்றெனப் பலிததன் றேவி
மூசளி முரலுங் கூந்தற் சுதேட்சணை முகத்தை நோக்கி. (உசு)

முனிவர ரிடத்திற் சேர்ந்து மொழிந்திடு மக்கட்பேறு
நனிதரக் கொள்வா யென்ன வன்னவ ணன்றென் றேகிப்
புனிதமா முனிவன் மூப்புங் கண்ணிலாப் பொற்பு நோக்கி
கனிமொழி தன்பா லேவற் சூத்திரக் கன்னி தன்னை. (உஎ)

அழகுறு பணிநற் சேலை யணிந்தலங் காரஞ் செய்து
விழைவொடு சேர்தி யென்று விடுத்தலு முனியைக் கூடி
மழவிடை யனைய காட்சி வதன்றனைப் பெற்று ளன்னோன்
றழைவுறு தவத்தான் ஞானத் தன்மையாற் றக்கோனானான். (உஅ)

முனிவர னிடத்தி லோர்நாண் மாபலி மொழிவா னண்ணிப்
புனிதநீ யளித்த மைந்த னென்றவப் புதல்வ னன்னோ
யினிமொழி யெனலு மன்று னேந்திழை தன்பா லேவற்
பணிமொழி தன்னை விட்டா ளவள்பெற்ற பால னின்னோன். (உகூ)

என்மக னல்லா னிற்கே யிழைத்திடு மைந்த னல்ல
னுளிமனைக் கிழத்தி தன்பா லோர்ந்துகொ ளென்ற லோடு
மன்னிய முனிவன் பாதம் வழுத்திநீ பொறுத்தி டென்று
தன்மனை யாளைச் சீறி முனியிடத் தன்று டன்னை. (௩0)

விடுத்தலு முனியன் னானை வியப்புறு மகவு வேண்டிற்
பிடித்திற நடையா யுப்புத் தேன்றயிர் பிறங்கு மென்ற
னடித்தல முதலாச் சென்னி காறுநீ யணிந்துன் னாக்காற்
றுடிப்பொடு நக்கி னுன்பாற் றோன்றுவர் மக்க ளென்றான். (௩க)

என்னலு மதுவோ டுப்பு ததியிவை யியல்பிற் பூசி
வன்திறன் முனிவன் மேனி நக்கினாண் மனத்தி லையந்
துன்றிட வபான தான மாத்திரம் விடுதோ டீத்தா
னன்றுறு மபான மின்றி யோர்மக வமையப் பெற்றாள். (௩உ)

பெற்றவள் முனிவன் றன்பால் வணங்கியான் பெற்ற மைந்த
னுற்றமெய் யபான மில்லா னென்செய்கே னுன்றன் வார்த்தை
சற்றுமே தப்பா வண்ணம் புரிந்தனன் றவத்தா யென்னச்
சொற்றசொன் மறுது செய்தாய் துலங்குமுன் னஞ்ஞா னத்தால். (௩௩)

மெய்யினி லபானம் விட்டு நக்கினை விளங்கு மைந்தற்
குய்வுறு மபான மில்லை யாயினு முன்றன் வம்மிசம்
வையக மதனி லோங்கும் வளத்தினு னவனே நீயு
மையுறே லென்று மேனி தைவந்து நவில லுற்றான். (௩௪

மூத்தவ னபான மில்லா ஞெருவனே மொழியும் பின்னோர்
தீத்தொழில் வல்ல ராகிப் புவியினைச் சிறப்பாய்க் காவல்
காத்திடு மக்க ளைவர்ப் பெறுகெனக் கலிங்கன் வங்கன்
பாத்திப னங்கன் சிங்க னன்பகர் புண்ட ரன்ருன். (சுரு)

இப்பெய ரைவர் தம்மைச் சுதேட்சணை யீன்ரு ளந்தத்
துப்புறு தவத்திற் றீர்க்க தமசெனுந் தூயோ னுங்க
ணெப்பின்மா பலியை நோக்கி யுன்றன்கோத் திரத்தி லுற்ருேர்
தப்பிலா வறுவ ரின்னோர் தனையர்க ளுனக்கே யென்ருன். (சுசு)

பின்னுமா னிடர்கள் யோனி தனின்முனி பெற்ற மைந்த
ருன்னிடி லனேக ராங்க னுற்றவக் காம தேனுப்
பன்னுவன் முனிவ கேட்டி கோதன்மம் பரிவிற் செய்தா
னின்னுடன் மூசு மூப்பு நேத்திரக் குறையுந் தீர்ந்தே. (சுஎ)

நரைதிரை யின்றித் தீர்க்க வாயுளு நல்கி யின்று
புரையற வொழித்தா மென்று மொழிந்திடப் புகல்வி யாழம்
விரைவொடு புகன்ற சாப நீங்கிட விளங்கக் கண்க
டிரைநரை யொழிந்து தீர்க்க வாயுளிற் சிறந்தா னன்றே. (சுஅ)

சாபமன் ருெழிந்து கண்கள் வரத்தீர்க்க தமசெ னும்பேர்ப்
பாபமங் கொழிந்து பாரிற் கவுதம ரெனப்பேர் பன்னத்
தீபமாய் விளங்கி மேரு வரைத்தவஞ் செய்தா னென்றே
மாபவந் தீர்க்குஞ் சூத முனிவரன் வழுத்தி னுனல். (சுகூ)

நாற்பத்தோன்பதாவது.

தீர்க்கதமசுக்குக் குருசாப விமோசன வத்தியாயம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம், கஅஎ௦.

ஐம்பதாவது

பவுரவ வமிச வத்தியாயம்.

தெண்ணிலாப் பரப்பி யெட்டுத் திசையுறு முலகம் யாவு
நண்ணிரு ணீக்கிக் கங்கு னன்குற விளக்குந் திங்கட்
பண்ணவன் மருமான் பூரு வம்மிசம் பகர்வா யென்றே
யெண்ணுறு முனிவர் கேட்பச் சூதனே யியம்பு வானல். (க)

தவத்தினின் மிக்க காட்சி வதனென்போன் றந்தை நாளு
மவப்புறத் தவத்தின் மிக்காய்ச் செய்துசூத் திரனென் ருேது
மவப்பெய ரொழிந்து போற்றும் பிராமண வறிஞ னென்றே
நிவப்புறப் பெற்றுத் தந்தை யடியிணை நேர்ந்து போற்றி. (உ)

பணிதலு முன்னால் யாமும் பகர்கிரு தார்த்த ரானேந்
தணிவுறு தவத்தான் மிக்க பிரமசா ரியத்தை விட்டே
யணிபெற வேட்பா யென்ன வமர்ந்தகன் னிகையை வேட்டுத்
திணியுறு மனையின் மக்க ளாயிரஞ் சிறப்பிற் பெற்றான். (௩)

மைந்தர்கள் கூட்டம் பாண்ட கவுதம ரென்றே மன்னி
நந்திடா திருந்தார் தீர்க்க தமசொடு நவையிலாத
விந்தைகூர் சுதப னீன்ற விறன்மைந்தன் பலிதன் வாறுஞ்
சந்ததி வாறுஞ் சொற்று மென்றனன் றவத்திற் சூதன் (௪)

சொற்றிடு பலிதன் மைந்த னங்கன்மற் றவன்மெய்த் தோன்ற
னற்றெறி யாக னன்று னவிறிவி நதனை யீன்றான்
மற்றவன் மைந்தன் றன்மா னனபரன்வ ழங்கு மன்னோன்
பொற்புறும் விண்டுபாத மெனும்வரைப் புறத்தி னண்ணி. (௫)

யாவர்க ளேனுஞ் செய்தற் கரியமெய்த் தவத்தை யீட்டிப்
பாவகன் மத்தை யாற்றும் பண்ணவன் பகரும் வானத்
தீவக மென்னக் கங்குல் செறிமதிக் கடவு ளின்னோர்க்
கேய்வுற விருப்பஞ் செய்தே சித்திர ரதனை யீன்றான். (௬)

சத்தியா தனனென் போனை யவன்பெற்று னவன்றன் காளை
யுத்தமத் தசர தன்று னுரோமபா தனுமே யாவன்
புத்தியின் மிக்க சாந்தைப் புதல்வியைப் பெற்று மேய
பத்திரிச் சியசி ருங்க னின்புறப் பரிவி னீந்தான். (௭)

பொற்புறு சசிய சிருங்க னருளினைப் பெற்றுப் போற்று
மற்புயத் திணிதோள் வேந்தன் சதுரங்கன் றன்னை வாய்த்தா
னற்புறு மவன்றன் காளை யடுதிறற் பிருது வாட்சற்
குற்றுவித் திட்ட மைந்த னுயர்சம்ப னென்பர் மாதோ. (௮)

சம்பன்றன் பேரிற் சம்பை யெனுநகர் தரணி மீதி
லும்பர்கோ னகர மென்ன வுயர்ந்தமா வினியென் றோதி
யிம்பரில் விளங்கிற் றன்னோ னேயங்க னெனுஞ்சே யீன்று
னம்புவி யன்னோன் காளை பத்திரா தரனே யாமால். (௯)

பத்திரா தரன்றன் மைந்தன் பகர்கிர கற்க மன்னுஞ்
சுத்தனு மவன்றன் காளை சொல்லிய பிரகற் பானு
சத்திய பிரக தன்மன் றனைப்பெற்று னவன்றன் றோன்றல்
வித்தக னன கீர்த்தி விறற்செயத் திரத னுமால். (௧0)

திகழ்செயத் திரதன் மைந்தன் சேர்பிர கத்தி ரன்றான்
புகழ்பெறும் விசுவ சித்தாய்ப் புகல்சன மேசற் பெற்றான்
றுகளற வவனு மங்கன் றனைப்பெற்றான் றுலங்கு மங்க
னகழுறு புவியைக் காக்குங் கன்னனை யளித்தா னன்றே. (௧௧)

தார்பெறு கன்னன் மைந்தன் றனைவிடச் சேன னென்ப
ஏர்பெறு மங்கன் வங்க மியம்பினேம் பூருவங்கத்
தோர்சனித் திட்ட வாற்றை யியம்புக வென்று மோர்ந்து
பார்பெறு கன்னன் றன்னைச் சூதன்றன் பால னென்றே. (கஉ)

சொல்வதெ னுரைத்தி டென்னத் துலங்கிய பிருகற் பானு
வெல்லெழிற் பிருகு மன்னை யீன்றபின் சயிப்பிய ராச
னல்லெழிற் புதல்வி சத்தியை நவில்சேர தேவி தன்னைப்
புல்லுற வேட்டன் னேரிற் புகல்சேர தேவி தன்பால். (கங)

விறற்செயத் திரதன் றன்னைப் பெற்றனன் வேளை நீரி
னறற்கருங் குழலாள் சத்தியை யந்தணன் றன்னைக் கூடித்
திறற்கர விசையற் பெற்றான் சிறப்புறு விசையன் றானு
நறைத்துணர்ப் பிருகற் புத்தி ரன்றனை நயந்து பெற்றான். (கச)

அவன்றனக் குற்ற மைந்த னமர்பிர கத்தி ரன்றா
னிவன்றரு புதல்வன் சத்திய கருமனென் றிசைப்ப ரின்னோ
னுவந்தருள் புதல்வ னேங்கு மதிரதச் சூதன் மக்கள்
டவம்புரி போழ்திற் கன்னன் றத்தபுத் திரனே யானான். (கரு)

பூருவின் புதல்வன் கீர்த்தி புகல்சன மேச னந்தத்
தாருறு புயத்தன் றான பிராசீன வதன வன்சேய்
காருறு கரத்தான் வீர மன்சியு வவன்றன் காளை
யார்வலிப் பகையை வெல்லும் வமருவா தாயு தன்றான். (கசு)

வேறு.

வெல்வலி யிழைத்தசொல் வாதாயு நல்வேந்த
னெல்லொளி தழங்குகழற் றுந்து வினையீன்றான்
மல்வலிய துந்துவடல் வெகுவி சனை வரய்த்தான்
சொல்லியசை யாதியவன் றோன்ற லெனச் சொல்வர். (கஎ)

தேருறுசை யாதிபகம் வாதிதனைச் சேயாய்
நாருறவளித்தனன் னேன்மதலை நள்ளார்
பாருற வணங்குபத்தி ராசசுவ னவன்றான்
றாருலவு மைக்குழற்கிரு தாசியினை வேட்டே. (கஅ)

வேறு.

துலங்கிரு தேபு சொற்ற ரிடேபுசீர்த் தொல்கட் சேபு
வலங்கல்சேர் சனேபு மிகக் கிருதேபு சிதேபு சீரார்
தலங்கெழு தண்டு லேபு தனமேபு சதுதே போடும்
பலம்பெறு சீரின் புண்ணிய பூவொடு பதின்மர்ப் பெற்றான். (கக)

இவர்களி லிருதே புக்குத் தட்சக னீன்ற கன்னி
யவிர்மணிச் சுலனே யீன்ருள் புகழ்நந்தி நாரன் றன்னே
திவளொளி நந்தி நாரன் மனசுனி தன்னேச் சேர்ந்தே
புவியிற்றிற் சனுவொ டோகன் றிருணதன் பொருவில் வீரன். (உ0)

என்னுமோர் நால்வ ரோடுங் கௌரியென் றியல்சேர் மாது
மன்னிடப் பெற்ரு னந்தக் கௌரி மாந் தாதா தாயா
முன்னுதிற் சனுவே யென்போ னிலிலஞே டிலிலி யென்னுங்
கன்னிகை தனேயுஞ் சொற்ற யமுனேபாற் கருதி யீன்ருன். (உக)

தெரிவையா மிலிலி யாதூத் தரசாதிற் சதனே யாதி
பெருகிய பிரம வித்தை கற்றுளோ ரனேகர்ப் பெற்ரு
ளுரிமைசே ரிலிலன் மிக்க வுபாதான வீயைக் கூடி
யரியதோ ரிருடி யந்தத் துச்சந்த னனக ஞேடும். (உஉ)

பெயர்பெறு பிறவீ ரன்ரு னெனும்பெயர் நால்வர்ப் பெற்ருன்
செயிரறு துச்சந் தன்கான் வேட்டைமேற் சென்று முன்ருட்
டுபரறு கண்ணு வன்றன் றுலங்குமாச் சிரமத் தெய்தி
யுயர்சகுந் தலேயைக் கண்டே யுவந்துகாந் திருவஞ் செய்தே. (உரு)

போயினன் போய பின்னர்ப் பொலன்கொடி கருப்ப முற்ரு
ளாயதோ ரிருடி ஞானத் தறிந்தவன் பெற்ற பிள்ளேக்
கேயபேர் பரத னென்று மிபம்பியே துச்சந் தன்பாற்
றுயையை விடுப்ப வூரிற் சேர்ந்துதுச் சந்தன் றன்பால். (உச)

நீயெனே வனத்தி லுற்றுப் புணர்ந்தனே நிகரின் மைந்த
னேயிவன் பரத னெம்மை யிருடியே விடுத்தா னென்ன
மாயிரு ஞாலத் துள்ளோர் வரன்முறை யறிய வேண்டி
யாயதோ ரரசன் ருனும் யானுனே யறியே னென்ருன். (உரு)

என்றலு மாகா யத்தி லெழுந்தது வாக்குப் போரில்
வென்றிகொள் வேந்தே காட்டில் வேட்டனே யிவளுன் பாரி
கன்றிட வுரைக்க லாமோ மைந்தனுன் காளே யென்னத்
துன்றிய புவியி னுள்ளோர் யாவருந் துலங்கக் கேட்டார். (உசு)

கேட்டவ ரறிய முன்னர்க் கேண்மையை யுரைத்தே யந்த
வாட்டடங் கண்ணி ஞளே மகஞெடு மனேயிற் சேர்த்துத்
தோட்டலர்ப் பைந்தார்த் திண்டோட் டுச்சந்தன் சின்ருட் போக்கி
நாட்டிய புவிக்கு வேந்தாய் நளிமுடி சூட்டி ஞஞல். (உஎ)

பரதன்மா மரபி லுற்ருர் பாரத ரென்ப ரன்ஞேன்
மரபுயர் புவியின் மிக்காய் வளர்ந்ததா லவன்றன் பாலர்
திரமிலா வண்ணந் தாயார் மாண்டிடச் செயிர்த்தான் பின்னர்ச்
சுரர்குரு மைந்தன் றன்னே மருத்துவர் துலங்க வீய்ந்தார். (உஅ)

அன்னவன் பெயர்ப ரத்து வாசனென் றறைய லோடு
மன்னிய மருத்து வேமுன் குருமைந்தன் றன்னை யீன்ற
தென்னெனச் சூதன் சொல்வா னிருந்தவத் துசினன் பாரி
பொன்னனை மமதை யென்பாள் புருடனை யிழந்த பின்னர். (கூ0)

சுரர்குருத் தமையன் பாரி யெனுமுறைத் தொடர்பி னீத்துப்
புரகர னெரிக்க வீந்தோன் புட்பபா ணத்தா னொந்து
கரமது பற்ற வன்னாள் வயிற்றினிற் கருப்ப மைந்த
னுரமிகு வேத மோத வோர்ந்துமே யென்பா லுற்றான். (கூக)

உமதுவீ ரியமுங் கர்ப்ப வுதரத்தி லமையா தென்ன
வமைதியிற் காம வெப்பாற் பலவந்தத் தணைத லோடுந்
தமதுவீ ரியந்தான் பூமி சார்ந்தொரு பிள்ளை யாக
விமையவர் குருவு மந்த வேந்திழை தானும் போனார். (கூஉ)

போயபின் மருத்து வானோர் புதல்வனை யெடுத்துத் தாங்க
ளேய்வுறு மனையிற் சேர்த்தி வளர்த்தனர் பரத னீன்ற
சேயெலாம் வீத லாலே செகமுழு தாள மக்க
ளாய்வர வேண்டு மென்றே மகங்களா யிரமுஞ் செய்தான். (கூகூ)

செய்தபின் மருத்து வென்னுந் தேவரா மனத்தி லெண்ணிக்
கைதவ மொழிக்கும் வேள்வி கருதியே யுளுற்ற லோடும்
வையக மதனிலுற்ற மருத்துவர் மைந்தன் றன்னைத்
துய்யனும் வேந்தன் கையி லளித்துமெய் துலங்கச் சொல்வார். (கூச)

இவன்குரு மைந்தன் றன்பே ரியற்றிய பரத்து வாசன்
றவந்தனைப் புரிந்தா யுன்றன் மைந்தனே தளர்ச்சி யுற்றுக்
கவன்றிடு கவலை நீங்கென் றறைதலுங் கறைவேன் மன்ன
னிவந்தெழு மகவைப் பார்த்து நேர்ந்துரா சொல்வ தானான். (கூரு)

இன்றுதொட் டந்த ணாளர் மைந்தரு மிறைவர்க் காக
வன்றிற லரசர் மைந்தர் மறையவர் மைந்த ராகித்
துன்றுக வென்று சின்னாட் டொலைந்தபின் பரதன் சொர்க்கத்
தொன்றலும் பரத்து வாச னுயர்புவி யாண்டு பின்னர். (கூசா)

சொல்பவ மன்னி யுவ்வைப் பெற்றன னவன்சொன் மைந்தர்
வல்வலிப் பிரச சத்திரன் காரிய னரன்வாழ் கர்க்க
னல்லெழி னரன்றன் மைந்த னட்டுசங் கிருதி யென்ப
வெல்லொளி யவன்றன் மைந்தன் றனமகா யெசனென் பாரால். (கூஎ)

கூர்மகா யெசன்றன் மைந்தன் குருதிசீ ரேந்தி தேவன்
றூர்புனை கர்க்கன் மைந்தன் சிவிமுதற் றயிப்பி யாசர்
சீரினம் மரபின் வேந்தர் சிற்சிலர் மறையோ ராணு
ரூர்புகழ் காரி யன்சே யுருட்சத னென்ப வன்றேன். (கூஅ)

விசாலேபா லருணன் புட்க ரன்கவி விளங்கு மூவர்
திசாதிபர் போற்றப் பெற்று னிவர்தவச் செய்கை யாலே
யசாரமின் மறையோ ராகு ரவர்களிற் கவியே கர்க்கர்
பிசாசனுங் குருதி வேற்சங் கிருதியைப் பெட்பி னீன்றான். (௩௯)

இவ்வகை மரபின் மக்க ளெண்ணிலர் மறையோ ராஞர்
தவ்வலில் பிரட்சத் திரன்சேய் தார்ப்புய வத்தி யன்றே
னெவ்வ மிலாத வத்தி னுபுர மியற்றி மக்க
டிவ்விய வசமீ டன்போர்ப் புருமீட திவிமீ டாகே. (௪௦)

பெற்றன னவரின் முன்னோன் பிறங்கச மீட னென்போன்
சொற்றிடு குருவை வம்மி சத்தினி லினிதுமி னிப்பே
ருற்றகே சினியென் றேது மூவரை வேட்டன் னோர்பாற்
பற்றுறு மைந்த ரின்றிப் பரத்துவா சன்றன் பண்பால். (௪௧)

கேசினி யிடத்தின் மிக்க கண்ணுவ ருதித்தார் கேண்மை
யாசறு மவர்சொன் மேதா திதியினை யமையப் பெற்றார்
மாசறு கண்ணு வன்பின் ஞமுது மறையோ ராஞர்
காசிறா மினிதன் காளை பகர்பிர கதனு வென்பார். (௪௨)

அன்னவன் பிரக தத்தன் றனைப்பெற்றா னன்னோன் காளை
மன்னிய பிரக கன்ம னவன்மகன் வழுத்துங் கீர்த்தி
கன்னல்வே ணொராய் வாழ்பிர கத்தனு வவன்றன் காளை
யுன்னிய பிரக தீவே யுவன்சயித் திரதற் பெற்றான். (௪௩)

அவனெழில் சுவதி சித்தை யளித்தன னன்னோன் மைந்தன்
புவனியாள் சேன சித்தப் புகழினான் புதல்வ ரானோர்
திவவரு சுசிராச் சியன்சீர்க் காசியன் றிடர தன்மாப்
பவமறு வற்ச னிந்த நால்வரிற் பகரும் வற்சன். (௪௪)

அவந்தி நாடாளும் வேந்த னுயினு னமருங் கீர்த்தி
கவர்ந்தரு சாச்சு வன்றன் காளையே பிருது சேன
னுவந்தவன் பெற்ற மைந்தன் பாரனு மவன்றன் மைந்த
னிவந்தெழு நீப னன்னோன் சுதர்சத நீப ராவார். (௪௫)

வந்தநூற் றுவர்கள் பூமிக் கிறைவராய் வாழ்ந்தா ரன்னோர்
நந்தலின் மரபிற் கீர்த்தி வர்த்தன னவைதீர்ந் துற்று
னுந்துகா சியன்றன் மைந்தன் சமரனே யுத்தம் வல்லான்
பந்தமி லன்னோன் மைந்தன் சரசன்சம் பாரன் பாரன். (௪௬)

பிறங்கிய பாரன் மைந்தன் பிருதுவே பிருது மைந்த
னறங்கெழு சுகிர்த னந்தச் சுகிர்தன்சேய் விப்பி ராசன்
திறங்கெழு விப்பி ராசன் சேய்தனை யனுக னென்பார்
மறங்கெழு வேற்கை யன்னோன் சுகன்மகள் கொழுநன் மாதோ. (௪௭)

உரைத்திடு மனுகன் மைந்த னுயர்ந்தொளிர் பிரம தத்தன்
விரைத்துண ரவன்பான் முன்சொல் விப்பிர சேன னென்போன்
றனக்கொரு மைந்த னுன சாற்றுபேர் விசுவ சேனன்
வரைப்புயத் தவன்றன் மைந்த னுதசேன னென்பர் மாதோ. (சஅ)

ஆங்கவன் சேய்பல் லாட னவன்சென மேசற் பெற்று
ஞேங்குசீர்ச் சென மே சற்கா யுக்கிரா யுதன்போர் செய்து
வீங்குதோ ணீப ராசர் தமைவென்று நீபர் தேசம்
வாங்கியே கொடுத்தா ரென்ன முனிவரர் மகிழ்ந்து சொல்வார். (சகூ)

உக்கிரா யுதன்முன் யாவ னுரைத்திடு சனமே சற்காய்
மிக்கதோர் நீப ரோட வென்றமை நிகழ்த்து கென்னத்
திக்கொளிர் மதிகு லத்திற் கர்த்தமன் சிறுவ னன்னோன்
றக்கவா யிரமாண் டாங்குத் தவம்புரி காலந் தன்னில் (ருo)

சேர்சன மேசன் சார்ந்து பணிவிடை செய்ய வுள்ளத்
தார்வ மோ டுனக்குத் தேய மளிப்பனென் றபய மீந்து
போர்வலி நீபர் தம்பாற் போதுநல் வசனமாகக்
கூர்தரு பூமி பாதி கொடுத்திரென் றுரைத்த லோடும். (ருக)

ஈகில மென்று சொல்லச் சீற்றத்தோ டெழுந்து பொங்கிக்
காய்சினப் போர்கள் செய்யக் கலங்குநீ பரைநேர் நோக்கி
யாய்தலோ டெம்மை நம்பு வோர்க்குல களிப்பீ ரென்னும்
வாய்மையை யிகழ்ந்தீ ரும்மை யமபடர் வலித்தே யீர்ப்ப. (ருஉ)

எனக்கொடுஞ் சாபந் தாக்கி யமபட ரிழுக்கக் கண்டு
மனக்கருத் துவப்பி னாலே மகாசென மேசற் பார்த்தே
யுனக்கினி கடனே காக்க வென்றலு முரைக்குஞ் சண்டன்
றனக்கியான் மொழிவ தென்னே யென்னலுஞ் சமனோ டேற்று. (ருங)

வெருவித முடற்றி யுக்கி ராயுதன் வெற்றி யாற்கை
புகுவலி நீபர் தம்மை விடுத்தவர் பொருந்துந் தேயந்
தகுசென மேசனுளக் கொடுத்தனன் சண்ட னுங்கண்
முகிண்மலர்ப் பைந்தா ருக்கி ராயுதன் முகத்தை நோக்கி. (ருச)

நின்னருட் டபலமும் யாமே நேர்ந்துசந் தோஞ் செய்தா
முன்மர புயர்க வென்றே யுறுமுத்தி ஞான மீந்தா
னன்னவன் மைந்த ரோடு நோற்றுப்பின் னடைந்தான் முத்தி
யின்னவா றுரைத்தோர் கேட்போப் மரித்தில ரிகத்து மன்னோ. (ருரு)

கழல்புனை யசமீ டன்முன் காந்தைதூ மினியென் பாளை
யழல்கரியாக வேட்டே யறிவுடை வீரற் பெற்று
விழல்புரி கவிகை வீர னிகரிலாத் திருதி மானைக்
குழன்மொழி மழலை யாகப் பயந்தனன் குலவு மன்னோன். (ருசு)

சத்திய திருதி தன்னைப் பயந்தனன் சாற்று மன்னோன்
புத்திரன் ருனே மிக்க திடனெனன்மி யவன்றன் புத்தன்
றுத்தியச் சுதனு வன்னோன் சுதன்சார்வ பவும னன்னோன்
வித்தகச் சுபாரி சன்னை வியப்புற வீன்று னன்றே. (ருஎ)

அவன்வயிற் சுமதி யுற்றான் சுமதிசன் னதிமான் றன்னைத்
தவமொடு பெற்று னன்னோன் றனையனே கிருத னன்னோன்
பவமறு சாம வேத மிருபத்து நான்கு பங்கா
யுவமையோ டிலகி னிற்க வகுத்தன னுரைக்குஞ் சாமம். (ருஅ)

சொல்லிய கிருடத்தா ரென்னுங் கிருத்திம சுதரே கற்றோர்
வல்லவிக் கிருடத்தான் மைந்த னுக்கிரா யுதமன் முன்னாள்
வில்வலிப் பாஞ்சா லத்தி னீலனை வென்று னன்னோ
னெல்லொளி வேற்கைக் கேமி யன்றனை யீன்று னன்றே. (ருகூ)

கேமியன் சுதன்சு நீதன் கிளரிபுஞ் சயனைப் பெற்றான்
பூமியி னன்னோன் காளை புகலரி ரதனே யின்னோ
ராமிவர் மரபு ளோரைப் பௌரவ வரச ரென்றே
நாமநீ ருலகிற் சொல்வ ரெனமுறை நவின்றான் சூதன். (சுo)

ஐம்பதாவது

பவுரவவமிசமுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கசரு0.

ஐம்பத்தோன்றாவது

பவுரவவமிசத்தில்

அருச்சுனன் வமிச வத்தியாயம்.

முனிவர ரெல்லாஞ் சூதனை நோக்கி முதுவலிப் பௌரவர் மரபிற்
குனிசிலை வளைத்துப் பமவலர்ச் செயித்த கொற்றவே லருச்சுனன் வரலா
றினிதினி லுரைத்தி யென்னலு மரபா லியல்பெறு மச்சமா யன்று
புனிதவை வச்சு தமனுவினுக் குரைத்த பெற்றியைப் புகலலுற் றனனால். (க)

பாரத மீட னிலனைப் பயந்தா னிலனுஞ் சுசாந்தியைப் பயந்தா
னேர்பெறு மவன்புரு சானுவை யீன்றான் பிருதுவை யவனுமே யீன்றான்
கூர்புகழ்ப் பிருது பத்திரா சுவனை யளித்தனன் குலவவன் சுபில
னோர்முர கலாத்த யன்கய வீரன் புருசவி ருடவையு முயிர்த்தான். (உ)

இவர்கள் பாஞ்சால தேயமோ ரைந்தும் புரந்தன ரென்பரா லிவரிற்
றவவலி முரக லாவுயர் மேளா கலியரைத் தனையரா யளித்தா
னவிரொளி வேந்தராகியு மறையோ ராயினர் கண்ணுவ ராதி
புவனியின் முற்க லாமர் பின்னோ ரங்கிரா வகையெப் பொருந்துற். (ரு)

முரகலர் மைந்தன் பிருமிட்டா வன்னோன் கான்முளை யிந்திர சேனன்
வரமிகு மவன்சேய் வித்தியா தவன் றன்மனைவி மேனகையின் றனிடத்திற்
றிரதிவோர் சாத னுடன கலியென்ஞ் சேயிழை தன்னையு மீன்றான்
றரைபுகழ் சாத்து வதன்றனக் ககலி சதானந்த முனிவனைத் தந்தான். (சு)

புவகமார் தவத்தின் சதானந்தன் றனக்குப் பொருவிலாத் தனுமுறை யுணர்ந்த
துங்கமார் சத்திய திருதிவந் துதித்தா னவன்புனற் றோய்ந்திடும் பொழுதிற்
பங்கய முகத்துத் தேவகன் னிகைமேற் படர்தலுங் கண்டுமான் மிகுத்தே
யங்கமூ டுருவ வீரியந் தழுவி யங்கமர் நாணலிற் புகுந்த. (ரு)

பாதியோர் பெண்ணும் பாதியோ ராணு மாயதைச் சந்தனுப் பார்த்தே
வேதியர் மகவென் றறித்துதன் மனையிற் கொணர்ந்துசீர் விளங்கிட வளர்ந்தார்
ஞதலிற் சாத்து வதன்மர பிவரை யகத்திய கெவுதம ரென்பா
ரோதிய திலோசா தன்பெறு புதல்வ னுயர்வலி மித்திரா யுவனே. (சு)

முன்னுதித் தவனே மித்திரா யணனு மொழிமித் திராயணன் மைந்தன்
றன்னையே மித்தி ரேயனென் றிசைப்பர் தனிக்குடை வேந்தரிற் றோன்றிப்
பன்னிய மறையோ ராயின ரிவரைப் பகர்ந்திடு திருதர்தம் மரபென்
றுன்னுவ ரன்றிப் பார்க்கவ ரெனவு முரைப்பரிப் புவியினி லுள்ளோர். (எ)

மத்திரே யன்றான் பெற்றிடு காளை வளரொளிச் செயவனென் றுரைப்பர்
வித்தகச் செய்வ னன்மகன் றன்னை விளங்கிய சுதரச னென்பா
ரித்தகை மரபின் வரன்முறை பின்ன ரிறந்தபி னோர்த்தச மீடன்
கொத்துறு வெற்றிச் சோமகற் பயந்தான் கூர்ந்தவன் செந்துவை யீன்றான். (அ)

செந்துவு மிறந்தான் பின்னச மீடன் செல்வனுஞ் சோமக னூற்றெண்
மைந்தரை யீன்று ன ர்களு மிறக்க வாழச மீடன்றன் மனைவி
சுந்தர மான தூமினி மக்கட் சோகமே யாற்றில ளாகிப்
புந்தியி னொந்து செயற்கரி தான தவங்களைத் தினந்தொறும் புரிந்தே. (கூ)

புத்திர யாகம் விதிப்படி யாற்றிப் புகலவிச் சேடமே நித்தம்
பத்தியி னுகர்ந்தே யாண்டுநூ றியற்றப் பகர்ந்திடு தூமினிதூம
மொத்தொளி ரிருசற் பெற்றன ளன்னோ னோங்குசம் வாணனை யீன்றான்
சித்தனு மவனுங் குருவினை யீன்றா னவன்குருக் கேத்திரஞ் செய்தான். (க0)

அமைத்திடு குருக்கேத் திரத்தினின் மகவான் றனைநினைந் தருந்தவ மாற்றி
யிமைத்திடார் வேந்தன் றன்னருள் பெற்றா னேத்துமக் குருமர புற்றோர்
தமைப்பவு ரவரா மெனப்பெய ருரைப்பர் சார்குருச் சுதனுவா செனனுக்
கனமக்கடற் பரீசித் தொடுபிர சவனுங் காளையர் நால்வரைப் பயந்தான். (கக)

அன்னவர் தம்மிற் சுதனுவா வென்பா னளித்தனன் சுகோத்திரன் றன்னை
மன்னிய வவனுஞ் சேவனை யளித்தா னவன்மகன் கிருமியக் கிருமி
நன்னெறி யுபரி சாவசு வீன்றா னவனும்பர் நாட்டினுந் திரிவான்
பன்னியாங் கிரிகை குசனரி வாக னன்பகர் பிரத்தியச் சிரவன். (௧௨)

மச்சனோ டியசு சயிலனென் றெழுபேர் மைந்தரைப் பயந்தன னவரில்
விச்சைசேர் பிரதத் திரதனை யளித்தான் விளங்குநற் குசாக்கிரன் றன்னை
யச்சமி லவனும் விருடபற் பெற்றா னவன்மகன் றான்புட்ப வான்சீர்
நிச்சய மாய சத்திய திருதி நிருபனை யீன்றனன் மன்னோ. (௧௩)

சத்திய திருதி சுதநிடற் பெற்றா னவன்மகன் சருவனன் னோன்சேய்
பத்திர னான சம்பவன் பிருகத் திரதனைப் பயந்தன னவற்குத்
தொத்துறு மாலைக் குழலியர் தம்பாற் றோன்றுசே யோரிரு கூற்றை
வித்தகச் சரையா மிராக்கதி பொருத்த விளங்குபேர் சராசந்த னானான். (௧௪)

புவியினி லந்தச் சராசந்த னென்பான் புரவல ரனேகரை வென்று
சவிகெடா வுலக மனைத்தையும் புரந்தா னவன்மைந்த னேசகா தேவ
னவன்மகன் சோமா வியவன சுருதிச் சிய்வனை யளித்தன னன்றே
திவியென விளங்கு மகதர்கோன் மரபிற் சிறந்தவ ரிவரென வுரைப்பார். (௧௫)

வேறு.

குருமைந்தன் சென்னு மைந்தன் குழவியே சுரேதன் பெற்ற
திருமைந்தன் விடூர தன்சேய் திறல்கெழு சார்வ பௌமன்
மருமந்தார் விளங்கு கீர்த்தி வயச்சன சேனற் பெற்றான்
கருமந்தான் விளங்கு மன்னோன் காளையே ருசிர னென்பார் (௧௬)

அன்னவன் பௌமர்ப் பெற்றா னவனயு தாயுப் பெற்றான்
பின்னவன் பெற்றா னக்கு ரோதனைப் பிறங்கு மன்னோன்
றுன்னிய வேற்கைத் தேவர் திதியெனுஞ் சுகனைப் பெற்றா
னன்னிலை யவன்றன் மைந்தனவிரொளி யிருட சன்னே. (௧௭)

இருடச னென்போன் வீம சேனனை யீன்றா னன்னோ
னருட்டரு திலீபற் பெற்றா னவன்பிர தீபற் பெற்றான்
மருள்கெட வவனு மிக்க தெலாவிலா வீகன் கூரப்
பொருடருகீர்த்திசேர்சந் தனுவெனும் புதல்வ ரீன்றான். (௧௮)

அவரில்வா லீகன் சோம தத்தனை யளித்தா னன்னோன்
றவமிகு பூரி பூரிச் சிரவன்சல் லியனை யீன்றான்
கவர்குட்ட நோயி னாற்றே வாவிகா னத்தைச் சார்ந்தான்
புவனிசந் தனுவின் காதை புலப்படப் புகலு வேமால். (௧௯)

சந்தனுக் கரந்தான் மூப்பு நரைதிரை சார்ந்துள் ளோரை
விந்தையா னீவி லன்னோர் விளங்கிய விளைஞ ராவர்
நந்தலில் கங்கை வேட்டு நயந்துகாங் கேயற் பெற்று
வந்திடு வலையர் வீட்டுச் சத்திய வதியை வேட்டான். (௨௦)

வேட்டவ டன்பாற் பெற்றான் விசித்திர வீரி யன்னை
நாட்டிய வவனும் வீந்த பின்னவ னங்கை பாற்கண்
வாட்டுணை மச்ச கந்தி தன்மகன் வியாத னென்னுஞ்
சேட்டனாற் றிருத ராட்ரன் பாண்டுச்சீர் விதுரன் றானும், (௨௧)

பிறந்தனர் தம்மின் முன்னோன் பிறங்கிய திருத ராட்ரன்
கறங்கெனச் சுழலும் வாட்கட் காந்தாரி தன்பாற் பெற்றான்
மறம்புரி மைந்தர் நூற்றோ டோர்மகள் வலியின் மிக்கா
ருறுந்திற லவரின் முன்னோ னுயர்துரி யோத னென்றான். (௨௨)

பாண்டுவே குந்தி மிக்காப் பகருமாத் திரையை வேட்டுப்
பூண்டிடு சாபத் தாலே புத்திர ரின்றிக் குந்தி
வேண்டுமுன் வரத்தாற் றன்ம தேவதை விரும்பிக் கையாற்
றீண்டிட வுதிட்டி ரப்பேர்ச் செல்வனைப் பெற்றாள் பின்னும். (௨௩)

வாயுவின் வரத்தால் வீம சேனனைப் பெற்று வானோர்க்
கோய்வுறு மகவா னீந்த வரத்திலர்ச் சுனனைப் பெற்றா
ளேயுமாத் திரையுஞ் சொற்ற வசுவினி யிருவ ராலே
தூயமா நகுல னோடு சொல்சகா தேவற் பெற்றாள். (௨௪)

இவர்களே பாண்டு மக்கள் பஞ்சபாண் டவர்க ளின்னோர்த்
துவரிதழ்க் கனிவாய் மைக்கட் டுரோபதை தன்னை வேட்டுத்
திவளொளி யுதிட்டி ரன்றான் பிரிதிவிந் தியினை வீம
னுவமையில் சுருத சேன னோங்குமர்ச் சுனனே யென்பான். (௨௫)

வரமிகு சுருதி கீர்த்தி வாழ்சகா தேவ னென்போ
னுரமிகு சுருதி தேவ னகுலனோர் சதானீ கற்
பரவிடப் பெற்றார் பேரும் பாண்டவ ரென்பர் கீர்த்தி
யரிமகன் வலிய வீம னரக்கியா மிடும்பி தன்பால். (௨௬)

சொல்கடோற் கசனைப் பெற்றுத் துலங்கிய காசி ராச
னல்லெழின் மகளா மிக்க சலதரை யிடத்தி னாட்டு
மல்வலித் திணிதோள் வெற்றி வாழ்சரு வனையு மீன்றான்
வில்வலிச் சகாதே வன்சீர் விளங்குமாத் திரைதன் கன்னி. (௨௭)

விசையைபாற் சுகோத்தி ரன்னைப் பெற்றன னவனு மேன்மை
வசையறு சேது மங்கை கரேணுமா மதியென் பாள்பா
ணிசமென வளருங் கீர்த்தி நின்மித்ர னர்ச்சு னன்மெய்த்
திசைபெறு சுபத்தி ரைக்கண் டிறபி மன்னைப் பெற்றான். (௨௮)

தேவகி யிடத்திற் றன்மன் றிகழிள தயனைப் பெற்றான்
பாவக வபிமன் மைந்தன் பரிட்சித்தா மவன்றன் பால
னூவலர் புகழுங் கீர்த்தி நற்சன மேச யன்றான்
பூவல யத்தி லன்னோன் புரவிமா மகத்தைப் போற்றி. (௨௯)

பவுரணி தன்னிற் செய்யப் பாவனை பண்ணும் போதிற்
றவமிகு முனிவர் வைசம் பாயனைச் சார்ந்திப்போது
புவனியிற் கலிவந் தெய்திற் றாகையாற் புரவி யாகந்
தவிருதி யெனலுங் கேளா திருமுறை மகஞ்செய் தானால். (௯௦)

அப்பொழு தவனைச் சீறி யென்னுரை கடந்த வாற்றா
னிப்பெரு மகத்தை யாற்று மியன்மறை யவரு நீயுந்
தப்பிலா வனத்திற் சார்ந்து யாமுள தனையும் வாழ்கென்
றெப்புறு சாபங் கூற வுயர்சன மேச னென்பான். (௯௧)

தானுறு தவத்தாற் பெற்ற சதானீகன் றன்னைப் பூமிக்
கோனென வமைத்துக் கானங் குறுகின னன்று தொட்டே
யூனமாய்ப் புரவி யாக முனாற்றில ரரச ரெல்லா
ஞானவான் சதானீ கன்சேய் நவிலதி சோமன் கிட்டினன். (௯௨)

சத்திர யாகங் கங்கை சார்பிர யாகை தன்னி
லொத்தமூ வாண்டு செய்திட் டுயர்குருக் கேத்தி ரத்திற்
பத்தியோ டிரண்டாண் டாற்றிப் பதம்பெறற் குரிய னானன்
வித்தக வுலக மன்னோன் புரந்தனன் வெகுநாள் காணும். (௯௩)

என்றுரைத் திட்ட சூதர் தம்முக மினிது நோக்கி
வன்றிற லரசர் வாழ்வு மேலவர் வாணா ளீறுந்
துன்றுநா லுகத்தின் கூறு மன்பதைத் தொகுதிப் பேறு
நன்றிகொ ளின்பத் துன்பம் யாவையு நவிலு கென்றார். (௯௪)

தவத்துறு முனிவர் கேண்மின் சார்வுறு மிலேச்சர் தம்மை
நிவப்புற வுரைக்கற் பாற்றோ நிறையதி சீமன் கிட்டின
னுவப்புறு மைந்தன் றன்னை யுயர்ந்தசீர் விசட்சு வென்பார்
பவக்கலி நீக்கி யன்னோன் பார்புரந் தளிக்கு ஞான்று. (௯௫)

ஆர்கலி நிகருங் கங்கை யத்தினா புரம ழிப்பப்
பார்புகழ் விசட்சு வென்போன் பகரும் கௌசாம்பி தன்னிற்
சீர்பெற விருந்தா னன்னோன் சிறுவன்பூ ரிச்சி ரேட்ட
னோர்பெறு மவன்றன் காளை சித்திர விரத னென்பார். (௯௬)

அன்னவன் சேய்சி தித்தி ரேதனென் றறைவ ராங்கே
பின்னவன் குமர னாகத் திருட்டிணி மானைப் பெற்றான்
மன்னிய சுசேடண னென்போன் றிருட்டிணி மான்றன் காளை
துன்னருஞ் சேனன் மற்றோர் சுநீதனைப் பயந்தா னன்றே (௯௭)

நிகரிலாச் சுநீதன் பெற்றா னிருசட்சே யவனோர் பாலன்
சுகிபலன் றானும் பாரிப் பிலவனே தோன்ற லாக
மகிதலம் புரக்கு ஞான்று மற்றவன் சுதபற் பெற்றான்
பகர்சுத பன்றான் மேதா வி தனையுட் பரிவி னீன்றான். (௯௮)

மேதாவி பெற்ற மைந்தன் ரிபுஞ்சையென் றிலங்கு மன்னோன்
காதாடு கண்ணார் வேளா முறவன்மற் றவன்றன் காளை
வாதாடு திக்கு மன்னு மவன்மைந்தன் புவியு ளோருக்
காதார மாக வந்த பிருகத்தி ரேத னானோன். (௩௯)

பிருகத்தி ரேதன் மைந்தன் வசுதாமன் பிறங்கு மன்னோ
னிருபற்கு ளதிப னான சதானீகன் றன்னை யீந்தான்
பருவத்தி லவனே பௌடியந் தயர்ப்ப யந்தா னன்னோன்
மருவுற்ற தொடையல் வேயும் வகினரன் றன்னைப் பெற்றான். (௪0)

வகினரா னென்போன் றண்ட பாணியை மகிழ்ந்து பெற்றான்
சுகிபெறு மவனி ராமித் திரனையே துலங்கப் பெற்றான்
றகைவுறு மவனுஞ் சாற்றுஞ் சேமகன் றன்னைப்பெற்றான்
மிகுபுக ழவனைப் பூமி வேதியர் வாழ்த்துவாரால். (௪௧)

பவுரவர் மரபி யாவும் பகுத்தியா முரைத்தே மென்று
தவவினை முடித்து மிக்காச் சாற்றுமா மகங்க ளாற்றித்
திவளொளி விளக்கா மோனந் தேர்ந்தமா முனிவர்ப் பார்த்துப்
புவனியில் விளங்கு ஞானச் சூதனே புகலு மன்னோ (௪௨)

ஐம்பத்தோன்றாவது
பவுரவ வமிசத்தில்
அர்ச்சுனன்வமிச வத்தியாயம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம், கசஎ௨.

ஐம்பத்திரண்டாவது

அக்கினிவமிசவகுப் பத்தியாயம்.

சூதனை முனிவர் நோக்கி யங்கிவம் மிசஞ்சொல் கென்ன
வேதியர் போற்று மங்கி வரன்முறை விளம்ப லுற்றான்
நீதறு சுவாயம் சுவாயம் பூமன் வந்சரத் தில் வேதன்
போதமா மான தத்திற் புகலுமக் கினியென் றுற்றான். (௧)

அந்தவக் கினிதன் பேரை யபிமானி யென்ப ரன்னோர்
பந்தமில் சுவாகை தன்பாற் பாவகன் பவமா னன்சீர்
நந்தவில் சுசியி னோடு ஈவிலுநன் மூவர்ப் பெற்றாள்
விந்தபா வகன்றான் பின்பா லோர்வலத் துதனை யீன்றான். (௨)

சொல்பவ மானன் ருனே தூலங்குதிக் கடைக்கோ றன்னி
லெல்லொளி யான நின்மித் தியன்றனே யீன்றுன்மிக்க
வல்வலி யிடிபா னல்ல சுசிசுப வானே யீன்று
ஞெல்லுமிம் மூவர் பேரு மதிட்டானத் துற்ற வாமால். (௩)

வருபவ மான னவ்விய வாகனன் றன்னைப் பெற்றுன்
பெருகுபா வகனு மிக்காய்ப் பிறங்கிய சகரட் சன்று
மிருவரு மவ்விய வாகன் றனைமுக மென்னக் கொள்வா
ரொருவிடா தவ்வியவாக னும்பருக் கவியை யீவான். (௪)

பாவக னந்த ணர்க்கே பரிந்தழ லானுன் போற்று
தீவகச் சகரட் சன்றுன் சிறந்தழ லசுரர்க் கானு
ஞேவறு மழலின் வம்ச முரைத்திடி ஞற்பத் தொன்பான்
ருவிலக் கினிக ளாகி விளங்கின தரணி மீது. (௫)

இவர்பெயர் விரித்துச் சொல்வா மிலங்கிய பவமா றைகுத்
திவளொளி லௌகி காக்கினி சேயரின் முன்னே னன்னுன்
புவனவே தியர்க டம்பாற் பூசனைக் குரிய னன்னே
னவிரொளி பாத னென்னு மக்கினி தன்னைப் பெற்றுன். (௬)

அன்னவன் ருனே பிரம வோதன வங்கி யாகு
மன்னுமோர் வலிய வாக னெனும்பவ மானன் மைந்த
னிந்நிலத் த்வியை யேற்றீந் திடமுடி யாது வீந்தே
துன்னிய பிருகு மைந்த னதருவா வவன்றன் ரேன்றல். (௭)

அங்கிரா மஞ்ச ஞகி யதருவ லௌகி காக்கினி
பொங்கிய தக்க ஞக்கினி யெனுமிரு பெயரும் பூண்டான்
வங்கமார் கடலி னும்ப ரமுதமத் திக்கு ஞான்று
பங்கமில் பலத்தி லானேன் வெகுபிர யாசைப் பட்டான் (௮)

கிளர்நிரு மித்தி காக்கி னிப்பெயர்க் கேண்மை பெற்ற
வளர்பவ மானன் மைந்த ஞகிகாக் கினியே மாயங்
களைவைதி காக்கி னிக்கெல் லாமிகக் கருது முன்னேன்
றளர்வில்கா ருகபத் தியாக்னி யெனப்பெய ரவற்குத் தானே. (௯)

அவ்வபி மானிசங்க திப்பால் மாசப்பியாக் கினியு மன்றிச்
செவ்வைகூ ராவ சத்தி யாக்கினியுமே சிறக்கப் பெற்றுன்
றவ்வலி லிருவர் பஞ்சாக்கினிகளே தாழ்ந்து போற்ற
வெவ்வமில் போக மோக்க மிரண்டுமிங் கீவர் மாதோ. (௧௦)

வேறு.

சொல்லுமவ் வியவாக னன்றுன் மரித்த பின்னர்ச் சொற்கமலத்
தல்லி யுறையு மயன்மனத்தி லுதித்த வபிமா ஞக்கினிதா
னெல்லை விரியும் புவிமீதி லியற்று மாக வனீயாக்னி
வல்ல பெயர்பெற் றிருநிலத்தின் மறையோ ரிட்டி கருமங்கள். (௧௧)

ஓம மெல்லாஞ் செயற்குரிய வுரைத்த வவிய வாகனனே
பூமி மீதிற் காவேரி யமுனே சரயு புகல் சீதை
காமர் விபாசை மனசுவினி கவிகை வுசிகி சகத்துருவாம்
வாம கலேக்கிட் டினவேணி வளர்வி னதைசந் திரபாகை. (கஉ)

கோதா விரிசேர் நருமதை யேகூறற் கரிய பவானிபூ
மாதா வென்னு மிரவதிசேர் மன்னும் புனிதை யிராதினிபைம்
போதார் நதியீ ரெட்டுருவின் பொலிவை வேட்டு வெவ்வேறு
காதார் கண்ணி மார்போகங் கலந்தா னுருவம் பதினாறாய். (கங)

வேறு.

நதிகளீ ரெட்டை மேவித் தன்மக வீரெட் டென்றுன்
விதியிற்றிட் டினிக ளென்னு நதியிவன் மேவ லானும்
பதிவிப சாரத் தானு மேதிலற் பதித லாலும்
புதியதிட் டிணிய ரென்றே யவர்பெயர் புகல்வர் மாதோ (கச)

கூர்விக ரணீக ரென்றுங் குலவனுத் தச்சிய ரென்று
மார்தரு வகுப்பி ரண்டே யவற்றினுள் விகர ணீகர்
பேர்புரி யழலோ ரெட்டிற் பிரதான மாகி யேசொற்
றேருமாக் கினித்தி ராக்கினி யொனப்பெயர் செப்பு வாரால், (கரு)

உரைசெ யாக் கினித்தி ராக்கினி யொன்றிய திட்டிணி யாக்கினி
விரவுசித் தியாதி னத்திற் சவனமா முகத்தில் வீறு
பரவுதிட் டிணியந்தருமிற் பகுத்துமே வைக்கப் பட்ட
நிரைக்கினி கண்மேற் சந்நி தானமா விருக்கு மேழும். (கசு)

ஆகவிவ் வழல்க ளெட்டும் விகரணி யாக்கினி யாகும்
வாகனுத் தச்சி யாக்கினி யாவது மாக்கினித் திராக்கினி
யேகமாய்த் தானே யக்கினி பிறித்துவையாம லெட்டு
யோகவா தானந் தன்னி லுற்றுறு மதுவே மற்றும். (கஎ)

அக்கினி பிரத்தியட் சத்தோ டமைவுறு மழலோர் நான்கு
தொக்குறு மற்றநாலக் கினிகளுந் துலங்கி மேன்மை
மிக்குறு பிரத்தியட் சம்மாய் மேவுறு விடத்தின் மேவித்
திக்குறு மருகி னின்று சிறக்குமிவ் வழல்க ளெட்டும். (கஅ)

மந்திரத் துதியா லேபேர் வளரும்பத் தேயரென்று
முந்தனுத் தச்சிய ரென்று மிடுபெயர் மொழிய லாமா
னந்தலி லிவையோ ரொன்றுக் கிருபெயர் நவில லாகும்
விந்தையில் விவர மாக விளம்புவன் கேண்மின் மாதோ. (ககூ)

சொல்லனுத் தச்சி யாக்கி னிக்குண்முன் னென்று மக்கினி
வெல்லுறு சம்பி ராடொட் டிருங்கிரு சானு வென்றி
வல்லவாவ ரக்கினி யென்று மேனனி வழுத்து வார்க
ளொல்லுமுத் தரவேதிக்க ணக்கினி யுடனே சேரும். (உ0)

சகலமாம் பசுயா கங்கள் சார்சோம யாகந்தானும்
புகலதிற் செய்ய லாகும் போற்றிய விரண்டா மக்கினி
பகர்பத்சன் னியனே யென்றும் பவமான னென்றும் பேர்சொ
லகமுற்றுத் தரவே திக்கு வடக்குறும் பவமா னத்தில். (உக)

வேறு.

மூன்றதா யங்கி பாவக னேடுச முகியனு மெனும்பெயர் வேதி
யான்றுறு வடகீழ் மூலையி னமருட் கரமெனுந் தருத்தினி லமையுந்
தோன்றிய நாலா மக்கினி யவ்விய குதனே டசமிருட் டனனென்
றேன்றதொர் பசுவி னவியுறு சாமத் திராக்கினி தன்னொடு மிருக்கும். (உஉ)

அஞ்செனு மழலே யிருத்தர மன்னே டமர்சுவற் சோதியா மதுவே
யெஞ்சலில் சதசவு தும்பரித் தானத் தியற்கையா யமர்ந்தினி திருக்கு
மிஞ்சிய வாறு மக்கினி பிரமச் சோதியோ டமர்விசு தாமன்
றுஞ்சிடாச் சதசத் பிரமமா மிருந்து துலங்கிய தானத்தி லிருக்கும். (உங)

ஏழெனு மழற்கே யசனொடு மேக பாதனென் திருபெய ரிசைக்கும்
வாழுறு சாலைக் கீழ்முகச் சாலா முக்கிய மாமழ லோடு
மாழ்வுறு தெட்டா மக்கினி சாற்று மகியொடு மமர்ந்தபுத் தினியென்
சூழுறு காலை மேற்றிசைப் பிராசீ கிதமெனுஞ் சொல்லழல் கூடும். (உச)

இந்தவக் கினியெட் டினுக்குபத் தான மியற்று திட்டிணியமா மென்ப
நந்திடா விகர ணீயமோ ரெட்டு நவிலுவா மடைவினில் வண்ண
முந்தழ றனக்கு விபுவொடு பிறவா கணனென முறைப்பெயர் விளம்புஞ்
சுந்தரச் சதசுக் கடுத்திட்டு வடக்காக் கினிதிராக் கினியொடு துலங்கும். (உரு)

அரியதோ ரிரண்டா மழற்பெயர் கிடனே யவ்விய வாகன னென்னு
முரியதோர் சதசுத் தென்வடக் கொழுங்கா யுற்றதிட் டிணியமா முறிற்
றெரிவுறு தெற்கு முதலிரண் டதனிற் சிறந்திடு தானமா யிருக்கும்
பிரிவுறு மூன்று மக்கினிப் பெயரே பிற்சுத்தன் பிற்சேதா வென்ப. (உசு)

சொல்லிய மூன்று மக்கினி யாறுய்த் துலங்கிய தெற்கொடுக் கத்தி
லொல்லையிற் பொருந்து மக்கினியோடு முறுசந்நி தானமா யிருக்கும்
வில்லொளி நாலா மக்கினி துதன்சொல் வீறிடும் விசுவவே தாவே
நல்லதக் கணத்தின் முதலுறு மூன்றும் பிராமண சங்கியி னயந்தே. (உஎ)

நண்ணுதிட் டிணியாக் கினியொடு சந்நி தானமாய் நவையறப் பொருந்துங்
கண்ணுறு மைந்தா மக்கினி வசியோ கவியென விருபெயர் காட்டித்
திண்ணமாய்த் தெற்கு நான்கிடந் திட்டிணி யாக்கினி தன்னொடுஞ் சேரும்
பண்ணுறு மாறு மக்கினிப் பெயரோ பகருமங் காரிபெம் பாரி. (உஅ)

தெற்குறு மைந்தாந் திட்டிணி யோடு திகழ்சந்நி தானமாய்ச் சேருந்
தொக்குறு மேழா மக்கினி யவசு துவசுவா னிருபெயர் மேவு
மிக்கதெக் கணத்தா றுகிய திட்டணி யாக்கினி தன்னொடும் விளங்குந்
தக்கதோ ரெட்டா மங்கிசுந் தியுவே சாற்றுமா சாலீய னென்ப. (உகூ)

சாற்றிடு மெட்டா மக்கினி தானுஞ் சதசுக்குத் தென்கிழக் காகத்
தோற்றிய சோம பாத்திரங் கழுவுஞ் சூழன்மாச் சாலீய மாக
வேற்றுதிட் டிணியாக் கினியத னுடனே யியைசநதி தானமா யிருக்கும்
போற்றுவி கரணீ யாக்கினி யெட்டும் புகன்றனம் வரன்முறை யென்றே. (௩0)

இப்பதினறென் றுயர்திட்டிணி யாக்கினி யிவை யிருநிலந் தன்னிற்
றுப்புறு சோம யாகத்துக் குரிய வெனச்சொலுஞ் சுருதிகளனைத்து
மெய்ப்படு பாவ காக்கினி மரபை விளம்பும்வெம் பாவகன் மைந்த
னப்புசி நீரி லமர்ந்தவ பிருத விட்டியில் வருணனோ டமைவான். (௩௧)

அப்புசன் மைந்த னிருதயாக் கினியின் னுயிர்கடஞ் சடலத்து ளமைந்தே
வைப்புறு முணவைப் பாகமாக் குவன வனசுதா வித்துவாக் கினியோ
டொப்பின்மன் னியபூ தங்கட மிடத்திற் றூகங்க ளியற்றுவ ரென்று
மெய்ப்பின்மன் னியுச்சேய் சமவதாக் கினிதான் மேவும்வன் பிரளயத் தளவும். ()

கடலிடை வடவா முகமென வமர்ந்து கதித்தநீ ரருந்தலே பண்ணித்
திடமொடு வாசம் பண்ணுவா னவன்சேய் திகழ்சக ரட்சவா வவனு
மடலுறு கிடமாக் கினியினைப் பயந்தா னவன்புவிக் கிரகத்தின் மாவான்
புடவியி லவன்சேய் சிரவியா தாக்கினி புசிப்பவன் மரித்ததே கத்தை. (௩௩)

அவ்வழன் மைந்த னேகசாக் கினியா யுவென்றொரு பெயர்நனி யமைந்தே
செவ்வைகொள் சீரங் களைப்பரி ணுமஞ் செய்குவ னவன்மகன் மகிடா
னெவ்வமி லவன்சே யேற்றிய சகிதா னிபுரியா கங்களோ மத்திற்
றிவ்விய வவிசு புசிப்பவன் சேயற் புதனவன் றன்பெறுஞ் சேயாம். (௩௪)

ஓங்கிய வீராக் கினியெனு மவன்பே ருற்றதே வாமிச னென்ப
நீங்கலில் பாவ காக்கினி மரபி னிறைந்தவ ரிப்பதி னல்வர்
தீங்கறு சுசிக்கே சேர்விட தாக்கினி திகழ்நப சாக்கினி யோடும்
பாங்குறு வித்தாக் கினியிவர் மூவர் பாலரென் றெவர்களும் பகர்வர். (௩௫)

நல்விட தாக்கினி சுதன்பெயர் கண்ட னபசியன் பாலனே கலியாஞ்
சொல்கவி பிராச சித்திவேள் விகட்குத் துலங்கபி மானியராய்த் துய்ப்ப
னெல்லையில் வித்தாக் கினியருந் தவத்தி லுதவிய பாலனே யர்க்க
னெல்லெழி லர்க்கன் சகலகா மியத்தி னித்தநை மித்திய மிட்டி. (௩௬)

இவைக்கபி மானி யாமிரட் சோக னியலொடு கூர்பதி கிருத்துத்
தவத்துறு சுரவி சார்வுறு வசுமான் றயங்கிய சீரரி யட்ச
னுவப்புறுங் குணமா னுயர்கிட மாவ னொளிர் பெற வற்கிய னுடனே
நிவப்புறு மெண்மாப் பயந்தன னிவரே நிகழ்சுசி மரபிலீ ரெழுவர். (௩௭)

ஒருமின் நாற்பத் தொன்பதக் கினியு மொளிர்செயு மோமயா கங்க
ளோர்வுறு பூசைக் குரியரே சுவாயம் பூமனு வந்தரத் தென்றுத்
தேருமந் தரத்தில் யாமரே யென்னுந் தேவரோ டுறு பெயர் சிறந்தார்
சார்வுறு சேதன சேத னங்கத்திற் றங்கிடு மக்கினித் திறமே. (௩அ)

முதலிய காமிய நித்திய நைமித்திய முயன்றிடு பூசனை புரிவோர்க்
கிதமுறு பதங்க ளல்கியு முன்ன ரிறந்தமன் வந்தரங் களினுஞ்
சுதைநுகர் தேவர் தம்மொடுங் கூடிச் சுக்கிரன் யாமர்க ளென்றுஞ்
சிதைவற விருந்த வக்கினி தாமே தேவராற் பணிதற்கு முரியோர். (௩௯)

இறந்திடு மன்வந் தரத் தினிவரு மன்வந் தரத்தவர்களுக் கெலா மிவையே
சிறந்தவக் கினியென் றுரைக்குநாள் வேதந் தோம்மன் வந்தாந் தோறும்
பிறந்துபேர் வெவ்வே றுரைக்கினு மிவர்கள் பேதமொன் றின்றியே யிருப்பார்
நிறைந்தவக் கினியின் வரன்முறை யாவு நிகழ்த்தினே மென்றனன் சூதன். (௪0)

ஐம்பத்திரண்டாவது

அக்கினி வமிச வகுப்பத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கருசஉ.

ஐம்பத்து மூன்றாவது

கருமயோக வத்தியாயம்.

இருமை சேர்தவச் சூதனை யேத்தியே
யொருமை நேடு முனிவ ருளங்குளிர்
தரும நீதி தவறில தாகிய
கரும யோகங் கழறுக வென்னலும். (௧)

வளர்பு விக்குப் பிரளயம் வந்திடத்
தளர்வி லாமனுத் தன்முக நோக்கியே
மிளிரு மாதிசர்க் கத்தின் வித்தாரமுங்
களைக ணன பிதிரிசர்க் கத்தையும். (௨)

உரைத்து நீடு கருமத்தின் யோகமும்
விரித்த ஞானம் விளக்கிய யோகமுந்
தெரித்து மாதவன் செப்பின னென்றறி
ஞருத்தி கூருங் கரும மறைகுவாம். (௩)

ஒருமை வேத னுரைக்குங் கருமமே
பெருமை யாமென்ப பேரறி வாளர்தாங்
கரும யோகநற் காரணத் தாலுறு
மருமை ஞான மதில்வரு முத்தியே. (௪)

வீறு ஞானமு மெய்ப்பொரு ளுண்மையுங்
கூறு கன்மத்தின் யோகங் கொடுக்குமிவ்
வாறு தேர்பவ ராரு மரும்பொருட்
பேறு முத்தியும் பெட்பி னடைவரால். (ரு)

வேறு.

மந்திர மத்த வாதம் வழங்கிய நாம தேய
சந்திடா தமரும் வேத விதிரவி றரும வேதத்
தந்தமில் பொருளை யோர்தற் கெமக்கிவ ணரிய தேனு
முந்திய மறைக ளெல்லா முற்றுற வுணர்ந்து தேர்ந்தே. (சு)

மனுமுதன் முனிவர் கூறு மிருதிமற் றீரொன் பானே
யெனுமுயர் புராணம் வைதி காசார மிவற்றி னோடு
பனுவல்சேர் கரும சூத்திரம் பகர்ந்துநிச் சயித்த வாறே
யனுசரித் திடுத ருனே தருமமென் றறைந்து பின்னும். (எ)

தயவுநற் பொறுமை யுள்ளந் தனிலழுக் காற தின்மை
யியல்சுகி கிலேச மின்மை யியையுநற் சுபவா சாரம்
பயனுறு மீகை யோடும் பரர்பொருள் பரதா ரங்க
ணயவினை வெறுத்த லெட்டு மான்மநற் குணமே யாமால். (அ)

அக்குண மெட்டு முள்ளோ னூற்றிய கருமம் யாவுந்
தொக்குறு ஞான யோகஞ் சொல்லிய குணங்க ளில்லா
னெக்கரு மங்கள் செய்தா னுயினு மியற்கை யன்னுன்
மிக்கதோர் கரும யோக மன்றிவே றில்லை ஞானம். (கூ)

மறைமுத லான நூல்கள் வழங்கிய வறங்க ளெல்லாம்
பொறையொடு தேர்ந்து செய்க புங்கவர் பிதிர்க்கண் மக்க
ளிறைதவ ரொடுபூ தங்க ணிகழ்த்துமற் றிவர்கட் கென்றுங்
குறைவறப் பிரீதி செய்க விவ்வகை கூறுவே மால். (க௦)

தினம்புரி யோமந் தன்னுற் றேவர்கண் மகிழ்ச்சி கூர்வ
ரனம்பெறு சிராத்த மோமத் திற்பிதி ரன்பு கூர்வர்
மனம்புணர் வேத மோதின் முனிவரர் மகிழ்வர் பூதங்
கனம்பெறு மவியா லுள்ளங் களிக்குமா னிடர்க ளானோர். (கக)

பொருளொடு மன்ன மீந்து புகலுமின் சொல்லி னுனு
மருளொடு தழைப்ப ருள்ள மறைத்தவிவ் வைந்து நித்தத்
தெருளுறு பஞ்ச வெஞ்ஞந் திகழ்பஞ்ச சூனஞ் செப்பி
லரிதல்கண் டினிய தாகு மரைத்தல்பே டினிய தாகும். (கஉ)

எரித்தலிற் சுல்லி யாகு மிரும்புன லடுத லாலே
விரித்திடு முதக கும்பி யாகுமில் விளக்க லாலே
வரித்திடு நாம மேபிற் பாற்சனி யாமிவ் வைந்தாய்ப்
பரித்திடும் பாவம் பஞ்ச வெஞ்ஞமே பண்ணத் தீரும். (கங)

இல்லிடத் திருந்து வாழ்வோ னியம்பிய பஞ்ச சூன
வல்லிருட் பாவந் தீர்நற் பஞ்சவெஞ் ஞங்கள் வாழ்நா
ளொல்லிட வுஞற்ற ஞகி லோங்கிய சுவர்க்க வீடு
புல்லிடற் கரிய தாகு மென மறை புகலு மாதோ. (கச)

தரையினி லிலையெட் டென்னச் சாற்றிய சங்கக் கார
மருவினுங் குணங்க ளெட்டு மன்னிடா வாகின் முத்தி
பெருகுற வணுகா துற்ற பிராமணர் பசுக்களுக்கு
மிருகையா லுபகாரங்க ளியன்றன வியற்ற வேண்டும். (கரு)

அரியயன் விசுவம் பானு வுருத்திர னிவரோ ரைவ
ருருவமாஞ் சிவனைப் பூமி சுரபிபொன் னுயர்நற் கந்த
மருமல ராடை கொண்டு மாற்சரி யத்தை விட்டுப்
புரிதரு விரதத் தோரும் பூசனை செய்ய வேண்டும். (கசு)

தேவர்க்குந் தேவ ஞகித் திகழ்சிதே திரிய ஞகி
மேவிற்ற சாந்த ஞகி விளங்குமவ் வியத்தமாகி
யாவர்க்குந் தெரியா னுண்மை வடிவமா மிறைவன் மூப்பான்
மூவர்க்கு மேலாய் நின்ற மூவர்க்கு மிறைவ ஞமால். (கஎ)

சொற்றிடு மவரின் மாயன் மலரயன் சூல பாணி
கற்றைவெங் கதிரோ ஞல்வர் கண்ணுதல் வடிவமாகும்
பற்றுறு பூசை பேத மின்றியே பரிவிற் செய்தான்
முற்றிய சராச ரங்கண் முழுவதும் பணிந்தா லொக்கும். (கஅ)

இவர்களி லயன்மா லீச னிருப்பிட மாகி யென்று
முவமையின் வேத மூன்றி னுருவமே யொளிரும் வெய்யோன்
புவியிலக் கதிரோன் பூசை புரிந்தநற் றேவர் நால்வர்க்
கவிமுக மறையோர் செந்தீ யாதலா லவர்பாற் பூசை. (கக)

திருத்தியா மவற்கே தானஞ் செபந்தபம் விரத மோமம்
வருத்துப வாச மாதி வருகரு மத்தி யோகம்
விருத்திய முறையிற் செய்து விமலனைப் பூசை செய்து
கருத்தில்வே தாந்த மாதி கலையினுண் ணறிவை யோர்ந்தே. (உ0)

இழிவுறு நிடேத சன்மத் தியற்கையை யஞ்சி நீங்கிப்
பழியுறு நெறியி னிற்போ னெண்ணிய பயன்க ளெல்லா
தழீஇயுறு பரத்தின் வீடு சார்குவன் றவத்தின் மிக்காம்
வழிவரு முனிவீ ரென்று வழுத்தினன் சூதன் மாதோ. (உக)

ஐம்பத்துமூன்றவது

கருமயோக வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கருகூ.

ஐம்பத்து நான்காவது

புராணவனுக்கிரமணி யத்தியாயம்.

மறைவிரித்த தவமுனிவர் தவமிகுத்த சூதமுனி வதன நோக்கி
யிறைவகுத்த புராணத்தி னள்வுமத னியற்கையுநீ யியம்பு கென்னத்
துறைமிகுத்த கருங்கடலுண் மச்சவடி வெடுத்தருளுஞ் சுருதி மூர்த்தி
பொறைமிகுத்த திறன்மனுவுக் குரைத்தபடி வரன்முறையே புகன்றிட்டானல் (௧)

மலரயன்றன் மானவத்தில் விதித்துமறை சாத்திரங்கள் வகுக்கு முன்னே
நிலைதெரிந்து நினைத்திடலாற் புராணமெனப் பெயர்படைத்து நெறிபெற்றோங்குங்
கலைதெரிந்த மறைநான்கு நான்முகத்திற் படைத்தனனக் கமலத் தோன்பூ
வுலகமுத லுற்பவிக்குங் கற்பத்தி லளவிலவா யொளிபெற் றோங்கி. (௨)

சதகோடி விரிவாகி யேகமாய்ப் பலன்மூன்றுந் தருவ தாகச்
சிதையாம லிருந்ததற்பின் கற்பமொழிந் தெவ்வுலகுஞ் சிதைந்த ஞான்று
புதிதாக மன்பதையும் பொன்னுலகும் பாதலமும் புவியும் வெற்பு
முதலாய பொருளனைத்தும் படைத்ததற்பின் வியாதனெனு முகுந்தன் றானே. (௩)

அங்கமா றெடும்வேத நான்கன்றி யறுமூன்று புராண மாயும்
புங்கமா கியஞாய சாத்திரமீ மாஞ்சையெனும் புணிய நூலுஞ்
சங்கைதீர்த் திடவகுத்தா னன்றியுமிக் கற்பாதி தன்னின் மாயன்
வங்கமார் கடனுப்பண் மச்சவடி வாகிமுன்போல் வகுத்திட் டானல். (௪)

அன்றுரைத்த முறைப்படியே யறிவுணர்ந்த முனிவரருக் கன்ன வூர்தி
வென்றிதரு புராணங்கள் விதிநிட்டே தங்களெல்லாம் விரித்துச் சொற்று
னென்றுமவை விளங்காத வியற்கையின்மால் வியாதமுனி யெனும்பேர்பெற்றுத்
துன்றுதுவா பரயுகத்தின் மூவாறு புராணமெனத் தொகையாய்ச் செய்தே. (௫)

கிரந்தவகை நாலிலக்கத் துள்ளடக்கி யிவ்வுலகிற் கிளரச் சொற்றுன்
பரந்தபெரு வானுலகி லிப்போதுஞ் சதகோடிப் பரப்பாய்த் தோன்று
நிரந்தபொரு ளனைத்துமிந்த நாலிலக்கத் துள்ளடக்கி நிகழ்த்தி னுன்கூ
ரரந்தைகெட வுரைத்தவகை யறுமூன்று புராணத்தி னளவை சொல்வாம். (௬)

அருந்தவத்தின் மரீசிதனக் கயனுரைத்த பிராமியத்தி னளவை கூறிற்
கிரந்தமயு தத்தளவை வடமொழியைப் புத்தகத்திற் கிளரத் தீட்டிப்
பரந்தவொரு பாத்திரத்தி னீர்நிறைத்தான் கன்றினெடும் படிவங் கீறிச்
சுரந்தமுதந் தருகாம தேனுவையா வாகித்துச் சொன்னத் தோடும். (௭)

அறிவுடைய மறையவர்க்கு வைகாசிப் பௌரணையி னன்பி னீந்தோர்
நெறியொடுநான் முகனுலகி னெடுங்காலம் வீற்றிருப்பர் நேரி ரண்டா
யுறுபாத்மை பதிற்றையா யிரமாம்பாத் மகற்பத் துயர்ச்சி கூறும்
செறிதருபுத் தகத்தெழுதிச் செம்பொன்னுங் கமலமொன்றுந் திலத்தி னேடும். ()

ஆனிவளர் பௌரணையின் மறையவருக் களிக்கநல்கு மசுவ மேதந்
தானிக்மு மகப்பலனை மூன்றெனவே வைணவப்பேர் சார்பு ராண
மேனிவரும் வராககற்ப விருத்தாத்தம் பராசரர்முன் விளங்கக் கூறு
மூனமிலெண் ணாயிரமாங் கிரந்தமதைப் புத்தகத்தி னுவந்து தீட்டி. (௯)

நற்கிருதத் தேனுவொடு ததியாடிப் பௌரணையி னல்வே தர்க்கே
யற்புதமா யுவந்தளிக்கிற் பவநீக்கி யரியுலகி லமர்ந்து வாழ்வர்
பொற்புறுநான் கெனும்வாயு புராணமரன் மகிமையெலாம் புகல்சு வேத
கற்பமுறை பன்னிரண்டா யிரங்கிரந்த மவர்கண்முன்னங் கருதிச் சொன்னான். ()

புத்தகத்தி னதையெழுதிக் குளதேனுக் குளத்துடனே பொருவி லாத
வுத்தமவா வணிமாதப் பௌரணையி னுயர்மறையோர்க் குவப்பி னீந்தான்
மொய்த்தபெரும் பவநீக்கி யொருகற்பஞ் சிவபதத்தின் முற்றும் வாழ்வர்
பத்தியினைந் தெனப்படுநற் புராணமது பாகவதம் பண்பினோங்கி (௰௧)

விண்டுசரித் திரங்காயத் திரிமகிமை விருத்திரா சுரனை வீட்டல்
பண்டுளமெய்த் தரும நெறி சாசுவத கற்பத்திற் பான்மை மன்சீர்
கொண்டுரைக்கும் பதினெண்ணா யிரமாகுந் தொகைக்கிரந்தங் குலவத் தீட்டிச்
தண்டலிலா திழைத்ததங்கத் தரிய சிங்கம் வரைந்தரியைத் தாபித் தன்பான். ()

பூசனைசெய் துவப்பினொடும் புரட்டாசிப் பௌரணையிற் புரிமுந் நூலோர்க்
காசகலக் கொடுத்திடுவோ ரரியுலகத் தினிதிருப்பா ராமா றுகப்
பேசுபுரா ணந்தனக்கு நாரதீ யப்பெயராம் பிரம கற்பத்
தேசில்விருத் தாந்தமும்பல் கருமமுநா ரதனுரைத்தா னிலக்கங் கூறில். (௰௩)

இருபத்தை யாயிரமாந் தொகைக்கிரந்தம் புத்தகத்தி லெழுதித் தீம்பால்
பெருகத்தந் தருள்பசுவும் பொன்னுமுந் நூ றரித்துயர்ந்த பெரியோ ருக்குக்
கருதிச்சீ ரைப்பசிப்பூ ரணையதனி லளித்திடுவோர் கருவிற் சேரா
தொருமைப்பேற் றினையடைவ ரேழெனுமார்க் கண்டபுரா ணத்தை யோதின் ()

சகுனியெனும் பறவைகளை யதிகரித்துத் தருமமுடன் றன்மந் தன்னை
வெகுவிதமா விரித்துரைக்கு மொன்பதினா யிரங்கிரந்தம் விளங்கத் தீட்டிப்
பகுதிபெறக் கயம்பொன்னி னமைத்துமறை யோன்றனக்குப் பகருஞ் சீர்க்கார்த்
திகையில்வரு பௌரணையி லளிக்கின்மகப் பவுண்டரிகப் பலன்சேர் வாரால். (௰௫)

எட்டென்னச் சொல்லுமாக் கினேயபுரா ணப்புகழ் சான கற்பங்
கட்டுரைக்குங் கனல்வசிட்டற் கீரெண்ணா யிரமாகக் கருதிச் சொன்ன
மட்டறுமத் தொகைக்கிரந்தந் தனைவரைந்தா டகச்சிங்க மருவு மெட்கொண்
டட்டதிக்கும் புகழ்பசுவோ ரிரண்டுகன்றி னுடனமைத்தன் னவற்றை யெல்லாம். ()

மார்கழிநற் பௌரணையின் மறையவருக் களிக்கின்மகப் பலன்க ளெல்லாஞ்
சேருமொன்பா னெனவுரைக்கும் பௌடியபு ராணஞ்சீர் திருந்த வேய
தோர்கற்பாந் தரவளமை யாதித்தன் மகிமைகூ றுலக நீதி
யார்சருவ யூதவிலக் கண்டியனான் மனுவுக்கன் றறையப்பெற்று. (௰௭)

முப்பதினா யிரங்கிரந்த மாயிருக்கு மவைமுழுது முறையிற் றீட்டி
யொப்பில்செம்பொன் மேருவுடன் குளதேனு வமைத்துயர்தை மாதத் துற்ற
செப்பருஞ் சீர்ப் பௌரணையிற் செழித்தமறை யவர்தமக்குச் சிறப்பி னீந்தோ
ரிப்புவியி னக்கினிட்டோ மாதிமகப் பலனெனைத்து மெளிதிற் சேர்வார். (கஅ)

பத்தென்னும் புராணமது பகர்பிரம கைவர்த்தம் பண்பி னோங்கு
முத்தபரா தந்திரகற் பத்தியல்போ டிதரகதை யொளிருங் கண்ணன்
வித்தகமாஞ் சரித்திரஞ்சீர் பிரமவரா கக்கதையும் விளங்கு மூட்னுட்
புத்திபெறு நாரதற்குப் பொருவருஞ்சா வன்னிமனுப் புகன்ற தாமால். (ககூ)

புகலும்வட மொழிபதினெண் ணுயிரமா மதையேட்டிற் பொறித்துப் பூமி
யகல்பசும்பொற் பதுமையும்பல் வளம்பொருந்து மனையொன்று மமைத்து மாசி
திகழ்தருநற் பௌரணையின் மறையவருக் கினிதளித்தோர் செழித்த நான்கு
முகனுலகெய் துவர்பதினொன் றுமிலிங்க புராணமதூ முக்க ணுளன். (உ௦)

திவ்வியலிங் கத்தினிடை யுற்பவித்தக் கினிவதனஞ் சிறப்பி னோங்கி
யவ்வியந்தீர் தரவாக்கி னேயகற்ப விருத்தாந்தத் தளவும் பாரிற்
றவ்வவிலா வறம்பொருள்சே ரின்பம்வீ டிடைநான்குஞ் சாரு மாறு
மெவ்வமறச் சொலுங் கிரந்தம் பதினொன்று யிரமதனை யேட்டிற் றீட்டி. (உக)

திருவளரு மத்தனு ரீசுரப்பொற் பதுமையதிற் றேனுவோடு
மொருமைபெறப் பங்குனிநற் பௌரணையி னருமறையோர்க் குதவி னுர்கள்
சுருதிமுறை யிடநடிக்குஞ் சிவசாரூப் பியமடைவர் சொலுமீ ராறும்
மருவியவ ராகபுரா ணந்திகழ்வ ராகதெய்வ வரலா றோங்க. (உஉ)

மானவகற் பத்தின்விருத் தாந்தமுந்தன் மமுமால்பார் மகட்குச் சொல்லு
மேன்மைபெறு கிரந்தமிரு பத்துநான் காயிரமாம் விளங்கத் தீட்டி
வானுயர்பொற் கருடனுடன் றிலதேனுச் சித்திரைப் பௌரணையின் மத்தி
யானமதி னுன்மறையோர்க் களித்திடுவோர் விண்டுபத மடைவ ரன்றே. (உங)

எண்ணுபதின் மூன்றுன புராணமதா மெழிற்காந்த மறைக ளோத்தி
நண்ணியதற் புருடகற்ப வன்மைசிவ தன்மம்பொன் னுட்டை நாட்டும்
புண்ணியசண் முகக்கடவுள் புகரறவே யனுக்கிரகம் புரிந்த தாகும்
பண்ணமரும் வடமொழிபோ ரிலக்கமதைப் புத்தகத்திற் படியத் தீட்டி. (உச)

விளங்குபொற்கு லத்தொடுசித் திரைவிடுவில் வேதியர்க்கு விருப்பி னீவோர்
களங்கமின்றிச் சிவனுலகத் தடைந்திருப்ப ரளவிறந்த கற்ப காலம்
வளங்கிளரும் பதினுன்காம் மாவனபு ராணமயன் வகுத்தான் கல்வி
யுளங்குளிர்ந்த சைவகற்ப விருத்தாந்த மிகவிளங்க வுலக மெல்லாம். (உரு)

மேவுதிரி விக்கிரம னவதாரஞ் செய்தவிண்டு மேன்மை யோடு
மூவர்சரி தையுமூன்று வகைப்பலனுஞ் சொலுங்கிரந்த மொழியீ ரேழா
மோவில்சகத் திரமெழுதி யைப்பசியின் விடுவதனு ளுயர்வே தற்குப்
பாவனையன் புறக்கொடுப்போர் பசுந்துளவ மாலுலகிற் பதிந்து வாழ்வார். (உசு)

கோதில்பதி னைந்தாகுங் கூர்ம புரா ணந்திருமால் கூர்ம மாகி
மேதினிவெந் புறத்தேந்தி யிலக்குமிகற் பத்தின்விருத் தாந்த மெல்லா
மோதுமறம் பொருளின்பம் வீடிவைநான் கையுந்தெரிய வும்பர் கோன்முன்
னேதமிலா விந்திரத்துய் மினனேவியா சீகரித்தங் கிருடி மார்க்கே. (உஎ)

உரைத்தவட மொழித்தொகையா ருயிரமாம் புத்தகத்தி னுவப்பி னோடும்
வரைத்ததனோ டாமைபொன்னி னமைத்தாட்டி யயனமதின் மறையோர்க் கீந்தே
நிரைத்தசகத் திரங்கபிலை கொடுத்தபலன் றனைநேரு நில்னீ ரெட்டாய்த்
தெரித்துலகத் திற்சிறந்த மச்சபுரா ணம்பெருவண் டிரைநீர் நாப்பண். (உஅ)

மச்சவடி வொடுமால்வை வச்சுதமா மனுவுக்கு மறையோர் நான்கின்
விச்சைபெறு மரும்பொருளு நாரசிங்க சரித்திரமும் விரித்தேழ் கற்பத்
திச்சைபெறு வரன்முறையு மீரேழா யிரங்கிரந்தத் திசைத்தா னேட்டி
னிச்சயமாய் வரைந்ததனோ டம்பொன்மச்சந் தேனு வொன்று நிலவச் செய்தே()

வெண்கலப்பாத் திரமெத்தை தூங்குமஞ்சந் தழுவணைமெல் விரற்பொன் னாழி
பண்கவருஞ் செவிப்பணியு மணித்துகிலு நிறைந்தபசும் பொன்னின்காசு
நண்புறுதை யயனத்தின் மறையவருக் களித்திடினு னிலத்தை நன்கா
யெண்பெறவே மாதானங் கொடுத்தபல னடைந்து முத்தி யெய்து வாரால். (௩0)

கருதரிய பதினேழாம் புராணமது காருடமாங் கருடன் றன்பால்
விரவுதரு விசுவாண்ட காலமெனுங் கருடகற்ப விருத்தாந் தத்தின்
பருமையுமெய்த் தருமமுமுன் விண்டுவுரைத் தனன்கிரந்தம் பத்தொன் பானு
யிரவகையா மதையெழுதிப் பசியபொன்னுற் சேவல்பெடை யெகினஞ்செய்தே. ()

தக்கணையோ டரிபொருட்டுக் காதிதனி னன்மறையுந் தரிந்தோர்க் கீந்தோர்
முக்கணன்வா மூலகடைவர் பதினெட்டாம் பிரமாண்ட முதுபு ராண
மக்கமலத் தயன் பிரமாண் டத்தினுறு கதையொடெதி ரடுக்குங் கற்ப
மிக்கவட மொழிபன்னீ ராயிரத்தொ டிருநூற்றின் விளங்கச் சொன்னான். (௩௨)

ஆங்கவை புத் தகத்தெழுதி யதனொடுபொற் பாத்திரமு மணிவெண் பட்டு
மோங்கியமா விதிபாதத் துயர்மறையோர்க் களித்திடினோ ராயி ரத்தி
னீங்கரிய மாராச சூயயா கப்பலத்தி னெறியைச் சேர்வார்
பாங்குறுபு ராணமொரு பதினெட்டு நாலிலக்கங் கிரந்தம் பன்னும். (௩௩)

இத்திறமே மொழிந்தபடி வியாதமுனி தொகைப்படுத்தி யெந்தைக் கோதும்
வித்தகத்தை யான்கேட்டு வேதமுனி வீர்நீவிர் வினவச் சொன்னேன்
புத்தியுடன் பிரமமுனி யிசைத்தபடி பூவுலகிற் பொருந்தச் சொன்னு
னித்தியமாய் வானுலகிற் சதகோடி விரிவாக நிறைந்த தாமால். (௩௪)

இம்முறைமா புராணமெலா மெடுத்துரைத்தேன் பூவுலகி லிவையேயல்லா
னும்மியல்பி னித்தியமா யுப்புரா ணக்கதையி னுரைக்கும் பேதம்
விம்முபொரு ளனைத்தினையுஞ் சுருக்கமா யாவர்க்கும் விளங்கச் சொல்வேன்
செம்மைபெறு பாத்மபுரா ணத்துபபு ராணநார சிங்க மாமால். (௩௫)

அன்னபுரா ணத்தினர சிங்கமூரத் தியின்சரித மனைத்து மிவ்வா
றுன்னுசகத் திரகிரந்தத் துயர்ச்சிபெறும் பதினெட்டா முறைநூ லுக்கு
மன்னுபபு ராணமுமுன் வகுத்தவிதிப் படிதானம் வழங்கல் வேண்டும்
துன்னியகாந் தப்புரா ணக்குபபு ராணநந்தி சுரபு ராணம். (௩௬)

திருமாலு மலரயனும் விண்ணவர்கோன் முதலாய தேவர்யாரும்
பெருவாயி லணுகியெந்தை பதம்போற்றி நின்றிரக்கப் பிரம்பாற் றாண்டி
யருளோடுங் கயிலைமலைச் சினகரத்துள் விடுத்தனுப்பு நந்தி சற்குப்
பொருளோடும் வகைதெரிந்து குமரகுரு பரக்கடவுள் புகன்ற தாமால். (௩௭)

முத்தொழிற்கும் பரமசிவன் காரணமா மெனத்தெரிந்து மொழியுந் தேவ
ரொத்தவலி யசுரர்மா சிவதருமம் விரிக்குமள வோரி ரண்டு
பத்துநான் காயிரமாங் கிரந்தவகை யுடைத்ததனுட் பரவுந் தன்ம
மத்தமுடன் காமமுறும் பரமுத்தி சகலர்க்கு மமையச் சொல்லும். (௩௮)

பொருந்துபவு டிகந்தனக்கே சிவபுரா ணத்தையுப புராண மென்ப
தெரிந்துசிவ சரித்திரமும் பௌடிகத்தின் காதைகளுந் திறமாய்ச் செப்பும்
விரிந்தபதி னெண்புரா ணங்களையு மனுசரித்து விளங்கித் தோன்றிப்
பிரிந்தரவி புராணமுதல் யாவுமுப புராணமெனப் பேச லாமால். (௩௯)

வளந்திகழுஞ் சருக்கமொடு பிரதிசருக்கம் வமிசமனு வந்த ரங்க
முளந்தழைவம் மிசானுசரி தத்தொடுமைந் திலக்கணமா முமைபா கத்தோன்
களங்கமறு மலரயன்செங் கதிர்மகிமை புவனசங்கா ரங்க டானும்
விளங்கவரன் முறைவிரித்து விளம்புவதே புராணத்தின் மேன்மை யாமால். (௪௰)

அறம்பொருளோ டின்பம்வீ டடைதலெனு மிவைநான்கா மவற்றி னுக்கத்
திறந்தெரிந்து சொல்லுவதே சாத்துவித தந்திரமா நாளு மோங்கி
யுறைந்தவிரா சதத்தினொடு தாமதஞ்சங் கிரணமென் றுரைக்கு நான்கா
நிறந்தருமான் மகிமைமிகு கற்பமது சாத்துவித நிகழ்த்து மன்றே. (௪௧)

மலரயன்றன் மகிமைமிகு கற்பமதி ராசதநின் மலனோடங்கி
புலமிகுமக் கற்பமது தாமதமே நாமகடென் புலத்தோர் செய்கை
நலமிகுமூ வகைக்கற்பம் விரவுதல்சங் கிரணமாய் நவில்வர் தேவ
ருலவுபிதிர்க் கவ்வியகவ் வியமியற்றிக் கேட்கிலரி யுலகஞ் சேர்வார். (௪௨)

இவ்வகைமூ வாறென்றே தொகைவிரித்த புராணத்தி னியல்பி யாவுஞ்
செவ்வைபெற வியாதமுனி பாரதமென் றோரிலக்கங் கிரந்தஞ் செய்தான்
றவ்வலிலு ரதனுரைத்த படிராம சரித்திரமித் தரணி மீதி
லெவ்வுமில்வான் மீகியிரு பத்துநான் காயிரமா யிசைத்தா னன்றே. (௪௩)

இவையெலாந் தொகைக்கிரந்த மஞ்சேகா லிலக்கமென விசைப்பர் முன்னோர்
தவவுலகம் பெரும்பொருட்டாற் சகலசற்ப முறைவிரித்த தகுதி யாமாற்
புவனிமிசை யேயிந்த வத்தியா யந்தனையே புகல்வோர் கேட்போர்
பவமொழித்துப் புகழ்படைத்துக் கதியடைவ ரெனச்சூதன் பகர்ந்திட் டானல்.()

ஐம்பத்துநான்காவது
புராண அனுக்கிரமணி யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கருஎஎ.

ஐம்பத்தைந்தாவது
நட்சத்திர புருடவிரததான வத்தியாயம்.

புனிதநட் சத்திரங்கூர் புருடமா விரத மாதி
நனிதரு விரதந் தன்மந் தானநல் லுபவா சந்தான்
றனிமுத னூரதற்குச் சாற்றுமா மனுமுன் கேட்ப
வினியமா லியம்பும் வண்ண மிருடிகட் குரைப்பான் சூதன். (க)

விண்ணுற நிவந்து நீண்டு வெண்கதிர்ச் சிகர கோடி
நண்ணுறும் வெள்ளி வெற்பி னவமணி குயிற்றிப் பொன்னூற்
பண்ணுறுஞ் சினக ரத்திற் பனிவரைக் கொடியி னோடுங்
கண்ணுத லுயர்ந்த சிங்கா தனத்தில்வீற் றிருக்கு ஞான்று. (உ)

தேவர்கண் முனிவர் விச்சா தரர்கள்கந் திருவர் சித்தர்
பூவுறை பிரமன் மாயன் புரந்தரன் முதலா யுள்ள
யாவரும் போற்றி யேத்த வெழின்மின்னார் நடிக்க நந்தி
மேவுகைப் பிரம்பி னாலே மிடைந்திடு நெருக்க மாற்ற. (ங)

உற்றிடுந் திருவோ லக்கத் தொளிர்தரு மகதி வீணை
பற்றுசெங் கரத்தி னாலே யேழிசைப் பண்கள் வாசித்
தற்றமில் கூத்து மாடி நாரத முனிவ னுங்கட்
சற்றைவார் சடையோன் பாத கமலங்கள் வணங்கி நின்றே. (ச)

ஆதியே நடுவே நீடு மந்தமே யிவையி லாத
சோதியே யயன்மா றேடிக் காணருஞ் சுடரே மின்னேர்
பாதியே யன்பர் துன்பம் பறித்தருள் பரனே போற்றி
நீதியே நித்த சுத்த நின்மலா போற்றி போற்றி. (ரு)

போதமார் புருட ரேனும் புரிகுழன் மடவா ரேனு
மேதமில் கன்னியேனு மியற்றுவா ரென்னி லாயுண்
மேதகு மழகா ரோக்கிய மெய்ப்புத்திரர் பௌத்தி ராதி
சோதிபொற் புறவே மல்குந் தொலைவிலா மிகுத்த செல்வம். (சு)

தள்ளரு மிவைக டம்மில் வேட்டவை தருவ தான
தெள்ளிய விரதந் தன்னை யெனக்கருள் செய்வா யென்னக்
கள்ளவிழ் மலர்மென் கூந்தல் பங்குறை கருணை வள்ள
லொள்ளிய விரத மொன்றுண் டுரைத்தும்யாங் கேட்டி யென்றே. (எ)

அற்புத விரதம் யார்க்கு மரிதரி தென்பேர் சாற்றிற்
பொற்புற வருநட் சத்திர புருடமா தான மாகும்
விற்பொலி கரத்து மாயன் விருப்புறும் விளங்கு சித்திரை
யிற்பொலி மூல நாட்டொட் டெதிர்வரு மூல மட்டும். (அ)

இயற்றுதல் வேண்டும் பொன்னு லிரண்டுநற் பதுமை யொன்று
துயக்கமில் வாசுதேவ னென்றுநற் கமலத் தோகை
வியப்புறு வடிவந் தீட்டி விளங்கிய கும்ப மொன்றி
னயப்புற வினிய தான சருக்கரை நிறைத்து நன்காய் (கூ)

மென்றுகின் மாலை வேய்ந்து மீதிலப் பதுமை வைத்தே
யொன்றவா வாக னஞ்செய் துபயபா தாதி கேசந்
துன்றுநட் சத்தி ரங்கள் சொல்லிய வங்க மாக
மன்றணுண் மலரான் மாயன் மந்திரத் தாலர்ச் சிக்க. (க0)

பாதமா மூலந் தன்னில் விசுவரூ பாய வென்று
மேதமில் கணைக்கா லாய வுரோகணி யிடத்து மேலோ
யோதிய வனந்த தேவ ரூபியே யென்று முற்றத்
தீதிலா முழந்தா ளாய திசழசு பதியிற் றூனே. (கக)

கோதறு வாத ராய வென்றுங்கூர் தொடைபூ ராட
மேதிலுத் திராட மாய விடங்களிற் சிவாய வென்று
மோதிய குய்யம் பின்னும் பூரமோ டுத்தி ரத்திற்
றிதிலாப் பஞ்ச பாண தேவனே யென்றும் பின்னர். (கஉ)

காணுறு மரைய தான கார்த்திகை யினிற்சா ரங்க
பாணியே யென்றி ரண்டு பக்கரு பங்க ளாய
வாணியாம் பூரட் டாதி யுத்திரட் டாதி யாங்கண்
சேணுறு கேசி தன்னைச் செயித்தருண் மூர்த்தி யென்றும். (கங)

உதரத்தின் மேல்கீ ழாக வுற்றரே வதியின் கண்ணே
யெதிரிறு மோத ராய வென்றுமார் பனுடந் தன்னி
லதிகமா தவனே யென்று முதுகதா மவிட்டந் தன்னில்
வதிதரு பாவ ராசி மாற்றிடு மாயா வென்றும். (கச)

திரடரு புயங்களாகத் திகழுநல் விசாகந் தன்னில்
வருகதை திகிரி சங்கு வாழ்கரத் திரியே யென்றுங்
கரமதா மத்தந் தன்னின் மதுகயி டவனைக் காய்ந்த
புருடனே யென்றுஞ் செங்கை யிறையதாம் புனர்ப்பூ சத்தில். (சரு)

நகளறு சாம வேதத் துக்கதீ சுரனே யென்று
நகமய மாகி நின்ற நல்லவா யிலியந் தன்னிற்
புகழ்மச்ச ரூபி யென்றும் பொற்புறு கண்ட மாகி
நிகழுங்கேட் டையினிற் கூர்ம வடிவுடை நிமலா வென்றும். (சசு)

வருசெவி மயமா மோணத் தினிலாதி வராக வென்றுந்
திருமுக மான பூசத் தினினர சிங்க வென்று
மிருளறு மெயிருஞ் சோதி யிடத்தில்வா மனனே யென்றும்
பருகுவாய்ச் சதயந் தன்னிற் பார்க்கவ ராம வென்றும். (சஎ)

திறங்கொண்மூக் காம கத்திற் றெசரத ராம வென்றும்
பிறங்குகண் ணுமை மீனிற் பெலபத்தி ராம வென்றும்
புறந்திகழ் நெற்றி யாஞ்சித் திரையிற்புத் தாயவென்று
நிறங்கிளர் சென்னி யாக நிகழ்த்திய பரணி தன்னில். (சஅ)

உற்றிடுங் கற்கி ரூபத் தொருவனே யென்று நல்ல
பொற்புறு கேச மென்னப் புகறிரு வாதி ரைக்கண்
சற்புரு டோத்த மாய வென்றுஞ்சா ரங்தோ ராகிச்
சொற்பெறு மந்தி ரத்தாற் றுயநாண் மலர்க டேவி. (சகூ)

வேறு.

உப்பு மிளகு புளியொழித்தே யுளுற்று மவிசு நிவேதித்துத்
தப்பி றினமு மதுபுசித்துத் தவமா மிருபத் தேழ்நாளு
மிப்பண் புறவே பூசைவழா தியற்றி வேண்டும் வரங்கேட்டுச்
செப்பு மறையோர்க் கனமளித்துத் தினமு மிடப மூலத்தில். (ருo)

வேறு.

தீதிலா சார முள்ளோன் றிகழுநல் லுருவோன் வாக்கில்
வேதசாத் திரங்கள் வல்லோன் விளங்கிய சாம வேதி
கோதிலெண் விதமா மான்ம குணங்களை யுடையோன் மிக்க
சோதிட நெடுமா லீசன் றுணைப்பதந் துதிப்போ னென. (ருக)

மறையவன் றனையில் லாளோ டழைத்தரி மலரா ளாகக்
குறைவறப் பூசை செய்து கோவுப ரகட்டின் மெத்தை
நிறையணி யாடை கும்ப நிகழ்த்திரு பதுமை மற்று
மறலொடு மவர்க்கு நல்கி யரியன பூரி யீந்தே. (ருஉ)

இத்திற முடித்துப் பின்ன ரியன்றவா மறையோர்க் கன்னம்
பத்தியி னளித்துத் தானும் பதமறு சுவையி னோடுந்
துய்த்திட வேண்டு மிவ்வா றுஞற்றுவோர் துயரு ருமற்
றத்துநீர்ப் புணரி யாடைத் தரணியி னினிது வாழ்ந்தே. (௨௩)

விண்டுவின் பதத்தினெய்தி விளங்கிய போகந் துய்ப்பர்
மண்டலந் தன்னிற் கைமை மாதரும் புரிக லாமென்
றண்டர்நா யகனு முக்க ணமலன்று னன்பு கூர்ந்து
பண்டரு மகதி நல்யாழ் முனிவர்க்குப் பகர்ந்தா னன்றே. (௨௪)

இருநிலம் புரக்கும் வைவச் சுதமனு வினிது கேட்பத்
திருமகள் கொழுந னன்று செப்பிய வண்ண மிக்க
பொருவருந் தவத்தோர் கேட்டுப் புளகமாய் மகிழ்ச்சி யெய்த
மீருளறு மனத்துச் சூத மாமுனி வகுத்தான் மன்னே. (௨௫)

ஐம்பத்தைந்தாவது

நட்சத்திர புருடவிரததான வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௬0௨.

ஐம்பத்தாறுவது

ஆதித்தசயன விரத வத்தியாயம்.

தொடர்வுறு பாவப் பௌவத் தொடக்கறுத் தான்மா வென்றும்
படர்தரு மன்பின் மிக்க பண்புறு முனிவர் யாருந்
தடநெடும் புகழா தித்த சயனமா விரதந் தன்னை
யடைவினின் மொழிவா யென்ன வருந்தவச் சூதன் சொல்வான். (௧)

கொன்றையந் தொடையல் வேய்ந்த குழகன்ற னடியைப் போற்றித்
துன்றிய பசியை யாற்றுந் துயருறு வியாதி யுள்ளான்
வென்றிகொ ளுபவா சத்தின் பலத்தினை விரும்பி னெவ்வா
றென்றுநா ரதனே கேட்ப விறையவ னியம்பு மன்றே. (௨)

ஓதுற்ற வுபவா சத்துக் குரமிலான் பகற்போ துண்டி
நீதிக்க ணித்தே யன்று னிசியினி லருந்த லான
தீதற்ற விரதந் தானுஞ் சிலவுள வவற்றுண் மேலா
மாதித்த சயன மென்னும் விரதமொன் றெமக்கன் பாமால். (௩)

அத்தநாட் சத்தி ரத்தோ டமர்ந்தசத் தமியுஞ் சேரா
தித்தவா ரந்தா னேனுஞ் சிறந்தசங் கிராந்தி யேனு
மொத்திடு தினத்தா ரம்ப முளுற்றியே யுமாம கேச
வித்தகப் பதுமை பொன்னால் வியப்புற வமைத்தப் போழ்து. (௪)

சொல்லுமா மகேச மந்திரஞ் சொல்லியே யாவா கித்து
நல்லதாஞ் சோட சோப சாரத்தா னயந்து போற்றி
யெல்லவ னுமை நட்சத் திரநாம மிவைக ளானே
யல்லறீர் பாத மாதி கேசமீ றுற்றல் பூசை. (௫)

ஆதித்த னமக்கு மூன்று வகையினும் பேத மல்லன்
பேதிப்ப தாகா னன்னேன் மந்திர மெமக்கும் பெட்பாந்
தீதற்ற பாதந் தன்னிற் செங்கதி ருருவமாகப்
போதித்தினத்தந் தன்னாற் போற்றுக கணைக்கா றன்னில். (௬)

அருக்கன்ற னுருவ மாகச் சித்திரை யாலர்ச் சிக்க
வுருப்பெறு கீழ்க்கா றன்னி லுயர்புரு டோத்த மன்சீர்
விருப்புறும் படிவாய்ச் சோதி யாலருச் சிக்க வேண்டுந்
திருக்கிளர் முழங்கா றன்னிற் றுதுவின் செவ்வி யாக. (௭)

வருவிசா கத்தாற் பூசை வழங்குக வூருத் தன்னிற்
பரவிய சகத்திர பானுப் படிவமா வனுடந் தன்னில்
விரைமலர் தூயர்ச் சிக்க விளங்கிய ரகசி யத்தி
னுருவிலி யுருவ தாகக் கேட்டையி னுவந்தர்ச் சிக்க. (௮)

அரையினின் மகவான் சோம னணிபெறு முருவ மாக
மரபுறு மூலந் தன்னால் வழுத்துக நாபி தன்னிற்
புரையறு துவட்டா வாகப் பூராட முத்தி ராடத்
துரைபெறப் பூசை செய்க வுதரத்தி னுவகை கூர்ந்தே. (௯)

எழுபரி யதிக காந்தி யியல்வடி வினிலோ ணத்தில்
விழுமலர் சொரிக கட்கத் தினில்விகர்த் தன்ரூ பத்திற்
றெழுதவிட் டகத்திற் பூசை யியற்றுக துலங்கு மார்பிற்
கெழுமிய விருளை நீக்குங் கிரணராச் சதயத் தேத்தி. (௧0)

தன்னிகர் வாகுச் சண்ட காரூப மாகத் தாழ்வி
னுன்னரும் பூரட் டாதி யுத்திரட் டாதி தன்னான்
மன்னிய வணங்கல் செய்க மருவிரு கரங்க டோறு
நன்னலச் சாமந் திக்கு நாதராய்க் கடைநாள் போற்றி. (௧௧)

நகத்தினிற் பரியேழ் பூட்டு நகுமிர தத்த ராக
வகுத்தசு பதியாற் பூசை வழங்குக முதுகிற் கோர
மிகுத்தகாந் தியராய்ப் பூசை பாணியால் விரும்பிச் செய்க
செகத்தொளிர் கண்டத் தானந் திவாகர ரூப மாக. (௧௨)

விரைந்து கார்த் திகையிற் பூசை விரும்புக வதரந் தன்னிற்
பொருந்துமம் புயேச ராக ரோகணி தனிற்பூ சிக்க
திருந்திய தந்தந் தன்னிற் றிகழரி யுருவ மாகப்
புரிந்தமான் றலையிற் பூசை பண்ணுக நாசி தன்னில். (கங)

தீதறு சவிதா ரூபத் திலங்குமா திரையி னானே
மேதக வணங்க நெற்றி விளங்குமம் புயன்ரூ பத்தா
னாதரப் புனர்ப்பூ சத்தா லருச்சனைபுரிந்து போற்றி
யேதமில் பூசை செய்க விருச்சிகத் தானந் தன்னில். (கச)

தேவரி சரீர காரி வடிவமாத் திகழ்பூ சத்திற்
பூவருச் சிக்க மோலிப் புறத்தினில் விபுதரானே
வாவுறு முருவ மாக வாயிலி யத்திற் போற்றிப்
பாவனை புரிக காதிற் பரிந்தகோக் கணங்கட் கெல்லாம். (கரு)

ஈசுர வடிவ மாக மகத்தினி னிறைஞ்சிக் கண்ணி
னாசமி லுயர்கோப் பிரம நந்தன வுருவ மாக
மாசறு பூரந் தன்னுன் மனத்தொடும் வழிபட் டேத்தி
யாசறு புருவ மீதி லணிவிசு வேச மாக. (கசு)

உத்திர மதனி லன்பா யுளத்தொடு முவகை கூர்ந்து
கொத்தலர் வனைக பாசஞ் சாபமங் குசங்க பால
முத்தலைச் சூலஞ் சோமன் முளரியுந் தரித்துக் காலன்
சித்தசன் கேசாசு ரன்போர்த் திரிபுரத் தசுரர்க் கெல்லாம். (கஎ)

ஆயுளீ றளிக்கு மீச னடியிணைக் கமலம் போற்றி
நேயமாய் விசுவ தேவர் பொருட்டுச்சி நேர்ந்து பூசித்
தேயவெட் டயில முப்பு மதுமிள கிறைச்சி யில்லாத்
தூய்மையோ டிரவி னுண்டித் தொன்முறை விரத மாற்றி. (கஅ)

அத்தநா டொடங்கி நோன்பை யாற்றிடு நடுவிற் றோன்றும்
வித்தகப் புனர்ப்பூ சத்தின் விளங்கத்தி மரத்தாற் செய்த
வொத்தபாத் திரமி ரண்டி னொருபடி யரிசி யானெய்
பத்தியி னிரப்பிப் பொன்னோ டந்தணர்க் கீக பண்பான். (ககூ)

சோர்விலா வத்தந் தொட்டுத் தோற்றுமுத் திரநாள் காறு
மேர்பெற விரத மாற்றி யிசைந்தபா ரணமி யற்றி
யார்வமொ டத்தந் தொட்டுப் பின்னுமம் முறையீ ரேழு
சீர்கொள்பா ரணங்கள் செய்க திகழேழாம் பார ணத்தில். (௨0)

மறையவன் றனக்கோர் சோமன் மன்னுமுத் தரியத் தோடுங்
குறைவற வளித்தீ ரேழாக் கூறுபா ரணத்திற் பானெய்
நிறைசருக் கரைப ருப்பு நிகழ்பண்ணி கார மற்று
மறையுநால் வேதத் தோருக் கனத்தொடு மளித்துப் பின்னர். (௨க)

பொன்னிறு லிதழோ ரெட்டுப் பொலிந்தபூம் பொகுட்டி ளேடு
மன்னிய கமல மோரெட் டங்குலம் வாய்ப்பச் செய்தே
யுன்னுமவ் விதழ்க ளெட்டிற் பதுமரா கக்கல் லோங்கி
மின்னிடக் குயிற்றித் தூய்மை விளங்கிட வியற்றி யப்பால். (உஉ)

சுருதிய தூளி மெத்தை தழுவணை கச்சுக் கட்டின்
மருவுமேற் கட்டி மெய்யில் வயங்குபொற் பணிபொன் னுடை
குருமணித் தவிசு பாதக் குறடுகை விசிறி நீண்ட
பெருகொளிக் குடைகண் ணாடி சாமரை யடப்பை பின்னும். (உ௩)

முக்கனி தாலஞ் சாந்த முருகுகொப் புளிக்கு மாலை
மிக்குற நிரைத்துக் கட்டின் மீதிலக் கமலம் வைத்துத்
தக்கதொர் கபிலைக் கொம்பிற் றமனியங் காலில் வெள்ளி
தொக்கபொற் பட்டஞ் சுட்டி துகிலொடு மலங்க ரித்து. (உ௪)

கறக்கவெண் கலத்திற் செய்த கலசநற் கன்றி னோடுஞ்
சிறக்கவே தான மீந்து செங்கதிர்ப் பருதி தன்னை
மறக்கிலே னின்னை யென்று வேண்டிய வரங்கள் கேட்டே
யறத்தின்வாழ் மறையோன் றன்னை யடிபணிந் தனுப்ப வேண்டும்.(உ௫)

அரியவிவ் விரதந் தன்னை யறிவிலர்க் கறைத றீதாம்
புரிவுறு மறிவு சீலம் பொற்புறு குணநன் னீதி
தெரிதர வியற்று வோர்க்குச் செப்பலாங் குபேர னிந்திரன்
பரிவுறு வசிட்டன் பார்த்த னனுட்டித்துப் பயன்பெற்றுரால். (உ௬)

நினைப்பவர் சொல்வோர் கேட்போர் நேயமொ டெழுதி வைப்போர்
வினைப்பய னொழிந்து விண்ணோர் வேந்தென விளங்கி வாழ்வார்
மனத்தொடு மனுட்டித் துள்ளோர் வழிவரு பிதிர்க்கள் கோரக்
கனற்பெரு நரகி னீங்கிக் கண்ணுதல் பதத்தில் வாழ்வார். (உ௭)

என்றுமுன் கயிலை வாழு மிறைவனு ரதற்குச் சொன்ன
நன்றிகொள் விரதவாய்மை நாரணன் மனுவுக் கன்பா
னன்றுரைத் திட்ட மேன்மை யருந்தவ முனிவர் கேட்ப
வென்றிகொ டவத்துச் சூத முனிவரன் விளம்பி னனல். (உ௮)

ஐம்பத்தாறுவது

ஆதித்தசயன விரத வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். க௯௬0.

ஐம்பத்தேழாவது

கிருட்டிணாட்டமி விரத வத்தியாயம்.

நாரதன் பணிந்து போற்ற நறைவிரி கடுக்கை சூடு
மாரிய னருளுங் கிருட்டி ணாட்டமி விரதந் தன்னைச்
சீரிய மனுவுக் கன்று செங்கணமா லுரைத்த வண்ணங்
கூரிய முனிவர் கேட்பக் கூறுவான் சூதன் மாதோ. (க)

மதிபொதி சடில மோலி வரதனல் விரத மீது
விதிமுறை வழுவா தன்பின் விருப்புட னியற்றி னோர்கண்
முதிர்தரு பவங்கள் வெய்யோன் முன்பனிப் போல நீங்கிச்
சதுமுகன் முகுந்தற் கெட்டா முத்தியைச் சார்வ ரன்றே. (உ)

மார்கழி தொட்டுக் கார்த்தி கைமட்டுங் கிட்டிண பக்கத்
தாருமட் டமிக டோறு மமர்ந்துப வாச மாற்றி
யோர்பெறப் புரிய வேண்டு மியற்றுவோ ரிரவி கீழ்பாற்
சாருமு னெழுந்து தத்தஞ் சரீரசுத் தியினைச் செய்தே. (ங)

நந்தலி லரசா லத்தி கல்லத்தி பலாசு நாவல்
வந்தமிம் மரத்தின் பன்ன மாதமோ ரிரண்டுக் கொன்றாய்த்
தந்தசுத் தியினைச் செய்து தாழ்நெடும் புனலின் மூழ்கி
நிந்தையில் விதிவ ழாம னித்திய கரும மாற்றி. (ச)

கோசல நெய்பா லென்னு கூர்யவை குசோத கங்கோ
மாசறு கோட்டு நன்னீர் வாகையி னிலையெ ருக்கோ
டாசறு வில்ல மாவி னனையரும் பஞ்ச கவ்வியம்
பேசிய திதிக்கொவ் வொன்றாப் பிராகனஞ் செய்து பின்னர். (ரு)

மனையினை மெழுக்கிக் கோலம் வரைந்துமேற் கட்டி கட்டிப்
புனையுறு தூக்க நாற்றிப் பொற்புற வலங்கரித்துக்
கனையிருட் பொழுதிற் காள கண்டனைப் பஞ்ச ரத்நத்
தினையுள்ளிட் டுறுநீர்க் கும்பத் திருத்தியா வாகித் தேத்தி. (சு)

ஏடவிழ் மலருஞ் சாந்து மிலங்குபொற் பணிகள் யாவு
மாடையுஞ் சாத்தி முந்நூ லழகுற வேய்ந்து மஞ்ச
ளோடுறக் கையா னன்னீ ருற்றபாத் தியமே யாதி
சோடச வுபசா ரத்தாற் றுலங்கவே பூசை யாற்றி. (எ)

சங்கர சம்பு சாற்று மகேசுர மகாதே வாமெய்ப்
பொங்கர வணியுந் தாணு சிவபசு பதிபொ ருக்கிற்
றங்கணீ சான சருவ வரதிரி யம்ப காவென்
றிங்குறு நாமம் பன்னி ரண்டிலர்ச் சனையே செய்க. (அ)

இம்முறை மந்தி ரத்தான் மறையவன் றனையு மோரார்
கொம்மைவெம் முலையாள் பாகக் குழகன்ற னுருவா யெண்ணிச்
செம்மைசேர் திதிக டோறுந் திருந்தவா வாக ஞதி
யும்முறை விதிவ ழாம லுறுதியி னுஞற்றி யன்பாய். (௯)

பூசனை யுபசா ரங்கள் புரிந்துகோப் பூமி சொன்னந்
தூசவை முதல வீக சொற்றதோர் வருடமாற்றி
யேசற முடிந்த பின்ன ரிவ்வலங் காரம் யாவு
மாசிலா மறைவல் லோர்க்கே மதியுடன் வழங்க வேண்டும். (௧0)

ததியுறு மன்னங் கண்டா மணியணித் தக்கா ராவோர்
புதியகா ரறுவை யைந்து பொலன்கொண்மா மணியி னோடுந்
நதியுறு புனல்சேர் கும்ப நால்வகைப் பணிக ளோ
விதிபொன்னு மற்று மிங்ஙன் வேண்டுவ கொடுக்கவேண்டும். (௧௧)

வறியனே யெனினு மோர்கோ வழங்குக செல்வ முள்ளோ
னறிவொடு முகவா ஞகி லளவிலா நிரயஞ் சேர்வ
னெறியொடிவ் விரதமாற்றி னேர்ந்திடுஞ் சிவலோ கத்தி
லுறுவனீ ராயி ரத்தோ டொருநூறு பிரம கற்பம். (௧௨)

அயிலிலைச் சூல பாணிக் கன்புறும் விரதம் யாரும்
பயில்வொடு மாற்ற வேண்டு மென்றுபா ருலகத் தாசைச்
செயிரறுத் துறுப வத்தின் செயலொழித் துயர்ந்த சூத
னயமிகு நைமி சத்து முனிவர்க்கு நவின்று னன்றே. (௧௩)

ஐம்பத்தேழாவது
கிருட்டிணாட்டமி விரத வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௧௬௪௩.

ஐம்பத்தேட்டாவது

உரோகணிசந்திரசயனவிரதவத்தியாயம்.

சேகறு முனிவரர் சிறப்பி னோங்கிய
ரோகணி சந்திர சயன நோன்பினை
வாகுற மொழிகென மகிழ்ந்து சூதனும்
பாகுறு மிரதமாப் பகர்வ தாயினன். (௧)

வெள்ளியங் கிரியுறை விமலற் போற்றிய
தெள்ளிய வாயுண்மெய் சிறந்த சற்குணங்
கொள்ளுமா ரோக்கியங் குலவி ருத்தியு
மெள்ளுறு தளிக்குநல் விரதம் யாதென. (௨)

நாரத முனிவனீ நவின்ற தீதறு
பாருறு விரதத்துட் பண்பின் மிக்கதாச்
சாருரோ கணிசந்திர சயன நோன்பெனும்
பேருறு விரதமொன் றுண்டு பேசுவாம். (௩)

இந்துவின் வாரம்பூ ரணையி வற்றென்று
வந்துறு முரோகணித் தினத்தில் வண்மையாற்
கந்தமோ டொளிரும்வெண் கடுகு கௌவிய
முந்தவே சென்னியிற் றேய்த்து மூழ்கியே. (௪)

நித்திய கருமங்க ணிரப்பி வேதத்தின்
முத்திசே ரிந்துவின் முறைசெய் மந்திரம்
பத்தியி னூற்றெட்டுச் செபத்தைப் பண்ணுக
வித்தக மூவர்க்கு மேய தாமிது. (௫)

சூத்திரர் சுருதிமந் திரத்தைச் சொல்லிடா
தேத்துநல் விரதத்தி னியன்ற பத்தியாற்
றீத்தொழிற் பாவத்தின் றிறத்தை நீக்கியே
காத்தரு ணேமியங் கடவுண் மந்திரம். (௬)

கற்பமார் நமோந்தமாக் சுருதி நூற்றெட்டுப்
பொற்பொடு செபிக்கநற் பொன்னி னொலொளிர்
சொற்பெற வருண்மது சூத னன்றனை
யற்புதப் பதுமையி லமையச் செய்துபின். (௭)

நலங்கொளா வாகன நண்ணு மர்க்கியந்
துலங்குற வியாதநற் சோம மந்திர
மிலங்குபா தாதியா வேத்து பூசனை
கலங்கிடா துளுற்றுதல் கருதிக் கூறுவாம். (௮)

தோற்றிய பாதத்துச் சோம ரூபியாச்
சாற்றிய சங்கத்திற் சார்ந்த ரூபியா
யேற்றுக போரொளி யிலங்கு சானுவி
லாற்றுக பூசனை யனந்த தாமராய். (௯)

ஊருவிற் சலோதர ரூபி யாகவும்
பேருறு ரகசிய தலத்திற் பெட்பொடுஞ்
சோர்வுறு வேள்பர சுரூபி யாகவு
மேருறு பூசனை யியற்ற வேண்டுமால். (௧0)

பிறங்களை வேள்சுகப் பிரத ரூபியா
யறந்தரு வயிற்றமிர் தோத ரந்திகழ்
நிறந்தரு ரூபியாய் நேரு நாபியை
யுறுங்கலைச் சார்ங்கத முருவ மாகவே. (௧௧)

பூசனை புரிந்துறு முகத்தைப் பொற்புறு
மாசறு சந்திர ரூப மாகநற்
காசறு மூரலைக் கருதி நான்மலைறத்
தேசிக ரதிபதி சிறந்த ரூபமாய். (கஉ)

வந்தனை செய்துறப் போற்றி வாயினைச்
சந்திர ரூபியா யதரந் தண்மலர்
நந்தலில் குமுதநற் பிரிய ரூபியாச்
சிந்தையி னுடியே பூசை செய்தபின். (கங)

நாசியைப் பயிர்க்கெலா நாம ரூபியாய்ப்
பேசிய புருவமா னந்த பீசத்தின்
காசறும் படிவமா யெண்ணிக் கண்களை
நேசமொ டருச்சித்து நினைந்து போற்றுக. (கச)

வருசெவி திகழ்சம தாது வந்தன
குருறுத லுத்திப்பி ரியவ ரூபமா
யரியதோர் கேசத்தச் சுசுமு ஞதிய
தெரிதரு ரூபியாய்த் தேர்ந்து போற்றுக. (கரு)

தகவுறு சென்னியிற் சார்ங்க ரூபியா
விகடமின் முடிவிசு வேச ரூபியாப்
புகரறப் பூசனை புரிந்து ரோகணி
பகருமிந் திரையெனப் பணிதல் வேண்டுமால். (கசு)

இவ்வகை பூசனை யியற்றி யன்றிருட்
டவ்வலில் பூமியிற் சயனித் தன்பினுற்
கவ்வையி லுதயத்திற் கரும மாற்றியே
திவ்விய வவிசொடு சொன்னந் தீதற. (கஎ)

உதககும் பத்தொடு மோது மாமறை
சிதைவிலா வந்தணர்க் களித்துச் சீரிதாய்த்
துதிகொடு மூனெடு முழுந்து தோரையும்
விதிபெற விலக்கியே புசித்தல் வேண்டுமால். (கஅ)

புசித்திடு ஞான்றுநற் புனித கோசலஞ்
சுசிக்குவிட் டடுமனத் தூநெய் பாலுடன்
வசிப்புறு கவளநா லேழும் வன்மையாய்
நசைப்புற வருந்துக யாம நான்கினிற். (ககூ)

சிறப்பொடா சமனமுஞ் செய்யு மூர்த்த மொன்
றறத்தொடு புராணமா தரித்துப் புண்ணிய
மறப்பிலா மனத்தொடு முளுற்றி வண்மைசே
ருறைப்பொடு மத்தின மிருக்க லுத்தமம். (உ௦)

கதம்பநீ லோற்பலங் கைதை பங்கயம்
விதந்தரு சிறியசண் பகம்வி ளாந்தறு
பதம்பயி னறுஞ்சத பத்தி ரங்கமழ்
பொதிந்தவா டாமலர் குச்சப் புட்பமும். (உக)

நொச்சிமல் லிகைவெள்ளை யலரி நுண்டுகள்
விச்சையார் சண்பகம் விளங்கு மாறிரண்
டிச்சைகூர் நறுமல ரிவற்றி லோரொன்றைத்
துச்சிலா வாவணி தொடங்கி யர்ச்சனை. (உஉ)

விண்டுவி னிடத்தினிற் செய்க வெண்ணிலாத்
தண்டலில் சந்திரன் றன்னை யெண்ணியே
மண்டல நான்மறை யோர்ம கிழ்ந்தது
கொண்டிட வளித்தொரு வருடங் கூர்ந்தபின். (உங)

போற்றிய விரதத்தை முடிக்கும் போதினி
லாற்றிய கட்டிலொன் றமைத்துப் பாற்குட
மேற்றிய குடத்தின்மே லிலங்கு மக்கதை
தோற்றிய வெண்கலத் துய்ய பாத்திரம். (உச)

வைத்தொளிர் தங்கத்தின் மதியு ரோகணி
யொத்தநற் பதுமையா ருேடு நான்கென
வத்தகு மங்குலத் திரண்ட மைத்துமேல்
வித்தகத் திருத்தியே விளங்கும் வெள்ளியால். (உரு)

கண்ணிரண் டமைத்தவற் றிருத்திக் கான்மலர்
வெண்ணிறக் கலைநிலா விளங்கு நித்திலத்
தெண்மணித் தாழ்வட மிலங்கச் சாத்தியே
பண்ணுகண் ணுடிமுன் பாய்ப்ப தித்துப்பின். (உசு)

இந்துரோ கணியுட னிருவர் தம்மையும்
வந்தனை புரிந்துமுன் வைக்க நற்கனி
நந்தலில் கழைநவ தானி யங்களுஞ்
சுந்தர வெண்பசுத் துலங்கும் வெள்ளியால். (உஎ)

குரத்தணி தங்கத்திற் கொம்பு கட்டொடு
நிரத்திய பட்டமு நிறைத்துத் தூசுமேற்
பரத்தியக் கன்றுடன் கஞ்ச பாத்திரம்
வரைப்பறு பொன்வெள்ளி வனைந்த சங்கொடும். (உஅ)

மறையவ னொருவனை வனிதை தன்னொடுங்
குறைவற வத்திர பூட ணங்கொடுத்
தறைதரு மிந்துவோ டறைந்த ரோகணி
நிறைதரும் வடிவென நியமத் தேத்தியே. (உகூ)

கட்டிலோ டிவையெலாங் கருத்தொ டூந்துதன்
னிட்டகா மியங்களு மீக விண்டுவே
வட்டமா மதியுரு வாகி ரோகணி
யிட்டமா யினிதுற சயனத் தெய்தியே. (௬0)

பிரிந்திடா துறைந்தருள் பெற்றி போன்மெனக்
கருந்தனம் பாக்கிய மகன்றி டாவகை
யிருந்திட வருள்புரிந் தியற்று மேற்பதம்
பரிந்தரு ளென்னவே பகர்தல் வேண்டுமால். (௬க)

வழங்குமிவ் விரதத்தைப் பூரு வாணத்தின்
முழங்குற முடித்திடிற் பத்தி முத்தியுந்
தழங்குறு செல்வமுந் தழைப்ப நல்கியே
பழங்கணும் பாதக மகற்றும் பண்பினால். (௬உ)

இந்தரோ கணிசந்திர சயன மென்றுரை
தந்திடு விரதமே தந்தை தாய்முதன்
முந்துறு பிதிர்கட்கு முக்தி நல்குமால்
விந்தைசே ருலகெலாம் புரப்பு மேன்மையால். (௬௩)

வேறு.

கூறிய பிரம கற்பங் குலவிரண் டாயி ரத்தி
னூறுசந் திரலோ கத்தி னிருந்துபி னுவலு முத்திப்
பேறடைந் திடுவர் பெண்டிர் செயிற்பிறப் பிறப்புந் தீர்ந்து
நாறுபூங் குழலு ரோணி நண்ணுநற் பதத்தில் வாழ்வர். (௬௪)

பத்தியின் விரதந் தன்னைப் படிப்பவர் கேட்போர் நன்ருய்ப்
புத்தகத் தெழுதி வைப்போர் போதனை புரிவோர் யாரும்
வித்தக விமல மான விண்டுவின் பதத்தைச் சேர்வ
ரித்திறந் திண்ண மென்றே யிருடிகட் கியம்புஞ் சூதன். (௬௫)

ஐம்பத்தேட்டாவது

உரோகணி சந்திரசயன விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், க௬௭அ.

கதம்பநீ லோற்பலங் கைதை பங்கயம்
விதந்தரு சிறியசண் பகம்வி ளாந்தறு
பதம்பயி னறுஞ்சத பத்தி ரங்கமழ்
பொதிந்தவர் டாமலர் குச்சப் புட்பமும். (உக)

நொச்சிமல் லிகைவெள்ளை யலரி நுண்டுகள்
விச்சையார் சண்பகம் விளங்கு மாறிரண்
டிச்சைகூர் நறுமல ரிவற்றி லோரொன்றைத்
துச்சிலா வாவணி தொடங்கி யர்ச்சனை. (உஉ)

விண்டுவி னிடத்தினிற் செய்க வெண்ணிலாத்
தண்டலில் சந்திரன் றன்னை யெண்ணியே
மண்டல நான்மறை யோர்ம கிழ்ந்தது
கொண்டிட வளித்தொரு வருடங் கூர்ந்தபின். (உங)

போற்றிய விரதத்தை முடிக்கும் போதினி
லாற்றிய கட்டிலொன் றமைத்துப் பாற்குட
மேற்றிய குடத்தின்மே லிலங்கு மக்கதை
தோற்றிய வெண்கலத் துய்ய பாத்திரம். (உச)

வைத்தொளிர் தங்கத்தின் மதியு ரோகணி
யொத்தநற் பதுமையா ரேடு நான்கென
வத்தகு மங்குலத் திரண்ட மைத்துமேல்
வித்தகத் திருத்தியே விளங்கும் வெள்ளியால். (உரு)

கண்ணிரண் டமைத்தவற் றிருத்திக் கான்மலர்
வெண்ணிறக் கலைநிலா விளங்கு நித்திலத்
தெண்மணித் தாழ்வட மிலங்கச் சாத்தியே
பண்ணுகண் ணுடிமுன் பாய்ப்ப தித்துப்பின். (உசு)

இந்துரோ கணியுட னிருவர் தம்மையும்
வந்தனை புரிந்துமுன் வைக்க நற்கனி
நந்தலில் கழைநவ தானி யங்களுஞ்
சுந்தர வெண்பசுத் துலங்கும் வெள்ளியால். (உஎ)

குரத்தணி தங்கத்திற் கொம்பு கட்டொடு
நிரத்திய பட்டமு நிறைத்துத் தூசுமேற்
பரத்தியக் கன்றுடன் கஞ்ச பாத்திரம்
வரைப்பறு பொன்வெள்ளி வனைந்த சங்கொடும். (உஅ)

மறையவ னொருவனை வனிதை தன்னொடுங்
குறைவற வத்திர பூட ணங்கொடுத்
தறைதரு மிந்துவோ டறைந்த ரோகணி
நிறைதரும் வடிவென நியமத் தேத்தியே. (உகூ)

கட்டிலோ டிவையெலாங் கருத்தொ டீந்துதன்
னிட்டகா மியங்களு மீக விண்டுவே
வட்டமா மதியுரு வாகி ரோகணி
யிட்டமா யினிதுறு சயனத் தெய்தியே. (௬0)

பிரிந்திடா துறைந்தருள் பெற்றி போன்மெனக்
கருந்தனம் பாக்கிய மகன்றி டாவகை
யிருந்திட வருள்புரிந் தியற்று மேற்பதம்
பரிந்தரு ளென்னவே பகர்தல் வேண்டுமால். (௬க)

வழங்குமிவ் விரதத்தைப் பூரு வாணத்தின்
முழங்குற முடித்திடிற் பத்தி முத்தியுந்
தழங்குறு செல்வமுந் தழைப்ப நல்கியே
பழங்கணும் பாதக மகற்றும் பண்பினுல். (௬உ)

இந்தரோ கணிசந்திர சயன மென்றுரை
தந்திடு விரதமே தந்தை தாய்முதன்
முந்துறு பிதிர்கட்கு முக்தி நல்குமால்
விந்தைசே ருலகெலாம் புரப்பு மேன்மையால். (௬௩)

வேறு.

கூறிய பிரம கற்பங் குலவிரண் டாயி ரத்தி
னூறுசந் திரலோ கத்தி னிருந்துபி னுவலு முத்திப்
பேறடைந் திடுவர் பெண்டிர் செயிற்பிறப் பிறப்புந் தீர்ந்து
நாறுபூங் குழலு ரோணி நண்ணுநற் பதத்தில் வாழ்வர். (௬௪)

பத்தியின் விரதந் தன்னைப் படிப்பவர் கேட்போர் நன்ருய்ப்
புத்தகத் தெழுதி வைப்போர் போதனை புரிவோர் யாரும்
வித்தக விமல மான விண்டுவின் பதத்தைச் சேர்வ
ரித்திறந் திண்ண மென்றே யிருடிகட் கியம்புஞ் சூதன். (௬௫)

ஐம்பத்தேட்டாவது

உரோகணி சந்திரசயன விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், கசுஎஅ.

ஐம்பத்தொன்பதாவது

தடாகவிதி யத்தியாயம்.

திரையெறியுங் கடனடுவின் மச்சவடி வெடுத்தருளுந் திருமா றன்னை
வரையெறியுந் திண்புயவை வச்சுதமா மனுவேந்தன் வணங்கி யேத்திக்
கரையெறியுங் குளங்கூவம் வாவிநறுங் கமலமலர் கமழு மோடை
விரையெறிபூங் கரத்தேவராலயமிங் கிவையியற்றி விதியி னோடும். (க)

அரியபிர திட்டைசெயும் வேதிகையி னளவையிருத் தளவை கால
முரியதொரு தெய்வமுதற் றக்கணைதே சிகனொடுப கரணம் யாவுந்
தெரியவுரைத் திடுதியெனச் செங்கணெடு மாலுரைத்த செய்தி தம்முள்
விரிவுறுத டாகவிதி முனிவருக்குச் சூதமுனி விளங்கச் சொல்வான். (உ)

தருமநெறி யறிந்துயர்த டாகத்தை விதித்ததனைத் தரணி மீதிற்
பெருமைபெறு பிரதிட்டை செயநினைவோர் மறையவரை வினவிப் பெட்பாய்த்
தெருமரறீர்த் தருளுமுத்த ராயணத்தின் பூருவபக் கத்தி னன்காய்
மருவுதடா கத்தருகின் வடகிழக்குந் தாழ்ந்தபுவி வரைப்பு நாடி. (ங)

நாற்றிசையெண் ணான்கடியாய் நான்முகத்தும் வாயினிறீஇ நவைதீர் வேள்வி
போற்றுபெருஞ் சாலையமைத் தாலரசோ டத்தியிச்சில் போழ்ந்த கொம்பாற்
றோற்றியநால் வாயிறொறுங் கதவுநிலை பொருந்திடவே துலங்கச் சேர்த்தி
யேற்றுநெடுஞ் சுவர்திருத்திச் சுதைபூசிச் சித்திரத்தை யெழுதி யப்பால். (ச)

துலங்கியமேற் கட்டிமுதல் விதானங்கண் ணாடிநறுஞ் சுகந்த மாலை
யலங்கவலங் கரித்துவளர் சாலைநடு நாலுமுழத் தளவ தாக
விலங்குவே திகைசதுர மாய்நான்கு முகமெய்த வியற்றிப் பாங்கர்
நிலந்திகழு மோமகுண்ட மொன்பதே ழைந்தெனினு நிலவ வீட்டி. (ரு)

பழுதறவே புறவகல மொருமுழமுள் ளளவவிரல் பதின்மூன் றாகும்
விழுமியபன் னிருவிரலா மேகலைமூன் றதனளவு விரலைந் தோடு
வழுவறுமூன் றிரண்டாகும் சணார்வன்னப் பொடியதனை வகுத்து நான்கு
தொழுதகைய வாயிலினெண் டுவாரபா லகர்வரித்துத் துலங்க வப்பால். (சு)

மந்திரவித் தனையவரை நான்மறைக்கும் வகைக்கிருவர் வரித்தே யெண்ம
ரந்தமிலோ தாக்களென வரித்துயர்நான் மறைவல்லோ னாசா னாகச்
செந்தழற்கண் வரித்துமணிக் கும்பமுத லுபகரணஞ் சிறக்க வீட்டி
முந்துருமான் மாயூப மெசெமான னளவேனு முழமூன் றேனும். (எ)

நற்பொருளை வேண்டினவ னோமகுண் டத்தருகு னறிநடுக வன்னம்
பொற்புறுதே சிகன்வருணப் பொடிகலந்து திசைகடொறும் பூமி மீது
மற்புதமந் திரங்கூறிப் பலியிடுக விருத்துக்க ளனைவோ ருக்கும்
பற்பலபூ டணம்புனைந்து சமமாகத் தக்கணையும் பரிவி னீக. (அ)

தேசிகனுக் கன்னவரி லிருமடங்கு திரவியஞ்சேர்ச் சையை யீந்து
மாசறுபொன் ஞமையொடு மகரமீன் வெள்ளிமச்சம் வரிநீர்ப் பாம்பு
காசறுதாம் பிரத்தவளை யலவனிரும் பாலிடங்கர் கருதிச் செய்க
பேசுநவ தானியமும் பெய்புனலி லெசமானன் பெருகு மன்பால். (கூ)

பாரியொடு புத்திரரும் பவுத்திரரு முடன்மூழ்கிப் பணிபட் டாடை
தாரிஞெடு சந்தணிந்து குடதிசைவா யிலின் வேள்விச் சாலை சார்க
சீரியவெண் பொடிகோலி மண்டிலத்தி ரெண்கருக்காய்த் திகிரி தீட்டி
வேரிநறுங் கமலமொன் றுள் வரைந்துசுற்றுஞ் சதுரமுற விரிவாய்த் தீட்டி. (க0)

வேறு.

அதனரு கினிலோர் மண்டில மாக வரத்தநுண் டுகளலங் கரித்துச்
சிதைவுறு துயர்வே திகையிலெண் டிசைக்குந் திசைபுரப் பவர்களைவரைந்திட்
டிதனடுக் கிரக மொன்பதுந் தீட்டி யிலங்கவா வாகனஞ் செய்து
விதிமுறை பூசை யியற்றிநீ டாமை முதலிய விளங்கநள் ளிருத்தி. (கக)

அரியய னமலன் விநாயகன் வாணி யம்பிகை கமலைபூ தங்க
டெரிவுற வரைந்து மந்திர விதியாற் சின்மலர் கொண்டருச் சித்துப்
பரிவொடு மாவா கனமுதற் பூசை பண்பொடு மாற்றியே கும்பம்
பிரிவுறு திழைநூல் சுற்றியே தூபப் பெரும்புகை யுள்ளுறப் பிடித்து. (கஉ)

நெல்லின்மே லரிசி யெள்ளிவை முறையாய் நிரப்பியே கமலமொன் றெழுதி
யல்கலில் கும்ப மிருத்திநீர் நிறைத்து மாந்தழை தெங்கின்கா யமைத்து
மல்கிய கும்பத் திரதன மமைத்து மருவுறு பஞ்சயா துவக்கும்
பல்லவ மைந்துங் கரிபரி யிரதப் பாதமண் பசுநிரைத் தொழுமண். (கங)

புற்றுறு மண்ஞெ டைந்துநாற் சந்தி பொருந்திய தலத்துறு மண்ணுங்
குற்றமில் கோரோ சனையொடுகோரங் குக்குலு யவையிவை யணைத்து
நற்றசும் பதனி லமைத்துமேற் கூர்ச்ச நன்கொடு நிறுவிவெண் கலைபோர்த்
துற்றசந் தனத்தோ டக்கதை மாலை யுவகையி னலங்கரித் தப்பால். (கச)

வருணமந் திரத்தால் வருணனைக் குடத்தா வாகன விதியினல் விதித்துக்
கருணைகூர் துவார பாலரை நோக்கிக் கருதருஞ் செபம்புரி கென்னத்
தருணபூ சனைசெய் திருக்கெசுர் வேதஞ் சாமமோ டதர்வணத் தவரை
யருணிறை குணக்குத் தெற்கொடு மேற்குத் தரதிசை நான்கினு மமைத்து. (கரு)

வருமெச மானன் வடதிசை முகமாய்த் தென்றிசை மருங்கினில் வதிந்து
பொருவிலுத் தமமா மந்திர செபங்கள் புரிதிரென் றிதமொழி புகல
வொருமைசே ரோமக் குழிதொறுஞ் செந்தீ யுள்ளுற வமைத்துமென் சமிதை
பெருகவி சாவி னெய்யிவை யதனுற் பெரும்புனற் கிறைநவக் கிரகம். (கசு)

இந்திரன் முதலெண் டிசையினர் தோட்டா மருத்துவ ரெனுமிவர்க் கோம
வந்தனை புரிந்து கங்குலின் கடவு ளுருத்திர னொடுபவ மான
னந்தணி முகுந்த னுமமந் திரத்தைக் குணக்கினி லிருக்குநன் மறையோர்
முந்திய செபங்கள் புரிவதென் றிசையின் முக்கணன் வெள்ளிமுச் சுடர்கள்.(கஎ)

உருவின்மந் திரத்தை யெசுருவே தியர்க ளுருப்பெறச் செபித்திட வேண்டும்
பொருவருங் குடபா லரன்விராட் புருடன் புயல்பொரு மேனியன் முதலோ
ரருள்பெரு சாம கானநன் மறையோ ரறைந்திட வேண்டுமுத் தரபான்
மருவுறு சாந்தி மந்திரம் புட்டி மந்திரம் வருணமந் திரத்தால். (கஅ)

அதர்வண மறையோர் செபித்திட வேண்டு மவ்வவ ரிம்முறை நெருநற்
புதியபொற் கும்பந் தொறும்பரி சித்துப் பொங்கன லோமமும் புரிக
வுதயகா லத்தி னித்திய கரும முஞற்றிநூற் றறுபத்தெட் டைம்பா
னிதமொடா முறை யைந்துநோ வெனினு மியன்றவை துகிலொடு மீந்தே. (ககூ)

நல்லலக் கினத்திற் பல்லியந் துவைப்ப நாகிளங் கோவைமுன் னடத்திச்
சொல்லருங் கும்ப நறும்புன லோடுஞ் சுரநதி முதலிய தீர்த்த
மெல்லொளி தருமைந் தினமணி தங்கத் திழைத்திடு பாத்திர முன்னர்
வல்லையிற் பூசை யியற்றுமம் மகர மச்சமே முதலிய வெடுத்து. (உ0)

சுருதிகண் முழங்க வந்தநான் மறையோர் சூழ்வர வாழ்புனற் றத்திற்
றருபுன லிறங்கி முன்செலுங் கபிலை சாமவே தியன்றனக் கீந்து
மருவுமப் பொற்பாத் திரத்தைந்து மணிமீன் மகரமச் சங்குளி ராமை
பொருவுநீர்ப் பாம்பு முதலைமண் டூகம் பொருத்திநாற் றிசைபுகப்பெய்து. (உக)

உத்தர முகமாய்க் கும்பநீர் முதலா யுயர்புன னதிப்புன லாட்டிப்
பத்திசெய் மறையோர் வேதமந் திரத்தாற் படிதடம் புனற்புரோக் கிக்கச்
சுத்தநன் னீரிற் படிந்தினி தெழுந்து துகிலொடு நீறுசந் தணிந்து
வித்தக வேள்விச்சாலையின் மேவி வேதியர் சபைபணிந் திடுக. (உஉ)

நாற்றிசைப் பரப்பும் பலிமுறை யளித்து நாளொரு நான்குமிம் முறையாற்
போற்றுமவ் வோம சாலையி லோமம் புரிகவின் பூசுரர்க் கெல்லா
மேற்றதக் கணையீந் துபகர ணங்க ளிரணிய பாத்திர மெணைத்துஞ்
சாற்றரு மிருத்துச் சகலரு முவப்பச் சமம்பெறப் பகுத்தினி தளித்தே. (உரு)

மேதகுங் குரவர்க் கோமபாத் திரமும் விருப்புறு சையையு மளித்துத்
தீதிலா யிரநூ றவிட்டல தைம்பான் சிறக்குமை யைந்துபேர்க் கெனினு
மாதரம் பெருக மறைவலோர்க் கன்ன மறுசுவை யுடனளித் திடுக
வேதமில் கூவம் வாவிநீ ரோடை யிவைக்குமிம் முறைசெய லியல்பே. (உச)

உரைபிரா சாத முத்தியா னங்க ளோங்கிய பிரதிட்டை செய்யும்
வரைவின்மந் திரம்வெவ் வேறுள வாகும் வழங்குறப் பொருளில னென்னி
னிரைகொளவ் விதியிற் பாதியே யெனினு நிகரனற் குண்டமொன் றெனினு
மருளுடன் புரிக பொருளுளகானுலோப மாகியே யியற்றிட லாகா. (உரு)

இவ்விதி முறையா னியற்றிய தடாகத் தெழிலிவான் மழைசொரி காலத்
தவ்வணீர் நின்று லக்கினிட் டோம மாற்றிய பயன்களை யடைவர்
தவ்வலில் சரற்கா லத்தினீர் நிற்கிற் சாற்றரு முத்தியே யாகிச்
செவ்விய பலத்தைச் சேர்வரே மந்த காலநீர் செறிந்திட நின்றால். (உகூ)

வாசபே யத்தின் மகப்பலன் பெறுவர் வழங்கிய பின்பனிக் காலந்
தூசிநீர் நிற்கிற் சொல்லதி ராத்திரந் துலங்கிய மகப்பல னடைவர்
காசறு வசந்த காலநீர் நின்றாற் கருதரும் பரிமகம் பெறுவ
ரேசறு வேனிற் காலநீர் நிற்கி னிராசசூ யப்பலன் பெறுவர். (உஎ)

இம்முறை யதிக தருமமே செய்தோ ரிருதய பரிசுத்த மாகிச்
செம்மைகொள் சிவஞா னப்பல னடைந்து சிவபதத் தாயிரங் கற்ப
மம்மர்தீர்ந் திருந்து தவத்தினர் வேண்டும் வரம்பில்பல் போகமும் புசித்து
வெம்மைதீர்ந் துயரும் விண்டுவின் பதத்தின் மேவுவ ரென்றனன் சூதன். (உஅ)

ஐம்பத்தோன்பதாவது

தடாகவிதி யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கஎ0கூ.

அறுபதாவது

விருக்கவுச்சவ வத்தியாயம்.

அருந்தவர் சூதர் முகத்தினை நோக்கி யமைதருப் பிரதிட்டை விதியும்
பொருந்திடு முத்தியா னத்தின் விதியும் புகழ்பெற வாற்றுவோர் பலனுந்
தெரிந்திட வுரைத்தி யெனவுரைத் திடுவான் றருப்பிர திட்டையைச் செய்வோர்
பரந்திடு தடாகத் தின்பிர திட்டை பகர்ந்தவா றியற்றுதல் விதியே. (க)

சாலையை விதியா யமைத்தலங் கரித்துத் தக்கவா சாரியர் தம்மாற்
சீலமா மிக்க விருத்துக்க ளோடு திகழுப கரணங்க ளமைத்து
வாலிதா மிருத்துக் களையலங் கரித்து வரன்முறை யருச்சனை புரிந்து
மேலுயர் மரத்தின் மூலவே திகையின் விளங்கமாக் கோலங்க ளமைத்து. (உ)

சகலவோ டதிகள் கூட்டுமஞ் சனத்தாற் றருக்களை விருப்புட னாட்டி
வகைமலர் மாலை யாடையா பரணம் வனப்புற வணிந்துசாந் தணிந்து
துகளறு பசும்பொ னூசியாற் காது துலங்கவே குத்தியப் பாலுந்
திகழ்தரச் செம்பொற் சலாகையாற் கண்ணுந் திறந்ததி லஞ்சனந் தீட்டி. (ங)

வெள்ளியாற் பொன்னாற் பழங்களே ழெட்டு வியப்புற வமைத்தவை மரத்தி
லொள்ளிய மூலந் தொறுமினி திருத்தி யொளிர்தரு தாம்பிரத் தகட்டிற்
றெள்ளிய நவதா னியங்களைப் பரப்பித் தெளிந்தநீர்க் கும்பமே லிருத்தித்
தள்ளரும் பொன்னுள் ளிட்டலங் கரித்துத் தருத்தொறு மூலத்தி னமைத்து. ()

இந்திரன் முதலா முலோகபா லரைநன் கேத்தியா வாகனஞ் செய்து
மந்திரத் தோடும் பூசனை புரிந்து வாழுமோர் நெடுமர முகட்டிற்
றந்திரத் துடனே வேதிகை யமைத்துத் தருவையும் பிரதிட்டை செய்து
நந்தலில் பசுவொன் றலங்கரித் ததனை நயப்புற வுத்தர முகமாய். (ரு)

கன்றொடு நிறுவிப் பால்கறந் திடவே கஞ்சபாத் திரமுமொன் றமைத்துத்
துன்றுநால் வேதம் வல்லதொன் மறையோன் றன்கையிற் றுகளற வீந்து
நன்றிகூர் சாலை தனின்மறை நான்கி னயப்புற வருணமந் திரத்தா
லொன்றவா வாகித் திருந்தகும் பத்தை யுயர்தரு மிருத்துக்கள் கொணர்ந்தே. ()

பல்லியந் துவைப்பத் தருவினன் னடுவிற் பகர்தரு வேதகோட்டங்கள்
சொல்லிய மறையோ ராட்டிட வெசமா ஞடியே துகிலும்வே றுடுத்து
வல்லரித் துக்க ளாகிய மறையோர்க் கியன்றவா தக்கணை வழங்கி
நல்லபொற் பணிகள் சையைபா துகைக ணலம்பெறப் பசுக்களு மளித்தே. (எ)

அந்தநாண் முதலா நான்குநாள் காறுந் தருவையான் பாலினு லாட்டி
முந்திய கடுகு யவையுடன் காரெண் முறைபெரும் பலாசுநற் சமித்தாற்
செந்தழற் கரும மாற்றிவே தியர்க்குத் திகழ்தரு தக்கணை யீந்து
நந்தலில் குரவர்க் குளமகிழ் வெய்த நயப்புட னிரட்டியாய் நல்கி. (அ)

இன்சொலின் வணங்கி யனுப்புக முறையே யியற்றுவோ ரியற்றுவித் திடுவோர்
துன்புறு பவங்க ளனைத்தையு நீக்கித் துகளறு காமிய மடைவர்
பின்சுரர் வருக்கத் தெய்தியிந் திரன்றன் பேரர சுரியபட் டத்தி
னன்புறு முப்பத் தாயிரம் பட்டத் தளவரம் பையர்நல நுகர்வார்.

ஈதலா லுடலிலு ரோமமெத் தனையோ வத்தனை யினியதம் பிதிர்க்க
ளோதிய சுவர்க்கத் தினிதுவீற் றிருப்ப ரொருமரம் வைத்துளோர்க் கிதுவே
மேதகு பலனு மெனினுத்தி யானம் விரிதரு வழிநடைச் சாலை
யாதியா மரங்கள் வைத்துளோர் பெறும்பே றறைவதற் கெம்மனோர்க் கரிதே. ( )

இவ்வகை யுரைத்த மரப்பிர திட்டை யியல்பொடு படிப்பவர் கேட்போர்
செவ்விதி னுரைப்போ ரெழுதுவோர் கேட்கச் செய்குவோ ரிவர்களுஞ் சிறப்பாய்க்
கவ்வைதீர் பிரம லோகத்தின் மன்னிக் காதல்கூ ரமரர்கள் போற்றத்
தவ்வலில் கதிவீ டடைகுவ ரென்னச் சாற்றினன் றவப்பெருஞ் சூதன். (கக)

அறுபதாவது
விருச்சகவுச்சவ வத்தியாயம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். களகள.

அறுபத்தோன்றுவது

சவுபாக்கிய சயனவிரத வத்தியாயம்.

மாலெழின் மனுவுக் குயர்சவு பாக்கிய சயனத்தை வகுத்தவா றெமக்குச்
சால்புற வுரைத்தி டெனமக மியற்றுந் தவப்பெரு முனிவரர் கேட்ப
நூலறி சூத முனிவர னுவல்வா னுன்மைசால் பூதல முதலா
மேலுலக னைத்துங் கடைக்கன றகிக்க வெந்தபின் பூதங்க ளிடத்தில். (க)

அடங்கிய சௌபாக் கியங்களு மொன்று யரிதிரு மார்பில்வை கியபின்
றடங்கெழு முலக மறுசிருட் டியதாய்த் தரும்பிர கிருதிமான் றனைச்சேர்ந்
திடங்கொளாங் கார மீக்கொளும் போதி விகல்புரிக் தயனொடு மாலுந்
தொடங்கிய ஞான்று நாப்பணே ரிலிங்கஞ் சொரிதழற் பிழம்பெனத் தோன்ற.(உ)

கான்றிடும் வெம்மை தாங்குதற் கரிய கரியமான் மார்பிடத் தமர்ந்து
தோன்றிய சௌபாக் கியங்களும் புனலாய்த் தொல்புவி வீழ்முனந் தக்க
னொன்றுறு பானஞ் செய்ததி பலனு மழகொடு காந்தியும் பெற்று
னேன்றிடு மிச்சில் புவியினில் விழுந்தே யெண்வகை விகற்பமா யினவால். (௩)

உப்பொடு நெய்பால் சீரக மவரை யுரைத்தசெந் திருக்குப்பை கரும்பு
செப்பிய பெரும்பய றுடனிவை யெட்டுந் திகழுஞ்சௌ பாக்கிய மென்பார்
துப்புறு தக்க னயின்றவை ததியாய்த் தோற்றியே துலங்குரு வனப்பான்
மெய்ப்புறு மிலளிதை காளியாம் பெயரின் மேவினள் பரம்பொருள் பாகம். (௪)

அப்பரம் பொருளோ டுற்றிடுமி லளிதை யடிமலர் போற்றியர்ச் சித்தா
லொப்பிலா வரங்க ளருள்வளசித் திரையி லுயர்ந்தசுக் கிலபக்க மதனிற்
செப்பிய திருதி கைத்தின மனையா டிருக்கலி யாணமத் தினத்தின்
மெய்ப்புறு ஞான்று தன்னிலெட் டுவையல் விருப்பொடு பூசிநீ ராடி. (௫)

பொற்புறுமி லளிதை தன்னொடு மரனைப் பொற்றக டொன்றினி லமைத்திட்
டற்புத மான பஞ்சகவ் வியத்தோ டணிசந்த நறும்புன லாட்டிக்
கற்பகல் விதியாற் கருதுபா தாதி கவின்பெறு முடியந்த மாகத்
தற்பரை யானை யருச்சனை புரியத் தரும்வகை தவறிலா துரைப்பாம். (௬)

வேறு.

நாடுபரை பொற்பாதந் தனிற்பாட லாயை நம வென்றுஞ் சிவன்பதத்திற் சிவாயநம வென்றுந், தேடுமுமை கரண்டைக்கால் செயாயைநம வென்றுஞ் சிவன் கரண்டைக் கால்திரிகு ணயநம வென்றும், பாடலைதன் கணைக்காலிற் பவனியை நம வென்றும் பரன்கணைக்கால் பத்திரேசுராய நமவென்று, நீடுபரை சானு விசை யாயைநம வென்று நிமலர்முழந் தாளரிகே சாயநம வென்றும். (எ)

நாரிதன தூருவா தாயைநம வென்று நம்பனு ரூருவா தாயநம வென்று, மே
கொளுமை மருங்கிலீ சன்னியைநம வென்று மீசர்மருங் கினிற்சங்க ராயநம வெ
ன்றுஞ், சார்மழலை வயிறுகொள டில்லியை நம வென்றுந் தெசன்வயிற்றிற் சூல
பாணியே யென்றுந்தாய், மார்பிடத்தின் மங்களாயை நம வென்றுங் கூர் மழுவ
லான் மார்பின்மங்க ளாயநம வென்றும். (அ)

இறைவிதனத் தினிலீசா னியைநமவென் றுஞ்சே ரிறைதனதிற் சர்வான்ம
னேநமவென்றுந்தாய், மறுவில்கள் முருத்திராணி யைநமவென் றுந்தே வன்கள
த்தில் வேதான வனேநமவென் றுந்தாய், நிறைகரத்தி லனந்தா யைநமவென்
றுமான்கை நேர்திரிபு ரக்கினைய நமவென்று மெய்த்தாய், மறைதோள்கா லானர்
லப்பிரி யாயநம வென்று மான்புயத்திற் றிரிலோச னுபநம வென்றும். (கூ)

அணைபணியிற் சுவாலாயை நமவென்று மரனு ரணிசௌபாக் கியவர்ணியை
நமவென் றுஞ்சீ, ரனைமுகத்திற் சுவாகாசு தாயைநம் வென்று மரன்முகத்திலே
யீசு ராயநம வென்று, மனையதரந் தனின்மதுவா சினியைநம வென்று மரன்வத
னந் தனின்மதுவா சனுயநம வென்று, மனைவாயிற் சந்திரமுக கிரியைநம வென்று
மனகன்வாய் தாணுவே நமவென்று முறையால். (க0)

பணைநாசி மனிபங் காங்கியைநம வென்றும் வெற் பனுசியத்த நாரீசா யநம
வென்று மேலாம், பணைபுருவமி லளிதாய நமவென்று முக்கட் பரன்புருவங்
களிலுக்கி ராயநம வென்றும், பணை நுதலில் வாசவியை நமவென்று மாதி பரனுத
லின் மீதுசரு வாயநம வென்றும், பணைகுழல்சீ கண்டநா தாயநம வென்றும்பரன்
முடிசீ கண்டநா தாயநம வென்றும். (கக)

உமைசிரத்திற் சருவரு பிண்ணியைநம வென்று முருத்திரன் சென்னியிற் சரு
வான் மனேநமவென் றுந்தா, னமைவுறப்பூ சையாற்றி முன்னமுரைத் திட்ட
வட்டசௌபாக் கியங்களான மொச்சை நெய்பால், கமழ்குசும்பை தவராசஞ் சீர
கத்தோ டுப்புக் கரும்பிவைமுன் வைத்துறுசோடசவுபசா ரங்கள், விமலமுறப்
புரிந்தாவின் கொம்புதக மருந்தி மேதினியின் மிசைத்துயின்று விடிவதன்முன்
னெழுந்து. (கஉ)

துணைவினின்வெண் ணீறணிந்து சிவரூப நினைந்து தோத்திரங்கள் பலசெ
ய்து சொற்றவிதிப் படியே, புனல்படிந்து செய்கருமம் புரிந்துசுத்த னுகிப் பூசு
ரனை மனைவியொடு பூசித்தவ் வெட்டுங், கனசமுட னிலளிதைக்குப் பிரீதியெனக்
கொடுத்துக் கலங்காம லொருவருடங் கருதுதிரி திகையின், மனம தொருப் படுத்
திவிதி தவறும ஞேற்க வரன்முறைய்யே திங்கடொறும் விசேடவிதி வகுப்பாம். ()

சித்திரைக்குக் கோசிருங்கோ தகம்வைகா சிக்குச் சிறந்தகோ மயமானி தனி
ன்மந்தா ரைப்பூப், பத்திதரும் வில்வதள மாடிக்கா வணிக்குப் பகர்ந்தததி புரட்
டாசி தளிற்குசோ தகமாம், வித்தகவைப் பசிக்குநறும் பால்கார்த்தி கைக்கு விள
ங்குதயிர் நெய்கலந்த தாகுமார் கழிக்குச், சுத்தமுறு கோசலமாந் தைக்காவி
னெய்யாஞ் சொலுமாசி காரெட்பங் குனிக்குக்கவ் வியமே. (கச)

இவையடைவிற் புசித்திருந்து தவறும லியற்றியிளிதை யுடன்விசையைபத் திரை யெழிற்ப வாணி, புவனிதொழு குமுதைசிலை பகர்வாசுதேவி புகல்கௌரி மங்கலைபொற் கமலை சுதி யென்னுந், தவமுறுநா மங்கள்புகன் றருச்சித்துச் சீர்மந் தாரைகர வீரமலர் கோங்குடனே ரோங்கு, நவமறுவா டாமலர்க மலநொச்சி யீருய் நாட்டியவிவ் வாறுமுய ராறிருதுக் களிலே. (கரு)

வரன்முறையிற் சாத்துகசெவ் வரத்தைசெந் திருக்கமல்லிகைவெண் டாமரை யிம் மலர்மிகவுத் தமமாங், கரவீர மெப்பொழுது முத்தமமிப் படியே கருதியொரு வருடவரை யுபவாச மாற்றிப், புருடர்தெரி வையரொடு கன்னியர்யா ரேனும் போற்றியுமை பூசைதனைப் புரிந்துமுடி வதனி, லருநிதிய முபகரணஞ் சையையு டன் பதுமை யானிடப மந்தணருக் கன்பினுட னளித்தே. (கசு)

பின்னருந்தம் பதிபூசை யாற்றியா பரணம் பெருகுபல தானியங்கள் பசுக்க ளிவை பெட்போ, டுன்னரிய மந்திரத்தொ டந்தணருக் குதவி யுளத்திலுறு மாங் கார மொழித்த னுட்டித் தவர்க, ளின்மதுரக் கனிவிலக்க விலருலகுக் கரசா யெ ழில்சீர்த்தி விஞ்சைமதி பெறுமாயு ளெய்தி, மன்னியசீர்ச் சகலபாக் கியங்களையு மடைந்து மறுத்தயுத கற்பமரன் வாழுலகி லிருப்பார். (கள)

வீறுபுகழ் பெற்றசவு பாக்கியசய னம்மாம் விரதத்தைக் கார்த்தவீ ரியன்வ ருணன் வில்வேள், கூறுதவ நந்தியிவர் முதலானோர் புரிந்து குலவுபதமடைந்தன ரிச்சரிதையாச் சரியந், தேறுமிவை படித்தவர்கள் கேட்டவர்க ளோட்டிற் றீட்டு மவர் செய்வித்தோர் செயச்சொல்வோ ரியாரு, மாறில்வித்தி யாதரரே யாவ ரென மச்ச மான்மனுவுக் குரைத்ததுமா தவர்க்குரைத்தான் சூதன். (கஅ)

அறுபத்தோன்றவது

சவுபாக்கிய சயனவிரதவத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். களகூ.

அறுபத்திரண்டாவது

அகத்தியர் பூசை யத்தியாயம்.

மறுவறு தவத்தினால் வண்மை பெற்றுள
குறுமுனி தோற்றமுங் கோதில் பூசையு
முறுதியின் மகம்புரி முனிவ ரோதென
விறுதியில் சூதனு மியம்பு வானரோ. (க)

மின்னவிர் சடைமுடி விமலற் போற்றியே
யுன்னுபூ வுலகொடு முயர்புவ லோகமே
மன்னியே வாழ்சுவ லோகமா லோக
மன்னதன் மேற்சன லோக மன்றியும், (உ)

சார்தவ லோகங்கூர் சத்திய லோகமென்
றேர்பெறு மிந்தவே ழுலகின் மானிடர்
கூர்தர வடைவதெத் தவங்கொல் பூமியிற்
சேர்சுப நன்மையோ ராயுள் செல்வமும். (ங)

எவ்வணம் பெறுவதென் றியம்பு மாதவத்
தவ்வலி ஞரதன் றன்னை நோக்கியே
நவ்வியங் கண்ணினை நாடிக் காதடர்
கொவ்வைவா யுமையுறு குழகன் கூறுமால். (ச)

முன்னழல் வாயுவை மொழிந்த பூமியு
டன்னில தவறிய தான வேசரைக்
கொன்மினென் றிந்திரன் கூறிவிட் டிட
வந்நிலை யவித்திட வசுரர் மாண்டனர். (ரு)

அவர்களி லோர்கம லாக்கன் றாரகன்
றவமுப காலதங் கிட்டி ரன்றகும்
பவமுறு விரோசனன் பார்வ சுப்பக
ருவர்விரி கடனடு வோடி யுற்றனர். (சு)

தானவர் வசத்தராய்ச் சார்ந்த வாறுகண்
ணேமின் மருத்தழ லோங்கும் வானகத்
தானபின் றுவறு யுகங்க ளாயிர
நானிலத் துயிரெலா நலிவு செய்தனர். (எ)

கடலிடை யொளித்தலுங் கனன்று வச்சிரப்
படையுட னவனழன் மருத்தைப் பார்த்துநீ
ரடவியுட் கடலினீர்ப் பொலிவு வற்றிட
வடல்புரி வீரென வழன்ம ருத்துவும். (அ)

வாரியுட் பல்லுயிர் வரம்பி லாவகை
சேரலால் வாரியைத் தெறுத றீயவாங்
கூர்பவங் கைக்கொளே மென்று கூறலு
மார்தரு மிந்திர னழன்று நோக்கியே. (கூ)

விண்ணவர் தமக்குண்மா மேன்மை யீருமை
நண்ணிடாப் பவமென்சொ னயந்தி டாமையான்
மண்ணக முனிவர ருருவ மன்னியே
யுண்ணுதிர் கடலென வுறச்ச பித்தனன் (க0)

சாற்றுசா பத்தினாற் றரையில் வீழ்ந்துளார்
மாற்றரு மித்திரா வருணன் வீரியத்
தோற்றுமோர் குடத்தினிற் றோன்று மாதவத்
தேற்றிய வசிட்டருக் கிளவ லாகியே. (கக)

அகத்தியன் சனித்தன னென்னு மண்ணறன்
முகத்தினை நோக்கியே முனிவ னெம்முனோன்
சகத்துறு வசிட்டன்பின் சனித்த மாக்கதை
மகத்துவங் கூறென வழுத்து வான்பரன். (கஉ)

மாலயன் றருமத்தின் மைந்த னாகியே
சால்புறு கந்தமா தனத்தின் மாதவ
மேல்விளைந் திடவிதற் கஞ்சு மிந்திரன்
சீலமா தவத்தினைச் சிதைக்க வெண்ணியே. (கங)

அனங்கனை வசந்தனை யரம்பை மாரொடுஞ்
சினந்தவிர் தவங்கெடச் செய்கு வீரென
வனந்தரு துள்வமான் மயக்க மெய்துற
நினைந்தவர் செய்திற னிகழ்த்து வாமரோ. (கச)

கழைகுழைத் தைந்துபூங் கணைகள் வேனில்வேண்
மழையெனச் சொரிதர வசந்தன் மீறியே
விழைவுறத் தென்றலங் கன்று வீசவிட்
டிழையுறக் கருங்குயிற் சின்ன மூதலும். (கரு)

அப்பொழு தரியுளத் தறிந்து வாசவன்
றுப்பிதென் றத்தவந் தொலைச்சி டாவகை
மெய்ப்பட வியற்றியவ் விண்ணு ளோர்கட
மொப்பழிந் திடவுளத் தெண்ணி யூருவின். (கசு)

வேறு.

உருவசி யென்னும் பேரா ளொப்பிலா வழகு வாய்ந்த
திருநிகர் மங்கை தன்னைச் சிறப்பொடு சிருட்டி செய்தான்
வருமவண் மூன்று லோகம் வருந்திட மயக்கிப் பின்ன
ரரியமித் திரன்வ ரிக்க நன்றென வறைந்து போனாள். (கஎ)

வருணனம் மயிலைப் போதும் வழியினிற் கண்டே யின்று
திருவனாய் வரித்தே னென்னத் திகழுமித் திரன்முன் வாசப்
பொருமலர்க் கொங்கை சேர வரித்தனன் பொருந்தி னேனின்
றொருபகற் போது நாளை யுதவுவ லென்று போனாள். (கஅ)

உரைப்பவ டன்னை யென்மீ துன்மன மிருத்திப் போவென்
றிரப்பதன் றென்று போக வியம்பு மித்திரன்பின் றேர்ந்து
நிரப்பிய வேசை யாதல் காட்டினை நீபோய்ப் பாரின்
வரைப்புறு புரூர வாவை மருவெனச் சபித்தா னன்றே. (கக)

மித்திரா வருண னென்பேர் விரும்பிமெய் கலின மாக
வொத்தபோ தொருகு டத்தி னுய்க்கவவ் வீரி யத்திற்
புத்திசேர் வசிட்டன் முன்னர்ப் பிறந்தனன் புனித மாய
கத்தியன் பிறந்தான் சொற்ற வசிட்டன்றன் கதையைச் சொல்வாம். (உ0)

பாருல களிக்குங் கீர்த்தி நிமியெனும் பண்பின் வேந்த
னீருறு மடந்தை மாரோ டினியபோ கங்க டுய்த்துக்
கூர்கவ ருடும் போது வசிட்டனங் குறலு மன்னான்
றேர்வுறு பூசை செய்யா திருத்தலும் வசிட்டன் சீறி. (௨௧)

நிமியெனு மேந்த லாவி நீளுடல் விடுக வென்ன
கமையிலா துரைப்ப வன்னான் வசிட்டனைக் கனன்று தானு
மமைவிலா யுன்றன் மெய்யி லாவிவிட் டகல வென்றா
னிமையவர் வழுத்தும் வேந்த னவைதனி லிருவ ராவி. (௨௨)

சென்றுமுன் னிற்க வுங்கள் சீற்றத்தா லுற்ற தீதோ
வென்றுறு நிமியை மாந்த ரிருகணி லுறைதி யென்றே
யன்றுறு புதல்வ னான வசிட்டனை யமரு மித்திர
னொன்றிய வருண னுய்த்த வீரிய முறுகு டத்தில். (௨௩)

முன்னர்நீ சனித்த பின்னர் மொழிந்தகற் பகநன் னீழல்
பொன்னகர்க் கிறைவ னான புரந்தரன் புகல்சா பத்தாற்
பின்னரே தவத்தின் மிக்க வகத்தியன் பிறப்பா னென்றே
சொன்னசொன் மறாதே யந்த முறையினிற் றோன்றி னாரால். (௨௪)

அன்னவ ரிருவர் தம்மு ளகத்தியன் சுவேத மேனி
மன்னிய கரங்க ணான்கு கமண்டல மக்க மாலை
மின்னவிர் சடையி னோடு முதித்துமெய்த் தவங்க ளாற்றித்
தென்மலை வைகு ஞான்று திரைகட லொளித்து முன்னாள். (௨௫)

உற்றிடு மசுர ரெல்லா முனைத்தபூ வுலக மாதி
சொற்றிடு முலகுக் கெல்லாந் துயர்நனி விளைத்த தல்லா
னற்றவர் தவங்கள் வேள்வி நன்குறு தூறு செய்தார்
மற்றவர் செய்கை நோக்கி வருகுறு முனிவன் சீறி. (௨௬)

தடந்திரை பொருது விம்முந் தாழ்கட னீரெ லாமோர்
குடங்கையி லடக்கி யுண்டான் குழகனே முதலாந் தேவ
ரடங்கலு மவண்வந் தெய்தி யகத்தியன் றன்னை நோக்கிக்
கடம்பெறு முனிவ நன்றாங் கருதிய வரங்கே ளென்றார். (௨௭)

என்றலு மிருபத் தையா யிரங்கோடி பிரம பட்டந்
துன்றிய வாயு ளோருஞ் சுடர்மணி விமான மீதிற்
றென்றிசைப் பொதியத் துச்சிச் சிகரத்தி லிருக்க வேண்டு
மொன்றிய வென்னைப் பூசை யுஞற்றிற்பே றருள வேண்டும். (௨௮)

எனவரங் கொடுத்துத் தேவர்யாரு மேகினாரென்
றனையொரு பாகன் சொல்ல வருந்தவ முனிவன் பூசை
தனைவிரித் துணர்த்தி யென்னக் குறுமுனி யுதையந் தன்னிற்
றனையிருள் விடிய வெள்ளெள் கருதிய துவைய லாலே. (௨௯)

மெய்திமிர்ந் துதக மூழ்கி வெண்கலை வெள்ளை மாலி
கைபுனைந் தணிசேர் கும்பங் கவின்பெற வலங்க ரித்துத்
துய்யநன் மணிக ளாதி சொரிந்துரும் பத்தின் முன்னே
நெய்யொரு பாத்தி ரத்தி னிறைபணி யாரத் தோடு. (௯௦)

பலன்களோர் மூன்றுஞ் செப்புப் பாத்திரந் தன்னில் வைத்து
நலம்பெறு மங்குட் டத்தி னளவுநான் முகங்க ளோடுந்
துலங்குநீள் வாகு வோடு சொல்புரு டாகா ரத்தி
னிலங்கிய வகத்தி யப்பொற் பதுமையை யியல்கும் பத்தின். (௯௧)

முகத்தினில் வைத்த கும்ப முறைபெறப் பூசை செய்திட்
டகத்துற வெண்க லப்பாத் திரத்திலக் கதைநீர் வைத்து
மிகத்தெளி முகத்தி னிப்பி கொண்டுநல் விதிவத் தாக
மகத்துவத் தருக்கி யத்தை மந்திரம் வழாது தென்பால். (௯௨)

எதிர்முக மாக நல்கி யிருநிதி யுள்ளோ னாயின்
விதிநிறத் தோரீற் றுவை வெள்ளிபொன் குளம்பிற் கொம்பிற்
பொதிதர வணிந்து நாதப் பொலன்மணி புனைந்தப் பாற்பே
ருதரநீள் வாகு மேவு மொருதவ முனிக்கன் பாக. (௯௩)

அந்தணர்க் களிக்க வேண்டு மகத்திய வுதயந் தொட்டு
முந்துமோ ரேழ்நா ளாதன் மூன்றுநா ளோர்நா ளேனும்
புந்தியி னுறப்பூ சிக்க புகழ்காசைப் பூவின் மேனிச்
செந்தழல் வாயு ரூபந் திகழ்கும்ப யோனி யாகும். (௯௪)

மித்திரா வருண பால வேதநான் கறிந்த சீல
வித்தக வெளியேற் கன்பா யிரங்குதி யெனநின் றேத்தி
முத்தழற் கரும மாற்றிப் பலத்தினை முயன்றி டாம
லத்திறத் தரிய பூசை யாற்றினு ரவனி மீது. (௯௫)

ஒருகுடை நிழற்றி யின்ப முயர்குண மழகு கீர்த்தி
மருவியோர் தினத்தி னுக்கோ ருலகமாய் மன்னு மேழ்நாட்
குரியவே யுலகங் கைக்கொண் டுவந்தர சிருப்பர் நித்தம்
புரிபவர் பிரம ரூபம் பொருந்துவ ரென்ப மாதோ. (௯௬)

புவியிலிக் கதையைக் கேட்போர் புகன்றுளோ ரெழுதி வைத்து
நவமுறப் பூசை செய்வோர் நயந்திடா விரத மாற்றென்
றுவமையில் புத்தி சொன்னோ ருவந்துளோ ருந்தி பூத்தோன்
றவமிகு முலக மெய்தித் தழைப்பரென் றுரைத்தான் சூதன். (௯௭)

அறுபத்திரண்டாவது

அகத்தியர் பூசை யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௯௭௯.

அறுபத்துமூன்றாவது

அனந்த திரிதிகை விரத வத்தியாயம்.

பூவரும் விதிவகுத்த புனிதமா நைமி சத்தி
லேவரு முனிவர் யாரு மிருநிலத் தினிலுள் ளோருந்
தேவருந் தொழுமனந்த திரிதிகை விரதந் தன்னை
நீவரு முறைசொ லென்னச் சூதனு நிகழ்த்து மன்றே. (௧)

மனுவுளங் கனிந்து போற்றி மச்சமா றன்னை மிக்க
புனிதமா யாயு ளாரோக் கியம்புகல் சவுக்கி யங்கள்
இனிதுற நல்கு மேன்மை விரதத்தை யியம்பு கென்னக்
கனிமொழி பாகன் பங்கிற் கவுரிகேட் டிடவே யன்பாய். (௨)

பார்புகழ்ந் திடுமனந்த திரிதிகை விரதப் பான்மை
சீர்பெற வுரைத்த வண்ணந் தெரிதர வுரைப்பேங் கேட்டி
யார்புரட் டாதி யோடு மார்கழி யமர்வை காசி
கூருமித் திங்க டன்னிற் குலவுமோர் திங்க டன்னில். (௩)

சுக்கில பக்கந் தன்னிற் சொலுந்திரி திகைநன் னாளின்
மிக்கவெண் கடுகிட் டாடி வெள்ளைவத் திரம்பு னைந்து
தக்ககோ மயங்கோ ரோச னைததி சந்த னந்தோ
டொக்கவே கட்டி நெற்றிக் குறவொரு திலதந் தீட்டி. (௪)

பொன்னினாற் பதுமை யொன்று போற்றிய வில்லினைத் தூப
மன்னிடச் செய்து பஞ்ச கவியப்பால் மருவு தேனு
பன்னுசுத் தோத கம்புட் போதகம் பகருஞ் சாந்தந்
துன்னிய குழம்பி னோடு முறுமபி டேகஞ் செய்து. (௫)

வெண்மலர் கொண்டர்ச் சித்துக் கனிநிவே தனம்பு ரிந்து
வண்மையாம் வெல்லம் பானெய் வருநவ தானி யங்க
ணண்ணுசீ ரகத்தி னோடு மிவைவைத்து நவிலி லத்தோ
டெண்ணுமக் கதையைக் கூட்டி யிருந்திரி திகைக டோறும். (௬)

அரியபா தாதி பாதத் தமர்வர தாயைப் பொன்னின்
பரிபுரக் கரண்டைக் காலிற் பகர்ந்திடு சீரியை மிக்காய்ப்
புரிதரு கணைக்கா றன்னிற் புகழசோ தாயைச் சாற்று
மருவிய முழங்கா றன்னில் வளரும்பார்ப் பதியை யென்றும். (௭)

கதலிநே ரூருவின் மங்க ளாகாரணி யைச்சீர் மிக்க
புதுமைசே ரரையின் வாய்மை புகழ்வாம தேவி யைக்கூர்
பதியெழி லுதரந் தன்னிற் பதுமோத ராயை மார்பிற்
றிதிபெற விளங்கு காம திரியைநீள் செங்கை மீதில். (௮)

கிளர்வுற விளங்கு சௌபாக் கியதாயி னியைத்தோண் மீதில்
வளர்சுமு கச்சி ரீயை மலர்நிகர் வதனந் தன்னி
னணியருள் கூர்த ருப்ப ணவாசினி யையன் மீதி
லளிகொண்மா தாயைச் சீர்பெற் றழகுறு நாசிதன்னில். (௯)

உரைதரு கவுரி யையே லோங்கிய கண்க டம்மிற்
பரையைத்து லாயை நெற்றி பகர்தரு துட்டி யைக்கூர்
சிரமிசை விளங்கு நற்காத் தியாயினி யையென் றும்பேர்
வரமுறு நமோந்த மாக வரன்முறை பேச மீறாய். (௧௦)

பூசனை புரிந்து காந்தி யைபுகல் கவுரி யைகூ
ராசறு திரிதி யைரெம் பாயையார் சிரீயை யோங்கும்
வாசுதே வியைச்சீர் மிக்க லளிதாயை யென்று வாழ்த்தித்
தேசுறு நமோந்த மாகத் தோத்திரஞ் செய்து போற்றி. (௧௧)

தேவிமுன் குங்கு மத்தாற் றிகழிதழ் பன்னி ரண்டா
யோவிய நளினந் தீட்டி யுறுகுணக் கிதழில் வாய்ந்தெம்
மாவிதோர் கவுரி மேவி யடுக்கவே யபானன் றெற்கிற்
றுவுசீர் பவானி மற்ற களத்துருக் திராணி தீட்டி. (௧௨)

குடக்கிதழ் சவுமி யைப்பின் மதன வாசினியைக் கூற
மடுத்தவா யுத்தளம்பா டலைபின்னுக் கிராரை யாய்ப்பால்
வடக்கிதழ் தன்னிற் சாத்தியை மருவுமன் சுவையீ சானத்
தடத்தித ழுமைபாங் காகத் தக்கபிங் கலையைத் தீட்டி. (௧௩)

நடுவிற்பத் திரையைத் தீட்டி நலங்கொளப் பொகுட்டின் மிக்காம்
வடிவுடை லளிதை தீட்டி மந்திர நமவென் றோதி
யடவிலா வாக னத்தோ டருச்சனை முதல செய்து
குடமுழ வாதி யாகக் குளிரும்வாத் தியமு ழக்கி. (௧௪)

சாத்தியைச் சத்தி யைச்சீர்ச் சௌமியைச் சுபைத யங்கு
மேத்தருங் குமுதை யோடு மெழிற்சதி மங்க லையென்
றூர்த்தநா மங்கள் சொல்லி யருச்சனை செய்தே யப்பாற்
றோத்திரஞ் செய்த பின்னர்ச் சுமங்கலி பூசை யன்பாய். (௧௫)

செந்துகில் சிவந்த மாலை வணைந்துசிங் காரத் தோடு
சந்தகுங் குமங்கண் மிக்காய்த் தலையினிற் றாய்ப்பூ சித்து
முந்திய புரட்டா திக்கு முழுநீல மைப்ப சிக்கு
நந்தலில் செவ்வ ரத்த நாடுகார்த் திகைக்குக் கூறின். (௧௬)

நூற்றிதழ்க் கமல மப்பா னுவலுமார் கழிக்குக் கூறிற்
றோற்றலர்ச் சாதி தைக்குக் குசும்பகந் துகடீர் மாசிக்
கேற்றவெண் டளவு பங்கு னியினெச்சி சித்தி ரைக்கு
மேற்படு மசோகி னோடு மல்லிகை விரிவை சாகம். (௧௭)

பாதிரி சண்ப கம்பின் பகராணிக் காயி ரந்தோட்
டேதமி னளினத் தோடு மினியமந் தாரையாடிக்
காதிய முளரி யாவ ணிக்குயர் கடம்பத் தோடு
சீதமா லதியி னுலுந் திரிதிகை தொறுமர்ச் சித்தே. (௧௮)

குளிர்புரட் டாதி தொட்டுக் கோசலங் கோம யம்பான்
மிளிர்தயிர் நறிய நெய்நற் குசோதகம் வில்ல மேவி
யளிமுர லெருக்கஞ் செவ்வ ரத்தமா மருப்பி னன்னீர்
நளிபெற மேவு பஞ்ச கவ்வியநற் கூவி ளத்தின். (௧௯)

பழமுதற் பன்னி ரண்டும் பகருமா வணியீ ருக
வுழையுறு பக்கந் தோறு முறுதிரி திகைக்கொன் றுண்க
வழிவிறம் பதிகட் கான வறுசுவை யன்ன நல்கித்
தழைமலர் மாலை சந்தத் தாலலங் காரஞ் செய்து. (௨0)

புருடருக் கிரண்டு பீதாம் பரம்பொன்ன ரூர்க்கு மிக்காந்
திரமுறத் துலங்கு நற்சந் திரகாவி யீந்து போற்றிப்
பரவுசீ ரகங்க ரும்பு பகருப்பு வெல்ல மெல்லா
முரிமைமின் னூர்க்கு நீலோற் பலநனி யொளிருஞ் சொன்னம். (௨௧)

பகர்புரு டருக்கு மீந்து பரிவுறு பூசை யாற்றிப்
புகலுறு மிலளிதை யும்மைப் புராரிவிட் டகலார் போல
வகைபெற விருந்தில் வாழ மாயவா ரிதியின் மூழ்கித்
தகையுரு தெளிய னேற்குந் தண்ணளி யுரிய வேண்டும். (௨௨)

என்றுளத் துன்னி யப்பா லெழிலுறும் விமலை யோடு
மொன்றிய வனந்தை யோங்கு முலவிய பவானி மேன்மை
துன்றிய வசுதை மேவு சிவைசொலு மிலளிதை சீர்த்தி
பொன்றலில் கமலையோடு புகறரு கேளிர் மிக்காம். (௨௩)

இரதியே ரம்பை சேர்ப்பார்ப் பதியென விபம்பு நாமம்
விரபுரட் டாதி தொட்டு மேவுமா வணியீ ருகப்
பரிவுட னெவ்வொன் ருகப் பிரீதியிற் பகர்ந்து மேவும்
விரதநன் முடிவிற் பொற்பூங் கமலமேல் விளங்கு சையை. (௨௪)

அந்தணர்க் களிக்க வப்பா லறையறு நான்கா மெண்ணின்
முந்துதம் பதிகள் பூசை முறைசெய வியலா தென்னிற்
பிந்துபன் னிருவர்க்கேனும் பிறங்கிடக் கொடுக்க வன்னோர்க்
குந்திய மாதந்தோறு முயர்பூசை முடியா தென்னின். (௨௫)

நாலுதிங் கட்கொ ருக்கா னவிறரு திங்க ளொன்றுக்
கேலுந்தம் பதியி ரண்டா யெட்டியற் றிடுக நன்காய்ச்
சாலுமிவ் வகையாண் டொன்றிற் றம்பதி பூசை தன்னை
மேலுற வினிதின் மூன்று தரஞ்செய வேண்டு மாதோ. (௨௬)

குரவனை யன்பி னேத்திக் குழைந்துதாழ்ந் தெழுந்தன் போடு
மருவில நறும்பட் டாடை யணிமணி யளித்துப் பூசித்
துரிமையின் வணங்க வேண்டு முலோபத்திவ் விரதந் தன்னைப்
பரிவுடன் செய்யா ரென்னிற் படுநிரா யத்தில் வீழ்வார் (௨எ)

செய்துளோர் நூறு கோடி கற்பகற் சிவலோ கத்தி
னெய்திவா னவர்கள் பூசித் திடவினி திருப்பர் மேவும்
பெய்நிதி யிலாத லோபத் தியற்றிடப் பெறுரேன் மூன்றெ
னுய்வரு டத்தி னேங்குந் திரிதிகை யுபவா சித்தே. (௨அ)

மந்திர விதிவ ழாது மலரினு னருச்சித் தோர்தா
மிந்தவான் பலனை யெய்தி யிருப்பர்சு லெய்து மாத
ருந்துசு தகிய ரோக முள்ளபேர் கன்னி மாசர்
நந்தலி லிவர்கள் கங்கு லுண்ணலர் நவிலு ஞான்று. (௨கூ)

புருடர்பூ சனைகள் செய்யிற் போற்றுபீ தாம்ப ரங்கூர்
வரைபுரை தனத்தார் செய்ய வத்திரம் வழங்கு கன்னி
யருணவத் திரமே யாகுங் கைமையர்க் கணிவெண் டேசு
நிறைபெறப் புனைந்து நிட்டை நியமமா யியற்ற வேண்டும். (௩௦)

தமைநிகர் பெரியோர் செய்யுந் தகைமையாந் தனத்தை யீந்தே
யமைவுறச் செய்வோர் தம்மா லாற்றுவித் திடலு நன்றாங்
கமைவுறு விரதங் கேட்டோர் கருதுவோர் படித்தோர் சொல்வோ
ரிமையவர் வேந்தன் மேவு மெழில்பெறு முலகில் வாழ்வார். (௩௧)

என்றலை சுருட்டுந் தெண்ணீ ரிருங்கட லுப்பண் மாயோன்
றுன்றிய மச்ச ரூபத் துரைத்ததைத் துகடீர் ஞான
வன்றிற றவத்தின் மிக்க முனிவரர் மகிழ்ந்து கேட்ப
நன்றிகூர் சூத னென்னு முனிவர னவின்று னன்றே. (௩௨)

அறுபத்துமூன்றவது

அனந்த திரிதிகை விரத வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧அ௦௫.

அறுபத்துநான்காவது

ரசகல்யாண விரத வத்தியாயம்

குளந்தனில் விழியொன் றுற்ற குழகன்ற னடியைப் போற்றி
யுளங்கனிந் திருந்து மோனத் துயர்தவ முனிவர் யாரும்
விளங்கிய ரசகல்யாண விரதத்தை யுரைத்தி டென்னக்
களங்கமில் வாய்மைச் சூதன் கருதியே யுரைப்பன் மாதோ. (௧)

மலைமகள் பின்னுங் கேட்ப மான்மழு கரத்தி லேந்துங்
கலைமதி யணியும் வேணிக் கருணையங் கடவுள் சொல்வா
னிலைபெறு ரசகல் யாண விரதமொன் றுண்டு நீண்ட
சிலைநுதல் கேட்டி மாகத் திங்கள்சுக் கிலபக் கத்தில். (௨)

திரிதிகை தினத்திற் பாலுந் திலமுமே கலந்து மூழ்கிப்
பிரதிமை பொன்னி னொன்று பெருவிர லளவாய்ச் செய்து
வருபஞ்ச ரத்ன ராசி வகைபெறப் பதித்து நான்கு
கரமிசை யுருத்தி ராக்கங் கமண்டல முள்ள வாக. (௩)

திரமுற வெழுதிச் சந்திர சேகரி யென்ன வேணிக்
கரகமொன் றிருத்தி மீதிற் கரும்புறு கட்டி வைத்துப்
பரிபுர ரசகல் யாணப் பிரதிமை பரிவாய் வைத்து
வரமுறு வாக னஞ்செய் தருக்கியம் வழங்கிப் பின்னர். (௪)

தேனுறு கருப்பஞ் சாறு செழுஞ்சந்தக் குழம்பொ டாட்டித்
தானுறு குங்கு மத்தை யணிந்துசாற் றங்க பூசை
வானுறும் வலப்பா கத்தை வழங்குபா தாதி கேச
மேன்மையின் முதற்பூ சித்து விதிப்படி யிடப்பா கத்தை. (௫)

பூசனை புரிந்து கேச மாதிபொற் பாத மீறுத்
தேசொடு செய்க பூசை செப்பிய வலப்பா கத்தின்
மாசறு பதங்க ரண்டை வருலளி தாயை வாழ்த்துங்
காசறு கணைக்கால் சானுச் சாந்தியைச் சருது மூரு. (௬)

அகமுறு திரியைப் போற்று மரைதனின் மதால சாயைப்
புகழுறு முதரந் தன்னின் மாலாயைப் பொருந்த னத்தி
னிகழ்தரு மதன வாசி னியைநிறை கண்டந் தன்னிற்
றகுகுமு தாயைச் செங்கை வாகுமா தவியைப் போற்றும். (௭)

முகத்தொடு மதரந் தன்னின் மொழிகம லாயை மிக்காய்
மகத்தலிற் புருவ நெற்றி மருவுருத் திராணி யைச்சீர்
மிகுத்திடு மளகந் தன்னில் விரிசங்க ராபை மோலி
செகத்துரு விந்திய வாஷி னியையென நமோந் தமாக. (அ)

இவ்வகை வலம்பூ சித்திட் டெழில்பெற விடப்பாற் கங்குல்
வவ்விய வழகங் காந்தி யைமத ஞயி யைமற்
றெவ்வமில் புருவந் தன்னி லியற்றிடு மோகனையைத்
தவ்வலி லக்கண் கள்சந் திரனத்தா ரணியைச் சாற்றும். (கூ)

முகத்தினிற் றுட்டி யைச்சீர் மொழிந்திடு கண்டந் தன்னி
னிகழ்த்துறு பவங்க டீர்க்கு முற்கண்டி னியைத் தனத்தின்
மகத்தமு தாயைப் பச்சை யமைநிகர் வாகுதன்னிற்
சகத்துரெம் பாயைச் சேந்த தாமரைத் தடங்கை தன்னில். (க0)

வருவிசேர் சாயை நெஞ்சின் மன்மதப் பிரியாயைக் கூருந்
தெரிதரு வயிறு பாட லாயைச் சேர் திருவ ரைக்கண்
சுரதவா சினியை யூருச் சண்பகப் பிரியைச் சொற்ற
விருமுழந் தாள்க ணைக்கா லெழிற்கவு ரியை காட்டில். (கக)

காயத்தி ரியைப்பா தத்திற் கருதுத ராத ராயை
யேயச்சொ லிடது பானு நமவென வியம்பி யேத்தி
நேயத்தாற் சிரத்தின் மற்று நிகழ்விசோ காயை யென்ன
வேய்யொத்த தோளி யான விமலையை யுளத்தி னெண்ணி. (கஉ)

சொற்றிடு பவானி காம தேவியைச் சுபத்தி ராயை
யற்புத மேவுங் காமி னியைச்சுனந் தாயைப் போற்றும்
பொற்புறு மானந் தாயைப் புகழ்சகச் சீரியை யென்றும்
தற்பனா நாமஞ் சொல்லித் தருநம வந்த மாக. (கங)

பூசனை விதிவத் தாகப் புரிந்துதம் முளத்திற் பூசை
காசக சம்பா வன்னம் பூபநீர்க் கலசம் வெள்ளைத்
தூசிரண் டோடு மிக்க சொன்னத்திற் கமல மீந்தே
யாசறு குமுதை நிற்கே பிரீதியென் றருச்சித் தேத்தி. (கச)

உப்பொடு கடுகு வெல்லந் தேன்கலந் துற்ற வான்ப
றப்பில்பா னகத்தி னோடு சீரகந் தனிப்பான்மிக்காய்க்
கைப்பறு ததிநெய் மல்லி கைதானி யஞ்சொற் சீனி
வைப்புறு மாசி தொட்டு மாதமொன் றுக நீக்கி. (கரு)

விரதத்தின் முடிவின் முன்னம் விலக்கிய திரவி யங்கள்
கரகத்தி னிரப்பிப் பண்ணி காரபாத் திரங்க ளோடுந்
தரைபெற்ற வுதயஞ் சாயங் காலமுந் தானஞ் செய்க
புரையிலிட் டெலியென் றுண்டை சுகிவன பூர்ணை போப்பம். (கசு)

ததியுடன் கலந்த நெய்நல் லதிரசஞ் சாற்றும் வெண்ணெய்
புதியபால் கறிகூர் பொங்கல் பொழிததி யோத னந்திக்
கொதியுறு பாய சந்தான் கூறிய பன்னி ரண்டும்
விதிபெற மாசி தொட்டு விளம்பிவை திங்கட் கொன்றாய். (கஎ)

கரகமீ துறவே வைத்துக் கருதுபொன் னிமய மென்னும்
வரைதரு குமுதை யோடு மாதவி கவுரி ரம்பை
யுரைசெய்பத் திரைநா தாந்தக் தொளிர்சேயைச் சிவையு மைப்பெண்
ணருரதி சதிசீ ராமங் களரதி வரலச் சைப்பேர். (கஅ)

நாமமோர் பன்னி ரண்டு நலம்பெறு மாசி தொட்டுத்
தாமமே புனையுந் தேவி தனக்குயர் பிரீதி யென்ன
வாமிவை யொவ்வொன் றாக வடைவினிற் றானஞ் செய்க
கோமய மாதி பஞ்ச கவ்வியமெய் போழ்துங் கொண்டே. (கக)

சாற்றுப வாசஞ் செய்க சத்தியி லாதான் கங்குல்
பாற்றிக ழன்ன முண்ண லாம்பகர் வருட மாற்றிப்
போற்றுபின் மாசி மாதம் புகழ்திரி திகைநாண் முன்ன
ரேற்றிய பதுமை யோடு பசுவெள்ளை யிடபந் தானும். (உ0)

பொன்னுறு பட்டங் கட்டிப் பொருவில்வெண் பட்டுப் போர்த்துப்
பன்னுபாத் திரத்தி னோடு பவானிக்குப் பிரீதி யென்ன
மன்னிய தானஞ் செய்க வழுத்துமிவ் விரதந் தன்னை
யுன்னியே செய்தோர் யாரு முறுபல னுரைக்கு ஞான்று. (உக)

அளந்தவா யிரமி லக்க மக்கினிட் டோமப்பேறு
வளம்பெற வடைந்து பாவப் பௌவத்தின் வரைப்பு நீங்கி
விளங்குமா யிரமா மென்று விரியுமற் புதத்தி னுண்டு
துளங்கலில் கௌரி லோகந் துன்னிவீற் றிருப்ப ரன்றே. (உஉ)

அடைவுறு நாரி யேனு மழகுறு குமாரி யேனும்
புடவியில் விதவை யேனும் புகுஞ்சிர தாச ரேனுந்
திடமுற விரத மாற்றிற் றேகவா ரோக்கி யஞ்சீ
ருடன்வெகு நிதியம் பெற்றே யுறுவர்நங் கவுரி லோகம். (உ௩)

போற்றுமிவ் விரதந் தன்னைப் புகல்கிற்போர் புத்த கத்தின்
மேற்பட வரைவோர் கேட்போர் விரும்புவோர் செல்வம் வேண்டி
யாற்றல்சால் விரதந் தன்னை யனுட்டியென் றறைவோர் யாரு
மேற்றஞ்சால் விமலத் தோடு மிந்திர னுவர் தாமே. (உச)

என்றர னுரைக்கு மிந்த விரதத்தை யியல்பி னோர்ந்து
மன்றலந் துளவ மாயன் மச்சரூ பத்தி னின்றும்
வென்றிகொண் மனுவுக் கன்று விதிமுறை விளம்பு மாறு
துன்றிய முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொன்னான். (உரு)

அறுபத்துநான்காவது

ரசகல்யாண விரத வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கஅ௬0.

அறுபத்தைந்தாவது

ஆர்த்திரானந்தகரி

திரிதிகை விரத வத்தியாயம்.

மதிபெறு சடிலப் பெம்மான் மலர்ப்பதம் வழுத்தி யேத்தி
விதிபெறு தவத்தின் மிக்க விறன்முனி வோர்கள் கேட்பக்
கதிபெறு மார்த்திரா னந்த கரிதிரி திகைநன் னோன்பைத்
துதிசெய்மூ வறுபு ராணச் சூதமா முனிவன் சொல்வான். (க)

கூற்றினை யுதைத்துச் சீறுங் குழகன்பார்ப் பதியை நோக்கி
யேற்றிய விரதங் கட்கு ளிருமையுங் கொடுக்கு மப்பேர்
சாற்றிய வார்த்தி ரானந்த கரிதிரி திகைப்பேர் நோன்பை
நோற்றபேர் பேறு நோற்கும் விதியையு நுவலக்கேட்டி. (உ)

சுக்கில பக்கமுற்ற திரிதிகை தினஞ்சொன் மூல
மிக்கரோ கணியொ டுத்தம் விளங்கிய வுத்தி ராடந்
தக்கதா மகமே யைந்திற் றூரகை யாதொன் றேனு
மொக்கவந் துறிற்ற ருப்பை சந்தத்தொ டுறுநீ ராடி. (ங)

வெண்டுகி லணிந்து வெள்ளைச் சந்தனம் விரைந றும்பூத்
தண்டலின் றணிந்து பொன்னிற் றகுமாம கேசன் றன்னை
யொண்டகை யுறச்செய் தந்தப் பிரதிமை யுறுபா தாதி
வண்டலர் கொண்டு பூசை செயும்வகை வழுத்து வேமால். (ச)

தேவிபா தத்தில் வாசு தேவியைச் சிவன்பா தத்தின்
மேவுசங் கராயதேவி மெல்லிய கணைக்கா றன்னிற்
றுவிலா தருளுஞ் சோக விநாசனி யைச்சா ரீக
ளேவறு கணைக்கா லானந் தாயவென் றுரைத்துப் போற்றி. (ரு)

புகழுமை யூரு தன்னிற் போற்றுரம் பாயை மேவுந்
திகழர னூருதன்னிற் சிவாயமெய் சிறக்குந் தேவி
துகளறு மரையி லானந் தினியைச்சொன் மலைவி லான்றன்
பகரரை தன்னிற்சூல பாணிநே நமவென் றேத்தி. (சு)

வளருமை நாபி தன்னின் மாதவி யைச்சீ ரோங்கு
மளவிலா வீசனுபி யதிற்றகு பவாய தேவி
நளினகோ தனத்திலேயா னந்தநா ரணியை நம்ப
னளவிலாத் தனத்தி லிந்து தாநமோ நமவென் றேத்தி. (எ)

கருதருந் தேவி கண்டந் தனிலுற்கண் டினியைப் போற்றி
யருடருஞ் சிவன்கண் டத்தி னீலகண் டாய வன்னப்
பரிமளக் கரத்தி லேயுற் பலநார ணியைப்பின் னுத
னுருமலர்க் கரங்க டம்மி லுருத்திரா யநம வென்றே. (அ)

பரைக்குறு வாகு தன்னிற் பரிரம்பிண் ணியைச்சி ரீசன்
றிருத்தகு வாகு தன்னி னிருத்தசி வாய தேவி
விரித்தபங் கயமு கத்தில் விலாசினி யையில் வேளை
யெரித்தருள் சிவன் முகத்தில் விருபாட்சா யநம வென்றே. (௯)

மங்கைசெவ் வதரந் தன்னின் வழுத்திய மாலீ யாயை
யங்கண னதரந் தன்னில் விசுவவத் திராய வன்னை
செங்கம லக்கண் மீதின் மதனவா சினியை யெங்கள்
சங்கரன் விழியில் விச்சு வதாபினே நமவென் றேத்தி. (௧௦)

பேதைபு ருவநி ருத்தப் பிரியாயைப் பேத மங்கை
நாதன்றன் புருவந் தாண்ட வேசாய நாரி நெற்றி
யோதுமிந் திராணி யைச்சொ லுமையொரு பாக னெற்றி
யேதமில் வலிய வாகா யநமவென் றினிதி னேத்தி. (௧௧)

வரைமகண் மகுடந் தன்னில் வளர்சுவா காயை வாழ்த்து
கருள்சிவன் முடியி னிற்கங் காதரா யநம வென்னப்
பரிவுடன் பூசை செய்து பகர்முகந் தேகங் கால்கை
தெரிவுற வனந்தங் காட்டுந் தேவியே தேவர் போற்றி. (௧௨)

ஆயிழை யீசர் முன்ன மைவரு ணத்தாற் சோறு
மேயநற் பொடியாற் கஞ்சம் விளங்கிய வுற்ப லஞ்சங்
கேயசக் கரங்கூர் கட்க மெழிற்சுவத் திகத்தி னோடுந்
தூயவங் கிசங்கூர் வெண்மை துலங்குசா மரைகள் யாவும். (௧௩)

கோலங்கீ றிடுக வந்தக் கோலத்தி ரேணு வொன்று
காலகா லத்தை யுண்டோன் பதியினி லனந்த காலம்
வாலிதாய் வாழ்வ ரன்றி வயங்கிய நாலு மாதம்
பாலுறு பக்கந் தோறு நெய்நான்கு பாத்தி ரத்தில். (௧௪)

நிரப்பியே பொன்னு மன்ன நீருறு கரகங் கூட
விருப்புடன் மறையோர்க் கீந்து விளங்குறும் பூசை செய்து
திருப்பியோர் நாலு மாதந் திகழ்கர கத்தின் மீது
பொருத்தக நான்கின் மாவாற் பூரித்தந் தணருக் கீந்து. (௧௫)

மற்றொரு நாலு மாத மணிக்கர கத்தின் மீதெண்
பொற்பக் லோடும் வைத்துப் பூசுரர்க் களிக்க வேண்டு
முற்றசந் தனக்கு மும்போ டுறுபுட்ப வுதகஞ் சந்தம்
பற்றுகுங் குமப்பூத் தோயம் பாலுடன் பசுந்தே னெய்யும். (௧௬)

கோமருப் புதகம் பின்னுங் குலவுபுட் போத கஞ்சீர்த்
தோமில்செங் கழுநீர்க் கோட்ட நீரிலா மிச்சந் தோய்ந்த
காமரு நன்னீர் போற்றும் யவைமா நீர்கா ரெணன்னீ
ராமிவை பதின்மூன் றூன திங்களி னடைவே கொள்க. (௧௭)

மார்கழி தொட்டுப் பின்பு மருவுமார் கழியீ றாக
வேருறப் பூசை செய்க விலங்கிய திங்க டோறு
மாரிரு திரிதி கைக்கு மமர்பஞ்ச கௌவிய மிக்காஞ்
சீர்பெறு மருச்ச னைக்குத் திருந்துவெண் மலர்கண் மிக்காம். (௧௮)

தானஞ்செய் பொழுதி னின்றித் தருணத்தி லெனக்கு முன்பா
யானதோர் கௌரி வந்து பிரசன்னை யாகப் போற்று
மேன்மைமங் கலையென் பாவம் விலக்குக லளிதை மேவி
ஞானசவு பாக்கியத்தை நல்கிடக்கடவ ளென்றே. (௧௯)

சாற்றரும் பவானி மிக்காஞ் சருவசித் தியையு மென்பான்
மேற்படக் கொடுக்க வென்றே வெகுநிதி கொடுத்தா னன்று
மேற்குமோர் வருட மட்டு மாதாந்தப் பாதி யற்றிப்
போற்றிய முடிவி லுப்புப் புணைவெல்லம் படமொற் றுடை (௨௦)

திரைநறுந் துகில்செஞ் சாந்தஞ் செம்பொனிற் பங்க யஞ்சீர்
வரமிகு முமாம கேசப் பிரதிமை வாய்ந்த கன்ன
றருநறுங் கனிபூ மெத்தை தழுவணை சையை யாதி
யரிவைதன் னுடனே மேவு மந்தணர்க் களிக்க வேண்டும். (௨௧)

இந்தநல் விரத மாற்றி யிவ்வுல கனைத்துங் காத்து
முந்துநற் குணஞ்சீர் பெற்று முத்தியிற் சேர்வ ரன்னோர்
மந்திரத் துபவா சத்தைச் செய்துமந் திரத்தர்ச் சித்துச்
சிந்தைகூர் திருக்கின் மிக்காந் தேவிபா தத்தைச் சேர்வர். (௨௨)

மைந்தர்க ளெனினு மற்றை மங்கைய ரெனினும் வாய்க்கு
மந்தமார் கன்னி யேனு மந்தமில் விதவை யேனுஞ்
சிந்தனை தேர்ந்து செய்யிற் றேவிநற் பதமே சேர்வ
ரிந்தவா றுண்மை யென்று னிறையெழின் மனுவைப் பார்த்து. (௨௩)

பாய்திரைக் கடலுள்வைகும் பகர்மச்ச வடிவ மான
மாயவ னுரைத்த கற்பம் வரன்முறை வழுவா வண்ண
மேயசீ ரார்த்திரா னந்த கரிதிரி திகையின் மேன்மை
தூயமா முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொன்னான். (௨௪)

அறுபத்தைந்தாவது

ஆர்த்திரானந்தகரி திரிதிகை விரதவத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௮௫௪.

அறுபத்தாறுவது

சரசுவதி விரத வத்தியாயம்.

புகர்ந்த சூதனைப் பார்த்து முனிவரர்
மிகுந்த பாக்கியம் வித்தை யளித்துள
மகிழ்ந்த ளிக்கும் விரதத்தை மச்சமால்
புகன்ற வாபுக லென்னப் புகலுவான். (க)

தாயி னல்குஞ் சரசுவ திப்பெயர்
மேய நல்விர தஞ்செய வேண்டுவோ
ராய சன்மவா ரத்தினத் தாகுத
னேய மில்பகை நாட்களு நீக்கியே. (உ)

நாளு மோரையு நல்ல முகூர்த்தமுங்
கோளி லாதித்த வாரமுங் கூடியே
நீளு நற்றினத் தாத னியமமா
யாளுஞ் செஞ்சொ லணங்கை வணங்கியே. (ங)

பால்ச ருக்கரை நெய்யுறு பாயசஞ்
சால வேதியர்க் கூட்டிநற் றக்கணை
கோல வேண்டுகி லோடு கொடுத்தபின்
வாலை காயத் திரியெனு மங்கையை. (ச)

வெண்ணி றத்தலர் சந்தன மேதக
வெண்ணு பூசை யியற்றியத் தேவியை
யண்ணல் வேதனின் பாலுறு மன்புபோ
னண்ணி யென்ற னலிவை யகற்றியே. (ரு)

புத்தி வாய்மை புகழ்தரு பாக்கியம்
வித்தை சாத்திரம் வேதத்தி னெண்பொரு
ணித்த மூதங்கள் யாவு நினைப்புறிற்
சித்தி யாகத் திருவரு ணல்குவாய். (சு)

கமலை மேதை சிருட்டி கவுரிசீர்
விமலை புத்தி பிரபை மிகுபுட்டி
யமலை கூர்திரை நீயெனை யாண்டரு
ணிமலை வெண்மணி நீள்செப தாழ்வடம். (எ

உருத்தி ராக்கம்வெண் பட்டுறு புத்தகம்
பெருத்த தோயக் கமண்டலம் பெட்புறத்
தரித்த கோலத் தவள மடந்தையை
யிருத்தி யுள்ளத் தியன்றவை பூசித்து. (அ)

மவுனத் தோடுமெக் காலையு மாலையுந்
தவளத் தாயனந் துய்க்கத் தயங்கிய
குவளைக் கூர்விழி மங்கலக் கோதையைப்
புவனத் தாற்றுறு பூசை புரிந்தபின். (௯)

பச்சைத் தண்டுலம் பானெ யொருபடி
நச்சுப் பூண்முலைக் காயத் திரிக்கென
வைச்சுப் பக்கங்கண் மன்னிய சத்தமி
யிச்சித் தன்பிற் சுமங்கலிக் கீந்தநாள். (௧௦)

மோன மாலை யுறப்பதின் மூன்றுமே
யான திங்களு மாற்றி முடிந்தபின்
றூந றுந்தண் டுலத்திர டுன்னிய
வூன மில்லதொர் பாத்திரத் தோடுமே. (௧௧)

சுரபி யொன்று துகிலிரண் டந்தணர்க்
கருளி னல்கி யிரண்டணி வார்கலை
திரையி னோடுஞ் செழுந்ததி யோதன
மருவு நற்கர கஞ்சொல்கண் டாமணி. (௧௨)

பேசு நாமக ளுக்குப் பிரிதியாய்த்
தேசி கர்க்குயர் தக்கணை சேருநல்
வாச மாமல ரோடும் வழங்கிப்பி
னாச றப்பணிந் தாதரத் தேத்தியே. (௧௩)

அந்த ணாளரைப் பூசித் தனுப்பியே
யிந்த வாறிவ் விரத மியற்றியோர்
நந்தி டாக்கலை ஞான நவிற்றிசை
புந்தி விஞ்சை பொருந்திட வாழ்வரால். (௧௪)

வாழ்ந்து பின்னர் மலரயன் பொற்பதந்
தாழ்ந்து முப்பதி லக்கந் தழைகற்பஞ்
சூழ்ந்து வேத னுலகினிற் றுன்னுவ
ராழ்ந்திந் நோன்பு மின்னார்களு மாற்றலாம். (௧௫)

சாற்றிந் நோன்பு தன்னாற் சவுபாக்கியம்
போற்று நாயகி புத்திரர் புத்திரி
யேற்ற சுற்றமொ டில்லற நீதியாய்த்
தோற்று மின்பமு மாயுளுந் துன்னுவார். (௧௬)

வாக்கின் செல்வி விரதத்தை வண்மையாய்
நீக்க மின்றிப் படிப்பவர் நேர்மையாய்
நோக்க வேறன்றிக் கேட்பவர் நோயின்றி
யாக்க மாய்மூ வயுத வருடமும். (௧௭)

வித்தி யாதரர் வாழ்பதி மேவுவார்
புத்தி கூர்வித்தை நல்குமெய் போதமென்
றுத்த கேள்வி யுயர்தவத் தோர்க்கன்று
சுத்த மாதவச் சூத னுரைக்குமால். (௧௮)

அறுபத்தாறாவது
சரசுவதி விரத வத்தியாயம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௧௮௭௨.

அறுபத்தேழாவது
சந்திரசூரிய
கிரகணதானவிதி யத்தியாயம்.

கலைமதி யிரவி தன்னைக் காழ்விடங் கக்கும் பேழ்வாய்த்
தலைவிரி யரவு தீண்டிற் றண்கட லுடுத்த நேமி
வலையமா னிடர்கள் சன்ம ராசிவந் துற்ற போது
நிலைகெடா வண்ணந் தான நிகழ்த்துமா றுரைத்தி டென்ன. (௧)

மாயவ னடியைப் போற்றிக் கேட்டிடு மனுவுக் கன்று
தீயவை யொழியச் சொற்ற செய்கையைச் செப்பு கென்று
தூயநன் முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொல்வா
னேயமா னிடர்க டத்த மிராசியி னரவந் தீண்ட. (௨)

சந்திர கிரகணம் வந்தாற் றக்கவே தியர்க ளூல்வர்க்
கந்தமாய் வெண்பூச் சந்த மணிந்துபூ சித்துத் தானிய
முந்துற வைத்து நான்கு கும்பமு முறைதா பித்துச்
சிந்துரத் தடிமண் வாசித் திகழ்பதத் துறுமண் வீதி. (௩)

மண்ணொடு புற்று மண்சேர் மருவுநாற் சந்தி யின்மண்
பண்ணுதே ரடியின் மண்கூர் பசுத்தொழு மண்போர் வேந்தர்
நண்ணுவா சனன்மண் ணவில்பஞ்ச கவிய முத்துப்
புண்ணிய தீர்த்தஞ் சங்கம் போர்மத யானைக் கொம்பு. (௪)

தாமரை மலர்ப்போ தாம்ப றருப்பஞ்ச பல்ல வங்க
டோமறு படிகம் வெள்ளைச் சந்தங்குக் குலுநற் றேனீ
ரேமுறு கடுகு சொல்லு மிலாமிச்சம் வேரீ ருக
நாமநற் கும்பத் துய்த்து நாலிரு திசைகாப் போரை. (௫)

நண்ணுமா வாக ணங்க ணவையறச் செய்து மிக்காம்
புண்ணிய நதிக டங்கள் புயல்கட லேழுங் கூடக்
கண்ணுற வாவா கித்துக் கடந்தொறும் பூசை யாற்றி
விண்ணவர்க் கிறைவ னங்கி விறலடு நிருதி யோடும். (௬)

வருணன்மெய் வாய்வு மிக்க வடதிசைக் குபேரன் கீழ்பா
லருணமா நிறத்த வண்ண லாகுமீ சான தேவன்
கருதுபூ ரணியி னுற்ற கலைமதிக் கிரகண தோடப்
பருவர லொழிப்பா ரெண்ம ரெனப்பகர்ந் திட்டுப் பின்னும். (௭)

தருதிரி புவனத் துள்ள தாவர சங்க மங்கள்
பிரமன்மா லிரவி யின்னோர் பிறங்கிவன் பாவந் தீர்ப்பத்
திரமுற வாயு ளென்னச் செபித்திடுங் கும்ப நீலாச்
சுருதிவே தியர்க ளாட்டத் துகளற வாடிப் பின்னர். (௮)

இருமைவே தியரைத் தத்த மிட்டதே வதையா வெண்ணி
விரிமலர் கொண்டர்ச் சித்து வெண்டுகில் சுரபி யீக
வருதிசைப் பாலர் பானு மலரயன் மந்திர மொன்பா
னுரைசெய்பொற் பட்டத் தேனு மொளிர்பனி யேட்டி னேனும். (௯)

துண்டவெண் டுகிலி னேனுந் துலங்கிடத் தீட்டி வேதங்
கொண்டமந் திரத்தோர் கட்டக் குருமணி யவையி னோடுந்
தண்டவில் சிரத்திற் கட்டித் தக்கவே தியரைப் போற்றிக்
கண்டதோர் கிரகணம் வாங்குங் காலத்திற் றானஞ் செய்து. (௧௦)

பாலுறு பசுவுங் கட்டும் பட்டமுந் தான மீக
காலுறு கதிர்கள் வீசிக் கனையிருள் சீய்க்குந் தெய்வக்
கோலவா னிரவி மீதுங் கோளராத் தீண்டு மொன்று
மேலுமுன் போலுஞ் செய்க விரவிமந் திரத்தைப் போற்றி. (௧௧)

இருகதிர்க் கிரகண வேலை யாவரே யெனினுந் தூய
பொருபுன லாடித் தூசு பொன்மணி தேனு வாதி
யருமறை யவருக் கீந்தா ரரனுறை கயிலை வெற்பை
மருவுவ ரென்று சூதன் மாதவர்க் கோதி னானால். (௧௨)

அறுபத்தேழாவது

சந்திர சூரிய கிரகணதானவிதி யத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௮௮௪.

அறுபத்தெட்டாவது

சத்தமி சாந்திவிதி யத்தியாயம்.

முத்தழற் கரும மாற்றி மோனத்தொ டிருந்து முக்க
ணத்தனை யுளத்தி ருத்து மருந்தவ முனிவர் யாருஞ்
சத்தமி தான சாந்தி தனையுவந் துரைத்தி டென்ன
வுத்தம குணத்துச் சூத முனிவர னோது மன்றே. (க)

பூங்கொடி பாகத் தெம்மான் பொற்பதம் வணங்கிப் போற்றித்
தேங்கிசை மகதி யாழிற் சிறந்தநா ரதன்முன் னின்றே
யோங்கிய பயமுற் பாத முற்றிடி னொழியு மாறு
மீங்குறு மாந்தர் முன்ன ரீன்றிடு மசவு பொன்றின். (உ)

பின்னுதித் திட்ட மக்கள் பெருகிய வாயு ளோடு
மிந்நிலத் திருக்கச் செய்யு மியற்கையு மியம்பி டென்ன
மின்னொரு பாகன் கூறு மூழ்வினை விதியான் மண்ணிற்
றுன்னுதுர்ப் பலம்வி யாதி துலங்கிய மக்கட் சாவும். (ங)

இட்டநற் சனங்கள் சாவு மாய்வரு மிவைக டீர்த்து
மட்டறு மாயு ளின்பம் வழங்குசத் தமிதா னம்மென்
றுட்டெளி வுடையார் சொல்வ ரதன்விதி யுரைத்துங் கேண்மின்
கட்டழ கார்வ ராக கற்பமொன் றினிமேற் றோன்றும். (ச)

தோன்றுமக் கற்பந் தன்னிற் சூரியன் புதல்வ னாக
வீன்றவை வச்சுதப்பே ரிசையுமன் வந்த ரத்தி
னான்றிய விருபத் தைந்தாங் கிரேதமா யுகத்தில் வானி
லான்றதண் கதிர்கள் வீசு மம்புலி மரபு தன்னில். (ரு)

ஏகயன் மருமா னாய கிருதவீ ரியனே யென்பான்
வாகுறு தவங்க ளாற்றி வளர்கடற் றீவோ ரேழு
மாசவோ ரேழு பத்தே ழாயிர வருட மாள்வா
னாகிள மகவோர் நூறு நயம்பெற மகிழ்ந்து பெற்று. (சு)

பிறந்திடு மைந்தர் யாரும் பெருஞ்சிய வனர்சா பத்தா
னிறந்தபி னெழில்சேர் கார்த்த வீரிய னென்னு மைந்தன்
சிறந்தவா யிரங்கை யோடுஞ் செனிக்கநீ டாயுள் வேண்டி
புறந்திக ழலரி பூசை தினம் பிதா வாற்றல் செய்தான். (எ)

ஆற்றிடு மரச ஞன கிருதவீ ரியன்முன் ஞகத்
தோற்றுசெங் கதிரோன் ரேன்றித் துக்கம்விட் டொழித்தி டென்றே
தேற்றிச்சத் தமிதா னப்பேர் விரதத்தைத் தெளிந்து நீயே
நோற்றிடென் றுரைத்து நோற்கும் விதியினை நுவலு மாலோ. (௮)

மரணமுற் றிடலொ ழித்து வளரவா ஞளை நல்குந்
திரமுறச் செய்து தித்த திங்கடொட் டேழாந் திங்கள்
பரவுசுக் கிலபக் கத்துப் பகருஞ்சத் தமியி ஞதல்
கிரகநட் சத்தி ரங்கள் கெழுமிய சுதினத் தாதல். (௯)

சிறுவனுற் பவஞ ளந்தக் திக்கதி தேவற் போற்றி
யுறுபுவி கோம யத்தான் மெழுகியா னுதவும் பாலின்
மறுவில்செந் தண்டு லத்தை வண்மையாய்ச் சமைத்து வெய்யோன்
பெறுமுருத் திரனின் ஞேர்தம் பெயர்பெறு மந்தி ரத்தால். (௧௦)

நிரையழற் கவ்வ னத்தா னிகழ்த்துமா குதிகள் செய்து
விரிசுடர் வெய்யோனுக்கும் விறலுருத் திரற்கு செய்யாற்
பரவுமொவ் வொருவர்க் கேழா குதிமுறைப் படியி யற்றித்
தருமெருக் கும்ப லாவச் சமிதையா லோம மாற்றி. (௧௧)

கரியவெள் ளதனு னூற்றெட் டாகுதி கருதிச் செய்து
வருவியா திருதி யென்னு மந்திரம் விளங்க நூற்றெட்
டுரியவா குதிக ணெய்யா லுஞற்றியே வேத கோட்டத்
தருமறை யவர்சங் கற்பித் தாட்டநீ ராடிப் பின்னர். (௧௨)

நாலுகும் பங்கள் வைத்து நாப்பணோர் கும்பம் வைத்து
மேலுயர் கும்ப மைந்துங் குரவஞல் விளங்கத் தாபித்
தேலுநற் புனல்பூ ரித்தக் கதைதுகி லிவற்றி ஞனே
சால்புட னலங்க ரித்துத் தழைத்தபல் லவங்க ளேந்து. (௧௩)

பஞ்சது வக்கிட் டைந்து பருமணி யுள்ளிட் டோங்க
விஞ்சிய திரவி யங்க ளுய்த்துவெங் கயமான் றேரி
னஞ்சுவட் டடிமண் வாவிப் புற்றினோ டாவின் கோட்ட
மெஞ்சலில் சந்தி மன்ன ரெழின்மனை வாசன் மண்ணும். (௧௪)

அணிபெறக் கும்பத் துள்ளிட் டேயருந் தெங்கங்காய் வெண்
டுணரரம் பையின்ப ழங்க டுலங்கவைத் திலங்கு மாடை
யிணர்மலர்த் தொடையல் வேய்ந்தே ழிருக்குமந் திரத்தி ஞனே
திணிகொண்மேற் கும்பந் தொட்டுச் செபிக்கநாற் கும்பந் தன்னை. (௧௫)

ஆதவர் மந்தி ரத்தாற் செபித்தபி னந்த ஞள
மாதரா ரெழுவர் தத்தங் கணவர்தம் முடன்வ ரித்துப்
போதல ரணிபட் டாடை புனைமணி பொன்ஞற் பூசித்
தேதமில் குழவி தன்னை யிருகரத் தினிதி னேந்தி. (௧௬)

வருமக வூழி வாழ்க மன்னுமிம் மகவைப் பெற்றோ
ரருமக வழியா வின்ப மடைகவா தித்த னிந்துப்
பிரமன்மான் மகேச னெட்டுப் பெருந்திசை காப்போ ரோன்பான்
கிரகநட் சத்தி ரங்கள் கெழுமியே மகவைக் காக்க. (கஎ)

நணியுறு தேவர் சித்தர் கருடர்காந் தருவர் நாகர்
முனிவரர் முதலி னோர்கண் மொழியுமிம் மகவைக் காக்க
சனியு டனங்கி வாலக் கிரகங்க டாமே மைந்த
னன்னைபிதா விவர்க டம்மை யணுகிடா தகல்க வென்றே. (கஅ)

என்னுமந் திரத்தான் முன்சொல் லெழுவர்தம் பதிகள் கையான்
மன்னுமக் கும்பத் தோயம் வரன்முறை வழுவா தாட்டி
மின்னும்வெண் டுகிலைப் போர்த்து மேவிய மதலை யோடும்
பன்னெடுங் கதிர்கள் வீசும் பானுவைப் பணிந்து போற்றி. (கக)

குரவனைச் சபையின் மேவுங் குலமறை யாளர் தம்மை
மரபுடன் பணிந்து பொன்னுன் மறலிநற் பதுமை செய்திட்
டரியவெட் பாத்தி ரத்துய்த் தருங்குர வனுக்கு நல்கி
விரிநவ மணிபொன் னுடை வேதியர்க் கினிதி னீந்து. (உ0)

அறுசுவை யுண்டி வேதத் தறுதொழி லந்த ணாளர்
பெறும்வகை யருத்தி யிந்தப் பிள்ளைதீர்க் காயுள் பெற்றுக்
குறைவற விருக்கத் தீங்கு கூறிய துரிதம் யாவு
நிறையழல் வடவை யுய்த்தோ மென்றிவை நிகழ்த்திப் பின்னர். (உக)

மலரய னெடுமான் முக்கண் வானவன் மயின டாத்து
மிலையயின் முருகன் செந்தீ யெண்வசுத் தேவர் யாரும்
பலவித மான துட்டப் பயங்களை நீக்கி மைந்தர்க்
கிலகிய வாயுள் கீர்த்தி யிவ்வர மளிக்க வென்ன. (உஉ)

சார்ந்தவுற் பாத மச்சந் தகவிறுர்ச் சொப்ப னங்க
ளூர்ந்திடு மிந்தச் சாந்தி செய்திடிற் செய்வோர் சன்மங்
கூர்ந்தநட் சத்தி ரத்துங் குலவுசத் தமிதி னத்து
மார்ந்திடச் செய்து பாரி லமர்ந்தினி திருக்க வேண்டும். (உங)

என்றுநற் கிருத வீர்யர்க் கியம்பியே யிரவி விண்ணிற்
றுன்றின னவனு மன்னோன் சொற்படி புரிந்தான் மைந்த
னென்றுதீர்க் காயுள் பெற்றே யுரைத்திடு மயுத மாண்டு
வென்றிசே ருலகுக் கெல்லாம் வேந்தென வரசு செய்தான். (உச)

ஆதலா னிரவி பாலா ரோக்கிய மனலி டத்திற்
காதலாற் செல்வ முக்கட் கபாலிபான் ஞானக் காவன்
மாதவ னிடததின் மோட்ச மானுடர் கேட்க வேண்டுந்
தீதில்சத் தமிகா னத்தைச் சகத்துளோ ரினிதாச் செய்யின். (உரு)

பஞ்சபாத கங்கள் போமிக் கதையினைப் பகரக் கேட்போ
ரெஞ்சலில் கதியைச் சேர்வ ரெனவரி மனுவுக் கன்று
நெஞ்சுற மொழிந்தா னென்ன நெடுந்தவ முனிவர் கேட்ப
நஞ்சணி மிடற்றோற் போற்று நற்றவச் சூதன் சொன்னான். (உ௬)

அறுபத்தெட்டாவது

சத்தமிசாந்திவிதி யத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௬௧௦.

அறுபத்தோன்பதாவது

ஸ்ரீமத்துவாதசி விரத வத்தியாயம்.

திவாகரன் மரபில் வைவச் சுதனெனுந் திறல்கொள் வேந்த
னவாவொடு கேட்ப மச்ச வச்சுத னருள்செய் வண்ணந்
தவாதுயர் தவத்தின் மிக்க முனிவரர் தரும வீமத்
துவாதசி விரதந் தன்னைச் சொல்கெனச் சூதன் சொல்லும். (௧)

மந்தர கிரியின் மேவி மான்மழுக் கரத்தி லேந்து
மெந்தையைப் போற்றி வேத னிலங்குமா கார்க்கி யஞ்சீர்
முந்திய சுவர்க்க முத்தி முயறவஞ் சிறிதி னெய்த
நந்தலில் விரத மொன்றை நவில்கென நாதன் சொல்வான். (உ)

இப்பொழு தியலு மந்த ரந்தர கற்பத் துக்குச்
செப்பிரு பத்து மூன்றுத் திகழ்ந்திடு வராக கற்பத்
தொப்பிலா துயரு மேழா முயர்மனு வந்த ரத்தைத்
தப்பில்வை வச்சு தம்மன் வந்தர மென்பர் தக்கோ ரன்றே. (௩)

அந்தவை வச்சுதம்மன் வந்தர மதனின் மிக்கா
குந்திற லிருபத் தேழாங் கூர்தரு துவாப ரத்தில்
வந்தபூ பாரந் தீர்க்க மாயவன் வியாதன் கண்ணன்
முந்திய பலரா மன்னிம் மூவரா யுதிப்ப னன்றே. (௪)

உதித்தகண் ணன்றுன் கஞ்ச னுயர்சேசி யுயிரை யுண்டும்
விதித்தநற் குசத்த லிப்பட் டினத்தினை நம்மை வேண்டித்
துதித்தலின் விசுவ கன்மா துவனையென் யெழிற்பே ரோங்கக்
கதித்தபட் டினமதாகக் கண்ணனன் னகரஞ்சார்ந்தே. (௫)

இருட்செறி கூந்தற் செவ்வா யேந்திழை மாதர்சூழ
விருட்டினி மரபின் மிக்க வேள்வி செய்யரச ரோடு
மருட்கொலு விருக்கு ஞான்றங் கருள்பெறு தருமநூல்க
ளுரைத்திடு பொழுதில் வீமசேன னங்குறுவ னன்றே. (சு)

வீமனென் றுரைக்கும் பேரான் வயிற்றினில் விளங்கயாமே
தோமறு விருக மென்னுஞ் சுடுதழலமைத்து வைப்பேங்
கோமளத்தன் ஞேனுக்குக் கூர்விரு கோதரப்பேர்
நாமம் வந்துறு மன்னோர்க்கு நயப்புட னுண்ட வெல்லாம். (எ)

எரிந்திடு பசிகளாற்ரு னீரைந்தா யிரமால் யானை
பொருந்துறு பலத்தோன் மாயப்புலர் முகமினிது நோக்கி
வருந்திய விரத மாற்ற வல்லன் யானல்லேன் வேலை
தெரிந்தியான் செய்தற் கேற்ற விரதத்தைச் செப்பு கென்ருன். (அ)

கண்ணனங் குரைப்பான் மிக்காய்க் கருதிய விரத மொன்றுண்
டெண்ணுதற் கரிதாம் வேள்விப் பலனையு மெளிதினல்கும்
பண்ணிய பாவம் போக்கும் பகையறுத்தின்ப நல்கும்
விண்ணவர் யாரும் போற்ற விளங்கிய மேன்மைத்தாமால். (கூ)

புராதனங் களுக்கு முந்து புராதனம் புனிதங் கட்கும்
பராவிய புனித மாகும் பகருமங் கலத்தின் மேலாந்
தராதலம் புகழு மிந்த விரதந்தான் ரசகல் யாணி
யராவணை துயில்வோன் லோக மடைவிக்கு மதனைச் சொல்வாம். (கய)

அட்டமி பதினுன் கேகா தசிதுவா தசிக ளாதி
தொட்டநல் விரத மாற்றத் துணிவிலான் றுலங்கு மாகத்
திட்டசுக் கிலபக் கத்துத் தசமிவந் தெய்தும் போழ்தின்
மட்டுறு நெய்யி னுனும் வருதிலத் துவையி னுனும். (கக)

விரிநறும் புனலின் மூழ்கி விண்டுவின் மலர்ப்ப தத்தை
யுரியவெட் டக்க ரத்தா னுவந்தருச் சித்துப் போற்றிச்
சிரமொடு கண்ட மார்பு செங்கைநான் குதரங் குய்ய
மிருதொடை சானு மிக்கா மியல்கணைக் கால்பொற் பாதம். (கஉ)

புகல்சரு வான்ம நேநற் புகழ்பெறு வைகுந் தாய
நிகழுஞ்சீ வற்ச தாரி ணேசங்கி நேமிக் காகுந்
திகழுஞ் சக்கரனே நற்க தினேவர தராய சீரார்
பகருந்தா மோத ராய பஞ்சசா ராய மேவும். (கங)

தருசவுபாக் கியநா தாய பூதசா ரிணேதாழ் வின்றி
விரியது ளாய மிக்காம் விசுவசி ரசேயென் றெல்லா
மருநம வந்த மாக வோதியே யருச்சித் தப்பாற்
றிருவினைத் தேவி யைச்சாட் சியைலக்கு மியைச்சீரிலை. (கச)

புட்டியைத் துட்டி யைமேல் புகல்சிருட்டியைப்பே ரோங்கு
மிட்டநற் காந்தி யையென் றியம்பியே நமோந்த மாக
மட்டல ரருச்சித் தேத்தி வயினதே யணைம யக்க
விட்டுவிக் காதா யால் வாயுவே காய வென்றும். (கரு)

விளம்பிய பட்சி ணேபின் விடப்பிர மாதி னேயென்
றுளம்பெறு நமோந்த மாக வுவப்புடன் பூசித் தேத்திக்
களங்கற முன்னஞ் சொன்ன கோவிந்தர் கவுரி பாகர்
துளங்க லிலாவி நாய கனையுமர்ச் சித்துச் சூழ்ந்து. (கசு)

சோடச வுபசா ரங்க ளெள்ற வாற்றிப் பின்னர்
நாடிய மவுனத் தோடு நறுநெய்சர்க் கரையே கூட்டிப்
பீடுற வருந்திப் பின்னர்ப் பிறங்குநூ றடிந டந்து
நீடிய தருப்பை மீதி னிசியினித் திரைசெய் தப்பால். (கஎ)

அத்தினங் கழிந்த மற்றை யதிகாலந் தனிற்ச ரீர
சுத்திசெய் துதக்குக் கீழ்பா லேக்கிச்சொல் கதிர மேனு
மொத்தவா லேனுங் கொண்டே யொளிரப்பல் விளக்கி மூழ்கி
வைத்தமா லன்பு கூரெட் டக்கர மறைவ முாமல். (கஅ)

செப்பியா னிற்றை யேகா தெசியிலா சார மின்றி
யொப்புறு துமக்குப் பாலி னபிடேக முஞற்றிப் பூசை
தப்பிலா தியற்றிக் கங்குற் சாகர மிருந்தே யோமந்
துப்பினு லியற்றி நாளைத் துவாதசிப் பார ணந்தான். (கக)

பாலொடு முண்டு நின்பொற் பதமலர் சிந்தை செய்து
மாலுறு திந்தி யத்தை யடக்கியே வழுவி லாமற்
றுலமீ தியற்ற வெற்கோர் விக்கினஞ் சாரா வண்ண
மூலகா ரணகா வென்ன மொழிந்துசங் கற்பஞ் செய்து. (உ0)

நதியின்மிர்த் திகைதா னத்தை நயந்துபா டண்ட ரோடும்
வதிதரல் வார்த்தை நீக்கி வயங்கனுட் டானம் பண்ணிப்
பிதிர்முறை தருப்ப ணஞ்செய் தரனரி ரவியைப் பெட்பான்
விதிமுறை நமக்கா ரங்கள் விருப்புடன் செய்த பின்னர். (உக)

உறுமனைக் கெதிர தாக மண்டப முஞற்றி யேதீ
தறுமுழம் பத்தெட் டேனு மமைத்ததின் முழநான் காக
நறியவே திகையைப் போட்டு நன்கதா முழநான் காகக்
குறியநற் சதுக்கை கட்டிக் குலவுமான் ரேன்மீ துற்று. (உஉ)

பூரண கலச மொன்று புனனிறைத் தூயரக் கட்டிக்
காருறு முழுந்து போலக் கருதருந் தாரை விட்டுக்
கூரிருண் முழுதுஞ் மந்தத் தாரையைச் சிரமேற் கொண்டு
போர்தர விருக்கத் தாரை மிகிற்புல னதிக மாமால். (உ௩)

ஆகையாற் றனக்குத் தக்க தாரையைத் தரிக்க வான்பா
லோகையால் விண்டு வுக்கே யுறுதாரை யபிடே கந்தான்
வாகுறச் செய்க வந்த மண்டப மதனிற் குண்ட
மேகமா மெழுத்திற் போட்டே யெழில்பெறு முகத்தி னேடும். (உச)

நேருமே கலையோர் மூன்று யோனியு நிருமித் தப்பாற்
காரெள்ளு யவைநெய் கொண்டு கரியமான் மந்தி ரத்தாற்
கூரழற் கரும மேக மாகியே குலவச் செய்திட்
டார்தரும் பாய சத்தி னவிசழற் பெய்தே யானெய். (உரு)

ஒருமூந் திடம தான தாரையா னேமம் பண்ணி
நீருறு கும்பந் தன்னைப் பதின்மூன்று நிரையில் வைத்திட்
டோர்கொளா வாகனஞ்செய் தியற்பண்ணி காரமாதி
சீர்நிவே தனத்தைச் செய்து திகழலங் காரஞ் செய்து. (உசு)

அத்தியின் மரத்தி னாலே யமைத்தபாத் திரங்கள் வைத்துச்
சித்திரப் பஞ்ச ரத்னந் திகழ்கும்பத் துய்த்தே யோம
முத்தர முகமதாக விருக்கும்வே தியரோர் நால்வர்
பத்தியாய்ப் புரிக மிக்காய்ப் பகரெசுர் வேத நூலில். (உஎ)

திகழுஞ்சீ ருருத்தி ரங்கள் செபித்தபின் சாம வேதர்
பகருமோர் நால்வர் மாலைப் பகர்சாம மந்தி ரத்தாற்
றுகளறச் சபிக்க வந்த மண்டபச் சுற்றில் வேதந்
தகவிலா திசைக்க வேண்டுஞ் சாற்றுபன் னிருவர் தம்மை. (உஅ)

சோடச வுபசா ரத்தாற் பூசனை புரிந்து சொல்லு
மாடகப் பணிக ணல்கி யரியநற் சையை மெத்தை
யோடவர்க் களித்தே யாங்க ணுளற்றுமா சிரியன் றன்னை
யேடலர் கொண்டருச்சித் திரட்டிதக் கணையு நல்கி. (உகூ)

அனுப்புக விடிந்த பின்ன ராப்பதின் மூன்று கொம்பு
தனிற்பொலன் கட்டுக் கட்டித் தயங்குகால் வெள்ளி கட்டிக்
கனத்துறு கஞ்சப் பானை யோடுமக் கறவை யாவும்
புனிற்றிளங் கன்றி னோடும் போற்றிவே தியர்க்கு நல்கி. (ரு0)

வேதியர்க் கபூப மன்னம் விளங்குதக் கணையொ டீந்து
பேதமற் றடியோ ரெட்டுப் பின்றுற நடந்த னுப்பி
மாதவத் துயர்ந்தோ னுப்பு மறுத்துள மகிழ்வி னுண்டு
பாதக மொழிக்குஞ் சார்ங்க பாணிக்குப் பிரீதி யென்ன. (ருக)

சொல்லியே யீந்த யாவுஞ் சுருதிவே தியர்ம னைக்கண்
வில்லையி னுய்க்கச் சையை வரைவில்கொ டுக்க வின்றேன்
மெல்லணை யொன்றே யேனும் விருப்புடன் கொடுத்து மிக்காய்
செல்வியற் புராணங் கேட்டு நயக்குநித் திரையை நீத்து. (ருஉ)

மாச்சரி யத்தை விட்டு வயங்குமத் தினத்தி லேசொ
லாச்சரி யங்க ளாக விந்திய மடக்க மூன்று
றீச்சரி தையினர் கல்யா ணித்துவா தசியி தென்னப்
பூச்சிய மாகச் சொல்வர் பூருவ கற்பந் தன்னில். (௩௩)

இன்றுநீ யுஞற்றி னிந்த விரதமு மின்று தொட்டுத்
துன்றுமிப் புவியில் வீடித் துவாதசிப் பெயரி னேங்கு
நன்றிசெய் விரதங் கட்கு ணன்றதா மிதனை யேட்டி
லொன்றவே வரைந்து தத்த மனையிடத் துப்த்த னன்றும். (௩௪)

இவ்விர தத்தைச் சால நினைத்தவ ரியல்பாய்க் கேட்போர்
செவ்விதிற் செய்தோர் தம்மைப் பார்த்தவர் தேவர் கோமா
னெவ்வமி லரசை யாள்வர் முன்னெழில் வணிக கன்னி
கவ்வையற் றிதனை யாற்றல் கண்டிடு மாயன் கன்னி. (௩௫)

உருப்பசி யெனப்பி றந்தே யும்பரா ருலகி னுற்றுள்
விருப்புறு வணிகர் மாதும் விண்ணிலிந் திராணி யானுள்
திருப்பொலி பூசைக் கன்று செய்கரு மங்கள் செய்தாள்
மருப்பொலி காந்தற் சத்திய பாமையாய் வயங்கினுளால். (௩௬)

அன்றுசொல் வணிக மாது கவசனீ ராடும் போது
துன்றிய திவலை யோரா யிரந்துளி தெறித்த லாலே
யொன்றிய கதிர்பி னோரா யிரத்தொடு மொளியோ லோங்கும்
வென்றிமண் டலத்துள் வைகி வெய்யவன் விளங்கி னுனால். (௩௭)

இந்திரன் முதல்வா னோர்க ளெண்வகை வசுக்கள் வீரந்
தந்திடு கோடி கோடி தானவ ரியக்கா யாரும்
விந்தையிற் புரிந்தா னந்த வீரத்தின் மேன்மை சொல்ல
நந்தலி லயுத கோடி நாவுடை யோரே வேண்டும். (௩௮)

யாவரே யெனினுஞ் செய்யி னிரும்பவம் பாவந் தீர்ந்து
தாவுதம் பிதிர்க்க டம்மைத் தழலுறு நரகினின்றுந்
தேவர்தம் முலகிற் சேர்ப்பர் செய்தவர் பிரம னுகத்
தாவிலா துயர்வரென்னச் சாற்றுவான் கண்ணன் மாதோ. (௩௯)

கண்ணன்வாய் மையினைக் கேட்டு வீமனுங் கருதிச் செய்து
நண்ணுவன் பலன்கள் யாவு மென்ற ரனவின்று னன்றே
யண்ணன்மா மச்ச ரூபி மனுவினுக் கறைந்த வண்ணந்
தண்ணளி முனிவர்க் கெல்லாஞ் சூதனே சாற்றி னுனல். (௪௦)

அறுபத்தோன்பதாவது

வீமத்துவாதசி விரத வத்தியாய முற்றும்.

ஆகத்திருவிருத்தம். ௧௩௫௦.

எழுபதாவது

அனங்கதான விரத வத்தியாயம்.

தரைபுக ழனங்கமா தான மென்று சொல்
விரதநீ யுரைக்கென வினவு மாமுனி
வரருளங் களிதர மனுவுக் கன்றுமா
லுரைதருங் காதையைச் சூத னோதுமால். (௧)

சதுமுகன் பரமனைத் தாழ்ந்து போற்றியே
விதமுறை சொற்புரா ணத்தின் மெய்ந்நெறி
சதமிகு வருணமாச் சிரம தன்மந்தான்
பதியுமா சாரநீ பகரக் கேட்டுளேன். (௨)

விலைமட மாதரும் வீடு சேர்தர
நிலைபெறு விரதங்கூ றெனநி கழ்த்துவா
னலைகடல் வண்ணனம் புவியி லாயர்தங்
குலனிலெண் ணாயிரத் திரட்டி கோதைமார். (௩)

தங்களை மருவிய சார்து வாபர
மங்கிடா யுகந்தனில் வசந்த காலத்துச்
செங்கழு நீர்த்தடஞ் செறிந்த தேமலர்ப்
பொங்கரில் விருப்பிலப் பூவை மாரொடும். (௪)

புனல்விளை யாடியும் போது கொய்துந்தா
னனிவிளை யாடிய போதி னல்லெழிற்
றனிமத னெழிலுறு சாம்ப னெய்தலு
மனையவ ரவனிடத் தாசை யாகியே. (௫)

உளமெலிந் தயர்தலை யோர்ந்து கண்ணனும்
புளகித விளமுலைப் பூவை மாதரீ
ரிளையநன் மகனென வெண்ணி லீருமைக்
களவுசெய் வேடர்கள் கைக்கொள் வாரெனா. (௬)

முனிந்துசா பத்தினை மொழிய மங்கைமார்
மனந்தடு மாறியம் மாலைப் போற்றியே
நினைந்திடற் கரியவிச் சாப நீங்கவுட்
கனிந்தரு ளென்றலுங் கருணைத் தாப்பியர் (௭)

என்னுமா முனிவரர் நும்மு னெய்தியே
பன்னுவர் விரதநீர் பரிவிற் செய்திடிற்
றுன்னுமிச் சிலதிய ராய துன்பொழிந்
துன்னருங் கதியுமக் குதவு மென்றனன். (௮)

என்றுரைத் திருநிலப் பாரந் தீர்த்துமா
லன்றுமௌ சலத்தினி லாக்கை நீத்துப்போய்
வென்றிசேர் வைகுந்த மேவ வேடர்க
டுன்றிய திறலருச் சுனனை வென்றரோ. (௯)

மங்கைய ரீரொண்ணா யிரரை வல்லிதிற்
செங்கரம் பற்றித்தம் மனையிற் சேறலு
மங்கமர் தாதிய ராகி யேவலிற்
பங்கமுற் றுழலுநாள் பகர்ந்த தாப்பியர். (௧0)

எய்தலு மவர்பத மிறைஞ்சி யேழையேஞ்
செய்தவக் குறையிற்சே டியர்க ளானவா
றையநீ யுணர்த்தென வருளி னீவிர்முன்
மையறுமானத வாவி யாடினீர். (௧௧)

வேளையி னாரதன் மேவ வன்னவன்
றளிணை வணங்கிடா தெதிர்ந்து தண்டுழாய்க்
கோளரா வணையினு னேமக் கூடிட
நாளுநு விரதநீ நவிலு கென்றலும். (௧௨)

முனிவர னுளத்துறு முனிவ டக்கியே
தனியொரு விரதத்தைச் சாற்றி நீர்செயிற்
புனிதமா விணைப்பதம் பொருந்தி வாழ்ந்துபின்
கனிமொழி யீரொமைக் கணித்தி டாமையான். (௧௩)

வேடர்தஞ் சேரியில் விலைநல் லாரெனப்
பாடுறு வீரெனப் பகர்ந்து போதலு
மேடலர் குழலினீ ரிடரு றுமன்முன்
னுடுமவ் விரதத்தை நன்கி னாற்றினீர். (௧௪)

ஆதலிற் கண்ணனை யணைந்து றுழ்ந்தபின்
னேதமில் சாபத்திவ் விடரை யெய்தினீர்
நீதமா யானொரு விரத நீணெறி
யோதுவல் கேட்டுநீ ருளுற்றி னீரெனின். (௧௫)

வேடர்தஞ் சேரியை விட்டு நீங்கிமா
றுடொழு துறைவது சரத மாதலாற்
றேடுறு விரதத்தைச் செப்பு வாமுனம்
பாடுறு மசுரர்தம் பண்ணி மாரெலாம். (௧௬)

விண்ணவர் கோமுன மேவ வன்னவ
னெண்ணுறுங் கணவனை யிழந்த நீரினி
நண்ணுறு மசுரர்தம் மனையி னண்ணியே
கண்கறு முலைவிலைக் கணிகை மாதராய். (கஎ)

ஆண்டவன் சூதக மனுட்டித் தன்னவன்
வேண்டுநற் றேவனை விரும்பி யேத்தியே
யீண்டிய பாக்கிய மியல்பி னெய்திடும்
பூண்டநற் பரத்தையர் தருமம் போற்றியே. (கஅ)

உற்றிடு வீருமை யுளத்தி னெண்ணியே
பற்றறுத் திரவியம் பரிவி னல்குவோ
னற்றைநா ளணைபவ னடுத்து நாடொறுஞ்
சுற்றியே யுழல்பவ னென்னுந் தூய்மையாய். (ககூ)

வஞ்சக மின்றிநீர் மருவி வானவ
ரெஞ்சலில் பிதிர்த்தின மிவற்றி லானிதி
விஞ்சிய தானியம் விளைநி லத்தொடு
கஞ்சனே ரந்தணர் கரத்தி லீகுவீர். (உ0)

அனங்கவேள் விரதமொன் றறைகு வேமது
மனந்தணித் தன்பொடு மகிழ்ந்து செய்திடிற்
புனைந்திடுஞ் சேடியாம் புணர்ப்பு நீங்கிநீர்
நினைந்திடு கதியினை நேர்ந்து வாழ்திரால். (உக)

நன்றிகொள் விரதமா ரம்ப ஞாயிற்றி
னன்றிரு பூசமீ னத்த மூன்றிவற்
றென்றுறி லோடைநீ ருவந்து மூழ்கியே
தென்றலந் தேரனங் கனைத்தி யானித்தே. (உஉ)

இரணியத் திரதிவே ளியற்றிச் சர்க்கரை
யிரவிய கும்பத்தின் மீது தாம்பிரப்
புரையறு மாசனத் திருத்திப் பூமக
ளரியெனப் பாவித்தே யருச்சித் தேத்திஞல். (உ௩)

அன்னவன் முன்னர்வந் தருள்செய் வானவன்
மன்னிய நாமத்தை வழுத்தி மாயவன்
றன்னிரு தாளிற்கா மாய சங்கமீ
துன்னரு மோககா ரிணேயென் றோதியே. (உ௪)

பகர்குய்யங் கந்தர்ப்ப னிதைய மேபணி
திகழரை பிரீதிம தென்ன நாபியிற்
றகுபுகழ்ச் சவுக்கியு சமுத்தி நாயசீர்
மகிழ்வுறு முதரத்தில் வாசனுடவே. (உ௫)

இதையத்தி ருதையே சாய வேர்முலை
தனையுறு மாகலா தகாரா னேயெழி
லுதவிய களத்தினி லுற்கண் டாயசீர்க்
கதிமுகத் தானந்த காரி ணேயரோ. (உசு)

இடப்புயம் புட்பசர் பாய வேர்வலத்
தடப்புயம் புட்பபா ணய தாமம
குடத்தனங் காயபைங் குஞ்சி மீதினி
னடற்பெருந் திறல்விலோ லாய சென்னியில். (உஎ)

நவில்சரு வான்மநே நமவென் றேத்தியே
புவிபுகழ் சிவாயசாந் தாய பொற்புறு
சவிகொள்பா சாங்குச தராய மேம்படுந்
தவகதி னேசெய்பீ தாம்ப ராயவே. (உஅ)

கதிருறு சங்குசக் கரத ராயசீ
ரதிபல னுதவுநா ராய ணயசூழ்
பதித்ரு காமதே வான்ம நேயெனத்
துதிபெறு நமோந்தமாய்த் தோத்தி ரஞ்செய்து. (உகூ)

சாந்தியைப் பிரீதியை ரதியைச் சார்புக
ழேந்திய சீரியை யிலங்கு புட்டியைக்
காந்திசெய் துட்டியைக் கலங்கி டாதரு
ளாய்ந்தசீர் பெறுசரு வார்த்த சம்பதே. (௩0)

இன்னவை நமோந்தமா யிலங்கு தேவியைப்
பன்னருந் தோத்திரம் பண்ணிச் சோடச
மன்னுப சாரத்தான் மாலைப் பூசித்துத்
தன்னிகர் வேதற்கோர் படிநெய் தண்டுலம். (௩க)

மதனவேண் மகிழ்வுற வணங்கி மற்றவர்க்
கிதமுற நல்லுண வீந்து வேதியன்
றுதிசெய வேட்டன துணைவி னல்கியே
கதிரவன் றினந்தொறுங் கருதி நோற்றபின். (௩உ)

தெரிதரு கும்பநற் றிங்க டன்னிலே
வருதிர யோதசி மட்டு மோர்படி
யரிசியந் தணர்தமக் களித்த தன்பினர்த்
தருபதின் மூன்றெனத் தழைத்த திங்களின் (௩௩)

படைமத னிரதியாம் பதுமை சர்க்கரை
குடமிசைத் தாம்பிரா சனத்திற் கூடவைத்
தடைவுறு பொற்பணி யால லங்கரித்
திடமுறு கஞ்சபாத் திரமு மிக்குமாய், (௩ச)

தம்பதி தனையருச் சனைசெய் தேயளித்
திம்பரிற் சையைநல் லெழிற்ப டாங்குடை
பைம்பொனின் விளக்கிவை பரிவி னீயுங்கா
லும்பரில் வேளென வுற்ற விண்டுவே. (௩௫)

இட்டகா மியமெலா மெனக்கு வேண்டுநீ
மட்டலர் மகட்பிரி யாத வாறுபோற்
கட்டெழிற் காந்தனைக் கலக்க வேண்டுமென்
றெட்டிய தியானத்தொ டுதவ வேண்டுமால். (௩௬)

அற்றைநாண் முதலினோ ராண்டு மட்டுறு
நற்றிவா கரன்றின நன்கிந் நோன்பினை
முற்றுற முடித்தமூ தறிவின் றேசிகன்
பற்றுற வரிக்கவப் பான்மை யோனயல். (௩௭)

ஊர்வழி யெய்தினு னெனிலன் னோன்றனை
யார்வமொ டனுமதி செய்தொ ரந்தணன்
கூர்தர வனைந்திட வரித்துக் கொள்கையா
னேர்தினந் திரவியங் கொடுத்து நேர்ந்துளோன். (௩௮)

தன்னொடு மத்தினந் தனைக்கைப் பற்றியே
மன்னிய பதியென வணங்கிக் கூடுக
சொன்னஞா யிற்றினிற் கேற்பகூ தகம்பிணி
நன்மைகூர் கிரணரா சீக நண்ணினல் (௩௯)

மறையவர் தமையருச் சித்து வண்மையாய்க்
குறையற வெட்டுப்பொன் கொடுக்க வில்லையே
லறைதரு மைந்துபொ னளிக்க வென்றுமு
னிறையவன் மகபதி யியம்பி னனரோ. (௪௦)

விருப்புறு முலகினின் மேவு வாரெனப்
பொருப்புவில் வானவன் புகன்றிட் டானெனக்
கருக்குழி யொழித்துநற் கரும மேபுரி
திருப்பொலி முனிவர்க்குச் சூதன் செப்பினன். (௪௧)

எழுபதாவது

அனங்கதான விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௯௯௧.

எழுபத்தோன்றாவது

அசூனிய சயன விரத வத்தியாயம்.

பகர்ந்திடு மசூனிய விரதப் பான்மையை
மகம்புரி முனிவரர் வழுத்த கென்றலுந்
திகம்பர னடியிணை சென்னி மேற்புனைந்
துகந்துயிர் சூதமா முனிவ னோதுமால். (௧)

மங்கையோர் பங்கனை வழுத்தி மான்மக
னங்கனை களுக்குநல் லாட வர்க்குமே
பொங்கிய விரதநோய் பொருந்தி டாதரு
டங்கிய விரதத்தைச் சாற்ற வேண்டுமால். (௨)

என்றலு மியம்புவா னினிய வாவணி
துன்றுசுக் கிலபக்கத் துதிகை நாடனி
னன்றிகொ ளாரண னளினி தன்னொடு
மொன்றியே பாற்கட லுறுவ னத்தினம். (௩)

நேசமாய்க் கண்ணனை நினைந்து பூசனை
யாசறச் செய்குவோ ரளவில் காமிய
மாசற வடைகுவர் வையங் கோனிதி
யேசறு தானங்க ளிலங்கச் செய்திடின். (௪)

ஏழெண்ணா யிரத்தெழு நூறு கற்பநாள்
வாழுநற் பலன்களை வழங்கு வான்கையி
லாழியான் றனைப்பொன்னை யமைத்துப் பொன்னினாற்
றாழ்வுறு தருளுஞ்சீ வற்ச தாரினை. (௫)

மன்னுசீ காந்தசீ பதிநல் வாசசீ
ருன்னுமவ் வியவென வோதிப் பூசித்துத்
தன்னுளத் தெண்ணங்க ளனைத்துஞ் சாற்றியே
பின்னையெம் பிராட்டியைப் பிரிந்தி டாமணீ. (௬)

சார்ந்திடு மசூனிய சயன மாய்த்தினஞ்
சேர்ந்திடல் போலவே யானென் றேவியோ
டார்ந்தசூ னியமொழித் தணைந்து வாழ்வுற
வோர்ந்தருள் செய்கென வுரைக்கு மேல்வையில். (௭)

துந்துமி வாத்தியந் துவைப்ப வின்றெனி
னுந்துகண் டாமணி யொலிப்ப வோதுகோ
விந்தர்தம் பூசனை விளங்கச் செய்திட
வந்தநாட் பகற்பொழு தருந்தி டாமலே, (௮)

கறியொடுப் பெண்ணெயுங் கருதி டாதுநல்
லறிவொடு மிருட்பொழு தருந்தி யவ்விருள்
செறிதுயி னீத்துநற் சிந்தை வேறுரு
நெறியொடு மிருந்துபின் னுதய நேரத்தில். (௯)

விளங்கிய சையையொன் றமைத்து விண்டுமா
துளங்களில் பதுமையை யிருத்திச் சூழ்சுடர்க்
களங்கமில் விளக்கனங் கலந்த பாத்திரம்
வளங்கொள்பா துகைகொடை வயங்கு சாமரை. (௧௦)

ஆசனந் தக்கணை யலர்ந்த வெண்மலர்
காசினீர்க் கும்பமுக் கனிகள் சந்தனர்
தேசுறு பொற்பணி சிறந்த வெண்டுகி
லேசுற லிவைமுத லியன்ற வீட்டியே. (௧௧)

மறைவலா னொருவனை வனிதை தன்னொடுங்
குறைவற வரித்தகங் குழைந்து பூசனை
முறையுறப் புரிந்திதமொழிந்து தாழ்ந்துமுன்
னறையனம் பாத்திர மபூப மாடையும். (௧௨)

அந்தணன் வனிதைபா லளித்து மாலர
விந்தைசேர் பதுமையும் விளங்கு கும்பமு
முந்துப கரணமு முறைவ ழாமலே
சிந்தைகூ ரந்தணன் செங்கை நல்கியே. (௧௩)

விருப்பொடு மனுப்பி யிவ்விரதப் பான்மையை
யொருப்பட மனைவியொ டுஞற்று வோர்கடாந்
திருப்பொலி மனையுடன் சிறந்து வாழ்குவர்
முருக்கிதழ் மடந்தையர் முயன்று ளாரெனின். (௧௪)

கணவனைப் பிரிவுறு திருப்பர் சற்பிணு
லிணையிலா வசூனிள சயன மென்றுசொ
லுணர்வுறு விரதத்தி னுண்மை யோர்ந்திரு
பணைமுலைப் பார்ப்பதி பாகன் கூறினன். (௧௫)

என்றுசூழ் பவவினை யிரித்தெஞ் ஞான்றுமே
கொன்றையந் தொடையணி குழகன் கூர்பதந்
துன்றிட வருந்தவந் தொலைவி லாதுசெய்
தொன்றிய சூதமா முனிவர்க் கோதினன். (௧௬)

எழுபத்தோன்றவது

அசூனிய சயன விரதவத்தியாயயம் முற்றிற்று.

ஆகத்திருவித்தம். உ௦௪௭.

எழுபத்திரண்டாவது

அங்காரக விரத வத்தியாயம்.

தெரிவருந் தவத்தின் மிக்க சிறப்புறு முனிவர் யாரு
மரியவங் கார கப்பேர் விரதத்தை யறைந்தி டென்னக்
கரியுரி போர்த்த முக்கட் கடவுட னடிகள் போற்றும்
பெரியமா தவத்துச் சூத முனிவரன் பேசு மன்றே (க)

பாலலோ சனன்றன் பாதம் பணிந்துநான் முகனை யொத்து
மேலதா முருவஞ் செல்வ மேல்விளைத் திடுவதான
சீலமா விரத மொன்று செப்புவல் கேட்டி டென்றே
கோலமா றேடு முக்கட் குழகனுங் கூற லுற்றான். (உ)

இனிவருந் துவாப ரத்திற் றருமபுத் திரப்பே ரேந்த
னனிதவ நைமி கத்தி னற்றவப் பிப்பி லாத
முனிவனை யிறைஞ்சிச் செல்வ முதலவு முத்தி தானும்
புனிதமாய் நல்கு நோன்பைப் புகல்கெனப் புகலு மன்றே. (ங)

வெம்மைதீர் தவத்தின் மிக்க வேயபொற் பாதம் போற்றுஞ்
செம்மைகூர் பிரகலாதன் சேய்விரோ சனனை நோக்கிக்
கொம்மைவெம் முலையா ராசை கொண்டிடு மழகுள் ளாய்நீ
யிம்மையில் வாழ்தி யென்று புன்னகை யியற்ற லோடும். (ச)

முனிவனை யிறைஞ்சி நீ புன் முறுவல்செய் கருமம் யாது
வினையம துரைத்தி டென்ன விரதமேன் மையினு லுற்ற
தனவடி வழகை யெண்ணித் தானகை புரிந்தேன் றக்கன்
புனிதநல் வேள்வி யாற்றும் போதுநம் பரமன் றன்னை. (ரு)

நிந்தனை யுரைக்கக் கேட்டு நிமலையங் கிறத்த லோடு
மெந்தைதன் கோபத் தானே வதனத்தி லெழுந்த வேர்வை
சிந்தலு நிலத்தில் வீர பத்திரன் சினத்தி னோடும்
வந்தன னனேகங் கைகால் வதனமா யுதங்க ளோடும். (சா)

மகத்தினைக் கெடுத்துப் பின்னு மன்னுயிர் வாங்கு மன்னோன்
முகத்தினை யெம்மா னோக்கி முனிவினைத் தவிர்ந்தி டிந்தச்
சகத்தினிற் கிரக மொன்பான் றமினுயர்ந் தவனே யாகி
திகழ்த்திடுஞ் செவ்வா யென்ன நேரும்பே ருனக்குண் டாமால். (எ)

நின்சதுர்த் தித்தி னத்தி னினைச்சிலர் பூசை செய்வா
ரன்பின்மற் றதனைப் பார்ப்போ ரழகொடா ரோக்கி யஞ்செல்வ
மின்புறப் பெறுவ ரொன்றே யிசைத்தலும் வெகுளி நீங்கி
நன்குறுஞ் செவ்வா யென்னு நாமத்தின் விளங்கி னானல். (அ)

மற்றவன் பூசை நாலாம் வருணத்தி னொருவன் செய்ய
வுற்றவன் வருண நீயு மொருவனச் சனனந் தன்னிற்
றெற்றெனக் காண்கை யானே திகழ்சவுந் தரியஞ் செல்வம்
பெற்றாயர் கிளைக ளெல்லாம் பிறங்கிடப் பிறந்தா யன்றே. (௯)

சிறந்தநின் காந்தி கண்டே திருந்திட விரோச னப்பே
ரறைந்தன ரசுரர் விண்ணோர் யாருநீ யசுர னாகப்
பிறந்தது பூசை செய்வோன் பிரியமா கநிவே திப்பக்
கறந்திடும் பசுவைக் கோறல் கண்டுநிந் தித்த லானே. (௧௦)

சூத்திரன் புரிந்த பூசை சூத்திர னொருநாள் கண்ட
மாத்திரத் திந்தப் பேறு வந்ததே யாயி னன்பி
னார்த்திடப் புரிந்தோர் பேற்றை யறைந்திட லரிதே யென்னக்
கூர்த்தவவ் விரத மான்மி யங் கூறெனக் கூற லுற்றான். (௧௧)

மங்கல வாரங் கூடுஞ் சதுர்த்தியின் மறையோன் றானந்
தங்கிய மிருத்தி கையாற் செய்தபின் சாம வேதம்
பொங்குமந் திரத்தி னானே செபிக்கபின் புகல்வே ளாள
ரங்கமா மாக மத்தி னரியமந் திரஞ்செ பிக்க (௧௨)

பகற்பொழு தினிது நீங்கிப் பாயிருள் படரும் போழ்தி
னகத்திலோ ரங்க ணத்தி னான்மெழுக் கிட்டுச் சுற்று
மிகத்தனிப் படங்கு மாலை வியப்புற நாற்றிக் கோல
மகத்துவத் தமைத்துச் செஞ்சந் தனத்தாற்குங் குமத்தா னாதல். (௧௩)

எட்டிதழ்க் கமலந் தீட்டி யிரணியப் பதுமை யோரங்
குட்டத்திற் புயங்க னான்குங் குலவவே செவ்வாய் தன்னைக்
கட்டழ குறவே செய்து கனிவெல்ல மிட்ட செப்புத்
தட்டின்மேல் வைத்துச் செப்புத் தாணியங் கூட வைத்து. (௧௪)

செங்கர கங்க னான்கிற் செவ்வரி பண்ணி காரம்
பங்கமில் பலங்க ளுய்த்துப் பன்னுநாற் றிசையின் வைத்துக்
கொங்கலர் செம்பூச் சந்தங் குலவிய பதும ராகம்
பொங்கிய விருப்பி னானே பூமகன் றனக்குச் சாத்தி. (௧௫)

சாமவே தத்திற் சொன்ன மந்திர தந்தி ரத்தாற்
றோமறு பூசை நன்றாய்ச் சோடச வுபசா ரத்தா
னேமகிழ் வுறவி யற்றி யிருத்திய கும்பத் துய்த்துச்
சேமமார் பதார்த்தம் யாவுந் திருந்தவே நிவேதித் தன்பாய். (௧௬)

கொம்புபொன் கட்டி நான்கு குளம்புவெள் ளியினாற் கட்டிச்
செம்பசு வொன்று கன்றுந் திகழுற வலங்க ரித்துப்
பம்புபால் கறப்பக் கஞ்ச பாத்திர மமைத்துப் பொன்னி
னம்பர மொன்று செப்புத் தாணிய மானை யோடும். (௧௭)

பூசைசெய் பதுமை தன்னைப் புலனைந்து மடக்கிச் சீல
மாசிலா ஞானங் கல்வி வயதுநல் லுருவம் வாய்மை
யாசலில் வாழ்க்கை பூண்ட சாமவே தியனை யார்வ
நேசமாய்ப் பூசை செய்து நிரம்புதக் கணைக் கீந்து. (கஅ)

பூமிபுத் திரராய்க் காந்தி யுடையராய்ப் புராந்த கச்சு
வாமிதன் சுவேத விந்து வினில்வரும் வரத ரான
தோமிலங் கார கப்பேர் மூர்த் தியேதொழுவோர்க் கிட்ட
காமிய வுருவ நல்கென் றரியசெங் கந்த நன்னீர். (கக)

அருக்கியங் கொடுக்க முன்சொல் பிரதிமை யளிக்கும் போழ்துந்
தருக்குமிம் மந்தி ரத்தைச் சாற்றுதறகைமை தன்பா
லிருக்குநற் பதார்த்தங் கட்கு ளிட்டமா னவைக ளெல்லாம்
பொருக்கென விருப்பி னோடும் பூசுரர்க் கினிதினல்கி. (உ0)

கோவொன்று மிடப மொன்றுங் குழுமியு சையை யொன்று
நாவொன்று மறைவல் லாளன் பெற்றிட நல்கி யப்பாற்
காவொன்று மலர்க வேிக் கைதொழு தனுப்பி யல்லிற்
பூவொன்று மிளகுப் பின்றி நெய்யொடும் புசித்தல் வேண்டும். (உக)

சாற்றுமிவ் விரத மெட்டுத் தரமேனுந் தரநான் கேனும்
போற்றிரு தரம தேனும் பூசனை புரிவோர் மேன்மை
நாற்றிசை பரப்புங் கீர்த்தி நல்லெழிற் செல்வ மேவி
யேற்றுமேழ் தீவு காப்பா ரெடுத்திடுஞ் சனனந் தோறும். (உஉ)

முக்கணெம் பெருமாற் கேனு மொய்துழாய் முகுந்தற் கேனுந்
தக்கபே ரடிமை யாயேழ் சகத்திர கற்ப கால
நக்கன்வாழ் கயிலை வாழ்வார் நல்விர தத்தை நீயு
மிக்குறப் புரிதி யென்ன விரோசனற் குரைத்தான் வெள்ளி. (உங)

வெள்ளிசொல் விதியினாற்றி விரோசனன் பலன்மேன் மேலுந்
தெள்ளிதி னடைந்தா னென்றே திகழ்பிப்பி லாதன் சொல்ல
வொள்ளிதிற் பூசித் திந்நோன் புனுற்றுவான் றரும னென்றே
கள்ளவிழ் மலரோன் கேட்பக் கறைமிடற் றண்ணல் சொன்னான். (உச)

எனக்கட லுதித்த மாய னிரவிதன் புதல்வ னுய
மனுக்கருத் தறவே சொன்ன மற்றதை வரைந்தோர் கேட்டோர்
நினைத்தவர்க் கழகு செல்வ நேருமென் றளவி லாவிற்
பனத்துயர் முனிவர்க் கெல்லாம் பகர்ந்தனன் சூதன் மாதோ. (உரு)

எழுபத்திரண்டாவது
அங்காரக விரத வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். உ0ஙஉ.

எழுபத்துமூன்றுவது

குரு சுக்கிரபூசை விரத வத்தியாயம்.

தேவர்தங் குருவின் பூசை சிறந்தசுக் கிரன்றன் பூசை
யோவிலா துரைத்தி டென்ன முனிவர ருவந்து கேட்பக்
காவலன் மனுவுக் கன்று கரியமா லுரைத்த வண்ணந்
தாவருந் தவத்தின் மிக்க சூதனே சாற்று மாலோ. (௧)

பின்னுமத் தாமற் பார்த்துப் பெருந்தவப் பிப்பி லாதன்
பன்னும்யாத் திரைக்க ணேகிற் பரிவுடன் மீனின் வெள்ளி
பொன்னிவ ரிருவர் பூசை புரிந்திட வேண்டும் வெள்ளிக்
கன்னவன் வெள்ளிக்கஞ்சத் தமைத்தபாத் திரங்கண் மேவ. (௨)

வெண்மல ரோடும் வெள்ளை யரிசிவெண் டுகின்மேல் வைத்து
வண்மைசேர் புகரை வெள்ளித் தகட்டினில் வடிவந் தீட்டித்
தண்மணித் தரளம் வைத்துச் சாமவே தியனைப் பூசை
பண்ணியன் னவனை முன்னர்ப் பகர்புக ரென்ன வெண்ணி. (௩)

பிருகுநந் தனனே போற்றி பேருல கீச போற்றி
யருமைசேர் கவியே போற்றி யசுரர்தங் குருவே போற்றி
யொருமையென் னுளத்தி னெண்ணு முயர்பல னருள்வா யென்னத்
தருமருக் கியத்தை யீந்து தானமங் குதவ வேண்டும். (௪)

சொல்லுமிப் புகரின் பூசை சுக்கிர னுதிக்கும் போழ்து
நல்லதாச் சொல்லும் போழ்து நகரில்வந் தணுகும் போழ்தும்
வல்லிதிற் பூசை செய்வோர் மனத்துறு பலன்பெற் றுய்ந்தே
குல்லையந் தொடையன் மார்பன் குலவும்வை குந்தஞ் சேர்வர். (௫)

தேவர்தங் குருவின் பூசை செம்பொனின் பரத்தி ரத்திற்
றுவரும் பொன்னி னன்னோன் றன்படி வமைத்து வைத்துப்
பூவலர் சந்தங் கூட்டிப் பூசனை யியற்று கிற்போன்
மேவுவெண் கடுகு பஞ்ச கவ்வியமென் பலாசின் பன்னம். (௬)

அரசிலை யிவைமேல் வைத்திட் டரும்புன லடைவின் மூழ்கி
விரவுபொன் னுடை சுற்றி விளங்குநெய் யோம மாற்றித்
திருமறை யோனைத் தாழ்ந்தோர் தேனுவை யலங்க ரித்துக்
குருவரை பதுமை கூடக் கொடுத்திட வேண்டு மன்றே. (௭)

கொடுத்திடும் போழ்து வார்த்தை குழுமுவாக் கியங்கட் கெல்லாந்
தொடுத்திடு நாத ராம்பிரு கற்பதி சொற்கு ரூர
மடுத்ததோர் கிரக கோர மணுகும்போழ் தமுத ரூப
மெடுத்தெனைக் காப்பாய் போற்றி யென்றுகல் லியாணப் போழ்தும். (௮)

சங்கிராந் தியினு மிந்த தனிப்பெறும் பூசை யாற்றிற்
பொங்குகா மியங்க ளெல்லாம் பொருந்தியே வாழ்வ ரென்னே
வங்குறு பிப்பி லாதன் றருமனுக் கறைந்தா னென்று
பங்கமின் முனிவர்க் கெல்லாம் பகர்ந்தனன் சூத னன்றே. (௯)

எழுபத்துமூன்றாவது
குரு சுக்கிர பூசைவிரத வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். உ௦சக.

எழுபத்து நான்காவது

கல்யாண சத்தமி விரத வத்தியாயம்.

உத்தம மனுவுக் கன்று மச்சமா யுதித்த மாயேன்
புத்தமு தென்னச் சொன்ன பொருவில்சீர் தருகல் யாண
சத்தமி விரதந் தன்னைச் சாற்றென முனிவர் கேட்பச்
சுத்தநின் மலனைப் போற்றுஞ் சூதமா முனிவன் சொல்லும். (க)

விரைமலர்ப் பொகுட்டின் மேவும் வேதியன் சுகமா ரோக்கியம்
புரையற வினிதி னல்கும் பொருவின்மா விரதந் தன்னைப்
பரையொரு பாக மேவும் பரமனே யருள்செய் கென்னத்
தரைபுக ழாதித் தன்றன் சரிதையைச் சாற்று நூலில். (உ)

தாரணி புகழ்கல் யாண சத்தமி விரத மாதி
யேர்பெறு விசோக சத்த மீயென வியம்பு மேன்மை
கூர்பல சத்த மிப்பின் குலவுநற் பதங்க ணல்குஞ்
சீர்பெறு சற்கா ரசத்த மிப்பெயர் சிறந்த தன்றி. (ங)

கமலசத் தமிசொன் மேலோர் கருதிய பலன்க ணல்கு
மமலமந் தார சத்த மியினொடு மரிய தாம
விமலமா நன்மை சேர்சு பசத்தமி விரத மீறுய்த்
தமலமே யறுக்கு மேழு விரதசத் தமியீ தாமால். (ச)

அவ்வகை விரத மேழு மளித்திடு பலன்கள் யாவுஞ்
செவ்விதாய் முன்ன ரோதும் விரதமே தேவ ராதி
பௌவமேழ் சுற்று மன்னோர் பழிச்சுதற் குரிய வாகித்
தவ்வறீர்ந் துயர்கல் யாண சத்தமி விரதந் தானே. (௫)

சாற்றுமற் றதற்குத் தான விசயசத் தமியென் றும்பேர்
மேற்றிகழ் தேவ ராற்றி வியப்புறு பதம்பெற் றுய்ந்தா
ராற்றரும் பலன்க ணல்கு மத்ன்விதி யறையு ஞான்று
தோற்றுமெத் திங்க ளேனுஞ் சுக்கில பக்கந் தன்னில். (௬)

மருவுசத் தமிவந் தெய்து மாதித்த வார மென்றே
யுரைசெய்நற் றினத்திற் பால்வார்த் துறுபுன லதனின் மூழ்கிப்
பரிவின்வெண் டுசு டுத்துப் பச்சைத்தண் டுலத்தி ஞலே
விரிவின்மண் டிலம்ப ரத்தி மீதிலெட் டிதழ தாக. (௭)

தீட்டுக கமல மொன்று பொருட்டொடுந் திகழுங் கீழ்பா
லேட்டினி னிலங்கச் செய்ய தபனுய வெரியின் றிக்குத்
தோட்டினின் மார்த்தாண் டாய துலங்குதென் றிசைத்தளத்தி
ஞட்டிய திவாக ராய நமவென வருச்சித் தப்பால் (௮)

நிருதிதன் றிசைத்த ளத்தின் விதாத்திரே நிலவு மேற்கின்
மருவிய தளத்தின் மீது வருணய வாயு மூலை
விரவிய தளத்திற் பாற்க ராயவீ றுத்த ரத்திற்
றருதளம் விசாத்த நாய நமவெனத் தான்பூசித்தே (௯)

ஈசான திக்கி னேட்டி னிரவியே நமவென் றும்பொற்
றாசார வணிந்து தேசு துலங்கிய நடுவந் தத்தின்
மாசான தகற்றி நற்ப ரமான்மநே நமவென் றோதித்
தேசாரக் கதையாற் பூவாற் சிறப்புற வருச்சித் தேத்தி. (௧0)

மருவுபல் சமயத் தோறும் வழுத்திடு மிரவி யேநின்
னிருமல கமலந் தன்னி னிலவுக வெனப்பி ரார்த்தித்
துரியநி வேத ஞதி சோடச வுபசா ரத்தாற்
றெரிவுறப் பூசை செய்து செபித்துநல் வரங்கள் கேட்டே (௧௧)

உத்தியா பனமுஞ் செய்திட் டுயர்மறை யாளர்க் கன்பாய்ப்
பத்தியா யன்ன நல்கிப் பகருமெட் பாத்தி ரத்தோ
டத்தமுந் தானஞ் செய்க வவ்விருள் கழிந்த பின்னர்
நித்திய கரும மாற்றி நிகழ்ந்தபா ரணமுஞ் செய்தே. (௧௨)

பின்னுநன் மறையோர்க் கன்பாய்ப் பெரும்புனற் கும்ப மாநெய்
சொன்னமுந் தானம் பண்ணித் துலங்கிய திவாக ரன்றுன்
மன்னுமிப் பூசை யாவு மகிழ்ந்திடக் கடவ னென்னப்
பன்னியோர் வருடங் காறும் பகர்ந்திடு மாதந் தோறும். (௧௩)

பூருவ பக்கத் துற்ற சத்தமி தினத்திற் போற்றிச்
சீருறு பதின்மூன் ருன திங்களிற் றிதியோ ரேழி
லார்வமாம் விசேட பூசை யாற்றநல் லந்த ஞளர்க்
கோர்பதின் மூன்ரு வீக வின்றேலொன் றேனு மீக. (௧௪)

உள்ளவ னுலோபஞ் செய்யி னுற்றிடா பயன்கள் யாவுந்
தெள்ளிதிற் பூசை செய்யிற் றீவினை யனைத்து நீங்கித்
தள்ளருந் தனதா னியாதி சம்பத்து மடைந்து பின்னர்
நள்ளிரு டிரக்கும் வெய்யோ னுலகமு நண்ணு வாரால். (௧௫)

சொன்னநல் விரதம் பாவத் தொகுதியைத் தொலைத்த லானு
மன்னுமங் கலங்க ளெல்லாம் வழங்குவ தாகை யானு
மின்னவே துவிற்க லியாண சத்தமி யென்ப ரீதைப்
பன்னினோர் வரைந்தோர் கேட்போர் பாவங்க ளனைத்து நீங்கி. (௧௬)

வாழ்வரென் றிறைவி திக்கு வகுத்ததை மச்ச மாகி
யாழ்கட லுதித்த மாயோ னன்றுயர் மனுவை நோக்கித்
தாழ்விலா துரைத்தா னென்றே தவத்துயர் முனிவர்க் கெல்லாஞ்
சூழ்பவத் தொடர்பு நீக்குஞ் சூதமா முனிவன் சொன்னான். (௧௭)

எழுபத்துநான்காவது

கல்யாண சத்தமி விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உ௦௫அ.

எழுபத்தைந்தாவது

விசோக சத்தமி விரத வத்தியாயம்.

சோகமார் துன்ப நீக்கும் விசோகசத் தமியின் றொன்மை
நாகபூ டணன்யாழ் வல்ல நாரதற் குரைத்த வண்ண
மோகமின் முனிவர்ப் பார்த்து மொழிகுவான் சூதன் மாசி
வாகுறு பூர்வ பக்கம் வந்தபஞ் சமிநன் னாளில். (௧)

காரெள்ளை யரைத்துத் தேய்த்துக் கவின்பெற முழுகி நித்த
மாருறு கரும மாற்றி யாலச்சர்க் கரையு மெள்ளுஞ்
சீரின்மூ விரலால் வெள்ளித் தின்றுப வாச மாற்றி
யேர்தரு பிரம சாரி விரதமா யிரவு போக்கி. (உ)

உதயத்திற் சட்டி நன்னாள் கருமங்க ளூஉற்றித் தான
முதலிய செய்கை யாற்றி மொழிதரும் பொன்னாற் கஞ்சத்
ததையித ழொருபூச் செய்து தபனனை யாவா கித்துச்
சிதைவிலா விரண்டு செப்பு வத்திரந் திகழச் சாத்தி. (௩)

செம்மலர் கொண்டர்ச் சித்துச் சிறக்கநற் பூசை செய்திட்
டும்மையான் வழுத்து கின்றே னுலகுளோர் துயர மாய
வெம்மைதீர்த் தருள்வ போல வெம்மையும் விரும்பிக் காத்திட்
டிம்மைநல் குரவு சோகப் பலனிவை யனுகா வண்ணம். (

காத்தருள் புரிந்தே யென்றன் கருத்தும தடியிற் பற்றி
யேத்தவே யருளி யீற்றி னும்பதத் திருத்தி யென்றுந்
தோத்திரஞ் செய்து வேண்டிச் சொலும்பூசை முடித்துப் பின்னர்
பூத்திக ழந்த ணாளர் தம்மையும் பூசை செய்தே. (௫)

அருந்திக்கோ சலத்தை யற்றை யல்லிற்கண் டுயின்று காலைப்
பொருந்துநீர்த் தானஞ் செய்து பூசனை வழாது போற்றித்
திருந்துத்தி யாப னஞ்செய் தன்னம்வே தியர்க்கே நல்கி
விரும்புசர்க் கரையும் பொன்னால் விதித்தசெங் கமலப் போதும். (௬)

சிவப்புவத் திரத்தி னோடுஞ் சிறக்கவந் தணர்பா லீந்திட்
டுவப்புறு லவண மெண்ணெ யொழித்துமே மோனத் துண்டு
நிவப்புறு சிவபு ராண நிகழ்த்துநற் காதை யாவுந்
தவப்பயன் வழாது கேட்ட சத்தமி மறுநா டன்னில் (௭)

பாரணஞ் செய்தோ ராண்டு பகர்தரு மாதந் தோறும்
பூருவ மமர பக்கம் பொருந்துசத் தமிக டோறுங்
கூருமிம் முறைமை யாற்றி யெதிர்வரு கும்ப மாத
மேர்கொள்சுக் கிலபக் கத்திவ் விரதத்தை யியற்றி னன்றும். (௮)

விரதத்தை முடிக்கு ஞான்று விரைமலர்க் கமலம் பொன்னிற்
புரையற்ற தாகச் செய்து பொருந்துசர்க் கரைநி றைத்த
கரகத்தின் மீது வைத்துக் கருதுநற் சையை யோடு
முரைபெற்ற கபிலையோடு மோங்குவே தியர்கட் கீந்து. (௯)

தெரியுநல் விரதந் தன்னைத் திரவிய லோப மின்றி
யரியதா யாற்றி னூறு யிரகோடி சன்மம் பூமிக்
குரியராய் விபவத் தோடும் பொருந்தியோர் வியாதி யின்றிப்
பரிவுறு பரம லோகப் பதம்பெற்று வாழ்வ ரன்றே. (௧௦)

இக்கதை படித்தோர் கேட்போ ரிரும்பத மடைவ ரென்ன
முக்கண னுரைத்த வண்ண மொழிந்தமான் மச்ச மாகி
மிக்கமா மனுவுக் கன்று விளம்பினு னென்று சூதன்
றொக்கவான் முனிவர் கேட்பத் துகளறச் சொற்று னன்றே. (௧௧)

எழுபத்தைந்தாவது

விசோக சத்தமி விரத வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உ௦௬௧.

எழுபத்தாறுவது

பலசத்தமி விரத வத்தியாயம்.

சீர்பல னதிக மாகச் சேர்த்திட்ட காம நல்கும்
பேர்பல சத்த மிப்பேர் விரதத்தைப் பேசு கென்றே
சார்பல முனிவர் கேட்பச் சருக்கரை நறிய செந்தே
னூர்பலம் விரத மென்ன வருந்தவச் சூதன் சொல்வான். (க)

பலசத்த மிப்பேர் நோன்பைப் பகர்ந்திடிற் பண்டா ரத்தி
னிலகுசுக் கிலபக் கத்தி னெழில்கொள்பஞ் சமிதொ டங்கி
நிலவிய சட்டி தன்னி னிகழுப வாசஞ் செய்து
நலனுறு பொன்னின் மிக்க நளினமொரன் றமையச் செய்தே. (உ)

சருக்கரை யுடன்செம் பொன்னாற் சாற்றிய வெள்ளி தன்னாற்
றிருத்திய பழமி ரண்டுஞ் சிறக்கவோர் பலத்திற் செய்து
பொருந்துசத் தமிநா டன்னிற் பூசுர னொருவன் றன்னை
வரித்தவன் றேவி யோடும் வரன்முறை பூசை யாற்றி. (ங)

இரவியென் னிடத்தின் மிக்க பிரீதியா யிருக்க வென்ன
வரியபொற் கமலத்தோடு மப்பல மவர்கட் கீந்து
சுருதிவல் லவர்க்கே யாறு சுவையொடு மன்ன மீந்து
பரவுமத் தினத்தி லாவின் பாலினைப் பானம் பண்ணி. (ச)

அற்றைநா ளுபவா சத்தை யாற்றியே யடைவின் மேவு
மற்றைநா டொடங்கி நித்தம் வளரருங் கனிநல் லோர்க்குப்
பற்றுகிட் டினபக் கத்துச் சத்தமி வரைக்கும் பாலிற்
றுற்றகிட் டினபக் கச்சத் தமிக்குமிவ் வாறு ஞற்றி. (ரு)

இவ்வகை மாதந் தோறு மிரண்டுசத் தமிக்கு மன்பாய்ச்
செவ்விதிற் செய்யு ஞான்று திகழ்தரு மருக்கன் செங்கே
ழெவ்வமி லிரவி யோங்கு மெழிற்பிர மாவி லங்குந்
தவ்வலில் சூரி யன்சுக் கிரன்றகு மரிசி வன்றன். (சா)

விளம்பிய சிரிமான் மிக்க விபாவசு துவட்டா மேவுங்
களங்கமில் வருண னென்னக் கருதுபன் னிரண்டு பேருந்
துளங்கலில் திங்கட் கொன்றாய்ச் சொல்லருக் கனைத்தொட் டோதி
யுளங்கெழு பிரீதி யென்பா லுவப்பினுண் டாக வென்றே. (எ)

பூசனை புரிந்து தானம் பூசுரர்க் களித்த பின்றை
மாசறு விரதாந் தத்தின் மனைவியொ டொருவே தற்குத்
தூசணி மணிநன் மாலை துலங்கிட வணிந்து பூசித்
தேசறு சருக்க ரைப்பாத் திரப்பல மிரணி யந்தான். (அ)

நறுந்தம னியப்பூம் போது நான்மறை யாளர்க் கீயப்
பெறுஞ்சத மறைவல் லோனைப் பிறங்குமா தவஞ் செண்ணி
யறங்கெழு முமது பத்த ராற்றிய கரும மெல்லா
முறும்பொழு தின்மை போனு னுனாற்றிய விரத மேன்மை. (கூ)

அறிந்தினி தனந்த மான பலனைநீ யளிப்பா யென்றே
சிறந்தவிவ் விரத மாற்றிற் றிவாகர னுலகிற் சேர்வார்
பிறங்குமிக் கதையைச் சொல்வோர் பெட்புடன் கேட்போர் கற்றோர்
நிறைந்தமங் கலங்கண் மேவி நீணிலம் புரப்ப ரென்றே. (க0)

இந்நல் விரத மேன்மை யெந்தைநா ரதனுக் கோதும்
பந்தமில் சரிதை மச்சப் பச்சைமான் மனுவை நோக்கிச்
சுந்தரத் துரைத்த வண்ணஞ் சூழ்ந்தமா முனிவர்ப் பார்த்து
நந்தலி லாத கேள்விச் சூதன்முன் னவின்றா னன்றே. (கக)

எழுபத்தாறவது

பலசத்தமி விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உ0அ0.

எழுபத்தேழாவது

சற்கார சத்தமி விரத வத்தியாயம்.

பொற்சடா மகுடந் தாங்கும் புகழ்முனி வரர்கள் யாருஞ்
சற்கார சத்த மிப்பேர் விரதத்தைச் சாற்றி டென்னக்
கற்சிலா தரனு முக்கட் கடவுளைக் கருத்தி னெண்ணி
நற்புரா ணஞ்சொல் சூத முனிவர னவிலு மன்றே. (க)

பிரமனைப் பிணுகி நோக்கிப் பெரும்பவ மொழித்து வேட்ட
தருமொரு சற்கா ரச்சத் தமிவிர தத்தைக் கேளோன்
றிருமைசேர் மாக மாதத் திலங்குசுக் கிலபக் கத்தி
னுரியசத் தமியிற் பானு வுதயத்தி னியமத் தோடும். (உ)

வெண்டிலத் தானீர் மூழ்கி வெண்டுகில் வெண்பூ வெண்சந்
தெண்டிசை யுவப்ப மெய்யி னியல்புறப் புனைந்து வீட்டிற்
கொண்டநாற் கோண வேதி யமைந்ததிற் குங்கு மத்தான்
முண்டகம் பொகுட்டி னோடு முறைபெற வரைந்து பின்னர். (ங)

சவித்திரே நமவென் றோதிச் சந்தனு மங்க ளாதி
யுவப்பினி னிவேத னங்க ளுஞற்றியோ ருதக கும்ப
நிவப்பமீ திருத்தி வெல்ல நிறைந்தபாத் திரமேல் வைத்துப்
பவித்திரம் வெண்பூ மாலை பானிறத் துகிலுஞ் சாத்தி. (௪)

ஆடகத் தகட்டின் வாசி மீதருங் கதிரோன் றன்னை
நீடொளி வயங்கத் தீட்டி நிறைத்தகும் புத்தில் வைத்துச்
சூடலர்த் தொடையல் சாத்திச் சோடச வுபசா ரத்தா
னுடுறப் பூசை சொற்ற வித்திரே நமவென் றேத்தி. (௫)

வேதநீ சருவ தேவ மயமென விளம்ப லோடு
மோதுமா ரமுத மென்று முறையிட மாத லானு
மேதமே யொழித்து நன்மை யின்றரு ளென்று பஞ்ச
பேதகவ் வியம ருந்திப் பிறங்கிய வலப்பா றன்னில். (௬)

பூமியிற் சயனஞ் செய்தே பொருந்துசா கரத்திற் பானு
நாமமந் திரத்தை யெண்ணி நள்ளிருட் பொழுது நீத்துத்
தோமறு முதய காலச் செய்கடன் றொலைத்து முன்னூன்
மாமறை யவர்க்குக் கும்பம் பதுமைபொன் வழங்கிப் பின்னர். (௭)

சருக்கரை நறுநெய் யான்பா றளைத்தபா யசத்தொ டன்ன
மிருக்கொலி மறையோர்க் கீந்திட் டெண்ணெயோ டுப்பிலாம
லருத்தியின் மோன மாக வருந்தியே மாதந் தோறு
மருட்டவிர் பூசை யாற்றி வருடமொன் றாய பின்னர். (௮)

ஆவினை யலங்க ரித்திட் டழகுறு சையை யோடும்
பாவக மான துய்ய சருக்கரை பகருந் தானந்
தாவரு மறையோர்க் கீந்து தக்கதாங் கிரக தான
மேவுப கரணத் தோடு வியன்பெற வளிக்க நன்றாம். (௯)

பொன்னினாற் குதிரை யொன்றோ டாயிரம் பொன்னைஞ் ஞூறு
மன்னிய நூற்றிற் செய்க வறியன்பொன் பத்தி லேனு
முன்னுபா தியினா லேனு முஞற்றியோர் தானஞ் செய்க
துன்னுபாக் கியத்தன் லோபஞ் செய்திடிற் றோட மாமால். (௧௦)

செங்கதி ரமுத முண்ணு முகத்திலத் திவலை சிந்திப்
பைங்கரும் பெள்ளி னோடு பயறிவை முளைத்த லானே
புங்கமா மிவைய வற்றுட் புனிதமாங் கரும்பின் கட்டி
தங்குமவ் வியத்தி னோடு கவ்வியந் தனக்கு மிக்காம். (௧௧)

ஆகையா னுரைத்தி டுஞ்சர்க் கரையையுள் ளன்பி னோடு
மோர்கையா னேழாம் பக்கத் துயர்ச்சியாந் தானஞ் செய்யிற்
பாகுறு சற்கா ரச்சத் தமியெனப் பகர்வ ரீது
வாகுறு மசுவ மேத மகப்பயன் கொடுக்கு மாலோ. (௧௨)

இவ்விர தத்தை யன்பா னியற்றுவோன் புவியிற் பாவப்
பௌவமே யொழித்து மக்கள் பௌத்திரர் விபவத்தோடு
கவ்வையற் றிருந்து கற்பங் களிப்பராற் சுவர்க்க மெய்தி
நவ்விய மழுவு மேந்தி நண்ணுவர் சிவலோ கத்தில். (கங)

இக்கதை கேட்போர் சொல்வோ ரியற்றுவோ ரியற்றச் சொல்வோர்
தொக்கவா னுலகஞ் சேர்வ ரென்றனர் சொற்ற வண்ண
மிக்கமா மனுவுக் கோதும் விரிவினே விளக்க மாகத்
தக்கமா முனிவர் கேட்பச் சூதனே சாற்றி னுனல். (கச)

எழுபத்தேழாவது
சற்கார சத்தமி விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உ0கூச.

எழுபத்தெட்டாவது

கமலசத்தமி விரத வத்தியாயம்.

நிமலனைப் பரவித் தவம்பல மகங்க ணிகழ்த்திய சவுனக ராதி
யமலமா முனிவர் யாவரும் பெருமை யாயுளா ரோக்கிய நல்கும்
கமலசத் தமிப்பேர் விரதத்தைத் தெளியக் கருதிநீ யுரைத்திடு கெனலும்
விமலநற் புராண மேன்மைதேர் சூத முனிவரன் விளம்புவ னன்றே. (க)

முளரியம் பொகுட்டி லரசுவீற் றிருக்கு முண்டகன் முகமலர் நோக்கித்
தளரிடை வைவேல் விழியொரு பாகன் றன்னக மகிழ்ந்தினி துரைப்பா
னுளமகிழ் கமல சத்தமி விரத முரைத்திடும் விரதத்தின் மேலாந்
தளர்வில்சித் திரையிற் பூருவ பக்கந் தழைத்தசத் தமிதினந் தன்னில். (உ)

உதயகா லத்திற் செய்கடன் கழித்தே யுறுசிறு வெண்கடு கரைத்துத்
ததைமலர்ச் சென்னி மீதினிற் றேய்த்துத் தண்ணறும் புனலினின் மூழ்கிப்
புதியநற் கமலம் பொன்னினுற் செய்து பொலிதிலப் பாத்திரத் திருத்தி
யதிலிருந் துகில்பூ மாலையா ரத்தா னலங்கரித் தருச்சனை புரிந்து. (ங)

கமலவத் தாய பிரபாகரா யவிசு வதாரிணே நற்றிவாக ராய
நமவெனு மந்தி ரந்தனி லியற்றி நறும்புன னிறைந்த கும் பத்தோ
டமர்தரு கமல மறையவன் றன்னை யலங்கரித் தவன்கையி லளித்து
விமலநற் கபிலை யொன்றலங் கரித்து விதிமுறை நல்கினுத் தமமாம். (ச)

அத்தின முண்டி நீத்ததன் மறுநா ளறுசுவை யுடன்மறை யோர்க்குப்
புத்தமு தளித்துத் தசையொடு சயிலம் பொருந்திடா துண்டபின் புகலும்
வித்தக மாதந் தொறும்வளர் பக்கம் விளங்கிய சத்தமி தன்னிற்
பத்தியா யுரைத்த வண்ணமே பரவிப் பண்ணுக லோபமொன் றின்றி. (ரு)

விரதவந் தத்தில் விளங்குபொற் கலசம் விரிவுறு சையைபாற் பசுநற்
கிரகமாத் திரமா சனங்கிளர் தீப முதலிய கேழ்கிளர் மறையோர்
கரமுற வளித்துக் கமலசத் தமியின் விரதத்தைக் கவின்பெற வாற்றின்
வரமுறு போக போக்கியந் துய்த்து வளர்கதிர் மண்டிலத் துறைவார். (௬)

விதிமுறை விரதஞ் செய்கெனச் சொல்வோர் விளங்கிடச் செய்வதைப் பார்ப் [யோர்
மதியுறப் படிப்போர் கேட்பவர் யாரும் வழங்குநல் விபவமே துய்த்துப்
பதிவுறு மிரவு மண்டிலத் துறைந்து பகர்ந்திடு துறக்கநா டடைவ
ரிதுமிக வதிக மெனவுரைத் தானென் றிருடிகட் கியம்பினன் சூதன். (எ)

எழுபத்தெட்டாவது

கமலசத்தமி விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், உ௬௦௧.

எழுபத்தொன்பதாவது

மந்தார சத்தமி விரத வத்தியாயம்.

சகலபா வமுநீத் தருளுமந் தார சத்தமி விரதத்தை வெள்ளி
நகமுறு விமல் னளினவீட் டுறையு நான்முகற் குரைத்ததவா முனிவ
ரகமகிழ் வுறநற் சூதமா முனிவ னன்பொடு மின்புற மொழிவான்
மகமுறு மாதந் தன்னில்வெண் ணிலவு வளர்பிறை மருவுபக்கத்தில். (௧)

பஞ்சமி தினத்தி லொருபொழு துண்டு பகர்தரு சட்டியிற் பற்கள்
விஞ்சுற விளக்கித் தானமே யாதி வேண்டிய செய்கடன் கழித்து
வஞ்சரொ டுறையா திருந்துப வாச மாற்றிநான் மறையவர் பூசை
யெஞ்சலி லாம லாற்றிபவ் விருளி லிலங்குமந் தாரைநாண் மலரை. (உ)

அருந்தியே மறுநாள் சத்தமி யதனி லறைதரு தருமங்க ளாற்றிப்
பொருந்திய மறையோர்க் கன்னங்க ளருத்திப் பொன்னின்மந் தாரைமாமலர்கள்
வருந்தொகையிருநான் கமைத்தொருபதுமை மலர்க்கையில்வனசமொன் றுளதாய்த்
திருந்தவே புருட ரூபமாய்ச் செய்து சிறப்புறு தாம்பிரத் தட்டில். (௩)

கருந்தில மதனு ளெட்டித ழோடுங் கவின்பெறக் கமலமொன் றெழுதி
யருந்தைதீர் பாற்க ராயநற் சூரி யாயவர்க் காயவப் பாலும்
பொருந்தரி யமனே புகலதி விதாம னேசண்ட பானுவே போற்றுந்
தெரிந்துயர் பூட்டி ணேயானந் தாய நமவந்தந் திகழுமந் திரத்தால். (௪)

கிழக்கிதழ் முதலாக் கிளர்ந்தவீ சான மீறதாய்க் கிளர்பொன்மந் தாரை
யிழுக்கமின் மலரா னருச்சனை செய்தே யியன்றபூம் பொகுட்டினி னடுவில்
விழுக்கற வியற்றும் பதுமையை வைத்து வளர்சரு வான்மநே நமவென்
முழுக்கறப் போற்றி வெண்டுகி லணிந்தே யலருறு மாலைசந் தனமே. (௫)

அணிந்துநற் கனிகா யபூபமே முதல நிவேதன மடைவினி னூற்றிப் [த்துத
பணிந்துநான் மறையோன் றனக்கிவை யெல்லாம் பரிவொடு தானமா யளி
தணந்துநற் றயில முப்புநீத் துண்டி தானுணா யாடிடா திருந்து
குணம்பெறக் கிழக்கு முகமதா யருந்திக் குலவுநன் மாதங்க டோறும். (௬)

விளம்புசத் தமிக டோறும்விதி முறையோர் வருடமும் விரிவுறப் புரிந்து
வளம்பெற வருட மாயபின் பொன்மந் தாரைமா மலரழ கான
களங்கமில் கலச மீதினில் வைத்துக் கபிலையொன் றலங்கரித் தீக
துளங்கலில் செல்வம் வேண்டினேன் றூன தூசற வழங்குபோ தினிலே. (௭)

நவிலுமந் தார நாதாய மந்தார ராச னுயநம வென் றேத்திப்
பவமுறு சனனப் பௌவமே நீக்கிப் பதம்பெற வருளெனப் போற்றிப்
புவனியி னன்பின் வழங்குக விந்தப் புனிதமாம் விரதத்தைப் புரிந்தோ
ரவனியி னிதியா ரோக்கியம் பெற்றே யரன்பத மடைவ ரெஞ்ஞான்றும். (௮)

கயிலையங் கிரியி லயில்விழி யொருபாற் கலந்தருள் கறைமிடற் றண்ணல்
வெயில்விரி கமல வீட்டினி னுறையும் விரிஞ்சனுக் குரைத்தன னென்ன
புயனிற வண்ணன் மனுவினுக் குரைத்த பொருளினை யருந்தவர் கேட்ப
மயலறு சூத முனிவரன் றெரிந்து வரன்முறை வகுத்துரைத் தனனால். (௯)

எழுபத்தோன்பதாவது

மந்தாரசத்தமி விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௧௧௦.

எண்பதாவது

சுபசத்தமி விரத வத்தியாயம்.

முயன்மக முறைக ளாற்றி மும்மல முருக்கி ஞான்று
மயலறு தவத்தை யாற்று மாதவர் மகிழ்ச்சி நல்கு
முயர்சுப சத்த மிப்பேர் விரதத்தை யுரைத்தி டென்ன
நியமநிட் டையைச்சேர் சூத முனிவர னிகழ்த்து வானால். (௧)

முக்கணெம் பெருமான் பாத முறைபெற வழுத்தி யேத்தித்
தக்கசத் தமியின் மிக்காந் தகுசுப சத்த மிப்பேர்த்
தொக்கநல் விரத மேன்மை சொல்கென மறையோர் கேட்ப
மிக்கமார் கழிமா தத்தில் விளங்குசுக் கிலபக் கத்தில். (௨)

பஞ்சமி யொருபோ துண்டு பகர்தருஞ் சட்டி நாளிற்
றஞ்சமா முபவா சத்தைத் தகைபெற வியற்றிக் கோவொன்
றெஞ்சலில் சந்த மாலை யியல்புற வணிந்து போற்றிச்
செஞ்சுட ரிடத்திற் றேன்றிச் சிறப்புள கபிலை யென்றே. (௩)

பணிந்துளம் வேட்ட யாவும் பணித்தரு ளென்று வேண்டித்
திணிந்ததோர் செப்புத் தட்டிற் றிலமொரு படிநி றைத்துக்
கொணர்ந்துசெம் பொன்னுற் சேவைக் குணம்பெறச் செய்து வைத்தே
மணங்கமழ் மாலை தூசு மருவுசர்க் கரைய பூபம். (௪)

கனிபர மான மானெய் கருதுறு மிவற்றை யெல்லாந்
தனியிரு சந்தி தன்னிற் றயங்கொளி ரரிய மாவுக்
கினியநற் பிரீதி யாமென் றிருபிறப் பாளர்க் கீந்து
புனிதமாங் கவ்வி யத்தைப் புசித்துப்பூ சயனஞ் செய்து. (௫)

சத்தமி தினத்தெ ழுந்து தான்புரி கரும மாற்றிப்
பத்தியின் மறையோர்க் கன்னம் பரிந்தளித் தினிதி னுண்ண
லுத்தம மிந்த நோன்பை யுறுதிங்க டோறு மாற்றி
வத்திர மிரண்டா லொன்றும் வழங்குபொன் னிடப மொன்றும். (௬)

அந்தணர்க் களிக்க விவ்வா றாண்டொன்று முடிந்த பின்னர்
முந்துப கரணஞ் சையை முதிர்மொழிக் கரும்பு வெல்லஞ்
சிந்தைகூர் செப்புத் தட்டிற் றிலம்பொன்னி னிடபம் யாவு
மந்திர மறையோர் கையில் விச்சுவான் மகிழ வீந்தே. (௭)

சொல்லுமிவ் வண்ணம் போற்றுஞ் சுபசத்த மியைநா ளுந்தான்
பல்வகைப் பலன்க ளீயும் பலசத்த மியதா மென்ப
ரொல்கலி லாம லாற்றி லுற்றவச் சனனந் தன்னில்
வல்வலிச் செல்வ முண்டாய் மறுமைவா னுலகஞ் சேர்ந்தே. (௮)

தேவர்கந் திருவரோடு மரம்பையர் சிறந்து போற்றப்
பூவமர் கற்ப கத்திற் புரந்தர னென்ன வாழ்ந்து
தாவுகற் பாதி தன்னிற் றரணியேழ் புரந்து வாழ்வர்
பாவமாம் பிரம கத்தி பத்துநூ றகற்றி யப்பால். (௯)

சொற்றிடு புருண கத்தித் தொடர்ச்சிநூ றகற்று மிக்காய்ப்
பற்றுமிவ் விரதந் தன்னைப் படித்துளோர் கேட்போர் செய்கை
யுற்றெதிர் கண்டோர் யாரு முறுபவப் பீடை நீங்கி
யற்றமில் சீர்த்தி விச்சா தார்க்கிவ ணசரா வார். (௧௦)

இவ்விர தத்தை யாண்டோ ரேழனுட் டித்தார் தாமே
திவ்விய வுலக மேழுஞ் சிறந்தர சளித்துப் பின்னர்
வெவ்வினை யொழித்து விண்டு மெய்ப்பத மேவு வாரென்
றவ்விய மகற்று மீச னறைந்தவா றறைந்தான் சூதன். (௧௧)

எண்பதாவது

சுபசத்தமி விரத வத்தியாய முற்றும்.

ஆகத்திருவிருத்தம். உகஉக.

எண்பத்தொன்றாவது

விசோகத் துவாதசி விரத வத்தியாயம்.

புலன்களைந் தடக்கி மனமொருப் படுத்திப் பொருவரும் பொருளையுள் ளிருத்திக்
கலங்கலி லரிய தவஞ்செயுஞ் சவுன காதியா மாதவ முனிவர்
துலங்கிய பலன்க ளளித்திடும் விசோகத் துவாதசி விரதத்தைச் சொல்கென்
றிலங்கெழிற் சூத முனிவனைக் கேட்ப வினிதுற நனியியம் புவனால். (௧)

கறைபழுத் தொழுகு கதிர்நெடு வடிவேற் காளைவை வச்சுத மனுவா
மிறைதிரைக் கடல் வயின்றி துயினீத் தெழில்பெறு மச்சமா யுதித்த
நறைகமழ் துளபத் திருநெடு மாலி னளினமா மலர்ப்பதம் போற்றிப்
பிறிவுறு சோகந் தவிர்த்துயர் செல்வம் பெருகுமா றருள்கென வுரைப்பான். (௨)

சோகமே தவிர்த்துத் தனந்தரும் விசோகத் துவாதசி விரதம்வா னவர்க
ளுகர்கந் திருவர் விஞ்சையர் முனிவர் யாவரு தாடுநற் கரிதாம்
வேகநா யகன்முன் னியம்பிய தாகு மிசைத்திடி லதிரக சியமாம்
போகமே யுதவு மைப்பசித் திங்கட் பூருவ பக்கமார் தசமி. (௩)

நாளினோர் பொழுது துய்த்துநன் னியம நவையற வாற்றியே பின்னாட்
கோளறு மேகா தசியுண வொழிந்து கொன்றைவே ணியன்பத மெனினும்
வாளரா வணையான் பதமல ரெனினு மருமல ராலருச் சித்து
நீளருள் புரியுந் துவாதசி தன்னி னியமமாய்ப் பாரணஞ் செய்வேன். (௪)

என்றுசங் கற்பஞ் செய்துறு தசமி யினிற்சிறி தொருபொழு தருந்தித்
துன்றிரு ணியமத் துடன்விழி துயின்று சூரிய னுதித்தெழு முன்ன
ரன்றுறு கரும மாற்றியோ டதியோ டமைந்தகவ் வியத் தினீ ராடி
மன்றலர் கமலை பூசனை தொடங்கி வணைந்துவெண் கலைவெள்ளி மலரும். (௫)

நீலமா மலருங் கொண்டருச் சித்து நெடியமால் செந்தளிர்ப் பதத்தின்
மேல்விசோ காய மிளிர்கணைக் காலின் மிகுவர தாயசா னுவினில்
வால்திரீ சாய வூருவி னிடத்தில் வருசல சாயினே குய்யத்
தேலுநற் சந்தர்ப் பாயசொல் லரையி லியன்மாத வாயநல் வயிற்றில். (௬)

தாமோத ராய திகழ்தரு டக்கந் தனில்விபு லாயநா பியினிற்
காமுறு மினிய பற்பநா பாய கருதிய வகமன்ம தாய
தோமிலா மார்பிற் றிகழ்சீத ராய துணைக்கையின் மதுசிதே துலங்கும்
வார்மநீள் புயத்திற் சக்கரி னேசொல் வலப்புறத் தினிலுயர் சதினே. (௭)

கண்டத்தில் வைகுந் தாயசெவ் வாயிற் கருதிய வுகமமு காய
துண்டத்தில் சோகநிதையேசெங் கண்ணிற் சொல்லிய வாசுதேவாய
முண்டத்தில் வாம னயவிற் புரூர மொழிந்திடு மரையேநற் கோசங்
கொண்டொத்த மாத வாயபொன் மோலி குலவு விசுவ ரூபினே சென்னி. (௮)

திகழ்சரு வான்ம னேயென நமோந்தஞ் சிறந்திட வருச்சனை புரிந்து
புகல்கொழுங் கனிபைந் துணர்நறு மாலை புதுமணங் கமழ்செழுஞ் சாந்தந்
தகுமிவற் றிற்பா தாதிகே சாந்தந் தாவில்கோ விந்தரை யருச்சித்
தகமகிழ் வுறவே மண்டபங் கட்டி யலங்கரித் ததிற்சது ரிப்பாய். (௯)

வேதிகை வடபாற் ருழ்வுற வகுத்து விரலொரு மூன்றுய ரத்திற்
றீதிலெண் விரலி னுயர்மதி ளெடுத்துச் செழுமலர்த் தாமங்க ளூற்றி
யேதன முறுத்தி யாற்றுவெண் மணலி னிலக்குமி தனையினி தெழுதி
யோதுமவ் வேதி கையினிடை வைத்தே யுவப்பினு லதைவலஞ் சூழ்ந்து. (௧௦)

தேவியைச் சாந்தியை யிலக்குமி யைச்சி ரியைபுட்டி யைதுட்டி யைமேற்
ருவிலா துயர்ந்த பிருட்டியை மற்று மிருட்டியைத் தாம்நம வந்த
மேவுற விராம்பி யருச்சனை புரிக விசோகைநீ யென்றுயர் நீக்கி
யோவிலா வரஞ்சந் தானநற் செல்வ முதவென வேண்டியுண் மகிழ்ந்து. (௧௧)

வெண்டுகி லந்த முறந்தனைச் சூழ்ந்து மென்கனி பண்ணிகா ரம்பொற்
புண்டரீ கங்கண் முதலருச் சித்துப் புகல்குசோ தகமிர வருந்தித்
தண்டுபல் லியங்க ளூட்டிய பாட்டுத் தனித்தனி கமலைமுன் னியற்றிக்
கண்டுயில் புரிந்து துவாதசி தினத்தி னெழுந்துசெய் கடன்முறை கழித்து. (௧௨)

தம்பதி தம்மை மஞ்சமே லிருத்திச் சலசாயி நேநம வென்று
வெம்பவந் தீர வருச்சனை புரிந்து வெண்டுகில் சையைபொன் னளித்தே
யிம்பரின் மறையோர்க் கனநனி நல்கி யின்சுவைப் பாரணஞ் செய்து
நம்பரன் சரிதைப் புராணமே கேட்டு நண்பக னித்திரை யொழித்தே. (௧௩)

மாதங்க டோறு மிவ்வண முஞற்றி வருடமொன் றுயபின் சையை
கோதறு குளத்தா லமைத்திடுந் தேனுக் குலவிலக் குமிவளை முறமுஞ்
சீதரன் றிருவை நீயகலாத செய்கைபோ லுருபசந் தோட
மேதமில் செல்வ மகன்றிடா திருப்ப வருளென வேதியர்க் கினிதே. (௧௪)

அளித்திட வேண்டும் விபவமே யளிக்கு மருச்சனைக் காமல ரியம்பிற்
றெளித்தொளிர் வாடா மாலைகுங் குமஞ்சீர் திகழ்சிறு சண்பக நறுந்தேன்
துளித்திடு கைதை பாதிரி குச்சந் துலங்கிய நொச்சி செங்கடம்பு
களித்தளி துயிலு மல்லிகை நீலங் கமழ்கர வீரமுத் தமமாம். (௧௫)

எனப்புகன் மச்ச ரூபியை வணங்கி யிருகுள தேனுவின் விவர
மனுப்புக லென்னக் கோமயங் கொண்டு மனையிலோர் சார்நனி மெழுகி
முனைப்பெருந் தருப்பை பரப்பியே குண்டான் முகமுற நான்முழ மான்றோ
றனைப்பதம் வுடக்காய் விரித்தது டசுவாய்ச் சார்புறப் பின்னுமான் றோலால். (௧௬)

கன்றென விரித்து மீதுறு கரும்பின்கட்டியை நாலுபா ரத்தி
னொன்றுறக் கோவுக் கமைத்துநற் கன்றுக் குரைத்திடு பாரமொன் றமைப்ப
வன்றெனிற் பாதி மத்திம மதனிற் பாதியே லதன்மமா மதன்மேற்
றுன்றிய மான்றோல் பொதிந்துசெங் கரும்பாற் றுன்னுநாற் கால்களு மறைந்தே. ()

முத்துமி ழிப்பி யிணைத்திருச் செவியு முத்திரு கண்களும் வெள்ளி
யொத்தநாற் குளம்பு மொண்கனி கழுத்து மொப்பிரும் பிரந்தலை முதுகும்
வித்துரு மத்தாற் புருவமுங் கவரி விளங்கு ரோ மமுநவ நீதக்
கொத்துறு முலையும் பட்டினுல் வாலுங் குலவிய வெண்கல முடம்பும். (கஅ)

இந்திர நீல நெற்றிபோற் கொம்பொ டிலங்கிய சந்தன மூக்கு
நந்துரு தமைத்தே யருச்சனை புரிந்து நறைகமழ் தூபதீ பங்கண்
முந்துற வியற்றி மாலயன் மகவான் முச்சுடர் குபேர னல்விபவ
முந்துமன் னோர்கண் மனைவியாய்ப் பிதிர்க்கட் குணவுறு சுதையுமா யோங்கி. ()

அவியுணு மும்பர்க் கருள்சுவா கையுநீ யாகையா லினிதரு ளென்று
நவிலருந் தேவர் பூதங்க டமக்கு நல்லொளி யாயினை யென்றுங்
கவர்திரி சூலி யிடத்துறை நீலி கருதுமுன் வடிவமா யென்றும்
பவமது தவிர்த்து நன்மையைத் தருதி பரிவுட னெமக்கெனப் பகர்ந்தே. (உ0)

அருமறை யாளர்க் கன்பொடு மளிக்க வறைந்தவிவ் வண்ணமே மற்றைப்
பெருமைகூர் தேனு வொன்பதுஞ் செய்க பிறங்கவற் றின்பெய ருரைக்கி
னொருமைகூர் நறுநெய் யெள்ளுத கம்பா லொழுகுதேன் சருக்கரை ததியோ
டிரதமெய்ப் பசுவோ டொன்பதா மிவற்றை யியற்றுவோ ரியற்றிடு ஞான்று. (உக)

மன்னிய விரத முதலிய குடத்தில் வார்த்தவண் வைக்கமற் றவற்றைத்
துன்னுமான் றோலிற் சொரிந்தவிவ் வகையே சொல்லுவ தன்றியே பின்னும்
பன்னிய சொன்ன தேனுவும் வெண்ணெய் பரிவுறு தேனுவும் பணியி
னன்னலந் தழைத்த தேனுவு மெடுத்து நவிலுவார் மாதவர் சிலரே (உஉ)

உரைத்தவித் தேனுந் தானமே யுதவி னுறுதவ மகப்பல னுறுவார்
தரைக்குயர் விசோத துவாதசி விரதந் தனிப்பல விரதத்துண் மிக்காம்
விரிப்பரும் விரதத் தங்கமாய் விளங்கும் வியன்குள தேனுவின் றான
நிரைத்திடு மயனம் விடுவிதி பாத நிகழிரு கிரணமே யாதி. (உ௩)

புண்ணிய தினத்திற் புண்ணிய தலத்திற் புகழ்பெறு மறையவர்க் கீந்தா
லெண்ணரும் பவத்தை யாற்றிநற் போக மெய்துவன் செனனங்க டோறு
நண்ணுறு போகந் தொலைந்தபின் றிருமா னற்பத மடைகுவன் மடவார்
பண்ணினு ரெனிலப் பதத்தினை யடைவர் படிப்பவர் கேட்பவர் பகர்வோர். ()

விண்டுவின் பூசை பார்த்துளோர் மதித்து விருப்புட னுரைத்துளோர் யாரு
மண்டர்கோன் பதத்திற் கற்பமொன் றிருப்ப ராமென நாரதற் கன்று
தொண்டையங் கனிவாய்ப் பாகனெம் பெருமான் சொற்றன னென்றுமா றுதிக்குந்
தண்டலின் மனுவுக் குரைத்தன னென்றே சாற்றினன் சூதன்மா தவர்க்கே. (உ௫)

எண்பத்தோன்றவது

விசோகத் துவாதசி விரத வத்தியாய முற்றும்.

ஆகத்திருவிருத்தம். உகசகூ.

எண்பத்திரண்டாவது

தான்யபருவதாதிதச பருவததான

மான்மிய வத்தியாயம்.

நாரத முனிவன் கேட்டுளங் களிப்ப நம்பனு ரருள்வரன் முறையை
நீர்மலி கடல்வாய் மச்சமா யுதித்த நெடியமான் மனுவினுக் குரைத்த
தாரணி புகழ்தா னியமலை யாதி தசபரு வதத்தினை நல்குஞ்
சீரிய விதியை முனிவரர் கேட்பச் செப்பினன் சூதமா முனிவன். (௧)

எண்ணுறும் பத்து மேருமா தான மிமையவர் போற்றுதற் குரிய
நண்ணிய பெயரை யுரைத்திடின் முன்ன நவில்வது தானிய மேரு
தண்ணுறு லவணப் பருப்பத மிரண்டாந் தனிக்குளக் குன்றமே மூன்றும்
வண்ணவார் பொன்னின் வரையொரு நான்காம் வளர்தில சைலமே யைந்தாம். ()

பருத்திமா மலையோ ராறதாந் துய்ய பசுவினெய்க் கிரிதிக மேழா
நிரைத்தமா மணியின் பொருப்புய ரெட்டா நிறைவெள்ளி யோங்கலொன் பானுந்
திருந்துசர்க் கரையின் சிகரியோர் பத்தாஞ் சிறந்தவித் தானமே புரிவா
ரருத்திகொ ளயனம் விடுவிதி பாத மலரிவெண் மதியுறு கிரணம். (௩)

புகழமா வாசை மேவுவை திருதி திருவிழா வதுவைமா வேள்வி
கவுபறதிழ்யெர்ந்த சுக்கில திபக்கத் ரிதிகை புகறுவா தசிசீர்
மகிழுவாப் பூச மிவையிற்றிற் றனம் வழங்கலாஞ் செய்வதற் கிடந்தான்
றுகளறு தீர்த்தக் கரைமனை முன்றி றுலங்கிய கோட்டமா மிவற்றுள். (௪)

பொருந்திய விடத்தில் வடபுறந் தாழ்ந்த பூமியில் விதியின்மண் டபந்தா
னொருங்குற வமைத்துக் கோமய மெழுகி யுயர்தரு தருப்பைகள் பரப்பி
வருங்கிழக் கெனினு முத்தர மெனினு மகிழ்வுட னினிதுபார்த் திருந்து
தருங்கதிர் வரைகள் சுற்றுள சுகரி தாணியத் தியற்றிடு மள்ளவை. (௫)

வைத்திடின் மரக்கா லாயிரத் திரட்டி வழங்குமோ ராயிர மறுநூ
றுத்தம முறைக்கு மத்திம மதன்ம முறும்மதிற் கொடுமுடி மூன்று
வித்தகப் பொன்னு னமைத்துமேல் வைத்து விளங்கிய கிழ்ப்புறந் தாழ்ந்தே
யத்துதென் பாற்கோ மேதகம் புட்ப ராகமா மடுத்தபச் சிமத்தில். (௬)

பத்திசேர் கருட மணிதிகழ் நீலம் பகர்ந்திடு வடதிசை யதனில்
வித்தக வைடூ ரியம்பற்ப ராகம் விளங்கிய சுற்றிலும் பவளந்
தொத்துறு சந்த மரமுமே வைத்துச் சூரிய னுருத்திர னயன்மா
லுத்தமச் செம்பொன் னுருக்களாச் செய்தவ் வோங்கன்மேன் முனிவரோ டுய்த்து.

இரசிதந் தன்னாற் கொடுமுடி நிதம்ப மிடையடித் தலத்தினோ டிக்கு
நிரைசெறி திகிரி சூழ்முழைஞ் சமைத்து நெடுந்திசை தோறுநெய் யருவி
சொரிதரக் குணக்கிற் றவளநற் றுகிலாற் றுலங்குகார் தக்கண திசையில்
விரிபசுஞ் செம்பொன் றுகின்முகில் குடக்கில் விளங்கிய சிறுசிவப் பொலியல். ()

பொருந்துகார் வடக்கிற் பெருஞ்சிவப் பொலியல் புயல்களா யியல்புற வகுத்துத்
திருந்திர சிதத்தா னிந்திர னாதி திக்குறு தேவரை வகுத்திட்
டருந்துமுக் கனிகார் சந்தனஞ் சற்று மமைத்துமே லேவணத் துகிலாற்
பெருந்திறல் விதானம் விசித்து வாடாத பிரசமென் மலரணி பிறங்க. (௯)

தானிய மேரு வமைந்ததின் சுற்றிற் றயங்குவிட் கம்பமா மலைக
ளானமி ரான்கு திசையினு மமைத்திட் டோங்கிய குணக்கிற்பல் கனியான்
மானமந் தரவெற் பமைத்ததன் மேலே வருநமை சண்பக மாரந்
தேனவிழ் கடம்பு பனைமர மெல்லாஞ் செம்பொனா லமைத்தல ராடை. (௧0)

மாலைசந் தனங்க ளானலங் கரித்து மருவுபால் செவ்வமு திரதத்
தாலரு விகளு மிரசத மிப்பி யாரமிங் கிவைகளா னிலவு
காலுற வழைத்துத் தென்றிசை யதனிற் கருதிய கோதும்பை யதனான்
மேலுறு கந்த மாதன மமைத்து வெள்ளிபொன் னிரண்டினுன் றதனான். (௧௧)

மானத மடுவும் வருகுபே ரனையும் வருத்துயர் சயித்திர முவன
மேனைய வெள்ளி யாலமைத் தெண்ணு னிலங்கிய மேல்புற ந்தன்னிற்
றானுயர் விபுலப் பருப்பதம் பொன்னாற் றதைமலர்த் தண்ணிழ லரசு
பானிற வன்ன வெள்ளிபூந் தோட்டம் பகர்தரு கலையினாற் குயிற்றி. (௧௨)

ததியுறு சிதோத மடுவதன் வடபாற் றழைத்திடு சுபார்சுவ மென்னும்
புதியநன் மலையை யுழுந்தினாற் பொருத்திப் பூவொடுங் கலையது புனைந்து
சிதைவுரு வால மரம்பொனி னமைத்துச் சிரத்தினி லிருத்தியே பொன்னான்
விதியரி தாரங் காவியும் விளக்கி விரைநறைப் பத்திர சரசாம். (௧௩)

மடுவமைத் திலங்கு வெள்ளியால் வனமும் வளம்பெறு கீழ்த்திரை யதின்மண்
கொடுமுழ வகல நீளமவ் வளவே குண்டமு மமைத்துநால் வேதத்
திடமுறு நால்வர் கையினு னேமந் திலங்குசை யவைசமித் துக்க
ளுடனறு நெய்யா னுளுற்றியே கங்கு லுலப்பிலா வாத்திய கோடம். (௧௪)

முழக்கரு திருந்து கண்முகிழ்த் திடாமன் முதுபருப் பதங்களை முறையே
செழித்திடு தேவ கிரகநீ யெமக்குத் தீமைசெய் வார்தமை யொழித்து
பழித்திடா வண்ண மருளுதி பிரமன் பச்சைமா லுருத்திரன் பருதி
கொழித்திடு கருணை மூர்த்தி மான் மேன்மை கூர்ந்திடு மூர்த்திமா னாகி. (௧௫)

பரம்பெற வருள்கா ரணமுநீ திக்குப் பாலர்மும் மூர்த்திகள் பாலித்
திருந்திடு மிடனீ யாதலா னன்மை யெமக்கரு ளிடர்க்கட லதனுட் [றித்
பொருந்துமில் வாழ்க்கைப் புகரறுத் தருள்க வென்றுபொன் மேருவைப்போற்
திருந்துமந் திரத்தைத் தேசுறு நன்மை செய்கெனப் போற்றியே பின்னர். (௧௬)

கந்தமா தனத்தைக் கவின்பெறப் போற்றிக் கதிர்விடு விபுலமா கிரியைச்
சிந்தனை யிலாமே யருளுதி யென்று தெரிவுறப் போற்றியே சிறந்து
நந்துரு தருளுஞ் சுபார்சுவ வரையை நவையறப் போற்றியே சுற்று
மிந்தமால் வரைகளொடும் போற்றி யிருளகன் றிட்டசீர் மறுநாள். (௧௭)

நதியினின் மூழ்கிச் செய்கடன் கழித்து நடுவுறு தானிய மலையைக்
கதிபெற வருளா சாரியர்க் களித்துக் கவின்பெறு சுற்றுநால் வரையை
விதிமுறை யிருத்துக் களுக்களித் தருள்க விளங்கிரு பத்துநான் கேனுந்
துதிபெறு பத்தே யைந்துசோ வெனினுஞ் சொன்முறை வழங்கிட வேண்டும்.

சத்தியில் லாதான் கபிலையொன் றேனுந் தகைபெறு குரவனுக் களிப்பப்
பத்துமால் வரைக்கு மிவ்விதி யாகும் பகருமந் திரங்களு மிவையே
யொத்தபூ சனைக்கா முபகர ணங்க ளுரைத்தவை யயனவக் கிரக
மெய்த்திசைப் பாலர் தேவர்க ளிவர்க்கு வேள்விக ளாற்றிடு ஞான்று. (௧௯)

உத்தமந் திரத்தான் வேறுவே றாக வியற்றுக சகலமால் வரைக்கும்
வைத்தருள் விதியாம் வழங்குவோ னுண்டி மறித்திட னன்றென்ப ரின்றே
னத்தபோ சனமா மிந்தமால் வரையை நல்குறும் போதுரை செய்ய
வொத்தமந் திரத்தை யினிதெடுத் துரைப்பா முரைத்திடு மன்னமே பிரமம். ()

அன்னமே பிராண னன்னமே பூத மன்னமே வருத்தனை யாகு
மன்னமே செல்வ மன்னமே முகுந்த னாதலாற் றுனிய மாக
மன்னிய கிரியை யெனக்களித் திடுவா யென்னவே வழுத்துமந் திரத்தான்
மன்னிய தானம் வழங்குவோர் நூறாய் வரர்மனு வந்தர மட்டும். (௨௧)

தேவர்த முலகிற் றேவரம் பையர்கந் திருவர்சூழ் செம்பொன் மானத்தே
யோவரு முனிவர் தம்மொடு முறைந்திட் டுலவுவர் புண்ணிய மொழிந்தாற்
பூவல யத்தி னரசராய்ப் பிறப்பர் புகழ்பெறு லவணமால் வரையைத்
தாவின்மா மறையோர்க் குளமகிழ்ந் தளிக்குஞ் சரித்திரம் விரித்தினி துரைப்பாம்.

உரைக்குமெண் ணுன்கங் கவற்றினிற் பாதி யுரைத்தமற் றவற்றினும் பாதி
நிரப்பிய வரைக்கா லுத்தமம் பின்னர் மத்திம நிகழ்த்திய வதன்மம்
விரித்தவை யின்றேற் குறுணியுப் பேனும் வெற்பெனக் குவித்துநாற் றிசைக்கும்
பொருத்துவிட் கம்பப் பொருப்பொரு நான்கும் புகன்றதி னுன்கிலோர் கூறும். ().

தகைபெறக் குவித்துத் திசைமுகன் முதலோர் தம்மொடு மடுத்தரு வனமுந்
தொகைபெற முன்னஞ் சொற்றவா வமைத்துத் துயிலொழித் தவ்விரு ளொதுக்க
வகைபெறு தான மந்திர முரைக்கின் வளர்சவு பாக்கிய விரதந்
திகழ்தரு மிரத லவணமால் வரையே தீவினை பொழித்தெமக் கருள்வாய். (௨௪)

பலவகை யான சுவைகளு நின்னைப் பழகிடின் வருஞ்சுவை பழகுங்
கலைமதிச் சடையோன் றனக்குமம் பிகைக்குங் கருத்துறு பிரியையாய் நெடுமால்
குலவுமெய் யிடத்துற் பவித்தனை யெவர்க்குங் கூறுமா ரோக்கியங் கொடுத்தி
யலைபடு மரண சனனசா கரத்தி னழுந்திடா தினிதெமக் கருள்வாய். (௨௫)

என்னுமந் திரத்தா னந்தணர்க் குதவி யிமயவெற் பரசனீன் றளித்த
கன்னிதன் னுலகிற் கற்பமொன் றிருந்து கடவுளர் யாவரும் போற்றக்
நன்னலந் துய்த்துப் பெருகுமா னந்தத் துறியவ ாரிதியிடை மூழ்கி
யுன்னருங் கதிவீட் டரசிருப் பார்க வுளமகிழ்ந் திருப்பர்க ளன்றே. (௨௬)

மழைமதர் நெடுங்கட் கவிரிதழ்ச் செவ்வாய் வரிவளைக் கரியமென் கூந்த
லிழையெனு மருங்குற் றுணைமுலை யுமையா ளிடத்துறை நடத்திறை யன்பாய்த்
தழைமறை கொழிக்குஞ் சதுமுகக் கடவு டன்முக மினிதரு ளேக்கி
விழைவுடன் மொழிந்த குளபரு வதத்தின் விதியுமத் தானமும் விரிப்பாம். (௨௭)

பருப்பதம் பத்துப் பாரமுத் தமமாம் பகரவற் றிற்படி பாதி
யுரைக்கின்மத் திமமாம் பாரமூன் றதன்ம மொன்றரைப் பாரமே யெனுந்
தரித்திர னியற்ற வேண்டு மந்திரம்பூ சனைமரம் பொன்மடு வனங்க
ணிரைத்தவிட் கம்பப் பருவத மோம நிக்கிரா வொழிதலித் தனையும். (௨௮)

தானிய மலைக்குச் சொன்னவை யிதற்குஞ் சாற்றுவர் தானமந் திரந்தான்
வானவர் தமக்குள் விச்சுவான் மாவாய் மன்னிய சனார்த்தன ருயர்ச்சி
யூனமின் மறைகட் குயர்ச்சிநற் சாம முத்தம யோக்கியர் தமக்குட்
டேனல ரிதழித் தக்கணு மூர்த்தி திகழுமந் திரங்களுக் கெல்லாம். (௨௯)

பிரணவ மதிகம் பெண்களி லிமவான் பெற்றவெம் பிராட்டியே யதிகம்
திரமுறு சுவையிற் கன்னலே யதிக மாதலாற் செழுங்குள வரையை
வரமுறு மாரோக் கியநன்மை செல்வ மகிழ்வுற வருளியே மறுமைப்
பரகதி யான முத்திவீ டடையப் பணித்தருளெனப்பணிந் தேத்தி. (௩௦)

அரியநான் மறையோர்க் கருக்கிய முதல வனைத்துப சாரமு மளித்துத்
தெரிகுள வரையைத் தக்கணை யோடு செவ்விதி னளித்திடி னமரர்
மருவுகந் திருவர் முதலியோர் வழுத்த மலைமக ளுலகத்தி னூறு
விரிதரு கற்ப மிருந்தெழு தீவின் வேந்தெனக் குடைநிழற் றுவனால். (௩௧)

வேறு.

பொன்னினுன் மேருச் செய்து பூசுரர்க் களிக்குந் தான
நன்மையை யுரைப்பாஞ் செம்பொ னவில்பலம் பத்து நூறு
மின்மையே லவற்றிற் பாதி மத்திம மிவற்றிற் பாதி
பன்னிய வதன்ம மாகும் பகருநல் குரவு ளானேல். (௩௨)

ஒருபல மேனு மாமா லோங்கல்விட் கம்ப மாதி
மருவுதா னியவெற் புக்கு வகுத்தவா விதற்கு மாகும்
பெருநெடுஞ் சிகர மேருப் பிறங்குமா சானுக் கீந்து
தருபுடை வரைக ணன்கு மிருத்துக்க டமக்க ளிக்க. (௩௩)

நல்குங்காற் பிரம கற்ப ரேநம வென்று நல்ல
வெல்லொளிப் பிரம வீரி யரேநம வென்றும் பின்னர்ச்
சொல்லழ குறமா வென்றுந் துலங்கிய பிரமாண் டத்துக்
கொல்லுமுற் பவநீ யென்று மொளிபெறு சராயு வென்றும். (௩௪)

போற்றிமா மலர்கொண் டேத்திப் புனிதமா தானஞ் செய்யிற்
சாற்றரும் பிரம லோகந் தனினொரு நூறு கற்பம்
வீற்றிருந் தருள்சேர் முத்தி வீட்டினை யடைவ னப்பா
லாற்றலீ திலநன் மேருத் தானத்தை யறைவன் மாதோ. (௩௫)

இருபது மரக்கா லெள்ளே யுத்தம மிவற்றிற் பாதி
மருவுமத் திமமாமதெறு மரக்காலெள் ளதன்ம மாகும்
பொருவிரு ணியத்தின் வெற்பும் போலவிட் கம்ப வெற்புந்
தெரிவுறச் செய்துநானஞ் செய்யுமந் திரங்கள் கூறின். (௩௬)

மதுவெனு மசுரற் செற்ற மாமாயன் வெயர்வின் முன்னு
ளுதவுறுந் தருப்பை மிக்கா முழுந்துட னுதித்த லானே
கதிதரு திலவெற் பேயான் கருதிய நன்மை யாவுஞ்
சிதைவற வருள்க வென்னச் சிறப்பொடும் போற்றிப் பின்னும். (௩௭)

அவ்விய கவ்வி யத்துக் கதிபனீ யாகை யாலெம்
வெவ்விய பிறவித் துன்ப வேரறுத் தருள்க வென்று
செவ்விதி னுரைத்துத் தானஞ் செய்பவன் செகமேழ் காத்துத்
தவ்வலில் விண்டு லோகந் தன்னிற்சார்ந் திருப்பன் மாதோ. (௩௮)

பருத்திவெற் புதவுந் தானம் பகர்ந்திடி னிருபான் பத்தோ
டொருப்படு மைந்து பார முத்தம மத்தி மம்பின்
னருக்குறு மதன்ம மாகு மவையின்றேற் பார மொன்றும்
விரித்ததா னியவெற் புக்கு விதித்தவை யிதற்கும் வேண்டும். (௩௯)

கண்டுயி லொழித்தே யற்றைக் கங்குனீத் துதய கால
மண்டுதண் புனலின் மூழ்கி மன்னுயிர்க் காடை யாகிப்
பண்டரு முலக மேத்தும் பருத்திமா லையே யன்பு
கொண்டருளெமக்கென் றீசன் சந்நிதி கொடுத்து ளார்கள். (௪0)

உருத்திர னுலகந் தன்னிற் கற்பமொன் றுறைந்து பின்னர்த்
திருத்தகு முலகங் காத்துச் சிதைவிலா முத்தி சேர்வர்
பெருக்குநெய் வெற்புத்தானும் பேசிடி னலைந் தீரைந்
தருக்குமோ ரைந்து கும்ப மறையுமுத் தமத்தி னேடும். (௪௧)

மத்திம மதன்ம மாகும் வறியனே லிரண்டு கும்பத்
துய்த்திடு நெய்ய தேனு மோங்கலா விருத்திப் பாங்கர்
மொய்த்துயர் நாலு வெற்பு முதன்மலை தனக்குக் காற்கூ
றத்திட வமைத்து மீது பாத்திரந் தரிசி வைத்து. (௪௨)

முன்னுரைத் திட்ட வண்ண முறைபெறத் தானஞ் செய்க
வின்னமு தழலைக் கூடு மிடத்திலுற் பவமா நெய்யென்
றன்னத னுருவ மாகி யமர்விசு வான்மா வான
மின்னொரு பாக னுள்ளம் விருப்புற வேண்டு மென்றே. (௪௩)

பிரமமே தேயு வாகும் பிறங்குமத் தேயு நெய்யோ
டொருமையின் மேவ லானெய் யோங்கலே யருள்க வென்று
தெருமர லொழிந்து தானஞ் செய்பவன் பவங்க டீர்ந்து
பரவரும் விமான மேறிப் பண்ணவ ருலகந் தன்னில். (௪௪)

அயனருட் சிருட்டிசெய்பு மளவுமங் கிருந்து பின்னர்
வியனுறு கங்கை வேணி விமலன்ற னுலகஞ் சேர்வா
னுயர்நவ மணியா னற்று மோங்கலின் ருனங் கூறிற்
பயனுறத் தெரிந்த முத்துப் பத்துநூ றுத்த மந்தான். (சரு)

மதித்திடு மைந்து நூறே மத்திம மூந்நூ ருயின்
விதித்திடு மதன்மஞ் சுற்றும் வெற்பதி னன்கி னென்ருய்க்
கதித்திடக் கிழக்கின் மிக்க கதிர்விடு வச்சி ரத்தோ
டுதித்தகோ மேத கத்தா னுயர்ந்தமந் திரமு மாற்றி. (சசு)

தென்றிசை தனிலே புட்ப ராகமிந் திரநீ லத்தாற்
றுன்றிய கந்த மாத னந்தனைத் துலங்கச் செய்திட்
டொன்றிய குடக்கிற் றப்போ டொளிர்வயி டூரி யத்தா
லின்றுயர் விபுல வெற்பு நிகழ்த்தியே யுத்த ரத்தில். (சஎ)

பதுமரா கத்தி னேடும் பச்சையாற் சுபார்சு வப்பேர்
விதுபெறு வெற்புஞ் செய்து விளங்குதா னியவெற் புக்குத்
துதிபெறச் சொன்ன வண்ணந் தொன்மறை வழாமற் கங்குன்
மதுமல ரெண்கொண் டேத்தி மயலுறு துயிலை மாற்றி. (சஅ)

மற்றைநாள் விடிந்த பின்னர் மணிநெடு மேருத் தன்னை
யுற்றவா சானுக் குஞ்சுற் றுறுவரை யிருத்து கட்கும்
பற்றுட னீயு ஞான்று பகருமந் திரம்விண் ணேர்கட்
குற்றிடு மிரத்தின மேநீ குலவிவீற் றிருக்கை யாலே. (சகூ)

மன்னிய வரையே நீயும் மணிமய மாகை யானே
யென்னைக்கா வென்ன வேத்தி யிம்மணிக் கிரித்தா னத்தாற்
பொன்னுர மாய னுக்குப் பொருந்திய பிரீதி யாகப்
பன்னுமிப் படியே தானம் பரிவொடுஞ் செய்தா னயின். (ருo)

கற்பநூ றரிய தத்தி னிருந்தபின் கணிதீ வேழும்
பொற்புட னுள்வ ரன்னோர் பூசுரர்க் கோற லாதி
பற்பல கொடும்ப வங்கள் பற்றினுங் குலிசம் வீழ்ந்த
வெற்பெனச் சிதையும் வெள்ளி வெற்புறு தானஞ் சொல்வாம். (ருக)

பலம்பதி னயி ரந்தா னுத்தமம் பாதி யாயிற்
றுலங்குமத் திமமே யாகுஞ் சொற்பர்தி யதன்ம மின்றே
னலங்கொளும் பலநா லைந்தின் மேற்பட நாடிச் செய்திட்
டிலங்கிய சுற்று வெற்பு நாலினென் றியற்ற வேண்டும். (ருஉ)

மேருவுக் குலோக பாலர் வெய்யவ னயன்மால் யாருஞ்
சீருறப் பொன்னிற் செய்க திகழ்மற்ற வெற்புக் கெல்லா
மேருறு மிரசி தத்தா லியற்றுக யாவும் பொன்னற்
பேருறு மிதற்க மைக்க பிறங்கிய வோம மாதி. (ருரு)

செய்வகை யெல்லா முன்னஞ் செப்பிய வகையே யாற்றி
மையிருள் விடிந்த பின்னர் வகைப்பட வழங்கு ஞான்று
மொய்யலர் தூப தீப முறைபெறப் பூசை யாற்றிக்
கையினிற் றருப்பை யேந்திக் கண்ணுத லரிபி திர்க்கள். (௫௪)

இவர்களுக் கிட்ட மான விரசித வெற்பை யென்றன்
பவமொழித் தருள்க வென்று பகர்விதிப் படியே யீந்தா
லுவமையி லயுதங் கோக்க ளுவப்புட னளித்த தொக்கு
மவிர்மதி யுலகந் தன்னி னயனருள் சிருட்டி காறும். (௫௫)

இருந்துபூச் சியனே யாவ னிலங்குசர்க் கரையின் வெற்பைத்
திருந்திடச் சொல்வாம் பாரந் திகழெட்டு நாலி ரண்டு
வருந்தலி லுத்த மம்பின் மத்திம மதன்ம மில்லார்
பரிந்தவோர் பார மேனும் பகரரைப் பார மேனும். (௫௬)

அன்பொடு செய்ய வேண்டு மருகுறு மலைக ணான்கு
முன்புசொன் மலைக்கு நாலி னொன்றென மொழிய லாகு
மின்புறு மேரு மீது தேவரை யியற்றி யாங்கட்
பொன்பொலி பாரி சாதங் கற்பகம் புகழ்மந் தாரம். (௫௭)

இந்தநன் மரங்கண் மூன்று மியற்றிக்கீழ்ப் பால கர்க்குச்
சந்தனங் குடக்கி லேசத் தானமு மமைக்க மற்ற
முந்துறு கிரிகட் கெல்லா மிவ்வகை மொய்த ருக்க
ணந்தலி லாது வேண்டு நறியசர்க் கரைவெற் புக்கே. (௫௮)

மிகவுமே யுரிய கீழ்பால் விளங்குமந் திரத்தில் வென்று
தகுமத வேளை மேற்கே தனிமுக மாக வாற்றி
நகுகந்த மாத னத்தி னண்ணுறக் குபேரன் றன்னைப்
புகன்முகம் வடக்காய்ச் செய்து புகரறு விபுலந் தன்னில். (௫௯)

உருத்திரன் றனைக்கி ழக்கே முகம்பெற வுஞற்றிப் பின்னர்
விரித்திடு சுபார்சு வத்தில் விளங்கிய சுரபி தன்னைத்
தரித்திடு முகந்தெற் காகத் தாபித்துத் தாணி யத்துக்
கருத்தியி னுரைத்த வாறு வாகன மாதி செய்து. (௬௦)

அருஞ்சவு பாக்கி யத்தி னமுதமே யாயுந் தேவர்
திருந்தமு தருந்து ஞான்று சிந்திய வமிழ்த மாயும்
பொருஞ்சிலைக் கரும்பி னுப்பண் பொருந்தவுற் பவித்த தாயு
மிருந்தசர்க் கரைவெற் பேநீ யெமையிவண் காக்க வேண்டும். (௬௧)

என்னுமந் திரத்தைச் சொல்லி யியற்றுறு தானஞ் செய்வோன்
றுன்னிய பாவ மெல்லாந் தொலைச்சிய சுடரின் மிக்காய்ப்
பன்னரு மான மேற்றன் பரிசனத் தோடுஞ் சென்று
பொன்னணி மார்ப னூட்டிற் பொருந்துவ னூறு கற்பம். (௬௨)

அவ்வழி யிருந்து பின்ன ராயுளா ரோக்கி யத்தோ
டிவ்வுல கதனிற் றீவோ ரேழினுக் கிறைவ னுவன்
றிவ்விய வயுத மூன்று சென்னமிவ் விதிவ ழாமற்
கவ்வையில் பருப்ப தங்கள் கருத்துறத் தானஞ் செய்வோன். (சுஙு)

மறையவர்க் கன்ன மீந்து கறியுப்பு மறுத்துப் பின்னர்
நிறையமு தருந்த முன்னே ரிந்திரன் சகாய மெய்தி
யிறையவன் றரும மூர்த்தி யிலங்கிய பிறகற் கற்பத்
தறைகட லவனி யாவு மரசுசெய் தளிக்கு ஞான்று. (சுசு)

ஒன்னல ரவுண ராதி யுறுபகை கடிந்து காந்தி
யின்னுறு கதிர்வெண் டிங்கண் மழுங்கிட விலங்கா நின்றான்
றன்னிகர் தவத்தாற் காம ரூபியாய்ச் சஞ்ச ரிப்பான்
பன்னிய வவன்றன் பாரி பகர்பானு மதியென் பாரால். (சுரு)

அரிவைய ரனேகஞ் சூழ வாயிர கோடி வேந்தர்
புரசைசூழ்ந் தினிது காக்கப் பொலிந்துபொன் மகளைப் போல்வா
ளொருதினந் தன்னி லன்றோ னுயர்மணி மண்ட பத்திற்
குருமுனி வசிட்ட னண்ணக் குழைந்தடி பணிந்து போற்றி. (சுசு)

எத்தவப் பயனோ காந்தி யெழிற்செல்வ மனைவி கீர்த்தி
யுத்தம குணங்கள் யாவு முற்றவா வுரைத்தி யென்னப்
புத்திகூர் வேசை லீலா வதியெனும் பூவை யீசன்
பத்தியோ டிருந்தே யுப்புப் பருப்பதம் வழங்க வெண்ணி. (சுஎ)

சதுர்த்தசி தினத்திற் பொன்னாற் றயங்குபூந் தருக்க டேவர்
விதிப்படி யமைத்தட்டா ணீயவை விளக்கி யீந்து
துதித்தறின் பாரி யின்னாள் சொற்றவச் சென்னந் தன்னின்
மதித்திடு கூலி லீலா வதிதர வரங்கே ளென்றீர். (சுஅ)

அத்தரு மத்தி னாலே யவதரித் தாய்நின் னாம
முத்தம தரும மூர்த்தி யுயர்பானு மதியே யாகிப்
பத்தியொ டவளுந் தோன்றிப் பாரிலுன் பாரி யானாள்
சத்ததீ வதிப னாகித் தனியர சுரிமை பூண்டாய். (சுகூ)

தீதிலா வந்த லீலா வதிதேவிக் கடிமை பூண்டா
ளாதலாற் றுனி யாதி பருப்பத மமைத்துச் செய்தி
நீதியா யென்னப் பத்துத் தானமு நெறியி னாற்றித்
தாதலர் துளவ மாயன் றழைத்தவை குந்தஞ் சார்ந்தான். (எ0)

செப்புமித் தானம் பத்துஞ் செய்துளோர் சொல்வோர் கேட்போர்
வெப்புறு பவங்க டீர்ந்து வெய்யதீக் கனவு நீங்கி
யொப்பருஞ் சுவர்க்க மேவி யுயர்கதி சேர்வ ரென்ன
மைப்புயன் மனுவுக் கோதும் வகையினை யுரைப்பான் சூதன். (எக)

எண்பத்திரண்டாவது
தானிய பருவதாதி தசபருவதத்தான மான்மிய
வத்தியாயம் முற்றும்.
ஆகத்திரு விருத்தம். உஉகஎ.

எண்பத்துமூன்றாவது

சாந்தி கிரக யஞ்ஞவிதி யத்தியாயம்.

வருசாந்தி கிரக யெஞ்ஞ வரன்முறையை யிஞ்ஞான்று வழுத்து கென்னே
வொருசார்ந்த குணத்தினொடு மகமியற்றித் தவமுஞற்றி யுரைபா கற்குத்
தருசார்ந்த மலர்சாத்தி யுருகுபெரு வரமுனிவர் தயவாய்க் கேட்பத்
துரிசார்ந்த வினையகற்றுங் கலைஞானச் சூதமுனி சொல்லு மாலோ. (௧)

சவுனகமா முனிதவத்து வைசம்பா யனமுனிவன் றன்னை நோக்கிப்
பவவினைவே ரறுத்துமனத் தினில்வேட்ட காமியங்கள் பரிவி னல்கு
முவமையில தாஞ்சாந்தி கிரகமக முரைத்தியென வுரைத்த வண்ணந்
திவளொளியா யுட்கீர்த்தி செல்வமழை யிவைவேண்டுஞ் செய்கை பூண்டோன். ()

திருமறையோர் சொன்னதினந் தனிற்சேர்த்தி வாசனமுஞ் சிறப்பா யோங்கு
மருவுபுண்ணி யாகமுநல் விதிவழா வகையுஞற்றி மரபி னோங்குங்
கிரகமுமக் கிரகவதி தேவதையுந் தாபித்துக் கிளரு மோம
முரியவிதிப் படியியற்றன் முறையவையே யுஞற்றின்மூ வகைய தாகும். (௩)

முந்திரவி லனலோம மயுதமிரண் டாவதுபின் மொழியி லக்க
நந்தலின்மூன் றாவதுயர் கோடிமுத னவிலுமோ மத்துக் காதி
யெந்தைநவில் புராணவே தங்களிலே யெடுத்தவிதி யியம்பு வாமே
லந்தமுறு கிரகத்தீ சானதிக்கி னாதலா லயத்தி னாதல். (௪)

மேலுறுசா லையைவடபாற் றாழிடத்திற் பத்துமுழ மேவ வாத
னாலிரட்டி முழமாத லகட்டிவித்தே யதில்வாச னான்கு சேர்த்துச்
சாலைநடு வோர்குண்ட மைத்ததற்கீ சானதிக்கிற் சாணி ரண்டா
யேலுமக லத்தொருசா ணுயரநாற் சதுரம்படி யிரண்ட தாக. (௫)

வடதிசையிற் றாழ்ந்தவே திகைவகுத்துக் குண்டத்தில் வளருஞ் செந்தீப்
படருறத்தா பித்தமைத்த வேதியின்முப் பானிரண்டாம் பகருந் தேவர்
திடமுறவா வாகனமே செயவேண்டு மவர்பெயரைச் செப்பு ஞான்று
சுடர்முதலா நவக்கிரக மவர்க்கதிதே வதைகளெனச் சொல்லு மீசன். (௬)

உமைமுருகன் மான்மறையோ னும்பர்கோ னியமனட லோங்கு காலன்
கமைபெறுசித் திரகுத்த னாகவிவ ரொன்பதின்மர் கனனீர் பூமி
தமைநிகர்மா லிந்திரனோ டயிந்திரிசீ ரோங்குபிர சாப திப்பே
ரமையுமுயர் சர்ப்பங்கள் பிரமாவோ டொன்பதின்ம ரறையு மின்னோர். (௭)

பிரத்தியதி தேவதைகள் விநாயகனோர் துர்க்கையொடு பிறங்கும் வாயு
வுரைத்திடுமா காயமசு வினிகளென வுரைப்பர்நவக் கிரக மேவத்
தெரித்தவுயர் மண்டிலத்தி னடுக்கதிரக் கினிமூலை திங்க டெற்கே
தரித்திடுமங் காரகனீ சானத்திற் புதனுமுத் தரம்வி யாழம். (௮)

புகர்கிழக்குச் சனிமேற்குப் புதனிருதி திசைராகு வாயு மூலை
தகுகேது வாமிவனை வெண்ணிறத்தக் கதையாலே தாபித் தப்பாற்
றிகழ்சதிருஞ் செவ்வாயுஞ் செம்மைபுகர் திங்கள்வெண்மை புதவி யாழ
நிகழ்பொன்மை சனிராகு கருமையுயர் கேதுகணம் நிறமே கூறின். (௯)

கருமையுஞ்செம் மையுங்கலத்த லிவ்வகையாற் றியானிக்கக் கடன்வி தான
மறுவுதுகின் மலர்மாலை வாசநறுஞ் சந்தமணித் தூப தீபம்
பரிவுடனே செய்தபின்ன ரவியுடனெய்ப் பாயசஞ்சர்க் கரைசேர் பொங்க
லூரியபா லனந்ததியோ தனநறுநெய் யன்னமெள்ளி னூட்டு வெல்லம். (௧0)

கலையினறுந் தசைவருக்க வகையன்ன மிவையடைவே கதிரோ னாதி
நிலைமைபெறு கேதுவந்த நிவேதனஞ்செய் தருச்சித்து நிலவும் வேதித்
தலைமைபெறு மீசானத் தக்கதைமாந் தளிர்பலங்க டதிபட் டாடை
குலவுபுனற் கும்பத்தை யலங்கரித்த வருணன்முதற் குளிர்நீர்க் கங்கை. (௧௧)

சலநதிகண் மடுக்கள்சத்த சமுத்திரங்க டமையுமிந்த விசமா னற்குப்
பலமுறுவிக் கும்பத்தில் வருகவென வேபகர்ந்தா வாக னஞ்செய்
தலகில்பசுப் புரையானை யடியாயர் குடியிரதத் தமைநாற் சந்தி
குலவுபற்று மிருத்திகையோ டதிகளுமக் கும்பத்திற் கூடச் சேர்த்தி. (௧௨)

நெற்றிலநெய் யவைகொண்டு நிகழ்த்தோமம் புரிந்தெருக்கு நீள்ப லாசு
நற்றழைப்பூங் கருங்காலி நாயுருவி புரசத்தி நவைதீர் வன்னி
குற்றமினல் லறுகுபசுந் தருப்பையிவை குலவுநவக் கிரகங் கட்குச்
சொற்றவிதிப்படியடைவே ததிநெய்தேன் றனிற்சமிதை துலங்கத் தோய்த்து. (௧௩)

ஆகுதியோ ரெழுநான்கே யொவ்வொருவர்க் கவரவர்மந் திரத்தி னாலே
வாகுறவே செபித்தோம மியற்றுதிமுன் வகுத்தசமித் தளவை கூறிற்
சேகறுசா ணீளம்விரற் பருமமள வாகுநலந் திகழ பூப
மாகிருத வனங்கிழங்கு வடக்குமுக மாய்த்தழலில் வழங்க வேண்டும். (௧௪)

முந்தியவெண் ணுண்குதே வர்க்குமறை மொழிந்தமுறை முறையி னோமஞ்
செந்தழலி னியற்றியபின் பூரணா குதியடைவிற் செய்து கும்ப
முந்துநறும் புனலேந்தாற் பூசுரர்க ளிசமானுக் குவந்தே யாட்டு
மந்திரமும் மூர்த்திபுட்டி மதிசாந்தி தீருதுட்டி வழுத்துங் கீர்த்தி. (௧௫)

கமலைபுத்தி வபுமேதை கனகிரியை சிரத்தைலெச்சை கருதுஞ் சாந்தி
விமலதவக் கிரகங்க டேவர்தா னவரியக்கர் விஞ்சை வல்லோ
ரமலமுனி வரர்நாக ரரக்கரா வினங்களிட பங்க டேவர்
தமதுமனைக் கிழத்தியரன் னோர்தாயர் தயித்தியர்சாற் றரம்பை மாதர். (௧௬)

அத்திரசத் திரமுரு வாகனங்க ளரசர்களோ டதிமா ணிக்க
நித்தமுறு காலத்தின் கலைநிமிட முதனிகழ்த்து மவய வங்க
டித்துபுன னதிநதங்கள் சமுத்திரங்கள் சயிலங்க டருதீர்த் தங்கள்
சித்தர்கண்மா மேகங்கள் பவந்நீர் வபிடேகஞ் செய்க வென்றும். (௧௭)

அறைவாசு தேவர்பிரத் தியும்மினர்சங் கரிடணரோ டனுகுத் தப்போ
பேர்தேவர் விசையமீந் திடுகதிசைப் பாலரொடு பிறங்கு பாவக்
குறுநோய்தீத் தருள்பிரம விருடிகளுங் காக்கவொன்றுங் கூறிப் பின்ன
ருறுசீத நறும்புனலை யபிடேகஞ் செய்யவுள்ளத் துவப்பி னடி. (௧௮)

வெண்டுகில்சந் தனமாலை யணிந்துபரி சுத்தமாய் விளங்கு பாரி
தண்டலிலா துடனிற்கத் தக்கனையீந் தம்மறையோர் தம்மைப் போற்றிப்
பண்டைவினை யறக்கபிலை சங்கநிறை சிவப்பெருது பழுதி லாப்பொ
னெண்டகுபீ தாம்பரமோ ரிரண்டெனவெண் ணிறம்படைத்த விவுளி யொன்றும்.

கரியபசுக் காரிரும்பு வெள்ளாட்டுக் கடாவுடனே கருது மொன்பா
னரியநவக் கிரகங்க டமக்கடைவே பிரீதிவர வளிக்க வின்றேற்
பரிவுடனற் பசுக்களைத்தா னளித்திடுக வவையின்றேற் பசும்பொன் னேனு
முரியநவக் கிரகங்கட் குரைத்துவரன் முறையியன்று துதவ வேண்டும். (௨௦)

முன்னிரவிக் கொருகபிலை முதலீற்றுக் கொடுக்குங்கான் முகம னுகத்
தன்னிகரி றீர்த்தமெலா நீயாத லானன்மை தருவா யென்று
பன்னியளித் திடநிலவும் பனிமதிக்கு வெண்சங்கம் பாலிக் குங்கான்
மன்னியமால் காத்திருந்து மங்களராய்ப் புண்ணியராய் வயங்க லாலே. (௨௧)

மங்களமே யெனக்கருள்வீ ரெனவளித்து மங்களற்குப் பிரீதி யாகத்
துங்கமிரு சிவப்பெருது வழங்குங்காற் றுயங்குமட்ட மூர்த்தி யூரும்
பங்கமிலா நீர்தரும வுருவமா யுலகுவப்பப் பண்ண லாலே
யிங்கெனக்கு மிகுந்தநன்மை தருவீரென் றேபரிவோ டியம்பி யீக. (௨௨)

புந்தியருள் பெறப்பொன்னை வழங்குங்கா லுலகளிக்கும் புண்ட ரீகத்
தெந்தைதிரு வயிற்றுதித்தீ ரக்கினியென் றேநாம மியம்பு மீசன்
றந்தவீ ரியமானீ ரளவிலாப் புண்ணியங்க டருவீ ரிங்கு
வந்தெனக்கு நன்மையெல்லா மிகத்தருவீ ரெனவளிக்க வளர்வி யாழம். (௨௩)

மகிழ்வுறவே யிரண்டுபீ தாம்பரத்தை வழங்குங்கான் மாயோ னுக்கு
மிகவுமுறுப் பாதலினீ யெனக்குக் காந் திதர வேண்டு மென்னப்
புகலரிய மந்திரத்தா லளித்திடுக வெந்நாளும் புகப்பி ரீதி
தகவுபெற வேபுரவி யளிக்குங்காற் றண்கடலி னமுதிற் றோன்றி. (௨௪)

இந்திரன்செங் கதிரவர்க்கு வாகனமா யிருத்தலினு லெனக்கு நன்மை
தந்தருள்வா யெனக்கொடுக்கக் காராவைச் சரிபகவான் றனக்கு நல்கு
மந்திரநின் னங்கத்தி னுலகமொரு பதினாலும் வதித லாலே
நிந்தையொழித் திகபரத்து நன்மையருள் செய்சவென நிகழ்த்தி யீக. (௨௫)

கரும்பாம்பு மகிழவிரும் பளிக்குங்கா னெடியபடைக் கலன்க ளியாவுந்
தருந்தேவ னீசகல மங்களமுந் தருபனீ தானே யென்றும்
விருந்தாம லெனைக்காப்பா யெனக்கொடுக்கக் கேதுவுக்கு வளர்சா கத்தை
யருந்தானங் கொடுக்குங்கான் மகத்தவியு மழற்குவா கனமு மாவாய். (௨௬)

ஆதலினு னன்மையெனக் கருளென்று கொடுக்கமல ரணையை நல்கும்
போதரன்மால் சையைதினஞ் சூனியமில் லாதிருக்கும் பொற்பும் போல
மேதகுமென் செனனமெலாஞ் சூனியமில் லாதிருக்க வேண்டுஞ் சையை
யேதருவா யென்றளிக்க விரதத்தைப் பொருளோடு மீயு ஞான்று. (உஎ)

சகலமா மணியிடத்துந் தேவர்களே சார்ந்திருக்குந் தன்மை யாலென்
அகமுறுதுன் பொழிந்தருள்வர் நன்மையென வேமிகுந்த வன்பி னீக
பகர்புவிதா னங்கொடுக்கி னுனக்குமற்றைத் தானமெலாம் பார்க்கு ஞான்று
திகழுமொரு பதினறி னென்றுகா ணுதெனவே செப்பி யெற்கே. (உஅ)

புகழ்பெறவே நன்மையரு ளுதியெனவே மனமகிழ்ந்து புகன்றே யீந்து
மிகுகலைகண் மலர்மாலை சந்தமணி யாபரணம் வேதி யோர்க்குத்
தகைமைபெற வளித்திடுக விவ்வண்ணந் தவறிலா தன்பாய்ச் செய்வோ
ரகலமுறும் புவிபுரந்தும் வான்புரந்தும் பரகதியை யடைவர் மாதோ. (உகூ)

வேறு.

தரித்திரத் துழலச் செய்யுங் கிரகத்தைத் தான்முன் னர்ச்சித்
தருத்தியொ டடையு மற்றக் கிரகத்தை யருச்சித் தேத்திப்
பொருத்துமக் கிரக தேவர் மறையவர் கோப்பூ வேந்தர்
திருத்தமாய்ப் பூசித் தோர்க்குச் செல்வங்கள் சிறக்க வீவம். (௩௰)

இகழ்ந்திடி னெரிப்ப ரின்னே ராதலா லியற்றும் போதின்
மிகுந்ததேக் கணைக ளீய வேண்டிடு மில்லா னேனும்
புகழ்ந்ததக் கணையில் லாமற் செய்வது பொருத்த மன்றுற்
பகர்ந்திடு மிரவி தான்றக் கணையினுற் பரிவு கூர்வான். (௩௧)

தருநவக் கிரக யாகந் தான்செய்யும் பொழுதெஞ் ஞான்று
மொருபதி னயி ரத்தி ஞேமங்கள் பண்ண வேண்டு
மருவிய் வதுவை யாகம் வரும்பிர திட்டை நன்னாள்
பெருகிய விழாவே யாதி பேதக மின்றி யோங்க (௩௨)

பயங்கர மாதி யான டரிபவ நீங்க வீரைந்
தியைந்தவா யிரத்தி ஞேம மியற்றிட வேண்டு மென்றும்
வியந்தமா செல்வ மெல்லா மிகுமிலக் கத்தி ஞேம
நயம்பெறத் தருமச் செய்கை நடத்துறு வகையைச் சொல்வாம். (௩௩)

வதுவைநாண் முதல நன்மைத் தினத்தரு மறையோர் சொற்ற
புதியநக் கத்தி ரத்தும் பொருந்துமிக் கரும நன்றும்
விதிமுறை யுரைத்த வண்ணம் விளங்குமண் டபங்கள் வேதி
துதியிலக் கணத்தின் முன்னஞ் சொற்றவா றியற்று ஞான்று (௩௪)

சார்நவக் கிரக யாக குண்டநாற் சதுர மாகச்
சேர்முழக் கினிற்று ரோண வத்திபஞ் சிறக்கச் செய்து
கோருமே கலைக ளன்கங் குலம்விரிவிட்ட மாக
நேருமுத் தரங்கிழக்குத் தாழ்ந்துநே ரொப்ப வேண்டும். (௩௫)

இருநில மாந்தர்க் கெல்லாங் கிரகநன் மகமே நன்மை
பெருகுற வளிக்குஞ் செய்யிற் பிழையுறிற் றீங்குண் டாகு
மரியவா மயுத வோம மதற்குறு குண்டம் பத்தாந்
தெரிவுரு மிலக்க வோமஞ் செயிற்குண்ட நூறு வேண்டும். (௩௬)

ஆகுதி யுடனே மிக்க தக்கணை யயுத வோமம்
வாகுறு மிதற்கி ரைந்து மடங்குதா னிலக்க வோமம்
பாகுறச் செய்தல் வேண்டும் பகருமே கலைமூன் றோடு
சேகறு திண்ணை சேர்த்துத் தேவரை யாவா கிக்க: (௩௭)

மேகலை யுயரந் தானு மிருவிர லளவு மிக்கா
வாகுறு மகல மூன்று விரற்கிடை வகுக்க வீதே
யாகுநற் கருமங் கட்கெல் லாமினி தன்றி மற்று
மோகையோ டொருப தான விரலள வுயர மாக. (௩௮)

திண்ணையொன் றமைத்து மீது திகழிரு பதிற்றி ரண்டு
நண்ணும்வெள் ளரிசி யாலே தேவரை நயந்தா வாகித்
தெண்ணதி தேவ ரோடு மிரும்பிரத் தியதிதே வரியி
னுண்ணறு மிரவி தன்னை நோக்கத் தாபிக்க வேண்டும். (௩௯)

தருதனம் விரும்பி னோர்கள் கருடனைச் சாம வேதத்
தரியநற் றொனியே ரூப மாகியே யாழி மாலுக்
குரியவா தனமாய்ப் பொல்லா விடத்தினை யொழித்த கற்றித்
தெரிதரு பொருளே நன்மை செய்கென வாவா கித்தே. (௪0)

கூறிய வயுத வோமம் பொன்னுடர் குழுவை யெல்லாம்
வேறுவே றமைத்தே யோமம் விளங்கிடச் சமிதை தானு
மாறிலா விலக்கத் தோடு மெட்டுமே வயங்கச் செய்து
பேறுசேர் குடத்தி னெய்யாற் பெறுவசேர்த் தாரை யோமம். (௪௧)

செய்யவே வேண்டுஞ் செய்யிற் றிகழத்தி முதலா யுள்ள
துய்யநற் சமிதை யீரஞ் சூழ்ந்திலை தளிரி லாமன்
மெய்யுற வமைக்க வத்தி விளங்குகொம் பொருமு ழத்தின்
கையள வாகச் செய்து கவின்பலர் சிலையைக் கட்டி. (௪௨)

ஓமங்க ளதனுற் செய்க வுபர்வேத மந்தி ரத்தி
னோமங்கள் செபித்துப் பின்னர் நவிலைச மான னுக்குக்
காமியம் பெறுக வென்றே கவின்பெறு வட்ட னன்னீர்
தாமங்க மாமி ருந்து முதவியோர் தம்மைப் போற்றி. (௪௩)

36

தக்கணை யளிக்க வேண்டுந் தகுநவக் கிரக யாகந்
தொக்கதோ ரிருவ ரேனுந் துலங்கிய நால்வ ரேனு
மிக்கதோ ரறுவ ரேனும் விளங்கிய வெண்ம ரேனுந்
திக்குற வமைக்க வேண்டுஞ் செப்பிய விலக்க வோமம். (சச)

பண்ணுதற் கெண்ம ரேனும் பன்னிரு பெயரா யேனும்
திண்ணிதாய்ப் பூசை யாற்றித் திகழுமா பரண மாடை
நண்ணுதக் கணைக ளோடு நலம்பெற நல்க வேண்டும்
ஒண்ணிதி யிலாதா ருந்தக் கணையிலா துஞற்ற லாகா. (சரு)

உள்ளவ னுலோவத் தாலே தக்கணை யுதவா னென்னி
னெள்ளருங் குலங்க ளெல்லா மிறந்துபோ மன்ன தானம்
வள்ளிதின் வழங்கா னாயின் வறுமையை யடைவன் செய்வோன்
றெள்ளிதிற் செய்தா னாயிற் சிறக்குமன் னுலக மெல்லாம். (சசு)

தந்திடு யாகந் தானே கத்துரு மந்தி ரங்கு
றைந்திடி லிருக்கும் வானத் தளிக்குந்தக் கணைக்குச் செம்பொ
னந்துறக் குறைந்தாற் செய்வோ னந்துவன் முடிவி லன்னஞ்
சிந்தைகூர்ந் தளித்தி டானேற் சிதைந்திடு முலக மாதோ. (சஎ)

ஆதலி னிலக்க வோம மருந்தரித் திரனுக் காகா
வேதமார் கிரக வோம மியற்றுவோன் வேத ஞானம்
போதம்வல் லவர்க ளாகப் பொருந்திய மூவ ரேனும்
தீதறு மிருவ ரேனுந் திருந்திய வொருவ ரேனும். (சஅ)

வருமிடம் பாடு தேர்ந்து வரித்திடி லிருத்து மிக்காம்
பொருளுடை யோனிலக்க வோமத்தைப் புரிய வேண்டுந்
தெருளுறப் புரியிற் செல்வ மடைந்துபின் றேவர் போற்ற
வருள்சிவ லோகத் தெய்திக் கற்பம்வாழ்ந் தடைவன் வீடு. (சகூ)

காமியம் வேட்டி லக்க வோமத்தைக் கருதிச் செய்வார்
வாமமே கலையார் மைந்தர் வழங்கிய விபவத் தோடுந்
தோமுறு தடைவர் கன்னி செயினல்ல துணைவற் சேர்வ
னேமமா ரரசர் செய்யி னிராச்சிய மடைவர் மாதோ. (ரு0)

ஆசைக ளின்றிச் செய்வோ ரடைகுவர் பிரமந் தன்னை
காசறு மிலக்க வோமந் தன்னினுங் கருது கோடி
பேசறு மோமந் தன்னைப் பிறங்கிய வதிக நூறு
யேசறு மடங்கு செய்ய வேண்டுமென் றிசைத்தான் வேதன். (ருக)

செய்வகை யிலக்க வோமச் செய்கையே சரிய தன்றித்
துய்யதோர் கோடி யோமஞ் செய்பவன் றுலங்கு குண்டங்
கையினன் முழத்தி னன்கு சதுரமாய்க் கருதிச் செய்க
மெய்யுறு யோனி பத்திர மேகலை யிரண்டு மூன்றாய். (ருஉ)

மேகலை மூன்றின் மூந்து மேகலை விரலி ரண்டு
வாகுறு முயர்வி ரண்டா மேகலை வழங்கு மூன்ற
தாகுமெல் விரலு யர்ச்சி யதன்மீது விரன்மூன் றுகச்
சேகறு மூன்றே யுற்றுத் திகழுமே கலையின் செய்கை. (ருங)

அகலமூ விரல தாகு மதனுருச் சித்தி ரத்தாற்
றிகழ்தர வேண்டு மீது சிறக்குமெக் கருமங் கட்கு
மிகைபெறும் யோனி பத்திர மதனின்மே கலைகளாகுந்
தகைபெறும் வேதி நான்கு சாணீள மகல மாகும். (ருச)

உயரநால் விரல்கண் மூன்று வத்திர முறுதல் வேண்டு
மயர்வில்வத் திரங்க டாமே மேகலை யரசின் பன்னத்
தியல்புறு மண்டபந்தா னிலங்குநல் வாயி லோடுந்
துயரறு முழமீ ரெட்டிற் றுலங்கவே செய்யவேண்டும். (ருரு)

சாலையின் கிழக்கு வாயி லிருக்குவே தியர்கள் சார்ந்து
வாலிதாம் ராத்திரி சூத்தங் வழங்கிய பவமா னஞ்சீ
ரேலுறு ரவுத்தி ரம்பின் சுமலமே சென்னு நான்கா
மூலமந் திரங்க ணன்றுய்ச் செபித்திட மொழியுந் தெற்கின். (ருசு)

வாயினி னெசுரு வேதம் வல்லவர் சவுக்கி ரந்தா
னேய்வுறு சவும யந்தா னத்திர மியாட்ச மற்று
நேயமாங் கவுச மாண்ட நிகழ்த்துமந் திரங்க ளோந்து
மோய்விலர் செபிக்க வேண்டு முரைத்திடு மேலை வாயில். (ருஎ)

சாமவே தியரே ருத்திர சங்கிதை சுவன்ன மிட்ட
மாமவை நல்குஞ் கேட்ட சாமமார் வயிரா சந்தா
ஞமமா மாக்கி னேய மவ்வைந்துஞ் செபிக்க நான்கா
யேமுறு வடக்கு வாயி லதர்வண மியம்ப வல்லோர். (ருஅ)

சவுரஞ்சா குணமே சாந்தி சூக்கிதம் பவுட்டி கந்தான்
புவினியின் மகாராசித் தோடைந்துமே செபிக்கப் போதன்
துவமையி லார்க ளேயிவ் வொருநான்கு வேதத் தோங்கு
கவருறு மந்தி ரம்மிவ் வண்ணமே கருத லன்றி. (ருகூ)

வேதபா ராயணத்தை விளம்பிட நால்வ ரோம
மேதமில் லாமற் செய்ய விருநால்வ ரிவர்கட் கெல்லாஞ்
சீதள சந்த மாலை திகழணி யலங்க ரித்துப்
போசமோ டருச்சித் தேத்திப் பூசனை புரிய வேண்டும். (சுo)

புந்திகொ ளோந்த வேதம் புகல்பவ ரந்த வேதத்
தந்தமிலு ருத்தி ரன்றன் மந்திர மாதி போற்ற
னந்தலி லோமஞ் செய்வோ ரெழுவரை வர்களு நன்று
மிந்தநற் கோடி யோமத் தெரிந்திடும் புவங்க ளென்றே. (சுக)

சிவனருள் வசன மாகுஞ் சிறப்புறு வசிய மற்றைப்
புவனியுச் சாட னஞ்சீர் புகலுறு மாவி சார
நவநவக் கிரக பூசை செய்துபி னடத்தல் வேண்டு
மவமிலாக் காமி யத்தோர்க் கீயுதவோ மமுமுன் வேண்டும். (௬௨)

வசியகா ரியத்தின் குண்ட மண்டலா கார மாக
விசைவுறு முழமுன் றுக விலங்குமே கலைகண் மூன்றாய்
மிசைபுனை வத்தி ரந்தா னென்றுடன் விளங்க மிக்க
நசைதரு பலாசஞ் சுள்ளி நற்கோரோ சனையிற் றோய்த்து. (௬௩)

குண்டத்தி னோமஞ் செய்க கூவினை நறுநெய் முட்டாண்
முண்டக மிவைபோ ரொன்றின் மொழிபத்தா குதிகள் செய்க
தண்டலி லிதனிற் றேவர் கும்பத்தா பிக்க லாகா
மண்டுதா னியத்தி னோடு மணிமுடித் தானஞ்செய்து. (௬௪)

வெண்டுகின் மாலை வேய்ந்து வேதியர்க் கணிக ளாடை
திண்டிறற் பசுவு மிக்க தக்கணை சிறக்க வீந்தான்
மண்டுசத் துருக்க ளெல்லாம் வசமாவ ரிதனு றுவும்
கொண்டபா வங்க ளருங் கூர்வித்து வேட னந்தான். (௬௫)

சொற்றிடு மாவி சார மிவைகளிற் றுலங்கு குண்டம்
பற்றுமுக் கோண மாகப் பகருமே கலையி ரண்டா
முற்றுகோ ணங்க ளெங்கு முகமுழ மகலத் தோடும்
பெற்றிட வேண்டும் பின்னர்ப் பிராமணர் வேள்வி செய்யில். (௬௬)

செந்நிற மாலை சந்தஞ் சிவப்புறு மாடை குல்ல
மன்னுற வணிந்தும் பின்னர் மாமுடி பிரித்துங் காக்கை
துன்னுமா னிடரி ரத்தந் தோய்த்திடு மெட்டிச் சுள்ளி
தன்னையே யிடது கையாற் றகுமாபி சார மந்திரம். (௬௭)

வருசியெ னுபி சார மந்திர மேழு கொண்டு
தெரிகன லிடையே யோமஞ் செய்திட வேண்டு மன்றிப்
பெருகுசத் துருவின் மேனி மாவினாற் யிடித்துப் பின்ன
ரிருடனிற் பேற்சொ லான்றன கத்தியை யெடுத்துக் கொண்டே. (௬௮)

வன்சியெ னுபி சார மந்திர மியம்பி மாற்றான்
றன்சிரந் தடிந்தோ மத்திற் றூழ்த்துத்தாட் டுணையுந் தள்ள
முன்செயிக் கரும மிந்த வுலகத்திற் பலனே முற்றும்
பின்செலு முலகி னன்மை கொடுத்திடா பெருமை வேட்டோர். (௬௯)

கிரகவெஞ் ஞுத்தைச் செய்ய வேண்டுமிக் கிரக வேள்வி
விரவுமுன் றினையுஞ் செய்வோர் விண்டுவின் பதத்தைச் சேர்வார்
பரிவுட னிதனைக் கேட்டோர் கேட்பித்தோர் படித்தோர் தம்மை
மருவிய கிரக பீடை வந்தணு காது முற்றும். (௭௦)

திரவியங் குலவி ருத்தி சிறந்தவை குறைந்திடாமற்
பரவுபூத் தகத்திற் றீட்டிப் பரிவொடு மனையில் வைத்தாற்
கிரகபீ டைகள் வியாதி கிட்டிடா தகலும் பந்தம்
புரிகொடும் பவங்க டீர்க்கும் புண்ணிய வுலகஞ் சேர்க்கும். (எக)

உயர்ந்திடு கோடியோம முயர்புத்தி முத்தி நல்கும்
பயந்தரு மிலக்க வோமம் பரிமகப் பலத்தை நல்குஞ்
சயம்பெறு மயுத வோமந் துவாதசாந் தந்தை நல்கும்
வயம்பெறு மிவையே யாவ வல்வினை யொழிக்கு மன்றே. (எஉ)

இவ்வகை யோம மூன்று மியற்றுமங் கலமா னந்தம்
பௌவமார் பவங்க டீர்க்கும் படித்தவர் கேட்போர் யாருந்
தவ்வலி லாயுப் பெற்றுச் சார்குவர் சுவர்க்க மென்னத்
திவ்விய முனிவர் கேட்பச் செப்பினன் சூதன் மாதோ. (எங)

எண்பத்துமூன்றாவது
சாந்திகிரக யஞ்சவிதி யத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம், உஉ௦க.

எண்பத்துநான்காவது

கிரக சொரூபானு கீர்த்தன வத்தியாயம்.

சொன்னவக் கிரக தேவர் சொருபானு கீர்த்தனத்தை
முன்னையூழ் வினைதடிந்து மும்மல முருக்கி நாளுந்
தன்னைமுன் னுணர்ந்த ஞானத் தவமுனிவோர்கள் கேட்பக்
கன்னலம் பாகுபோன்ற கதையுணர் சூதன் சொல்வான். (க)

கிரகதே வதைக டம்முட் கிரணசூ ரியன்சொ ரூபம்
வரசரோ ருகபீ டத்தில் வரைநிகர் புயமி ரண்டு
கரகம லத்தி ரண்டு கமலமேழ் பரித்தேர் காந்தி
பிரமனை நிகராய்ச் செய்ய பதுமையாய்ப் பிறங்கச் செய்க. (உ)

திங்களி னுருவம் வெண்மை யிருகரஞ் சிறக்குந் தண்டொன்
றங்கமார் வெண்மைத் தூசு மணிந்துதே ரொன்றிற் பூட்டுந்
துங்கமார் புரவி பத்துஞ் சுவேதமாய்ச் செய்ய வேண்டு
மங்கலன் றன்னை மேனிச் சிவப்பதாய் வாகு நான்காய், (ங)

சூலமுங் கதையுந் தாங்கித் துகளறு சிவப்பி னுடை
மாலையந் நிறத்தா னென்றும் வாகனஞ் சிறந்த மேட
மேலுறும் வரத ராகப் பிரதிமை யியற்ற வேண்டுங்
கோலமார் புதன்றன் மேனி குலவுபொன் னிறம தாக. (ச)

கரமிரண் டவற்றிற் கத்தி கேடகங் கனகத் தூசு
வரதராய்ப் பொன்போன் மாலை வயமிகு சீற்றச் சிங்கத்
துருவினி லமையச் செய்க வுவப்புறு தேவர் தங்கள்
குருவெழி னிறம்பொன் னாகக் குலவுகை நான்கி னோடும். (ரு)

தண்டுகுண் டிகைநீ ளக்கத் தாழ்வடஞ் செம்பொ னுடை
மண்டரு ளினராய்ச் செய்க வயங்குபார்க் கவனை நன்காய்த்
திண்டிறன் மேனி வெள்ளி கரநான்கு திகழுந் தண்டங்
குண்டிகை யக்க மாலை குலவரு ளினராய்ச் செய்க. (சு)

சனிநிறங் கறுப்பாய் தக்க தனுவுட னப்புந் தாங்க
நனிபெறு.காக்கை மீதி னலம்பெறச் செய்க ராகுப்
புனிதமா மேனி நீலம் பொருந்திய கரமோர் நான்கு
முனைபெறு கத்தி சூலங் கேடக முகவி காரம். (எ)

அருளுரு வினராய்ப் பிரேத வாகனத் தமைக்கக் கேது
வுருவங்கள் புகைப்போ னீலத் தொண்ணிறங்கரமி ரண்டாய்த்
தெரிதரு கதையைத் தாங்கித் திகழ்முகம் விகிர்தி யாக
வரதராய் வேறு வேறு கழுகுவா கனராய்ச் செய்க. (அ

உலகினுக் குவக்கு நன்மை யுறச்செய்து கிரகதேவர்
நிலவுதன் கையா னூற்றெட் டங்குல நிகழ வாற்றிப்
பலநவ மணியாற்செய்த பைம்பொனின் மோலி சூட்டிக்
குலவுதண் மலரி னாலே கூர்ந்தருச் சிக்க வேண்டும். (கூ)

இவைநவக் கிரக ரூப மியற்றுறு முறையா மென்னப்
புவனிவா ழமர ரென்னப் பொருந்தியெஞ் ஞான்றுவாழுந்
தவமுனி வோர்ம கிழ்ந்து சடாமகு டந்து ளக்க
வுவமையி லாத கேள்விச் சூதனங் கோதி னானல். (க0)

எண்பத்துநான்காவது

கிரக சொரூபானு கீர்த்தன வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உகூ00.

எண்பத்தைந்தாவது

சிவ சதுர்த்தசி விரத வத்தியாயம்.

புவனியி லுறுதவ மகங்கள் பொற்புறு
பவவினை யொழிதர வாற்றும் பண்புளோர்
சிவசதுர்த் தசியெனும் விரதஞ் செப்பெனத்
தவமுயர் புராணிகச் சூதன் சாற்றுமால். (க)

கறைமிட றணிந்தருள் கருணை வள்ளற
னறைகழல் பணிந்தருந் தவத்து நாரத
னிறைதரு போகம்வீ டளிக்க நீடிய
குறைவறு விரதத்தைக் கூறு கென்றலும். (உ)

அங்கண னருளுமா லலகில் விஞ்சைக
டங்கிய வெமைநிகர் தவத்தின் மிக்குளான்
றுங்கமா ரிடபத்தின் வதனத் தோற்றத்தா
னிங்குறு நந்தியே யியம்பு வானென. (ங)

செப்பியே மறைந்தனன் சிறந்த நாரத
னொப்பறு நந்தியை வணங்கி யுண்மகிழ்ந்
தப்பணி சடையினன் விரத மாய்ந்துநீ
வைப்புறு நீதியின் வழங்கு கென்றலும். (ச)

நாரத முனிவகேள் ஞான மூர்த்தியார்
கூர்சிவ சதுர்த்தசி விரதங் கூறுது
மார்கழி தனின்மதி வளரும் பக்கத்தி
னூர்திர யோதசி யமைந்த நாடனில். (ரு)

ஓர்பொழு தருந்தியே யுமையோர் பாகனைப்
பாருற வணங்கிப்பின் பகர்ச துர்த்தசி
கூருண வொழிந்துபொற் கோவி னேற்றினை
யேர்பெற மறையவர்க் கினிதி னீந்துபின். (சு)

மறுதினம் பாரண மகிழ்வன் யானெனப்
பொறையொடு வேண்டியக் கங்குற் போதினி
னறைதரு நியமமாய்த் துயின்றவ் வாதவ
னிறைதரு முதயமால் வரையி னேர்ந்தபின். (எ)

எய்திநித் தியக்கட னியற்றிக் கும்பத்தி
லையனை யுமையொடா வாகித் தம்புயத்
துய்யவெண் மலர்சந்து தூசு சாத்தியே
செய்யதா ணமோந்தமாய்ச் சிவாய வென்றுமே. (அ)

வேறு.

திரைத்தண்புனல் சேர்சென்னிசரு வான்மகேபின் றிகழ்நெற்றி
நிரைக்குந் திரிநேத் திராயகண்க ணிலவு மராய வேதங்க
ளிரைக்கு முகமிந் துமுகாய விருண்ட களஞ்சீ கண்டாய
வுரைக்கொள் காது களிற்சத்தி யோசா தாய நமவென்றே. (௯)

வாகு வாம தேவாய மார்பு வகோர விதயாய
வாகு தனந்தற் புருடாய வழகார் வயிறீ சானுய
பாக மனந்த தருமாய பகருங் கடிநற் றூனத்தி
ஞேதை தருமெய்ஞ் ஞாஞய நமவென் றேத்தி யுவந்து பின்னர். (௧௦)

வயங்கொ ளுரு வினிலனந்த வயிராக் கியசிங் காயதிற
னயந்த முழந்தாட் கனந்தவயி சுவரியநாதா யாவெனவே
வியந்த கணைக்கா றனிற்பிரத ஞயவிளங்கு பறடதனி
லுயர்ந்த வியோம மனே நமவென் றுலவா தேற்றி யுவந்து வென்னில். (௧௧)

வேறு.

வியுத்தகே சான்மரூ பாயநம வென்று விரும்பியே பூசித்து விளங்குபார்ப் பதியை, நயப்புறுபுட் டியைநமதுட் டியைநமவென் றேத்தி நால்வகைய பூபாதி நன்றுநிவே தித்தே, முயற்சியொடு சோடசநல் லுபசார விதியின் முறைபிறழா தினிதியற்றி முனமாய்நின் றேத்தி, வயக்குறுசெம் பொன்னதனுன் மாலிடப மொன்று வனப்புறவே யவ்வயவங்கள் வண்மைபெற வமைத்தே. (௧௨)

ஐவகைமா மணியமைத்தா வாகித்த கும்ப மதற்கணிந்த வெண்மாலை யாடை நறுஞ் சாந்த, நெய்யனிற் செய்யபூ பாதி யனைத்தினையு நிகழ்த்தி யவா சாரியர்க்கு நேசமுறப் பூசை, செய்ததன்பின் றேவதே வேசாய திருந்து சத்தியோ சாதாய சேர்தருபி ஞகங், கையுறுமா தேவசிவப் பிரீதியென்றன் பாகக் கருத்திஞெடு முரைத்துறுதக் கணையினுடன் கொடுத்தே. (௧௩)

கொடுத்தபின்பு மறையவருக் கனதான மளித்துக் கூறுநறு நெய்யுடனே தே ன்கூடித் தெனவா, மடுத்தந்நா ளிருள்வடக்கு வதனமாத் துயின்றே மருவியபூ ரணை தன்னின் மறையோர்க டம்மைப், படித்தவர்க ளுரைத்தபடி பூசித்துத் தானும் பகராம லைமருந்தி வருபக்கந் தோறு, மடுத்துவரு மமரபக்கச் சதுர்த்த சிநா டோறு மமைந்தபடி முறைவழுவா தாற்றிடுதல் வேண்டும். (௧௪)

உரைத்தமார் கழிதொட்டுக் கார்த்திகையீ றுக வோர்திங்கட் டிதியிரண்டுக் கொவ்வொருமந் திரமாய்த், தெரித்தசங் கராயகாள கண்டாய வென்றுந் திரியம்ப காயமகேச் சுவராய வென்றும், பரித்தமா தேவாய தாணுவே யென்றும் பசுப தியே நாதாய சம்புவே யென்றுந், விரித்தபுகழ்ப் பரமானந் தாயசோ மார்த்த தாரிணே வீமாய நமவென்றே யேத்தி. (௧௫)

கோசலகோ மயகறும்பா றயிர்நெய்யி ேனுடு குசோதகங்கள் வியம்வில்வங் கூறரிய யவைதான், மாசறுகோ சிருங்கஞீ ரெள்ளொடுகா ரெள்ளு மாதமோ ரொன்றுகப் பதினைன்கிற் புசிக்க, தேசுபெறு மந்தாரை மாலதியூ மத்தந் திகழ் நொச்சி யசோகமொடு மல்லிகைநல் வில்லங், காசறுபா திரிகமழும் வெள்ளெருக் குக் கடம்பு கமலம்விரி செங்கழுநீர் கருதுமிவை யெல்லாம். (௧௬)

திங்கடொறு மோரொன்றுய்ச் சிவனையருச் சித்துத் திகழுங்கார்த் திகைமா தத் தினின் மறையோர்க் கன்ன, மங்கலமா யுவந்தருத்தி மாலைநறுந் தூசு மணி திகழ்பூ டணம்யாவும் வழங்கும்விதிப் படியே, செங்கண்மிகு நீலநிறை விடைமீது சூலஞ் சேர்த்துவிடுத் திடுகபசும் பொற்றகட்டி லுமையுஞ், சங்கரனு மியற்றி யெட்டுத் தானமும்வெண் டுகிலிற் றடர்திரையுஞ் சையையுநற் கும்பத்தின் மீதே.

செம்பினுறு தட்டினிற்சம் பாவரிசி வைத்துச் சிறக்கவொரு பசுவிடபஞ் சேர விவை யெல்லா, மிம்பரினின் றும்பரருள் குரவனுக்கே யீக வில்லையே லில்லொடு வாழ் வேதியனுக் களிக்க, வம்பொனுலோ பஞ்செய்யி னடைவனர கருகா தாற் றுவோ னடைகுவனு யிரமசுவ மேத, நம்பனரு ளாயுளா ரோக்கியஞ்சீர் பெற்று நாடொறுமே குலவிருத்தி நலம்பெறு ஞாலத்தே. (௧௭)

சார்பிரம கத்திமுதற் பாதகங்க டந்தை தானுறுநற் பிராதாக்கள் செய்யினு மே தீர்க்கு, மேர்பெறுநாற் கரத்தோடும் விண்டுவாய்க் கணங்க ளேத்துசண நாத னுமாய்ச் சதகோடி தேவ, ராருலகில் வாழ்ந்துபின்பு மரன்பதத்தி லடைவ ரயன் மகவான்குரு வனந்த னுயிரநா வானும், பேருலகி லிவ்விரதப் பலன்றுதித்து முடியாப் பிறர்கேட்கப் படிப்போர்கள் கேட்போர்க ளினைப்போர். (௧௯)

அரியதொரு புத்தகத்தி லெழுதுமவர் கூட வரன்பதத்தி லடைகுவர்க ளரி வையர்க டாமு, மரியகுருக் கணவன்மக னிவர்களனு மதியி னுனுற்றிடினுங் கயி லைநக ருறுவான் ஞானம், பெருகுசிவ புராணங்க ளாகமங்கள் யாவும் பேசுதிற னந்திசர் நாரதருக் கன்று, தெரியவுரைத் தனரென்றே யரிமனுவுக் கன்று தெரித் ததனை முனிவருக்குச் செப்பினன்சூ தனுமே. (உ௦)

எண்பத்தைந்தாவது

சிவசதுர்த்தசி விரத வத்தியாய முற்றும்.

ஆகத்திருவிருத்தம். உ௯உ௦.

எண்பத்தாறுவது

சருவ பலத்தியாக வத்தியாயம்.

இருநிலந் தன்னி லிட்ட காமிய மெனைத்து நல்கிப்
பெருமைவா னுலகிற் சேர்த்துப் பெருகிய முத்திவீடு
தருபல னளிக்கு மேன்மைச் சருவப லத்தி யாக
வுரிமையாம் விரத நந்தி நாரதற் குரைத்தா னன்றே. (௧)

சூதமா முனிவன் சொல்வான் றென்மறை முனிவர்ப் பார்த்துத்
தீதின்மார் கழிமா தத்திற் சிறந்தசுக் கிலபக் கத்தின்
மேதகு மூன்றொ டெட்டு மிக்கபன் னிரண்டீ ரேழா
யோதிய திதியி னாத லுறுமற்றைத் திங்க டன்னில். (௨)

மிக்கதோர் தினத்தி னாதல் வேதிய ரனுஞை பெற்றுத்
தக்கநா டொடங்கி யின்பந் தருபர மானந் தன்னைத்
தொக்கதக் கணையி னோடு தொன்மறை யாளர்க் கீந்து
முக்கனி யாதி யான கனிகளு மூலம் யாவும். (௩)

நீத்தன மருந்தல் வேண்டு மருந்தெனி னீக்க வேண்டா
வேத்தரும் பொன்னி னாலே யிடபமேற் சிவனு மற்றோர்
தீத்தருஞ் செங்கட் கூற்றுஞ் சிறந்தநற் பதுமை செய்து
பூத்துண ரணிந்து கும்ப மிரண்டுபொற் கலைகள் வேய்ந்து. (௪)

தானியம் பரப்பி மீது வைத்ததன் மீது தட்டிற்
றாநறும் பண்ணி காரம் வைத்துமேற் சொன்ன ரூபத்
தானநற் பதுமை வைத்தே யருச்சனை புரிந்து பொன்னாற்
கானுறு பனைப லாமாக் கத்திரி யரசு வில்லம். (௫)

பூசணி யோடு தாது மாதளை புகழ்சம் பீரம்
வாசமா தளைய ரம்பை சக்கரி வளரி லந்தை
யேசில்வெட் பாலை மங்கி லரிசிசீ ரகமீ ரெட்டுந்
தேசுறுப ளங்கள் செய்து தெளிந்த பால்வெள் ளியாலே. (௬)

நெல்லிதக் கோல மேல நிகழ்பெருங் களாநன் னாவல்
வல்லியாம் பசனை தான்றி வன்னிநற் பாலை யத்தி
சொல்பெரு மாநற் கோவை துகளறு தேங்கு முள்ளி
நல்லமுந் திரிகை கண்டங் கத்திரி யொடுமிவை நானான்கின். (௭)

திருத்திய பலன்கள் செய்து செம்பினா லகத்தி தாலம்
பொருந்துகாட் டாத்தி முள்ளா ரிலவுநற் புடோல்கொம் மட்டி
பெரும்பனை யாலி னோடு பிங்குணம் பிரச பூரா
வருர்த்தி மதுரம் வீட்ட வரைமருக் காரையின் காய். (௮)

அரிசனங் கருணை செம்போ டருங்கொடி வள்ளி மிக்காய்த்
தெரிசிறு கிழங்கி னோடு தெரித்தவீ ரெட்டுஞ் செய்து
பொருவரு பலின்காய் மூலம் புச்முகும்பம் பதுமை யோடு
பெருமறை முறையாய்க் கோவும் பிறங்குதக் கணையோ டீக். (௯)

ஈந்திடும் பொழுதி னிந்தக் காய்கனி மூலத் தென்று
மாய்ந்திடு தேவர் யாரும் பிரிதியாய் மருமா போல
வாய்ந்துள பத்தி யீசன் மலர்ப்பதத் தடைக வென்று
காய்ந்துகு ழியமன் முக்கட் கடவுளோ டிவர்க ளன்பாய். (௧௦)

அளவறு பலன்கள் யாவு மளித்திட வேண்டு மீசன்
றுளவணி மாயன் வேதன் சூரிய னிவர்கள் பேத
விளைவுக ளின்மை போல விசுவமும் யாமு மொன்று
யுளவகை பொருந்த வீச னுவந்தினி தருள வென்றும். (௧௧)

இப்பெரும் பலன்க ளீச னடியருக் கென்று மின்பத்
தொப்பிலா விட்ட காம முலப்பில வளிக்கு மாபோற்
றப்புறு விந்தத் தானந் தனைச்செயுந் தமியே னுக்குச்
செப்பருஞ் சனனந் தோறுந் திகழ்பல னளிக்க வென்றே. (௧௨)

மந்திர முறைத்தோ ரந்த ணாளனை வரித்து மென்பூச்
சந்தன மணிந்து செம்பொற் பணியணி தயங்கப் பூட்டி
முந்துப கரணம் யாவு முன்னுற வணங்கி யின்பாய்ச்
சிந்தைகூர்ந் தளிக்க வேண்டுஞ் சிறந்திடுஞ் சைய யோடும். (௧௩)

உள்ளவ னுலோவ மின்றி யுவந்தினி தளிக்க நன்றூந்
தள்ளரும் வறுமை யோனேற் றகுந்திறஞ் செய்க பின்னும்
வள்ளிய மறையோர்க் கன்னம் வழங்கியே யெண்ணெய் நீத்துத்
தெள்ளிதின் மவுன மாகச் சிறந்துண லறந்தா னுகும். (௧௪)

அனந்தமாம் பலத்தை நல்கு மரிபவிவ் விரதம் பாரிற்
கனந்தரு யோகி பாக வதர்கதிர்க் கன்பு பூண்டோர்
நினைந்திவ ராற்றல் வேண்டு நேரிழை மின்னு ராற்றின்
வனம்பெறு சடிலத் தெம்மான் வாழ்பதஞ் சேர்வர் மாதோ. (௧௫)

உலகொரு மூன்றின் மேலா யுரைப்பரிவ் விரதப் பான்மை
விலைபெறு செம்பு பொன்னில் வெள்ளியிற் கனிகள் செய்து
பலனுற நல்கி னுலப் பலத்திலோர் பலத்திற் கூறாய்
நிலவிய வணுவொன் றிற்கு நிகழ்த்திடு மனந்த காலம். (௧௬)

சிவபதத் திருப்ப ரென்னிற் றேர்ந்தன வுரைக்கற் பாற்றே
புவனியிற் பொருளி லாதோர் புத்தகத் தெழுதி வைக்கிற்
பவமறப் படிக்கிற் கேட்கிற் பரகதி யடைவ ரென்ன
வுவமையின் முனிவர் கேட்ப வுரைத்தனன் சூதன் மாதோ. (௧௭)

எண்பத்தாறவது
சருவ பலத்தியாக வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௨௱௮௭.

எண்பத்தேழாவது

ஆதித்தபூசை யத்தியாயம்.

அரும்புமெய்ஞ் ஞான மோன வருந்தவ மனுவுக் கன்று
கரும்புயல் வண்ணன் றேர்ந்து கருத்துற வுரைத்த வாறே
விரும்புமா தித்த பூசை விரதத்தை விளம்பு கென்னத்
தரும்புள கிதமெய் வேள்வித் தவத்தினர்க் குரைப்பான் சூதன். (க)

நந்திகே சுரரை நோக்கி நாரத முனிவன் கூறு
மந்தமில் விரதங் கட்கு ளாயுளா ரோக்கி யஞ்சீர்
தந்தருள் விரத மின்னுஞ் சாற்றெனச் சாற்று வான்றேர்
விந்தையா தித்த பூசை விரதம்வீ றளிக்குங் கேட்டி. (உ)

சிவனு தார மாகச் சிறந்திடும் யாவ தொன்று
தாவரும் பிரம மந்தப் பிரமநித் தியம தாகிப்
பூவல யத்து ளாதித் தன்மதி பொருந்து மங்கி
யாவதிவ் வுருவ மூன்று மவையுளா தித்தன் மிக்கோன். (ங)

பரமமாம் பிரம மாகும் பகருமா தித்த வார
விரதமே யனுட்டிப் போர்க ளிரவினி லருந்த வேண்டுந்
திரமுறவ் வாரத் தத்தஞ் சேரிலவ் வாரந் தொட்டு
வரமுறு விரத முள்ளத் தெண்ணியே மறையோர்க் கன்னம். (ச)

அருத்துவித் திருடா னுண்டே யறத்தொடு மிருக்க வேண்டும்
பொருத்துமா தித்த வாரத் தினந்தொறும் பூசை செய்வோன்
றிருத்திச்செஞ் சந்தனத்திற் றிரமுறு கமலமொன்று
வரைத்தொரா றீரைந் தான விதழுற வனப்பிற்செய்தே. (ரு)

தளம்பன்னி ரண்டிற் கீழ்த் தளத்தினி னவென் றோதி
யுளங்குளிர் மந்தி ரத்தா லுயர்ந்த சூரியனைத் தீட்டி
வளங்கொளக் கினிமூ லைக்கண் வளர்திவா கரனைத் தீட்டிக்
களங்கமில் விவச்சு வானையடுக்கவே கருதித்தீட்டி. (சு)

நிருதியின் றளத்தின் மிக்கா ரேர்பகற் றேவைத் தீட்டிக்
கருதுபச் சிமத ளத்தில் வருணனைக் கையாற் றீட்டிப்
பொருவரு வாயு மூலை மகேந்திரர்ப் பொறித்து தக்காய்
மருவிய தளத்திலாதித் தனையுமே வரைந்து மற்றும். (எ)

தடங்கொளீ சான திக்கிற் சாந்தனை வரைத லன்றி
யிடங்கொடெற் குத்த ளத்தி லியமனை வரைந்து மற்றுந்
திடம்பெற மேற்கின் மார்த் தாண் டனையுமே சீரிற் றீட்டித்
குடங்கையில் வடத ளத்தி லிரவியைக் குலவத் தீட்டி. (அ)

கமலநற் கன்னி கையில் களங்கமில் பாற்க ரன்னை
விமலமா யெய்தி யர்க்கிய மேவுமா வாக னங்க
ணமைவுற வாற்றி யெட்செஞ் சந்தன மரத்தப் பூவா
னமவெனு மந்திரத்தா னலம்பெறப் பூசை செய்து. (கூ)

போற்றுங்கா லான்மா வாயும் புகழும்பூ தான்மா வாயுஞ்
சாற்றுவே தான்மா வாயுஞ் சருவதோ முகத்த ராயுந்
தோற்றுஞ்செங் கதிர்க ளோடுஞ் சுருதிகள் காணொ ணாத
சீற்றமி லுளத்திற் சேருந் திவாகர மூர்த்தி யென்றே, (க0)

சூரியன் றன்னை ருத்திர னக்கினி சுரர்கோ வென்ன
யாருமெய் யறிவாற் போற்றி யருமறை மந்தி ரத்தாற்
பாருற வணங்கி யேத்திப் பாற்கரன் வரதர் சோதி
சேருநற் பதியிம் மூன்று நாமத்தாற் றெளிந்தர்ச் சித்து. (கக)

அருக்கிய மீந்து பூசை முடிந்தபின் னூட்டு மெண்ணெய்
விருப்புறு தொழிந்து கங்குத புசித்திட வேண்டு மிவ்வா
றொருப்படு விரதந் தன்னை யாண்டொன்று முஞற்றி யப்பான்
மருக்கிளர் கமலம் பொன்னால் வகுத்தொரு தகடு தன்னில். (கஉ)

கையிரண் டுடைய தான்ப துமையைக் கவிழச் செய்க
மையறு கபிலை கன்று கொம்புபொன் வயங்கக் கட்டி
மெய்யில்வெண் சேடுத்துக் குளம்புகள் வெள்ளி கட்டித்
துய்யவெண் கலத்திற் பாலை யுடன்சொறு மறையோர்க் கீந்தே. (கங)

தாம்பிர பாத்தி ரத்திற் றண்குலம் வெல்லஞ் சேர்த்து
மேம்படோர் பாத்தி ரத்தப் பதுமையை விளங்க வைத்துச்
சோம்பலில் விசுத்தனுகித் தொன்மறை வல்லோன் றன்னைப்
பூம்புனற் சந்தந் தூபம் பொன்மல ராற்பூ சித்தே. (கச)

பாவிவ விஞசாயாநற் பகர் விசுவான்மா வாய
தாவெழு புரவி பூண்ட தனிரதமுடையா யென்ன
மூவகை மந்தி ரத்தை முறைபெற வுரைத்த பின்னர்த்
தேவநற் பதுமை தன்னைச் சிறப்புட னளிக்க வேண்டும். (கரு)

இந்தநல் விரதந் தன்னை யெந்தமா னிடர்க ளேனு
நந்தலி லாம லோராண் டுஞற்றிடி னுடோ றுஞ்செய்
பந்தமாம் பவத்தை நீக்கி விண்ணவர் பலருஞ் சூழச்
சந்தத மொளிபெற் றேங்குந் தபனன்ற னுலகிற் சேர்வர். (கசு)

அவ்வுல கத்திற் பன்னு ளமரரோ டினிது வைகித்
தவ்வலிலா சாரதித் தண்ணிற் சொல்வாம்
கவ்வைகொள் பயமு ரோக மிடரொருக் காலு மின்றிச்
செவ்வழி ஞான மேவிச் சிறந்தினி திருப்பர் மாதோ. (கஎ)

மன்னிய கற்பின் மிக்க வாள்விழி மாத ரேனுந்
தன்னுயிர்க் கணவ னுசான் றேவதை யிவர்க டம்பா
லுன்னரும் பத்தி யோடு முயர்ந்தவிவ் விரத நோற்கி
னன்னெறி யிரவி லோக நண்ணுத றிண்ண மாமால். (௧௮)

பூதலந் தன்னில் யாரும் போற்றுமிவ் விரதஞ் சொன்ன
காதையைக் காதிற் கேட்கிற் கணக்கொடு பூசை பார்க்கிற்
சோதியைந் தருகி முற்கீழ்ச் சுரர்தொழ நூறு கோடி
யோதிய வருட மாங்க ணுவகையொ டிருப்ப ரென்றே. (௧௯)

வெள்ளியங் கிரியின் மேவும் விமலனைப் போற்று நந்தி
தெள்ளிசை மகர வீணை முனிவர்க்குத் தெரித்த வாறே
கள்ளவிழ் துளவ மாயன் கனகழன் மனுவி னுள்ளத்
துள்ளுற வுரைத்தா னென்ன முனிவரர்க் குரைத்தான் சூதன். (௨௦)

எண்பத்தேழாவது
ஆதித்தபூசை யத்தியாய முற்றும்.
ஆகத்திருவிருத்தம், உ௩௫௭.

எண்பத்தெட்டாவது
சங்கராந்தி விரத வத்தியாயம்.

புண்டரீ சத்துப் புத்தே ணிகர்த்திடும் புனித வேதத்
திண்டிறற் பொருளை யோர்ந்த செஞ்சடை முனிவர் யாருந்
தண்டலில் சங்கி ராந்தி விரதத்தைச் சாற்று கென்ன
வெண்டிசை புகழுஞ் சூத முனிவர னியம்பு மன்றே. (௧)

நாரத முனிவன் றன்னை நந்திகே சுரன்று நோக்கி
யாரிய விரத மின்னு மறைகுவன் சங்கிராந்திப்
பேருறு விரத மிக்குப் புவிமிசை பிறங்கச் செய்தா
லேருற நினைத்த தெல்லா மெளிதினி லெய்த லாமால். (௨)

அறைந்திடு விடுவி னுத லயனத்தி னுத லன்பாய்
நிறைந்தவிவ் விரதா ரம்பஞ் செய்யலா நேரு முன்னாண்
மறந்திடா தொருபோ துண்டு மறுதினஞ் சங்கி ராந்தி
பிறந்தநா ளெண்ணீ ராடிப் பிறங்குதா னங்கள் செய்து. (௩)

எட்டிதழ்க் கமலஞ் சந்தத் தெழுதிச்சூ ரியனை நாப்பண்
டட்டுறத் தீட்டிக் கீழைத் தளத்திலா தித்தற் றீட்டிக்
கட்டழற் றிசைத்த ளத்திற் கதிர்ச்சாம சோதி தீட்டித்
தொட்டதென் றளத்து ருத்திர சோதியைத் தீட்டிக் கன்னி. (௪)

மன்னிய தளத்தி ருக்கு வேத மண் டலரைத் தீட்டி
தன்னிக ரில்லா மேற்குத் தளத்தினிற் சவிதாத் தீட்டி
யுன்னுகாற் றிசைத்த ளத்திற் றபனனை யுலவத் தீட்டி
முன்னுதக் குத்த ளத்தின் மொழியுமார்த் தாண்டற் றீட்டி. (ரு)

விளங்குமீ சானத் தோட்டில் விண்டுவைத் தீட்டி வாசத்
தளஞ்செறி மாலை சந்தந் தண்டுலம் பண்ணி காரம்
குளங்கனி யிவற்றாற் பூசை குறைவறச் செய்து பின்ன
ருளம்பரி சுத்த மான வுயர்குல மறையோ னுக்கே. (சு)

பூரண கும்பஞ் செங்கேழ்ப் பொன்னினெய்க் கலசஞ் செம்பொற்
றுருறு தாம மைப்பூ விலைவயெலாந் தானஞ் செய்க
பாரிலோர் வருட மட்டும் பன்னிரு தரமும் பண்ணி
யாருநெய்ப் பாய சத்தா லோமமு மாற்றிப் பின்னர். (எ)

மறையவர்க் கன்ப தாக மன்னுபோ சனம்வ ழங்கிக்
குறைவறப் பன்னி ரண்டு கும்பமீ ராறு கோக்கள்
பெறுமிளங் கன்றி னோடுஞ் சாதுவாய்ப் பெருகு தீம்பால்
கறவையாய்க் கொம்பிற் காலிற் பொன்வெள்ளி கருதிக் கட்டி. (அ)

வெண்கலப் பானை யோடு மாலைவத் திரங்கள் வேய்ந்து
பண்புறு பொன்னி னாற்செய பதுமங்க ளுடனே கூட
நண்புறக் கொடுக்க வேண்டு மேழைந்து நாலா நன்றா
மொண்பொரு ளில்லா னுவொன் றேனுமிங் குதவ வேண்டும். (கூ)

சூரிய னுருவ மாகத் துலங்குறப் பதுமை செய்தா
சாரியர்க் களிக்க வேண்டுந் தரித்திர னாயின் மிக்க
சீரிய செம்பொ னின்றேல் வெள்ளி செம் பேனு மாகும்
பாரினி லிவையு மில்லான் மலர்கொடு பண்ணி யீக. (க0)

கும்பங்க டம்மை யெள்ளாற் குறைவற நிறைத்த தன்மேற்
செம்பொனின் பதுமை வைத்துக் கொடுப்பதே சிறி தாகு
மம்புவி தனிற்பொன் னுள்ளோ னுலோவியா யருக்கி னனேற்
பம்புமா நிரயஞ் சேர்த னிச்சயம் பகரின்மாதோ. (கக)

திருவளர் மகேந்திர வெற்புத் திரைகடற் புவியி றன்றிக்
கருதுமெவ் வளவு கால மிருக்குமவ் வளவுகால
மருவுகந் தருவ ரேத்தச் சுரர்பதி மருவிப் பின்ன
ரொருவருங் குலத்தில் வேந்தா யுதிப்பனென் றுரைத்தான் சூதன். (கஉ)

எண்பத்தேட்டாவது
சங்கிராந்தி விரத வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். உருசுக.

எண்பத்தோன்பதாவது

விபூதித் துவாதசி விரத வத்தியாயம்.

குதித்தெழு திரைநீர் சூழ்ந்த குவலய முழுது நாளுந்
துதித்திட வருவி பூதித் துவாதசி விரத மேன்மை
விதித்தருள் செய்வா யென்ன மெய்ந்நெறி வேத நீதி
மதித்திடு முனிவர் கேட்பச் சூதனும் வகுப்ப னம்மா. (க)

நந்திநா ரதனை நோக்கி நவின்றதீ தென்று நங்கோ
விந்தர்தம் விரதங் கட்குண் மேம்படு மிதனை மேலா
முந்திய மனுவுக் கன்று மொழிந்தனர் தனுமீ னங்தே
ளந்தவே றலவ னுமிவ் வைந்தெனுந் திங்க டம்மின். (உ)

எத்திங்க ளேனுஞ் சுக்கில பக்கத்தேர்த் தசமி தன்னிற்
புத்தமு தொருபோ துண்டு பொருந்திய சாயங் கால
நித்திய கரும மாற்றி நியமமாய்ச் சங்கற் பிப்பான்
வித்தக விபுவாம் விண்டு வேகாத சியிலு ணீத்தே. (ந)

ஒருசனுர்த் தனரா யும்மை யுவந்துநாண் மலர்க ளேவி
வருதுவா தசிக டோறு மாமறை யோருக் கன்பாக்
கருணையொ டனம ளித்துக் கருதுபா ரணமுஞ் செய்வே
னருளிதற் கிடையூ றெய்தா தென்னச்சங் கற்பித் தந்நான். (ச)

கங்குற்போ தகற்றிக் காலைக் கருமங்க ளியற்றி மாலை
தங்குற்ற கும்பத் தேயா வாகித்துத் தாபித் தன்பாய்ப்
பொங்குற்ற சோட சத்தாற் பூசனை புரிந்து போற்றிக்
கொங்குற்ற மலர்த்தாள் பூதி கொடுத்தருள் பரனே யென்றும். (ரு)

துகளறு முழந்தாள் சொல்லச் சோகாய தொடைசி வாய
பகரரை விசுவா மூர்த்தி ரகசியங் கந்தர்ப் பாய
மகிழ்கர மாதித் தாய வயிறுதா மோத ராய
திகழிரு தளங்க ளாதி தேவாய வென்றும் பின்னர். (சு)

மார்பக மாத வாய வளர்களஞ் சீகண் டாய
வேர்முகஞ் சீத ராய விருள்கேசங் கேச வாய
சார்கவின் முதுகு சார்ங்க தராயகா திருக ராய
நேர்நாசி வளைதண் டாழி நீள்வர தத்த வென்றும். (எ)

சிரஞ்சரு வான்மனேந் மோந்தமாச் செப்பி யர்ச்சித்
துரம்பெறு பொன்னுன் மச்ச முற்பல மிரண்டுஞ் செய்து
தரம்பெறு தட்டில் வெல்ல மெள்ளொடுஞ் சார வைத்து
நிரம்பவெண் சேசு சாத்தி நிறைகும்பத் தடுக்க வைத்து. (அ)

பாரதமுதலாங் காதை பரிவொடு செவியின் மாந்திக்
காரிருள் விழிநுஞ் சாநு கருத்தழி காலத் தாலே
தாரணி கன்னைக் காக்கும் விஷ்டுவைச் சகல மான
சீரிய செல்வ மோங்குந் திகழ்மனத் துவகை யோடும். (௯)

பொருந்திய தேவ ரீர்போற் புவியிலில் வாழ்க்கை யென்னு
மருந்துயர்ச் சோக நீங்கி யிருக்கநீ ரருளு மென்னத்
திருந்துமக் கும்பம் போன்மீன் செய்யபொற் கழுநீர்ப் போதும்
விரிந்தவெண் கலத்தி னோடு வேதியர்க் கீந்து பின்னும். (௧௦)

அரியவ தாரம் பத்தோ டமர்ந்ததத் தாத்தி ரேயர்
விரிமறை வியாத ரீரா றுருப்பொன்னின் விளங்கச் செய்து
வருதிங்கட் பன்னி ரண்டில் வருதுவா தசிக்கொவ் வொன்றுப்
புரிமலர்க் கழுநீ ரோடும் பூசுரர்க் களிக்க வேண்டும். (௧௧)

வருடமொன் றுன பின்றை மருவிய சையை தானம்
பரிவொடு பொங்கல் பொன்னின் பதுமையுங் குருவுக் கீந்து
விரிவுறு பூமி பொன்னின் விளங்குமா பரண மாலை
யுரைபெறு கந்த மாடை யுவகையொ டிவையு மீந்தே. (௧௨)

பூசுரர்க் கன்ன நல்கிப் பூரிதக் கணக ணல்ல
தூசுசேர் தான மாதி யியன்றவை துலங்க வீக
காசறு பொருள்கைக் கில்லான் கார்வண்ண னடியைப் போற்றி
மாசறு பூவான் மூன்று வருடமர்ச் சிக்க வேண்டும். (௧௩)

சொல்லிய விதிவ ழாத துவா தசி விரதந் தன்னை
வல்லிதிற் புரிவோ னூறு தலைமுறை மரபு ளோரை
நல்லவத் துறக்கஞ் சேர்ப்ப னுடிய விலக்கத் தெட்டென்
னெல்லையி லுகங்கண் முத்தி யெய்திவீற் றிருப்பன் மாதோ. (௧௪)

இந்தமா விரதந் தன்னு லிருங்கதி யடைந்தோர் காதை
முந்துற வுரைப்பேங் கேட்டி மொழிரதந் தரகற் பத்தி
னந்தலி னரசன் புட்ப வாகன னெனுநா மத்தோன்
வந்தனை தவங்களாற்றி யயனருள் வரங்கள் பெற்றுன். (௧௫)

வனப்புறு காந்தி தன்னு லிரவிபை மானு மேலோ
னணைத்துள வுலகி ரேழு மணுகபூ வாக னத்தன்
சினைப்பரி யானை தேர்க ளளப்பில சிறந்து சூழ
நினைத்திடு முலகந் தோறு நேர்ந்துசஞ் சரிக்கு நீரான். (௧௬)

போற்றுமெவ் வுலகுஞ் சத்திப் புட்கரத் தீவ மென்றே
தோற்றுபே ரேழாந் தீவிற் றுலங்குகற் பாதி தன்னின்
மாற்றரும் வலியோ னெய்தி மங்கைய ரனேகர் போற்ற
வேற்றமா முருப லாவண் ணியவதி யொடும்வாழ் ஞான்று. (௧௭)

தருமமெய்க் குணத்தின் மிக்காய் வில்வலித் தன்மை யோரா
யொருபதி னாயி ரம்பேர்க் குமரனை யுவப்பி னீன்றே
யிருநிலத் தோர்கள் போற்ற விருக்குநா டன்னி லோர்நாள்
பெருகிய தவத்தின் மிக்க முனிபிர சேதா வுற்றான். (௧௮)

உற்றதோர் முனியைப் பூசித் துவப்பொடிச் சிறந்த செல்வ
மற்றுள குமரர் சீரின் வனப்புறு தேவி மிக்கா
யற்புதக் கமல மாயிவ் வாகன மயனன் றியப்
பெற்றதெப் பயனாற் றேர்ந்து பேசெனப் பிரசே தாவும். (௧௯)

முன்னுறு சனனம் வேடர் குலத்துளாய் முன்னோன் றந்தை
யன்னைதன் மரபு ளோர்பா லன்பிலி மருவு மங்கை
தன்னொடு பிரியை யாகித் தழைத்தகான் விலங்கின் கூட்ட
மன்னுயிர்க் கிறுதி செய்து மகிழ்ந்துண்டு வாழு ஞான்று (௨௦)

வான்புனல் பெய்யா தாகப் புவியெலாம் வாட்ட மெய்த
வூன்பயில் விலங்கின் கூட்ட மொன்றுநிற் கெய்தா தாகத்
தான்புசிப் பின்றி நீயுன் றாரத்தொ டலைந்தே யோர்நா
டேன்பயில் கமலம் பூத்த வோடையைச் சிறக்கக் கண்டாய். (௨௧)

கண்டுநீ யோடைப் பூவைப் பறித்திரு சுமையாய்க் கட்டித்
தண்டலில் விதிசை யென்னும் பட்டினந் தழங்கு வீதி
கொண்டுளே திரிய யாருங் கொள்பவ ரின்றிக் கங்குன்
மண்டுறு பசிநோய் வாட்ட மங்கையொ டிருந்த ஞான்று. (௨௨)

மங்கலத் தொனிகண் மிக்காய் முழங்கநீ வனிதை யோடு
மெங்குள தொனியீ தென்ன நாடிமண் டபத்தி னெய்தி
யங்கனை யொருத்தி பூதித் துவாதசி விரத மாற்றிப்
பொங்கராத் துயிலு மாலைப் பூசனை புரியக் கண்டாய். (௨௩)

கண்டநீ விரத மாற்றிக் களித்துளாண் மிகுத்த நன்மை
பண்டுறு பலத்த னங்க பதியெனும் வேசை மாகங்
கொண்டிடு திங்கட் சுக்கில பக்கங்கூர் துவாத சிச்சீர்
தண்டலில் விரத முற்றி வரையுப்புச் சைய தானம். (௨௪)

குருவினுக் களிக்க வெண்ணிச் சினகரங் குலவிப் போற்றி
யிருவினை யொழிக்குங் கண்ணற் கிழையொடா பரணஞ் சாத்திப்
பொருவறு பூசைசெய்யும் வேலைநீ புகலும் வேட
ருருவமா னோடும் பார்த்துன் னுளத்துநல் லறிவு தோன்றி. (௨௫)

விலைகொளாக் கமல மந்த வேசைபாற் கொடுத்துப் பூட்கை
மலையடர் கண்ணற் போற்றி வயங்குறு சைய தான
நிலைபெறப் பேரப்பு கென்று நீசெப்பும் படியே செய்து
கலகவாள் விழியன் னாளுங் கருத்துறு களிப்பி னோடும். (௨௬)

முப்பது வராக னெல்லுங் கலங்கண்மூன் றூறுங் கொள்கென்
றப்பொழு தியம்ப நீநல் லறிவினுற் கொள்ளே னென்னத்
துப்புறு நீவி ரன்னந் துய்த்திடு கென்ன யாங்கள்
செப்பிய முதனு டொட்டுச் சிறுமையாற் புசித்தி லேமால். (உஎ)

இப்பெரு விரதம் பூசை யின்றுநீ யியற்றல் கண்டேம்
வெப்புறு பசிநோ யோடு வினையெலா மொழிந்த தாவின்
றைப்பொழு துபவா சம்மா யருந்துவே னுனை யென்று
செப்பியந் நாளி ராவிற் சிறந்தசா கரத்தைச் செய்தே. (உஅ)

மறுதினம் பதுமை சையை லவணத்தின் வரையி ரண்டோ
டுறுதொகைக் கபிலை வெள்ளி யோடுபொன் னலங்கரித்தே
யறுதொழி லாளர்க் கீந்து குருவையர்ச் சனைகள் செய்து
பிறிவறப் பொன்னூர் பூமி பிறங்குதக் கணையா யீந்து. (உகூ)

சுற்றத்தா ரதிதி மிக்க விருந்தொடுஞ் சுதர்க டோழர்
மற்றைப்பேர் தம்மொ டுண்டுன் மனையொடும் பார ணந்தா
னற்றைப்போ தினிற்செய் வித்தா னப்பல னதனு னீயிங்
குற்றுப்பே ரரச னுகி யுதித்தனை தேவி தானும். (௩0)

பாரியா வந்தா ளிந்தச் சனனத்தும் பதும மாயன்
கூரவே சாத்து மந்தப் பலத்தினுற் குலவி யோங்கு
மூருமோர் பதும வாக னம்முனக் கீந்தான் கஞ்ச
னுரியா மந்த வேசை யனங்கன்றன் பாரி யானுள். (௩க)

கமலவா கனத்தை யிந்தப் புவிமிசை யிருத்திக் கங்கை
விமலமாந் தீரத் தெய்தி விபூதித்துவாதசியென் றோது
மமலமாம் விரத மாற்றென் றறைதலு மதுவே யாற்றி
யிமயநாட் டரச ரேத்த வினிதுவீற் றிருந்தான் மன்னே (௩உ)

யாவரே யெனினு மிந்த விரதத்தை யினிது னுற்றிற்
பூவல யத்தில வாழ்ந்து புகழ்பெறு துறக்க மெய்தித்
தாவிலாப் பதும னூற்றங் கிருந்துபின் றக்கோ ரேத்த
மேவும்வீ டடைவ ரென்ன வரன்முறை விரித்தான் சூதன். (௩௩)

எண்பத்தோன்பதாவது

விபூதித்துவாதசி விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உ௬0உ.

தொண்ணூறாவது

சட்டி விரத வத்தியாயம்.

தரும்பல மகங்க ளாற்றுந் தாழ்சடை முனிவர் யாரு
முருந்திதழ் முறுவல் பாகன் மொழிந்திடு விரத சட்டி
விரிந்திடு வகையை நந்தி விளம்பநா ரதன்முன் கேட்டுப்
புரிந்தவா வுரைத்தி யென்னச் சூதனே புகலு மன்றே. (௧)

பவவினை யொழிக்கும் பஞ்ச பாதகந் தீர்க்கும் பாரி
லுவமையில் செல்வ நல்கு முவப்புறு துறக்க முத்தி
யிவைபெற வருளு நன்மை விரதமு விருப துண்டோர்
குவையுற விருக்கும் வெவ்வே றுகவே கூறு கேமால். (௨)

தேவமா விரத மென்னுஞ் செய்கையோர் வருட மன்னந்
தாவரு மிருட்போ துண்டு வருடந்தான் முடிந்த பின்றைக்
கோவொன்று சூல மொன்று கூர்ந்தொளி ராழி யொன்றிம்
மூவகை பொன்னிற் செய்து மொழியுநான் மறையோன் றன்னை. (௩)

தம்பதி பூசை செய்து தயங்கிரு தூசு நல்கி
யிம்பரிற் சிவன்சீ ருத்திர னென்றவை மூன்று மீந்தா
னம்பனு ருலகஞ் சேர்வ ருருத்திர விரத நன்காய்
வெம்பிடா தொருபோ துண்டு விளங்குபொன் னிடப மொன்று. (௪)

செய்தொரு திலத்தே னுத்தான் கூடச்சீர் மறையோர்க் கீந்தாற்
றுய்யநற் சிவலோ கத்திற் றுலங்குவ ரனந்த கால
மையறு பெருமை லீலா விரதத்தின் வகையோ ராண்டு
கையறு திருட்போ துண்டோ ரிடபமுங் கழுநீர்ப் பூவும். (௫)

பொன்னினுற் செய்து வெல்லம் பொருந்திய தட்டில் வைத்துத்
தன்னிக ரில்லா வேத மறையவன் றனக்கே யீந்தான்
மன்னுவர் விண்டு லோக மகிடர்க்குப் பிரீதி செய்திட்
டின்னல்க டீர்பி ரீதி விரதத்தி னியல்பு சொல்வாம். (௬)

ஆடிதொட்டடுத்த திங்க ளுன்கெண்ணெ யாட றீர்த்துப்
பீடுற வருக்கிய பாத்திரம் பிறங்குப கரண நல்கிற்
கேடுரு வரிலோ கத்திற் சேர்குவர் கௌரி நோன்பு
பாடுறு வசந்த காலம் வெல்லம்பா றயிர்நெய் நீக்கி. (௭)

உண்டுவெள் ளியினுற் செய்த பாத்திரத் துடனுண் சேங்
கொண்டுதம் பதிகட் கீந்தாற் குலவுவர் பவானி லோக
மண்டலத் தளிக்குங் காம விரதந்தை மாதந் தொட்டே
யெண்டரு பதின்மூன் றுள்ள திதியினு ளிருட்போ துண்டே. (௮)

கோதிலிக் காடை பத்தங் குலத்தம ணியவ சோக
மோதிய வசந்த கால முருவவேள் பிரீதி யென்றே
வேதியர்க் களிக்கிற் கற்பம் விண்டுவி னுலகத் துற்றுத்
தீதறு சோக மின்றிச் செகத்தினுக் கரச ராவார். (௯)

ஒருசிவ விரத மாடி முதலுறு நாலு திங்க
ளிருகரங் கான கங்க ளிகழ்ந்திடா திருந்து நெய்தேன்
மருவிய வழுது ணங்காய் வர்ச்சித்துக் கார்த்தி கைப்போப்
பொருவிறிங் களிலக் காயைப் பொன்னினுற் பொருந்தச் செய்து. (௧௦)

அந்தணன் றன்பா லீந்தா லடைகுவர் சிவலோ கத்தின்
விந்தைசேர்ந் துயர்ச வும்மிய விரதமார் கழியைத் தொட்டு
நந்துறு நாலு மாத நறைமல ரணித னீத்து
வந்திடு மீன மாத மலர்மூன்று பொன்னிற் செய்தே. (௧௧)

சந்தியோர் மூன்று மீசன் கேசவன் சரணம் போற்றி
யந்தணர்க் கிந்தான் மிக்கா யடைகுவர் பரம லோகம்
பந்தமில் லாத சீர்ச்சௌ பாக்கிய விரதஞ் சாற்றின்
வந்தபங் குனியைத் தொட்டு வருதிரு திகைநா டோறும். (௧௨)

உவப்புறு லவணம் வர்ச்சித் தாண்டொன்று நிறைந்த பின்னர்த்
தவப்பெறு மறையோன் றன்னைத் தம்பதி பூசை செய்து
நிவப்புறு மனைநற் சையை நேருப கரணத் தோடு
மவர்க்குத வினையர் கற்ப மடைகுவர் கவுரி லோகம். (௧௩)

நாமகள் விரதம் போற்றி னவிலுமோ ராண்டு சந்தி
யேமுறு பொழுதின் மோனத் திருந்தோராண் டொழிந்த பின்னர்த்
தோமறு குடத்தி னெய்கார்த் திலநறுந் துசொ டுங்கண்
டாமணி தானஞ் செய்யி னடைவர்பா மகடன் வீடு. (௧௪)

செந்துவர் வாய்க்க ருங்கட் செந்திரு விரதஞ் செப்பி
னந்திடா வருட மொன்று பஞ்சமி நாளிற் பொன்னை
வந்தனை புரிந்தே யந்த நாளுப வாச மாற்றி
யந்தணர்க் கரிய பொன்னின் கமலமொன் றுவொ டீந்தால். (௧௫)

விண்டுவின் பதத்தைச் சேர்ந்து விபவத்தி லுறுவர் துக்க
மண்டுறு தொழியு மாயுள் விரதமான் முன்ன ராதல்
பண்டையின் வினையை நீக்கும் பரம்பொருண் முன்ன ராதண்
மண்டிய கோம யத்தான் மெழுகியோர் வருடஞ் சென்றால். (௧௬)

அரியபொற் கலச மொன்றோ டாவினை மறையோர்க் கீந்தா
லுரியதோ ரயுத சன்ம மோங்கிய வாயுள் பெற்றுத்
தெரிசிவ லோகஞ் சேர்வர் சீர்த்தியாம் விரதஞ் செப்பி
னொருவரு டமுமோர் தானத் துற்றர சிரவி கங்கை. (௧௭)

பணிந்தொரு சந்தி யுண்டு மோனமாய்ப் படர்வெங் கோபந்
தணிந்துயர் பொறுமை யோடுந் தம்பதி யைத்தண் பூவா
னணிந்துபூ சித்தான் மூன்று பொன்னேறுன் றலங்க ரித்துப்
பிணிந்தவன் போடு மீந்தாற் பெரும்பரி மகப்பே றெய்தும். (௧அ)

வருசாம விரத மீசற் கேனுமா யவனுக் கேனும்
புரியபி டேக மோராண் டாற்றியே புனித மாய
பரிவின்மண் டிலம தாக மெழுகிப்பச் சரிசி யாலே
தெரிதரு கமலஞ் செய்தெட் டங்குலந் திகழப் பொன்னால். (௧௯)

கமலமொன் றமைத்துக் காரெட் டேனுவுங் கருதிச் செய்து
விமலமாஞ் சாமவேதிக் களித்திடின் மேன்மை சேரு
மமலன்ற னுலகஞ் சேர்வ ரறைவீர விரத நன்கா
யுமையொரு பாகற் போற்றி நவமியி னொருபோ துண்டு. (௨0)

கன்னியர்க் கன்னஞ் சொன்னங் குப்பாசங் கலையீந் தம்பொ
னின்னுருச் சிங்கம் வேதற் கீந்திடிற் சிவபு ரத்தின்
மன்னுவ னயுதஞ் சன்மம் வடிவுடை வீர னுவன்
மின்னனு ரியற்றின் வேண்டும் விபவமுஞ் சுகமுஞ் சேர்வார். (௨௧)

இந்திர விரத மாண்டொன் றெய்தமா வாசை தோறும்
புந்தியா லான்பா லுண்டு புகழுறு சிரார்த்தம் பண்ணி
யைந்துபாற் பசுப்பொன் னுடை பணிகொள்பூ ரணப்பொற் கும்ப
நந்திடா தளிக்கின் மாய னல்லுல கடைவர் மற்றும். (௨௨)

நூறுவ மிசத்தி லுள்ள நுவலரும் பிதிர்க்கள் யாரு
மேறுவா ரெம்ப தத்தி னியம்புகற் பாந்த ரத்தின்
மாறுகொள் பகையை வென்று மனுநெறி முறை நடாத்திப்
பாறுறு படைக ளேந்திப் பார்த்திவ னுவன் மாதோ. (௨௩)

ஆனந்த விரதந் தான்சித் திரையாதி நாலு மாதந்
தானிந்தை யாவு நீங்கிச் சாலுறு மன்னந் தூசு
தானஞ்சேர் திலங்கொள் பாத்திரந் தக்கணை கருத்தி னீந்தால்
வானங்கூர் பிரம லோக மன்னிப்பின் னரச னுவார். (௨௪)

வழங்கிய திரிதி மேன்மை விரதமான் கரத்தெம் மாணைப்
பழங்கொணெய் தீரப் பஞ்சா மிரதத்தாற் பரிவின் வேத
முழங்கிட வாட்டி யாண்டின் முடிவிலான் பணில முத்தி
யொழுங்கினர்க் கீந்தா லீச னுலகிலுற் றுயர்கோ னுவர். (௨௫)

அகிற்சர விரத மாண்டொன் றருத்துமூன் றனைவர்ச் சித்துச்
சுகப்பவப் பசும்பொன் னுற்செய் மிருகம்பூ சுரருக கீந்தான்
மகப்பரிப் பலத்தை ச சேர்வர் வளர்கற்பத் தரச ராவர்
பகற்றனில் விரத மாகிப் பகர்ந்தவை கறையின் மூழ்கி. (௨௬)

மதிகொடம் பதியை யன்பாய் மலர்கொடர்ச் சனைகள் செய்து
விதிமுறை யன்ன மீந்து விளங்குமா பரண மாடை
கதிபெறக் கொடுப்போர் வெய்யோன் பதவியிற் கற்பம் வாழ்வார்
துதிவிண்டு விரத மாடி முதற்சொலுந் திங்க ளொன்றும். (௨௭)

உத்யகா லத்தின் மூழ்கி யொருபொழு தருந்தித் தேனின்
மதியின்வே தியருக் கன்னம் வழங்கிக்கோ மறையோர்க் கீந்தாற்
சிதைவின்மா லுலகஞ் சேர்வர் சீர்ச்சிவ விரத மாடி
முதல்வரு மகரமாத வரையுநெய் முடிபூ நீக்கி. (௨௮)

பாயத மாலை யோடு பகர்தரு கிருத தேனு
வாய்வுறு மிவைக ளெல்லா மருமறை யோர்கட் கீந்தான்
மாய்விலாச் சிவலோகத்தில் வாழ்வர்கல் லியாண ராகித்
தீமையை யொழிக்குந் தீவ விரதமோ ராண்டு மட்டும். (௨௯)

சினகரத் தான்முன் மாலை தீறுமிட் டெண்ணெய் நீத்துத்
தனிவிளக் கம்பொற் சூலஞ் சக்கர மிரண்டு தூசு
கனகமொ டளிக்கி னீசன் கழலிணை சேர்வர் பூணும்
பனகவா பரணர் பங்கிற் கவுரிநோன் பியற்றும் பண்பு. (௩௦)

கார்த்திகை முதன்மூன் றும்பக் கத்தினிற் கோச லத்தை
வார்த்தருங் கஞ்சி மாந்தி வருடமொன் றிரவோர் போதா
யார்த்திடு மன்னந் துய்த்தா லளிக்கினோர் கற்ப மன்னை
சீர்த்திகொ ளுலகஞ் சேர்வன் செனிக்கின்மங் கலவேந் தாவன். (௩௧)

உயர்திட விரத மேடத் துறுதிங்கட் சந்த நீக்கி
நயமிகு முத்துச் சிப்பி நனிபெறு கந்தத் தோடு
செயிரறு வெள்ளித் தூசுஞ் சிறப்பொடு மறையோர்க் கீந்தாற்
றுயர்வினை யொழித்துப் போகம் வருணலோ கத்திற் றுய்ப்பார். (௩௨)

வளர்கீர்த்தி விரதஞ் சொல்லின் வைகாசி மாத முள்ளந்
தளர்விலா துப்பும் பூவும் வர்ச்சித்துத் தண்ணீர்க் கும்பம்
கிளர்தரு பசுவா டீந்தாற் கேசவ னுலகோர் கற்ப
மிளர்கர விருந்து கீர்த்தி வேந்தென வுதிப்பன் பின்னும். (௩௩)

பிரமமா விரதஞ் சொல்லிற் பெயர்பெறு பிரமாண் டத்தைத்
திரள்பசும் பொன்னாற் செய்து திலராசி சொரிந்து தானும்
விரவிய திலத்தை மூன்று நாட்டுய்த்து விலங்கு மோமம்
வரமுற வியற்றி யன்னமறை யோர்கள் வழங்கிப் பின்னும். (௩௪)

மறையவன் றன்னைப் பாரி யுடன்மலர் கொண்டாச் சித்துப்
பிறைவடந் தூசு நல்கிப் பிரமாண்டம் பலமூன் றேனுங்
குறைவறப் பொன்னிற் செய்து குலவுபுண் ணியகா லத்தே
யிறைவனும் விசுவான் மாவுக் கற்புத மெனவே யீந்தால். (௩௫)

பிறவிநோ யறுத்துச் சொற்ற பிரமத்தி னுருவஞ் சேர்வர்
மறைபுகழ்ந் தேக்துர்ந்தேனு விரதம்பான் மார்ந்தி யோர்நா
ளுறுபொறை யாற்றி மிக்சா யோங்கதோ முகியா வொன்றே
டறைபொரு ளியன்ற வெல்லா மந்தணர்க் களிக்கின் மேலாம். (௩௬)

பரமன்ற னுலகிற் சேர்வன் பவவினை யொழிக்கும் பைந்தேன்
விரைமலர்க் கற்ப கப்போர் விருக்கத்தின் விரத மான்யா
திரமுற வருந்தி மூன்று தினங்கழித் திட்டே யப்பா
லுரமிகு பொன்னு லந்த விருக்கமோர் பலமேற் செய்து. (௩௭)

இயன்றதக் கணையி னோடு தண்டுலம் பருப்போ டீந்தாற்
பயன்பெறு கற்ப மொன்று பிரமன்றன் பதத்திற் சேர்வர்
வியன்பெற விளங்கு மேம விரதத்தை விரிக்கின் மாதம்
வயங்குப வாசஞ் செய்து மாமறை யோரைப் போற்றி. (௩௮)

ஆவினைத் தானஞ் செய்தா லமருவன் விண்டு லோக
மேவுதார் விரத மோர்நாள் வியந்துபால் பருகிப் பொன்னிற்
பாவுறு மிருப்பான் மேலாம் பலத்தழற் பதுமைசெய்தே
யோவிலா மறையோர்க் கீந்தா லுருத்திர னுலகஞ் சேர்வர். (௩௯)

மன்னுமா விரதம் வெல்லம் வருதிரி திகையிற் றுய்த்தே
யுன்னிய மாகத் தேனு முரைத்தசித் திரையி லேனும்
பன்னிய குளநற் றேனுப் பரிந்தொரு மறையோர்க் கீந்தா
லன்னைநற் கவுரி லோக மடைந்துபூ சிக்க வாழ்வார். (௪௦)

பிரமாவின் விரதம் பக்க வுபவாசம் பிறங்கச் செய்து
வருமிரு கபிலை யீந்தால் வானவ ரசுரர் போற்றப்
பரனுல குற்றுக் கற்பாந் தரத்தர சராவ ராலிவ்
விரதமாய்ச் சொல்பி ராத்தி விரதமோ ராண்டு மட்டும். (௪௧)

ஒருபொழு துண்டே யீசன் பதத்தினை யுவந்தர்ச் சித்துத்
தெரிதரு சலகும் பத்தைத் தக்கணை யுடனே யீந்தார்
கருவினை யொழித்தோர் கற்பங் கண்ணுத லுலகில் வாழ்வார்
விரிகதிர் விரதந் தானம் விளங்கொராண் டட்ட மிக்கண். (௪௨)

உற்றவூண் சாய ரத்தத் துண்டொரு கபிலை தானங்
கற்பமொ டளிக்கி னிந்திரன் கருதிய வுலகில் வாழ்வார்
விற்பெற விளங்கும் வைசு வானர விரதஞ் சிங்கப்
பொற்புறு மாதந் தொட்டுப் புகலிரு நான்கு மாதம். (௪௩)

இந்தனந் தானஞ் செய்தே யிலங்கிய கிருத தேனு
வுந்தனி மறையோர்க் கீந்தா லுயர்பரப் பிரமஞ் சேர்வார்
பந்தம தறுக்குங் கண்ணன் விரதத்தின் பான்மை யாண்டு
நந்தலி லாத வேகா தசியினள் ளிரவி னுண்டு. (௪௪

தங்குபொன் னாழி தன்னைச் சாற்றுமந் தணருக் கீந்தாற்
செங்கண்மா லுலகுற் றுப்பின் செகம் புரந் திடுவன் பாச
வெங்களை களையுந் தேவி விரதமொ ராண்டு மட்டும்
பொங்குபா யசத்தை மாந்திப் புகர்முகப் பசுவி ரண்டை. (௪௫)

களங்கமின் மறையோர்க் கீந்தாற் கமலைதன் பதத்தில் வாழ்வர்
துளங்குசெங் கதிர்சேர் பானு விரதஞ்சொல் லாண்டு மட்டும்
விளங்குசத் தமியி னத்த விரதமா யிசைந்தோ ரவை
வளங்கொளு மறையோர்க் கீந்தால் மன்னுவன் பானு லோகம். (௪௬)

கணபதி விரதஞ் சொல்லிற் கணிக்குமோ ராண்டு நான்காய்ப்
புணர்திதி தோறுந் தத்தம் போசனம் புரிந்து பொன்னாற்
பணைமருப் பிணைம தத்தி பம்பண்ணி மறையோர்க் கீந்தா
லிணையிலாச் சிவலோ கத்தி லெய்திவீற் றிருப்பன் மாதோ. (௪௭)

திகழ்பல விரத மாடித் திங்கடொட் டீரிண்டாய்ப்
புகறிங்கட் கனியு ணமற் கனிகளைப் பொன்னாற் செய்து
துகளறு கோம யத்தைக் கூட்டியே தூயோர்க் கீந்தா
லகலிரு விசும்பின் விண்டு லோகத்தி லடைவர் மாதோ. (௪௮)

சவுரமா விரத மாண்டு சத்தமி தினத்தி னன்னங்
கவர்தலை யொழிந்து பொன்னின் கமலங்கூர் கபிலை கும்பம்
பவவினை யொழிய வீந்தாற் பகலவ னுலகஞ் சேர்வ
ரவமொழித் தருளும் விண்டு விரதமோ ராறு திங்கள். (௪௯)

துவாதசி பன்னி ரண்டு முபவாச மாகத் தூசு
மவாவொடு கோவும் பொன்னு மீந்திடி லடைவர் மிக்காந்
திவாவொளிப் பரம லோக மிடபத்தின் விரதஞ் செப்பி
னுவாவுறு கார்த்தி கைக்கு ளோர்சந்தி யிரவி லுண்டே. (௫௦)

இடபத்தைச் சூலஞ் சாத்தி யிறைவற்கற் புதமாய் விட்டா
லடைவுற்ற சிவலோ கத்தி லடைந்துவாழ்ந் திடுவர் திண்ணந்
திடமுற்ற சீர்த்தி சேர்திரி யம்பக விரத மாண்டு
படர்வுற்ற சதுர்த்த சிக்கண் பகலுண திரவி னுண்டே. (௫௧)

இரண்டுகோ மறையோர்க் கீந்தா லெய்துவர் சிவலோ கத்தின்
மருண்டநோய் தீர்க்கும் வார விரதங்கூர் வார மேழும்
புரண்டுகண் டுயிலுங் கங்குற் போதுண வதனை நீக்கித்
திரண்டநெய்க் கும்ப மீந்தாற் சேர்குவர் பிரம லோகம். (௫௨)

இந்திர விரத மோராண் டினியபுற் றருப்பை தன்னிற்
புந்தியாற் சயனஞ் செய்து பொருந்துபாற் பசுவை வேத
வந்தணர்க் கீந்தாற் கற்ப மமருவ ரமரர் நாட்டிற்
சிந்தனை யிருளை மாற்றுஞ் சிவவிர தத்தைச் செப்பின். (௫௩)

திரிதிகை தினத்திற் பாக மங்கியிற் செய்யா வன்ன
மரிதினிற் புசித்துக் கோவை யந்தணர்க் கீந்தான் மண்ணின்
மருவிடார் சிவரு பத்தில் வாழ்குவர் கயிலை தன்னில்
விரிவுறு பலத்தை நல்கு மச்சுத விரதஞ் சொல்லின். (௫௪)

திகழுப வாச மிக்க திரிதிகை தினத்தி னூற்றி
யிகலிரு பதத்தின் மேற்பொன் னிருபரி பூண்ட திண்டேர்
புகன்மறை யோருக் கீந்தாற் பொருந்துவர் நூறு கற்ப
மகலிருந் துறக்க மெய்தி நெடும்புவி யாள்வர் பின்னும். (௫௫)

ஆனையின் விரதந் தானு மப்படி யுபவா சத்தை
யூனமி றிரிதி கையி லுஞற்றியே களிறு பூண்ட
வானுயர் பொற்றேர் பண்ணி வழங்கிடிற் சத்திய லோகத்
தீனமில் சகத்திர கற்ப மிருந்துபின் னிறைவ ராவர். (௫௬)

சுமுகர்மா விரத மாண்டு சொற்பரி மளம்வர்ச் சித்தே
யமுதநற் சுவையை யீந்தா லளகையர்க் கரச ராவர்
சமுகநீர்க் கரச னுனை வருணன்றன் விரதஞ் சாற்றிற்
குமுதம்விள் ளிரவி னீரிற் குலவியுன் னுணை யேத்தி. (௫௭)

உதயத்திற் கோவொன் றீந்தா லுறுவரவ் வருண லோக
மதிபெறு விரதஞ் சாந்தி ராயணம் வகையி னூற்றி
நிதியினுன் மதியைச் செய்து நேடியந் தணருக் கீந்தாற்
கதிர்விரி சந்திர லோகங் கருதிநன் கடைவர் மாதோ. (௫௮)

உருத்திர விரத மாண்த் திங்களி னுரிமை யோடு
விரித்கனல் வீசு பஞ்சாக் கினிநடு மேவி மோனத்
தரித்துயர் தவத்தை யாற்றி யட்டமி சதுர்த்த சிக்கண்
பரித்தசெம் மாலை யிற்பொற் பசுவினை மறையோர்க் கீந்தால். (௫௯)

உரமொடு சுவர்க்க லோக மடைகுவ ருயர்ப வானி
விரதமோர் சிவால யத்தை மெழுகிமேற் கட்டி கட்டிக்
கருதுமோ ராண்டு முற்றிக் கபிலையை மறையோர்க் கீந்தா
லரனரு ளுலக மெய்தி யமர்ந்துவீற் றிருப்பர் மாதோ. (௬௦)

தபனன்றன் விரத மாசி மதிமுதற் றையி ருகச்
சுபமுறு தினங்க டோறு மீரநற் றுகிலைச் சேர்த்திச்
சபதப மியற்றி யோங்கு மிரதசத் தமியிற் சீரார்
கபிலையை மறையோர்க் கீந்தாற் கற்பம்வா னுலகிற் சேர்வர். (௬௧)

பகர்தரும் விரதஞ் சொல்லிற் பங்குனித் தசமி யாதி
தகவுறு மூன்று நாளுந் தனியுப வாச மாற்றி
வகைமணை த்தைய மைத்து மறையவர்க் கீந்தார் சாரும்
புகரறு மிரவி லோகம் பொருந்தியே வாழ்வ ரன்றே. (௬௨)

இந்துவின் விரத மூன்று சந்தியு முண்டி யின்றிப்
புந்திகூர்ந் திழையி னுற்றம் பதிபூசை புரிந்தா வொன்றை
யந்தணர்க் களிக்கின் முத்தி யடைகுவ னரிய சோம
விந்தைகூர் விரத மாண்டு விளங்குசுக் கிலபக் கத்தில். (௯௩)

துதிகைக டோறு முப்புத் துன்னுபாத் திரத்தை யன்பா
யதிகநான் மறையோர்க் கீந்தாங் கழகுறு கபிலை யொன்றை
விதிமுறை யளிக்கி னெம்மான் சிவபுர மேவி வாழ்ந்து
வதியுங்கற் பாந்த ரத்தின் மன்னர்க்கு மன்ன னவன். (௯௪)

சிகியெனும் விரதஞ் செப்பிற் றிகழ்பிர தமைக டோறும்
பகரொரு சந்தியுண்டு பருவ்மொன் றடைவிற் போக்கி
யிகலறு கபிலை யீந்தா லிருந்தழ லுலகஞ் சேர்வர்
புகரறுத் தோங்கும் விப்பிர விரதத்தைப் புகலு வேமால். (௯௫)

தசமிதோ றொருபோ துண்டே யாண்டொன்று தவிர்ந்த பின்றை
வசமுறு கபிலை பத்து வயங்குசெம் பொன்னி னாலே
திசைபுரப் போரைச் செய்தப் பதுமைவே தியருக் கீந்தா
லசைவிலாப் பிரமாண் டத்துக் கதிபதி யாவ ரம்மா. (௯௬)

பாதக மொழிக்கு மிந்த வறுபது விரதப் பான்மை
யேதமொன் றின்றி யாமே யுரைத்தன மிவையோ ரேட்டி
னீதியா யெழுதி னோர்கள் படிப்பவர் கேட்போர் நேர்ந்தோ
ராதியா றாறு மன்வந் தரவரை யருளி னேடும். (௯௭)

காந்தரு வருக்கு வேந்தாய்க் களித்தர சிருப்ப ரென்னத்
தேர்ந்துநா ரதற்கு நந்தி தெரித்ததைச் செங்கண் மாயன்
வேந்தனு மனுவுக் கன்று விரித்தருள் செய்தா னென்னச்
சாந்தநற் குணத்துச் சூத முனியருந் தவர்க்குச் சொன்னான். (௯௮)

தொண்ணூறவது

சட்டி விரத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௪௭௦.

தொண்ணூற்றொன்றாவது

நானவிதி யத்தியாயம்.

பானலந் தருமொழி பாகற் போற்றியே
மானல முனிவரர் மகிழ்ந்து நீருறு
ஞானநல் விதியைநீ நவிலு கென்றலு
மூனமில் சூதமா முனிவ னோதுமால். (க)

நாரத முனிவனை நந்தி நோக்கியே
நீரினின் முழுகுநன் னெறியைக் கூறுவான்
சேர்புறத் தழுசினைத் தீர்த்த லன்றியே
வார்தரு மனத்தழுக் கினையு மாற்றலால். (உ)

நானமே யுத்தம நண்ணு கும்பத்தி
லேனையோர் தந்தநீ ரேனு மேகுளத்
தானநீ ரேனுமே யாடு போதினி
லூனமில் பவித்திர மொருகை பற்றியே. (ங)

மந்திர மறிந்தவன் விதிவ ழாமலே
முந்திய பிரணவ மூல மாகிய
வெந்தைமா லக்கர மெட்டு மேத்தியே
புந்தியி னன்பொடு போற்றியாடுக. (ச)

ஆடுபோ துளம்பரி சுத்த மாகியே
நாடிய திசைகளோர் நான்கி னுன்முழ
நீடுயர் கங்கையை நிமித்தத் தேத்தியே
பீடுறு மந்திரம் பிறங்கக் கூறுவான். (ரு)

விண்டுவின் பதத்திலுற் பவித்து மேன்மை சேர்
தண்டலி வயிணவி யாகிச் சங்குகைக்
கொண்டவன் றனைத்தெய்வ மெனக்கு நித்துளாய்
மண்டலத் துதித்துறு வரையு மீட்டவே. (சு)

ஏறிய பவந்தவிர்த் திடுதி யீறிலா
வீறுயர் மூவுல கத்து மிக்கதாய்ப்
பேறுற வுண்டெனப் பிறங்கு வாயுமுற்
கூறிய மூன்றரைக் கோடி தீர்த்தமும். (எ)

ஒருரு வாகவந் துதித்த பூமியிற்
பேர்பெறு நந்தினி பெரிய வானகத்
தேர்பெறு நளினியென் றிசைக்கு நாமத்தாய்த்
தார்பெறு தக்கைபி ருதுவி விக்கைதான். (அ)

விச்சுவ காயைநற் சிவைவித் தியாதரி
துச்சறு சுப்பிர சன்னே சொல்லுவோர்க்
கச்சமி லாதலோ கப்பிர சாதனி
யுச்சித சைமியைசா னுவிநற் சாந்தையே. (௯)

தெண்டிரை யிருந்தசாந் திப்பிர சாதனி
யெண்டகு மிப்பெய ரியற்றிப் போற்றினுன்
மண்டல மூன்றினும் வயங்கு தீர்த்தங்கள்
தண்டுரு தெய்துறுந் தான வேலேயில். (௧௦)

இருகையி னூற்புன லெடுத்தங் கேழ்தாங்
குருவருண் மந்திரங் கூறி யேயெழு
தரமைந்து தரஞ்சொன்மூத் தரங்க ளேனுமே
சொரிபுனற் சென்னியிற் றுலங்கப் பெய்துபின். (௧௧)

மறையவர் சுருதிமா மந்தி ரத்தினு
லறைபுனன் மிருத்திகா தான மாடியே
முறைபெற வருளுமா சமன முற்றியே
துறையுறு கரையினி லேறித் தூய்மையாய். (௧௨)

வெண்ணிறக் கலேயிரண் டிலங்க வீக்கியே
புண்ணிய தருப்பணம் போற்றி மூவுல
கண்ணுபல் லுயிர்கட்கு மரிய தேவர்க்கும்
பண்ணுக முப்புரி நூல்கை பற்றியே. (௧௩)

வேறு.

தேவ ரியக்கர் கந்திருவர் திகழும் பர்களத் திரிகளூர்
மேவு கருடர் மரமெறும்பு வீக ளுயர்வித் தியாதரர்வான்
வாவும் விசும்புச் சாரிகண்மா னிடராற் பிழைக்கு மன்னுயிர்க
ளோவி றரும சாலிகட்கு முவப்பச் சிலத்தைத் தருப்பித்து. (௧௪)

சாற்றிய சனக ராதி நால்வர்க்குந் தவத்தின் மிக்கா
யேற்றமாங் கபில ராதி யிருடிக் ளெழுவருக்கும்
பேற்றுயர் மரீசி யாதி பிரமரோன் பதின்மருக்கும்
தோற்றுமின் னேர்கட் கெல்லாந் தருப்பணந் துலங்கச் செய்து. (௧௫)

தன்னிடக் காலிற் சானுப் பூமியிற் சார வூன்றி
முன்னுமக் கினிச்சு வாத்தா சவுமியர் முதலி னேருக்
குன்னிய கந்த மெட்கொண் டுஞற்றுக தருப்ப ணஞ்சேர்
மன்னிய தருப்பை யோடும் பிதாப்பிதா மகரே மற்றும். (௧௬)

பிறபிதா மகரி னேடு மாதாதன் பிதாவின் மாதா
வறைபிதா மகரின் மாதா வறைந்திடு விருத்த மாதா
முறைதரு மாதா தந்தை தாய்முதன் மொழியும் வர்க்கத்
திறையவர் குருத்தன் னுசா னிலங்கிய ஞாதி யானேர். (௧௭)

சுற்றத்தா ரெவர்க்கு நட்புத் தொடர்சிநே கர்க்கு முன்னம்
பற்றுற்ற சனனந் தோறும் பரிவுறு கிளைஞ ருக்கு
முற்றுற்றென் னிடத்தி னின்றுந் திருத்தியை யுறுவோர் யார்க்கு
மற்புற்ற திருத்தி யாக்கக் கடவதென் றகத்தி னெண்ணி. (௧௮)

இவர்தரு மலர்க்க ரத்தா விரும்புன லினிதி னேந்தி
யுவமையிற் றருப்ப ணங்க ளுவப்புற வியற்றப் பின்றை
கவர்சுத்தா சமனஞ் செய்து கமலமொன் றமையத் தீட்டிக்
குவையெள்ளக் கதைபூக் கந்தங் கூடுநீ ரிரவிக் கீந்து. (௧௯)

விண்டுவி னுருவாய் விண்டு வமிசந்தா ளுகி வீசு
மெண்டருங் கிரண மோரா யிரவரய்ப் பிரபாக ரப்பேர்
கொண்டவ ராகித் தேவ தேவராய்க் கூருந் தொண்டர்க்
கண்டுகா தலராய் நீடி யகல்சக நாத ராகி. (௨௦)

உரைத்திடு திவ்விய சந்த னருடிக ரோங்கு நாமந்
தரைக்கொரு பற்ப நாபர் சத்திய தேவ ரென்றும்
விரைக்கணி குண்ட லங்கத பூடித ரென்று மேன்மை
நிரைச்சரு வவ்வு டைக்கீர் நாமமு நிகழ்த்த லன்றி. (௨௧)

தயங்கிய புகழ்சேர் சத்தியோ சாதபூ டிதராய் வீறு
வயங்கிய சருவ லோக நாதரர்ய் வைய மெல்லா
மியங்குநித் திரையைப் போக்கு மிறையவ ராகி யேபுண்
ணியங்கள்பா வங்க ளுக்கு நீடிய சான்ற தாகி. (௨௨)

கண்கண்ட தெய்வ மாய்ப்பாற் கரதிவா கரரு மாகி
விண்கண்ட மேவு வெய்யோய் நமக்கார மென்றட் டாங்க
மண்கண்டம் படவ ணங்கி வலஞ்செய்து முக்காற் போற்றிப்
பண்கண்ட மறையோ னுனபொன் மூன்றையும் பரிசித் தப்பால். (௨௩)

மால்வளர் சினக ரத்தின் வணங்குக வென்றே நந்தி
பாலுறு நார தற்குப் பகர்ந்ததை மனுவுக் கன்று
சேல்வடி வெடுத்த மாயோன் செப்பின னென்னச் சூதன்
சால்புறு முனிவ ருள்ளங் களிப்புறச் சாற்றி னுனல். (௨௪)

தொண்ணூற்றேன்றவது

நானவிதியத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௪௯௪.

தொண்ணூற்றிரண்டாவது

மார்க்கண்டர் தன்மர் சம்வாதவத்தியாயம்.

காசறு வேள்வி யாலுங் கடிமலர்த் தொடைக ளாலு
மீசனை வழிபட் டேத்து மிருடியர் முனிமார்க் கண்டன்
பேசறு தரும ராசன் பிறங்கிய சம்வா தத்தை
நேசமொ டுரைத்தி டென்னச் சூதனு நிகழ்த்து மன்றே. (௧)

அவ்வகை நந்தி யெம்மா ணாரதற் கறியச் சொற்றான்
கவ்வைவெண் டிரைமு ழக்கிக் கரையிடைத் தரளஞ் சிந்தும்
பவ்வநீர் நாப்பண் மச்சப் படிவமா யுதித்த மாயோன்
றிவ்விய மனுவைப் பார்த்துச் சிறப்பொடு முரைத்தா னன்றே. (௨)

அறநெறி முறைவ ழாம லத்தினா புரத்தின் முன்னா
ளிறையெனுங் கவுர வேச னிறந்தபின் பாண்டு மைந்தன்
பொறைவடி வானதன்ம புத்திரன் வியாதன் கண்ணன்
முறைதெரிதிரித ராட்டன் முதலினோ ரிருக்கு ஞான்று. (௩)

கார்முகில் வண்ணன் றன்னைக் கருத்தொடு மினிது நோக்கி
யேர்பெறப் போற்றித்தன்ம புத்திர னெம்ம னோர்கள்
போரினில் வீந்தா ரெந்தை புகழ்பெறு திரித ராட்டன்
பாரிடைத் துயரி னுழும் பான்மையை யுரைக்கற் பாற்றோ. (௪)

அதிபல ராமன் வீடு மன்றுரோ ணன்சீர்க் கண்ணன்
துதிபெறுந் தம்பிமார்க டொண்ணூற்றொன் பதின்ம ரோடு
முதிர்துரி யோத னன்பொன் முடியணி யரசர் வீரர்
விதிவழி வீயச் செய்தேன் வினைப்பவ மொழிவ தென்றோ. (௫)

ஈட்டுமிப் பாவந்தீர்ப்ப தெத்தவ மெந்த யோக
நாட்டுமெத் தரும மெந்த நன்னதி நரர்க ளானோர்
வாட்டமில் லாம லெந்தத் தலத்தினில் வதியின் மாயோன்
வீட்டினி னடைவ ரென்ன விழிகணீ ரொழுகச் சோர்ந்து. (௬)

இப்படி யென்ற னெஞ்ச மிடுளுற மயக்கஞ் செய்த
வொப்பில்கண் ணனையு மைந்த ரோங்குநூற் றுவரு மாளச்
செப்பருந் துயரி னுழுந் திருதராட் டனையுந் தம்மான்
மெய்ப்படு மரபு வீய மெலிவியா தரையும் யானே. (௭)

தருமநன் னெறியைக் கேட்ப தெவ்வகை தரணி யாளுந்
திருவள ரரசு வேண்டே னென்றுளந் தேம்பப் பின்னோ
ரருகுநின் றாற்றக் குந்தி பாஞ்சாலி யனைகாந் தாரி
யுருகியுள் ளுடைந்து வீழ்ந்தங் கழுதுநெட் டுயிர்த்து வாடி. (௮)

தளர்ந்திடு ஞான்று வர்ர ஞசியிற் றவங்க ளாற்றி
யுளம்பரர் அன்ப மோரு யோகமார்க் கண்ட ராங்கண்
விளங்கு பொன் மாடவீ தியத்தினு புரத்தின் மேவி
வளங்கெழு முன்றில் வாயில் வந்தன ரென்னக் கேளா. (௯)

எதிரெழுந் தோடித் தன்ம புத்திர னிருடி பாதங்
கதிபெற வணங்கி யேத்திக் கரகம லங்க டாங்கிப்
புதியமா ளிகையிற போந்து பொலன்கொள்சிங் காதனத்திற்
பதிவுற விருத்திப் பூசை பரிவுடன் புரித லோடும் (௧௦)

தவமுனி சரணம் போற்றுந் தருமபுத் திரனை நோக்கி
யுவமையி லரச ரேறே யுன்னுளத் துணர்வு நீத்து
கவலையுற் றிடரி னாழ்ந்த காரண மென்கொல் போரிற்
புவனியில் வீந்தார் பொறப்பும் புகழ்ச்சியு முனைக்கற் பாற்றே. (௧௧)

மனுமுறை செலுத்தி ராச நீதியை வழாது செய்தா
யுனதுபே ரறிவாற் பாவ முன்னிடத் தணுகா தென்னப்
புனைதவப் பெரியோ யென்றன் றுன்பொழி பொருட்டா லுற்று
யினியுளத் துயர்க டீர வியம்புதி தெரிய வென்றான். (௧௨)

தருமபுத் திரநீ கேட்டி சகலதீர்த் தத்து மிக்கரய்ப்
பெருமைசேர் பிரமன் முன்னம் பிரயாகை மகிமை சொற்று
னருமையத் தலம்போய்ச் சேர்த லரியசாங் கியமா யோகம்
புரிதலாந் தீர்த்த யாத்திரை போதலு மதற்கொவ் வாதால் (௧௩)

ஆதலி னினக்கு வேண்டுந் தருமங்க ளனைத்துஞ் சொல்கேம்
போதுதல் பிரயா கைக்கே யெனவுளம் பொருந்து வோர்கள்
பாதகம் பவங்க டீரும் பரகதி யடைவர் திண்ண
மேதமி லரும்பிர யாகை யெவற்றினு மேலா மென்றே. (௧௪)

மார்க்கண்ட முனிவன் முன்னந் தருமற்கு வகுத்த வாறே
மேற்கொண்டு நந்தி நார தற்குப்பின் விரித்தா னென்னச்
சூற்கொண்டல் வண்ணன் வைவச் சுதமனு வுக்கு மயோன்
பாற்கண்டி தெனுஞ்சொற் காதை யருந்தவர்க் குரைத்தான் சூதன். (௧௫)

தொண்ணூற்றிரண்டாவது
மார்க்கண்டர் தன்மர் சம்வாத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௫௦௧.

தொண்ணூற்று மூன்றாவது

பிரயாகா கமனபல வத்தியாயம்.

புகலிரு வினைக ணீத்துப் புலனொருப் படுத்தி யோங்குந்
தகாழற் கரும மாற்றுந் தனிப்பெரு முனிவ ரெல்லாம்
பகர்பிர யாகைக் கேகும் பலன்றனைப் புகறி யென்ன
நிகரின்மா தவத்துச் சூத முனிவர னிகழ்த்து மன்றே. (க)

தருமபுத் திரன்முன் சோக தாகமுந் தளர்வுந் தேறி
யொருவழி யயர்ச்சி நீத்திட் டுணர்வுவந் தருளின் மிக்கா
யருளுறு திறன்மார்க் கண்ட ரமுதவான் முகத்தை நோக்கிப்
பெருகிய பிரயா கைக்கண் டானத்தின் பேறி யாது. (உ)

துன்னுவோர் பலன்கள் யாது துஞ்சுவோர் பலன்கள் யாது
பன்னிய பிரயாகைக்குப் பகர்ந்திடு மெல்லை யெங்ஙன்
மன்னிய கற்பந் தோறு நித்திய ராகி வாழ்தி
ரென்னுளங் குளிரச் சொல்வி ரென்றலு மியம்ப லுற்றான். (ங)

சுவர்க்கத்தை யடைவ ரங்கண் டுஞ்சினோர் தூய்மை யோராய்ப்
பவக்கொடுங் கும்பி சாரரர் பகர்வர்மூன் றுலகின் மிக்காந்
தவப்பெருந் தலைமை யாமத் தலத்தினை விரிஞ்சன் விண்ணோ
ருவப்புடன் காப்ப தீர்த்த முரைக்கவாண் டயுதஞ் செல்லும் (ச)

ஆயிரங் கோடி தீர்த்தத் தரும்பிர யாகை மிக்கா
மேயவா றயுதம் விற்கை விண்ணவர் கங்கை காப்பர்
சேயவெங் கதிரோன் காப்பன் யமுனையைத் தேவர் கோமான்
மாயிரும் புகழ்ப்பிர யாகை வரைப்பினைக் காத்தல் செய்வான். (ரு)

விரிவட விருக்க மேரு வில்லியே காப்பன் பாவம்
புரிபவ ரந்தத் தானம் பொருந்திடார் நினைக்கிற் கேட்பிற்
றெரிசனஞ் செய்யிற் சொல்லின் மிருத்திகை சிறக்கப் பூசி
னரியபா தகங்க ணீங்கிச் சிவகதி யடைவர் திண்ணம். (சு)

குண்டமோ ரைந்தி னுப்பண் குலவிய பிரயா கைக்க
ணண்டினோர் பவங்க ணத்தி லகலுநற் கங்கை தன்னைத்
தண்டலில் பாவி யேனுஞ் சகத்திர யோச னைக்கண்
மண்டுகா தலினி னைக்கின் மழுவலான் பதத்திற் சேர்வர். (எ)

கங்கைநீர் காணி லேத்திற் கருத்துடன் மூழ்கி னுண்ணின்
மங்கல மெய்தும் பாவ மாயுமேழ் மரபீ டேறுந்
தங்கிய யமுனு கங்கா சங்கம மூழ்கின் வாய்மை
பங்கமி றருமஞ் செல்வஞ் சேர்ந்திடும் பவங்க டீரும். (௮)

தேவர்தென் புலத்தோர்க் காகத் திரிவேணி சங்கமத்திற்
பாவகத் தொடுமோர் திங்கள் பக்கமேழ் வார மேனு
மேவுமுத் தினங்க ளேனும் விளங்கிய வோர்நா ளேனும்
தாவருஞ் சிரார்த்தத் தோடுந் தருப்பணந் தயங்கச் செய்தால் (௯)

தானுறு சனனந் தோறும் வேண்டிய விபவஞ் சார்வ
ரேனைமன் பதைகட் கெய்த லரியதா மெறிக்குங் காந்திப்
பானுவின் குமரி யான யமுனைசேர் பகீர திக்கண்
மானிட மேந்தி யென்று மகிழ்ந்துவீற் றிருப்ப னம்மா. (௧௦)

திவ்விய யமுனை,கங்கை திகழுநா மகளே மூன்று
மெவ்வமில் சங்க மத்தி னிரும்புன லாடிச் சித்த
ரவ்விய மருந்துந் தேவ ரசுரர்காந் தருவ ரெக்கர்
வெவ்விட நாக ரின்னோர் சுவர்க்கத்தை மேவி னூரால். (௧௧)

என்றுமார்க் கண்டர் தன்மற் கிசைத்தவா நந்தி தன்பா
லொன்றுநா ரதனுக் கன்பா யுரைத்தன னென்று நாவாய்த்
துன்றிய கோட்டு மச்சச் சொருபமான் மனுவை நோக்கி
யன்றுரைத் திட்டா னென்ன வருந்தவர்க் குரைத்தான் சூதன். (௧௨)

தொண்ணூற்று மூன்றவது
பிரயாகா கமனபல வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௨௫௨௧.

தொண்ணூற்று நான்காவது

கோதானபல வத்தியாயம்.

அரும்பிர யாகைத் தலத்தினிற் கோவை யளித்திடு தானத்தின் விதியை
விரும்பினேங் கேட்கவென்று மாமகங்கள் விபப்புறு தவவினை யனைத்து
மொருங்குறப் புரியு நியமநன் முனிவ ருரைத்திட வுமைபொரு பாக
னெருங்கிதழ்க் கமலத்தாளுளத் திருத்தி நிகழ்த்துவான் சூதமா முனிவன். (௧)

தவத்தினி லுயர்ந்த முனிவர்மார்க் கண்டர் தருமரா சன்முக நோக்கி
யுவப்புறு கங்கைசூழ்பிர யாகை யுயர்ச்சியை யறிவுளோர்க் கன்றிப்
பவக்கொடுங் கடலுள் வீழ்ந்துபா தகஞ்செய் மாதகர்க் குரைத்திட லாகா
நிவப்பினத் தலத்தி னயர்வர் வீந்திடினு நினைப்பரி தாம்பதஞ் சேர்வர். (௨)

அறிவைவிட்டகல நோயினுன் மெலிந்தோ னருஞ்சினத் தாலுடல் வெறுத்தோன்
வறியனு யலைந்து கிலேசமுற் றிடுவோன் வகுத்திடு மிவர்களே யெனினுந்
துறையுறு வாணி பகீரதி யமுனை சூழ்திரி வேணி சங்க மத்தி
னிறையுயிர் வலிய விடுத்திடி னியங்கு நித்திய விமானமேற் சென்றே. (௩)

நினைத்தகா மியங்க ளளித்திடுஞ் சுவர்க்க மெய்திநீள் கதிர்மணித் தவிசி
னனப்பிடி நடையார் பதம்பெயர்த் தாடு மாடலுங் கண்டுகண் களித்தே
மனத்துறு போக போக்கிய மனைத்து மனுபவித் ததன்பலன் மாண்டார்
றினக்கதிர் விளக்கும்புவியிடைச்செங்கோல்செலுத்திடும்விபத்தினிற்செனிப்பான்.

காவத மனேக தூரத்தி னேனுங் கருதுமெத் தேயத்தி னேனுந்
தாவிலா துறையு மூர்களி னேனுந் தங்குமா ரணியத்தி னேனுஞ்
சேவையொ டிருக்கு மிடங்களி னேனுஞ் செல்லிடத் தேகமே யிருந்து
பாவனை யாமிப் பதிபிர யாகை நினைத்தவர் பானுல கடைவர். (௬)

மரணவே ளையினில் வாழ்பிர யாகை யுரைக்கினு மனத்தினெண் ணிடினுந்
தரணியி னின்றுந் தழங்குபல் லியங்க டுவைத்திடத் தார்நெடுங் கொடிஞ்சி
யிரணிய மயமா ரிரதத்தி னேறி யெய்துவன் பிரமலோ கத்தி
னரணமாஞ் சுவர்க்கத் தடைந்துபின் புவியில் விபவமோ டரசெனச் சனிப்பான்.

சொற்றிடுங் கங்கை யமுனைக்கு நடுவே துலங்கவோர் கோவலங் கரித்து
நற்குளம் பதனில் வெள்ளியாற் கட்டி நவின்றிடு கொம்புபொன் கட்டிப்
பொற்பொடு கழுத்திற் றூசினைச் சேர்த்துப் பொருளொடு மறையவர்க் கீந்தா
லற்புதக் கோவி னுரோமமத் தனையாண் டரன்பதத் தமர்ந்துவீற் றிருப்பார். (௭)

மணிமுதற் பொன்கோ வழங்குவோர் கையின் வாங்குவோர் தேவர்தம் பிதிர்க்கள்
பணிவிடைக் காக வாங்கிடிற் றீர்த்தத் தாடிய பலனவர்ச் சாரும்
பிணியுறு முடற்காய் வாங்கிடிற் றீர்த்தத் தாடிய பெரும்பலன் சாரா
வணிகதிர்க் கிரண முதலிய தினத்தி லேற்றிடா தஞ்சலுத் தமமாம். (௮)

வாழ்பிர யாகைத் தலத்தினிற் சிரார்த்தம் வழங்கியே சிவப்பொடு வெள்ளை
சூழ்நிறக் கபிலை யலங்கரித் தலவு கன்றொடு தொன்மறை யவர்க்குத்
தாழ்வினை புரிந்தே நல்கிடிற் கபிலை தன்னுரோ மங்களோ ரொன்றுக்
கூழ்வினை யொழிந்தொ ராயிரம் வருட முறைகுவன் சுவர்க்கத்து ளன்றி. (௯)

எந்தநற் சனன மெடுக்கினு மாங்க ணெய்திடுங் கபிலைபாற் பசுவாய்ப்
புந்தியொ டாவை நல்கினோன் கொடிய புன்னர கென்றுமே பொருந்தா
னந்திடா திலக்கம் பசுவினை நல்கும் பலத்தையோர் பாற்பசு நல்குஞ்
சிந்தையொ டளிக்கி னுத்தர குருக்கேத் திரத்தினின் மரபுடன் சேர்வன். (௧௦)

ஆதலாற் செய்யு மரியதா னத்தின் மேன்மையா மாவினை யளித்தா
னேதமே யிழைக்கு முரோகமா பத்து மியற்றிய பாவங்க ளனைத்துந்
தீதுள பவமு மொழித்துவீ டளிக்கு மென்றுதேர் மார்க்கண்ட ருரைத்த
நீதியை நந்தி நாரதர் கேட்ப நிகழ்த்தின னென்றனன் சூதன். (௧௧)

தொண்ணூற்று நான்காவது

கோதானபல வத்தியாய முற்றிற்று,

ஆகத்திருவிருத்தம். ௨௫௯௨,

தொண்ணூற்றைந்தாவது

தீர்த்தயாத்திரார விதி யத்தியாயம்.

நீர்த்திரி பதகை முடித்திடும் வேணி நிமலனை யனுதினம் பணிந்து, கார்த்திர ளனவான் புகையுறு வேள்வி கைவரு முனிவரர் யாருந், தீர்த்தயாத் திரையின் விதியினை யெமக்குச் செப்புதி யென்னலுந் தேர்ந்து, கூர்த்திடு புராண முறையறி சூத முனிவரன் கூறன்மே யினனால். (௧)

தவப்பெரு முனிமார்க் கண்டனைப் பார்த்துத் தருமரா சன்பிரயாகை, நிவப்புறு மகிமை யனைத்தையும் கேட்டு நிகழ்த்திரு பவமெலா மொழிந்தேன், பவத்தொட ரொழிக்குந் தீர்த்தியாத் திரைக்கே யேகுவோன் படர்கெடும் வகையை, யுவப்புற வுரைத்தி டென்றலு முனிவ னுளமகிழ்த் தினிதெடுத்து ரைப்பான் (௨)

யாவனே யெனினுந் தீர்த்த யாத்த்தரை க்கே யேகுறு போதினி லினைய, சேவினி லிவர்ந்தாற் செய்பலன் குன்றிச் சேர்குவன் கவந்தமா நரகந், தாவரு மன்னோன் செய்வினை பிதிர்க்க டாங்கொளார் தருமத்தி னெறியா, லாவதொர் கங்கை யாடிநீர் கொடுவந் தளித்திட வேண்டும்வேண் டுநர்க்கே. (௩)

தீர்த்தயாத் திரைக்கே யேகுவோன் செல்வச் செருக்கினாற் செறித்த மோகத்தாற்
கூர்த்தவா கனத்தி லிவர்தலே தீதாங் குலவுநீர் யமுனைகங் கைக்கு
ளார்த்தமத் தியிலே கன்னிகா தான மளிப்பவ னரகமே பாரான்
கீர்த்திசே ரரிய வுத்தர குருவிற் கேடில்போ கங்களே புசிப்பான். (௪)

பொருளிலா னேனு மஃதுளா னேனும் பொருந்திய வெதாசத்தி யீந்தான்
மருளிளாத் தீர்த்த மகிமையான் மிகவும் வர்த்திக்கும் பிரளய வரையு
மிருளிலாச் சுவர்க்கத் திருப்பனன் னிலைக்க ணினிதுறும் வடதரு மூலத்
தருளிலா னேனு மிறந்திடி னரவ கங்கணத் தவனுல கடைவார். (௫)

வடதரு விடத்திற் றுவாதசா தித்தர் மானமர் கரத்தனை வழுத்திப்
படரிருள் கடிந்து புவியெலாம் விளக்கிப் பகருக முடிவினிற் றெகிப்பார்
சுடர்களுங் காலுந் தொலையினுந் தொலையா திலங்குமத் தொன்மர மூலகைக்
கடலுணும் பொழுது மாயனவ் விலையி லறிவொடு கண்டுயில் வளர்வான். (௬)

தேவர்தா னவர்க ளியக்கர்கந் திருவர் சித்தசா ரணமுனி வோர்கள்
பூவல யத்தோர் நாகர்பன் னதிகள் பொருப்புக ளெண்டிசை புரக்குங்
காவலர் பிதிர்க்கள் சாத்தியர் சனற்கு மாரரேழ் கடல்விதி நெடுமா
யாவரு மந்தா கினியொடு யமுனை மருவுமவ் விடத்தினில் வதிவார். (௭)

சதுமுகப் பிரமன் முகத்தினின் றுதித்த சகலவே தங்களுந் தரும
விதியினைத் தெரித்த புராணசாத் திரமு மிக்கதத் துவங்களு மெண்ணெண்
பதிவுறு கலையு முலகினுள் ளோர்கள் பயில்வச னங்களுங் கடந்த
மதியுடை யோரு முயர்பிர யாகை மன்னிட வுன்னுவர் நாளால். (௮)

கங்கைமூ வுலகும் புகழொடு சிறக்குங் கருதிய தலத்தின்மா தானஞ்
செங்கையா னளிக்கிற் பரிமக மிராச சூயமுஞ் செயும்பலன் சேர்வர்
தங்கிய வெட்டெட் டிரண்டுடன் கூடுஞ் சகத்திர கோடிதீர்த் தங்க
ளிங்குநின் றுவந்து கீர்த்தனஞ் செய்யி னெழும்பிர யாகையி னெய்தும். (௯)

அருந்திரி வேணி சங்கம நாப்ப ணுருயிர் துறந்தவர் ஞானந்
திருந்துசத் துவநற் குணத்தொடும் விஞ்சை தெரிசிவ யோகிசென் றடையும்
பெரும்பத மடைவ ரெழிற்பிர யாகைப் பெருமையை யறிந்துசேர் கிலரே
விரும்புவி முதன்மூன் றுலகினி லிருந்து மிறந்தவ ரன்னரே யென்பார். (௧௦)

அத்தல நதியைத் தரிசனஞ் செய்தா லரவுமி ழம்புலி போன்று
மொய்த்தவெம் பாவ மொழிந்திட விளங்கி முக்கணு யகன்பதஞ் சேர்வன்
றத்துநீர் யமுனைத் தென்கரை மருங்கிற் சம்பள னச்சுவ தரனுந்
துத்திமா நாக ரிருவரங் குறைவார் துலங்குமத் தடத்துறை தன்னில். (௧௧)

தானபா னங்கள் செய்திடிற் பாவந் தழலுறு சருகென மாயு
மானமர் கரத்தோ னுறைசின கரமொன் றுண்டவண் சென்றடி வணங்கி
யூனமி லிருபத் தொருதலை முறையு முயர்கதி யடைவர்நீ ராடி
னீனரே யெனினும் பரிமகப் பலன்பெற் றிருப்பர்வான் பிரளயம் வரையும். (௧௨)

வரநதி குணபாற் பிறவிநோ யழிக்கும் வளங்கொள்சா முத்திர கூபந்
திரமுறு மாங்கண் முத்தினம் பிரம சரியமாய்ச் சினமொழித் திருக்கின்
விரவிய பாவங் கெட்டிடு மசுவ மேதயா கப்பலன் பெறுவ
ருரமுறு பிரதிட் டானமா புரத்திற் குத்தரம் பகீரதி கீழ்பால். (௧௩)

பெருகுமூ வுலகோர் புகழ்ந்திடும் பஞ்சப் பிரபதன மாம்பெருந் தீர்த்த
மொருதர மூழ்கின் மாமயப் பலன்பெற் றோரிரு சுடருள வரையு
மருவுவர் சுவர்க்க முருவசி புளின நண்ணியே மரிப்பவன் பிதிர்க்க
ளுருகுற வாறே டறுபதா யிரமாண் டருக்கன்வா ழுலகினி லடைந்தும். (௧௪)

தேவர்வா னுலகிற் சென்றுருப் பசியைத் தினந்தொறுந் தெரிசனஞ் செய்து
பாவக முறுகந் திருவர்நன் முனிவர் பரிவுறு பூசனைக் குரிமை
மேவிய பின்னர்ப் பெரும்புவிக் கரசாய் விளங்கியே யுருப்பசிக் கிணையாம்
பூவைய ரீரைம் பதின்மரை மணந்து பொருந்துவன் விபவபோக் கியத்தில். (௧௫)

பின்னர்நல் யோக சாங்கிய மடைந்து பேரின்ப வீடடைந் திடுவன்
மன்னிய கோடி தீர்த்தத்தின் மரிக்கின் வருடமோ ராயிர கோடி
பொன்னுல கடைந்து பூமியிற் பின்னு மகாகையர் கோனெனப் பொலிவன்
றன்னிக ரறும்வா சுகிக்கணி னுதக்கிற் றகர்ச்சுவ மேதநற் றீர்த்தம். (௧௬)

ஆங்கதிற் படிந்தோர் பரிமகப் பலன்சேர்ந் தளக்கரு நிதிகொடை தரும
மோங்குவித் தகமும் பேறுவர்நால் வேத மோதினோ ருண்ணும்வா சகத்தைத்
தாங்கினோ ரறிஞர் தருமநீ தியினோர் சாருமெய்ப் புண்ணிய மனைத்துந்
தேங்குமத் தீர்த்த மூழ்கிட நினைத்த காலையிற் சேர்குவர் திண்ணம். (௧௭)

யாவனே யெனினுந் தீர்த்தயாத் திரைக்கென் றேகுறு போதினி லிளைய
கோவினி லிவர்ந்தாற் செய்பலன் குன்றிச் சேர்குவன் கவந்தமா நரகந்
தாவரு மன்னோன் செய்வினை பிதிர்க்க டாங்கொளார் தருமத்தி னெறியால்
துங்கமா பாகை தணிற்சித்த வடகேத் திரமெனச் சொல்லிய தீர்த்தம். (௧௮)

அங்குறு மதனி லைம்பொறி யடக்கி யணிபெற விரதமா யமைந்து
திங்களொன் றிருந்து தானமே புரிவோர் சேர்குவர் பிரமலோ கத்திற்
சங்கையில் கோடி தீர்த்தமே யாடித் தம்புர மங்ஙன மொழிப்பார்
பொங்கிய தலத்திற் கோடியாண் டிய்த்துப் பொருந்துவர் வடதிசைக்கரசாய். ()

பாரின்மா னிடரு மும்பர்வா னவரும் பாதலத் துறைபணிக் குலமுஞ்
சீரிய கதிபெற் றிடவருள் செயலாற் செழுந்திரி பதகையா மந்த
நீரிடை மனிச ரென்புகள் கிடந்தா னிகரிலோ ரென்பினுக் கும்ப
ராருல கிடத்தி னுயிரம் வருட மமரர்பூ சனைசெய வமர்வார். (௨०)

துகளறு கங்காத் துவாரநற் றவத்தோர் துதிப்பதற் கரும்பிர யாகை
மிகைபெறு கங்கா சாகர சங்க மத்தொடிம் மூன்றினும் விருப்பாய்ப்
புகலருந் தானஞ் செய்தனன் சுவர்க்கம் பொருந்துவன் முத்தியும் புகுவான்
சகலபூ தங்க ளினுக்கும்பா தகர்க்குந் தருங்கதி கங்கைமற் றிலையால். (௨௧)

புனிதமா மெவைக்கும்புனிதமங்கலமாய்ப்பொருப்புவில்லெடுத்தபொற்றடக்கைத்
தனிமுதல் பவளச் சடிலபீ டிகையிற் றனணலை கொழித்தபெண் ணரசா
யினியசொற் சுவையாய் விசுவையா யுலகி லியாவரும் புரிபவக் குறும்பைப்
பனியிருள் விழுங்கு மிரவிபோற் றொலைக்கும் பகீரதி யெனமுனி பகர்ந்தான். ()

தருமபுத் திரனுங் கேட்டுள மகிழ்ந்தா னென்னவே தகைபெறு நந்தி
பொருவிலா மகதி யாழினோன் றனக்குப் புகன்றவா புணரியின் மாயன்
றெருமர லொழிந்து புளகிதம் பெருகத் திறல்கெழு மனுவினுக் குரைத்த
பெருமையீ தெனநன் முனிவரர் கேட்பப் பேசினன் சூதமா முனிவன். (௨௩)

தொண்ணூற்றைந்தாவது

தீர்த்த யாத்திரைவிதி யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௫௫௫.

தொண்ணூற்றாறாவது

பிரயாகையில்

தேக பரித்தியாக வத்தியாயம்.

மீனதே தன்னை வென்றுறு புலன்கள் வென்றுயர் மாதவர் யாரும்
பானலங் கூர்பிர யாகையிற் றேக பரித்தியா கத்தினை யுரையென்
றூனமில் சூத முனிவனைக் கேட்ப வுவகைகூர்ந் துரைப்பனீ தென்ன
நானவார் புயத்துத் தருமனை நோக்கி நவையறு கேள்விமார்க் கண்டர். (க)

அடையலர்ச் செகுத்த சிங்கவே றனையா யரும்பிர யாகையின் சரிதம்
புடவிமா னிடருக் கெளியதன் றின்னம் புகலுதுங் கேட்டிநீள் கங்கை
வடகரை யமையு மானத தீர்த்த மதனிடை மூன்றுநாள் வதியிற்
றிடமுட னிட்ட காமியம் பெற்றத் தீர்த்தத்தின் மீளவுஞ் சேர்வான். (உ)

ஆசைவிட் டொழிந்தோ னாயினு மனத்து ளன்புறு காமியா யிடினும்
வீசலை கொழிக்கு நீர்த்திரி வேணி சங்கமந் தன்னில்வீந் திடுவான்
மூசுவண் டிமிருங் கற்பக நாட்டின் மொழிந்திடு காமிய முழுது
மேசறப் புசித்து நரகினை நோக்கா திருந்துபின் னரசெனச் சனிப்பான். (௩)

அறையினன் மாக மதியினி லறுபத் தாறெனுஞ் சகத்திர தீர்த்தங்
குறைவறு புனிதப் பகீரதி யமுனை கூடிய தலத்தினிற் கூடுந்
துறையிலத் திங்க டனிலொரு மூன்று தினமுநீர் தோய்ந்திடிற் பசுக்க
ணிறைதரு மிலக்கம் விதிப்படி யளிக்கும் பலத்தினை நிலைபெறக் கொடுக்கும். (௪)

மாகமா தத்தி லத்தலந் தன்னில் வருகுளிர்க் கருங்கல னமைக்கிற்
சோகமொன் றின்றி யுடலுறு முரோமத் தொகையிலொன் றுக்கொரா யிரமாண்
டோகையொ டிருந்து பின்புவிக் கரசா பொருவிடா வீடுசேர் குவனூ
னுகுமா ரமுத கதிரினைத் தீண்டு நாளிலந் நதிபடிந் தெழுந்தால். (௫)

சந்திரன் பதவி யடைந்தவ னிருந்து தழங்கறு பத்தினோ டாறாய்
வந்திடு தொகையாஞ் சகத்திர வருடம் வானிடை மகபதி யுடனே
நந்தலில் லாம லிருந்துகந் தருவர் நன்முனி வோர்கள் பூசிக்கச்
சிந்துநீள் புவியி னவமணி கொழிக்குந் திருமகட் கிறையெனச் செனிப்பான். (௬)

தழலினை வளர்த்துத் தங்கலை கிழாத் தாளினை பிணித்துமேற் றூக்கிக்
கெழுமிதூ மத்தை யருந்தியத் தலத்தின் கேண்மையோர் கிளர்தரு சுவர்க்கத்
தெழுதுமோ ரிலக்கம் வருடமங் கிருந்து பின்னரிப் பாரிடைச் சுருதி
குழுமுமக் கினிகோத் திரத்தினிற் செனித்துக் குறைவில்பல்போகமும் புசித்தே!

பின்னரத் தீர்த்தந் தன்னையே யடையப் பெறுகுவர் பேரொளி விமானந்
தன்னிடை யிருந்து கங்கையி னுப்பண் டம்முடல் வீழ்ந்திடப் பறவை
துன்னுசெந் தசையைப் புசித்திட மரித்த தூய்மையோர் சுவர்க்கத்தி னிலக்கம்
பன்னிய வருடம் விதுவுல கடைந்து பாரிடை யரசராய்ப் பிறப்பார். (அ)

உரைதரும் யமுனை யுத்தர மதனி லொளிர்பிர யாகைக்குத் தெற்கா
யிரைதிரை சுருட்டு மிரணமோ சனமா மிருமைநற் றீர்த்தமா டிடுவோர்
புரையறு சகல ரணங்களுந் தீர்ந்து போற்றுசெங் கதிருல கடைவர்
வரன்முறை யிதெனத் தருமபுத் திரற்கு மார்க்கண்ட முனிவகுத் தனனால். (கூ)

வகுத்திடும் வகையை நந்திகே சுரர்முன் மகதியாழ் முனிவனுக் கன்று
தொகுத்தன னதனை மச்சமால் வைவச் சுதமனு வுவகைகூர்ந் திடவே
பகுத்தன னென்னச் சவுனக ராதி பலமுனி வோர்களுங் கேட்ப
மிகுத்தபே ரன்பாற் சூதமா முனிவன் விளங்கிட விளம்பின னன்றே. (க௦)

தொண்ணூற்றறவது

பிரயாகையிற் றேக பரித்தியாக வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உ௬கூ௬.

தொண்ணூற்றேழாவது

யமுனுமான்மிய வத்தியாயம்.

முக்குறும் பெறிந்தே யிருவினை தடிந்தே முழுமுத லொருவனை யுளத்தில்
வைக்குமா தவத்தோர் யமுனைமான் மியத்தின் வரன்முறை வகுத்தரு ளென்னச்
செக்கர்வான் சடில முக்கணெம் பெருமான் சேவடிக் கமலங்கள் போற்றி
விக்கின மகற்றி முறைபிற ழாமல் விளம்புவான் சூதமா முனிவன். (க)

ஐம்புல னடக்கி மும்மல முருக்கி யருந்தவ மியற்றுமார்க் கண்டர்
தம்பதம் வணங்கி யுயர்பிர யாகை சரித்திர முரைத்திட மகிழ்ந்தே
யிம்பர்வான் போற்று மெழிற்பிர யாகைக் கேகுவோ ரெய்திடு பலனை
நம்பநீ யுரைத்தி யெனுந்தரு மனுக்கு நற்றவ மாமுனி நவில்வான். (உ)

மனமொருப் படுத்தி யைம்புல னடக்கி மதிபெறு பத்தியொ டெழுந்து
சினமுத லகற்றி வளர்பிர யாகை சேர்குவ லென்றுசென் றிடுவோன்
றனைவொடு நடக்கு மோரடி யதற்குத் துலங்குமா யிரம்பரி மகப்பேற்
றினையடைந் தெழுமூன் றுயர்குடி சுவர்க்கத் தேறிநல் வீடடைந் திடுவான். (௩)

என்றுரைத் தருண்மார்க் கண்டனை நோக்கி யிரும்பய னற்பகன் மத்துக்
கொன்றுவ தெவ்வா றுயர்பரி மகப்பே றுணர்விலா மூடரு மெய்தத்
துன்றுவ தெவ்வா றுரைக்கெனத் தருமன் சொல்லுரு சுற்றிலு மகன்று
குன்றிடா வைந்து யோசனைப் பரப்பிற் குறுகினோர்க் கப்பலன் குலவும். (ச)

அப்பிர யாகைத் தலத்துயிர் துறக்கு மன்னவன் முன்னெழு மரபுஞ்
செப்பிய பின்ன ரீரெழு மரபுஞ் செல்லருஞ் சுவர்க்கமேற் றுவனா
லொப்பில்பா தகரத் தலத்தினிற் குறுகா ருண்மையீ தெனவுரைத் திடலு
மெய்ப்புறு தவத்தீர் நட்பொடு காமம் விரிபொருள் வேட்டனர் சென்றால். (௫)

எவ்வுல கடைவரெப் பலன் பெறுவ ரென்றலு மிருந்தவ னுரைப்பான்
செவ்விதா யைந்து யோசனை விசாலம் பொருந்துமச் சீர்ப்பிர யாகை
யவ்வயி னடைந்தார்க் கோரடிக் கசுவ மேதமா மகப்பல னணுகுந்
தவ்வலற் றிறந்தார் மூவெழு மரபார் தம்மொடுஞ் சுவர்க்கவீ டடைவார். (௬)

அறிந்ததே யெண்ணிச் சிரத்தையோ டடைத லரியதென் றேமுனி யறையத்
தெறும்பகை சினேகந் திரவியங் காம மிவைமனத் தெண்ணியாத் திரைபோய்ப்
பெறும்பலன் யாதோ வடைவதெவ் வுலகோ பேசினப் பதியொடுஞ் சுசியாய்க்
குறும்பகன் மனத்தின் யாத்திரைக் கேகிற் கொடும்பவ மொழிந்துவீ டடைவான்.

புகல்விசு வாச காதகம் புரிந்தோன் புனிதமா மப்பிர யாகை
நகரிடத் திருந்து கங்கைநீர் முக்கா னன்கொடு முழுகியந் நகரிற்
பகருமுத் திங்க ளையமேற் றுண்டாற் பரிபவ மொழிந்துவீ டடைவ
னகமுறு ஞான மின்றியாத் திரைக்க ணந்தநாற் கருமமும் வேட்டு. (௮)

சென்றவ னிட்ட காமிய மடைந்து செல்லருஞ் சுவர்க்கவீ டெய்திப்
பின்றனை தானி யத்தினித் தியமாம் பெருங்குடி வாழ்க்கையிற் பிறப்பன்
றுன்றுமெய்ஞ் ஞானத் தன்பொடு சென்றோன் றுலங்குபல் போகமுந் துய்த்துக்
கன்றுவெந் நகரி னின்றிடும் பிதிர்க டம்மையுங் கரையிடைச் சேர்ப்பன். (௯)

அப்பிர யாகை திங்களொன் றாடி னயனுல கடைவனென் றயன்முன்
செப்பின னீயு மனமொருப் படுத்தித் தெளிவுறக் கேட்டனை யதனால்
வெப்புறு தொழிந்தாய் மனத்துய ரென்றே விளம்பிய முனிவனைப் பின்னுந்
துப்புறு முன்ற னடிபணிந் தவர்க்கின் றுளகொலோ துன்பமென் றறைந்தான். ()

சூரியன் மகளாம் யமுனையுங் கங்கை தோற்றுதொல் வழியதா மதுவே
பாரிலா யிரம்யோ சனையகன் றிருந்து பரிவொடுங் கீர்த்தனம் பண்ணி
லாரிய ளாக வரம்பல வுதவி யரியபா தகக்குறும் பகற்றிச்
சீரின்மெய்ப் புண்ணி யம்பல வருளித் தெரிசனத் தளிக்குமங் கலமே. (௧௧)

தானபா னத்தா லெழுகுலம் புனிதத் தன்மையாய்ப் புரிந்திட வருளு
மானதோர் யமுனைத் தென்கரை மருங்கி னக்கினி தீர்த்தமுத் தரத்திற்
பானுவின் றீர்த்த மொன்றுள ததன்பேர் விரஞ்சக மென்னவும் பகர்வர்
வானுறு தேவர் கோன்முதன் முனிவர் வந்துமுச் சந்தியும் புரிவர். (௧௨)

கங்கைபோல் யமுனை தானுமே யிட்ட காமிய மோட்சமுங் கொடுக்குஞ்
சங்கமார் கங்கை முன்னவ ளென்னாச் சகலலோ கங்களும் வழுத்துஞ்
சிங்கவே றனையாய் நீயுமிம் முறையாற் றீர்த்தயாத் திரைதனிற் சென்று
மங்கைபா கன்றன் மலரடி போற்றி வரம்பறு தீர்த்தங்க ளாடின். (௧௩)

செனித்தநாண் முதலாச் செய்தமுன் பாவந் தீயிடைப் பஞ்செனச் சிதையு
மனத்தினிக் காதை யெண்ணிவை கறையில் வழுத்துவோ ரறிவொடு கேட்போ
ரனித்திய சனனப் பெருங்குறும் பகற்றி யரியவீ டெய்துவ ரென்ன
முனிச்சிவா கமங்கள் பயிலுமார்க் கண்ட முனிதரு மர்க்கிவை மொழிந்தான். (௧௪)

மொழிந்தவா றுயர்ந்த நந்தியெம் பெருமான் முறைபிற ழாமலே பொங்கி
வழிந்ததெள் ளமுதின் சுவையென விசையேழ் மகதியி னிசைப்பவற் குரைத்தா
னழிந்திடா மச்ச ரூபமான் மனு வுக்கறைந்தவா வருந்தவ நாளு
மொழிந்திடா தியற்று முனிவரர் கேட்ப வோதினன் சூதமா முனிவன். (௪௫)

தொண்ணூற்றேழாவது
யமுனா மான்மிய வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௨௫௯௦.

தொண்ணூற்றெட்டாவது
பிரயாகையில்
பலசொரூபகதன வத்தியாயம்.

மேன்முக டளவி யெண்டிசை வரையின் வியன்சினை பலபல வீசித்
தேனின முரல மலர்நறு வொழுகத் தேம்பொழி னைமிச முனிவர்
பானல்சேர் கங்கை மகிமையிற் பாவ சொரூபமாங் கதனத்தைப் பகரென்
றூனமில் சூத முனிவரன் றன்னை வினவலு முரைத்தன்மே யினனால். (௧)

தவப்பெரு முனிவன் மதிமுக நோக்கித் தருமபுத் திரனிவை மொழிவா
னுவப்பொடு பிரம னுரைத்தபுண் ணியமா முயர்புரா ணம்பல கேட்டே
னிவற்றினுட் புனித தீர்த்தமோ ரிலக்கத் திருபதி னாயிர நிகழு
மவற்றுணீ யெடுத்தே யரும்பிர யாகை யதிசய மாமென வகுத்தாய். (௨)

புவியினை மிசமா மந்தரத் திடையே புட்கர மூவுல கிடத்து
நவையறு குருக்கேத் திரமிவை மூன்றும் விசேடமா மிவையென லன்றித்
திவள்பிர யாகை மிக்கென வுரைத்த செய்கையைத் தெரித்தியென் றுரைப்பாய்
பவவினை யுடற்று மனத்தர்பாற் றருமப் பான்மையைப் பகர்ந்திட லாகா. (௩)

வருபிர யாகை கண்டுகேட் டறிந்தே மென்றுமார்க் கண்டனீ துரைப்பான்
பெரும்புவி யிடத்திற் சொற்சாத் திரத்தைப் பெரும்பிர மாணமாக் கொண்டு
தரும்பல யோக முளுற்றுவா னந்தத் தருமயோ கப்பலன் பெறுவன்
விரும்புமம் முறைவிட் டரியயோ கத்தை மெய்ப்பிர யாசமாய்ப் புரிவான். (௪)

அடைகிலான் யோகம் விரும்பியே யுளுற்றி னாயிர செனனத்தி லேனுந்
தடையிலாச் சித்தி யாயினு மாகுந் தயங்கொளி நவமணி யீங்தோர்
உடையதோர் சித்தி யாயினு மாகு முயர்பிர யாகையின் மரித்தால்
விடையநோய் நீங்கி யோகதா னத்தின் மெய்ப்பல னடைகுவர் திண்ணம். (௫)

சகலலோ கத்துஞ் சகலவான் மாவின் றன்மையி னிடத்தினுந் தக்கோர்
புகலரும் பிரம சொரூபமே கண்டாற் போலொரு பூவுல கத்து
மிகலறு பிரமற் பூசனை புரியு மியற்கைபோ லிப்பிர யாகை
யகிலருந் தீர்த்த மெவற்றினு மிக்கென் றமரரும் பூசனை புரிவர். (௬)

தீர்த்தமா மெவைக்கு மிப்பிர யாகை சீர்பெறு மரசெனச் சிறக்கும்
வார்த்தைசத் தியமா நான்முகத் தோனு மானிட னுகிரித் தியமுங்
கீர்த்தியி னோங்கி வளர்பிர யாகைக் கிளர்புனன் மூழ்கிட நினைப்பான்
மூர்த்தமா மயனு மிப்படி நினைக்கி னதன்பலன் யாவரே மொழிவார். (௭)

நந்தலில் சுவர்க்கஞ் சேர்த்திடுந் தரும நன்குற வாற்றினு மவர்கண்
மூர்துற வணுகா தென்கொலென் றுரைப்ப முனிவர னிதுரக சியந்தான்
தந்தைநான் மறையோர் வேதசாத் திரங்கள் தையலர் தண்புலக் குரவன்
செந்தழ னிதிய மழித்தவ ரெந்தத் தருமமே செய்யினுஞ் சேரார். (௮)

என்றனன் முனியை நோக்கியே தரும னியம்புவன் யோகசா தனையி
னன்றிகொண் மோட்ச மடைவதெவ் வாறு நவில்கரு மத்தினாற் சுவர்க்க
மொன்றுவ தெவ்வா றவனெறிஇப் புவியி னுதிப்பதெவ் வாறுநீ ராடின்
வென்றிகொள் போக மடைவதெவ் வாறு விளம்பென முனியினி துரைப்பான். ()

பொன்மணி தரளந் தேனுமற் றுள்ள பொருளுடை யோனை வஞ் சித்துப்
பன்மறை பயிலு மந்தணர்க் கீந்தோ ரீந்தவன் பரகதி யடையா
னன்மறை யுடையோன் றனைப்பலன் சாரு நரகம்வஞ் சித்தவர்க் கெய்துந்
தன்மநன் னெறியார்ச் சிதப்பொரு ளீந்தாற் சார்குவ னிகபர மிரண்டும். (௧௦)

கோரமாய்த் தேடும் பெரும்பொரு ளீந்தான் கொடியபுன் னரகமே யுறுவ
னூர்வமோ டெழுந்து தீர்த்தயாத் திரைசெ லருநெறி செல்குவோன் சுசியாச்
சீர்பெறு நியமத் துடனுண வருந்தித் தெரிபொருள் கோடலை நீத்துப்
பேர்பெறு கிரமத் துடனிகழ்த் திடினே பெறுவரத் தவப்பலன் முழுதும். (௧௧)

துன்னிய சீற்றத் தோற்றமில் லாதான் றுகளறு சத்திய வாதி
பின்னமி லாம லுறுதிட விரதன் பெட்பினொ டிப்புவி தன்னிற்
றன்னுயிர் போல மன்னுயிர்க் கிரங்குந் தயவினோன் முமிவர் நால்வ
ருன்னிய தீர்த்த பலத்தினை யுறுவ ரேரதுமீ துண்மைய தாமால். (௧௨)

முனிவரொ டமரர் புண்ணிய நெறியை மொழிந்தனர் நல்குர வடைந்தோர்
தனிமக மியற்றிப் பலன்பெறற் கரிதாந் தமக்கெளி தாகும்யாத் திரையார்
புனிதமா மகத்தின் பெரும்பல னெய்தும் புகலுமுக் கோடிமூன் றயுத
நனிபெறு தீர்த்த முதலிய வெல்லா நலந்தரு மாகமா தத்தில். (௧௩)

சூழ்பிர யாகைத் தலத்தினின் மிக்காய்ச் சொலுந்திரி வேணிசங் கமத்தின்
மூழ்கவந் தெய்து மாதலாற் றீர்த்த முக்கிய மொழிவதற் கெளிதோ
வாழ்கடல் வரைப்பிற் றீர்த்தயாத் திரைக்கே யன்புட னேகுதி யென்று
ஆழ்வினை தடிந்த மார்க்கண்ட முனிவ னுரைத்தன னென்றனன் சூதன். (௧௪)

தொண்ணூற்றெட்டாவது

பிரயாகையிற்பாவ சொரூபகதன வத்தியாய முற்றிற்று,

ஆகத்திருவிருத்தம். ௨௫௧௪.

தொண்ணூற்றெண்பதாவது

தருமபுத்திரன்

பட்டாபிஷேக வத்தியாயம்.

தருமபுத் திரருக் கன்று தரித்தபட் டாபி டேக
முறைசெய வேண்டு மென்றே யொளிர் சடை முனிவர் கேட்ப
விரைசெயுந் துளவ மாயன் மனுவுக்கு விரித்த வண்ணம்
பரையொரு பாகற் போற்றிப் பகர்ந்தனன் சூதன் மாதோ (க)

வரப்பிர யாகை மேன்மை வகுத்தன முறைப்பல் கேண்மின்
பரத்துறு நைமி சம்புட் காங்கேயை பிரபா சம்பாய்
திரத்தலை யெறியுஞ் சிந்து சாகர சங்க மஞ்சேர்
தரைத்தலத் துயர்ந்த கங்கா சாகர சங்க மந்தான். (உ)

திரையெறிந் துயர்கோ தீர்த்த மன்றியுஞ் சிறப்பு வாய்ந்து
பெருகுமூ வயுதங் கோடி தீர்த்தங்கள் பிரயா கைக்கண்;
விரவியே யிருக்கு மந்த மெய்ந்நதிப் பாங்கர் மாய
னரனயன் செய்யு மோம குண்டமூன் றமையு மாலோ. (௩)

வெப்பெனுங் குண்ட மூன்றி னடுக்கங்கை வலப்பாற் குண்டஞ்
செப்புறு யமுனை வாமஞ் சேர்தரு குண்டம் வாணி
யிப்பெரு நதிகண் மூன்று மியம்பிய சகல தீர்த்த
மொப்புறக் கூடின் முந்நீ ருவப்புறப் பிரவா கிக்கும். (௪)

கங்கையில் யமுனைக் கூடிக் கலக்குமத் தலம்பார் மாதுக்
கங்கமாஞ் சகன பார மென்றறைந் திடுவர் பூமி
தங்குமூன் றரையாங் கோடி தீர்த்தமந் தருலோ கத்திற்
பொங்கிய தளத்த மந்த ரத்தினிற் பொருந்து தீர்த்தம். (௫)

இவ்வகைத் தீர்த்தம் யாவுங் கூடினிக் கங்கை நேரா
மவ்வகைப் பிரயா கைக்கோ ரருங்கலை நேர்ந்தி டாதாற்
றிவ்விய பிரயா கைத்தீர்த் தந்திகழ் பிரம தேவர்க்
கெவ்வமி லோம குண்டத் திலங்குவே திகைய தாகும். (௬)

வேறு.

அத்தலத் தினையே நித்தமு மசுவா தரனொடு கம்பள னென
பைத்தலச் சுடிகைக் கட்செவிக் கவைநாப் பாந்தளோ ரிரண்டுமே காக்கும்
வித்தக மான வேதமோர் நான்கும் வேள்விகள் யாகங்க ளனைத்தும்
தத்துவ தேவ வடிவெடுத் தயனைச் சந்தத நினைத்தவ ணுறையும். (எ)

வேறு.

அருந்தவர் துதித்து நிற்ப ரமரர்கள் யாகஞ் செய்வர்
விரிந்தமூ வுலகி னிந்த வேதிகை யதிக மன்றிப்
பரிந்தமுக் கோடி மேலு மாயிரம் பத்துத் தீர்த்தம்
பொருந்தலாற் கங்கை சித்தி கேத்திரம் புனிதப் பேரும். (அ)

சத்தியந் தருமம் புண்ணியந் தழங்கிய பாவ நாசஞ்
சுத்தமெய்ப் பவத்தை நீக்கும் ரகசியஞ் சுவர்க்கத் தான
நித்திய மிதுவென் றெண்ணி நினைப்பவர் படிப்போர் யாரு
முத்திவீ டடைந்து வாழ்வர் முற்பிறப் பறிவி னோடும். (கூ)

அப்பிர யாகை யொன்றே யனந்த தீர்த்தத்தின் மூழ்கு
மெய்ப்பல னல்கும் வேந்தே பின்னவ ரொடுநீ மேவி
யொப்புறு தானஞ் செய்தி யொழிந்திடும் பவங்க ளென்று
செப்பிய முனியை நோக்கித் திரும்பவுந் தருமன் கேட்பான். (கo)

அரும்பிர யாகை மேன்மை யரிதரி தின்னுங் கேட்ப
விரும்பினேன் சொல்லு மென்ன வேதியன் முதலா மூவர்
பரிந்துமுத் தொழிலுஞ் செய்தல் பிரயாகைப் பான்மை யாருந்
தரந்தர மான லோக சராசரத் துயிர்கட் கீசன். (கக)

எள்ளொடு நெய்போற் கூடி யிருப்பனென் றெண்ணி யுண்மை
யுள்ளுமெய்ஞ் ஞான முள்ளோர்க் குற்பவ மரண மில்லை
முள்ளுறை கமல னாதி மூவரைக் கார ணத்தால்
விள்ளரும் பிரயா கைக்கண் மேவியே காத்திட் டார்கள். (கஉ)

எனத்தரு மனுமுன் கேட்ப விருந்தவ முனியுங் கூறு
மனைப்பிர யாகை நீள மகலம்யோ சனைக ளைந்தாம்
வனப்பெரும் பிரயா கைக்கு வடகரை மூவ ரான
சினக்கொடும் பாவந் தீர்க்குஞ் சிவனவ னுறைத லாலே. (கரு)

சகலதே வதைகள் சித்தர் சாரணர் முனிவர் யாரு
மகமகிழ்ந் தரனைப் போற்றி யுறைகுவ ரங்க ணன்பாய்
மகமியற் றிடுவோ ரென்றும் வானுல கடைந்து வாழ்வார்
செகதல முழுதுங் காப்பர் பிரளயஞ் சேரு மட்டும். (கச)

ஆகையாற் பிரயாகை மேன்மை யனந்தனு மனந்த நாவா
னோகையா லுரைக்க வொண்ணா தும்பிமா ருடனே கூட
வேகமாய் மோலி தாங்கி யிருந்துபூ லோக மெல்லாஞ்
சேகறக் காத்தி டென்று செப்பியே மறைந்தா ரன்றே. (கரு)

நந்திகேச் சுரனுஞ் சொன்ன நாரத முனியை நோக்கி
வந்துமார்க் கண்டன் சொன்ன மகிமைக ளெல்லாங் கேட்டுப்
புந்தியின் மகிழ்ந்து தன்ம புத்திரன் றம்பி மார்க
ளந்தணர் முனிவ ராசா னனுமதி பெற்று வைகி. (கசு)

இருந்திடும் போது கண்ண னெனதினன் சகத்திர மாக
விரிந்தநான் மறைகள் வல்ல வியாதனே முதலா யுள்ள
வருந்தவ முனிவ ரெல்லாங் குருவெனு மதியி னாலே
திருந்திய தரும னைச்சிங் காதனத் திருத்தி நன்காய். (கஎ)

சங்குபூ ரிகைவீ ராணந் தவண்டைமல் லரிகைத் தாளம்
பொங்குபல் லியமி யம்பப் பூவையர் நடனஞ் செய்யத்
திங்கள் வெண் குடைநி ழற்றச் செழுமணிக் கவரி வீச
மங்கல வாழ்த்தி சைப்ப மணிமுடி சூட்டி னாரால். (கஅ)

குருமணி மோலி தாங்குங் குருகுலத் தரசை நோக்கிக்
கருநிறப் பூவை மேனிக் கண்ணனுஞ் சொல்வா னிங்கன்
தருமபுத் திரகே ளென்றந் தழங்கிய யமுனை கங்கை
மருவுபிர யாகை தன்னை மறந்திடா திருந்தா லென்றும். (௧௯)

புரிந்திடு பவங்க ணீங்கிப் போகம்வீ டடைய லாகும்
விரிந்தபிர யாகை தன்னை விட்டுநீங் காமல் வாசம்
பரிந்தவன் விண்டு லோகம் படைத்தவ னுலகஞ் சார்வன்
றருங்கன தானம் வாங்கத் தக்கயோக் கியம்வாங் காமல். (உ0)

தன்புசிப் புக்கு மாத்திரந் தக்கன விரும்பி யென்று
மன்புடன் கூடி யுள்ளு மப்புறஞ் சுசியு மாகி
யென்பெழுந் தாலுங் கண்ட விடந்தொறு முண்ணு னன்றே
னன்பெரும் பிரயாகை மாந திப்பல னடைவன் மாதோ. (உ௧)

தகவொடு கோப மின்றிச் சத்திய வாய்மை கூறி
நிகரிலா மயக்கஞ் செய்யிந் திரியநிக் கிரகஞ் செய்து
சகலபூ தத்தி டத்துஞ் சமமதா யிருப்போர் தாமு
மிகுபல னளிக்கு மந்த நதிப்பல னெய்து வாரால். (உஉ)

மாதவர் முனிவர் தேவர் வருணமூன் றினுக்குஞ் செய்த
பாதகந் தீர யாகம் பலபல வகுத்தா ரந்த
நீதியா யாக மெல்லா நிதியுளோன் செய்ய வேண்டு
மாதலா லில்லான் றீர்த்த யாத்திரை செய்தல் யாகம். (உ௩)

ஓடிய கங்கை யோடு முலைப்பிலா வயுத மூன்று
கோடிதீர்த் தங்கண் மாக மாதத்திற் கூடி யோடு
மாடியே பவத்தை நீக்கி யாருயிர்த் துணைவ ரோடு
நீடிய செங்கோ லோச்சி நிலம்புரந் தினிது வாழ்தி. (உ௪)

பரிமகம் புரியும் போழ்தின் பக்கல்யாம் வருவ மென்றே
யுரைசெய்து கண்ணன் போனு னொண்மணி மகுட வேந்தன்
றருமமும் பொறையுந் தாங்கித் தராதல முழுதுந் தாங்கிப்
பொருவரு முலக மூன்றும் புகழினைப் பரப்பி னுனல். (உ௫)

உதையகா லத்தி லிங்ங னுரைத்திடு மத்தி யாயக்
கதையினைப் படிப்போர் கேட்போர் கயிலைவீற் றிருப்ப ரென்றே
யிதையநெக் குருக மாயன் மனுவினுக் கியம்பும் வண்ணஞ்
சிதைவறு தவத்தோர் கேட்பச் செப்பினன் சூதன் மாதோ. (உ௬)

தொண்ணூற் றேன்பதாவது

தருமபுத்திரன் பட்டாபிஷேக வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உ௬உ0.

நூறுவது

பூகோள மேருவருணனாவண யத்தியாயம்.

சோதில்பூ கோள மேரு வருணனை கூறு கென்ன
மாதவ முனிவ ரெல்லா மனமகிழ்ந் தவந்த சேட்பப்
பாதிமா மதியார் கொன்றைப் பவளவார் சடைமேற் சூடு
மாதியை வணங்கிச் சூத னடைவினி லறைவ தானுன். (க)

நயமுட னந்தி கேச னாரத முனிக்குத் தீர்த்தத்
தியல்பெலா முரைத்து முக்க ணீசன்ற னிடத்திற் சேர்ந்தான்
மயலறு முனியு மோர்ந்து வானுல கடைந்தா னென்னக்
கயல்வடி வெடுத்த மாயன் மனுவுளங் களிப்பச் சொன்னுன். (உ)

என்னலும் பூமிக் செல்லே யிருங்கடல் வெற்புத் தீவ
மன்னிய வருட மந்த வருடஞ்சேர் நதிந தந்தான்
பன்னிரு சுடரு லாவு முலகமப் பருதி திங்க
ளுன்னருங் கதிகள் யாவு மெத்தனை யுரைத்தி டென்றார். (ரூ)

அறைதரு பூகோ ளத்தி னகலநீ ளத்தை யோதிற்
குறைவிலா வைம்பத் தாறு கோடியோ சனைய தாகு
முறையுமப் பூகோ ளத்திற் றீவங்க ளுண்ட னேக
முறையிலே யாவ ரானுஞ் சொல்லியு முடியா தம்மா, (ச)

கதிர்மதி தினமுஞ் செல்லுங் கதியெலா மேழ்தீ வுக்குட்
பதிவுற வடக்கிச் சொல்வேம் பகருமத் தீவுக் கெல்லாம்
விதிதரு மளவை மாந்தர் மானத்தால் விளம்பு வார்க
ணிதிமுதற் பொருள னேக நிறைந்திடுங் கடலே ழுண்டால். (ரு)

எழுகட லுமங் கூறி னெறியுவர் கரும்பு பாறேன்
பழுதினெய் தயிர்பா னன்னீ ரென்றிவை பகர்வ ராமாற்
குழுமுமிக் கடலைச் சூழ்ந்து குலவிய தீவே ழுண்டான்
மொழியுமத் தீவி னுமமு முறைபெற வுரைப்பா மன்றே. (சு)

நடுமுதற் சம்புத் தீவு பிலட்சநல் லிரண்டாந் தீவு
வடுவில்சான் மலமே மூன்ரூந் தீவென வழுத்த லாகு
நெடிலுறு நாலாந் தீவு குசமென நிகழும் வண்மை
படர்கிர வுஞ்சத் தீவை யைந்தெனப் பகர்வர் மாதோ. (எ)

சாகமே யாருந் தீவு தக்கபுட் கரத்தீ வேழா
மாகவிவ் வகையோ ரேழு மடைவினி லளவி ரட்டித்
தேகலின் வட்ட மாக விளங்கியொன் றென்றைச் சூழ்ந்து
சேகற வேழு தீவிற் சிறந்துபல் பொருளு மோங்கி. (அ)

விளங்கிய சம்புத் தீவோ ரிலக்கம்யோ சனைவித் தாரங்
கிளர்ந்திடு பட்டி னங்கள் கிராமங்க ளதில னேகம்
வளங்கெழு சித்தரோடு சாரணர் முனிவர் வாழ்வ
ரளந்திடா வண்ண மோங்கு பலநிற மலைய னேகம். (கூ)

அம்மலை யருவி பாயு மாறுக ளனேக கோடி
செம்மைசேர் குணக்கு மேற்குஞ் சிறந்தசா கரத்தைச் சேருஞ்
சும்மைகொ ளிமய நீலஞ் சுவேதவெற் பேம கூடந்
தம்மைநேர் நிடதஞ் சிருங்க மாறுமே தலைமை யாமால். (௨0)

மங்குறோ யிமைய வெற்பைப் பாரத வருடஞ் சேருந்
திங்கள்சே ரேமகூட வரையைக்கிம் புருடஞ் சேரு
மங்குறு நிடத வெற்பைச் சேர்ந்தரி வருட மோங்குந்
துங்கமா நீல வெற்பை யிரமியக வருடஞ் சூழும். (௨௧)

விளங்கிய சுவேத வெற்பை யிரண்மய வருட மேவுந்
தளர்ந்திடாச் சிருங்க வெற்பைக் குருவரு டந்தான் சாருந்
துளங்கலி லிடப வெற்புத் தோன்றுமம் மலைவித் தார
மளந்திடிற் சம்புத் தீவி னளவைய தாகு மன்றே. (௨௨)

குருவிரண் மயமென் றேமுற் கூறிரு வருட நீளம்
வருசிலை வடிவாத் தெற்கு வடக்குறு நாற்ப தின்னு
யிரமியோ சனையா நீல வெற்பினோர் தெற்க தாகத்
திரமுறு நிடத வெற்பைச் சேர்வட கிழக்க தாக. (௨௩)

மாலிய வானென் றோது மலையுள ததன்வித் தார
மேலுமுப் பத்தி ரண்டா யிரமியோ சனையா மிந்தப்
பாலுறு மளவை கந்த மாதனப் பரப்பு மேரு
நாலுபக் கமும்விட் கம்ப மாமலை நண்ணு மாதோ. (௨௪)

பழுதிலிவ் விடப வெற்பிற் பதின்மடங் கேம கூடம்
வழுவிலம் மலைக்கி ரட்டி மடங்கதா மிமய வோங்கன்
மொழியுமிம் மிமய வெற்பு மொன்றிய கிழக்கு மேற்கு
மொழிவில்யோ சனைக ளெண்ப தாயிர மாக வோங்கும். (௨௫)

வேறு.

இலகிய நீல மால்வரை வயிடூ ரியநிற மாகவே யிருக்கு
நிலைபெற வுயர்ந்த சுவேதவெற் பும்பொ னிறமரு நிறம்வெளுப் பாகு
மலகி லாதுய ரிம்மலைக ளொன்றுக்கொன் றமைந்திடு மிடைவெளி யறைய
னுலைவிலா வளவை யொன்பதா யிரமாம் போசனை யாகவே யுரைப்பார். (௨௬)

இன்னதோ ராறு வரையினைத் தேவ ரியக்கர்காந் தருவர்மா முனிவர்
மன்னிய சித்தர் யாவரும் வந்து வணங்கியே நித்தமு முறைவார்
பொன்னிற மேருக் குதருக வருடம் பொருந்திய தெற்கின்மூ வருட
மன்னதோ ராறு வருடமுண் டதிலே யனந்தமா மலைகளு முண்டால். (௨௭)

ஒவ்வொரு மலையி னளவைக ளிரண்டா யிரமெனும் யோசனை யகலஞ்
செவ்விய தெற்கு வடக்கொடு சேருஞ் செப்புமிவ் வருடவித்தார
மெவ்வயில் சம்புத் தீவினுக் களவை யெவ்வள வவ்வள வமையு
மவ்வயின் மலைகள் தீவுமொன் றுக்கொன் றமைந்திடும் பேதமு முளதால். (௧௮)

வட்டமா யிருக்கும் வருடங்க ளெல்லாம் வருடங்க டங்களி னடுவே
பட்டினந் தேச மாறுக ளனேகம் பல்பல சாதிகள் சென்மக்
கட்டழ குடனே வளனெலாம் பொருந்திக் கவின்பெறு மொன்றினுக் கொன்று
திட்டமா யாருஞ் சொல்லுதற் கரிதாய்ச் சிறந்திடு மிவையெலாஞ் சூழ. (௧௯)

வேறு.

விரிதரு புவியி னுப்பண் மேவியே யுயர்மா மேருக்
கிரிபசும் பொன்னின் வண்ணங் கிளர்கொடு முடிகண் மேவுந்
தரையினுட் பதிவீ ரெண்ணா யிரத்தின்யோ சனையு யர்ச்சி
யுரியவெண் பத்து நாலா யிரத்தின்யோ சனையா யோங்கும். (௨0)

ஆகயோ சனையி லக்க மடிப்பதி வகலங் கூறி
னேகும்யோ சனையீ ரெண்ணா யிரமதா மென்பர் மேருச்
சேகரத் தகல நாலெண் சகத்திர யோசனையாச் சேருஞ்
சோகமி லகலத் துக்குச் சுற்றுமும் மடங்க தாமால் (௨௧)

மேருவின் குணபாற் பத்தி ராச்சுவம் விளங்குந் தென்பாற்
பாரதங் குடபாற் கேது மாலமாம் பகர்வ டக்கிற்
சேருமுத் தரகு ருச்சொ ணன்குதே யமுஞ்சி றக்குஞ்
சார்வர்புண் ணியத்தி னேருத் தரகுருத் தேயந் தன்னில். (௨௨)

அந்தமா மேரு வோங்க லம்புயத் துறையும் வேத
னுந்தியி னுதித்த லாலே யொளிர்நிறம் வருண நான்காம்
விந்தைசேர் கிழக்கு வெண்மை வேதியர் வருண மாகும்
வந்தபொன் னிறமாந் தெற்கு வணிகர்தம் வருணமாகும். (௨௩)

சொல்லருங் கறுப்பு மேற்குச் சூத்திர வருண மாகும்
வில்லொளிர் சிவப்பு தக்கு வேந்தர்தம் வருண மாகும்
பல்பல வுலகந் தாங்கிப் பகர்நவக் கிரகஞ் சூழத்
துல்லிய பொருட்டுப் போல வம்மலை வடிவு காட்டும். (௨௪)

திவ்விய வலங்கா ரத்திற் சிறந்தொளிர் மேரு மீதி
னவ்வியங் கண்ணி பாக னான்முகன் மாய னிந்திரன்
கவ்வையின் முனிவர் தேவ ரியக்கர்காந் தருவர் கோர
வெவ்வினை யரக்கர் வானத் தரம்பையர் விளங்கி வாழ்வார். (௨௫)

ஈரயு தத்தி ஞலா யிரமியோ சனைவித் தாரஞ்
சீரிளா விரத கண்டஞ் சிறக்குமம் மலையைச் சுற்றிப்
பாரெலாந் தாங்கி யோங்கிப் பரந்தடி சிறுத்த வாற்ருன்
மேருவைத் தாங்கி நிற்கும் வெற்பொரு நான்குண் டாமால். (உ௬)

அந்தமால் வரைக்கு நாம மருங்குண திக்கி னிற்கு
மந்தரந் தெற்குக் கந்த மாதன மருவு மேற்கிற்
சுந்தர விபுல மாகுஞ் சுபார்சுவம் வடபாற் ருேன்று
மிந்நால் வரையி னைந்தா யிரத்தின்யோ சனையி னிளம். (உ௭)

அன்னநால் வரைக டோறு மருணமா னசவ னஞ்சூழ்ந்
துன்னசி தோதம் பத்திர முறைக்குமிந் நான்கு பேர்பெற்
றின்னநன் மடுக்கள் வைகு மியம்பிய குணபாற் றெட்டுத்
தன்னிக ரில்லா தோங்குஞ் சயித்திரா வதன முந்தான். (உ௮)

கந்தமா தனம்வ யிப்பி ராசமிக் கான விப்பேர்
நந்தன வனமிந் நான்கு நண்ணுமம் மந்த ரத்தில்
வந்துயர் கடம்பு குந்த மாதன வெற்பி னுல
லந்தமில் விபுல வெற்பி லாரசு பார்சுவத்தில் (உ௯)

வடதரு மேவு மிந்நான் மரங்களா யிரத்தோர் நூறு
படரும்யோ சனைவித் தாரம் பகர்கந்த மாத னத்தி
னிடனுறு கிழக்க தாகக் கெண்டிகை யென்னும் வெற்பி
னடியக லம்முப் பத்தி ராயிரம் யோச னைத்தாம். (௩௦)

ஆங்குறை வோர்கள் கேது மாலரா மன்னோ ருக்குத்
தீங்குறு நோய்க ளில்லை செவ்விதழ்க் கரிய கூந்தற்
கோங்கிள முலையார் மேனி குவளையி னிறமா மன்னோர்
பாங்குறு தேக நீலொற் பலமணங் கமழு மன்றே. (௩௧)

அத்தலத் தொருபா லாவுண் டதன்கனி யருந்தி னோர்கள்
பத்தெனு மாயி ரத்தின் வருடமப் பாரில் வாழ்வார்
நித்தியக் கெண்டி கைக்கு நேர்கிழக் காக வேதன்
வைத்தமா லியவா னென்றோர் மலையுள தூயர்ச்சி கூறின். (௩௨)

மூவயு தத்தி ரண்டு யோசனை மொழிவா ராங்கண்
மேவிய மாந்தர் பத்தி ராச்சுவர் வெளிய மேனி
மாவடு நேருங் கண்ணார் வதனமா மதியை நேராங்
கோவைவா யன்னோர் மேனி குமுதத்தின் வாச மாமே. (௩௩)

பனைமர மாம ரங்கள் பழுத்துடைந் தோடுந் தேனக்
கனிதனை யருந்தி னோர்கள் காமனு மிரதி யும்போ
லனுதினங் கூடி யீரை யாயிரம் வருடம் வாழ்வா
ரெனமுனி வோர்கட் கெல்லா மியம்பினன் சூதன் மாதோ. (௩௪)

நூறவது

பூகோளமேரு வருணனை யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௬௫௪.

நூற்றேன்றுவது

இரம்மியகருடாதி

வருணவண யத்தியாயம்.

புலன்வழி மனம்போக் காமற் பொருவினைப் பகைத டிந்து
பலவகை மகங்க ளாற்றும் பரமமா முனிவோ ரெல்லா
நிலவிரம் மியக மாதி வருடத்தை நிகழ்த்து கென்ன
வுலகியல் வழாமை வாய்மை யொழுங்குற வுரைப்பான் சூதன். (க)

மேருவின் குணக்கு மேற்கு விளங்கிய வருடஞ் சொற்றும்
பாருறு வடக்குத் தெற்குப் பருவரை வருடம் யாவுஞ்
சீருற வுரைத்தி டென்று மனுமுனந் தேர்ந்து கேட்ப
வேருறு மச்சமாய னினிதெடுத் தியம்பு மன்றே. (உ)

நீலமால் வரைக்குத் தெற்கு நிடதத்தின் வடபா னிள்வி
சாலரம் மியக மென்னும் வருடமத் திலத்திற் செங்கே
மூலநன் மரமொன் றுண்டவ் வாலின்பொற் கனியைத் துய்த்தோர்
மாலற வீரை யாயி ரத்தொகை வருடம் வாழ்வார். (ங)

வானகந் தொடுசு வேத மால்வரை வடக்க தாகத்
தேனகு பொழிற்சிங் காவ தத்திற்குத் தெற்க தாகத்
தானிர ணியக மென்னும் வருடமாத் தலமொன் றுண்டான்
மேன்மையாய் விரிந்தி ரண்ய வதிநதி விளங்கு மாங்கே. (ச)

இருப்பவர் யாரு நல்ல குலத்தெழில் வடிவ முள்ளோர்
மருப்பொலி யரசொன் றுண்டம் மரந்தருங் கனியைத் துய்த்தோ
ரருட்பொலிந் திருப்பர் பன்னீ ராயிரத் தைஞ்ஞூ றுண்டு
குருக்கிளர் நெடுஞ்சி ருங்கா வதக்கொடு முடிகண் மூன்றும். (ரு)

அக்கொடு முடிக்கு ளேயொன் றுடக மயமா மொன்று
மிக்கநன் மணிம யத்தால் விளங்குமற் றென்று கூறிற்
றெக்கசீர் நவம ணிச்செஞ் சுடர்மய மாகு மாங்கே
மைக்கணார் பயிலு மாட மாளிகை பலவுண் டாமால் (சு)

உரைதரு மெழிற்சி ருங்கா வதத்தினுக் குத்த ரத்திற்
றிரை யெறி வடக டற்குத் தெற்கதாய் மிக்க தான
குருவரு டங்கூர் வாய்மைச் சித்தர்கள் குலவுந் தான
மருவுமத் தலத்த னேக மதுரமா மரங்க ளுண்டால். (எ)

சீலமா மமுத மூறுஞ் சீலமா மணிக ளீனுஞ்
சீலமாம் பணிக ளீயுஞ் சீலமாந் துகில்க ளீயுஞ்
சீலமாம் பாலை நல்குஞ் சீலமாம் பூப நல்குஞ்
சீலமா மனங்கொ டுக்குஞ் சீலமாங் காம மீயும். (௯)

அத்தலப் பரப்பி யாவு மணிமணி மயம தாகு
மொத்தபொன் மணலை யெங்கும் பரிசத்தா லுதவு மின்ப
நத்துறு மள்ள லில்லை நோயெனு நாம மில்லை
சுத்தமா மம்பொ னுண்டைத் துறந்தவண் டுன்னு வோர்கள். (௯)

நற்குல மழகு காந்தி நவையறப் பொருந்தி வாழ்வார்
விற்குல நுதன்மின் னூர்கள் விண்ணரம் பையர்கள் போல்வார்
பொற்பின்யவ் வனமா யென்றும் பொருந்தியே கருப்ப மொன்றிற்
கற்புறு பெண்ணு மாணு மிரட்டையோர் காலந் தோன்றி (௧௦)

மரத்துறு பாலுண் டேயவ் வனத்தொடு வளர்ந்து கூடிப்
புரத்தொடொ ரயுத மேலும் புகலுமா யிரத்தைஞ் ஞூறு
திரத்துறு வருடம் வாழ்ந்தோர் தினத்தினிற் சுவர்க்கஞ் சேர்வார்
பரத்தினின் றிகத்தி லுற்குற் புண்ணியப் பால ராவார். (௧௧)

பாரத வருடம் போலத் பரமதத் துவத்தை யாய்ந்தோர்
பேருறு வருடம் யாவும் பிறங்கிடக் கண்ட வாற்றை
யேர்பெற வுரைத்தா மென்றே யிருங்கடன் மச்ச மாயோ
னேர்மனு வினுக்குச் சொன்ன நெறியினை யுரைத்தான் சூதன். (௧௨)

நூற்றேன்றவது

இரம்மியகவருடாதி வருணனை யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௯௯.

நூற்றிரண்டாவது

பாரதவருட வத்தியாயம்.

பாரத வருடப் பான்மை பரிவொடும் பகர்தி யென்னப்
பூரண கலைக ளோர்ந்து பொங்கழல் வேள்வி யாற்றி
யாரண முறைவ ழாம லருந்தவ மனேகஞ் செய்யுங்
காரண முனிவர் கேட்பக் கவின்பெற வுரைப்பான் சூதன். (௧)

துதித்தவீ ரெழுவர் மேலாஞ் சுவாயம்பு மனுவைத் தொட்டு
விதித்திடு மனுவா லோங்கும் பாரத வருட மேன்மை
மதித்திடு கடலேழ் சூழ்ந்த பாரத வருட நாப்பண்
பதித்திடு வருட மிக்க சுபார்சுவ பதத்தை நல்கும். (௨)

தென்கட லிமய நாப்பண் சிறந்திடு முலகந் தன்னை
யன்பொடு பரதன் காத்தே யளித்திட லானுஞ் சொற்ற
மன்பதை பரித்த லாலும் பாரத வருட மாகு
முன்புறு மிதனி னென்று மோட்சநற் சுவர்க்க முற்றும். (௩)

மானிடர் கரும மிந்த வருடத்தி னல்லா லில்லை
யூனமி னவகண் டத்தின் பெயரினை யுரைப்பேங் கேண்மின்
பான்மையிந் திரத்தீ வங்க செருத்திரம் பிரபன் னம்பின்
கானுறு கபத்தி மானு கத்தீவஞ் சென்மி யந்தான். (௪)

மருவுகந் தருவ மிக்க வாருணம் வளங்கொ ளொன்பான்
றருமொரு பெருந்தீ வந்தச் சாகர சம்வி தந்தான்
குனாபுனற் கங்கை யாதி கன்னியா குமரி மட்டு
மிருமைசேர் வடக்குத் தெற்கா யிரமியோ சனையா மெல்லை. (௫)

ஒப்புறு கீழ்மே லொன்பா னாயிரம் யோச னைத்தாஞ்
செப்புமித் தீவி னுனுந் திசைமுடி விடங்க டோறுந்
துப்புற வகன்மி லேச்சர் துன்னுவர் குணக்கந் தத்தின்
வைப்புறு கிராதர் மேற்கு முடிவினில் யவனர் வாழ்வார். (௬)

நடுவினின் மறையோர் பாங்கர் நவிலுமன் னவர்பக் கத்தி
லடுவிலா வணிக ரிப்பாற் பின்னவர் மகப்போர் செட்டுப்
படையுழ விந்த நான்கு தொழிலினைப் பயின்று நாளு
மடைவுடன் சீவ னஞ்செய் தமர்ந்தினி திருப்பர் மாதோ. (௭)

அந்தநால் வருணத் தார்க்கு மறம்பொரு ளின்ப மென்னு
மிந்தமூ வகைக ளோடு மியற்றுறு விவகா ரங்கள்
புந்தியிற் பொருந்தி வாழ்வர் புகழுமாச் சிரமந் தானு
முந்துறு நான்கு மன்றி மொழியவ தூத ரோடும். (௮)

ஐவகை யுண்டு தத்தம் விதிமுறை யமர்ந்து வாழ்வ
ருய்வகை சுவர்க்க மோட்ச முறும்பலன் வேண்டின் மிக்கா
மிவ்வயின் மனுட சன்ம மெடுப்பரித் தீவை யாய்ந்து
செவ்விதி னுணர்ந்தோர் யாரு மானத தீவ மென்பார். (௯)

வித்தகப் புவியோ டந்த ரிட்சம்விண் ணுலக மூன்றும்
புத்தியால் வென்று வாழும் புரவலர் தம்மை மேலோர்
சுத்தமாஞ் சம்மி ராட்டு விராட்டுடன் சுவராட் டென்பர்
நத்துறு புனல்சூழ் வெற்பை விரித்தினி நவிலு வேமால். (௧௦)

வளர்மகேந் திரத்தி னோடு மலயமே சையம் வன்மை
கிளர்சுதி மான மிக்கா னிட்சவான் கேண்மை விந்தந்
தளர்விலா தோங்கும் பாரி யாத்திரந் தானேழ் குன்று
மொளிர்கொடு முடிக ளுனு வகைசிறந் தோங்கு மாதோ.

சிறியபூ தரம னேகஞ் சீவனம் பெருக நல்குங்
கறிவளர் சாரல் வாயில் கழறிய மிலேச்ச தேசம்
பிறிதிலா ரியதே சந்தான் பிறங்குநன் னதிக ளுண்டான்
மறிதிரைக் கங்கை சிந்து வழங்குகோ மதிவி பாசை. (௧௨)

சந்திர பாகை யோங்கு சரையுறிச் சான சத்துச்
சுந்தர வித்தை மேலாந் தேவிகை தூத பாபை
யுந்துபா குதைகு கூச்ச ராவதி யுயர்திரி தீயை
செந்திரி சதுவ திப்பின் சேர்கவு சிகையி னேடும். (௧௩)

கெண்டகி யமுனை மிக்காக் கிளர்வெகு லோசி தையோ
டெண்டரு நதிய னேக மிமயமால் வரைக்க ணெய்து
மண்டுநீர்ப் பாரா சந்தா வதிரூபை விதுடை சிப்பிரை
தண்டலில் வந்தி வேணு மதிசிந்துத் தாண்பன் னுசை. (௧௪)

வேத்திர வதிகா வேரி விரதக்கினி மேன்மை யோங்க
வேத்துச தத்துரு வேத மிருதியென் றிவைகள் பாரி
யாத்திரத் திலங்குஞ் சோண மாகாந்தஞ் சுரசை யப்பாற்
சேர்த்தபிப் பிலைகா மோதை பிசாசிகை சித்திர கூடை. (௧௫)

கிரியையா விலையே சித்தி ரேபலை மதுரை கீர்த்தி
நருமதை மகுடை மந்தா கினிநறை ரசகூச் சாற்றுந்
திரிதிவேள் கசையி னேடு கலசையே மிக்க சேனி
வருதசா ருணையே மந்தா கினிகதி வழங்கு முத்தி. (௧௬)

வேறு.

தடவெகுவா கினியிவைக ளிரட்சுவா னனுஞ்சயிலந் தனிலுண் டாகும்
படர்புனிதப் புனல்பெருகும் பாகியைகோ தாவிரிபின் பகர்கா வேரி
கடல்புகுகிட் டிணவேணி வீமாதி வஞ்சனைகங்கை பத்திரை யோடுந்
தொடர்புனற்சுப் பிரயோகை சையநெடு மால்வரையிற் றோன்று மாலோ. (௧௭)

பொதியமலை தனிற்கிருத மாலையுற்ப லாவதிதண் பொருந்தும் வேகத்
ததிர்புனற்புட் பகைநான்கு முற்பலமா மயேந்திரவெற் பதனிற் றோன்றித்
துதிபெறுமிட் சுவைவிசமை திரிதிகைநீர் மிகுந்தசர்ப்ப துல்லி யப்பேர்
நதிகள்வரு முயர்ந்தசுத்தி மான்வரையின் மந்தகைநன் னதிகு மாரி. (௧௮)

மந்தகா மினிரிடிகை வளர்விரு சனிகுவையு மல்கு நன்னீர்
நந்திடா நதிகளிவை யன்றியவ ணதியனந்த நண்ணித் தோன்றும்
விந்தைபெறு கீழ்த்திசையிற் குருதேசம் பாஞ்சாலம் விராடங் காசி
குந்தளஞ்சா லுவஞ் சூர சேனம்வளர் குல்லியங்கோ சலங்கி ராதம். (௧௯)

சாங்கலங்காம் போசம்வளர் பத்மாத்தி ரமுதலாய்த் தழைத்த தேசத்
தோங்குகிரா மங்கள்பல வுள்ளனவா மின்னமவ ணுள்ள தேசந்
தேங்கொள்பொழிற் சிந்துசவ்வீ ரங்காந்தா ரகமத்தி ரங்கூ ணம்மே
தாங்கியகண் டிகைகளங்கங் கேகயம்வை கிபஞ்சகஞ்சா லுவம்வி தேகம். (௨௦)

பாரதமூர்த் திங்கமடங் கண்டகரா மேபவனர் பரத்து வாசம்
பேர்பெறுபுண் டரம்பரம்பி ராசசோ திடம்புகழ்சேர் பிரத்த ளஞ்சி
ரூர்மலியாம் பிரஞ்சயனி கந்தனபா ணவுங்கேடி லருத்த மோங்கு
சேருமிலம் பாகமாத் திரையமகிழ் குடசெகுள தேசத் தோடும். (௨௧)

பாலிகா ரசதானித் தலமேருத் திரசனம் பகருங் கூணந்
காலிதோ யகஞ்சாமே சகந்தசமா ணிகங்கன்மாத் தம்பே ரோங்கு
மேலான தாம்பிரலித் தகம்புகழ்சே ரானமென விளம்பி வற்றுட்
சேலார்கோ தாவிரிகோ வர்த்தனமா நகரிபெருஞ் சிறப்பி ணேங்கும். (௨௨)

வளங்கெழுகோ வர்த்தனமால் வரையிவைகள் சிறப்பினுடன் மருவு தேய
முளங்கொள்பரி சுத்தமெய்திப் புகழோங்கி யுலகினின்மிக் குபர்வா மென்பர்
தளம்பெறுதக் கணதேய முரைக்கிற்பாண் டியதேசந் தரும நீதி
விளங்கியகே ரளதேசஞ் சோழதே சங்குலியம் விரிக்கி னப்பால். (௨௩)

சேதுசமூ டிகநவராட் டிரங்கலிங்கஞ் சிரானமா கிடகஞ் சீர்பெற்
ரோதுரூப தாசார வாசிகம்விந் தியபூத முயர்கு லாபங்
காதல்செய பகற்சிரீ கங்காவோங் கயிராக்கி யம்பேர் காட்டு
நீதிபெறு மூடிகந்தண் டகஞ்சபாப் புளிந்தியநன் னிலைபெற் றோங்கும். (௨௪)

வாசமுறு வடதிசையில் வந்திச்சா ருணம்பல்லம் வழங்கு போசங்
கோசலநற் றிரைபுரமுன் மரந்துண்டி கேரமொளி குலவு கீர்த்தித்
தாசலமந் தபம்வீதி கோத்திரம்வை திசம்விந்தச் சார்பி னுகுங்
காசறுமேற் றிசைக்கருணப் பிராவருணஞ் சமுத்திரகங் கஞ்சம் வர்த்தம். (௨௫)

ஊருணமண் டவந்தருவந் திகிரிகர்த்த மலமொழி யுயர்கி ராத
மேரணிவி காரமிவை கோவரையின் சார்பினிடத் திலங்கு மிந்தப்
பாரதமாம் வருடத்திற் கிருத்திரே தத்துவா பரத்தி னேடுங்
கோரமுறு கலியென்ன நாலுயுக முண்டுபின்னுங் கூறு வேமால். (௨௬)

அரிவருடங் கிம்புருட வருடமிரண் டையும்பகர்வே மவற்றின் மிக்காம்
பொருவரிய கிம்புருட வருடத்தி னுவல்வனம் பொருந்து மாங்கண்
பெருமைபெறு மானிடர்செம் பொன்னிறமாய்ப் பிறந்தாண்டோ ரயுதம் பெற்று
பருவமுறு மம்மரத்தின் கனிரசத்தைச் சோகமறப் பருகி வாழ்வர். (௨௭)

மங்கையரும் பொன்னிறமா யரம்பையர்போல் வனப்பமைந்து மகிழ்ந்து வாழ்வர்
தங்கியகிம் புருடத்தி னப்புறத்தி லரிவருடந் தழைக்கு மாங்கண்
பொங்குபிணி யின்றியிம வருணத்தின் மானிடர்கள் பொருந்தி வாழ்வர்
துங்கவிசும் பிழிந்துளரம் மானிடர்கள் சுரர்வடிவாய்த் துலங்கு வாரால். (௨௮)

அவர்கரும்பின் சாறருந்தி நரைதிரைக ணீங்கியாண் டயுதம் வாழ்வ
ருவமையில்பொன் மலைச்சூழ லிளாவிரத வருடமதி லுறைவோர் யாருந்
திவளொளிச்செங் கதிர்வெப்ப மின்மையினு னெடுங்காலஞ் சிறந்து வாழ்வர்
பவனனுலா வுதலன்றிப் பருதிமதி யுடுக்கிரணம் பரப்பா வன்றே. (௨௯)

அவ்வருடத் துறைவோர்க ளம்புயத்தி னிறமாக மன்னோர் கண்கள்
செவ்விபெறு மம்மலரி னிதழ்போலு மதன்வாசந் தேக வாசந்
தவ்வலின்மே ருவின்றெற்குச் சார்நிடதத் துதக்காகத் தருநா வற்பே
ரெவ்வமிலா தோங்கியசு தரிசனமென் றெப்பொழுது மியம்பு வாரால். (௩௦)

வேறு.

அம்மரக் கினியோ ரானைப் பருமமா மதன்சா றோடிச்
செம்மைகூர்ந் தொழுகிச் சம்பு நதியெனச் சிறந்த பேராய்
மம்மர்நோ யறுக்கு மேரு வரையினை வலமாய்ச் சுற்றிப்
பம்முமம் மரமூ லத்திற் பாங்குற வமையு மாலோ. (௩௧)

அக்கனி யிரத முண்டோ ராயுளா ரோக்கி யத்தோ
டொக்கவே யைம்மூ வாயி ரத்திறாண் டிற்று வாழ்வர்
மிக்குறு நதியி னிந்திர கோபத்தி னிறமாய் மேவுந்
தொக்கமாற் றுயி ரத்தோ டுறுமேமந் துலங்கு மாலோ. (௩௨)

வேறு.

புகறருமப் பசும்பொன்னு லும்பர்தமக் காபரணம் பொருந்து மிக்காந்
தகைமைபெற நிமிரேம கூடத்தி னரமகளிர் தங்க ளோடு
நிகரிலுயர் கந்தருவர் சஞ்சரிப்பர் நிடதமால் வரையிற் சேடன்
பகரரிய வாசுகிதக் ககன்முதலா நாகர்மிகப் பயின்று வாழ்வர். (௩௩)

நவமணியி னுரைத்தவயி ரேயத்தி னீலமலை நண்ணி யோங்குந்
தவமுறுமெய் முனிவரர்சித் தர்கள்பயில்வர் தயித்தியர்தா னவர்கண் மேவி
யுவமையிலாச் சுவேதவரை யிடத்திருப்பர் சிருங்காம னெனுமோங் கற்பா
லவிரொளிநற் பிதிர்தேவர் மரபுகளு மகல்வானி லியக்க ராதி. (௩௪)

பூதகண நாதர்களி ருப்பர்களிவ் வரையெல்லாம் புகழ்பெற் றோங்கு
மேதகுநா வலந்தீவி னமையுமிந்த மகிமையெலாம் விளங்கி முந்நீர்
மோதுகட லுப்பண்மச்ச மான்மனுவுக் குரைத்தவண்ண முனிவர் கேட்பச்
சூதமுனி நெடுஞ்சடைமா முடிதுளக்கி யுவகைபெறச் சொன்னு னன்றே. (௩௫)

நூற்றிரண்டாவது

பாரதவருடவத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௭௦௧.

நூற்று மூன்றாவது

புரூரவ சரித்திர வத்தியாயம்.

நனிமலர் சொரியுங் கொம்பர் நைமிசந் தன்னில்வேள்வி
கனிவொடு புரிந்து முக்கட் கடவுளைப் போற்றி செய்யு
முனிவரர் புரூர வாவின் சரித்திர மொழிந்தி டென்னப்
புனிதமாய்க் கேட்பச் சூத முனிவரன் புகல்கிற் பானல். (க)

புகழிளா விரதந் தன்னிற் புரூரவா வென்னும் வேந்தன்
மகிழ்வொடு செங்கோ லோச்சி வாழுநாள் வான நாட்டி
னிகழுருப் பசிபா ருற்று நிருபனைச் சேர்ந்தா ளென்று
திகழ்நெடு மாயன் சொல்லத் திறன்மனு வணங்கிக் கேட்பான். (உ)

புதன்மகன் சரிதை போற்றுஞ் சிராத்தத்தின் பொற்பு மிக்கா
யிதமுறு கோதா னஞ்சீ ரிருமுகக் கோதா னந்தான்
பதமுறு விரத முத்தி யாபனப் பான்மை யாவு
முதலெனக் குரைத்தீ ரின்னங் கேட்பதோர் மொழியுண் டாமால். (ந)

தேவர்கந் தருவ ரோடுஞ் சேர்ந்திடும் லீலை விட்டு
மாவுருப் பசிபு ரூர வாவினை விரும்பிக் கூடற்
காவதோ ரழகு வாய்ந்த வரன்முறை யறைந்தி டென்ன
மூவரி லொருவ னான மச்சமான் மொழிவ தானன். (ச)

சீர்பெறு புரூர வாமுற் செனனத்து மரச னாகி
யேர்பெறு சாட்சு மன்வந் தரத்தினி லிருநீர் சூழ்ந்த
பாரின்மத் திரதே யத்திற் பகருடற் குரூபி யாகிக்
கூர்பகை செகுத்தோர் கொற்றக் குடைகவித் துலகை யாண்டான். (ரு)

என்றுரைத் திட்ட மச்ச மாயனை யினிது நோக்கித்
துன்றிய பெருஞ்சீர் வைவச் சுதமனு தொழுது போற்றி
யன்றவன் குரூபி யாக வவதரித் திட்ட வாறும்
வென்றிகொ ளரச னான மேன்மையும் விளம்பி டென்றான். (சா)

கேட்டிடு மனுவை நோக்கிக் கிளத்துவான் புரூர வாவே
நாட்டிய மூன்றாஞ் சன்ம நவில்துசக் கிராம னென்றே
பேட்டளி துதையும் பைந்தார்ப் பிராமண சிரேட்ட னாகித்
தீட்டிய புகழா னேகா தசியெனுந் தினங்க டோறும் (எ)

துலங்குப வாச மாற்றித் தொல்லுல காசை வேட்டுப்
பலங்கொடுத் தருளு மாலைப் பரிவொடு பூசை யாற்றி
யிலங்கிய துவாத சிக்க ணெண்ணெய்வர்ச் சிதமென் றெண்ணு
னலங்கல்சூழ் சிரத்திற் றேய்த்தே யசும்பினீ ராடு வானல். (அ)

அப்பலன் றன்னன் மெய்யி லழகிலாக் குரூபி யானு
னெப்பிலாப் பதினென் றூநா னுபவாச மாற்றி மாலைச்
செப்பிய விதியாற் பூசை செய்தமர் பலத்தி னாலே
துப்புறு மத்தி ரத்துக் கரசெனத் தோன்றி னனால். (௯)

அவ்வுல களிக்கு மந்த மத்திர ராச னனேற்
கிவ்வுருக் குரூப மென்றே யாவரு நகைக்க வன்னோன்
றிவ்விய ரூபம் வேண்டி யருந்தவஞ் செய்வ லென்று
கவ்வையங் கடல்சூழ் வைப்பிற் காசியின் வடபாற் சென்றே. (௧௦)

நிலவரா வறுகு தும்பை நெடுஞ்சடா டவியிற் சூடும்
வலனுயர் மழுவ லாளன் மணந்திட மாலை சூட்டு
முலகமீ ரேழு மீன்ற வுடையவ ளிமயத் துற்றே
யிலகலை சுருட்டுந் தெண்ணீ ரிராவதி நதியைக் கண்டான். (௧௧)

நதிவளங் கண்டு போற்றி நன்கதி சயித்து நாவாற்
றுதிசெய்தா னென்று வைவச் சுதமனு வதன நோக்கி
யதிர்கடன் மச்ச ரூபி யன்றருள் செய்தா னென்ன
விதிநிகர் முனிவர் கேட்ப மெய்த்தவச் சூதன் சொன்னன். (௧௨)

நூற்றுமூன்றாவது

புரூரவ சரித்திர வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௭௧௩.

நூற்றுநான்காவது

இராவதிநதி வரலா றத்தியாயம்.

இமயவெற் பிடத்தி னின்று மிருநிலந் தழைக்க வோங்கி
யமைவுறு தமல மாகு மிராவதி யாற்றின் செய்கை
சமையுறு மோன ஞான முனிவரர் கழறு கென்ன
வுமையொரு பாகற் போற்றுஞ் சூதமா முனியு ரைப்பான். (௧)

புவியுறு நதிகட் கெல்லாம் புனிதமாய்ப் புகழ்பெற் றோங்கி
நவைபெறு களங்க நீங்கி நலம்பெறு நிமல மாகிக்
குவளைநாண் மலர்ச்செவ் வாம்பல் கோகன கங்கண் மல்கித்
திவலையந் தலைகள் சிந்தி யிராவதி சிறக்கு மாதோ. (௨)

தேவர்கந் தருவர் நாகர் சிறந்திடு மியக்கர் நீண்ட
பூவல யத்தி லுள்ளோர் முனிவர்கள் போற்ற லன்றி
மூவரும் வரங்க ணல்கி முறையவ னுறைவ ரென்று
லியாவரே புகழ வல்லா ரிராவதி நதியைத் தானே. (ரு)

சைவலங் கூந்தல் காட்டத் தாமரை முகத்தைக் காட்ட
மைவிரி குவளை நீண்ட வரிவிழி காட்ட வண்ணச்
செவ்விய குமுதப் போது செந்துவ ரிதழைக் காட்டக்
கவ்வைவெண் டிரைக ணீண்ட புருவத்தின் கவினைக் காட்டும். (சா)

முத்தின மழகு வாய்ந்த மூரலி னழகு காட்ட
நத்தினங் களத்தைக் காட்ட நற்பவ ளத்தின் கொம்பு
வித்தக விரல்கள் காட்ட விளங்கிப்பி யுகிர்கள் காட்டத்
தத்துநீர் நீந்து மானை மத்தகந் தனத்தைக் காட்ட. (ரு)

கருந்துகிர்க் கொடியு ரோம வல்லியின் கவினைக் காட்டத்
திருந்துநீர்ச் சுழிக ளுந்தித் திருவழ கதனைக் காட்டப்
பொருந்துபல் கொடிநு டங்கும் பொய்யிடை காட்ட நீந்த
வருங்களி யானை யின்கை வனப்புறு தொடையைக் காட்டும். (சு)

தனிநிற வலவன் பொற்புத் தருமுழந் தாளைக் காட்டச்
சினவரால் கெண்டை காலின் செவ்வியைக் காட்ட வாமை
யினமுறு புறங்கால் காட்ட விருகரை மரங்கள் சிந்தும்
புனைமலர்ப் பொலிவு வாய்ந்த பொன்னிறத் துகிலைக் காட்டும். (எ)

இவ்வகைச் சிறப்பி னோடு மிராவதி நதியா நங்கை
துவ்வமு தப்பூ நாணற் றுலங்குசா மரையி ரட்டச்
செவ்வடி யனப்புள் ளோசை சிலம்பொலி சிலம்ப நீண்ட
கவ்வையங் கடல்வாய்ச் செல்லுங் காட்சியைக் கண்ணிற் கண்டான் (அ)

மாநதிப் பொலிவைக் கண்ட மத்திர தேய வேந்தன்
றூனுறு குருபம் போக்கித் தனுப்பொலி வனப்பு நண்ண
வானநற் றளங்க ளாற்றத் தகுமிட மிதுவா மென்ன
லூனமில் சிந்தை யோர்ந்தே யொழிவிலா விருப்புற் றானல். (கூ)

விருப்பமுற் றன்னோ னந்த நதியினீர் விழைவி னாடி
யொருப்படு முளத்தி னோடுஞ் செய்கட னுஞற்றி னானென்
றருட்பொலி துளவத் தெம்மான் மனுவினுக் கறைந்த வண்ணந்
திருப்பொலி தவத்தொ ருள்ளந் தெளிவுற வுரைத்தான் சூதன். (க0)

நூற்றுநான்காவது

இராவதிநதி வரலா றத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உஎஉரு,

நூற்றைந்தாவது

இமயகிரி வருணனை யத்தியாயம்.

இராவதி நதியின் வண்மை யியம்புகு தனைநேர்ப் பக்கி
பராவரு முனிவர்யாரும் பணிவரைப் பாண்மை கேபாநோட்
வராகமுற் றனம்யா மென்ன வண்டமட் டளாவி யப்ல்ல்
விராவுமம் மலையின் றன்மை விளங்குற விரித்துச் சொல்வான். (௧)

வானள வுயர்ந்து பாதி மதிகொடு முடியிற் சேர்த்துப்
பானிறப் பூதி யான பனிப்படாம் போர்த்துக் கண்டத்
தானகா ரணிந்து மானை யன்பினேந் துகையி னூலு
மூனமின் மழுவ லானுக் கொத்ததவ் விமய வோங்கல். (௨)

மன்னுயிர் காத்த லாலும் வானவில் வயங்க லாலும்
பொன்னுறப் பொருந்த லாலும் பூவிசும் பளத்த லாலும்
தன்னிறக் கருமை யாலுஞ் சானுவி தழைத்த லாலும்
பன்னகம் பொருந்து மாலை யொத்ததப் பனிமால் வெற்பு. (௩)

பொருமயில் பரித்த லாலும் பேரற்றுசேர்க் கணத்தி னாலுந்
தருமணி முடிக ளோடு தலையாறு தழைத்த லாலும்
வருகளி யானை வஞ்சி வள்ளிகூர்ந் தணைத லாலுங்
குருமணி யிமய வெற்புக் குமரவே ளிகர்க்கு மன்றே. (௪)

வேறு.

கண்ணுறு கழையின் முத்துங் கைம்மதக் களிநல் யானைத்
திண்ணிய கோட்டு முத்துஞ் செறிகுளச் செந்நென் முத்து
நண்ணிய வராக முத்து நலம்பெற விடங்க டோறும்
வண்ண வெங் கதிர்கள் வீசி வல்லிருள் சீக்கு மாதோ. (௫)

கோங்கவிழ் மலர்ந றுவுங் குவட்டிரு ளறவுஞ் செய்ய
மாங்கனி நறவும் வாழைக் கனியுமிழ் நறவும் வானீண்
மூங்கின்முட் கவராற் கீறு முட்புறக் கனி நறுவுந்
தேங்குறு மருவி போலச் சிலவிட மருவி யோடும். (௬)

குராவில்வங் கந்தந் தேக்குக் கோங்குதோ தகத்தி வேங்கை
மராவெதிர் நாங்கு சந்த மாக்குருக் கத்தி நெல்லி
யிராவறு சோதி யெட்டி யகிலெழு மழிஞ்சி லோமை
தராதலம் புகழ சோகந் தழைபலாப் பாலை யெங்கும். (௭)

விண்டொடு சிகரி தோறும் விளங்கிடு நாவி யொத்தும்
வண்டலி னழுகு தேவர் மலர்ப்பதம் வழுக்கி வீழக்
கண்டிடு மரம்பை மாதர் கைத்தலம் புடைத்துத் துப்புத்
துண்டென விரலாற் றூண்டி நகைத்திடத் துலங்குங் குன்றம். (௮)

தேவர்சா ரணரி யக்கர் சித்தர்கந் தருவர் நாகர்
பூவுறு பிரம ரெட்டுத் திசையினைப் புரந்து காக்குங்
காவலர் தவத்திற் பேறு கருதிமா னிடரா யன்பு
மேவியங் கனைக ளோடவ் வெற்பினில் வதிவர் மாதோ. (௬)

அயனனற் கரும மாற்ற வமரர்பூ மாரி சிந்தச்
செயசெய வென்ன விண்ணோர் தேவதுந் துமிக ளார்ப்பப்
பயில்வுறு மிமவான் பெற்ற பார்ப்பதி யிறையோ னுக்கு
மயல்கெட மாலை சூட்டு மங்கல மணக்கு மாதோ. (௧0)

இவ்வகை வளம்பெற் றோங்கு மிமயமால் வரையாம் பொற்பைத்
தெவ்வடு சுடர்வே லோங்கு மத்திர தேய வேந்த
னவ்வயிற் கண்டே யப்பா லத்திரி தவங்க ளாற்றும்
பவ்வநேர் சுனையின் பாங்கர்ப் பன்னசா லையினைக் கண்டான். (௧௧)

பன்னசா லையினைக் கண்டு பலர்புகழ் மத்தி ரேயன்
மன்னுமத் திரிதன் மேன்மை மனத்ததி சயித்தா னென்னப்
பொன்னிற மச்ச மாயன் மனுவுக்குப் புகன்ற வண்ண
நன்னெறி முனிவர் கேட்ப நவின்றனன் சூதன் மாதோ. (௧௨)

நூற்றைந்தாவது
இமயகிரி வருணனை யத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௨௭௬௫.

நூற்றாறாவது

அத்திரியாச்சிரம வருணனையத்தியாயம்.

இமையக்கிரி நடுவிற்கொடு முடியிற்சொலு மியல்பா
யமையத்திரி முனிநித்தலு மருமைத்தவ முயலும்
விமலைத்திரு மனையற்புத விதனற்றவர் வினவ
மமதைக்களி வினையற்றிட வருசூதன் வகுப்பான் (௧)

அரியுங்கட கரியும்பகை யன்றிச்செலு மொருபாற்
றிரியுங்கொடு வரியுஞ்சிறு மறியுஞ் செலு மொருபால்
வரியைந்தலை யரவுஞ்சிறை மயிலுஞ்செலு மொருபாற்
பரவுங்கரு டனைமென்கிளி பழகுங்கண மொருபால். (௨)

முல்லைக்கொடி பவளக்கொடி முளரிக்கொடி யிடைநேர்
வல்லிக்கொடி பசலைக்கொடி வஞ்சிக்கொடி வரைமேன்
மெல்லப்படர் பிச்சிக்கொடி மிளகுக்கொடி மிசையே
செல்லிக்கொடி கலிமீறுமுந் திரிகைக்கொடி திகழும். (௩)

வேறு.

ஆலர சத்தி வேங்கை கூவிள மழிஞ்சி லிச்சில்
பாலைவண் டாழை வேம்பு பலாநெல்லி யசோகு காரை
தாலமா தளைவெண் ணெச்சி யரிச்சுனஞ் சந்த மெட்டி
பூலைமுள் ளிலவு வாகை புன்குவெண் ணாவ னாவல். (௪)

காரகி ருன்றி புன்னைக் காயங்கச் சூரங் கொன்றை
யாரில வங்கஞ் சாதி யவரிநீர் வேம்பு காயா
வேரல்குந் திருக்கஞ் செஞ்சந் தனம்வி ளாப் பூகந் தாழை
சூரலஞ் சனமந் தாரை சுரபுன்னை துவரை கோங்கம். (௫)

பாதிரி யிலந்தை தேமரப் பச்சிலை புளிவி ளங்கங்
கேதகை மகிழ்வெட் பாலை கிளுவைநீர்க் கடம்பு வெட்சி
சூதம்வெள் வேல்கு றிஞ்சி சூரைகூ தாளி வஞ்சி
சாதி சேர்த் தேவ தாரஞ் சரளஞ் சண் பகந்து ருக்கம். (௬)

இஞ்சிதக் கோல மேல மீந்துமுள் ளிலவு காஞ்சி
மஞ்சள் பொற் கொன்றை காந்தண் மருவுசீ தாளி சேம்பு
கஞ்சமைக் குவளை நெய்தல் கைரவம் வள்ளை நெட்டி
பஞ்செனுந் தூவி யன்னம் படர்நறுஞ் சுனைக ளெங்கும். (௭)

மகரமீன் சுறுமீன் கெண்டை வதியுழு முளுவை யாரால்
புகலுறு சள்ளை தேளி போத்திமீன் மத்தி வாளை
திகழ்வரான் மசறி கூனி சிறியதா மயிரை யாதி
யுகளுறு மடுவ னேக முலப்பில தடாக மெங்கும். (௮)

மயில்கலை விளங்குஞ் சாத கஞ்சக்கிர வாகம் பூவை
குயின்முசு குந்தம் பாரா வதங்கிளி குக்கு டங்கா
டையினெடு சராசங் கேரயெட் டிகமன்றி ஞரை
பயிறருஞ் சஞ்ச ரீகம் பரத்துவா சங்கா ரண்டம். (௯)

குரண்டமூர் குருவி காகங் குருகுநீர்க் காக்கை தாராத்
திரண்டெழு மாக்கை கோட்டான் றினகரக் கூவுஞ் சேவல்
புரண்டெமு புறவு சிம்புள் போத்துநற் கலுழன் சென்னி
யிரண்டுடை யண்ட கேரமண் டத்துட னிவைக ளாதி (௧௦)

பறவைக ளனேக சாதி பகர்ந்திடி லுலப்பி லாவற்
குறைவற மரங்க டோறுங் குலவிசசஞ் சரிக்கு மன்றி
நிறமுறு துரங்க மாய்மா நிகழ்த்துமொட் டகைகார் யூகம்
பிறையுறு கொட்டு நால்வாய்க் களிறெடு பிடிகண் மற்றும். (௧௧)

கருவிடங் கக்கும் பேழ்வாய்க் கார்நிறச் செங்கட் சீற்றத்
தொருபடச் சுடிகை நெற்றி யுருக்கதிர் மணிக டன்னு
லிருள்கெடத் தமக்கும் பார்த தெண்ணில வனேக கோடி
யருகுறு மெலிகள் கிரி யடர்ந்துசஞ் சரித்து வாழும். (௧௨)

அரிபுலி கரடி பாய்மா வரிமரை மேதிச் செந்தா
யரிமுயல் கிரிப் பிள்ளை யரிபூகங் கெவையம் பூனை
யரிகிடாய் கபிலை பன்றி யரிவையா டாதியான
வரியெலி யிவைகள் யாவு மடர்ந்துசஞ் சரிக்கு மாதோ. (௧௩)

இவ்வகை சிறப்பி யாவு மெழிலுற நோக்கி யுள்ளக்
கவ்வைக ளனேகந் தீர்ந்து கருத்தினிற் றவமிக் கென்றே
செவ்வையின் மனத்தி னெண்ணித் தெளிந்தபே ரறிவி னோடுந்
துவ்வமு துண்ட தென்னக் களிப்பொடு சொல்ல மிக்கோன். (௧௪)

வரமிகு தவத்தின் மிக்க வத்திரி வாசஞ் செய்தே
யருளன சூயை யோடு மமையுமாச் சிரம நோக்கிப்
பரவுமத் திரவேந் தன்மால் பதந்தொழச் சென்று னென்வே
யுரமிகு தவத்துச் சூதன் முனிவரர்க் குரைத்திட் டானல். (௧௫)

நூற்றுறவது

அத்திரியாச்சிரம வருணனை யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨எ௫௦.

நூற்றேழாவது

விஷ்ணு தரிசன வத்தியாயம்.

கொண்டலைக் காயாம் பூவைக் குலமர கதத்தை நீண்ட
தண்டலைக் கடலை நீலத் தண்கதிர் மணியைப் போன்மெய்
விண்டுவை மத்தி ரேயன் றரிசித்தல் விளம்பு கென்ன
மண்டிலச் சடில மோன முனிவர்க்கு வகுத்தான் சூதன். (௧)

பொற்றொடி பவளச் செவ்வாய் பூங்குழற் களபக் கொங்கைச்
சிற்றிடைக் குவளை யங்கட் சீறடி யுமையை முன்னாட்
பெற்றிட வனேகங் காலம் பெருந்தவம் புரிந்து மேன்மை
யுற்றிடு மிமய வோங்க லொன்றுள தனிதன் மீதே. (௨)

கருமிடற் றிறைவந் தெய்திக் கலந்தகல் யாணத் தாலே
குருமணி யிமைக்குஞ் சேம்பொற் கொடுமுடி யனேகங் கோடி
மருவிடு மிகவு மோங்கி வானவ ருலகத் துள்ளே
தருமிழன் மகவான் விண்ணோர் சந்ததம் பணிவ ரன்றே. (௩)

அக்கொடு முடிகட் கெல்லா மரசென நாப்ப ணுக
மிக்கதண் கதிர்கள் வீசி விளங்கிய சிகரி மூன்று
தொக்குறு மதனின் மேன்மை சொல்லுதற் கரிது வெய்யோன்
பக்கமே வரும்போ தன்னுன் பணிக்கதி ராவ னன்றே. (௪)

உச்சியின் முகில்கண் மேவா தும்பரி னுயர்ந்த வாற்று
லச்சிக ரிக்குக் கீழ்பா லடுத்தபா தாள வாச
ணிச்சய மாக வொன்று நிலவுமவ் வாச லுக்குக்
கச்சமா மகல நீலங் காட்டினன் முழநா னூறும். (௫)

எண்டரு மிரவி திங்க ளிருகதி ரொளிபு காது
கண்டகு செவிப்பைம் பாந்தள் கணக்கிலா திருந்து வாழ
மண்டிரு ளகல நாக மணியொளி விரிக்கும் பாங்க
ரொண்டொடி நாகர் மாத ருற்றிடு வார னேகர். (௬)

அம்பொனின் மயம தாகு மந்நில முழுது மாங்க
ணும்பரு மிருந்து வாழ்வ ருயர்தவத் தோர னேகர்
நம்பனை யருச்சித் தேத்தி நற்றவம் புரிவ ரென்று
மிம்பரி லுள்ளா ராங்கு மிருந்திருந் தவஞ்செய் வாரால். (௭)

கந்திசண் பகம்ப லாவால் கதலிகுங் குமம்புன் னுகஞ்
சந்தனம் வகுள மாதி தண்டலை நெருங்கு மெங்குஞ்
செந்திரு மலர்த்த டாகஞ் செங்கழு நீர்த்த டாக
முந்தலை நீர்த்த டாக மொருங்குற நெருங்கு மெங்கும். (௮)

இப்பெரு வளம்பெற் றோங்கி யெழில்பெறு பிலத்தி னுப்ப
ணொப்பிலா வட்ட மான வுயர்நிலை மொன்றுண் டாமா
லப்புல மளவி லாத விரிவதா மதனைச் சூழ
வைப்புறுஞ் சோலை நந்த வனம்பலப் பலவுண் டாமால். (௯)

அந்நிலத் தினுக்குத் தென்பா லமர்ந்திடும் வாவி யொன்று
மன்னுமவ் வாவிக் கன்றே வகுத்திடு மகல நீளங்
கன்னலை யரைய தாகுங் கரையொரு நான்கு பாலும்
பொன்மய நான்கு கல்லாற் பொருந்தியெஞ் ஞான்று மோங்கும். (௧௦)

இலகிய பவள முத்த மெடுத்தெறிந் தாற்றுந் தெண்ணீ
ரலைபொரு வாவி யெங்கு மலர்ந்திடு கமல மெல்லா
நிலவுபொன் மயம தாகு நீலமும் பைம்பொன் னுகு
முலைவிலா வளம்பெற் றோங்கு மொண்ணில வட்ட மன்றே. (௧௧)

அத்தலத் தினில்வித் தார மாகவே வயிரத் தூண்கள்
பத்தியாய் நிரைத்துச் செங்கேழ்ப் பவளத்துத் திரங்கள் சேர்த்து
முத்தினாற் கொடுங்கை செய்து மரகதப் பாக்கன் மூடிச்
சித்திர மெழுதி நான்கு வாயிலுஞ் சிறக்கச் செய்து. (௧௨)

மாணிக்கம் புட்ப ராகம் வயிரங்கோ மேத கஞ்சீர்
காணிற்கண் கவரும் பச்சைக் கதிர்வயி டூரி யங்கூர்
யாணர்த்தண் டரளந் துப்போ டிந்திர நீலம் யாவு
மாணிப்பொன் குயிற்றி யோங்கு மணிகொண்மண் டபத்தி னுப்பண். (௧௩)

செம்பவ ளத்தி னன்கு சிங்முஞ் சிறக்கச் செய்திட்
டும்பலு நான்கு நீல மணியினா லுஞற்றி யெட்டு
மம்பெறுங் கால்க ளாக வமைத்துமீ தணிபெற் றோங்கப்
பைம்பொனிற் பரப்பும் வச்சிரப் பலகைய தாக வைத்தே. (௧௪)

வேறு.

பொன்னினா னன்கு தூணினை யமைத்துப் போதிகை மாணிக்கத் தமைத்து
மன்னிய கொடுங்கை முத்தினா னமைத்து மரகதக் கொடிஞ்சிக ளமைத்துக்
கன்னகூ டங்கோ மேதகத் தமைத்துக் கதிர்கொள் வைடூரியத் தமைத்து
மின்னிய தூவி விமானம தாக விளங்குசிங் காதன மீதில். (௧௫)

வேறு.

சித்தர்கள் வித்தி யாதரர் முனிவர் தேவர்கள் யாவரும் வந்து
துத்தியஞ் செய்து வணங்கியே நிற்பத் தொகைதரு சகத்திர மான
பைத்தலைச் சுடிகைக் கட்செவிக் கவைநாப் பாயன்மேன் மேற்றிசை நோக்கி
நித்தமு மிருக்கும் பொழுதுசே டன்ற னிண்முடி மீதொரு கையும். (௧௬)

வலதுகாற் சானு வினிலொரு கையு மல்குநா பியிலொரு கையு
மிலகிய வாச முகக்க மந்தாரை யின்மலர்க் கொத்திலோர் கையு
நிலைபெற வைத்த கருணையங் கடலை நிலமெலா மோரடி யளந்த
பலவெயி லெறிக்கு மணிமுடி தாங்கும் பச்சைமால் பதந்தரி சித்தான். (௧௭)

என்றுமுன் வைவச் சுதமனு கேட்ப விருசில முழுதுமோ ரடியா
லன்றுமா வலிமு னளந்திடுந் திருமா லகமகிழ்ந் திசைத்திடுங் கதையை
யொன்றொழி யாம லெமிசா ரணியத் துயர்தவ மகங்களே புரிந்து
நன்றறி சவுன காதியர்க் குரைத்தா னற்றவச் சூதமா முனிவன். (௧௮)

நூற்றேழாவது

விஷ்ணுதரிசன வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௭௬௮.

நூற்றெட்டாவது

மத்திரராசன் வாமடைந்த வத்தியாயம்.

மத்திர ராச னுகப் பாயன்மேன் மருவி யோக
நித்திரை புரியு மேக நிறத்தன்பே ரன்பிற் பாதந்
தொத்துறு மலரர்ச் சித்துத் தொல்வர மடைந்த வாறு
பத்தியான் முனிவர் கேட்கப் பரிவுடன் பகர்வான் சூதன். (க)

விண்டுவைக் கண்டு மத்திர வேந்தனுள் விருப்பி னோடுந்
தெண்டிரைப் புனலின் மூழ்கிச் செய்கடன் கழித்து வாச
முண்டகப் போது நீல முதலிய மலர்கள் கொய்தாங்
கண்டர்நா யகன்றன் பூசைக் காமுப கரண மீட்டி. (உ)

ஒருப்படு மனத்தி னோடு முவணவா கனனைப் போற்றி
விருப்பொடும் பூசை செய்து விண்டுவே விமலா கஞ்சத்
திருப்பவன் றன்னை யீன்ற விறைவவென் றேத்தி மாதர்
கருப்படு மெனது மெய்யிற் களங்கமே யொழிப்பா யென்றே. (ங)

அப்பகன் முழுதும் பூசை யாற்றியன் றந்திப் போதிற்
செப்பரு நியம மாகத் தியானமோ டிருளை நீக்கி
யொப்பறு நித்திய பூசை யுஞற்றுதற் குதயந் தன்னிற்
றப்பிலா மலர்கள் கொய்வா னந்தன வனத்திற் சார்ந்தான். (ச)

வரிவிழி யரம்பை மாதர் வானவர் மாதர் மற்றுந்
தெரிதரு சித்தர் மாதர் சிறந்தகின் னரர்கண் மாத
ரரியவித் தியாத ரப்பே ரணங்கினர் நாக மாத
ருரியதம் பதிக ளோடு முவப்பின்மால் சேவைக் குற்றே. (ரு)

புண்டரி கத்தைக் கொண்டல் பூத்தது போலக் கைவாய்
கண்டிருப் பாதங் கொண்ட கடவுளைப் போற்றி யேத்தித்
தெண்டனிட் டலர்க ளேவித் தீபதூ பங்க ளாற்றிப்
பண்டரு வீணை கானம் பாடியே நடித்துப் பின்னர். (சு)

தோத்திரம் பலவுஞ் செய்து தொழுதருஞ் வந்து நீண்ட
காத்திரச் சிகரி வாயில் கடந்துதம் பதிக ளாகி
நேத்திரங் களிக்க நந்தா வனத்தினை நாடிச் சிற்ப
சாத்திரக் கபாட நீக்கித் தனித்தனி மலர்கொய் தாரால். (எ)

வேறு.

மருமலர் கொய்யச் சென்றிடு மரம்பை மங்கையர் தம்மிலோர் மங்கை
விரிதரு மலர்க ளெடுத்திடுங் காலை மல்லிகை மென்கொடி சுற்றப்
பிரிதலில் லாம னின்றிடும் போது பெயர்ந்தனர் தோழியர் நகைத்தா
ரருகினிற் கணவன் வல்லியின் பிணிப்பை யகற்றினன் வல்லியு மணைந்தாள். (அ)

கண்மலர் சொரிந்த தாதுவை யொருத்தி காந்தளங் கையினு ளடக்கி
யுண்மகிழ்ந் தீதென் னுரையெனக் கணவ னூதினன் முதுவிண் படர்ந்து
பண்ணமை தீஞ்சொற் பவளவாய்த் தரளப் பணைமுலைத் துடியிடை நாணி
யண்ணலைத் தழுவி நின்றன ளிதழை யருந்தினன் பொருந்தின னின்பம். (௯)

மணமலி சுகந்த மலரெடுத் தொருத்தி மாதவிப் பந்தரின் வைகிக்
கணவனைக் கண்டங் கையினி லளிக்குங் காலையின் மாலையாய்ச் சமைத்தே
யணிமணிக் கூந்தற் கணிபெற வணிந்தா னனங்கனு மிடையற நெருங்குந்
துணைமுலை குழையக் கணவனை மருவத் துணங்கினள் வல்லிசேர் தருப்போல் ()

வாசமா மலரு மருவுநற் கொழுந்து மாலையாய் வகுத்ததை யொருத்தி
யாசையாய்க் கணவன்கேசமே யாதி யடியிணை யீறதா யணிந்தா
ணேசமா யவனுங் குங்குமக் கொங்கை நேரிழை கண்களி கொள்ளத்
தேசுறு கூந்தன் மீதுசின் மலர்கள் சிறப்புற விதம்வித மணிந்தான். (௧௧)

பளிங்கினாற் செய்து விளங்குசெய் குன்றின் படரொளிப் பரப்புறு மவனை
களங்கமில் தடாக நீரிடைக் குளித்துக் களிப்பொடு சலக்கிரீ டைக்கு
வளங்கெழு சயிக்க வத்திர முடுத்து வனப்புறு மடந்தைய ரனேக
ருளங்களி கூரக் குளங்கரை யேறி யுவப்புட னீரிடைக் குதித்தார். (௧௨)

நேத்திரச் சிவிறி கரமிசை தாங்கி நிகழ்த்திய மஞ்சனீ ரிடைத்துப்
பூத்திடு மரத்துச் சின்மலர் கொய்யப் பொருந்திடு மாடவர் புயமாங்
காத்திரத் திகிரி மிசையெறிந் தன்னான் களிப்புறத் தனத்தொடு மணைந்து
சூத்திரப் பாவை யெனச்சுழன் றதரச் சுவையினை யருந்தின ரனேகர். (௧௩)

நந்தன வனத்தும் வாவிக ளிடத்து நடைபயில் செய்குன்றி னிடத்துங்
கொந்தலர் கொய்து குளிர்புனல் குடைந்து கூறிய சரசசல் லாபம்
விந்தையி னடந்தும் விதம்வித மாக மேவுறு மடந்தையர் தம்மைச்
சிந்தையி னினையா திருகணி னோக்கா திலங்கிய மத்திர தேயன். (௧௪)

செங்கண்மால் பூசைக் காகிய கொடிப்பூச் சிறந்துயர் கோட்டினின் மென்பூப்
பங்கமார் தடாகந் தனிலுறு நீர்ப்பூ முதலிய பன்மலர் பறித்துக்
கொங்கவிழ் மாலை தொடர்சரஞ் செண்டு குளிர்தரு மிண்டைமென் றோடு
மங்கமாய்க் கட்டி யவயவத் தணிந்தே யரியபூ சனையியற் றினனால். (௧௫)

பூசனை புரிந்து தோத்திரம் புகன்று புவியுற வணங்கியே வலம்வந்
தாசற மனத்தி னெண்ணிய வரங்க ளனைத்தையு மருளென வேண்டிக்
காசறு சிகரி வாயில்கள் கடந்து வீதியிற் கண்ணுறுங் காலைத்
தேசுறு தேவர் முதலியோர் மாதர் தெம்பதி யாகியே யெதிர்ந்தார். (௧௬)

எதிர்ந்திடு மன்னர் மத்திர ராச னியற்றிய பூசனை தவங்கள்
பதிந்தொருப் படுத்திப் பற்றிய மனந்தான் பாவையும் பண்புறத் தெரிந்தே
முதிர்ந்தபே ரன்பின் மூழ்கிய வேந்தே மொழிந்திடாய் வேண்டிய வரங்கள்
வதிந்திட வருடு மென்றலு முரைப்பான் மத்திர தேயத்து மன்னன். (௧௭)

வேறு.

என்னுளத் தெண்ணம் யாவுஞ் சனார்த்தன னருள்க வென்றே
யுன்னிநீ யருள்வா யென்ன வவ்வரமுவப் பினீந்தா
ரந்நிலை மாசித் திங்க ளபரபக் கத்தைத் தொட்டுத்
துன்னுபங் குனிமா தத்துச் சுக்கில பக்க மட்டாய். (௧அ)

அருந்தவ மினிதி னாற்றி யரிபத பூசை செய்தான்
பொருந்துமப் பக்கத் துற்ற பூரணை நிசியி னேன்கண்
டிருந்துயில் கொள்ளும் போது சனார்த்தனன் கனவிற் றோன்றித்
திருந்தலர்க் கடிந்தோய் நீசெய் பூசையாற் சிந்தை கூர்ந்தேம். (௧௯)

ஆதலா லுதய காலத் தத்திரி முனிவன் றன்பாற்
போதுக நினக்கும் வேண்டும் வரமருள் புரிவ னென்னத்
தீதறு முதய காலத் தெழுந்துதன் னியமஞ் செய்தே
மூதறி வுடனே பூசை யாற்றியம் முனிபாற் சென்றான். (௨௦)

சென்றடி வணங்கி யேத்து மத்திர தேய வேந்தை
நன்றறி முனிவ னோக்கி வரவுநன் முகமன் கூறத்
துன்றுசொப் பனத்தி னுற்ற வரன்முறை சொற்ற லோடு
மன்றலந் துளவ மாலைப் பூசைசெய் மகிமை யாலே. (௨௧)

மன்னநிற் கரிதொன் றில்லை நீநினை வரங்கள் யாவுந்
துன்னுக வினிமேற் கிள்ளைச் சொல்லினை புதனின் னோர்க்கு
முன்னுறு திறற்பு ரூர வாவெனு முதன்மைப் பேரோ
டிந்நில முழுதுங் காக்கு மரசெனச் சனித்தி யென்றான். (௨௨)

இனிவரு சனனந் தன்னி லெதிரிலா வனப்பு வாய்ந்து
நனிதவ மறையோர் கட்கு நன்பொரு ணல்கி யாகந்
தனிமுறை யியற்றி விண்ணோர் தங்கட்குஞ் சகாயஞ் செய்து
கனிமொழி யுருப்ப சிப்பெண் காதலித் தணைய வாழ்வாய். (௨௩)

வனப்பினி னின்போன் மண்ணில் வானில்யா வருமே யொவ்வா
ரெனப்பெரு வரங்க ணல்கி முனியரு ளினிதிற் பெற்றே
தனிக்குடை நிழற்றுஞ் செங்கோற் புதனினை தணைய னாகிச்
சினக்கதிர் வேற்கை தாங்கும் புரூரவா வெனச்சி றந்தான். (௨௪)

தெண்டிரை வளையின் முத்தஞ் சேர்த்துவா லுகக்குன் றேந்திக்
கண்டலை முறித்து வீசுங் கடற்றுகி லுடுத்து நீண்ட
மண்டலம் புரக்குங் கீர்த்திப் புரூரவா வனப்பி னாறு
தண்டலை நைமி சத்தின் றவத்தினர்க் குரைத்தான் சூதன். (௨௫)

நூற்றெட்டாவது

மத்திரராசன் வரமடைந்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨எ௩௯.

நூற்றேன்பதாவது

சம்புத்தீவு வர்ணவண யத்தியாயம்.

சூதமா முனிவன் றன்னைத் தொன்மறை முனிவர் நோக்கி
மேதகு சம்புத் தீவின் மேன்மையை விரித்து முன்னு
ளோதநீர் மச்ச ரூபி மனுவினுக் குரைத்த வண்ணங்
காதலோ டுரைத்தி டென்னக் கனிவொடுஞ் சொல்வதானன். (க)

அத்திரி முனிவன் வாழு மாச்சிர மத்தின் பாங்க
ருத்தர திசையிற் காந்தி யொளிர்நவ மணிகால் வீசக்
கொத்தலர் தருக்கண் மொய்ப்பக் குபேரனித் தியமாய் வாழச்
சித்தர்சா ரணர்கு லாவத் திகழ்ந்திடும் வெள்ளிக் குன்றம். (உ)

அம்மலை யிமய நாப்ப ணமையுமம் மலையின் முக்கட்
செம்மலோர் பாகம் பச்சைக் கொடியொடுஞ் சிறந்து வாழும்
விம்முதண் டலைசூழ் சாரன் மேவுமா னோத கப்பேர்க்
கம்மலை தெற்கு மோடை கவின்பெறு மதன்க ணின்றும். (௩)

ஓதுமந் தாகி னிப்பேர் நதியுறு மத்தீ ரத்திற்
றுதவிழ் மலர்த்தேன் பாய்நந் தனவனம் வரைக்கீ சானந்
தீதகல் பவள வெற்பாஞ் சந்திரப் பிரபந்தா னேங்கும்
பேதமி லதன்பான் மிக்குப் பிறங்குமச் சோத வோடை. (௪)

அந்தவோ டையினிற் றேன்று மச்சோத நதியித் தீரஞ்
சந்தன வனஞ்சூழ் வேலிச் சயித்திரா தவன முண்டாம்
விந்தைசே ரியக்கர் சேனைக் கதிபதி விளரித் தேன்பாய்
பைந்தொடை தரித்த மாணி பத்திர னுறைவ னன்றே. (௫)

பகர்ந்தவிந் நதியி ரண்டும் பாரிடைப் புனித மாகி
யகந்தைகெட் டிடவே நல்ல வரங்களை யருளி முந்நீர்
புகுந்திடுங் கயிலை தென்கீழ்ப் புறத்தினிற் சபல வெற்புத்
திகழ்ந்திடு மதன்பாற் றேவ சிருங்கவெற் பமையு மாதோ. (௬)

அவ்வரைச் சார லோடை யமையுமு லோகி தப்பேர்
செவ்விதி னதனிற் றேன்றித் திகழுநன் னதியப் பேரா
னெவ்வமி லரத்த மார்சந் தனவன மிணங்கு மாங்கண்
மவ்வலந் தொடைசேர் மாணி சான்மகிழ்ந் துறைவன் மாதோ. (௭)

கயிலையங் கிரிக்கு மேற்குக் கனலுருத் திரன்றன் றேற்று
மயலறு திருக்குன் மான மலையசற் குதக்க தாக
வெயில்விரி வயித்து தப்பேர் வெற்பினி னோங்கு மப்பா
லியலுறும் வடக்கா மீச னினிதுறை யருண வெற்பு. (௮)

அருணவெற் புசனி லோடை யமையுமா னதப்பேர் பெற்றுச்
சரையுவம் மடுவிற் றோன்றித் தராதலந் தழைக்க நண்ணும்
விரைகமழ் வைப்பி ராச மிளிர்வன மதன்பா லோங்கும்
வருபிர கேதி யென்னு மரக்கனங் கினிது வாழ்வான். (௯)

விளம்பிய கயிலை வெற்பின் மேற்றிசை முஞ்ச வானும்
வளம்பெறு வரையொன் றந்த வரைச்சாரற் கயிலோ தப்பேர்த்
தளம்பெறு மோடை நின்றுஞ் சலிலோதை யாறு நீடுங்
களங்கமில் வெள்ளி வெற்புக் குதக்குறுங் கவுர வோங்கல். (௧௦)

ஓங்கலின் சாரல் விந்து சரசெனு மோடை மன்னும்
பாங்கினிற் சகரர்க காகப் பகீரதன் கங்கை வேண்டி
நீங்குறு தனேக கால நெடுந்தவ முயன்றான் வேத
னுங்கண்வந் தெய்திக் கங்கை புவியுற வருள்செய் தப்பால். (௧௧)

கங்கைவே கத்தைத் தாங்கக் காபாலி தன்னை நோக்கிப்
பொங்குமா தவஞ்செ யென்னப் புரிதலும் புராரி யுற்றுத்
திங்களஞ் சடையிற் றாங்கத் திகழ்கங்கை முழங்கி யார்த்துத்
துங்கவா னின்றும் வேகத் தொடுவரல் கண்டே யீசன். (௧௨)

சடையினி லடக்கப் பின்னும் பகீரதன் றவங்க ளாற்றிக்
கடவுளன் போடு முன்ன மேந்திய காலைச் சிந்திப்
படுபுனற் றிவலை விந்து சரசெனும் பான்மை பெற்ற
மடுவினில் விடவே யாறாய் மாநிலவ ரைப்பின் மல்கும். (௧௩)

அந்நதிக் கரையின் முன்ன மமரர்கோன் வேள்வி யாற்றித்
தன்னுடைக் கணங்க ளோடுஞ் சார்ந்தனன் முத்தி வீட்டின்
மன்னுமவ் விடத்திற் பானு நிசியினில் வருவ னாறே
முன்னிடிற் சீதை சிந்து வுரைத்தசட் சுவியம் மூன்றும். (௧௪)

குடதிசைச் செல்லு மற்றக் குடதிசை நளினி யோடு
தடமுறு பவானி போக்க லாதினி தானுஞ் செல்லு
மடலயிற் பகீர தன்பின் றென்றிசை கடந்து சென்று
படர்ந்தித னுக்கு நாமம் பகீரதி யென்ப மாதோ. (௧௫)

அப்பகீ ரதிதன் றேயத் தனைத்துயி ரளிக்குந் தெற்கா
யுப்புறு வாரிக் கெய்து முரைத்தமேற் றிசைச்செல் சிந்து
வெப்பமிந் நதியே யாகி மிலேச்சர்தந் தேச மான
பப்பிரங் குசுமங் கீர்த்தி பரவிய சயிலத் தோடும். (௧௬)

ஆம்பிர மங்க லோக்கிய தரமபுட் கரசங் கீர்த்தி
மேம்படு குலந்த மாதி விளங்கிய தேசத் தெய்திப்
பூம்புன னிறைத்து மேலைப் புணரியைப் பொருந்துந் தெண்ணீர்
தேம்புநன் னதியாஞ் சீதை திகழ்மரு தேசத் தோடும். (௧௭)

ஆப்பிலா வங்க ளிங்கங் காமமா யறத்த கப்பேர்ப்
பூப்பொலி தேசத் தெய்திப் பொங்குதண் கடலின் மல்கு
நாப்பயில் சடசு மென்னு நன்னதி தென்பா லுள்ள
காப்பயில் குருதே சஞ்சேர்க் காந்தார நவுர சந்தான். (௧௮)

முதலிய தேயம் புக்கு முத்தலை முந்நீர் சேருங்
கதிதரு சிந்து நன்னீர் காம்போசங் குபத மிக்க
வதிர்புனற் சயிந்த வப்பே ராதியாந் தேயத் தெய்திக்
குதிகொள்வெண் டிரைமு ழங்குங் குரைகடற் கூட்டு மாதோ. (௧௯)

பகிரதி யங்கம் வங்கம் பாரத மியக்க மச்சம்
புகல்செய்காந் திருவம் வித்தி யாதரம் புருமா வர்த்தஞ்
சகமுறு புளிந்த மேரம் பாஞ்சாலங் கின்னரங் கிராதம்
வகையனு வித்தங் கத்து மன்னுகிம் புருடங் காசி. (௨௦)

சொன்னவித் தேய மெல்லாஞ் சுரந்தருள் கொழித்து விந்த
மென்னுமெய்க் கிரியின் முட்டி யிளைத்தசென் கடலிற் கூடு
மன்னிய கிழக்கிற் செல்லுங் கலாதினி விபரி மல்கும்
பன்னிய சத்த மேக கர்னமே பகர்கி ராதம். (௨௧)

நிடதங்கே கரம்வி வன்ன நெடுங்குசி காரன் வஞ்சி
கடல்கொள்கா லோத ரங்கூ ரனிலமு கந்தி ரிப்பேர்
படரிரு டிகமே யாதி பரவிய தேசத் தெய்தி
யுடைதிரைக் கடலி லேகு முறுநதி நளினி தானே. (௨௨)

குணதிசை நோக்கிச் சென்று குபததே யத்தி லெய்தி
யிணையிலாச் சரசென் றேத்து மிந்திரத் துமினத் துற்று
மணிதிகழ் மாடம் வித்தி யாதர மருத மோங்குந்
தணிவில்சீர் கர்ன்ன பார வாணஞ்ச யித்திரசங் காதி. (௨௩)

தேசங்க டோறுஞ் சென்று திரைக்கருங் கடலிற் கூடு
மாசிவ பவானி நற்கோ பிமண்டல வோடை பாய்ந்து
வீசலை கொழிக்கு மாறும் மேவிய போத னேகம்
பாசடை நதிக ளாகப் பரந்துல களிக்குந் தானே. (௨௪)

அன்னநன் னதியின் பாங்க ரமர்வசு வோக சார
மென்னுமோர் சோலை யோங்கு மிரணிய சிருங்க ணுங்க
ணுன்னிய கரும யோக மொழித்துயர் ஞான யோக
மன்னியே வதிவன் கும்ப மாமுனி யறிஞ ரோடும். (௨௫)

அவ்வயி னமர்வன் சொன்ன வாறுகண் மலைகள் யாவு
மிவ்வகை யறிய வேண்டு மிவற்றிடை யமர்வோர்க் கெல்லாஞ்
செவ்விய தரும மாதி திருவழ காயுள் சீர்த்தி
தவ்வலி லொன்றுக் கொன்று தரும்பல ணதிக மன்றே. (௨௬)

ஏமகூ டத்தின் மீதி லெழிற்பணி ரகரோன் றேயு
மாமதின் பாங்கர்ச் சோதின் மதியெனு மிரவி நண்ணுங்
காமுறு மதனிற் றேன்றிக் கமழ்சர சுவதிப்பேர் பெற்றுப்
பூமிசை கிழக்கு பேற்கும் பொருந்துநன் னதியி ரண்டாய். (௨௭)

நிடதவெற் பதனில் விண்டு சரசென நிலவு மோடைத்
தடமுறு நதிகாந் தாரி குலாசனை தழைத்தி ரண்டாய்க்
குடவளைக் கடலிற் கூடு மேருவின் குடபால் வாவி
மடலவிழ் கமலம் பூத்த சந்திரப் பிரவ மன்னும். (௨௮)

சந்திரப் பிரவ வாவித் தடங்கரை நாவன் மேவுஞ்
சுந்தரக் கனிச்சா ருருய்ச் சுழிசம்பு நதமா யோடு
மந்தநன் னதியின் வண்ட லமர்சாம்பு நதப்பொன் னொடு
முந்துபொற் கிரிக்கு தக்கு முழுமணி நீல மாகும். (௨௯)

புரையிலம் மடுவிற் றேன்றும் புண்டரீ கம்ப யோதந்
தருமிரு நதியு நீளுத் தரவெள்ளி வெற்பி னல்லோ
ருரைசெயுந் தெண்ணீ ரோடை யுத்தர மான சத்திற்
கருதரு மிருத காந்தை கமழ்ந்தசொப் பனப்பேர் மேவும். (௩0)

இருநதி யுதிக்கு மேரு வெனுங்கிரிக் குத்த ரத்திற்
றருகுரு தேயத் தம்பொற் றுமரை தழைந்து நீடும்
பொருபகல் போல வாவி பொலிந்துபன் னிரண்டு தோன்றும்
பெருகுகிம் புருட தேசம் பேசிய தொகையெ ட்டாகும். (௩௧)

ஆயிடை வானம் பெய்யா தடர்தருக் கொடிக ளெல்லாஞ்
சேயிழை மடநல் லாரைச் சிறந்தினி தீனு மந்தத்
தூயபொற் கிரிக்குக் கீழ்பாற் றுலங்குமாச் சிரம்வல் லாக
மீயுய ரிடப மைநா கத்துட னொன்கு வெற்பும். (௩௨)

குணகட லளாவு மம்பொற் குவட்டினுக் குத்த ரத்தின்
மணமலி யுந்து ரோணஞ் சிலோச்சயங் கங்கம் வானத்
தணவுசந் தரவெற் பின்னுன் கறைவட கடல ளாவுங்
கணமிடுஞ் சிகர மேருக் கனவரை தனக்கு மேல்பால். (௩௩)

நாரத முருத்தி ரஞ்சக் கரம்பருப் பதமிந் நான்கு
பேரணி பெற்று மேல்பாற் பெருங்கடன் மட்ட ளாவு
மேருவின் றெற்கு மைநா கந்திரா விடம் விளங்கிச்
சேருமா சானு வோடு சீமுத வெற்பிந் நான்கும். (௩௪)

தென்கடன் மட்டுஞ் செல்லுந் திகழும்வச் சிரமைநாக
நன்குறு வரையி ரண்டி னடுவட வாமு கத்தீ
மின்கனல் சொரிய நாளும் வேலையை யுண்ணு மந்த
வன்கிரி யிரண்டு முன்னுள் வாசவன் மலைக ளெல்லாம். (௩௫)

சிறகரிந் தடரும் போது தெளிவொடும் வளிசெ யன்பா
வறைகடற் கிடையொ ளித்துப் பிழைத்தன வாகு மென்று
நிறைநவ வருடந் தன்னி னிகழ்த்திய கிரிக டம்மிற்
றுறைபெறு நதிக டம்மிற் சூழ்தரு மருந்த னேகம். (௯௬)

இலங்குபூ மண்ட லத்தி னெழில்பெறு சம்புத் தீவி
னலங்கொளுஞ் சிறப்பி யாவு நவின்றன மென்ன மாய
னுலம்பொரு குவவுத் திண்டோண் மனுவினுக் குரைத்த வாறே
நலம்பெற முனிவர் கேட்ப நவின்றனன் சூதன் மாதோ. (௯௭)

நூற்றெண்பதாவது

சம்புத்தீவு வர்ணனை யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௮௯0.

நூற்றுப் பத்தாவது

சா க த் தீ வா தி

ஆறுதீ வுரைத்த வத்தியாயம்.

சாகத்தீ வாதி குசங்கிர வுஞ்சஞ் சான்மலி தயங்குகோ மேத
மாகத்தீ வைந்தும் புட்கரத் தீவோ டறுவகைத் தீவின்வர் ணனையும்
யாகத்தீ வளர்த்திட் டவியினை யிமையோர்க் களித்திடுஞ் சவுனக ராதி
மோகத்தீ தறுத்த முனிவரர் கேட்ப மொழிகுவான் சூதமா முனிவன். (௧)

உப்புநீர்க் கடல்சூழ் சம்புத்தீ வதனுக் கோரிரு மடங்குநீண் டகலஞ்
செப்புமும் மடங்கு விளங்கிய சாகத் தீவதைச் சுற்றும்பா லுததி
யிப்பெருந் தீவிற் புண்ணிய மிகுந்தே யிலங்கிய தேயங்கள் பல்ல
துப்புர வுடனுங் குறைபவர் யாருந் துலைவிலா வாயுள்பெற் றுறைவார். (௨)

அத்தலத் துறைவோர் தம்மைநோய் பஞ்ச மணுகிடா தெழுகிரி யமரு
மித்தடங் கிரியி லுதயவெற் புவர்நீ ரிடைக்கடல் பாற்கட லளவு
மொத்துநீண் டுளது வைவதம் விண்ணி னேங்குசா மகமிரா சதநீள்
பத்தியத் தகிரி யரம்பிகே யஞ்சீர் பகர்தரு கேசரி யிவையாம். (௩)

இக்குல வரைகட் கியற்றுமிப் பேரே யியம்புவர் வருடத்துக் கோங்கு
மிக்குறு நதிப்பேர் வலினிகு மாரி மிளிர்சுகு மாரிவே ணுகைசீர்
தொக்கநீர்க் கபத்தி முதலிய வேழாந் தூயவந் நீரைவாய் மடுத்தோர்
மைக்கொடும் பவத்தின் வலியையவே ரறுத்து வான்கதி மன்னிவாழ்ந் திடுவர். (௪)

தெளிகுசத் தீவு விளங்கிய சாகத் தீவினுக் கிரட்டிநீண் டகலம்
வளருமும் மடங்கவ் வெல்லையி னேங்கும் வரைகள்வித் துருத நல்லேம
மிளிர்புயத் துதிமான் புட்பவான் சுங்க மேவிய மகிடமம் மகிட
மொளிகனன் மகிடப் பெயர்பெறு நீரி னுறையுமந் தரமொடு மேழாம். (ரு)

மந்தர மென்னுங் கருதுமால் வரையின் மகபதி மன்னுயிர் தழைப்பப்
பந்திசேர் கிரண மணிபல வீட்டிப் பரிவோடு மினிதளித் தருள்வா
னந்தவேழ் மலையி னிடையிடை வெளிக ளாயிர மியோசனை யளவா
மிந்தமா மலைகட் கியம்பிய பெயரே யெழில்வரு டங்களுக் கிசையும். (சு)

குசமெனுந் தீவக் குலகிரி யேழிற் குலவிய நதிப்பெயர் கூறி
னிசமுறு தூத பாவைநற் சீதை நிகழ்பவித் திராவிதத் துடனீள்
விசைகொள்சுக் கிலைகூர் விபாவரி மகதி விளம்பிய வேழுடன் மற்றுந்
திசைபெறு நதிக ளனேகமம் மலைக்கட் செனித்துல களித்துமேற் கூடும். (எ)

சொலுங்குசத் தீவுக் கிரட்டி நீண் டகலந் தோற்றுமும் மடங்குறும் விரிவா
யிலங்கிய கிரவுஞ் சப்பெருந் தீவ மினியநெய்க் கடல்வளைந் திசைந்து
பொலன்கொள்சக் கரத்தின் வடிவதா மதனிற் பொருவிலேழ் பொருப்புள வாகு
நிலங்கொளம் மலைப்பே ருயர்கிர வுஞ்ச நிமிர்தரு பாவகத் தோடும். (அ)

அண்டகா ரகநற் றேவவான் வானத் தடர்தேவ கோடிவா மனநீள்
புண்டரி கத்தோ டேழிவற் றிடையிற் புணர்வெளி யோசனை புகலி
னெண்டரு மளவோ ராயிர மாங்க ணிசைந்திடும் வருடங்க ளியம்பின்
விண்டொடு கிரவுஞ் சக்கிரி சூழ்ந்து விளங்கிடுங் குசலமா வருடம். (௯)

வாமன கிரியை வளைந்திடு மனுக வருடமற் றுள்ளன வைந்து
தோமறு கிரியின் பேர்சொலத் துலங்குந் துன்னிய சித்தர்சா ரணர்கள்
பூமலி தருச்சூழ் பொன்னுல கமர்வர் பொருந்தியங் கிருந்தருள் புரிவர்
நாமவேற் குமர னுறையுமிக் கிரிக ணல்குநன் னதிப்பெயர் நவில்வாம். (௧௦)

தண்ணலைக் கௌரி வருகுமுத் துவதி சந்தியை ராத்திரி சபைநீ
ளொண்ணிறக் கியாதி கமழ்புண்ட ரீகை யுரைத்தவிவ் வேழுட னனேகம்
புண்ணிய நதிகள் கலந்திடும் பொற்பும் புகலுமத் தேயவான் பொலிவு
மெண்ணரும் பெருமை சிறந்துள வவற்றை யியம்புதற் கெம்மனோர்க் கரிதே. ()

சான்மலித் தீவு சொல்கிர வுஞ்சந் தனக்கிரு மடங்குநீண் டகலம்
வான்மலி மூன்று மடங்கதாய்த் ததியின் வாரிசூழ்ந் திடுமவ ணுறைவார்க்
கூன்மலி வியாதி யொன்றிலை மனத்தி னுன்னிய போதினில் வீவார்
கான்மலி மலைகண் மூன்றுள வவற்றின் கருதுசீர்ப் பெயரினைக் கரைவாம். (௧௨)

உரைத்திடு சறுகவமுக முலோ கிதம்போ டுரோகிதாற் கம்புக ழுவற்றின்
விரைத்தரு மகவான் பன்மணி யீட்டி வேந்தருக் கருளொடுங் கொடுப்பான்
பரத்தொடு முப்ப தாயிர வருடம் பொருந்துவர் திருந்துமப் புவியில்
வரத்துறு நதியு மழையுமங் கிலையான் மடுப்புன லருவிநீர் வழங்கும். (௧௩)

முன்னுரைத் திட்ட சான்மலித் தீவு முதலிய மூன்றுதீ விடத்து
மன்னுநற் கருமம் விபவநல் வரைப்பு மருவிய வாயுளும் வளருந்
தன்னிக ரில்லா மதுக்கடல் சூழ்ந்து தழைத்தகோ மேதகத் தீவு
பன்னுசான் மலிக்கங் கிரட்டிநீண் டகலம் பதியுமும் மடங்கெனப் பகர்வர். (கச)

தோற்றுதென் புலத்திற் சுமனசு மலையாந் துலங்கிய தாதகி சண்ட
மேற்றிய வடவெற் பிருபெரு வருட மிடம்பெறு சுமனசுக் குமுதஞ்
சாற்றிய வேழாம் புட்கரத் தீவு தழைத்தசுத் தோதக சலதி
நாற்றிசை வளையுஞ் சித்திரை சானு நன்மலை யம்மலை யுயரம். (கரு)

யோசனை யறுநான் காயிர மகல மூரைத்ததோ டாயிர மதிகம்
பேசுபுட் கரத்தின் பாதிக்கு மேற்குப் பிறங்கிய சலதிவா ரத்தி
னேசிலைந் தயுதம் யோசனை யுயர மிவ்வள வகலமா னசமாந்
தேசுறு மலையச் சித்திர சானுச் சிகரியைப் பெற்றதென் றிசைப்பர். (கசு)

குடதிசைச் சரம சரங்களுந் தழைக்கக் கூர்ந்திவண் காக்குமக் குன்றி
மடைவுறு மதனு விரண்டென மொழிவ ரப்பெருந் தீவினி லார்க்கு
மிடர்பயம் வாய்மை சத்தியந் தரும மிரும்பவஞ் சோகமொன் றின்றி
யுடனரை திரைக ளிலாதுவீற் றிருப்ப ரோர்பதி னுயிரம் வருடம். (கஎ)

உரைத்ததீ வேழு முத்தியேழ் சூழு மோரொரு தீவினுக் கடைவே
பரப்புறு மிரட்டி யாயுறுந் தீவு பகர்சமுத் திரமுமப் பான்மை
நிரப்புநீர் மிகுதி யாதலாற் பெயர்க ணிகழ்த்தினர் சமுத்திர மென்ன
வரைப்படு நதிப்பேர் வருடங்க டோறும் வழுத்துவர் சரிகென மாதோ. (கஅ)

சத்ததீ விடத்து நால்வகைத் தோற்றந் தழைத்திடு முனிவர்க ளுறைவ
ரொத்தபூ ருவபக் கத்தினிற் குறையா துத்திநல் வருத்தனை யடையு
மத்தக வாரி குறைந்திடு மற்ற வமரபக் கத்தினின் மதியு
மித்தகை வளர்ந்துங் குறைந்துமோர் தினத்தி லிரவிதன் னுடன்கலந் திருக்கும். ()

முழங்குதண் கடல்கள் வருத்தனை புவியின் முழமொரா யிரந்தொட வேறு
மொழிந்திடு கயத்துக் கமழ்முழ நீள முன்னூரப் பள்ளமா யொடுங்கும்
வழங்கிரு கடல்கள் சூழ்தலாற் புவியை மன்னிய தீவென வுரைப்ப
ரெழுங்கிரி யெனும்பே ருயர்ந்துநீ ருமிழு மிருவகைக் கேண்மையா லிசைப்பர். ()

தாழ்வுரை பொருந்து சிறப்பினுன் மலைக டனிப்பருப் பதப்பெயர் தரிக்குங்
காழகிற் சாக வரையுறு தீவைக் கருதியே சாகத்தீ வென்ப
வாழ்வட தருவாங் குறையுமத் தீவை மன்னுபுட் கரமென மதிப்பர்
போழ்தரு குலிசன் முதலினோர் சிவனைப் பூவயன் றனையருச் சிப்பர். (உக)

சம்புநற் றீவி னவமணிக் குலங்க டழைக்குமா போலமற் றுள்ள
வம்புவித் தீவந் தொறுமிரத் தினங்க ளலகில தனித்தனி செழிக்கு
மிம்பரிற் சம்புத் தீவமே முதலா மெழுவகைத் தீவிடந் தோறு
நம்பரன் பூசை பிரமமா சார நற்றவ மொன்றி லொன் றதிகம். (உஉ)

சான்மலித் தீவ முதலிய மூன்று தனிப்பெருந் தீவினி லுறைவோ
ரூனுறு திரையு நரையுமே யணுகா ருலப்பிலா யவ்வனத் துறுவர்
மானத மாக நினைத்திடி லாறு வருக்கநற் சுவையன மெய்து
மானதன் மையினுற் புயவலி மிகுத்தே யமருவ ரவனுறு மாந்தர். (௨௩)

நண்ணுபுட் கரத்தை வளைந்திடுஞ் சுத்த நறும்புனல் வாரியக் கடலை
விண்ணுற வளையுஞ் சக்கர வாள வெற்பந்த வெற்பிரு குணமா
முண்ணிறம் விளங்கும் புறத்தந்த கார மோங்கிருட் பலடமா யுறையு
மெண்ணுசக் கரவா ளக்கிரிக் குள்ளா மிருநிலம் பூமியென் றிசைப்பர். (௨௪)

பூமியொன் றினுக்குப் பதின்மடங் கதிகம் பூம்புன லப்புன றனக்கே
தூமமார் கனலோர் பதின்மடங் கதிகஞ் சுடுகனற் கையிரு மடங்கு
தாமுயர் வாயு வந்தவா யுவினுக் கையிரு மடங்க தா காயங்
காமுறு மெவையுந் தன்னிடத் தடங்கக் கருதுமா காயமே காக்கும். (௨௫)

சாற்றுமிவ் வைந்து பூதங்க டமையுந் தனிமக தத்துவந் தரிக்குந்
தோற்றுநன் மகதத் துவத்தையா னந்தச் சுருதியவ் வியத்தமே தரிக்கு
மேற்றமொன் றொன்றுக் கையிரு மடங்கா யிசைதலா னசைவிலா திருக்கும்
போற்றுமைம் பூத நிறைந்திருக் கையினுற் பூவுல கெனப்பெயர் பொருந்தும். ()

பஞ்சபூ தங்க டெரிசன முறலாற் பகருய ரளவெனப் பாரிற்
பஞ்சபூ தங்க ளொன்றொடொன் றுமற் பகுதியா யிருக்கினு மிருக்கும்
பஞ்சபூ தங்க ளொன்றொடன் றுற்றுப் பகர்சகந் தன்னையுண் டாக்கும்
பஞ்சபூ தங்க ளெவ்வள வுளவவ் வளவுமே பல்லுயிர் தழைக்கும். (௨௭)

ஐந்துபூ தங்க ளிலையெனி னுலகி லாருயிர்த் தொகுதியொன் றிலையா
லைந்துபூ தங்க ளன்னிய மின்றி யணைதலா னுற்பத்தி யாகு
நந்திவா கனற்கிவ் வுலகமோ ரணுவா நவிற்றினே நானிலத் தளவை
நந்திவா கனனே விளக்குவா னென்று நவின்றனன் மச்சமா மாயன். (௨௮)

மனுவுளங் கேட்டு மகிழ்ந்தன னென்றே மறையவன் வழங்குநை மிசத்தி
னனுதினந் தவங்க ளாற்றியே சத்திர யாகமு மழகுற வியற்றும்
பனுவலி னுயர்ந்த சவுனக ராதி முனிவரர் பரிவொடுங் கேட்பத்
தனுவென வரையைக் குழைத்தவற் போற்றிச் சாற்றினன் றவப்பெருஞ் சூதன்.

நூற்றுப்பத்தாவது

சாகத்தீவாதி ஆறு தீவுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௩௮௫௬.

நூற்றுப்பதினேன்றுவது

சூரிய சந்திர கதி யத்தியாயம்.

கிளர்ந்திடு மிரவி சோமன் றிரிகதி கிளத்து கென்ன
வளர்ந்தெழு நைமி சத்தின் மாதவ மகங்க ளுளுந்
தளர்ந்திடா தியற்று மோன முனிவரர் தயாவிற் கேட்பக்
குளிர்ந்துள மகிழ்ந்து சூத முனிவரன் கூறு வானுல். (க)

சூரியன் சோம னென்பர் சூழ்சமுத் திரங்க ளேழு
பாரொடு விளக்கா நிற்பர் பகர்மக மேருப் பூமி
யேர்கொண்மத் தியத்தி னிற்கு மிதன்புறத் தவனி நாற்பா
லோரள வாகும் வெய்யோ னுடுபதி யெந்த நாளும். (உ)

மேருவின் புறங்க ளுன்கும் விரைவொடு திரிவ ரேழு
வாரியோ டுலக மேய வளவரின் சுவர்க்க மேவுஞ்
சூரிய னுலக மூன்றுந் திரிந்தருள் சுரத்த லாலே
பேருய ரிரவி யென்னப் பெருமறை பேசு மாதோ. (ரு)

இருகதிர் மண்டி லத்தி னளவைக ளியம்பிற் செங்கே
ழொருகதிர் மண்டி லம்யோ சனையொன்பா னுயி ரம்பால்
பொருகதிர் மண்டி லந்தான் புகன்றதற் கிரட்டி யேழ்தீ
வரியபூ வளவை மேலோர் வகுத்தினி தறைந்தா ரன்றே. (ச)

கூறுமவ் வளவை யைம்பான் கோடியோ சனையாம் விந்த
மீறின்மே ருவினுப் பண்பன் னிரண்டரை கோடி யென்னத்
தேறுயோ சனைத்தா மேருச் சிகரமொன் பானி லக்க
மாறிலா வகல நீளம் வழுத்துவன் கிழக்கு மேற்கு. (ரு)

ஒன்றரைக் கோடி முப்பத் தொன்பதி னுயி ரம்மும்
மன்றியைஞ் ஞூறி லக்க மகன்றதன் வடக்குந் தெற்குந்
துன்றிய நீளந் தானு மத்தொகை துலங்கச் சொல்வர்
நன்றிகொள் புவியி னீறு நலம்பெற வுரைப்பன் மாதோ. (சு)

ஆறுகோ டியினி லக்கத் தைம்பத் தெண் ணுயி ரந்தான்
கூறுமா காயந் தானுங் குலவுமவ் வளவே மேரு
வீறுமேழ் கடல்சூழ் மான சோத்தர வெற்பின் மீது
மாறில்கீழ்த் திசையி லேய மராபதி வயங்கு மாலோ. (எ)

அந்நகர் பொன்ன தாகு மமரர்கோ னதனில் வாழ்வன்
மன்னுதென் றிசையிற் சைய மணிநகர் வைகு மாங்கே
துன்னுவ னியமன் மேல்பாற் சுகையதில் வருணன் வாழ்வ
னன்னெறி யுதக்குச் சோமன் விபாவரி நகர நண்ணும். (அ)

இத்திசைப் பாலர் நால்வ ரெண்ணிலா வுலகங் காப்பர்
சுத்தமா யுயர்ந்த மான சோத்தரா வெற்பைச் சூழ்ந்து
தத்துவ முனிவர் போற்றுஞ் சக்கர வாளந் தோன்று
நித்தமு மிதன்மேற் சுற்று நெடுஞ்சுடர்க் கதியைச் சொல்வாம். (௯)

விளங்குதா ராக ணத்தின் மண்டிலத் துடனே மேவிக்
களங்கமி லிரவி தென்பாற் கணையினுங் கடிதாய்ச் செல்வன்
வளங்கமழ் மகவா னூரின் மதியமாம் போதிற் றெற்கி
னுளங்கெழு நடுவ னூரி லுதயமாய்த் தோன்று மேல்பால். (௧0)

வருணன்ற னூரி னர்த்த ராத்திரி மருவு மாங்க
ணருகுறு வடபாற் சோமன் விபாவரிக் கந்தி யாகும்
பொருதிற னடுவ னூரிற் புகன்றிடு மதிய மாகி
லொருவிறல் வருண னூரி லுதயமாஞ் சோம னூரில். (௧௧)

அர்த்தராத் திரிய தாகு மமரர்கோன் வாழு மூரி
லொத்தவத் தமன மாகு முயர்ந்தசீர் வருண னூரின்
மத்தியா னந்தா ஞகில் வளர்சோம புரியு திப்பன்
பத்திசேர் மகவா னூரிற் பகருநள் ளிருளாந் தெற்கில். (௧௨)

தருமனூர் தன்னி லேயத் தமனமாஞ் சோம னூரில்
வருமத்தி யான மாகில் வாசவன் பதியு திக்கும்
புரியமன் பட்டி னத்திற் புகலுநள் ளிருள தாகும்
வருணன்மா நகரப் போது மன்னுமத் தமன மாமால். (௧௩)

புரவியேழ் கட்டுந் தேர்மேல் வாதசக் கரத்தைப் போல
விரவிநட் சத்தி ரங்கள் கிரகங்க ளிவைக ளோடும்
வருவன்மே ருவினுற் றிக்கும் வருகதி ருடுக்க ளெல்லின்
விரிகிர ணத்தைக் கூடில் விளம்புமத் தமன மாமால். (௧௪)

பிரிந்திடி லுதய மாகும் பிறங்கிடுங் கிரகம் வேரும்
விரிந்தநாற் றிசையி னிந்தவெய்யவ னுதயத் தோடும்
பரிந்தமத் தியானஞ் சாயங் காலமும் பகரும் வேதந்
தெரிந்துளோர் முதலோர் யாருஞ் செய்கடன் கழிக்குங் காலம். (௧௫)

வருகதி ருதிக்குங் காலம் வளங்கெழு முதய வெற்பென்
றெரிகதி ரடையுங் கால மேயத்த மனவெற் பென்ப
பெருமலை வடக்க தாகப் பிறங்குசெங் கதிரோன் சேற
லொருபதி னுயி ரம்பத் தியோசனை யுயர மாங்கண். (௧௬)

வடகிரி தெற்குச் சக்கர வாளவெற் புதக்கி ராவிற்
புடவியி லுறுமான் மற்றத் திசைகளும் பொருந்து மேருத்
திடவனாக் குதக்குப் புட்க ரத்தீவின் றெற்கு நீள
மிடைபதி னென்ற ரைத்த மிலக்கம்யோ சனைய தாமால். (௧௭)

மேருவின் றெற்குச் சக்கர வாளவெற் புதக்குச் சோம
மார்பதிக் குக்கு டக்கு மேற்றிசை வயின்ற னண்ணும்
வாருணி நகர்க்குக் கீழ்பால் வயங்குறு மகல நீள
மாருமும் மூன்று கோடி யையொன்பா னிலக்க மென்ற. (௧அ)

பொருந்துயோ சனையே தக்க ணுயனம் புலன்கொள் வெய்யோன்
றிரிந்துசஞ் சரிப்பன் கோமே தகமெனுந் தீவுக் கப்பால்
விரிந்தபுட் கரத்தீ விற்குத் தெற்கதாய் விளங்கு நாப்பண்
பரிந்தயோ சனைமுக் கோடி மீதிரு பத்தொன் றுகும். (௧௯)

இலக்கஞ்சஞ் சரிப்பன் வெய்யோ னிலங்கியமேரு வெற்பாங்
குலக்கிரி வடக்கின் மூன்று வீதியுண் டவைபேர் கூறில்
விலக்கலில் சிருங்க வீதி விளங்குமத் திமமாம் வீதி
நிலைக்கொள்ரா வதிப்பேர் வீதி யவ்விய னிகழ்த்து வேமால். (௨0)

பொருசிருங் கவமா வீதி மூலம்பூ ராடத் தோடு
தெரிதரு முத்தி ராடந் திருவோண மிவைக ளன்றி
வருபுகழ் மத்திம வீதி வழங்கனு டத்தி னோடு
முரியதோ ரத்தஞ் சோதி யுத்திர முத்தி ராடம். (௨௧)

உத்திரட் டாதி சொற்ற வசுவனி யுற்ற வாறல்
வித்தக ரேவ திப்பேர் வீதிரோ கணியி னோடு
கொத்துறு மாதி ரைப்பின் கூறுமான் றலையினோடு
புத்திசேர் பூசத் தோடா யிலியம்பின் புனர்பூ சந்தான். (௨௨)

என்றுசொல் வடக்கு வீதி மூன்றினு மிரவி நித்தந்
துன்றிய திரித லன்றித் துலங்குபொற் கிரிக்குத் தெற்கா
வென்றிகொள் வீதி மூன்றுண் டவைகளில் வெய்யோ னித்தஞ்
சென்றுசஞ் சரிப்ப னந்த வகைதனைச் செப்பு வேமால். (௨௩)

பொன்மலைத் தெற்க தாகப் பொருந்துநல் வீதி யின்பேர்
பன்னிய நாக வீதி பகருமத் திபநல் வீதி
யுன்னிய வைசு வானர் வீதியோ ரிலக்க ணந்தான்
சொன்னத னுக வீதி துலங்கிய பூர முத்திரம். (௨௪)

வளங்கெழு மகமோ டுத்தி ரட்டாதி மத்தியவீதி
விளங்கிய வோணம் விட்டஞ் சதையமா மூன்றும் வீதி
யுளங்கொள்வை சுவான ரப்பேர் வீதியோர் விசாகங் கேட்டை
களங்கமி லனுட மூல மிவையினுங் கதிரோன் செல்வன். (௨௫)

திக்கிடை வெளியி லக்க மிருபத்து மூன்று செப்பு
மிக்கமுன் னூற்று முப்பான் மூன்றதன் முடிவு மேன்மை
தக்கதோர் காட்டை யென்று சாற்றுவர் நடுப்பிர தேசத்
தொக்கமே பிலேக மந்த லேகத்திற் சுடர்தான் வந்தால். (௨௬)

உத்தரா யணமா மென்ப வுயர்திக்கு முடிவு தன்னின்
மெய்த்தகு ரியன்ருன் மேவிற் றக்கணு யனமாம் வென்றி
யித்தகை தூர மேழா யிரத்திரு பத்தைந் தென்ப
வைத்தவுத் தராய ணத்தின் வளம்பெற நடக்கு ஞான்று. (௨௭)

கடப்பன்மண் டிலங்க ணூறு கமழ்தக்க ணுய னத்தி
ணடப்பன்மண் டிலங்க ணூறு நவையிலோர் மண்டி லந்தா
னடக்குமீ ரொன்பா னுன வாயிரத் தைம்பா னென்றே
யிடத்துறு மகல நீளஞ் சரியென வியம்ப லாமால். (௨௮)

இத்தகை மண்டி லங்கள் பகலினூ றிரவி னூறு
தத்தியே கிடக்குஞ் சக்கிரி சக்கரம் போல வாங்கண்
வித்தகத் துருவ னுளும் விளங்குவன் கதிரி ரண்டு
மொத்ததக் கணுய னத்தில் விரைவினி லுலவிச் செல்லும். (௨௯)

நவிலுத்த ராய ணத்தின் மந்தமா நடக்கு மோர்நாட்
டிவளொளி முகூர்த்த முப்ப தாமெனச் செப்பு வார்கள்
கவினுத்த ராய ணத்திற் கருதிய பகலிற் செங்கே
ழவிர்கதிர் மந்த மாக நடக்குமா லிருளின் மிக்காய். (௩௦)

விரைவொடுஞ் செல்வன் றக்க ணுயனத் தினில்வி ரைந்து
பரிவொடு பகலிற் செல்வன் பகர்கங்குன் மந்த மாகித்
தெரிவுறச் செல்வன் பொற்பாந் திவாகரன் பகலி ராவு
மரியதன் கதியி னுலவ் வரையிற்சஞ் சரிப்பன் மாதோ. (௩௧)

உலகங்க ளுண்டு பண்ணு மொண்கதி ரிரவி தெற்கி
னிலவிய திசையந் தத்தி னேமிநீள் கிரிக்கு தக்காய்
மலேவற விளங்கும் வைசு வானர வீதித் தென்பா
விலகுபுட் கரமாந் தீவு மெழில்பெற விளக்கு வானல். (௩௨)

சொற்றபுட் கரமாந் தீவைச் சுற்றிய வாழி வெற்புத்
தற்குறு மீரைந் தாயி ரம்யோச னேத்தா னுகும்
விற்பிர காச மாயு மின்றியும் விளங்கும் வெற்பு
ணற்கதி ரிரண்டி னேடு முடுநவக் கிரகம் யாவும். (௩௩)

துலங்கியே சஞ்ச ரிக்குஞ் சூழ்வரைக் கப்பு றந்தா
னிலங்கலி லிருள மர்ந்த விருளொடும் பகலேத் தானே
நலம்பெறப் பொருத்த லாலே நவிலுவர் சந்தி யென்றே
விலங்கலில் சந்தி தன்னே யுடையுடன் வியுட்டை யென்ப. (௩௪)

பகலினே வியுட்டை யென்ப பகர்கங்கு லுடையே யென்ப
திகழ்கலே முப்பான் கூடிச் சேரினேர் முகூர்த்த மாகு
நிகழுமம் முகூர்த்த மூவைந் திருபக னிலவுங் கங்கு
றுகளற வவ்வா றென்றே சொல்லுவர் முகூர்த்தந் தானே. (௩௫)

இருளொடு பகலுஞ் சுற்று மிரவிநற் கதியி னாலே
தெரிவுற விரண்டு கன்ன றேய்ந்துபின் வளரு முன்னம்
பரிவுறு முகூர்த்த மூன்று பகர்தரு பிராதக் கால
மருகுநன் முகூர்த்த மூன்று மறைவர்சங் கமமா மென்றே. (௫௬)

உரைத்தபின் முகூர்த்த மூன்றை யுயர்மத்தி யான மென்ப
நிரைத்தபின் முகூர்த்த மூன்றை நிகழப ராண மென்ப
வரைத்தபின் முகூர்த்த மூன்றை வருசாயங் கால மென்ப
தெரித்தவிவ் வருட மொன்றே தேவர்கட் கோர்நா ளாமால். (௫௭)

தேவமா னத்தி னுளிற் றெரிதரு முகூர்த்த மூவைந்
தோவுறில் வசந்த காலத் துறுவிடப் பின்மூ வைந்து
தாவுறு முகூர்த்தஞ் சென்றுற் சரற்கால விடுவந் தெய்து
மேவுமுத் தராய ணத்தின் மிருபகல் குறையுங் கங்குல். (௫௮)

படர்தக்க ணய னத்திற் பகல்குறைந் திரவு நீளுந்
தொடர்வுறு மாழி வெற்புட் சுடர்தருஞ் சுடர்கள் சுற்ற
நடவுறு மாழிமட்டு நலங்கெழு முலக மென்ப
அடைவினிவ் வுலக மாழி யருவரை நடுவா மென்ப. (௫௯)

இவ்வுல கத்தி னாலு திசையிலு மின்பத் துன்பக்
கவ்வையொன் றின்றி வாழ்வார் கடவுளா மிரண்ய ரோமர்
செவ்விசேர் கின்ற பர்ச்ச னியன்றிகழ் கேது மான்சீர்
வவ்வுறு மிராச சத்த மசங்கத பதப்பேர் மன்னும். (௬௦)

அன்னவர் நால்வர் தாமு மருமாள யத்தின் மட்டுந்
துன்னுமிவ் வுலகங் காப்ப துலங்குதென் றிசையந் தத்தின்
மன்னிய பிதிர்லோ கத்தின் வடக்குவை சுவான ரப்பே
ரென்னுமோர் வீதித் தெற்கா யகத்திய ரில்ல மாமால். (௬௧)

அவருறை கிரகப் பாங்க ரருந்தவ முனிவர் மிக்கோர்
கவருறு தெண்பத் தெண்ணா யிரவர்கள் கருமஞ் செய்து
புவனமு மறமும் போற்றிப் பொருந்தியாங் கிருந்து நாளுந்
திவளொளிச் சனனத் தோடு மரணமாஞ் சிருட்டி செய்ப. (௬௨)

அன்றியு மிவர்க டக்க ணயனத் தமர்ந்து நீட்டித்
தென்றிசைக் கடைநாள் காறு முறைவருத் திராய ணத்திற்
றுன்றிய முனிவர் தாமு மத்தொகை விடைய மில்லார்
நன்றிகூர் விருப்பி னோடும் வெறுப்பிலார் தரும நாடி. (௬௩)

பாலனஞ் செய்தே யோர்ந்து பகர்பிர ளயத்தின் மட்டு
ஞாலமீ துறைந்து யோக நாடியே முத்தி சேர்வர்
சீலமா ரவரைப் போற்றிற் சிறப்புறு மசுவ மேத
மாலுறு பதத்தைச் சார்வ ரவரைத்து டணங்கள் செய்தார். (௬௪)

செப்பிய புருண வத்திப் பவத்தினைச் சேர்வர் மோனத்
தொப்பினி லரிய பேரா யுலகவர்த் தனர்க ளாகிச்
செப்பிய கருமஞ் செய்யுந் திறத்தின ராகித் தன்மந்
தப்பிநற் றவங்க ளாற்று மிருடிகள் சாற்றின் மிக்கார். (௪௫)

பிறப்பவர் பிறந்து ளோர்கள் பெருமைபெற் றிடுவோர் யார்க்குஞ்
சிறப்பரு ளுபதே சத்துத் திகழுநித் தியமு மன்னோ
ரிறப்பிலா திருப்ப ரன்னோ ரிருப்பிடத் தளவை யல்லா
னிறக்கதி ரிரவி யென்றாழ் நிலவொளி பரப்பா வன்றே. (௪௬)

இருசுடர்க் கதிர்கள் செல்லு மிருங்கதி யிரவி வீதி
மருவுமண் டிலத்தி னெல்லை மலர்தலை யுலகின் மேன்மை
தெரிவுற மனுவுக் கன்று செங்கண்மா லுரைத்த வண்ணம்
பரிவொடு முனிவர் கேட்பப் பகர்ந்தனன் சூதன் மாதோ. (௪௭)

நூற்றுப்பதினொன்றாவது

சூரியசந்திரகதி யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௬௦௬.

நூற்றுப்பன்னிரண்டாவது

சூரியரதவர்ணன யத்தியாயம்.

வானுறு சூரி யன்றேர் வருணனை விளம்பி டென்று
கானுறு நைமி சத்தின் முனிவரர் கருதிக் கேட்பக்
கூனுறு பிறைசேர் மோலிக் குழகன்ற னடியைப் போற்றித்
தேனுறு மமுத மென்னத் தேர்ந்துரை செய்வான் சூதன். (௧)

இரவியுங் கிரகந் தாமு மிலங்குதா ரகையுங் கூட
விரவிச்சஞ் சரிக்கு மோவெவ் வேறுசஞ் சரிக்கு மோமே
லுரமுற நடத்து வோர்யா ருலகினை மோகிப் பிக்குந்
திறமுற வுரைத்தி டென்ன மனுவுக்குத் திருமால் சொல்லும். (௨)

அக்கதி துலங்கச் சொல்வா மமரிலக் கணத்தி னோடு
மிக்கதாஞ் சிஞ்சு மார சக்கரம் விளங்கான் மாக்க
ளொக்கமோ கிப்பச் செய்யு முத்தான பாதன் மைந்தன்
றக்கசீர்த் துருவ னிந்தச் சகத்துக்கோர் தம்ப நேர்வான். (௩)

அன்னவன் சஞ்சா ரத்தர லாதித்தன் முதலி னோரை
யுன்னுசக் கரமே போல நடத்துவன் வானி லோங்கு
மன்னுமா வகனே யாதி மருத்துப்பா சத்தின் மீது
துன்னிநற் கிரகந் தாரா கணமிரண் டயனஞ் சூழ்ந்து. (௪)

சஞ்சரித் திடவே நாளு நடாத்துவன் றபன னென்போன்
மஞ்சுமம் மஞ்சு பெய்யு மழைக்குங்கா ரணம தாகி
யெஞ்சுத லின்றிப் பெய்வித் திடுவன்சீ மூத மென்னும்
விஞ்சுபேர் பெற்ற காரா வகனென விளங்குங் காற்றை. (௫)

பொருந்திவான் பொழியு நீராற் புகல்சர மசர மெல்லா
மருந்தியுய்ந் திடவே செய்யு மவனிமீ தாகா யத்திற்
றிருந்துயோ சனைக்கு மேலாய்ச் சிறந்துநீர் பொழியுந் தெண்ணீர்
வருந்தனிப் புட்க லாவ ருத்தத்தின் வரவு கூறின். (௬)

பருப்பத குலங்கண் முன்னம் பறந்துசஞ் சரிக்கப் பாரி
னிருப்புறு முயிர்கள் யாவு மிடைந்திடு மிடரை நோக்கிப்
பொருப்புறழ் திணிதோட் டெய்வப் புரந்தரன் வச்சிரத்தால்
வரைச்சிற கரிந்த போதச் சிறையினில் வந்த தாமால். (௭)

புனன்மிகத் தரித்த வாற்றூற் புட்கலா வருத்தப் பேரா
மனையமே கங்கள் பல்ல வடிவமா யார்ப்பி னோடு
நினைவில்கற் பாந்தந் தன்னி னெடும்புனல் சொரிவ தாயுந்
துனைவினிற் பிரள யத்திற் சுடுகன றணிப்ப தாயும். (௮)

வாயுவி னுடனே கூடிப் பிரளய மவியச் செய்யும்
பாய்புனன் மேகங் கட்குட் பகருமுந் தினமே கங்க
ளேப்மல ரயனுண் டாகத் தொல்பிர மாண்டம் விள்ள
வேயவ னுடைந்த வோடென் றியம்புவர் புவியின் மீது. (௯)

பன்னுபர்ச் சனிய மேகம் பகர்திக்கு தேயம் பாம்பு
மன்னுவெற் பட்ட திக்குக் கயங்களும் வருடிக் கும்மீங்
குன்னுமற் றிவைகட் கெல்லா முதகமுற் பத்தித் தான
மென்னவே புவியு ளோர்க ளிசைப்பரெஞ் ஞான்றுந் தானே. (௧௦)

மருவுபர்ச் சன்னிய னென்னு மேகந்தான் வருட கால
மொருபரி வகனென் றோதும் வாயுவி னுடனே கூடிப்
பெருகிய மழையைப் பெய்யும் பிறங்குமவ் வாயு வோடே
தெரிசித சம்ப வன்றூன் சேர்ந்துதண் பனியைப் பெய்யும். (௧௧)

பரிவக னென்னும் வாயுப் பகிரதி தனைப்ப ரிக்கும்
விரியுமக் கங்கை நீரைத் திசையுறும் வேழங் கையாற்
புரிதர வெடுத்துச் சிந்தும் புனற்றுளி பனியே யாகு
மருவுறு மிமவா னுக்கு வடக்குமே ருவுக்குத் தெற்கு. (௧௨)

சொல்லிய வேம கூடத் தொல்வரைப் புறத்தின் மேவு
மொல்கலி லயுத மென்னு நாட்டினுக் குளதா மேக
மல்குமவ் வெற்பி னீரால் வயங்குமத் தேயம் வெய்யோன்
செல்லிழுத் திமயத் திப்பாற் சீர்மழை பெய்வித் தப்பால். (கங)

மற்றுள வருடங் கட்கும் வான்மழை வழங்கு விப்பா
னுற்றவிம் மறைகட் கெல்லா முரியவ னிரவி தானே
சொற்றிடு மழைகூர் வெம்மை சூழ்பனி யுடனே சந்தி
யற்பகல் சுபாசு பங்க டுருவனு லனைத்து முண்டாம். (கச)

இரவியத் துருவ னோடு மிணங்கிநீர் பெய்விப் பானுற்
சரமச ரங்க ளோடு கூடுதா ரணிநன் னீரின்
பரவையொ டுறுமா னீடு சகம்பகர் பிரள யத்திற்
புரியழ லுண்போழ் துநதண் ணீர்புகை யாகு மன்றே. (கரு)

ஆகிய புகையே மேக மாதபன் கரங்க ணீட்டி
வாகுறு சகல பூத மன்னுநீர் கவர்வன் வானின்
மேகமார் கலியி னீரைக் கிரகிக்கும் விளங்கும் வெய்யோர்
சேகறு மேகங் கொண்டே திங்களோ ராறும் பெய்வர். (கசு)

வெண்ணிறக் கிரணங் கொண்டு பனியைப்பெய் விப்பர் மேக
நண்ணுநீர் பொலித லாலப் பிரமெனு நாமஞ் சாரு
மெண்ணிடப் பெற்ற வந்தத் துருவனை யிணங்கி வாயு
மண்ணினீர் பொழியா வண்ணம் வரம்புற மறுக்கு மாதோ. (கஎ)

சூரிய னிந்த வண்ணஞ் சொல்லுவா மிரதத் தொன்றே
சீரிய திகிரி யோர மைந்தொடு சிறந்து மூன்று
பேருறு நாபி யோடு பிறங்குபொன் மயமா முன்ன
ரேருறு முழநா னூறு மிருங்கன மொற்றை யாழி. (கஅ)

உருட்டிய விரதம் பத்து யோசனை யகல நீளந்
திரட்டிய வீடா தண்ட மெனும்பெயர் சிறக்கு மேர்க்கா
லுரைக்குமியோ சனையி ரண்டி னயுதமீ தன்ன வூர்தி
பரப்புறப் படைத்த தாகும் பொன்னிறப் பரியோ ரேழாம். (கக)

இரதத்தி னகந்தன் னோடு பாங்கமு மியல்பி லங்கம்
பரிவழுத் துபாங்க மேவு மஞ்சுரு வாணி பற்றும்
வருடத்தின் வைப வத்தால் வகுத்தவை வகையைச் சொல்லி
னுரைபெற்ற தினமே நாபி வருடமைந் தோர மாமே. (உ0)

நிகழ்வுரு மிருதோ ராறு நேமிகண் மாதங் கோணம்
புகழ்கணங் கூத்துக் கால்கள் பொருநிமி டங்கள் பாச
நகைபெறு மீடா தண்ட நற்கலை யிராமுற் பக்கந்
துகளறு தருமம் வென்றித் துவசமாய்த் துலங்கு மாலோ. (உக)

நுகநுதி யச்சி னுற்ற நுதிநுவல் பக்க மாகு
மகிழ்வுறு சந்தச் சான வயப்பரி யேழி னுமந்
திகழ்காயத் திரியி னேடு திருட்டுபு செகதி வென்றி
மிகுமனுட் டுபுநற் பந்தி பிரகதி விளங்கி யோங்கும். (உஉ)

மருவுமுட் டிணுகு வென்னும் வாம்பரி யேழு பூண்ட
விரதநல் லச்சு வென்றித் துருவன்மே லிருந்து சுற்றும்
பரவுதேர் நுகத்தி னச்சி னுதிவரி வலப்பா சத்தைக்
கரமுறச் சுருக்கும் போது திரிகைபோற் கவனத் தோடும். (உ௩)

வாயுமண் டலத்தி னேகிப் பகலின்மண் டலமோர் நூறுங்
காயிருட் பொழுதி னூறு மண்டலங் கடிது செல்லு
மேயுமிவ் வார்த்தை தக்க ணயன மென்ப மிக்கோ
ராயதே ரிடப்பு றந்தற் சனிநுக நுதியிற் பாசம். (உ௪)

ஒருங்குற விசிக்கும் போதி லுரியமண் டலங்க ணூறு
மிரும்பக னூறும் பேசு மிரவிமண் டலங்க ணூறு
மருங்குற நடக்கி னுத்த ராய மெனமால் சொல்ல
வருங்கலை மனுக்கேட் டானென் றருந்தவர்க் குரைத்தான் சூதன். (உ௫)

நூற்றுப் பன்னிரண்டாவது
சூரியரத வர்ணனை யத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம், உ௯௯௧.

நூற்றுப் பதின்மூன்றுவது

துருவப்பிரசங்கிதை யத்தியாயம்.

துலங்கிய துருவன் மேன்மை துகளற வுரைத்தி டென்றே
யிலங்குசெவ் வான மோலி யிறைவனுக் கொப்பா யுள்ளங்
கலங்கலின் மகங்க ளாற்று முனிவரர் கருதிக் கேட்பச்
சலந்தவிர் தவத்துச் சூத முனிவரன் சாற்று மன்றே. (க)

கதிருறு மிரவி தேரி லிருடிகள் பன்ன கங்கள்
வதியுங்கந் திருவர் வானத் தரம்பையர் வண்மை யோங்கும்
பதிகிரா மணிக ளோடு பகரிராக் கதரு மேறிப்
புதியவா மிரண்டு திங்கட் கோர்வகுப் பாகப் போற்றி. (உ)

தோத்திரஞ் செய்வர் மிக்க சித்திரை சொலும்வை காசி
யாய்த்தமா தத்திற் ருதா வரியமா வென்றே கஞ்சம்
பூத்திடத் துலங்கும் வெய்யோ ரிருவர்கள் புலத்தி யன்பின்
னேத்திடும் புலக னென்னு மிருடிக ளிருவ ராவார். (௫)

சொல்லும்வா சுகியி னேடு கம்பளா சுவதா னப்பேர்
புல்லிய நாகம் பின்கந் தருவர்தும் புருநல் யாழின்
வல்லநா ரதர்தம் மோடு மிருவர்வா னரம்பை மாதர்
வெல்கிரு தத்த லைபுஞ் சிகத்தலை விளம்புங் காலை. (௪)

வளங்கெழு கிரிச சன்னர் வழங்கிய தௌசா வென்றுங்
களங்கமி லாக்கி ராம ணிகளெனக் கருது மின்னோர்
துளங்கலி லேதி யோடு பிரகேதி துலங்க ரக்க
ருளங்கெழு மிவர்கள் போற்றி யுறுவர்மற் றுனி யாடி. (௫)

மித்திரா வருண னென்னும் வெய்யவர் முனிவ சிட்ட
னத்திரி யிருவர் நாக ரறையுந்தக் ககனே யன்றி
யொத்தரம் பகனென் றேசொல் லோரிரண் டரம்பை மாதர்
தத்தைமென் மொழியார் மேன கைசக சன்னி யென்ப. (௬)

உற்றகந் திருவ ராகா வூகூவென் றிருவர் மிக்காய்ப்
பற்றிய விரத சன்னர் பதிரத கிருத்து வென்று
நற்கிரா மணிக ளப்பா னவிலிராக் கதர்பேர் சொல்லின்
மற்புரு டாத னேடு வதனனும் போற்றி வாழ்வான். (௭)

ஆவணி புரட்டா திக்கே யவிரொளி யிந்தி ரன்சீர்ப்
பூவகம் விளக்குஞ் செங்கேழ் விவச்சுவான் புகலும் வெய்யோர்
தாவில்சீ ரங்கி ராமெய்ப் பிருகுவே தவத்தோர் நாகர்
பாவலா பத்தி ரன்பின் பகர்சங்க பால னென்ப. (௮)

அரம்பைய ரனுமு லோசை யளவறு பிரமு லோசை
சுரஞ்செய்கந் திருவ ரேவீ சுவாவசு கிராம ணிப்பேர்
நிரம்பினர் பிராத னேடுந் தன்கிரா மணிநீள் சற்ப
னுரங்கொள்வி லாக்கிர ரைக்க ருறுவரின் னேர்கள் போற்றி. (௯)

ஐப்பசி கார்த்தி கைக்கே யருக்கர்பர்ச் சன்னி யன்சீர்த்
தற்பரப் பூடா வென்ப தகுமுனி பரத்து வாசன்
சொற்கவுத மனேசீர்க் கந்தி ருவர்களச் சுரசி யோடு
விற்பொலிந் திலங்குந் தந்தி விளரியாழ்ச் சித்திர சேனன். (௧௦)

வருவிசு வாசி யோடு கிருதாசி யரம்பை மாதர்
தருமயி ராவ தன்சீர்த் தனஞ்சய னிவர்க ளுகர்
தெரிகிரா மணிகள் சேன சித்தொடு சுசேனன் பாரன்
றுரிதமில் வார னென்பா ரரக்கரே துதிப்ப ரின்னோர். (௧௧)

மார்கழி தையி ரண்டில் வளரங்கன் பகனு தித்த
ரேர்தரு கசவ ஞேடு கிருதுவே முனிவ ரென்ப
கூர்மகா பற்ப னேகார்க் கோடகன் குலவு நாக
ராருஞ்சித் திரசே னன்கூ ரனுயுக்கந் திருவ ராவர். (௧௨)

பூருவ சித்தி யோடு புகலுருப் பசிவிண் மாதர்
தாரிட னரிட்ட நேமி தருகிரா மணிய ரக்க
ரார்தரு வித்தித் தோடு பூச்சனன் மாவா போற்றிச்
சீர்தரு மாசி யோடு பங்குனித் திங்க டம்மில். (௧௩)

மேவிய துவட்டா வோடு விட்டுணு வெய்யோ ராவர்
மாவர முனிவ ரேசந் தக்கினி கோசி கன்சீர்
பாவிய நாக ரேகம் பன்னசு வதர னென்ப
வோவில்சீர்த் திருத ராட்டிர னுற்றகு ரியவற் சன்ருன். (௧௪)

இவர்கள்கந் திருவ ராவ ரெழிற்றிலோத் தமைய ரம்பை
திவளொளி விண்ணின் மாதர் திகழ்கிரா மணிகள் கூறி
னவிரிது சிதுவே சத்திய சிதுவென்ப வரக்க ராஞே
ருவமையில் பிருமோ பேத னுறுரிடோ பேத னென்ப. (௧௫)

இன்னவ ரிரவி தேர்மே லேறித்தோத் திரங்கள் செய்வ
ரன்னவர் கருமஞ் சொல்லி னருந்தவர் துதிப்பர் வேதம்
பன்னுகந் தருவர் கானம் பண்ணுவ ரரம்பை மாத
ரின்னிசை நடனஞ் செய்வ ரெழிற்கிரா மணிக ளானோர். (௧௬)

நுகத்துறு கயிறுபற்றி யிருப்பர்க ணுவலு நாகர்
மிகுத்தவவ் வரக்க ருந்தேர் மீதுபின் னிருப்பர் வண்மை
தொகுத்ததேர்ப் பின்னர் வால கில்லியர் துதித்துச் சொல்வர்
வகுத்திடு மிவர்க்கே யோகம் வையத்து வந்தான் மந்தன். (௧௭)

ஆதவர் தமது காந்தி யாலளித் திடுவர் முந்நீர்
மேதினி யுயிர்கட் கெல்லாம் வெவ்வினை யொழித்தே யென்றுங்
கோதறு பலன்க ளீவர் குலவிய தவத்தோர்க் கெல்லாந்
தீதறு தைவி கத்தால் வருவினை தீர்ப்ப ரன்றே. (௧௮)

முனிவர ராதி யாக மொழியெழு கணங்கள் வானிற்
றினகர னிரதத் துற்றுச் செய்தற மாற்றி யன்பாற்
டனகம துலக மெல்லாம் பரிந்தினி தளிப்ப ரின்னோர்
புனிதமன் வந்த ரங்கள் பதினான்கும் புரப்ப ரம்மா. (௧௯)

புகலுமா தித்தர் வேனில் பொழியுங்கார் பனிக்கா லத்தின்
மிகுகின்ற வெம்மை தெண்ணீர் வெம்பனி விளைப்பர் விண்ணோர்
பகலின ரிருது வோடும் பயின்றுவா னவர்பி திர்க்க
ளகலிடத் தவரின் ஞேரைக் காத்தினி தளிப்ப ரன்றே. (௨௦)

வெய்யவர் பனியோ டுற்று வெண்சுதை விளையும் வண்ணஞ்
செய்வரவ் வமுதந் தன்னைத் தேவர்கள் பிதிர்க்க டுய்ப்பர்
வையகத் தவரை யந்தப் பனியினால் வளர்பைங் கூழா
னுய்யவே யருத்து விப்ப ரும்பர்க ளமுதத் தாலே. (உக)

திருத்தியை யடைவர் மாதம் பாதிசேர்ச் சுதையாத் திங்க
ளருத்தியை யடைவர் மிக்க பிதிர்க்களி லவனி யுள்ளோர்
வருத்தமொன் றின்றி யன்னந் தினந்தொறு மகிழ்ந்து துய்ப்பர்
பரித்ததோ ராழிப் பச்சை யெழுபரித் தேரி னேறி. (உஉ)

இரவுநன் பகலும் வாரி யேழுடைத் தீவேழ் சூழும்
விரிதலை யுலகங் காத்து விளக்குவர் விதுவு மிவ்வா
றுரியதா ராக ணத்தோ டுலவுவ னுயர்ம திக்குத்
தெரிகலை வளர்வுந் தேய்வுஞ் செங்கதிர்க் கிரணத் தென்ப. (உங)

மதியுறு மிரதந் தெண்ணீர் மயத்ததா யாழி மூன்று
கதிபெற வமைந்து பத்துக் கவனவாம் பரிகள் பூண்டு
பதிவுறு வெண்மை யோடு முறுமத்தேர் பரிக ளுமஞ்
சதமத னசனே வாசி சத்ததா தஞ்ச வாமன். (உச)

நரனொடு வருட மஞ்ச னவிலயன் மிருக னென்னும்
வரன்முறை யுரைப்ப தாவும் வாம்பரி மதியைத் தாங்கி
விரவுகற் பாந்த மட்டும் விளங்குவெண் மதியின் பின்னர்ப்
பெருகிய தேவ ரோடு பிதிர்க்களுஞ் செல்வர் மாதோ. (உரு)

தேவர்கள் பிதிர்க ளுண்ணத் தேய்வுறு மபர பக்கத்
தோவுறு மதியைப் பின்ன ருற்றசுக் கிலபக் கத்திற்
றுவுறு கதிர்க டம்மிற் சுழுமுனை தன்னால் வெய்யோர்
மேவுற நிறைப்ப ரிந்த வெண்கதிர்க் கலையைத் தானே. (உசு)

சொல்லிய வபர பக்கத் தன்னவர் துய்த்த பின்னர்
வில்லவிர் சோமன் றேவர் மெய்த்தவர் பிதிர்க ளோடு
மெல்லவன் சேர்வன் முப்பத்தே ழெனு மாயிரத்தோ
டல்கலி லொன்பா னூற்றெண் பத்துமூ வருமக் காலை. (உஎ)

பானமே பண்ணு வார்க ளாதலி னபர பக்கத்
தூனமில் கலைக டேய்ந்து முளைத்தபூ ருவபக் கத்தி
லானநற் கலைவ ளர்ந்து மமைவுறு மபர பக்கத்
தீனமி லமாவா சைக்க ணிரவியோ டுறுமப் போழ்தின். (உஅ)

பிதிர்கணக் கூட்ட மெய்திப் பிறங்கரும் பானஞ் செய்யா
மதியொரு கலையைத் தானே வருமிரு கலைநே ரந்தான்
புதிதுறத் துய்ப்பர் பின்னர்ப் புகலுமம் மதியை வெய்யோன்
கதிர்பெற நிறைப்பன் மாதந் தொறும்பிதிர் கணங்க டாமே. (உகூ)

வந்தமா வாசைக் கண்ணை மகிழ்ச்சியி னருந்திப் போவா
ரந்தமா பிதிர்க்க டம்பே ரக்கினி சுவாத்த மிக்க
சிந்தைகூர் பரிதி டத்தர் திகழ்ந்தகவ் வியரு மன்றி
முந்தமுந் தபர்தம் மோடு மொழியுஞ்சௌ மியரே யென்ப. (௬௦)

றவிற்றுடு தாரை மற்றக் கிரகமக் கிரக நற்பேர்
நிவப்புறு கதியி னோடு பிரமாண நிகழ்த்து கின்றேன்
றவத்துறை புதன்றேர் பொன்னின் றன்மையாய்ப் பரியோ ரெட்டுத்
துவக்குறும் வாயு வேகத் துணைவுறு பெயரைச் சொல்வாம். (௬௧)

பேர்பெறு சுவேதஞ் சாமம் பிசங்கஞ் சாக்க நீலஞ்
சீர்பெறு விலோகி தஞ்சித் திரவன னரித மாமற்
போர்பெறு செவ்வாய் தேரெண் கோணஞ்செந் தீப்பொன் போலுஞ்
சார்வுறு மிதன்மேல் வெள்ளி யாண்டொன் றுஞ் சஞ்ச ரிப்பான். (௬௨)

உயர்சனி நானா வன்னத் தொளிர்பரி பூட்டி யோங்கு
மயவடி வுற்ற தேரி லமர்ந்துசஞ் சரிப்ப னப்பாற்
பெயற்பெறு மிராகு வின்றேர் பேரிரு ணிறத்த தாகி
வயவுளைப் புரவி யெட்டு மருவியே வயங்கு மாதோ. (௬௩)

கேதுவின் றேரிற் பூட்டுங் கிளர்தூம நிறத்த வாகி
மீதடர் பயங்க ரத்தை விளைத்திடுந் துருவன் வெங்கான்
மோதுநற் கயிற்றுட் பட்டு முறைமுறை கதிர்க டம்மி
லோதுறு மளவில் விண்மேற் றெரிதர வுறுவ கின்னோர். (௬௪)

தாரகை முதல வாவுஞ் சாற்றுகாற் றுத ரத்திற்
சீர்பெறு துருவ னுய்ப்பத் திசழ்ந்தசக் கரம்போற் சுற்றும்
பேர்பெறு மிவற்றைத் தாங்கும் பெற்றியாற் பிரேவ கப்பேர்
கூர்தரு வாயுட் பெற்றான் குலவிய துருவ னென்பான். (௬௫)

தன்னையே சிஞ்சு மார சக்கர வடிவ னென்பா
ரன்னவன் றன்னைக் கண்டா லற்றைநாட் பவங்க டீரு
மன்னுமச் சக்க ரத்துண் மருவுதா ராக ணங்க
ளுன்னுமெவ் வளவு காணா மத்தொகை சுரர்க ளாண்டு. (௬௬)

தேவர்தம் முலகில் வாழ்வான் றிகழ்சிஞ்சு மார ரூபன்
றூவரு மிடப்பாற் கன்னந் துருவனா மகரம் யாக
மேவருந் தலையே தன்மம் விளங்கிய விதயம் விண்டுந்
தாவில்சீர்க் கரண மேன்மை தருமசு வினிக ளாவார். (௬௭)

அழகுறு மிடைப்பக் கங்க ளரியமா வருண னாகுந்
தழைபிர சன்னந் தானே சாற்றிய வாண்ட பானம்
விழைவுறு மித்தி ரன்வா லக்கியே விண்ணோர் வேந்தன்
வழுவில்கா சிபனே மிக்க மாரீச னாகு மன்றே. (௬௮)

உடுவின்ன மயமா மிந்தச் சக்கரத் தொளிக்கெஞ் ஞான்றும்
படுபக லிரவொன் றில்லைப் பகர்ந்திடு கீழு மேலு
நடுவணோர் சக்க ரம்போற் சுழலுநற் றுருவன் றன்னைத்
தொடுமதிட் டான மாகச் சூழ்வரும் வலமாய் விண்ணில். (௩௯)

துருவனிவ் வுடுக்க ளாதி தூய்நவக் கிரகங் கட்கு
மருவொளி கொடுத்து மேரு வுச்சியில் வதிந்த மேருப்
பருவரைக் கீழாய் நோக்கிப் பகர்சோதிச் சக்க ரத்தை
விரிதரு மேருச் சுற்றி யிழுப்பனே விளங்கெஞ் ஞான்றும். (௪0)

இவ்வகை துருவன் செய்கை யெறிதிரை சுருட்டுந் தெண்ணீர்ப்
பௌவமீ தமர்ந்து மச்சப் பச்சைமான் மனுவுக் கோதுந்
திவ்விய சரித மெல்லாந் தெரிதர முனிவர் கேட்பக்
கவ்வைதீர் தவத்துச் சூத முனிவரன் கழறி னானால். (௪௧)

நூற்றுப் பதின்மூன்றவது

துருவப் பிரசங்கிதை யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், ௨௯௭௨.

நூற்றுப்பதி னான்காவது

புவனகோச சமாத்தி யத்தியாயம்.

துருவன்றன் சொரூபம் யாவுந் துலங்கிட வுரைத்த சூதன்
மருவலர் வதன நோக்கி மாதவர் புவன கோசத்
தரியநன் முடிவோ டோங்கு மருக்கன்றன் கதிர்சீர் நட்சத்
திரமுறு பிரமா ணந்தான் செப்பென விரித்துச் சொல்வான். (௧)

பூருவ காலந் தன்னிற் பிரளயம் பொருந்த லோகங்
கார்நிறத் தந்த காரஞ் சூழ்தர நாலாம் பூத
மார்வுற வதனுட் பட்டங் காழ்தலு மதனை விட்டே
யேருறத் துலங்கு வேத னிலங்கனல் வகுத்தான் மூன்றாய். (௨)

பகுத்திடு மூன்றி னொன்றே பார்த்திபர்க் கினிய தாகுந்
தொகுத்திடு மிரண்டே சூரி யன்சுசி யழல தாகும்
வகுத்திடு மூன்றாண் மாக்கள் வயிற்றுத ராக்கினி யாகு
மிகுத்தவிந் தனமும் வேண்டா விவற்றைவே றுளியொவ் வாதால். (௩)

சுல்லிய வெழுந்த பார்த்தி பாக்கினி தோயத் தோயு
மொல்லையின் மின்னு ரூபம் வயிற்றுதராக் கினிய தற்கே
வில்லொளிப் போலு மாணுக் கினிப்பெயர் மேவும் விண்சே
ரெல்லின்மண் டலத்திற் றேன்றுஞ் சுசியழ லேமுக் கூறும். (௪)

கதிரவ னடையக் கங்குற் காலைமுக் கூற்றி லொன்று
விதமுறு பார்த்தி பாக்கி னியினொடு மேவிப் பின்னு
முதயமாம் போழ்தி லந்தச் சுசியழ லுடனே கூடுங்
கொதியழல் கூட லாலே கூர்பகற் பிரகா சிப்பன். (௫)

ஆதவன் காந்தி கங்கு லழலுடன் மருவ லாலே
சோதிபெற் றிலங்கு மத்தீச் சூரியற் கோத லாலே
யோதிய பகற்போ தெல்லா முட்டிணம் பொருந்தும் வெய்யோன்
கேதமி றக்க ணய னத்தினிற் கிரணத் தாலே. (௬)

வானநீர் பொழிவ னுத்த ராயணம் வந்த போழ்திற்
பானுவி னிடவதி னங்கி பருத்துயர் கும்பம் போலே
தானுருண் டிருந்தே யாறு சமுத்திர மடுக்கள் கூவத்
தானநன் னீர்க ளெல்லா மருந்துவ வூரி யென்றும். (௭)

ஆயிரங் கதிர்க ளாலே மழைபனி யழலும் வெம்மை
யேய்வுறப் பொழிவ னந்தக் கிரணத்து ளிலங்கு நானூ
ரேய்விலொண் கிரண நானு வகைபெறு முருவ மாகி
மேயசந் தனங்க ளென்றும் விளங்குமத் தியங்க ளென்றும் (௮)

மருவுகோ மனங்க ளென்றும் வளரமு தங்க ளென்றுந்
தருபெய ராகி நீர்கார் தன்னொடு பொழியு முன்னூ
றெரிகதிர் பனியைப் பெய்யு மிவற்றினுள் மிக்க சோமன்
கிரகங்க ளுடுக்கட் கெல்லாங் கெழுமிய குளிர்ச்சி செய்வன். (௯)

இக்கிர கங்க ளின்பேர் மத்திய மிருதி னிப்பின்
மிக்கவா ரிவத்தி னோடு விசுவபி ருத்தி நீடு
சுக்கிலங் ககுப மென்றே சொல்லுவர் முன்னூ ருருகுந்
தக்கவெங் கிரணந் தானே யுபட்டிணந் தன்னைப் பெய்யும். (௧0)

வானவர் பிதிர்க்கள் பூமின் மானிடர் தங்கட் கெல்லாந்
தூநிற வமுத மிக்க சுதைப்பர ரிவைக ளாலே
பானுரட் சிப்பா னுளும் பகரிள வேனி லோடு
மூனமின் முதுவே னிற்கா லத்தினு முயர்முந் நூறுய். (௧௧)

பகர்கிர ணங்க ளாலு மெறிப்பன் பின் பாய் நா னூறுய்
நகுகிர ணங்க ளாலே நண்ணுகார் கூதிர்க் கால
மிகுமழை குளிருண் டாக்கு விப்பன்பின் முந்நூ றுன
தகுகிர ணங்க ளாலே சாரிரு பனிக்கா லத்தும். (௧௨)

சுதைபயி ரமுதந் தானுந் துலங்கவுண் டாகச் செய்வன்
சிதைவிலா முப்பான் மூன்று கோடியாந் தேவர்க் கெல்லாம்
புதியநற் புசிப்பு நல்கிப் புவிமுத லுலகுக் கெல்லாம்
விதிபெறக் கிரணந் தன்னல் வெய்யவ னருளு வானுல். (௧௩)

அரியவிக் கிரணந் தானே யளவினு யிரங்க ளாகி
விரிவுறு வெம்மை கூர்ந்து வெய்யவன் மண்டி லந்தான்
கிரகநட் சத்தி ரங்கள் கிளர்மதி யாதிக் கெல்லாம்
பரவுகா ரணங்க ளாகும் பகர்வெள்ளி மதிக்கெஞ் ஞான்றும். (௧௪)

துலங்குகா ரணம தாகுஞ் சுழுமுனைக் கிரணந் தேய்ந்து
கலங்கிய மதியை யீரெண் கலைகளாய் நிரம்பச் செய்யு
மிலங்கரி கேச மென்னுங் கிரணமே ருடுக்கட் கெல்லாம்
பொலங்கொள்கா ரணம தாகும் புகல்விசு வகன்ம னென்றும். (௧௫)

கிரணமே புந்திக் காகுங் காரணங் கிளர்ந்து தோன்றி
யருணமா யமையும் விச்சு வாவசு வெள்ளிக் குஞ்சீர்
பெருகுசம் வர்த்த னஞ்செவ் வாய்க்குஞ்சட் டப்பேர் பெற்று
மருவுபொன் னுக்குங் கார ணம்மென வழுத்து வாரால். (௧௬)

சாற்றுபு மான னென்னுங் கிரணமே சனிக்கெந் நாளும்
போற்றுகா ரணமா மென்ப புகன்றகா ரணத்தி னாலே
தோற்றிய தேய்வொன் றின்றி விளங்கிடுந் தொன்மை யாலே
யேற்றுநட் சத்தி ரங்க ளெனப்பெய ரிசையு மாலோ. (௧௭)

அனந்தநட் சத்தி ரத்தின் மண்டிலத் தருக்க னெய்தித்
தினந்தொறு மவற்றிற் சேர்ந்தவ் வுருவமே சிறக்கச் செய்தா
னனந்தலை யுலகிற் றன்ம மியற்றிவா னுலக நண்ணு
மினந்தரித் திருத்த லானு மியற்கைவெண் ணிறத்தி னானும். (௧௮)

தாரகை யெனப்பேர் பெற்றுத் தயங்கின வுடுக்க ளிந்து
சூரியன் மரபிற் றோன்றுஞ் சுடரிலை வடிவேல் வேந்த
ராதவன் காந்தி தானே யறைந்ததீ திதியா மென்ப
பேரொளி யிருத்த லாலே யிரவிபேர் சவிதா வென்ப. (௧௯)

வெண்மையோ டமுத மிக்காய் மேன்மையாங் குளிர்ச்சி யாலும்
வண்மைசே ருவகை யாலு மதியைச்சந் திரனு மென்ப
திண்மையாஞ் சோமன் வெய்யோன் மண்டிலந் திரண்ட காயத்
துண்மைசே ரொளியி னேடும் விளக்குமிவ் வுலக மெல்லாம். (௨0)

தரணியி லுதித்துத் தத்த முறையிற்சற் கரும மாற்றி
வரமுறக் கதிரி ரண்டின் மண்டிலத் துறைவோர் தம்மைக்
கருமதே வதைக ளென்ப கருதுமன் வந்த ரங்க
ளருகுறும் போழ்தில் வெய்யோ னுதியாங் கிரகம் யாவும். (௨௧)

தங்கடா னத்தைச் சார்வர் சாற்றிவர் தானம் யாவு
மங்கிய பிரளை யங்கள் வருமள வினுந்தா னண்ணுந்
துங்கமன் வந்த ரஞ்சேர் தொறுமதற் குரிய தூயோ
ரங்குறு வோர்கள் போய தானத்தை யடைகு வாரால். (௨௨)

துலங்குகு ரியனே யென்றுந் தூயநற் றேவ னென்று
மிலங்குசெங் கதிரைச் சொல்வ ரியல்விதுத் திதிக்கே பெட்டாய்ப்
பொலங்கெழு மதலை யென்றுந் தருமபுத் திரனே யென்றுஞ்
சலந்தவிர் துதிமா னென்றுஞ் சார்சோம தேவ னென்றும். (௨௩)

சந்திரன் றன்னைச் சொல்வர் தயித்தியர் குருவே யென்றும்
வந்தசுக் கிரனே யென்று ம்ருவுபார்க் கவனே யென்றும்
பந்தமில் வெள்ளி தன்னைப் பகர்வர்பண் ணவர்க டங்கட்
கந்தமில் குருவே யென்று மருடேவ சுதனே யென்றும். (௨௪)

அங்கிராச் சுதனே யென்றுஞ் சுரையையா சிப்போ னென்றும்
பொங்கழல் வியாழந் தன்னைப் புகலுவர் புதனை மிக்காய்த்
திங்கடம் புதல்வ னென்றுஞ் செறிமனோ கரனே யென்றும்
பங்கமி லாமற் சொல்வர் பழுதறு மிரா குதன்னை. (௨௫)

அக்கினி யென்று மிக்கா யமர்ந்திடு விகேச னென்றுந்
தொக்கபேர் சொல்வர் பின்னுந் துலங்குநட் சத்தி ரங்க
டக்கதாட் சாய ணிப்பேர் தரும்விருட் சங்க ளென்று
மிக்கதாய்ச் சொல்வர் விண்ணில் விளங்கிய கேதுதன்னை. (௨௬)

புகழுஞ்சொற் பானு வென்றுஞ் சிங்கிகை புதல்வ னென்றுந்
தகைபெறு பூத சம்போ தனனென்று மசுர னென்றுந்
திகழ்மதி யிரவி நக்கத் திரங்கிர கங்க டம்மி
லகமுறன் போடு கூடு மபிமானி யென்றுஞ் சொல்வார். (௨௭)

தானங்க ளோடு தானத் தபிமானி யான தேவ
ரேணைய விணங்கச் சொற்று மிரவிதன் கிரண மங்கி
போனிறம் பொருந்து மிந்துப் புன்னிறம் பொருந்தும் புந்திக்
கானதொர் கிரண மொன்றே யதைப்புட்டி யென்பர் மாதோ. (௨௮)

குருவுக்குக் கிரண மைந்து கூர்புதற் கிரெட்டேசொ
லரியமங் களனுக் கொன்பா னறைசனிக் கீரா றுகும்
பெருகிய கிரண மென்பர் பிறங்கிரா குக்கே துக்க
டுரிதமி லான்மா வுக்குத் துக்கத்துக் கிருப்பா மன்றே. (௨௯)

அலரிமண் டிலத்தி னீள மொன்பதா யிரமா மன்றி
யிலகிட மிருபத் தேழா யிரமியோ சனையா மென்பர்
நிலவுமண் டிலந்தான் முன்னர் நிகழ்த்துறு மதற்கி ரட்டி
புலமதி தனக்கொப் பாகிப் பூமிதன் னிழலி னாலே. (௩௦)

மறைத்துமே யிரவி யுற்ற மண்டிலங் கடந்து திங்க
ளுறைத்தமா மண்டி லத்தி லுறைகுவ னிடங்கள் கங்கு
னிறைத்திடு மிருள்போ லாகு நிலவவன் காந்தி தன்னாற்
பிறற்கதி யாசத் தாலே பெயரேசொற் பானு வென்பர். (௩௧)

சந்திர னகல நீளந் தனிற்பதி னாறி னென்றே
நந்தலில் புகர வற்கே நாட்டிய முக்கால் வாசி
வந்ததோர் குருவ வற்கே வழங்கிய முக்கால் வாசி
பந்தமில் செவ்வா யோடு சனிக்கெனப் பகர்வ ரன்றே. (௩௨)

மங்களன் சனிக்கு முக்கால் வாசியே புதன்முன் னோது
துங்கநட் சத்தி ரத்தின் மேற்சொரு ரகையு லோகந்
தங்குமைஞ் ஞூற்று நாற்பத் தைந்துயோ சனையா நாப்பண்
பொங்குநட் சத்தி ரத்துக் கொருகதிர் புதனைப் போலாம். (௩௩)

ஒத்ததா ரகையின் சேணே யொன்றரை யோச னைத்தாந்
தத்துதா ரகைக்கு மேலே கோடியாய்ச் சனிசெவ் வாய்பொன்
மெத்தவு மந்த மாகி விளங்குறச் சஞ்ச ரிப்பர்
பத்தியா யவர்க்குக் கீழே பகர்புத னவர்க்குக் கீழாய். (௩௪)

சுக்கிர னவர்க்குக் கீழே துலங்குசந் திரன்று னித்தஞ்
சக்கர வேக மாகச் சஞ்சரித் திடுவ னப்பாற்
றொக்கநட் சத்தி ரத்தின் றொகுதிதா ரகைக்கு மாகு
மிக்கவிக் கிரகத் தின்கீழ் வெய்யவன் சஞ்ச ரிப்பான். (௩௫)

வெய்யவ னுலகின் மேலே சந்திரன் விளங்கு வான்மேற்
றுய்யநட் சத்தி ரங்க டுலங்கிடு மீது புந்தி
மையுறு புந்தி மீது புகர்மிசை மன்னு செவ்வாய்
வெய்யவ னுலகின் மேலே தேவர்தங் குருவே யாகும். (௩௬)

தேவர்தங் குருவின் மீது திகழ்சனி யுலக மப்பாற்
பாவக மானசத்த விருடிகள் பதியே யப்பான்
மேவருந் துருவ னப்பால் விளங்கிய சுவர்க்க மாகுந்
தாவுமிக் கிரக லோகந் தனக்கிடை வெளியைச் சாற்றின். (௩௭)

யோசனை பகரி ரண்டா யிரத்தொரு நூற தாகு
மாசறு கிரகஞ் சோம னலரிநட் சத்தி ரத்தின்
றேசுறு மடைவி லேசஞ் சரித்துமே திகழ்வ ரின்னோ
ரேசறு நீக்கங் காணார் கூடியே யிருப்ப ரென்பர். (௩௮)

பூமிவித் தாரந் தீவு புணரிநன் னதிபொ ருப்புக்
காமுறு வருடஞ் செய்ய கதிருலோ காதி லோகந்
தாமிவை சிருட்டித் தாட்டுஞ் சங்கர னிந்த மேன்மை
யேமுற விரிவாய்ச் சொன்னே மிருசுட ராதி யெல்லாம். (௩௯)

வானுறு கதியுஞ் சோதி சூக்கும வடிவ மாந்த
ரூனுறு கண்க ளாலே யோர்வதற் கரிய தன்றே
ஞானநல் லறிவு கல்வி நயப்புறு விரதம் வேள்வி
மோனமெய்த் தவமும் வல்ல முனிவர்காள் கேண்மி னென்றான். (௪0)

கருங்கடன் முகட்டிற் றோன்றிக் கவின்மரக் கலத்தி னெற்றி
யொருங்குறு முயிர்கள் யாவுங் காத்தளித் துளுற்று நின்ற
பெருங்கதி ரிரவி மைந்தன் பிறங்குவை வச்சு தன்று
ளிருங்களி களித்துக் கேட்ப வெழின்முக மினிது நோக்கி. (௬௪)

இன்னன வுரைத்த யாவு மியன்மச்ச புராணந் தன்னின்
மன்னிய பூருவ காண்ட மாமத்தி யாய லக்கம்
பன்னிய நூற்றுப் பத்தி னூன்குறு பதிகத் தோடு
முன்னிய விருத்த மூவா யிரத்தொகை முடிந்த வாமால். (௬௨)

கள்ளவிழ் துளவத் தண்டார்க் கவின்பெற வணிந்து செங்கேழ்
வள்ளமென் கமலப் போதின் மாதினை மார்பில் வைத்த
புள்ளுவா கனன்றான் மச்ச ரூபத்திற் பொருந்தா நின்று
தெள்ளிதி னுரைத்த வண்ணஞ் செப்பினன் சூதன் மாதோ. (௬௩)

நூற்றுப் பதினான்காவது

புவனகோசசமாத்தியத்தியாயமுற்றிற்று.

ஆககாண்டம். ௧. இ. படலம். ௧௧௪ இ.

திருவிருத்தம். ௩௦௧௫.

பூருவ காண்டம் முற்றிற்று.

உ த் த ர கா ண் ட ம்

முதலாமத்தியாயம்

இரணியகசிபுவரமடைந்த வத்தியாயம்

தத்துவங் கடந்து வேத சாத்திரந் தமக்கு மெட்டாத்
தத்துவ பேத மாரு மைந்தெழுத் துருவாத் தோன்றி
யொத்தசிற் பரமா யோரு மணுவினுக் கணுவா யோங்கும்
வித்தகப் பரன்பொற் பாத விரைமலர்க் கன்பு செய்வாம். (௧)

திருப்பொலி நைமி சத்திற் சிறந்திடு சவுன காதி
பொருப்படு தவத்தோர் யாரு முவந்துசூ தனைநேர் நோக்கி
மருப்பொலி துளவ மால்வை வச்சுத மனுவுக் கன்பாய்
விருப்பொடுத் தரகாண் டத்தை விளம்புமா விளம்பி டென்றார். (௨)

என்றலு முனிவர்ப் பார்த்தாங் கியம்புவான் சூத னீவிர்
நன்றிது வினவ லுற்றீர் நறைவிரி துளவத் தாம
வன்றிறன் மச்ச மாலை வணங்கிவை வச்சு தன்றான்
வென்றிகொ ணார சிங்கம் வீறுடுற் பவித்த வாறும். (௩)

வரிவிழி பாகத் தெம்மான் வயிரவ சொரூப வாறும்
துரிதமி லாக்க லாபித் துவம்பெற்ற வாறு முன்னர்த்
திரிபுர தகனஞ் செய்து தேவரைக் காத்த வாறும்
விரைவினிற் சரிதை நான்கும் விளம்புதி யென்ன மாயன். (௪)

கதிர்மகற் குரைத்தான் முன்ன மிரணிய கசிபென் றோது
மதியிலி வீறை மாய்க்க மாநிலத் தரும மோங்கச்
சதுமறை புகழு நாரா யணனெனுந் தரும மூர்த்தி
யதிர்கழ லிரணி யன்சே யானநற் பிரக லாதன். (௫)

ஆற்றல்சேர் மாயன் பாதாம் புயங்களே யரண லாம
லூற்றம்வே றில்லை யென்ன வுணர்ந்திடும் படியி னாலே
நாற்றிசை யோரும் போற்ற நரசிங்க மூர்த்தி யாகத்
தோற்றியன் னோனை நீங்காத் துக்கசா கரத்தை நீக்கி. (௬)

அருள்புரிந் தமரர் மோனத் தருந்தவர் முதலா னமாக்க
ளிருளுறப் பரிந்து காத்தான் றிறலிர ணியன்றன் றோற்ற
மருள்கெடு தவஞ்சீர் வாழ்க்கை மாயவ னவனை மாய்த்தல்
பொருள்பெற வுரைப்பன் கேண்மின் புகலுமோர் கற்பந் தன்னில். (௭)

சதுமுகன் மான தத்தி லுதித்திடு சனக ராதி
முதுதவக் குமாரர் மூன்று புவனஞ்சஞ் சரித்து முள்ளார்
பதுமமென் கண்ணன் வாழ்வை குந்தத்திற் படர்ந்து வாச
மதுமலர்ச் சினகரத்தின் வாயிலி னணுகுங் காலை. (௮)

பாலராய் வயதைந் தாரும் பருவமா யாடை யின்றிக்
கோலமா ருடிக் கூறுந் திகம்பர ராகி மிக்காஞ்
சீலமா மரீசியாதி திசைமுகன் மைந்தர்க் கெல்லா
மூலமா மின்னோ ரென்னு முறைமை யறியா வண்ணம். (௯)

விண்டுவின் பாதம் போற்ற விருப்பொடு செல்லுங் காலைத்
தண்டலில் துவார பாலர் செயனொடு விசைய னென்பார்க்
கண்டுநீர் நின்மி னென்னக் கனன்றவர் தம்மை நோக்கிப்
பண்டுள மறையோ னுந்திப் பதுமத்துற் பவிக்கச் செய்தோன் (௧௦)

இராசத குணத்தோ டேய்ந்த் தாமத குணமொன் றில்லாப்
பராபரன் மைந்த சாத்து விதகுணப் பான்மை மிக்கோ
னிராமய னமலன் பாத நிரந்தரஞ் சேவித் துள்ளீர்
தராதலத் ததியு நீங்கித் தணிவின்மோ காந்தத் துற்றீர். (௧௧)

ஆதலால் விண்டு லோக மகன்றுகா தகத்தின் மிக்க
பாதக வசுர யோனி பட்டுறு பால ராகி
நீதியா மறிவு நீங்கு வீரென நடுங்கி நின்றே
யேதமில் குணத்தீர் சொற்ற சாபத்துக் கீறு சொல்வீர். (௧௨)

என்றடி பணித லோடு மிரக்கமுற் றிருவர்ப் பார்த்துத்
துன்றிய மூன்று சென்ம மசுரராய்த் தோன்றிச் செல்வத்
தொன்றிய சனனந் தோறு முரைத்திடு திருமால் கையின்
வன்றிறற் படையான் மாண்டு வருதிர்வை குந்தத் தென்றார். (௧௩)

அவ்வகைச் செனன முன்ன ரருந்தவக் காசி பற்கே
யெவ்வமில் திதிபாற் சன்மித் திரணிய கசிபன் றேன்பின்
செவ்வையி லிரணி யாக்க னெனும்பெயர் சிறந்து தோன்றக்
கவ்வைகொ ளுலகம் யாவுங் கதனத்தாற் செயங்கொண் டாரால். (௧௪)

செயித்தர சாளு நாளிற் செங்கண்மால் வராக மாகி
யெயிற்றினு லிரணி யாக்க னுடலையீர்ந் திடுத லோடுங்
கயிற்படை விடவெஞ் சீற்றத் திரணிய கசிபு சீறித்
தயித்திய குலத்தின் மிக்காந் தந்திரத் தலைமை யோரில். (௧௫)

சிரமிரண் டுடைய மூர்த்தன் றிகியட்ச னமுசி பாகன்
புரமுய ரயக்கி ரீப னில்வலன் புலோமன் போரிற்
சரவலன் விப்பிர சித்தி சம்பரன் சதவா கோடு
வரமிகு சகுன னின்னோர் தங்கடம் வதன நோக்கி. (௧௬)

தந்திரத் தலைவ ரோடு மந்திரத் தலைவர் கேண்மி
னிந்திரன் முதல்வான் றேவர் பகைஞரா நமக்கெஞ் ஞான்று
நந்துகைப் பிடித்த மாய னமக்கெதி ரல்ல னன்றிப்
புந்தியா லின்ன சொஞ்சப் புள்ளுவா கனத்தை யூர்வோன். (௧௭)

48

நம்முனஞ் சமரி லாற்ற ஞடொறுந் தம்மைச் சார்ந்தோர்
தம்முயிர் காத்து மற்றோர் தங்களைக் களைவ னன்றே
னெம்முயிர்த் துணைவ னென்று மெண்ணிலா னேன மாகி
வெம்முனை யிரணி யாக்கன் வீயமெய் வகிர்ந்திட் டானல். (௧௮)

இரும்புவி முதல வெல்லா வுலகையுந் துடைத்து மற்று
மரும்பொருள் யானே யாகி யளிக்கவும் வல்லே னின்னே
சுரும்பிமிர் துளவத் தாரான் கண்டத்தென் சூலந் தன்னற்
றிரும்புரு வண்ணங் குற்றிச் செம்புனற் கடன்க ழிப்பேன். (௧௯)

அரியெனுந் தருவை வீழ்த்தி லகன்றசா கைகளாந் தேவ
ரிரிகுவர் பகையு மில்லை யீண்டியான் றவத்தி னெய்திப்
புரிதவ மியற்றி வேண்டும் வரமெலாம் பொருந்த வாங்கி
யுரிமையின் வருவ னீவி ருயர்குல மறையோர் மற்றும். (௨௦)

தவமகம் விரத மோதல் தானமே முதல யாவும்
புவனியிற் புரிந்தி டாமல் விலக்கிப்போ ரரசர் செய்யு
முவமையி றருமம் யாவு முனற்றிடா தழித்து விண்ணோர்
நவநிதி யங்கள் யாவுங் கவர்ந்தவர் நகர்தீ யூட்டி. (௨௧)

நல்வினை யொழித்துப் பொல்லாத் தீவினை நாட்டு வீர்யான்
சொல்லருந் தவங்க ளாற்றி வருதுணை யென்ன வன்றே
ரல்கலில் பொன்னு டெய்தி யமரர்கோ னகர்தீ யூட்டிப்
பல்வகை மறுகு மாடம் பாழ்பட நூறிப் பின்னும். (௨௨)

எண்டிசைப் பாலர் வைகு மிரும்பதி கவர்ந்தே யிப்பூ
மண்டலத் தரசர் வைகும் பதியெலா மறுக நூறித்
தண்டலை வனங்கண் முல்லை மாநிலத் தலமும் வீழ்த்தி
யண்டருக் கவிக ளூட்டு மகமெலா மழித்து மப்பால். (௨௩)

நாகர்தம் முலகம் வான நற்சுடர் மண்டி லங்கள்
சேகுறத் தகர்த்துத் தாமே செயிர்த்தர சுரிமை பூண்டா
ராகையால் விண்ணோர் நாக ரரும்புவி மலைச்சார் வுற்றுத்
தோகைமா ரோடுந் தோற்று முழைஞ்சினி லொளித்திட் டாரால். (௨௪)

கனற்பொறி சிதறுங் கண்ண னிரணிய கசிபு சீற்றத்
தனற்பொறி சிந்த நீத்தே யாருயி ரிரணி யாக்கன்
றனக்குச்செய் கரும மாற்றித் தம்பிதன் மக்கட் பார்த்து
மனக்குறை யொழிதி ரென்றே சொல்லிமந் தரச்சார் பெய்தி. (௨௫)

கால்விர லிரண்டு மூன்றிக் கைகண்மே னீட்டிக் கண்கண்
மேனுற நோக்கி யங்கி போனிற வேணி தாங்கிச்
சீலமொ டயுத வாண்டு சிறப்புறு தவங்க ளாற்றி
யேனுமாண் டிலக்க நீரின் மௌனமா யிருந்தா னன்றே. (௨௬)

பகர்தவ மன்னோ னாற்றப் பற்பல காலம் வான்றோய்
சிகரியின் முழைக டோறு மொளித்தது தீர்ந்து மீண்டு
மகபதி முதல்வா னோர்கள் வதிந்ததா னவரைச் செற்றே
யகமகிழ் வுடனே தங்கள் பதவியை யடைந்திட் டார்கள். (உ௭)

தானவர் வேந்தன் றன்னுட் பிராணவா யுவைத்த டுத்து
மோனமொ டிருந்து முற்றத் தவத்தினை முயலுங் காலை
யானதொர் பிரம ரந்திரம் வெடித்தழல் கால வீச
வூனமி லுலக மூன்று மூலந்தன்பு கைக ளாலும். (உ௮)

இரணிய கசிபு செய்யுந் தவத்தழ லெழுந்த வாற்றாற்
றிரணதி முந்நீர் வற்றித் திகிரிகள் வெடித்தி ரேழா
மரணுறு புவனந் தீய்ந்தே யவனிக ணடுந டுங்க
முரண்மிகு திக்க யங்க ளெரிந்துமூர்ச் சித்த வன்றே. (உ௯)

வேறு.

விண்ணிற்பொலி குலிசாயுதன் மிகுதேவர்க ளுகர்
மண்ணிற்றவ மறையோர்சித்தர் வருகின்னரர் முதலோர்
நண்ணிக்கதி பெறுசத்திய வுலகத்தினை நாடி
யண்ணிச்சது முகன்சேவடி யடைந்தேயிவை யறைவார். (௩0)

அருள்கூர்கட லாகிப்பெரும் புவனாதிக ளமைத்தோய்
மருள்கூர்தர வுறுமாயையை மறுத்தாண்டெமைப் புரப்போ
யிருள்கூர்மனத் தமர்த்தானவ னியற்றுந்தவத் தழலாற்
பொருள்கூர்தர வுலகம்பல பொடியாய்ப்பொரிந் தனவால். (௩௧)

கதிர்மண்டில மதிமண்டிலங் கணமாயெழு முடுமீன்
வதிமண்டில மிருகோளுறை மாமண்டில நீர்சேர்
விதிமண்டில மிவையாவும் விழுங்கிப்புழுங் கியதா
லெதிர்மண்டிய புகைசூழ்தர வெமக்கேபுக லிலையால். (௩௨)

இனிநீயுறு பதுமாசன முனையேத்திடு மறையோர்
நனிகூர்பசு விவைதீயினி நலியாவண மருளாற்
றனிமாதவ மிகவேபுரி தருவானவ னெதிர்போய்க்
கனிவாயொரு வரயீத்தெமைக் காத்தாள்வது கடனே. (௩௩)

எனத்தேவர்க ளுரையாமுன மெழில்கூர்தரும் வெள்ளை
யனத்தேர்செய்வி மானந்தனி லலர்மேலய னேறி
வனப்போர்மழ விடைமீதினில் வருவோர்பதி னொருவர்
கனத்தேழ்பரி புனைதேர்வரு கதிரோர்கள்பன் னிருவர். (௩௪)

ஓரேழும ருத்தெட்டு வசுச்சாத்திய ரும்பர்
பேரேறிய தேவாதியர் பெருமாதவ முனிவ
ரேதேறுமெண் ணாறுயிர ரியலார்பிதிர் கணங்கள்
தேரேறிவி சுவதேவர் சிறப்பாருமி யக்கர். (௩௫)

வேறு.

அரக்கர்கின் னரர்கள் திக்கு விதிக்குநன் னதிக ளாழி
பரக்கும்வா னுடுக்கள் கோட்கள் பிரமமா முனிவர் பத்தி
கரப்பில்கோ முனிவ ரேழு முனிவர்கந் திருவர் கண்ணுஞ்
சரத்தர மடந்தை மார்கள் பிருகுமெய்த் தக்கனாதி. (௩௬)

மைந்தர்கண் முதலோர் சூழ மனமொருப் படுத்தி யோரைந்
திந்திய மடக்கி நோற்கு மிரணிய கசிபு முன்னர்
நந்திடா தெய்தி யன்னோன் சமந்தம நியம நன்காய்ச்
சந்தத முளுற்று கின்ற பிரமமாஞ் சரியம் யாவும். (௩௭)

நோக்கியுண் மகிழ்ச்சி கூர்ந்து நுவலருந் தவத்தினென்பா
ராக்கைவன் மீக மூடியதனிடைப் பசும்புல் லீறன்
மீக்கிளர்ந் திடலான் மேகம் விழுங்கிடும் வெய்யோ னென்ன
வூக்கமொ டிருந்த மேன்மைச் சமாதிபார்த் துரைப்ப தானன். (௩௮)

அருந்தவக் காசி பற்குத் திதியிடத் தமைந்த மைந்த
விரும்புவித் தலத்தின் மிக்க விரணிய கசிபு நீசெய்
பெருந்தவ மிகவு நன்றாற் பெட்புறு வரங்க ளீதும்
பொருந்தநீ பெறுக வென்று கரகநீர் புரோக்கித் தானல். (௩௯)

தெளித்தலுங் கதிர்கள் கோடி திரண்டுருண் டெழுந்த தென்ன
வெளிப்பட விளங்கிச் செம்பொன் மேனிவச் சிரம தாகக்
களிப்பொடு மெழுந்து நின்று கண்கணீர் சொரிய வங்க
மொளிப்புள கரும்பச் செவ்வா யுரைதழு தழுப்பத் தாழ்ந்தே. (௪0)

மன்னுமுக் குணங்க ளாலு மருவுமுத் தொழின டாத்திப்
பின்னிய வந்த காரப் பிழம்பெனு மாயை நீக்கிப்
பன்னுமூ தறிவை நல்கும் பரமனீ பதக னேற்கின்
றன்னவா கனத்திற் றோன்று மற்புத மறைய லாற்றேன் (௪௧)

ஆயிர மறைக ளாலு மருந்தவக் கிழவ ராலு
மேயவிண் ணவர்க ளாலுங் காண்பரும் விமல வின்றுன்
சேயதாட் கமலங் காணச் செய்ததெத் தவங்கொ லென்று
தூயமந் திரத்தாற் பல்காற் றுதித்தடி தொழுது நின்றான். (௪௨)

நின்றவன் றன்னை நோக்கி நின்றவத் துதியா லுள்ளந்
துன்றமூ துவகை கூர்ந்தாந் துணைவினீ வேண்டும் யாவு
நன்றுற வருள்வா மென்று நவின்று மெய்க் கரத்தா னீவக்
கன்றநீர் கருத்த னாகி யிரணிய கசிபு சொல்வான். (௪௩)

பஞ்சபூ தங்க ளாலும் படியிற்பல் லுயிர்க ளாலும்
விஞ்சுகைப் படைக ளாலும் விண்ணவர் சித்தரா லு
மஞ்சுறு மிடிகளாலு மாதிரத் தலைவ ராலு
மெஞ்சலில் கதிர்க ளாலு மியக்கர்கிம் புருட ராலும். (௪௪)

சங்குசக் கரம்வாள் தண்டு சார்ங்கமோ ரைந்துந் தாங்கித்
துங்கமார் கருட னூர்ந்து துளவமா லமர்செய் போதுஞ்
செங்கண்மால் விடைக டாவித் தீமலி சூலந் தாங்கிப்
புங்கவில் லெடுத்து முக்கட் புராரிபோர் புரியும் போதும். (௪௫)

இறந்திடா திருக்க வேண்டு மிறையவ ரிமையோ ராதி
யறந்தவா முனிவர் சாபமணுகிடா திருக்க வேண்டுங்
கறங்கெனச் சுழலும் போரிற் கைப்படை யெடுத்தோர் யாரும்
புறங்கொடுத் தோட வேண்டும் புத்திசான் மகவும் வேண்டும். (௪௬)

பகலிராப் படியின் வானிற் பகருள்ளிற் புறத்திற் பாணி
மிகநனேக் தவைக டம்மால் வெய்யவன் கதிரா லீர
முகவலர்ந் தவைகடம்மா லுயிரிறந் திடாமை வேண்டும்
புகழ்புய வலிமேம் பாடும் பொருந்துற வேண்டு மின்னும். (௪௭)

படைக்கவும் படைத்துப் பின்னர்ப் பாதுகாத் திடவு மீளத்
துடைக்கவும் வேண்டும் விண்மீன் சோமசூ ரியர்க ளாகக்
கடைக்கனல் வருணன் காலன் கருதிய நிருதி வாயு
விடைக்கொடி யவன்கு பேரன் விபுதர்கோ னிவர்க ளாற்றும். (௪௮)

செயலெலாம் புரிந்தி யானே சிறந்திட வேண்டு மன்றிப்
பயமுறு குரோதங் காமம் பகர்மத மோக மற்றை
யயர்வின்மாச் சரியம் லோப மனைத்தும்யா னாக வேண்டு
மியலுமிந் தியங்க ளைந்து மென்செய லாக வேண்டும். (௪௯)

இவ்வகை வரங்கள் யாவு மீந்தரு ளென்ன வன்னோன்
செவ்விவாண் முகத்தை நோக்கித் தெண்டிரை சுருட்டி யேற்றும்
பவ்வநீர்ப் படியோ ராற்றற் கருந்தவம் பலவுஞ் செய்தா
யவ்வர மளித்தே மென்றே யருளித்தன் னுலகஞ் சார்ந்தான். (௫௦)

சார்தலு முனிவர் விண்ணோர் தளர்ச்சிகூ ரச்ச மெய்திக்
கார்திறத் தவுணர் கோமா னிரணிய கசிபுக் கின்றே
சீர்வர மனேக மீந்தாய் செல்வதெவ் விடத்தின் யாங்க
ளாரிய வுரைத்தி டென்ன வருள்புரிந் தபய நல்கி, (௫௧)

அஞ்சன்மி னவுணர் கோமா னாற்றிய தவத்துக் கேற்பத்
துஞ்சலில் வரங்க ளீந்தா மத்தவந் தொலைந்த பின்னர்
மஞ்சுறழ் மேனி மாயன் வந்திர ணியன்ற னாவி
நெஞ்சுற வகழ்ந்து மாந்தி நீங்குவ னிடுக்க ணென்றான். (௫௨)

தேன்றுளி கமலத் தண்ணல் செப்பும்வா சகங்கள் கேளா
வான்றபே ருவகை துன்ப மடைந்துளத் தனேக மெண்ணி
வான்றிசை புவிபா தாள மால்வரை தவவ னங்க
ளேன்றதம் மிடங்கட் கேகி யிருந்தன ரிறுதி நாடி. (௫௩)

இரணிய கசிபு செய்த தவமிது தவத்திற் கேற்ப
வரணுறு வரங்கள் பெற்ற வடைவிதென் றருக்கன் சேய்க்கு
முரணுடை மச்ச மூர்த்தி மொழிந்தன னென்று சூதன்
றிரணிறை தவத்தின் மிக்க முனிவர்க்குச் செப்பி னனால். (௫௪)

முதலாவது

இரணியகசிபு வரமடைந்த வத்தியாய முற்றிற்று.

இரண்டாவது

விஷ்ணு புருஷபாரசெய வத்தியாயம்.

விட்டுணு புருட பாரசெய மெலாங்
கட்டுரை யாயுரை யென்றெதிர் கழறு
மட்டவிழ் நைமிச மாமுனி வர்க்கே
யெட்டொ டிரண்டறி சூதனியம்பும். (௧)

மலரய னீந்த வரத்தின் மதத்தா
னிலகிய வாள்வலி யிரணிய கசிபே
யுலகடர் துணையை யொறுத்திடு மாலைக்
கொலைசெய்து மூர்பழி கொள்ள நினைந்தே. (௨)

கரிரத துரக பதாதிக ளோடு
முரணுறு விப்பிர சித்தியை முதலோர்
விரிதிரை வாரியின் விம்மினர் சூழப்
பொருவில் சினத்தொடு பொங்கி யெழுந்தான். (௩)

எழுந்து தவத்தின ரெழுதரு மறையோ
ரழுந்துற வவர்புரி யறுதொழின் மாற்றிச்
செழுந்தழ லின்னவி தேவரு ணமல்
விழுங்குவல் யானென வீர மறைந்தே. (௪)

கட்டுரை செய்து ககன மிசைப்போய்
விட்டொளிர் பொன்னுல கத்தினின் மேவி
மட்டவிழ் மாலை வலாரியை வாவென்
றொட்டு தயித்திய தூதனை யுய்த்தான். (௫)

தூத னுரைத்தலு மகபதி துண்ணென்
றேதமில் குருவொடு மந்திர மெண்ணி
யோதுதி யென்ன வின்றேனுயி ருண்பான்
மாதவ னன்றிநம் மான்முடி யாதால். (௬)

ஆதலின் முன்ன மடைந்தவ னேக்கண்
டோதிய மாமுக மன்சில வோதி
நீதியி னட்ட னெறித்திற னென்றே
மூதறி வின்குரு வெண்ணி மொழிந்தான். (எ)

குருமொழி கேட்டிறை கோட்டொரு நானகின்
திருவயி ராவத முச்சயிச் சிரவா
மருவுதி லோத்தமை முதலர மகளிர்
தருநவ நிதியொடு சார்ந்தெதிர் கண்டான். (அ)

வேறு.

எதிர்கொண்டு வந்த மகவானை நோக்கி யிளமூர லாடி யயிரா
வதமென்று ரைக்கு மலைமீதி வேறி யரமாதர் முன்பு மயில்போற்
சதிகொண்ட தாள முறையா னடிக்க மணியான் றருக்கள் புடையே
நிதிமொண் டிரைக்க விமையோர் துதிக்க நெடுவான நாடு வலமாய். (கூ)

வந்தேதன் வீர படமொன்று நாட்டி மகவானை யின்று முதல்யான்
றந்தே னுனக்கிந் நகரென் றறைந்து தனதானை செல்ல நிறுவிப்
பிந்தாத சேனை புடைசூழ முன்பு பெருவானி னோரும் வெருவ
நந்தாத பேரி துடிபம்பை தாரை நவில்திண்டி மங்கண் முதலாய் (க0)

மிகுபல் லியங்க ளதிரா முழங்க விரிவான் மறைத்த கவிகை
திகழ்திங்கண் மான விருபாலும் வந்து செறிசா மரங்கள் புரளப்
புகழ்கின்ற தெற்கின் யமனூர் புகுற்று போர்செய்து கொள்வ னெனவந்
நகர்நாடு காலே யமதூத ரோடு நடுமேதி யேறி நடவா. (கக)

பொருகால தண்ட மொடுகாலன் முன்னர் பொருவீரர் சூழ வெதிரே
வருதானை யோடு மயிராவ தத்தின் மிசையேறி வந்த வவுணன்
பெருவான் முசுண்டி யெறிபாசம் வென்றி பிறழ்பிண்டி பால மயில்வே
திரிசூல மாதி படையே துரந்து சிலைகோலி யம்பு பொழிய. (கஉ)

எதிராகி வந்து படையாவு நூறி யிடிபோன் முழங்கி யிருவா
னதிரர நடுங்க வுறுகால தண்ட மசுரேசன் மீதில் விடவே
நிதியா னிறத்த னுரனூடு பட்டு நெடுமா மலைக்க ணெறியு
முதிர்பூதி யுண்டை யெனவே புகுந்து முனைபோய் வெருண்ட நடுவன். (கங)

இனியாது செய்வ மெனும்வேளை வானி னெழுவாணி யிந்த வவுணன்
றனியாண்மை யத்த மறியாய்கொ லின்று சமராட னன்ற தலைவான்
முனியாது போதி யெனவே மொழிந்த மொழிதா னுணர்ந்த வுடனே
துனைவோடு மும்ப ரிடையே கரந்து துணையோடு தூத ருடனே. (கச)

இடிபோன் முழங்கு பகடோ டொதுங்கி யிகல்வீறு சண்ட னகலக்
கொடியோ னிகழ்ந்து நமனோடல் கண்டு குறுமூரல் கொண்டு நமனூ
ரடிதாழு மொய்ம்ப ரரசாள நல்கி யளவின்றி வெம்பு நரகின்
மடிவான பேரை யுயாதேவ ரூரின் மகிழ்கூர வின்ப மருளி. (கரு)

வேறு.

நடந்துபோய் வருண னூரி னல்லது தரைமுன் றூண்டித்
தொடர்ந்துபோர் செய்வ னென்றே சொல்லலும் வருணன் மைந்த
ரடர்ந்தநூற் றுவர்க ளோடு மளப்பருஞ் சேனை யோடும்
படர்ந்துபோர் செய்ய வன்னோன் விடுபடை பாசம் யாவும். (கசு)

துணித்தவன் சேனை யெல்லாந் துறந்துபோ ராற்ற லோடும்
பிணித்தகைப் பாசம் போக்கி வருணன்பின் கொடுத்துப் போக
வணித்தயித் தியரிற் சில்லோர்க் கந்நக ரளித்து வாசக்
கணித்தொடை வாகை சூடு மிரணிய கசிபு பின்னும். (கஎ)

வடதிசைக் குபேர னெய்து மளகைமா நகர்வந் தெய்தித்
தொடருறும் வெம்போ ராற்றச் சுபாரிசன் நேகது மாலன்
றிடமுடை மாணி பத்திரன் செயன்விறற் சுகேது வென்னும்
படர்தரு பஞ்ச சேனு பதியொடு மளகை வேந்தன். (கஅ)

புட்பக மான மேறிப் போரணி வகுத்துப் போற்றுர்
கட்பொறி யனல்கள் சிந்தக் கடிந்துபோர் செய்யு ஞான்று
திட்பமா யசுரர் வேந்தன் றிறலிர ணியன்கோ பித்துப்
பெட்புறு தவத்தாற் பெற்ற பிரமனத் திரமும் விட்டே. (ககூ)

மற்றுள படைகள் யாவு மாரிபோல் வழங்கி முன்ன
ருற்றுள வியக்கர் சேனை மடிந்துடைந் தோடச் செய்து
பெற்றுள வலியி னூற்கு போனைத் தலைவ ரோடும்
பற்றினன் பற்றி யந்த வளகையிற் படர்ந்து சென்றே. (உ0)

சரக்கறை கவர்ந்து பற்ப நிதிசங்க நிதிக ளாதி
திரத்துறு நிதியோன் பானுஞ் செங்கையிற் பற்றி யாங்க
ணுரத்துறு மவுணர்ப் பார்த்தவ் வூரினைப் புரப்பி ரென்று
கரத்தினி தனிதது மிக்கா மிரணிய கசியே யென்போன். (உக)

மணிபல குயிற்றி மாட கூடங்கள் வனப்பு வாய்ந்திட்
டணிபெறு வீதி மிக்க நகரசு ரேந்தி ரத்திற்
கணிதமில் சேனை சூழக் காவல ரடிகள் போற்றத்
திணிபுயத் துலக மூன்றுந் திகந்தமும் பரித்தா னன்றே. (உஉ)

பரித்தர சாளு நாளிற் பண்ணவர் முனிவர் மண்ணி
லுரித்தர சாளும் வேந்தர் முதல்வரை யொறுத்தும் பொல்லாச்
சரித்திரம் விளைத்த யாவுஞ் சக்கர பாணி கேட்டுப்
பிரித்தவன் றிறத்தை மார்பம் பிளப்பனென் றுளத்தி னெண்ணி (உ௩)

சங்குசக் கரம்வாள் தண்டஞ் சார்ங்கமிவ் வைந்துந் தாங்கி
மங்குல்போ னிறந்த னாகி மணிமுடி வளைந்து மேரு
வுங்குறை படவே நீண்ட வுருவொடு குரூர ரூபந்
தங்குமோர் புருடன் றன்னைத் தானென வகுத்தன் னோர்க்கே. (உச)

படைக்கல மனேக நல்கிப் பவனமார் சிறையான் மேருப்
புடைத்திட லலிபெற் ருேங்கும் புள்ளர சென்று நல்கிக்
கடைக்கணித் தவனை நோக்கிக் கருதசு ரேந்தி ரத்தி
னிடைப்புகுந் தவுண ரோடு மிரணிய கசிபென் போனை. (உ௫)

போர்செய்வா னத்துப் போரிற் புடைத்தவனுவி யுண்டு
தாருறு வாகை சூடிச் சார்ந்திடு கென்ன மிக்காம்
வீரமே விளக்கு மந்த விட்டுணுப் புருடன் ருனுங்
கார்நிறத் தண்ணற் போற்றிக் கைதொழு தடியிற் ருழ்ந்தே. (உ௬)

வலஞ்செய்து விடைகொண் டேோங்கு வயினதே யன்மீ தேறிப்
புலங்கொண்டு புடவி வானம் போற்றிய திசையோ டண்டங்
கலங்கிட விருதோள் கொட்டிக் கடையுகத் திடிபோ லார்த்துத்
துலங்கசு ரேந்தி ரத்திற் றுணுக்கெனத் தோன்றி ஞுல். (உ௭)

வேறு.

தோன்றலு மசுரர்க டிரப்பி யார்த்துவில்
லூன்றிநாண் கொழுவிவெம் பகழி யூழியிற்
கான்றிடு மழைனெச் சொரிந்து கார்நிறத்
தான்றபொன் மேனிய னருகிற் சுற்றிஞர். (உ௮)

வேறு.

கோதண்டம் வளைய வாங்கிக் குலவரைத் திணிதோண் மார்பன்
மூதண்ட நடுங்க வார்த்து மொய்கணை மாரி சிந்தி
யேதண்ட லாரைக் கொன்று னிரணியன் றன்பா லொற்றர்
காதண்டர் வரலா றெல்லாங் கடிதிற்சென் றுரைத்தா ரன்றே. (உ௯)

உரைத்திடு மொற்றைப் பார்த்தன் றுரமிலா தோடிப் போன
விரைத்துணர்த் துளவ மாயன் வேற்றெரு வனைத்தன் போல
வரைத்தொரு சிலையு மம்பும் வண்டுஞ்சக் கரமுந் தண்டு
நிரைத்தவா ளோடு மென்முன் புள்ளினேர் வித்தா னன்றும். (௩0)

என்றுகை புடைத்து நக்குப் புடையமர்ந் திருந்த சேனைத்
தன்றுணைத் தலைவர் போர்க்குச் சார்கதுண் ணெனவென் றுர்த்து
வென்றிவிற் படைக டாங்கி விரைந்துறு தேர்மே லேறி
வன்றிறல் வயவர் சூழ வந்தெதிர் கொண்டு நின்றுன். (௩௧)

எதிர்த்திடுங் காலை விட்டுணு புருடன்றனெழிலை நோக்கி
மதித்திடு மசுரர் கண்ணுற் பார்த்துள மறுகிக் கைகள்
விதிர்த்துறு திசைகெட் டோட வீரரில் வீர ராஞேர்
கதித்தவில் வளைத்துப் பாணங் கணிப்பில வெய்தா ரன்றே. (௩௨)

சக்கர முசுண்டி வைவாள் பரிகஞ்சார் முசலங் குந்தந்
தொக்குறு வளைகள் பிண்டி பாலங்கூர் துகடீர் சூல
மிக்கவேல் பாசந் தோட்டி வெவ்விட நாக பாச
நெக்குறு தடர்ந்து சுற்றி நெடியவன் மேனி தூர்த்தார். (௩௩)

தூர்த்திடு படைகள் யாவுந் துகளுறப் பொடியாய் நூறி
யார்த்தெதி ரசுரர் சேனை யடங்கிட வகலங் கைகால்
கூர்த்துதிர் துண்ட மாகக் குறைத்தனன் பழி தூண்டிப்
பார்த்துயி ருள்ளோர் தப்பிப் படர்ந்தன ரசுர ரெங்கும். (௩௪)

வேறு.

தங்கள் சேனை தலைதடு மாறலும்
புங்க மார்விட் டுணுபுரு டன்கரத்
துங்க மார்படை வீறுறு தொன்மையுங்
கங்குன் மேனித் தலைவர்கள் கண்டனர். (௩௫)

தூமக் கண்ணனுஞ் சொற்றிரி மூர்த்தனுஞ்
சேமத் தேருறு விப்பிர சித்தியு
நாமத் தார்புனை சம்பர னுல்வரும்
வாமப் பாலும் வலத்தினுஞ் சூழ்ந்தனர். (௩௬)

கமலத் தோன்படை நேர்புகைக் கண்ணனு
மமலப் பாசு பதப்படை யாரழ
லுமிழ்நற் கண்ணுடை யோர்திரி மூர்த்தனும்
விமலத் தாற்கவு மார மெனும்படை. (௩௭)

திகழ்வ யப்பரி விப்பிர சித்தியுந்
துகள்ப டச்சுடு தொன்மை யழற்படை
புகழ்ப டப்பொரு போர்ச்சம் பரனுமே
மகிழ்வொ டுற்றிவை மாலுற விட்டனர். (௩௮)

விட்டிடு படைகள் யாவும் விட்டுணு புருடன் மீதிற்
பட்டுடல் பழுது செய்யப் படாமையா லுதிர்ந்து வீழ்ந்த
கட்டுயர் கலுழன் மேல்விட் டிழிந்துகார் வண்ணன் கையாற்
றுட்டநால் வரையும் பற்றிச் சுழற்றியே யறைந்திட் டானால். (௩௯)

அறையவந் நால்வ ராக மயர்ச்சியொ டமர்ந்த வாங்க
ணிறைவனு மிரணி யன்று னிருவிழி கனல்கள் சிந்தப்
பொறைகொடன் றேரை விட்டுப் பூமியிற் குதித்துத் தண்டா
னிறைமுகில் வண்ணற் கிட்டி நிறத்தடித் திட்டா னன்றே (௪0)

நிறத்தடி படலு மாய னுருக்கொடு நின்ற நோன்றாட்
டிறத்தமர் புருடன் வீழ்ந்து சினவலி யிரணி யன்றன்
மறத்தெதிர் முன்ன நிற்கின் மன்னுத லரிதென் றெண்ணிப்
புறத்துடல் கொடுத்தே யோடிப் புகுந்தனன் வைகுந் தத்தில். (௪௧)

கருங்கடல் வண்ணன் ருளிற் ருழ்ந்துகை முகிழ்த்து நின்று
பொருங்களத் தசுரர் கோமான் போர்வலிப் பெருமை யாவு
மொருங்குற வுரைத்துப் பட்ட பாடெலா முள்ளத் தெண்ணி
மருங்கொரு புடையி லுற்று மனமடித் திருந்தான் மாதோ. (௪௨)

விரைத்துண ரலங்கல் விட்டுணு புருடன்றன் பார்செயத்தைத்
திரைகட லுதித்த மச்ச வடிவுறு செங்கண் மாய
னுரைத்தனன் முன்னம் வைவச் சுதமனு வுவந்தா னென்று
தரைக்குறு முனிவர் கேட்பச் சாற்றினன் சூதன் மாதோ. (௪௩)

இரண்டாவது

விட்டுணு புருடபார செயமுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௯௭.

மூன்றாவது

இரணியகசிபு சபாப்பிரவேச வத்தியாயம்.

எதிர்வலி யசுரர் கோமா னிரணிய கசிபு வானிற்
சதுரமார் சுதன்மை யென்னுஞ் சபாப்பிர வேசந் தன்னை
முதுதவ முனிவர் கேட்ப முதன்மச்ச வடிவின் மாயன்
கதிர்மகன் மனுவுக் கன்று கழறுமா றுரைப்பான் சூதன். (௧)

விட்டுணு புருடன் றன்னை வென்றபி னசுரர் கோமா
னெட்டுறு திசைக்கள் காக்கு மிந்திர ணாதி யோரைக்
கட்டியே கொணர்மி னென்னக் காலனு தரைநேர் வீரர்
துட்டரிற் றுட்ட ரானோர் கரிரத துரகத் தோடும். (௨)

விடைகொடு வானி னேகி விண்ணவர் கோனை வென்றார்
புடையுறு மமர ரோடும் புரந்தர ளேடிப் போக்கப்
படைவிழி யரம்பை யாதி பணிமொழி மாதர் தேனுத்
தொடைமலர்த் தருவெள் ளானைத் துரகத முதலி யாவும். (௩)

பிடித்தசு ரேந்தி ரத்திற் கொணர்ந்துபின் றிசைகள் யாவு
மிடிக்குர லசுரர் வென்றே யிரும்பக ரேர்தி மேற்கிற்
கடற்கிறை வருணன் வாயுக் கருதிய நிருதி மற்று
மடக்குறு குபேரன் விஞ்சை வல்லவ ரியக்க ரோடும், (௪)

சித்தர்வித் தியாத ரப்பேர் சிறந்தகுய் யகர்க ளுகை
ரொத்திடு புவிபா தாள முயர்ந்திடு வான மூன்றி
லெத்தனை சாதி பேதத் திறைவர்க ளெங்கெங் குண்டோ
வத்தனை தேயம் யாவும் வென்றன னசுர வேந்தன். (௫)

அவர்களை வென்ற பின்ன ரன்னவ ரரசி னாட்சி
புவனியெண் டிசைபா தாளம் புரந்திட வசுரர்ப் போக்கித்
திவளொளி யிரவி யிந்திர னக்கினி திகழும் வாயு
வுவமையில் வருணன் சோமன் குபேரனின் னோர்கள் பண்பு. (சு)

நடத்திடு முரிமை தானும் நாண்மலர்த் தருக்க ளோங்கித்
திடர்ப்பமி சுவர்க்க லோகத் திந்திர னுறையு ளெய்திக்
கடக்கரு மாணை செல்லக் கருதிவீற் றிருந்தா னந்த
விடத்துறு வளம்வி யப்பா மெழிலுறு பவளத் தாலே. (எ)

படிகட்டி மரக தத்தாற் றளவிசை பரப்பிப் பித்தி
வடிவுற்ற படிகத் தாலே வைடூரிய வனப்பிற் றூண்க
ளடியிட்டுப் புட்ப ராகத் தலங்குபோ திகையு நீலக்
கொடியிட்டுத் திரமும் பாக்கற் குலவுவச் சிரமுஞ் சேர்த்தே. (அ)

கூர்ந்தகோ மேத கத்தாற் கொடுங்கைகள் வைத்தே யாங்க
ணோர்ந்தமண் டபத்தின் மீது நிலவுமேற் கட்டி கட்டி
யார்ந்திடு சிலம்பு பூண்ட வணங்கனு ரனேக கோடி
சேர்ந்துசெ யேவல் கேட்பச் சிறந்துவீற் றிருந்தான் சின்னாள். (கூ)

இன்னண மிருக்குங் காலை யிரணிய கசிபென் றோது
மன்னவன் சுதன்மை யென்னு மண்டபச் சபையில் வந்தா
னன்னதோர் சபையின் மேன்மை யரிதரி தகல மைம்பான்
மன்னுமியோ சனையா நீளம் வழங்கும்யோ சனைக னூறும். (க0)

உன்னத மைந்து யோச னையதா முயர்ச்சி பெற்றுப்
பன்னிய விடங்க டோறும் படர்ந்துசஞ் சரிப்போர்க் கெல்லா
மின்னல்கூர் சோகம் வீத னரைதிரை யிளைப்பொன் றின்றித்
தன்னிக ரில்லா தாகச் சாற்றிய நன்மை யோடும். (கக)

மெத்தையா சனங்கள் கட்டில் விளங்கிய சாந்தி யோடுந்
தத்துநீர்ச் சூத்தி ரங்க டருக்கள்புட் பகங்க ளோடும்
வித்தகக் கறுப்பு வெண்மை விளங்கிய பச்சை சேப்புக்
கொத்துறு நிறத்தின் பேத வன்னனத் தோடுங் கூட்டி. (கஉ)

பசிதாக மிளைப்புச் சீதம் பகருமுட் டினமொன் றின்றி
நசிவான துக்கமின்றி நண்ணிய சுகத்தை நல்கி
வசிபாவம் பொல்லாப் பொய்மை வந்தணு கிடாதாய்க் கீர்த்தி
சசிவானில் விளங்கல் போலுந் தண்ணுறு குளிர்ச்சி யீந்தும். (கங)

கிளிமயி லன்ன மன்றில் கிளர்ந்தகோ கிலம்வண் டான
மளிபயில் வண்டு தாரா வருஞ்சிறைக் குருகு மற்றுந்
தளிருணும் பட்சி சாலஞ் சாலவு முடைய தாகி
நளினமென் மலர்த்த டாக மளப்பில நண்ண லன்றி. (கச)

தேவர்தம் போக மற்றுஞ் சிறந்தமா னுடர்கள் போகம்
பாவக பூபம் வேண்டும் பலவகை ரசங்க ளோடும்
பூவுறு மரங்க ளல்கப் பொருந்தியும் புணர்ந்து சுற்றுங்
காவலர் காத்து நிற்பக் கருதுமச் சபையி னுப்பண். (௧௫)

அரியணை மீதின் வைகி யழகுறு மசுரர் கோமான்
றருமலர்த் தொடையல் வேய்ந்து தனியர சிருக்க வாயும்
பரிமள வாடை வீசப் பகர்பனி நீர்கள் சிந்த
விரிகட லிறைவன் செய்ய வேதிய ராசி கூற. (௧௬)

இமையவர் நாகர் விச்சா தரர்கள்கின் னரர்க ளென்றுங்
கமைபெறு வசுக்கள் சாத்தியர் கருதுகந் திருவ ருத்திரர்
தமைநிக ரிலாத வாதித் தியர்கடா மாகா ஹூகூச்
சுமைபெறு வீணை தாங்குந் தும்புரு நார தாதி. (௧௭)

இவரெலாஞ் சேவை செய்ய விசுவாசி யிலங்க ரம்பை
துவரிதழ்ச் சகசன் னியைப்பேர் துலங்கிய பிரமு லோசை
சவுரபே யீச மீசி சாற்றிடு சுகேசி கேசி
திவளொளிப் புஞ்சி கத்த லையொடு சித்திர சேனை. (௧௮)

உரைத்திடு கிரதா சிப்பேர் மேனகை யுருப்ப சிப்பெ
ணிரைத்திடு மிவர னேக மாயிரர் நிருத்த மாடக்
குரைகடற் றிரைகள் போலக் குலவுசா மரைய டைப்பைத்
துரைத்தனத் தாலவட்டத் தொழில்சுர மடவார் செய்ய. (௧௯)

அந்தர சுனும னுகன் ருதுகன் றசக்கி ரீவன்
சுந்தர விசுவ ரூபி சுமதிநா பாலன் கட்கன்
வந்தவிற் கடோத ரன்போர்க் குனகன்மா யாவி பொல்லாப்
புந்திகூர் வெற்றி வாகை புனைந்திடு விசுவ காரன். (௨௦)

பீனகன் சுரூபன் மேக பாசன்பேர் மகரக் கண்ணன்
ஞானமில் குபன்பிர தாப னனவிக னவிலக் காப
னீனமில் லாத சந்திர தாபன னிவர்க ளாதி
சேனையின் றலைவர் வீரர் சிறந்தமந் திரிக ளோடும். (௨௧)

வாள்வலி யுழவர் தான வேந்தராம் வயவர் பொல்லாக்
காள்விடம் பரந்த தென்னக் கண்ணகன் ஞால மெல்லா
மாள்வினை செய்ய மூன்று தேவர்க ளன்றி மற்றோர்
தாளிணை பணிந்து போற்றத் தனியர சியற்றி னால். (௨௨)

உரனுறு சுவர்க்க லோகத் தோங்கிய சுதன்மை யென்ன
வரனுறுஞ் சமைப்பிர வேச மாயினா னசுரர் கோமா
னிரணிய கசிபாம் வீர னென்றுமா முனிவர் கேட்ப
முரணறு தவத்துச் சூத முனிவரன் மொழிந்திட் டானால். (௨௩)

மூன்றவது

இரணியகசிபு சபாப்பிரவேச வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௨௦.

நான்காவது

சக்கரபாணி தேவர்க்

கபயப்பிரதானஞ் செய்த வத்தியாயம்.

சக்கர பாணி தேவர்க் கபயப்பிர தானஞ் செய்த
மிக்குயர் கதைசொல் கென்ன மெய்த்தவர் விழைந்து கேட்ப
வக்கறு கிதழி தும்பை யணிசடி லேசற் போற்றித்
திக்கெலாம் விளக்குஞ் சூத முனிவரன் செப்பு வானால். (௧)

உலகமீ ரேழுந் தன்பே ருரைத்திட முதல்வ னாகி
யிலகிய கொடுங்கோ லோச்சு மிரணிய கசிபாம் வீர
னலகுல மறையோ ராதி நால்வரு ணத்தோர்ப் பார்த்தே
யலகிலா வேள்வி யாக மமரருக் களிக்க வேண்டா. (௨)

சகலவேள் விகள்பா கங்கள் தானங்க ளெல்லா மெம்பேர்
புகரற வுரைத்துச் செய்து பொருந்தவி யெமக்கே யீந்தா
லிகபர மிரண்டு மீவே மிசையிரேற் றடிவே மென்றா
னகமுற வச்ச மெய்தி யவருமப் படிசெய் தாரால். (௩)

இன்னதோ ரவியை யாரு மிமையவர்க் களித்தி டாமன்
மன்னிய வசுர ருண்ணா மகிமையா லமரர் தங்கள்
பொன்னுல கதனை நீங்கிப் பூவுல கதனி லெய்தித்
துன்னிமா னிடர்க ளாகிச் சொருபமா றாடி வாழ்ந்தார். (௪)

வித்தினை விதைத்தி டாமல் விளைந்திடும் பூமி யோங்கிக்
கொத்துறுங் கனியை யாறு பருவமுங் குறைவி லாம
னித்தமும் வேண்டி னோர்க்கு நிறைந்தெழுந் தருக்க ணல்கு
மித்தகை யரசி னாட்சி யியற்றருந் தவப்பே றாமால். (௫)

கருதிய பொருளை நல்குங் கடவுளுந் தானே யென்ன
விரணிய கசிபாங் கோர னிருநிலம் புரக்கு ஞான்றங்
கொருவரு முழுந ரின்றி யொண்ணிலம் விளைவ தென்றாற்
றிருகுவெஞ் சினத்து வேந்தன் றிகிரிமேற் றிகிரி யுண்டோ. (௬)

சுவர்க்கம்வேண் டியது நல்கச் சூழ்கடன் மணிக ணல்க
வுவப்புறு மிக்கு நெய்தே னூறுததி பானற் றேய
நிவப்புறு மேழ தான நெடுங்கடற் றுறைக டோறுந்
தவத்திமை யாச லாதி சத்தமால் வரைக டம்மை. (௭)

தோணியாய் விடுத்து வேலைத் துறைவிளை யாடல் செய்து
நீணிலை யுலகுக் கெல்லா நிருபனே யாகிச் செம்பொற்
பூணுறு கலன்கள் பூண்டு போகசா கரத்துண் மூழ்கி
யாணவ வடிவ மாகி யரசுசெய் துலகத் துள்ளே. (௮)

திரையெறி கடல்போ னித்தஞ் சித்தர்கள் தருவர் தேவர்
நிரைநிலை யாக முன்னே நின்றுபசே விக்க வன்னோ
னுரைசெயற் புதமி ரண்டோ டொன்றிய விலக்க மூவைந்
தருகுறு மிரண்ட தான வாயிரம் வருடம் வாழ்ந்தான். (௯)

வெய்யவ னிவ்வா றுண்டங் கரசுவீற் றிருக்கு ஞான்றே
யுய்வகை யின்று வானோ ருறுதுயர்க் கடலி னாழ்ந்து
செய்வகை யேதென் றெண்ணிச் சிறந்தமந் திரங்க டேர்ந்தும்
பையவே குருவின் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்து சொல்வார். (௧௦)

எங்களுக் கிடுக்கண் டீர்வ தென்றுகொ லசுர ரானோர்
தங்களுக் கிடுக்கண் வந்து சார்ந்திடுங் கால முண்டோ
துங்கவிற் றடக்கை யேந்துஞ் சுடர்முடி யசுரர் வேந்தன்
பங்கமுற் றிறுங்கா லந்தா னுண்டெனிற் பகர்ந்தி டென்றார். (௧௧)

வேறு

என்றுரை யமரர்க ளெதிர்வரு குருவும்
வன்றிற லுறுதிசெய் மந்திர மொழிவான்
கன்றிய மனவலி யிரணிய கசிபு
மொன்றிய போகம னைத்தையு முண்டான். (௧௨)

மனுநெறி நீக்கிம டங்கிய கோலான்
முனிவர்த போதனர் மொழிதரு வசையாற்
புனிதமு நன்மையு மின்றிய பொற்பா
னனியுறு மாயுண டந்தது குன்றி. (௧௩)

அவனுயி ருண்பவ னாழிய னல்லா
லெவனுயி ருண்பவ னெண்ணில்வ ரத்தா
லுவமையில் பாற்கட லோனைவ ணங்கி
நவிலுமு னேதுயர் நாசம தாமால். (௧௪)

மார்க்கமி தென்றுரை வண்குரு மொழியான்
மூர்க்கனை யுயிருண முன்னிந டந்தே
பாற்கடல் வடகரைப் பாங்கரின் வைகிக்
கோற்கடை துயில்கருங் கொண்டலை யெண்ணி. (௧௫)

வேறு.

பொன்னிறத் தண்ணல் காயாம் பூநிறக் கடவு ளென்று
மன்னிய திசையை நோக்கி வணங்கிவந் தனைகள் செய்தோர்
பின்னையெம்பிராட்டி தேவர் பிதாமகற் பெற்றாய் போற்றி
முன்னிய கரும மெல்லா முடித்தருண் முகுந்தா போற்றி. (௧௬)

சரணமென் றடைந்த பேர்க்குன் சரணமே கொடுத்து நீங்கா
மரணமும் பிறப்பு நீக்கி வண்டொடு திகிரி நல்கி
யரணமாய் வைகுந் தத்தை யளித்துவெம் பகைய தான
முரணெலாங் கெடுக்கு மாழி முகுந்தனே போற்றி போற்றி. (௧௭)

நெடியமா யவனே போற்றி நிலமகள் கொழுந போற்றி
யடியினு லுலக மெல்லா மளந்தது மல்லா லந்தப்
படியெலா முண்டு காத்த பண்ணவ போற்றி போற்றி
கொடியகா ளிங்க நிர்த்த குஞ்சித பாத போற்றி. (௧அ)

சங்கொடு வாள்வில் லாழி தண்டமுந் தரித்து வாழு
மெங்கணு யகனே போற்றி யெண்ணரும் பொருளே போற்றி
துங்கமா தேவே போற்றி சுருதியின் முடிவே போற்றி
பங்கய வதனு சேடப் பாயலாய் போற்றி போற்றி. (௧௯)

காலினைப் புசித்த னேக காலமிப் படிநின் றேத்தி
யோலமிட் டுருகும் விண்ணோர்க் குறுதுயர் போக்க வெண்ணி
மால்வரைக் கிணையா யோங்கி வருங்கரு டனைக்க டாவி
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியந் தரத்திற் றோன்றி. (௨0)

தேவரை நோக்கிச் சொல்வான் றிசைமுக னாதி யான
வோவில்விண் ணுலகத் தீரே யுங்களுக் கிடுக்கண் செய்தா
னுவினுக் கிடுக்கண் செய்தா னருந்தவர்க் கிடுக்கண் செய்தான்
பூவுல கத்து ளோரைப் புடைத்துயிர் வருத்து கிற்பான். (௨௧)

சத்திய வாய்மை யில்லான் றருமமெவ் வளவு மில்லான்
மத்திய பானம் பண்ணி மறையவ ராதி யான
சுத்தநால் வருணத் தோரைச் சொல்லரு மழிவு செய்தான்
பத்திரம் மிடத்து மில்லான் பாதக மனைத்துஞ் செய்தான். (௨௨)

திருந்திய மனத்தி னெம்மைச் சிந்தைசெய் பிரக லாதன்
பொருந்திய வருத்தந் தீர்க்கும் போதுநீண் டுயர்ந்து கைகால்
விரிந்தவாய் கோர தந்தம் விளங்கிடக் கண்ணிற் செந்தீச்
சொரிந்திட நார சிங்கச் சொருபம தாகத் தோன்றி. (௨௩)

இகந்தனி னுலகை யாளு மிரணிய கசிபு நெஞ்சைப்
பகுந்துயிர் குடித்தே யுங்கள் பதியளித் திடுவே மென்று
மகந்தனக் கதிப னாதி வானவர் தம்மை நோக்கி
யகந்தனின் மகிழ்ச்சி யெய்தி யபயப்பிர தானஞ் செய்தான். (௨௪)

விண்ணவர் முனிவர் சாத்தியர் வேதியர் சித்தர் யாருந்
துண்ணென வாசி கூறித் துதித்தன ராடிப் பாடிக்
கண்ணனை வலங்கொண் டெங்கள் கடவுளே விடைநல் கென்னத்
தண்ணறுங் கமல பாதந் தாழ்ந்தெமை யளித்தி ரென்றார். (௨௫)

என்றிருந் தவத்தி னாலே யிருநில முழுதுங் காக்கு
மன்றலந் தொடையி னுன்வை வச்சுத மனுவை நோக்கி
வென்றிசேர் திகிரி வள்ளல் விரித்தவா விரித்து நன்று
யொன்றொழி யாமற் சூத னுரைத்தனன் முனிவர்க் கன்றே. (௨௬)

நான்காவது

சக்கரபாணி தேவர்க் கபயப்பிரதானஞ் செய்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௪௬.

ஐந்தாவது

பிராமணர் சொருபமுரைத்தவத்தியாயம்.

மறைப்பொருண் முழுது மோர்ந்த மறையோர்தம் பெருமையாவு
முறைப்பொடு பிரக லாத னுரைத்தவா மனுவுக் கன்று
நிறைப்புனன் மச்ச மாய னிகழ்த்துமா முனிவர் கேட்பப்
பிறைச்சடி லத்தற் போற்றிப் பேசுவன் சூதன் மாதோ. (௧)

வெங்கொலை புரிந்து வெய்ய கொடுமையே விளைக்கும் பொல்லாக்
கங்குலின் மனத்த னான விரணிய கசிபுக் கன்பாய்த்
திங்கள்வெள் ளெயிற்ற ராகிச் சிறந்திடு மைந்தர் நால்வர்
துங்கமா பலத்த ராகித் தோன்றின ரவரின் முன்னோன். (௨)

உத்தம குணத்தி னோடு முருத்தெழும் வெகுளி நீக்கிப்
புத்தியாற் புலன்க ளைந்தும் புலப்பட வடக்கி மாய
னித்திய னுயிர்கட் கெல்லா நிரந்தர மாக நின்ற
தத்துவ னென்ன வெண்ணுந் தன்னுளத் தறிவின் மிக்கான். (௩)

குணத்தினின் மிக்கான் கூறும் பிராமணப் பிரிய னென்றுந்
தணப்பிலா சாரன் சத்திய சந்தனிந் தியத்தை வென்றோ
னுணர்த்துநல் லறிவி லான்ம சொருபத்தை யுணர வல்லோ
னிணக்கமாய்ச் சகல பூதத் திடத்தினு நன்மை செய்வோன். (௪)

அறிவுளோர்க் கேவல் செய்வோ னன்பிலார்க் கன்பி லாதான்
பிறிவுறு வன்பி னோர்க்குப் பிரியமே புரிவோ னல்ல
நெறிதரு குரவன் றானே நிமலனென் றெண்ண வல்லோன்
குறைவிலாச் செல்வம் ரூபங் கூறிய பலத்தின் மேலோன். (௫)

அரிவைமண் பொன்னிம் மூன்றி லாசையெட் டுணையு மில்லான்
கரியமா லிடத்திற் பத்தி கனிந்துள மகிழ்ச்சி நீங்காப்
பெரியவன் பருவந் தன்னிற் சிறியவன் பிரக லாதன்
றெரிதரு கல்வி தேர்வான் சிறப்புறு மனத்தி னெண்ணி. (௬)

இரணிய கசிபு வெள்ளி யீன்றருள் சண்டா மர்க்க
ரூரானுறு மிருவர் தம்மை யழைத்துய ருணர்ச்சி யுள்ளத்
தரானுறப் பயிற்சி செய்மி னென்றமர் பள்ளிக் கூட
முரணுற வமைத்து வைத்தான் கல்வியின் முயலு மொன்று. (௭)

சொற்றிடு பிரக லாதன் முதலிய தோன்ற னால்வர்
மற்றிற லசுரர் வேந்தர் மைந்தரோ டமைச்சர் மைந்தர்
கற்றுயர் கல்வி தேர்வான் கருதிய பள்ளிக் கூடத்
துற்றுநன் கோது மொன்றே யுரைக்குமப் பிரக லாதன், (௮)

குரவர்க ளிருவர் வாய்மை கொண்டிடான் கொண்டன் மேனி
யுரவனை யுளத்தி னெண்ணி யுறுமவ னமம் யாவும்
வரன்முறை யுணர்ந்து கல்வி வாசக மனைத்துங் கற்றுத்
திரனுறு நாளிற் சண்டா மர்க்கருஞ் செப்பு வாரால். (௯)

குமரநீ யாங்கள் செப்பும் வாய்மையைக்குறிக்கொ ளாம
லமரர்நா யகன்மால் பேரை யனுதினம் வழுத்து கின்றாய்
தமரநீர்க் கடல்சூழ் பூமி தான்முத லுலக மெல்லா
நமதர சன்பே ரல்லால் வேறுபேர் நவிலற் பாற்றே. (௧0)

எனுமொழி செவிபு காமு னிளவலாம் பிரக லாதன்
பனுவறேர் குரவ ராய விருவரைப் பரிவிற் பார்த்து
மனுமுதற் கலைகள் யாவு மறிந்துளீர் மாயா பாசத்
தனுவுடை யார்போற் சாற்ற றகாதென மறுத்துஞ் சொல்வான். (௧௧)

அரியலா லுலக மில்லை யரியலாற் புவன மில்லை
யரியலா லுடல மில்லை யரியலா லுயிரு மில்லை
யரியலாற் றவமு மில்லை யரியலாற் றரும மில்லை
யரியலா லருளு மில்லை யென்றறைந் திட்டுள் ளன்பாய். (௧௨)

அசுரர்தங் குமர ரோடு மரியினைப் பூசை செய்தும்
விசுவமவ் வரியே யல்லால் வேறிலைத் தெய்வ மென்றும்
பசுமையாங் கடல்போன் மேனிப் பண்ணவற் போற்றி ஞானச்
சிசுவுயர் பிரக லாதன் றிகழ்கவுத் துவத்தை யேய்ந்தான். (௧௩)

இன்னணம் பிரக லாத னிளம்பிறை வளர்ச்சி யென்ன
மன்னியே வளரு நாளி லிரணிய கசிபா மன்னன்
றன்னுயிர்த் தேவி யோடுந் தனியர சிருந்தா னோர்நாண்
முன்னுற வழைத்து மைந்த னுச்சியை மோந்து பின்னர். (௧௪)

மடிமிசை யிருத்திக் கையான் மார்புற வணைத்து மைந்த
படிமிசை நின்னைப் புத்தி மானெனப் பகர நின்றாய்
முடிவுறக் கற்ற கல்வி மொழியெனப் பிரக லாதன்
கடிகம ழலங்கற் றிண்டோ ளிரணிய கசிபைத் தாழ்ந்து. (௧௫)

எந்தையான் படித்த கல்வி யாதெனிற் றிருமால் விண்டு
நந்தகோ விந்த கண்ண நாரண முகுந்த மாய
சுந்தர வாசு தேவ துளவணி சுருதி மூர்த்தி
செந்திரு மார்ப வென்றா யிரம்பெயர் தெளிந்து கற்றேன். (௧௬)

என்றலுங் கடிய கோபத் திரணிய கசிபு சீறித்
தன்றுணைக் குமரற் பார்த்து நினக்கிது தகாது மாயன்
றுன்றிய நாம மென்றான் சொற்றவ ரெனக்குச் செற்றார்
நன்றிஃ தன்று பால னுகையா னவின்றா யென்றான். (௧௭)

அம்மொழி கேட்ட மைந்த னரியலா லுலக மில்லை
யிம்மையு மறுமை தானு மீந்திடுந் திருமா னுமஞ்
செம்மொழி யெழுத்தோ ரெட்டுந் தேர்ந்துளோர் தேவ ராவர்
மும்மையா முலகிற் கல்லார் முழுநர கடைவர் திண்ணம். (கஅ)

தந்தைநீ சிறப்பின் வாழ்ந்து தனியர சுரிமை செய்து
நிந்தனை யணுகி டாது நெடிதுபே ரூழி கால
நந்திடா திருக்க வேண்டி நவின்றன னென்ன லோடுஞ்
செந்தழல் விழியிற் பொங்கிச் சினந்தெதிர் மறுத்துச் சொல்வான். (கசு)

இதம்மடித் ததுக்கி மைந்த னின்னுயி ருண்பான் போலக்
கதழெரிக் கண்கள் சேப்பக் கைபுடைத் துறுக்கி நக்கு
மதலையிச் சிறுவன் யாது மறிந்திலன் மறைவல் லோரென்
றிதமுறு கல்வி கூறு மிருவரே யிழைத்த தீத்தாம். (உ0)

ஆதலி னிவர்க டங்க ளாருயிர் செகுப்பே மென்னத்
தூதரைச் சிலரைத் தூண்டித் துண்ணெனக் கொணர்மி னென்னக்
காதலி னெழுந்து தந்தை கடிமலர்ப் பாதம் போற்றித்
தீதிழைத் திடுவ தாகா செப்புவ லெந்தை கேண்மோ. (உக)

அந்தணர் தாமே போற்று மரியரன் பிரம னுவா
ருந்தியங் கமலந் தன்னி லுதிமத் தேவை யீன்று
நந்துசக் கரத்தை யேந்து நாதனென் னுளத்தி னின்றும்
பந்தபா சங்க ணீக்கிப் பரிந்துப தேசஞ் செய்தான். (உஉ)

செகமெலா நிறைந்து ஞானச் செழுஞ்சுட ராகிப் பூதத்
தகமுறு திருமான் முன்ன மிறந்துளோ ரன்பின் வாழ்வர்
தகவுறப் பிறப்போர் யார்க்குஞ் சற்குரு வாவ தல்லா
லிகபரத் தொருவ ரில்லை யெனக்கிவர் குரவ ரல்லர். (உங)

ஆதலான் மறையோர் தம்மை யென்பொருட் டாகக்கோற
னீதியன் றெந்தை கேண்மோ வெனமுறை நிகழ்த்து ஞான்று
பாதக வசுர ரந்தப் பிராமண ரிருவர்ப் பற்றிப்
பூதலத் தீர்த்த வாய்கை புதைத்தொரு வார்த்தை சொல்வார். (உச)

மன்னநீ பொறுத்தி டிந்த மைந்தனும் பிரக லாதன்
சொன்னசொன் மறுத்தான் யாங்க டுண்ணெனத் தண்டஞ் செய்யி
னென்னநின் னுள்ள மென்ன வஞ்சினே மினிமே லீங்கோர்
கன்னலி லரிநா மத்தைக் கருதுரு துறுத்து வேமால். (உரு)

தேவர்தங் குழுவி னோடு திசையினைப் புரந்து நித்தங்
காவல்செய் வோரு முன்றன் கைவலிக் காற்றுர் நாளா
லேவல்செய் கின்று ரேழை யெளியரே மெதிர்நிற் கல்லோ
மூவர்கண் முதல்வ வெம்பான் முனிவொழித் தருடி யென்றுர். (உசா)

அவ்வுரை கேட்டுச் சண்டா மர்க்கருக் கருள்செ யாமற்
கவ்வைகூர்ந் தலற வீர்க்கக் கண்டுறு பிரக லாத
னெவ்வமி லந்த ணாளர் யார்க்குமே மேன்மை போராற்
செவ்விதன் றிவரைத் தண்டஞ் செய்திடே லெனவிட் டானல். (௨௭)

பூவினின் மணமே போன்றும் பொருந்துமெள் ளினினெய் போன்று
மேவுபாற் சுவையே போன்றும் விழியினுண் மணியே போன்று
மோவிலா வுயிர்கட் கெல்லா முயிருமாய் நிறைந்து காத்திட்
டாவன புரிந்து மாய னிகபர மளிப்ப னன்றே. (௨௮)

மூன்னூறு சனனந் தன்னின் முராரியைப் பூசை செய்த
நன்மையா னிப்போ திந்த வுலகநா யகனே யாகி
மன்னினை யிகழ்ந்தா னன்றி மறந்திடும் பாவ மெய்து
முன்னுளத் தறிந்து கொள்கென் றோதலு மைந்த னேண்மோ. (௨௯)

உலகுகை வலிமை யுள்ளோன் றன்வசத் தொடுங்கும் பன்னா
ளலகிலாத் தவங்க ளாற்றி யகிலலோ கத்தைக் காக்கு
நிலைமையை யடைந்தே மெம்பேர் யாவரு நிகழ்த்து கிற்பார்
கலைவலோர் யாரு நங்கீ ழாமெனக் கருது கண்டாய். (௩௦)

மாயனென் றொருவ னுண்டு மாயைகள் சால வல்லான்
றூயவ னல்ல னென்முன் றோற்றுவெந் கொடுத்துப் போனா
னீயவன் றனையோ மிக்கா நிகழ்த்தினை நேர்ந்தா னென்னி
னாயவ னெனக்கொப் பல்ல னஞ்சுவா னென்பேர் சொல்லின். (௩௧)

அன்னவன் மாட்டுப் பத்தி யுனக்கறி வித்தோர் யாவர்
மன்னுபூ மிருக மென்னும் வானவர்க் கியானோர் சிங்க
மென்னிளங் குமரன் சிங்க வேறருள் குருவை யென்னப்
பன்னுவ ரினிமே னீவிப் பிரர்தமைப் பணித னீப்பாய். (௩௨)

அரிபெயர் மறந்து நந்த மசுரர்தந் தருமம் போற்றி
யுரியநங் குலங்க ளோங்க வுரைத்திடென் பேர்நீ யென்னக்
கரியமா னும மொன்றைக் கருத்துற வைங்கா லோதிற்
றுரிதமொன் றின்றித் தோன்றும் பவக்கட றொலைக்க லாமால். (௩௩)

சீதரன் கலையுன் றன்பாற் சிறந்ததா லுலகுக் கெல்லா
நாதனா ரருளுஞ் செங்கோ னடாத்தினை யறிவின் மிக்கோய்
போதமா மறையோர் தம்மைப் போற்றிடா திருத்தி யென்று
நீதிநீ விசாரி யாம னிகழ்த்திய நெறியீ தென்கொல். (௩௪)

இருளெனு மஞ்ஞா னத்தா லெவற்றினுங் காணொ ணாதாய்ப்
பெருகிய விடய மாகும் படுகுழிப் பிறவி வீழா
தருளெனுங் கரையி லேற்று மருமறை யோரா ஞானத்
திருவளர் தீபந் தன்னை விடுத்திடல் செய்கைத் தாமோ. (௩௫)

மனத்தினி னசுதை தன்னுன் மருவிய மதயே தத்தாற்
சினத்தினுன் மறைவல் லோரைச் சிறப்புறப் போற்றி செய்ய
நினைத்திடா திகழ்ந்தோ னுவி நேத்திர மிகழ்ந்தோ னுவன்
றனக்கிணை யில்லா மாயன் றன்னையே மறையோ ரொப்பார். (ருசு)

துர்ச்சனர் சங்க மாகா தொல்லுல கென்னுந் தேர்க்குக்
கற்றுய ரந்த ணுளர் கருதுமச் சாணி யாவர்
வெற்றிசேர் மறையோர் கோக்க ளிலையெனில் வேலை சூழு
நற்புவி யுயிர்க ளெவ்லா நாசமே யடையு மாலோ. (ருஎ)

மந்திரஞ் சுருதி ஞான மகமறை யவரா லோங்கு
மிந்தநற் றருமந் தன்னுற் புவியெலாம் விருத்தி யெய்து
மந்தணர் பெருமை சற்று மறிந்திடார் மிருக மொப்பா
ரெந்தைநீ யுணர்ந்து கொள்கென் றியம்பினன் பிரக லாதன். (ருஅ)

எனமலர் மங்கை மார்பத் திலங்கிய மச்ச மாயன்
றினகரன் புதல்வன் வைவச் சுதமனு தெரிந்து கேட்ப
முனமுரைத் திட்ட வாறு முனிவரர் மகிழ்ச்சி கூர
மனமொருப் படுத்துஞ் சூத மாமுனி வழுத்தி னுனல். (ருகூ)

ஐந்தாவது

பிராமணர் சொருப முரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கஅரு.

ஆறுவது

ஆயுதவெட்டுப் பரிகார வத்தியாயம்.

படியின்மேற் பிரக லாதன் றனைக்கட்டிப் பலவாள் கொண்டு
தடியவா யுதங்கள் குன்றித் தாரைவாய் மடிந்த வாறு
பிடிநடை யுமையோர் பாகப் பிஞ்ஞகன் மலர்த்தாள் போற்று
முடிவறு தவத்தோர் கேட்பச் சூதமா முனிவன் சொல்வான். (க)

தன்மக னுரைத்த மாற்றங் கேட்டிடு தயித்திய ராசன்
மன்னிய வசுரர் வேந்தர் மந்திரத் தலைவர்ப் பார்த்தே
யென்னிளங் குமர னின்னே னெனைத்துதிப் போனைப் போற்றல்
பன்னரிக் குருளை யொன்றி பத்தினை வழுத்தல் போலாம். (உ)

எலியினை வழுத்தும் பூசை யென்னமா சுணத்தை வாழ்த்திப்
பொலிவுறு மயிலைப் போலப் போற்றலர்ப் போற்றிச் சற்றும்
வலியிலா வரியை வாழ்த்து மாமறை யோர்க ளென்ன
நலிவிலா துரைத்தா னென்று நவின்றுபின் மகற்குச் சொல்வான். (ஙு)

அரிபெயர் வழுத்த லாகா தென்றியா னறைந்துஞ் சற்றுந்
தெரிவுரு துரைத்தா யோங்குஞ் சித்திரஞ் சுவரி லாம
லுரியதென் றுரைப்பார் போலு முரைத்திடு நூலொன் றின்றிப்
புரிவுறு துகிலே நெய்து புகழுவான் போலு மல்லால். (௪)

களங்கமில் ககன கூட வெளியினிற் கருது மென்பூ
விளங்குநல் வாசத் தோடும் விரிந்துறு மென்பார் போலு
மிளந்தளிர்த் துளவ மால்பே ரியம்பிடே லினிநீ யென்ன
வுளங்கொளான் பிரக லாத னுறுசெவி புதைத்துச் சொல்வான். (௫)

உரைத்துயர் குரவ ரேனு முணர்ச்சியி னுயர்ந்தா ரேனுந்
தரைக்குண்மா மயக்க மெய்திற் றனிப்பரம் பொருளா மென்பாற்
றிரைக்கடற் றுயின்மான் மேன்மை செப்புதல் சிறப்பா மென்றே
வரைத்தியா னுரைத்தே னென்ன வாளெயி றதுக்கிச் சீறி. (௬)

மடிமிசை யிருந்த மைந்தன் றனைப்புவி மருங்கிற் றள்ளி
யிடியென முழங்கி யார்த்திங் கென்முனென் பகைவற் போற்றுங்
கொடியனை வாளி னாலே குறைத்துநாய் கழுகு காக
நொடியினி லுண்டு தேக்க நுண்டுக ளாக்கு வீரால். (௭)

என்றுரைத் தசுரர்ப் பார்த்தென் சுதனென வெண்ணீ ரெம்பி
வன்றில லிரணி யாக்கன் மன்னுயிர் மாய்த்தோன் றன்னைக்
கொன்றுதன் பழிதீ ராவிக் குமரனும் பகைஞ னுவா
னென்றுநீர் மறுத்தி டாம லொறுத்திடு மென்ன லோடும். (௮)

தோளுறப் பிணித்து நெஞ்சந் துணுக்கிட வீர்த்துக் கையின்
வாளுற வெட்டி மைந்தன் மதிமயக் குற்றி டாமற்
கோளுறு மதிபோ லோங்கிக் கோவிந்த னிருபொற் கஞ்சத்
தாளுள மலரி னெண்ணிப் போற்றலுந் தடிந்த வாட்கள். (௯)

பொடிபொடி யாகி நின்ற வீரர்மேற் பொருந்தி யன்னோர்
வடிவெலாங் குருதி பாய மன்னனத் தன்மை நோக்கி
மிடியுறு மனத்த னாகி மிகுபய முடைத்தாய் நாகம்
படிவமா ருடலைச் சுற்றிப் பதைப்புறு வோரை யொத்தான். (௧௦)

சூலம்வேன் முசுண்டி தோட்டி தோமரம் வைவாள் பிண்டி
பாலநே ரிசங்கட் டாரி பட்டையஞ் சுரிகை வாங்கு
கோலமார் படைவெய் யோன்முன் கூரிரு ளங்கி முன்ன
ராலமா வீர ராசன் முன்னெதி ராவம் போலும். (௧௧)

மணிமறு மார்ப னன்பார் மதலேமு னெதிரி லாமற்
றுணிபடத் தந்தை பாதந் தொழுதெழுந் தாடிப் போற்றிப்
பணிதரு மகவைப் பார்த்துப் பகைவர்பேர் பகரே னின்னைப்
பிணிதருந் துன்ப நீக்கிப் பேரருள் புரிவ னென்றான். (௧௨)

என்றலுந் திருமால் பாத மென்னுளத் திருக்கை யாலே
யொன்றிடா தகலுந் துன்ப மெனவுயர் பிரக லாதன்
வென்றியோ டுரைத்தா னென்று விண்டுநன் மனுவுக் கோத
நன்றிசேர் சவுன காதி முனிவர்க்கு நவின்றான் சூதன். (௧௫)

ஆறவது

ஆயுதவெட்டுப் பரிகார வத்தியாயமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௯௮.

ஏழாவது

சர்ப்பதிட்ட பரிகார வத்தியாயம்.

கடகரிக் கருளுமாயோன் கருங்கடன் முகட்டின் முன்னாண்
மிடல்கெழு மச்ச மாகி மனுமுகம் வியந்து நோக்கிப்
படர்தரு சர்ப்ப திட்ட பரிகார முரைத்த வண்ணந்
திடமுடை முனிவர் கேட்பச் செப்புவான் சூதன் மாதோ. (௧)

மாயனை வியந்து கூறு மகன்மொழி செவிப்பு காமுன்
மேயவா யுதத்தா லின்னேன் வீந்திடா னென்னச் சீறிப்
பாயனல் கதுவுங் கண்ணன் பணியர சாதி யான
தூயநா கங்க டம்மைப் பார்த்தொரு வார்த்தை சொல்லும். (௨)

காழ்விடங் கான்ற பல்லாற் கடித்திவ னுடல மெல்லாம்
பாழ்பட வென்று தின்று பருகுதி ருயிரை யென்னத்
தாழ்வினைப் புரியுந் தட்ச கன்சங்க பால னீலன்
சூழ்பட வனந்தன் புட்ப தந்தன்வாழ் சுபன னாதி. (௩)

வேறு.

முதலிய நாக மலகில வெல்லா மொழிநவ கோடியா மயுதங்
கதழெரி யனைய கடுவிடம் பொழிந்து கடையெயி றதுக்கியே யெழுந்து
மதகளி றனைய மதலையி னுடலைக் கடித்தன மதலையு மரிபொற்
பதமல ரிணைக ளிதயபீ டிகையிற் பதித்தினி திருந்தன னாகம். (௪)

கறைவிட மொழுகு நெடியபல் சிதறக் கணபண முந்தெறித் துதிரக்
குறைபட வயர்ந்து கோபவெங் கண்ணிற் கொடுங்கனல் சொரியநெட் டுயிர்த்த
நிறைதரு மனத்திற் பிரகலா தனனை நினைத்தனன் கலுழன்மே லரியைச்
சிறைவிரி கலுழ னுடனவ னணுகச் சிதைந்தன செங்கண்மா நாகம். (௫)

தக்கன் முதலாம் பணியர செல்லாந் தனித்தனி யோடியே யொளித்து
மிக்கமெய் யயர்ந்தாங் கிரணிய கசிபு வேத்தனற் சபையினி னெய்திப்
புக்கவா றெல்லாம் வகைப்படி யுரைத்துப் புணரிநீர் சுவரிட மாந்தித்
திக்குள வரையை விழுங்குவே மைந்தன் றிறலினைச் சொல்லுதற் கரிதால். (௬)

என்றபோ தசுர னிதயநொந் தழுங்கி யினிச்செய்வ தென்னவென் றேங்கிக்
கன்றெனு மதலை தண்டசாத் தியத்துங் கலங்கிடா னெனநினை காலை
வென்றிசேர் பிரக லாதனுந் தந்தை வினரமல ரடிகளிற் பணிந்து
நின்றிடப் படையா லரவினு லுயிரை நீக்கிடா தருள்புரிந் தனமால். (௭)

எனதருட் புதல்வ நாமரு பங்க ளிசைந்திடா வரியெனும் பகையை
யனவர தமுநீ துதித்திடேன் மறுத்தா லரசுநங் கோபமே தகிக்கு
மனமொருப் படுத்திச் செயுமருந் தவத்தால் வரம்பறு செல்வங்கள் பெற்று
முனமிவை புசிக்க வறிந்திடா துரைத்தா யெனப்பிரக லாதனு முரைப்பான். (௮)

தந்தைநின் மொழியே சத்தியம் பொல்லாச் சத்துருக் கணத்தினை நாளு
நிந்தனை செய்வ தலதுநான் புகழே னெடியமால் சத்துரு வல்லன்
புந்தியு ணின்று ஞானமே கெடுக்கப் பொருந்துகா மாதிக ளறுவர்
முந்துசத் துருக்கள் விடயத்தின் வீழ்த்தி முகுந்தனை நினைக்கவும் பொருந்தார். ()

நாமரு பங்க ளிலையரிக் கென்றே நவின்றனை நாமரு பங்கள்
காமமோ டிசையு நித்திய மென்று களங்கமி னித்திய ராகி
யேமமார் மலைக்கு மலையுமாய் நீண்டங் கியற்றிய வனுவினுக் கணுவாய்த்
தாமலா துலகிற் றெய்வம்வே றின்றித் தனிப்பொரு ளாயரி யமரும். (௧௦)

பிறப்புறு கடலை நீந்தியே முத்திப் பேற்றினி னிலைப்பவர் யாரு
மிறப்பிலா வரியைப் போற்றிட வேண்டு மிருந்தனம் வேண்டினேன் செல்வச்
சிறப்புறு வோனை வேண்டுத லன்றிச் சிறுமையோன் றனைப்புகழ்ந் தென்கொன்
மறப்புறு தென்றன் மனத்தரி பதத்தை மாயையின் மயங்குறே னினிமேல். (௧௧)

அரிதிரு நாம மனந்தமா யிரமா மவற்றினை வழுத்துவ தன்றிப்
பிரியமா யொன்றை நினைத்திடே னிந்தப் பிரபஞ்ச வாழ்க்கையான் விரும்பேன்
றுரியநா தாந்த மூலமோர்ந் துணர்ந்து துகளற விரும்புவ தீதாற்
கரியமா லருளாற் பெறுங்கதி யடைவேன் கடைக்கணித் தருள்புரி கென்ன. (௧௨)

நவையற மொழிந்து நீவிரு மசுரர் நாகரு மரிதிரு நாமக்
குவைசெவி யுறலும் பழுதில ராகிக் குறுகினர் நின்வயி னென்றே
யவையினிற் பிரக லாதனன் றுரைத்தா னென்றரி மனுவினுக் கோது
மிவைநனி தவமார் முனிவரர் கேட்ப விசைத்தனன் சூதமா முனிவன். (௧௩)

ஏழாவது

சர்ப்பதிட்டபரிகார வத்தியாயமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௧௧.

எட்டாவது

திக்கயங்கள் வீறழிந்த வத்தியாயம்.

திக்குறு கயங்கண் மதலையாம் பிரக லாதனைத் திருகுவெஞ் சினத்தாற்
றெக்குறு கோட்டாற் பாய்ந்ததுங் கோடு துகளெழ முரிந்தது நெடுமான்
மைக்கடன் முகட்டின் மச்சமாய் வைவச் சுதமனு கேட்டிட வழங்கு
மக்கதை யுரைத்தி டெனுமுனி வரருக் கருந்தவச் சூதனின் றறைவான். (க)

திறல்கெழும் வைவே லிரணிய கசிபு செங்கண்மா லன்பனைச் சீறி
விறல்கெழு மதிசான் மந்திரத் தலைவர் தங்களை வியப்புற நோக்கிப்
பெறலரும் பேறென் றீன்றிடும் புதல்வன் பேணலர்ப் பெருமையே போற்றி
யுறலென துளத்தை யழலென வெரிக்கு முரைத்திடிர் மதியிலி தனக்கே. (உ)

எனப்புகன் றீன்ற மைந்தனை நோக்கி யென்னினு மென்னமைச் சரினு
மனப்பெரும் புத்தி யுடையைகொ லல்லை வரம்பறு பாக்கியச் சிறப்பின்
கனப்பெரு மையைநீ யனுபவித் திடாமற் கதிர்முலைப் படவர வல்கு
லனப்பெடை நடையார் நலனுகர்ந் தனையா நபுஞ்சக னாகவாழ்ந் தனையால். (ங)

அவனஃ துரைப்ப வமைச்சர்க ளறைவா ரையவெம் மரசனுக் கரிய
தவமிகு குமர விந்திரன் வானோர் தாழ்ந்தடி பணிவதும் வருண
னுவமையி லமுத கலசம தேந்தி யுறுவதுஞ் சதாகதி மூன்று
புவனமு முலவி யொற்றுரைப் பதுவும் பூரண கலைதிகழ் மதியம். (ச)

ஆடிகாட் டுவது மழனடு நிருதி யளகைய ரதிபதி முதலோர்
கூடிநின் றேவல் புரிவதுங் கண்டு குறித்திடா யுபேந்திர னிவர்க
ளோடிணை யான புருடனே யன்றி யுயர்ச்சிபெற் றுள்ளவ னென்ன
நாடிய புத்தி மந்திரத் தலைமை பூண்டுளீர் நவிற்றுவல் கேண்மின். (ரு)

மனமொருப் படுத்திப் புலன்வழி போக்கா மாதவப் பெருமையோ ரென்னப்
புனமுறு துளவத் தொடையணி மாலைப் போற்றுத லன்றியென் னுள்ளங்
கனவினு மற்றோர் பொருளினை நினைக்கக் கருதிடா துமதுசொன் மயக்கா
னினைவினு ளுணர்ச்சி கெட்டுவெந் நிரயப் படுகுழி வீழநேர் கிலனால். (சு)

தாம்பெறு மக்கட் கிகபரங் கிடைத்துச் சனனசா காத்தினை யொழித்து
மேம்படத் தந்தை நினைப்பதே யல்லால் விடயவெந் தழலினி லழுந்தித்
தேம்புற நினைப்ப தென்கொலோ சிந்தைத்தெளிவினை யறிகிலிர் கையாற்
கூம்புறத் தொழுவே னிரக்கமுற் றென்றன் குணத்துறு கொள்கையின் விடுவீர். ()

என்னலும் வடவா முகமெனச் சீறி யிறைவனா மிரணிய கசிபு
முன்னுறு மட்ட கசங்களை நோக்கி மொழிகுவான் முரிவெங் கோட்டாற்
சின்னபின் னங்க ளாயுட லறவே சிதைத்திடு மென்னலு மசுரர்
பன்னிய பிரக லாதனைப் பிணித்துப் படர்மணி மறுகினிற் கொடுபோய். (அ)

போட்டன ரட்ட கசங்களுஞ் சுற்றிப் பொருந்திய சோடுபாய் தரவே
தாட்டுணை யூன்றிப் பாய்தலும் பிரக லாதனுஞ் சததள மடந்தை
தோட்டுணை தோயு மரியினை வழுத்தத் தூங்கல்வெங் கோடெலா முரிந்தே
யீட்டிய மதத்தின் கலுழிபோ யிரத்தக் கலுழிநீ ரொழுகிட வேங்கி. (கூ)

வங்கியே மயங்கிப் புழைநெடுந் தடக்கை யினைமுழை வாயினு ளமைத்தே
யோங்கரி மணிப்பொற் றவிசுறு மசுர னவையினுற் றிடவுளம் வெட்கி
நீங்கின மைந்த னுடலுறு பிணிப்பை நெகிழ்த்தவிழ்த் தசுரன்முன் னணுகித்
தூங்கலோ ரெட்டுங் கோடிறத் துணிந்து சோர்ந்தன துளவமா லருளால். (௰)

அத்தநீ கேண்மோ வசுரர்தீப் படையு மடல்செழு நாகர்வெவ் விடமு
மத்தக மதமா மருப்புயர் வீறு மால்பத மலரினைத் தொழுமென்
பத்தியான் மாய்ந்த வெனப்பிரக லாதன் பகர்ந்தன னென்றுமுன் முகுந்த
னுத்தம மனுவுக் குரைத்தன னென்ன வுயர்தவர்க் கோதினன் சூதன். (௧௧)

எட்டாவது
திக்கயங்கள் வீறழிந்த வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். உஉஉ.

ஒன்பதாவது

அபிசார வீறழிந்த வத்தியாயம்.

அழலுறு மாவி சாரவீ றழிந்த வகையினை யறைந்திடு கென்று
புழைநெடுந் தடக்கைக் கரியினைக் காத்த புங்கவ னுரைத்திடு வண்ணந்
தழைதரு மலர்ப்பூஞ் சோலைசூழ் நைமி சாரணி யத்தினிற் றவங்கள்
பிழையுறு தியற்று முனிவர்கள் மகிழப் பேசுவான் சூதமா முனிவன். (௧)

மகன்மொழி யுலைவா யழலினிற் செம்பை மறுகிட வுருக்கியே செவியிற்
புகவிடு தலெனக் கேட்டுடல் வெதும்பிப் புழுங்கிவெவ் வசுரரை யேவித்
திகழ்நெடுங் குண்டத் தெரியினை வளர்த்துச் செழித்திட நெய்மிகச் சொரிந்தாங்
கிகல்செயுஞ் சண்ட மாருதந் தன்னை யிலங்கழற் சகாயமா யிருந்தி. (௨)

வளர்த்திடு மெனலு முகார்ந்தகா லத்தின் வந்தெழு வடவைவெங் கனலின்
கிளர்ச்சியோ வென்ன வமைத்திட வதனிற் கேசவன் றுளினைப் பிணித்துத்
துளக்குறு தரசன் போடுமி னென்னச் சொற்றிட வெடுத்துவ னுய்த்தா
ருளத்தினி லரியை நினைத்திட வழலுங் குளிர்ந்ததா லோங்குநன் னீர்போல். (௩)

அவ்வகை யன்றிச் சத்தமே கங்கள் பொழிந்தழற் கோரமே மாற்றச்
செவ்விதின் மைந்த னசுரர்கோன் முன்னஞ் சென்றுநீ வளர்த்திடு தீயும்
பவ்வமார் பிறவி யொழித்திடுஞ் சேட்ப் பாயலா னருளினு லவிந்து
தவ்வுற வமுத சலதியின் மூழ்கிச் சார்ந்தனன் யானுமிங் கெனலும். (௪)

சண்ணழல் சொரியப் பயந்துள நடுங்கிக் கலங்கிமெய் தெளிந்துமேற் புத்தி
யெண்ணியே சமையற் றொழிலினர்க் கூய்நீ ரிலங்கிய விடமெலாங் கூட்டி
யுண்ணுறப் புரிமி னென்றலு மன்பா லுறுத்திய வபூபமே முதலா
நண்ணிய வுணவின் வகையெலாங் கலந்து நன்குற வூட்டிட வுண்டான். (௫)

உண்டிடும் பொழுதின் மால்பத நினைக்க வுறும்விட மமுதமா யினவாற்
கொண்டவ னிருக்க விடத்தினைக் கூட்டிக் கொடுத்தவர் யமனுல கடைந்தா
ரண்டிடா தொழிந்தோ ரிரணிய கசிபுக் கறைந்திட வவனுநெட் டுயிர்த்தான்
புண்டரீ கக்க ணமலனைப் போற்றும் புதல்வனுஞ் சென்றுமுன் னின்றான். (௬)

நின்றிட வசுர னெட்டுயிர்ப் பெறிந்து நிலைதரு மறைகளை யாய்ந்து
துன்றிய வசுரப் பிராமணர்ப் பார்த்துத் துலங்கிய வாபிசா ரத்தை
யொன்றிட வளர்த்தோர் கிருத்தியுண் டாக்கி யொறுத்திவ னுயிருணு மென்ன
நன்றென மறையோ ராபிசா ரத்தை நன்மறை யதர்வணத் தமைத்தார். (௭)

அமைத்தசெந் தழலி னுப்பணி னுலக மஞ்சிடக் கிருத்தியொன் றுண்டா
யிமைப்பொழு தினிலேழ் புவனமு முண்பே னென்னவே நடந்திட வசுரர்
தமைப்புரந் தருளென் றிரணிய கசிபைச் சார்ந்தனர் மைந்தன்மு னெதிர்ந்து
குமைத்துயி ருண்ணக் கரத்தினிற் சூலக் கொடும்படை மார்பினிற் குத்தி. (௮)

கோரமா யலறம் மூவிலைச் சூலங் கோடியாய்த் துகளெழ வொடிந்த
தாரமா கிருத்துத் தன்னுளத் தஞ்சி யரிபதத் தொழும்பன்மு னெதிர்ந்து
நேரணு கிடுத லரிதென மகத்தை நெருப்பினில் வளர்த்திடு மறையோர்
பாரமர்ந் திடாம லழலினைச் சொரியப் பற்றின தவருடன் முழுதும். (௯)

நெருப்புட லெரிக்கத் தம்பமொன் றின்றி நேமியங் கடவுள்பா லன்ப
னிருப்பிடஞ் சார்ந்தெம் வினையினு லறியா தியற்றினோங் காத்தரு ளென்றார்
மருப்பொலி துளவக் கண்ணனு மத்தை மைந்தனும் வழுத்தினன் மாயன்
விருப்பொடு மவருக் கருள்செயக் கிருத்தி மறைந்தது வேதியர் பிழைத்தார். (௧௦)

பிழைத்தவ ரசுரர் கோமுனஞ் சார்ந்து பிள்ளையாற் பிழைத்தன மென்றே
தழைத்திடு மாசின் மைந்தனைப் புகழ்ந்து சார்ந்தன ரொருவழி ஞான
மழைத்திரு மேகமெனும்பிரக லாதன் வந்தனன் றந்தைபா லென்றே
யுழைக்கரத் தெம்மான் பதம்பணி முனிவோர்க் குரைத்தனன் சூதமா முனிவன்.

ஒன்பதாவது

ஆபிசார வீறழிந்த வத்தியாயமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௯௯.

பத்தாவது

பிரசாத பதன வத்தியாயம்.

தடவரைநி கர்த்தபிர சாதபத னத்தை
யடைவுட னுரைத்திடென வாழிதிகழ் காவிற்
கடவுண்முனி வர்க்குரைசெய் காதைமுனி வர்க்கே
தொடர்பவமொ ழித்துவளர் சூதமுனி சொல்லும். (௧)

மதலையுரை கேட்டசுர மன்னன்மனமாழ்கிக்
கதழெரியு குத்துவிழி காலமுக நோக்கி
யுதவிசெயு மந்திரமு நீயுமுட னாக
விதமுறவு தித்தனைகொ லென்றிடவி சைப்பான் (௨)

தந்தையருள் செய்திடுதி சாற்றிடுவல் கேண்மோ
வெந்தன்மன முற்றுலவு மீசனரு தின்றி
மந்திரம தொன்றுமிலை மாயனைம றந்தோ
ரந்தமில் பவக்கடலி னாழ்வரிது திண்ணம். (௩)

என்றுரைசெ யும்பிரக லாதனையி கழ்ந்தே
வன்றிறலின் வீரர்தமை வம்மினென நூறுய்த்
துன்றிவளர் யோசனையிற் றோன்றுசுடர் மாடத்
தோன்றிவள ருஞ்சிகர வுச்சிமிசை வைத்தே. (௪)

தாழ்புவியின் மேவரையிற் றள்ளிடுதி ரென்ன
வாழ்வினரு ரப்பிரக லாதனையங் கேற்றி
வீழ்தர வுருட்டமிசை நின்றுவிழு காலை
யூழ்வினையை நூறுதிரு மாலையுனலோடும். (௫)

அரியைமற வாமதலை யங்குமுலை யாம
லரியிருதை தாங்கியறை மீதணுகு காலை
யரியபுவி மாதறையி னூடுவெளி தோன்று
யரிகுமிறு செங்கமல மானவிரு கையால். (௬)

ஏந்தியவண் வைத்திடலு மேதமகன் மைந்த
னீந்துகட லாடைபுனை நேரிழையை வாழ்த்தல்
பூந்தளிரை யொத்தவடி போற்றிவிழுந் தேத்தக்
காந்தண்மல ரேய்ந்தவிரு கையின்மெய்தை வந்தே. (௭

கண்ணனையும் வாழ்த்தியிரு கல்லறையு ளேக
வண்ணலரி தாசனறை மீதினமர் காலை
நண்ணிவரு தானவர்த நாதனெதி ரெய்தித்
திண்ணிமையொ டுன்மதலை தேகநலியாதே. (௮)

உற்றுளனெ னப்புகல லூழியன லென்னத்
துற்றுதுனி தோன்றுபொழு திற்சுதனு மெய்த
முற்றுமுணர் மாமதலை தன்னைமுக நோக்கி
வெற்றியசு ரேசர்குல மேவிய பலத்தால். (௯)

வேறு.

மறையவ ரியற்று மாபிசா ரத்தின் வழிவரு கிருத்தியை வென்றாய்
பொறைதர வுயர்ந்த மேடையி லிருந்து புடவியில் விழுத்துயிர் பிழைத்தா
கறைவிடப் பகுவாய் நெடியசூட் டரவிற் கண்டுயின் மாயனை மறந்து
குறையுறு தசுரர் குலத்தினைப் புரந்து கொற்றவ னாகிவாழ்ந் திருப்பாய். (௧௦)

புதல்வநீ யென்ன விருசெவி புதைத்தென் புத்தியைச் சிதைத்திட வேண்டா
முதலொளி வாளா லரவினாற் கயத்தான் மொழிந்திடு மக்கினி தன்னா
லிதமுறு விடத்தா லாபிசா ரத்தி லெழுந்தவெங் கிருத்திகு லத்தாற்
கதைநெடும் புரிசை யீறதா யீன்ற சுதனென வருள்சுரந் தளித்தீர். (௧௧)

சாலவு மென்னைக் காத்தளித் திட்டோர் சத்தியந் தருமநல் லொழுக்கஞ்
சீலமா சார மின்றியே யொருவன் குடிகெடச் சிந்தையி னினைக்குங்
கூலரை யணுகிக் கொல்லுமல் லாது குறையிலா வென்வயி னணுகா
மூலகா ரணமா முகுந்தனென் னுள்ள முளரியம் பொகுட்டில்வீற் றிருந்தான். ( )

ஆதலி னெளியேன் மாயனை யன்றி மற்றொரு பொருளினை யறியேன்
மூதறி வதனான் மொழிந்தன வெல்லா முதல்வநீ யுட்கொள நினையாய்
காதல்கூர் சிறுவ னெனமனம் பொறுத்துக் கடைக்கணித் தருளிநீ விடுத்தாற்
யாதக மெனினு நன்மையே யெனினும் பட்டனைந் திட்டிடு வேனால். (௧௩)

என்னுமோர் மைந்தன் றன்முக நோக்கி யிதமகி தஞ்சொல வெட்கிப்
பன்னுறு திருந்தா னிரணிய கசிபு பாலனும் பிரகலா தன்றான்
மன்னனை நோக்கி நின்றன னென்ன மச்சமான் மனுவினுக் குரைத்தா
னின்னவா றெல்லா முனிவரர் கேட்ப விசைத்தனன் சூதமா முனிவன். (௧௪)

பத்தாவது

பிரசாதபதன வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௪௭.

பதினொன்றாவது

சோடணன்வத வத்தியாயம்.

மாய மாயையின் மிக்கசோ டணனுயிர் வதத்தினை மொழிகென்னுந்
தூய னும்மைவச் சுதமனு கேட்டிடச் சுருதிமா மறைதேரு
மாயன் மச்சமா யருள்செயுங் கதையினை யருந்தவத் தோர்கேட்ப
நேய மாதவச் சூதனு நிகழ்த்துவா னெறிமுறை தவறாமல். (௧)

சிறுவ ஞேதிய மொழிமுழு துணர்ந்தவர் தெளிவிலா ரிடஞ்சேர்ந்து
குறுகி நன்மொழி யுரைத்திட வவருளங் கொண்டிடா ரதுபோலக்
கறுவு வெஞ்சினப் படுகொலை யிரணிய கசிபுதன் னிருகாதி
னுறுதி யாகவே நுழைந்திடா தழலென வுருத்தெழுந் துரைப்பானல். (௨)

சம்ப ராசுர னெனும்படைத் தலைவனைப் பார்த்தரி தனைப்போற்றி
யெம்பி யாருயி ரிழந்தது மெண்ணிலா விவனுட லுயிர்மாய்க்க
நம்பி நீசெயு மாயையி னல்லது நாடிடும் வகைகாணே
னும்பர் மாழ்குற வொருகணந் தாழ்கிலா தொறுத்திடு கடிதென்றான். (௩)

என்னும் வாசக மிரணிய னியம்பலு மிசைந்துசம் பரனுேன்
கன்ன லொன்றினின் மாயையா லவனுயிர் கலக்கியுண் டிடுவேனான்
முன்ன மேமொழிந் திலையெனப் பொற்பணி முதலிய பலவாங்கி
நன்ன யஞ்சில மொழிந்துபின் விடைகொடு நம்பியை யெதிர்கண்டான். (௪)

கண்டு சம்பர னழன்மழு வாள்கதை கழுமுள்வே றிரிசூலஞ்
சண்ட மாருத மென்னவெம் படையெலாந் தனித்தனி பொழிந்தார்த்துக்
கொண்டல் வானிடி யேறென மாயையாற் கொக்கரித் திடஞானத்
தொண்டன் மால்பத நினைந்திடச் சக்கரந் துணித்தலா லெதிர்தோன்றி. (௫)

அட்ட திக்கெலாங் கதிர்த்தழல் காலலு மாயைகெட் டலைந்தோட
விட்டி டாமலே யசுரரைச் சுட்டிட வெய்யவர் பறந்தோடி
முட்டு திக்கெலா மெரித்தலுஞ் சம்பரன் முதலினோர் போக்கற்றுத்
துட்ட ரேம்பிழை பொறுத்தெரி மாற்றெனத் தொண்டனு மருள்செய்தான். (௬)

அன்ன காலையி லழறவிர்ந் தாழியு மறைந்திட வசுரேசன்
முன்ன ரேகியே சம்பரா சுரனிவை மொழிந்திட மிகநாணி
யின்ன லங்கடன் மூழ்கியே தலைகவிழ்ந் திருந்தன னிவைகாணு
மன்ன னோர்ந்திளைத் தேங்கியுள் ளத்தின்கண் வஞ்சனை பலவெண்ணி. (௭)

இலங்கு மாருத ரூபியாஞ் சேடண னென்றிடுங் கொடியோனைப்
புலங்கொண் ஞானவித் தனையவ னுளத்தினிற் புகுந்துமா யையினாலே
கலங்க வேயுயிர் மாந்தென மதலைதன் னுளத்தினிற் கடிந்தேகித்
துலங்கு மாருயிர் குடித்திடுங் காலையிற் சுருதிநா யகன்பாதம். (௮)

உளத்தி லுன்னிடச் சோடண னுருயி ரோங்கிய கருப்பாலைக்
குளத்தை யொப்பென மாயவ னுண்டனன் கொடியசோ டணன்பாரி
யளத்தி லுப்பெனக் கரைந்திர ணியகசி பவையினி னின்பாத
தளத்தி லேவல்செய் கணவனு மிறந்தன னென்றுளந் தரியாளாய். (௯)

அழுது வீழ்ந்தனள் கண்டிர ணியகசி பென்றிடு மசுரேசன்
முழுது மூர்ச்சையாய் நெட்டுயிர்ப் பெறிந்தினி மொழிவதென் னெனவேங்கித்
தொழுது நின்றவர் தங்களை யனுப்பியே சுடர்மணி நெடுமாடப்
பழுதில் கோயிலுட் புகுந்தமைச் சரையும் பார்த்தினி துரைப்பானல். (௧௦)

இந்த மைந்தனைக் கொல்லுவ தெப்படி யென்னவன் னவர்தாமு
மந்த மைந்தனே யரிதிரு வருளுளான் கொல்லுவ தரிதாகு
மெந்தை நீயவன் றனைமக வென்றினி யிட்டமுள் ளவர்போலச்
சிந்தை செய்வது காரிய மெனவவன் செவிப்புல னுழையாதே. (௧௧)

தன்னுயிர்க் கழி வெய்திடுங் காலமுன் சார்ந்தகா ரணத்தாலே
மன்னன் மைந்தனைக் கொல்லுவா னெண்ணியே யிருந்தன னெனமாயன்
முன்ன மச்சமாய் மனுமுக நோக்கியே மொழிந்தன னெனஞானந்
துன்னு மாதவ நைமிச முனிவர்க்குச் சூதமா முனிசொன்னான். (௧௨)

பதினொன்றாவது

சோடணவத வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௨௫௬.

பன்னிரண்டாவது

பிரகலாத

தேவேந்திர சம்வாத வத்தியாயம்.

ஏர்தரு பிரக லாத னிந்திர னொடுசம் வாதஞ்
சீர்தரப் புகன்ற வாறு செப்பென முனிவர் கேட்பச்
கார்தரு மேனி மாயன் கதிர்மகற் குரைத்த வண்ணம்
பேர்தரும் புராணச் சூத முனிவரன் பேசு வானால். (௧)

நறுகண்வெள் ளெயிற்றுப் பேழ்வாய்த் தயித்திய ராசன் மைந்த
னுறுதியின் மனத்தி னெண்ணு மொருமையுங் குறித்துச் சீறிக்
கறுவியொன் றுரைத்தி டாமற் கருதியாங் கிருக்க வெள்ளி
பொறுமைகூர் மைந்தன் யாவும் புகரறக் கற்று னென்றான். (௨)

அம்மொழி கேட்டிம் மைந்தன் றன்முக மன்பி னோக்கிச்
செம்மைகூர் மைந்த கற்ற கல்வியிற் சிறந்த ராசர்
தம்மனத் துயர்நன் னீதி சத்துரு விடத்திற் சாமம்
வெம்மையில் பேதந் தானம் விளங்கிய தண்ட மற்றும். (௩)

மித்திர ரிடத்தி னட்பு வெற்புநீர் வனங்க ளாதி
யுத்தமத் துருவங் காக்கு முறுதிகண் முதலாங் கல்வி
புத்திகூர் புகர்பாற் கற்ற வகையெலாம் பொருந்தச் சொல்கென்
றெத்துறு முடல்தை வந்தே யோதலு முரைப்பான் மைந்தன். (௪)

அய்யவிங் குரைத்த கல்வி யாவையு மரிதிற் கற்றேன்
வய்யகத் தரச னாட்சி வலிமைவெம் பகைசீர் நட்பும்
பொய்யலான் மெய்யொன் றில்லைப் புகலரி புரங்கட் கெல்லாந்
துய்யனு விருந்தே யெள்ளுட் டோன்றிடு நெய்யே போலும். (௫)

பூவுறு வாசம் போலும் பொருந்தலாற் சராச ரங்கட்
சேவுறு செயலொன் றில்லை யிடருறப் புரியு மாயை
தாவுறு துடற்றும் பொல்லா விடையஞ்சத் தருவா ஞான
மோவறப் பொருந்த ருனே மித்துரு வுறுதி யாமால். (௬)

இந்திய மடக்கி யெண்ண மொருவழி யியைந்து செல்லப்
புந்தியோ டரியைப் போற்றல் பொருவிலா தாண வாகு
நந்திடா திவையென் றோர்ந்து நாடுமென் னுள்ள மன்றிச்
சிந்தைகூர்ந் திடாது பொய்ம்மைச் செல்வத்தின் செருக்கை யென்றான். (௭)

என்றசொற் கேளா முன்ன மிரணிய கசிபு வெம்பித்
தன்றிருக் குமரன் மார்பிற் றாளினு லுதைத்துத் தள்ளி
வென்றிகூ ரசுரர் தம்மின் விப்பிர சித்தி ராகு
நின்றவர் தம்மை நோக்கி நெட்டராக் கயிற்றால் வீக்கி. (௮)

வேலையி னுப்பண் வீழ்த்தி விரைந்திவற் கொன்மி னென்னுங்
காலையிற் பிரக லாதன் றனையராக் கயிற்றால் வீக்கிச்
சேலைநீர்க் கடலில் வீழ்க்கத் திமிங்கில கிலங்கண் ஞான
நூலையோர் மதலைக் கஞ்சி நுவலழல் வடவை யென்றே. (௯)

திசைதொறு மிரிந்த காலைத் திரைநெடுங் கடனீர் பொங்கி
விசையினிற் கொலைமேற் கொண்டு விரிபுவி விழுங்க மன்னன்
றசையுனு மசுரர்ப் பார்த்துச் சாற்றுவா னமிழ்ந்தா னின்றே
னசைவுறு தமிழ்ந்த வெற்போ ராயிர கோடி வாங்கி. (௧௦)

கடன்முகட் டெறிந்து வீழ்த்திக் காதமோ ராயி ரந்தான்
றிடர்பட மைந்த னுகந் தெரிவுறு வண்ண மூடிப்
புடவியி னிறந்தா னென்னப் புகன்றிடச் செய்தி ராயி
னிடர்கெடு முமக்கே யென்ன வவ்வகை யியற்றி னூரால். (௧௧)

மலையொரு கோடி வாரி வாரிமீ தெறிந்து தூர்ப்ப
நிலைகெடா திருந்தான் மைந்த னெடுவரைப் புறத்தின் வீழ்ந்த
சலைவலான் றனக்கு நேரா யக்கன்மே லிந்தி ரன்று
னுலைவிலா வுள்ளஞ் சோதித் துறுதிகேட் டிடவர் துற்றான். (௧௨)

உற்றவன் றனைக்கை கூப்பி யுரியநன் முகமன் கூறிப்
பற்றுறு பழமை போலப் பகர்ந்துநல் வரவே தென்னத்
துற்றபே ரன்பி னோடு மிந்திரன் சொல்வான் ஞானங்
கற்றுளா யிப்பா டென்கொல் கழறுதி யறிவின் மிக்காய். (௧௩)

யாவரே டெனினுந் தங்கட் கியைந்திடு தனுவைக் காக்கைக்
காவன புரித லன்றி யல்லவை புரிவர் கொல்லோ
சூவுள வரையுந் துன்பந் தானுற வசத்தி னேனும்
பாவக மென்னை யுள்ளப் பரிவினைப் பகர்தி யென்றும். (௧௪)

துன்புறுங் காலைச் சற்றுந் துயரமொன் றின்றி நீங்கா
வின்பம்வந் துற்ற தென்ன விருந்திடுந் தன்மை யென்கொல்
வன்புறு வலியி தென்கொல் வகுத்துரைத் திடுதி யென்ன
அன்புறு மமரர் வேந்தே யறைகுவல் கேட்டி யென்றான். (௧௫)

புகன்றிடு நன்மை தீமை பொருந்தலூழ் வினையா லீசன்
சகந்தனி லுயிர்கட் கெல்லாந் தானுயிர்க் குயிராய் நின்று
மகந்தைமெய்ஞ் ஞானங் கல்வி யழித்தமைத் திடுவ னல்லாற்
பகர்ந்திடு புருட ராலே நினைத்தவை பலித்தி டாவால். (௧௬)

ஓங்கிய புவியிற் செல்வத் தொடுஞ்சில ருற்றார் சில்லோர்
தாங்கினர் வலுமை யீதே யூழ்வினை முயற்சி தன்னாற்
றீங்குறு நன்மை வேட்டோர் தீவினை யடைவர் தீமை
நீங்குறு மனத்தோர் நன்மை நிறைந்திட நிலத்தில் வாழ்வார். (௧௭)

தீதறு செல்வம் பெற்றுஞ் சிலர்நுகர் வுறுதி கூறார்
கோதற நுகர்வோ மென்பார் கூர்வர்நல் குரவுஞ் சூழ்வர்
ஆதலாற் புருடன் றன்னு லறிந்துசெய் செயலொன் றில்லை
யேதமின் முயற்சி யெல்லா மிறைவன்றன் முயற்சி யாமால். (௧௮)

என்னுளத் தறிவா னன்மை தீமையு மெனக்கொன் றில்லை
பொன்னுல கதிப வென்னப் புரந்தர னித்தப் புத்தி
மன்னுவ தென்கொ லென்ன மகிழ்ந்துயர் பிரக லாதன்
பன்னிய குரவ னன்பாய்ப் பகருப தேசத் தாலும். (௧௯)

வேதசாத் திரபுராணம் விளங்குமா கமங்க ளெல்லாங்
கோதற வுரைத்தன் மெய்யாக் கொளும்விசு வாசத் தாலு
மேதமி லாத வான்ம நற்குண மிசைத லாலும்
போதமொ டியைந்து நல்ல புத்தியே பொருந்து மென்றான். (௨௦)

இந்திரன் மகிழ்ந்து கேட்டிங் கிதயநெக் குருகி மைந்தன்
சிந்தையின் றெளிவை யோர்ந்து சிறப்புடன் போற்றிப் பூசித்
தந்தரத் தெழுந்தா னென்றே மனுவினுக் கரிசொல் வண்ணம்
புந்திகூர் முனிவர் கேட்பப் புகன்றனன் சூதன் மாதோ. (௨௧)

பன்னிரண்டாவது

பிரகலாத தேவேந்திர சம்வாத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், ௨௮௦.

பதின்மூன்றாவது

விட்டுணு தெரிசன வத்தியாயம்.

அரியமெய்ஞ் ஞானங் கல்வி யறிந்தியல் பிரக லாதன்
பரிவொடு மரிநா மத்தைப் பகர்ந்திட விண்டு வெய்தித்
தெரிசனங் கொடுத்த வாறு செப்பென முனிவர் கேட்பக்
கரியமான் மனுவுக் கன்று கழறுமா றுரைப்பான் சூதன். (௧)

இந்திரன் போய பின்ன ரெறிதிரைக் கடல்வாய் வைகிச்
சுந்தரத் தியான மோன சமாதியிற் றுளவ மாயன்
பைந்துணர்ப் பதத்தைப் போற்றப் படர்சிறைக் கலுழ னெய்திச்
செந்தழற் சுடிகை நாக பாசத்தைச் சிதைத்துப் போனான். (௨)

போயபின் வருண ராசன் மதலைமேற் பொருந்தும் வெற்பை
யேயகைத் தரங்கத் தாலே யெடுத்தெடுத் தெறிந்து ஞானத்
தூயனைக் கரைமேற் சேர்த்துத் துண்ணென வெதிர்வந் துற்றுச்
சேயனைக் கட்டும் பாம்பைச் சிதைத்தனன் கலுழன் யானும். (௩)

நின்றன்மெய்த் தழற்காற் றூம னெடுந்திரைக் கரத்தி லேந்தித்
துன்றிய கரையிற் சேர்த்தேன் சுடர்மணித் திகிரி யேந்து
மன்றலந் துளவத் தெம்மா னிடத்தின்மா பத்தி யுள்ளா
யென்றுபூ சனைசெய் தேத்தும் வருணன்மு னிசைப்பான் மைந்தன். (௪)

விரிதிரைக் கடலின் வேந்த விண்டுவை யிடைவி டாம
லரியபாம் பணைநற் பாய லறிதுயி லமர்தல் கண்டு
தெரிசனஞ் செய்யு நின்போல் யான்றெரி சிக்க வேண்டும்
பரிவுட னருடி யென்று பணிந்தன னறிவின் மிக்கான். (௫)

பணிந்தநா னியைத்தன் கையாற் பற்றியே வருண ராசன்
பிணிந்தபே ரன்பா னுன்னைப் பிரிவுறா திருந்தான் மாயன்
றணிந்துதோத் திரஞ்செய் தாயேற் றூயினு மன்பாய்த் தோன்றித்
துணிந்தருள் செய்வா னென்று சொல்லியே மறைந்து போனான். (௬)

மறைந்தபி னிறைந்த கல்வி மானெனும் பிரக லாத
னுறைந்தவே தாந்த சாரத் துண்மையாற் றுதித்துப் பின்னு
நிறைந்தமும் மலமு நீங்கி நிலவெனத் திகழு முள்ளத்
துறைந்தமின் னொளிபோ லோங்கா ரத்தரு ளுருவ மாகி. (௭)

மருவுமிந் தியங்க ணீத்து மாதுரு காணி யாசம்
பெருகிய நிபாசத் தேகம் பெற்றுமுக் குணமுஞ் சேர்ந்தோ
ரிருதய கமலத் தன்னி லிருசுட ரங்கி யென்னத்
தெரிதரும் பொருளை மிக்கான் சோடண தகனத் தோடும். (௮)

பிலாவன தெக்கி டப்பத் தியும்பிரா ணப்பிர திட்டை
நிலாவொளி யாலே நேர்ந்த நிட்கள நிலேசோ தித்தே
யுலாவிரே சகநற் பூர கும்பகத் தோங்கு நாடி
குலாவிய சுத்தி செய்து கோதின்மா யோகத் தோடும். (௯)

பதுமவா சனங்க ளாதி பகருமா சனங்க ளாலே
சதுமறை துதிக்கும் வண்ண மிருந்துநற் றியானஞ் செய்யிற்
கதுவிரு டிகளுங் கங்குற் கடிதுதூ ரத்திற் கூவப்
பொதுளுநா தாந்த மென்னப் பொருந்தமு திணேப்பி ராணன். (௰)

ஆதியாம் பஞ்ச வாயு வமைதரு தானந் தன்னி
னீதியா னிறுவித் தேக நீங்கிடா தமர்ந்து நித்த
மோதிய வத்தி சாய தேபரி ணமதே யோங்கிப்
பேதியா வாதத் தேய பட்சிய தேபின் பேராம். (௧௧)

நசியது விகார மாறு நவையறப் போக்கி யோடும்
பசியகாஞ் சனமு மொப்பா மென்றதிற் பற்றென் றின்றி
யுசிதமாய்த் தவஞ்செய் தோர்த முளத்தமர்கனியை ஞானச்
சுசிகொளிந் திரிய மைந்துட் சொலுங்கரு மங்க ளேந்தும். (௧௨)

மருவிய பஞ்ச வாயு வளர்தரு சத்த மாதி
பெருகுமாத் திரைகண் மிக்கா மனத்திணேப் பேசும் வேதங்
கருதுகாற்றுத ரத்தாற் கனவயி ராக்கி யத்தா
லுருவுறு மங்கி யாலே யுளத்திணே யுறுதி செய்தும். (௧௩)

இவ்வகை யர்வுஞ் செய்தற் குரியரா யிருந்தெஞ் ஞான்றுஞ்
செவ்வகைப் பெரியோ ருள்ளஞ் சிறந்தொளிர் பொருளேப் போல்வர்
வெவ்விணேக் காம மோகம் விரியுமாச் சரியங் கோபந்
தவ்வலின் மதமு லோப மாயசத் துருவிற் பட்டும். (௧௪)

ஆசையோ டுழலு மென்முன் வருவதாச் சரிய மென்றே
நேசமோ டறிவு நீங்கா விதயநெக் குருகிப் போற்றிப்
பூசனே புரிய மாயன் பொருகதை திகிரி சங்கந்
தேசுறு வாள்வி லேந்துஞ் செங்கையிற் பொலிந்து தோன்ற. (௧௫)

செம்மணி திகழு மார்பிற் செறிதுழாய்ப் படலே மின்னிப்
பம்புநீர் பொழியு மேகப் பான்மைசே ருருவி னுகக்
கைம்மலேக் கருளு நீர்மை கடுப்பமெய்க் கருணே வள்ள
லம்மவோ வென்று மைந்த னதிசயங் கொளவந் துற்றுன். (௧௬)

உற்றிடுங் காலே மைந்தன் கண்விழித் துருவ நோக்கிப்
பெற்றபே றென்போல் யாவர் பெற்றனர் பிருது விக்கண்
மற்றவா னுலகி னென்ன மகிழ்ச்சியொ டினிது போற்றிக்
கற்றவே தாந்த வாய்மைக் கருத்துறத் துதிசெய் தானுல். (௧௭)

துதிசெய்து பதத்தில் வீழ்ந்து தொழுதுடல் புளகம் போர்ப்ப
நதியினீ ரெனவா னந்த நயனநீர் பதத்தின் வீழ
மதிபர வசமாய் நின்ற மதலையை மலர்ப்பூங் கையால்
விதிமுறை தழுவிப் புல்கி விரைவினி னுச்சி மோந்தே. (சஅ)

தாயினு மன்பா னோக்கித் தவப்பெரும் புதல்வ வுன்ற
னேயமே துரைத்தி யீது நேர்ந்தெமைக் காண்ட லின்றி
யேயதொன் றில்லை யென்றுள் ளெண்ணம்யா மறிது நீயிங்
காயபே ருலகிற் சின்னு ளறநெறி நிறுவி வாழ்வாய். (சகூ)

வாழ்ந்திடுங் காலை யாமே வளர்நர சிங்க மாய்நீ
தாழ்ந்திடக் காட்சி யீந்து தயங்குபொன் மோலி சூட்டிச்
சூழ்ந்தபே ருலகை யாள நல்கியுன் றனைத்தொ ழாதா
ராழ்ந்திடப் புரிந்து பின்ன ரருள்வம்மை குந்த மென்றான். (உ0)

என்றரி யியம்பிக் காணு தேகலு மிருளை நீக்கித்
துன்றிடுங் கதிரான் மாயன் றெண்டனைத் தொழுவான் வெய்யோ
னன்றிகொ ளுதய வெற்பி லுதித்தலு நவைதீர் மைந்த
னென்றிடப் புரியு நித்த கருமங்க ளுஞற்றிப் பின்னர். (உக)

மாயனைத் தொழுது போற்றிக் குரவர்மந் திரத்து ளெய்தி
பேயபே ரன்பினோடு மிடரறுத் திருந்தா னென்ன
நேயமார் மனுவுக் கன்று நெடியமா லுரைத்த வண்ணந்
தூயமா முனிவர் கேட்பத் துகளற வுரைத்தான் சூதன். (உஉ)

பதின்மூன்றாவது

விட்டுணு தெரிசன வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௬0உ.

பதினான்காவது

நாரசிங்க வுற்பத்தி யத்தியாயம்.

அரிநர சிங்க மாகி யணிபெறு தம்பத் துற்ற
பரிசினை யுரைத்தி டென்று பணிந்திடு மனுவுக் கன்பாய்த்
தெரிதரு மச்ச மாயன் றெரிந்தினி துரைத்த வண்ணந்
துரிசறு முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொல்லும். (க)

குரவனன் மனைக்க ணின்றுங் கோதறு பிரக லாதன்
வரமிகு மசுரர் கோமான் மலரடி பணிந்து போற்றி
யுரமுற வணைத்தன் போடு மடியில்வைத் துச்சி மோந்து
சிரமுத லுடறை வந்து சினமொழித் தினிது சொல்வான். (உ)

அய்யவித் துன்பம் யாவு நீக்கியா ருயிர்போக் காம
லுய்யவே பெற்ற பேறென் றவமென வுரைத்தன் ஞேனை
வெய்யவன் விடுப்ப மேவி வியன்மனைப் புறத்தி னெய்தித்
துய்யமால் பூசை யாற்றித் துதித்துவாழ்ந் திருந்தான் சின்னாள். (௩)

அந்நக ரதனில் வாழு மசுரரி னறிவுள் ளோர்க
ளின்னவன் போன்மால் பூசை யியற்றியே போற்றி நின்றார்
மன்னிய வரிநா மத்தை வழுத்துதல் செவியு ருமுன்
றன்னக ரரிநா மத்தாற் ருழ்ந்ததென் றுளத்தி னெண்ணி. (௪)

அரியணைப் புறத்தின் வைகி யசுரரிற் சில்லோர்ப் போக்கி
யெரிகதிர் சாயங் கால மிளவலைக் கொணர்மி னென்னப்
புரிதொழி லாளர்க் கூவிக் கொணர்தலும் புதல்வர்ப் பார்த்து
வரிவிழிக் கனல்கள் சிந்த மடித்தித ழதுக்கிச் சொல்வான். (௫)

மதியிலா மைந்த கேளென் வாளினுக் கிரையாய்க் கூற்றின்
பதியினின் வாழ்தி கொல்லோ வரிபெயர் பகர்ந்தி டாமற்
றுதிசெய்திங் கென்னைப் போற்றி யிருத்தியோ துணிந்து சொல்கென்
றதிசயச் சந்திர காச வாளுறை யகற்றி யோங்கி. (௬)

அரிகரி யென்று போற்றல் விடுத்திடவ் வரியே யெங்கும்
பரிவுட னிருப்ப னென்று பகர்ந்தனை யதுமெய் யாயிற்
றெரியுமித் தம்பத் துள்ளுஞ் செறிந்தினி திருப்ப னென்றாற்
றுரியமாய்க் காட்டி டென்னத் தூணினைப் புடைத்தான் கையால். (௭)

புடைத்திடுங் காலே யண்டம் பூமியெண் டிசைகள் யாவு
முடைத்துவே ருகி யுக்க வொலித்ததோர் சிங்க நாதங்
கடைக்கன விடியோ யாதோ வென்றுளங் கலங்கி நின்ற
படைத்தலை யுழவர் யாரும் பதைபதைத் தயர்ந்து வீழ்ந்தார். (௮)

வீழ்ந்தபோ தெழுந்து கோப மீக்கொளு மசுரர் வேந்த
ஞழ்ந்தபே ரொலியீ தேதென் றதிசய முற்றான் றூணைப்
போழ்ந்தரி நார சிங்க வுருவமாய்ப் பொலிந்து நின்றான்
வாழ்ந்தன னினியா னென்று மகிழ்ந்தனன் பிரக லாதன். (௯)

திசைகெடக் கர்ச்சித் தோங்கித் திகழ்ந்திடு தறியிற் றேன்றும்
விசையமா நார சிங்க வலியினை வெய்யோ னோக்கி
யிசைதரு மாய னின்னே னென்றன ருயிரை யுண்ண
வசையுற திருந்தான் றுழா தடர்ந்துபோர் செய்வ னென்றே. (௧௦)

தண்டொன்று கரத்தில் வாங்கிச் சண்டமா ருதவே கத்தா
லண்டமுங் கிழிய வார்த்தாங் கரிநர சிங்க முன்னர்க்
கண்டிட நின்றா னென்று கதிர்மகன் மனுவுக் கன்று
விண்டுசொல் கதையைச் சூதன் முனிவர்க்கு விளம்பி னானல் (௧௧)

பதினான்காவது

நாரசிங்கவுற்பத்தி யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், ௩௧௩.

பதினைந்தாவது

சங்குல யுத்த வத்தியாயம்.

அரிநர சிங்கத் தோடு மசுரர்சங் குலயுத் தத்தை
விரிவுற வுரைத்தி டென்று வெய்யவன் மைந்தன் கேட்ப
கரியமா லுரைத்த வண்ணங் கனிந்தறி முனிவர்க் கன்பாய்த்
துரியநா தாந்த ஞானச் சூதமா முனிவன் சொல்லும். (க)

கதைகொடு மரியைச் சாடக் கருதிர ணியன்றன் கையைப்
பதையுறப் பிடித்துக் காலில் வீழ்ந்துரை பகர்வான் மைந்தன்
சிதைவற வுரைப்பல் கேண்மோ செங்கண்மா றம்பந் தன்னி
னுதையமா நரசிங்கத்தி னுருக்கொடு வந்தா னின்னோன். (உ)

ஆதியா யனாதி யாகி யந்தமு முடிவு மின்றிப்
பேதியா வுடலுக் கெல்லாம் பிறங்கிய வுயிராய் ஞானச்
சோதியால் விளங்கு மூன்று சுடருக்கு மொளிய தாகி
நீதியாய் நின்ற மூர்த்தி நிருமல னுருவம் பாராய். (ந)

அண்டமொ டகண்ட மாகி யருவமொ டுருவ மாகிப்
புண்டரி கத்தோ னாதி தேவரும் போற்ற நின்ற
விண்டுவோர் நரசிங் கத்தி னுருவ மாய் விளங்கி வெய்ய
கண்டகர்க் கொன்று வானோர் கலங்கிடா தருள வந்தான். (ச)

இவனடி பணியின் யாஞ்செய் குறையெலா மனத்தெண் ணாமற்
பவவினை யொழித்து மேலாம் பரகதி யருள்வ னென்னத்
தவவினை மறையோர் போலச் சாற்றினை யரியே யாகி
லுவமையி லுயிருண் பேனென் றுதைத்தனன் மைந்தன் றன்னை. (ரு)

உதைத்தலு மைந்தன் வீழ வுருத்தெதி ரசுரர் தம்மிற்
கதத்தொழில் விப்பிர சித்தி ராகுவைக் கனன்று நோக்கிப்
புதைப்பெரு வனத்துள் வைகிப் பொருந்துமிம் மிருகந் தன்னைப்
பதைப்பற முழைஞ்சுட் சேர்த்திப் பருப்பதத் தடைமி னென்றான். (சு)

அலையெனிற் படைக ளாலே யறுத்துமெய்த் தசையைத் தின்று
நிலைபெறு துயிரை மாந்தி நிலத்துறப் புதைப்பி ரென்ன
வுலைவிலா நரசிங் கத்தை யுடற்றுவான் சூழ்ந்து தண்டஞ்
சிலையுறு மம்பு வேல்வாள் பட்டையந் திகிரி குந்தம். (எ)

தோமரம் பிண்டி பாலஞ் சுரிகைகை யம்பு தோட்டி
யேமமாம் வாங்கு வங்கி யிலைநெடுஞ் சூல மாதி
காமர்வெம் படைகள் யாவுங் கார்மழை பொழிந்த தென்னத்
தாமமார் நரசிங் கத்தின் றனியுடன் மூடி யார்த்தார். (அ)

அக்கணத் தரிகோ ரங்சொண் டங்கமீ ரிலக்க நீள
மிக்கமார் பகலம் லட்சம் யோசனை விளங்கத் தோன்றித்
தொக்கவான் படைகள் யாவுந் துகள்பட வுங்க ரித்துக்
கொக்கரித் தட்ட காசங் கொண்டிட வசுரர் மாண்டார். (கூ)

உயர்ந்திடு முயர்ச்சி யாலு முங்காரக் காற்றி னாலு
மயர்ந்தன ரசுர ரந்தச் சபையெலா மதிர்ந்து வீழ்ந்த
மயன்றனி வரத்தாற் செய்த மணிச்சபை யழிதல் கண்டு
புயம்புடைத் தெழுந்து பொங்கிப் பொருக்கென விரணி யன்றான். (கo)

வில்லொரு கரத்தி னேந்தி வியன்றவத் தரிதிற் பெற்ற
சொல்லரும் பிரம பாணஞ் சுடர்ப்பாசு பதமால் வாளி
யெல்லவன் பகழி யங்கி யெரிசனை சோம பாண
மொல்லைமந் திரத்திவ் வத்திர மூறுற வெய்து பின்னும். (கக)

காலசக் கரமால் சக்கரங் கருதிடு மிந்திரசக்கர
மேல்தா னந் தரும சக்கர மிளிர்நவக் கிரக சக்கர
மாலமார் கால தண்ட மங்கிநீ ரிடிக ளாதி
பாலலோ சனன்கைச் சூலம் பவனன்கங் காளந் தோட்டி. (கஉ)

முதலிய படைகள் யாவு முறைமுறை மந்தி ரத்தா
லிதமுறப் பூசை யாற்றி யெறிந்தன னெறிந்த வெல்லாங்
கதமெரி வரைமேற் பெய்த கார்ப்பாசந் திரண மேய்ப்ப
வதமுற நெற்றிக் கண்ணொன் றழகுற நார சிங்கம். (கரு)

விழித்திடப் பொழிந்த செந்தீ வெந்திற லசுரர் சேனை
யழித்ததால் வலியுங் குன்றி யயர்ந்தன னசுர னென்றே
யொழித்துமும் மலத்தை யுள்ளத் தொன்றிடு மோன ஞானஞ்
செழித்தமா தவர்க்குச் சூத முனிவரன் செப்பி னானால். (கச)

பதினைந்தாவது
சங்குலயுத்த வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௬௨௭.

பதினாறாவது

சேனவத வத்தியாயம்.

கரிரத துரக மிகவுள வீரக் கழல்புனை சேனையின் வதத்தை
யரிகட னடுவின் மச்சமா யுதித்தன் றலங்கல்சேர் மனுவினுக் குரைத்த
பரிசுரை யென்னப் பழமறை தெளிந்து பண்ணவர்க் கவியினை யருத்தப்
புரிமக மியற்றுஞ் சவுனக ராதி முனிவர்க்குப் புகலுவான் சூதன். (க)

உடர்நர சிங்க நெற்றியி னனலே யுகுத்திடும் விழியினைத் திறக்கத்
தயவிலா வசுரர் குழுவெலா மெரிந்து தரையினிற் பூதியா யுறலும்
புயவலி கெழுமு மிரணிய கசிபு பொருகடல் விடமெனப் பொங்கிப்
பயமுறு திருந்த வீரரை யேவிப் படையெலாம் வம்மெனப் பணித்தான். (உ)

பணித்திடுங் காலைச் சதுரங்க பலமும் படைத்தலை வீரருங் குழுமிப்
பிணித்திடு பாசங் குந்தநெட் டயில்வேல் பிண்டிபா லங்கனற் றிகிரி
கணிச்சிவாள் சூலம் பட்டைய முசலங் கார்முகஞ் சிலீமுக மாதி
துணித்திடு படைகள் யாவையுந் தூர்ந்து சுற்றினர் சுற்றலு நெடுமால். (ங)

நின்றிடு மிடம்விட் டோரடி பெயர்த்து நெற்றியிற் கண்ணைவிட் டெரித்துக்
கொன்றது மன்றி யிருகர நீட்டிக் குழுமிய வசுரரைப் புடைத்து
வென்றிகூர் கந்தத் துணையினைச் சிலிர்ப்ப வேறுவே றுகியே யுடைந்தார்
வன்றிற னார சிங்கமுன் கனன்று வருபடை பார்த்தெதிர் கறுவி. (ச)

காலினுன் மாட கூடத்தை யிடிக்கக் கதிர்மணி முடியடக் ககன
மேலிய வண்ட கடாகமு மிடிந்த வெந்திற லசுரர்கள் பெண்டீர்
பாலர்க ளலறப் பட்டின நடுங்கப் பணிமுடிப் பூதலங் குலுங்க
வேலுறு திசைகள் செவிடுபட் டெரிநீ ரெழுகடல் வெதும்பின வசுரன். (ரு)

சேனையின் குழுவிற் பன்றிநாய் கவையஞ் சேனமா டயங்களுங் கழுகோ
டானையொட் டகம்பே யரிகொடுங் கூலி யாதியா யினமுகத் தசுரத்
தானையின் றலைவர் தமைக்கணித் தேவத் தங்கள்கைப் படையெலா மெடுத்து
வானைநேர்ந் துயர்ந்த நரசிங்க மூர்த்தி வடிவெலா மறைந்திடத் தூர்த்தார். (சு)

வெள்ளியங் கிரியின் வான்மழை கடுப்ப மேனியிற் படருந்தன் வாலா
லள்ளிலை நெடுவே லசுரர்க டலைவர்க் கன்றவான் மறைந்துகன் மழைக
டெள்ளிய வரைபோற் பொழிந்தனர் நார சிங்கத்தின் றிருமுடிப் பட்டுத்
துள்ளிநீ றுகச் சிதைந்தன பின்னுஞ் சுடர்மழை சொரிந்தெதி ரார்த்தார். (எ)

சுடர்விடு நெருப்பின் மழையினை மேகத் தொகுதியா லிந்திர னவித்தான்
படர்தழ லவிய வசுரவெல் வீரர் பாயிருண் மாயையை விடுத்தா
ரிடர்தரு மிருளை நரசிங்க மூர்த்தி யிரவியி னுருக்கொடு துரந்தே
புடவியி னசுரர் குழுவெலா மடியப் புயங்கரங் காலினாற் புடைத்தான். (அ)

புடைத்திட வசுர ரெதிர்நில்லத் தோடிப் போயின ரிரணிய கசிபு
கடைக்கன லென்ன வெதிர்த்துநின் றுருத்துக் கலங்கிலா நரசிங்க மூர்த்தி
நடைப்பெரு மையுஞ்சீர் வீரமும் பார்த்து நன்றுநன் றெனச்சிரந் துளக்கிப்
படைத்திடு தவத்தின் பேறிதோ வென்று பகர்ந்தன னென்றனன் சூதன். (க)

பதினறவது

சேனுவத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ருருசு.

பதினேழாவது

துர்ச்சகுன தெரிசன வத்தியாயம்.

துலங்கிய தவத்தி னிரணிய கசிபு தொல்லுயிர்க் கிறுதிவந் தெய்தக்
கலங்குதுர்ச் சகுனங் கண்டிடும் வகையைக் கருத்துற வுரைத்திடு கென்று
புலங்களைந் தினையு மொருவழிப் போக்கும் புகரறு முனிவரர் கேட்ப
வலங்கலம் புயத்து மச்சமான் மனுவுக் கருளுமா றறைகுவான் சூதன். (க)

ஆவகன் விவகன் பிரவக னறையும் பராவக னுத்துவ கன்பார்
சாவகன் பரிவ கன்னெனும் பெயர்சேர் சத்தமா மருத்துவ ருகாந்த
மேவவந் திடுநாள் வருபய மடைந்தார் விளங்கிய நவக்கிர கங்க
டாவரு நிலைமை தவறியே மறுகிச் சார்ந்தன தேவர்தா னவர்கள். (உ)

மானுடர் நடுக்க முற்றன ரனில முகாந்தநாள் வந்தெழு மோதை
தானுற வொலித்த புட்கலா வருத்த மாதியாச் சாருமே கங்க
ளூனுறு முயிருக் கிடரினை விளக்கு மசனியை யுகுத்தவால் விண்ணிற்
பானுவு நீல நிறத்தினை யடைந்தா னடித்தன பலப்பல கவந்தம். (ங)

இரவியைத் தூமம் வளைந்திட விரவி யேழுருத் தோற்றிட வியைந்தான்
பரவிய மதியி னிரண்டுகோ டியினிற் பகர்தரு வெள்ளிநல் வியாழம்
வரமருள் வாமப் புறத்தினும் வலது புறத்தினு மருவிவீற் றிருந்தார்
திரமுறு முடவ னழன்மதி நடுவிற் செறிந்தினி திருந்தன னன்றே. (ச)

ஒழிந்திடுங் கிரக மதியினை மறைத்த வும்பரின் மேகமுஞ் செந்நீர்
பொழிந்தவெங் குறைக்கொள் ளியுமுடன் விழுந்த பொருந்தகா லத்தினில் விளரி
மொழிந்தளி முரலு மலரிமுற் றருக்கண் முறைமுறை யீந்திட வனத்து
டழுந்திய கரடி முதன்மிரு கங்க ளாவுடன் மறுகிவாழ்ந் தனவால். (ரு)

நதிமுறை தவறி வெதும்பியே யோட நடுங்கின பூமிபா தலங்கள்
மதிகதி ரிரதந் திசைதடு மாறி நடந்தன மன்னவர் மனைகள்
புதியவாம் புரவி யானையின் சாலைப் புடையினிற் றேனிறுல் வைத்த
கதிர்நெடு வாளின் றுரையீ மொய்த்த காக்கைகள் புணர்ந்துவீழ்ந் தனவால். (சா)

இப்படி பலவாந் துர்ச்சகு னங்கண் டிறைவனு மிரணிய கசிபு
முப்புவ னங்க ளனத்தையு மழிப்பெ னெனச்சின மூண்டெழுந் தார்ப்பப்
பைப்பணி முடியிற் றுங்கிய புவனப் பரப்பெலாங் குலுங்கிடப் படர்வா
னப்புறத் தளவும் வரைகளா மேருப்பா லண்டமூ டெழுந்துவீழ்ந் தனவால். (எ)

அக்கண நான்கைந் தெழுதலை யுடைத்தா யமர்தரு வாளரா வெனைத்து
மிக்கவஞ் சினப்பல் லதுக்கியே சீறி விடாதழ லிறைத்தபா தலத்திற்
புக்ககார்க் கோடன் காளிக னேலா பத்திரன் பொருவின்மா பற்பன்
றக்கனே மதாலத் துவசனே சேடன் றனஞ்சயன் வாசுகி யனந்தன். (அ)

பத்திரன் பிரகம் பிதன்முத ஞகர் பயந்தரப் பாய்திரைக் கங்கை
யுத்தம யமுனை கவுசிகி சரயு நருமதை தாபி கோதா வேரி
வித்தகத் தாம்பிர வருணியே சிந்து நதிமிளிர் கிட்டின வேணி
முத்தியைத் தருபயோஷ்ணிசுச வதிமொழி மேகலை சோணம். (௯)

கோனசை சுவேணி சருமனு வசிர கூறுமே கவுதிகோமதியென்
றூனமா நதிகள் குளம்பின் சம் புத்தி வினின் மத்தியாயவத் தீவோ
ணைமில் புட்ப வாசினி காள மகிமணித் தீவினு ளோங்கித்
தானமாப் பசும்பொன் விளைதரு பூமி சாற்றிர சிதம்விளை பூமி. (௧௦)

முதலிய தீவ நதிங்களின் மகைம் பண்டிர மொழிசரு மங்கண்
சிதைவிலா வங்கங் கலிங்கமே சருவ மல்லவி தேசகநற் காசி
யுதவுகோ சலஞ்சி ராட்டிரம பாகி லீகமே யுயர்சரும போச
மிதமொழிச் சோழன் பாண்டியன் சேர னிவர்பெறு பெற்றிடு தேயம். (௧௧)

முதலிய வைம்பத் தாறெனுந் தேய மொழித்திடு கிரிகளா மறிதும்
விதமுறு சத்த குலப்பருப் பதங்கள் வெண்டிரைக் கடல்களோ ரேழு
நதமுதல் யாவு நடுங்கின வன்றே நாடுதுர்ச் சகுனத்தின் வகையை
யிதமுறு மாயன் மனுவினுக் குரைப்ப விருந்தவர்க் குரைத்தனன் சூதன். (௧௨)

பதினேழாவது
துர்ச்சகுன் தெரிசன வத்தியாய முற்றிற்று.

பதினெட்டாவது
இரணியகசிபு வத அத்தியாயம்.

இரணிய கசிபு செய்த விருந்தவப் பயன்கள் குன்றி
யரணுறுங் தருக்கி னன்னோன் வதத்தினை யறைக வென்று
முரணுறு மனுமுன் கேட்ப முகுந்தனன் றுரைத்த லத்தை
கரணமாய் முனிவர் கேட்பக் கழறிடுஞ் சூதன் மாதோ. (௧)

பதினைந்து காவ தத்தி னகலமப் பதின்ம டங்கு
மதிபெறு நீள மாய் வாசிலை நாமணை றிட்டுத்
திதிமகன் பிரம பாணம் விடநர சிங்க மூர்த்தி
யதிபயங் கரங்க டோன்ற வாத்தயுன படையை நுங்கி. (௨)

கரத்துறு சிலையைப் பற்றி முறித்தனன் கதையொன் றேந்திப்
புரத்தொடெ னம்பி பொன்றப் பொருதமா யாவி யுன்னி
சிரத்தினைத் தகர்ப்ப வென்றே யிரணிய கசிபு சீறி
யுரத்தொடு புடைக்கச் சிங்க மொர்த்தி காற் றடியைப் பற்றி. (௩)

சடிபறித் தெறித லோடுந் தயித்தியர்க் கதிபன் பொங்க
விடியென வார்த்துக் கையா னெற்றிநேர் நரசிங் கத்தைப்
படியுறப் படுப்ப லென்று கட்டலும் பார்த்துச் சிங்க
மடிபெயர்த் திடாத விண்ண மசுரனை நிலமேல் வீழ்த்தி. (௪)

கையினாற் குத்த வந்த வசுரனுங் கன்று பொங்கி
மெய்புரண் டெழுந்து நேர்ந்தான் விதம்விதந் தேர்ந்த போர்கள்
செய்தன ரிருவர் காலிற் சிதைந்தன சிகர கோடி
வையக நடுங்கச் சுற்றும் வாரியு நடுங்கிற் றன்றே. (௫)

தோளொடு தோள்க டாக்கித் தொந்தயுத் தங்கள் செய்துந்
தாளொடுந் தாள்கள் பின்னித் தரையில்வீழ்ந் தெழுந்தும் வானிற்
கோளொடு கோளேற் றென்னக் கொடுஞ்சமர் புரிந்தார் கோர
வாளொடு மசுரன் கிட்டி மாயனை வெட்டி னானால். (௬)

மங்குல்வா கனனே யாதி வானவர் துணுக்க முற்று
ரிங்கிவன் றனைப்பா ராட்ட லியல்பல வென்று நார
சிங்கம்விண் மிசையிற் றாவித் தீயவல் லசுரன் மார்பி
லங்கையாற் குத்தி வாளோ டகன்றகே டகத்தை நூறி. (௭)

கேசரி பசிக்கோ ரானை கிட்டிய தென்னச் சீறும்
பூசையின் வாய்க்கு ளாகுப் புகுந்தது போல நேரே
மாசுணங் கருடன் காலில் வந்தகப் பட்டா லென்ன
நீசன்மெய் யசையா வண்ண நேர்ந்தகப் பட்டான் மன்னோ. (௮)

கொடியணி சிகரி வாய்ந்த கோமணிச் சபையின் வாயிற்
படிமிசை யிருந்து கொண்டப் பதகனைத் தொடையின் மீது
[illegible]த் திடுக்கி [illegible]த்தித் தூய்வைந் நுதிசேர் கோர
வடிவமை நகாயு தத்தான் மார்பினைப் பிளந்த தம்மா. (௯)

மார்பினைப் பிளந்த சிங்க மணிக்குடர் மாலை சூடிச்
சோர்தரு முதிர வாரி துனிவிளர் துரிஞ்சி மெய்யி
லார்தரு முயிரை யற்றை யந்திப்போ தருந்தி யார்த்தே
யேர்தரு வெறுங்கோ டாக்கி யெறிந்ததவ் வசுரன் மெய்யை. (௧௦)

அனைய விப்பிர சித்தி யேமுத லசுர வீரத்
தானைகா வலரை யெல்லாந் தடிந்தவ ருயிரை நுங்கி
வானையு மளந்த செம்பொன் மணிச்சபை யெய்திச் சிங்க
மானையின் பகைக டாங்கு மாசனத் திருந்த தன்றே. (௧௧)

இருந்திடு நார சிங்க பாதவ னிலங்கு கண்கள்
சொரிந்திடுங் காந்தி யாலே சூரியன் முதலாந் தேவர்
திரிந்தன ரொளிகள் குன்றித் தேககாந் திகளி னாலே
விரிந்தவெண் டிசைப் [illegible] விளங்கி னன்றே. (௧௨)

அட்டகா சத்தி லட்ட கயங்களு மதிர்ந்து நிற்ப
விட்டெரி பெருமூச் சாலேழ் வீரையுங் குழம்பி நிற்பத்
தட்டழிந் தோட மேக சாலம்வே கத்தி னாலே
மட்டிலா மலைகள் வீழ மாயன்வீற் றிருந்தான் மன்னோ. (கரு)

மூவரி லொருவ னென்னு முகுந்தனிவ் வண்ண மாக
யாவரு மனுகா ரஞ்சி யமரர்கண் முனிவ ரெல்லாம்
பூவலர் மாரி பெய்து புடையினி னெருங்கி யார்த்தார்
தேவதுந் துமிமு ழங்கச் சிறந்தபல் லியமி யம்ப. (கசு)

அயனொடெண் டிசைகாப் பாள ரரிகரி யென்று போற்றி
நயனமா னந்த வாரி யொழுகநாண் மலர்க்கை கூப்பிப்
பயமொடு மனுகா ராகிப் பார்க்கவு நடுக்க மெய்திச்
செயநமக் கின்றென் றெண்ணித் தெளிந்துளத் தருத்தி கூர்ந்தார். (கரு)

பாயிருள் சீய்க்குஞ் செங்கேழ்ப் பருதியோர் கோடி கூடி
யேயசிங் காத னத்தி னெய்தியே நார சிங்க
மாயவ னிருந்தா னென்று மச்சமா லுரைத்த வண்ண
நேயமார் முனிவர் கேட்ப நிகழ்த்தினன் சூதன் மாதோ. (கசு)

பதினெட்டாவது

இரணியகசிபு வத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ருசுசு.

பத்தோன்பதாவது

பிரகலாதன் பட்டாபிடேக வத்தியாயம்.

பகர்தவப் பிரக லாதன் பட்டாபி டேகஞ் சூடி
யகல்புவி வான்பா தால மாண்டுவீற் றிருந்த வாறு
புகலென மனுமுன் கேட்ப மச்சமால் புகன்ற வண்ண
மகமிகு தவங்க ளாற்று முனிவர்க்கு வகுப்பான் சூதன். (க)

ஆரண னிந்திர னாதி யமரர்க ளிருடி மார்கள்
சாரணர் பிதிர்க்கள் சித்தர் வித்தியா தரர்ம னுக்கள்
பூரண யாழ்வல் லோர்கிம் புருடர்க ளியக்கர் நாகர்
நாரண சிவக ணங்கள் நாரசிங் கத்தைப் போற்றி. (உ)

அருகுற வஞ்சி யஞ்சி யாவரு மகல்வா னின்றே
யிருகரஞ் சிரமேற் கூப்பி யிணையடி தொழுது நோக்கித்
திருமணி மார்ப வாசு தேவகே சவநா தாந்தத்
தொருவனே நார சிங்கத் துருவனே போற்றி போற்றி. (ங)

பங்கய னாகி யெல்லாம் படைப்பவ னீயே நீண்ட
வங்கவார் கடல்சூழ் வையம் வளர்ப்பவ னீயே யெங்கும்
பொங்கிய வுயிரை யெல்லாங் புசிப்பவ னீயே நார
சிங்கமாய் நின்ற தேவ தேவனே போற்றி போற்றி. (ச)

மறைகண்மந் திரங்கள் வேள்வி மாதவம் யோகந் தூய்மை
பொறையரு வுருவம் ரூபம் பொருந்திய ரூபா ரூப
மறைதரு தருமந் தான மாருயிர்த் தொகுதி யாகி
நிறைதரு நார சிங்க நிமலனே போற்றி போற்றி. (ரு)

அராவணைத் துயிலை நீங்கி யாயினு மன்பா னெய்திக்
கராசலத் துயிரைக் காப்பக் கராமுயி ருண்டாற் போலச்
சராசரக் களைய தான தானவ னுயிரை யுண்ட
நிராமய நார சிங்க நிமலனே போற்றி போற்றி. (சு)

படைத்தொழி லசுரன் பின்னே படைக்கலஞ் சுமந்துஞ் செய்யா
மடைத்தொழில் புரிந்து மன்னேன் வாசியா னைகளை மேய்த்தும்
புடைத்திடுந் தோறு மேனி புண்படுந் துன்ப மெல்லாந்
துடைத்திடு நார சிங்க சொருபனே போற்றிபோற்றி. (எ)

கூர்த்திடுந் தவங்கள் செய்யுங் குணங்கெடுத் தெங்கட் கெல்லா
மூர்த்தியாய் வந்த கோரன் மூவுல கத்துஞ் செல்ல
வார்த்திடுஞ் சிவிகை யின்பி னலைந்திடுந் துன்ப மெல்லாந்
தீர்த்திடும் பொருளே நார சிங்கமே போற்றி போற்றி. (அ)

படித்திடுந் தொழிலை விட்டும் பண்ணிசை யாழை நீத்து
மடித்தலம் வருட லாதி யாம்பணி விடைசெய் யென்ன
மடித்தித ழதுக்கிச் சீறும் வல்லிர ணியனைக் கொன்று
முடித்திடு நார சிங்க மூர்த்தியே போற்றி போற்றி. (சு)

இன்னண மமர ராதி யாவருந் துதித்துச் சிங்க
மன்னிய கோரஞ் சற்று மாறிலா திருத்தல் கண்டு
பொன்னெனு மன்னை தன்னைப் பூமக னழைத்து நீபோய்த்
துன்னிய கோப மாறுந் தொழில்புரி கென்று சொன்னான். (௧0)

ஆயவண் மாயன் கோர மனைத்தையு நோக்கி யஞ்சி
நாயக னருகு செல்ல நடுங்கின டிரும்பி னாளு
பாயமு மினியே தென்று பத்தனும் பிரக லாதச்
சேயினைப் பிரம னீபோய்த் தீர்த்திடு கோப மென்றான். (௧௧)

என்றய னியம்ப லோடு மிறைஞ்சியே பிரக லாதன்
வென்றிகூர் நார சிங்க மூர்த்திபான் மெல்ல மெல்லத்
துன்றியே பணிந்து போற்றித் தோத்திரம் பலவும் பன்னி
நன்றிசேர் வேதாக் கத்தி னாதநீ யருள வேண்டும். (௧௨)

ஐயநீ யருள்கி லாயே லாரெமக் காதா ரந்தா
னுய்யுமா றருடி யென்றே யுரைத்துரைத் தடியில் வீழக்
கையினு லெடுத்தன் போடுங் கருணைகூர்ந் துடனுறை வந்தே
வெய்யகோ பங்க ளாறி வியந்துவாய் மலர்ந்து சொல்வான். (கங)

வேண்டிய வரங்க ளீது மென்னலும் பிறவி வேண்டேன்
பூண்டபே ரன்போ டுன்னைப் போற்றிவீற் றிருக்க நல்கென்
றுண்டகை பிரக லாதன் கேட்டலு மாதி நாதன்
னீண்டபே ருலக மெல்லா மொருகுடை நிழற்றி வாழ்ந்தே (கச)

பரிமக முதல வேள்வி பன்மறை விதியிற் செய்து
தெரிதரு தருமம் யாவுந் திறம்புறு வண்ண மாற்றிப்
புரியுமன் வந்த ரத்தி னளவெலாம் போகந் துய்த்து
விரியும்வை குந்தத் தெய்தி விளங்கிவீற் றிருத்தி யென்றான். (கரு)

எனவரி நார சிங்க மியம்பலும் பிரக லாதன்
மனமொழி தளர்ந்து நாயேன் வழுத்தும்விண் ணப்ப மொன்று
வினவுதி யெந்தை யிந்த விரணிய கசிபாம் வெய்யோ
னினைவழிந் தஞ்ஞா னத்தா லின்னே நிந்தனை செய்த பாவம் (கசு)

ஒழிதர வரநல் கென்ன வுந்தைதொட் டிருபத் தொன்றும்
வழிமுறை முன்னும் பின்னும் வந்தனு காது யாவும்
பழியுறா வைகுந் தத்திற் பதிந்துவாழ்ந் திருப்பர் நின்போ
லழிவிலா மகப்பெற் றோர்கண் மரபினை யுனுகா பாவம் (கஎ)

இனையன கருணை செய்தாங் கிளவலாம் பிரக லாதன்
றனையவ ணிறுவி நார சிங்கமாந் தரும மூர்த்தி
துணைவினின் மறையு விண்ணோர் துர்த்தனர் மலரின் மாரி
கணைகழற் பிரக லாதன் கரியமால் மறைந்த பின்னர் (கஅ)

தந்தையை யெடுத்துக் கையாற் றழீஇத் தவிசிற் சேர்த்திச்
சிந்தைகூர்ந் தசுரர் தம்மிற் சிதைந்திடார் தமையே கூவி
யெந்தையுத் தரகன் மங்க லியற்றுவான் வேண்டும் யாவு
முந்துறக் கொணர்மி னென்னக் கொணர்தலு முடித்தான் கன்மம். (ககூ)

மந்திர முறைவ ழாமன் மறைதெரிகுத் திட்பவா
ரைந்துநாட் கன்ம மாற்றி யருமறை யோர்கள் பூசை
விந்தையாய்ப் புரிந்து வேண்டும் பொருளெலாம் விரும்பி யீந்து
தந்தைதன் கன்ம மெல்லாந் தவறிலா தாற்றி னான்மேல். (உ0)

வேதியன் விண்ணோர் வேந்தன் விளங்குமெண் டிசைக்காப் பாளர்
ராதியா மறையோ ராசி யுன்றரி யனைய வேற்றித்
சோதிமா மணியிற் செய்த சுடர்விடு மகுடம் வேந்
தீதியிற் சூட்ட வன்னோ னிருநிலம் புரந்து வாழ்ந்தான் (உக)

இவ்வகை பிரக லாத னிருந்தவந் தருமநீதி
திவ்விய மகங்கள் யாவுந் திறம்பிடா முறையி னாற்றிக்
கவ்வையங் கடல்சூழ் ஞாலப்பிற் கருதலார் மகுடஞ் சாய்த்து
நவ்வியங் கண்ணார் போக நலனுகர்ந் தினிது வாழ்ந்தான். (௨௨)

தேவரு மசுரர் தாமுந் தீவினைத் திறமொன் றின்றி
யாவரு மிணங்கித் தத்தம் பதவியி னினிது வாழ்ந்தார்
மூவகை யுலகம் யாவு முறைவழா தினிது போற்றிக்
காவல்செய் பிரக லாதன் காகுநா ளளவுந் தானே (௨௩)

கூறிய நார சிங்கங் கோரமே யெனினு மீன்ற
மாறிலாக் குருளை தன்னை வளர்த்தல்போற் பணிந்து போற்றித்
தேறினர் தமக்குத் தத்த மன்னைபோற் சிறக்கு முத்திப்
பேறருள் புரியு மிந்தச் சரிதையைப் பிறங்கச் சொல்வோர். (௨௪)

ஏட்டினி லெழுதி வைப்போர் கேட்பவர் படிப்போ ரென்றும்
வாட்ட மொன் றின்றி வாழ்வர் பயமின்றி வாழ்நாள் சிறா
நாட்டுமிச் சரிதை மீனின் மனுவுக்கு நவின்ற வண்ணங்
கோட்டமின் முனிவர்க் கன்பாய்க் கூறினன் சூதன் மாதோ. (௨௫)

பத்தோன்பதாவது
பிரகலாதன் பட்டாபிடேக வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்.

இருபத்தைந்து

சிவசொரூபக்கன முரைத்த வத்தியாயம்.

சததள கமலக் கண்ணன் றன்முகந் நோக்கி யவ்வச்
சுதமனு சிவசொ ரூபக் கதனைத் தெரிச் சொற்றி டென்ன
முதன்மைகூர் சொரூபமாந் முன்றப்பிற ழுந்து வண்ணி
யதமுற வகுத்த வர்க்கே யிருடிகட் கூறாப்பான் சூதன். (௧)

வயிரவ ரென்போர் யாவு முருவ்விடா முணைங் கூடக்
செயிரறு கருமம் யாவுந் திகழ்புத்தர்க் குடல் யாவி
நயமுற வுரைத்தி டென்று நன்னெறி மனுமுன் கேட்ப
புயனிற வண்ணன் மச்ச ரூபத்தி னுகல லுற்றான் (௨)

வரிவிழி பாகத் தெம்மான் மரன்மிய மனுடர்க் கெல்லா
மரிதரி துரைப்ப வின்னே யருத்தியோ டுள்ளத் துள்ளத்
தெரிவுறக் கேண்மி னம்பன் றிகம்பரன் றிரிசூ லத்தன்
பரிவுறு கருணை மூர்த்தி பராபரன் மாயை யாலே. (௩)

தேவர்மா னுடர்ப சுக்கள் செப்பிய தாவ ரங்க
ளாவதோர் சராயு சங்கூ ரண்டசஞ் சுவேத சத்தோ
டோவிலுற் பிசமென் றேது நால்வகை யுற்பத் திக்குந்
தாவுறு முடனு மந்த வுடற்குயிர் தானே யாவன். (௪)

பரமன்றன் சரிதை கேட்கிற் பாவங்க ளொழியும் யோகந்
திரமுறு யோகி கட்குந் தியானத்திற் றெரிய லாகும்
வரமுறு போகந் தானு மவனருள் வழங்கார்க் கில்லை
யரனெங்கு நிறைந்தெந் நான்று மமர்ந்துநித் தியனு மாவன். (௫)

சுத்தநேர் புத்த னாகி நிர்க்குண சொருப னாகி
மத்தநற் குணத்த னாகி வருங்கால ரூப னாகித்
தத்துவ ரூப னாகி யுருத்திரன் றானு மாகி
வித்தக னாகி யெங்கு நிறைந்திடு வியாபி யாவன். (௬)

சூரிய னோடு சந்திரன் றுலங்குமக் கினியிம் மூன்று
பேரென விளக்கி ஞாலம் பிறங்குமுச் சுடர்க டம்மை
நேருமுக் கண்க ளாக நிரப்பிக்கர்த் தவ்ய மாகித்
தார்பெறு பிரம னாதி தேவர்க்குந் தலைமை யாவன். (௭)

அவ்வர னவதா ரத்தா லரிவிதி யமரர் வேந்தன்
றிவ்விய பிதிர்க்க ணங்கள் செகமுயிர் தானே யாவ
னெவ்வமில் வயிர வன்றன் சொருபமா யினைந்து நிற்ப
னவ்வியங் கண்ணி பாகன் சொருபநா நவிலற் பாற்றே. (௮)

என்றிவை மச்ச ரூபி யியம்பலு மனுவே கேட்பா
னென்றிய திருமா லுந்திக் கமலத்தி லுதித்த வேத
னன்றிகூ ருருத்தி ரன்ற னுருவமாய் நண்ண லென்கொல்
வன்றிற லுலகு வானோர் யாவர்க்கு முன்னே மாயன். (௯)

உதித்தனன் சராச ரங்க ளரியலான் மற்றோர் தெய்வம்
விதித்திறத் தில்லை யென்றீர் விளங்கிய சிருட்டி காத்தல்
கதித்தசங் காரத் தோடு கருதிய திரோதா னங்கூர்
மதித்திடு மனுக்கிர கங்க ளிவ்வைந்து மாய னென்றீர். (௧௦)

சத்துவ முரைக்க வேண்டு மெனமனக் கலக்கந் தீரப்
புத்திகூர் மாயன் றானே புராரியே முதன்மை யாவ
னித்திற முரைத்தி டென்ன வியம்புவான் மச்ச மாயன்
வித்தகத் தரனு மாலும் வேறல்ல ருருவ மொன்றும். (௧௧)

சிவனெனும் பெயரே விண்டுச் சிறந்திடு மரியே நம்பர்
புவனியிற் பேதமாகப் புகல்வது மாயை யந்தத்
துவரிதழ் பாக னென்று மரியென்றுந் துலங்கி மற்றை
யுவமைருத் திரனு மாகி யோருரு வமைந்து நிற்பன். (௧௨)

உரைத்திடு சத்துச் சித்தோ டானந்த முருவொன் ருகும்
வரைத்திடு தொழிலா லீசன் மாயனென் றிருபேர் சொல்வர்
விரைத்தொடை மாயன் ருனும் விமலனைச் சேர்ந்த ஞான்று
திரைப்புனன் முடித்த வேணிச் சிவனென விளங்கு வானல். (கக)

கனலொடு கனல்சேர்ந் தென்னக் கண்டுகொள் கால காலன்
வினவிய மாயற் சேரின் விண்டுவா யமைவ னீதோர்
புனலொடு புனல்சேர்ந் தென்னப் பொருந்தழற் சொருபம் ருத்திரன்
வனமுறு விண்டுச் சோம வுருவென மறைகள் கூறும். (கச)

ஆதலாற் சராச ரங்கள் செகமழற் சொருபம் பேத
மார்தரு மிரண்டாய்ப் போச ஞதன ராய நித்திய
மேதமில் செகத்துக் கெல்லா நன்மையீந் திசைந்து நிற்பன்
போதமொன் றில்லா மூர்க்கர் பேதமாய்ப் புகல்கிற் பாரால். (சரு)

மாயையின் மயக்கந் தீர மான்மழுக் கரத்தி லேந்துந்
தூயனைப் பூசை செய்தோர் துலங்குநற் கதியின் வாழ்வ
ரேயதோர் பரமன் ருனே விண்டுவோ டீசன் வேதா
நேயமார் மகவான் றேவ ராமென நிகழ்த்து வாரால். (கசு)

உலகெலாஞ் சிவசொ ரூப மன்றிவே றுபார்ச்சி யில்லை
யலகிலாத் தேவ தேவா யணுவினுக் கணுவாய் நீண்டு
நிலவிய மலைக்கு நேர்ந்த மலையுமா நிமலன் ரூபம்
பலவகை யோர்வார் யாவர் பகருமிவ் வுலகிற் ருனே. (கஎ)

அயன்முதற் றேவ ரெல்லா மரன்செயு மாயை யாலே
பயனறிந் திலர்கண் மோகப் பான்மையாற் பரமன் ருனே
வியனுறு வயிர வன்றன் சொருபமாய் விளங்கி லோகத்
தியைவுறு லீலை செய்தே யிருப்பனு லவன்சொ ரூபம். (கஅ)

நனிபெற வுரைப்பல் பின்னர் நன்னுதற் பவளச் செவ்வாய்க்
கனிமொழி பாகத் தீசற் கருதலே நன்றென் றோர்ந்து
வனிதமா மச்ச ரூபி மனுவுக்குப் புகன்ற னென்று
துனியறு முனிவர் கேட்பச் சொற்றனன் சூதன் மாதோ. (ககூ)

இருபதாவது

சிவசொருப கதனமுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். சoஅ.

இருபத்தோன்றாவது

யோகசாத்திரத்தின்

வண்மையுரைத்த வத்தியாயம்

யோகசாத் திரத்தின் வண்மை யுரைத்திட வேண்டு மென்ன
நாகமார் தருக்கள் சூழ்ந்த நைமிச முனிவ ரர்க்கே
சோகமார் பவங்க ளர்த்துச் சுருதிகட் கெட்ட கில்லா
வேகநா யகனைப் போற்றி யியம்புவான் சூதன் மாதோ. (௧)

அண்டர்நா யகன்சொல் யோகத் தானமங் குலியீ ராறுந்
தண்டுறு கண்டத் தின்கீழ் சார்நாபி மேலீ ராறுங்
கண்டது தன்னி னுப்பண் கருதிய வாயுத் தானங்
கொண்டுறு நாபி யின்கீழ் நால்விரற் குறித்து நீக்கி. (௨)

மூலத்தா னத்தின் மேனுன் கங்குலி முறைகூர் தானங்
காலுறத் தானத் தானே கழறிய சருவா தார
மேலுமவ் வாதா ரத்தி னிடையும்பிங் கலையு நாப்பண்
மேலுறுஞ் சுழுமு னைப்பேர் நாடியும் விளங்கு மூன்றின். (௩)

இடையும்பிங் கலையு மாறி யெழுந்துறும் புருவ நாப்ப
ணடுவிலுற் பவித்துத் தோன் றுஞ் சுழுமுனை நாடி மேலா
யடைவுறு பிரம ரந்திர மட்டுமே யளாவி நிற்குந்
தடமுறவ் விடத்தைத் துவாத சாந்தமாச் சாற்று வாரால். (௪)

யோகமே யான்மாத் தேற்ற மனுபவத் துணர்தல் வேண்டும்
யோகநல் லுரவோர் மிக்க குரவனு லுணர்ச்சி கூர்வர்
யோகமே யயலி லாதோ ருவமைசேர் சுத்தத் திற்றால்
யோகமே சித்தி யாஞ்சீ ரொளிர்பிர சாத மாமால். (௫)

அனுபவ முரைக்கற் பாற்றே வடைவினு லறித றிண்ணம்
பனுவறேர் பெரியோர் யோகம் பரணிருப் பிடமா மென்பர்
புனிதமாம் யோக முத்தி புகல்குரு பத்தி பூசை
தனுவினை யுணக்கல் பூத்த லேயோக சாத னந்தான். (௬)

காயத்தால் வாக்கா னித்தங் கருதிய மனத்தாற் செய்யு
பாயத்தாற் றவமூன் றுண்டாற் பண்ணவர் மறையோர் பூசை
நேயத்தாற் செய்ய வங்கிசை நிரம்பிய சரீர சுத்தி
யேயத்தேர்ந் திட்ட பிரம்ம சரியமெய்த் தவசா மென்பர். (௭)

நன்மையெல் லார்க்குஞ் சொல்லல் சத்திய நயந்த தீஞ்சொற்
புன்மையில் வேத சாத்தி ரந்தினம் போற்றல் தோத்திரம்
வன்மையில் வாக்கி னுற்செய் தவமனம் விடையம் போக்காத்
தன்வழி னடக்க லீதே மானத தவந்தா னுமால். (௮)

மூவகைத் தவமுஞ் சித்தி நிரோதன மெய்து மத்தா
லாவதே தெளிந்த வாறு ஞானமென் றறைய லாகு
மோவறு மான்ம ஞானத் தாலுறு பாவ நீங்கித்
தாவிலிந் திரிய நிக்கிர கஞ்செய்வா னருளே யாகி. (௯)

ஆரிய நியமத் தோடு மாதனம் பிராண யாமந்
தேர்பிரத் தியாகா ரங்கூர் தாரணை தியான மென்னுஞ்
சார்வறு சமாதி யெட்டும் யோகசா தனமென் றாகும்
பேர்பெறிவ் வெட்டின் முன்சொ லியமத்தைப் பேசு வோமால். (௧௦)

விடையங்க ளொழிவு தானே யமமென விளம்ப லாகுந்
தடைபெறு விஞ்சை சொல்லுஞ் சத்திய வசன மென்றுங்
கடைதிருட் டகல்பி ரம்ம சரிதையுங் கழற லன்றி
யடைவுறு திரத்த னீத்தல் யாவுஞ்சொல் யமமே யாமால். (௧௧)

உறுமுயி ரிமிசை யெல்லா வுயிர்க்குப சாரஞ் செய்த
லறமுறை கேட்டல் காண்ட லனுபவ மெலாம்பி றர்க்குக்
குறைபெற வுரைத்த னீத்து மெய்யினைப் புகலல் புல்லா
நிறையிலார் செய்த கன்ம நிகழ்த்திடா தொழிதல் சத்தியம். (௧௨)

மனமதால் வாக்காற் கன்ம வழியினா லாபத் துற்ற
தினம்வர வேண்டு மற்றோர் திரவியங் கவர்த னீத்த
னினைவுறு திருட்டி லாமை நேருமெய் மனம்வாக் காலும்
புனையிழை யார்ச்சே ராமை புகல்பிரம சரிய மாமால். (௧௩)

ஒழிந்தசந் நியாசி தானு மவ்வகை யுணர்த றிண்ணம்
அழிந்தசீ ரில்வாழ்க் கையோன் றன்மனை யாட்டி தன்பாற்
கழிந்திடும் ருதுகா லத்திற் பருவங்கள் பிறந்த நாட்க
டொழுந்தினம் விலக்கி மைந்தர்ப் பேறினாற் றோய்ந்து ளானேல். (௧௪)

அவனுமே பிரம சாரி யயன்மனை விரும்பு கில்லா
துவணெறி நிற்போன் றானு முரைத்திடு பிரம சாரி
பவமுறு தில்லிற் சேர்ந்தாற் பரிசுத்த னாக மூழ்கிக்
கவர்மலஞ் சலநீத் தென்ன விந்தியங் களைதல் வேண்டும். (௧௫)

எரிதழற் பெண்பாற் காண்பா லிழுதுறு வெண்ணெ யாகு
மரிவையர்க் கூட்ட நீத்த லழகிதா மனுப வத்துத்
தெரிவொடு மொழிவே னென்ற னரனுக்குத் திரமு றாதாற்
பரிவின்மை ராக்கி யத்தாற் பரிந்திடு மொழிவு தன்னால். (௧௬)

இந்திய மடக்கு வானே வியன்றிடு ஞான முத்தி
புந்திய விடையங் கட்கு மனுபவித் தொழிவோ மென்றல்,
செந்தழ லிட்ட காட்ட மாகையாற் சிறந்த யோகி
நந்துறு கருமம் விட்டு நாடிட வேண்டும் யோகம். (௧௭)

கருமத்தின் பலத்தை யுண்டங் கொழிவுறக் சருதிற் கன்மத்
திருமைப்பல் யோனி தோறு மெய்தியே யுழல்வ னுளுந்
தருமக்கூ ரொழிவான் மூத்தி தானுறுங் கருமந் தன்னாற்
பெருமைச்சீர்த் தனத்தாற் பெண்டி ரான்முத்தி பிறங்கா தன்றே. (௧௮)

இப்படி திறத்தி னிற்போ னியற்றிய பிரம சாரி
யொப்புறு மறையோர் பூசை குருபூசை யோங்கு மங்கி
யைப்புரி பூசை தன்னி லீங்கிசை யறத்திற் செய்யிற்
றப்பிலா தயீமிசை யென்று சாற்றுவர் தகைமை யோரே. (௧௯)

பெண்களை யோகி கண்டாற் பிரேதமா யெண்ண வேண்டு
மெண்பெறும் யமத்தின் கூற்றை யியம்பினு மியமந் தன்னைப்
பண்புற வுரைப்பே மாசை யொழிதலே பகரா சாரந்
திண்பெறு சௌசந் துட்டி தவஞ்சபஞ் சீல மீதே. (௨0)

பொன்னுறு மண்பெண் ணுசை விடல்புக லாசை நீத்தல்
பன்னிய சுருதி யோடு மிருதிசொற் படியா சார
மன்னிய சௌச மிரண்டு வகையதாம் வகுப்பா மென்றே
யுன்னிய புறத்துத் தான முளத்தான மொன்றே யாமால். (௨௧)

பிறங்குமாக் கினேயத் தோடு வாருணம் பிராமிய மென்றே
யறங்கிளர் மூன்றுந் தான மவைகளி லாக்கி னேய
நிறங்கிளர் விபூதித் தானம் வாருண நீரின் மூழ்க
றிறங்கெடப் பிராமி யந்நீர் தெளித்துறன் மந்தி ரத்தால். (௨௨)

வெளிப்படைச் சௌச மூன்றும் விளம்பினு மினிமே லுள்ள
களிப்புறு சௌசஞ் சொல்வாம் விடையத்தைக் களைதன் மந்திர
மளித்துறு குருவின் பத்தி வயிராக்கிய மான்ம ஞான
முளத்துற வேண்டு மென்று முருதெனிற் பலனென் றில்லை. (௨௩)

உள்ளுறு ஞான மில்லான் மூழ்கலோர் வல்லகை யேந்தி
யள்ளன்மீன் பிடிப்பா னெக்கு மாகையான் ஞானத் தோடுந்
தெள்ளிய விதியாற் செய்யுந் தானஞ்சேர்ச் சிறப்பை நல்கும்
விள்ளுறு துட்டி போன கருமத்தை வினவா துற்றல். (௨௪)

வினவுறு தவநற் சாந்தி ராயண விரதம் வேத
மனவர தமுமே யோதல் சபஞ்சீல மாமா சார
நினையுமா தனமே மேடா நிலம்பரி சுத்தஞ் செய்து
புனையிழை விரித்து மேலே புலியின்றோன் மான்றோ றெர்ப்பை. (௨௫)

விரித்ததன் மீதிற் பத்ம வாசன முதலாம் வீரம்
பரித்தவா தனத்தி னோடும் பகரிலம் பகாச னந்தா
னுரைத்திடு விதியிற் போற்ற லுணர்த்துவாம் பிராண யாமம்
வரத்துறு வாசி கங்கூ ருபாங்குச மான தந்தான். (௨௬)

வாக்கினுற் சொலும்பி ராணு யாமம்வா சிகந்த மஞ்சீர்
மீக்கொளு முபாங்கு சந்தா னுத்தம மாக மேவு
மூக்கமா மான தந்தா னுத்தமத் துத்த மம்மென்
ருக்கமொ டரனே பஞ்சாக் கரக்கற்பத் தறைந்திட் டாலுல். (௨௭)

இந்திய மடக்கி யென்றுஞ் சுழுமுனை நாடி தன்னைப்
புந்தியொ டலையா வண்ணம் போற்றியே யிருந்தா லீதே
சிந்தைகூ ருத்த மத்தி னுத்தமஞ் சிவஞா னத்தோ
டந்தமில் குருவின் பத்தி யணுகுமாற் பிரத்தியா காரம். (௨௮)

ஆவதைம் புலனு முள்ளே யடக்கிநிச் சலமாய்க் கண்க
ளோவற விமையா துற்றன் மனமொருப் படுத்தி யீச
னேவலிற் பிரிந்தி டாம விருத்தலே புத்தி யென்று
நாவுற வுரைத்த ருனே நவிலுந்தா ரணைய தாமால். (௨௯)

புத்திகூர்ந் தலையா துற்றல் புகன்றிடு தியானம் புத்தி
சித்தமோ டொன்று யுற்றல் சிறந்திடுஞ் சமாதி யாகு
மித்திறச் சமாதி தன்னி லிறைவனே ருருவாய்த் தோன்ற
வித்தக தேகந் தன்னில் வாசனை விளங்கி டாதால். (௩௦)

சிறந்திடு சமாதி பிராணு யாமத்திற் சித்தி யாகும்
பிறந்திடு சரீரத் துள்ள வாயுவின் பேர்பி ராண
னிறைந்தவிப் பிராணன் றன்னை நிறுத்தலே யமமீ தொன்றின்
மறந்தவிர் பிராணு யாம மென்னவும் வழுத்து வாரால். (௩௧)

மந்தமத் திமத்தி னோடு வழங்குமுத் தமமிம் மூன்றுஞ்
சிந்தைகூர் பிராணு யாம மவைகளிற் றிகழு மந்தம்
விந்தைமாத் திரையீ ராறு மேவுமத் திமமி ரட்டி
யந்தவுத் தமமுப் பான்மே லாறுமாத் திரைய தாமால். (௩௨)

மாத்திரைக் களவு சானு வயங்கிய சில்லைச் சூழக்
காத்திர விரலாற் சுற்றல் கருதிய மந்தத் தாலே
பூத்திடுஞ் சரீரம் வேர்வை பொங்கிரு மத்தி மத்தா
னேத்திரத் துடலை யாங்க ணிலத்தைவிட் டலைக்கு மாதோ. (௩௩)

உத்தமம் பிராணு யாயம் புவியைவிட் டுடலை மீதே
சுத்தமா யெழுப்பு மப்பாற் றேன்றுமா னந்த நித்திரை
யத்திரஞ் சிலர்க்கு ரோம நாதமே லங்க மோட்சஞ்
சித்தமாய்ச் சுழலும் வேர்வை சிறக்குமா னந்த மூர்ச்சை. (௩௪)

இவ்வகைப் பிராணு யாம மிரண்டினுட் செபத்தி னோடு
தவ்வலின் முயல ருனே சகற்பப்பேர்ப் பிராணு யாம
மவ்வயிற் செபமில் லாதவ் விகற்பமாம் பிராணு யாமஞ்
செவ்வையிற் காட்டி யானை சரபங்கூர் சிங்கம் பாம்பை. (௩௫)

கைவலைப் படுத்தி மெல்லக் கருத்தறி வானே போலத்
துய்யனும் யோகி தானுந் துகளறு பிராண யாமம்
பையவே யமைக்க வேண்டும் பகுத்திடும் யூக மில்லான்
செய்திடிற் பிராண யாமஞ் சித்தியா தொழியு மாதோ. (௩௬)

யோகம்வா யுவினை வெல்லும் யோகிக்குப் பிராண யாமம்
பாகுறிற் பவங்க டேரும் பகருட லிரட்சை யாகு
மாகையாற் பிராண யாம மறிந்தமா யோகி தானுஞ்
சோகமார் தோட நீங்கிச் சொல்சத்துவ குணத்த னவன். (௩௭)

சாந்திபிற் சாந்தி மிக்க வொளிபிர சாத நான்கு
மேய்ந்திடு சித்தி யுண்டா மடைவினு வியற்று சாந்தி
காய்ந்திடு சகச மேயா கந்துகப் பவங்க டீர்க்கும்
வாய்ந்தநற் பிரசாந் திப்பேர் மனதுறு மலத்தைப் போக்கும். (௩௮)

மனமதிற் றெளிவு தானே வகுத்திடு மொளிய தாகும்
சினமறு ஞானத் துக்கும் வயிரியாய்ச் சேருங் காமந்
தனையனு சரிக்கும் புத்தி யொடுபுலன் றம்மை நீக்கித்
துணையுறு தெளிவு தானே பிராசாத மென்று சொல்வார். (௩௯)

தனுவுறு பிராணனோடு மபானன்கூர் சமானன் மற்று
நனிபெறு முதானன் மிக்கா நாடிய வியான னாக
னினியதொர் கூர்ம னெற்றுங் கிரிதரன் றேவ தத்தன்
புனிதமாந் தனஞ்செ யன்னோ டொருபது புகல்வா யுப்பேர் (௪௦)

இவர்களிற் பிராண வாயு நடப்பிப்ப னிலங்க பானன்
குவைமலஞ் சலங்க டள்ளிக் கூர்வனல் வியான னென்போ
னவிரொளி யுடலி னுண்டி யமைப்பிப்ப னுதான னென்போன்
புவனியிற் றேகந் தன்னில் வியாதியைப் பொருந்தச் செய்வான். (௪௧)

தனுவினைச் சமான மாகப் பண்ணுவன் சமான னாக
னனமுதற் கக்கல் விக்கல் செய்விப்ப னறையுங் கூர்ம
னணிவிழி விழிப்பச் செய்வ னவின்றிடு கிரிக ரன்றான்
மனமுடல் கலங்கச் செய்வன் வருதேவ தத்த னென்போன். (௪௨)

கொட்டாவி விடவே கூர்வன் கோடங்கண் மிகவுண் டாக்கித்
தட்டுறு திருந்தே யெங்கும் பரம்புவான் றனஞ்ச யன்றான்
மட்டுறு மிந்தப் பத்து வாயுவும் பிராண யாமந்
திட்ட மாய்ச் செயவல் லோர்க்குச் சித்திக்கு மடைவி னாலே. (௪௩)

யோகிக ளான்ம ஞான முள்ளநன் மறையோர்ப் போற்றிப்
பாகுறத் திருத்தி செய்து பிரசாத பலத்தைக் கூர்வ
ராகிய மனத்தை வேதிப் பிரமமென் றறைந்து ஞான
மேகநா யகன்றான் கூர்ந்த மதிபுத்தி யென்ன வோதும். (௪௪)

புத்திக்குப் பிரசா தந்தான் பொருத்துறு பிராணா யாமஞ்
சுத்தமின் மாயை கூர்ந்து துலங்கிய வண்டம் யாவுஞ்
சித்திகூர் யோகி கட்குச் சேர்ந்திடா யோகத் துக்கு
வித்தக மறையோர் சந்நி யாசியா மிகவுந் தக்கோர். (௪௫)

எண்ணமே மனமா மெண்ணுங் காரியம் பலித்த லாலே
நண்ணிய மதிய தாகு நயத்துமே பிரித்த காரியங்
கண்ணுற வெவ்வே றுகக் கருதுறிற் செயல்கள் செய்யிற்
புண்ணியர் புத்தி யென்று புகல்வராற் புத்தி தானும். (௪௬)

தெளிவுறும் பிராணா யாமச் செயலினால் யோகி பாவ
மிளகுற வெரிப்ப னென்று மியம்புமைம் பாத கங்கள்
களிபெறு தாரணைப் பிரத்யா காரத்தா லெரித்து யோகி
விளிபுல னடக்கி ஞானம் விளக்கியே சமாதி சேர்வன். (௪௭)

சீர்பெறு சமாதி யாலே சித்தியை யடைவன் யோகி
நேருமே காந்தத் தான நேடியே யிருந்து முன்சொல்
வாருணத் தானத் தோடும் வகுத்தவாக் கினேயத் தானே
யோர்திகழ் வகைய தாமுக் காலமு மியற்றல் வேண்டும். (௪௮)

அக்கினி தண்ணீர் கூவ லமர்ந்திடு மயான பூமி
திக்குநாற் சந்தி வாளா திடிந்திடுந் தேவத் தான
மிக்குறு மிரைச்சற் பூமி வெம்புலி பாம்பு சிங்கந்
தொக்குற வுலர்ந்த தாரு விடம்பயந் தோற்றும் பூமி. (௪௯)

புற்றிட மீறு யிந்த விடங்களிற் பொருந்தா யோக
நற்றின மல்லா நாட்கண் மழையொடே நயந்த கால
முற்றிடு மசக மொய்க்குங் காலமோர் வியாதிக் காலஞ்
சொற்றிடு துக்க காலந் தொடங்கிடான் யோக மிக்கோன். (௫௦)

இவ்வகைத் தேயங் காலத் திழைத்திடிற் சித்தி யாகா
கவ்வையின் முழைஞ்சு கோயில் காணுறு முத்தி யானந்
திவ்விய நதியின் சூழல் சிறந்தநன் மனைகாத் திட்டுத்
தவ்வலி னுள்ளத் துள்ளுந் தனித்தவே காந்தத் தானம். (௫௧)

இன்னநற் றானந் தேடி யியல்புற மெழுகிக் கோல
நன்மையாய் வரைந்து தூப மூட்டிமென் மலர்ப்பூ நாற்றிப்
பன்னிய குசங்கள் தர்ப்பை பாத்தியா சனத்தி னெய்தி
யுன்னிநற் குருவைத் தேவைத் தேவியை யொருகொம் போடும். (௫௨)

சிறந்திடும் பிள்ளை யாரைச் சீடரோ டடைந்து யோகத்
துறைந்திடும் பெரியோர்ப் போற்றி யுயர்சோத்தி காச னம்பே
ரறந்திகழ் கின்ற பாதா சனமர்த்தா சனமே யன்றி
மறங்கெடு மாச னம்மிவ் வகையினு சனத்தி னேய்ந்தே. (௫௩)

மெய்தலை யசைவு ருமன் மேலுயர் கழுத்தாற் கண்கள்
செய்யதன் மூக்கை நோக்கித் திக்கினை நோக்கு ருமற்
றுய்யதொர் நாட்டி னன்ருய்ச் சோதித்துக் கொப்பூ ழின்கீ
ழெய்யுரு திருக்குங் குண்ட லினிசத்தி யினையெ ழூப்பி. (ருச)

சார்தமோ குணத்தி னேடு ரசோகுணந் தள்ளிச் சத்துவ
மார்குண ரூப னுகி யமரிடை நாடி தன்னுற்
பேரும்ரே சகத்தைப் பண்ணிப் பிங்கலை நாடி யாலே
பூரகம் பண்ணி நாப்பண் பொருஞ்சுழு முனையி னுலே. (ருரு)

கும்பகம் பண்ணி யங்கிக் கொழுந்துபோ லிதயத் துற்ற
வம்புய மீதிற் சுத்த ராகியோங் கார ரூப
நம்பரைத் தியானஞ் செய்து சுழுமுனை நாடி தன்னைத்
தம்பமாய்ப் புருவ நாப்பண் டறிபட நிறுத்த வேண்டும். (ருசு)

நாவினை மேலை நோக்கி யேகநா யகனை நாடி
யோவறு மொளியி னேடும் புருவமத் தியத்தி னேங்குந்
தாவரும் ரந்த ரத்தைப் பிளந்துதா னீங்கும் போது
பூவரும் யோகி தன்னைப் பொருந்திய பந்த நீக்கி. (ருஎ)

விடுதலை யடைந்து முத்த னுகியே விளங்கா நிற்பன்
றிடமுறு துரியா தீத யோகமிச் செய்கைத் தாமா
லடைவுறு துரிய யோக மறைகுவர் நாபியின் கீழ்த்
தடமுறங் குலியோர் மூன்று தள்ளியே மூலா தாரம். (ருஅ)

தனித்திரி கோண மட்ட தனமுறு கமல மொன்றின்
வனப்புறு சோமன் பானு வழங்குமக் கினியிம் மூவ
ரெனப்பிரித் திருத்திப் பாவ கஞ்செய்தக் கினிக்குங் கீழாய்
நினைத்திடு தன்மா தன்ம நோர்வயி ராக்கிய ஞானம். (ருகூ)

தொக்கநால் வகையி னேடுஞ் சொரூபபா வனைகன் செய்தே
முக்குணத் திரண்டு போக்கி மொழிசாத்து விதமென் றேது
மக்குணம் பிரதா னம்மா யறைந்திடு மூலா தாரந்
தக்கதோர் சுவாதிட் டானஞ் சார்மணி பூர கந்தான். (சுo)

இருதயம் புருவ நாப்ப ணிலங்கிய பிரம ரந்திர
முறுமிவை களிலே காத ளத்தொடு சோட சந்தான்
மறுதுதே சாரத் தோடு மருவிய தெசாரம் வாய்ந்த
பிரிவுறு மாறு நான்கு பேதமாந் தளங்க ளாக. (சுக)

அடைவிலே சிவனைப் பொன்போ லழலுமக் கினிபோல் வெண்மை
திடமுறு கறுப்புச் சேப்புத் திகழ்மஞ்ச ளுருவ மாக
விடருறு வகைத்தி யானஞ் செய்கவிப் படிதி யான
முடலுறு மிருத யத்தி லுறுமகே சுரனை மற்றும். (சுஉ)

நேர்நாபி சதாசி வன்கூர் நெற்றியிற் சந்திர சூடன்
சார்புறு புருவ நாப்பண் சங்கரன் றுவாத சாந்தத்
தேர்பெறு பத்து நூறு மிதழுறு கமல மீது
கூடுகித் தியராய் ஞான ரூபியாய்க் குலவி யோங்கும். (௬௩)

நிறைந்திடு களங்க மில்லா நிருமல ராகி யோகத்
துறைந்திடு ரூபி யாகி யணுவினுக் கணுவா யோங்கி
யறைந்தபே ருருவாய் மிக்க வானந்த ரூபி யாகிச்
சிறந்திடு மறைக ளாகி யவைகட்குந் தெரியா தாகி. (௬௪)

இந்திரி யங்கட் கெட்டா திரும்பரத் துருவ மாகி
யுந்திய தியானத் தாலே யுறுபவர்க் கறிவ தாகிச்
சிந்தைகூர் சுத்த சத்துவ ரூபியாஞ் சிவனை நித்த
நந்துறு தெண்ணில் யோகி நற்கதி யடைவன் மாதோ. (௬௫)

மத்திம யோக முன்னர் வகுத்திடு நாடி யாவுஞ்
சுத்தமாய்ச் சோதித் தப்பாற் றுகளறு நாபி மீதிற்
பத்திகூர் சதாசி வன்னேர் பகர்தேக மத்தி யத்திற்
றத்துமச் சிவனு காரச் சங்கரன் றனையு மெண்ணி. (௬௬)

கும்பகத் தாலே பாவித் தொருநான்கெண் கூறி லக்கத்
திம்பரி னிரேச கத்தாற் சோதித்தவ் விரண்டும் விட்டு
நம்பனெவ் விடத்தும் வியாபி யாமென நவைதீர் யோகம்
பம்புறு சராச ரங்கள் பரசிவ னுருவ மாகி. (௬௭)

புகலரும் பரமா னந்த ரூபியாய்ப் பூசை செய்க
திகழுந்தா ரணைத னக்கே யுருப்பட்டாற் றியான மாகுஞ்
சகசமாய்த் தியானந் தானு முருப்பட்டாற் சமாதி யாகு
நிகழுமச் சமாதி யாலே நித்தமுஞ் சித்தி யாகும். (௬௮)

யோகத்தைச் சுருக்கிச் சொற்றும் யோகசா தனமே வேட்போன்
யோகத்தை யறிந்த ஞானி யிடத்துறிற் சித்திக் கும்மால்
யோகம்வல் லவரா யுள்ள வுரவர்ச்சே விக்க வேண்டும்
யோகம்வல் லவரா யுள்ள வுரவரை யோர்ந்து சொல்வாம். (௬௯)

வேறு.

வரம்பெறு கபில ரகத்தியர் யாக்ய வற்கர்நற் காசிபர் ஞானத்
தரம்பெறு சனகர் சனந்தன ரோடு சனுதனர் சார்சனற் குமார
ருரம்பெறு பரத்து வாசர்நா ரதருத் தாலகர் வசிட்டர் மார்க்கண்டர்
நிரம்புகண் ணுவர்கோ தமர்கவுண் டினியர் நிறைதவத் துயர்ந்த சவ்வரத்தர். (௭௦)

கோமுகர் திலீபன் புரூரவாச் சனகன் குலவிய பகீரத னரக்கர்
தாமிவர் யோக சித்தியை யடைந்தோ ரிவர்தமை வகுத்திடத் தகுமாற்
சேமமாம் பஞ்ச பூதங்க ளுறைந்த தேகமித் தேகமே மரங்கள்
காமுறு வரிச்சோ டாக்கைக ளாலுங் கட்டுறு வீடென லாகி. (௭௧)

வேறு.

என்பொடு நரப்புக் கூடு மிறைச்சிதோன் மூடப் பட்டு
வன்புறு முடலி ளூடி வழிவாயுச் சஞ்ச ரிக்கு
நன்பெரு வீட்டு வாயில் போலுறு நவத்து வாரத்
துன்புரு தந்த வாயுப் போலவு மூலோப மாமால். (எஉ)

ஆகையா லந்த வாயு நிரோதனத் தசையா வண்ணம்
வாகுற வடக்கி லாயுள் வர்த்திக்கு மனேக காலம்
யோகபோ சனந்தான் பாதி யுரைத்ததிற் பாதி நீரோர்
பாகமே வாயுப் பத்துஞ் சஞ்சாரம் பண்ணு மாதோ. (எங)

நித்திரை யிரண்டி யாம நிகழ்த்திடுந் தெய்வங் கட்குட்
பத்தியெத் தெய்வம் யாதோ வத்தெய்வ சானம் பண்ணி
யித்தகை யோகஞ் செய்யின் விக்கின மிடையூ றெய்து
மத்தகை யுற்றால் யோகி யதோகதி யடைவன் மாதோ. (எச)

தேகம்வீழ்ந் திடினே சுவர்க்கத் திரும்பல னனுப வித்துப்
போகமார் புவியின் மீளப் பொருவிலா சாரத் தோடும்
வாகுறு யோகி தன்பால் வந்துதித் திட்டு முன்ன
ராகிய குறையோ கத்தை யனுபவித் தடைவன் முத்தி. (எரு)

உரைத்திடு மிந்த யோகசாதன முரைப்போர் கேட்போர்
நிரைத்துறு பவங்க ணீங்கிப் புண்ணிய வுலக நேர்வார்
வரைத்துறு யோக விக்கினம் வகுத்துப்பின் னுரைப்பே னென்னத்
தரைத்தவ முனிவர் கேட்பச் சாற்றிடுஞ் சூதன் மாதோ. (எசு)

இருபத்தோன்றவது
யோகசாத்திரத்தின்
வண்மை யுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். சஅசு.

இருபத்திரண்டாவது

யோகவிக்கின முரைத்த வத்தியாயம்.

யோகவிக் கினத்தின் பேத முரைத்திடென் றுண்மை ஞானத்
தேகநா யகனைப் போற்று மிருந்தவ முனிவர் கேட்பச்
சேகறு மச்ச ரூபி மனுவுக்குத் தெரித்த வண்ணஞ்
சோகமில் புராண மோதுஞ் சூதமா முனிவன் சொல்லும். (க)

பகர்யோக விக்கி னங்கள் பத்தவை வெவ்வே ருகப்
புகலுவர் முதலாம் விக்கினம் பொருந்துதல் வியாதி பீடை
துகளறு மிரண்டாம் விக்கினஞ் சொல்லுபிர மாத மூன்றே
யிசலுற மனத்துக் கெட்டாப் பொருளையிச் சித்த தாமால். (உ)

நாலெனும் விக்கி னந்தா னவிலும சிரத்தை யாகு
மேலதா மைந்தே பிராந்தி தரிசனம் விளங்கு மாறே
யேலுறு மாத்தி யான்மிகத் துக்கமென் றிசைப்ப ரேழாச்
சால்பில்விக் கினமே யாதி பௌதிக மென்பர் தக்கோர். (ந)

எட்டெனும் விக்கி னந்தா னுதிதெய் விகந்தா னென்பர்
மட்டுறு மொன்பா னேதென் றமன்சியம் பத்தாம் விக்கினந்
தட்டுறும் விடையத் தாசை செலுத்துதல் சாற்றும் யோகி
யுட்டெளி வுருமற் செய்யு மிவைவிரித் துணர்த்து கேமால். (ச)

முன்புகல் வியாதி பீடைக் கேதுமோட் டெருமைத் தீம்பா
னன்புறு மளைநெய் முன்னு ளன்னமெட் பிண்டி யாவு
மின்புற வளவை யின்றி யருந்திடு லாக்கை மீறித்
துன்புறு மவிடம் தாதுத் துலங்கமெய் வியாதி தோன்றும். (ரு)

ஊழ்வினைத் தொடர்பாற் றேன்றுங் கயமுத லுரோக மொன்று
மாழ்குறு பிராந்தி பேய்கண் மருவிட மயங்க லொன்று
தாழ்விலா விரண்டாம் பீடை தகுபிர மாதந் தானே
சூழ்வுறு சமாதிக் குச்சா தனமின்மை தொகுத்துச் சொல்வாம். (சு)

வேறு.

சுத்தமொன் றில்லா விடத்தினின் மனந்தான் தோற்றுநா னுவித விடையத்
தொத்துற வெண்ண லொருவனைப் பற்று திருவனைத் தெய்வமென் றுறுத
லித்தகை யோகிக் கிசைந்திட லாகா தெய்திடாப் பொருளினை யெய்த
நத்துறுன் செய்த கருமத்தை நாளு நயந்திடா தொழிந்திடு சோம்பல். (எ)

அறைந்திடுஞ் சிரத்தை புகல்வா மாருட னுருருட் சுக்களாக
வுறைந்திடும் யோகிக் கந்தர கமன முறுபுவி யிடத்தினு மன்றி
நிறைந்திடும் பந்தத் தொடக்குறின் மனத்தி னிகழ்ந்திடும் விருத்தியா யமைந்து
குறைந்திடா யமமே யாதியா யோகக் குவையினிற் பற்றெழிந் திடுமால். (அ)

ஐந்தெனும் பிராந்தி தரிசனம் பெரியோ ரருள்செயுங் குருவினன் மொழியைச்
சிந்தனை யுறும லொழிந்துசந் தேகஞ் சனிப்பதாந் திகழ்ந்திடு மாறுய்
வந்திடு மாத்தி யான்மிக துக்க மாவது மான்மனே யின்றி
நொந்திடு தேகத் திந்தியங் களிலே நுவலரு மான்மஞா னந்தான். (கூ)

ஏழெனு மாதி பௌதிக துக்க மிரும்புவி முதலவைம் பூதத்
தாழ்வுறு தனுவுக் குறுதுய ரெட்டா மாதிதை விகதுக்க மறையில்
வீழ்மழை யசனி முதலிய வாகும் விளம்புமித் துக்கமோர் மூன்றும்
தாழ்விலா மனத்துக் காசைவே றொழியச் சார்ந்திடு மிவையுயிர்க் கருமம். (கo)

ஒன்பதென் றுரைக்குந் தவுரமன் சியந்தா னுயர்மனஞ் சத்துவ குணத்தை
யன்பற லொழிந்து தமோரச குணத்தி னளவளாச் சனனங்க ளென்ன
லின்புறு பத்தே விலக்குறும் விடையத் திச்சைகூ ருதிராச தந்தான்
றுன்புறு தமோகு ணத்தொடுங் கூடிச் சூழ்மனம் யோக்கியப் பொருளின். (கக)

இச்சைகூர்ந் திடுத லின்னவிக் கினங்கள் பத்துமே யியற்றிய யோகிக்
கச்சுறு துளத்தி னன்பையுச் சாகத் தழிந்திடு மாறுப சர்க்க
விச்சைசேர் சித்தி யடைந்திடு மவையை விளம்புது முன்னரே மேவ
றுச்சறு பிரதிபை யிரண்டதாஞ் சிரவணை துலங்கிய மூன்றதாம் வார்த்தை. (கஉ)

நான்கென வுரைத்த தேவதா தரிசனம் மைந்தை யாசுவா தந்தான்
வான்பெறு மாறே ரேதனை யிங்ஙன் வரம்புறு முபசருக் கங்க
ளேன்புறு யோகி விடுத்திடின் யோகஞ் சித்தியா மவற்றினை நுவலிற்
றுன்புகன் முதலாம் பிரதிபையே யாவுந் தோன்றலாற் றருபெயர் தகுமால். (கங)

அப்பிர திபையை யறிதலே புத்தி யாமது மறைந்தது மனுவுஞ்
செப்புறு சேணிற் பொருளுமே னிகழுஞ் செய்கையுஞ் செந்துக்கள் புத்தி
யொப்புற லினிதா யறிதலு மாமிரண் டாஞ்சித்தி சிரவணை யோதி
லிப்புவிச் சகல செந்துவின் மொழிக டோர்ந்தறி வுற்றிடா திருக்கும். (கச)

சொல்விர சுவமே தீர்க்கநற் புலுதந் துலங்கவே யறிந்திடப் படும்பின்
புல்லிய மூன்றுஞ் சித்தியே ககார மாதியாய்ப் பொருந்திய மகாரத்
தெல்லையே பரிசம் யகாரமோ கார மிலங்கிய லகாரமே வகார
மொல்லுமிந் நான்கந் தத்தமென் றுரைப்ப ரோங்கிய துூரநேர் சகாரம். (கரு)

ஸகாரமே ஹகார மென்னுமிந் நான்குஞ் சாற்றிய வூஷ்ம தாகும்
விகாரமி லிவற்று னுரைத்திடுஞ் சுருதி மிருதிசாத் திரங்களே விளங்கு
மகான்மிய மறிதல் வார்த்தாசித் தியாகும் வளர்தரு நான்கதாஞ் சித்தி
யுகாதிவீ றளிக்கு மலரயன் றிருமா லுமையொரு பாகனே முதலோர். (கசு)

தெரிசன மறிதல் சென்றிடு காலத் திறநிகழ் காலநற் செய்கை
வருமெதிர் காலத் தியற்கைமெய்ஞ் ஞான மிவையெலாம் வகைபெற வறித
லிருவினை களையு மாசுவா தம்பேர்ச் சித்தியைந் தாகுமே லாறுய்க்
கருதிய சித்தி ரேதனை யீரே ழுலகதிற் கருமமே காண்டல். (கஎ)

திகழ்தரு மெண்ணெண் கலைகளுந் தேர்த லாமெனச் செப்புவர் மேலோர்
பகர்தரு மிந்த வுபசருக் கங்கள் பிருதிவி யாய்புன லங்கி
நிகரிலா வாயு நிரம்பிய வான நேருமாங் காரத்துற் பவமாம்
புகலிவை பஞ்ச பூதகா ரியங்க ளாமெனப் புகரறத் தெரிந்தே. (கஅ)

விடுத்தலுத் தமமாம் பிருதிவி பிசாச மேவினத் தொகுதியாய் விளங்கும்
படுபுன றுனே யிராக்கதர் கூறு பகர்ந்திடு மங்கிகந் தருவ
மடுதிறல் வாயுச் சோமதே வதமா மந்தர மிந்திர தெய்வம்
வடுவிலாங் காரம் பிரமதே வதையா மிவைகளின் வகைவகை யறிந்தால். (ககூ)

பிரமரூ பத்தின் றிறமெலாம் விளங்கும் பிருதிவி யெண்வகைக் குணமாம்
வரமுறு நாரம் பதினறு குணமாம் வளரழ லேயிரு குணமா
முரமிகு வாயு விருபதி னொன்கா யுற்றிடு குணமுபர் வானம்
விரவிய முப்பா னிருகுண மாகு மிளிருமாங் காரத்தின் செய்கை. (௨௦)

நாற்பது குணமாம் பஞ்சபூ தத்தி னயப்புறு குணங்களே தந்த
மேற்படு மிரத முருவமே பரிசம் விம்மிய சத்தமொ டிவைகள்
பாற்படு மொவ்வொன் றெண்வகைக் குணமாய்ப் பரந்திடும் பஞ்சபூ தங்க
ளேற்புழி யைந்து மாத்திரை யீரைந் திந்திய மனத்தொடும் புத்தி (௨௧)

சித்தமாங் கார மிவைகளைச் சில்லோர் தத்துவத் திறனென த்தெரிப்பா
ரொத்துறு நாற்பத் தெண்வகை யென்று மோங்கறு பத்துநான் கென்றும்
வித்தகத் தொண்ணூற் ருறதா மென்றும் விதம்வித மாகவே மேலோர்
தத்துவப் பகுதி யாமென வுரைப்ப ராகையாற் றகுதவ யோகி. (௨௨)

பலவகை யான சராயுசத் தோடு மண்டச முற்பிசம் பகரு
மலகிலா தொளிருஞ் சுவேதச மென்றே யமைவுறு பிறப்பொரு நான்கி
னிலகுபா லியமே வளர்கவு மாரம் யவ்வனம் வார்த்திக மென்ன
நிலவவத் தையினுற் பற்றுத லொழிந்து நிலமுறு சுகந்த துர்க்கந்தம். (௨௩)

பொருந்தியே யமையும் புனலிர தத்தோ டோடுநற் குணத்தொடும் பொருந்துந்
திருந்தழ லுருவம் பரிசமொ டமையுந் திறனுள வாயுவுங் கூறின்
வருந்தலில் பரிச மாத்திரை யமையும் வானநற் சத்தமொ டோங்கு
மருந்தவ யோகி யைந்துபூ தத்தின் சித்தியை யடைவுட னமைவான். (௨௪)

அவ்வகை யுணரிற் பிருதிவி ரிச்சித் திபமள மரும்புனற் சித்தி
கௌவைகொ ளனனீர்த் தம்பமக் கினியின் கதிய சித்திதேகத்தி
னெவ்வமி லங்கி யுதித்தலே யாகு மெழில்பெறு வாயுவின் சித்தி
செவ்வைகொ ளந்த ரிட்சநற் கமனந் திகழுமா காயமெய்ச் சித்தி. (௨௫)

அந்தர கமனஞ் சகலசந் துக்க ளறைந்திடு மொழியினை யறித
லிந்தவா றமையும் பிரமனே யாதி யிம்பரிற் றம்பமீ ருக
முந்திய யோகி யங்கையா மலகக் கனியென முறைமுறை யறிவான்
சிந்தையி லறியப் படாததொன் றில்லைத் தெளிதரு ஞானம்விஞ் ஞானம். (௨௬)

சகலநற் சோதி தேவதா வுருவந் தமனிய விமானநற் பிரம
னிகரிலாத் திருமா லிந்திர னியம னீரிறை யுடனவக் கிரகம்
புகரறு முடிக்க டாரையீ றெல்லாம் பொற்புறக் கண்டுகண் களிப்பான்
றிகழுமீ சுரமெய்ஞ் ஞானமே சிந்தை சேர்வயி ராகநன் முத்தி. (௨௭)

அடைகுவ னடையாப் பொருளதொன் றில்லை யாகையான் மெய்த்தவ யோகி
மடலவிழ் கூந்த லுமையொரு பாகன் மன்னிய விபூதியை யன்பா
யுடலினுத் தூள னஞ்செயச் சுருதி யுரைசிவ ஞானமுண் டாகும்
படர்தரு பாசு பதமுறை யோகப் பகுதியைச் சுருக்கியே பகர்வாம். (௨௮)

இதனையே விரிவா யிசைத்திட வெண்ணி னெண்ணுறு மயுதவாண் டேனும்
விதமுற வுரைப்ப தரியதாம் பாசு பதமென விளங்கிய யோகத்
துதைதர மனத்தி னியமமா யிருந்து புரிந்திட றென்மையென் றன்பான்
முதலரி மனுவுக் குரைத்தன னென்று முனிவரர்க் கறைந்தனன் சூதன். (உகூ)

இருபத்திரண்டாவது
யோகவிக்கின முரைத்த வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ருகரு.

இருபத்து மூன்றுவது
பத்திமன்மிய வத்தியாயம்.

பத்தி மான்மியப் பான்மை பகர்கென
முத்த ரான முனிவர்கள் கேட்கமால்
தத்து வத்தின் மனுவுக்குச் சாற்றிய
வித்த கத்தினைச் சூதன்வி ளம்புமால் (க)

சாது வாகித்தன் றன்மை யறிந்துளோ
ராதி யான விருபிறப் பாளர்நால்
வேத சாத்திர நீதி விளக்குவோர்
போத ஞான முணர்ந்தருள் போதகர். (உ)

சிவசொ ரூபத்தின் செவ்வி யுணர்ந்துளோர்
தவமி யற்றுநர் தாங்கும் பொறுமையோர்
நவவி ரத்தர்கள் ஞானியர் மோனியர்
பவமில் பல்லுயி ரொன்றெனப் பார்ப்பவர். (ஙு)

தானஞ் செய்யுந் தகைமை யனந்தர்க
ளான வாக்கு மனந்தனு வாதியா
லீன வஞ்சகப் பொய்யை யிசைத்திடா
ஞான வாசை யுறவுளத் தோர்கிலார். (௪)

சுருதி வேத மிகுதியைத் தொன்மையாய்க்
கருதி யன்பிற் கனிந்து துதித்துளோர்
மருவு மன்ன தருமத்தின் மாறிலத்
தரும புத்தியிற் பத்தி தரித்துளோர். (ரு)

வீறும் வாய்மையு மேன்மையு மெய்ப்பொருட்
பேறு தாங்குமிப் பெற்றியர் தங்களுக்
காற ணிந்தெழுத் தஞ்சுடை யாதியா
மேற தேறு மிறைவ னருளுமால். (சூ)

சத்து வென்றல் பிரமத்தின் சத்தமவ்
வித்த கப்பிர மத்தினை மேவலா
னத்த கைத்தது வேமுடி வாய்ந்தவர்
சுத்த சத்துக்க ளென்னத் துலங்குவோர். (எ)

விடையம் பத்தும் விலக்கி நிராசையா
யடைவி ஞேடுமை யாதிய தாதியா
முடைய யோக முளுற்றிக் கெறுவித
நடையி லாரதான் மாவென நண்ணுவார். (அ)

சாரு நீர்மைச் சாமானிய சாத்திர
மார்வி சேடத் தணிபெறு சாத்திர
மோரு மந்தணர் மன்னவ ரொப்பிலா
வேரு லாவும் வணிகரின் ஞோர்துசர். (கூ)

வேறு.

வருணமாச் சிரம மேவி வான்பெறு சுவர்க்க மாதிப்
பெருமைசேர் போகந் துய்க்கப் பிறங்குமில் வாழ்க்கை யோர்தா
மிருமைசேர் சிரௌத தன்ம மேற்றருஞ் சுமார்த்த தன்ம
மருமையி னத்த ருனே தருமமென் றறைவர் தக்கோர். (க0)

சகலவித் தையினை முற்றச் சாதிக்குந் தன்மை யானும்
புகல்குரு பூசை யன்பு பொருந்துறச் செய்த லானு
மிகலறு பிரம சாரி சாதுவா மில்வாழ் வுற்ரோ
னகமுறு மகங்க ளாதி யாற்றலா லவனுஞ் சாது. (கக)

கானிடைத் தவங்க ளாற்றிக் கருதிய பெருமை யாலே
ஞானமார் நெறிசேர் வைகா நசனுமே சாது நாளு
மீனமாம் பொய்யை யோதா தியற்றரும் யோக மாற்றி
யான்மமுத் தியைச்சேர் சந்நி யாசியுஞ் சாது வாவார். (கஉ)

சொன்னவிந் நால்வர் தத்த மாசிர மத்தின் ருென்மை
நன்மையி னுற்ற லாலே நயந்தசா தகரே யாவர்
மன்னிய தன்மா தன்ம மருவிய நன்மை தீமை
யுன்னிய தரும மென்ற லுயருஞ்சொர்க் காதி லோகம். (கங)

அனைத்துமுண் டாக்க லானு மாகுமன் னவையுண் டாக்கா
துனத்தகு கீர்த்தி யல்லா தவகீர்த்தி யுலகி னிற்ப
வினைத்தொழில் செய்த லாலே யதன்மமா மேவுந் தன்ம
மனக்கொடும் பவந்தீர் ஞான குருவுப தேச வாக்கால். (கச)

நன்மையைக் கொடுக்கு மற்றை யதன்மநற் குருவின் வாக்கால்
வன்மொழி யுபதே சந்தான் வருத்திடப் படாது ஞானத்
தின்மொழிக் குரவ ராஞே ரிலக்கணங் கூறு ஞான்று
தொன்மொழி ஞானங் கல்வி துகளறு குலமா சாரம். (கரு)

வயதிவை தன்னின் மூப்பாய் வான்பொருள் வரவொன் றின்றித்
தயவொடுந் தன்னைத் தானே யறிந்திடுந் தகைமை பெற்று
நயமிலா டம்ப மின்றி நவில்சிக்கை யுடைய னாகித்
துயருறு பொய்சொல் லாது மெய்ந்நெறி துலக்கி வேதம். (௧௬)

சாத்திரந் தவறிலாமற் றனிப்பொரு ளுணர்ச்சி ஞான
நேத்திர முடைய னாகி நெறியினிற் பவனே தக்கோ
னுத்தமும் பேற வோது நான்மறை யாளர் நித்த
மேத்திய சுரௌத மற்றச் சிமார்த்தத்தை யியம்புங் காலை. (௧௭)

வேதவாக் கியத்தா யாக மாதிய விளம்ப லுனே
பேதமில் சிரௌத மந்த வேதமே பெட்பாய்ச் சொல்லு
மூதறி வுறுத்தும் வன்னச் சிரமத்தை மொழித லுனே
போதமார் சிமார்த்த தன்ம மெனப்புகன் றிடுவர் மாதோ. (௧௮)

மறையினுண் பொருளைத் தேர்ந்தே யனுபவ மனத்துட் கொண்டு
நிறைவழா துரைத்த லுனே நிகழ்த்துசத் தியம தாகு
மறைபிரம சரிய மோன மயீமிசை காயக் கிலேசம்
பொறையொடு மொழிவு தானே புகன்றிடு தவமென் பாரால். (௧௯)

திகழ்பூத தயவு சந்து வாதிய சீவான் மாவுக்
கிகல்கெட நன்மை செய்தல் யாவையுஞ் சமமா யெண்ணல்
புகரறு தான நீதி பொருள்பெறற் குரியோர்க் கீத
றகவுறு தானமூன்று வகையவை சாற்று ளொன்று. (௨௦)

உத்தம மத்திமத்தோ டதன்மஞ்சொல் லுத்த மந்தான்
வித்தையோச் கியத்தோர்த் தேடி நன்மொழி விளம்பி யீதன்
மத்திமந் தன்னைக் காத்தோன் வளங்கொளா சிதனென் றீத
னித்தமில் தன்மங் கூறி னேர்சுப தினங்க டம்மில். (௨௧)

யோக்கியர் தம்மைத் தேடி யீந்திடா தொருவன் கூறும்
வாக்கியத் தலட்டுக் கீதல் சுருதிநன் மிருதி வாய்மை
நோக்கிய வருண சிரம வடிவமாய் நோன்மை செய்வோ
னுக்கிய முறைவ ழாம லாசாரத் திருத்த றன்மம். (௨௨)

சாதுவாங் குருச்சொல் லாமற் சாத்திர விருத்த மாகித்
தீதறு நகரஞ் சேர்க்குந் திறஞ்செய்த றன்ம மாகு
மாதுயர் மாயா கன்ம வழியிலான் சிவசொ ரூபங்
கோதுறு மாசா பாச நீந்துளோன் கூறும் யோகி. (௨௩)

இகபர மிரண்டும் வேண்டா திருப்பவ னுத்த னென்றும்
புகலுமிந் தியம டக்கல் சடம்புவி சுகதுக் கங்க
டகவுறு விருப்பி னோடு மடிமையுற் றிடாமை மாற்றுர்
மிகவுமித் திறனில் லாம விருப்பவன் விரத்த னாமால். (௨௪)

நன்மைவெந் திமை நீத்தோ னயம்பெறு சந்நி யாசி
மன்னுமவ் வியத்த மாதி வழங்கிய விசேட மீருய்த்
துன்னரும் பேத மின்றிச் சொல்லிய சேத னத்தோ
டுன்னிய வசேத னத்தை யொழிதலஞ் ஞான மாகும். (உரு)

இவ்வகைப் பத்தி செய்யும் யோகியா லென்று மீசன்
றவ்விலி னருள்வ னன்றிச் சாத்திரம் யோகந் தானே
மவ்வல்வா ணகையாள் பாகன் மலரடிக் கன்பாய் வேறோர்
செவ்விய தேவுண் டெண்ணுன் றனையுமே சேர்ப்பன் முத்தி. (உசு)

சேர்தரு தியான மோதிச் செவித்திடல் செந்தீ யோம
மோர்தரு போதா யாக முயர்தரு தபசு வேதம்
பேர்தரு ஞான மோத லிவைசிவ பெருமான் பத்தி
கூர்தரு மென்று நான்கு மறைகளுங் கூறு மாலோ. (உஎ)

சாந்திரா யணம்பி ராசா பத்தியஞ் சாருந் திங்க
ளாந்துப வாச மாதி விரதமா யிரமாண் டாற்றிப்
போந்தவ னேனு மெம்மான் பொற்பதப் பத்தி கூரா
ணூர்ந்தவம் பூதி யிற்செ யாகுதி யாகு மாதோ. (உஅ)

இன்னநல் விரத மாற்று மிருந்தவ ரேனு மெம்மான்
பொன்னடிக் கன்பி லாரேற் புகலருஞ் சுவர்க்க லோக
மன்னிய போகந் துய்த்துப் புண்ணிய மாண்ட பின்னர்த்
துன்னுவர் புவியி னல்லாற் றுறக்கவீ டடைவ ரன்றே. (உகூ)

சிவனடி யாரைக் கண்டோர் சேர்வர்நற் சுவர்க்க லோக
மவிரொளிக் கமலத் தண்ண லாதிவா னவர்கோன் றேவர்
புவனியின் மோனம் வல்ல வகத்தியர் முதலாம் போகத்
துவமையின் முனிவர் வல்லோ ருமையொரு பாகற் காளாய். (ஙo)

பத்திசெய் தருள்பெற் றோங்கிப் பகரரும் பதவி சேர்ந்தார்
வித்தகத் தானே யிந்த விதமுமைக் குபதே சித்தான்
முத்தர்பார்ப் பதியி னோடு முன்னவி முத்த கேத்திரத்
தொத்தசிங் காத னத்தி லிருக்குஞான் றுமையா ளேக்கி. (ஙக)

பரமநின் காட்சி யோகம் பகர்தவ ஞானங் கல்வி
திரமுறிவ் வகையில் வல்லோ ரெவ்வணந் தெரிகிற் பார்க
ளுரமுற வுரைத்தி டென்ன வுமைமுக நோக்கி யெம்மான்
வரன்முறை யுரைப்பா முன்னர் நின்னுடை மாதா வான. (ஙஉ)

மேனைநிற் குபதே சித்தாள் விளங்கவி முத்தந் தன்னி
லேனைய வார ணசி யேற்றரு முத்தித் தான
நானில வரைப்பி னென்கை மறந்தனை நவ்வி யொண்கட்
பானலந் தீஞ்சொ னல்லாய் பகர்ந்தவிப் பான்மை யாவும். (ஙங)

56

முன்னரே பிரமன் கேட்ப மொழிந்திடு தவத்தி னானு
முன்னரும் வித்தை யானு முஞற்றிய யோகத் தானு
மன்னிட லெம்மைக் காண லரிதெமை வழுத்தும் பத்தி
யின்னெமைக் காண லாகு மியம்புமப் பத்தி தானும். (௩௪)

எம்முரு வாமி லிங்கத் தேத்திப்பூ சனைக ளாற்றி
விம்மும்தோத் திரங்கள் செய்தாற் சித்தியாம் விளங்கெம் ரூபஞ்
செம்மைகூர் யுகங்க ணான்கிற் றிகழ்வெண்மை சேப்புப் பொன்மை
யம்முறு கறுப்ப தாகி யடைவுறு மிலிங்கந் தன்னில். (௩௫)

பூசனை புரியிற் பத்தி பொருந்துநம் முருவந் தானுந்
தேசுறு சத்தியோ சாதந் திகழ்ந்ததற் புருட மன்றி
மாசறு மகோரம் வாம தேவநால் வகையு மன்றிப்
பேசுமீ சான மெல்லா வுலகமும் பிறங்கத் தோன்றும். (௩௬)

என்றியா முரைப்ப வேத னிறைஞ்சித்தத் ததய மம்மா
துன்றிடத் தெளிகி லேனாய்த் துணைவினிற் காணுங் காட்சி
நன்றியை யுரைத்தி டென்ன நவின்றிடு மகங்க ளாதி
யொன்றிய தருமம் யாவு முஞற்றினு முவப்பொன் றில்லேம். (௩௭)

பத்தியான் மகிழ்ச்சி கூர்வேம் பரிவினாற் சிரத்தை கூர்ந்து
பத்தியா லிலிங்க பூசை செய்தலாற் பரிவோ டுற்றும்
பத்தியான் மாயன் முன்னர்ப் பாற்கட னடுவ ணெம்மைப்
பத்தியா லருச்சித் தன்று பணிந்தெமைக் காணப் பெற்றான். (௩௮)

இன்றுநீ முகங்க ளைந்தோ டெம்மையே தியானித் துள்ளத்
தோன்றலா லெதிர்ந்தா மென்றே யுரைத்தன முமைகே ளின்னும்
வென்றிகூர் சிரத்தை யாலே யருச்சித்தால் விரைவிற் றோன்றி
நன்றியின் வேட்ட லீது நவையறு சிரத்தா தன்மம். (௩௯)

ஓதுவா னுணுக்க மாழு முஞற்றிய சிரத்தை ஞான
மேதமில் லோம மிக்காந் தவமிகுஞ் சுவர்க்க முத்தி
யாதலாற் சொல்லு மந்தச் சிரத்தையா னறியத் தோன்றிப்
பேதமுற் றிடாமல் வேட்ட லருளுதும் பெட்பி னென்றார். (௪௦)

கேட்டலு மிமய மீன்ற கிள்ளையங் குதலைச் செவ்வாய்ப்
பாட்டளி துதையும் பைந்தார்ப் பணைமுலைப் பசிய மேனித்
தாட்டுணைக் கமலத் தன்னத் தனிநடைச் சரிய கூந்தற்
பேட்டிள மயிலஞ் சாயற் பெண்கொடி பெருகு மன்பான். (௪௧)

செந்தழற் பிழம்பிற் றோன்றித் திகழ்மறி மழுக்கை யேந்திப்
பைந்துணர்க் கொன்றை தும்பை பாதிரி கரந்தை மத்த
மிந்திளங் கொழுந்து வேதத் தெறிதிரை சுருட்டு கங்கை
யந்திவான் சடையிற் சூடு மண்ணலைத் தியானித் தன்பாய். (௪௨)

விதிமுறை சிவலிங் கத்தின் விருப்பொடு மருச்சித் தேத்தி
முதிர்தரு பத்தி தன்னுன் முயன்றுமுக் கண்ணோர் பாகம்
வதிதரப் பெற்று ளென்றே மனுவுக்கு மச்ச ரூபி
துதிதர வுரைத்தா னென்ன முனிவர்க்குச் சூதன் சொன்னுன். (சரு)

இருபத்துமூன்றவது
பத்திமான்மிய வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ருருசு.

இருபத்துநான்காவது
பிரமாவிட்டுணு சம்வாத வத்தியாயம்.

விதிவிண்டு சம்வா தத்தை விளங்குற வுரைத்தி டென்றே
நதிகொள்வா ரிதியிற் றேன்று நாரணர்ப் போற்றி யேத்தி
மதியுறு மனுமுன் கேட்ப வகுத்துரைத் திட்ட வண்ணந்
துதிபெறு முனிவர்ப் பார்த்துச் சூதமா முனிவன் சொல்லும். (க)

பரமன்மா யத்தி ஞலே பங்கயப் பிரமன் மாழ்கி
நிரவிமுன் போய பாற்ப கற்பத்தி னிலநீ ராழ்ந்து
திரமுறு துயிர்கள் யாவுஞ் சேரிடஞ் சேர நீர்மே
லிரவொரா யிரப்ப ணப்பூம் பாயலி னமர்ந்து யோகம். (உ)

வல்லவ ஞகி நூறு யோசனை வகைத்தாய்ச் செங்கே
ழெல்லொளிக் கமல முந்தி நாளத்தி லெழவப் பூவை
மெல்விரற் கரத்தி னேந்தி மால்விளை யாடு மேல்வைச்
சொல்விரா சதகு ணத்தி லைம்முகத் தயன்முற் றேன்றி. (ஙூ)

யாவனீ யென்ன மாயன் செகமெலாம் படைத்துங் காத்து
மோவற வழித்து நிற்கு மொருவன்யா னுரைக்கு நீயார்
பாவக முரைத்தி டென்னப் பங்கயன் யானு முன்போன்
மூவகைத் தொழிலும் வல்லே னென்னலு முகுந்தன் சொல்லும். (ச)

முத்தொழில் வல்ல னுயின் மூதண்ட மகட்டிற் காட்டென்
றுத்தரஞ் சொல்ல வேதன் வாய்விடுத் துதரங் காட்ட
வத்தகை மாய னுற்றே ராயிர மாண்டாண் டோர்ந்து
வித்தக வுலக மெல்லாம் பார்த்துவாய் வழியே மீண்டான். (ரு)

மீண்டபின் பிரமன் றன்னை விண்டுநம் முளத்திற் புக்குக்
காண்டியா னீயு மென்ன வேதனக் கண்ணன் வாய்ப்புக்
கீண்டிய சராச ரங்க ளெண்டிசை யிறைவ ரெல்லா
மாண்டகட் டுறக்கண் டந்தோ வரியவாச் சரிய மென்றே. (சு)

சுற்றியே திரியு ஞான்று சுருதிமா னவத்து வாரந்
தெற்றென வடைத்துக் கொள்ளத் திரும்பவோர் வழிகா ணுய்த்
புற்றுறு மரவம் போலப் புழுங்கியே பிரமன் யோகத்
துற்றொரா யிரமாங் கோடி காலமங் குழன்றிட் டானல் (எ)

உழன்றிடு ஞான்றே யுள்ளத் துள்ளிவெம் மோகத் தோடு
மழுங்குபோ தரிநா பிக்க ணரும்புமுட் கமல நாளம்
வழங்குநூல் வழியைக் கண்டிவ் வழிவெளி யுறலா மென்று
பழங்கணே யகற்றித் தன்மெய் பரமாணு வாய்ச்சு ருக்கி. (அ)

நூல்வழி மீதி லேறி நோன்மலர்க் கமலத் துற்று
நால்வத னத்தி னேடு நயந்துபாற் கடல்வாய்த் துள்ளுஞ்
சேல்விழி மலர்மான் பக்கந் திறத்துழி யிருக்க யோகத்
தால்விழி மூடி மெய்போ லுறங்குமா லருகிற் சார்ந்தே. (கூ)

கையினுற் புடைத்துன் வஞ்சக் கருத்தையா ரறிகி லாரிப்
பொய்யுறக் கத்தை நீத்துப் புகறியால் வாரி நாப்பண்
செய்யகண் வளரு நீயா ரென்னமால் செங்கண் கையாற்
பையவே நீவிச் சேடப் பாயலி னெழுந்து நோக்கி. (க0)

முகமலர்ந் தினிய தீஞ்சொன் மதலைமென் மொழிவாய்த் துய்ய
மகவுநீ வருதி யென்று மாயவ னுரைக்க வேத
னகமுறுங் காரத் தோடிவ் வண்டமொ டகண்டம் யாவும்
புகரறப் படைத்த ளித்தே யழித்துறப் பொருத்தி மேலாம். (கக)

அனுக்கிர கத்தி னேடு திரோதான மைந்தும் வல்லே
னெனக்கணித் திடாம லாசா னிறைஞ்சுமா ணக்கன் றன்னைத்
தனித்தழைத் திடுதல் போலச் சாற்றலென் றிருமா லென்னப்
புனத்துள வத்தோ னென்ற னுதரத்திற் புகுந்து மீண்டாய். (கஉ)

ஆதலாற் றொழிலோ ரைந்து மறிந்தெம் மகிமை மாயப்
போதமே புணர வெம்மை மறந்தனுன் புணர்ப்ப தன்று
லேதமொன் றில்லை நின்மே லென்றுமால் விநயத் தோடு
நீதியா யுரைத்து நாரா யணனெனு நேமி யோன்யான். (கங)

செகமெலா நிறைந்து சீவ கோடிக டினமுந் துய்த்தே.
யகமுறு முணவு நல்கி யரும்பர வான்மா வாகி
யிகபர மளிக்கு மென்னை மறந்தனை யென்ன வேதன்
றுகளறு மயக்கி லார்போற் சொற்றதென் றுளவ மானீ. (கச)

அறனுடை யான்போ லென்னை யருளொடு மாயா பாசத்
துறுதியு ளூழுன்றே னென்றின் றுரைத் ததுன் மயக்க மன்றே
பிறிதொரு பயனென் சொல்வாய் பெரும்படை யேந்தி யென்ன
நெறியொடும் பொரவா வென்றே நேர்ந்தனன் றிருமா றனும். (கரு)

இருவரும் போர்செய் ஞான்றே யிடியெனச் சிறுநா ணோசை
பெருமுக டுடைய வண்டப் பித்திகை வெடிப்பத் தெண்ணீர்ப்
பொருகடல் வெதும்ப வந்தப் புணரியி னுப்ப ணின்றே
யொருவருக் கொருவர் தோலா துடற்றினர் வேத நான்கும் (கசு)

ஒருங்குவந் துருவெவ் வேறு வுலவுற வேத னீண்ட
கருங்கடல் வண்ணனிந்த விருவருங் கருத்தினோர்ந்து
பெருங்குண மாயை நீங்கிப் பிறங்குநல் லறிவி னோடு
மருங்கலை மறைகட் பார்த்தே யாங்களில் யாவன் மேலோன். (கஎ)

ஓர்ந்துரைத் திடுமி னென்ன வுரைப்ப யாங் கேட்பீ ராகி
னேர்ந்திடுங் கதன நீக்கு மென்றலு நெடுமால் வேதன்
வார்ந்தவும் மொழிகே ளேமென் றனரென மச்ச மாயன்
றேர்ந்தறி மனுவுக் கோதல் செப்பினன் சூதன் மாதோ (கஅ)

இருபத்துநான்காவது

பிரமாவிட்டுணு சம்வாத வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ருஎச.

இருபத்தைந்தாவது

வயிரவ வுற்பத்தி யத்தியாயம்.

வயிரவ னுற்ப வித்த வகைவிரித் துரைத்தி டென்று
செயிரறு முனிவர் கேட்பச் செம்மணி மாய னுயர்
தயிர்கடை வெண்ணெ யுண்டோன் சார்மச்ச வுருவிற் றோன்றி
யுயிருணர் மனுவுக் கன்றே யுரைத்தவா றுரைத்தான் சூதன். (க)

விதிவிண்டு மயக்கங் கண்டு வேதநான் குருவெவ் வேறு
யதிசயத் துருவிற் றோன்றி யன்னவர்க் கறிவு ஞானம்
பதிதர வுரைப்பா மென்று பகர்ந்தவை களின்முன் னோது
மதிதிக ழிருக்கு வேத மலரயன் றன்னை நோக்கி. (உ)

அண்டங்க ளனைத்துந் தம்பா லுற்பவித் தாக்கஞ் செய்து
திண்டிற லழித்து நிற்குந் திறத்துளோன் யாவ னன்னோன்
றண்டலில் வேதாந் தத்தின் றலைமையா னவனே காள
கண்டருத் திரனே யன்றி வேறிலை கடவு ளென்றும். (ங)

இரண்டெனு மெசுரு வேத மிருங்கம லத்தோற் பார்த்துத்
திரண்டுறு மகங்கள் யாவும் யசித்திடுஞ் சீரி னனு
மரண்டரு சாங்கி யாதி யோகத்தா லறியுந் தேவு
முரண்டரு முலகிற் சான்ற முதல்வனுஞ் சிவனே யென்றும். (ச)

மூன்றெனுஞ் சாம மேம முண்டசத் திறையை நோக்கி
யான்றிடு சராச ரங்க ளாயம ருலகம் யாவுந்
தோன்றயன் மாயன் முக்கட் சோதியென் றுளமோ கிப்ப
வேன்றுறச் செய்தும் யோகம் வல்லவர்க் கெதிர்நிற் பானும். (ரு)

பரதத்து வந்தா னென்ன வறிந்திடும் பானு மேற்கும்
வரதத்தக் கினிவெய் யோன்வான் மதிக்கொளி வகுப்பா னும்பா
ரிரதத்த ராகிப் பஞ்ச விந்திய மடக்கும் ஞான
விரதத்தர் பரவு முக்கண் விமலனே முதல்வ னென்றும். (சு)

நான்கெனு மதர்வ ணந்தா னளின்வாண் முகத்தை நோக்கி
வான்கதிப் புராணம் வேத மருவுசாத் திரங்கள் வேதத்
தோன்புகழ் சுருதி யோடு மிருதியோர் வதற்கு மெட்டா
தான்சதம் பரவு மன்பர்க் காரருட் கருணை கூர்ந்தே. (எ)

ஊழ்வினைத் துக்க நீக்கி யுயர்கதிச் சுகத்தை நல்கித்
தாழ்விலா முத்தி நல்குஞ் சங்கரன் முதல்வ னென்றுங்
கேள்விநான் மறையு மிந்தக் கேண்மையைக் கிளத்த வேதன்
சூழ்வினை யகங்கா ரத்தாற் றுயக்குறு மோகத் தாலே. (அ)

வேதங்க டம்மை நோக்கி யிமவே தாளர் கூளி
பூதங்க ளுடனே போர்க்கும் பொற்றுகி லன்றிச் சாம்பர்
மீதங்க முறவே பூசி வெண்டலை யென்பு பாம்போ
டேதங்க ளெருக்கார் தும்பை யிதழிமற் றிவைபூண் டாடி. (கூ)

பெண்ணொரு புறத்து நண்ணப் பிரிவுறு மயற்பேய் கொண்டு
வண்ணமா லெருத்தி லேறிச் சற்சங்க மருவ லின்றி
நண்ணுபொற் சடிலந் தாங்கி நவ்விவாண் மழுக்கை யேந்தும்
பண்ணவன் றனையே மேலாம் பரதத்து வந்தா னென்றீர். (க0)

எனவிவை யியம்ப வேதத் திரும்பொருட் பிரண வந்தான்
முனமொரு வடிவ மாகி மதியிலி மொழியக் கேண்மோ
புனைமதி வேணிப் பெம்மான் சத்தியைப் பொருந்தி யொன்று
யனவர தமுமே வாழ வன்னையு மவனை நீங்காள். (கக)

சிவனலாற் சத்தி யில்லைச் சிவன்சத்தி யல்லா லில்லைப்
புவனங்க ளனைத்துஞ் சத்தி மாயையின் புணர்ப்பி னாலே
யவமுற மோகிப் பிப்பா ளுகையா லான்ம ஞானந்
தவநெறி யுணர்ந்து ளோருஞ் சதாசிவற் றெளிந்தி லாரால். (கஉ)

வேறு.

என்று வேதத் திலங்கும் பிரணவ
நின்று கூறலு நேமியங் கையினு
னொன்று மாயை யொழிந்தறி வுற்றனன்
லன்று மாயைத் தொடர்ப்பிணிப் புற்றயன். (கங)

தெளிவு ஞறு மயங்கித் தியங்கலு
நளின வாசன ஞரண ஞப்பணின்
வெளிமு கட்டுற வெந்தழற் சோதியாய்த்
துளிர்க டுக்கைத் தொடையரன் ருேன்றிஞன். (கச)

தோன்று செந்தழற் சோதியை நோக்கியே
யான்ற மான்முத லாஞ்சன காதியர்
மூன்று கால முணர்ந்த முனிவர
ரேன்ற வேதத்தி னேத்தித் தொழுதனர். (கரு)

தொழுத காலையிற் சோதியி ஞப்பணேர்
பழுதி லாவுருப் பண்ணவ னைம்முக
மிழுது நெய்முகச் சூல மெறிமழுக்
கொழுதி வண்டிமிர் கொன்றையஞ் செஞ்சடை. (கசு)

வரதஞ் செய்ய வபய மலர்க்கரஞ்
சரதி நீலத் தனிக்களந் தான்மறை
பரவு பொற்றுகி ஞங்கிய பான்மையி
ஞரக கங்கண ஞேருருக் காட்டிஞன். (கஎ)

உற்ப வித்துறு மொண்டொடி பாகனைத்
தற்ப ரன்னெனச் சற்று மறிந்திடா
சற்ப ரென்ன வறிவழிந் திட்டயன்
சிற்ப ராவென் றிருமுக நெற்றியில். (கஅ)

வந்து தோன்றி மலர்க்கண்ணி னீருக
வெந்தை யுன்னை யுருத்திர னென்றுமுன்
புந்தி யோடு புகன்றன னின்பெயர்
சிந்தை நோதல் சிறப்பொடு காப்பல்யான். (க௯)

என்னும் வேதியன் வன்மொழி யெம்பிரான்
மன்னு காதிற் புகுதலு மற்றவன்
றுன்னு தேகத்திற் ருேன்றி வயிரவ
னுன்னு பூதியுத் தூளத் தொடுங்கவே. (உ0)

நின்ற காலிற் சிலம்பொலி நீடுறத்
துன்று மண்டத் தொகுதி கலங்கிட
வென்றி மான்மழுச் சூலம்விற் குந்தம்வா
ளென்ற பல்படை யாவையு மேந்தியே. (உக)

வான நோக்குபு வாண்முக மன்னிய
கூனல் வெம்பிறைக் கோடுறெ யிற்றெடு
மூன மற்ற பயங்கர ரூபமாய்
மோன முற்றெதிர் மொய்ம்பி னுதித்தனன் (உஉ)

தன்னை நோக்கி விதியைத் தடிந்தவ
னுன்னு மாயைத் தொடக்கை யறுத்துவாழ்
கென்ன வோதியிவ் வண்டந் திரிதலான்
மன்னு முன்னை வயிரவ னென்பரால். (உ௩)

கால னாகி விளங்கலிற் காலன்றன்
கோல நாச னெனப்பெயர் கூறுவா
ரேலுங் கால னுனக்கிடைந் தோடலா
லால கால வயிரவ னென்பரால். (உ௪)

இவ்வ கைப்பெயர் மற்று மியம்பியே
அவ்வ ருட்கடைக் கண்ணருட் சோதியா
னவ்வி யொண்கண்ணி பாக னவின்றசொற்
செவ்வி கேட்டயற் சீறி வயிரவன். (உ௫)

நிற்ற லும்மயன் போர்பொரநேர்தலுங்
கொற்ற மாகிப் பொருதனர் கூறும்வா
ளிற்று டைந்தன வண்ட மிடிந்தன
சுற்றும் வேலை வெதும்பிச் சுவறின. (உ௬)

ஆய காலை யயனைத் துரும்பினை
யேய வெண்ணி வயிரவ னெற்றிநீள்
காய மோர்கையிற் கட்டிக் கவர்ந்துமே
மேய வோர்தலை மெல்லுகிர் கிள்ளினன். (உ௭)

கிள்ளி யத்தலை கீழுற வீழ்த்தினன்
வள்ளி யோனை வழுத்தலி லாத்தலை
துள்ளி வீழ்தலும் வேதன் றுடித்துளத்
துள்ளி யுள்ளி யுடைந்துமூர்ச் சித்தனன். (உ௮)

மூர்ச்சை நீங்குமுன் மாயையு நீங்கிட
மேற்ப டுந்துயர் நீக்கி விமலனைப்
போற்றி யேத்திப் புகழ்மறை மந்திரத்
தாற்று தித்தடி யர்ச்சனை செய்தனன். (உ௯)

மாயை நீங்கி மலரயன் போற்றலு
மாய னாதி யமரர் முனிவர
ரேய நாக ரியக்கர்விச் சாதரர்
தூய கின்னரர் தும்புரு நாரதர். (௩0)

ஆதி யாமிவர் தாந்துதித் தாடியே
நீதி யோடு நிரந்தரம் போற்றினா
ரோத லீது வயிரவ னுற்பவ
மீதி தென்ன விளம்பினன் சூதனே. (௩க)

இருபத்தைந்தாவது
வயிரவ வுற்பத்தி யத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௬0௫.

இருபத்தாறுவது

பரமேசுவரர்

தேவர்கட் கபயங்கொடுத்த வத்தியாயம்.

சேற்றிதழ்க் கமலத் தண்ண லரிமுதற் றேவர் யாரு
நீற்றொளி பழுத்த மேனி நின்மலற் புகழ்ந்து நின்று
போற்றலு மபய மீந்த பொற்பினைப் புகறி யென்றே
யாற்றல்சேர் முனிவர் கேட்ப வறைந்திடுஞ் சூதன் மாதோ. (௧)

வயிரவன் சிரந்தான் கிள்ள மயங்கிவீழ்ந் தருண்ட வேத
னயர்வுறு மாயை நீங்கி யமலன்ற னடியிற் றாழ்ந்திட்
டுயர்வுறு சத்துச் சித்தோ டானந்த வடிவ னாகி
வியனருள் பழுத்துநின்று பதியென விளங்கு ஞான்றும். (௨)

காரண வுருவாய்ச் சூல கரத்தராய்க் காள கண்டத்
தேருறு தண்டி யாகி யிரத்தவீ ரியத்த ராகிப்
பேருறு தேவ தேவாய்ப் பெரியராய்ப் புராரி யாகி
யோருரு வமைந்தெல் லோரு முளூற்றுபூச் சியரு மாகி. (௩)

சத்தியோ சாத ராகித் தனிப்பெருங் கிரீச ராகி
பத்துவா வென்றே யாரு மறிவதற் கரிய ராகி
வைத்தபீ தாம்ப ரத்தை யுடையராய் மதத்தே யாகி
யுத்தம தத்து வத்தி னுற்பத்திக் தான மாகி. (௪)

வேதசாத் திரம்பு ராண மிவைக்குவே றிறையு மாகி
யேதமில் பிதிர்க்க டேவ ரிலங்கிய பசுத்த ருக்க
ளாதியாம் பதியு மாகி யருடன்ம ரூபி யாகி
யோதிய விடபத் தோங்குங் கொடியினை யுடைய ராகி. (௫)

அத்திரி பிருகு வாதி முனிவர ரசுரர் நாகர்
சித்தர்வித் தியாத ரர்கள் சிறந்தகின் னரர ரக்கர்
புத்திகூர் கணங்க ணன்னீர் புகன்றிடு ரசங்க ளுக்க
மித்தகைப் பதியாய்ச் சிரி லிலக்குமி பதியு மாகி. (௬)

உலகதன் கரியாய்ச் சிருங்க மொன்றுடை வீர ராகி
யிலகுமுக் கால ரூபத் தெழிலுறு காந்தி யோராய்
நிலவுவா மனவ ரெண்ணும் வரதராய் நிலவி யெங்குங்
கலைதரு மகான்மா வாகிக் கரந்தபூ தங்க ளாகி. (௭)

அக்கினி சொருப மாகி யமர்யாக ரூபி யாகி
மிக்கதொர் தாப ரூப மாகிமா மேரு வாகித்
தொக்குறு மனுவா யெட்டா மூர்த்தத்தின் சொருப மாகித்
தக்கதொர் சருவ ரூப மாகிச்சார் மறையோ ராகி. (௮)

சபையுறு முருவ மாகித் தக்கணா மூர்த்த மாகிச்
சுபமருண் மயேச ராகித் துலங்குசர் வேச ராகி
யிபமுரித் தணியுந் தேவே யென்றுவே தத்தி னேங்கு
மபயமின் றருடி யென்ன வரற்றியஞ் சலிசெய் தானல். (கூ)

மாயைமுன் னொழிந்த மாயன் மழுவலா னடியைப் போற்றித்
தூயையோங் கார ரூபி யுருத்திர சொரூபி யாகிச்
சாயைகூ ரகார மாகிச் சாற்றிய வுகார மாகி
மாயைநேர் மகார மாகி யமர்வித்தியா சொரூபி யாகி. (க௦)

பரமான்ம ரூபி யாகிப் பகருமுச் சுடர்க ளாகித்
திரமான விலிங்க மாகிச் சேர்ந்தொளிர் சமான ராகி
வரமேவு வாயு வாகி வரம்பிலா நிதிய மாகி
நிரவேம சொருப மாகி நிரந்தமெய்ப் பொருளு மாகி. (கக)

சிவலிங்க வுருவ மாகிச் சிறக்குமா காய மாகிப்
புவனவந் திரட்ச மாகிப் புகழ்சத்தம் பரிசங் கந்த
நவரச ரூப மாகி நாடுவோர்க் கரிய ராகி
யுவமையி லனந்த ராகி யுறுவிசு வரூபி யாகி. (கஉ)

உலகநா யகரா யுற்ற வமலரா யுறக்க மில்லா
தலகிலா யோகி யாகி யந்தத்தில் வாரி நாப்ப
ணிலகிவீற் றிருப்போ ராகி யிரங்கியே காப்போராகிக்
கொலைபுரி நாத ராகிக் கூறிய கருத்தா வாகி. (கஙூ)

சொல்லிய நிதான ராகித் துலங்குமீ சுரரு மாகி
யொல்கலில் சேத னத்தோ டசேதனத் துருவ மாகி
யல்கலில் சொரூப மாகி யரூபியா யனங்கற் செற்ற
வில்லழற் கண்ண ராகி விளங்கிய பொருளே போற்றி. (கச)

என்றுதோத் திரம்பு ரிந்திட் டியன்றதோர் சிருட்டி காக்கை
துன்று சங் கார மென்ற தொழிலுடை மூவ ராணே
றொன்றுபூச் சியர்க ளாகி யுளுற்றியே மாயை நீரி
னன்றுதித் திட்ட பூமி முதலவைம் பூத மெல்லாம். (கரு)

வேறுவே றியம்பும் பேராய் விளங்கிப்பின் முடிவாங் காலத்
தூறுற வொன்று யுன்ற னிடத்துறுஞ் சகமீ ரேழா
மாறுறு முலக நின்பால் வதிந்துபின் மதிக்கத் தோன்றுங்
கூறுநின் பெருமை யாரே குறித்துரைத் திடவும் வல்லார். (கசு)

ஆதலாற் சகங்கட் கெல்லாம் பிதாமக ராகி யென்று
மேதமி றேவ ரீரே யென்றனைக் காக்க வேண்டு
நீதிகூர் பத்தர்க் கெல்லா நெறியுள பத்தன் யானென்
றோதித்தோத் திரம்பு ரிந்தா னுரைத்திடு மாயன் பின்னர். (கஎ)

இந்திரன் முதல தேவ ரிணையடி வழுத்திப் போற்றி
நந்தலில் சுவேத ராகி நவையிலவ் வருண ராகிச்
சிந்தைசெ யிமைய வெற்பின் வரத ராய்ச் சிறந்த ரூபத்
தந்தமி லழக ராகி யமர்சுவேத சிகரு மாகி. (௧௮)

ஓதிய விசிட்ட ராகி யுலவுதுந் துபியாய் மற்றத்
தீதறு சுமுக ராகித் திகழ்சுநேத் திரரு மாகி
யேதமில் தேமத் துரூப மாகிப்பிர தான மாகிப்
போதநே ரகங்க ராகிப் புகழங்க ரூபி யாகி. (௧௯)

பன்னகா பரண ராகிப் பகர்சங்க பாதராகி
யுன்னுசங் கரரு மாகி யுறுமயே சுரரு மாகி
மன்னிய தமரூ பம்மாய் மகிழ்சத்துவ சொரூபி யாகிப்
பின்னமில் சருவ ரூபி யாகிய பெரிய போற்றி. (௨௦)

என்றன ரிருடி மார்க ளினியசங் கரனே போற்றி
வன்றிரட் சகங்கட் கெல்லாம் வரந்தரு குருவே போற்றி
நன்றிகூ ராதி தேவர் நவில்சந்திர கலையாய் போற்றி
யொன்றிய கோர ரூப வுயர்சாந்த ரூப போற்றி. (௨௧)

சோமபா லகனே போற்றி துலங்குமா பதையே போற்றி
யேமமாம் பூத நாதா விலங்கிய சம்பு போற்றி
வாமமார் மங்கை பாக மழுவுழைக் கரத்த போற்றி
வீமகங் காத ராய விஷமாக்ஷ போற்றி போற்றி. (௨௨)

தக்கன்றன் யெஞ்ஞ நாச தனியுலகங்கள் காக்குந்
தொக்ககண் ணனேக போற்றி யென்றுதோத் திரம்புரிந்தார்
மிக்கநால் வேதஞ் சத்திய சொரூபியாம் விமல மேலா
மக்கினி சொருப மாகி யமர்ந்தருள் புராண போற்றி. (௨௩)

அறிவதற் கரிதா யோங்கி யமர்சனார்த் தனனே போற்றி
மறிமழுக் கரத்தி லேந்தும் வள்ளலே போற்றி கோட்டுப்
பிறையணி சடில போற்றி யென்றனர் பிதிர்க்க டேவர்
குறையிலா யிரங்கண் கைகா றலையுடைக் குழக போற்றி. (௨௪)

வெய்யவன் மதிய ழற்கண் விமலனே போற்றி போற்றார்
மையமுப் புரங்கள் செற்ற நாதனே போற்றி யென்று
கைகுவித் தனர்கள் பின்னுங் கருதிய சனக ராதி
மெய்யுறு முனிவ ரோங்குஞ் சகமெலாம் விளங்க வென்றும். (௨௫)

படைத்தளித் தழிக்கு முக்கட் பரமனே போற்றி யென்றார்
புடைப்பணிக் கபில ராதி யோகிகள் புகலை யைந்தோ
டிடைப்படு முப்பத் தாறொ டெண்ணுறுந் தொண்ணூற் றாறென்
றடக்குதத் துவத்தி னூத வைந்தெனும் பூத நாத. (௨௬)

கணங்கட்கு நாத சாந்த மூர்த்திபே கனலா மெய்யி
லணங்குக்கோர் பாக நல்கு மகண்டமாஞ் சொரூப வென்றே
யிணங்கிக்கை குவிக்கமற்றை யிராக்கத ரசுரர் நாகர்
துணங்கைக்கூத் தாடும் பைசா சினர்சொலுஞ் சித்தர் சாத்தியர். (௨௭)

இவர்முத லானோர் தோத்திர மெடுத்தெடுத் தியம்பிப் போற்றி
யவயமிட் டலறி யஞ்ச வமலனுங் கவரை நோக்கிப்
புவனியி லஞ்ச லீர்நீர் போற்றலான் மகிழ்ச்சி கூர்ந்தாங்
கவலையின் றொழிதி ரென்றே சடைக்கணித் தபய மீந்தான் (௨௮)

அயனரி யிருவர்ப் பார்த்தெம் வலமிடத் தமர்ந்து தோன்றி
வியனுறு முயிர்கள் யாவும் விளங்குறப் படைத்துங் காத்து
நியமமொ டிருந்தீர் நீவி ரெமக்குநீர் பேத மன்றூற்
பயமுறு தும்மைப் போற்று வோர்கடம் பவங்க டறும். (௨௯)

ஆதலி னீவிர் யாஞ்செ யருளினு லுயிர்கள் யாவும்
பேதமுற் றிடவே சிட்டி செய்துசீர் பிறங்கக் காப்பிர்
காதல்கூ ரோரெண் டிக்குப் பாலர்செங் கதிர்வெண் டிங்க
ணீதியெம் மருளாற் றங்க ணிறைவழா தளிப்பா ரென்றே. (௩0)

உரைத்துத்தம் முடலிற் றோன்றும் வயிரவன் றன்னை நோக்கி
விரைத்துணர்த் துளவன் கஞ்சன் யாமுமே வேறென் றெண்ண
லிரைத்துநின் கரத்தி லுற்ற கபாலத்தை யேந்தி நீயே
நிரைத்திடு புவனம் யாவு நேர்ந்திடு பிச்சை யாற்றி. (௩௧)

திரிந்துபின் கழிப்பாய் நின்பின் செறிந்துறு பிரமகத்தி
பரிந்திவை யெண்ணி லோமேற் பழுதுறு முலகிற் றன்மம்
புரிந்திடென் றுரைத்தே யாங்கண் புகல்பிரம கத்தி யென்றே
சரிந்தசெங் கூந்தன் மேனித் தழனிற வண்ண மாகி. (௩௨)

செந்நிறச் சாந்த மாலை சேப்பிழைச் சிவந்த வாடை
மன்னிய கோரப் பற்கள் வானழற் சொரிநாக் கண்ணும்
துன்னிய வான்மட் டோங்கிச் சொன்முறங் கையி லேந்திப்
பன்னிய விரத்த பானம் பண்ணுமொண் கிருத்தி யொன்றே. (௩௩)

வயிரவன் முதல யாரும் வெருக்கொள வகுத்து நோக்கிச்
செயிருறு கிருத்தி யிந்த வயிரவன் பின்பு சென்றே
யெயிலுறு முலகம் யாவுந் திரிந்தெழில் வார ணசி
யெயிலுறிற் கபாலத் தோடு நீங்குமென் றருளிப் பின்னர். (௩௪)

விண்டுவோ டயன்புத் தேளிர் வியந்திட வருள்செய் தாங்கே
தண்டலில் குழகன் மிக்க தனிப்பரம் பொருள்வா ளொண்க
ணெண்டொடி பாகத் தெம்மான் மறைந்தன னென்றே யோங்கு
திண்டிறற் றவத்தின் மிக்க முனிவர்க்குத் தெரித்தான் சூதன். (௩௫)

இருபத்தாறவது
பரமேசுவரர் தேவர்களுக் கபயங்கொடுத்த
வத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௯௨0.

இருபத்தேழாவது

கபாலமோசன வத்தியாயம்.

வயிரவன்செங் கரத்திலுறு கபாலமோ சனத்தை
வகைபெறவே யுரையெனவை வச்சுதன்முன் கேட்பச்
சயிரவமென் னிதழ்க்கமலை காமுறுபொன் னுடைக்
கரியமுகில் வண்ணனொலி கடனடுவி னின்றே
செயிரறுமென் மச்சவுரு விற்சொல்கதை மோனந்
திகழ்தவத்து மாமுனிவர் செவிகுளிர ஞானப்
பயிர்தழைய மூவாறு புராணமுறை முறையே
பகர்சூத முனிபரம னருளினுரைத் திடுமால். (௧)

பரமனரு ளால்வயிர வன்பலியெ டுக்கப்
படர்ந்துபணி பூண்டொருக பாலமிசை யேந்தி
வரமருள்வி பூதியுடல் வாணில வெறிப்ப
வாலமதி சூடிவிழி பாலமதி லோங்க
விரவுமறை யேருறுசு வானமிசை யேறி
மேவியிரு பாலும்வரு பூதர்புடை சூழ
வுரமுறுதி யானமுறை யுள்ளமுற வுள்ளி
யுலகுபதி னுலியையு மோர்நொடியின் வந்தான். (௨)

வந்தபொழு திற்பிரம கத்தியிரு கண்கண்
மண்டுகனல் காலவன லானவடி வோடும்
பந்தமொடு பின்றொடர விந்திர பதிக்கே
பாதமணி கிண்கிணிசி லம்புகள்பு லம்ப
விந்தைபெற வுந்துநடை மெல்லெனந டந்தே
வெய்யகதி ரோனுலகின் மேவவவண் மேவுஞ்
சுந்தரவ னங்கினர்கள் சூழ்ந்துணர்வு நீங்கிச்
சோதிமுக நோக்கியிசை பாடினர்கள் சில்லோர். (௩)

ஆடினர்க ணின்றனர யர்ந்தனரு யிர்த்தே
யாசையொட னங்கசர மார்பகம முழ்த்தக்
கூடினர்க ளென்னவுடல் வேர்வைவர நாணிக்
கோலவளை கூறையணி ஞாலமிசை சோர
வாடினர்கள் பிச்சையெனும் வாய்மொழிகள் கேட்டே
வாழ்வுபெற விவ்வழகு கண்டதிலை யென்றே
நேடியுறு வண்பொருள்க ணோர்ந்ததென நேரு
நேர்மைகொடு பெண்கள்சில்லர் பூசனைகள் செய்தார். (௪)

பாலனெய் தேனமுது பாயசம பூபம்
பாகமுறு மென்கருனை பண்புபெறு பிச்சை

வாலிபமி னார்கள்சிலர் வந்திடுத லன்றி
வாண்முகமெய் கால்கைபுய மாமவய வங்கை
யாலவிழி பாயவிழி யாலமுழு தும்மோ
ராசைகொடு பேதைமுத லேழ்பருவ மாதர்
கோலமயில் கொண்டுரைசெய் நாணமட மச்சங்
கூறியப யிர்ப்புமுதல் விட்டனர்தொ டர்ந்தார். (ரு)

தொடர்ந்துவரு பெண்கண்முக நோக்ககில ராகிச்
சொல்பிரம கத்தியெனும் பெண்கிருத்தி பின்னே
நடந்துவர வேவயிர வன்கடிதொ ரீஇவா
னுடுமுத லட்டதிசைப் பாலர்பதி யாவும்
விடந்தருபன் னகர்பல கந்தருவர் தேயம்
விஞ்சையரு லோகமொடு தானவர்த மூர்கள்
படர்ந்துபலி கொண்டுவிண்டு மேவியவை குந்தம்
பண்புபெற வேபலிகொள் வான்மன நினைந்தே. (சு)

போதுதலும் விண்டுநகர் கண்டுகளி கூர்ந்தே
பூதர்புடை சூழவர வேவயிர வன்று
னேதமக லும்பிரம னிந்திரன்விண் ணுட
ரெண்டிசையு முள்ளவணெ ருங்குமவ னூற்ற
கோதறுசங் காழிதிகழ் விண்டுகண நாதர்
கூடிவரு பூதரொடு நேரெதிர்ம லைந்தே
காதுதலு மேவயிர வன்செயுமுங் காரக்
காற்றினெதிர் பூளையென வாற்றல ரிரிந்தார். (எ)

விண்டுகண மோடவிடு வச்சேனரெ திராகி
வேத்திரமொ டுற்றுநெடு மால்சினக ரத்தி
னண்டுதலி லாவகைத டுத்திடலு மன்னோ
னாற்றல்கெடத் தள்ளியரி யாலயத்துட் புக்குக்
கண்டிடலும் விண்டுவெதிர் கொண்டுதிரு வோடு
காட்சிகொடு மாமுகமன் கூறிவழி பட்டே
தொண்டரிட மாயருள்செய் சோதியிவ ணேயத்
தொன்மைபுரி யென்றவசி னன்மையிது வன்றே. (அ)

என்றுசொலி யிவ்வுலகில் வாழ்கணங்க ளும்மை
யெந்தவகை யாலறிவர் கோபமொழித் தாள்வாய்
நன்றிபுரி நாதவென வீசனரு ளோடு
நானிலம ளிக்குமரி வாழ்வதனை நோக்கித்
துன்றியிவண் யாம்வருதல் சொல்பிரம கத்தி
தோகையுரு வாகிவர மேவியக பால
மொன்றுமுழிய வேபலியி ரந்துலகம் யாவு
மோதுபலி யின்குறைநி ரப்புவைகொ லென்றே. (கூ)

அவ்வுரைகள் கேட்டவரி யம்பொன்மலர் மாதி
   ஞர்வதன நோக்கியிவ ராதிபரர் ஞானத்
துவ்வமுத மென்மொழியோர் பாகமுறை சோதி
   தொன்மறைக ளாலுமறி யாவுயர ஞதி
செவ்விபெறு சாந்தருல குக்கொருவி தாதா
   செப்புமிரு பத்தாறு தத்துவமெய் தாத
கௌவைதரு யோகியர்கள் காதல்செயு நாதர்
   காளவிட முண்டுலகு காத்தபர மேசர். (௧0)

இங்குவரல் கண்டுகளி கொண்டனனீ தன்னியை
   யாமுங்கிரு தார்த்தரிவர் பேரையுரைப் போர்க
டங்குவர்சி வன்பதவி மற்றுலகு சாராச்
   சாந்தர்சக லான்மர்சரு வஞ்ஞரட்ட மூர்த்தி
புங்கவர்மெய்த் தொண்டரித யங்குலவி வாழ்வோர்
   பூதிதிகழ் மேனியர்தி கம்பரர்பு ராரி
திங்களணி வேணியர்தெ ரிந்துகொணீ யென்றே
   தேவிமுக நோக்கியுரை செய்தனன் மகிழ்ந்தே (௧௧)

பலியிடுக வென்றுரைசெய் வயிரவனை நோக்கிப்
   பாருலக மாதியுல காருயிர்கள் யாவும்
வலியநுதல் வெங்கணெழு மங்கியினெ ரித்தீர்
   வானவர்க டானவர்கண் மாதவர்வ சுக்க
ணலிவுசெயு மப்பழிக ளெப்படிது டைத்தீர்
   நளினமலர் வேதர்தலை மாலைபல பூண்டீர்
மெலியுறுமன் னோர்பிரம கத்தியெவண் விட்டீர்
   மேவிவிளை யாடுவது மென்னநகை கோட்டி. (௧௨)

பாரிலுமை வந்தனைசெ யன்பர்பெய ரேசொல்
   பத்தரெவை செய்திடினு மக்கணமொ ழிப்பீ
ரோரும்வகை யித்திறமு ரைத்திடுதி ரென்ன
   வொண்கமலை கேள்வவுல கத்தியன டாத்திச்
சீருலவு தன்மகிலை செய்யவுயி ருய்யச்
   செங்கரக பாலவிர தப்பலியெ டுத்தாங்
காரியமி தென்றுவரு மாரிய னியம்பக்
   கண்ணன்மலர் வண்ணமகன் மென்வதன நோக்கி. (௧௩)

ஏயபரன் வேண்டுபலி நீயிடுதி யென்ன
   வேமகம லக்கொடியு மவ்வணமி சைந்தே
தூயபலி வேண்டுவன தானுதவ லோடுஞ்
   சொல்வயிர வக்கடவு டன்மனம கிழ்ந்தே
மாயன்முக நோக்கியிடு வண்பலியு கந்தேம்
   மாதவநின் வாய்மொழியெ னுஞ்சுதையி னுலே
யாயதும னோரதம கன்றிடுவ லென்றே
   யப்பதியின் விண்டுவும னுப்பவிடை கொண்டே. (௧௪)

மற்றுள பதங்கடோறும் வண்பலிக வர்ந்தே
வலியகண நாதர்குறள் கூளிபுடை சூழத்
தெற்றென நடந்துவிளை யாடிநில மீதே
தேசமுள வெவ்விடமு நேர்பலிக வர்ந்தே
நற்றவமி யற்றுநர்கள் காசிநக ரெய்த
நாடியுறு வன்பிரம கத்தியுண டுங்கி
யற்றதுநம் வாழ்வெனவ தோகதியின் வீழ்ந்த
தாரியனு மங்நகரை யன்புடன டைந்தான். (சரு)

காசிநக ரெய்தியவி முத்தக்கேத் திரத்திற்
கையுறுக பாலமொரு பாங்குறவே வைத்துத்
தேசுதிகழ் தன்மநிலை நிற்கவிர தந்தான்
செய்தனன் வரும்பிரம கத்தியுமொ ழிந்த
நாசமகல் காசிநகர் மேவுவார ணசி
நண்ணவரும் விண்ணவர்த நாசனுறு பாவ
மேசறவொ ளித்தவெனி லிப்புவியி லுள்ளோ
ரெத்தனை பவஞ்செயினு மத்தனையு நீக்கும். (சசு)

கொலைகளவு கள்ளுண்ணல் குரவர்மனை வேட்டல்
கூறுமிவை செய்பவ ருடன்படுத லென்னு
நிலையில்பஞ்ச பாதகங்க ணோர்ந்தவர்க ளேனு
நீணகரி லெய்திலவர் பாதகங்க ணீரு
முலைவிலவ னுற்றவர்க ளுற்றுயிரொ ழிந்தோ
ரோதுசிவ ரூபமொடு வெள்ளிவரை சார்வர்
தொலைவுறுக பாலம்விழு தொன்மையிட நன்னீர்
தூயமடு வேசபால மோசனம தென்பார். (சஎ)

வேறு.

செப்புமிக் கபால மோச னம்மதாந் தீர்த்த மேல்பா
லொப்பிலா வயிர வன்று ணுவந்தடி யார்கள் பாவ
வைப்பெலாந் தின்று பாவ பட்சக னெனும்பேர் மன்னித்
தப்பிலார் பவங்க ளெல்லாந் தகாமறத் தீர்த்த லாலே. (சஅ)

ஆமறத் தனப்பேர் பெற்ற வடியவர் கலிபா வத்தி
னுமத்தோ டழியச் செய்து நற்கால வயிர வப்பேர்
சேமத்தாற் பெற்றுப் பத்தர் சேர்ந்திடு கால தூதர்
தூமத்தீக் கோப மாற்றிச் சொல்வயி ரவனு மானன். (சக)

சாற்றிய வயிர வன்றன் முன்னர்ப் போய்த் தனுமா தத்தி
லேற்றிய பூருவ பக்கத் தட்டமி யேபு நாளிற்
போற்றியே யுபவா சித்துப் பொருவிழித் துயிலை நீத்தாற்
கூற்றுறு பவங்க ளீர்ந்தே குறையறப் பாத்தில் வாழ்வார். (உ0)

அட்டமி பதினுன் காநா ளாதித்த வாரஞ் செவ்வா
யிட்டமாந் தினத்திற் கால வயிரவர்ப் பூசித் தேத்தின்
மட்டறச் செய்த பாவ நீங்குவர் வணங்கி யெண்கால்
சிட்டராய் வலஞ்செய் தோர்கள் செல்வமாஞ் சிறப்புச் சேர்வார். (உக)

சொல்லுமா மரத னப்பேர்ப் பீடத்தைத் தொழுது வேண்ட
நல்கிடு முற்றத் தெய்வ மந்திர நன்ரு யாறென்
றல்கலி லாறு திங்கள் செபித்திடிற் சித்தி யாகி
யொல்லையில் விபவ மெய்தி யுறுவரா னினைத்த வெல்லாம். (உஉ)

பிரமகத் தியினைப் போக்கும் வயிரவன் பெருமை யாவும்
வரமுறக் கேட்டோர் பாவ வரம்பெலா நீக்கி நீக்கா
வுரமகத் துவமாஞ் செல்வம் பெற்றுயர் கதிபெற் றுய்வார்
பரமருக் குரித்தா மிந்தப் பான்மைசத் தியம தாமால். (உரு)

காவலிற் சிக்கி யுட்கிக் கால்விலங் குடனே செய்த
பாவமொய்த் திடுவா ரிந்தப் பயிரவன் சரிதங் கேட்கின்
மாவலித் துயருந் தீர்ந்தே வாழ்வுபெற் றிடுவ ரென்றே
தேவரிற் சிறந்த சூதன் முனிவர்க்குச் செப்பி னுனல். (உச)

இருபத்தேழாவது
கபாலமோசன வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். சுசுச.

இருபத்தெட்டாவது

மகாவிட்டுணு

சேடற்குபதேசஞ் செய்த வத்தியாயம்.

பசுந்துழாய்ப் படலை மார்பன் பரமர்பஞ் சாக்க ரத்தை
வசுந்தரை விதிக்குஞ் சேடற் குபதேசஞ் செய்த வாறு
விசும்பினை யளாய சோலை விளங்குநை மிசத்தின் மோனத்
தசும்புறு முனியோ னன்ன முனிவர்க்குச் சூதன் சாற்றும். (க)

மனுமுக நோக்கி மச்ச மாலான சரிதை மன்னு
புனிதமாங் கலாபித் துவச்சீர் புகன்றனன் சனற்கு மார
முனிவனு ரதற்குப் பூர்வ கற்பத்தின் மொழிந்த தாமாற்
றனிமுத லாகி யெல்லா வுலகுயிர் தானே யாகி. (உ)

அகண்டநற் சச்சிதா னந்த ரூபியா யமரு மீசற்
குகந்திடும் வடிவி ரண்டாம் வியட்டியொன் ருேர்ச மட்டி
புகன்றிடு மரமுங் காவும் போலுமாங் காரிய ரூப
சகங்களே கலாப மந்தக் கலாபமார் சங்கற் பத்தால். (ரு)

உண்டாகப் புரியு மீச ருரைத்திடு தலாமி யாவர்
தண்டாத குரவர் சொல்லு முபதேசந் தகுமா னந்தங்
கொண்டாடு ரூபி தன்னைக் கலையெனக் கூற லாகுங்
கண்டாரக் கலையை முன்னர்ச் சனகாதி முனிவர் காத்தார். (ச)

சனகரா தியர்க டம்மைத் தாஞ்சிருட் டித்த லாலே
யனகரஞ் சிவன்க லாபி யாயினர் கலாப மென்பேர்
புனையும்பூ டணமென் பார்க ளப்பெரும் பூட ணர்தா
னினியசற் குருக டாட்சத் தியன்றதோர் ஞானி யாகி. (ரு)

உற்றிடு சீடன் றன்னைக் கலாபனென் றுரைப்பர் சீடன்
றெற்றிய யோகத் தாலே தெரிந்திடு துவாத சாந்த
முற்றிய பிரம ரந்திரத் தின்மொழி சோதி யாகி
நற்றெறி சனத்தைக் காட்டு நாதரே கலாபி யாவார். (சு)

கடையகப் பிரள யத்திற் கருதிய சகங்கட் செல்லா
மடைவுறு காரி யங்க ளாகுநற் கலைக டம்மைத்
திடமுறக் கர்த்தர் செய்யுந் திகழ்பிர கிருதி தாமாய்ப்
படருறத் திரும்பி யந்தக் கலைகொடு படைத்த லாலே. (எ)

கறைமிடற் றண்ண ருனே கலாபியா நிவிர்த்தி யாதி
யறைதரு கின்ற சாந்தி யதீதமாங் கலையோ ரைந்து
மறையுறப் பொருந்து மந்த மறைகளை யறைத லால்வெண்
பிறைமுடி யண்ண ருனே கலாபியாய்ப் பிறங்கு வாரால். (அ)

கண்ணுத லுடைய தான வானந்த கலாசொ ரூபப்
பெண்ணுமை கவுரி யோர்பாற் பிறங்கிவாழ்ந் திருத்த லாலே
நண்ணுமா னந்த ரூபங் கலாபமா நரலை நீரை
யண்ணுறுந் திரையே போல வகன்றிடா திருத்த லாலே. (கூ)

ஆயிழை பாகத் தெம்மான் ருனமர் கலாசி ருட்டி
தூயதாய்க் காத்தல் சங்கா ரத்தொடு திரோதா னந்தா
னேயனுக் கிரக மைந்து கலையிவை யியற்று வோர்கள்
வாய்மைகூர் கலாப ரிந்த வகைபுரி யைவ ராகும். (கo)

நச்சரா வணியு மேக நாதரே கலாபி யாவ
ரிச்சைசேர் பரமர் நாம மிவைகளாற் கலாபி யென்றும்
விச்சைநா ரதனைப் பார்த்து விளங்கிய சனற்கு மாரன்
றுச்சற வுரைக்கு ஞான்று நாரதன் மறுத்துஞ் சொல்வான். (கக)

உரைத்தவிவ் வகைகள் யாவு முணர்ச்சிகூர்ந் திலன்யா னின்னும்
விரித்தறிந் திடவே நன்ருய் விளம்புதி குருவே யென்னத்
தரித்திட வுரைப்பர்ன் முன்னர்ச் சரோருக கற்பந் தன்னில்
வரிப்படச் சேடன் கேட்ப மாயனன் றுரைத்தல் சொல்வாம். (கஉ)

நாகலோ கத்திற் போக வதியெனு நகரிற் சேட
ஞகிய வனந்தன் றன்னை யவனுறு மரவம் யாவும்
வாகுறு மெங்கட் கெல்லா மரசென மகுடஞ் சூடிச்
சேகறக் காத்தி டென்னச் சேடனன் னவரை நோக்கி. (௧௩)

விடையங்க ளொழிந்து ஞான விரதத்தி னன்பு பூண்டோன்
றடையிலா தும்மைக் காக்கத் தம்பிவா சுகியைப் பட்ட
மடைவினிற் கட்டு வோமென் றவன்றனை மகுடஞ் சூட்டி
யிடையறு திருந்து சின்னு ளனந்தனை மிசத்தி னெய்தி. (௧௪)

முனிவரர்ப் போற்றித் தொன்மை மொழிந்திடு புராணங் கேட்டுத்
தனிமுத லரியைப் போற்றித் தவஞ்செயு ஞான மாய
னனிபெற வெய்தி வேண்ட வருளுரு நவில்வா யென்னப்
புனிதநின் னிடத்திற் பத்தி புரிந்திட விடய நீங்கி. (௧௫)

இதையநின் னிடத்திற் பற்ற யானுநின் பாய லாகச்
சிதைவிலா தருள்க வென்னச் செங்கண்மா லருள்செய் தன்னோன்
றதைமலர்ப் பாய லாகச் சாற்றிய யோக நித்திரை
புதையிருள் விளக்குங் கற்ப மொருநூறும் பொருந்தி ஞனல். (௧௬)

பொருந்திய ஞான்று சேடன் போற்றியே யசையா துற்றான்
கருந்துழாய் மாயன் யோக நித்திரை களித்துச் சேடன்
றிருந்திய முதத்தை நோக்கிச் சுமந்தனை சிந்தை கூர்ந்தாம்
வருந்திடேல் வேட்ட வீதும் வழங்குவா மென்னச் சேடன். (௧௭)

மாயவ மருண்டு யான்சொல் வாசகம் பொறுக்க வேண்டும்
போயின கற்ப நூறு பொருந்துநித் திரையீ தென்கொ
லேயது புகறி யென்ன வியம்புவான் மாய னென்க
ணுயநித் திரையோ வன்றே யரனிடத் தமர்ந்த யோகம். (௧௮)

தியானநித் திரையி னேடுந் தெரிதரு கலாபி யென்று
மயானநின் றுடு வானை வழிபட்டே வளர்ந்தா மென்னத்
தயாவொடு சகம்பு ரக்கு நாதனீ தமியே னுற்ற
வயாவினைத் தவிர்த்தே யந்தக் கலாபியா ரருள்வா ரன்னோன். (௧௯)

வடிவநற் றெழிலி யாது வந்தனை புரிந்தா லன்னோன்
படிவமொ டருளக் கொள்ளும் பரிசெவன் பரம நீவே
றடியரிற் றியானஞ் செய்தே னெனுமொழிக் கயர்ச்சி கூர்ந்தே
னெடியவ வுரைத்தி டென்ன நிகழ்த்துவா னேமி யோனும். (௨௰)

வந்தனை செய்யுஞ் சேட பத்தியான் மகிழ்ந்தா நிற்கே
புந்திகூர்ந் திடவே முக்கட் புராரிபஞ் சாக்க ரத்தை
விந்தையா யுபதே சித்து விளக்குவா மென்று சொல்லி
யைந்தெழுத் தீசன் மந்திர மருத்திகூர்ந் துபதே சித்தான். (௨௧)

சொற்றிடு முபசா ரத்தாற் றூயதோர் ஞானம் பத்தி
பெற்றிடுஞ் சேட னுங்கண் பேசுமக் குருவைப் போற்றித்
தெற்றென மகிழ்ந்தே யீசன் றிகழ்கலா பித்து வந்தான்
முற்றுற வுரைப்பாங் கேட்டோர் மொழிந்திடு பவத்தைச் சாரார். (உஉ)

அச்சுரு வாகு நானுன் காகிய சுரத்தி னுக்கு
மெச்சிய வமுத மாக மேவிய கலையீ ரெட்டுண்
டெச்சமில் லாத வந்தக் கலையுட னியைந்தி ருக்குந்
துச்சறு மக்க ரங்கள் சொல்லிய கலாப மாமால். (உங)

சொன்னவக் கலாபந் தானே சாத்திரந் துகடீர் சாத்திர
மன்னுகா ரணமாய் நிற்கும் வகையினுன் முக்கட் பெம்மான்
றன்னையே கலாபி யென்ப ராதலாற் சகத்தி லுள்ளோர்
துன்னிய பெருங்க லாபித் துவந்தனை யறியெஞ் ஞான்றும். (உச)

இகந்தனிற் போகந் துய்த்தே யிருங்கதி முத்தி வீட்டி
னுகந்ினி திருந்து வாழ்வா ருரைத்திடு வேதாந் தங்கள்
பகர்ந்திவை சுருக்கிச் சொற்றும் பத்திமெய்ப் பொறுமை வாய்மை
புகன்றிடு மொழுக்க முள்ளோர்க் கல்லது புகல லாகா. (உரு)

சத்தமாம் பிரமந் தன்னைச் சாற்றுவர் கலாப மென்றே
யத்தகைக் கலாபந் தன்னு லறிந்திடு நாதன் றன்னை
வித்தகக் கலாபி யென்ன விளம்பிடும் வேதாந் தத்தின்
வைத்திடுசார மென்றே வழங்குவர் மறைவ லோரே. (உசு)

இவ்வகை மாயன் சேடற் கியம்புபஞ் சாக்க ரத்தின்
றிவ்விய வுபதே சத்தின் செய்கையை நார தற்குக்
கவ்வையில் சனற்கு மார னுரைத்ததைக் கரிய மாயன்
றுவ்வமு தென்னச் சொன்னுன் முனிவிர்கா ளென்றுன் சூதன். (உள)

இருபத்தெட்டாவது
மகாவிட்டுணுசேடற்குபதேசஞ்செய்தவத்தியாயமுற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். சுகூக.

இருபத்தோன்பதாவது

கலாசொரூப வருணவண யத்தியாயம்.

பராபரன் சரிதை யாய கலாபித்துவப் பண்பை யின்னுந்
தராதலம் புகழு மாயன் மனுவுக்குச் சாற்றும் வண்ணம்
மராமர முதல நாரு வளர்ந்திடு நைமி சத்தி
னராகமார் மறைக ளோது முனிவரர்க் கருள்வான் சூதன். (க)

அனந்தன்மா யவனை நோக்கிச் சுரங்கடம் மடைவி யாது
கனந்தரு மச்சு ரத்தின் கலைகளி னுருவம் யாது
மனந்திகழ் பரிச மென்னும் வகையெழுத் தளவை யாது
முனம்புக லவற்றினின்று மெவ்வண முறைவ ழாமல். (௨)

அச்சுட னல்லுங் கூடி யானசாத் திரத்தி னங்கம்
விச்சையா யுடைய தென்கொல் வேறின்னஞ் சுரத்தின் கூற்றை
யிச்சையா யறியத் தக்க தின்னும்வே றுளதோ நாளும்
நிச்சயக் கயிலையின் பேரு நிகழ்த்தென நெடியோன் சொல்லும். (௩)

சொல்லிய வச்சுத் தாமே சுரங்களென் றுரைக்க லாகு
மல்கலில் குறிலி னோடு நெடிலளா பெடையு மாகும்
புல்லிய ககர மாதி மகரமீ றுகப் போற்று
நல்லதோர் சானு நாசி கமமென நவின்று பின்னும். (௪)

அத்தமாத் திரைக ளோடு பரிசமென் றறைய லாகும்
வித்தக யகர மாதி மேலைநான் கக்க ரங்கள்
சுத்தவந் தத்தை யென்று சொல்வராற் சகார மாதி
யுத்தம மாக நான்கு மூழ்மையென் றுரைப்பர் மாதோ. (௫)

ஒருவிந்து வனுசு வார முறுந்தச்சன் முடிவி ரண்டு
பொருவிந்துத் தாமே கூடல் புகன்றிடு விசர்க்க மாகும்
வருமல்லுச் சுரங்க ளோடே கூட்டியுச் சரிக்க வாய்க்குந்
தருமிந்தச் சுரங்கள் சாற்றுங் கலையுட னல்லுச் சாரி. (௬)

பொருந்திடு மோதப் பிரோதம் போற்றிய வமுத ரூபந்
திருந்திய கலையின் பேர்க ளமுதைமா னதைசேர்ப் பூடா
வருந்துட்டி புட்டி யோடு வளரதி திருதி மற்றுங்
கரந்திடா வசனி சந்திரிகை காந்திசி யோர்ச்சி னைபின். (௭)

அருள்சிறீ பிரீதி யோடு யங்கதை யமரும் பூர்ணை
தெரிபூர ணாமிர தையோ டொறுபதி னாறுஞ் சேர்ந்து
விரிசுரங் களிலுண் டான வியன்கலை யோரீ ரெட்டுந்
துரிசறு சுரங்க ளோடு துலங்கியுண் டான வாமால். (௮)

சுரங்களோ டிணங்கிக் கூடித் துலங்கிடக் காம மாதி
திரங்கொள்வஞ் சனங்க ளென்றே திகழுமக் கரங்க ளாலே
நிரந்தவேழ் விபத்தி யோடு நிலைபெற்று நிகழ்த்தும் வாக்காற்
றரம்பெறக் கூட லாலே சத்தங்கள் யாவு முண்டாம். (௯)

செப்பிய சத்த ரூப வாக்கியச் செறிவா லாறு
வைப்பெனுஞ் சாத்தி ரங்கண் மருவிடு மவற்றி னும
மொப்பில்கா பிலமே காண புசமிவற் றுடனே பாட்ட
மெய்ப்பிரா பாக ரம்வை யாசிகங் கவுத மீயம். (௰)

ஆகுஞ்சத் தப்பி ரமமா மூன்றுவித மேதென்னி
னேகைகூர் மறைபு ராண காவிய முரைக்கு நீதி
வாகைசே ரரசன் மித்திரன் மனையாட்டி யிவர்சொற் போலப்
பாகமா மிவைக ளெல்லாம் பகர்ந்திடு கலாப மென்றே. (கக)

உரைத்தலா லிவற்றிற் கெல்லா முற்றகா ரணமாய் நின்ற
திரைப்புன லணியும் வேணிச் சிவனுயர் கலாபி யாகும்
பரைக்கொரு பாக ராகும் பரஞ்சோதி மறைக ளாதி
நிரைத்திடு விஞ்சை கட்கு நிரந்துகா ரணமு மாகும். (கஉ)

மயின்முட்டைச் சலஞ்சின் னுட்பின் வருணபே தங்களாகி
வெயிலுறக் காட்டல் போல விமலன்பாற் சகங்க ளெல்லாம்
பயிலுரு தடங்கிப் பின்னர்ப் பகர்ந்திடு மாயை யாலே
செயிரறத் தோன்றி நாம ரூபத்தாற் சிறக்கு மாதோ. (கங)

சிறந்தவச் சகங்க டாமே செப்பிய கலாப நீங்கா
துறைந்தவக் கலாபந் தன்னை யுறுசிவன் கலாபி யாகு
நிறந்தரு கலாப மஞ்ஞை நிகழ்த்திய கலாபி யென்பேர்
பெறும்பரி சென்ன வீசர் பேசிய கலாபி யாவார். (கச)

இரவிசந் திரன்றீ மூன்று சுடருமே யிசைக லாபம்
விரவுமிக் கலாப மீசன் மெய்யிடம் விளங்க லாலவ்
வரனையே கலாபி யென்று மறைந்திடும் வெய்யோ னென்போ
னிரவிய கலையீ ராறே டிருத்தலா னிலவோ டங்கி. (கரு)

ஒன்றிடு மிரவி கீழ்பா லுதிக்குங்கா னறைக ளுன்காய்த்
துன்றிய கலைக ளந்தச் சூரியற் சேரு மங்கி
யின்றிறற் கலையேழ் நாலா யிவைசமற் கார ரூபி
வென்றிகொள் ளும்வி பாசர் சன்னியும் விளங்கிப் பின்னும். (கசு)

மிகுதகனுத் மிகைச் சொல் வியா பினிதைச் சிப்பேர்
தகுமறை மாதா காயத் திரிசர சுவதி தாமே
பகலவன் கலைக ளின்பே ருடைபிரக் கினையே பண்பார்
புகழ்பெறு பிரபை சத்தியை விபூதியே விமலை போற்றும். (கஎ)

செப்பிய வமோகை வித்து தைசிவை சருவ தோமு
கிப்பினோர் சாயஞ் சந்தை கிளத்திடு திருங்கிச நாடி
வைப்புறிக் கலையீ ராறும் வதிந்திடத் திகழும் வெய்யோ
னைப்பொரு கலாப மென்ப ரவனொளி மண்டி லத்தில். (கஅ)

இருந்துசஞ் சரிப்பர் நீல கண்டரென் றியம்பும் வேதந்
திருந்துமிவ் வகையா லீசர் சிறந்திடு கலாபி யாவர்
பொருந்துமூ தறிவின் மிக்கோர் புகல்வரிச் சரிதை யாவும்
விரும்பிமா னுடரே தேரின் முத்திவீ டடைவர் மேலோன். (சகூ)

ஆகிய வனந்த நீயு மறிந்துகொ ளென்று மாயன்
சேகற வுரைத்த வண்ணஞ் செப்பினன் சனற்கு மாரன்
வாகுற வீணை வல்ல முனிவரன் மகிழ்ந்தா னென்று
யூகமார் முனிவர் கேட்ப வுரைத்தனன் சூதன் மாதோ. (௨0)

இருபத்தொன்பதாவது
கலாசொரூபவருணனையத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௭௪௧.

முப்பதாவது

இருபத்தஞ்சு பேரமுரைத்த வத்தியாயம்.

திரையெ றிந்திடு கடன்மு கட்டெழு செங்கண் மாலொரு மச்சமாய்
வரைபொ ரும்புய மனுவி னுக்குமுன் மழுவ லானுரு விருபதோ
டுரைசெ யைந்தெனு மரிய பேர்முன முரைத்த வாறுரை செய்யென
விரைசெய் காவுறை முனிவர் கேட்கவி ளம்பு வானுயர் சூதனே. (௧)

செற்ற நாரதற் பார்த்துத் தூயச னற்கு மாரநன் முனிவரன்
கற்றை வார்சடை யண்ணல் வீறுக லாபி யென்பது திண்ணமான்
மற்று மோரணி பூட ணஞ்சொல்க லாப மென்னவு மன்னுமா
லுற்ற பூடண நாக மாயது மாப திக்கணி யாகையால். (௨)

நாக பூடண மேபு னைந்தபி னாக பாணிக லாபியென்
றேக நாயகன் வீறு ரைத்திடு மாய னேர்முக நோக்கியே
போகி ராசனி யம்பு வானரன் பொன்னு மாமணி வெள்ளியு
மாக வேயணி யாது பூடண ராக மாகவ ணிந்ததென். (௩)

கூறு வாயென முன்ன ரேபணி மால்வ ரைக்கயல் கூரவ
மீறு மாதவ ரெண்ணில் கோடிய ராவ ணத்தொடு மேவயா
மேறு மாதவ நார தன்றனை யெய்தி யங்கவ ருள்ளநீ
மாறு ருமல றிந்து வாவென மகர யாழ்முனி நண்ணியே. (௪)

முனிவன் முன்புற வவரும் வந்தெதிர் முறைவ ணங்கிய ருக்கிய
மினிய பாத்திய வாச னாதிக ளீந்து பூசையி யற்றியாம்
புனித ராயின நீயி வண்வர வேண்டு போற்றமு னிவரா
னனிசேர் மாதவ மேன்மை யீருமை நாடி யாம்வர னவிலுவாம். (௫)

தேவர் கட்குயர் தேவ னென்பவன் யாவருந் தொழச் செப்புமிப்
பாவ கங்கண மால றிந்திட வேண்டி னேன்பகர் வீரென
மேவ ருந்தவ ரிற்சி லர்சிவன் மேன்மை யென்றனர் சிற்சிலர்
மூவ ருக்குண்மு ராரி யேமுதன் மூர்த்தி யென்றனர் சிற்சிலர். (௬)

சத்தி யென்றனர் பிரம னென்றனர் தபன னென்றனர் சிற்சிலர்
நித்தி யஞ்செக மெய்த்த வம்மக நேர்ந்த சந்திசெ பங்களும்
வித்த கத்துறு மேன்மை யென்றனர் வீணை மாமுனி வினயமோ
டொத்து மெய்த்தவர் நீவி ரோர்பொரு ளோர்ந்து கூறுக வென்னலும். (எ)

மாத வத்துறு முனிவர் நித்தமு மருவு கன்மம தன்றிவே
றேது மெய்ப்பொரு ளில்லை யென்றலு நார தன்னவ னுருவியே
போத மற்றவர் சொற்ற வாய்மையெம் முன்னர் வந்தவை புகலலு
மேத முற்றிடு வார்கண் மாதவ ரென்று யாமுனி யம்பினும். (அ)

கேட்ட நாரத னாதி யெம்பெரு மான்மு னின்றுகி ளத்தலும்
வாட்ட டங்கணி பாகன் மாதவர் மமதை வீறற மாற்றுவா
னுட்ட மூன்றினன் வீர சங்கம வேட நன்குற வழகொடு
மூட்டும் வெண்பலி கொள்ள வெண்ணியு லாவி யாம்வர வுன்னினர். (௯)

வேறு.

உன்னு போதினி லுற்ற மோகினி
யென்ன வெய்தினம் யாமு மங்கவண்
டுன்னு மாதவர் தோகை மாரெலா
மன்னு மண்ணறன் வடிவை நோக்கினர். (௧௦)

தாரு காவனத் தவத்தி னரில்வாழ்
வாரு லாமுலைக் கொங்கை மங்கைமா
ரேரு லாவுகங் காள ரின்னிசைச்
சீரு லாமொழி செவியின் மாந்தினர். (௧௧)

மாந்தி மாழ்கியுண் மாரன் மென்மலர்க்
சாந்து வெங்கணை கடிதி னேவலுஞ்
சாந்தணிந்தபூந் தனத்தின் மென்றுகிற்
கூந்தன் மென்மலர்க் கோதை வீழ்ந்தவால். (௧௨)

ஆல நீள்விழி யாமென் றஞ்சனஞ்
சால வேவவை வார்க டங்கையிற்
கோல வாடியிற் றீட்டிக் கூர்மதி
போல வேந்திமுன் போந்து ளார்சிலர். (௧௩)

ஆயன் றீங்குழற் காவி னந்தொடர்ந்
தேய வாறென விறைகங் காளனார்
சேய வின்னிசைத் தேறன் மாந்தியே
தூய மானெனச் சுற்றினர் சிலர். (௧௪)

உண்ணும் வெண்பலி யொருகை யேந்திவந்
தண்ணன் முன்செல வவர்பி னெஞ்சமுங்
கண்ணு நாணமுஞ் செல்லக் கண்டுவிண்
பெண்ண னார்களும் பின்பு சென்றனர். (௧௫)

பின்பு சென்றுநீர் பிச்சை கொள்ளுமென்
றன்பி னான்முலைக் கணிக லன்களு
மின்ப மானபா ளிதழு மீந்தவர்
முன்பும் பக்கமும் பின்பு மொய்த்தனர். (௧௬)

வேறு.

மொய்த்த முனிவர் பத்தினிமார் மோகித் திலங்குங் கங்காளர்
வைத்த வடியின் றுகள்புரள மயங்கி விழுந்து பின்றொடர்ந்தார்
பொய்த்த விடையார் சிலகளபப் பூண்கை வளைக ணிலஞ்சோரத்
தைத்தண் டழையை நிலஞ்சேர்த்தி நாணி மயங்கித் தலைகவிழ்ந்தார். (௧௭)

இவ்வா றிருடி மார்மனையா ரெழிற்கங் காளர் பின்றொடர்ந்தார்
செவ்வான் படர வெய்யோனுஞ் சேர்ந்தா னத்தமன கிரியை
யவ்வான் மதிய முறமடவா ரரனைக் காணார் தம்மனையிற்
தவ்வா திருந்தோ ராயுகமாய்ச் சார்ந்தார் துயரஞ் சாற்றரிதால். (௧௮)

மதிவெண் கதிர்வெங் கதிரென்பார் மதவெண் குடைவந் ததுவென்பார்
புதிதந் திகழு மதன் வடிவைப் புராரிவடிவ மிதுவென்றே
விதியின் வழியே மனஞ்செல்ல வழியா றிலங்கு முருவெளியைக்
கதிதந் திடுவோ யெனக்கையாற் றழுவிக் காணா தலுத்தயர்ந்தும். (௧௯)

உதயவ ரைக்குங் கங்காள ருருவிற் புணர்ந்தா ரெனமகிழ்ந்தே
யிதைய நெகிழ்ந்தாங் கார்போல வீன்றார் குழவி யொவ்வொன்றைப்
புதைவல் லிருள்போய்க் கதிர்வானு ளேந்தா ரேந்து புதல்வருடன்
சிதைவி றவத்து முனிவரருஞ் சினந்து மனத்தா லையுற்றார். (௨௦)

இருடி கருப்ப மிராத்தங்கா தென்னப் பயந்த பாலரொடு
மருடர் தணைவா னெனத்தேடி யரிய வீதிப் புறம்வரலும்
பொருளங் குலவி வரல்கண்டு பொருவேள் பகழிக் காற்றாராய்
வருடிப் புலம்பி வாய்வெருவி மலர்த்தா மரையின் மிசைவீழ்ந்தார். (௨௧)

அடிமேல் விழுந்தார் பவக்கடனின் றெழுந்தா ரரிவை மாரெல்லாம்
படிமேற் றொடர்ந்து பரன்பின் போம் பான்மையறிந்து முனிவோர்கள்
கொடிபோ னுடங்கு மிடைமடவார் தம்மைக்கூவி நின்மினெனப்
பிடிபோ னடையார் தடைமீறிப் போந்து தடுத்த முனிவோரை. (௨௨)

பார்த்து நகைத்துப் படித்தள்ளிப் பரம ரெமக்கப் பதியாவர்
ரீர்த்தண் டலைநீர் வாழ்ந்திடுக யாங்க ளருங்கற் பினையிழந்தேம்
பேர்த்து மறுத்துந் தொடர்ந்தென்னே யென்றும் பேசிப் பிரிவரிதா
யார்த்த வேடத் தவருடன்பி னடைந்தா ரிடைந்த முனிவரெலாம். (௨௩)

கூடா ரெனவே முனிவர்குழாங் கூடிக் கொடிய திவர்தூர்த்தர்
வாடா வடியிற் சங்கம்விம்ம மடவார் கற்பின் வரமழித்தாய்
கேடா யுனதாண் குறியமுழுகிக் கீழேவீழ்க வெனச் சபித்தார்
நாடாச் சாப வட்சாந்து ளாக நகைத்தார் கங்சங்காளர். (௨௪)

வானத் திடையே சாபமொழி வறிதே தூளாய்ப் பறந்ததற்பின்
மோனத் தவர்கங் காளர்நகை முறுவற் பெருமை யினைநோக்கி
கானற் புரிய தாருவனக் கண்ணூர் பன்ன சாலைவயிற்
ருனத் திருந்தே யிருளாவி காரம் புரிவான் மனத்தெண்ணி. (உரு)

குண்டம் வேதி கைந் நான்காம் வேதங் கூறு முறைப்படியே
தண்டா வமைத்தாங் கெட்டியொடு தான்றி முதல சமித்தழன்மேன்
மண்ட விறைத்தா குதிபுரிந்து மனத்தா லழலின் மந்திரமுட்
கொண்டு நெய்யோ டுபகரணங் கூட்டிப் பூர ணுகுதியை. (உசு)

கொடுத்தார் கொடுக்குங் காலையழற் குண்ட நடுவிற் கிருத்திமுகங்
கடுத்தா ரழல்போல் வரும்பூத கணங்கள் புடைசூழ்ந் திடத்தோன்ற
விடுத்தா ரதனை நோக்கியிவண் மேவுந் தூர்த்த சங்கமனை
மடுத்தா வியினை முடித்துமென வழுத்தி மறுத்து முனைசெய்வார். (உஎ)

வேத மெமக்கா முண்மையெனின் விளையுங் கரும மெய்யாயிற்
பூதம் வருமிச் சங்கமனைப் பொன்றப் புரிக வெனப்புகன்றூர்
நாத ரிடத்தி லப்பூத நடந்து வரலு மதுநடுங்கப்
பாத மலர்க்கீ ழுறக்கரத்தாற் பிடித்து மிதிக்கப் பதைத்ததுவே. (உஅ)

வந்த கிருத்தி முயலகனை மலர்த்தாட் கிடத்தி மிதித்தபின்னர்
நிந்தை புரிய வரும்பூத கணங்க ளனைத்து நிலைபிரியா
தெந்தை பதத்திற் பணிந்திடலு மெமக்கே படையா யிருமினெனச்
சிந்தை மகிழ்ந்தே மலர்மாரி பொழிந்தார் துதித்தார் தேவரெல்லாம். (உகூ)

மாதர் பெருகுந் தவமாதர் மகிழ்ந்தார் கமல முகமலர
வேத முறுமம் முனிவர்குழாம் யாருந் தத்த மனைவியரைப்
போத முருமற் செயற் கரிய செயலைச் செய்யாப் புன்மையினுற்
பாதம் பன்ன சாலையிடைப் படரேல் துறந்தே மெனப்பகர்ந்தார். (கூ0)

முனிவ ருரைத்த படிமுனிவர் மடவா ரவர்பான் மோகமிழந்
தினிய வடிவக் கங்காள ரிடத்திற் புகுந்து தொடர்ந்தனர்பின்
கனிமென் மொழிமோ கினிதன்னைக் கண்டு பேசி யவனொருவி
நனிகூர் தாரு வனந்தன்னி னண்ண முனிவர் நயப்புற்றூர். (கூக)

வாராய் கனியே மோகினியே வதன மலர்ந்துன் கருணைவிழி
பாரா யென்றூர் சிலர்சிலர்வேள் பாண மெமக்கு விலக்கென்றூர்
சேரா யென்றூர் சிலரதரச் செவ்வா யமுதக் குறுந்திவலை
தாரா யென்றூர் சிலரடியிற் ருழ்ந்து வீழ்ந்து சூழ்ந்தனரால். (கூஉ)

வேத மறந்தார் தவமொழிந்தார் வேள்வி யிகழ்ந்தார் செபம்புரியும்
போத மகன்றூர் விழியிமையார் புனைவற் கலையுங் குண்டிகையும்
பேத மனத்தாற் பூதலத்திற் பெரிதுந் துறந்தார் கலைவிளங்குஞ்
சீதமதியால் வெதும்பியிளந் தென்றல் படந்தஞ் செயலழிந்தார். (கூகூ)

அருந்து மதர யானபலி யளிப்பாய் களிப்பா யாவியுய்யப்
பொருந்த மனந்தான் பொருந்தென்றார் புளகக் களப முலைத்துகிலைத்
திருந்த நீக்கு வாய்காணிற் சிறக்கு முயிர்நின் பணிசெய்கேம்
வருந்தெந் துயரந் தீர்க்கவரு மருந்தாய் வந்தாய் தவப்பேறே. (கூச)

கையைப் பிடித்தார் சிலர்சிவந்த காலைப் பிடித்தார் சிலரிடையாம்
பொய்யைப் பிடித்தார் சிலர்துகிலைப் புனைமேகலைப் பூண்முலை பிடித்தார்
மெய்யைப் பிடித்தார் சிலர்கூந்தற் சொருகைச் சுமந்து மேல்வீழ்ந்து
துய்ய கனிவா யமுதருந்தத் துடித்தார் புளகம் பொடித்தாரால். (கூரு)

கண்டு திகழ்மோ கினிவடிவைக் கரந்தே திருமால் வளையாழி
தண்டு தனுவா ளெனும்பஞ்சா யுதங்க டயங்கத் தற்சொருபங்
கொண்டு சிறந்தார் முனிவரர்கள் குறித்து மயல்போய் மிகநாணி
யண்டர் பெருமான் செயலிதுவென் றறிந்தே கோபத் தொடுமகன்றார். ()

அகன்ற முனிவர் நீராடி யக்நீர்த் துகிலை யகற்றுமற்
புகன்ற நான்கா மறையாவி சார முன்போற் புரிந்திடலும்
பகர்ந்த வழலிற் றழல்விழிப்பைப் பாந்த ளனேக பலகோடி
திகந்த நடுங்க வெழக்கங்கா ளனைநீர் சிதைப்பி ரெனவிடுத்தார். (கூஎ)

விடுத்த காலை விடமுயிர்த்தே வரக்கங் காளர் வெங்காள
மடுத்த பகுவா யரவனைத்து மணிப்பூ டணமா யவயவத்திற்
றொடுத்தாங் கெடுத்த சுரம்பாடித் துலங்கா நின்று ரவ்வகையா
லடுத்த நாமங் கலாபியென வாறு ராறு ரெனவுரைத்தார். (கூஅ)

வேறு,

அரிமுக நோக்கிச் சேடன் முனிவர ரறைந்த சாபப்
பரிசெவண் போய தேயோ பகர்கெனப் பகர்வா னம்ப
னுரியமெய் யிடத்திற் சாப மணுகிடா வரவொன் றுனே
புரிதரு சாப ஞான்றும் புகல்செகத் தறங்க ளோங்க. (கூகூ)

வேண்டுமென் றெண்ணி நங்கண் விளங்குமாண் குறிபோ லெங்குங்
காண்டுறு மவற்றை யாவர் கருதிப் பூசனைக ளாற்றிப்
பூண்டெழுமைப் போற்றி லாங்கண் பொருந்திடு மெய்த்தர் மத்தங்
கூண்டுறு காம மோட்சங் குறைவறக் கொடுப்போ மென்றும். (சo)

என்றரன் கூறும் வண்ண மிருஞ்சிலைச் சுயம்பு வன்றிப்
பொன்றிறல் வெள்ளி கஞ்சந் தாம்பிர விரதம் பூவி
லொன்றுமிர்த் திகையைப் பந்தா ருவாதியா மிவற்றி லோங்க
நன்றிகூ ரிலிங்கஞ் செய்து சத்தியை நணுகச் சேர்த்தி. (சக)

விதிப்பிர காரம் பூசித் தருசித்து முனிவர் விண்ணோர்
கதித்திறம் பெற்றார் தாரு வனத்திடை யயன்மால் விண்ணோர்
மதித்திறச் சனக ராதி வந்துபூ சனைக ளாற்றித்
துதித்துக் கங்காள னார்தந் துணைமலர்ப் பாதம் போற்றி. (சஉ)

சொல்லுவா ரசோகு ணத்தாற் றூடணஞ் செய்து பொல்லா
வல்லிருண் மனத்த ரான முனிவர்க்கு வகுத்தாய் புத்தி
புல்லிய சத்து வத்தைப் புரிந்துமே காக்க வேண்டு
மல்லுறழ் கண்டா வென்றே யப்படிபணிந் தாற்று நின்றார். (சங)

அரியய னரனேமூவர் வழுத்தலு மபய மீந்து
புரிதவர் செய்த தீங்கு பொறுத்தன மென்று கூறிப்
பரிவுட னருளிப் போற்றும் பரிசனத் தவர்கள்சூழ
விரிகதி ரெறிக்கும் வெள்ளி வெற்பினில் விமலர் சேர்ந்தார். (சச)

நாகபூ டணத்தா லோங்கி நவில்கலா பித்து வப்பே
ரேகநா யகற்கும் வாய்ந்த வியல்பினை யுரைத்தே மின்னும்
பாகமா ரமுதங் கண்டு சருக்கரை பகருந் தீஞ்சொற்
பூகமார் கந்த ரத்தெம் புராதனி பாகத் தெம்மான். (சரு)

பெற்றதோர் கலாபித் துவத்தைப் பேசுவாம் பேசுமையைந்
துற்றன கலைக ளாகு முயர்சிட்டி திதிசங் கார
மற்றமி திரோதா னத்தோ டனுக்கிரக மான வைந்து
முற்றுறச் செய்யும் யோக்கிய மூர்த்திகள் கலாப ராவார். (சசு)

இப்பெருங் கடவு ளான விருபதோ டைவர் யார்க்குஞ்
செப்புகா ரணமாய் ஞான ரூபியா யருவாய்த் தேர்ந்த
வொப்பிலா வொருவன் றனே கலாபியா யுறைவர் நாளு
மப்பெரும் பேதத் தின்பே ரடைவினி லறைகு வேமால். (சஎ)

அருவமா யுருவ மாகி யருமறை யயன்மா றேவ
ரொருவரா லறிய லாற்று தொளிதழற் பிழம்பாய்த் தோற்றி
மருவுநிட் களமாய் நின்ற வானவன் சகள மாகிக்
கருணைகூர் கலையை யைந்திற் கலைகளோ ருருவ மானான். (சஅ)

புவியினின் முதலாம் பேதம் புகலவ யவங்க ளின்றித்
திவவொளி நானு வன்னஞ் சிறந்திடத் திரண்டு நீண்டும்
பவவினை யறுக்கும் வாட்கட் பராசத்தி யோடுங் கூடித்
தவமுனி மறைகள் போற்றுந் தனிச்சிவ லிங்க மாமால். (சகூ)

இரண்டெனும் பேரமூர்த்தி யியங்கிய லிங்க நாப்பண்
டிரண்டவோர் வதனஞ்செங்கை நான்கினிற் றிகழி ரண்டின்
முரண்டரு மழுமான் மற்றை வரதமொ டபய முக்க
ணரண்டரும் வடிவாய்த் தோன்றி யமர்லிங்கோற் பவரோ யென்றும். (ருo)

மூன்றெனும் பேரமூர்த்தி மொழியுமோ ராத னத்திற்
றூன்றுணை யாகுஞ் சத்தி யுடனமர் தற்பரன்பே
ரான்றிடு முயர்ம யேச ரமர்நான்காம் பேரங் கூறி
னேன்றநித் தியகல்யாண சுந்தர மூர்த்தி யென்பர். (ருக)

ஐந்தெனும் பேரமூர்த்தி யுலகெலா மளிக்குஞ் செய்ய
பைந்தொடி யொருபாற் பச்சை நிறம்பெறு பவள மேனி
நந்துரு திலங்கு மத்த நாரீச ரென்பர் நல்லோர்
புந்திகூ ருறும் பேரமூர்த்திபேர் புகலுங் காலே. (ருஉ)

திகழுமோ ராத னத்திற் றேவியோர் பக்க நாப்பண்
புகழுறு முகமோ ராறும் புயங்களீ ராறும் பெற்றே
மகிழ்வுறு முருக வேளை வைத்தநற் சோமாற் கந்த
ரிகழ்தலி லேழாம் பேரத் தியற்பெய ரிபம்பு வேமால். (ருக)

அரியய னுடனே கூடு மரன்பெய ராமும் மூர்த்தி
பரிவுறு மெட்டாம் பேரம் பகர்மறைப் பிரம னுருந்
தெரிதரு மொன்பான் பேரந் திருமாலாம் பத்தாம் பேர
முரண்மிகு ஞான நல்குந் தக்கண மூர்த்தி யென்பர். (ருச)

வருபதி னொன்றும் பேரம் வளர்பிச்சை மூர்த்தி யென்பர்
தரும்பன்னி ரண்டாம் பேர மூர்த்தித்தா ருகாவ னத்திற்
கரியவேல் விழியா ராசை கொள்ளுங்கங் காள நாதர்
துரிசறு பதின்மூன் றாம்பே ரப்பெயர் சொற்கா மாரி. (ருரு)

வித்தகப் பதினான் கான பேரமுன் வெய்ய கோரப்
பத்தியில் காலன் றன்னைப் பதைத்திட வுதைத்து வீழ்த்தித்
தத்துவங் கடந்த மூர்த்தி பேர்சாற்றுங் கால காலர்
புத்திகூர் பதினைந் தான பேரத்தைப் புகலு ஞான்று. (ருசு)

சலந்தர னுயிரை முன்பு தாளினாற் சக்க ரத்தை
நிலந்தனிற் றீட்டி வென்ற நிக்கிரக மூர்த்தி யாமா
லலங்கல்சேர் பதினா றான பேரமன் றமரர்க் காகக்
கலங்கலில் புரங்கண் மூன்றுங் கலங்கிநீ றாகவென்று. (ருஎ)

நகைத்துவீ றழித்த முக்க ணயக னுமை மேற்றை
யுகைத்ததோர் திரிபு ராந்த கன்னென வுரைப்பர் மற்றை
வகைப்பதி னேழாம் பேர மூர்த்திபேர் வகுக்கின் முன்னாள்
தொகைத்தவப் பேறு பெற்றுத் துலங்குமும் மூர்த்தி வானோர். (ருஅ)

செய்தொழி லனைத்துஞ் செய்வேன் சிறந்தவிப் பாகமாதி
கையுறு வெமக்கே யீமி னெனுமிர ணியனைக் காய்ந்த
வெய்யதோர் நார சிங்க வீறடர் சரப ரூபத்
துய்யநா மத்தி னோடு துலங்கிய மூர்த்தி யென்பர். (ருகூ)

இலக்கமோர் பதினெட் டான பேரமதி யம்பின் வாரி
சலக்குறு காலே யால காலவெவ் விடத்தைக் கையா
லுலப்பிலா துண்ட காள கண்டனென் றுரைப்பர் தக்கோர்
விலக்கில்பத் தொன்பான் பேரம் விளங்கழற் சொரூபி யென்பார். (கூ0)

இருபதாம் பேரங் கூறி னெழில்பெறு மசேக பாதர்
மருவிய விருபத் தொன்றும் பேரமே மலரோ னஞ்ச
வொருசிர நகத்தாற் கிள்ளித் தள்ளியோ ரறிவை யீந்து
திருவிளை யாடல் செய்யும் வயிரவ னென்பர் தேர்ந்தோர். (சுக)

இரண்டொடு மிருப தான பேரம தியல்பு கூறிற்
றிரண்டுருண் டெழுந்து நீண்ட செங்கண்மால் விடையின் மீது
சரண்டயங் கிடவே யேறுந் தனிவிடைப் பாக னென்பர்
முரண்டொகை யிருபான் மூன்றும் பேரப்பேர் மொழியு ளொன்று. (சுஉ)

ஒருமுக மிருதாண் முக்க ணேங்குநாற் புயமோ ரைந்தாய்
வருமெழுத் தாறு சூடி வளர்ந்தெழு சடையின் மீதே
கருதுமெண் டிசையும் போற்றக் கலைநவ மதியஞ் சூடுந்
திருவளர் பத்தர் போற்றுஞ் சந்திர சேக ராமால். (சுங)

நான்கொடு மிருப தான பேரப்பேர் நவிலு ளொன்று
தேன்பொலி கொன்றை சூடித் தமருகந் தீக்கை யேந்தி
வான்பொலி தேவ ராதி மறைவலோர் போற்ற மன்றுட்
டான்பதந் தூக்கி யாடு நடராச மூர்த்தி தானே. (சுச)

ஐயைந்தாம் பேரப் பேர்கீ ரலையெறிந் துவட்டுங் கங்கை
வையக முதல யாவும் வாய்மடுத் துண்ண வெண்ணி
வெய்யவெங் கோரஞ் செய்ய மின்னூர்செஞ் சடையிற் றுங்கிப்
பையர வுடனே சுற்றும் பரன்கங்கா தரனே யாகும். (சுரு)

பேரமோ ரிருபத் தைந்தும் பெட்புற வுரைத்தாஞ் சொல்லா
தாரமாச் செகத்துக் கெல்லா மமர்பவன் சிவனே யப்பேர்
கோரமார் பிரள யத்திற் கூடிடு மான்ம கோடி
சீருற லயித்த லாலுஞ் செப்புமிவ் வான்ம கோடி (சுசு)

அனைத்தினு நீங்கா தென்று மமரும்பே ரருளி னாலு
நினைப்பரு மவற்கே நாளு நிகழ்த்துவர் தவத்தி னின்றோர்
தினைத்துணைப் பொழுதிங் கேனுஞ் சிவன்றிரு நாமம் போற்றின்
வினைப்பய னொழிந்து மேலை வீட்டில்வீற் றிருப்பர் மாதோ. (சுஎ)

இவ்வகை யிருபத் தஞ்சு பேரத்தின் பேர்கள் யாவுங்
கவ்வையில் லாதே செய்ய கதிரவ னுதய காலைச்
செவ்விய சுத்த ராகிச் சிந்தையுட் டியானஞ் செய்வோ
ரவ்விய மின்றிக் கேட்போ ரத்திறச் சரிதை யெல்லாம். (சுஅ)

நாவி னிற்றுதிப் போரேட்டினன் குறத்தீட்டித் தங்கள்
பாவகத் தினிது வைப்போர் பழங்கணோய் பசிதா கங்கள்
யாவையு மொழித்தே பூமிக் கிறையென விருந்து பின்னர்த்
தேவர்கள் வழுத்த மேலாஞ் சிவபதத் திருப்பர் மாதோ. (சுகூ)

பிறைமுடித் திலங்கு மோலிப் பேரருட் கடலெம் பெம்மான்
சறைமிடற் றண்ணல் காலகாலன் மெய்க் கபாலி சூலி
நறைவிரி கொன்றை சூடி நவில்கலா பித்து வத்தை
யறைகழ லரியே சேடற் கடைவுட னறைந்த வாற்றை. (எ0)

தவப்பெருஞ் சனற்கு மாரர் தனிமுனி நார தற்கே
யுவப்புட னுரைத்தா ரென்றே யுவர்க்கட லுதித்த மாய
னிவப்புறு மச்ச மாகி மனுவுக்கு நிகழ்த்தும் வண்ணம்
பவப்பிணி யகற்றுஞ் சூதன் முனிவர்க்குப் பகர்ந்தான் மாதோ. (எக)

முப்பதாவது
இருபத் தஞ்சு பேரமுரைத்த வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவித்தம், எஅஉ.

முப்பத்தோன்றுவது

திரிபுர நிருமாண முரைத்த வத்தியாயம்.

அண்டமோ டகண்ட மாகி யருவமா யுருவ மாகி
விண்டுநான் முகனுங் காணு மெய்ப்பொருண் மேரு வில்லி
திண்டிற லம்பொன் றூலே தெகித்தமுப் புரநிர்ம் மாண
மெண்டரு முனிவர் கேட்ப வியம்புவான் சூதன் மாதோ. (க)

மாயவல் லசுர னான மயனும்பர் தம்மோ டேற்றுப்
பாய்பரி யானை திண்டேர் பதாதிகண் மடிந்து வீழத்
தீயவ னிரியல் போகச் சிந்தைநொந் திலச்சை யாகிச்
சாயடற் றானை நீங்கித் தனித்தவ முயல்வா னெண்ணி. (உ)

நெடுவரைச் சார லெய்தி நீரிடைப் பனிக்கா லத்துஞ்
சுடுவெயிற் கோடை காலந் துன்னழ லுப்ப னின்றும்
படுமழைக் காலந் தன்னிற் பாரில்வெள் ளிடையி னின்று
மடுவுறு சைவ லங்காய் கனிவனக் கிழங்கு தின்றும். (ங)

காலினைப் புசித்தே வெய்ய கனலிற்றன் றசைகொய் திட்டோர்
காலினை நிலத்தி னூன்றிக் கைசிரங் குவித்து மற்றோர்
காலினை மடக்கி யைந்து கரணங்க ளடச்சி யேவாக்
காலினை மறைது தித்தே சருத்துற வயனை யெண்ணி. (ச)

பருவமோர் கோடி பண்பாய்ப் பகரருந் தவங்க ளாற்றி
யுருவமென் றசையூன் வற்றி யுலர்ந்துவெள் ளெலும்பு தோன்றப்
பிரமரந் திரம்வெ டித்துப் பிறங்குசெந் தழற்பி ழம்பா
லிரவிவெண் மதியு டுக்க ளிவையொளி மழுங்க நின்றான். (ரு)

தவஞ்செயுங் காலை வித்துன் மாலிகூர் தார காட்ச
னவன்றிறற் பாங்க ரெய்தி யவருமவ் வண்ண மாற்றச்
சிவந்தபங் கயத்தோ னெய்திச் செயற்கருந் தவங்கள் செய்தீ
ருவந்தனம் வேட்ட லீது மூளத்தெண்ண முரைமி னென்றான். (௬)

என்றலுந் தேவர் கையா லிடைந்திடைந் திடரின் மூழ்கிக்
கன்றிய மனத்தி னோடுங் கலங்கினே மினிமேன் மூன்றாய்த்
துன்றுபொற் புரங்க ளொன்றாற் றொகுத்திட வேண்டு மாங்க
ணொன்றிய புரம்பொன் வெள்ளி யிரும்பதா யுலவ வேண்டும். (௭)

தேவர்கோன் வச்சி ரத்தாற் செங்கணான் றிகிரி தன்னாற்
றுவுவெங் கணைக ளாலுந் தரணியா காயம் விண்ணில்
யாவரா யுதங்க ளாலு மிலக்குறா திருக்க வேண்டும்
பூவல யங்க ளாதி புவனஞ்சஞ் சரிக்க வேண்டும். (௮)

நீருறு கருவி யாலும் நெருப்புரு கருவி யாலும்
பாருறு கருவி யாலும் பண்ணுறு கருவி யாலும்
தேருறு மமர ராலுந் திறல்கொள்கந் தருவ ராலும்
போருறு வயவ ராலும் பொன்றிடா திருக்க வேண்டும். (௯)

நீரினி னடக்க வேண்டு நெருப்பினிற் செல்ல வேண்டு
மூருறு முயிர்கட் கெல்லா முணவவ ணுதவ வேண்டுஞ்
சேருநித் தியம தாகித் திரிபுர மாக வேண்டுங்
கூர்தர வருளு கென்ன மறுத்தயன் கூறு மன்றே. (௧௦)

அருந்தவ மயனீ கேட்ட வரமெலா மருள்வே மாங்கட்
பொருந்திய துராசா ரங்க ணித்தியம் பொருதா தோங்க
விரும்புபொன் வெள்ளி யானீ யியற்றுமுப் பரத்துக் கீறு
திருந்திநீ யுரைத்தி டென்னத் திறன்மயன் செப்பு வானால். (௧௧)

யாவனே யெனினும் பூச யோகத்தி லேவொன் றேவின்
மூவர்முப் புரங்கள் கூடின் முடிந்திடக் கடவ தென்னப்
பூவுறை யயனு மீந்து போயபின் புகன்ம யன்றான்
றுவின்முப் புரங்க டம்மா னிருமிக்கத் தானே யெண்ணி. (௧௨)

பூசநட் சத்தி ரத்திற் பொருந்திய முகூர்த்தந் தன்னி
லாசின்முப் புரத்தி னெவ்வொன் றளவையோ சனைநூ றாகக்
காசறு மகல நீளத் துறக்கருந் தாதுக் கோட்டை
பேசிய புவிகண் மன்னிப் பிறங்கிட வதன்மே லாக. (௧௩)

றூறுயோ சனைக்கு மேலே நுவலிர சதத்தின் கோட்டை
வீறதன் மீது நூறு யோசனை விளங்குஞ் செம்பொ
னூறுறு கோட்டை நண்ண வுஞற்றியே யவற்றுண் மிக்காந்
தாறுபாய் களிநல் யானை புரவிதேர் தறுக ணாளர். (௧௪)

சேனையங் கடனீள் வீதி செழுமணி மாட கூட
மேனைய சாலை வாவி யிளிங்குள நரிக ளோடை
வானுயர் சோலை யாவும் வளம்பெற வகுத்து வீணைக்
கானமென் குதலைச் செவ்வாய்க் கனங்குழை மகளி ரீட்டம். (௧௫)

வளம்பெற வகுத்தே யாங்கண் மன்னுயி ரனைத்தி னுக்கு
முளங்கொளு முணவு வெவ்வே றுலப்பிலா தமையச் செய்து
களங்மில் சூலம் வைவேல் கவணெறி யீட்டி குந்தந்
துளங்குசக் கரம்வாள் தோட்டி தோமரஞ் சுரிகை தண்டம். (௧௬)

ஆதியா யுதங்கள் யாவு மமைத்தபி னிரும்பின் கோட்டை
யோதிய தார காட்ச னூறிலா துவந்து காக்கத்
தீதறு வெள்ளிக் கோட்டை திறல்வித் துன்மாலி காக்க
மாதவப் பொன்னின் கோட்டை மயன்றனக் கென்றான் மன்னோ. (௧எ)

கேட்டலும் புளகப் பூத்துக் கிளர்தரு மகிழ்ச்சி யோடும்
வாட்டிறற் குரிசி றன்னை வாழ்கென வாழ்த்தித் தத்தங்
கோட்டையி னணுகி யேசெங் கோன்முறை நடாத்தி னூரென்
றீட்டருந் தவத்துச் சூதன் முனிவருக் கியம்பி னானால். (௧அ)

முப்பத்தோன்றாவது

திரிபுர நிருமாண வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். அ00.

முப்பத்திரண்டாவது

திரிபுரநிருமாண வருணனையத்தியாயம்.

புரமொரு மூன்று மயன்வகுத் திட்ட பொற்பினைக் கேட்டநற் றவத்திற்
றிரமுறு சவுன காதிய முனிவர் தெளிந்தசொற் சூதனை நோக்கிக்
கரமுறு நெல்லிக் கனியினைப் போலக் கதையெலாங் கேட்டுளங் கனிந்தாம்
வரமுறு மூன்று புரநிரு மாண வருணனை யுரையென வகுப்பான். (௧)

மயன்புரி தவத்தான் மனத்தினி னெண்ணி வகுத்திடு புரங்களோர் மூன்றும்
வியன்பெறு தார காட்சனோ டன்னோன் வித்துன்மா லிப்பெய ருடையோ
னியன்றவிம் மூவர் மனங்களி கூர்ந்தே யிருந்தர சியற்றிட விளங்கு
நயம்பெறு ஞாயில் சுற்றுமாளோடி நவையில்கோ புரம்பல நெருங்கும். (௨)

சந்திகள னேகஞ் சாலைக ளனேகந் தனிமணி மேடைக ளனேகம்
பந்தணி விரலா ரரமிய மனேகம் பானிலாச் சாளர மனேக
நந்தன வனநீ ரோடைக ளனேக நவமணி யாவண மனேகம்
வந்துவந் துலவு மணிமறு கனேகம் வான்றொடு தேர்களு மனேகம். (௩)

முக்கணெம் பெருமான் பூசனை குறையா முழுமணி யாலய மனேக
மிக்கமா மவுலி புனைமுடி வேந்தர் வியன்கொலு மண்டப மனேகங்
கைக்களி றிரதம் புரவிகா லாட்கள் களிப்பொடும் பயிலிட மனேகஞ்
செக்கர்வா னுரிஞ்சு மகரதோ ரணஞ்சூழ் செழுந்துகிற் கொடிகளு மனேகம். (௪)

புரங்களி லொன்றுக் குயர்பெரு வாயில் புகழ்ந்திடு நூறென விளங்கும்
வரம்பெறு தார காட்சனும் வித்துன் மாலியு மாபல மயனுந்
தரம்பெற நினைக்கி னுலகெலாஞ் செல்லுந் தரமுறு கணப்பொழு ததனிற்
றிரம்பெறு குபேரன் புட்பக மானச் சிறப்பினுஞ் சிறப்பெனத் திகழும். (௫)

அப்புர முறைவோர் நினைத்திடு பொருள்கள் யாவுமக் கணத்திடை யடைவ
ரெப்பொரு ளேனும் வெள்ளிபொன் னிறமா யெய்திடு மிலங்குதா னவர்க
ளொப்பரு மனைக ணவமணி குயிற்றி யொளிவிடு கிரணகாந் தியினுன்
முப்புரத் திரவும் பகற்பொழு தெனவே மொழிந்திடும் வளமையை யுடைத்தால்.()

உரைக்குமுப் புரத்தின் வளனெலாங் கேட்டே யுற்றபா தலத்துறை யசுரர்
திரைக்கருங் கடலிலொளித்துள வசுரர் திசைதொறுங் கரந்துறை யசுரர்
வரைப்பெரு முழைஞ்சி னகத்துறு மசுரர் கனந்தொறு மறைந்துறை யசுரர்
தரைத்தல மேவு மசுரர்கள் யாருந் தானவர் மூவரைச் சார்ந்தார். (எ)

ஆயிர கோடி சூரிய கிரண மழலுற வொருங்கமைத் தென்னச்
சேயொளி யுமிழும் பதுமரா கங்கள் வாளராச் சுடிகைமா மணிக
டேயவெண் டரள மரகதம் பவளஞ் சுடர்விடு வச்சிர நீல
மேயகோ மேத கம்புட்ப ராக மிளிர்வயி டூமே முதலா. (அ)

அழுத்திய பசும்பொற் சிகரமண் டபத்து ளணவுசா ளரம்பல வமைத்து
முழுத்தசந் திரகாந் தத்தள விசையு முழுமதி தவழ்சுதை மதிளுங்
கொழுத்தமான் மதமுங் கருப்புரச் சாந்துங் குழைத்திடை யறத்தனி மெழுகி
வழுத்துமைந் தருவின் மலர்நறுங் கனியின் வருக்கமு நெருக்குற நாற்றி. (௯)

சிறந்தமண் டபத்தி னுப்பணி னனேகசீ வரத் தினங்கண்மொய்த் திலங்கப்
பிறங்குதிவ் வியசிங் காதன மீதிற் பெருந்தகை மயன்கொலு விருப்ப
மறந்தரு கொலைக்க ணரம்பையர் கவரி மருங்கொசி தரவிரு மருங்கு
நிறைந்திட விரட்டி வெள்ளடை யேந்தி நின்றுருப் பசிசுரு ளுதவ. (௧௦)

மேனகை முதல வனிதையர் பரத விதமெலாஞ் சதிமுறை நடிப்பக்
கானமா மகதி நாரத னிசைப்பக் கணிகைய ரபிநயம் பிடிப்ப
மானவே லரசைத் தொழவரு மன்னர் மகுடகோ டிகள்பொடி பொடிப்ப
தானவார் கூந்தற் புலோமிசை கொழுந னுடொறு மனந்துடி துடிப்ப. (௧௧)

இந்திர நீல கிரியின்மேன் மேரு விருந்தது போன்முடி யிலங்க
மந்தர வரைவீ ழருவிபொற் றரள மாலிகை புயவரை வயங்கச்
சுந்தர வயிர குண்டல மனேகஞ் சூரிய காந்தியைத் துரத்தக்
கந்தர நிறைந்த நவமணிப் பதக்கக் கலன்கதிர் விலங்கிடத் துலங்க. (௧௨)

வளாபொரு வாகு வலயநின் றிலங்க மணிவிரற் பணிதள தளென
வளாதிகழ் பீதாம் பரம்பள பளென வணியுமுத் தரியமீ திலங்க
விரைநறுஞ் சாந்துங் குங்குமக் குழம்பும் விளங்குமெண் டிசைமணங் கமழப்
பரவுமுச் சகமு மொருகுடை நிழற்றப் பன்னெடுங் காலம்வீற் றிருந்தான். (க௩)

வீற்றிருந் தறனு நீதியுங் கொன்றை வேணியான் விரும்புபூ சனையும்
போற்றுநன் மகமு மறைகளார்ப் பரிப்பும் பொங்கியே யெங்கணுஞ் செழிப்பச்
சீற்றமும் பகையுங் கலகமும் பயமுந் தீவினை யென்பதுந் தீர்ந்து
கூற்றுநன் மடவார் விழியலா துயிருண் கூற்றுமற் றிலையெனக் குலவ. (க௪)

இன்னணம் வித்துன் மாலியுந் தார காட்சனு மெழில்பெறு மயனு
மன்னுமுப் புரத்திற் பன்னெடுங் காலம் வாழ்ந்தனர் வாழ்ந்திடு மிவர்க்கே
யுன்னிய காலத் தளவையு மீறு முளதுகொ லென்றுவா னும்பர்
பன்னவு நடுங்கு வாரெனச் சூதன் பகர்ந்தனன் மாமுனி வருக்கே. (க௫)

முப்பத்திரண்டாவது

திரிபுர நிருமாண வருணனை யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். அக௫.

முப்பத்து மூன்றாவது

துர்ச்சொப்பன தெரிசன வத்தியாயம்.

மாயமிக் குயர்ந்த மயன்முத லானோர் மல்கிய நள்ளிருட் போதிற்
பாயலிற் றுயில்காற் கண்டிடுந் துர்ச்சொப் பனத்தினைப் பகர்ந்திடு கென்றே
காய்சினக் குறும்பு கடிந்தொளி ருளத்திற் கண்ணுதற் பரமனை யிருத்துந்
தூயநற் றவத்து முனிவரர் கேட்பச் சூதமா முனிவரன் சொல்லும். (க)

புரமொரு மூன்றி லுறைபவ ரெவர்க்கும் புகலருந் திறத்தராய்ப் பொருந்தி
வரவலி யினராய் வானுற நிவந்த மல்கிருள் வடிவின ராகித்
திரமுறு மாயுள் செல்வமு நம்போற் செகத்தினி லெவர்க்குள வென்றே
வுரமுறு மகங்கா ரத்தொடுஞ் செருக்கி யுலப்பிலாக் களிப்புமிக் கிருந்தார். (௨)

வேறு.

வனமிகு மரிகள் போன்றும் வாரிவாய் மீன்கள் போன்றுந்
தனுவலி யசுரர் கூட்டஞ் சார்ந்தமா புரங்கண் மூன்றி
லெனையவ ரேனு முள்ளத் தெண்ணிய பொருளனைத்து
துனைவினி லணுகச் செய்வன் றுலங்கிய மயனென் போனே. (௩)

இன்னவா றுரைக்குஞ் செல்வத் திடையறு திருந்து வாழ்ந்தே
பன்னெடுங் காலம் பாவம் பழிபொய்கண் முதல வின்றிக்
கன்னியோர் பாகன் றன்னைக் கருது பூசனைக ளாற்றி
மன்னியே வளர்ந்தார் பூர்வ பக்கநன் மதியே மான. (௪)

வேதநான் கோது மோசை விறல்வலி வயவ ரோசை
கோதையர் சிலம்பி னோசை குழலிசை யாழி னோசை
வாதுவர் பயிலு மோசை மதகரி பிளிறு மோசை
மோதுநீர்க் கடலி னோசை முழக்கொடு மெதிர்க்கு மாதோ. (ரு)

அலகிலாத் தவங்க ளாற்று மயன்முன மயன்வந் தெய்தி
நிலவுமுப் புரங்கட் கீறு நிகழ்த்திடுங் காலங் கிட்ட
வலனுயர் திகிரி மாயன் மாயையின் புணர்ப்பி னாலே
பலபல விபரீ தங்கள் பயின்மதி யுடைய ரானார். (சு)

தேவர்தம் பூசை யாற்றிச் செழுமறை யாளர்ப் போற்று
மேவரு நீதி யெல்லா மென்மெல விடுத்தார் வெய்ய
பாவவெங் கலிபொய் கோபம் பரந்திடு கலக்க மெல்லாந்
தாவிலாப் புரத்தி லோர்நாள் சார்ந்தன சாயுங் காலம். (எ)

சார்தலு மசுரர் யாருந் தம்மிற்கா ரணங்க ளின்றிப்
போர்செயத் துணிந்து பாவப் புத்திமேற் கொண்டு மெய்யாற்
சேர்தரு பிணிகள் போலத் தீவினை வயத்த ராகிச்
சோர்பெருந் துன்ப மென்னுந் தொல்கடன் மூழ்கி னாரால். (அ)

மயனெனு மசுர வேந்தன் மஞ்சமே லடுக்கும் பஞ்ச
சயனமேற் சிங்க வேறு தான்றுயில் கூர்தல் போலப்
புயமல ரனைய கண்கள் பொருந்துநள் ளிருளின் யாரும்
பயமுற நிகழுந் துர்ச்சொப் பனங்களைக் கண்டா னன்றே. (கூ)

கங்குலின் போது நீங்கிக் கதிரவ னுதித்த ஞான்று
தங்குநற் கரும மாற்றி மயனெனுந் தான வேசன்
மங்குறு தொளிரு மேரு வரைநிகர் மண்ட பத்துட்
சிங்கவா தனத்தின் வைகித் தேருமந் திரத்தை யெண்ணி. (க0)

சாற்றிய தார காட்சன் றருதிறல் வித்துன் மாலி
போற்றிரு புறத்தும் வைகப் பொருபடை யமைச்சர் சுற்றத்
தேற்றநல் லறிஞர் சேனைத் தலைவர்க ளின்னோர் சூழ
வீற்றிருந் தன்னோர்ப் பார்த்து மேல்வினை விளம்பு வானால். (கக)

நென்னலிற் கங்குற் போதி னித்திரை கொள்ளு ஞான்று
துன்னிய கனவு மக்குச் சொல்லுவன் கேண்மின் சாலப்
பன்னுமாற் சரிய வாற்றாற் சீற்றமும் படைத்த நாலு
கன்னியர் புருடர் நால்வர் கதழெரி சினத்தி னூட்ட. (கஉ)

கடிகையொன் றினிலு யர்ந்த கடிமதின் மூன்றும் வெந்து
பொடிபடப் புரவி யானைப் பொற்றடந் தேர்பூஞ் சோலை
துடியிடை மடவார் மேவுந் தோரண வாயின் மாட
மடியொடு மெரிந்தெ ரிந்தே யவணவ ணிடிந்து வீழ்ந்தே. (கங)

பூதியாய்ப் போக வந்த காரமுப் புரத்தைப் போர்ப்பத்
தாதவிழ் மலர்மென் கூந்த ருழ்ந்திட வனப்பு வாய்ந்தோர்
பேதைநக் கிணையாய் மற்றோர் பிறங்கிய புருடன் றோளின்
மீதினி லேறி யிந்த மூவெயின் மேவி னாளால். (கச)

அன்னவ டன்னை யாரு மணுகியே முத்த மிட்டுப்
பன்னரு மவமா னங்கள் பண்ணின ரதுவு மன்றிச்
சின்னவெண் மதியேய் நெற்றித் திலதமாய்த் திரள்கை நான்கோ
டுன்னருங் கண்கண் மூன்று முடையவோர் புருடன் றானும். (கரு)

பற்றியே யிழுத்தா னின்னும் பகர்ந்திடற் கரிய தாகிச்
சொற்றதுர்ச் சொப்ப னங்கள் சொல்லவுந் தொலைவி லாதா
னற்றவ விதித்த வண்ண நாடிநற் சாந்தி தன்னை
யிற்றைநா ளியற்றில் யாமிங் கிடருறு திருக்க லாமால். (கசு)

சத்தியந் தமஞ்ச மந்தான் றனிமுறை நிறுவி நல்ல
புத்தியோ டிருந்தே யீசன் பூசனை முறைவ ழாம
னித்திய நியமத் தோடு நிகழ்த்திட வேண்டு மென்ன
மெத்தவுங் கண்கள் சேப்ப வெள்ளெயி றதுக்கிச் சொல்வான். (கஎ)

நங்குல மரபி னுள்ளோர் நாடுறு கருமம் விட்டுப்
பங்கமாங் கருமஞ் சொற்றீர் பணித்திடேம் யாங்க ளென்ன
வுங்களால் வந்த தன்று வூழ்வினைப் பயனென் றோதித்
துங்கவா ளசுரர்ப் போற்றிச் சொற்றநூல் வழியே நின்றான். (கஅ)

மயனெறி தரவே மற்றை வாட்படை வயவர் யாரும்
புயவலித் திறத்தாற் றேவர் பொருந்திய வுலகங் கொண்டும்
வியனுறு தவத்தோர் வேள்வி வேதியர்க் கிடுக்கண் செய்து
முயரனை தந்தை மூத்தோர்க் குறுபிழை சாலச் செய்தும். (கக)

குருவினை யிகழ்ந்துங் கொண்ட மாதரைக் கொலைகள் செய்துந்
திருவளர் கற்பி னோரைச் செங்கரம் பற்றி யீர்த்து
மருவிய வீதி தோறும் வயவர்கா ரணமொன் றின்றிப்
பொருதொழில் செய்தும் பொல்லாக் கருமமே புரிகின் றாரால். (உ0)

காரிய மிலாமற் கண்ணீர் கவிழ்த்துநெட் டுயிர்ப்பாங் கங்குற்
பார்விளங் கனியை யுண்டு பகர்ததி பருகி வாய்கை
யார்தரக் கழுவ லின்றி யணையினிற் படுப்பர் பூசை
நேருறு மெலிபோ லேது மின்றியே நடுங்கி நிற்பார். (உக)

தேவரா லயங்க ளெல்லாஞ் சின்னபின் னங்கள் செய்வர்
பூவல யங்கள் போற்றப் புரிதவ முனிவர் சாலை
யாவையு மழிப்பர் பொல்லாச் சரிதையை யிழைத்து முன்செய்
தாவினற் கரும பூசை விட்டனர் தமுக னாளர். (உஉ)

வேறு.

வானவ ரியக்கர் வித்தியா தரர்கண் மன்றுகுய் யகர்கள் கந்திருவ
ருனமில் சித்கர் சாரணர் கெவுன ருரகரெண் டிசைதனி புரப்போர்
மோனநன் முனிவோர் மறையவர் முதலா மொழிந்திடு மானிட ருறையுந்
தானநா சங்கள் புரிந்துமன் னோர்க டம்முயிர்க் கிடுக்கணே புரிந்தார். (உங)

செய்தநீ வினையால் யாவரு நடுங்கித் திசைதிசை சென்றுசென் றடைந்த
கைதவர் கண்ணிற் கண்ணுறு தொதுங்கிக் கலங்கிநெஞ் சயர்ந்துமெய் சோர்ந்தாண்
டையமில் கோடி காலமீ டழிந்தேம் யாமினி யடைகுவ தெங்ங
னெய்தியா ரெம்மைக் காக்குந ரினியா ரென்றுபோக் கின்றியே திரிந்தார். (உச)

திரிந்துழன் றயர்ந்து தேவர்க டங்கோ னுறையிடந் தேடியே சேர்ந்து
புரிந்தமுப் புரத்தார்க் கேவலேபுரிந்தும் போற்றியு மிருப்பிட மிழந்தாம்
பரிந்துநீ யெம்மைக் காத்தரு ளென்று பரவியே பணிந்தன ரென்ன
விரிந்தநன் மகங்கள் விளைக்குமா தவர்க்கு விளம்பினன் சூதமா முனிவன். (உரு)

முப்பத்து மூன்றவது
துர்ச்சொப்பனதெரிசன வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். அசo.

முப்பத்துநான்காவது
பரமேசுரர் தோத்திர வத்தியாயம்.

சாங்கிய நூலின் யோகந் தவருரு தியற்றி மேன்மே
லோங்கிய வீடு நாடி யொருவனை மனத்தி னெண்ணித்
தீங்கறு முனிவர் தேவர் சிவனைத்தோத் திரம்பு ரிந்த
பாங்கினை யுரைத்தி டென்னப் பண்புறு சூதன் சொல்வான். (க)

முப்புரத் துள்ளோர் செய்யு முறைபிறழ் முரணுக் காகி
வெப்பொடுந் தன்பா லுற்ற விண்ணவர் யாவ ரோடு
மைப்புய லூர்தி நான்கு மறைபுகல் கமலப் புத்தே
ளெப்பொழு தினும்வாழ் சத்திய லோகத்தி னெய்தி னனுல். (உ)

முகையவிழ்ந் தலர்ந்த செந்தேன் மொய்த்துவண் டரற்றும் வாசத்
தகைபெறு கமல வீட்டிற் சதுமுகற் ருழ்ந்து கோர
மிகுபுரத் தசுரர் செய்யும் வெவ்விடர்க் கஞ்சி யெங்கும்
புகுமிட மின்றி வெய்ய புலியெதிர் புல்வா யொத்தேம். (ங)

செய்யுநற் கருமம் யாவுஞ் சிதைந்தன தினங்க டோறும்
வெய்யவன் கதிர்வெண் டிங்கள் விளங்குசஞ் சார மில்லைத்
துய்யபுத் தேளிர் வாழுஞ் சுடர்மணி யால யங்க
ளையமின் முனிவர் பன்ன சாலைக ளழிந்த வன்றே. (ச)

இப்பொழு தவுணர் வாணாட் கிறுதியை விளைத்தி டாயேன்
முப்புரத் தசுர ரெல்லா வுலகமு முடிப்பர் நீயின்
னொப்புறப் டைக்க வேண்டு முன்றிரு வருளி னாலே
தப்பியிங் கடைந்தே மெங்கட் குய்வகை சாற்று கென்றார். (ரு)

என்றலு மகவா னாதி யிமையவர் தம்மை நோக்கி
யொன்றுநீ ரஞ்ச லென்றே யுரைத்துட னபய மீந்து
கன்றிட லும்மை வாட்டுங் கருதலர் புரங்கண் மூன்றும்
பொன்றிடுங் கால மண்ணித் தென்றுபின் புகல்வ தானான். (சு)

மயன்வரங் கேட்கு ஞான்று வரமிகு புரமோர் மூன்றும்
வியனுறக் கூடும் போதில் விறலுடை யொருவன் கையிற்
செயமுறு பகழி யொன்றாற் சிதைப்பனேற் சிதைக்க வென்றா
னியலுக வவ்வா றேயென் றீந்தன மாகை யாலே. (எ)

புணரியி னெழுந்த கோரப் பொங்கழல் விடத்தை வாரி
மணிமிடற் றினில டக்கி வாழ்வித்த கருணை வள்ள
லிணையிலி யன்றி மற்ற வெம்மனோர்க் கியலா தென்றே
மணமலி கமலப் புத்தேள் வாசவ னமர ரோடும். (அ)

எழுந்துநற் பவளச் செங்காற் றோலடி யேமச் செம்பூங்
கொழுந்தனிச் சூட்டுச் சேந்த குமுதவாய்க் குலமீன் றுள்ளி
விழும்பயோ ததித்த ரங்க வெண்ணிறத் தன்ன மீது
செழுந்திருப் பொற்குன் றென்னத் திசைமுக னிவர்ந்து சென்றே. (கூ)

மதுமழை பிலிற்றி நாளு மடிந்திடா வாச மல்கும்
புதுநறுந் தாது சிந்துங் கற்பகப் பொதும்பர் மேவு
முதுமக பதிவிண் ணாடர் முதலினோர் சூழ்ந்து வாழ்த்தக்
சதுமென வைகுந் தத்திற் கண்ணனைக் கருதிச் சார்ந்தான். (க௦)

சங்கொடு திகிரி தண்டஞ் சார்ங்கங்கூ ரப்பொ டைந்துஞ்
செங்கையி னேந்தி ஞால மனைத்துமே சிறக்கக் காக்கும்
புங்கவன் பொன்னை மார்பிற் பொறுத்தவன் மணிச்செஞ் சூட்டுத்
துங்கவா ளரவப் பாயற் றுயில்பவ னடியிற் றாழ்ந்தே. (கக)

தானவர் புரங்க்ண் மூன்றுந் தவத்தினாற் பெற்று ஞாலத்
தேனைய வுயிர்கள் யாவு மிறந்திடச் செற்று விண்ணின்
வானவர் திசைகாப் பாளர் மகபதி முதல யாருந்
தீனரா யேவல் செய்யப் பணித்துமே சிறக்கின் றாரால். (கஉ)

சிறக்குமுப் புரத்தி லுள்ள திறன்மயன் வித்துன் மாலி
விறற்பெருந் தார காட்ச னிவர்கள்செய் வெம்மை யாலே
யிறக்குமிவ் வுலக மெல்லா மிவருயிர்க் கிறுதி யெண்ணி
யறத்தினை நிறுத்து கென்றே யயன்சொல வறைவான் மாயன். (கங)

முப்புரத் தசுரர் தம்மைப் புரத்தொடு முடிக்க வல்லோன்
செப்புறழ் கொங்கைச் செவ்வாய்ச் சேயிழை பாகங் கொண்ட
வப்புறை சடிலத் தெம்மா னன்றியார் முடிக்கற் பாலா
ரிப்பொழு தரன்பாற் செல்ல வெழுவதே கரும மென்றே. (கச)

பொன்னிறச் சிறகா லூழிக் காற்றையும் புடைத்திட் டண்டத்
தின்னிலை யதிர வானி னெழுந்துசெல் கலுழன் மீதின்
மன்னுபொன் மேரு மீக்கொண் மணிவரை விளங்கிற் றென்னப்
பன்னிய வயனொ டும்பர் பாங்குறப் படர்ந்தான் மாயன். (கரு)

வேறு.

மாயனங் குற்ற கயிலையின் சிறப்பு மணிமிட றிலங்கிய பெம்மான்
றூயகோ புரமுஞ் சினகர வளனுந் துலங்குசிங் காதன வழகுந்
தாயுமை பங்கன் றனையயன் முதலோர் சாற்றிய தோத்திரம் யாவு
மேயுற வுரைத்தற் கெம்மனோர்க் கரிதா மியன்றவா றொருவண மிசைப்பாம். (கசு)

தவளநீள் கோடு பற்பமே தாங்குந் தன்மையாற் றுனைநல் லருவி
திவடலா னிறத்தா லெழுந்துயர் வதனாற் செறிசுடர்க் கதிர்மணி யணியாற்
பவளவார் சடையோ னீலமா மிடற்றெம் பரம்பர னுவந்தினி தேறுங்
கவளமால் யானை தன்னையே நிகர்க்குங் கவினடை கைலைமால் வரையே. (கஎ)

ஒப்பினற் கதியைத் தருதலா லுயர்ந்தோர் தலைவணக் குற்றிடு மதனாற்
செப்புயர் சேணந் திகழ்தலாற் றண்வாய்ச் செறிநவ மணிக்கலி னத்தா
லப்பணி சடிலத் தவனுவந் தேறு மவிர்தரு சுவேதமாம் வேதத்
தப்பரி யாகும் பொற்புற நிவந்து தயங்கிய கயிலையாஞ் சயிலம். (கஅ)

கொடிமிடைந் திடலாற் றிகிரிசேர்ந் திடலாற் குலவிய வடஞ்செறிந் திடலாற்
பிடியிடக் கயத்தா லரம்பைசூழ்ந் திடலாற் பிளவில்பாக் கொடிஞ்சிசேர்ந் திடலாற்
கடிமத லையினொன் மிகுமறு குறலாற் கவின்பெற விளங்குபா குறலாற்
றுடியுறு கரத்தெம் பொருளிவர் தேர்போற் றுலங்கிடுங் கைலைமால் வரையே. ()

மதகரிக் குருளை வாய்மடுத் துண்ண வாளரிப் பிணைமுலை கொடுக்கு
நிதமுறு புல்வா யுடனள வளாவி நெடுவரிப் புலிவிளை யாடுங்
கதமெரி வெயிலுக் கெலியின மொதுங்கக் கட்செவிப் படநிழல் கொடுக்கும்
புதலுறு முயலி னுடனுறு செந்நாய் பூசலற் றேரிடம் பொருந்தும். (உ0)

இவ்வகைக் கயிலை வளனெலாந் தெரிந்தே யிமையவர் வித்தியா தரர்கள்
செவ்வழி யிராக முறைபிற ழாமற் றிவவியாழ் செங்கையா லுணர்ந்து
துவ்வமு தெனவே பருகுகந் தருவர் துகளறு சாரண ரியக்கர்
புவ்வநீ ருடுத்த ஞாலமா முனிவர் பாதலத் துறைதரு நாகர். (உக

அனைவரு நெருங்கிப் புடைவர முகைவிண் டலர்தரு நீழல்வீற் றிருந்த
வனைகழ லரசு மோதிமத் துவச வள்ளவாய் மலர்த்தவி சிருந்த
புனையுமுப் புரிநூல் விரிஞ்சனுங் கமலம் பூத்தொளிர் கருங்கட னிறத்து
நனைமலர்த் துளவ மாலையைத் தரித்த நனியிரு புயத்துநா ரணனும். (உ௨)

வேறு.

விரைசெறி நறுமலர் வாசம் வீசிய
நிரைதரு கற்பக முதல நீடிய
தரைபுக ழிமகிரித் தையன் மேவிய
நரைவிடை யோன்றிரு வாயி னண்ணியே. (உ௩)

நந்திதாள் பணிந்துயர் நண்ணுமா றெலாஞ்
சிந்தையி னோர்ந்தருள் சிவனுக் கோதென
வெந்தைதன் பதத்தினி தியம்பி மீண்டவன்
வந்தழைத் திடுவரன் முன்ன மன்னியே. (உ௪)

மங்கைதன் பங்குறை வள்ள லேசடைத்
திங்களங் கண்ணியாய் தேவர் நாயக
துங்கவே றுயர்த்தருள் சோதி யேகுழைச்
சங்கரா பொங்கரா வணிந்த தாணுவே. (உ௫)

கருணையோ ருருவெடுத் தனைய கண்ணுத
னிருமல மன்மத னீறு பட்டிடப்
பெருகழல் சொரிவிழிப் பிஞ்ஞ காநறை
மருமலர்க் கொன்றையாய் மறையி னாதியே. (உ௬)

வேறு.

அழிவிலா முதலே போற்றி யாருயிர்க் கருள்வாய் போற்றி
முழைபடு கிரீச போற்றி மூவிலைப் படையாய் போற்றி
தொழுமுமை பாக போற்றி சொன்னந்திக் கருள்வாய் போற்றி
தழனிற வண்ண போற்றி தனிப்பொறி விழியாய் போற்றி. (உ௭)

நாகவா பரண போற்றி நளிர்மதி மவுலி போற்றி
போகிகட் கெட்டாய் போற்றி புங்கமாம் வடிவாய் போற்றி
வாகுறு வரத போற்றி வளர்பசு பதியே போற்றி
சோகையோ டுறைவாய் போற்றி யென்றடி தொழுது போற்றி. (உ௮)

பவசரு வாய ருத்தி ராயசொற் பசுப தேய
சிவவர தாயவுக்கி ராயசீர் மகாதே வாய
வவிர்தரு கபர்த்தி னேவீ மாயதிரி யம்ப காய
வுவமையி லீசு ராய வுயர்வியாக் கிராய வென்றும். (உ௯)

இன்னண முதல வாய மந்திர மினிதி னோதிப்
பொன்னவிர் கமலப் புத்தேண் மான்முதற் புலவர் யாரு
மின்னவிர் சடையான் முளில் விரைமல ரால்ர்ச் சித்துப்
பன்முறை வழுத்தி யேத்திப் பணிந்தெழுந் தாடிப் போற்றி. (௩0)

வேறு.

அடியர்தம் பவமொழித் தருளி னோக்கியே
முடிவிலா முத்தியை யளிக்கு மூர்த்தியே
வடவைநேர் சலந்தரன் வலியை மாய்த்தெம
திடருறு பயந்தவிர்த் தினிது காத்தனை. (ருக)

படநெடும் பஃறலைப் பாம்பின் றும்பினைத்
தடவரை மந்தரஞ் சுற்றித் தாழ்கடற்
கடைபடு பொழுதெழு காள கூடமாம்
விடமிட றடக்கியெம் விளிவு தீர்த்தனை. (ரு௨)

கங்கையு மரவமுங் கதிர்வி ரித்தவெண்
டிங்களு மிதழியுஞ் சிறந்த வார்சடைப்
புங்கவ வெங்கரி யுரித்த புண்ணிய
வெங்கடு வினையினு லிடரின் மூழ்கினேம். (ருரு)

கோரமுப் புரத்தின்வாழ் கொடிய தானவ
ரீரமற் றிடுமனத் தினர்செய் தீமையாற்
பாரகம் விண்ணகம் பகரு மெத்தல
மார்பெருந் துயரொழித் தருளென் றேத்தியே. (ருச)

அங்கமா றடித்தல மமைத்துச் சென்னிமே
லங்கைகூர் தரமுகிழ்த் தருவி வார்ந்தென
வங்கணீர் சொரிந்தர கரவென் றூர்த்தவா
றங்குறை முனிவர்க்குச் சூத னுய்ந்தனன். (ருரு)

முப்பத்துநான்காவது

பரமேசுரர் தோத்திர வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். அஎரு.

முப்பத்தைந்தாவது

இரத நிருமாண வத்தியாயம்.

கக்குங் கதிர்வெண் பிறைமுடித்த கருணைப் பெம்மான் புரமெரிப்பத்
தொக்கங் கமர ரயன்முதலோர் சுழல்கா லிரத நிருமாண
மிக்கொன் றுலக மதிசயிப்ப வியற்றும் வகையை விளம்புகென
நக்கன் பதத்தைத் தொழு முனிவர் கேட்பச் சூத னவில்வானால். (க)

முக்கட் பெருமான் றனைநோக்கி முளரிப் பொகுட்டில் வீற்றிருக்கு
மைக்கட் கனிவாய் வெண்மூரல் வாணி கொழுநன் வானோருந்
துக்கக் கடலைத் தொலைத்தியெனச் சொற்று ரவர்க்குக் கருணையுடன்
செக்கர்ச் சடில னருள்புரிந்து திருவாய் மலர்ந்தே யினிதுரைப்பான். (௨)

உற்ற விடையூ றேதுமக்கிங் குரையீ ருமது மனமகிழ
முற்றும் வரங்கேட் டவையருள்வே மொழியீ ரென்ன முப்புரத்திற்
செற்ற மிகுவித் துன்மாலி தார காட்சன் சிறந்தமய
னற்ற நோக்கி யவர்பணிக்குங் குற்றே வலினா லலைந்துடைந்தேம். (௩)

மகவான் கயமு மதியயமும் வவ்வி யுயர்ந்த வானுலகு
மிகுநாண் மலர்ச்சோ லையுமழித்தார் மெலிந்தே முய்யும் வகைகாணேம்
டகைநீ தடிந்திங் கருளாயேற் பார்மே லுலகு முதல்யாவுந்
தகவே சிருட்டி செயவேண்டு மெனவே தாழ்ந்து சாற்றுதலும். (௪)

நும்மைப் பணிவோர் நமைப்பணிவோர் நுமது பகைஞர் நம்பகைஞர்
மும்மைப் புரத்தை யசுரருடன் முடிப வெரிப்போ மூதறிவால்
வெம்மைத் துயர மொழிந்திடுதிர் விளங்கு மாழித் தடந்தேரொன்
றெம்மைப் பரிக்கும் படிக்கமைத்திங் கெய்து வீரென் றியம்பினனால். (௫)

எம்மா னருளா லேழ்கடல்சூழ்ந் திலங்கும் புவிதே ரடித்தட்டாச்
செம்மா மேரு வதிட்டானந் திகழ்மந் திரமே ராய்ச்சிரவி
யம்மா மதிய முருளாழி யமர பக்க முதற்பக்கம்
விம்மா வொளிகொ ளிருநேமி விடம்வாய் கக்கு னாசுவதரன். (௬)

வருந்தட் சகன்சம் பளனிவர்க ணடுவிற் சுற்றும் வடம்புதன்மற்
றரும்பார்க் கவனங் கிரசசனி யங் காரகனின் னோர்வருகந்
திருந்து பணநா கங்களொரு மூன்றுஞ் சிகரிச் செழுங்குடங்கள்
பொருந்து திரைச்சா னுவிசிந்துச் சரயு புகழ்ச்சந் திரபாகை. (௭)

சரசு வதிகண் டகிவிகத்தி தயங்கு சீதை சத்துருவோ
டுரைசெய் விபாசை தேவிகைபே ருலகிற் சிறந்த விராவதியும்
புரையில் கணைசேர்த் திடுந்தூணி பொருந்து திருத ராட்டிரன்வெவ்
வரவிற் சிறந்த வாசுகியோ டயிரா வதன்கார்க் கோடகனும். (௮)

இவர்தங் குலத்திற் சனித்தகொலை நாகம் யாவு மெரிகணையோர்
கவர்கத் துருவின் றதசாமை கருதுஞ் சுரசை திருட்டனையிப்
புவியிற் சுசிவெம் பசிவாதை புகலும் பிரம கத்தியுட
னவையி லசுவக் கத்திகோ கத்தி நாட்டுங் கதைவடிவேல். (௯)

யோகம் யாக மூடன்சாதுர் வன்னஞ் சாதுர் கோத்திரமே
யாகு மறைமந் திரமுருக்க ளாதி யுகமே யருந்துவச
மேகுங் கவனப் பரிமறைக ளியற்று மன்ன தானமுத
லோகை பெறுதா னங்களெல்லா மூர்வெம் புரவிக் கணிகலனே. (௰)

சாரும் பதுமன் மாபதுமன் றருதட் சகன்கார்க் கோடகன்சீ
ராருந் தனஞ்ச யனும்புரவி யணைக்குங் கயிறோங் காரத்திற்
சேருஞ் சோமன் மத்திரிகை திகழு முபவத் திரமென்ன
வோருந் தனிமந் திரத்தோடு முரைதேர் பிறவாக் கியத்தோடும். (௧௧)

இட்டி யுடனே பசுபந்த மிவையாம் யாக வுபகரணங்
கட்டி யழுத்து நவமணிகள் கருதுங் குடிலை தார்க்கோலாங்
கொட்டு நுனியே வடிக்கார முளைக்கு மார்கை சினிவரலி
மட்டில் குகுவோ டனுமதியிந் நான்கும் வாசி நடத்துவன. (௧௨)

நிறமோ ரைந்துந் துகிற்கொடிக ணிகழ்த்துங் கால வுருத்திரன்றன்
திறமா ருருவ மாம்வருடஞ் சிலைமா துமையா ளுருவமெனு
மறமார் காள ராத்திரி யென் றுரைக்கு மாயை வரிசிலைநாண்
பொறையே தவிர்ந்த தானவர்முப் புரத்தை யெரிக்குங் கணைபுகலில். (௧௩)

திருமால் கணையக் கணையத்தனிற் சேர்க்கு மலகு திகழ்சோமன்
பொருகூ ரலகின் முகஞ்செந்தீ புகலு முனையில் விடங்கான்றங்
கொருவா திருந்து வாசுகியங் கொளியை வளர்ப்ப வமைத்தமரர்
கருவா ரிதியை யொழிக்குமரன் கமல பதத்திற் பணிந்துரைப்பார். (௧௪)

மூவா முதலே யெங்குறையை முடிக்கும் பொருளே நின்னருளா
லேவோ டரிய சிலைகதைவே லிரதம் பரிக ளிவையெனைத்து
மோவா தமைத்துக் கொடுவந்தே மொன்னார் புரங்க ளெரித்தெம்மைக்
காவா யென்ன வுளமகிழ்ந்து கருணைக் கடலங் கருள்புரியும். (௧௫)

அமைத்து நீவிர் கொடுவந்த வணியா ரிரத மற்புதமா
மெமக்கிவ் விரத நடத்துவதற் கேற்ற பாக னமைமினென
வுமைக்கோர் பாக னுரைத்திடலு மும்ப ருளத்தின் மலைவற்றுக்
கமைக்கோர் மேரு வெனும்பிரமன் கமல பதத்திற் பணிந்துரைப்பார். (௧௬)

மங்கை பாக னிவர்ந்துபுர மலைய வமைத்த மணித்தடந்தேர்த்
தங்கு பாக னாரென்னிற் றாமே நடத்து வேமெனலுங்
கொங்கு விரிகற் பகநீழற் குலவு மிமையோ ருளங்குளிரத்
துங்க நெடுந்தே ரேறியயன் றுரக நடத்துந் தொழில் பூண்டான். (௧௭)

பூண்டு மறையோன் பரிநடத்தும் பொழுதி னுவந்து பெருமானு
நீண்ட புவித்தேர் மீதேற நிகழ்த்தும் வேத முருநான்காந்
தாண்டு புரவி யுடனெளித்துத் தளர்ந்து முழங்கால் படிதாக்கிக்
கூண்ட தூளி முகம்போர்ப்பக் குப்புற் றயர்ந்து விழுஞான்று. (௧௮)

வேதன் பூட்டுங் கயிறிழுத்து விரைவிற் றூக்கிச் சிவனருளாற்
போதந் தெளிய வுபதேசம் புகன்றோங் காரத் தார்க்கோலா
லேதந் தவிரத் தூண்டுதலு மெழுந்து சண்ட வாயுவைப்போற்
சூத னினைக்கு நினைவின்முனந் துணைவிற் செல்லத் துவசத்தில். (௧௯)

இடப நந்தி யிருந்தார்ப்ப விரண்டா ழியையு மதருவ்வனே
டடலங் கிருத முனிவனினி தளிப்பச் சேட னனலிறைக்கும்
விடமங் கையினு லெடுத்திறைத்து விளைவி னேக வெங்கூற்றங்
கடவு மேதி தனில்வருணன் கதியிற் செல்லு மகரத்தில். (உ0)

மகவா னயிரா வதப்பிடரின் வருகு பேரன் மானத்திற்
குகவேள் வெற்றி மயூரத்திற் குலவி யிரதந் தனைப்புரந்தார்
பகவா னேவற் றிறனந்தி பகர்முத் தலைவேல் கரத்தேந்தித்
திகழ்தேர்ப் பின்ன ரிருபுறனுஞ் சிறப்பி னினிது காத்தனனல். (உக)

கனலி னுருவா மெனும்பூத கணங்கள் சூழ்ந்து முன்செல்லப்
புனித வசிட்டர் கௌதமர்நற் புலகர் பிரசே தனர்சொல்லற்
கினிய மரீசி புலத்தியரத் திரிநா ரதரங் கிராவுடன்ச
வுனகர் கிருது பருவதர்மே லுலப்பில் பரத்து வாசரின்னோர். (உஉ)

பெருமான் றன்னைத் துதிசெய்து பின்னே செல்லப் பெருந்தடந்தே
ரொருமா மேருச் சிறகரொடு மும்பர் மேற்சென் றெனச்செல்லக்
கருமே கம்போன் மேதிகள்போற் கரிய பகடு போற்கரிபோற்
பொருமா முகத்த பூதகணம் புடையி னெருங்க வுகாந்தத்தின். (உ௩)

இடியே றென்னக் கனைகடலோ ரேழுமொலிக்கு மிசையென்னக்
கொடியே றுடைய பிரானெடுந்தேர் குலவி வானத் திசைசெல்லக்
கடியே றியகற் பகநாடர் களித்துக் கமழ்பூ மாரிபெய்தே
யடிமேல் வணங்கி யரகரவென் றார்த்தா ரண்ட மதிர்ந்திடவே. (உச)

அதிர்தல் திசைகள் செவிடுபட வணிகொண் மணிக ளார்ப்பவைந்து
கதிக ளுடைய நால்வேதக் கலினப் புரவிப் பண்ணமைதேர்
விதிநல் வலவ னடாத்தவிளா விரதத் தடைந்தா ரெனமேன்மைத்
துதிகொண் முனிவர் முகநோக்கிச் சூத முனிவன் சொற்றனனல். (உ௫)

முப்பத்தைந்தாவது

இரத நிருமாண வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௬00.

முப்பத்தாறுவது

நாரதர் திரிபுரத்தில் வந்த வத்தியாயம்.

மாரத வருணனை வகுத்தல் கேட்டுளக்
கார்தம் படுத்தின மினிக்க டும்புர
நாரதன் புகுந்தமை நவிற்று கென்னவீ
ரோர்தர முனிவர்முன் சூத னோதுவான். (க)

ஆர்வலி மயனொடு தார காட்சனும்
போர்வலி வயவரும் புரத்தில் வண்மையா
யேர்பெறு மண்டபத் திருந்த காலையி
னாரத முனிவர னண்ணி னனரோ. (௨)

நண்ணிய முனிவனை வணங்கி நாஞ்செய்த
புண்ணிய மெனமயன் வழுத்திப் பூசனை
யெண்ணில வியற்றியெம் புரத்துக் கேதமா
யண்ணிய தீவினை யறைவன் கேட்டியால். (௩)

படமுறு கொடிகளும் பண்ணு தேர்களும்
புடவியின் விழவிழி பொருந்து போதினி
லுடலுறு கனவினிற் காணு மொண்பொரு
டிடமுறு நனவிலுந் திண்ண மாமரோ. (௪)

காற்றிலாப் பொழுதினிற் கட்டு கேதனம்
வீற்றுவீற் றுகவே முறிந்து வீழ்ந்தன
மேற்றல மேடைக ளிடிந்து வீழ்ந்தன
மாற்றலர் கொலையுறா வழங்கு மூரெலாம். (௫)

இப்படி காட்டுமுற் பாத மெங்கணு
முப்புர மிவைக்கினி முடிவு முண்டுகொ
லொப்பரு மிதற்கொரு கால மோர்கிலேன்
செப்பென முனிவரன் றேர்ந்து செப்புவான். (௬)

முறைகெட நீவிர்கண் முனிவர் தேவரைத்
தெறுதலி லவரெலாந் தேவர் தேவனுங்
கறைகெழு மிடற்றினன் கயிலை மேவியே
யறைதலு மவனவர்க் கபய மீந்துபின். (௭)

அவனியை யிரதமா யமைத்து மீக்கொடு
சிவனெழுந் தருளினன் றேவர் பூதரோ
டிவனுயர் பூசனை யியற்றி நீயருந்
தவமிகு நன்மையைச் சார்தி யென்றுமே. (௮)

புரப்பது முறையெனப் புகலு வார்சிலர்
நிரப்பிய பூசனை நீயு மைத்தருந்
திரத்துறச் செய்தியா லென்று செப்பியே
வரத்தருள் வானவன் பதத்தி லேகினன். (௯)

நாரதன் போயபி னவிலு வான்மயன்
வீரரை நோக்கியே வெம்மை கூர்தரு
போர்வலி யாற்றுதிர் பொருவி றேவரை
நேருதிர் வென்றிடி னிலைமை மேவியே. (௧௦)

விண்ணர சாளலா மன்றி வீந்திடி
னண்ணலாஞ் சிவபத மெனந வின்றினித்
திண்ணிய புரம்பல சென்றி டாதிவண்
கண்ணுறப் பொருந்துதிர் கடவுட் பூசனை. (௧௧)

முடிப்பனென் றேகியே முக்க ணாயக
னடித்தலத் தாமரை யகத்திருந் திந்தப்
படித்தலத் தருச்சனை பரிவி னாற்றமென்
கொடிக்கொரு பாகனுங் குழகன் றேன்றியே. (௧௨)

அஞ்சலை நின்னிடத் தருள்செய் வாமெனச்
செஞ்சடை முக்கணன் செப்பி யேகலும்
வஞ்சசர்க் கரசனு மயன்ம கிழ்ந்துபி
னெஞ்சுறு மிகுபய நீங்கி னானரோ. (௧௩)

நாரத முனிவர னவையில் பொற்புடைப்
போர்வலிக் கமைந்தவெம் பூதர் சூழ்தர
நீர்மலி வேணிய னிமலன் றேரொடுஞ்
சார்தரும் புகழினா விரதந் தன்னிலே. (௧௪)

சென்றனன் சேவடி சேவித் தேத்தியே
நின்றுமுப் புரத்திற னிகழ்த்தி னானென
வன்றுமா மனுவினுக் கறைந்த வண்ணமே
துன்றுமா முனிவர்க்குச் சூத னோதினன். (௧௫)

முப்பத்தாறவது

நாரதர் திரிபுரத்தில் வந்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௲௪௫.

முப்பத்தேழாவது

வித்துன்மாலிவத வத்தியாயம்,

சுத்தவீ ரர்க்குண்முன் சொல்லும் வீரனும்
வித்துன்மா லிப்பெயர் மேவுந் தானவன்
யுத்தமார் களத்திடை வீந்த தோதென
முத்தழன் முனிவர்க்கு மொழியுஞ் சூதனே. (௧)

திங்கள்வே ணியன்புவித் தேர்ந டாத்தியே
தங்கிய விளாவிர தத்தின் சார்புறத்
துங்கமா மேருவின் றென்மை யாமெனப்
பங்கமி லெண்டிசைப் பாலர் காத்தனர், (௨)

அவ்விளா விரதத்தி னமர்ந்து மாபலி
திவ்விய மகம்பல செய்து முற்றினன்
கவ்வைவெண் டிரைக்கடற் றுயிலுங் கார்முகி
லெவ்வகை யுயிரையு மிரங்கிக் காத்தனன். (௩)

தேவரு மவ்வயிற் சிறந்த மாக்களு
மேவருங் கடிமணம் வியந்து செய்தசீர்த்
தாவரும் புகழிளா விரதஞ் சார்ந்துதன்
னேவல்செய் கணங்களோ டிருந்து நாயகன். (௪)

சேயவ னந்தியிந் திரன்மு கத்தினை
யேயுற நோக்கியே யிணங்க லார்புர
மேயின கணத்தொடும் விண்ணு ளாரொடும்
போயடு படைகொடும் போர்செய் வீரரே. (௫)

பின்னணி யாகயா மிருந்து பேரணி
முன்னணிக் குதவியாய் முயன்று முப்புர
முன்னிய பூசமா யோகத் தோர்கணந்
தன்னிலோ ரிடத்துறுஞ் சமய நோக்கியே. (௬)

வெய்யவெஞ் சுடுசரம் விடுத்து வெந்திடச்
செய்குது நீவிர்முன் செல்க வென்றலு
மையனை வணங்கிவே ணந்தி யாயிரஞ்
செய்யகண் ணுனிவர் மூவர் செல்லவே. (௭)

வாயுவும் வருணனு மறலி யும்புகழ்த்
தேயுவு நிருதியுந் திகழ்கு பேரனு
மேயவீ சானனும் விளங்கு வாகனத்
தேயுறு சேனையொ டெதிர்ந்து சென்றனர். (௮)

மந்தர நிகர்புயம் வாய்த்த சங்கனுந்
தந்திர வலியுடைச் சங்கு கன்னனும்
பைந்தொடைத் திணிபுயப் பானு கம்பனும்
வெந்திறற் காளன்மா காள வீரனும். (௯)

கரிமுக மரிமுகங் கரத்தி னீண்முகம்
பரிமுக மயமுகம் பன்றி மாமுக
மெரிமுகம் புலிமுக மிரலை யின்முக
நரிமுகம் போன்முகப் பூத நாதரும். (௧௦)

மேருவை நிகர்த்திடும் வெற்பை வேரொடும்
பாருறப் பிடுங்கியே பந்த டித்துநீள்
வாருதி கலக்கிடும் வாகை வாட்படை
வீரரில் விளங்குவே தாள வீரரும். (௧௧)

மருத்துவன் வலியென மதித்த வாள்வலித்
திருத்தகு திணிபுயச் சிகர வெற்பினு
லுருத்தெழுந் தண்டகோ ளகையு டைத்திடுங்
கருத்துடைப் பிரமத கணங்கள் கூட்டமும் (௧௨)

புடைவர நந்தியும் போர்ருக் கேகலு
மடலுடைத் தானவ ரார்த்தெ ழுந்துவேற்
படைமழுப் படைபிண்டி பாலந் தோமரந்
தொடுசிலைக் கணைகளுந் தூரந்து சீறினர். (௧௩)

உலைவில்பல் கணங்கணே ருருத்துக் கைகளான்
மலைகளு மரங்களு மாயத் தானவர்
சிலைகளும் வாட்களுஞ் சிந்தச் சிந்தினு
ரலைகட லூழிநா ளார்த்த தென்னவே. (௧௪)

வேறு.

சங்கொடு தாரை சின்னந் தடாரிமத் தளமு டுக்கை
மங்குலின் முழங்கு பேரி காகளம் வலிய பம்பை
பொங்கிய முழக்கி னோடு போர்வலிப் பூதர் தேவ
ரெங்குநின் ரூர்க ளென்ன வெழுந்தனன் வித்துன் மாலி. (௧௫)

கார்வலிப் புழைக்கை நால்வாய்க் கவுண்மதக் களிநல் யானை
பார்மலி மலைக ளென்னப் பண்ணமை கொடிஞ்சித் திண்டேர்
போர்மலி கவன வேகக் கலினவாம் புரவி யோடு
மேர்வலி வயவ ரார்ப்ப வெழுந்தனன் தார காட்சன். (௧௬)

பண்ணுறு கலினப் பாய்மா பரந்தெழு திரைக ளாகத்
திண்ணிய மதமா வோங்குந் திமிங்கில கிலங்க ளாக
நண்ணிய தடந்தே ரெல்லா நடத்துறு நாவா யாக
மண்ணமை முழவுத் திண்டோள் வயவராங் கடல்கள் சூழ. (௧௭)

எரிமணிக் கவிகை யோங்க விரட்டுசா மரைகள் வீசப்
பரிசைவாள் தண்டங் குந்த முதலிய படைக ளேந்தி
வரிவளைக் குலங்க ளார்ப்ப மயனெனு மசுர வேந்தன்
விரிசுடர்ப் பருதி போல வெகுண்டுருத் தெழுந்தா னன்றே. (௧௮)

முந்திய தானை சென்று முரண்வலிப் பூத ரோடு
செந்தழல் விழிகள் காலச் செறிபடைக் கலன்கள் வீசிச்
சுந்தரத் தோள்க ளோடு தோள்புடைத் தார்த்து விம்மி
வெந்திறற் போர்கள் செய்து வீரமே விளைத்திட் டாரால். (௧௯)

வீரமே விளக்கு மந்தத் தானவர் வெம்போர் நோக்கிக்
காருறு மலைக ணீண்ட கணையமா மரங்கள் வீசி
நேருறு மவுணர் கையி னெடும்படைக் கலங்கள் பற்றிப்
போருறு மசுரர்ச் செற்றுப் போர்செய்தார் பூத வேந்தர். (௨௦)

எறிந்திடு மலைக ளெல்லா மெள்ளினுஞ் சிறிய வாகக்
குறைந்திடப் படைகள் வீசிக் குவித்தன ரசுரர் பூதர்
செறிந்திடு மசுரர் கையிற் சினவிய படைகண் முற்று
முறிந்திடத் தண்டால் வீசி முரண்மிகு போரி னேற்றூர். (உக)

அடுதிறல் புரியும் பூத ரமர்க்களத் தசுரர் தம்மைப்
படுகொலை புரிய வன்னோர் பரந்துநாற் றிசையி னோடக்
கொடுமரம் வளைத்து நீண்ட கொடுங்கணை கோடி கோடி
விடுதிறல் வித்துன் மாலி வெய்துயிர்த் தடர்ந்தா னன்றே. (உஉ)

அடர்ந்திடும் வித்துன் மாலி யருங்கணை யெய்யப் பூதர்
படர்ந்தெழு மலைகள் கையாற் பறித்தெறிந் திடலு மம்பாற்
றடிந்தவ ராகந் தன்னிற் சதகோடி பாணந் தூண்டிக்
கொடுஞ்சமர் விளைக்கப் பூதர் கூடுரு தோடி னூரால். (உ௩)

ஓடுறு பூதர் தம்மை நின்மினென் றுரைத்து நீவிர்
வாடுற லசுரர் சேனை மடிந்திடப் பொருது செந்நீ
ராடுது மென்று கர்ச்சித் தருங்கண நாதர் நின்று
கோடுறு சிலைநா ணேற்றிக் கொடுங்கணை சொரிந்திட் டாரால். (உச)

சொரிதலுஞ் சோரி யாறு துண்ணென வெழுந்து கைகா
லொருவிய தலைகண் மூக்கோ டுலப்பில கொணர்ந்து சென்றே
பொருதிரைக் கடலி னுப்பண் புகுந்திட வன்மீ னூதி
தெரிதர மச்ச மெல்லாந் தேக்குற நுகர்ந்த வன்றே. (உரு)

ஆனையின் சிரங்கள் கால்க ளதனுட லலங்கற் பாய்மா
மேனிமிர் தலைவால் கால்கள் விளங்குதிண் டேரின் வண்டி
வானுறு கொடிக டட்டு வகைவகை யறுத்து மிக்காந்
தானவ ரங்க மெல்லாந் தனித்தனி யறுத்திட் டாரால். (உசு)

தனித்தனி யறுக்கக் கண்ட தானவன் வித்துன் மாலி
யினிக்கணந் தாழ்க்க லேனென் றெதிர்ந்தொரு தண்ட மேந்திக்
குனித்திடு சிலையும் வாளுங் கொடுங்கணை யேந்து கையும்
வினைத்தலத் தடித்து வீழ்த்திக் கைவிதிர்த் துரைப்பான் மாதோ. (உஎ)

புலியின்முன் பசுக்கள் போலப் பொன்றிடா தோடி நீவிர்
பலியுணு மரனைப் போற்றிப் பாடுதிர் சுடலைக் காட்டில்
வலியவ ரசுரர் வேந்தர் மாய்த்துயி ருண்ப ரென்றே
யுலகமு மறியு நீவி ரொன்றுமே யறியா தென்கொல். (உஅ)

என்றுகைத் தண்டத் தாலே யிருங்கண நாதர் பூத
ரொன்றுவே தாள ரோடப் புடைத்தெதி ரொருவ ரின்றி
நின்றிடு வித்துன் மாலி தனைவிழி நெருப்புச் சிந்த
வன்றிற னந்தி நோக்கி வருதிபோர் மலைக வென்றான் (உகூ)

என்னுடன் பொருவா வென்றே சொலுமுன மிலங்கு தண்டான்
மன்னவன் றலையின் வித்துன் மாலிவந் தடித்த லோடு
மன்னிய மலேமே னின்றும் வழிந்திடு மருவி போலச்
சென்னியிற் சோரி வார நந்தியுந் திகைத்து நின்றான். (௯0)

அசைவிலா தயர்ச்சி யெய்தி யரியநந் திப்பி ரான்முன்
வசையுறு மதுவாற் பட்ட மாலென மயங்கி நின்ற
னிசமுறு கணங்கள் பூதர் நேர்ந்தெதிர் பொருந்தி டாமற்
றிசைகெட வித்துன் மாலி யடித்தனன் றெழுந்த நந்தி. (௯௧)

கண்விழித் தயர்வு நீங்கிப் பார்த்திடிற் கணங்க டேவ
ரெண்ணுறு திசைக ளோடி யிரியல்போய் வித்துன் மாலி
நண்ணுபோர்க் களத்திற் சிங்க நாதமே செய்து நிற்குந்
திண்ணிமை மிக்கு நீண்ட வரையொன்று தெரிந்து வாங்கி. (௯௨)

விடுத்தலும் வித்துன் மாலி வியன்கதை தன்னு லேற்றுத்
தடுத்தலுங் கதையை நூறித் தலைமுகம் புயத்திற் றாக்க
வெடுத்தடி வையா வண்ண நின்றன னிமையோ ரார்ப்ப
மடுத்திறந் திட்டா லென்ன வார்ந்தது சோரி நீத்தம். (௯௩)

வாய்வழி சோரி கால நின்றவன் மறுத்துஞ் சீறிக்
காய்கதிர்ச் சூல மொன்று விடுத்தலுங் கடிந்து நந்தி
தேயுவி னுருவ மான சிவனருள் கின்ற மேன்மைத்
தூயவச் சிரத்தை விட்டுத் துணித்திடு தலையை யென்றான். (௯௪)

முத்தின்மா மணிக ளோடு முயங்கும்வச் சிரத்தா லந்த
வித்துன்மா லியைத்தான் வீட்ட வீழ்ந்தனன் மலைபோல் விண்ணோர்
கொத்துறு பூவின் மாரி நந்திமேற் சொரிந்தே யார்த்தார்
பத்திகூர் கணங்கள் கூடி நந்திதாள் பணிந்திட் டாரால். (௯௫)

இவ்வகை தெரிந்து தார காட்சனங் கெதிர்ந்து தேவர்
தவ்வலில் களிப்புந் தங்கள் சேனையின் றளர்வும் பார்த்துத்
திவ்விய கணையின் மாரி சிந்தியே தேர்மேல் வந்து
கவ்வைநீர்த் தடத்தி யானை புகுந்தெனக் கலக்கி யார்த்தான். (௯௬)

ஆர்த்தவன் கணைக ளேவி யருங்கண நாதர் தேவர்
தார்த்தடத் தோளுந் தாளுந் தலைகளுந் துணிப்பச் செந்நீர்
கூர்த்தெழு நீத்த மாகிக் குனிதிரை கொழித்து வாரி
சேர்த்திடக் கண்டு தேவர் கோனெடெண் டிசைகாப் பாளர். (௯௭)

பெருத்ததிண் சிலைவ ளைத்துக் கணைமாரி பெய்து மிக்காத்
திருத்துபோர் செய்யத் தார காட்சன்வெஞ் சினத்த னாகி
யொருத்தர்மேற் கோடி கோடி யொண்கணை யேவி யார்ப்ப
மருத்தனக் கினியீ சானன் வருணன்வா னிருதி யோடும். (௯௮)

இந்திர னியம னோடு மிலங்கிய குபேரன் மிக்காந்
தந்திரப் பூதர் சேனைத் தலைவனுஞ் சங்க கன்னன்
வெந்திறற் கண்டா கன்னன் வெற்றிமா காளன் காளன்
முந்துறு பானு கம்பன் முரண்மிகு வாண னின்னோர். (௩௯)

அடுபடைக் கலன்க ளேவி யசுரர்தஞ் சேனை மாளப்
படுகொலை மிகவுஞ் செய்தார் பகர்ந்திடு தார காட்சன்
கொடுமரம் வளைத்து மேகங் கூர்மழை பொழிந்தா லென்ன
விடுகணை மாரி சிந்தி வெய்யபோர் விளைத்திட் டானால். (௪0)

மாயைகண் மிகவும் வல்ல மயனழல் வாரி வாயுக்
காயரி முதலை பாம்பு கார்வரை புண்ட ரீக
நாய்நரி யெண்கு பட்சி நவையிலா மாவெண் சாலி
னேய்வுறு சரப மேக மெனப்பல வடிவ மாகி. (௪௧)

தேவர்கள் கணங்கள் பூதர் சிதறிடப் பொருத போதி
னேவரு மெதிர்நில் லாம லிடைந்துநீக் கொதுங்கக் கண்ட
பாவழல் வருணன் வாயுப் பாகசா தனன்கு பேரன்
மூவரின் முதல்வற் போற்று முரண்வலி நந்தி யெம்மான். (௪௨)

மயன்விடு மாயை யாவு மங்குற வடித்தே யொன்னார்
பயமுறப் பொருத ஞான்று பாயிருட் படலம் போர்க்குங்
கயவர்தம் மனம்போ லோங்குங் காயிருட் கணையை யேவச்
சயமுறு மிரவி பாணஞ் சதக்கிரு தேவி னானால். (௪௩)

சதக்கிரு தேவு பாணந் தயங்கிருட் படலஞ் சீத்தப்
புதத்தெழு மிரவி போலப் புகழொளி பரப்பப் பூதர்
மதத்தவா னவர்கள் கூடி மாற்றலர் படையை யெல்லாஞ்
சிதைத்தன னன்ன மட்டுஞ் சிங்கநா தங்கள் செய்தார். (௪௪)

சிங்கநா தங்கள் கேட்டுச் சீறியே தார காட்சன்
றுங்கமார் மயனுங் கூடிச் சொரிந்தன ரப்பு மாரி
பங்கமில் காலன் றண்டம் பாணியில் வருணன் பாசஞ்
செங்கையிற் குபேரன் றண்ட மிவற்றினாற் றெறுபோர் செய்தார். (௪௫)

போர்செய்த தார காட்சன் பொருதிறன் மயனுஞ் சீறித்
கார்முகி லென்ன வார்த்துக் கணங்களோ டமரர் கூட்டஞ்
சேரவெண் டிசையி னோடச் சேவலங் கொடியோன் வெற்றி
யேர்மயி லுகைத்து வாளி யிடையறு தேவ லோடும். (௪௬)

தானவர் தலைவர் கோடி தாண்டடற் பரிகள் கோடி
யானையின் றொகுதி கோடி யடுதிறல் வீர ரேறு
வானுயர் தடந்தேர் கோடி வதைத்தனமே வாரம் பொன்றுற்
சேனைகா வலன்வின் மேன்மை யாவரே தெரிக்க வல்லார். (௪௭)

சிலர்களைச் சென்னி வீழ்த்துஞ் சிலர்களைக் கரத்தை வீழ்த்துஞ்
சிலர்களைச் செவியை வீழ்த்துஞ் சிலர்களை மூக்கை வீழ்த்துஞ்
சிலர்களைக் காலை வீழ்த்துஞ் சிலர்களை நாவை வீழ்த்துஞ்
சிலர்களை யுடலை வீழ்த்து மோரம்பின் செய்கை யீதால். (சஅ)

கைமலைக் கரங்க ணீக்கிக் காலொரு நான்கு நீக்கிப்
பொய்யுறு மனத்த ராம சுரர்தமைப் பொன்றச் செய்துங்
கொய்யுளைப் பரிமா வாவி குலவிடா துண்டு மாற்றார்
வெய்யதோர் பொடியாய்ச் செய்து மீளும்வெம் பகழி யொன்றே. (சகூ)

முருகவே டொடுக்கும் பாண முனமெதி ரசுர ரோடு
திருகுவெஞ் சினத்தி யானை தேரடற் பரிமா யாவு
மருகுற லின்றிச் சின்ன பின்னமா யறுக்கக் கண்டு
பொருதொழில் பூண்ட தார காட்சன்வெம் போரி லேற்றான். (ருo)

போந்தவன் கோடி கோடி பொருகணை சிந்தச் செவ்வேள்
காந்துவெங் கணையொன் றாலே யவையெலாங் கடிந்தன் னோன்கை
பேதுங்வில் லாதி யான படையெலா மறுத்து வீழ்த்தித்
தேந்துண ரணியன் மார்பஞ் சேர்த்தின னம்பு கோடி. (ருக)

கோடியம் பகன்ற மார்பிற் குளித்தலு மயர்ச்சி யெய்தி
வாடுறு தார காட்சன் முகமய னோக்கிச் சொல்வா
னோடியே புரத்திற் சென்றிங் குறுதுய ரொழித்து மீண்டு
நாடியித் தேவர் சேனை கொல்லுது மெனாநின் றான். (ருஉ)

என்றலு மசுரர் சேனை யிருவர்தம் மிடத்திற் சுற்ற
வன்றிறற் புரத்தின் மேவி வாயிலா ளோடிச் சுற்றுங்
குன்றென நிமிர்ந்த தோளார்க் கூவியே காக்கச் சேர்த்திப்
பொன்றிகழ் கோயில் புக்குப் பொருமுடல் வருத்தந் தீர்ந்தார். (ருரு)

மயனடற் றார காட்சன் புரத்திடை வதிந்தா ரோடிப்
புயவலி வித்துன் மாலி பொன்றினன் பொன்றி டாத
தயவின்மற் றசுர ரெல்லாந் தனித்தனி யிரியல் போனார்
செயநமக் கென்று தேவர் சிங்கநா தங்கள் செய்தார். (ருச)

வெற்றிவார் முரசி னார்ப்பும் விளங்குவெண் சங்கி னார்ப்பும்
வற்றிடாக் கடலே போல வானவ ரார்ப்பும் பூதர்
சுற்றுநின் றார்க்கு மார்ப்புஞ் சூழ்திசைப் பால ரார்ப்பு
முற்றுறு மசனி போல முழங்கின வென்றான் சூதன். (ருரு)

முப்பத்தேழாவது

வித்துன்மாலி வத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கூஎo.

முப்பத்தெட்டாவது

தயித்திய சேனாபங்க வத்தியாயம்.

குயிற்றிய மணிநீண் மாடங் குலவுமுப் புரத்து வீர
தயித்தியர் சேனா பங்கந் தனைவிரித் துரைத்தி டென்று
பயிற்றிய வேத மோது முனிவரர்ப் பார்த்து மின்னின்
வெயிற்றிகழ் சடிலச் சூத முனிவரன் விளம்பு மன்றே. (௧)

மயனுடல் வருத்த மாறி வாளரி யணையின் மேவி
யயலுறு மசுரர்ப் பார்த்தே யட்டதிக் கிறைவ ரோடும்
புயனிற வண்ணன் றானும் போர்செயற் கரிய செய்தான்
சயவலி யினையெண் ணாது தனித்தொரு கணநா தன்றான். (௨)

போர்வலி வித்துன் மாலி பொன்றிடப் புரிந்தா னென்னிற்
காருறு வானத் தேகுங் கடும்புர வினைய மென்கொ
லூருறு புயத்தின் வீரந் தானென்கொ றவந்தா னென்கொல்
பேருறு மகிழ்ச்சி யென்கொல் பெட்பென்கொல் வரந்தா னென்கொல். (௩)

புரநமைக் காக்கும் பொற்பும் புரத்தினை நாமேகாத்துத்
திரமுற வளிக்கும் பொற்பு மித்திறச் செய்கை யாளன்
முரணரண் மிகவுண் டேனா மூவரின் முதல்வ னாகு
மரனரு ளின்றே யாகி லாவது மில்லை யென்றான். (௪)

இப்புரங் களையே வெல்ல வெவருள ரெழுதா வேதஞ்
செப்பிய முதல்வ னாய சிவனன்றி முடியா தந்த
வொப்பிலா னுயர்தே ரேறி புருத்தன னம்மே லென்னிற்
றுப்பினால் விதியை வெல்லத் துணிந்திடல் செய்கைத் தாமோ. (௫)

தேவரெண் டிசைகாப் பாளர் திறத்தினை யுரைக்கி னம்போன்
மாவலி யிலரான் மேலோன் மகேசுர னவனைப் போற்றி
மேவிய வசுரர் சேனை வீந்தவை மீட்டுண் டாகப்
பாவகத் தமுத வாவி பரிவொடு படைப்பே னென்றே. (௬)

மனத்தினி னினைத்து மாய விஞ்சைகள் பலவும் வல்ல
சினத்தடன் மயன்றா னென்றுஞ் சிவனையே யுளத்திற் போற்றிப்
புனற்றகை யுறவே யாழ்ந்து பொருந்தியோ சனையி ரண்டென்
றுனத்தகு நீள மற்றை யகலமோர் யோச னைத்தாய். (௭)

தாமரை நெய்த லாம்பல் காரண்டந் தாரா வன்னந்
தோமறு மச்சம் வன்மீன் றொடுத்திடு மமுத வாவி
காமுறச் செய்து வித்துன் மாலிதன் காயந் தோய்க்க
வேமுறு வித்துன் மாலி யெழுந்தனன் சீற்றம் பொங்க. (௮)

எழுந்துடன் ஞூர காட்சன் மயனுறு மிடத்திற் சென்று
கொழுங்கன லுருவ மாய கொடுஞ்சின நந்தி யெங்கே
விழுங்குவேன் விழுங்கு வேனென் றுருத்தலும் வியந்து மார்பத்
தழுந்துற வணைத்துப் பின்னர் மயனெனு மசுரன் சொல்வான். (கூ)

நின்னையே யன்றி வாழும் வாழ்க்கையி னிலைமை யென்கொ
லென்னிருந் தவத்தி னாலு மியன்மாயா பலத்தி னாலுங்
கன்னியோர் பாகன் முன்னங் கருணைசெய் வரத்தி னாலு
நன்னலம் பெறவே யிந்த வாவியா னயந்து செய்தேன். (கo)

செய்பல னடைந்தே னிங்கே தரித்திரன் செய்பொன் வைப்பை
யுய்வதற் கடைதல் போல வுன்னையா னடைந்தே னென்று
வெய்யயோ சனையி ரண்டாய் மிகவுநீண் டகலந் தானுந்
துய்யதோர் யோச னைத்தாய்த் துலங்கிய வமுத வாவி. (கக)

தன்னிலே முன்னம் வாய்ந்த தானவர் தம்மைத் தோய்மி
னென்னவப் படியே தோய்க்க வெழுந்தனர் மாண்டோ ரெல்லாந்
துன்னிய வீர பேரி துவைத்தலை கடலி னார்த்து
மன்னிய பூதர் முன்பு வந்துவெஞ் சமரி லேற்றார். (கஉ)

மாண்டவ ரெழுந்து போர்க்கு வருகவென் றழைக்கு முன்னங்
கூண்டமுப் புரத்துய் வுற்றார் குழுமியே யுடன்வந் தார்த்துத்
தாண்டும்வெம் புரவி யானைத் தடநெடுந் தேர்க ளேறித்
தூண்டும்வெம் பகழி சாபஞ் சுடர்ப்படைக் கலங்க டாங்கி. (கஙு)

தானவர் போர்வெம் பூதர் தம்படைக் கதிப னாகு
மேன்மைசேர் நந்தி யெம்மான் விளங்கிய கருட யூக
மானதை யமைத்து நின்று னசுரர்யாம் வீரர் யாரு
மானவேற் றூர காட்ச னுடனணி வகுத்து வந்தார். (கச)

வந்ததா னவர்வெஞ் சூல மழுவெழுச் சக்க ரங்கள்
சிந்திட வமரர் சேனை சிரங்கரஞ் சிதைவு பட்டுப்
பந்தியின் வீழச் சோரி பாரிட நிறையப் பூதர்
வெந்திறற் கதைசு ழற்றி வீழ்த்தின ரசுரர் சென்னி. (கரு)

வீழ்ந்ததா னவரை யெல்லாம் விறன்மய னமுத வாவி
யாழ்ந்ததண் புனலி லாட்ட வாவியோ டெழுந்து மீண்டு
சூழ்ந்தவெம் போரி லேற்பத் தொடங்குமுன் னொருவ னென்றுந்
தாழ்ந்திடாப் பலத்தி னேடுந் தங்குலத் தவர்க்குச் சொல்வான். (கசு)

தானவர் தம்மைப் பார்த்துச் சமரிடை மடிந் துவானிற்
போனவ ரெல்லா நங்கள் புரத்துறு மமுத வாவி
நானநீ ராடி மீண்டு நல்லுயிர் பெற்றுப் பூதர்
சேனையோ டெதிர்ந்து வெம்போர் செய்வதற் கமைய லுற்றார். (கஎ)

முன்னம்யான் வந்தே னாவி முடியுமென் றஞ்ச னீவி
ரென்னலுங் கணநா தர்க்கு ளியம்பிய சங்க கன்னன்
பன்னிய மொழிகே ளாமுன் பரமன்றன் பதத்தி லன்னோன்
சொன்னவை யெல்லா மன்பிற் றுரைகைபெறச் சொல்லிப் பின்னும். (௧௮)

பிழைத்திடு மசுர ரெல்லாம் பெரும்படை யோடுங் கூடி
யழைத்துநங் கணங்க டம்மை யணுகிவந் தார்த்தா ரென்ன
வுழைத்தடங் கரத்து வள்ளல் கேட்குமு னென்னார் சேனை
மழைத்தடங் காரி னார்த்து வளைத்தது மணிப்பொற் றேரை. (௧௯)

முரணுடைத் தார காட்சன் முதன்மைசேர் வித்துன் மாலி
வரமிகு மயனிம் மூவர் வருசது ரங்க சேனை
பரவிய தேவர் சேனை பதைத்திடச் சிதைத்து மிக்கா
மரணிவர் தேரைச் சுற்றி யார்த்தெதிர் பொருதா ரன்றே (௨௦)

போர்செயும் வேளை யந்தப் புவிநெடுந் தேர்ந டாத்தத்
தேர்நடந் திடாம லச்சுச் சிதைந்திடத் திருமா லங்க
ணோர்வலி யிடப மாகி யிணைவலி மருப்பி னேந்திப்
பாருறு தடந்தேர் மிக்காய்ச் சென்றிடப் பணிந்திட் டானால். (௨௧)

இடபமா வேந்து பொற்றே ரிடம்வல மெய்ப்பு ருமற்
கடிதினி லேகத் தேவர் கணங்கள்போர் புரியக் கண்டு
தடவரை திரண்ட தென்னத் தடம்புயத் தார காட்சன்
றிடமுறு கரத்திற் றண்டாற் றிசைமுகற் புடைத்தா னன்றே. (௨௨)

புடைத்திடல் சென்னி தாக்கப் பொருவருஞ் சோரி நீத்த
மடைப்பெரும் புனலி லோட மறையவன் மயங்கித் தன்கை
யுடைப்பெருங் கோலைத் தேர்த்தட் டுறவயர்த் திருத்த லோடுங்
கடக்கரி யுரித்துப் போர்த்த கருணையங் கடவுள் கூர்ந்தே. (௨௩)

அருளினா லயர்ச்சி நீக்கி யரியவேற் றரியை நோக்கப்
பொருமனத் தெண்ணந் தேர்ந்து புரத்திடைப் புகுந்து மிக்காம்
விரிபுன லமுத வாவி விளைபுன லெல்லா மாந்தித்
தெருளுடைப் பரமன் கையிற் றிரும்பியும் வாளி யானான். (௨௪)

வீந்ததா னவர்கள் கூட்ட மீட்டுயி ரெய்தி டாமன்
மாய்ந்திட வசுரர் சேனை குறையவு மயன்வெம் போரிற்
காந்துவெங் கணைக ளேவிக் கருமுகி லென்ன வார்த்தா
னாய்ந்தபோர் வித்துன் மாலி யடுகணை மாரி பெய்தான். (௨௫)

புயவலித் தார காட்சன் பொருபடை யெறிந்து சீறிக்
கயமொரு கமல வாவி புக்கெனக் கலக்கி யார்த்தான்
வயவராந் தேவர் பூதர் வளர்திசைப் பால ரோடுஞ்
சயமிகு குகனுந் தொட்ட சரங்களாற் றறுக ணாளர். (௨௬)

சரந்திகழ் கைகா றிண்டோ டலைசெவி மூக்கு நாக்கோ
டரந்தொடை சிதறி வெவ்வே றேங்கலாய்க் குவிய வொன்னார்
புரம்புகுந் திட்டாற் றங்கள் புரம்பிழைத் திடுமென் றெண்ணிப்
பரந்துமுப் புரத்தி னூடும் பயத்தொடும் புகுந்தா ரன்றே. (௨௭)

வெற்றிவேற் குமர னாதி விண்ணவர் திசைகாப் பாளர்
சுற்றுறு கணங்கள் பூதர் சொல்லும்வே தாள ரோடும்
வற்றுறுக் கடலி னார்த்து வளையொலி சிங்க நாதம்
பற்றிய வோசை விண்மேற் படர்ந்திடச் செய்து பின்னர். (௨௮)

முக்கணெம் பெருமான் பாத முளரிநாண் மலரின் மீது
தக்கமா மலர்க டூவித் தனித்தனி துதித்தா ரென்னச்
செக்கர்வான் சடில மோனத் திருமுனி வரரை நோக்கி
மிக்கதோர் தவத்துச் சூத முனிவரன் விளம்பி னானல். (௨௯)

முப்பத்தெட்டாவது

தயித்திய சேனாபங்க வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௧௧௧.

முப்பத்தோன்பதாவது

திரிபுரஞ்

சமுத்திரத்திலோடிய வத்தியாயம்.

எப்புவ னங்க ளெல்லா மியங்கிப்பல் லுயிர்செ குக்கு
முப்புரங் கடலி னுப்ப னொளித்தமை மொழிதி யென்றே
துப்புறு சவுன காதி தொன்முனி வரர்கள் கேட்ப
வப்புவே ணியனைப் போற்றி யருந்தவச் சூதன் சொல்லும். (௧)

பொருங்கண நாத ராலே போரிடைப் புறந்தந் தோடி
வருந்திறல் வயவ ரான தானவர் வதன நோக்கிக்
கருங்களி றனைய சீற்றக் கனல்விழி மயனோர் சொல்வா
னிரும்புபொன் வெள்ளி யாலே யியற்றுமுப் புரங்கண் மூன்றும். (௨)

தேவர்கோன் விண்டு வாலுஞ் செயங்கொளற் கரிய வாகிப்
பாவக மாக வொன்றோ டொன்றுறு வலகப ரந்து
யாவர்தம் புலனுஞ் செல்லா விருங்கடிப் புரங்கண் மூன்று
மூவரி னொருவ னகு முக்கணன் கணங்க ளாலே, (௩)

தலைதடு மாற்ற மாகத் தருகணஞ் சேனை யோடு
நிலைகெட முரிந்த நீவிர் நினைந்துள கருமம் யாது
வலியுடைத் தவர்க ளேனும் வரும்விதி வந்த ஞான்றே
யுலகினி னெவற்றி னானு மொழித்திடற் பால தாமோ. (ச)

என்றுள முடைந்தா லோசித் திறைமய னிருக்கு ஞான்று
குன்றுபோ லிடப மொன்று குறுகிநம் மமுத வாவி
துன்றுநீர் முழுது மார்திச் சுவறிடச் செய்த தென்று
வன்றிறற் காவ லாளர் வந்துமுன் னுரைத்தா ரன்றே. (ரு)

உரைத்தலும் பசும்புன் மீதி லொழுகுசெந் தீயிற் காய்ந்த
வரத்தினைச் செலுத்தல் போல வயர்ந்துதா னவரை நோக்கி
மரித்தவர் பிழைக்கச் செய்த வாவிநீர் வறந்த தென்றாற்
புரத்தினு மிருந்து வாழ நினைப்பது புதுமைத் தாமால். (சு)

மாயையின் வகுத்த வாவி வயின்வரு புனற்கண் ணூற்று
மாயவ ருண்ண வல்லார் மாயையின் புணர்ப்பெல் லாந்தேர்
மாயனே வந்தா னாக வுண்டதா மமதை யானு
மாயறி விழந்தே யீசன் பூசையும் வழுவி னேமால். (எ)

ஆதலாற் புரங்கண் மூன்று மழிவது திண்ண முன்னாள்
வேதியன் சொற்ற கால முற்றதாம் விண்ணோ ராதி
யேதில ரறியா வண்ண மிருங்கட லுப்பண் யாமும்
போதுமுப் புரங்க ளோடும் புகழிலா விரதந் தன்னில். (அ)

மலையில்லை வனங்க ளில்லை மழுவலா னுருக்கில் வேறு
நிலையில்லை யாத லான்முந் நீரிடைப் புகின்மூ விஞ்சிக்
கலைவிலை யொருகா லத்து மமரரா னமக்கு வாழ்நா
டுலைவிலை யினிவா னோர்க்குத் தோற்றிடா வகைசெல் கேமால். (கூ)

எனமய னுரைத்த மூன்று புரத்தொடு மேகி மேல்பாற்
புனன்மிகு கடலிற் புக்கான் புக்கவா றறிந்து நெற்றிக்
கனல்விழி யண்ண றேரிற் பாகனுங் கமலத் தோனைத்
துணைவினி னடத்து தேரென் றுரைத்திடச் சுருதி வல்லோன். (கo)

வாகுறப் பிடித்து வேத வாசியை நடத்த மிக்காம்
வேகமொ டெழுந்து விண்ணில் விண்ணவர் கணங்கள் சூழப்
பாகுறு படகம் பேரி பண்ணமை முழவுத் தாரை
நாகுதண் ணுமையு டுக்கை நவுரிகா களங்க ளார்ப்ப. (கக)

குடதிசை நோக்கி யேகும் போதினிற் குழகன் முன்ன
ரடுதிறற் குமர னந்தி யமரர்கோன் றன்னை நோக்கித்
திடமிகு வித்துன் மாலி மயன்றிறற் சூர காட்சன்
கடலிடைப் புகுந்தார் நம்மைக் காண்டலும் வெளிவந் தேற்பார். (கஉ)

வற்றவர் தம்மே னீங்க ளெரிகணை சிந்தி வெம்போ
ராற்றுதிர் யாமும் பின்பே ரணியினி னின்றே யும்மைப்
போற்றிமுப் புரத்திற் செந்தீப் புகுந்திடப் புரிது மென்று
நீற்றொளி பழுத்த மேனி நிருமல னருளிச் செய்தான். (கங)

நிருமல னருளிச் செந்தி னிலைபெறு குமர வேளுந்
தருநிழ லமர்ந்த கோவுந் தகுதிசைப் பாலர் தாமும்
பெருவலி நந்தி யோடும் பிரமத கணங்கள் சூழப்
பொருதொழின் மனங்கொண் டேகி மேற்கடற் புறத்திற் சார்ந்தார். (கச)

சார்தலுஞ் சிங்க நாதம் வெற்றிவெண் சங்க நாதங்
கூர்செவி மடுத்து நீரிற் குலவிய வசுரர் யாரும்
பேரமர் விளைக்க வந்தேம் பின்னிடேம் பின்னி டேமென்
றூர்வலி யூகத் தோடு மமரினுக் கெதிர்வந் தேற்றார். (கரு)

எதிர்த்திடு மசுர ரோடுந் தேவர்போ ரேற்றா ரென்னக்
கொதித்தெழு மதுவைச் செற்ற கோவிந்தன் மச்ச ரூபத்
துதித்துமுன் மனுவுக் கோது முண்மையைத் தவங்கள் யாகம்
விதித்திடு முனிவர் கேட்ப விளம்பிடுஞ் சூதன் மாதோ. (கசு)

முப்பத்தோன்பதாவது
திரிபுரஞ் சமுத்திரத்தி லோடிய வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். கoகரு.

நாற்பதாவது

தாரகாட்சன் வத வத்தியாயம்.

கறுவிமுன் னெதிர்ந்தே பொன்னா ருயிருணுங் கால னாகுந்
தெறுசினத் தார காட்சன் வதத்தினைச் செப்பு கென்றே
யறுதொழின் முறைவ ழாத வருந்தவ முனிவர் கேட்ப
மறுவறு புராணச் சூத முனிவரன் வழங்கு மாலோ. (க)

ஏற்றெழு மசுரர் கையி லிலங்குவிற் சிறுநா ணோசை
கூற்றெனக் குமுறு மோதை குலவுவாத் தியமு ழக்கந்
தேற்றுதே ரரவம் யானைத் திழனிவெம் பரியி னார்ப்பு
மேற்றிசைக் கடலி னுப்பண் மிக்கெழுந் திசைத்த மாதோ. (உ)

வயவலி யசுரர் பூதர் வருங்கண நாதர் மிக்க
புயமுறத் தனுவை வாங்கிப் பொழிகணை மாரி சிந்திச்
செயமுற வடர்ந்து தத்தஞ் செவ்வித மதுக்கிச் சீறித்
துயரறு மாண்மை காட்டித் தொந்தயுத் தங்கள் செய்வார். (ந)

வேல்கணை முசுண்டி வெவ்வாள் சக்கரம் விளங்கு பிண்டி
பாலநற் சுரிகை குந்தம் பகர்சிலை வயங்கு மாழி
சூலநல் லெழுக்கூர் தோட்டி தோமரங் கவண்கை யம்போ
டேலுறச் சிதறிச் சீறி யிரைந்துதானவர்க ளார்த்தார். (ச)

ஆர்த்ததா னவரைச் செவ்வே எட்டமா திக்குப் பாலர்
கூர்த்திடு நந்தி யெம்மான் குறும்பதப் பூத நாதர்
கீர்த்திசேர் கணங்க ளோடுங் கிளர்குட கடலி னுப்பண்
போர்த்தன ருடலைச் சுற்றிப் பொருந்துறு நோயே போல. (ரு)

மலைநெடு மரங்கள் சூலம் வாங்கிவிட் டமரி னேற்றுக்
கொலைபுரி கணங்க டேவர் குமைத்திட வசுர ராகந்
தலைகரங் கால்கள் சிந்தத் தாரையா யுதிரம் பாய்ந்தே
யலைபொரு கடலி னீரு மரத்தநீ ராயிற்றன்றே. (சு)

தசையுட னிரத்த முண்டு தருக்கிய திமிங்கி லங்க
ணசையுறு திமிகள் வன்மீ னயப்புறு மீன்கள் யாவும்
விசையொடு மசுரர் தேவர் வெய்யபோர் விளைக்கு மாபோ
லசைவறப் பொருது சீற்றத் தாழ்கடல் கலக்கு மாதோ. (எ)

பூதர்கள் கரத்தில் வாங்கி யெறிந்தபூ தரத்தி னாலே
காதுறு கவணுங் கல்லு மிரதமுங் கணையும் வில்லு
மீதெழு தூளி யாக வேழம்வாம் புரவி காலாள்
சேதமாங் குருதி யாற்றின் மூளையு நிணமுஞ் சேறும். (அ)

அசுரர்கை வாளி மாரி யமரர்தங் களத்திற் றாக்க
விசைபெறு மகுட கோடி யிணைநெடுந் தடந்தோள் சென்னி
வசையுறு மணிப்பூண் மார்பம் வரிசிலைக் கரங்கள் யாவுந்
திசைதிசை வேறு வேறாய்த் தெறிபடச் சிதைத்த வன்றே. (கூ)

சிதைத்தலு மமரர் கூட்டஞ் சினத்தெழுந் தசல மாரி
கதமுறப் பொழிந்து சீறிக் கரங்களான் மரங்க ளேந்தித்
ததைதுகள் படப்பு டைப்பத் தறிபடா தசுரர் சேனை
மதவலி யிழந்து மீண்டு மாயமுப் புரத்திற் சார்ந்தார். (க0)

சார்தலு மமரர் கோமான் றன்பெருஞ் சேனை யோடும்
பேர்பெறு புறத்தின் மிக்காம் பெருங்குண திசைவா யிற்கண்
கூர்தரு தென்றி சைக்கட் குமரவேள் குலவு மேற்கி
னேர்தரு வருணன் கால னிலைபெறு குபேர னின்னோர். (கக)

வடதிசை யமலை பாகன் மருவிய கணங்கள் சூழத்
திடமுறு நந்தி யோடுந் திரமுற நெருக்கி முற்றி
யடல்விளைத் தருஞ்ச மஞ்செய் தார்த்தன ரசுரர் சேனை
யுடைபடக் கலங்கி யோங்கி யொடுங்கியுள் ளயர்ந்த வன்றே. (கஉ)

அபர்ந்திடும் பொழுதிற் றேவ ரும்பெருங் கணங்கள் பூத
ருயர்ந்திடும் புரிசை மாட முப்பரி கைக்கு ழாங்கள்
வியந்திடு மரமி யங்கண் மேனிலைச் சாள ரங்கள்
மயன்றவத் தினிதிற் பெற்ற வரங்கெடத் தகர்த்திட் டாரால். (௧௩)

சகத்துயர் வரத்தின் மிக்க தானவர் குலங்கட் கெல்லா
மகத்துறு சனிபோல் வந்த வயவலிக் கணங்கள் காலாற்
றுகட்பட மாட கூடத் தொகுதி யையிடற வாங்க
ணகத்துறு மசுரர் மாதர் கணங்கடம் மடியில் வீழ்ந்தே. (௧௪)

பலபல விதங்க ளாகப் பரிவொடும் பணிந்து பேரற்று
மலம்வரல் கண்டு கோபித் தசுரரில் வயவ ரெல்லாங்
குலவுகால் வேகத் தோடுங் கூர்ங்கணை வில்வா டோட்டி
யிலைமலி சூலந் தண்ட மெறிகவண் சிதறி யார்த்தார். (௧௫)

ஆர்த்தலுங் கணங்கள் கையா லருவரை மரங்கொண் டெற்றிப்
போர்த்தொழி லசுர ராகம் புடைத்தொரு கோடி பாகங்
கூர்த்திடு சேனை வீரங் குலைத்துயி ருண்ண நண்ணும்
போர்க்களத் தனேக கூளி பொருக்கென நடித்த மாதோ. (௧௬)

பழுமரம் பிடுங்கிப் பூதர் களிலொரு படைவ லாளன்
விழுமிய வெம்போர் செய்ய வியந்துதா னவரின் மிக்கா
யுழுவையின் வலிபெற் றுள்ளா ரொருவனோர் தண்ட மேந்தி
வழுவறச் சமர்செய் தார்க்க வான்முக டதிர்ந்த தன்றே. (௧௭)

கொலைக்களத் தசுரர் சேனை குலைந்திடத் தேவர் வெம்போர்
மலைத்திடக் கண்டு சீறி வயவலித் தார காட்சன்
சிலைத்தலை வணக்கி யேத்தித் தெறித்திடு சிறுநா ணோசை
யலைத்திடு கடைநா ளார்க்கு மசனிபோ லார்ப்ப வார்த்தே. (௧௮)

வாரண மீதி லேறி வானவர் கணத்தைக் கூற்ற
னூரணு கக்கூர் வாளி யுருத்தொரு கோடி யேவிப்
போரண களத்தி னீண்ட பொருப்பெனக் கைகால் வீழ்த்தித்
தோரண நெடுந்தேர் பற்றிச் சூழ்ந்திடு கணங்க டம்மை. (௧௯)

தலைதுணித் திருகை வீழ்த்துத் தாளறுத் துரங்கள் கீண்டு
நிலையமர்க் களத்திற் காத நெடுங்கழு கலகை யீட்டந்
தொலைவிலா துண்டு தேக்கச் சோரிநீ ரருவி பாய
மலையெனக் குணபா லோடி வயின்வயின் வயங்கச் செய்தான். (௨௦)

இவ்வகை தார காட்ச னிகலமர் புரியுங் காலைக்
கைவலிக் குறுந்தாட் பூதர் கால்வலிக் கணங்க டேவர்
செய்வலி யின்றி யோடச் சினத்தெதிர் நந்தி தானு
மெய்வலி கெடவந் தேற்று வெய்யபோர் விளைத்தா னன்றே. (௨௧)

விளைத்திடும் பொழுது நான்கு வேதமாம் விலாழி வாய்க்கொய்
யுளைப்பசும் புரவி மீது முயர்நெடுந் தடந்தேர் தாங்குங்
கிளைத்தவெண் மருப்பி னேற்று மீதினுங் கெங்கை யாறு
வளைத்தசெஞ் சடையான் பாதம் வைத்துவான் புரங்கண் மூன்றும். (௨௨)

கூடுறும் பொழுது நோக்கிக் குனிசிலை குழைய வாங்கி
நீடுறும் வாளி யேற்றி யிலக்குநிச் சயிக்குங் காலைத்
தாடரு பொறையாற் றூது தாவுவாம் பரியு மேறும்
பீடுறு தரையின் வீழ்ந்து பிறங்கிய முலையும் பல்லும். (௨௩)

உதிர்தலா லன்று தொட்டிவ் வுலகில்வாம் புரவிக் கெல்லாம்
பிதிர்முலை யில்லை யான்ற பெருமழ விடைகட் கெல்லாங்
கதிருறு மேல்வாய்ப் பல்லு மில்லை யாற் கணங்கட் கெல்லா
மதிபதி நந்தி பின்னு மடர்த்தெதிர் நடக்கு ஞான்று. (௨௪)

முன்னெதிர் தார காட்சன் மூரிவெங் களிநல் யானை
வென்னுறு பிடரி னின்றூம விறல்கெழு மழுக்கொண் டோச்சத்
தன்னிக ரில்லா நந்தி தடக்கையாற் றுங்கிச் சீறி
மின்னொளி விட்டி லங்கும் வாளினால் வெட்டி னால். (௨௫)

வெட்டலுந் தார காட்சன் மெய்யிரு துண்ட மாகி
பட்டிரும் புவியில் வீழப் படைப்பெருந் தலைவ னந்தி
முட்டிய சிங்க நாத முழக்கலுங் கணங்க டிண்டோள்
கொட்டிவெண் சங்க மூதிக் குரைகட லென்ன வார்த்தார். (௨௬)

ஆர்த்தபே ரொலிகே ளாமுன் னசுரர்கட் கரசு செய்யும்
போர்த்தொழின் மயன்பக் கத்திற் பொருந்திய வித்துன் மாலி
வேர்த்தெழு வதன நோக்கி விண்ணவர் வியத்த லென்கொல்
கூர்த்தவெங் கணத்தின் கூட்டங் குலவியே திரிவ தென்கொல். (௨௭)

என்னலும் வித்துன் மாலி யெறுழ்வலித் தார காட்சன்
மின்னவிர் சடிலத் தெம்மான் விரைப்பதம் போற்று நந்தி
தன்னுறு கரத்தின் வாளாற் றடிதலும் வீந்தா னென்று
சொன்னசொற் கேளா முன்னந் துணுக்கெனத் துளங்கிச் சொல்வான். (௨௮)

மாயவன் மகவா னாதி வானவர் திக்குப் பால
ராயவர் குழுவி னோடு மமர்செய்தா ரெனினுந் தோலாக்
காயமொ டவரை வெல்லுங் கைப்படைத் தார கரட்ச
னேயதொர் நந்தி கையா லிடருழந் திறந்தா னென்றால். (௨௯)

உரைப்பதென் பலசொன் மிக்கா யோங்கிய வரத்தா ரேனு
மரைத்தவி சுலைறயோன் கையால் வரைந்ததை மாற்ற லாமோ
திரத்துறு தேவ ரோடுஞ் செருக்கிய கணங்க ளோடும்
பொரத்துணிந் தெதிர்ந்து மாண்டாற் புகுதலாம் வீர சொர்க்கம். (௩௰)

அன்றியே யமர ரோடு மமர்செயி னமக்கு மிக்காம்
வென்றியே யெய்து மாகில் விண்ணவ ருலக மாதி
துன்றிய வுலகமெல்லா மாளலா மென்று சொல்லி
யொன்றிய வித்துன் மாலி யுடனெழுந் திரத மேறி. (சுக)

வடித்தஃன கோடி கோடி வாட்படை கோடி கோடி
யிடிப்படை கோடி கோடி யிலங்குவேல் கோடி மற்றப்
படைக்கலங் கோடி தூர்த்துப் பண்ணவர் கணங்கள் பூதர்
துடித்திடத் துணித்து யாக்கை தொடுகடன் முழுதுந் தூர்ப்ப. (சுஉ)

மயன்பொன் வித்துன் மாலி வயவலிச் சேஃன யோடும்
புயம்புள கிக்க வைவாள் பொருகதை தண்டஞ் சூலம்
வியந்திடு கொடுவாள் குந்தம் விற்பொழி கஃணகள் வீசிச்
செயம்பெறு கணங்கள் பூசத் தேவரைச் சிதைத்திட் டானல். (சுரு)

வரமிகு வித்துன் மாலி மயன்படைக் கலங்க டாங்கிச்
சிரமுர மூக்குக் கைகா றிண்புயங் காது கண்க
ளுரம்வயி றூருச் சானு முதலிய வுறுப்பி யாவுந்
தரைமிசை வீழப் பூதர் தஃலதடு மாறி னூரால். (சுச)

பூதர்தஞ் சேஃன மிக்க பொருபடைக் கணங்கள் கூட்ட
மாதலத் திடங்க டோறும் வயின்வயின் வரைகள் போல
வோதநீர்க் கடலி னுப்ப ணுேங்கிட மயன்போர் செய்தான்
வீதலில் கணங்கள் பூதர் விரைந்தகன் றோடி னூரால். (சுரு)

போர்க்களத் தெதிர்ந்த பூதர் புங்கவர் கணங்க ளெல்லாம்
கார்க்கட னடுவண் வீழ்ந்தோர் கனங்குழை பாகத் தண்ண
றோர்ட்பெருந் தட்டி னின்ற பெருமையுஞ் சிறப்பு நோக்கிப்
பார்த்ததி சயித்தே யேங்கும் புரிசையிற் படர்ந்தா ரன்றே. (சுசு)

சார்ந்தன னிரவி மேல்பாற் றண்கடற் குளிப்ப வைய
மார்ந்திருட் படலம் போர்த்த தென்றறி மனுவுக் கன்று
தேர்ந்துரை செய்தா னென்றே திகழ்ந்தொளிர் நைமி சத்திற்
கூர்ந்தநன் முனிவர்க் கெல்லாங் கூறிடுஞ் சூதன் மாதோ. (சுஎ)

நாற்பதாவது

தாரகாட்சன் வத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கoருஉ.

நாற்பத்தோன்றாவது

தானவர் சம்போக வத்தியாயம்.

பூநறுந் துளபத் தாரோன் புணரிவாய் மச்ச மாகி
ஞானமார் மனுவுக் கன்று நவின்றிடு வண்ணங் கோரத்
தானவ ருண்டாட் டென்னுஞ் சரிதையைச் சாற்று கென்ன
மோனமார் முனிவர் கேட்ப மொழிந்திடுஞ் சூதன் மாதோ. (௧)

புயவலித் தார காட்சன் போரிடை மடிந்த பின்னர்
மயனெனு மசுரன் வெம்போர் மலைந்தெதிர் கணத்தைப் போக்கிச்
செயமிலா வசுரர் தங்க டியக்கத்தை நிறுத்தி நீவிர்
பயமகன் றிடுதி ரிந்தப் பகைவெலப் பகரு வேனால். (௨)

நங்குலத் தலைவ ரான நாயக ரனேகர் வீந்தார்
திங்கண்முப் புரத்திற் கூடுஞ் செவ்விமுப் புரங்க ளொன்றாய்த்
தங்குமோ கணப்போ தாகுந் தானமக் காநாக் காலம்
பொங்குமோர் முகூர்த்தங் கூவுங் குயிலிசை பூசை யோசம். (௩)

நவிலுமப் பூச யோக நம்மெயி ளுச கால
மெவனுறு வலியி னேனு மொருகணை யெய்தா னாகி
லவிதரும் புரங்கண் மூன்று நீவிர்மற் றதனை யோர்ந்து
கவையனற் பகழி சிந்திக் காதுதிர் வீயு மட்டும். (௪)

திரிபுரந் தனைநீர் காக்கிற் சிவனுக் கைய மில்லைப்
புரிசடைப் புனித னேறும் பொற்றடந் தேர்நில் லாமல்
வரிநெடும் பகழி தூண்டி வானவர் கணத்தைக் கொன்று
நரிகழு கலகை காக நசைபெறப் புரிமி னென்றான். (௫)

முப்புர மீதிற் பாண முடுகுறு வண்ணங் காக்கிற்
செப்பும்விண் ணவர்கள் பூச யோகத்தைத் தேர்ந்தெல் லோடு
மொப்பிலொப் பாவ சத்தை யுறுவரென் றுரைப்பக் கேட்டுத்
துப்புறு மசுரர் யாருந் துணிவொடுஞ் சொல்ல லுற்றார். (௬)

இருங்கணை தொடுத்தே நந்தம் புரத்திடை யெய்யா வண்ணம்
வருந்தனி யுருத்தி ரன்றன் வல்லுயிர்க் கிறுதி செய்வே
மரும்புர நித்த மாகி யழிந்திடா வண்ணங் காத்துப்
பொருந்திறல் வீரம் வீரர் புகழ்ந்திடப் புரிகு வேமால். (௭)

என்றுரை செய்யுங் கோரத் திருணிறத் தசுரர் தம்மைத்
துன்றிய சதிர்க ளாலே தொட்டிடும் பாவம் போக
வொன்றுமோர் ராழிச் செம்பொன் னொளிமணித் தேரி னேடும்
வன்றிறல் வெய்யோன் மேலை வாரியிற் படிந்தா னம்மா. (௮)

அம்மமுக் கண்ண னேறு மணிநெடுங் கொடிஞ்சித் தேர்மேல்
வெம்மைகூர் கணைகள் சிந்தி வென்றிடு வோமென் றோர்க
டம்முயி ருண்ணுங் கூற்றந் தானவர் குலத்தை யெல்லாம்
வம்மினென் றழைத்தல் போல வந்தது மாலைக் காலம். (கூ)

தானவர் களிப்பு மன்னோர் மந்திரத் தகைமை யோடு
மூனமின் முப்பு ரத்தி னுறுதியும் வலியும் வீரச்
சேனையு மளவு நன்றாய்த் தேர்ந்துவா வென்று விட்ட
வானவ ரொற்றன் போன்ற மாலையும் வந்த தன்றே, (கூo)

அரக்கர்தம் மேனி போலு மவர்மனம் போலு மன்னார்
திருப்பொலி மகளிர் கண்ணிற் றீட்டுமஞ் சனத்தைப் போலு
மருச்செறி கூந்தல் போலு மண்டிலத் தெழுந்து மண்டி
யிருட்பிழம் பள்ளிக் கொள்ள வெங்கணு நிறைந்த தன்றே. (கக)

எண்டிசை யோர்க்கு மந்த காரத்தி னீட்டந் தீமை
கொண்டெழு மசுரர் நெஞ்சிற் குடிபுகக் கதிர்கள் காட்டி
மண்டில முழுதும் வெண்பான் மறிகடல் பரந்த தென்ன
விண்டலம் விளக்கித் திங்கள் வெளிமுகட் டெழுந்த தன்றே. (கஉ)

வென்றியங் குமரர் மீது மெல்லியர் மீது மாரன்
மன்றலங் கணைக ளேவ மாதராஞ் சேனை சூழத்
தென்றலந் தேரி லேறித் திரிபுரத் தேக முன்னர்த்
துன்றிய குடையி தென்னத் தோன்றிய சுடர்வெண் டிங்கள். (கங)

கரும்புயல் வண்ணன் மார்பிற் கதிர்மணி முத்தம் போன்று
மரும்புனல் வாவி நாப்ப ணம்புயத் தன்னம் போன்றும்
விரும்புபொன் மணிக்கோட் டுச்சி விளங்கரிக் குருளை போன்று
மிரும்பனிக் கதிர்கள் வீசி யெழுந்ததா லிளவெண் டிங்கள். (கச)

விரிநிலா வகில மெல்லாம் விளக்கிடப் போக்கொன் றின்றி
யிருளெலா மினிமேற் செய்வ தென்கொலென் றுள்ளத் தெண்ணி
யொருவராற் புகுத வொண்ணு முப்புரத் தொளித்த தென்னக்
கருமைசே ரசுர வீரர் கணக்கிலார் விளங்கி னாரால். (கரு)

தண்மதிக் கதிரான் மிக்க தானவர் புரங்கண் மூன்றும்
வெண்மய மாக வாங்கண் விளங்குதா னவர்கள் காமன்
கண்மலர்க் கணைகள் பாயக் கருங்குழற் கற்றை வாட்கட்
பண்மலி மழலைச் செவ்வாய்ப் பாவையர் போகம் வேட்டார். (கசு)

வேறு.

வாலமதி போலுநுதன் மாதர்சிலர் கூடிக்
கோலவிழி யார்கடமை கூர்மைபெற நீவி
யேலமுறும் வார்குழலி லேடலர்கள் சூடி
மேலுறுபொன் மாடமிசை வீணையிசை செய்வார், (கஎ)

அன்னநடை போலுலவு மஞ்சொன்மட நல்லார்
பொன்னணிய ணிந்தவிரு பூண்முலை குலுங்க
மின்னிடை துவண்டசைய வீதிவரல் கண்டே
கன்னன்மத னன்னசில காளையர் மருண்டார். (௧௮)

நீடுமணி மாடமிசை நின்றுலவு மின்னார்
பாடுமிசை யாரமுத பானமினி துண்டு
கோடுகழை வேள்பகழி கோடிபட வாடி
யாடவர னேகர்மய லாழ்கடலி லாழ்ந்தார். (௧௯)

வீதிமணி மாளிகை விளக்கொளிக ளாலுஞ்
சீதமதி வீசியெழு தென்னிலவி னாலு
மோதிருள கன்றமைமெய் பொப்பின்மகப் பெற்றே
யேதுமகல் வார்குல மெனப்புகல லாமால். (௨௰)

ஆலமணி கண்டர்தமை யாசைகொள வேவு
நீலமல ராயகணை நாலையு நிரைத்தே
கோலமத வேடொடமென் கோலமட மானார்
காலிணை பணிந்துசில காளையர் கவர்ந்தார். (௨௧)

விளரியன மென்சொல்வடி வேல்விழிமை மேக
மளகமட வாரிதழி னாரமுத ருந்திக்
களபமணி தோள்களுயர் கம்பமென வோங்கு
மிளைமைமுலை யானையை யிணைப்பர்சில ராங்கே. (௨௨)

பாடலொடு மாடல்பயில் பாணியொலி யாலும்
வாடுமிடை மேகலை வயங்கொலிக ளாலு
நீடுமணி நூபுர நிரைத்தவொலி யாலு
மாடவர்கள் சிந்தைக ளறத்தளரு மன்றே. (௨௩)

காதல்புரி மாதர்சிலர் காளையரோ டேடித்
தாதலர் பரப்பணை தணந்துகடி தேக
வேதமிது நீர்பொறுமி னென்றிடல் வணங்கு
நாதர்முக நோக்கியெதிர் நாணிநகை செய்வார். (௨௪)

வான்முக டளாவுமணி மாடமிசை மன்னி
நானமணி வார்குழலி னங்கையர் முகத்தோ
டானகலை மாமதியை யாடவ ரிணைத்தே
யூனமுறு வெண்மதியொ வாதென வொழிப்பார். (௨௫)

நானமுறு கோதையரு நாயகரு மொன்றாய்
வானள வுயர்ந்தமணி மாடமிசை யேறிப்
பானமது வுண்டிசை பயிற்றெழு சுரத்தின்
கானநிறை வீணைவிழ வேயுடல் களிப்பார். (௨௬)

நீடுபனை யூறலினை நேயமொடு மாந்தி
யாடவர்கண் மாதரொடு மாடல்புரி வார்கள்
மாடமிசை பானவெறி மங்கையர்க ளெய்தித்
தேடியுரு வங்கணவ னென்றருகு சேர்வார். (உஎ)

கனத்தகுடம் வைத்தமதுக் கண்டமது மட்டு
நினைத்தபடி யுண்டிளைஞர் நின்றுலவு கின்றார்
தனக்குரிய மாதரெனத் தன்மதி மயக்கான்
மனத்தருகு வந்தமட மாதரொடு சேர்வார். (உஅ)

பானவெறி யாலசுரர் பாவையர்க டோளை
மான்மத மணிந்தமுலை யென்றுசிறை வைப்பா
ரானன மெனத்தனமீ தானனமும் வைப்பார்
தேனித ழெனக்குமிழைச் சேர்ந்துசுவை செய்வார். (உகூ)

வேலமது வுண்டசிறு வீரர்மட மின்னார்
நீலவிழி மீதுமுலை தானநிறை செய்வா
ராலவிழி மையைமுலை மீதணிவர் வாச
மாலையென வேகுழலின் வாரைவனை வாரால். (௩0)

சேர்தலொழி வார்கண்மிசைத் தென்றல்வரு ஞான்று
கோரமுட னூடியெழு கோதைய ரனேகர்
மாரனொடு போர்புரியு மகிழ்நரெதி ரோடி
யாரமுலை மார்பக மழுத்திநகை செய்வார். (௩௧)

மங்கையரு மாடவரு மஞ்சமிசை யேறிப்
பொங்குதரு வுங்கொடியும் போலவுற வாட
வங்கையில் வளர்த்தகிளி கண்ட தறைகிற்ப
விங்கித மொழிந்ததை யெடுத்துறவு செய்வார். (௩௨)

ஊடிவிளை யாடுமட மாத ரொருகோடி
மேடைமிசை பாடல்புரி மின்னனையர் கோடி
நாடிமத னம்புபல கோடிபட நாடி
யாடவரை மேவியக லாதவர்கள் கோடி. (௩௩)

மின்னனைய ரூடிமலர் மெல்லணை தணப்பத்
தன்னைநிக ராடவர்க டாழவவர் தாளாற்
சென்னிமிசை யோங்கியுதை செய்யவடர் குஞ்சி
யின்னமு மரத்தநிற மேயென விளங்கும். (௩௪)

வார்முலை மடந்தையர்த மகிழ்நரொடு டூடி
வேர்வைநுதல் சிந்தமுகங் கோட்டிவிட மானப்
பார்வைபட மேனிகரும் பண்புபடு வோரைக்
காரசுர ரென்றுலகு காணவரு மின்னும். (௩௫)

மேனிலையி னூடியெழு மெல்லியர் தனந்தோய்
நானமதை வாரியெதிர் நாயகர்மேல் வீச
வானபுழை மேவுமதி யங்கமது தங்க
வீனமென லானமறு வென்னவுறு மின்னும். (௬௬)

முப்புர மெனப்பெயர்கொண் மூதெயிலின் வாழு
மைப்பொரு குழற்குலையுள் வாவிவரு மொண்கட்
செப்பிள முலைச்சியர்கள் செவ்விநல முண்டே
யொப்பில்வய வீரர்களி யோடுலவு காலை. (௬௭)

ஆம்பலொடு தண்குவளை யல்லிமலர் கூம்ப
மேம்படு மதிக்கடவுண் மேற்கட லடைந்தான்
தேம்பதும ராசிநிறை செய்யமுகை விள்ள
வாம்பரி நடத்திரவி வான்முக டெழுந்தான். (௬௮)

வான்முக டெழூர்திரவி வந்திடலு மண்டித்
தானவர்க ளானைபரி தானையிர தத்தோ
டானசம ராமென வடர்ந்தனர்க ளென்றே
மோனமுனி வோர்களெதிர் சூதனு மொழிந்தான். (௬௯)

நாற்பத்தோன்றவது
தானவர் சம்போகவத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். ௪௦௬௯.

நாற்பத்திரண்டாவது

வித்துன்மாலிவத வத்தியாயம்.

மாண்டுமுன் னமுத வாவி வண்மையா லெழுந்து வன்போர்
மூண்டிடு வித்துன் மாலி வதத்தினை மொழிதி யென்றே
பூண்டமா தவத்தோர் கேட்கப் புராணநன் னெறிக டேர்ந்த
வாண்டகை வியாசற் போற்றி யருந்தவச் சூதன் சொல்வான். (௧)

வல்லிருட் பிழம்பு சீத்து மறிகடன் முகட்டிற் றோன்றி
யெல்லிவந் துதித்த லோடு மிருங்கடன் முழங்கிற் றென்னப்
பல்லிய முழங்கங் கேட்டுப் படர்பெருந் திசைகள் விம்மத்
தொல்லிய லமரர் சேனை துண்ணென வெழுந்த தன்றே. (௨)

மதித்தெழு சேனை செல்ல விந்திரன் வருண னாதி
கதித்தெழு கணங்கள் சூழக் கடவுளர் வழுத்த நந்தி
துதித்திடக் குமுறு தேவ துந்துமி யார்ப்பத் திங்க
ளுதித்தெழு சடில மோலி யுருத்திர னுருத்து நேர்ந்த (௩)

ஏற்றெதி ரசுர ரெல்லா மெரியழற் படுவாய்ச் செங்கட்
கூற்றென வெகுண்டு நோக்குங் கொடுந்திறற் கணங்க ளூழிக்
காற்றுற ழதிர்ப்பி னேங்குங் கனைகடன் முழங்கிற் றென்னத்
தோற்றலுங் கலங்கி நெஞ்சந் துணுக்குற நினைக்க லுற்றார். (௪)

தானவர் தலைவர் கூடித் தமக்கப செயமதென்ன
மானிவர் மழுவ லாள னடற்பெருஞ் சேனை வெல்லு
மீனமில் களத்தின் வெம்போ ரியற்றுத றருமம் விண்ணோர்
சேனையைத் தொடர்ந்து தாக்கிற் செயிப்பினுஞ் செயிப்போ மென்றார். (௫)

வச்சிரங் குந்தந் தண்டம் வாள்வடிக் கணைமு சுண்டி
முச்சிகைச் சூலங் கைவேன் முசலங்கைக் கவண்கோ டாரி
நச்சராப் பாசந் தோட்டி நாணுறு விற்கை யம்பு
கச்சறுப் பரிசை யீட்டி கணிச்சிவேல் பிண்டி பாலம். (௬)

முதலிய படைக ளேந்தி முழக்குறு சிங்க நாதஞ்
சிதைவர வெழுப்பிக் கண்க டையுகப் புகைவாய் கால
மதகச ரததுரங்கம் வயப்படை யுழவர் பூமி
புதைபட நடக்கச் செந்தூள் போர்த்தது வான மெங்கும். (எ)

ஆர்த்தன தாரை சின்ன மார்த்தன பேரி சங்க
மார்த்தன முரசந் தக்கை யார்த்தன சலரி பம்பை
யார்த்தன திமிலை செண்டை யார்த்தன நவுரி பூரி
யார்த்தன தவண்டை காள மார்த்தன தவிலு டுக்கை, (அ)

வேறு.

அடன்ம தம்படு மானைகண் முழங்கின வார்க்கும்
படைமு ழங்கின பரிக்குல முழங்கின பரிதேர்
நடைமு ழங்கின நாணொலி முழங்கின நன்னீர்க்
கடன்மு ழங்கின கலிப்பொடு முழங்கின கழல்கள். (௯)

கொடிநெ ருங்கின குலப்பரி நெருங்கின கொடித்தே
ரடிநெ ருங்கின வடற்கரி நெருங்கின வம்பொன்
முடிநெ ருங்கின மதிக்குடை நெருங்கின முந்நீர்ப்
படிநெ ருங்கின படைத்திர ணெருங்கின பரந்தே. (௧0)

பரிந டந்தன நடந்தவப் பரிமிதத் திணிதேர்
கிரிந டந்தென நடந்தன கிம்புரி மதமா
வரிந டந்தென நடந்தன வளவில்காற் படைபின்
னரிந டந்தன நடந்தன வலகைசெந் நாய்கள். (௧௧)

வேறு,

நடந்தெதி ரசுரர் சேனை நடுக்குறக் கடல்க ளேழுங்
கடந்திடுங் குறுந்தாட் பூத கணப்பெருஞ் சேனை வெள்ள
மிடந்தரு புவியோ ரேழு மெட்கிடை யிடமின் றென்னப்
படர்ந்தெழு விசைக்கா ருக்கப் பறந்தன பருப்ப தங்கள். (௧௨)

இருண்டன திரைதூண் மண்டி யிறுதியாங் கால மென்ன
மருண்டன வுலகம் விண்ணின் மறைந்தன சுடர்க ளஞ்சிப்
புரண்டன கடல்கள் விண்மேற் பொடிந்தன மேக சாலந்
திரண்டன கடவுட் கூட்டந் திகைத்தன திக்க யங்கள். (௧௩)

வாட்படை வீர ரெல்லாம் வடிக்கணை மாரி சிந்திக்
கோட்படு பூத நாதர் குலவரை பிடுங்கி வாளி
தூட்பட வீச வன்னோர் சுடுசரம் பின்னுந் தூண்டக்
காட்படு வரைகள் தூளாய்க் காற்றிடைப் பரந்த வன்றே. (௧௪)

வல்வலிப் பூத ரார்த்து மயனடற் சேனை சிந்தக்
கல்வரை மாரி பெய்தார் கண்ணழல் கதுவச் சீறி
வில்வலி யாற்றாள் செய்து விலக்கலும் வெகுண்டு பூத
ரல்வணத் தசுரர்ப் பற்றி யடித்தலத் தரைத்திட் டாரால். (௧௫)

தோளொடு தோள்கள் பூணுந் தொந்தயுத் தங்க ளோர்பால்
வாளொடு வாள்கள் வீசி மறித்தெதிர் பொருவ தோர்பால்
தாளொடு தோள்கள் பின்னித் தரையிடைப் புரள்வ தோர்பால்
கோளொடு கோளேற் றென்னக் கொடுஞ்சமர் புரிந்தா ரன்றே. (௧௬)

வேறு.

வின்மு ரிந்தன கணைமு ரிந்தன வேன்மு ரிந்தன வீரர்வாட்
பன்மு ரிந்தன களமு ரிந்தன பதமு ரிந்தன படைமலைக்
கன்மு ரிந்தன புயமு ரிந்தன கரமு ரிந்தன கதிரிலா
வன்மு ரிந்தன வுடன்மு ரிந்தன வணிமு ரிந்தன ரசுரரே. (௧௭)

மாறு கொண்டெதி ரசுரர் சேனையில் வடிநெ டுங்கணை படநிணச்
சேறு மண்டின குடல்ச ரிந்தன சிரமி தந்தன வுதிரநீ
ராறு மண்டின புரவி வங்கம தலைமி தந்தன வும்பரிற்
பாறு பம்பின வலகை துன்றின பசித விர்ந்தன கழுகினம். (௧௮)

அசுரர் சேனையி னுதிர வாரியி னாறு நீள்கட லூடுபோ
யிசைய வேலையி லிருணி றங்கெட வெழில்கொள் செந்நிற மாகவே
வசையி லாதுறு திமிதி மிங்கிலம் வானை கெண்டைவ ரால்சுறு
விசையு ராவுக ராமெ லாநசை யாக வுண்டு மிகுத்தவால். (௧௯)

இந்த வாறசு ரேசர் வீதலு மிருணி றத்தசு ரக்குழாம்
வந்த வாறும யங்கி வேறுள வழிக டந்தய லேகலும்
விந்த மால்வரை போனெ டும்புய வித்துன் மாலி வெகுண்டுநீர்
சிந்தை தேறுமி னேக லீரெதிர் செல்வ லென்றெதிர் சீறியே. (௨0)

நந்தி கேசன்மு னின்று நாளினில் நடுநெ டுங்கந கைத்துநீ
வந்து போர்புரி யென்ற ழைத்தினி மறக்க டத்து முகத்துளாய்
முந்தி யானுன தாவி யுண்டுடன் முழுது மென்று சுவைப்பனென்
றிந்த வாறசு ரன்பு கன்றிட வெதிர்கொ ணந்தி யியம்புமால். (௨௧)

ஆனை கோடிக ணேரெ திர்ந்துமோ ரரியை வென்றிட லாகுமோ
வீன வஞ்சகம் சேனை காவல வின்று நின்னுயிர் வீட்டிவா
ஞன வார்குழ லரம டந்தையர் நன்ன லம்பெற நல்குவே
னீந வின்றது நன்று நன்றினி நில்லு நில்லென நேர்ந்தனன். (உஉ)

நேர்ந்து ளைத்திடு நந்தி மார்பி னிணங்கு ளித்துயி ருண்ணெனக்
கூர்ந்த வாளிகள் வித்துன் மாலியோர் கோடி மேலும் விடுத்தடர்ந்
தார்ந்த வோசை திகாந்த மட்டுற வட்ட காசம் விளைத்தலும்
வார்ந்த வெங்கணை நந்தி கேசர்தம் மார்பி டிந்து திளைத்தவால். (உ௩)

கணைதி ளைத்தலு முதிர மூழ்குதல் கடன்மு கட்டெழு பரிதியே
யிணையெ னத்திகழ் நந்தி கேசுர னெதிர்வி சும்பை யளாவிநீள்
டணைமி குத்தப ருப்ப தத்தையோர் பாணி கொண்டு பிடுங்கியே
துணைநெ டும்புய வளையுரத் தலைசோ ரிகால வெறிந்தனன். (உ௪)

சோரி காலலும் வித்துன் மாலி சுழற்றி வேலையெ றிந்திட
மார்பி டைப்புக நந்திகேசர் மறுத்தவ் வேலினை வாங்கியே
கார்நி றத்தவன் மேல்வி டப்புரி கட்டறுந்தது கவசமென்
ரேர்வ டிக்கணை விட்டு நந்தி யுரத்தி னூடு தொளைத்தனன். (உ௫)

தொளைத்து நீள்கணை யேக நந்தி துடித்து வெண்பல துக்கியே
யிளைத்தி டாதகை வச்சிரப் படையேவி யேதலை வீழ்த்தலும்
வளைத்த விற்கர வித்துன் மாலியோர் வரைபு ரண்டென வீழ்ந்தன
னுளத்து வந்து கணங்கள் பூதர்க ளும்ப ரும்பரி னார்த்தனர். (உ௬)

ஆர்த்த போதினி லசுரர் சேனை யடங்க லுந்திசை போயுற
வேர்த்து வெம்பி வெகுண்டு நாசியின் வெய்து யிர்த்தடர் காற்றெடுங்
கூர்த்த விற்படை வீரர் சூழவோர் கோடை நீடுவ னத்தினைப்
போர்த்த தீயென வீர வேன்மயன் பூதர் சேனை வளைத்தனன். (உ௭)

வளைத்து நீள்கணை மாரி சிந்தி மயன்பொ ரத்தலை மார்பகந்
தொளைத்த தோர்புறம் வெந்த டக்கை துணிந்த தோர்புற மாவிநொந்
திளைத்த தோர்புற மகுட கோடிக ளிற்ற தோர்புற மாகவே
களைத்து வானவ ராதி பூத கணம்விழுந்தன கடலிலே. (உ௮)

ஈது கண்டிடு முருக னந்தியொ டிந்தி ரன்சம னளகையான்
காது வெங்கணை கோடி கோலி கனன்றி ரைத்திட வசுரர் சோன்
சோதி சூரயி ராவதப் பிடர் தோன்றும் வாசவன் முதலினோர்
மீது கூர்தரு பகழி மாரி விளைத்து மார்பு தொளைத்தனன். (உ௯)

முருக வேண்முத லான தேவர் முனிந்து மொய்கணை மாரியாய்ச்
சொரிய வேயசு ரக்குழாமெய் துணித்தி டத்திசை யோடியே
திரிபு ரம்புக வமரர் பூதர்கள் சிங்க நாதம் விளைத்தலா
லரிய வேலை நிகர்க்கு மோசையி லண்ட கோடிகள் விண்டவால். (௩0)

என்று மற்புய வித்துன் மாலி யிறந்த வாற்றினை யேழ்கடற்
றுன்று மச்சநல் வடிவெ டுத்தருள் சுருதி மூர்த்தியு மனுவினுக்
கன்று சொற்ற தருந்த வத்தர மர்ந்து கேட்டு நலின்பொடு
நன்று ரைத்தனை யென்று வப்புற நன்கி யம்பினன் சூதனே. (ருக)

நாற்பத்திரண்டாவது

வித்துன் மாலிவத வத்தியாயம்.

ஆகத்திருவிருத்தம். ககஉஉ.

நாற்பத்துமூன்றுவது

திரிபுர விசய வத்தியாயம்.

அன்று தானவர் சேனை வீத லறிந்து ரைத்தருள் சூதனைத்
துன்று காதலி னோடு நன்மொழி சொல்லி முப்புர முக்கணன்
வென்ற வாறுமம் முப்பு ரங்களும் வெந்த வாறும் விளம்பெனு
நன்று நன்றெனு முனிவர் யாரு நயந்து கேட்க விளம்புமால். (க)

அன்று ரைத்திடு பூச யோகமு மணுக மூன்று புரங்களு
மொன்ற வப்பொழு தசுரர் சேனைக ளூறுபு ரத்தொடு மபசயந்
துன்ற வெங்கணை மேரு வில்லி தொடுத்தி லக்குற வேவலுஞ்
சென்ற வெங்கணை யழல்சொ ரிந்துயர் திரிபு ரத்தை யடர்த்ததால். (உ)

அடர்ந்த வெங்கணை சிந்து செந்தழ லண்ட மூடுற மண்டவே
படர்ந்த கோபுர மாட மாளிகை பகரு முப்பரி கைக்குழா
மிடங்கொள் சாலைக டெற்றி வெங்கதி ரிந்து மாமணி யரமிய
மடந்தை மார்பயி லரங்குகண் மதில்க ணீறெழ வெந்தவால். (ங)

தழல்கொ ளுத்திடு கணையை யேவிய தனிமு தற்பொரு ளாயினோன்
பழைய பத்திசெய் மயனை யுன்னிய பான்மை யோர்ந்தெழு நந்திதா
னுழைத ரித்தசை விமல நின்னுள முன்னு காரிய மென்னெனக்
குழைவொ டுற்றடி தொழம றுத்தெதிர் குழக னுற்றவை கூறுமால். (ச)

நமது பொற்பத முன்னி நாடொறு நண்ணு பூசனை பண்ணினோ
னெமையுள் பத்தரி லதிக மாமய னிந்த வெந்தழன் மூழ்கிடா
தமைய முப்புர மெய்தி நீயினி தவனை யப்புற மாகவே
கமையு றப்புரி குவையெ னப்புகல் கடவு ளேவலி னேகினான். (ரு)

எகி முப்புர மெய்தி நந்தியு மீச னன்புறு மயனையே
வேகு மிவ்வெயி லேக நாய்கரீ வெஞ்ச ரம்பட விட்டுநீ
போக வெண்ணுதி யெந்தை யீது புகன்ற தென்ன வியம்பலு
மாக மீதிலெ ழுந்து தானுறை மனையொ டப்புற நண்ணினான். (சு)

நீடு மாளிகை வீதி வீதியி னின்றெ ரிந்தன தானவ
ரோடி யேயிட மிறையு மின்றியுந் துவளு வார்சில ருற்றுடல்
சூடு தாங்கல ராகி நின்று துடித்து ளார்சிலர் சோகமாய்
வாடி நின்றுள் மேங்கி யேங்கி மயங்கு வார்சிலர் வீரரே. (எ)

ஆனை தேர்பரி மேவு சாலைக ளாயு தம்பயில் சாலைகள்
கான வீணமி ழற்று சாலைகள் கருது நாடக சாலைகள்
மான வேல்விழி மாதர் சாலைகண் மாத ராதியர் சாலைகள்
பான சாலைகள் யாவு மக்கினி பாக சாலைக ளானவால். (அ)

குன்றெ ரிந்தன போலெ ரிந்தன கூட மாளிகை நீள்கொடி
நின்றெ ரிந்தன காவெ ரிந்தன நீடு நித்தில மாலைதாழ்
மன்றெ ரிந்தன தூணெ ரிந்தன மதிலெ ரிந்தன வண்ணவார்
பொன்றெ ரிந்தநன் னிலையெ ரிந்தன புனைக பாடமெ ரிந்தவே. (கூ)

சோலை வெந்தன வாவி வெந்தன சுனைகள் வெந்தன துளிநறு
மாலை வெந்தன பணிகள் வெந்தன மணிகள் வெந்தன வனையுநீள்
சேலை வெந்தன கலைகள் வெந்தன செண்டு வெந்தன வண்டொடு
மோலை வெந்தன தளிமம் வெந்தன வொளிரு மஞ்சமும் வெந்தவே. (க0)

கரிக ரிந்தன தேர்க ரிந்தன கதைக ரிந்தன கவனவாம்
பரிக ரிந்தன சிலைக ரிந்தன படைக ரிந்தன வடுசினத்
தரிக ரிந்தன குடைக ரிந்தன வயில்க ரிந்தன வெயின்மணிக்
கிரிக ரிந்தன வுடல்க ரிந்தன கிளைக ரிந்தன ரசுரரே. (கக)

அசுரர் சேனைக ணெரிய வன்னவ ரரிவை மாரொடு தனையர்க
ளிசையும் யாவரும் வெந்து வீழ்ந்தன ரெண்டி சாமுக மண்டியே
வசையில் வானம்வ ளைத்த வெம்புகை வானு ளோருமி மைக்கவே
மிசையி லேகின புரமெ ரிந்திட விசைய மெய்தினர் விண்ணுளோர். (கஉ)

விசையம் விண்ணவ ரெய்த முப்புரம் வெந்த பின்னரு முக்கண
னசைவி லாதுவி டுக்கும் வெங்கணை யங்கி மான்மதி யாகியே
யிசையு மூவரு மேவி யும்பரி னேக விண்ணவ ரார்ப்பொலி
திசைநி றைந்தன வண்ணல் விற்கொடு தேரி னின்றுமி றங்கினான். (கரு)

தேரி றங்கிய வெந்தை தாளிணை செங்கண் மாலய னிந்திர
னார ணங்களு னாக்கு மஞ்சுட ரரிய மாதவர் விண்ணுளோர்
வார ணந்தரு முகவன் வேலவன் வலிய நந்திக ணக்குழாங்
கூறு மன்பொடு பூசை செய்து குழைந்து தாழ்ந்து வணங்கினார். (கச)

நண்ணு மைக்கட லூடு புக்கவு நடுவ ணுற்றிடு மயனையே
விண்ண வர்க்கிறை நாடி வந்துவெ குண்டு நீயுறை யிம்மனை
கண்ணில் யாவரு மணுகி டாவகை கனவின் வெம்மைய தாகவென்
றுண்ண டுங்குறு சாப மோதின னுவரி யுற்றனன் மயனரோ. (கரு)

புரமெ ரிந்தபின் மயனெ ழிந்ததிர் புணரி நீரிடை மனையொடுந்
திரம தென்றவன் மருவு சங்கைதெ ரிந்து ரைத்தருள் சூதனை
யுரமி குந்தவ னுற்ப வத்தொடு மொளிரு நன்மனை புகுமிடம்
விரவு நன்கதி முனிவர் யாரும் விளம்பு கென்னவி யம்புவான். (கசு)

துருவ னுற்றிடு முலகெ லாமொளி தோன்ற வேமயன் மேவுவான்
புரம்வி டுத்தவ னுறையு நன்மனை புகுவர் தானவ ரென்றுதான்
வெருவி முற்பகல் சாபம் விண்ணவர் வேந்து ரைத்தன னாதலா
லுருவ நன்மனை தன்னில் யாருமு ரூது மேவுவ னென்றனன். (கஎ)

முப்பு ரத்தையு முக்க ணெந்தைமு டித்தெ ரித்திடு விசயமே
செப்பு முத்தமர் வினவு நற்றவர் தீட்டி யேட்டினி லீட்டியே
வைப்பெ னத்தம னைக்கண் வைப்பர் மனத்தி லெண்ணிவ ழுத்துவோ
ரொப்பி லிப்புவி யாள்வர் பின்ன ருருத்தி ரன்பத மொன்றுவார். (கஅ)

வலிய முப்புர மெரிசெ லுத்திய மழுவ லாளனல் விசயமார்
கலியி டத்தொரு கயலு ருக்கொடு கண்ண னென்றுக ழற்கழற்
பொலிவு பெற்றிடு மனுவி னுக்குரை செய்த வாறுபு லன்களை
நலிவ டக்கிய முனிவர் கேட்ப நயந்து சூதன னிற்றினன். (கக)

நாற்பத்துமூன்றாவது

திரிபுரவிசய வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், கககக.

நாற்பத்துநான்காவது

புரூரவாமகிமை யத்தியாயம்.

வளர்புகழ்ச் சூதன் றன்னை மாதவர் வாழ்த்தி யேத்தி
யிளைமகன் புரூர வாவின் மகிமையை யியம்பு கென்ன
வளர்வுறு திங்க டோறு மருக்கன்மண் டிலத்திற் சேர்ந்தே
யுளமகி ழமாவா சைக்கண் பிதிர்க்களாங் குவகை யெய்த. (க)

தருப்பணஞ் சுதையாற் செய்யுந் தன்மையுந் தண்வெண் டிங்க
ளுருப்பெறு மமுத முற்ற வுவர்ச்சியும் புரூர வாவின்
தருப்பொலி மகிமை தானுந் திருமறு மார்பன் முன்னாள்
விருப்பொடு மனுவுக் கன்பாய் விளம்புமா விளம்பு வேனால் (உ)

முன்சொலும் பரிகி டத்தா காவியா மொழியும் பொற்பார்
பின்சொலக் கினிசு வாத்த ரிவர்களே பிதிர்க்க ளாவ
ரன்புறு மொருநக் கத்தி ரத்தினி லருக்கன் சோம
னின்புறச் சேரும் பக்க மெழிலமா வாசை யென்பர். (௩)

ஒருகதிர் மண்டி லத்தி லிருகதி ருறையும் போது
பெருமதிப் புரூர வாநற் றரிசனப் பெட்பி னேடு
மருகிரு கதிரைப் போற்றி யவன்றந்தை தந்தை தாயர்
வரும்வழிப் பிதிர்க டம்மை வணங்கியே வழிபட் டேத்தி. (௪)

சொற்றிங்கட் சிரார்த்தஞ் செய்யச் சோமன்பாற் சுதையை யேற்று
நற்றிங்கட் பூசை செய்து நவில்பிதிர்ச் சிரார்த்த மாறத்
தெற்றென விதிவ ழாது சினீவாலி யினிபூ சித்தே
பற்றென்று குருவின் பூசை பரிவொடு பண்ணு வானல். (௫)

வருசதுர்த் தசிநா டன்னி லமவாசை கூடி லந்நா
ளொருகதிர்ப் பிறைதான் றேன்றி லுயர்சினீ வாலி யென்பர்
பிரதமை யுறும வாசை யிற்பிறை பிறங்கி டாமற்
பொருகுயில் கூவு நேரங் குகுவெனப் புகல்வர் மாதோ. (௬)

திருத்தகு மாத முற்றும் பிதிர்த்திர்ப்பித்தி யாக வேண்டி
யருத்தியாய்ப் புரூர வாவங் கமயம்பார்த் திருக்கச் சோம
னுருத்தனிற் றினமொவ் வொன்று யுறுங்கலை யமுதம் வாய்ப்ப
பொருத்துமூ வைந்தா நாளிற் பூரணை நிறைத லோடும். (௭)

வெண்கதி ரமுதம் வாங்கி விளங்கிய வபர பக்கத்
தொண்பிதிர்ச் சிராத்த மாற்றி யுறைகுவன் மறையோர் பானு
மெண்பெற வளித்துப் பூசை யிபற்றியே திருத்தி செய்வான்
பண்புறு பிதிர்க்கள் பேத முறைபெறப் பகரு வேமால். (௮)

சவுமியர் பரிகி ஷத்தர் சாற்றுங்கா வியர்க ளோடு
மவிரொளி யலங்கல் சூடு மக்கினி சுவர்த்த ராஞேர்
திவரழ லிருது வென்பர் சிறக்குமவ் வழலை மிக்காய்
நவையறு வருட மென்று நவில்வரக் கினியைத் தானே. (௯)

துலங்கிய விருது வென்றே சொற்றலா விருது மைந்த
ரலங்கலார்த் தவரே யென்று மறைகுவ ரந்த மாத
ரிலங்கிய பிதிர்க்க ளாஞ ரேத்தரு மரசர் யாரும்
வலங்கொளும் வருட மைந்தா வருபிதிர் மகரே யாவர். (௧௦)

அன்னவ ரிருது வாவ ரமர்ந்தபஞ் சாத்த ரென்றே
தன்னிக ரில்லாத் தேவப் பிதிர்களைத் தரணி யுள்ளோர்
பின்னமில் கீர்த்தி பெற்ற பிரபிதா மகரே யென்பர்
மன்னிய பிதிர்க்கண் மிக்காய் வருசவு மியரே யென்பார். (௧௧)

நிறைபிதா மகரை யக்கி னிச்சுவர்த்த ரென்பர் மண்மே
லறைபிர பிதாம கப்பே ரவர்பரி கிஷத்த ராவர்
பொறைபெற யாகஞ் செய்தோர் புகல்பரி கிஷத்த ரென்பர்
துறைநிறை தருமஞ் செய்தோ ரக்கினிச் சுவாத்த ராவார். (கஉ)

காவியர் தம்மை யட்ட காபதி யென்பர் மிக்காய்
மேவுபஞ் சரத்த ரென்ன விளங்கிய வைவர் தம்மிற்
ருவில்சம் வற்க ரங்கூர் தழல்பரி வற்ச ரந்தா
ளுேவில்செங் கதிரே யென்ப ரோதுசீர் வச்ச ரந்தான். (கங)

உருத்திர னென்பர் சாற்று முயரனு வற்ச ரஞ்சீ
ரிருத்திய வாயு வென்ப ரிதரவற் சரந்தான் சோமன்
றிரத்துமித் தேவ ரைவர் திகழ்தேவ பிதிர்க்க ளாவர்
கருத்துறு மிவரைத் தானே யுதரெனக் கழற லாமால். (கச)

மேவுமின் னவரே கால வியாபிகள் சந்தி ரன்ருன்
தாவில்சோ மப்பி திரமான் சாற்றுசோம் யிதம மோடும்
ஓவில்சீர் பெற்று மிக்கா மூட்பம ரென்கின் ருரைத்
தேவரும் புகழுந் தீவர் கீர்த் திப்ப ரென்றி சைப்பார். (கரு)

இவ்வகைப் பிதிர்கட் கெல்மாம் புரூரவா வென்னும் வேந்தன்
திவ்விய வமுதம் வாங்கித் தருப்பணந் தெவிட்டச் செய்வன்
எவ்வமின் மாதந் தோறுஞ் சோமனின் னமுத மீட்டத்
துவ்வமு தத்தை யுண்போர் சோமபா யிகளே யாவர். (கசு)

இச்சுதர் மூதமே சோம மதுச்சுதை யமுத மென்பர்
துச்சறு மமுதஞ் சோம பாயிக டெய்த்த லாலே
யச்சுறு மதிமூ வைந்து கலேகுறைந் தமையும் போது
மிச்சமா யிரவி யோங்குஞ் சுஷம்மின மென்ன மேவும். (கஎ)

கிரணத்தால் வளரச் செய்வன் கிளர்சோம பாயி யென்னு
மரணத்தார் பிதிர்கட் காக வாதபன் மாதந் தோறுஞ்
சரணத்தார் சோமன் றன்னைத் தனதுவீ ரியத்தி லந்தக்
கரணத்தா னிறைத்த லாலே காணலா முவாவிற் ருனே. (கஅ)

அக்கினி முதன்மூ வைந்து தேவர்க ளமுத மாகத்
தொக்கவான் கலேக ளுண்ணக் கொடுத்தலாற் சோமன் விண்மேன்
மிக்குயர் பிதிர்மா னென்ன விளங்கிய பெயரின் மேவி
வைக்கவே தகுஞ்சீ ரிருது வச்சர ரூபி யானுன். (ககூ)

பருவசந் தியினேச் சொல்வாம் பகருடற் சந்து தோறு
மருவிட நரம்பாற் கட்டு மாறுபோற் கருமை வெண்மை
யுருவுள வபர பக்க முயர்ந்தசுக் கிலபக் கங்கட்
கரியவாந் திலக ணுக்க ணரம்பென லாகு மாதோ. (உ0)

பவுரணை மிக்க பேத மிரண்டெனப் பகர்வ ரப்பேர்
கவரனு மதிய ராகை கருதுசந் திகளி ரண்டுந்
திவளொளிக் கிரந்தி யாகுந் திகழ்பக்கக் கணுவைத் தான
பவுருவ மென்ப பக்கத் துதிகைதொட் டொடுங்கு நாட்கள். (உக)

பருவங்க ளாகை யாலே பகருமக் மணிய தான
கருமங்கள் பருவ சந்தி சாலத்திற் பண்ணு வார்கள்
புரியமா வாசை யோடு பூரணை கருமங் கட்காம்
பெருகுபூ ரணைதான் மிக்க பிரதமை பிராதக் காலம். (உஉ)

கலந்திரண் டிலவங் கூடிற் கருதனு மதியே யாகு
மிலங்கிய வபரா னத்தி லிரண்டில வந்தான் கூடிற்
பொலங்கெழு மிராகை சாயுங் காலமாம் பொழுது மட்டுந்
துலங்குபூ ரணைதான் மேவிற் சொல்லுவர் பருவ மென்றே. (உங)

செங்கதி ருதய வெற்பிற் றெரிவுறத் தோன்றும் போதின்
மங்குல்வான் மதிய மத்த மனகிரி தளின்மே லாகத்
தங்குமெட் டடியி னிற்கிற் சாற்றிய விதிபா தந்தா
னங்கமார் மதிகிழ் பானு மருணன்மேற் றிசையு மாகி. (உச)

முன்சொலு மளவு நிற்கின் மொழிகுவ ரதற்கு மப்பேர்
நன்கதி ரொன்றுக் கொன்று நாடியே பார்க்கு மென்பர்
பின்புத யந்தொட் டெண்ணல் பிறகிங்ய விட்டி காலந்
துன்பில்பூ ரணையோ ராறு கடிகைமேற் றொடங்கி யப்பால். (உரு)

மூவைந்து கடிகைக் குள்ளே பிரதமை முயங்கி லந்நாள்
மேவுஞ்சத் தியகா லந்தான் விளங்கிய பிதிர்க்க டேவர்
பூவந்து வழுத்த லாலே புகழனு மதிப்பேர் பெற்றுப்
பாவம் விணத்து நல்கும் பான்மையா லிராகை யென்பார். (உசு)

சொல்லமா வாசை விஞ்சிற் பிரதமை துலங்கு மந்நாள்
ஒல்கலி லரிச மென்ப ரோர்பகற் சதுர்த்தி சிக்கண்
நல்லமூ வைந்து கன்ன லுள்ளமா வாசை நண்ணின்
செல்லுமத் திதியை மிக்க சினீவாலி யென்பர் மாதோ. (உஎ)

சதுர்த்தசி தினத்தி ராவிற் றுனமா வாசை கூடின்
கதிக்கதி ரிரவி யோடு வெண்மதி கலக்கு நாளும்
அரைச்சினீ வாலி யென்ப வருக்கனத் தமன வெற்பில்
விதிப்படி யடையுங் காலம் பிரதமைக் கதிர்வெண் டிங்கள். (உஅ)

கலந்திடிற் குகுவே யாம்வெண் கதிர்ப்பிர தமையைத் தொட்டே
யிலங்குமா தவனை நீங்கு மிரண்டுவா நடுவிற் கீழ்பால்
துலங்கிடு மேல்பாற் றூய சுடர்க்கதிர் மண்டி லங்கள்
நலம்பெற விருக்கு நாளு நவில்விதி பாத மாமால். (உகூ)

பேரமா வாசைப் பின்னுள் பிரதமை யிட்டி காலஞ்
சீர்பெறு மந்த நாளைத் தேரிது முகமா மென்பர்
கூரமா வாசை யோடும் பிரதமை பகலிற் கூடிச்
சாருநா டனில மாவா சையையனுட் டிக்க லாமால். (கூ0)

கோகிலங் கூவுங் காலங் குருவென்ப ரளவை கூறி
லாகிரண் டிலவஞ் சோம னசினிவா லியங்கம் போலத்
தேகமோர் கலையி னோடுஞ் செங்கதிர் சேர்த லாலே
வாகுறு முவாவை மிக்க சினிவாலி யென்பர் மாதோ. (கூக)

அனுமதி குருவி ராகை சினிவாலி யாக நான்கு
நினைவுறு மளவை கூறி னிகழிரண் டிலவந் தானே
புனையுமூ வைந்து நாளும் புகல்கதி ரொருமூ வைந்தும்
வனைதர வளர்த லாலே மதிக்கலை பதினைந் தாமால். (கூஉ)

சொல்லிய பிதிர்க்க டேவர் சோமவர்த் தனரே யத்தர்
வல்லர்சோம் பாபஞ் சாத்தர் வகைபெறு பிதிர்க்க டம்மோ
டொல்லுமார்த் தவர்சி ராத்தத் துண்பவர் செய்கை நல்லூ
ணல்கலி லணவ சத்து வங்கதி யடைவிற் சொல்வாம். (கூகூ)

மரித்தபேர் தமது பேர்க்கும் வரத்துமா தவர்க ளாலுந்
தெரித்திட லரிய தென்று லெம்மனோர் தெரிக்கற் பாற்றோ
வுரைத்திடு முதன்மைத் தேவப் பிதிர்க்கள்பின் னுலகின் மாண்டோர்
விரித்திடு திர்க்க ளாவர் விளங்கிவர் தருமத் தாலே. (கூச)

நான்கெனும் பதவி சேர்ந்து நண்ணினு நயந்து மிக்காம்
வான்கதி முதலு லோக மன்னினு மண்ணில் வந்து
தான்புகழ் யோகி யாகித் தங்கினுஞ் சிராத்த நேர்ந்து
நோன்புறு கால மங்க ணுகரவந் துறுவர் மாதோ. (கூரு)

தவசுசந் தானம் யாகஞ் சாற்றன தானம் விஞ்சை
யுவமையில் சிராத்த மாமே யுயர்பிரம சரிய மேழு
நவையொழித் தாற்று வோர்க ணவிரேவ பிதிர்க்க ளாகத்
துவசதூ மபாதம் மோடுஞ் சோம்பாப ரோடும் வாழ்வார். (கூசு)

புகல்சிரார்த் தத்தைச் செய்வோர் புதல்வரைப் பெறுத றிண்ணந்
திகழ்பிதிர் சிராத்தத் திர்த்தி யாகின்ற செல்வ மீவர்
தகைமைமா தச்சி ராத்தஞ் சவுமிய ரோடு மிக்காய்ச்
பகரிலௌ கிகரே யுண்டு பலத்தினை யளிப்பர் மாதோ. (கூஎ)

மாதநற் சிராத்த முன்போர் மானிடப் பிதிர்க்கண் மற்றுத்
தீதுறு கரும மாற்றுந் திறத்தினர் சேர்ந்து போற்றுங்
காதலாச் சிரமம் விட்டுப் பிதிர்த்தேவர் கருமஞ் செய்யாப்
பாதகர் வீந்த பின்னர்ப் பரகதி யடையா ராகி. (கூஅ)

விளங்குவர் பிரேத ஞகி வெஞ்சம னுலகஞ் சார்ந்தே
யுளந்தனிற் செய்த பாவ முன்னியே துயரி லாழ்ந்து
களங்கமோ டலர்ந்து தீன ஞகியே கலக்க மெய்தித்
துளங்குரோ கத்த ஞகித் துகிலரை யின்றிப் பாரில் (ஙகூ)

தாகமார் பசியி னேடுஞ் சலபானந் தானு மில்லா
தாகிநீள் வனங்கள் கூவ றடாகங்க ளண்ண லின்றிச்
சோகமாய்ச் சிராத்தத் தன்னஞ் சொல்பிற ரன்னம் வேட்டை
வாகில்லை தாணி கத்தம் வாலுகங் கும்பி பாகம். (ச0)

அவர்மதி தளர மேவு மசுவத திரவன் மாத்தீச்
சுவாலைசான் மலியென் றேதுஞ் சுடுநர கழுந்து வோரைத்
திவாகர னிருளை நீக்குந் தன்மைபோற் றெரிந்து நாளு
முவாமுதற் றினங்க டம்மி லுற்றகோத் திராா மத்தால். (சக)

தருப்பணம் பிண்ட மாற்றிற் சாருமன் னவர்க்குத் தானே
யுருப்பெறு தாப ரங்க ளோங்குசங் கமங்க ளென்னுங்
கருப்பட வுதித்தா ரேனுங் களங்கமில் சிராத்தந் துய்ப்பர்
விருப்பினல் வழியிற் றேடுந் திரவியம் வேண்டு மன்னம். (சஉ)

மந்திரந் தவறு தீயின் மருவுநற் பிதிர்கட் காகும்
பந்தமார் குழுவி னுற்ற பசுத்தன்கன் றறிதல் போலச்
சிந்தைகூர் சிராத்தந் தத்தம் பிதிர்க்களைச் சேரு மாற்சீர்
புந்திகூர் சனற்கு மாரர் சிராத்தமே பொற்பா மென்ருர். (சங)

சுக்கில பக்கங் கங்குற் சொல்பக லபர மான
பக்கமே யவர்கட் காகும் பகர்மதி தானே தேவர்
தக்கநற் றேவர் சாற்றும் பிதிர்க்களு மொன்றுக் கொன்று
மிக்கதே வருமாய் மேவிப் பிதிருமாய் விளங்கு வாரால். (சச)

கானுறு வானிற் றேவர் பிதிர்க்கணங் கருதி வாழ்வர்
மானுடப் பிதிர்க்க டேவர் பிதிரென மன்னு வார்க
ளூனமில் பிதிர்க்க ளோடு பிதாமக ருரைக்கு நீதி
தானுறு பிதிர்பி தாம கராமெனச் சாற்று மின்னேர். (சரு)

சோமப றென்றே யோதும் பிதிரெனச் சொல்வர் மிக்கா
யேமுறு பிதிர்கண் மான்மிய மிலங்கவிப் புராணத் தன்றித்
தாமுற வுரைத்தி லேமென் றுரைத்தனர் தரும்வி யாச
ரேமுறு சோமன் வெய்யோ னிவருடன் புரூவ வாவே. (சசா)

கூடிய வகைச்சி ராத்தந் தருப்பணங் கூர்பி திர்க்க
ளூடியே யடையு மாறு நவின்றநற் பருவ காலந்
தேடியர் தனைத்தா னங்க டெரித்திவை சுருக்க மாகப்
பாடுற வுரைத்தே நித்திய மாமிவை பகருங் காலை, (சஎ)

விரித்திவை யுரைக்க லாகா தென்பதை விரும்பி மட்டா
யருத்தியோ டுரைத்தேன் போற்ற லறிஞர்தங் கடனே யாகு
மருத்தொடைச் சுவாயம் பூமன் வந்தர மாதி யந்த
முரைத்தன னென்றே சூதன் முனிவரர்க் குணர்த்தி னானால். (சஅ)

நாற்பத்துநான்காவது

புரூரவா மகிமை யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், ககஅக.

நாற்பத்தைந்தாவது

மன்வந்தரானு கற்பத்திற் சக்கரவர்த்தி

லட்சணமுரைத்த வத்தியாயம்.

சூதமுனி வரன்முகத்தைத் துகளறுமா முனிவரர்தாந் துலங்க நோக்கி
யேதமிலா மன்வந்த ரானுகற்பச் சக்ரவர்த்தி யிலக்க ணத்தை
நாதமுறு கடலுப்பண் மச்சவடி வெடுத்தருளு ராய னன்று
னீதமுறு மனுகேட்ப நிகழ்த்துமுறை நிகழ்த்துகென நிகழ்த்து வானால். (க)

வளங்கொள்யுக நான்குமுனம் பூகோளப் பாரதநல் வருடந் தன்னில், விளங்கவுரைத் திலம்விரிப்பாம் விழியிமைத்தல் பதினெட்டோர் காட்டை யந் தக், களங்கமின்முப் பதுகாட்டை யோர்கலையக் கலைமுப்பான் கணமொன் றாகு, முளங்கொள்கணம் பன்னிரண்டை யோர்முகுர்த்த மெனப்பெரியோ ருரைப்பர் மாதோ. (உ)

மொழிமுகுர்த்த மொன்றிரண்டு கடிகையதா முகுர்த்தமுப்பா னொருநா ளாகு
மொழிவருமத் தினமொன்றைப் பகலிரவாய்ச் சூரியனே யுளுற்று விப்பான்
விழியுறக்க மிருட்போது விதிக்கருமம் பகற்போதும் விளைத்தே யாயுட்
கழிவுறச்செய் வார்மனுடர் கழறுதின முப்பானோர் திங்க ளாமால். (ங)

மானுடருக் குறுமாதம் வருபிதிர்கட் கோர்தினமாம் வருமுற் பக்க
மூனமிலாப் பிதிர்க்கிரவாம் பிற்பக்க முயர்பகலா முரைக்கு மாந்தர்க்
கானதிங்கட் பன்னிரண்டோ ராண்டாண்டு முப்பதுமே பிதிர்க்குகா ராண்டா
நானிலத்தோர் சதவருடம் பிதிர்வருட மூன்றினொடு நான்குதிங்கள். (ச)

மாந்தர்க்குச் சொல்வருடந் தேவருக்கோர் நாளாகு மருவு மந்நாள்
போந்தவுத்த ராயணமே பகற்போதா மிருட்போது புகலுங் காலை
யாய்ந்ததெக்க ணயனமா நரர்வருட முப்பதுவிண் ணவர்க்கோர் மாத
மேய்ந்தநர வருடமுந்நூற் றறுபஃதோர் வருடமென்ப ரிமைப்பி லோர்க்கே. (ரு)

இயன்றமானுட வருடமூன் றிலக்கத் தறுபதி னாயிரம்விண் ணோர்க்குப்
பயன்றருமா யிரம்வருட மென்பர்முழுக் கணக்குணர்ந்த பனுவ லாளர்
வியன்கொளுமா னுடவருட முப்பத்தா றுயிராமவ் விண்ணு டர்க்கு
நயம்பெறுநா ளுண்டாகு நான்குயுகத் தளவைபெயர் நவில்கிற்பேமால். (௬)

ஆதியுகங் கிருதமிரண் டாவதுதி ரேதயுக மடுத்த மூன்று
யோதும்யுகந் துவாபரநான் காவதுவே கலியுகமென் றுரைப்பர் மேலோர்
நீதிபெறுங் கிருதம்விண்ணோர் வருடநா லாயிரமா நிகழுஞ் சந்தி
தீதினுனூ றுண்டாம் யுகசந்தி யாங்கிசம் வருடந் திகழ்நா னூறே. (எ)

சாற்றுதிரே தாயுகமூ வாயிரமாண் டந்தயுக சந்தி முந்நூ
றேற்றியநல் வருடமாஞ் சந்தியாங்கி சமுமுந்நூ றெனுமாண் டாகுந்
தோற்றுதுவா பரமிரண்டா யிரம்வருட மிருநூறு தொகையாண் டாகும்
போற்றுசந்தி சந்தியாங் கிசமிரண்டு சதவருடம் பொருந்து மாதோ. (அ)

சார்கலியா யிரவருடஞ் சந்தியொரு நூறுண்டு சந்தி யாங்கிச
மோருமொரு நூறுண்டாம் யுகநான்கு சந்தியாங் கிசமு மொப்பச்
சேர்தொகைவிண் ணவர்வருடம் பன்னீரா யிரமாகுந் திரைப்பார் மாந்தர்க்
கேருறுநாற் பத்தின்மூன் றிலக்கமிரண் டயுதமாண் டென்பர் மாதோ. (௯)

இப்படியோர் சதுரயுக மெழுபத்தோர் தரமெய்தி யிவற்றின் மேலு
முப்பதுடன் மூன்றிலக்கத் தீராறுயி ரத்தெண்ணூற் றெண்பான் முற்றத்
தப்பில்வரு டமுமாறு திங்களுஞ்சென் றுன்மனுவந் தரமொன் றெய்துஞ்
செப்புமன்வந் தரத்திலகு நரர்வருடத் தளவையினைத் தெரிக்குங் காலை. (௧0)

அயர்வின்முப் பத்தொருகோடி முப்பத்தி ராயிரமா மவற்றின் மேலு
மியையுறுமெண் ணூற்றெண்பான் வருடத்தோ டாறுதிங்க ளென்பர் மேலோர்
செயமுறுமிம் மனுக்காலம் பதினான்கு சென்றிடிலோர் கற்ப மாகு
முயர்தருமோர் கற்பத்தி னளவையினை நரர்வருடத் துரைக்குங் காலை. (௧௧)

செம்மைபெறு நானூற்று முப்பதின்மே னூற்கோடி சிறந்து மேலும்
விம்முறுமோர் நாலிலக்கத் தறுபதினா யிரத்தோடு மிளிர்முந் நூற்றே
டும்மிருபத் தேழெனுமாம் வருடமெனத் தொகைப்படுத்தி யுரைப்பர் மேலோ
ரம்முறைமி னுரைத்தகற்ப மிரண்டுசென்றாற் பிரளயமென் றறைவர் மாதோ. (௧உ)

இலங்குபிர ளயகால மெண்ணூற்றி னறுபதின்மே லெட்டுக் கோடி
யலகுறுமொன் பானிலக்கத் திருபதினா யிரத்தறுநூற் றைம்ப தோடுங்
குலவியநால் வருடமுயி ரிறத்தலினாற் பிரளயப்பேர் கூற லாமா
னிலவுயுக நான்கினுக்குட் கிரேததிரே தச்சொருப நிகழ்த்து வேமால். (௧௩)

சொல்லியதி ரேதசே டந்துவா பரங்கலியின் சொருபந் தன்னை
யல்லலிலா துரைத்தனமா லவையிரண்டும் வேறுக வறைய லாசா
வொல்லைமுன முரைத்திடுங்கான் மனுமரபிற் பிரசங்க முரைக்க லானோம்
வல்லவிவை வரன்முறையின் வகைதெரிந்து வகுத்துரைக்க மறந்திட் டேமால். ()

இனியுரைப்பாந் திரேதயுக சேடத்தைத் திரேதாதி யினிலிருந்த
மனுவொடுமே ழிருடிகளும் பிரமாவால் வகுத்துரைத்த சிரௌத தன்மம்
வினவியதோர் சிமார்த்த தன்மம் விளம்பினு ரவற்றுணல் வேத மோத
றனிமகமக் கினிகருமந் தானமுத லானவெலாஞ் சிரௌத தன்மம். (கரு)

அருண்மிகுத்த தவத்துயர்ந்த சத்தவிரு டிகளறைந்தா ரகில லோகத்
தொருவருக்குந் துரோகமின்மை வருணதன்ம மாச்சிரமத் தொழுகுந் தன்ம
மருவுமிவற் ருசார முதலிய சிரார்த்தன்ம வகையா மென்றே
பெருகும்வினைப் பயனொழித்தே சுவாயம்பு மனுமுன்னாள் பேசி னுனல். (கசு)

சத்தியமெய்ப் பிரமசரி யஞ்சுருதி சாத்திரங்க டவமி வற்று
லொத்தவிரு டிக்கிரமந் தப்பாத முனிவரெழு வோர்கள் பாரிற்
சுத்தமக லாதமா னுடரிடிக ளின்னோர்க்குச் சொற்றி ரேதம்
வைத்தயுகா தியினியல்பாய்ச் சிவணிடத்துற் பவித்தபல மறைக்கு ழாங்கள். ()

அருடார காதிதெரி சனங்களால் வரப்பெற்று ராதி கற்பத்
திருளறும்விண் ணவர்களுக்கவ் வேதமந்தி ரங்களெலா மியல்பாய் வந்து
பெருகுபிர காசமா யினபின்பு தருமமெல்லாம் பிழைபட் டேகி
மருடன்ம முற்றியம்பு மந்திரங்க ளில்லாமன் மடமை பூண்டே. (கஅ)

ஆயிரமா யிரங்கற்ப மழிந்தபின்னர் மந்திரங்க ளனைத்தும் விண்ணோர்
தூயபுந்தி தனிலுதித்தே யிருக்கெசுரு சாமமத ருவணஞ் சொற்ற
மேயசதுர் வேதமந் திரங்களையோர் முனிவரர்கள் விரித்தார் பின்னுஞ்
சேயசிமார்த் தத்தைமுன்னாள் சுவாயம்பு மனுவுரைத்தான் றெரிந்து தானே. (ககூ)

சகலதரு மங்களுக்குங் காரணமாம் வேதங்க டாமொன் றாகி
மகிமைபெற வினிதிருக்கு மவையனைத்தும் பாங்ககன்வை ரும்போ தெல்லாம்
புகல்வயது குறைவுறலால் வியாசமுனி பிரித்துரைப்பான் பொருவின் ஞான
மிகுதவத்தோ ரொருதினத்தின் வேதங்க ளனைத்தினையும் விரும்பிக் கற்பார். ()

யுகதரும மிஞ்சாமல் விரித்துரைக்கும் வேதத்தி லுண்மை யாகி
யகமுறுமந் திரசெபமே யந்தணர்க்கு மகமாகு மரசர்க் கொன்னு
ரிகல்புரிவெஞ் சமர்மகமா மெழில்வணிக ருக்குவா ணிபமே யாகுந்
தகுமுழவர்க் குழவுபரி சாரகமே யாகமெனச் சாற்ற லாமால். (உக)

ஆதலால் வருணமுறை தப்பாம லந்தணர்சொ லரசர் கேட்பார்
நீதிபுரி மன்னர்மொழி நெறிதவரு ர் வணிகர்புவி நிகழ்த்து நாலாம்
பேதமுறு பின்னவர்முன் னவர்சொன்மொழி நடந்துமகப் பேறுண்டாகி
யோதுசுகஞ் சீராயு டரும்புத்தி யுடையவரா யுவந்து வாழ்வார். (உஉ)

வருணதரு மத்தினையே யனுசரிக்குங் கருமத்தை மனத்தி னெண்ணி
னுரிமைபெறச் சித்திக்கும் வாக்கினு னுரைத்தபின்ன ருஞற்ற வேண்டாந்
தெருளுறுநன் மேதையுண்டா மம்மேதை யின்பொருளைத் தெரிக்குங் காலைக்
கருதுருவம் பலமாயுள் கன்மபுத்தி தருமமெனக் கழறலா மால், (உரு)

அம்மேதை யென்றுரைக்கு மரும்பொருளே சரியாகு மனைவோ ருக்குந்
தம்மேத மகல்வருணாச் சிரமவிதி தவறாமற் றான்செய் தாரா
லிம்மேதை விதியிடத்தி லுபதேசங் கேட்டபடி யிருடி மார்கள்
செம்மேதைச் சங்கிதைகண் மந்திரங்கள் செப்புமுறை செய்தா ரன்றே. (௨௪)

அவியருந்து மகவானு மமரர்களும் விதிமுறையே யளிக்குந் தானங்
கவினுறுசத் தியசெபங்க ளுபகரண மனைத்தினையுங் கருத்தி னோடு
புவிபுரக்குஞ் சுவாயம்பு மனுவந்த ரத்தின்முன் னாள் புரிதல் போலத்
துவிதமொடு மொருசெந்தீ வளர்யாக வினையதனைத் தொடங்கி னால். (௨௫)

சத்தியமு தறிவொழுக்கஞ் சபதபங்கூர் தானமுன்னாள் செய்த தன்மங்
கொத்துறுமத் தன்மங்கள் குறைந்துகொலை புரிமகத்தின் கொள்கைத் தன்மம்
பத்தியொடு வளர்ந்துறுங்கா லாயுளொடுஞ் சுரராய பகரு மேன்மை
யொத்தமகா பலத்தெதிர்த்த வொன்னாரை யொருக்குமடல் யோகம் யாகம். ( )

செய்வதற்கு முரியவராய் பிரமவா திகளாகிச் செய்ய தோட்டத்
துய்யதா மரைவிழியுஞ் சுடர்க்கலன்சேர் மணிமாலைத் துணைப்பொற் றோளும்
வெய்யமத கயநடையும் வில்வலியு மாசானு வாகு நான்கு
கையின்முழ வளவுமகன் றுயர்மார்புஞ் சுவாயம்பு காலந் தன்னில். (௨௭)

உளவான திகிரிமுத லியபடையு முத்தமபத் தினிக ளோடும்
வளமான நிதியுமணி யுந்தேரும் வாம்பரியும் மதக்கை மாவுங்
கிளர்கால மூன்றுமுணர் பெருமையுமின் பமும்விறலுங் கீர்த்தி தானுந்
தளராத வணிமாதி செல்வமுஞ்சாத் திரமுமறைத் தகைமைப் பண்பும். (௨௮)

மெய்யின்மயிர் மேற்கிளர்வு மெண்சிகையும் பச்சொளியு மேன்மை நாவு
மொய்கொளென்புத் தோன்றாத தசையுடலு மகனுதலு முளைத்த நான்கு
துய்யபிறை வாளெயிறு நற்குலமு முட்பன்றித் துணைக்கை போலுங்
கையிணையும் விடைக்கவினுஞ் சிங்கத்தின் கழுத்தனைய கழுத்து மல்லால். (௨௯)

அங்கையிற்பங் கயரேகை சங்கரே கையுங்காலி லாழி ரேகை
துங்கமச்ச ரேகையுமந் தரசொர்க்க பாதலந்தொல் கடல்வெற் பேழ்தீ
வெங்குமியங் கிடுதிறனு மிருநிலத்திற் றவந்தானம் யாகம் வாய்மை
தங்குபொறை நிலைநிறுத்துந் தன்மையும்விண் டுவின்கலையைத் தரிக்குஞ் சால்பும்.

தருமமரும் பொருளின்ப முத்தியிவை மாறின்றிச் சாருஞ் சீரு
மொருவருந்தம் மிலக்கணத்துக் கொவ்வாத விலக்கணமு மும்ப ராலும்
பொருவிலசு ரர்களாலு மழிப்பரிய பெருவலியும் புகலு மாயுண்
மருவுமொரெண் பத்தையா யிரம்வருட மகிழ்வாகி வாழு நாளும். (௩௧)

உடையவரா யுதித்துச்சக் கரவர்த்திப் பெயர்பெற்றே யுயிர்கட் கெல்லா
மிடையூறு தவிர்த்துமணி முடிபொறுத்து மதிவட்ட மிலங்கு மொற்றைக்
குடைநிழற்கீ ழுலகமெலாங் குளிர்வித்து மனுமுறைசெங் கோன டாத்தி
யடையலர்க டிறையளப்ப வரியணைமேல் வீற்றிருந்தே யகிலங் காப்பார். (௩௨)

அந்தயுகத் துள்ளபிர சைகண்மூவா யிரவருட மமர்ந்து சாலப்
புந்திகளி கூர்ந்துநல்ல புத்திரரும் பவுத்திரரும் பொருந்தி வாழ்ந்தே
நந்தலிலாப் பரலோக நண்ணுவர்கள் யுகசந்தி நணுகுங் காலை
முந்துதிரே தத்தரும நாலிலொன்றே யிருக்குமென மொழிவர் மேலோர். (௬௬)

இந்தமுறை திரேதயுகத் தருமமெலா மச்சவடி வெடுத்த மாயன்
சிந்தைமகிழ்ந் தேமனுவுக் குரைத்தபடி யேமிகவுந் தெளிந்தே மாயப்
பந்தமறுத் திடுமுனிவர் கேட்டுள்ள மகிழ்சிறப்பப் பரிவி னோடுஞ்
சந்ததமும் வேதவியா தரைப்போற்றுஞ் சூதமுனி சாற்றி னானால். (௬௭)

நாற்பத்தைந்தாவது

மன்வந்தரா னுகற்பத்திற் சக்கரவர்த்தி லட்சண முரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ௧௨௨௬.

நாற்பத்தாறுவது

தேவரிடி சம்வாத வத்தியாயம்.

சூதமா முனிவ னோக்கித் துலங்கிய திரேதந் தன்னி
லோதிய மகங்க ளாற்று மேல்வையி லுயர்வான் றேவர்
மாதவர் சம்வா தத்தை வகுத்துரை யென்ன ஞான
மூதறி வுறுவி யாத முனிவனை வழுத்திச் சொல்வான். (௧)

மந்திரஞ் சுருக்கி யாகம் வகுத்தனர் வகையா யோதின்
முந்திய கிருத மென்னும் யுகசந்தி முடிந்த பின்னர்ச்
சந்திபோய்த் திரேத மென்னுந் தனியுகம் பொருந்த நாளு
நந்தலின் மழையான் மிக்க நால்வகைப் பயிர்க ளோங்கி. (௨)

பூமியி னகர நாடு புகழ்பெறு செல்வ மிட்ட
காமியம் பொருந்த வேத மந்திரங் கருமந் தப்பா
தேமக வானே மூன்று லோகமுஞ் சிறப்பக் காத்தே
யோமமா ரசுவ மேதந் தொடங்கியே யுஞற்றும் போதில். (௩)

முனிவர ரனேக ருற்றூர் மொழிந்திடும் யாக கன்மந்
தனியிருத் துக்கள் செய்யத் தான்வேண்டு மவைக ளெல்லா
மினிமையி னமைக்க வைத்து வரியுமுன் னியற்ற வோமம்
புனிதநால் வேத கோட்டஞ் சுரத்தொடு புகலுங் காலை. (௪)

புகலத்து வரியு வான புருடர்க டிரிந்து சுற்றத்
திகழுறும் புரவி யாகஞ் செயற்குறு பசுக்க ளெல்லாந்
துகளறு யூபர் தோறுந் துன்புறக் கட்டி யோதா
மகமதிற் புசிக்குந் தேவர் வருகவென் றழைக்குங் காலை. (ரு)

சிறந்தகற் பாதி யுள்ள தேவர்சீர் மகவா னுண்ண
விறைஞ்சியே யிமையோ ராதி யிந்திர னிழைக்கும் யாகத்
தறைந்திடு யூபஞ் சேர்த்த பசுவெலா மலக்க ணெய்தி
நிறைந்தவெந் துயரி னாழ்ந்து நிலைதடு மாறும் போதில். (சு)

தவமொடு கல்வி ஞானத் தலைவரா முனிவர் நோக்கிப்
புவனியிற் பசுக்க டுன்பம் பார்த்துளம் பொறுர்க ளாகிக்
கவலையுற் றசுவ மேத முஞற்றுகற் பத்தின் மென்பூத்
திவளொளி யலங்கற் றிண்டோண் மகபதி யிடத்திற் சென்றே. (எ)

என்னகா ரியத்தைச் செய்தா யீதுநற் செய்கை யன்றுன்
மன்னிய பசுவைக் கோறன் மத்திம மதம மாகத்
துன்னுமிக் கரும நீத்துத் தருமமே துலங்க வேண்டிற்
பன்னுமோ ராக மத்தின் படியாக மியற்றி னன்றும். (அ)

சீவனைச் செகுத்த லாலே தருமங்க ணசிக்குஞ் சீர்த்தி
தாவுசீ ரவியால் யாகந் தனிலுமக் கார ணங்க
ளாவதோர் தரும மத்தங் காமிய மாமிம் மூன்றும்
பாவகத் தளிக்கு மிந்த வேதமும் பலனென் றில்லை. (கூ)

பொருவிலா கமத்து யாகம் பிரமாவும் பூரு வத்தி
னருமையி னாற்றி மிக்கா யடைந்தனன் பலனு நீயும்
வரன்முறை வழுவச் செய்யே லென்னலு மகவா னுள்ளத்
துரமுறு மாங்கா ரத்தா லுட்கொளா திருக்க வாங்கண். (க0)

முனிவர்புத் தேளிர் சேர்ந்து மொழிந்ததா பரங்க ளாலு
மினியசங் கமங்க ளாலு மியற்றலாம் யாக மென்றே
நனிபெறு சம்வா தத்தி னவின்றுதர்க் கிக்குங் காலைப்
புனிதத துவங்கள் யாவும் புகரறப் போற்றி னோராம், (கக)

மாதவர் வாதி னேர்ந்து கேசர வசுவைப் பார்த்துத்
தீதிலுத் தான பாத குமரனீ செய்யும் யாக
நீதியை யுரைத்தி டென்னப் பலர்பல நிச்சி யாம
லோதிய பசுக்க ளாலு முயர்மரப் பழங்க ளாலும். (கஉ)

கந்தமூ லங்க ளாலுங் கருதிய காய்க ளாலுஞ்
சிந்தையா னினைந்த வண்ணஞ் செய்யலாம் யாகஞ் சீவ
னந்துறிற் கொலையா நல்ல தவத்தினை நயந்தே யாற்றி
னிந்தனை யொழியுந் தார காதினி தெரிச னத்தால். (கங)

ஞானமா முனிவர் கண்ட நல்லமந் திரங்க ளாலே
தானுறும் பசுப்ப டுத்த றக்காற் பிரமா ணந்தான்
யானறிந் துள்ளே னீங்க ளெண்ணியோ சனைகள் செய்மின்
வானுறு மந்தி ரங்கள் வாக்கியம் பிரமாண மாமால். (கச)

கொண்டிலிர் வேதங் கூறும் யாகமும் பிரமா ணந்தான்
புண்டரீ கத்தோன் வேதம் வாக்கியம் பொய்யன் றென்னை
வண்டிறன் முனிவ ராஞேர் மேல்வரு மாறு நோக்கித்
தண்டலில் புவியில் வீழச் சபித்தனர் சபித்த லோடும். (கரு)

தரைத்தலத் தன்னேன் வீழ்ந்து சஞ்சரித் திட்டான் மேன்மை
யருட்பெறுந் தருமம் யாவுந் தேர்ந்தினி தறிந்தா ரேனு
மொருத்தராய் விதியி னைத்தேர்ந் துரைத்திட லாகா முன்னேர்
தெரித்திடு தரும நுட்பந் தெரிந்தினி துரைக்கற் பாற்றே. (கசு)

மன்னிய சுவாயம் பூவா மனுவினை யன்றி வானோர்
துன்னிய் ரிடிகள் யாருந் தொகுத்திளி துரைக்க மாட்டார்
முன்னருந் தவத்தோர் சொற்ற முறைபுரி யாகந் தன்னிற்
பன்னிய வுயிரைக் கோறல் பழுதெனப் பகர்வர் மாதோ. (கஎ)

தவம்புரிந் தனேகர் முன்னந் தருநிழ லணுகு மாற்றாற்
பவங்கெடப் புரிந்த ஞான முனிவரர் பகரும் யாகங்
கவர்ந்திடு தானம் யாவுங் கருத்துற மதித்தி யாரு
நிவந்துஞ்ச விருத்தி மூல பலமிலை நிறைநீர்க் கும்பம். (கஅ)

இயன்றிடு தான மிந்த வகையினாற் சுவர்க்க மெய்தி
முயன்றுறு பலன்க டைப்பார் தருமத்தின் மூலந் தேரிற்
பயன்றருந் துரோகம் வஞ்சம் பழியொடு முலோப மின்றி
நயந்தவிந் திரிய மைந்து மடக்கியே நாளும் வாழ்தல். (கக)

சத்தியப் பொறுமை பூத தயைபிர மசரி யஞ்சீ
ருய்த்திடு தவங்கொல் லாமை யொழிவுளத் தைரி யந்தான்
வைத்திடு மிவையாஞ் செம்பொன் மந்திர மகச்சொ ரூப
மெய்த்தவ மகத்தின் பேற்றால் விளங்கிய சுவர்க்க லோகம். (உ0)

அரியமெய்த் தவத்தின் பேற்று லமர்வைபா ராச லோகம்
கருமசன் னியாசப் பேருங் கருதரும் பிரம லோகம்
பெருவயி ராக்கி யத்தின் பேறெடுத் தியம்புங் காலை
வருபிர கிருதி மாயை யொருவிமா லயத்தைச் சேர்தல். (உக)

சுத்தமெய்ஞ் ஞானப் பேறு சொல்லரு முத்தி யாகு
மெய்த்தகு கதியின் பேத மைந்தென வியந்து கூறி
யத்தகை வசுவின் வார்த்தை யதிலனு தாவு பண்ணி
மொய்த்தமா தவத்தோர் விண்ணோர் முதல்வனைக் கண்டு பேசி. (உஉ)

தரித்திடு சுவாயம் பூமன் வந்தரந் தன்னிற் றங்க
ளிருப்பிடஞ் சென்று சேர்ந்தா ரிமையவர் யாகஞ் செய்தா
ரருத்திகொள் பிரகட் சத்தி ரன்முத லான வேந்தர்
தெரித்தநற் றுருவன் மேதா திதியொடுத் தான பாதன். (உ௩)

பிரியவி ரதன்றத் தன்மாப் பிராசீன பருகி வென்றி
விரசனற் சங்க பாலன் விறற்செயன் றிரிசு வர்ய்மை
மருவவிர்த் தாமன் கீர்த்தி வயங்குபற் சன்னி யன்றுன்
தெரிதரு மிவர்கண் மிக்க தவஞ்செய்தே சுவர்க்கஞ் சார்ந்தார். (உ௪)

இரும்புவி தனிலி ராச விருடிகள் கீர்த்தி யின்னம்
பொருந்தின வதனல் யாக மாம்புகழ் தவமே மிக்கா
மருந்தவ மதனல் வேத னம்புவி படைத்தான் யாகந்
திருந்திய தவமு மிந்த வுலகத்திற் சிறந்தே முன்னாள். (உ௫)

வளங்கெழு சுவாயம் பூமன் வந்தரந் தனிலுண் டாகி
விளங்கின வன்று தொட்டு விரித்தன யுகங்க டோறுங்
களங்கமின் முனிவி ரென்றே கருதுறும் வேத நூலை
யுளங்கொளும் வியாதற் போற்றி யுரைத்தனன் சூதன் மாதோ. (உ௬)

நாற்பத்தாறவது

தேவரிடி சம்வாத வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், ௧௨௪௬.

நாற்பத்தேழாவது

மன்வந்தரயுக வர்ணனை யத்தியாயம்.

பரமுற மகங்க ளாற்றிப் பழமறைப் பனுவ றோர்ந்த
வரமுனி வரர்கள் சூத முனிமுக நோக்கி மன்வந்
தரயுக வன்ன னத்தைச் சாற்றென வியாதற் போற்றிக்
கரகம லங்கள் கூப்பிக் கனிவொடு மினிது சொல்வான். (௧)

உரைத்திடப் படுந்தி ரேதா யுகமது முடிந்த பின்னர்
விரித்திடுந் துவாப ரந்தான் விளங்கிடு மதனின் முன்னு
டெரித்திடு திரேதத் துள்ள தருமமே சிறக்குங் காலைத்
தரித்திடு தவங்கள் குன்றுந் தராபதி பிரசை யுண்டாம். (௨)

வாணிப மூழவு லோப மாறுகொள் பகைபோர் செய்ய
வீணுறு தண்டம் யாத்திரை மேவுபல் லுயிரி டுக்கண்
பூணுறு கெருவத் தம்மைப் போன்றிடா சமான மெய்தல்
பேணுறு மிவைக ளுண்டாம் பிறங்கின வந்தர் தன்னில். (௩)

செய்வினைத் தரும மில்லைச் சிறந்திடு திரேதந் தன்னி
லுய்வகைத் தரும முண்டா மோங்கிய துவாப ரத்தின்
மெய்கெடக் கலங்கும் பின்னர் விளங்கிய கலியு கத்திற்
பொய்மிகத் தரும மாண்டு பொருந்திடு மதன்மந் தானே. (௪)

மருவிய துவாபரத்தில் வருணமாச் சிரம நான்கு
மருகுறு மிருதி வேத மிரண்டுபட் டடைத லாலே
தெருளுறத் தருமம் யாவுந் தெரிந்துநிச் சயமாய்த் தோன்ரு
பெருகிய மதிபே திக்கும் பிறங்குசாத் திரங்க ளெல்லாம். (௫)

ஒன்றுரைத் திட்ட வண்ண மற்றொன் று முரைத்தி டாதாய்த்
துன்றிட வீற்று வீற்ருய்த் தொகுத்தினி துரைக்கு மொன்ருய்
நின்றிடும் வேகந் தன்னை நிகழ்துவா பரத்தின் மூன்ருய்க்
குன்றிடு கலியி ஞன்காய்க் குவலயந் தன்னில் வேருய் (௬)

தொடுத்தனன் வியாத னிந்தத் தொல்லுல கத்து ளோர்க்குப்
பகுத்தறி வாயு ளற்பப் பான்மையான் முனிவர் பின்னு
மிகுத்துமந் திரங்க ளென்னும் விதிப்பிர மாண மென்று
மகித்திடு மர்த்த வாத மென்றுமே வழங்கச் செய்தும். (௭)

இருக்கொடு மெசுரு சாம மிவற்றிற்சங் கிதைக ளென்றும்
பெருத்திடு சமானத் தோடு பேதமாய்ப் பிரிப்பர் மற்று
மருத்திகொள் சற்ப சூத்தி ரங்களுக் கருத்த மன்றித்
தெரித்திடு பாடை தோறுஞ் செய்துள வித்தை யாவும். (௮)

தோன்றிய வாறு செய்வர் சொல்லத்து வரியூ சாகை
யேன்றிடு மெசுரு வேத மியைந்தபூ ருவத்தி லொன்ரு
யான்றபின் னிரண்டாய்த் தோன்றி யபேதமாய்ப் பேத மாகி
யூன்றிய பொருளாய்ப் பின்னு மூலகிடைக் கலங்கிற் றன்றே. (௯)

பின்னரு மனேக பேதம் பெற்றதா லதனைப் போல
மன்னிய சாம வேதம் வருமத ருவண வேத
மென்னுமிவ் விரண்டு மத்த மியல்பல பேத மாகி
நன்னில மதனிற் ருேன்றி நசிக்குமப் பொருள்க ளெல்லாம். (௧௦)

துலங்கிய துவா பரத்திற் சுருதியி னத்தம் வேருய்க்
கலங்கியே கருத்தி லைய முற்றுப்பின் கருது வேத
மிலங்கிட வேறு வேரு யியன்றிடு மென்பர் மாக்கள்
பலங்கெழு விசுவா சத்தை நீக்கியே பவத்தி லாழ்வர். (௧௧)

வேதநிச் சயமாய் மாந்தர் விசுவாசித் திடாமை யாலே
தீதுற மறுக்கும் வானந் திரிவித கரண துக்கம்
வீதனைய் வருத்த முண்டா மனத்தினில் வெப்பந் தோன்றும்
போதுளத் தெண்ணந் தோன்றப் புகும்வயி ராக்கி யந்தான். (௧௨)

வரும்வயி ராக்கி யத்தால் மருவுமில் வாழ்விற் றேடந்
தெரிவுறக் கண்டு ஞானந் தேக்குற நீக்கி நான்கா
முரியவாச் சிரம தன்ம மோர்ந்தன னின்றும் வாழ்நாள்
விரிவெலா நன்கி னூற்றி வீடுற நினைப்ப ரன்றே. (கஙு)

முந்திய சுவாயம் பூமன் வந்தர முதன்மை நாளில்
வந்துறு துவாப ரத்தின் மன்னுசாத் திரங்க ளாதி
தந்துறு மாயுள் வேதந் தனிற்பல பேதங் கற்பத்
தாந்துசூத் திரத்தி னோடு கணிதமிங் குரைத்தற் கெல்லாம். (கச)

பிரிவுறு சமமாய் வேறு தர்க்கசாத் திரபே தங்க
ளுறுதியா மெசுரு சாத்திர முயர்கற்ப சூத்தி ரங்கண்
மறுவிலா மிருதிபேத மற்றுள விஞ்சை பேத
நிறைபிர தான வித்தைத் தொகுதிநீத் துணர்வி னாலே. (கரு)

உற்றிடு மனமே வாக்குக் கருமமாங் கொத்தி ராது
தெற்றிய முயற்சி தன்னாற் செய்பயிர் சித்தி யாகு
முற்புக றுவாப ரத்தின் மொழிந்திடு மான்மா வெல்லாம்
பற்பல தவத்தாற் காயக் கிலேசமே படுத்து லோபம். (கசு)

பகர்ந்திடு வியாபா ரங்கள் படைபொரல் தத்து வத்தி
னிகழ்ந்திடு நிச்ச யங்க ணிறைகல்வி யோத னீத்த
றகுந்திறற் றருமங் கூடுஞ் சரங்கரந் தக்கோர் பேதித்
திகழ்ந்திட வருணத் தோடாச் சிரமங்கெட் டிடுதன் மற்றும். (கஎ)

காமமெய்க் குரோத முண்டாங் கருதிய வாயு டானுந்
தோமுறு மிருநூ றுண்டு பூரணந் துவாப ரம்போ
யேமுறு சந்தி யின்மா னுடர்குண வீன ராவர்
தாமுறு தரும நான்கி லோர்பாகஞ் சார்வ ரன்றே. (கஅ)

கலிவருங் காலங் கோறல் களவுபொய் கவடு மிக்காய்
மலிதவஞ் செய்வோர் தம்மை வதைத்திடக் கூடா மாந்தர்
நிலைபெறு தருமஞ் செய்யார் செய்திட நினைப்போர் தாழ்வர்
தலைபெறப் பயிர்கள் செய்யிற் சாரினுஞ் சாருஞ் சாரா. (ககூ)

பசிமெய்நோய் தாகம் வானிற் பயோதர மழைபெய் யாமை
விசையுறு நாட்டு பாதி மேவிடும் வாணு டானு
நிசமிலை யற்ப தேக நிகழவ கீர்த்தி பொல்லா
வசையுற லஞ்சா ரத்தோ டசத்திய மருவு லோபம். (உ0)

மன்னிய வதன்ம முண்டா மறையவர் விதிக ளன்றித்
துன்னிய மகஞ்செய் வோர்க டொன்மறை வழுவச் சொல்வார்
பன்னுசாத் திரங்க டம்மைப் படித்திடா ரொழுக்க மேவு
நன்னெறி நிலாமை யாலே நடுங்கிடு முலக மெல்லாம். (உக)

கொலையபி மான நீத்தல் கோபமொ டசூயை லோப
மலகிலாக் கருவம் யாவு மணுகிடுங் கலக முண்டாம்
பலவில மறையோர் வேதம் பன்னிடார் பண்ணார் யாகம்
விலைசெயும் வணிகர் போல வேந்தருங் கொண்டு விற்பார். (உஉ)

அன்றியும் வட்டி யேற்றம் வாங்குவ ரந்த ணாளர்
துன்றுசூத் திரர்க ளோடு பெறுவர்சொல் லுபதே சங்க
ணன்றிகொ ளாச னம்போ சனநண்ணு சயனம் யாவு
மொன்றிட வுறைவார் வேந்த ருலவுசூத் திரரிற் றேன்றி. (உ௩)

மருவுபா டண்ட ராவர் வத்திரங் காவி போர்த்துத்
திரிவர்சாத் திரங்க ணிந்தை செய்வர்பொய் தானே சொல்வர்
பொருவறு தெய்வ பத்தி பொருந்துவர் சிலர்தன் மத்தைப்
புரிவற நிந்தை செய்வார் சிலர்சிலர் பழைய வேதம். (உ௪)

நன்னெறி தேர்வர் மிக்க நற்றவ வேடங் கொள்வ
ருன்னுசூத் திரர்கள் வேத மோதுவ ரவரில் வேந்தர்
பன்னிய பரிம கத்தைப் பண்ணுவர் பசுக்கள் பெண்டிர்
மன்னிய தனங்கண் மாறி வவ்வுவ ரெவரு மற்றும். (உ௫)

பொறுமையின் மனத்த ராகிப் புருணகத் தியினைச் செய்ய
வுறுவரச் செயலா லாயு ளுருவநற் பலமுங் குன்றிச்
சிறுமையிற் றுன்பஞ் சேர்வர் தீர்க்கமாம் வயது நூறு
பெறுபுவி தன்னிற் றேய்வர் பிறங்கிட வந்து தோன்றார். (உ௬)

கிளர்ந்திடு மதன்மத் தாலே கெட்டிடும் யாக மிப்பாற்
றளர்ந்திடாச் சந்தி சந்தி தருகூற்றின் றருமஞ் சொல்வேம்
வளர்ந்திடு யுகங்க டோறுந் தருமங்கால் வாசி குன்று
முளங்கொள வெந்த வெந்த யுகசந்தி தோன்றி னாலும். (உ௭)

பொருந்திய யுகத்தின் றன்மம் புகலநா ளொன்று நிற்குந்
திருந்திய கலிடந் தத்திற் றிகழ்சுவா யம்பு மன்னன்
றருந்தனி மரபிற் கீர்த்தி சார்பிர மதிப்பேர் பெற்று
வருந்திறற் கற்கி யாகி மாலவ தரித்து மண்மேல். (உ௮)

முப்பது வருட மட்டு முலகிற்சஞ் சரித்து மூர்க்கர்
தப்பிடு மரசர் வாசி தந்திதேர் காலா ளாதிக்
கைப்படை மடியக் கொன்று மறையவர் கைவா ளேந்தி
யொப்பொடுந் திரிந்து சூழ வுலகெலாம் விசயஞ் செய்தும். (உ௯)

கொங்கணம் விராடங் குந்தங் குடகமா ரியங்கன் னடஞ்
சிங்கள மகதங் காசி சிந்துகே கயங்க லிங்கம்
வங்கமொட் டியங்க டார மாளுவஞ் சீனங் கொல்லங்
தங்கும்பப் பரந்துண் டூரங் காந்தாரங் கவிடம் விந்தம். (௩௦)

இவ்வகை முதல தேயத் தெய்திவாழ் மிலேச்ச ராய
செவ்வையில் சதுர்த்த வேந்த ரனேகரைச் சினந்து கொன்று
கவ்வைகொள் யமுனைக் குங்கூர் கங்கைக்கு நடுவண் மன்னி
யவ்வயி னமரு நாளி லருகுசூழ் சேனை யெல்லாம். (௯௧)

தங்களி லொன்றுக் கொன்று சமர்புரிந் திறக்கு மப்பால்
வெங்கலி முடிவிற் சந்தி மேவிய கூற்றிற் பாவம்
பொங்கிய பிரசை யாவும் பொன்றலு மொழிந்து பாரின்
மங்குறு மாந்தர் யாரும் வழங்குறு லோபத் தோடும். (௯௨)

ஒருவருக் கொருவ ரின்றி யொறுத்திடும் வேந்த ரின்றிப்
பெருவியா குலத்தி னோடும் பிரசைக ளூடு நீத்து
மருவிய துக்கத் தோடும் வல்லுயி ரோம்பித் தன்ம
மருகுறக் காமங் கோப மதிக்கிர மிக்கு மண்மேல். (௯௩)

மானமா னந்த நட்பு மரியாதை வணக்க மின்றி
யீனராய்க் குள்ள ராகி வயதுமோ ரிருபத் தைந்தாய்த்
தேனமர் கூந்தற் பெண்டிர் சிறுவருந் திகைக்க நீத்தே
யூனமில் பயிர்கீ ரின்றி யுறுபசி யுடற்ற லாலே. (௯௪)

நீத்தெழின் மிலேச்சர் மன்னு நேசங்க ளெங்குஞ் சென்று
மேத்துறு பலமூ லங்கள் மதுவுட னிறைச்சி துய்த்தும்
வாய்த்துறு கலைத்தோன் மற்று மரவுரி யுடுத்து நீதி
நீத்துநால் வருணத் தோடு நிலைமையாச் சிரமம் விட்டு. (௯௫)

மனைமுயன் மான்வ ராக மற்றுள மிருகம் யாவுந்
தனைதனி லருந்தி யாருஞ் சங்கர சாதி யாகிப்
புனைபடத் திரியு நாளிற் புணரியங் கரைக ளாதி
பெருநதிக் கரைக ளோறும் பிறங்கிய பலத்தி னாலே. (௯௬)

மிருத்ததர் கூட்டங் கூடி விலக்கரும் பசியான் மாந்தர்ச்
செருத்துட னிறைச்சி யுண்டு செம்புனல் பருகி யுள்வர்
வருத்திடாப் புலாலைத் துய்க்கு மயக்கினு லறிவு நீங்கித்
தொகுத்திடு பவமே யீட்டித் துக்கசோ கத்தி லாழ்வர். (௯௭)

முந்திய கிருதத் தேக வருணமாய் முடிந்த வாபோற்
பிந்திய கலியந் தத்தும் பிறங்கிய சாதி பேத
நந்திட வுலகில் யாரு நண்ணுசூத் திரரே யாவ
ரந்தரத் தமரர் மேவு மாண்டொரு நூறு கூறில். (௯௮)

மனிதர்க்கு முப்பத் தாறு யிரமெனும் வருடஞ் சென்று
னனியுறு மனிதர் மச்ச நற்பசுப் பறவை யூன்க
ளினிதுற வருந்திச் சார்பொன் றின்றியே யிறந்த பின்னர்ச்
சினமிகு கால னுண்டு சேடமாய்த் தங்கு மாக்கள், (௯௯)

மாதரை யுவந்து கூடி மகவினை யுயிர்த்துத் தாங்கள்
வீதலுங் கலிபோய் வந்து விளங்குறுங் கிருதந் தோன்று
மீதுறு சுவர்க்கத் தோடு நரகத்தின் மேவி யின்பந்
தீதுறத் துன்பந் துய்க்குஞ் செய்கைபோற் கிருத மாதி. (சo)

யுகந்தொறுந் தேகந் துய்க்கு முறுகலி யுகம்போ யிந்தச்
சகந்தனிற் கிரேதந் தோன்றுந் தன்மையைத் தேருங் காலை
யிகழ்ந்திடு துக்கமுண்டா மிதிற்சம புத்தி யுண்டாம்
பகர்ந்திடு மிதனு லான்மாப் பான்மைதேர்ந் தறிவ னப்பால். (சக)

தருமமே புரிவின் காட்டிற் றழலுறத் தீய்ந்த புற்கள்
வரும்மழை மொழியப் பின்பு வளர்வதே போலச் சொற்ற
தொருகலி யொழிந்தே யாதி யுகமுறும் போதின் மாக்கள்
பெருகுமுற் பத்தி யுண்டாம் பின்வரு யுகங்க டோறும். (சஉ)

வந்ததும் வந்த பின்னர்ப் போயதும் வருவ யாவு
முந்துமன் வந்த ரத்தி னியற்கையு முரைத்தா முன்னர்ப்
பந்தமி லாத சத்த விருடிகள் பகர்ந்த பண்பின்
சிந்தைகூர் மிருதி தன்மத் தில்லறஞ் செய்வ ரன்றே. (சங)

அந்தவேழ் முனிவர் தாமு மறத்தினை நிறுத்த வேண்டி
வந்துமன் வந்த ரத்தின் பதிகளாய் வதிவ ரின்பஞ்
சுந்தரந் தரும மாயுள் சொன்னமா பலநற் காம
நந்தலில் யுகங்க டோறு நாலிலோர் பாகங் குன்றும். (சச)

சொல்லிய யுகங்க ணான்கின் சந்தியைத் தொகுத்துச் சொற்று
மொல்கலி லெழுபத் தொன்றாய் நான்கெனும் யுகங்க டம்மை
வெல்லுமன் வந்த ரந்தா னென்றென விளம்ப லாகு
நல்லதோர் யுகத்தின் றன்ம நவிலுமோர் கிருத மாதி. (சரு)

சாற்றிய வாறு மன்வந் தரத்தினிற் றருமம் யாவும்
போற்றியே யுகங்க டோறும் புகன்மன்வந் தரங்க டாமு
மேற்றிடும் வேறு வேறா யியம்பினேம் பேத மின்றாற்
றோற்றுவர் முன்ன முன்ன மாக்களே யுகங்க டோறும். (சகூ)

இவ்வண மாகு மீரே ழென்னுமன் வந்த ரந்தான்
செவ்வையா சுரியே யாது தானிப சாசி யக்கர்
தவ்வலி லுயிர்க ளெல்லாந் தழைக்குநர் பூர்வ மேபோற்
கவ்வையில் கற்பந் தானும் பூருவத் தியல்பாய்க் காணும். (சஎ)

இப்படி யுகங்க ளெய்து மிலக்கணம் யுகசு பாவ
மொப்புறு மதனுற் கால மளப்பில வொழிந்த பின்னர்ச்
செப்புமன் வந்த ரந்தான் றிருந்துமுற் பத்தி நாசந்
தப்பறக் கூடிச் சீவ கோடிக டங்கு மாதோ. (சஅ)

இக்நெடுங் கால மெல்லா மியம்பிடிற் கணம தாகும்
பின்னர்மன் வந்த ரங்கள் பேசிய வாறு சொல்வே
முன்னிய தவங்க ளாற்றி மும்மல முருக்கு ஞான
நன்னல முனிவர் கேண்மி னென்றுரை நவின்றான் சூதன். (சகூ)

நாற்பத்தேழாவது
மன்வந்தரயுக வர்ணனை யத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். கஉகூஅ.

நாற்பத்தெட்டாவது
இருடி மான்மிய வத்தியாயம்.

அருடின கரனோ ராழி யடலெழு பரியார் தேரை
வருடிநீள் சினைகள் பம்பி வளங்கொளு நைமி சத்தின்
றெருடிரி புண்ட ரத்தாற் றிகழ்நுதன் முனிவர் யாரு
மிருடிமான் மியங்கூ றென்ன வியம்பிடுஞ் சூதன் மாதோ. (க)

முன்வரு கிருதந் தன்னின் முடிவிலா வாயுளோடு
மன்னிடும் பிராணி மற்றத் திரேதநற் றுவாப ரத்திற்
சொன்னதோ ராயு டானுஞ் சுருக்கமாங் கலியு கத்தி
லின்னுயிர்க் காயு ளற்ப மிறந்தனிச் சயிக்க லாகா. (உ)

மானுடர் தமக்குச் சொற்ற கலியினில் வயது நூறு
மீனமி லாத தேவ ரசுரர்மா னிடரி யக்க
ரானகந் திருவர் மிக்க வரக்கரோ டிவர்க ளெல்லாந்
தானுயர் கிருதந் தன்னிற் சரியுடற் பரும னீளம். (ங)

கின்னர ரியக்கர் வித்தி யாதர் கிளர ரக்கர்
மன்னுகந் திருவ ரச்சா சுக்கன்குய் யகர்வாழ் சித்த
ரென்றுமித் தேவ யோனி யெண்வகை யிவர்க ளெல்லா
முன்னுதம் விரலாற் றெண்ணூற் றுறெனு முயரஞ் சார்வார். (ச)

அளவிலக் கணமிவ் வாறு மதிகமுங் குறைவு மற்றொ
ருளமிகு கால தோட மிவ்வண முயர்மாந் தர்க்கும்
கிளர்வொடு குறைவு முண்டாங் கேடினு றுகத்தி லேனும்
வளரள விவ்வா றாகும் வானவர் சீரங் கூறின். (ரு)

அவ்வவர் கரத்தி னாற்பத் தொன்பதங் குலம தாகுந்
தவ்வலி லசுர ராகத் தழைக்கு மெண் பத்தி னான்காஞ்,
செவ்விய விரல்க ளாகுஞ் சென்னிக்குந் திகழ்சா னுக்கும்
வவ்வுமொன் பதுசா ணென்ன மருவிடு முயரந் தானே. (சூ)

தரணியில் யாவர்க் கேனுஞ் சானுவி லங்கை தொட்டால்
வரமுறு மன்னோர் தம்மை வானவ ரும்பூ சிப்பார்
சுரபிமா மகுடஞ் சானே தோற்றுதா பரங்கட் கெல்லா
நிரையுக முறைகு றைந்தும் வளர்ந்துமிந் நிலத்தி லோங்கும். (எ)

ஆவியிற் சிரெட்டஞ் சொல்லி லங்குல மெழுபத் தாறாய்
மேவிட வுயர்ந்த வென்னும் விம்முமும் மதமை மாரி
யோவில்யா னைகளெண் ணூறு விரற்கடை யுபர மாகுந்
தாவருங் கடாப்ப சுக்க ளுன்னத சமமென் பாரால். (அ)

புவனியிற் றுபரங்க ளெனப்புகல் பொங்கர் நீள
நவிலுநா லாயி ரத்து நாற்பத்தொன் பதங்கு லந்தா
னுவமையின் மனிதர்க் கெந்த விலக்கண முளவோ விவ்வா
றவிரொளித் தேவர் மெய்யு மவ்விலக் கணம தாமால். (கூ)

விருத்தியி லதிக மாகும் விண்ணவர் சரீர மில்லா
ரருத்திகொ டேவர் மாந்த ரளவிடையுரைத்தாம் பாரி
லுருத்திகழ் பசுக்கள் யானை யுரைத்ததா பரங்கூர் பட்சி
நிரப்புறு மளவை யுண்டி தொழிலிவ ணிகழு மாபோல். (க0)

தேவர்தம் முலகி னுள்ள தேனுவ யாதி யாவும்
பாவகத் தமையு மேலாய்ப் பகர்ந்திடும் பெரியோர் தம்மின்
மேவுமுத் தமரோ சிட்டர் மிகுபிரா மணர்நால் வேதங்
கோவொழுத் தமமாஞ் சொற்ற குலப்பிரா மணருங் கோவும். (கக)

வீந்திடிற் பிரம சாயுச் சியத்தினை மேவ லாலே
யாய்த்தசத் துக்க ளென்ப ரந்தண ரரசர் மற்று
மேய்ந்திடும் வணிக ரென்ன வியம்புமூ வருணத் தோரும்
வாய்ந்தவாச் சிரம நன்கு வழுவற நெறியி னூற்றி. (கஉ)

மிருதிசொற் றரும மாஞ்சா மானிய தரும மேன்மைச்
சுருதிசொல் விசேட தன்ம மிவைநெறி துலங்க வாற்றிப்
பெருமைசேர் சுவர்க்கஞ் சேர்ந்து பேரின்பந் துய்ப்பர் ஞானத்
தருமமாம் வகையைக் கூறிற் றகவுறு பிரம சாரி. (கங)

குருவினை வழிபட் டேத்திக் கோதற வோதி லன்னோன்
பெருமைசேர் சாது வாவான் பிறங்குமில் வாழ்க்கை யானு
மொருமைசேர் பிரம சாரிக் குதவியில் லறத்தின் றன்ம
மருமையி னாற்றி னானே லவனையுஞ் சாது வென்பார். (கச)

பெருவனத் தமரும் வானப் பிரத்தனுஞ் சாது முத்தி
தருநெறி யாகுங் கூர்சந் நியாசியுஞ் சாது நல்ல
கருமமே தருமம் பொல்லாக் கருமமே யதன்மந் தேவர்
தெரிதவர் நரர்பி திர்க்க டேர்ந்திவை யறிகி லாரால். (கரு)

தரித்தலான் மகத்து வத்தாற் றருமத்தைத் தரும மென்ப
ரருத்தியிற் குரவர் சொல்லு மளவையே தரும மன்றி
விருத்தமாம் பலனை நல்கும் வினையினை யதன்ம மென்பர்
கருத்துறு குருவின் வண்மை கருதியே யுகாப்பன் மாதோ. (கசு)

வித்தையின் விருத்த ராகி மிகுபொருள் விருப்ப மின்றிச்
சுத்தராய்க் குலசி ரேட்டத் தூயராய் வினயத் தோரா
யொத்துளார் குரவ ராவ ருவந்துசெய் தரும மெல்லா
மித்தலத் திருவ கைத்தாஞ் சுருதிநன் மிருதி யென்றே. (கஎ)

உரைத்தநற் சுருதி தன்ம மோங்கிய தானம் வேள்வி
நிரைத்தழற் கருமம் பின்னர் நித்திய மிருதி தன்ம
மருத்திகொள் வருணத் தோடு மாச்சிர மத்தின் பான்மை
குருத்தொழு நியமத் தோடு சுசிசிவன் கோற னீத்தல். (கஅ)

அருமறை யுணர்ந்த சத்த விருடிக ளறைந்திட் டார்கள்
சுருதியின் றரும முன்போந் துகளின்மன் வந்த ரத்தின்
றருமமே நினைந்து சாற்றி னுன்மனு மிருதி தன்மம்
வருணவாச் சிரம தன்மம் வகுத்திவை யுரைத்த லாமால். (கக)

இவ்வகைத் தரும மன்றி யியற்றுமோர் சிட்டா சாரந்
தவ்வலற் றுளதே தென்னிற் சார்மனு வந்த ரத்திற்
கவ்வயி னுலகிற் றன்மங் கதிகொள நிறுத்த வேண்டித்
திவ்விய மனுவுஞ் சத்த ரிடிகளுஞ் சிட்ட ராகி. (உ0)

சாதுக்க ளாகி மிக்காந் தருமமே நிறுத்த லாலே
மாதுக்க நீக்குஞ் சிட்டா சாரமாய் வழங்கு நாமம்
போதிக்கு மாதி யாகிப் பொருந்துநித் தியமே யாகு
நீதிக்காஞ் சிட்டா சாரப் பகுதியை நிகழ்த்துங் காலை. (உக)

சத்திய மீகை தானந் தவம்வேள்வி தயவு பூசை
வித்தையோ டோரெட் டாகு மிகுமன்வந் தரங்க டோறும்
புத்திகூர் மனுவுஞ் சத்த ரிடிகளும் பொருவில் சிட்ட
ரித்தகை யியற்ற லாற்சிட் டாசார மென்பர் மிக்கோர். (உஉ)

சாறிரு தருமங் கட்குட் குலவிய சுருதி தன்ம
மீறிலா வேத மோத லியாகத்தை யியல்பி னுற்றன்
மாறிலா மிருதி தன்மம் வருணமாச் சிரம மாகு
மூறுபா டுற்ற தன்மத் துபாங்கத்தை யுரைக்குங் காலை. (உங)

சத்திய முண்மை சரற்ற றகுபிர மசரி யத்தோ
ருத்தம மான முண்டி யொறுத்தலாம் வேள்வி சொல்லின்
மெய்த்திர வியங்கள் கோக்கள் வேதங்க ளிருத்துக் கள்சீர்
மொய்த்ததக் கிணைக ளோடு முறைபெறு மவிக ளாமால். (உச)

இயம்பிய தயவு சொல்லி னிதத்தொடு மின்பம் யார்க்கும்
நயம்பெறப் புரித லாகு நலம்பெறு பொறுமை கூறிற்
சயந்திட விடர்செய் தோர்க்குக் கருதியே யிடர்செய் யாமை
வியந்திடு லோப மற்றோர் வெறுக்கையை வெறுக்கை செய்தல். (௨௫)

பிரமச ரியத்தைக் கூறிற் பிறங்குதம் பதியின் செய்கை
மருவுள நினைத்தல் வாக்கால் வழுத்துத லொழுத லாகும்
பொருவருந் தவத்தின் கேண்மை புலன்புறம் போக்காச் செய்கை
தனைபுகழ் வதனைக் கூறிற் றனக்குமேற் பலர்க்கும் பெட்பாய். (௨௬)

மன்னிய திரவி யத்தை மகத்துவ முடையோர்க் கீத
றுன்னிய சிட்டா சாரஞ் சுருதிக்கு விருத்த மின்றிப்
பன்னுநால் வருணத் தோராச் சிரமத்தோர் பற்றி நிற்கும்
நன்னிலைத் தருமந் தானே சாதுக்க ணயப்ப தாகும். (௨௭)

பகையொடு நட்பு மிக்காம் பண்புளோ ரிடத்தெஞ் ஞான்று
மிகையுறும் வெறுப்பு மேவும் விருப்பஞ்சந் தாப மின்றித்
தகைபெற விருத்த ருனே விருத்தர்தஞ் சரிதை யாகுஞ்
தொகைசெய்நற் கருமந் தீமை துறத்தல்சந் நியாசி தன்மம். (௨௮)

நெறியினவ் வியத்த மாயி னிகழ்த்திய விசேட மீறுய்ச்
செறிவுறு விகாரந் துற்ற சேதன சேத னத்தை
யறிவினாற் றெளிந்து நீத்த லரியமெய்ஞ் ஞானம் யாவு
முறுசுவா யம்பூ மன்வந் தரத்தரு மத்துப் பாங்காம். (௨௯)

ஓதுதத் துவமுந் தேர்ந்து முனிவர ருரைத்த தாமாற்
சாதுறு கோத்தி ரஞ்சேர் சாதுறு வித்தி யஞ்சேர்
தீதறு விதியைச் சொல்லிற் றிகழ்மன்வந் தரங்க டோறுங்
கோதறு வேத மூன்றுங் குலவிய தேவர்க் கெல்லாம். (௩௦)

விதிமுறை முன்போல் வேறாய் விதித்திடும் விதியு மிக்காய்த்
துதிகடோத் திரத்தினோடுந் தோத்திர முன்போ லாகும்
புதியதாந் திரவி யத்தாற் பொருந்திய குணத்தாற் செய்து
கதிதருங் கருமந் தன்னாற் களங்கமின் மரபு தன்னால். (௩௧)

தோத்திர வகைநான் காகுஞ் சொன்மன்வந் தரங்க டோறு
மேத்துகோத் திரத்தின் பேத மித்திறம் விளக்கும் வேத
நீத்திடா மந்தி ரத்தின் றோத்திர நிகழ்த்தி னான்காஞ்
சூத்திர மறைதேர்ந் தோது முனிவரர் தொகுத்திட் டாரால். (௩௨)

தொகுத்திடும் வகையே தென்னிற் சொல்லுமன் வந்த ரத்தின்
பகுத்திடுஞ் சந்தோ டஞ்சேர் பயஞ்சுகந் துக்கஞ் சோகம்
வகுத்தவிவ் வைந்துந் தற்கா தியினிலக் கணத்தின் மன்னு
மிகுத்தமா தவர்சி தேந்தி ரியத்தினை விளம்பு வாமால். (௩௩)

இறப்பெதிர் காலந் தம்மி னியங்குமைம் புலன்க ளோடு
யுறப்பெறும் விடய மாக வோங்குவா தனைக ளின்றிச்
சிறக்குமுக் குணமு மொத்துச் சீவகோ டிகளி னன்பாய்
நிறைத்தமெய்த் தவத்தி னேனை ருடியென நிகழ்த்த லாமால். (௩௪)

பேதங்கள் பிரிவு ருமற் பேரிருட் பிரள யத்தைச்
சேதன மாயை தன்னிற் சேதன மிகவு முண்டா
மாதலா னமைசி ருட்டி யபுத்தியாஞ் சிருட்டி யாமா
லோதிய புருட னோடு மூறுபிர கிருதி தானும். (௩௫)

நீருறு மச்சம் போல நிரந்தர மிருக்கு மன்றிக்
கூர்தரு சேத னத்தின் வியாபகங் குணமுண் டாகு
மாருமத் தவஞ்சொ ரூபம் விடையமவ் விடையம் யாவும்
பேர்தரும் புத்தியா லிப்பேதங் களறிய வேண்டும். (௩௬)

அருண்மக தத்து வந்தா னுதிசாங் கிருத்தி கங்கண்
மருள்பிர கிருதி தோன்றும் வளர்மக தத்து வத்தின்
றெருளுமாங் காரந் தோன்றுந் திகழதிற் பூத மேவும்
பொருவிலிந் தியந்தான் தோன்று மதிற்புகல் விடயந் தோன்றும். (௩௭)

கருதிவை யொன்றுக் கொன்று காரிய கார ணங்கண்
மருவியெப் போது முண்டாம் வயங்கேக வேளை தன்னி
லுரியகா ரணத்தி லான்மா வுதித்திடு மாலைம் பூதம்
விரிதரு மேக வேளை விளங்கியுண் டாகு மன்றே. (௩௮)

மின்மினி யிருளிற் றேன்றி விளங்கல்போற் பெரியோ ராகித்
துன்னிய விடய நீத்தோர் மெய்யினிற் றுலங்கு மான்மாப்
பன்னருந் தவங்க ளாற்றிற் பசருட லான்மா வேறு
யுன்னலிற் றெரியு மஞ்ஞா னத்தினை யொழிக்கு மான்மா (௩௯)

இடத்தினிற் சிந்தை கூர்வோ னியல்வித்து வானு மென்ப
மடுத்தவன் புத்தி நான்கு விதமதாய் வளரு ஞானந்
தடுத்தவை ராக்கிய மைசு வரியநற் றரும மென்றே
திடத்தவன் றனக்கே சித்தி தெரிதரப் பிரகா சிக்கும். (௪0)

முறைபெறு சரீரத் துக்கு ஞானத்தான் முத்தி யுண்டா
மறைபிர கிருதி யோடும் புருடனை யறைதன் ஞான
முறுபுர மென்னு மெய்யி லுயர்தரு சயனஞ் செய்யப்
பொறைமிகு சீவான் மாவைப் புருடனென் றறைவர் மாதோ. (௪௧)

இன்னது மல்லான் மெய்யைக் கேத்திர மென்ப மேலோ
ரன்னதை யறிவோன் கேத்தி ரக்கின னுகு மெய்யிற்
றன்னுளப் பிரமங் கூருஞ் சயனத்தாற் சரீர மென்ப
மன்னுசாங் கித்தி மேவு சரீரத்தின் மதியி னுனே. (௪௨)

சேதனம் வியத்த மாகுந் திகழுமக் கேத்தி ரத்தை
யேதமில் கேத்தி ரத்த னினிதுற விரக்கை செய்வன்
யாதனைக் கேத்தி ரந்தா னசேதன மீதென் றெண்ணி
மேதினி சனித்த போதே விளங்குகேத் திரத்தி னோர்ந்தே. (சங)

நன்கிடர் போகந் துய்க்க நமக்கிது கிரக மென்றே
யின்புற வறிவ னிவ்வா றறிந்தவ னிருடி யாமாற்
றுன்புறு கொலைசெய் யாமை துலங்கிய வத்தம் வித்தை
முன்புக றவநல் வாய்மை முறைமறை சாத்தி ரங்கள். (சச)

இவையெலா முணர்ந்தோ னுக்கே யிணங்கிடு மிருடி நாமம்
புவனியிற் சனித்த வன்றே புத்தியா லனைத்து மோர்வன்
பவவினை சிறிதுஞ் சேரார் பரமவி ருடிப்பேர் சார்ந்தான்
சிவமிகு மிருடி சத்தப் பொருண்முத்தி சேர்த லானும். (சரு)

சொற்றிடு சுயம்பு வாகை யாலுமே துலங்கு மென்னப்
பெற்றிடு மீசன் றன்பா லுதித்திடு பிரம னுள்ளத்
துற்றிடு புதல்வ ராங்கா ரத்தினை யொழித்து நன்மை
மற்றுள கல்வி தன்னான் மாவிரு டிகளே யாவர். (சசு)

பிரமன்மா னதத்து மன்னோன் பிறங்கிய வுரைத்துந் தோன்று
மிருவகை மைந்தர் தம்மை யிருடிபுத் திரரே யென்றும்
வருமிவர் மனையோர் தம்பால் வளர்கருப் பத்திற் றோன்றித்
தெரிதரு மக்க டம்மை யிருடிக ளென்றுந் தேர்வார். (சஎ)

இருடிக டம்மின் முன்ன ரிலங்கிடப் பிறந்தோர் தம்மைத்
தெரிதருஞ் சிறப்பின் மிக்க திவ்விய ருடிக ளென்ப
வரியதோ ரிருடி காமை ந்தரிஷி புத்திரகரே யாவார்
மருவுபூ சனைக்குப் பேரே மகமென வழுத்து வாரால். (சஅ)

மகத்துவ முடையோன் மிக்க மகாரிடி ரிடிக ளுக்குத்
தொகுக்குமவ் வியத்த மான்மாத் துலங்கிய மகான்மா வோடும்
பகுத்திடு மாங்கா ரன்மாப் பகர்ந்தபூ தான்மா வன்றி
நிகழ்ந்துமிந் திரிய வான்மா வெனநிகழ்த் தான்ம ஞானம். (சகூ)

உண்டிவர் தம்மை மேலா யுயர்ந்தமா ரிடிரி டீகர்
தண்டலி லிருடி சாற்றும் பரமவி ருடியி னோடு
மெண்டிசை புகழு மிக்கா மிருடிபுத் திரர்க ளென்றுங்
கொண்டிடுஞ் சாதி யைந்தாங் குலவிரு டிகடங் கூட்டம். (ருo)

இவர்களின் மனும ரீசி புலத்திய னியைந்த தக்கன்
பவமறு புயகன் மிக்கா மங்கிராப் பகர்வ சிட்டன்
றவமிகு பிருகு வோடு மத்திரி கிருது சாற்றற்
குவமையில் பதின்மர் வேதன் மானதத் துதித்த லாலும். (ருக)

பரமவி ருடிக ளென்றும் பகர்மகா ரிடிக ளென்று
மரியவீ சுரர்க ளென்று மமர்தரு சயம்பு வென்றும்
விரவுபேர் பெறுப வின்னோர் மைந்தரை வியந்து சொல்வா
மருவுகா வியரே வால கில்லியர் வியாபு மன்னும். (ருஉ)

காசிபர் யவனர் மிக்காங் காத்தமர் கருது மேன்மை
பேசுவிச் சிரவா வோடு பிறங்குசத் துக்க ளாவ
ரேசறு தவத்தி னாலே யிருடிக ளின்னோர் மக்க
ளாசில்கந் திருவர் சாதி யிருடிக ளன்னோர் நாமம். (ருங)

வசதனச் சிதன்மா கத்து வதனனற் பரத்து வாச
னிசைவுறு சுசித்தன் றீர்க்க தமசுசாத் துய்த னெட்டுத்
திசைபெறு சுசீத னோடு கச்சிவன் சிருங்கி மிக்காம்
விசைதவிர் பராச ரன்சீர் வயிச்சிர வணன்றன் னோடும். (ருச)

இருநிலம் புகழி ராச்சி ரவசுவே யின்னோ ரேத்து
மொருபதின் மூவர் முன்ன முறைத்தவி ருடிகண் மைந்தர்
மருவுசத் தியத்தி னாலே மந்திரக் கிருது வாகிப்
பொருவிலா ருடிக ரென்னப் புவனியிற் பொருந்து வாரால் (ருரு)

பிருகுக சியபன் யாசன் றீசிநற் பிரசே தாவோ
டொருமைசேர் சுவற்சன் வீத கவியனு பயர சன்பூ
மருவிய வாட்ட டேணன் மருதுவாழ் கிருபன் வச்சன்
திருவளர் சவுன கன்சீர்ப் பிரமிட்டன் றிவோசா தன்முன். (ருசு)

எனுமிவர் கடமை யெல்லாம் பிருகுவின் கணங்க ளென்பர்
புனிதவங் கிரசு மாந்தா தாமலி புருகுச் சன்பார்
வினவிய பரத்து வாசன் பலாதனன் விரூப வீதன்
றனேஙிக ரம்ப ரீடன் சத்திய னுயர்சா தாட்டி. (ருஎ)

வேதசன் வாம தேவன் குருவயன் விறலா ரீயன்
பேதமி லமுத வச்சி ரன்பிர கதச்சு வன்பேர்
மாதவச் சுபிரத் தும்மி னன்வய னுச்சு வன்சொற்
றீதின்முற் கலனே தீர்க்க தமசுகண் ணுவன்சி தன்முன். (ருஅ)

திரசதச் சியவ னேவாச் சிரவசு வசமீ டன்சீ
ருரைசெய் சங்கிருதி கட்சி வானொடைப் பியக னுண்மை
விரவிய துவித யன்பே ருதச்சியன் விளம்பு மின்னோ
ரரியதொர் முப்பான் மூவ ரங்கிராக் கணங்க ளாவர். (ருகூ)

காசிபன் சித்தன் வச்சன் கவினையித் துருப னோடு
மாசிறே வலனைப் பியன்னே மறைய ரறுவர் தம்மை
யேசில்கா சிபர்க ணங்க ளென்பரத் திரியோ டாபன்
பேசுமா யுசிவி னோடும் பிறங்கிய திடம னன்றி. (சுO)

அச்சுவ விசுத்தன் கேள்வி யறிசவ ளாச்சு வன்சீர்
விச்சைகொள் கவுட்டி ரன்சொல் விளங்கிய வாம ரெண்மர்
துச்சிலத் திரிக ணங்க ளென்பராற் றெல்வ சிட்டர்
நச்சில்சஞ் சமாப்ப ரத்து வசுவொடு நவையில் சத்தி. (சுக)

குண்டின ரிந்தி ரப்பி ரமதிசிர்க் கோதி லாத
திண்டிறற் பராச ரப்பேர் செப்புமிவ் வெழுவர் தம்மை
யெண்டிசை புகல்வ சிட்ட கணமென்பர் விசுவா மித்திரன்
றண்டலி றேவ நாதன் றன்னொடு தேவ ராதன். (சுஉ)

சுதாவித மனுசி யாதன் சொல்லக மரிட ணன்பின்
னிதானலோ கிதனே கால நிகழ்கிரு துச்சு வன்று
னுதாரணுஞ் சாலங் கால னுயர்தேவச் சிரவ ணொடும்
விதானகோ சிக்கனக்கண் மிருபதின் மூவ ராமால். (சுரு)

அகத்தியர் சத்திப் பாகு வருங்கலை முழுது மோர்ந்து
வகுத்திடு பிரகத் துய்மி னன்றிறன் மருவிம் மூவர்
திகத்தகத் தியக ணங்கள் சொல்வைவச் சுதம னுப்பின்
மிகுத்திடு புரூர வாநல் லினனென விளம்பிம் மூவர். (சுச)

அரசரிற் சிரேட்ட ரான வரசக ணங்க ளாவர்
வரமிகு காண்டு கன்சங் கிலன்வற்சன் வளரிம் மூவர்
திரமிகு வசிய சாதி சிரேட்டமாங் கணங்க ளென்பர்
உரைசெய்மூ வருணந் தம்மி லுயர்தொண்ணூற் றெருவர் மேலோர். (சுரு)

இத்திறந் தவத்தின் மேலா மிருடிகள் கணங்கண் ஞான
மெய்த்தவ முனிவி ரென்று வெண்ணிற விபூதி கோத்த
கொத்துறு மக்க மாலை குண்டிகை சடிலம் பூத்த
சுத்தநின் மலசொ ரூபச் சூதனங் குரைசெய் தானல். (சுசு)

நாற்பத்தேட்டாவது
இருடி மான்மிய வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம்-கருசுச.

நாற்பத் தோன்பதாவது

தாரகாசுர உற்பத்தி யத்தியாயம்.

முனிவரர் மேன்மை யாவு மொழிந்திடு சூதற் போற்றி
நனிவளர் தவத்தின் மேலா நைமிச முனிவ ரெல்லாந்
தனுவலி மிகுத்த தார கன்றனுற் பத்தி தன்னை
மனுவுளங் களிப்ப மாயன் வகுத்ததை வழங்கு கென்றார். (க)

தாரகன் வச்சி ராங்கன் றனையன்மா தவத்தின் மிக்கோன்
மேருவில் வளைக்குங் கையான் விடலையாங் குமர கேண்முன்
பேருற வுற்ப வித்துப் பிறங்கிய வேழா நாள்செய்
போர்வலிக் காற்றா னாகிப் பொன்றினா னவனுற் பத்தி. (௨)

கூறுவன் முனிவர் கேண்மின் கோகன கத்திற் புத்தேள்
வீறுறு மான தத்தில் விளங்கிட வுதித்த தக்கன்
பேறுறு மறுப தென்னும் பெண்மகப் பெற்றன் னோரிற்
றேறுடன் மூவர் தம்மைச் சிறந்தகா சிபருக் கீந்தான். (௩)

அவர்பெயர் திதிசெவ் வாய திதிகனு வரிட்டை சிங்கி
துவரிதழ் வனிதை சீர்த்தா பிரைபிரை சரசை கோலக்
கவினிய முனிகு ரோதை கத்துரு விருடை யென்ப
புவனியிற் பிராணி யாவும் பெற்றனர் பொருந்தின் னோரில். (௪)

சுந்தரத் ததிதி பெற்ற சூரிய னுபேந் திரன்சீ
ரிந்திரன் வானோர் யாரு மிளங்கொடித் திதிதா னீன்ற
மைந்தரா மசுரர் வேந்த னிரணிய கசிபு மாள
வந்துபோர் புரிந்தார் பின்ன ரொண்டொடி திதியே யென்பாள். (௫)

மக்கட்சோ கத்தை யாற்றாண் மகிழ்நனுங் காசி பன்பாற்
றுக்கத்தோ டெய்தி பொன்னோர் தொகைதொலைத் திடவோர் மைந்தன்
றக்கதா வரநல் கென்னத் தவங்களா யிரத்தினுண்டு
மிக்குத்தாழ் வறவே நோற்றால் வியப்புறப் பெறுதி யென்றான். (௬)

முனிவரன் மொழிந்த வண்ணந் திதிதவ முயலு நாளி
லினியதாம் பணிசெய் வேனென் றிந்திரன் வஞ்ச மாக
நனிதவச் சிற்றாய்ப் பாங்கர் நண்ணியே யியல வந்தான்
மனமுறக் களித்து மைந்த னாவா சவனை நோக்கி. (௭)

யான்செய்யுந் தவங்க ளோராண் டின்றியே முடிந்த வாற்றா
னான்செயு நினக்குத் தம்பி நுவலவுற் பவிப்ப னீயும்
வாள்செய்மூ வுலகந் தன்னில் வளங்கெழு போகந் துய்த்துக்
கான்செயும் பூவும் பூவிற் கந்தமும் போல வாழ்தி. (௮)

என்றலு நன்றென் றோதி யிந்திர னியலுங் காலைத்
துன்றிருங் கூந்தல் பாகந் தோய்ந்திட வோர்நாட் டுஞ்சு
கன்றணி கரத்துச் சிற்றா யுதரத்துக் கருப்பந் தன்னைச்
சென்றுவச் சிரத்தி னாலே சினதத்தன் னெழு கூறாக. (௯)

பின்னுமக் கண்ட மொவ்வொன் றேழதாப் பிளப்ப வன்னை
மன்னுமிந் திரனை நோக்கி மைந்தனைக் கொல்லே லென்னச்
சொன்னசொற் கேட்டு மீண்டு துளங்கிய வுளத்த னாகி
யன்னைநீ பொறுத்தி டென்றாங் கவளிணை யடியில் வீழ்ந்தே. (௧௦)

எழுந்துகை குவித்து நீயின் றீன்றிடு மெம்பி மார்க்குச்
செழுந்தரு வமுத மீந்தே தேவர்தம் முலகி லென்னே
டொழுங்குற விருத்து வேனென் றுரைத்தலு முவகை கூர்ந்துள்
ளழுங்குத லொழிந்து சிற்று யையகீ யஞ்சே லஞ்சேல். (கக)

எனச்சொலுங் காலே யேழேழ் மைந்தரு முதிக்க வேத்தி
வனப்புறு மிவர்க டம்மை மருத்துவ ரெனப்பேர் சாற்றி
நனைத்தரு நீழற் றேவர் நாப்பணி னிருத்தி யன்னோர்
நினைப்புறு மவிப்பா கத்தை நிரந்தினி தளித்திட் டானல். (கஉ)

அளிக்குல முரலுங் கூந்த லயில்விழித் திதிதன் னேடுங்
களிப்புறுங் கொழுந னான காசிப னிடத்திற் சென்று
தளிர்க்கையாற் பாதம் போற்றிச் சரித்திரஞ் சாற்றிச் சோரி
குளித்தவெங் குலிசத் தோனைக் கொல்லவோர் மகவீ யென்றாள். (கங)

அறைந்தவத் திதியை நோக்கி வருடமோ ரயுத நோன்பு
நிறைந்திடச் செய்யிற் றேவர் நிலைகெடப் பொருது வெற்றித்
திறங்கொளும் வச்சி ராங்க னெனும்பெயர்ச் சேயை யீன்று
கறங்கெனச் சுழலு நெஞ்சக் கவலையை யொழிதி யென்றான். (கச)

என்னலும் விடைகொண் டேகி யிருந்தவம் வனத்தி னாற்றித்
தன்னிகரில்லாவச்சி ராங்கனுந் தனையற் பெற்று
ளன்னவன் கலைக ளெல்லா மறிந்தனை யடியைப் போற்றி
நின்னுடை யெண்ணம் யாது முடிப்பல்யா னிசழ்த்து கென்றான். (கரு)

இந்திரன் றன்னைக் கட்டி யென்முனங் கொணர்தி யென்னப்
புந்திகூர் வச்சி ராங்கன் வானவர் புரத்தி னண்ணி
யைந்தரு வரசைக் கட்டி யன்னைபாற் கொணருங் காலைக்
கந்தமா மலரிற் றேவுங் காசிப முனியுங் கண்டே. (கசு)

வானவ ரரசைக் கட்டி வருவதென் னென்ன வன்னே
னூனமி லன்னை சொல்லா லுடன்கொடு வந்தே னென்றான்
கானுறு கமலத் தோனுங் காசிப முனியு மின்சொல்
லானயந் தருக மைத்தே யையகீ கேட்டி யென்றார். (கஎ)

புற்றினி லேறி னாலும் புல்லினைக் கவ்வி னாலும்
வெற்றிவெம் படையெ றிந்து வெறுங்கையிற் றொழுதிட் டாலும்
பற்றிடப் பிணிப்பட் டாலும் பழிபட விறந்த தன்றே
கொற்றநின் வயினுண் டாய தாதலாற் கோற நீதாம். (கஅ)

ஈங்குநீர் மோக காந்தி யெனும்பெயர்ப் பாசத் தாலே
வீங்குறப் பிணித்தல் செய்ய வியன்புகழ் நினக்குண் டாமாற்
றீங்கற விடுத்தி யாங்கள் செப்புசொற் கேட்டி யென்னப்
பூங்கழல் வச்சி ராங்கன் மீட்டிவை புகலு வானல். (கக)

காய்சினக் குலிசி செய்த கடும்பகை மிகவுண் டென்று
தாய்சொலிக் கொணர்தி யென்னக் கொணர்ந்தனன் றமியே னுங்கள்
வாய்மொழி மறுப்பன் கொல்லோ மறையினு மிக்க தன்றே
தூயதந் தையர்சொல் லென்ன விடுத்தவர் துணைத்தாள் போற்றி. (உ0)

மெய்த்தவம் புரியவேண்டும் விருப்பினை யுடையே னன்பு
வைத்தருட் பார்வை செய்திவ் வரத்தினை யளித்தல் வேண்டு
மெய்த்திடா தகனை யானு மிடையறா தியற்றல் வேண்டு
மொய்த்திடை யூறு சேரி லவற்றைநீர் முனிய வேண்டும். (உக)

என்றவன் கேட்ட வெல்லா மீந்தவர் போந்த பின்னர்த்
துன்றருங் கானத் தெய்தி நினைப்பினுந் துனுக்க மெய்த
நின்றிருந் தவங்கள் பன்னா ளிகழ்த்தினு னெறியி னேடும்
பொன்றிகழ் கமலப் புத்தேள் பொற்பதத் தன்பு பூண்டே. (உஉ)

ஆண்டகை வச்சி ராங்க னன்பொடும் புரித லோர்ந்தே
பூண்டகு வனப்பு வாய்ந்த பொன்னிறத் தூவி யன்னந்
தூண்டிநான் முகத்தோ னேரே தோன்றலுந் தோன்றக் கண்டு
காண்டகு விருப்பி னேடுங் கழல்பணிந் தேத்தி நின்றான். (உங)

மைந்தநின் றவத்தா லுள்ள மகிழ்ந்தன மென்று கூறிச்
சிந்துர நுதலா ளான பராங்கியைச் சிருட்டித் தீந்தே
கந்தமா மலரோ னேகக் காளையம் மனைவி யோடுஞ்
சுந்தர நகர மேவித் தொலைவிலா வின்பந் துய்த்தான். (உச)

வாழுநாண் மகப்பே றின்றி மனையொடு வனத்தி னெய்தித்
தாழிருங் கூந்த லேவ லுன்செயத் தடக்கை மேலாய்ச்
சூழிரும் பனிக்கா லத்திற் றோயத்தோர் காலி னின்றும்
வீழுமா மாரிக் காலம் வெளியின்மே னோக்கி நின்றும். (உரு)

கொடியவெங் கோடை தன்னிற் கொடுந்தழ லைந்தி னுப்ப
ணடிபெ யராது நின்று மாண்டெண்ணா யிரத்தி னுண்டு
முடிவின்மா தவங்கள் செய்து முற்றலு முணர்ந்தே யந்தக்
கடிகமழ் கமலத் தோனே திமத்தின்மேற் கடிதின் வந்தான். (உசு)

வந்தவே தியன்றன் பொற்றா மரையடி வச்சி ராங்கன்
சிந்தைகூர்ந் திறைஞ்ச லோடுந் திசைமுக னருளி னோக்கி
நந்தலி றவத்தோ யாது வேட்டனை நவிறி யென்னத்
தந்தருண் மகப்பே றென்னத் தந்தன னென்று போனான். (உஎ)

மகப்பெறும் வரத்தைப் பெற்றவ் வல்வலி வச்சி ராங்கன்
மிகப்பெருங் களிப்பி னேடும் விளங்குதன் னகரின் மேவி
யகப்பெரு மனையா ளோடு மகன்றிடா தனையு மன்றி
றகப்புணர்ந் திருந்து வாழ்நா டாழ்த்தனள் கருப்ப மில்லாள். (உஅ)

குவிமுலைக் கண்க றுப்பக் கொடிபசு நரம்பு தோன்றக்
கவரிதழ் வெளுப்பச் சாம்பல் கரியமண் புளிவேட் டுண்டு
புவியினிற் காணுந் தோறும் பொருந்துமா லுதரம் விம்ம
வவிரொளி வார்ங்க ணைப்பெண் ணுயிரம் வருடம் போக்கி. (உகூ)

வாரிகள் கலங்க வட்ட மாநில மதிர வான
நாரியற் குழற்சொ ருக்கு நழுவமெய் நயனத் தோனுக்
கேரிய விடந்து டிப்ப விருடிகள் செபஞ்செ பிக்கச்
சூரிய னொளிம ழுங்கத் தொல்விலங் கினங்க ளார்ப்ப. (௩0)

கானமர் புள்ளொ லிப்பக் கடியசொப் பனங்கள் கண்டு
வானவ ரலக்க ணெய்த மாதிரம் பனிபு தைப்ப
வானவா னுடுக்கள் வீழ வடையலர்ச் செயிப்போ மென்று
தானவர் களிப்ப வெய்ய தாரகன் றன்னை யீன்றாள். (௩க)

எறும்வலித் தார கன்று னிகறெறு சிங்க வேற்றின்
சிறுகுரு ளையினை யேய்ப்பத் திறத்தொடும் வளர்ந்து பாவம்
பிறிவறத் திரண்ட தென்ன வளர்ந்தனன் பலத்தை நோக்கிக்
குறுகின ரசுரர் நீர்ச்சூற் கொண்டமே கங்க ளென்ன. (௩உ)

சூழ்ந்துதா ரகனை யேத்தித் துலங்கரி யாச னத்தின்
வாழ்ந்துநீ டூழி கால மற்றெமைக் காத்தி டென்னத்
தாழ்ந்துவீழ்ந் திறைஞ்சிப் போற்றித் தணப்பரு மிருளை யெல்லாம்
போழ்ந்தொளிர் மணிப்பொன் மோலி புனையவீற் றிருந்தா னன்றே. (௩௩)

அவர்களை செம்பன் செம்பன் மயிடனே யாதி யானோர்
திவளொளித் தார கன்றன் சேனைகா வலரே யாகிப்
புவனமோர் மூன்றும் வென்று புரந்தர னேவல் செய்யப்
பவவினை பலவுஞ் செய்து பழிப்புறு தொழின்மேற் கொண்டார். (௩ச)

கார்க்கெழு மேனித் தான வேசரைக் கருதி நோக்கி
மூர்க்கனுந் தார கன்றன் மொழியுமிந் திரனே யாதி
யோர்க்கெலா மிடையூ றுற்றி யவருறு முலகம் யாவுந்
தீர்க்கமாய்க் கொள்வோ மென்று செப்பியே தவமேற் கொண்டே. (௩ரு)

சென்றனன் கானில் வெம்போர் சீற்றத்தா ரகனென் றைந்தும்
வென்றருந் தவங்கண் முற்றி வேள்விகள் பலவு மாற்றி
நின்றமா முனிவர் கேட்ப நிமலனைப் போற்றி செய்யுந்
துன்றவிர் சடைமு டித்த சூதமா முனிவன் சொன்னான். (௩சு)

நாற்பத்தோன்பதாவது

தாரகாசுர உற்பத்தியத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கச00.

ஐம்பதாவது

தேவாசுரர்படை யெழுச்சி யத்தியாயம்.

மூவர்கோன் சரணம் போற்று முனிவரர் முகமன் கூறித்
தேவர்தா னவர்போர் செய்ய வெழுதலைச் செப்பு கென்ன
யாவர்தங் கருத்து நோக்கி யுருகிட வியம்பும் வேத
நாவலர் வியாசற் போற்றி நவிலுவான் சூதன் மாதோ. (க)

பாரியாத் திரவெற் பெய்திப் பங்கயத் தயனை நோக்கித்
தாரகன் கனிகாய் மூலஞ் சருகுநீ ரயின்று சின்னு
ணோர்தவ மியற்றி யுண்டி நினைத்திடா தயுத மாண்டு
கூர்தவ மியற்றி மெய்யிற் குலவுதன் றசைக ளெல்லாம். (உ)

அறுத்தறுத் தழலிற் பெய்தே யருந்தவ மியற்றுங் காலை
நிறுத்திய திசையோ ரெட்டுந் தவத்தழ லிரப்பக் கன்னங்
கறுத்தடைக் கூந்தற் செவ்வாய்க் கலைமகள் கொழுந னன்னம்
பொறுத்திட வந்து தார காசுரற் பொற்பி னோக்கி. (௩)

நீசெயுந் தவங்க ளெல்லா நிறைதர வுவந்தேம் வேண்டு
மாசறு வரங்கே ளென்ன வானவ ராதி யானே
ரேசறப் பொருத போரி னிழைத்திடா தேழு நாளிற்
றேசுறு பால னல்லாற் செகுத்திடா தருணீ யென்றான். (௪)

என்றலும் பிரம தேவ னிவ்வரங் கொடுத்தே யேகத்
தென்றகு மகிழ்ச்சி யோடுந் தாரகன் பதியி லெய்தி
வென்றிகொ ளசுர ரோடும் விண்ணவர்ச் செகுப்பா னெண்ணித்
துன்றிய கருட னோரா யிரத்தொகை பூண்ட தேர்மேல். (௫)

தோமரம் பிண்டி பாலஞ் சக்கரஞ் சுரிகை தண்ட
நாமவேல் வைவா டோட்டி நகையுறு படைகள் யாவுஞ்
சேமமா யமைத்துத் தார காசுரன் சிறப்பி னோங்கு
மேமுறு சயித்தி ரத்தின் சிலைபிடித் தேறி னானல் (௬)

தழனிறக் குஞ்சிப் பேழ்வாய்த் தறுகண்வெள் ளெயிற்று வீரக்
கழலணி கூளி யோடு கோவறு கழுதை பூண்டே
யழகமைந் திலங்கு செம்பொ னணிமணித் தேரின் மீது
குழைவரிச் சிலைகை யேந்திக் குசம்பனு மேறி னானல். (௭)

ஒருகரத் திரும ருப்பு மும்மதத் திலங்கு நால்வாய்க்
கருநிறத் தறுகட் சீற்றக் கறையடிப் புகர்மு கத்து
வருவரை யயுதம் பூண்ட மணிநெடுந் தேரின் மீது
பொருசிலை தூணி தாங்கிப் பொரநிமி யேறி னானல், (௮)

கொடுந்தொழிற் செங்கட் சீற்றக் கூருகிர்ப் படைக்கைத் தீவாய்
மடங்கலே றதிரப் பாயும் வயப்புலி யிலக்கம் பூண்ட
நெடுங்கொடி வயிரத் திண்கா லிகரிலாக் கத்த சும்போ
டிடம்பெறு கொடிஞ்சித் திண்டேர் மதனனு மேறி னானால். (௯)

பண்ணமை கலினச் செங்கேழ்ப் பருமணிக் கவசத் தண்ணார்
வெண்ணிறக் கவடித் தாமக் குரங்குளை வேறு வேறா
யண்ணுமைங் கதிசி றந்த வாடலம் புரவி கோடி
மண்ணிய தேரின் மீதே மயிடனு மேறி னானால். (௧௦)

அன்னவெம் புரவி யெண்ணா யிரமணி யாகப் பூண்டு
மன்னிய துவசங் கோடி மணித்தசும் பமைத்த சென்னிப்
பொன்னெடுங் குன்றொப் பாசப் பொலிந்ததிண் டேரின் மீது
கின்னரர் விண்ணோ ரேங்கக் கிரசன னேறி னானால். (௧௧)

அதிவலிக் குறுந்தாட் செந்தீ யஞ்சுடர்க் குஞ்சிப் பேழ்வாய்க்
கதழெரித் தறுகட் பூத கணமொரு கோடி பூண்ட
துதைமணித் தாம நாற்றித் துலங்கிய வலங்கற் றேர்மேன்
மதவலிக் கால நேமி வரையென வேறி னானால். (௧௨)

கணத்தினி லுலக மெல்லாங் கறங்கெனச் சுழலும் வேகத்
தணிப்பருங் கலின நீலத் தாவுவாம் பரியின் மீது
துணுக்கிடத் தேவர் செந்தீச் சொரிந்திடக் கண்ணில் வஞ்சக்
குணிப்பனா கிருதன் கோபங் கொண்டுருத் தேறி னானால். (௧௩)

உலகெலா நொடியி லெய்தி யொன்னலர்க் கடந்து வெற்றி
யிலகிய சொடிப்ப டாங்க ளெங்கணும் விளங்கி நீண்ட
பொலன்மயத் திலங்குஞ் செவ்விப் புட்பக மான மீது
மலையென வுயர்ந்த மேனி மத்தனு மேறி னானால். (௧௪)

விசைபெறு கதிக ளைந்தும் விதம்பெற மிகுத்தோ ரெட்டுத்
திசையினுஞ் சென்று சென்றே திரிந்திடும் வாயு வேகக்
குசையுறு கலின நீலக் குதிரையின் மீது போரி
லசைவிலாச் செம்பன் விண்ணோ ரஞ்சிட வேறி னானால். (௧௫)

கிம்புரிக் கோடு நான்கு கிளரயி ராவ தத்தை
யும்பரி னிரியல் போக்கு மோங்கல்வெங் களிநல் யானை
வெம்பிடர்த் தலையின் மீது விளங்குவிற் றூணி தாங்கிச்
சம்பனென் றுரைக்கும் வெய்ய தறுகண னேறி னானால். (௧௬)

படைப்பெருந் தலைவர் சொற்ற பதின்மரு மன்றிக் கொற்றக்
குடைத்தலை வுயவ ரெண்ணில் கோடியர் கொடிஞ்சித் திண்டேர்
தடைப்படாக் கலினப் பாய்மா தந்திமீ தேறித் திண்டோள்
புடைத்திடிக் குரல்க ளார்த்துப் பூமியு நெளியச் சென்றார். (௧௭)

அழற்சொரி தறுகட் கோர வசனியே றனைய வீரர்
கழற்புனை கழல்க ளார்ப்பக் காற்படைக் கணங்கள் சூழ
முழக்கதிர் சண்ட பேரி முரசுகா ளம்போற் சின்னந்
தழக்கொலித் தவளச் சங்கந் தாரைபூ ரிகைவீ ராணம். (கஅ)

இன்னபல் லியத்தி னோதை யெழுகட லென்ன வார்ப்பத்
துன்னுவெண் கவிகை வெற்றித் துவசகோ டிகணெ ருங்கப்
பொன்னவ மணிக்கி ரீடம் புதுவெயி னிலவு கால
மன்னிய பசும்பொற் சோதி வயிரகுண் டலங்கண் மின்ன. (கக)

வானவர் கோனை வெல்லும் வயவினை மகிழ்ச்சி கூர்ந்து
தானையொ டெழுந்து தார காசுரன் செல்லும் போதிற்
றேனுறு மலங்கற் றேவ தூதனும் வாயுத் தேவர்
கோனொடு தேவர்க் கெல்லா மிவ்வகை கூறி னானல். (உ0)

தேவர்கோ னிதனைக் கேட்டுச் செய்வினை யாதென் றெண்ணி
மேவருங் குருவைப் பார்த்து மந்திரம் விளம்பு கென்னத்
தாவருஞ் சாம பேத தானமெய்த் தண்ட நான்காம்
பாவக வரசர் செய்கை யெனமறை பகுத்த தாமால், (உக)

காலதே யஞ்சொல் யோகங் கருதிய கிரமம் பார்க்கிற்
சாலவல் வலிபின் மிக்கா ரசுரர்கள் சாம மோரார்
மேலுறு மாங்கா ரத்தாற் பேதத்தை விரும்பல் செய்யார்
வாலிதாஞ் செல்வத் தாலே தானமு மதிக்க மாட்டார். (உஉ)

ஆதலாற் றண்டந் தானே யழகிதென் றறையப் பாக
சாதனன் றேவர்ப் பார்த்துத் தனிப்படை யெழுதி ரென்னத்
தீதுறு நடுவன் றன்னைச் சேனையின் றலைவ னாக்கி
மாதலி மணித்தேர் கொண்டு வருகவென் றறைந்திட் டானல். (உ௩)

அறைதலுந் துவச கோடி யணிமணிக் கொடிஞ்சித் தூவி
நிறைதரு சனன கூட நீண்மணி மாலை சூழக்
குறைவிலா வயுத மான கொய்யுளைப் புரவி பூண்ட
பொறைநெடு மேரு வென்னப் பொற்றடந் தேர்கொண் டுற்றான். (உச)

வச்சிரங் குந்தங் கைவேல் வாண்மழு முசலந் தோட்டி
நச்சுறு பாசம் பிண்டி பாலங்கூர் நாண ருவில்
விச்சைகொள் கணைகள் யாவும் வியப்புறப் பூசை யாற்றிக்
கச்சணி கவசம் பூண்டு கடிதினிற் றேர்மேற் கொண்டே. (உரு)

கொத்துறு முத்து மாலை குலவிட வணிபெற் றோங்கும்
வித்துரு மச்செஞ் சூட்டு மென்சிறைச் செங்கா லன்னச்
சித்திரப் பதாகை வீரர் செருக்கொடுங் கொண்டு செல்லத்
தத்துவாம் புரவி யானை தனிப்படை புடையிற் செல்ல. (உசு)

நிணமலி சூல மேந்தி நெடுவிடைக் கொடியு யர்த்திக்
கணமதிற் புரமூன் றட்ட கடவுளைக் கடுப்பச் சீறிப்
பணமலி யரவ மார்த்துப் பாயும்வெள் விடைமே லேறி
யிணர்விரிக டுக்கை சூடி யீசான தேவ ரெய்த. (௨௭)

கருநிறப் பணம ருப்புக் கவைப்படிக் காள மேகத்
துருமெனச் சீறி யார்க்கு மோங்கும்வெம் பகட்டி லேறித்
திரிமுகத் தயில்வெம் பாசந் தெறுசினத் தண்ட மாதி
பொருபடைக் கலன்க ளேந்திப் பொருக்கென நடுவன் பொங்கி. (௨௮)

கழுதுவெம் பதாகை தாங்கிக் காலனே முதலாந் தாத
ரொழுகுசெங் கனற்கண் வெற்றி யுழவர்க ளொன்று ராக
முழுகுபுங் கங்க ளோடு மூரிவிற் றடக்கை யேந்தி
யெழுகுணா கடம்பொற் சேனை யெழுந்துமுன் னூர்த்துச் செல்ல. (௨௯)

கடகரி வெருவத் தாங்குங் கடுநடைச் செங்கட் சீற்றத்
திடவலித் திருகு கோட்டுச் செறிமயிர்த் தகரி லேறிக்
கெடலரும் வெற்றித் தூம கேதனம் விளங்க முன்ன
ரடல்புரி வடிவே லேந்தி யக்கினி தேவன் செல்ல (௩௦)

நொடிக்குளிப் புவன மெல்லா நுண்டுக ளாகத் தாவு
மிடிக்குரற் பொறிக்கட் சீற்றத் திணைமருப் பிரலை யேறிக்
கொடிப்படர்ந் திலங்க முன்னங் குசப்படை கையிற் றாங்கி
மடித்தசெவ் விதழி னோடும் வாயுமுன் கனன்று செல்ல. (௩௧)

பொருகடல் கலக்குஞ் சீற்றப் பொறிவிழித் தீவாய் வெற்றி
யிருபுடை முள்வாள் வீசி யெழுந்தமா மகரத் தேறிக்
குருமணித் துவச முன்னர்த் துலங்கிடக் கோரங் கொண்டே
வருணன்வெம் பாச மேந்தி மடித்திதழ் கடித்துச செல்ல. (௩௨)

மலையென நிமிர்ந்து செம்பொன் மணிக்கொடி துலங்க வேகம்
பலைமணிப் புட்ப கத்திற் படைக்கலந் தாங்கி யேறித்
தொலைவிலா வெற்றி யோங்குந் துவசமுன் விளங்கப் போரிற்
கொலைபுரி தண்ட மேந்திக் குபேரனுங் கனன்று செல்ல. (௩௩)

பெருவலிக் கொடிய சீற்றப் பிறையெயிற் றடர்செங் குஞ்சிக்
கருநிறத் திடியே றென்னக் கடுங்குர லரக்கன் மீது
தருபிணக் கொடிமுன் னோங்கத் தடப்பெருங் கூர்வா ளேந்தி
நிருதிபல் கடித்துச் சீறி நேருருத் தேறிச் செல்ல. (௩௪)

மாயிரு ஞாலச் சுற்றின் மருவிய திகாந்த மட்டும்
போயொளி பரப்பும் பச்சைப் புரவியேழ் பூண்ட தேர்மேற்
பாயொளி விரிக்குஞ் செங்கேழ்ப் பருதியங் கடவு ளேறித்
தூயவெண் கொடியு முன்னே துலங்கவிற் றாங்கிச் செல்ல. (௩௫)

வெண்ணிற முலக மெல்லாம் விரித்துயர் கதிரைத் துள்ள
பண்ணமை கலினப் பாய்மா பத்திணைத் தோங்கு தேர்மேற்
றிண்ணிய மணிப்ப தாகை சிறக்கமுன் வீர ரேந்தத்
தண்மதிக் கடவு ளேறித் தனிச்சிலை தாங்கிச் செல்ல. (ஙசு)

அசுவினி தேவர் தத்த மடற்படைக் கலன்க ளேந்திப்
பசுமையி னிறத்த வாசி பற்பக றூண்ட வட்ட
வசுவினர் வெகுண்டு தத்தம் வாகன மீது செல்ல
விசுவதே வாதி யாய பிதிர்க்களு மிடைந்து போத. (ஙஎ)

பொன்னணி பொன்னி னுடை சேர்த்திவிற் புங்கந் தாங்கிப்
பன்னிறப் புரவிப் பண்பாய்ப் பாற்றுகந் திருவா ரூரத்
துன்னிய பணிக ளோடு சுடர்வயி ரேரி யங்கண்
மின்னெடுந் தேர்வ யங்க விறற்படை யரக்க ரெய்த. (ஙஅ)

வில்கணை முசலந் தோட்டி பட்டையம் வேல்வா ளென்னுங்
கொல்சினப் படைக ளேந்திக் கொடுங்கருங் கலைகள் சேர்த்திச்
செல்வலி மதக்க யங்கண் மீதினிற் சிவணி யார்த்துப்
பல்பல வியக்கர் கோடி மிடைந்துடன் படர்ந்தா ரன்றே. (ஙகூ)

புலிப்பொறி யதளு டுத்துப் பொன்னணி மணிகள் பூண்டு
வலித்திற லூகக் கேத னங்கள்கை களின்வ யங்கப்
பலித்தவென் றேத்த வாஞ்சைப் பசாசங்கள் வெகுண்டு செல்லக்
கலித்தகா ரிருப்புப் பூண்கள் கருமணிக் கலன்கள் சேர்த்தி. (ச0)

வெம்படை முசலந் தாங்கி விறற்கழு கிறகு சேர்த்த
வும்பரி னுலவு நீள்கே தனத்தொடு முலப்பில் காலாம்
பம்பிடத் தேரின் மீது பற்பல பூதஞ் செல்லச்
செம்பொனா பரணத் தோடுந் திகழ்முத்து மாலை பூண்டும். (சக)

தவளத்தூ சுடுத்தி டக்க யம்பல தாங்கி யோங்கும்
பவளத்தி னிறத்த வாடைக் கொடிகளும் பரம்பு வானிற்
றுவளத்தா னெறியுங் கைவல் லியத்தொடு படைக டாங்கிக்
கவளக் கைம்மதமா மீது கின்னரர் களிப்பி னேக. (சஉ)

மற்றுள தேவர் தத்த மணிக்கொடி வயங்கித் தோன்றிப்
பொற்றடந் தேரின் மீதும் புரவியின் மீதும் போர்மாக்
கொற்றவெங் கரியின் மீதுங் குலவியே செல்லத் தண்டம்
பற்றுகைத் திக்க யங்கள் பத்திலக் கங்கள் சூழ. (சங)

விரிகடல் சூழ நின்று வெள்ளியங் குன்றம் போலத்
திரியயி ராவ தப்போர்ச் சினக்கொடுங் களிறு செல்லச்
சுரிமுகந் தவண்டை பேரி துந்துமி முழவு பம்மை
பருமணித் தாளங் காளம் பதலைமத் தளமு ழங்க. (சச)

கவரிக ளிரட்ட வட்டக் கதிர்க்குடை நிழற்றத் தேவ
ரவனிக ணெருங்க நல்லோர் பற்பல ராசி கூறத்
திவளொளி மணிப்பூ ணாரஞ் செம்பொனா பரண மூன்று
புவனமும் விளங்க வீரப் புரந்தரன் போர்மேற் சென்றான். (சரு)

சென்றிடுந் தேவர் சேனைத் திரண்முப்பான் மூன்று கோடி
துன்றிய வசுரர் சேனைத் தொகையவற் றிரட்டி யாகும்
பொன்றலில் வானந் தூளி போர்த்திட வெழுந்த வென்றே
நன்றறி புராணச் சூத னன்முனி வரர்க்குச் சொன்னான். (சசு)

ஐம்பதாவது

தேவாசுரப்படை யெழுச்சி யத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கசசசு,

ஐம்பத்தோன்றாவது

சங்குல யுத்த வத்தியாயம்.

கங்குலன் னவனுந் தார கன்படை யோடுந் தேவர்
சங்குல யுத்தந் தன்னைத் தனிநெறி மனுவுக் கன்று
மங்குலஞ் சனம்போன் மேனி மாயவன் வகுத்த வண்ண
மிங்குல வாதோ தென்னு மிருடிகட் குரைப்பான் சூதன். (க)

தேவரோ டசுரர் தாமுஞ் செருக்களத் தெதிர்த்து வெம்போ
ரோவறப் புரியுங் காலை யொலித்தெழு சிங்கநாத
மேவுறு சங்க நாதம் விளங்குபே ரிகையி னாதந்
தாவருங் கடைநாண் மேகத் திடியெனத் தழங்கி யோங்க. (உ)

வில்வளைத் திட்டுத் தேவர் வெஞ்சாந் தொடுக்க வோங்கு
மல்வலித் தான வேசர் வரிச்சிலை தொடுத்து நீக்கக்
கல்வலித் தெறிந்து தேவர் காதலு மசுரர் வாளாற்
சொல்வலித் துரப்பி யார்த்துக் கண்ட துண்டங்கள் செய்தார். (ங)

தேரொடு தேர்க ளோற்றுத் தெறுசினத் தடுபோர் செய்துங்
கார்நிறக் களிநல் யானைக் கவுண்மதக் களிற்றொ டேற்றும்
வார்தரு புரவி யாள்ர் வளப்பரிக் குழுவோ டேற்றும்
போர்வலி வீரரோடும் வீரம்வெம் போர்செய் தாரால். (ச)

தானவர் தண்டங் கொண்டு வானவர் சிரங்க டாக்க
வூனுறு முதிர நீத்த முலப்பில வாறு யோடி
மீனமர் வேலை கீண்டு விரவிடத் திமிங்கி லாதி
மானமர் மகர மெல்லா மருந்தியே களித்த வன்றே. (ரு)

புயவலி வயவ ரோடும் போர்வலி வயவ ரேற்றுக்
கயமொடு கயஞ்சேர்ந் தென்னக் காதியாங் கிருவர் மாண்டு
சயவினை கொண்டு வானத் தரம்பையர் தடங்கொண் மார்பங்
குயவலிக் கோடு தாக்கக் கொடுஞ்சமர் விளைப்ப ராங்கு. (சு)

தோமரம் பிண்டி பாலஞ் சுரிகைகட் டாரி தோட்டி
நாமவேன் முசுண்டி குந்த நச்சுறு பாச மாழி
காமுறும் வயவாள் வச்சிரங் கப்பண முசலஞ் சூல
மேமுறு மசனி தண்ட மென்னுமிப் படைக ளாதி. (எ)

படைக்கலங் கொண்டு தேவர் தானமர் பணைத்த யெம்போ
ருடற்றிய கரங்கள் கால்க ளுடல்சிரங் களந்தோள் மூக்குத்
துடித்திடத் துணித்த கண்ட துண்டங்கள் வரைகள் போலக்
கிடப்பவோ டுதிரம் வாரிப் பகடுகீண் டொழுகிற் றன்றே. (அ)

வரிசிலை குழைய வாங்கி வடிக்கணை மாரி மேன்மேற்
சொரிதலு மந்த காரந் துன்னிட வுரப்பி யார்த்துத்
தெரிவுறு தசுரர் தங்க ளசுரரைச் செயிர்த்தும் வானோ
ரொருவரை யொருவர் சீறிச் செயிர்த்துமே யுடற்று வாரால். (கூ)

ஆனையின் கரங்கள் வாவு மடுபரிக் கால்கண் மற்றச்
சேனையின் றலைக டேரின் சிகரங்க டுணிபட் டும்பர்
வானுயர் வரைக ளென்ன வயின்வயின் வயங்கச் சோரி
தான்றலை கொழிக்கு மாறாய்த் தரைத்தலம் புதைத்த மாதோ. (கO)

தேவர்கோ னாதி திக்குப் பாலர்கள் செயிர்த்து வாளி
யேவலு மசுரர் கள்சே னையிபரிந் தோடச் சேனை
காவலன் சிரச னன்றான் கடவுளர் சேனை யூடு
பாவுறு கடலி னுப்பண் படர்திமிங் கிலம்போற் புக்கான். (கக)

புக்குவா னவர்கள் சேனை புதைந்திடத் திசைகள் விம்மத்
தக்கவிண் டலமு மேக சாலமு மறைப்பச் சோரி
கக்கிடப் பருந்து காக்கை கழுகினந் தழைப்ப வில்லிற்
றெக்கவை வாளி மாரி சொரிந்தனன் சொரித லோடும். (கஉ)

விண்ணவர் மகவா னங்கி வெம்பக ருங்காலன்
கண்ணுறு நிருதி நீரின் கடவுண்மா ருதன்கு பேரன்
பெண்ணொரு பாகன் பொன்மெய் பெற்றவீ சானதேவ
ரெண்ணுறு மிவர்கள் யாரு மெரிகணை மாரிபெய்தார். (கங)

வானவர் பெய்த வாளி மாரியின் மறைந்து வெய்ய
தானவர் சேனை ராக்குஞ் சிரசனன் றடந்தேர் நீற்ற
நீனிற முகில்கள் சிந்து நெடுமழைத் தாரை மூடு
மேனிவந் தெழுந்து நீண்ட வெற்பினை யொத்த தன்றே. (கச)

வெற்பென வசையா நிற்கும் விறல்வலிக் கிரச னன்றுன்
பற்பல கணைக ளெய்தான் பண்ணவ ரவற்றை நூறி
யற்புத மான கோர தந்திர மெமதா ரென்றே
பொற்பொலி வேணி மோலி முனிவர்க்குப் புகன்றுன் சூதன். (கரு)

ஐம்பத்தோன்றவது

கங்குலபுத்த வத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கசசுக.

ஐம்பத்திரண்டாவது

காலநேமிபார்செய வத்தியாயம்.

ஆலநே மியினி லுற்ற போ துனு மரன்பாற் கூர்கை
கோலநே மியிணைப் பெற்றேன் மனுவின்முன் கூறும் வண்ணங்
காலநே மிப்பேர் வெய்யோன் பார்செயங்கழறு கென்னு
ஞாலநேமியினி லுற்ற முனிவர்க்கு நவில்வான் சூதன். (க)

எண்டிசைப் பலர் தேவ ரெரிகணை மாரி சிந்தி
மண்டுபோர் விளைக்குங் காலை வலிமிகு கிரச னன்கைத்
துண்டமார் பிறைவா யம்பாற் றெடுகணை துணித்தன் னேனைக்
கண்டுளம் வெகுண்டு சீறிக் கனற்கணை சிந்தி யார்த்தான். (௨)

ஆர்ர்திடும் பொழுதிற் றேவ ரலக்சணுற் றிடாது கூற்றன்
கூர்த்தவெங் கணைகள் கோடி கொடுமரம் வளைத்துச் சிந்தித்
தேர்த்தலை துணித்து மார்பம் பிளந்திடச் சினந்து வெய்யோன்
பேர்த்தடல் வாளி பெய்தே யமனுடல் பிளந்திட் டானல். (௩)

பிளந்ததிற் சோரி யாறு பெருகிடக் கலங்கி யுள்ளந்
தெளிந்தொரு முசலம் வாங்கித் தெறுசினத் தசுரன் மேனி
தளர்ந்திட வெறியவந்தக் கிரசனன் றனும் பற்றி
யுளம்பயங் கொள்கார் மேதி யுச்சிய துடைந்து சோர. (௪)

அடித்தலும் பகடு வீறிட் டம்புவி யதனில் வீழ்ந்து
துடித்திட மறலி வானத் தெழுந்துதீச் சுடர்கால் குந்தம்
பிடித்தவன் முகத்திற் குத்தப் பெருவலிக் கிரச னன்னுன்
தடித்தகார்க் கிரிவீழ்ந் தென்னத் தளர்வொடுந் தறையில் வீழ்ந்தான், (ரு)

வீழ்தலுஞ் செம்ப னென்னும் விறல்வலி யசுரன் சேனை
யேழ்கடன் முழக்கி னார்ப்ப வெதிர்நடந் தியமன் றன்னைச்
சூழ்சுடர்ப் பிண்டி பாலங் கொடுமுகஞ் சோரி காலப்
போழ்தலுந் தளர்ச்சி யெய்திப் பொன்றினு னென்ன வீழ்ந்தான். (சு)

குப்புறக் கிடத்தல் கண்டு குபேரன்முன் றோன்றி வெற்றி
செப்பியே யியக்கர் சேனை செறிதரச் செம்ப னாகந்
துப்புறழ் சோரி காலத் தொடுகணை மாரி பெய்தான்
வெப்புறு செம்பன் றானும் வெங்கணை சொரிந்திட் டார்த்தான். (எ)

ஆர்த்தலுங் கிரச னன்று னயர்ச்சிதீர்ந் தொழுந்து கூற்றன்
பேர்த்தெழக் கண்டு தண்டா லெறிதலும் பிறங்கு கூற்றம்
போர்த்தொழிற் காலதண்டம் பொருக்கென விடுக்கச் சென்றே
கார்க்கரி யிரதம் வாசி காற்படை படியத் தாக்கி. (அ)

வற்றிய காட்டுத் தீப்போன் மடிந்தவச் சேனை யாவு
மிற்றிட வெறித்து நூறி யெழுந்துவெங் கோரத் தோடும்
பற்றிய செந்தீ யெட்டுத் திசையெலாம் பரப்பி யாங்க
ணுற்றவத் தடியை யுண்டே யொழிவிலா வேகத் தோடும். (கூ)

தெறுசினக் கிரச னன்றன் சிரத்தினிற் றாக்க வன்னோ
னுறுவலி யழிந்து மூர்ச்சித் துயர்புவி யதனின் வீழப்
பெறுவினைக் களத்தி னீங்காப் பெருவலி யுடைய சேனை
யறிவிழந் தூழி காலத் திடியென வயர்ந்த வன்றே. (க0)

அயர்ந்திடும் பொழுதிற் கால தண்டத்தா லயர்ச்சி யெய்தித்
தயங்கிய கிரச னன்பின் றளர்ந்திடு மூர்ச்சை நீக்கி
வயங்கொளு முரத்தின் மிக்காம் வலக்கையின் முசலந் தாங்கிப்
பயங்கொள நடுவ னாவி பதைத்திட வடித்தா னன்றே. (கக)

அடித்தலு நடுவன் சேனை யனைத்தொடு மிரிந்து போனான்
கடற்பெருந் தானை யோடுங் கண்ணுதற் றோழ னான
வடக்குறு மளகை யாளி வரிசிலைச் செம்பன் மீது
படப்பணி யனைய கோரத் தாயிரம் பகழி தூண்டி. (கஉ)

சாரதி தன்னை நூறு சரங்களால் வதைத்து நீண்ட
தேருறு கொடியைப் பத்துப் பகழியாற் சிதைத்துத் தேரி
னேருறு புரவி மீதி லெழுபத்தைந் தம்பை யெய்து
கார்முகந் தனைவ ளைத்துக் கணைகளா லறுத்திட் டானல். (கங)

வாய்வழி விலாழி சிந்தி வாயுவிற் சுழன்று திக்கிற்
பாய்பரி யொவ்வொன் றுக்கோ ரையிரு பகழி யாக
வோய்விலா துடற்றி யாங்க ணுறுசினத் தூரப்பிச் சீறி
மாய்விலா வலியி னோடு மலைந்துயிர்த் தஞ்சச் செய்தான். (கச)

வெற்றிகொள் குபேரன் செய்த விறல்வலி யனைத்து நோக்கி
மற்றிணி தடந்தோட் செம்பன் மறுத்தொரு சிலைநா ணேற்றிக்
கொற்றவெங் கணைக ளேவிக் குபேரன்மார் பகத்தைப் போழ்ந்து
பொற்றடந் தேரிற் சூதன் றனக்கொரு புங்க மேவி. (கரு)

பெருவலித் தனதன் மார்பு பிளந்திடப் பகழி யொன்றே
டொருபது தொடுக்க நோன்று ளுயர்வலிக் குபேரன் றேரிற்
பருவரல் சிறிதே யாற்றித் தெளிந்துவெம் பகழி கோடி
தெரிதரச் செம்பன் மீது சிந்தலுஞ் செம்பன் சீறி. (கசு)

தேரைவி ட்டிழிந்து கையிற் செறித்தவெங் கதையொன் றேந்திப்
பேரர்வலித் தனதன் சேனை பொடிபடத் துரத்த வெற்றிக்
கூர்தரு சூல மேந்திக் குபேர னவவசுரா சேனைப்
பேரறத் துணித்தா னந்தப் பெருவலிச் செம்பன் றானும். (கஎ)

மழுப்படை பிடித்தெ திர்ந்த மாகதன் றேரைப் போழ்ந்தா
னிழுக்குறு தன்னேன் வேறோர் சேமத்தே ரேறிச் சீறி
முழுக்கரும் பாம்பி னுப்போன் முதிர்நெடுஞ் சுடர்வேல் வாங்கி
யொழுக்கமில் செம்பன் மார்பிற் குத்தினன் னுதிரஞ் சோர. (கஅ)

வேலெறிந் தடுகா யத்தால் வீந்தவன் போல மண்மேன்
மாலொடு செம்பன் வீழ்ந்தான் வயவலிச் செம்பன் றம்பி
காலனுங் கூற்று மஞ்சுங் கடுஞ்சினக் குசம்ப னென்போன்
கோலவெஞ் சிலைக்கை கோட்டிக் கொடியவெங் கணைக டூர்த்தான். (ககூ)

தூர்த்திடு கணைக ளாலே குபேரனைச் சூழ்ந்த சேனை
போர்த்தொழின் மறந்து பொன்றப் பொருசிலைக் குபேரன் கையிற்
கூர்த்தநா ராச பாணங் கோடுறு பிறைவா யம்பான்
மார்த்தமுள் ளம்பு தோட்டி யம்பொளிர் சிறுக்கம் பாதி. (உ0)

முதிர்சினப் படைக ளாலே குசம்பன்றன் மூரித் தானை
புதைபடப் புரியும் வெற்றிக் குபேரனோர் குசம்பன் பொங்கிச்
சிதைவில்வெம் படைக ளேவிக் கணைகளைச் சிதைக்கப் பின்னும்
வதைசெயும் வடிவேல் வாங்கி மார்பகத் தழுத்தி னானல். (உக)

அழுத்தலுங் குசம்பன் மூர்ச்சித் தம்புவி யதனில் வீழ்ந்து
விழுத்தக வழிந்து பின்னர் மெய்யுணர்ந் தெழுந்து கோரம்
பழுத்தவெங் கதைகை யேந்திக் தனபதி படைக ளாய
குழுத்தொகை யெல்லாம் போகக் குபேரனைப் புடைத்திட் டானல். (உஉ)

புடைத்தலுங் குருதி கான்று புட்பகத் தட்டின் மீதி
லடித்தலை மத்து நீண்ட மரமென வயர்ந்து வீழ்ந்தான்
றுடித்திக முதுக்கிக் கோர நிருதிமெய் துணங்கை யாடப்
பிடித்தவாண் முசுண்டி பாணம் பிறழ்பிண்டி பாலங் கைவேல். (உ௩)

கவணெறி கல்லு லக்கை கப்பணங் கால பாச
நவமணி குயிற்றுந் தண்டந் தோமர நவைதீர் சூல
மிவையெலா மேவிச் சேனை யுடனெதிர் செம்பன் மேனி
புவனியில் வீழ்ப்பே னென்னும் போழ்தினிற் செம்பன் பொங்கி. (௨௪)

தன்படைத் தளர்ச்சி தானு நிருதிகை வலிமை தானும்
வன்சிலை யரக்கர் சேனை வலிமையும் பார்த்து ளத்திற்
றுன்பொடு தண்டொன் றேந்திச் சுழற்றியே நிருதி மார்பத்
தென்பினைப் பொடிசெய் யென்ன வேவின னேவ லோடும். (௨௫)

கண்டுசெந் நிறத்த குஞ்சிக் கார்நிற நிருதி யஞ்சித்
திண்டிறற் றேர்விட் டப்பா லோடிடத் தேனைத் தண்ட
நுண்டுக ளாக்க நின்ற வரக்கரு நுவலா தோட
வண்டிமிர் தொடையற் றோளான் குசம்பனுண் மகிழ்ச்சி யோடும். (௨௬)

வடதிசைக் கதிப னோடு வளருரு வெடுத்துத் தோன்றுங்
குடவளை பதுமம் வாரி குலவுமா பதுமம் நீலங்
கடல்படா மகரங் குந்த முகுந்தங்கச் சபமென் றோதப்
படுநவ நிதிக டம்மைப் பாசத்தாற் பிணித்துச் சென்றான். (௨௭)

சென்றபின் குபேரன் மூர்ச்சை தெளிந்துதன் னிதிய மெல்லாம்
வன்றிறற் குசம்பன் கட்டிக் கொண்டுபோ மாறு கண்டு
குன்றெனை நிமிர்ந்த தோளான் கொடுஞ்சிலை குழைய வாங்கித்
துன்றுசெவ் வாயின் பாணந் தொடுத்தனன் றொடுத்த பாணம். (௨௮)

புகைநிற மாகி யப்பா லிருளதாய்ப் பொறிய தாகி
மிகுகொடுங் கனலாய் வான மேலெழு சுவாலை யோடுந்
தகுவடி வனேக மாகித் தானவர் சேனை யெல்லாம்
வகைவகை நீற தாக்க மறங்கெழு குசம்பன் சீறி. (௨௯)

கருமுகி லென்ன வார்த்துக் கழல்புனை சேனை காவற்
குரியதா னவர்க ளோடு முற்றுவெம் படைக ளேவப்
பொருதிற லியக்க ரெல்லாம் பொன்றிட வலக்க ணெய்திக்
குருமணி மகுடம் வீழக் குபேரனு மோடி னானல். (௩௦)

ஓடிய போது வீழ்ந்த வொளிர்மணிக் கிரீட மொன்னார்
நாடியே வவ்வு றாது நலங்கிள ரியக்கர் வேந்தன்
பீடுறு குமரர்ப் போக்கக் குமரரும் பெருவில் வாங்கிக்
கோடிவெங் கணைக ளேவிக் கொடுஞ்சமர் விளைத்திட் டாரால். (௩௧)

விளைத்திடுங் காலை யோது மியக்கர்கோன் மீண்டும் வெய்ய
வளக்கரும் பலத்தால் வெம்போ ராற்றியே யடல்வெங் கோரங்
கிளைத்திடு தடியை யேவிக் கிளர்வலிக் குசம்பன் மார்பம்
பிளக்கவெஞ் சோரி மாரி யெய்திடப் புவியில் வீழ்ந்தான். (௩௨)

அக்கணந் தன்னிற் செம்பன் குபேரனை யடர்ந்து சுற்றி
மிக்குறு கவசம் பாணம் வில்லற வெம்போ ராற்றச்
செக்கர்வான் சடிலன் றோழன் செருவினுக் குடைந்தே யோடிப்
புக்குவான் றருவி னிழற் புரந்தான் றன்பாற் போனான். (௫௫)

போயபின் குசம்பன் கைகொள் பொற்புறு நிதிக ளொன்பா
னுயவை யோடுஞ் சீற்றத் தடுசின வயவ ரோடுங்
காயடற் கரிக ளோடுங் கவனவாம் பரிக ளோடுஞ்
சேயுயர் தேர்க ளோடுஞ் செம்பன்பா சறையிற் சென்றான். (௫௪)

சென்றபின் குசம்பன் மூர்ச்சை தெளிந்துமா நிருதி தன்னைப்
பொன்றிடப் பொருவே னென்னும் போதிலிவ் வரக்கர் கோமான்
வன்றிற லந்த கார மாயையாம் வாளி தொட்டுத்
துன்றிய குசம்பன் சேனை துயக்குற மயக்கஞ் செய்தான். (௫௫)

சோர்ச்சிசெ யந்த காரத் தொடக்குறுஞ் சேனை யாவும்
பார்த்தடி பெயர்த்தி டாமற் பகைத்திடப் பாசத் தாலு
மார்த்தலுங் கும்பன் மூர்ச்சை யாயின னிருதி வெற்றிப்
போர்த்தொழில் கண்டு பொல்லா மயிடனேர் பொங்கிச் சீறி. (௫௬)

இரவிதன் படையை யேவி யிருட்பட லத்தை நீக்க
விரவிய வசுரர் வேந்தர் வில்வளைத் தமரர் சேனை
கரமொடு சிரமும் வீழக் கடுங்கணை மாரி பெய்தார்
வரமிகு குசம்ப னாக பாசத்தால் வளைத்துப் பின்னும். (௫௭)

கொடுங்கணை கோடி யேவி நிருதர்கோன் சேனை யாவும்
தடிந்திடும் பொழுதி லந்த நிருதிதன் கரத்தில் வைவாள்
படிந்தபொற் பரிசை பற்றிப் பண்ணமை தடந்தேர் விட்டு
நடந்தெதிர் செம்பன் மீது நாடலுங் குசம்பன் சீறி. (௫௮)

கையுறு முசலத் தாலே மார்பிடைக் கலங்கந் தாக்க
வெய்துயிர்த் தலக்க ணெய்தி வீழ்ந்தனன் றெளிந்து பின்னர்க்
கொய்யுளைப் பரித்தே ரேறிக் குசம்பன்றன் சிகையைக் கையி
னெய்துறப் பற்றி மார்பிற் சானுவா லிடித்திட் டானல். (௫௯)

சானுவா லிடிக்குங் காலை வருணன்பா சத்தா லந்த
ஆனுறு குசம்பன் கால்க ளொன்றுறக் கட்டித் தண்டான்
மேனிவந் துரத்துத் தாக்க விறல்வலி யழிந்து வீழ்ந்தான்
வானுயர் மயிடன் கொம்பால் வரைகளைப் பிடுங்கி யெற்றி. (௬0)

நிருதியை வருணன் றன்னை நிமிடத்திற் பிடிப்ப னென்று
வருதலும் பயந்தன் னோர்கண் மகபதி தன்பா லோடிப்
பரமென வடைந்தார் சோம வாயுவின் படையி னேடும்
விரவியே சோம பாணம் விடுத்தனன் விடுத்த பின்னர். (௬௧)

பனியொடு காற்று விம்மப் படர்ந்தெதி ரசுரர் சேனை
புனிதவிற் கணைகளாதி பொற்படைக் கலன்க ளியாவு
நனியுற வெடுக்க லாற்றார் நடுங்கிமெய் யொடுங்கி வீழ்ந்தார்
கணைகடன் மயிடன் கைகால் காத்திர மசையா தாற்றான். (சஉ)

கால்கர மசைவி லாமற் கலங்கிடக் கால நேமி
சாலவுந் தளர்ந்து மாயா பலத்தினாற் சரீர நீண்ட
நீலமால் வரைபோல் வானி னிவந்திட வளர்ந்து தீயை
மாலுறு மூலக மெல்லா வருத்திட வளர்த்திட் டானால். (சௗ)

வருத்தலும் பனியுங் காற்றும் வல்லிதி னகன்ற மாற்றார்
தொகுத்திடு சேனை யோடத் துரந்தன ரசுரர் சோமன்
புகுத்ததேர்ப் பரியைக் கொன்றான் போர்வலிக் கால நேமி
பகுத்தகு ரியன்றேர் தூண்டு மருணனைப் பார்த்துச் சொல்வான். (சச)

தேரினைக் காலநேமி மீதினிற் செலுத்து கென்றே
போரடு பகழி சிந்திப் பொருதலுங் கால நேமி
கோரவெம் படைக ளாலே விண்ணவர் குழுவுங் கோவு
நேருறா திரியல் போக நெருப்பெழச் சமர்செய் தானால். (சரு)

நெருப்பெழப் பொருத போரி னின்றெதி ராற்றார் நீண்ட
மருப்பொலி துளவோன் றன்னை வழுத்தியே நினைக்கப் பொன்னின்
பொருப்பின்மேற் காள மேகம் பொருந்தியே பொலிவி னோடு
மிருப்பது போலு மாயோ னேறினன் கலுழன் மீதில். (சசு)

சங்கொடு திகிரி தண்டஞ் சார்ங்கம்வா ளைந்தும் பக்கத்
தங்கமாய் விளங்கப் பீதாம் பரத்துடை யழகு வாய்ப்பச்
செங்கம லங்கள் போன்ற சிறப்புடைக் கணங்கள் விண்ணோர்
மங்கிடா தருளின் வாரி வயங்கிட வானோர் போற்ற. (சள)

இலங்கிய கோடி ஞாயி றெழுந்தது போல மோலி
துலங்குவெங் கதிர்கள் வீசு மணிமணிக் குழைக ளேங்கக்
கலன்புனை மார்ப மீதிற் கவுத்துவங் கதிர்கா லோங்க
வலங்கலந் துளவ மாய னணுகின னணுகுங் காலை. (சஅ)

விண்ணவர் சேனைக் கெல்லாம் விளங்கிய தலைவன் மாய
னண்ணின னிவனைப் போரி னலிவுறப் பொருதே மாகி
லெண்ணிய பகைக டேரு மெனப்படைத் தலைவர் சுற்றத்
துண்ணென வெழுந்து சென்றே சூழ்ந்தனன் கால நேமி. (சசு)

தண்டொடு பிண்டி பால முசலம்விற் சரமு சுண்டி
திண்டிறற் றடக்கை பற்றித் திருத்துழா யொருத்தன் மீது
கண்டகர் சேனை காக்குங் காவலர் பதின்ம ரேற்று
மண்டமர்ப் படைகள் யாவு மாரிபோல் வழங்கி னாரால். (ரு௦)

அறுபது பாண மெய்யி லழுத்தினன் கால நேமி
தெறுசின நிமிறூ றம்பு செலுத்தினன் றெரித்து முந்நூ
றுறுகணை கால நேமி யுய்த்தனன் செம்ப னென்போ
னெறுழ்வலிச் சிலைநா ணேற்றி யெழுபது கணைக ளெய்தான். (ருக)

மற்றுள வறுவர் தாமும் வடிக்கணை யறுப தேவிச்
சுற்றுறுங் காலை மாய னுடலெலாஞ் சோரி சோரத்
தெற்றுறு சிலையை வாங்கி யசுரர்தஞ் சேனை காப்ப
வுற்றிடப் பதின்ம ரஞ்ச வுய்த்தன னறுப தம்பே. (ருஉ)

கேசவன் மீது கால நேமிவெண் கிரண மாறுத்
தேசொளிப் பிறைவா யம்பு மூன்றினைச் செலுத்த லோடுங்
காசறு மணிய ணிந்த கவினுரத் தூடு செல்ல
வாசுதே வன்று னுள்ள மயங்கியே தெளிந்து பின்னர். (ருங)

ஏறுழ்வலி முசலந் தன்னை யெதிர்த்திடுங் கால நேமி
யுறுவழி யழித்தி டென்ன வுய்த்தலு மந்த வெய்யோன்
றெறுசிலைக் கணைக ளாலே சிதைத்தனன் சீறி மாயன்
குறுகியே குந்தந் தன்னுன் மார்பிடைக் குத்தி ஞனல். (ருச)

வாரதாச் சோரி யாறு வலியழிந் துருண்டு வீழ்ந்து
பார்மிசை யெழுந்து கால நேமியாம் பதகன் கையிற்
கூர்தரும் வேலான் மாயன் கரத்தினிற் குத்த லோடுஞ்
சோரதாச் சோரி மாயன் சாரங்கம்விற் றுணைவி னேந்தி. (ருரு)

மார்பினிற் கணையோ ராறும் வடிக்கணை தலைக்கோர் மூன்றுஞ்
சோரிசோர் தரவே தூண்டித் துலங்குதேர்ப் பரிமே ஞன்குஞ்
சாரதி மீதி ஞன்குந் தயங்குகே தனத்தி லொன்று
மேருறு கணைக ளேவி யறுத்தன னெவரு மஞ்ச. (ருசு)

தேருறு வரியுந் தேரூர் பாகனுஞ் சிதைந்த பின்னும்
போர்வலி யாற்று நின்ற புயவலிக் கால நேமி
யேர்பெறு சிரத்தின் மீதி லெழுகவு மோத கிப்போர்
வார்தரு கதையை வாங்கி யெறிதலு மருடஞ் சிந்தி. (ருஎ)

தலைபிளந் திரத்தஞ் சோரத் தரையிடை வீழ்ந்தான் றேரும்
பலபல கண்ட மாகப் பட்டதவ் வசுரன் றன்னை
நிலைபெறு திருமா ஞேக்கி நின்னுயிர் விடுத்தேன் போதி
சிலதினங் கழிந்தா னின்னைச் செகுப்பது யானே யென்றுன். (ருஅ)

என்றரி விடுப்பக் கால நேமியை யிரதத் தேற்றிப்
பொன்றுரு திருந்த மற்ருேர் சாரதி போத லோடும்
வன்றிறல் வானோர் யாரும் மாயனை வழுத்தி யேத்தி
நின்றன ரென்று சூதன் முனிவர்க்கு நிகழ்த்தி ஞனல். (ருகூ)

ஐம்பத்திரண்டாவது
கால நேமிபார் செய வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். கருஉ௦.

ஐம்பத்து மூன்றாவது

கிரசனன்வத வத்தியாயம்.

முரசென முழங்கு முந்நீ ருதித்திடு முகுந்தன் முன்னு
ளாரசெனு மனுவி னுக்கே யன்பொடு முரைத்த சீற்றக்
கிரச்னன் வதத்தை நன்றாய்க் கிளத்தென முனிவர் கேட்பப்
பரசணி பரனைப் போற்றிப் பகருவான் சூதன் மாதோ. (க)

போர்வலி களத்தி னின்றும் பொள்ளென வெயர்த்துப் பொங்கித்
தேர்பரி யானை காலாள் செறிந்திடத் தேரி லேறிப்
பேர்வலி நிமிவேற் செம்பன் பிறங்கிய மதனன் சம்பன்
கார்நிறத் திருமா றன்னைக் கடலென வளைந்து கொண்டே. (உ)

வளைந்திடாத் திகிரி தண்டம் வாள்கவண் முசுண்டி குந்தம்
பிளந்திடு குலிசம் வைவே ரூமரம் பிண்டி பாலம்
விளங்குவெம் பரசு தோட்டி வெஞ்சிலைச் சரங்க ளாதித்
துளங்கலி னெடுமான் மீது சொரிந்தனர் சொரிந்த தன்று. (ங)

வரத்துறு படைக ளாலு மந்திரப் படைக ளாலு
முரத்தினிற் கரத்திற் காலி லோங்கிய புயத்தின் மோலிச்
சிரத்தினி லழுத்திச் செங்கண் மாலுட றெரியா வண்ண
நிரைத்தனர் நிரைத்த லோடு நிறைந்தது குருதி நீத்தம். (ச)

திருகுவெஞ் சினத்து மாயன் சிலீமுகஞ் சார்ங்கத் தேற்றி
வரிசிலை நிமிமார் பத்தில் வாளிபத் திரட்டி யெய்து
பெருவலி மதனன் மார்பம் பிளந்திடப் பத்தம் பெய்து
பொருவிறற் சம்பன் மார்பிற் புங்கமைந் தழுத்திப் பின்னும். (ரு)

திண்டிறன் மயிடன் மார்பிற் செலுத்தியே ராம்பு செம்ப
ஞெண்டிற லழிய வாளி யொருபதோ டிரண்டு போக்கி
யெண்டரு மற்றோர்க் கெல்லா மொருவனுக் கெட்டம் பேவி
யுண்டிட விடுப்ப வொன்னா ரோடினர் திசைக டோறும். (சு)

வேறு.

ஓடு தானவர் விழியொளிர் மணிமுடி யுயர்தரு புயமார்ப
நீடு காறுடை நாசிகை செவிவழி நிணமொழு கிடவாளி
நாடி யேதிசை திசைதொறு நலிவுசெய் திடுவது நவிதேவர்
கூடி மாயனைப் புகழ்வதுங் கண்டெலாங் குறித்தன னிமியென்போல். (எ)

தன்பெ ரும்படை யாவையு நிறுத்தியே தன்கரத் தொளிர் வேலாற்
பொன்பொ லிந்திடு மார்பனைக் குத்தினன் புதியபுண் ணீர்சோர
வன்சி லைக்கர மதனனும் வடிக்கணை வழங்கினன் மலைபோலக்
கொன்சி னத்தடற் செம்பனுங் குசம்பனுங் குறித்தடர்ந் தடித்தார்கள். (அ)

பட்ட யத்தினால் வெட்டினன் கிரசனன் படகிலை வடி வேலாற்
கட்டு வெஞ்சிலை மயிடனுங் குத்தினன் கண்ணனு மிகச்சீறி
யெட்டு மாமணி கட்டிய வேலினைச் செம்பன்மே லெறிந்தேவக்
கொட்ட மிட்டதைத் தாவியே பிடித்தனன் கொடுந்திறற் படைச்செம்பன். ()

பிடித்த காலையிற் செம்பனை வியந்துகைப் பெருஞ்சிலை நாணேற்றித்
துடித்த கோபத்தின் மாயனம் மலரோனத் திரத்தினைத் தொடுத்தேவப்
படித்த லத்தொடும் வானகங் கரிந்திடப் பரந்தன கனன்மாரி
துடித்து வீழ்ந்தன தானவர் சதுரங்கத் தொகுதிவெம் படைச்சேனை. (௧௦)

சேனை வீழ்ந்திட மால்விடும் பிரமவத் திரஞ்செயுந் திறல்வீரம்
தானை காவல னாகிய கிரசனன் றழல்விழித் தறநோக்கி
நானி லம்புகழ் பிரமவத் திரத்தினை நாண்சிலை வளைத்தேத்தி
வான கம்புவி நடுக்குற விடுத்தனன் வானவர் குழுவோட. (௧௧)

நான்மு கன்படை ரவுத்திரத் திரத்தினை நகைகெட வடலோடுந்
தேன மர்த்துழாய் மாயவன் ரவுத்திரத் திரம்பழு துறல்கண்டே
மூன்மு கத்துவெங் கரலதண் டாத்திர முருத்தெதிர் விடலோடும்
வான்மு கத்தினும் புவியினுஞ் சண்டமா மாருத மிகுத்தேற. (௧௨)

சத்த சாகரங் கரைபுரண் டுடைதரத் தடவரை யுயர்பூமி
துத்தி ளரா முடியொடு நடுங்கிடத் துணைவினில் வரல்கண்டே
வித்த கப்பெரு வரக்கனை யசுரர்கள் விடவெதிர் கணையெல்லா
மொத்த துண்டுக ளாக்கிமற் றவர்குழா முடைதர வுடன்றுக்க. (௧௩)

கோடி தேர்படை கொடுநெடு முடியொடுங் குலவரை யெனவீழ்ந்த
கோடி மாமத யானைகண் முகிலெனக் குமுறிமண் மிசைவீழ்ந்த
கோடி வாம்பரி செம்புனற் றிரையெனக் கொய்யுளை யறவீழ்ந்த
கோடி வீரர்க ளடியறு மரமெனக் குவலையந் தனில்வீழ்ந்தார். (௧௪)

கண்டு சீற்றவெங் கனலெழக் கிரசனன் காலதண் டத்தாவி
யுண்டு வாவென மயேசுர னத்திர மொன்றையெய் திடலோடு
மண்டு காலதண் டத்தினை மழுங்கிட மறித்தனு மதுநோக்கிக்
கொண்டன் மேனிய னெண்டிசை பரந்திடு கோபவெங் கனலோடும். (௧௫)

நூறு கோடிசூ ரியரொருங் குதித்தென நுவலரு மொளியோடுங்
கூறும் வீறுள வத்திர சத்திரக் கொடும்படை களையெல்லாம்
வேறு கூறுசெய் வெற்றியும் புணர்தம விறல்கெடுத் திடுமொய்ம்பு
மேறு சக்கரா யுதம்விடுத் தனனெதிர்த் திகல்கிர சனன்மீதில். (௧௬)

விட்ட சக்கரா யுதத்தெதிர் தானவர் விற்பொழி சரமாரி
தொட்ட தோமரம் பிண்டிபா லம்விறற் சுடர்நெடு வடிவேல்வாள்
கட்டு பாசநான் முகன்படை முதலிய கடும்படை நனியாவு
மட்டி லாதன விட்டன ரவையெலா மடிந்தன கணப்போழ்தில். (களஎ)

இறந்து வெம்படைக் கலனெலாஞ் சாம்பரா யினவஃ தினைநோக்கி
முறிந்து தானவ ரோடினர் நீடிய முதுகிடைக் கனல்காலச்
செறிந்து றுங்கரு மம்பல கூடினுஞ் சிவதரு மந்தன்னை
மறிந்தி டாச்செய வண்மைபோற் றிகிரியை மறிந்திட மாட்டாரால். (கஅ)

இன்ன தன்மைகண் டடுதிறற் கிரசன னெதிர்த்துவா ணகைசெய்து
முன்ன ரெய்தலுங் கழுத்தினை யறுத்தவன் முடித்தலை யினைப்பாரின்
மன்ன வீழ்த்தியே மாயவன் கரத்தினில் வந்தது திருவாழி
யென்னு மாறுகண் டந்தரத் தெழிலிபோ லமரர்துந் துபியார்ப்ப. (ககூ)

துன்றிவானவ ராடினர் பாடினர் சொரிந்தனர் மலர்மாரி
யென்று வேள்வியை யாற்றிடு நைமிசத் தேயுறை முனிவோருக்
கன்று மார்மனுக் கேட்டிட வுரைத்தன னச்சுத னெனநாளு
மன்று ளாடிதாள் சூடிய சூதனு மாமுனி வகுத்தானால். (உ0)

ஐம்பத்து மூன்றவது

கிரசனன் வதவத்தியாய முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். கருசஂ0.

ஐம்பத்து நான்காவது

விஷ்ணுபராசெய வத்தியாயம்.

கராமொரு கரியடர் காலையி லக்கரி
விரோதம தகல்செய மேவிய விட்டுணு
பராசய முரையென மோனிகள் பத்தொடு
துராசைக ளழிவுறு சூதனு மத்திறம். (க)

ஓதுதன் மேயின னென்னலர் களமிடை
தீதறு மகபதி முதலிய தேவர்கண்
மாதவ னிணையடி வந்தனை செய்தே
தாதலர் தூயெதிர் சார்ந்தனர் நின்றார். (உ)

வருகிர சனனுயிர் மடித்தது மதனன்
செருநிமி முதலிய திறல்கெழு தலைவர்
பரிகரி ரதமடு படையின ருடனே
யரியினை நொடியினி லடலொடும் வளைய. (ங)

சுடர்விடு முடியரி சொரிகணை தொடுமுன்
றடிகவ ணயிலயில் சரமழு முசல
மிடிவட வனலென வெரிதரு திகிரி
கடவின ரவனொடு கலுழனு மறைய. (ச)

அசுரர்கள் விடுபடை யவைபொடிபடவே
விசிகமொ டடுபடை விறலரி விடலும்
வசையுறு மசுரர்கண் மறமொடு மடியத்
திசைதொறு மருளொடு சிதறினர் வெருவி. (ரு)

ஓடிய வசுர்க ளுளமெலி வுறவே
நீடிய தலைவர்க ணிறுவின னரிமே
லூடின ரிரதமு னடவினர் பரிமேற்
கூடினர் கணைபல சிதறினர் குழுமி. (சு)

உறைவிடு கணைபல வுடலினை யுருவ
விறையள வரிமன மிகலொடு தளரப்
பறவையி னரசெதிர் பரிவொடு மினநீ
மறமிகு மசுரர்கண் மதனன்மு னனடவாய். (எ)

எனுமொழி பகருமு னிடியன கலுழன்
சினமொடு மவனெதிர் செலவவன் விடுவெங்
கனலுறழ் சணைகெட வொருகணை கடவி
வினையுற மறுகணை விறலரி விடலும். (அ)

மதனன்மெய் குருதிகள் சொரிதர மறுகக்
கதழ்சின மொடுமெரி கனல்சொரி கதையா
லதிபல மொடுமவ னறையடி படுமான்
முதிரெரி நிகர்கவு மோதகி விடவே. (கூ)

வளிவிசை கொடுமெதிர் மதனன்மெய் படலு
மிளிர்புவி மிசையுடல் விழவுயிர் விடவே
தளர்வுறு மசுரர்க டகுதிசை யுறலு
மளவறு மிடலுடை யடுதிறன் மயிடன். (கo)

இருவிழி கனலெழ வெதிர்பரி நடவி
யொருதிரி முகவயி லரியுட னிறுவிக்
கரையில வடுகணை கலுழன்மெய் செருகச்
சொரிகுரு தியினொடு துயர்கிளர் தரவே. (கக)

அடிபெயர் தரகிணை யுறுதரு மவரை
யுடல்பிணி படவிட முலவிய பாசம்
விடுதலு மவன்மன வினைவினை யுணரா
நெடியவ னடுசிலை நிணமுறு கணைகள். (கஉ)

சிதறலு மயிடன தெரளிதிக ழுகல
மதுதுணி படநில மிசைவிழு மவனை
மதியிலி மதிமுக மலைமகள் படையான்
முதிர்சின துடல்விழு முளரியன் மொழியால். (கங)

ஆதலி னினதுயி ரருளின னவணீ
போதுதி யெனமொழி புகலுறு பொழுதிற்
காதியெ னுடனமர் கருதுதி யென்றே
தீதக லரியொடு செம்ப னெதிர்ந்தே. (கச)

தீயிரு விழிவழி தேறிட விசையிற்
பாயுறு தகர்மிசைப் படர்தர நெடிய
மாயவ னுடன்முழு வதுமறை படவே
காய்கணை பலபல கனலென விடலும். (கரு)

மாயவ னவன்மன மறுகுற முசுண்டி
யாயதை விடுதலு மவனிவர் தகரைப்
போயுயி ருணமிகு பொலிவுறு மிரதத்
தேயினன் மணிமுடி யிலகிய செம்பன். (கசு)

அன்னவன் வரிசிலை யடுகணை பொழியப்
பொன்னியல் வரிசிலை பொழிகணை யதனாற்
பன்னிய சிலைபரி ரதம்விடு பாகன்
சென்னியு மகலிடம் விழவமர் செய்தான். (கஎ)

கதழெரி விழிவழி கதுவிய செம்பன்
றுதிசெயு மமரர்க டொகைபழி செம்பன்
சிதைவுறு மனமொரு புவியிடை செலலு
நுதியுறு கணையரி நொடியினி லெய்தான். (கஅ)

தோள்கர முடறலை சுடர்கவி னுடனே
தாளிவை தொளைபடு பொழுதுறு தகையாய்
நீளுடல் விழவெழு குருதிக ணிறைய
மாளில னவனெதிர் மாயவ னறைவான். (ககூ)

நாளலர் விரிதரு நாயக னடலான்
மாளுவை யொழிகென மறுகின னரவக்
கோளுறு மதியென முகமலர் குவியா
நீள்புவி மிசையுட னிலையற விழவே. (உ௦)

சிலரடி சிலர்தொடை சிலரரை சிலர்கை
சிலர்குடம் சிலருடல் சிலரணி சிலர்தோள்
சிலர்விரல் சிலர்செவி சிலர்விழி சிலர்வாய்
சிலர்தலை துணிபட வரிகணை செலுமால். (உக)

கொழுவொடு குடரிடை குடைதர மிடையுங்
கழுகுக ளலகைகள் கனியுற வணிபாய்
முழுகிடு நரிகரி முழையன செவிவாய்
நுழைதரும் விழைதசை நுகர்வுறு மெருவை. (௨௨)

அரிதெரி கணைவிட வசுரர்க டலைகால்
கரமுர மரிபடு களமதி னிணமார்
குருதிக ளலைபொரு குரைகட னடுவே
கரிபரி ரதமிவை கலமென வுலவும். (௨௩)

கணைவிட முறிபடு கணைகழ லசுரர்
துணையில வளவறு துயர்மிகு கடலார்
புணையென வமரர்தா புயவலி புடையா
னிணையிலி தாரக னிடையணு கினரால். (௨௪)

தாரக னெனுமெரி தழல்பொழி விழியா
னீரினி மெலிவுறு நினைவினை யொழிதிர்
கார்முகி லெனுமரி தனையொரு கணமே
போர்செய்து புகழ்கொள்வ னெனுமொழி புகல. (௨௫)

நிமிருறு தாரக னிறைபடை யதனாற்
குமைதர வமரர்கள் கொடுவிட மொடுதீ
யுமிழ்கதை கொடுமுடி யுயர்தலை தகரத்
தமிவரு மரியுட றளரவ றைந்தான். (௨௬)

அறைமுன நிமியெனு மடல்கெழு மசுரன்
பொறையறு சினமொடு பொருதிற னுடனீள்
கறைகெழு தடியொடு கனலெழ விசிறிச்
சிறையொடு கலுழன்மெய் சிதறவ றைந்தான். (௨௭)

இருவர்க டடியடி யிருவர்மெய் யுறலு
மரியொடு நகுடனு மடுகள நடுவே
புரளலும் மசுரர்கை புடைதர நகைசெய்
துரமுறு தாரக னுழைகுறு கினரால். (௨௮)

குறுகிய வசுரர்கண் மகிழ்வுறு குரவை
யுறுதிசை செவிடுற வுவகைகண் மிகவே
விறல்பெறு தாரகன் விரைமல ரிருதாண்
முறைமுறை துதியொடு முடிமிசை புனைவார். (௨௯)

மாதவன் முனநமர் வழிவரு மசுரர்
நாதரை வதைசெய்து நலிவுசெய் தனனிச்
சீதரன் மணிமுடி சிதறிட வெவரே
சாதுவ ருனையல தடல்புரி கழலோய். (௩௦)

என்றுபல் பலதுதி யிகலுற மொழிவார்
வென்றிகொண் முழவொடும் வியன்முர சறைவார்
சென்றடர் பூரிகை தாரைகள் சின்னத்
தொன்றிய வொலிகட லுடைபட வயர்வார். (ருக)

இவ்வகை யசுரர்க ளெழுகளி பெருகு
மவ்வயி னயர்வொழி யரியொடு கருடன்
கவ்வைகொ ளமரர்கள் கணமனு குறவே
செவ்விதி னொருவழி சென்றன ரொருவி. (ருஉ)

ஒருமையின் மகபதி யரியொடு மொருவ
வரமிகு தாரகன் வயமொடு மகழ்வாய்ப்
பரவிய தனதுயர் பாசறை யுற்றுன்
சுரமுனி வீரெனச் சூதனு ரைத்தான். (ருரு)

ஐம்பத்து நான்காவது
விட்டுணுபராசெய வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். கஙளரு.

ஐம்பத்தைந்தாவது
செம்பன்வத வத்தியாயம்.

அரிபரா செயத்தினை யறைந்த சூதனைத்
தெரிதரு வரம்பெறு திறலின் வெற்றிகூர்
வரிசிலைச் செம்பன்றன் வதத்தைக் கூறெனுந்
துரிதமின் முனிவர்க்குத் தொகுத்துச் சொல்லுவான். (க)

தானவர் வலிமையுந் தார கப்பெய
ரீனனுக் கரிதளர்ந் திரியல் போயதும்
வானவர் நாயகன் மனத்தி லுன்னியே
தேனுறுந் துளவன்முன் சென்று கூறுமால். (உ)

அய்யனீ முன்னமே யசுரர் தங்குல
நைய'வென் றமரரை நயந்து காத்தனை
கையரா மசுரரைக் காதி மாய்த்திடா
தெய்திய திருவிளை யாட்டின் றென்னையே. (ரு)

இரணிய கசிபுட னிரணி யாக்கன்வெம்
முரண்வலி வித்தியா சாலி யென்றிடு
மரணுறு மசுரரை யறுத்து வென்றனை
திரணமா மிவர்கணின் றிகிரித் தக்கரோ. (ச)

துட்டரைச் செகுத்திடா தருள்சு ரந்திடி
விட்டமாய் நின்பத மிறைஞ்சு வோமெலாம்
விட்டெவ ணேகுவோம் வினைவிற் முனவர்
பட்டிட வருளெனப் பதம்வ ணங்கினன். (ரு)

வணங்கிய வாசவன் மனத்தின் வாட்டமு
மணங்குறு மமரர்கள் யாவு நீக்கியே
குணங்கவர் நன்குணக் கொண்டன் மேனிய
ணிணங்கிய வருள்சுரந் தினிது கூறுமால். (சு)

தாரக னென்னுமித் தருக ணாளனை
வீரரில் வீரனும் வேல னன்றியே
யாருள ரடுபவ ராத லாலியாம்
போருறு படைஞரைப் பொருது வெல்லுதும் (எ)

இவர்களின் மயிடனை யிமய வெற்பருள்
குவவிள வனமுலைக் குமரி கொல்வணின்
னவிர்படை செம்பன தாவி யுண்ணுமென்
றுவமையி லான்முக னுமைமுன் னுண்டரோ. (அ)

கூறிய கொள்கையாற் செம்பன் கூருயிர்
வீறறப் போர்புரி விண்ணு ளோரடன்
மாறிலெண் டிசையினர் மற்று ளாரொடு
மூறறக் காத்துமா லுன்னை யென்றனன். (கூ)

அரிமொழி செவிபுக வமரர் கோன்முகம்
விரிதரு கமலமாய் விளங்க மேருவிற்
பரனிடத் துதித்துயர் பதினொன் றேயெனுங்
குரவுமை வணங்கியே கூறன் மேயினன். (க0)

தெறுவலித் தானவர் சேனையாகிய
மறிகடன் மறுகுற வளைந்து போர்செயற்
குறுபடை முன்னர்நீ ருடற்று வீரென
வறைதலுங் கபாலியோ டரிய பிங்கலன். (கக)

பரவுவீ மன்விரு பாக்கன் சம்புமெய்
விரவுவட் சேசுரன் விறல்வி லோசிதன்
றரமிகு பினுகிசாத் தாக தன்சம
ருரமிகு சண்டனோ டுயரு ருத்திரன். (கஉ)

வெள்ளியங் கிரிநிகர் விடையி னேறியே
யள்ளிலைச் சூலமு மழுவு மங்கையிற்
றெள்ளிதிற் சுழற்றியே கண்க டீயுகத்
துள்ளிய கணம்புடை சூழ வேகினர். (கங)

ஏகலு மக்கினி யேழ கத்தினும்
பாகுறு யமனடு பகட்டின் மீதினும்
வாகுறு நிருதிக் கனயுமா மீதினும்
வேகமாய் வருணன்மா மகர மீதினும். (கச)

வாயுவெங் கலையினும் வளர்கு பேரனேர்
தூயபுட் பகத்தினுஞ் சுடர்விட் டும்பர்கு
மேயவீ சானரோ டினனற் றேரினு
மேயவெண் கதிரவன் விமான மீதினும். (கரு)

கின்னர ரியக்கர்கந் திருவர் கேழ்கிளர்
பன்னகர் மருத்துவர் பரவு சாத்தியர்
தன்னிகர் வித்தியா தரர்கள் யாவரு
மின்னிய மார்த்தெழ வெழுந்திட் டானரோ. (கசு)

திக்குறு கயமெனச் சிறந்த மொய்ம்பொடு
தொக்குறு யானைபத் திலக்கஞ் சூழ்தர
மிக்கமும் மதம்பொழி வெள்ளை யானைமேற்
றக்கவச் சிரப்படைத் தலைவ னேறினன். (கஎ)

ஏறிய விந்திர னிடப்பு றத்தினின்
மாறிலா வருணனும் வலப்பு றத்தினின்
வீறிய குபேரனு மேவ முன்னமே
கூறிடு கூற்றுவன் குமிறி யேகவே. (கஅ)

அனலிதன் சுவாலையா லருகு காத்துற
வனமலி மாயவன் பின்பு வந்துறக்
கனைகட லெனவியங் கறங்க வெற்றிசேர்
புனைகழ லிந்திரன் போதன் மேயினன். (கக)

இந்திர னெழுமுனந் தூசி யேகிய
சந்திர கலையணி சடில ருத்திரர்
புந்திசேர் விறற்படைப் பூதர் சூழ்வரச்
சிந்தைகூர் தாரகன் சேனை முன்னியே. (உ0)

குரைகடன் முழக்கெனக் கொக்க ரிக்கவான்
றரைதிசை செவிடுறத் தழைத்த பேரொலி
திரள்புய வசுரர்கஞ் செவியிற் சார்தலும்
விரைவொடு மசுரர்வாள் விதிர்த்தெ ழுந்தனர். (உக)

எதிர்த்திடு மசுரர்மே லிகல்செய் பூதர்கள்
கதத்தொடு வாள்கதை குந்தங் கப்பணம்
விதிர்த்தெதிர் விடுத்தலும் வெய்ய வம்பினாற்
சிதைத்திடத் தானவர் சீறி யார்த்தனர். (உஉ)

ஆர்த்தலும் பூதர்க ளடுக்க லுள்ளன
பேர்த்தெதிர்த் தெறிந்தனர் பின்னுந் தானவர்
கூர்த்தவெங் கதையினாற் குமிறி யெற்றியே
போர்த்தலத் தடுக்கலைப் பொடிப டுத்தினார். (௨௩)

இருவகைச் சேனையு மெதிர்ந்து வெங்களச்
செருவிடைத் தொர்ந்தயுத் தங்கள் செய்யநீள்
பெருவலிக் கயாசுரன் பிறங்கு செய்யதீ
யருவரை நடந்தென வங்க ணெய்தியே. (௨௪)

பூதரைக் கைகளாற் புடைத்துப் பூதர்க
ணாதரைக் காலினாற் றேய்த்து நண்ணியே
காதுவே தாளரைக் கடித்துத் தேவரைக்
கோதறு கொம்பினாற் குத்தி வீட்டினான். (௨௫)

வாழ்வறச் சிலர்தமை வதைத்து மற்புயந்
தூள்படச் சிலர்தமைத் துணித்துச் சூழ்கழற்
றாளறச் சிலர்தமைத் தடிந்து சாத்தியர்
மூளைகள் சிதறிட முனிந்து வெட்டினான். (௨௬)

தேவரை யின்னணஞ் செகுத்துத் திக்கயம்
யாவையு மடர்த்திடு மேல்லை ருத்திரர்
தாவருங் கனல்விழி சொரியத் தாங்குகை
மூவிலை வேல்கொடு முரியக் குத்தினார். (௨௭)

குத்திய வுருத்திரர் பூதக் கூட்டத்தை
வித்தகக் கயாசுரன் விறல்கொ டோள்களா
லொத்துற நெருக்கியூ னுறக்க டித்தூரத்
தெய்த்திடத் தலைகளை யிட்றித் தேய்த்தனன். (௨௮)

தேய்த்தலுங் கபாலியுங் கதனுஞ் சீறியே
வாய்த்திடு முத்தலைச் சூலம் வாங்கிநே
ராய்த்திகழ் கயாசுர னஞ்சக் குத்தலும்
பூத்திடு முருக்கெனப் புகலத் தோன்றினான். (௨௯)

தோன்றிடு மசுரனார் சூல பாணியா
யேன்றுறு கபாலிதன் கன்னத் தெற்றியே
கான்றுவெங் கனல்விழி காலக் காய்ந்துபோ
ரூன்றிய கதன்வயி றுறக்க டித்தனன். (௩௦)

கடித்திடுங் காலையிற் கனன்று ருத்திரர்
பிடித்தசூ லத்தினாற் பெயர்த்து மார்பகந்
துடித்திடத் தொளைத்தனர் தொளைக்கை யாலவ
ணடித்தலு முருத்திர ரஞ்சி யேகினார். (௩௧)

ஏகலுங் கபாலிகண் ணெரிசொ ரிந்திட
வாகுறு விடையினின் றிழிந்து வான்கதிர்ச்
சேகுறு சூலத்தாற் றிரித்துக் குத்தவே
வேகமாய்த் தரைத்தலம் வீழ்ந்திட் டானரோ. (கூஉ)

வீழ்ந்திடு மசுரன்கால் பற்றி வீசிவான்
சூழ்ந்திடப் பலமுறை சுழற்றி யோங்கியே
யாழ்ந்துறப் புவிமிசை யடித்துக் கொன் றுடல்
போழ்ந்துரி போர்த்தனன் போர்க்க பாலியே. (கூகூ)

வெற்றிசேர் கயாசுரன் மெய்யிற் றோலினைப்
பற்றியே போர்த்திடு பரன்க பாலிவா
னுற்றிடு மோங்கலா யொளிவிட் டோங்கலு
மற்றவர் பதின்மரும் வாழ்த்தி யேத்தினர்: (கூச)

தேவதுந் துமியொலி சிறக்கத் தேவர்கள்
பூவுறு மழைமிகப் பொழிந்து வாழ்த்தினு
ரோவிலா துறுதிசைப் பால ருற்றவன்
பாவனை வியந்தடி பணிந்து போற்றினர். (கூரு)

போர்வலிக் கயாசுரன் பொன்றத் தானவர்
சேர்வலி யிழந்துறு திசைகெட் டோடியே
தாரக னடிமிசைத் தாழ்ந்து கூறலு
மார்வலி நிமியைநீ யணுகு கென்றனன். (கூசு)

அணிபடைக் கலனுட னரியி லேறியே
யிணையிலா வுறுவலி யிரதம் பாய்பரி
பணைமுகக் களிறொடு பதாதி சூழ்வரத்
தணிவறு பல்லியந் துவைப்பச் சார்ந்தனன். (கூஎ)

ஆர்த்திடுஞ் சுரரைப்பார்த் தமரர் காளிவண்
போர்த்தொழில் வல்லிரேற் பொருமி னென்னுடன்
றூர்த்தடம் புயவலி சற்று மில்லிரேற்
சேர்த்ததென் படைக்கல மென்று சீறியே. (கூஅ)

கொடுந்திற னிமியொடு கொடும ரங்குழைத்
தடுந்திறற் பகழிக ளமரர் மேல்விடப்
படுந்துய ரினைமக பதிமுன் னேதினர்
கடுஞ்சினத் தேரடுவெண் கரியிற் றேன்றினன். (கூகூ)

காழுறு மனவலி நிமிக டாவிய
வேழுயர் போதக மிறைக்கு மும்மதஞ்
சூழுறு வாடையாற் றுலங்கு மோடையும்
வீழுற வேகலும் விரைவி னிந்திரன், (சு0)

வெட்டியங் குசத்தினன் மீட்க வுந்தடை
பட்டிடா தோடலாற் பாக சாதனன்
மட்டிலாச் சினத்தொடுந் திரும்பி வாற்புறத்
தட்டினி லிருந்தவன் றன்னை நோக்கியே. (௬௧)

திருந்துவச் சிரப்படை செலுத்தத் தானவ
னிரும்புறு முடல்புடைத் திடலு மூர்ச்சையாய்ப்
பெரும்புட வியினிடை விழுந்து பின்னரும்
வருந்துய ரொழிந்துகை மலையி லேறியே. (௬௨)

தேவர்தம் படையெலாஞ் சிதறத் தாக்கலுந்
தாவரும் வடதிசைத் தலைவ னத்திசை
மேவிய சாருவ பூம மீதிவர்ந்
தோவறு சினத்தின னுருத்தெ திர்ந்தனன். (௬௩)

ஏற்றிடு காலையி னிமியி வர்ந்திடு
கூற்றென வடுதிறற் கொடிய யானைமேற்
காற்றிரட் சாருவ பூமன் காதலுஞ்
சாற்றிய தனதனுந் தடிகொண் டோச்சினன். (௬௪)

ஓச்சிய வடிபட வோங்கல் போல்விழி
தீச்சொரி மதகரி செத்து வீழநீண்
மூச்சுட னிமியென மொழியுந் தானவ
னீச்சுறு கடலிடை நிலத்திற் பாய்ந்தனன். (௬௫)

பாய்ந்தவன் பின்னொரு பகட்டெ ருத்தமீ
தேய்ந்துறு முன்னமே தனத னேந்திய
தாந்தடி கொண்டவற் புடைக்க வன்னவன்
வீந்தவன் போற்புவி வீழ்ந்திட் டானரோ. (௬௬)

நெடுங்கரத் திபம்பட நிமியும் வீழ்தலுங்
கடுங்கொலை யசுரர்தங் கணங்க ணீருக
நடுங்கினர் திசைதொறு நாடி யோடின
ரடுந்திற லமரர்க ளார்த்திட் டாரரோ. (௬௭)

வானவர் மகிழ்ச்சியும் வயங்கு தேர்ப்படைத்
தானவர் தளர்ச்சியுஞ் சமரி லேநிமி
யானவன் மூர்ச்சையு மறிந்து செம்பன்வெங்
கானுறு மழலெனக் கடிதி னெய்தினன். (௬௮)

வேறு.

கரிபரி ரதமொடு கழல்வீரர் கனைகட லெனவரு புடைசூழ
வரிசிலை தொடுகணை திரிசூல மழுவெழு வளைகவ ணயில்கூர்வாள்
பரிகமு சலமிடி தடிகுந்தம் பரிசைதி கிரிசுடர் படுவைவே
னிரவிய யயவர்கள் கொடுசூழ நிணநிறை களநடு நேர்செம்பன். (௬௯)

வந்தனன் விழிவழி யனல்சிந்த வரிசிலை செவியள வுறவாங்கி
முந்துற வெறிகணை பலகோடி முரணுடை யமரர்க ளுடன்மீது
சிந்திடு மளவையின் மகவானுஞ் சிந்துர முறுபிடர் தனின்மேவி
வெந்திற லசுரர்க டமைநூற வெங்கணை யெனுமழை பொழிகின்றான். (௫௦)

பொழிதழ லொழுகிட விடுபாணம் புகைநிற வசுரர்கள் புயமார்பம்
விழிகுழை தலைகள மிடைசானு விரல்பதம் வயிறுகை தொடைநாசி
யழிவுற வகைவகை துணியாக வலைபொரு குருதியி னதியோடிக்
கழிபடு கடலக டனுகிறக் கயன்முதன் முதலைகள் களிகூரும். (௫௧)

நரிகழு கெருவைசெந் நாய்காக நசையுறு மிகுதசை யுணவாலே
பரிவொடு டாகினி திரள்கூளி பகர்வுறு பிசாசடர் வேதாளங்
கரியுடல் பரியுடல் கையாலே கம்பலை யொடுமெறி பந்தாடுஞ்
செருமலி களமுழு துஞ்சோரி சிந்துக வந்த மெழுந்தாட. (௫௨)

இந்திர னேவிய சரமாரி யெங்கணு மிகல்புரி வதுகண்டே
வந்தனன் விழியழ லுமிழ்செம்பன் வரிசிலை யிருதலை யுறவாங்கிச்
செந்தழல் சொரியெரி சரமாரி சிந்தின னமரர்க ளுரகேசர்
கந்திரு வரினொடு மடுபூதர் கனைகழல் விஞ்சையர் கணநாதர். (௫௩)

ஓடினர் சிலர்சிலர் கரம்வீழ வுறுதுயர் மருவினர் விழிபோழ
வாடினர் சிலர்சிலர் பதம்வீழ மறுகினர் தலைமுடி யுடன்வீழ
வீடினர் சிலர்சிலர் நகைவீழ மெலிகுநர் துணிபடு காநாடித்
தேடினர் சிலர்சிலர் புயம்வீழச் செம்புனன் மீதுமி தந்தார்கள். (௫௪)

சேனைகள் சிதறிட மகவானுஞ் செம்பனு மெதிர்பொரு திறலோடு
மூனுறு தெரிகணை பலவேவி யொருவரொ டொருவர்கை யிளையாமன்
மேனிமி ருருவுசல் லடையாக மிடலரி யெனவமர் புரிகாலை
வானுயர் செம்பனோர் மாதங்க மந்திர மாயையின் வலியாலே. (௫௫)

கைம்மலை யொருபதி னைந்தான காதமுன் னதநெடு மையினோடும்
வெம்மைகொ ளொருபெரு முழைவாயும் வெவ்விய கரமுறு தடியோடும்
பொம்மென வொன்றுவ குத்துவிடப் போரிடி யேறென மிகவார்த்துச்
செம்மைகொள் வானவர் படையூடே சென்றது தின்றது சிலபேரை. (௫௬)

மாயைய தாகிய மதயானை வால்கொ டடித்தது சிலர்தம்மைக்
காய்சின முறுசங் கிலிசேருங் கைகொ டடித்தது சிலர்தம்மைப்
பாய்பரி ரதமிவை பொடியாகப் பாய்ந்தது கிம்புரி திகழ்கொம்பாற்
சேயுயர் கரியிவை செயலோடுந் தியங்கிம யங்கினர் சிலதேவர். (௫௭)

ஆனைமு னொருவரு மெதிரின்றி யமரரொ டுறுதிசை யதில்வாழ்வோர்
சேனையொ டிரிதர மிகுசெம்பன் றிறல்புரி மாயையின் வகைகண்டே
வானவர் நாயக னரசிங்க மந்திர முறுபடை விடலோடு
மூனமில் கோளரி யுருவாகி யுயர்மத கரியை யுடற்றினதால். (௫௮)

சிங்கமுன் னடுகரி பொன்றலுநீ டிண்டிற லுயர்தரு செம்பனுமோர்
பொங்கழல் விடவர வுருவாகிப் பொருதிறன் மாயையை விடலோடு
மங்குறும் வகையடல் வானவரை வாய்கொடு நுங்கிய ததுகண்டே
பங்கமி லிந்திரன் வளர்கருடப் படையை விடுத்திட வதுபலவாய். (௫௯)

கருடவு ருக்கொடு புவியாதி ககனவ ளைப்பமர் தரநீண்ட
வரவின துடலயு தம்மாக வன்றுது ணித்தது மடர்மாயை
யொருவின ததனுரு வதுகண்டே யும்பர்கள் வெம்பிட வுறுசெம்பன்
பருதிபல் கோடிதி ரண்டதெனப் பாதலம் வானள வுறநீண்டே. (௬௦)

தானவன் முழைபொரு வாயாலே தருமிமை யவரொடு திசையாளும்
வானவர் கரிபரி யிரதமெலா மசகம தெனவுண வதுகண்டே
தேனறு மலர்விரி தருநீழற் றிகழ்மக பதியுயர் திருமாலை
நானிதை வெலும்வகை யருளென்ன நாரண வெம்படை விடுகென்றான். (௬௧)

மகபதி யரியரு டணைமேவி வயிணவ வெம்படை விடுமுனமே
ககனமொ டளவிய வாயதனாற் கரிபரி ரதமொடு காலாளுந்
தொகையொரு பன்னிரு கோடிகளைத் துகளென நுங்கின னடர்செம்பன்
பகர்தரு படையினை விடமாயைப் பருமுடன் மார்பு பகுந்ததுவே. (௬௨)

மார்பு பிளத்தலு மாயைகெட வயிற்றுறு வானவர் வெளிவந்தார்
போருறு வஞ்சனை மிகவல்ல புகழுறு மசுரரி னுயர்செம்ப
னேருறு ககனமு கடுதாவி நின்றவர் காணிட லரிதாகி
நாருறு வரிசிலை யுறவாங்கி நலிவுசெய் கணைபல பலவெய்தான் (௬௩)

வாளிவை வேலயி லார்சூலம் வடிவுறு தோமர முசலங்கூர்
கோளுறு கதைவளை சுடராழி கூர்மழு வெழுவடல் புரிகுந்த
தீள்கொடு வாள்சுரி கைதோட்டி நிலவிய பாசமொ டிவையெல்லாந்
தோளுறு வலியொடு மழையென்னச் சொரியம றைந்தன திசையெல்லாம். (௬௪)

வானவர் சேனையை யடலோடும் வந்து துணித்திட வகைவகையர
யூனுறு தலைகுவி மலையுடல்க ளூறுறு மலைகர முறுமலைகா
ருனுற வுயர்மலை மதவேழந் தறிபடு முடல்செறி மலைபவன்வான்
மேனிமிர் பரிதுணி படுமலைதேர் மிடலுடை மலைகண் மிடைந்தனவால். (௬௫)

அம்புவி புதைதசை சேறாக வதின்மிசை யோடிய நீராமச்
செம்புனல் பெருகிய வாறாகச் செறிபிண மீன்மயிர் சைவலமாப்
பம்பிய வெண்குடை யனமாகப் பரிசைக ளாமையி னினமாகத்
தும்பியி ரதமிவை களிலேறித் தோணிகள் விடுவன சிலபேய்கள். (௬௬)

அடுகள நடுநரி செந்நாய்க ளலகைவி டாகினி வேதாளங்
குடர்தசை நுகர்வன கூத்தாடிக் கூளிகள் காளிக ளொடுகூடி
முடைவுறு செம்பன் மதுவுண்டே மோகம யக்கொடு மிகவாடுந்
தடையற வெண்ணில்க வந்தங்கள் சதிமுறை நின்றுகு தித்தாடும். (௬௭)

பேய்களு ளுடைபடு தலையோட்டிற் பிச்சையெ டுப்பன சிலபேய்கள்
பாயுறு குருதியி னீர்மூழ்கிப் பசையுறு தசையெனு மமுதாலே
சேயுற வருபிதிர் கணமுணவே சிராத்தம ளிப்பன சில பேய்க
ளோய்வி றருப்பண முறுசெந்நீ ருவந்து கொடுப்பன சிலபேய்கள். (௬௮)

இவ்வகை செம்ப னடும்போரி லிமையவர் சேனை படும்பாட்டை
யவ்வுழி மகபதி தான்கண்டே யயின்றௌளி யிந்திர சரம்விட்டாள்
வெவ்விய வதுபல மலைபோல மேவிய கல்வரு டஞ்சிந்தத்
திவ்விய மாயைகள் பொடியாகித் தேய்தலும் வஞ்சனை செறிசெம்பன் (௬௯)

வில்லுறு நாண்செவி யுறவாங்கி தெவ்விய வசுராத் திரம்விட்டே
வல்வலி மகபதி முன்னெய்த வாளிகெ டும்படி காய்த்துப்பின்
னல்வலி மேனியொ டடல் செம்ப னயிடிக வாளியை யவன்விட்டான்
கொல்வலி நான்முகன் வாளியைவிண் கோன்மக வானும் விடுத்தனனால். (௭0)

அயனெடு வாளியி னதனாலே யயிடிக வாளி யறுத்துடனே
நயனமோ ராயிர முடையோனு நருகனல் வாளி விடச்செந்தீ
வயவலி யசுரரை யறநூறி வானொடு மகிதல மெரிமேவப்
புயலுறு வாளி தனைச்செம்பன் பொங்கனல் வாளியை நுங்கென்றே. (௭௧)

எய்தலு மெழுவகை யுறுமேக மெழுகடன் மிகுபுன லறவுண்டே
பெய்த தவிர்ந்தது பேரழலும் பின்னு மிகுத்திடு பெருநீரின்
மொய்கழ லமரர்க ளுடனாழ்ந்து முடிவது கண்டுவிண் முழுதாளி
கைதரு சிலைகுழை யுறவாங்கிக் காலுறு பாணம் விடுத்திட்டான். (௭௨)

விட்டிடு மாருத நெடுவாளி மேகமொ டுறுநீர் தனைமாற்றிப்
பட்டவர் போக முழக்கசுரப் பாதகர் மேனி பறத்திடலு
மட்டற நிமிர்வரை யுருவாகி வாயுவின் வேக மறைத்தலுமத்
துட்டன தருமலை துகளாகச் சுரர்பதி திறல்வச் சிரம்விட்டான். (௭௩)

வச்சிர வெம்படை யொருகோடி மலைபொடி செய்திடு மதுகண்டே
யிச்சைகொள் கரியுரு வொருபாக மெழில்பெறு தனதுரு வொருபாகம்
விச்சைகொ ளுருவொடு விண்ணவர்கோன் வெருவுற வாளிகண் மிகவெய்தா
னச்சமி லிந்திர னோரம்பா லவன்விடு கணையை யறுத்திட்டான், (௭௪)

சுரர்கணை நலிவுசெய் திடுசெம்பன் றுணைவிலின் மறுசிலை தனைவாங்கி
யெரியுமி ழிருபது கணையெய்தா னெதிருறு மகபதி யெழின்மார்பி
னுரமுப மென்புக ழன்றேக வொளிர்கணை யிருபது மகவானு
மரவின மெனவிட வடுசெம்ப னகலம துருவியு மயர்வெய்தான். (௭௫)

அக்கண மழனம னிருதியுட னரிகட லிறைவட திசையாள்வோன்
முக்கண னுருவம ரீசானன் முதலிய தேவர்கள் படையாவுந்
தொக்குற விடுதலு மவைசெம்பன் சொரிகணை தூவிய றுத்திமையோர்
தக்கமெய் குருதிசொ ரிந்தோடத் தழலுமிழ் படைகள் விடுத்தானால், (௭௬)

அன்னவ ரதுகொடு சோர்விலரா யடல்புரி மகபதி தன்னோடுங்
கொன்னுனே வாளி துரந்திடலுங் கொலைபுரி மாயை மிகுஞ்செம்பன்
வன்மையி னடுபோர் நின்றாற்றான் மனநினை யரிகண் டுரைசெய்வான்
பொன்மலி முடிசேர் மகபதிநீ பொருபிர மாத்திரம் விடுகென்றான். (எஎ)

என்றலு மகபதி யயன்வாளிக் கிதமுறு பூசனை யினிதாற்றி
வன்றிறல் வயவலி மிகவுள்ள மாயைகள் பலசெயு மறவோனைக்
கொன்றுயிர் பருகென விடவேகிக் கொலைபயில் செம்பன் றலைகொய்து
துன்றிய புவியிடை விழவீழ்த்தித் தூணியில் வந்து புகுந்ததுவால். (எஅ)

அண்டர்கள் கண்டக மகிழ்வோடு மார்த்தனர் தூர்த்தன ரலர்மாரி
திண்டிறல் விண்ட சுரர்களெல்லாந் திசைதிசை யோடினர் விசையேகடு
மண்டமர் விண்டயன் முதலோர்கள் வாகைபு னைந்தன ரோகையினென்
றெண்டகு கண்டிகை புனைமுனிவர்க் கேதமில் சூதனு மோதினனால். (எகூ)

ஐம்பத்தைந்தாவது
செம்பன்வதை யத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். கசுருஉ.

ஐம்பத்தாறுவது

தாரகன் விசைய வத்தியாயம்.

ஏரக மருவும வேற்கை யிறைவனோ டிகலி முன்னம்
போரகந் தையினாற் செய்து புகழ்புரி வன்றி றத்துத்
தாரகன் விசையந் தன்னைச் சாற்றெனத் தவத்தின் மிக்க
நாரக முனிவர் கேட்ப நயந்துநற் சூதன்சொல்வான், (க)

வஞ்சக மாயை யாலும் வரம்பெறு படைக ளாலும்
வெஞ்சம ருடற்றி மிக்க விறல்வலிச் செம்பன் வீய
நெஞ்சம துடைந்து சேனை நேரலர்க் கஞ்சி யோடித்
தஞ்சமொன் றில்லை யென்றே தாரகன் சபையிற் சார்ந்தே, (உ)

கிளர்திறன் மதனன் கீர்த்திக் கெயாசுரன் கிரச னன்போர்
தளர்வறு தறுக ணாளர் சாய்ந்தது மன்றி யின்றே
வளர்புய வலியின் மிக்க செம்பனு மகவான் கையி
லொளிர்தரு படையாற் பட்டா னென்றழு துகுத்தான் கண்ணீர். (ங)

கேட்டலுங் கலங்கித் தேறிக் கேட்டிநம் மாண்மைக் கையின்
வாட்டிற மென்ன நக்கு வடவைபோற் கொதித்துச் சீறித்
தோட்டுணை கொட்டி யார்த்துத் துண்ணென வெயர்த்துப் பொங்கி
நாட்டமுங் கனலைக் கால நமனுமுண் ணடுங்கச் சொல்வான். (ச)

எம்முன நிற்க லாற்று விந்திரன் படையா லின்று
வெம்முனைச் செம்ப னாவி வீந்தன னென்ற வார்த்தை
வம்மவாச் சரியம் வல்லே யானைதேர் பரிக ளோடும்
வம்மினஞ் சேனை யென்றான் மருவலர்க் கிடியே றன்னான். (௫)

கொடுந்திறற் போர்க ளாற்றிக் குலிசனெண் டிசைகாப் போர்க
ளொடுந்திரு மார்ப னாவி யுண்டவ ருலகம் யாவுங்
கடுங்கன லிடுவே னென்று கருடனா யிரங்கள் பூண்டு
விடுந்தனி யிரத மேறிச் சயித்திர வில்லை யேந்தி. (௬)

தூணிதோள் வீக்கி வைவேல் தோமரம் பிண்டி பால
மாணிசேர் பலகை கட்க மங்குச முசலஞ் சூலம்
வாணடர் தண்டங் குந்தம் வல்லய மிவைக ளெல்லாம்
பாணியி லமைய வேந்தி வயவர்கள் பாங்கி னேக. (௭)

கார்ப்பெரு வரைபோல் வீரர் பின்செலக் கலினப் பாய்மா
பார்ப்பொரு மருகு செல்ல மரகரி யதன்முன் செல்லத்
தேர்ப்படை சூழ்ந்து செல்லத் தேவர்கோ னின்ற சூழற்
கூர்ப்பொடு செல்லுந் தார கப்பெயர்க் கொடிய வீரன். (௮)

கண்ணுறு களிநல் யானை மதசலங் கலினப் பாய்மா
நண்ணுறு விலாழி நன்னீர் நணுகிடு மாற தாகப்
பண்ணுறு மிரதஞ் செல்லப் படியெலாஞ் சேற தாகுந்
துண்ணெனக் கால்கள் செல்லத் தூளதாய் விசும்பு தூர்க்க. (௯)

இப்படி மண்ணும் விண்ணு மிடமில வாசச் சேனை
துப்பொடு செல்லத் தார கன்செலத் தூதர் செல்லப்
பைப்பணிப் பாயன் மேவும் பண்ணவர்ப் பணிந்து தேவ
னைப்பணித் தேவல் கொள்ளா கண்டல னமரின் முன்னர். (௧௦)

செம்பன்றன் கணையா னொந்த திறலயி ராவ தத்தின்
வெம்பிடர் கண்டு வெற்றி விளங்குகே தனங்க ளோடு
மும்பரின் வயங்கு தூவி யோசனை நாலு நீண்ட
சம்புவோ டடுத்த பொன்னாற் சமைத்ததேர் கொணர்ந்தி டென்றான். (௧௧)

வசையிலா யிரமாம் வாசி பூண்டிட வயங்கும் பெற்றேர்
விசைசெல விடுக்கும் பாகன் மாதலி விரைவிற் றூண்டி
யசைவரக் கொணர்த லோடு மமரர்கோ னதன்மே லேறித்
திசைபுரந் தருளும் திக்குப் பாலகர் செறிந்து சூழ. (௧௨)

நடத்தலுந் தேவ சேனை நாலிரு திசையுஞ் செல்ல
மடுத்தபோர் நிருதர் வித்தி யாதரர் வலிகூர் சித்த
ரடுத்தகந் திருவர் நாக ரியக்கரோ டமரர் யாருந்
தொடுத்தவா ளிகளி னோடுந் துண்ணெனச் சூழ்ந்து சென்றார். (௧௩)

செல்லெனக் குமுறி யார்த்துச் செறிந்தவ ரேற்று வெற்றி
வில்லுமிழ் கணைக ளாலும் வெம்படைக் கலங்க ளாலுந்
தொல்லையி லமரர் தான வேசரைத் துணிக்க வன்னோ
ரொல்லையி லமரர் சேனை யுடைந்திடப் பொருதா ரன்றே. (கச)

பொருபொழு தொருவ ரோடு மொருவர்போர் புரிந்து மிக்க
வருசிலை தூணி வாளி மாமழுத் துணியச் சூல
முரிதரக் கதைகள் சிந்த முசலங்கப் பணங்கள் சோரச்
சுரிகைவேல் சரித்தே யார்க்குந் துலக்கினர் சுத்த வீரம். (கரு)

தாரகன் மார்பின் மீதுந் தடவரைப் புயத்தின் மீது
மோர்வலித் திசைகாப் பாள ரொன்பது கணைக ளெய்ய
வீரரில் வீர ரந்தக் கணைபடு விதன மெண்ணுத்
தார்சிலை வளைத்துப் பாண மென்பதங் கவர்மேல் விட்டானி. (கசு)

விடுத்தலு மமரர் பொங்கி விசிகமோர் கோடி கோடி
தொடுத்தக லிடமும் வானுந் தோன்றிடா வரையே தூர்த்துத்
தடுப்பரு மசுரன் மார்பு தானிலக் காக வெய்த
வடுத்திடும் படைகள் யாவு மக்கணத் தறுத்திட் டானல். (கஎ)

அறுத்தபி னெழுப தம்பை யரியுரத் தெய்து வெம்போர்
செறுத்தவிந் திரன்மே னூறு சிலீமுகஞ் செலுத்தத் தென்பா
லொறுத்திடு நடுவன் மீதி லொருபது கணைக ளேவி
மறுத்தெதிர் நிருதி மீதில் வடிக்கணை யைம்ப தெய்தான். (கஅ)

அக்கினி மீதி லேயம் பறுபது விடுத்துக் காலின்
முக்கியப் பகழி பத்தான் மார்பகம் பிளந்து முந்நீ
ருக்கிறை மீதில் வாளி யுரத்தொடு மெழுப தெய்தான்
றக்கதோர் குபேரன் மீதிற் சரம்பதின் மூன்றெய் தானல். (ககூ)

போற்றுமீ சானர் மீதிற் புங்கநூற் றிருப தெய்து
தோற்றிய கருடன் மீதிற் சுடுகணை யொருப தெய்தே
யாற்றன்மா தலியின் மீதி லடுகணை மூன்றெய் தப்பாற்
கூற்றுவன் பகட்டின் மீது கூர்ங்கணை யொன்ப தெய்தான். (உ0)

எய்தபின் னேரொ ருத்தற் கீரைந்து கணைக ளாக
மொய்தரு மமரர் யார்க்கு முறைவழா தெய்து மார்பிற்
செய்துற வீக்குஞ் செம்பொற் கவசமுஞ் சிலையு மற்ற
நெய்திகழ் படைகள் யாவு நீறுறு கூறு செய்தான். (உக)

செய்தபி னமரர் வேறு சிலைகணை கவசஞ் சேர்த்துப்
பொய்திக ழசுர னாகப் பொருப்பின் மேற் சத்த மேகம்
பெய்வது கடுப்ப வைவாய்ப் பெரும்படை யனைத்துந் தூர்க்க
வெய்யவுள் சயித்தி ரப்பேர் வில்லினைக் குழைய வாங்கி. (உஉ)

சரமொன்றான் மகவான் மார்பந் தனைப்பிளந் திடவெஞ் சோரி
வரமிஞ்சு மூர்ச்சை யோடு மணிரதத் தட்டில் வீழப்
பரவுமா தலியத் தேரோர் பாலுறக் கொடுசென் றன்னோன்
புரமுறு தளர்ச்சி யாற்றிப் போற்றினான் போற்றிப் பின்னர். (௨௩)

வெந்திறற் பிண்டி பாலம் விடுத்துவெம் பகட்டி னோடு
மந்தக னகலம் போழ வவன்முறிந் தகன்று போனான்
கொந்தழல் காலும் வாளாற் குபேரன்கால் வருணன் மிக்க
செந்தழன் முதல தேவர்ச் சிதறலுஞ் செங்கண் மாயன். (௨௪)

கோதண்டங் குழைய வாங்கிக் கொடுங்கணை யனேக மெய்தப்
போதண்டர் கோமா னாதிப் புலவர்வெம் படைக ளேவ
மாதண்டம் விளக்குந் தார கன்பெரு வலிக ளோய்ந்து
தீதண்டுந் துவசத் தோடுந் தேரின்மூர்ச் சித்து வீழ்ந்தான். (௨௫)

வீழ்ந்தவ னெழுமுன் விண்ணோர் வெவ்வினை யசுரர் யாருந்
தாழ்ந்திடச் சமர்செய் தார்த்தார் தாரகன் மூர்ச்சை நீங்கிச்
சூழ்ந்தவிண் ணவர்க ளஞ்சத் துளவமால் கலுழ னோடும்
போழ்ந்திடத் தண்டம் வாங்கிப் புடைத்தலுங் கலுழன் வீழ்ந்தான். (௨௬)

கருடன்மூர்ச் சித்த பின்னர்க் கண்ணன்சக் கரத்தை வாங்கி
வெருவிறா ரகன்றன் மீதில் விடுத்தனன் றிகிரி வெய்யோ
னுரமதிற் றாக்கிக் கல்லி லுய்த்தவுற் பலம்போ லுட்கி
யரிதிருக் கரத்தின் மேவ வமரர்கோ னழன்று பொங்கி. (௨௭)

வச்சிரப் படையை யேவ மணலுண்டை மலையிற் றாக்கி
யச்சழிந் ததுபோற் போன தடுசின வாயு தேவ
னச்சுறு வேலை விட்டா னந்தவே னாணற் புற்போற்
குச்சித முறலும் வாயுக் கோபமேற் கொண்டு சென்றே. (௨௮)

தருவனக் கரடி சிங்கந் தந்திவெம் புலிக்கு ழாங்க
ளொருவலில் பதினைங் காதத் துன்னதத் தகல வெற்பொன்
றிருகையாற் பிடுங்கி யேவத் தாரக னிடக்கை யேந்தி
வருநகை கோட்டி யந்த மலையைப்பந் தாடி னால். (௨௯)

சண்டன்கைக் கால தண்டந் தாரகன் றலையிற் றாக்கக்
கண்டிலன் சமனைத் தானும் பொருளெனக் கரத்திற் கொள்ளான்
மண்டிய வழியோர் வேலை வழங்கத்தா ரகன்றன் மார்பிற்
கொண்டது பூவின் மாலைக் கொள்கைபோ னிருதி வேந்தன். (௩0)

பட்டயந் தன்னை யேவப் பட்டது பலதுண் டாக
வட்டமர் கடலின் வேந்தன் வாளராப் பாச மேவ
நட்டமா யகன்ற பின்னர் நண்ணிய தமர ரெல்லாந்
விட்டனர் தத்தங் கையின் மேவிய படைக ளெல்லாம். (௩௧)

வேறு.

வானவர் கைப்படை மாள வுருத்தே
தானவன் மிக்க சயத்திர வில்லாற்
சோனை மழைத்திர ளம்பு சொரிந்தே
யூனமி லெண்டிசை யோரை மறைத்தான். (௩௨)

பெய்கணை மோலி பிறங்கிய சென்னி
கைகள் பதங்கள் கலன்புனை மார்ப
மொய்நகை வாய்விழி மூக்கிரு காது
கொய்தன வெவ்வே றாகிய கூறாய். (௩௩)

வாளி துணித்திடு வானவர் சென்னி
மூளை யுடைத்தெழு மூரி யுடைப்பேய்
கூளிகள் புத்துமு தென்று கொடுக்கக்
காளி விருந்து களித்து நுகர்ந்தாள். (௩௪)

இன்னணம் வானவ ராற்ற விழப்ப
மன்னிய சோரியிவ் வையமி டைந்தே
முன்னிய பல்பல வாறென முன்ன
மன்னிய செந்நிற மானது முந்நீர். (௩௫)

எருவை பருந்து கருங்கொடி யெய்தி
யருகுறு பேய்கை யமைந்திடு மூளை
பருகலு மற்றது பற்றி யெதிர்ந்து
பொருபகை வானவர் தானவர் போலும். (௩௬)

கொற்றங் கொண்டு கொடுந்திற லசுர
னற்றமி றன்பதி யணுகலும் விண்ணோ
ரிற்றிடும் வைய மியாவு மியைந்தே
யுற்றன வானுல கத்தி னெருங்கே. (௩௭)

அங்கவர் போனபின் னசுரர்கடற் கிணை
வெங்கொலை வீரரை விரைவின் விளித்தே
தங்கிய வமரர்க டம்பதி யாவு
நுங்கழ லூட்டியன் னோரையும் வல்லே. (௩௮)

மாதரொ டுங்கொடு வம்மினெ னப்போய்
மீதல முற்றுறும் வெங்கன லூட்டி
யாதர மாதர்க ளண்டர்கண் மற்றும்
பாதகர் கொண்டு படர்ந்தன ரன்றே. (௩௯)

வேறு.

விண்ணுல கனைத்துஞ் சுட்டு மேனகை முதல வாய
பண்ணமை மொழியார் தம்மைப் பற்றியே கொணர்ந்து தம்பா
னண்ணிய வேவ லாளர்க் களித்துத்தன் னேவ னூரு
மண்ணியே புரிய வானத் தைந்தரு வேவல் கேட்ப. (௪௰)

நிதிகளு முறையே நின்று நிகழ்த்திய வேவல் கேட்பப்
பதிதரு மிடங்க ளெல்லாம் பரந்துகாற் றுகளை மாற்ற
வதிதரு சத்த மேக மங்கணந் தெளிப்ப வாரிக்
கதிபதி மச்சமன்ற டகன்களை யதனிற் சேர்ப்ப. (சுக)

சூரிய னுலர்த்த வங்கி துய்க்கநற் பாகஞ் செய்யச்
சீரிய தேவ ரெல்லாந் தினந்தின மேவல் கேட்பக்
கூரிய நான்கு கோட்டுக் குஞ்சர முதலெண் டிக்குப்
பேரிய லானை தத்தம் பிடரின்மேன் முரசு தாங்க. (சுஉ)

மேனகை யடைப்பை தாங்கி வெள்ளடை யாகு நல்கப்
பானகை கவரி ரம்பை யுருப்பசி பாங்கி ரட்டத்
தேனகை யினிய தீஞ்சொற் றிலோத்தமை நடிக்கக் காந்த
ளானகை யமரர் மாத ரனைவரு மிசைகள் பாட. (சுங)

சித்திர சேன னின்று திகழ்சதி முறைவ ழாம
லொத்துறத் தாள மொத்த வெளிகொள்கிம் புரியாழ் மீது
வித்தியா தரர்கள் பாட வெள்ளிசொற் பொன்னுங் கேட்பக்
கத்தனு னென்று தார கன்பணி கற்பித் தானால். (சுச)

வேறு.

மெய்யொளி மணிகள் குயிற்றியே பொன்னால் வகுத்திடு புரிசையுப் பரிகை
யியல்புறு தெற்றி மாடமா ளிகைநீண் டிலங்கிய கோபுரம் யாவும்
புயலுற நிவந்து பொன்னுல கேய்க்கும் புகலசு ரேந்திர மென்றே
பெயரொடு விளங்கத் தாரக னகரப் பெருமையாம் பேசுத லுற்றும். (சுரு)

வேறு.

வையக மடிக ளாக மதிலுயர் கால்க ளாகப்
பையர வல்குற் சேர்த்த பட்டுடை யகழி யாகச்
செய்குன்று தனங்க ளாகச் செறிமதி வதன மாக
மைம்முகில் கூந்த லாக முளரிமா துருவங் காட்டும். (சுசு)

பொன்னிறு செய்வு யர்ந்த புரிசையின் வனப்பு வாய்ந்து
மன்னிய வாயி லுன்கி னெழின்மதி மருவுந் தோற்றஞ்
சென்னிநான் குடைய வேத னுவிடைத் திகழ்ந்து வாழுங்
கன்னியின் படிவந் தன்னைக் கவினுறக் காட்டு மாலோ. (சஎ)

மரகத மணியாற் செய்த வான்முக டுருவி நீண்ட
நிரைதரு வாயின் மாடத் திடைகதிர் நிலவுந் தோற்றந்
தரைமுழு தளந்து யர்ந்தோன் றண்டுழா யலங்கன் மார்பிற்
புரையறு கவுத்து வத்தின் பொற்பிணைப் புரையு மாலோ. (சஅ)

வேறு.

நீலநன் மணியாற் கழுத்தினை யமைத்து நிறைகதிர்ச் செம்மணிக் குடத்தை
மேலுற விருத்திப் படிகத்தி னெடுக்க விண்ணிமிர்ந் தோங்கிய மாடம்
வாலிதா நீற்று மெய்க்கரு மிடற்று வார்சடைக் கற்றைவே ணியனைப்
போலுமேற் றிகழ்வெண் டுகிற்கொடி யன்னான் புனைதரு கங்கையைப் பொருவும்.

எண்ணிலா வீதி யெண்ணிலா வணங்க ளெண்ணிலா மாடமா ளிகைக
ளெண்ணிலா மலர்ப்பூம் பங்கயத் தடங்க ளெண்ணிலாச் சுகந்தநல் வனங்க
ளெண்ணிலா வரிவண் டுலாவுதண் டலைக ளெண்ணிலாச் சிறுர்சிறு தேர்க
ளெண்ணிலா வின்ன வளநகர் நாப்ப ணிலங்கிய கோயிலைப் புகல்வாம். (ரு௦)

வேறு.

மாயிரு ஞால மெல்லாம் விளக்கும்வான் கதிரை மானுஞ்
சேயவிர் மணிக ளெல்லாந் திகழ்பெற வழுத்தி வாய்ந்த
வாயிரத் தெட்டு மாற்றுப் பசும்பொற்றா ணனேக கோடி
நாயகப் பத்தி வாய்ப்ப வணியணி யாக நாட்டி. (ருக)

வேறு.

செயிரறு நீலப் போதிகை மீது திவளொளி வெண்கதிர் பரப்பும்
வயிரவுத் தரங்கள் வளம்பெற வமைத்து வயங்கிய செம்மணிப் பாக்க
லியலுறப் பரப்பி மரகதக் கொடுங்கை யெங்கணு மெழில்பெற வமைத்துப்
புயலுறு வயிடூ ரியச்சிக ரத்திற் புட்பரா கத்தசும் பமைத்தே. (ருஉ)

பித்திகை கோமே தகத்தினு லமைத்துப் பிறங்கிய நன்னிலைக் கதவம்
வித்துரு மத்தா லியற்றிவான் முகப்பில் விளங்கிய வரசிலைத் தூக்க
முத்தினு லாற்றி மூதெயில் சூழ்ந்த மொழியசு ரேசுர நகர்க்கு
வைத்தமா முன்றில் குமுதத் தாணி பண்டப மெண்டிசை தோற்றும். (ருங)

இலங்குமத் தாணி மண்டப நாப்ப ணெழிலரி யாசன மீதிற்
றுலங்குமந் தரவெற் பிருந்தது கடுப்பத் தோன்றலக ளமைச்சர்கள் வீர
நலங்கொள் சேனுப திகளமர் வயவர் நாற்றிசை யசுரர்தா னவர்கள்
குலங்களுஞ் சூழத் தாரகன் வீரக் கொடியவன் றினங்கொலு விருந்தே. (ருச)

அளவில்பல் கால முலகமூன் றுந்தன் னுணையி னடக்கியே கொடுங்கோ
றளர்வற நடாத்தி வாழ்ந்தன னன்னோன் றனையர்கள் பலருள ரவரு
முளமகிழ் வாகி யுலகினுக் கெல்லா முறுதுயர் மிகுதியும் விளைத்து
வளர்புயப் பெருமை காட்டியே தந்தை மனமிக மகிழ்வுற வளர்ந்தார். (ருரு)

வேறு.

வானவவர் முதலோ ரமரரு மற்றவர் கொடுமைக் காற்று
தேனைய வுலக மெல்லா மிடருழந் தலைந்து வெவ்வே
முனபல் லுருவ மெய்தி யவரவ ருருக்க ரந்தே
கான்மலை முழைஞ்சு தெண்ணீர்க் கடல்வயி னுறைந்தா ரன்றே. (ருசு)

இப்படி யளவில் கால மிருந்ததென் றிரவி மைந்த
ஞெப்பறு வைவேல் வைவச் சுதமனு வுவந்து கேட்ப
வப்புறு மச்சரூபி யறைந்ததை யடைவிற் சூதன்
செப்பின னோமி சத்திற் சிறந்தமா முனிவ ருக்கே. (௫௭)

ஐம்பத்தாறவது
தாரகன்விசைய வத்தியாய முற்றிற்று
ஆகத்திருவிருத்தம். ௧௭௦௧.

ஐம்பத்தேழாவது

குமாரசாமி யுற்பத்தி யத்தியாயம்.

திரைக்கடல் விடத்தை மிடற்றினி லடக்குஞ் செழுஞ்சுடர்க் கொழுந்தருட் செயலா
விரைச்சர வணத்திற் குமரவே ளுதித்த விதத்தினை வகுத்தெமக் குரையென் [ல்
றுரைத்தமெய்த் தவத்தின் மனத்தினைச்செலுத்து மொளிர்சடை முடிமுனிவரர்க்கு
நிரைத்தநற் புராணத் திறத்தினை நிகழ்த்து நெறியறி சூதனே துவனுல். (௧)

கோரவெங் கூற்றிற் கொலைபயில் சீற்றக் கொடுந்திறற் றடவரைத் திணிதோட்
டாரக னெனும்பேர்ப் பதகனுற் றேவர் சாத்தியர் வித்தியா தரர்க
ளோர்திக ழியக்கர் குய்யகர் வசுக்க ளெண்டிசைப் பாலர்கிம் புருடர்
சீர்தரு சித்தர் கின்னர ரொடுகந் திருவர்சா ரணரசு வினிகள். (௨)

நாகர்பூ தலத்தின் முனிவர ரின்னோர் நவையிறத் தம்பதி யிழந்தே
மாகமார் வரைக ளிடத்தினி லொளித்தும் வாரியி னீரிடை மறைந்தும்
வேகமார் காற்றி னுருவெடுத் தலைந்தும் விண்ணுரு வெடுத்துமே னின்றுந்
தாகமார் சோகத் தழுந்தியே பன்னாட் சஞ்சரித் திட்டன ரன்றே. (௩)

அளப்பில காலங் கழிந்தபின் மகவா னமர்ந்திடு மிடத்தினை நண்ணி
யுளப்பெருந் துயர மனைத்தையு மோதி யுறுமிட மன்றியெத் தனைநாள்
வளப்பெரு நகரந் தருநிதி யரம்பை மாதர்கள் யாவையும் வவ்வித்
துளக்கமி லசுர ராளவு முயிர்க டுறந்திடா தலைவையோ வென்றார். (௪)

மகபதி யிவர்க டம்முடன் கூட மந்திர விசாரங்கள் பண்ணி
நிகரிலன் முகத்தோற் குரைப்பமென் றங்க ணிச்சயித் தனைவரு மெழுந்தே
யிகல்புரி யசுரர் கண்ணுறு வண்ண மியைந்திடு முருவினை யெடுத்துப்
புகரறு புகழ்சேர் சத்திய வுலகிற் பொருந்தியே யருந்துயர் துறந்தார். (௫)

தேனுவட் டெடுக்கு முருகுகொப் புளிக்கச் சிறையரி வண்டினம் பாடப்
பானிற வன்னம் பயின்றிட வலர்ந்த பங்கயத் தவிசின்வீற் றிருந்து
வானுறு நான்கு வேதமா றங்கம் வகுத்தரு டிசைமுகத் தொருவ
னுனதாட் டுணையிற் பணிந்துதந் தலைமே லங்கைகள் கூப்பிநின் றறைவார். (௬)

ஐயநின் னருளா லெமக்குமுன் னளித்த வைந்தரு நவநிதி யுலக
மையவிர் தடங்கட் செய்யவா யரம்பை மாதர்க ளட்டதிக் கயங்கள்
கையுறக் கவர்ந்து நாடொறும் பணிகள் கணிப்பில புரிதரப் பணித்தே
வெய்யதா ரகனு மவன்புதல் வர்களும் வெந்துயர்க் கடலின்வீழ்த் தினரால். (எ)

ஏவல்செய் தயர்ந்தே யாற்றிலே மாகி யெம்முரு யாவையுங் கரந்தே
யோவறு புவனத் துருவரை முழைக ளொலிதிரைச் சத்தசா கரங்கண்
மேவரு வனங்கள் விளங்குபா தலங்க ளெங்கணும் வேறுவே றலைந்து
தேவரீர் பாதம் புகலென வடைந்தேஞ் செய்வதொன் றறிகிலே மென்றார். (அ)

என்றலுங் கமலப் பொகுட்டில்வீற் றிருக்கு மிறையவன் வாசவன் முதலாத்
துன்றுமூ வுலகத் தவரைநேர் நோக்கித் துன்புற லொழிதிர்நீர் தொன்னாள்
மன்றலங் கமழ்தார் வச்சிராங் கப்பேர்த் தானவன் மதலைதா ரகன்றா
னென்றிய தவங்க ளளப்பில வுஞற்றி யுறுவரம் வேண்டிடு ஞான்று. (௯)

மதிச்சடை முடியோன் மாயனீ வலாரி வானவர் தானவ ராலுங்
கதித்தவெஞ் சமரி னென்னுயிர் கவராக் கதிதனை யளித்தலொன் றன்றி
யுதித்தெழு நாளைப் புதல்வன்வெஞ் சமரி லுருத்தடர்ந் திடுமெனி லவன்கை
நுதிப்படை யதனால் வீதனீ யென்ன நுவன்றனன் னவ்வரங் கொடுத்தே. (௧௦)

ஆதலா லீச னிடத்தினிற் குமர னவதரித் திடுவனன் னவனே
காதலி னுதித்த வோரெழு தினத்திற் களைகுவன் றாரக னுயிரை
யோதுவன் கேண்மின் றக்கநற் றலத்தா னுதித்ததாட் சாயணி யென்னு
மாதினைக் கயிலைப் பரமனுக் களித்து மன்னுயிர் படைத்தனன் பின்னர். (௧௧)

வேறு.

யாகநன் கியற்றி யன்னோ னோடதி யாவு மீட்டி
வாகுறு காலை நான்கு மறைப்படி யமைத்துத் தக்கன்
வேகமா ரழலை நன்காய் விதிப்படி யியற்றக் குண்டம்
பாகமா யமைத்துப் பின்னும் பதார்த்தங்கள் பலவு மீட்டி. (௧௨)

தடங்கட லுலகிற் றக்கோர் தமக்குமந் திரத்தி லென்றும்
படர்ந்திடு வோர்க்கும் பொன்னின் பதியுளோர் தமக்கும் யாகந்
தொடங்கினேம் வம்மி னென்று தூயவா சகத்தைத் தீட்டி
முடங்கலைப் போக்க வன்னோர் முடங்கல்வா சகத்தைத் தேர்ந்தே. (௧௩)

மூவுல கத்தி னுள்ள முனிவர்கந் திருவ ராதி
தேவர்கள் யாரும் வந்து சாலையிற் சேர்ந்த காலை
யாவலொ டெழுந்து தக்க னவரவர்க் காச னங்கண்
மேவுற வமைத்து யாக விதிசெயத் தொடங்கி னானால். (௧௪)

இவ்வகை யறிந்து லோக மியாவையு மீன்ற செவ்வாய்
நவ்வியொண் கண்ணி நண்ண நண்ணினோ ரெழுந்து நிற்ப
வவ்விய மிருந்த தக்க னரியதன் மகளை நோக்கிச்
செவ்விய வுபசா ரங்கள் செய்திடா திருக்குங் காலை. (௧௫)

மழைத்தடங் கண்ணி நோக்கி வாசுகி நாணு மேருக்
குழைத்திடும் வில்லி தன்னைக் குறைவிலா யாகஞ் செய்வோ
யழைத்திடா வகையே தென்ன வம்மனை நோக்கிச் சொல்வா
னிழைத்திடுஞ் செய்கை யெல்லா மீனமே யியல்பொன் றில்லான். (௧௬)

ஓட்டினி லைய மேற்பா னுடையிலா னுண்டே லூசி
மூட்டிய கந்தை நாறு முடைசெறி தோலு டுப்பான்
மாட்டினி லேறி யீதே மாடெனத் திரிவான் மெய்யிற்
பூட்டிய கலன்க ளெல்லாம் பொன்றுவா ரென்பு மன்றி. (௧௭)

விடம்பொறி யரவம் பூண்டான் வேடன்வா யெச்சி தின்று
னடர்ந்திடும் விசையன் வில்லா லடித்திடப் பட்டா னன்பிற்
றிடம்பெறு சிறுத்தொண் டன்பாற் சிறுவனைக் கொன்று தின்றுன்
றொடர்ந்திடு செட்டி கொண்ட துணைவியைக் கவர்ந்தா னன்றே. (௧௮)

தாருகா வனத்திற் செய்யுந் தவத்தினை யழித்தே யன்னோர்
காருறு குழலின் மாதர் கற்பினை யழித்தா னீமத்
தாரும்வெண் பொடிமேற் பூசி யவ்வயிற் பேயோ டாடிக்
கூருறு சூலங் கையிற் கொண்டுதீத் தொழிலே செய்வான். (௧௯)

அவன்செய லின்னு மின்னு மறைந்திடி லளப்பி லாவா
மிவன்செயன் முழுது மோரா திருந்தவ மிகவு மாற்றி
யுவந்தனைப் பெற்றன் னோனுக் குதவின தேதீ தாமா
தவன்முத லோரின் மிக்காந் தலைமையுள் ளவனோ வென்றுன். (௨௦)

சொற்றிடும் வெஞ்சொ னாரா சத்தினைத் துலங்கக் காய்ச்சி
யுற்றுற வைத்தல் போல வொளிர்திருச் செவியிற் சாரப்
புற்றர வென்னச் சீறிப் புரிந்திடு மியாகத் தோடு
மிற்றுநீ யழிந்து போக வென்றுசா பத்தை யிட்டே. (௨௧)

மட்டவிழ் கூந்தற் பொன்னின் மலரடிக் கருங்கட் செவ்வாய்ப்
பட்டுடைச் சிறுமருங்குற் பணைமுலைப் பசிய மேனிக்
கட்டழ கொழுகு மம்மை கந்தனைப் பயக்க வேண்டி
விட்டொளி ரழலின் மெய்யை விட்டன ளெவரு மஞ்ச. (௨௨)

தக்கன் மகளா யுற்ற தலைவிதன் றவயோ கத்தின்
மிக்குயர் தழற்பி ழம்பின் மெய்யினை விட்ட பின்னர்
மைக்குழாம் படிய நீண்ட வரையெலாஞ் சூழ மாழை
தொலக்கவெற் பரச னேகந் தூய்தவஞ் செய்து வேண்ட. (௨௩)

வரிவளை யுயிர்த்த முத்தம் வயின்வயின் குவிய நீண்ட
திரையெறி தடத்த னேகஞ் செங்கம லத்தி னுப்ப
ணிரைதரு மாயி ரந்தோ டவிழ்த்தளி முரல நீங்கா
விரைசெறி கமல வீட்டின் மேவினள் குழவி யாக, (௨௪)

படிமுழு துயிர்க்க வந்த பச்சிளங் குழவி தன்னை
மிடிதவிர்த் திட்டா யென்று வெற்பர செடுத்து நல்கத்
துடியிடை நெடுங்கட் செவ்வாய்த் துணைமுலை மேனைவாங்கி
வடிவமைத் தழகுவாய்ப்ப மகவென வளர்த்திட் டாளால். (௨௫)

மணிமுடி யிமைய வேந்தன் மாதவம் வளர்ந்த தென்னத்
தணிவிலா துயர்ந்த நீதித் தருமமும் வளர்ந்த தென்னப்
பணிமொழி வடமின் கற்புப் பாங்குற வளர்ந்த தென்ன
வணிதிக ழுலக மாதா வழகொடும் வளர்ந்தா ளன்றே. (௨௬)

பொறைபொடும் வளரு ஞான்று பொற்பதங் கமலங் காட்ட
வுறைதரு மருங்கு நுண்ணூ லுறவினைக் காட்ட மார்பி
னிறைதரு கொங்கை கோங்கி னனைதனைக் காட்டச் செவ்வி
நிறைமுக மதியைக் காட்ட நிறைந்தனள் பருவ மாதோ. (௨௭)

இன்னண மிமைய வல்லி யெழிலொரு வடிவ மாகிப்
பன்னிய நாம மிக்காம் பார்ப்பதி யுமையே யென்ன
மன்னினள் சிவனை யுன்னி மகதிநா ரதனங் கெய்திப்
பொன்னவி ரிமைய வேந்தைப் பொருந்தியே புகல்கிற் பானல். (௨அ)

பாருறு வரைக ளெல்லாம் பணியநீண் டுயர்ச்சி யெய்தி
யேருறு பெருமை பூண்ட விமையவெற் பரச கேண்மோ
காருறு கூந்தற் செவ்வாய்க் கனிமொழி யுமையை யீசன்
சேருற வழல்சான் றாகத் திருமணஞ் செய்வி யென்றான். (௨௯)

நாரத முனிவ நீயின் றுரைத்தது நன்றே நான்கா
மாரண மறிய வொண்ணு வமலனை யறிவ தெங்ஙு
னேருற வுரைத்தி டென்ன நிகழ்த்துவான் றக்கன் முன்னாள்
சீருறு மகத்திற் றேவி சரந்தன டேக மன்னோ. (௩0)

வேறு.

உடலினைத்தேவி கரந்தபின் பரம னுருத்தொரு கோரமா வடிவின்
மிடல்கெழு வீர பத்திரன் றன்னைப் படைத்துடன் விடுத்தது மவன்றான்
அடல்கெழு தக்கன் றலையினை யறுத்தன் றங்குறு வோர்களை யெல்லா
மிடருறப் புரிந்தா னெந்தையுந் தானு வனத்தினி லினிது சார்ந்தனனால். (௩௧)

சார்ந்திடுங் காலைச் சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமா ரருமே
கூர்ந்தரற் போற்றி யிருந்தவர் யோகக் குறிப்பினை யுணர்த்தெனப் பணிய
வோர்ந்தவர்க் கியோக வறிவறி வுறுத்த வோஙகுகல் லாணிழ லிடத்திற்
றேர்ந்துமா மோனத் தக்கணா மூர்த்தித் தேசிக னென்னவீற் றிருந்தான். (௩௨)

வேறு.

பார்ப்பதி தன்னை யாங்கண் பணிவிடைக் கமைத்தி வான
நீர்ப்புரி சடில முக்க ணிருமல னுவப்பி னேடும்
வார்ப்பொலி கொங்கை மாதை மணஞ்செய்வா னென்ன மெய்யிற்
போர்ப்புறு புளகம் பொங்கப் பொருப்பர சினிது போற்றி, (௩௩)

முனிவனை முகமன் கூறி யனுப்பிய முயன்று செய்த
நனிதவத் துதித்த மைக்க ணங்கைசெம் பவளச் செவ்வாய்க்
கனிமொழி யுமையை யேவற் கன்னிய ரோடுங் கொண்டு
புனிதவெற் பரசன் றனு வனத்திடைப் போந்தா னன்றே. (ருச)

போந்தம லன்றன் பொற்பும் புனிதமா தவமு நோக்கி
யேய்ந்தவெவ் வுயிர்க்குந் தாயே யிறைவனுக் கேவல் செய்யென்
றுய்ந்தநன் மொழிகள் கூறி யகன்றன னிமைய வேந்தன்
வாய்ந்தபார்ப் பதியு நான்கு மறைமுதற் கேவல் பூண்டாள். (ருரு)

நீவிரவ் வனத்தி னெய்தி நிருமலன் மணக்கோ லத்தை
மேவுறும் வகையில் வேளை விடுத்திடில் விரும்பி யீசன்
றுவரு முமையைக் கூடித் தருகுவன் குமர வேளை
யோவிலா துமது துன்ப மொழியுமென் றுரைத்தான் வேதன். (ருசு)

வேறு.

வேத னேவலின் விண்ணவர் யாவருங்
கோதி றனு வனத்தைக் குறுகியே
நாத னுறும் யோகத்தை நாடியிங்
கேதஞ் செய்யிலென் னுங்கொலென் றெண்ணியே. (ருஎ)

ஏங்கி யஞ்சி யிடரி னுழந்துபின்
பூங்க ருப்புப் பொருசிலை மாரனை
தாங்கு கங்கைச் சடைமுடி யண்ணறன்
பாங்கர் நண்ணிப் படைதொடு கென்றனன். (ருஅ)

என்று சொல்ல விருண்மத யானையா
னன்று சொற்றனிர் நம்ப னிடத்தில் யான்
றுன்ற வஞ்சுவன் றுன்றிற் கனல்விழிக்
கன்றி நோக்கவென் னுகங் கனலுமால். (ருகூ)

யாவ ரேனு மெரியி லெரிந்திடப்
போவ ரோவுயிர் பொன்றிடப் போகலை
னீவிர் நுங்கரு மத்தை நினைத்தெனைப்
சாவல் செய்த றகாதெனச் சாற்றினன். (சo)

சாற்றும் வாசகங் கேட்டுத் தருநிழல்
வீற்றி ருக்கு மகபதி வெம்பியே
தேற்றஞ் செப்பினன் செப்பிய வென்னுரை
போற்றிலா யெனிற் பொன்றச் சபிப்பனால். (சக)

எனவு ரைத்திடு மிந்திரன் சீற்றமுங்
கனக நாட்டிமை யோர்கள் கலக்கமுந்
தனுசை யைப்புண ரச்செய்த தன்மையா
லனமு யர்த்தோ னறைந்ததுங் கேட்டுளான். (சஉ)

வாச வன்னிடு சாபத்தின் மாய்தலி
லீசன் கண்ணி லெரிந்திமை யோரொடும்
பூசு ராதியர் பூண்ட துயரெலா
நாசஞ் செய்திடி ஞசமி லாமலே. (சங)

உலக மேத்தும் புகழுறு மாக்கையா
விலகும் யாக்கை யிழப்பினு மென்கொலென்
றலகி லாதுள்ளி யஞ்சித் தெளிந்துபின்
விலகி லேனுங்கள் வெம்மொழி கேட்பன்யான். (சச)

பலர்பொ ருட்டி லொருவன் படுத்தல்பா
டலர மிக்கு மருளென்பர் மேலையோர்
சொலர தத்திற் றதீசிசொற் போலியா
னுலர்தல் வேண்டினன் சீற்ற மொழிதிரால். (சரு)

கருப்பு வில்லி கருத்துநன் மாற்றமும்
விருப்பி னோர்ந்து விண்ணோர்களும் வேந்தனு
மருத்தி யோடவர்க் காசிகள் கூறியே
பொருப்பு வில்லி யிடத்தினிற் போயரோ. (சகூ)

வேறு.

நல்ல கருப்புச் சிலைகுழைத்து நறவார் சுருப்பு நாண்கொளுவி
முல்லை முதலாம் பூங்கணைக ளைந்து முறையிற் றொடுத்துமலை
வில்லி புரியுந் தவம்விடுத்து விரக மேற்கொண் டிமையவரை
வல்லி தனைநன் மணம்புணரும் வகைநீ புரிந்து வாவென்றார். (சஎ)

அன்ன வாறே புரிகுவலென் றமரர் கோனை விடைகொண்டு
கன்னன் மொழியா ளிரதியொடுங் காமன் காற்றேர் மிசையேறி
முன்னங் குயில்கா ளமொலிப்ப முயங்கு மிளம்பேட் டொடுமன்றில்
சின்னங் குறிப்பச் சதுரங்க சேனைபுடையிற் செறிந்துவர. (சஅ)

நந்தா துயருந் தாணுவன நணுகித் தனது சடந்தேரா
மந்தா னிலத்தை முனம்விடுப்ப மலர்ப்பூஞ் சடத்தின் மணங்கமழுஞ்
சந்தா டவியிற் றவழ்ந்துமெல்லத் தாணுவிருக்கும் புடையதனிற்
செந்தா துகுத்துத் தேனிறைத்துத் திகழ்பூ வாசம் வீசியதால். (சகூ)

சிறுகா லுலவுஞ் செயனோக்கிச் சிலாதன் புதல்வன் சிலைமதன
னுறுகால் விடுத்தி டெனமுனிறை யுரைத்த மாற்ற முட்கொண்டே
யறுகா ஞண்பூங் கருப்புவில்லி யணுகி னனென் றறிந்தவனைத்
தறுகா திவணீ வருதியெனச் சாற்ற வவனுந் தான்சார்ந்தே. (ருO)

நந்தி கேச னிருபதத்திற் பணிந்து நாவான் மிகவழுத்தி
வந்த வாறு மொழிந்திடலு மருவு மேலை வாசல்வழி
யைந்து மலர்ப்பூங் கணையாய்நீ யணுகு வாயென் றருள்செய்ய
விந்து நுதலா ளிரதியும் பின்னேகத் தான்முன் னேகினனால். (ருக)

முக்கட் பெருமான் புரியோக முதிர்ச்சி நோக்கி முன்பணிந்து
செக்கர்ச் சடையும் புலியதளுந் தேசு நோக்கித் திகைத்தயர்ந்துண்
ணெக்கிக் கலங்கி யுடனடுங்கி நினைவிற் றெளிந்து மலர்க்கணைக
ளிக்குச் சிலைநாண் காதளவு மிழுத்து வளைத்தே யெய்தனனால். (ருஉ)

ஐயம் பமலன் றிருமேனி யதனிற் படலு மழன்று ருத்துச்
செய்ய நுதற்கண் விழித்திடலுஞ் சித்த சனன்றன் னுடல்பொடியாய்
வையந் தனில்வீழ்ந் தெரிந்தனன்பின் மனைவி யிரதி நடுக்குற்றுக்
கையை நெரித்து வயிறதுக்கிக் கலுழ்ந்தே யவண்விட் டகன்றனளால். ()

வேறு.

மதனுட லெரித்த பின்னு மழுவலான் யோக நீங்கா
திதமுற விருத்தல் கண்டே யிமையவர் விரிஞ்சன் மாயன்
பதமலர் நினைய வன்னோர் படர்தலு மவர்க ளோடுஞ்
சதமகன் முதலோர் யாருந் தாணுமா வனத்தைச் சார்ந்தார். (ருச)

சங்கரன் றவமி யற்றுஞ் சாலையில் வாயில் காக்கு
மங்கையிற் பிரம்பு தாங்கு மான்முகக் கடவுள் பாத
பங்கயம் பணிந்து வாழ்த்திப் பாதுகாத் தருள்செய் கென்று
செங்கைகள் குவித்தீ சற்கெம் வரவினைத் தெரிக்க வென்றார். (ருரு)

அவ்வுரை கேட்டு நந்தி யமரருக் கருளிச் செய்வா
னெவ்வமின் மதனன் முன்சென் றெரிந்தன னீதி சைக்கச்
செவ்விதன் றெனலுந் தேவர் சிந்தையுட் சிவனை வைத்தே
பவ்வமே ழார்த்த தென்னப் பசுபதி முறையோ வென்றார். (ருசு)

முறையிடு மோசை முக்கண் முதல்வன்றன் செவிபு காமு
னறைகழ லமரர் யாரு மணுகினா ரென்ன வோர்ந்து
நிறைதரு மன்பி னோடு நந்தியை நினைக்க நேர்வந்
திறைவன தடியிற் றாழ்ந்தங் கிறைஞ்சியே யேத்தி நின்றான். (ருஎ)

மற்றவன் றன்னை நோக்கி வானவர் தம்மை நம்பா
லுற்றிட விடுத்தி டென்ன வொல்லையி லவனுஞ் சென்று
புற்றர வணிந்த வேணிப் புராந்தகன் கருணை கூர்ந்து
பற்றொடு மருளிச் செய்தான் பரிவினீர் போமி னென்றான். (ருஅ)

திருமறு மார்ப னாதி தேவர்கள் யாவ ருஞ்சென்
றருமறை யின்னுந் தேடி யறிவதற் கரிய முக்கட்
கருணையங் கடலை நேரே கண்களி கூரக் கண்டுள்
ளுருகியே யுபய பாத முவப்பொடும் பணிந்து நின்றார். (ருகூ)

வேறு.

மூவா முழுமுதலே முக்கால முங்கடந்த
தேவாதி தேவே சிவனே திரைக்கடலி
னோவா தெழுந்தவிட முண்டெம் முயிரனைத்துங்
காவா யெனநுகர்ந்து கண்டங் கறுத்தோனே. (சுo)

பாலன் றனக்கினிய பாற்கடலை யீந்தோனே
காலனைமுன் காய்ந்துமார்க் கண்டற் கருள்வோனே
சால விடர்செய் சலந்தரனைப் போழ்ந்தோனே
கோலமதிண் மூன்றுமொரு கோலா லெரித்தோனே. (கூக)

அண்டமுக டெல்லா மதிர்க்கு மிடிக்குரன்மான்
கொண்ட கரத்தோனே குவலயமெ லாந்தரிக்கு
மண்டழலைக் காலு மழுவொருகை வைத்தோனே
யொண்டிறல்சேர் யானை யுரித்த வுரவோனே. (கூஉ)

துய்யமணிச் சுட்டுத் துத்திப் பகுவாய்வெம்
பையரவத் தோடுமழல் பாணி தரித்தோனே
வெய்ய கொடுந்தொழிலே மேவு முயலகன்மேற்
செய்ய பதமூன்றித் திருநடனஞ் செய்தோனே. (கூங)

கருமுகில்போ லார்த்துக் கயிலை யெடுத்தோனே
பெருவிரலாற் கண்கள் பிதிர நெரித்தோனே
திருகுசின மீக்கொண்ட செங்கட் புலியின்
சருமவரி யாடை தன்னை யுடுத்தோனே. (கூச)

மாதத்து வங்கடந்த வள்ளனீ யத்துவா
நீதத்து வயோக நின்றனையாற் பல்லுயிரு
மேதத் துழன்றுபுண ரின்ப மறவொழிந்தே
பேதத் துறுந்துயரம் பெம்மானீ யோர்ந்திலையே. (கூரு)

முன்னைச் சுடர்விழிகண் மூன்றெனவு மோராம
லுன்னைப் பிரியா வுமையவடான் கண்புதைப்ப
வின்னல் படுமுயிர்கள் யாவு மதிமயங்கத்
துன்னிப் பெருங்கிரியிற் றோய்ந்திட்ட தோர்ந்திலையே. (கூசு)

வேறு.

பதிபசு பாச மெனவிரித் துரைத்துப் பலமறை யாகம முதலாய்
விதிமறை வழாவுட் சமயமோ ராறு மேவிய தெய்வநீ யன்றோ
மதிபுனை சடையா யம்பலக் கூத்தா மன்னிய பல்லுயிர்க் குயிரே
நதிமக டனக்குப் பதியென வயங்கு நாதனே சரணநின் சரணம். (கூஎ)

வேறு.

கண்ணே மணியே சரணஞ் சரணங் கருவே கருவின் முதலே சரணம்
பண்ணே யிசையே சரணஞ் சரணம் பழமா மறையின் பொருளே சரணம்
பெண்ணே யாணே சரணஞ் சரணம் பிறியா நெறியே சரணஞ் சரணம்
மண்ணே புனலே சரணஞ் சரணம் வளியே வெளியே சரணஞ் சரணம். ()

முடியா முதலே சரணஞ் சரண முக்கட் கனியே சரணஞ் சரண
மடியே நடுவே முடியே சரண மருளின் னுருவே சரணஞ் சரணம்
பொடியா டியவா சரணஞ் சரணம் பூதப் படையாய் சரணஞ் சரணந்
துடியார் கரனே சரணஞ் சரணந் தோளா மணியே சரணஞ் சரணம். (கூகூ)

பொன்னே சரண மணியே சரணம் பூவே மணமே சரணஞ் சரண
முன்னே சரணம் பின்னே சரணம் மூவா முதலே சரணஞ் சரண
மன்னே சரண மத்தா சரண மன்பர்க் கெளியாய் சரணஞ் சரண
மன்னே சரண முலகே சரண மதியே கதியே சரணஞ் சரணம். (எ0)

தேனே தேனின் சுவையே சரணந் தெளிவே தெளிவின் றெளிவே சரண
மூனே யூனி னுயிரே சரண முணர்வே யுணர்வி னுணர்வே சரணம்
வானே வானின் வளனே சரண மதியே கதிரின் மயமே சரண
மானே யானி னமுதே சரண மகமே புறமே சரணஞ் சரணம். (எக)

வேறு.

பற்பல வுயிரை யெல்லாம் பாங்குறப் படைப்பாய் போற்றி
பற்பல வுயிரை யெல்லாம் பாலனஞ் செய்வாய் போற்றி
பற்பல வுயிரை யெல்லாம் பாடுறத் துடைப்பாய் போற்றி
பற்பல வுயிர்கட் கேயன் பாய்மறைத் தருள்வாய் போற்றி. (எஉ)

மதியணி சடையாய் போற்றி வள்ளலே போற்றி போற்றி
யதிர்கட னஞ்சமுண்ட வமலனே போற்றி போற்றி
துதிசெய நின்றாய் போற்றி சோதியே போற்றி போற்றி
கதிதர வல்லாய் போற்றி கண்ணனே போற்றி போற்றி. (எங)

மெய்த்தவ வடிவாய் நின்ற மெய்யனே போற்றி போற்றி
மத்தனுந் தக்கன் யாக மாய்த்தனே போற்றி போற்றி
புத்தமு தனையாய் போற்றி புராந்தகா போற்றி நீண்ட
முத்தலை வேல்கை யேந்து முதல்வனே போற்றி போற்றி. (எச)

குருவடி வாயி ருந்த குழகனே மண்ணும் விண்ணு
முருவியே மலையாய் நீண்ட வொருவனே போற்றி போற்றி
பருவர லொழிந்தி யாங்கள் பதிகளிற் சேரும் வண்ணந்
திருமணக் கோலங் காட்டத் திருவுள்ளத் திரங்கா யென்றே. (எரு)

வேறு.

தொழுதலு மருட்கண் விழித்தெதிர் நோக்கித் துளவமா லயனம ரேசன்
வழுவிலா வமர ரியக்கர்கந் திருவர் வனப்புறு வித்தியா தரர்கள்
பழுதிலா முனிவர் நாகர்கிம் புருடர் பழங்கணை யுணர்ந்திலான் போன்று
குழுமியீண் டியதெ னும்மர சியற்கை குறைவற நடந்தன கொல்லோ. (எசு)

எனச்சிவன் றிருவாய் மலர்தலு நெடுமா லெதிருற வணங்கிநின் றிசைப்பா
னனத்திவ ரயனுக் களித்தருள் படைப்பு மடியனேற் கருளிய காப்பு
நனைத்தரு நீழ லிந்திரன் முதலா நாலிரு திசையுளோ ரரசுங்
கனைத்ததிர் கடல்சூழ் காசினி புரக்குங் காவல ரனேகர்தம் மரசும். (எஎ)

கதிர்மணிச் சுடிகைப் பஃறலைக் கவைநாக் கட்செவிப் பன்னக ரரசு
மதிர்கழற் பெருவிற் பொருப்புறழ் திணிதோ ளசனியே றெனவதிர் கடுஞ்சொற்
பிதிர்கனற் றறுகட் பிறையெயிற் றிருண்மெய்ப் பெருவலித் தாரகப் பெயரோன்
முதிர்பவக் கொடுங்கோல் செலுத்திடத் தவிர்ந்து முடிந்தன வன்றியுமுன்போல்,

எண்ணுபல் லுயிரு மிணைவிழைச் சின்றி யிருக்கையா லின்பமு மின்றிப்
பண்ணமு தனைய குதலையந் தீஞ்சொற் பச்சிளங் குழவியு மின்றி
நண்ணுவெந் துயரி னாழ்ந்தன வுலக நாயகி நலனுக ராமற்
கண்ணுத லிறைவ நீயிவண் யோகங் கலந்துவீற் றிருக்கையி னென்முன். (எகூ)

சொற்றவம் மாற்றந் திருச்செவி சாத்தித் தொடாடன் முகட்டினிற் றேன்றி
யுற்றவெங் கோரக் கடுமிடற் றடக்கி யொளிர்தரு வெண்பிறைக் கண்ணிப்
புற்றர வெருக்குக் கடுக்கையந் தொடையல் பொங்கிய கங்கையா றறுகு
கொற்றமார் மழுமான் றரித்தருள் கடவுள் கூர்ந்தருட் பார்வையி னோக்கி. (அ0)

வண்டுழாய் மார்ப முன்னமே தக்கன் மகத்தினிற் புகுந்ததீ வினையாற்
கொண்டநுந் துயர நீக்குது மினிநீர் குழைந்துளம் வாடுத றவிர்ந்தே
யெண்டருந் தாணு வனத்தினி லொருசா ரிருமென விருந்தன ரிப்பால்
வெண்டள வரும்பி னகையுமை மணத்தின் விருப்பமேற் கொண்டனன் விமலன்.

உமையவ டவமும் பணிவிடைத் திறனு முவந்துதன் றிருவுளத் துன்னிச்
சிமையவெற் பரசன் றனைநினைத் திடலுஞ் செறிந்தவன் சுற்றமொ டெய்தி
யமைவுறப் பணிந்தே யடியனே னெடுநா ளாற்றிய தவங்கொலோ வன்றி
யெமையளித் தவர்முன் புரிந்தமா தவமோ விறைவநிற் காட்டிய தென்றுன். (

என்றலு மிறைவன் றிருவருள் புரிந்தே யிமையவெற் பரசனை நோக்கி
மன்றலங் கூந்த லுமையவ டன்னை வதுவையாம் புரிவதற் கின்றே
யொன்றுவ யாவு மொல்லையி லமையென் றுரைத்தலு முவகைமீக் கொண்டெண்
குன்றுக டம்மைக் காலென நாட்டிக் கோதில்வான் பந்தரா யமைத்தே. (அங)

தண்ணுடுத் தரளம் பந்தரி னெங்குந் தயங்குற வயின்வயி னமைத்தே
யெண்ணிருட் பிழம்பின் குறும்பெறிந் தருளு மிருசுடர் மணிவிளக் கேத்தி
நண்ணுத் திசைக ளெட்டினும் விளங்க நகுமணிச் சுடிகைநற் றீபம்
வெண்ணிறத் தொளைப்பற் கறையணற் பகுவாய் வெவ்வரா வேந்தியே நிற்ப. ()

கூன்புறக் கனியின் குலைச்சுமை யரம்பை குளிர்மணித் தரளமார் கரும்பு
காவனெச் செறிந்த பைங்குலைச் செங்காய்க் கமுகொடு வளமுற நிரைத்து
மான்மதச் சாந்து கொடுமெழுக் கெறிந்து வாலிதாங் கருப்புரப் பொடியாற்
றூனுறக் கோல மெங்கணும் விதங்க டனித்தனி விதமுறச் சமைத்தே. (அரு)

மேனையு மிமைய வேந்தனும் பணிந்து விருப்பொரு மடைந்தனர யனே
வானுற நிவந்த சினகரந் தெற்றி மாளிகை வதுவைமண் டபங்க
ளூனமில் சிறப்பிற் சிருட்டிசெய் தனனு லுவமையொன் றில்லைமற் றதனி
லேனைய தேவர் முனிவரர் யாரு மீண்டின ரொருவழிக் குழுமி. (அசு)

வதுவைமண் டபத்தின் வயங்குறு சிங்கா தனமிசை மழுவலா னுடனே
யதிசயத் தமைந்த விமையவெற் பரசன் கன்னிகை தன்னையு மிருத்திப்
பதுமநற் சமிதை யாச்சிய முதல பலவுப கரணமு மீட்டிப்
புதுமணத் தழலின் கருமமே முறையிற் புரிந்தனன் புகன்மறைப் படியே. (அஎ)

வேறு.

வடிவகிர் கருங்கட் செவ்வாய் மகட்குறு சடங்கி யாவுந்
தொடுகழ லிமைய வேந்தன் றொன்மறைப் படிசெய் வித்து
விடுபுனற் றாரை பெய்தான் விமலன்மங் கலநாண் பூட்ட
நெடுநில முதல வண்ட கோடிக ணிவந்த தன்றே. (௮௮)

ஆர்த்தன பதலை பேரி யார்த்தன நௌரி சங்க
மார்த்தன குடமு ழாவின் றார்த்தன பொன்னின் சின்ன
மார்த்தன படகங் காள மார்த்தன தாளம் விம்மி
யார்த்தன முரசந் தேவ துந்துமி யார்த்த வன்றே. (௮௯)

உம்பர்பொன் மாரி பெய்தா ருயர்தருக் குலங்கள் யாவும்
பம்புபூ மாரி பெய்த் பழமறைத் தொகுதி கூறி
யிம்பரின் முனிவ ரேத்து தோத்திர மாரி பெய்தாம்
தும்புரு வீணை வல்லோர் சொல்லிசை மாரி பெய்தார். (௯0)

காழ்விடங் காந்து வெம்மை கலந்துசெவ் வரிப ரந்து
தாழ்குழை கிழித்த வொண்கட் சசியுட னமரர் மாதர்
சூழ்வரக் கமலை வாணி துலங்கருந் ததியிம் மூவர்
கேழ்கிளர் பசும்பொற் றட்டிற் கிளர்சுடர்த் தீப மேந்தி. (௯௧)

பாலுநன் னெய்யும் போலப் பகர்சொலும் பொருளும் போல
வேலுநற் கனியு நீங்கா விரதமும் போலத் தீந்தேன்
சாலுமென் மலரும் வீசும் கந்தமும் போலப் பண்ணு
மாலுநல் லிசையும் போல மலர்க்கண்ணு மொளியும் போல (௯௨)

இறைவனைப் பிரியா தென்று மிருந்துநீ யுலக மெல்லா
நிறைதரு முயிர்க ளெல்லா நிலைபெறக் காத்தே யெங்கள்
குறைதவிர்த் தாள்வா யென்றே குலவரை மகளுக் கன்பா
யறைமறை வாழ்த்தி யேத்தி யாலத்தி யெடுத்திட் டாரால். (௯௩)

இன்னணங் கல்யா ணத்தி னியற்றுமங் கலங்கண் முற்றிக்
கன்னலந் தீஞ்சொல் வாட்கட் கவுரிபொற் கலசக் கொங்கை
முன்னவன் முக்கட் பெம்மான் முயங்குபாங் கிருக்கு மேல்வைப்
பன்னெடுங் கால மாகப் பரந்தது விண்ணோர்க் கன்றே. (௯௪)

பணிவரை யிடத்திற் றோன்றிப் பாலலோ சனனைச் சேர்ந்த
கனிமொழிக் கவுரி செந்தாட் கமலந்தாழ்ந் திரதி சொல்வா
ளினிதுயிர்த் தொகைக ளெல்லா மீன்றருள் சுரக்குந் தேனே
புனிதமா மறைகள் போற்றும் புண்ணியத் துருவ மாதே. (௯௫)

தமரவெண் டிரையி லுற்ற விடநிகர் தடங்க ணல்லாய்
நமரனி வதுவை யாற்றி நயப்புறு போகந் துய்த்துக்
குமரனை யளிக்க வேண்டி யென்னுயிர்க் கொழுநன் வானத்
தமார்தங் கருமத் தாலு மவர்கடம் மேவ லாலும். (௯௬)

மதுமலர்ப் பொதும்பர்த் தாணு வனத்திடைச் சனக ராதி
சதுமறை முனிவர்க் கன்பு தழைத்திடும் யோகங் காட்டும்
புதுமதிச் சடையோன் பக்கம் போந்துபூங் கருப்பு வில்லைக்
கதுமென வளைத்துச் செய்ப சுருப்புநாண் கடையி லேற்றி. (௯௭)

முல்லையோ டசோகு சூத முளரியுற் பலமோ ரைந்தாய்ச்
சொல்லிய பாணந் தொட்டு விடுத்தலுஞ் சுடர்மா மேரு
வில்லித னுதற்கண் சற்றே விழித்தலு மெரிந்து வீழ்ந்தா
னல்லருள் புரிந்தே யென்றன் கணவனை நல்கு கென்றாள். (௯௮)

கேட்டுள மிரங்கி முக்கட் கௌரிநற் கருணை கூர்ந்தே
யீட்டுபல் லுயிர்கட் கெல்லா மரூபியா யிரதி யேயுன்
வாட்டிறல் விழிக்கு முன்போ லுருவமாய் மருவ வென்றே
நாட்டுநல் வரத்தை யீந்தா னுபக னருளி னாலே. (௯௯)

இரதிநல் வரம்பெற் றுய்ந்த திமையவர் யாருந் தேர்ந்து
பரமன திடத்தின் மேவிப் பங்கயப் பாதம் போற்றி
விரவுதங் குறைகள் கூற விமலன்மெய்க் கருணை கூர்ந்தே
பருவர லொழிப்பா மென்றே பகர்ந்தனன் களித்தார் விண்ணோர். (௧௦௦)

சிலதினங் கழிந்த பின்னர்ச் செங்கண்மால் விடையி லேறி
நிலவணி சடிலப் பெம்மா னிவந்தொளி ரிமய மாதோ
டுலகெலா முய்யும் வண்ண மோங்கொளிக் கயிலை யெய்தி
யலகிலா வின்பந் துய்த்தே யமர்ந்திடு நாளி லோர்நாள். (௧௦௧)

காரண வகையி னாலே கறைமிடற் றண்ண லோங்கும்
வீரியந் தன்னைச் செந்தீக் கடவுளின் முகத்தின் விட்டா
னூறு மழலிற் செய்த வவ்விய மமரர்க் கெல்லா
நேருறத் திருத்தி யாமென் றருமறை நிகழ்த்த லாலே. (௧௦௨)

தருப்பொலி நாட்டிற் றேவர் தம்மக டனத்தும் வீங்கிக்
கருப்பம தாத லோடுந் தாங்கருங் கவலை கூர
வுருப்பொலி யுருவ முன்னோ ருதரங்கள் கீண்டு நீண்ட
மருப்பொலி சரவணத்தூ வந்துவீழ்ந் துற்ற வன்றே. (௧௦௩)

உற்றிடு கருப்ப மெல்லா மொன்றெனத் திரண்டு கூடித்
தெற்றுபா சடைசெந் தோட்டுத் தீநறுக் கமல நீல
முற்றுசெங் கழுநீ ரரதி மொய்த்தலர் கங்கைத் தெண்ணீர்
துற்றிய சரவ ணத்தோர் குழவியாய்த் துலங்கிற் றன்றே. (௧௦௪)

இரவியோர் நூறு கோடி யெழுந்தபொற் பேய்ப்பக் காந்தி
பரவிய குமர வேளங் குதித்தலும் பணிந்து தேவர்
திரமுறு மறுமீன் றன்னைத் திருமுலைப் பாலூல் கிரென்
றுரமுற வுரைத்தா ரோது ங் கார்த்திகை யுருவா ளுக. (௧௦௫)

முலைகொடுத் திடலு மந்த முருகவேண் முகங்க ளாறுய்
நிலைபெறு தீம்பா லுண்டே வளர்தலா னிகழ்த்து நாம
முலைவிலாக் கார்த்தி கேய னென்னலா முற்ற தேசு
குலைபுனற் பலவு மொன்றுய்க் கூடலாற் கந்த னுமால். (௧௦௬)

முகங்களோ ராறுங் கண்கண் மொழியுமீ ராறுந் தோளா
நகங்களீ ராறுங் கண்டே நான்முகன் மாயன் விண்ணோ
ரகங்குழைந் துருகி யன்புற் றளவிலா வுவகை பொங்கத்
திகம்பர னருளைப் போற்றிச் சேயையுந் துதிக்க லுற்றுர். (௧௦௭)

சங்கர னருளால் வந்த சண்முகக் கடவுள் போற்றி
கங்கையி லுதித்த வெற்றிக் காங்கேயா போற்றி நீண்ட
துங்கமார் சரவ ணத்துட் டோன்றிய கந்தா போற்றி
யெங்கடம் வினைக டீர்க்கு மிறைவனே போற்றி போற்றி. (௧௦௮)

ஐமுகக் கடவு ளீன்ற வறுமுகத் தமல போற்றி
கைமுகற் கிளையாய் போற்றி கார்த்திகை மைந்த போற்றி
வைமுகத் தயில்கை யேந்து மருமலர்க் கடம்ப போற்றி
பைமுகத் தரவ மான பற்றலர்க் கிடியே போற்றி. (௧௦௯)

கறைமிடற் றண்ண லீன்ற காளைசே வகனே போற்றி
பிறைநுதற் கவுரி யன்பாய்ப் பெற்றசெவ் வேளே போற்றி
மறைமுதற் பொருளே போற்றி மாற்றலர்ச் செகுத்தே யெங்கள்
குறையெலாந் தவிர்க்க வந்த குமரனே போற்றி போற்றி. (௧௧௦)

என்றெடுத் தேத்திப் போற்றி யிருகரங் குவித்து வாசந்
துன்றுபூ மாரி பெய்து சூழ்ந்தவ ராசி கூறி
நன்றுறு முனிவர் வாழ்த்த நவையிறுந் துமிக ளார்ப்ப
வன்றுறு மரம்பை மாத ராலத்தி யெடுத்திட் டாரால். (௧௧௧)

செயசெய வென்னு மோசை திசைகளோ ரெட்டு முட்டப்
பயமொழிந் தமரர் யார்க்கும் பருவரைப் புயம்பூ ரிப்பத்
துயரறுத் திட்டோ மென்றே துள்ளினு ராடிப் பாடி
வயவலி யசுரர் தோள்கள் வாமங்க டடித்த வன்றே. (௧௧௨)

சுந்தரக் கயிலை யுச்சிச் சுடர்ச்சின கரத்தை நீங்கி
நந்திவா கனத்தின் மீது நாயக னுமையோ டெய்திச்
சிந்தைகூர் குமர வேளைச் சிறக்கவே மடியில் வைத்துப்
புந்திகூர்ந் துச்சி மோந்து புயத்தணைத் தெடுத்துப் பின்னர். (௧௧௩)

இருவர்த நடுவ ணுக விருத்தியே கங்கை தன்னி
லுருவுறப் பிறத்த லாலே யுற்றகாங் கெயனே யென்றுஞ்
சரவணத் துதித்த லாலே சரவண பவனே யென்றுந்
திரமுறு கருப்பஞ் சிந்திச் சேர்தலாற் கந்த னென்றும். (௧௧௪)

கார்த்திகை வளர்த்த லாலே கார்த்திகே யன்று னென்று
மார்த்தெழு மனலிற் றோன்ற லாலக்கி னிபுவே யென்றுங்
கூர்த்தகட் டிளமை யாலே குலவிய முருக னென்றுந்
தார்ப்பொலி கடப்பந் தாரைத் தரித்தலாற் கடம்ப னென்றும். (கசரு)

இன்னன பலவு நாம மியம்பியக் குமர னோடு
மின்னொரு பாக மாக விமலன்மால் விடைமீ தேறிப்
பன்னகப் பாய லானும் பதுமமென் றவிசி னானும்
பொன்னகர்க் கிறைவ னாதி புங்கவர் புடையிற் சூழ. (கசசு)

தேவதுந் துமிக ளாதி பல்லியஞ் சிறப்பி னார்ப்பப்
பூவலர் பொழிந்து வாழ்த்திப் புனிதமா தவர்கள் சூழக்
காவலர் தூற்ற வோங்குங் கயிலைமால் வரையி னுப்பண்
மேவிய சினக ரத்தின் விளங்கிவீற் றிருந்தா னன்றே. (கசள)

விரைசெறி கடுக்கை மாலை விளங்குசெஞ் சடையோ னாதி
பரைதரு குமர வேளுற் பத்தியைப் படிப்போர் கேட்போர்
தரைபுக ழத்தஞ் சொல்வோர் பெத்தகந் தன்னிற் றீட்டி
நிரைபெற வமைத்துப் பூசை நிரப்பியே யடிப்போர்க் கீவோர். (கசஅ)

நீள்புவிக் கரச ராயு நிகரிலா மகவைப் பெற்று
வாள்கரத் தேந்து மொன்னார் வலியினை மாய்த்தும் பூவின்
றாள்செறி தருவ னீழற் றுலங்கிவீற் றிருந்தும் வேற்கை
வேள்பதத் தென்றும் வாழ்ந்து விளங்கிவீற் றிருப்பர் மாதோ. (கசகூ)

தத்துவப் பகுதி யாய்ந்து சாங்கிய மனைத்துந் தேர்ந்த
வித்தக முனிவர் கேட்ப வெற்றிவேற் கடவுள் வெண்சு
னத்துறு சரவ ணத்துற் பவித்தநற் சரித நன்காய்ச்
சுத்தவித் தகனுஞ் சூதத் தொன்முனி தொகுத்திட் டானால். (கஉ0)

ஐம்பத்தேழாவது
குமாரசாமி யுற்பத்தியத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். கஅ௨கூ.

ஐம்பத்தெட்டாவது

தாரகாசுரவத வத்தியாயம்.

தடவரைத் திணிதோள் மெற்றித் தாரகன் வதத்தைச் சொல்கென்
றிடரறு மகங்க ளாற்றி யிருந்தநற் றவத்தோர் கேட்பச்
சுடர்விடு நுதற்கட் பெம்மான் றுணையடிக் கமலம் போற்றிப்
படர்சடா மகுடச் சூத முனிவரன் பகரு வானால். (க)

வெள்ளியங் கிரியின் மீதில் விமலனு முமையு மன்பாய்
நள்ளிடைக் குமரவேளை நன்குற விருத்தித் தங்கட்
குள்ளுபேர் சோமாற் கந்த ரென்றுல கனைத்து மேத்தத்
தெள்ளிதின் மகிழ்ச்சி கூர்ந்து சிறந்தினி திருக்குங் காலை. (௨)

மாயவன் மலரோன் வான மன்னவன் றிசைகாப் பாள
ராயவ ராதி வானோ ரவர்குறை யியம்பிப் போற்றத்
தூயனுங் குமர வேளைத் தோன்றிய வேழா நாளிற்
சாய்விலாத் தேவர் சேனைக் கதிபதி யென்னச் சாற்றி. (௩)

கதிர்மணி மகுடஞ் சூட்டிக் கனககுண் டலங்கள் வேய்ந்து
புதியமுத் தார மாதி பூணணிக் கலன்கள் பூட்டி
யதிர்கழற் சிலம்பு தண்டை யரைவட மொட்டி யாணந்
துதிபெற வணிந்து நெற்றிச் சுட்டிபொற் பட்டங் கட்டி. (௪)

அரையினி லுடைவாள் சேர்த்தி யணிவிரற் கோதை கட்டி
வரைபுரை வில்வா டண்டம் வயங்குசக் கரம்வெம் பாச
நிரைகதிர்ப் பரிசை தோட்டி நேரிசஞ் சூலம் புங்க
முறைதரு படைகள் யாவு முலப்பில வளித்துப் பின்னும். (௫)

பரையெனுஞ் சத்தி கூறும் பராபரன் கூறு மொன்று
யுரைபெறுஞ் சத்தி யென்றே யோங்கிய வடிவே லொன்றைத்
திரைசெறி சரவ ணத்துற் பவித்தசெவ் வேள்கைக் கீந்து
விரைமலர்த் தாமஞ் சூட்டி வெண்ணிற விபூதி சாத்தி. (௬)

தோமறு செம்பொன் மேனித் துணைச்சிறைச் செங்கட் கூர்வாய்
மாமதிக் கலுழ னீன்ற தருணனு மஞ்ஞை தன்னைக்
காமர்வா கனமா வீந்து கடுந்தொழி லசுரர் மோமா
ருமமின் றறவே கொன்று நாட்டுதி வானோர் வேந்தை. (௭)

என்றர னருளிச் செய்ய வெழில்பெறு மயூரத் தேறித்
துன்றிய சுடர்வேற் கந்தன் முனிசெலத் துளவ மாயன்
வன்றிறற் கருடன் மீது வாமத்திற் செல்ல வன்னந்
தோன்றிய பிரம தேவ னுறுவலப் பாலிற் செல்ல. (௮)

மதலைதன் களிப்பு நோக்கி மழுவலான் விடைமேற் கொண்டற்
புதமொடு பின்னே செல்ல வவன்முனம் புழைக்கை நால்வாய்க்
கதழ்சினத் தறுகட் சீற்றக் கரிமுகப் பிள்ளை யெட்டு
மதகரி சூழ வாகு வாகன மீதிற் செல்ல. (௯)

கறையடிப் பணைக்கை நால்வாய் மும்மதக் கலுழி நான்கு
பிறைமருப் புயர்வெள் ளானைப் பிடரின்மேற் பிரச மூறு
நறைமமலர்த் தருவி னீழ லரசிய னடாத்துந் தேவர்க்
கிறைமக பதிவி வர்ந்தே யிறைமக னருகு செல்ல. (௧0)

தெறுசினத் திருகுகோட்டுத் தகர்மிசைத் தீக்கோள் செல்லக்
கறுவுகோ ளூற்ற சீற்றக் கடாமிசைக் காலன் செல்லப்
பிறையெயிற் றரக்கன் மீது பெலத்துயர் நிருதி செல்ல
வறைகடற் கிறைவ னேங்கு மடன்மக ரத்திற் செல்ல. (௧௧)

திருகுகோட் டிரலை மீதிற் றெறுசினப் பவனன் செல்லக்
குருமணிப் புட்ப கத்திற் குவவுத்தோட் குபேரன் செல்ல
வுருமெனச் சீறி யொன்னா ருடல்பிளந் திடவே பாயு
மிருமருப் பெருத்தின் மீதி லீசான தேவர் செல்ல. (௧௨)

பூதவே தாளங் கூளி பொருமிடா கினிசா முண்டி
பேதமார் கணத்தின் கூட்டப் பெரும்படை முழங்கிச் செல்ல
மேதகு சித்தர் சாத்தியர் வித்தியா தரரி யக்க
ரோதுகந் தருவர் விண்ணோ ருயர்ந்தகின் னரர்கள் சூழ. (௧௩)

பேரிகை முழவு தக்கை பிளிறுதண் ணுமையு டுக்கை
தாரைகா ளம்வீ ராணந் தவண்டைமல் லரித டாரி
பூரிகை திமிலை பம்பை பொலிவுறு பதலை சின்னம்
வாரியேழ் முழக்க மென்ன வயின்வயின் முழங்கி யார்ப்ப. (௧௪)

விரைசெறி வெட்சி மாலை மேவுமீ ராறு திண்டோள்
வரைபுரை பவள மேனி வயங்கிய முகங்க ளாறிற்
றிரைசெறி கருணை வாரித் திருநய னங்க ளீரா
றருடருந் தேவர் சேனைக் கதிபதி மயின்மேற் கொண்டே. (௧௫)

சென்றிடுங்குமர வேளின் றிறத்தையு மன்னோன் கையில்
வென்றிசேர் வெற்றி வேலின் மேன்மையு மெலிந்த விண்ணோ
ரொன்றிய களிப்பு மன்னோ ருயர்ச்சியு நோக்கி யன்பாய்த்
துன்றிய விரைவி னோடுந் துலங்கிய விமானத் தேறி. (௧௬)

நாரத முனிவ னுருங் கண்டந்த விபவம் யாவுங்
கோரவெங் கூற்று மஞ்சக் கொலைபுரி யசுரர் வாழும்
பாரகந் தனிற்பொன் னுடும் பணியசு ரேந்தி ரத்திற்
றூரக னெனும்பொல் லாத தறுகணற் குரைத்தா ரன்றே. (௧௭)

அறுமுகக் கடவு ளோடு மமரர்தம் வரலா றெல்லா
முறுதவப் பெரியோ னான நாரத னுரைக்கக் கேட்டு
முறுவலித் தசுரர் கோமான் றூரகன் மொழிவா னேற்றைச்
சிறுவனோ வென்னை வெல்வா னழகிதென் செய்கை யென்றே. (௧௮)

தானைகா வலரை நோக்கித் தாரகன் றிருமால் வானோ
ரேனைய ரென்கை யம்பா லிறந்திடா தொழிந்தோ ரெல்லாஞ்
சேனைகா வலவ னென்றோர் சிறுவனைக் கொண்டு சீற்ற
மோனைகொண் டியர்ந்த நம்மை முருக்குவ தெவன்கொ லென்றான். (௧௯)

இனியிமை யோர்க டம்மை யிறந்திடப் பொருவ னென்று
முனிவொடு சேனை யானை பரிரத முதல யாவு
நனிபெறு தானை வீரத் தலைவரு நண்ணி முன்னர்த்
துனிபொடு மெழுக வென்று செப்பியே துண்ணென் றூர்த்து. (௨0)

மணிபல குயிற்றி யோங்கி வயங்குசிங் காத னத்தைத்
தணிவறு குவவுத் திண்டோ டாரக னெருவிக் கச்சை
யணிபெற வரையில் வீக்கி வச்சிரத் தமைத்த சோடு
பிணிவுற வுரத்திற் சேர்த்திப் பிறங்குகைக் கோதை கட்டி. (௨௧)

உதித்திடு மிரவி கோடி யொருங்குவந் துதித்த தென்ன
மதித்தொளிர் மணிப்பொன் மோலி வயங்குற முடிமேற் சேர்த்துப்
பதித்தவச் சிரத்தின் வீர பட்டமே னுதலில் வீக்கிக்
கதித்துயர் புயத்திற் செய்ய கதிர்மணி வலயம் பூட்டி. (௨௨)

காலணி யணிந்து வீரக் கழலிணை வீக்கி மார்பிற்
சாலவு மார மாலை சரப்பணி பதக்கந் தாங்கிக்
கோலமார் வஞ்சி தும்பை கொற்றவா கையுமேற் கொண்டு
வாலசூ ரியனை யேய்க்கு மணிக்குழை காதிற் பூண்டே. (௨௩)

இடையினி லுடைவாள் சேர்த்தி யெழில்வரைப் புயத்தி லம்புப்
படைசெறி தூணி தூக்கிப் பருப்பத மென்ன நீண்டு
கடைகடற் பிறந்த வால காலத்திற் சீறும் பாணத்
தொடைபொழி சயித்தி ரப்பேர் வில்லினைத் தோளிற் றாங்கி. (௨௪)

பட்டைய முசலந் தண்டம் பரிகஞ்சக் கரமு சுண்டி
நெட்டயில் வேல்வெஞ் சூல நிலவுகப் பணங்கட் டாரி
வட்டவான் பரிசை தோட்டி மழுப்பிண்டி பால மாதி
கட்டழ கார்ந்த வீரர் கைக்கொடு பக்கஞ் சூழ. (௨௫)

ஆயிரத் தெட்டு மாற்றி னபரஞ்சி யதனாற் செய்த
பாயிருள் சீக்குஞ் செங்கேழ்ப் பருதிநே ராழி சேர்த்த
சேயிரு விசும்பு தூர்க்குஞ் செறிகொடிக் கொடிஞ்சித் திண்டேர்
மாயிரு ஞாலந் தன்னில் வல்லையிற் கொணர்தி ரென்றான். (௨௬)

மணிக்குர லதிர நீண்ட வான்முக டுடைய வேண்டிக்
கணிப்பருங் கதிகண் மீதி லவிர்துகிற் கொடிக டாக்கத்
தணிப்புறுங் கடல்கள் வற்றத் தமனியச் சிறைய டிக்கு
மெணிற்றிகழ் கருட னேரா யிரங்களு மிசையப் பூட்டி. (௨௭)

வான்றொடு மிரதம் வல்லே வலவன்கொண் டுய்ப்பச் செந்தீக்
கான்றொளிர் விழிமை நாகங் கால்கொடு நடந்த தென்னத்
தான்றொடு கழல்க ளார்ப்பத் தாரக னென்னும் வீர
னூன்றொடு படைக ளோடு மொல்லைவந் தேறி னானால். (௨௮)

ஏறுகா லேயிற்ற வண்டை யிடக்கைகண் முரசந் தட்டை
கூறுகா ளஞ்சே கண்டி குடமுழாப் பதலே சின்ன
மூறுசில் லரிவீ ராண முடிக்கைதண் ணுமைகைத் தாளம்
வேறுவே றெலித்த வூழி மேகத்தி னிடிகள் போலும். (உகூ)

கோட்டிகீள் சயித்தி ரப்பேர் வில்லினைக் குணத்தை நேரே
பூட்டியர்ச் சனைகள் செய்து பொருக்கெனச் சிறுநா ணோசை
காட்டினன் கடல்க ளேழுங் கலங்கின விடியே றோடு
மோட்டுவா னுடுக்கள் வீழ்ந்த முகிற்குழாஞ் சிதறிச் சென்ற. (௩0)

கன்செறி தறுகட் பூத கணஞ்செறிந் துலவுந் தேரிற்
சினமிகுங் கால நேமிச் சிந்துரம் வாசி காலாள்
புனைமணித் தேர்கள் கோடி யற்புதம் புடையிற் சூழத்
துனைவினிற் றிசைக ளெட்டுந் துகளெழ வந்து சார்ந்தான். (௩க)

கோவறு கழுதை கோடி கூளிகள் கோடி பூண்ட
வோவற வுலவுந் திண்டே ரூர்ந்துயர் நிமியோர் தண்டந்
தாவுறு துயர்ந்த தோளிற் றுங்கித்தேர் காலாள் யானை
வாவுறு மிவுளி வெள்ள மற்புதம்வளைய வந்தான். (௩உ)

கதித்திடு கதிக ளைந்துங் காற்கதிர் விரைவிற் காட்டிப்
பதித்திடு சதிவ ழாத பண்ணமை கலினப் பாய்மா
மிதித்திடும் போதிற் சேடன் விதிர்விதிர்த் திடமேற் கொண்டே
கொதித்திடு சேனை முன்னே கொலைப்பண கிருதன் சென்றான். (௩௩)

சென்றிடுங் காலை மேகம் பொழிந்தது செந்நீர் மின்னோ
டொன்றிய விடிகள் வீழ்ந்த வுலவின கழுகு சூழ்ந்து
வென்றிகொள் வயவர் கையில் விளங்குமா யுதங்க ளெல்லாந்
துன்றிள வீய்க டோள்கை துடித்தன விடப்பால் யார்க்கும். (௩ச)

வில்லெழும் வாளு மம்பும் வீழ்ந்தன கைகள் சாரச்
செல்லுற நீண்ட வாளிற் சேனமும் பரந்துந் துன்ன
வெல்லினைப் பரிவே டஞ்சூழ்ந் திட்டதோ ரிரத மீதிற்
புல்லிய காக்கை யொன்றோ டொன்றெதிர் பொருது வீழ்ந்த. (௩ரு)

தன்னுடை வலியினாலுந் தான்பெறு வரத்தி னாலுந்
துன்னுமாங் காரத்தாலுந் துர்ச்சகு னத்தை யோரான்
புன்மையி லறிஞர்க் கேனும் பொன்றிடுங் காலம் வந்தா
லுன்னுகா ரியங்தோற் றுதிவ் வுலகத்தி லுண்மை யாமால். (௩சு)

அணிவகுத் தசுரர் சேனை சென்றிட வமரர் சேனை
பிணிமுகத் தேறுஞ் செவ்வேள் பின்வர முன்ன ரேகுந்
திணிதிரட் புயவெம் பூதர் சித்தர் கந்திருவ ரோடுங்
கணிதமற் றெழுந்த சேனை கடலொடு கடலேற் றென்ன. (௩எ)

வேறு.

வெஞ்சினமொடு மிருள்வரையென விறலசுரரின் மறவோர்
வஞ்சினவுரை புகல்கரவொடு மிதழ்மடியெயிறு கடியாத்
தஞ்சிலைகளி னிருதலையொரு தலையெனவர வலியா
நஞ்சனவடு கணைபலபல நமனெதிர்கட வினரால். (௩அ)

அடுகணைபடு தலும்யம படரடிசிலரற வணிதோ
ணடுவுறுதலு மயர்வொடுசிலர் நகமெனவிழு தரநீண்
முடிசிலருடை படவுயிர்களு முடிவுறுதுய ருறவே
படிமிசைவடி குருதியினிடை படிதரமுழு கினரால். (௩௯)

விழிவழியன லொழுகிடயமன் விறல்கெழுபடர் சினவாக்
கழிபடுகட லெனவதிர்குரல் ககனமுமக டுடையா
வழிதருமென வமரருமட லசுரருமயர் வுறவே
யொழிவறமழை பொழிதரலென வுறுகணைகட வினரால். (௪௦)

விருதொடுமதி ரசுரர்கள்சிலர் மிளிர்மணிமுடி விழவே
பொருசிலையொடு கணையொடுமிரு புயவரையற விழுவார்
வருகிரிரத மதகரிபரி மடிதரமழை யெனவீழ்
குருதியினதி பெருகுபுவிரி குரைகடலக டுறுமால். (௪௧)

விடுசரமுட னுழைதரவசு ரர்கள்வெயர்வொடு மடிவார்
படுகளமிசை பலர்பலரறு படுகுடர்கரி பகுவாய்
கொடுமிசைதர வலகைகள்பல கொடிகொளவமர் கொளவே
நெடுமுடியறு படுகுறையுட னிணமொடுநட மிடுமால். (௪௨)

முனமெதிர்யம படர்முடுகலு முறிபடுமசு ரர்கள்போர்
சினமுறுபண கிருதனுமிவை தெரிதரவெதிர் சொலுவான்
மனவிசையொடு குரகதமிசை வருதலும்யம படர்தா
ஞனதுடலுயிர் பருகுதுநிலு நிலுமெனவெதிர் பொருதார். (௪௩)

எதிர்பொருயம படர்கழலொடு மிருகரமுர மறவே
விதிர்படையுமிழ் குருதியினதி மிடைகயலென மிளிரு
முதிர்சினமொடு பொருதிறுதலை முகவிழியனல் பொழியாச்
சதிர்கெடவுயி ரொழிவறுபடர் சமனிடைகுறு கலுமே. (௪௪)

பொருசிலைவலி யொடும்விழிவழி தழலதுபொறி சிதற
வருபணகிரு தனிரதமத கரிபரியொடு மெதிரே
வருதலுமிகு வலிகெழுநமன் மடிதரவிதழ் கடியா
வுருமெனவதிர் வொடுமடுதிற லுறுகதைவிடு தலுமே. (௪௫)

கடையனலென வுறுசினமொடு கதைபடைபல வடிவா
யடையலர்படை முழுவதுநொடி யளவினிலது தகராத்
தடையறுசின மொடுபணகிரு தனுமுயர்குதி ரையினோ
டிடைமடிதர வுயிர்பருகுபு யமனிடைகுறு கியதே. (௪௬)

தேர்முதலிய படையிருபுடை செறிதரவவை நடுவே
பார்நெளிதர வுயாகணபண பணிசிரநெரி தரவே
காரிடியொடு மொருநெடுவரை கடவியதென விரைவா
யேர்தருரத நடவியநிமி யிகல்வருணனொ டெதிரா. (௪௭)

நின்றொருகதை விடுதலுமவ னிமிர்புயமிசை படநூ
றொன்றியபொடி படவருணனு முடன்வரிசிலை குழையா
வென்றுயிருணு மனல்பொழிகணை விடமெனவெதிர் விடவே
சென்றவுணர்கள் கரசரணமெய் சிரமுரமுரு வியதால். (௪௮)

திண்புவிமிசை செறிமலைநிகர் திரள்பிணமுயர் தரவே
தண்புனலரு வியதெனவிழி தருகுருதியி னிடையே
வெண்கவரிவெல் படைகுடைபிண மிதவையின்மிசை வரவே
கண்கனல்கது விடநிமிகறு வுகொள்படைசின முடனே. (௪௯)

அடல்வருணன தணிமுடிதலை யதுதகர்தர வனல்கா
லடிகொடுபுடை தருதலுமக றரைமிசைதுடி துடியா
வுடலயர்வொடு விழுதலுநிமி யொடுதனபதியெதி ரடையா
வடிசுடுகணை பொழிமழையென வகைவகைசித றினனால். (௫0)

நேர்நிமியுட றொளைபடவவ னெடுவரையென நிமிர்தோ
ளார்வலிகொடு தனதருவரை யகலமதுற வறையா
வார்படைதொடு முனம்வடதிசை வருபதிசின முடனே
கூர்தருதிரி முகவயில்கொடு குரைகழனிமி படவே. (௫௧)

குத்தலுமவ னுடல்புவிமிசை குவடெனவிழு தலுமே
யொத்தொளிர்தரு பொனினுலகரி வையர்முலைதழு வினர்நேர்
சத்துருவொடு வருபடைபடி தரவொருகணை பலவாய்
வித்தகவிலி னுயர்தனபதி விரைவொடுசித றினனால். (௫௨)

பம்பியபடை யொடுபொருநிமி படுதலையுளர் வலிசேர்
சம்பனும்ரத மிசைபடையொடு சமர்புரிகள நடுவே
வெம்பியசின மொடுவருதலும் விடையிவர்பதி னொருவோ
ரும்பருமதி சயமுறவன வுறுபடைகட வினரால். (௫௩)

வேறு.

பதின்ம ரோடு மொருவர் விட்ட படைக ணீடு பகைஞர்த
மதிர்க முற்பி ணித்தெ திர்ந்த வசுரவீரர் யானைதேர்
கதிமி குத்த குதிரை கோடி கால்க ளற்று வீழநீள்
விதிர்ப டைக்கை யற்று நூறு கோடி வீரர் வீடினார். (௫௪)

கோறல் செய்து சேறல் கண்டு கோப மிக்க சம்பனு
மாற ருஞ்சி னத்தி னோடு மப்பு மாரி தூவினா
னூறு கோடி பூதர் கைக ணூறு கோடி பூதர்கால்
வேறு வேறு கூறு செய்து வீர மேவி னைத்தலால். (௫௫)

அன்ன வாறு கண்டு சீறி யாறு சூடு மீசனே
ரென்ன வந்த பதின்ம ரோடு மொருவ ருங்கை யேறியே
மின்னு வாளி கோடி கோடி விடுத லும்மோ ரம்பினால்
சின்ன பின்ன மாக நூறி வாளி கோடி சிந்தினான். (ருசு)

விற்றொ ழிற்ப ழுத்த செம்பன் விட்ட விட்ட கணையெலா
மற்று நூறு துண்ட மாக வம்பு நூறு தூவினார்
மற்ற வன்பு யத்தின் மீது வாளி நூறு சீறிநேர்
துற்றி டப்ப திக்க மேனி சோரி மாரி சோர்ந்தவே. (ருஎ)

பட்ட வாளி யாவை யும்ப றித்தெ திர்ந்த பூதர்மேல்
விட்டு மார்பு கீண்டு பின்னும் வெய்ய பாண மெய்யுமுன்
னெட்டு நூறு கோடி பூத ரெண்ணில் வெற்பெ டுத்தெடுத்
தட்ட காச மோடு செம்ப னாக மீது வீசினார். (ருஅ)

வீசு கின்ற வெற்பெ லாம்வி லக்கி வேறு கூறதாய்த்
தூசு சேர்து கட்ப டுத்தி யேது லங்கு பூதர்கள்
பூச லின்றி யோட நின்று புங்க மாரி பெய்துபின்
னேசி லையி ரண்டொ ருத்த ரிடைய வ்ாளி யேவினான். (ருகூ)

எறி லேறு மீச ரையி ரண்டொ ருத்த மேனிக
ளாறு பாய வூறு சோரி யாற ருஞ்சி னத்தொடே
யாறு லாவு சூல மார்பு பற்ற வெற்றி வீசலுஞ்
சீறு கின்ற சம்ப னாவி தின்று மென்று மீண்டதால். (சூ0)

சேனை யாக நூறு கோடி தேவர் சூழ விந்திரன்
யானை மீதி வர்ந்து வெற்றி யார்சி லைக்கை பற்றியே
தானை யோடெ திர்ந்த வீரர் தங்கள் வஞ்சி ரங்களம்
மானை யாட வெங்க ளத்தின் வாளி கோடி தூவினான். (சூக)

இந்தி ரன்வி டுத்த வாளி யெண்ணி றந்த வசுரர்தா
நந்தி டப்பு ரிந்த சோரி நதிக டங்க ளென்னமேல்
சிந்து வோடு கீழ்க டற்சி வந்த வாரி யாகலுந்
தர்தி பூண்ட தேரின் மீது சார்கு சம்ப னெய்தினான். (சூஉ)

வெற்றி கூர்கு சம்பன் மீது கோப மோடு மேவிநே
ருற்றெ திர்ந்து தேவர் கோனை டுஞ்சி னத்து ரைப்பனு
லற்றை நாளி லெங்கள் செம்ப னாவி யுண்ட கள்வனீ
யிற்றை நாளி லிங்கு வந்தெ திர்த்த தென்றன் யோகமே. (சூங)

என்று கூற நன்ற தென்றி யம்பி யிந்தி ரன்சிலை
வென்றி நாணொ லித்து வாளி மேக தாரை போலவெய்
தொன்று நூறு கோடி யாயு ரங்க ரஞ்சி ரந்தொறுஞ்
சென்று பாய்த லும்ம வன்சி ரந்து ளக்கி நன்றெனா. (சூச)

கைவி திர்த்து வெஞ்சி லைக்க ணைக்கி லக்கு நீயென
வெய்ய வாளி கோடி தொட்டு வேழ மீத ழுத்தியே
நைய வாளி நூறு தேவர் நாதன் மீத ழுத்திநீ
யுய்யு மாற தெங்ங னென்று மும்பர் கோனை டோதினன். (சுரு)

உம்பர் கோன்வெள் ளானை யோடு மூன்று யிர்த்து மூர்ச்சியா
வெம்பி நின்று சோப மாறி வெய்ய வாளி யாயிரம்
பம்பு தேரொ டானை யும்ப டப்பு ரிந்து சாரதிக்
கம்பு நூறு விட்ட வன்ற னுக மூன்தொ ளைத்தனன். (சுசு)

வில்லு நாணும் வேலும் வாளும் வாளி மேவு தூணியு
மல்லல்கொண்ட கவச மும்வ யங்கு செம்பொன் மவுலியு
மொல்லை யற்று வீழ வைந்தொ டைந்து பாண மோடியே
செல்ல விட்டொ ரைந்து வாளி சென்னி மீத ழுத்தினன். (சுஎ)

வேறு.

மற்றொரு சேமத் தேரின் வல்லையிற் குசம்ப னேறிக்
கொற்றவில் லெடுத்து நாணைக் கொளுவிவெம் பகழி மாரி
துற்றலும் வெள்ளை யானை சோரியாற் சிவந்து சோர
வெற்றிமா தலிசெம் பொற்றேர்தான் கொணர்தர மீக்கொண் டானல். (சுஅ)

தேரினி லேற லோடுங் குசம்பன்றன் றேரி னோடுங்
காரிடைக் கரந்து மாயைக் கனன்மழை பொழிய நோக்கி
வாருணப் படையைத் தூண்டி மகபதி விடுக்க மற்றுங்
கோரவெவ் வரவவாளி கொடுஞ்சினத் தசுரன் விட்டான். (சுகூ)

விடுதலும் மாயை நாகம் விண்ணவர் குழுவை யெல்லாம்
படுகள மதனிற் கட்டிப் படுத்தலு மகவான் சீறித்
தொடுசிறைக் கலுழ பாணந் தொடுத்தன னரவ மாயை
கெடுதலி னெழுந்து நின்றே கேடிலா வமர ரார்த்தார். (எ௦)

உச்சிரச் சிரவா வூரு முயர்வலி யும்பர் கோமான்
வச்சிரப் படையை யேவ வயமலி குசம்பன் மார்ப
மச்சிரங் கால்கள் கைக ளறுபட வவன்ற னாவி
பச்சிரத் தங்கள் சோரப் பருகிமீண் டுற்ற தன்றே. (எக)

போர்வலிக் குசம்பன் மாய்ப் பொன்றிடா வசுர ரெல்லா
நேர்நிலா திரியல் போக நெடியகோட் டெற்றி நீலக்
கார்நிறச் சிவந்த குஞ்சிக் கனலுமிழ் தறுகட் சீற்றத்
தார்வலி மயிட னென்பா னடுபடை சமரி னேற்றான். (எஉ)

ஏற்றவ னெதிராய் வானத் திந்திரன் றிக்குப் பால
ராற்றலொ டமரின் மூண்டா ரன்னவர் சேனை யெல்லாங்
காற்றினி லுற்ற பூளை கடுப்பமுன் னின்றி டாது
நாற்றிசை தோறு மோடி நண்ணலு மகவான் சீறி. (எரு)

வரிசிலை குழைய வாங்கி வடிக்கணை கோடி யேவிப்
புரிசமர் மயிட னூகம் போழ்தலுங் கதையா லன்னான்
பரிபல நடத்தும் பண்பார் மாதலி பசும்பொற் றிண்டேர்
தெரிகணை தொடுக்கும் போர்வில் சிதைந்திடப் புடைத்தா னன்றே. (௭௪)

இந்திரன் பரிகங் கைவே லெழுமழுப் பிண்டி பாலங்
குந்தம்வை வேன்மு சுண்டி கொலைபுரி யுருமு தோட்டி
மந்திரப் படைக ளெல்லாம் வரன்முறை மயிடன் மீது
தந்திரத் தன்மை மிக்குத் தாக்கொடுஞ் செலுத்தி னானல். (௭௫)

கொம்பினிற் பட்டுத் தூளா யினசில கொடியோன் மேனி
வெம்பிடப் பட்டு மீண்ட சிலசில மெய்யி னாழ்ந்த
செம்புன லருவி பாய்தல் சிந்தையுட் சிறிது மெண்ணா
தும்பர்கோன் றன்னைக் கையா லுரத்துற வறைந்திட் டானால். (௭௬)

அடியொடு மயங்கா நின்ற வமரர்கோன் றன்னைப் போற்றிக்
கொடிபுனை சேமத் தேர்மேன் மாதலி கொண்டு சென்றான்
படிசெவி டுறநீள் வெற்பிற் பணைத்ததோள் கொட்டி யார்த்திட்
டிடியெனக் கால நேமி யிமையவர் குழுவிற் புக்கான். (௭௭)

வேறு.

புகுகால நேமி யெதிராயு டற்று பொருபோது வாயு வருணன்
பகுவாய மூற்க ணிடிபோன்மு ழக்கு பகடேறு காலன் வடபான்
மிகுபால னஞ்செ யளகேசன் வென்றி விடையேறியோ டறுவரும்
தருபாக வன்கொல் கொலைசேர ரக்க னரவாக னத்து நிருதி. (௭௮)

முதலான தேவ ரெதிராக வந்து முறையாக நின்று கறைவாள்
ததைவேன்மு சுண்டி கணைபாச மாதி படைவீசுகாலை யசுரன்
சிதையாத வில்லி னொருகோடிவாளி சினமோடுமேவ விமையோர்
பதையாதெறிந்த படையாவுமுண்டு பகைமீதுசென்ற தவனே. (௭௯)

மகவானையன்றி வருதேவர்மார்பில் வளர்தோளில் வாளின்விசையாற்
புகவாரிபோல வழிசோரிமாரி பொழியாதுடற்ற லொடுமா
குகவேளிடத்தி லடைவாமெனக்கை குவியாநடந்து செலமால்
ககராசன் மீதி லிவரா நிறைந்த கடலான சேனை யுடனே. (௮௦)

வருபோது மாய னெடுகால நேமி மறவோ னெதிர்ந்து மொழிவான்
பொருபோரி லன்றெ னடியானு ருண்டு புவிமேல் விழுந்த தறிவாய்
பெருவாரி திக்கு ளொருநாக ணைக்கண் வளர்வாய் பெருத்த கதைவில்
லொருநேமி சங்க மொடுவாளொ டைந்து புடையே பிடிக்கு முரவோய். (௮௧)

எனலோடு மாய னவன்வாண்மு கத்தை யெதிராக நோக்கி நகையா
வுனதாவி யின்று முடியாமல் விட்டு விடுவேனுன் வீர முறுபோர்
தனிநேர்செ லுத்த வருவாய்கொ லென்று தனுநாணெ றிந்து விரைவாய்
முனைவாளி நூறு கொடியோ னுரத்தின் மொழியாமுன் வீழ விடலும் (௮௨)

அங்கம்பி ளந்து மலைமேலோ ழுக்கு மருவிப்பெ ருக்க மெனவே
யெங்கும்ப ரந்து புவிமேலி ரத்த மெழுகின்ற போது மினையான்
சிங்கஞ்சி னந்த தெனவாய்தி றந்து திகழ்கின்ற நேமி யொடுவெண்
சங்கஞ்சு மந்த மழைவண்ணன் மீது தடிகொண் டடித்தும் விரைவாய். (௮௩)

வாள்கொண்டு வில்லின் வரிநாண றுத்து மறவோனு டற்ற நெடியோன்
கோள்கொண்ட தண்ட முனைவாண் முரிந்து சதகோடி கோடி துகளின்
றாள்கொண் டொதுங்கி விடலுங் கனன்று துடியா தயர்ந்து விழவென்
றுள்கொண்டு தைந்து னுயிர்கொண்டு போதி தறுகண்ண வென்ன வவனும். (௮௪)

வேறு.

வரிசிலை யொன்று வாங்கி வளைத்துநாண் கொளுவி வாளி
தெரிவுறத் தொடுத்துத் திண்டோள் செவியுறச் சினத்தின் வாங்கிக்
கரியமான் மார்பின் மீது கணைகள்மேற் கணைக ளாகச்
சொரிதலுங் கரிய மேனி சோரியாற் சிவந்த தன்றே. (௮௫)

செம்முகில் போல நின்ற திருமறு மார்பன் சீறி
வெம்முனை யாழி தொட்டு விடுதலுங் கால நேமி
யம்முனை யாழி வேகத் தயர்ந்துமூர்ச் சித்து வீழ்ந்தே
பொம்மென விரியல் போகிப் போந்துதா ரகனைச் சார்ந்தான். (௮௬)

ஓடிய கால நேமி யுடன்வரு சேனையெல்லா
நீடிய திசைக டோறு நின்றிடா தோட வெற்றிக்
கோடொரு கரத்தி லேந்துங் குளிர்மணி வண்ண னாழி
தேடியே பட்ட காட்டிற் றீயென வெரித்த தன்றே. (௮௭)

தூசுறு படைகளோடத் துணைப்படைத் தலைவர் மாளத்
தேசுறு மமர ரெல்லாஞ் சிங்கநா தங்கள் செய்யு
மோசையெண் டிசையு முட்ட வுலப்பிலாச் சேனை சூழப்
பூசல்கொண் டுடற்றும் வெற்றிப் பொருவிரு ரகன்றான் சீறி. (௮௮)

கடுஞ்சின மயிட னோடுங் காலநே மியைய ழைத்தே
யடுந்திறற் சேனை வெள்ள மனைத்தையும் யூக பேதம்
படுந்தகை யுறகி றுத்திப் பண்ணவர் தம்மேற் செய்ய
கொடுந்தழ லென்னச் சீற விடுமெனக் கூறி னானால். (௮௯)

தெறுசினத் தார கன்ற னேவலின் வழியே சீற்ற
முறுபடை யெல்லாம் யூக மொல்லையில் வகுத்து விட்டா
ரிறுதியிற் கடலி னோடு கடலெதிர்ந் திட்டா லென்ன
வறுதியி லமர ரோடு மடுஞ்சினத் தசுர ரேற்றே. (௯௰)

எதிர்ந்துபோர் புரித லோடு மிருவகைச் சேனை யண்ட
மதிர்ந்திடப் படைகள் வீசி யறுத்தனர் கைகா லாகம்
பிதிர்ந்தன வங்கு மிங்கும் பெருகின குருதி நீத்த
முதிர்ந்தன பற்க ளச்சோ டொடிந்தன தேர்க ளெல்லாம். (௯௧)

வேறு.

ஆனை பட்டன பட்டன வணிநெடும் புரவி
சேனை பட்டன பட்டன திறனெடும் பூதம்
வான மட்டுறு மலையெனக் குவிந்தன பிணங்க
ளூனி லுற்றசெங் குருதியா றுததியொ டெதிர்த்த. (௯௨)

அசுரர் விட்டவெவ் வாளிக ளமரரை யறுத்து
நசையு றுத்தின குருதியாற் கழுகுசெந் நாய்க்கு
வசையில் வானவர் விடுத்திட வசுரரை மாய்த்து
விசிக மூட்டின கூளிவே தாளங்கள் விழைய. (௯௩)

தான வேசர்தம் படைகளாற் றலைதுணி படவே
வான நாட்டவர் மடிந்தனவர் வானவர் படையா
லேனை யோர்தலை யிற்றிடு மூளையை யருந்திக்
கூனல் வெண்பிறை யெயிற்றுமா காளிகூத் தாடும். (௯௪)

தார கன்படைத் தலைவரா மயிடனே முதலோர்
சோர வெங்கணை தொடுத்திடக் குழுமிய தேவ
ரூரும் வாசிக டேர்பரி யூறுபட் டொழிய
நேர்மி லாதிரிந் தோடலு நிறுவினன் மகவான். (௯௫)

நிறுவி யெண்டிசை காப்பவ ரோடுநே ருருத்துச்
சறுவி யேமயி டாசுரன் கலங்கிடப் பொரலு
மறுகி யன்னவ ளோடிட வயவலிப் பூதர்
குறுகி மாய்த்தலுங் குலைந்தன வசுரர்தங் கூட்டம். (௯௬)

குலைந்து தானவர் குழுவெலாங் கூறிய திசையி
லலைந்து போதலுந் தாரக னழலெனச் சீறி
யுலைந்த வுள்ளத்த னாகியே யும்பர்சே னையினை
மலைந்து வீப்பனிக் கணமென வரிசிலை வாங்கி. (௯௭)

தேவர் சேனைமேற் செந்தழற் கணைபல தெரிந்தே
யேவ வீரரில் வீரனு மெழில்கொள்பிங் கிருடி
யோவில் வில்வளைத் தொருபதி னாயிரங் கணையாற்
பாவ மேனிய னுடல்பிளந் திட்டனன் பதைப்ப. (௯௮)

அன்ன காலையிற் கணங்களுக் கதிபரேற் றடர்த்துத்
துன்னு கார்மழை யெனக்கணை சொரிதலுஞ் சோரி
மன்னு கார்மலை யருவிபோல் வீழ்தலு மனத்தி
னின்ன தாரகன் சயித்திர மெனுஞ்சிலை யேந்தி. (௯௯)

கோடி கோடியாய்ப் பெருகுறு கூர்ங்கணை தொடுத்துக்
கேடில் வானவர் விடுத்திடு படையெலாங் கெடுத்து
நாடி யன்னவர் கால்கர நாசிநாக் கண்டங்
தேடி வேறுகூ றாகவே சிதைத்தனன் கணத்தில். (௧௦௦)

வேறு.

தாரக னென்னும் வீரன் விளக்குந் தனுநோன்மைப்
போர்வலி கண்டே பூதர்கள் வானோர் கணநாதர்
நேர்திசை காவற் பாலகர் நேமிப் படையாளன்
சேரநெ ருங்கித் திண்படை சிந்திச் செறிவுற்றார். (௧௦௧)

திண்படை சிந்திச் செருவெதிர் தேவர்கள் குழுவெல்லாங்
கண்படை நோக்கித் தாரகன் றன்கைக் கணையேவி
நுண்பொடி யாகக் கூறுப டுத்தி நொடிப்போதிற்
புண்பட வன்னோர் மார்பக மெல்லாம் புழைசெய்தான். (௧௦௨)

மாயன முன்றெதி ராழி செலுத்தினன் மறவோன்றன்
காயம்வ ருந்தக் காயமு ருதுக ருங்கல்லி
னேயவெ றிந்திடு கந்துக மெனவே யெதிர்மீண்டத்
தூயவ னங்கை துன்னின துள்ளந் துயரெய்த. (௧௦௩)

இந்திரன் முதலோ ரேவிய தெய்வப் படையெல்லாஞ்
சிந்தின துகளாய்த் தாரக னங்கஞ் சிதையாம
னந்தலி லாதபெ ருங்கண நாதர்க ணற்பூதர்
வந்தெதிர் பாணஞ் சிந்தியெ திர்ந்தே மலைவுற்றார். (௧௦௪)

மலைதரு பூதர் கைகள்ச லித்தவ் வலியோன்மெ
யுலைவில தின்னான் றன்வலி யாவு முகமாறாய்
நிலைபெறு செவ்வேள் விடுமயி லானே நிணமுண்டு
கொலைசெயு மென்றே போயினர் தத்தங் குழுவோடே. (௧௦௫)

தானவர் கோமான் றாரக னென்னுந் தறுகண்ணா
னூனவிர் குந்த நீடுறை தண்ட முறைவாள்வேல்
சேனைநெ டுங்குஞ் சூலமு சுண்டித் திரளாதி
யேனைய தன்கைக் குறுபடை யாவு மெறிந்தானால். (௧௦௬)

வேறு.

எறிந்திடு படைக ளாலு மிலக்குறு சயித்தி ரப்போர்
செறிந்தவிற் கணைக ளாலுந் தேவர்கந் திருவர் சேனை
முறிந்தன விரத்த வாரி மூழ்கினர் மூர்ச்சை தீர்ந்தா
ரறிந்தனர் புகலொன் றின்றி யடைந்தனர் முருக வேள்பால். (௧௦௭)

வேறு.

அய்ய நின்பத மல்லது புகலிட மில்லை
வெய்ய வெஞ்சினத் தாரகன் படையினான் மெலிந்தேஞ்
செய்ய தாமரைத் திருநய னத்திரு வருளா
லுய்யு மாறெமக் கருளுதி யென்னலு முரவோன். (௧௦௮)

அஞ்ச லஞ்சலவ் வசுரனை யறுத்துமை துள்ளத்
தெஞ்சு நோய்தவிர்த் துமதரா சிருப்பிட மீந்து
வஞ்ச ராலுறு மூறெலா மாய்ப்பலென் றருளி
விஞ்சை மாமயி னடத்தினன் விமலனார் குமரன். (௧௦௬)

குமர வேண்மயில் வாகனம் பொடிபடக் குமுறித்
தமர வெண்டிரைக் கடல்புவி சராசரந் தயங்க
நமர னுள்ளமும் வியப்புற நாடொறு நலியா
வமரர் காதகன் முன்புபாய்ந் தார்த்ததம் மயூரம். (௧௧௦)

முருக வேளிரு சரணமு மூவிரு முகமுங்
கருணை யங்கடல் பொழியுமீ ராறுகட் கடையும்
பெருகு பன்னிரு புயங்களும் பிறங்கிய வேலும்
பொருவின் மஞ்ஞைமேல் வருதலும் பொற்புறக் கண்டான். (௧௧௧)

தெளிந்து வானவ ரிந்திர னுபேந்திரன் சிறுவன்
வளர்ந்த மாமயின் மீதுற முன்னணி வரவே
யுளந்த ளர்ந்திடா தெம்முன முற்றன ரிவரைப்
பிளந்து டற்றுவே னென்றனன் கொடுமையிற் பெரியோன். (௧௧௨)

வேறு.

கோப மீக்கொள விருகணுஞ் சிவந்திடக் கொலைபுரி கொடுங்கோரப்
பாப மோருரு வெடுத்திரு பதத்தொடு பருப்பதம் வரல்போலுந்
தீபமேயதி யாவிருட் பிழம்பெனுந் சிந்தைவெந் தறுகண்ணன்
சாப மாகிய சயித்திரக் கொடும்படை தடக்கையிற் பிடித்தேந்தி. (௧௧௩)

வளைத்து நாணினை யேற்றிவெங் கூற்றனும் வாய்புதைத் திடவானோ
ரிளைத்தெ திர்ந்திட லரிதெனப் பெரிதெனு மெண்டிசைப் புறத்தோட
விளைத்த காட்கடை யுகத்திடி யிடித்தென நாணொலி மிகக்காட்டிக்
கிளைத்த வண்டமு மகண்டமும் விண்டிடக் கொர்ச்சிதத் தொடுமார்த்தே. ()

வில்லி ருந்தலை பொருதலை கூட்டிட விழிக்கடை யுறுகாதில்
வல்வி ரற்கரஞ் சேர்ந்திட வாங்கியே வகைவகை சரங்கோடி
யொல்லை யெய்தலு முமைமக னுழையரி மகபதி கணநாத
ரல்ல லுற்றல மலந்தன ரறுமுகக் கடவுளு மதுகாணா. (௧௧௫)

ஆறி ரண்டுகைப் படைகளி லொருகரத் தமர்ந்திடுஞ் சிலைநாணில்
வீறு கொண்டுறு சிறுவிர றைவர மிக்கபே ரொலிகேளா
மாறி ரண்டெழு வான்முக டிடிபட வந்ததா னவர்சேனைக்
கீறு மின்றெனச் செய்வது மின்றென விரிந்தன ரசுரேசர். (௧௧௬)

ஆய வேலையி லவுணனுஞ் சரஞ்சொரிந் தார்த்திடப் பசுந்தோகை
மேய பாலனுங் கணைதொடுத் தவையெலாம் வேறுகூ றிடச்சீறி
மாய வாரண மன்னவன் சரமத மழையெனக் கடிதேவச்
சேய மன்னவேள் செந்தழற் கணைகளாற் சிதறின னவையெல்லாம். (௧௧௭)

வேறு.

விழியிற்புகை தழல்கன்றிட வெயர்வுற்றெதி ரசுரன்
பழிமொய்த்திடு கணைபற்பல பசுமைப்பொரு மயின்மேற்
பொழிபச்சிறை யடிபட்டவை பொடிபட்டிட மீழலை
மொழியற்புத முருகக்கட வுளுமுய்த்தனர் கணைகள் (௧௧௮)

நெடுவெற்பென நிமிர்தோளினு நிறமீதினும் பட்டே
யுடலைப்பல தொளையிட்டுவென் னுருவிப்பரி தேராள்
கடமிக்கெழு கரடக்கரி களைமுற்கொலை புரியப்
புடவிப்பெரு நதியிற்செறி கடலிற்கரை புகுமால். (௧௧௯)

தொளைபட்டுடல் குருதிப்புனல் சொரியத்துய ரிலனுய்த்
தளர்வற்றுறு மசுரர்க்கிறை தழைதாரகப் பெயரோ
னுளமுற்றிடு திடமுஞ்செயு முரமுங்குக னுணரா
வெளிதிற்பல வடிவாளிக ளெய்தானடல் செய்தான். (௧௨௦)

ஏவுங்கணை யெதிர்தானவ னிவர்தேரொடும் வாளி
தூவுஞ்சிலை விடுநாணொடு தூணிப்படை யாவும்
பூவின்புடை களிலேவிழு பொடியாவறுத் தனவான்
மேவும்பொழு தசுரேசனும் வேறோர்ரத மேறி. (௧௨௧)

அல்லிற்செறி கண்டன்றரு மறுமாமுக னிவனை
வில்லிற்பொர லரிதென்றுகை வேல்குந்தமுத் தலைவே
லெல்லிற்றிகழ் பரிகம்முதல் யாவுமெறிந் தெதிரே
சொல்லிப்பொர வேள்பார்வையிற் றூளாயின வாளா. (௧௨௨)

வரமன்பொடு செய்தேபெறு மதியின்படை முதலாய்
பிரமன்படை மாயன்படை பெடைமாமயில் புடைவாழ்
பரமன்படை முதல்யாவையு மெறியப்பனி ரண்டு
கரமன்பொடி படவேயுங்கா ரத்தேயொழித் தனனால். (௧௨௩)

இவையாவையு மெதிர்கண்டுளத் திடையச்சமுற் றசுர
னவைதீரதி சயமுற்றுமெய் நடுங்காநி லைபிரிந்தே
சிவையீன்றருண் மைந்தன்செய றேராதிவ னோர்ந்தா
மவையெண்ணியென் னிவனுற்படி வடைவாமிவன் பதமே. (௧௨௪)

எனத்தேர்ந்துளத் தெண்ணித்தனக் கியலும்படை யாவு
மனத்தேயுறு மனுவின்படி விடலும்மவை யனைத்துஞ்
சினத்தோடொரு கணையாற்பொடி படுத்தச்சிரத் தழுந்தக்
கனத்தேழ்கணை விடத்தாரகன் கலங்கித்தளர்ந் தனனால். (௧௨௫)

குகவேள்கணை படுதானவ ருடல்கூர்கறை யானுய்
மிகுவாரியி னுறவேயுண்டு விளையாடின பன்மீ
னிகவாதுறு பேயுந்தசை யேயும்பல நாயு
மகளாசையிற் றெவிட்டாவகை யார்ந்தேகளித் தனவால். (௧௨௬)

சண்முகக் கடவுள் பாணந் தானவர் கைகா லாகம்
வண்முகக் கண்மூக் கோடு செவிவகை வகைவே றுக்கி
விண்முகத் தெறிந்து திக்கு விதிக்கெலா நிரப்பிற் றென்றுற்
றிண்முகக் கமலக் கையின் வண்மையார் தெரிக்கற் பாலார். (௧௨௭)

தாரக னென்னும் வெங்கட் டறுகணன் மூர்ச்சை நீங்கிப்
பாரகந் திசைபா தாளம் வான்முகப் பரப்பி யாவும்
பேரக மிலாமன் மாயைப் புணர்ப்பினாற் பிறங்கா வண்ணங்
காரகத் திருளுண் டாக்கி யதனிடைக் கரந்தான் மன்னோ. (௧௨௮)

கரந்தவன் மாயை நோக்கிச் சண்முகக் கடவு டானும்
புரந்தரன் முதலோர்ப் பார்த்து மாயையின் புணர்ப்பு வல்லோன்
வரம்பெறு செயல்கள் யாவு மாற்றுவ லின்னே யென்று
துரந்திட ஞான பாணந் தொடுத்தற நீக்கி னானால். (௧௨௯)

நீக்கலு மசுரர் வேந்த னிறைந்தமா யிருஞா லத்தோ
ராக்கமா டெதிராய் நின்று நாணழந் தழியா வில்லை
யூக்கமொ டொருநா ணேற்றி யுலப்பிலா வசுரர் சூழத்
தீக்கணை யனந்த கோடி தெறித்தன னிலக்கு நாடி. (௧௩௦)

வேறு.

சயித்தி ரப்பெருஞ் சிலைவளைத் தசுரர்கோன் சமரக்
கையித்தி ரப்படையறுக்க வென் றிறைக்கவான் கடவுள்
வயித்திரக் குகவேள் வடிவேலினை வாங்கிச்
செயித்தி ரங்கிடாத் தாரகற் கொல்லெனச் செலுத்த. (௧௩௧)

சூலங் கோடிவெஞ் சுடரயில் கோடி வெம்பிண்டி
பாலங் கோடி பல்படைக் கலங் கோடி சீறுல
காலங் கோடி யாயுருக் கொடு வந்தென வசுரர்
மேலங் கோடியே தனித்தனி யறுத்துடன் விரைவில். (௧௩௨)

அண்டர் வான்முக டதிர்படத் திசைக்களி றார்ப்பக்
கொண்டல் வாயிடி யேறுக ளுதிர்ந்திடக் குமிறிச்
சண்ட மாருத மெனவரு படையெலாந் தழலா
மிண்டு தாரகன் மார்பிடைப் புகுந்ததவ் வியன்வேல். (௧௩௩)

புகுந்து போர்வலித் தாரகன் மார்பகம் போழ்ந்து
மிகுந்த வெந்திற லவனுயி ருண்டுவிண் மேவித்
தகுந்தி றற்கிர வுஞ்சவெற் பூடறத் தடிந்து
பகுந்த ருந்தல மேழையு முருவிமேற் படர்ந்த. (௧௩௪)

பச்சை மால்வரை புரைமயின் மீதினிற் பவள
விச்சை மால்வரை யெனப்பொலிந் திலங்கிய மேனிச்
செச்சை மாலிகைத் திண்புயக் கடவுள்செங் கரத்தி
னிச்சை கூரவந் திருந்ததவ் வேற்படை யிமைப்பில். (௧௩௫)

நின்ற தானவர் சேனையி னிகழ்த்திய மயிடன்
வன்றி றற்பெருங் காலனே மிப்பெயர் வலியோ
னென்று ரைத்திடு மிருவரு மோடியாங் குய்ந்தா
ரன்றி மற்றவ ரயிற்படை செகுத்திட வழிந்தார். (கருசு)

வெய்ய தாரக னுயிரிறந் தொழிதலும் விண்ணோர்
செய்ய தாமரைக் கரங்குவித் தஞ்சலி செய்து
துய்ய மாமலர் மழைபொழிந் தனர்களத் தூயோ
ரய்ய வாழியென் றுசிகள் வழங்கின ரார்த்தார். (கருஎ)

கதிர்வி ளங்கின தாரகை விளங்கின கனல்வான்
மதிவி ளங்கின திசையெலாம் விளங்கின மகவான்
பதிவி ளங்கின பாரகம் விளங்கின பல்லோர்
துதிவி ளங்கின விளங்கின மனுநெறிச் சுருதி. (கருஅ)

ஆய காலை யிலடல்புரி மயிலிழிந் தயில்சேர்
சேய வேளுயர் மால்விடை மேல்வரு சிவனைத்
தாயை யுன்பொடும் பணிதலு மதலையைத் தழுவி
நேய மோடெடுத் துச்சிமோந் தாரரு ணிறைத்தார். (கருகூ)

நிறைத்த காலையி லுமைமுக நோக்கியே நிமல
னறைத்த நீலமா நயனமென் கொம்பர் கேணயந்து
பொறைத்த ராதல முதலபே ருலகெலாம் பொன்ற
மறைத்த தாரகற் செகுத்தநங் குமரனே வலியோன் (கச0)

என்று கூறியே பற்பல வாசக ளியம்பி
வென்றி வேலுடைக் கடவுளை வியந்துவீற் றிருந்தார்
நின்ற தேவரு முனிவரு முள்ளநெக் குருகித்
துன்றி யாடினர் பாடினர் நாடினர் துதித்தே. (கசக)

வேறு.

துதித்தலுங் கருணை வள்ள றுழாயணி முகுந்தன் வேதன்
சதக்கிரு தட்ட திக்குப் பாலரைத் தயாவி னோக்கி
மதித்தயிற் குமர னின்னோன் வாழ்த்திடுந் தேவர் சேனா
பதிப்பெருந் தலைவ னென்றும் பயமிலா தளிப்ப னும்மை. (கசஉ)

ஆதலா னீவி ரெல்லா மமைத்தநும் பதியி னண்ணித்
தீதற முறைக ளாற்றித் திரமுற வாழ்தி ரென்னப்
போதன்மான் மகவா னின்னோர் போற்றிப்பூ சனைக ளாற்றிக்
காதல்கூர் குமரற் போற்றிக் கயிலையிற் கூடச் சென்றார். (கசங)

சென்றபின் சினக ரத்துத் தேவியுஞ் சிவனும் வாகை
வென்றிவேற் குமர வேளும் வீற்றினி திருந்தா ரேனோ
ரன்றுநல் விடைகொண் டேகி யவ்வரவர் பதங்கட் கெய்தித்
துன்றிய வுவகை கூர்ந்து தொன்மைபோ லிருந்தா ரன்றே. (கசச)

வேறு.

சத்தி வேலினாற் றாரகற் றடிந்தவன் சரிதை
பத்தி பத்தியாய்ப் படிப்பவர் கேட்பவர் பகர்வோர்
பொத்த கத்தினி லெழுதுவோர் பூசனை புரிவோர்
வித்த கத்தறு முகத்துவேள் பதத்துவீற் றிருப்பார். (கசரு)

வேறு.

உலைவறு தவத்தின் வகையறிந் துளற்றி யுயர்கதிப் பெருமையை நாடு
மலைவறு முனிவர் மதிமுக நோக்கி வயவலித் தாரகன் வதத்தை
யலையெறி கடலின் மச்சமால் வைவச் சுதமனு வன்புடன் கேட்ப
நிலைபெற வுரைத்த திதுவென நிகழ்த்தி நிகழ்த்துவான் சூதமா முனிவன். (கசசு)

விரித்துரைத் திடுமிவ் வுத்தர காண்ட மேதினி மீதினில் விளங்க
வருத்தியி னதனிற் றுதித்திடுங் கதைக ளனைத்தையு மனத்தயா வுடனே
தெரித்துரைத் தனமான் முறைபிற மூமற் றிரட்டிவெண் பணிலமுத் தெறிந்து
முரித்தலை சுருட்டி மூழ்கியே சேடன் முடியள வாழ்ந்திடு முந்நீர். (கசஎ)

நடுவி லோரிரண் டிலக்கம்யோ சனைத்தாய் நலம்பெறு பேருடல் பதைத்து
வடுவிலா துயர்ந்த மச்சமா யுதித்த மணிப்புயல் வண்ணனு முகுந்தன்
விடுகதிர்ச் சுடரால் வையகம் விளக்கும் வெய்யவ னளித்திடு மைந்தன்
தொடுசிலை வைவச் சுதமனுக் கேட்பத் தொடங்கிட வுரைத்தன னிதனை. (கசஅ)

வேதநான் கோடு புராணமூ வாறும் விளங்கவே மேதினி விளக்கும்
வாதரா யணப்பேர் வியாதமா முனிவன் வகுத்தெனக் குரைத்தவா யானு
மேதமொன் றின்றி நீதியர வுரைத்தே னென்றுமா தவத்தினை யுளற்று
மூதறிவுடைய முனிவரர்க் கன்பாய் மொழிந்தனன் சூதமா முனிவன். (கசகூ)

நானிலம் பரவும் புராணமேன் மையினை நலம்பெறச் சூதமா முனிவன்
றூனிலை பெறுமன் புடனுரைத் திடலுந் தனித்தனி யுடல்புள கிதமா
யூனிலம் புலனு மொருவழிப் படுத்தி யொண்செவிக் கமுதமா யுருந்தி
வானில மளவு நைமிசா ரணிய மாதவர் மகிழ்ந்துவீற் றிருந்தார். (கரு0)

இதத்தினி லெவர்க்கும் போகபோக் கியங்க ளெளிதினி னளித்துமே பரத்து
மகத்துவங் கொடுக்குங் கயிலைமால் வரையில் வைத்திடு முத்தர காண்டத்
தகத்துறு மத்தி யாயத்தின் றொகைக ளைம்பதி னேடெட்டா மவற்றுட்
டொகுத்திடும் விருத்தத் தொகைகளா யிரத்துத் தொளாயிரத் தெண்பத்தி னறே

நுவலருங் காண்ட மிரண்டினத் தியாய நூற்றெழு பத்திரண் டாகும்
பவவினை யறுக்குங் கடவுளர்ப் பராவும் பாயிரப் பனுவலி னோடுங்
கவர்பொரு ளுடைய பாவிகற் பத்திற் கனிதரு விருத்தத்தின் றொகைக
ளுவமையி லையா யிரத்தினி லுனாத்தா முறுபொரு டோர்ந்திவை கேட்போர். ()

எட்டினிற் றீட்டிப் பூசனை புரிவோ ரிசைபெற நசையுறப் படிப்போர்
பாட்டியல் பறிந்து செறிந்திடும் பொருளை விரிப்பவர் தரிப்பவர் பாரிற்
கூட்டுறு நிதியம் யாவையும் பெருக்கிக் குவலயக் கிழமையும் பூண்டு
நாட்டிய புகழ்வா னட்டினுந் தீட்டி நலம்பெறு காமியம் புசித்தே. (கருரு)

புவியினின் மீண்டும் பூசுரர் குலத்திற் பொருந்துமுற் சனனத்தி னறிவோ
டுவமையி லழகி னுற்பவித் தரனுக் குவப்புறு பணிவிடை யாற்றி
யவிசுரர்க் கருத்தி யருத்தியாற் சிவனை யருச்சனை புரிந்துபின் யோகந்
தவமிகு ஞான முறைபிற ழாமற் றனித்தனி யுஞற்றியே முடிப்பார். (கருச)

முடித்துளோர் கயிலைப் பருப்பதத் தடைந்து முக்கணன் சந்நிதி யணுகித்
துடிக்கரத் தமலன் வடிவமே போலத் தோளொரு நான்குமான் மழுவும்
பிடித்திடு முருவ மாகியே யிருந்து பின்னருட் சோதியா னந்த
நடத்திருப் பாத மானசா யுச்சிய நற்பதப் பேறுபெற் றிடுவார். (கருரு)

பன்னிய மறையோர் பசுபசு பதிதன் பான்மையை யுணர்ந்துளோர் வேத
நன்னெறி வடநூல் தென்மொழி யுணர்ந்த நாவல ராகமம் வானந்
தன்னுயிர் போல மன்னுயிர்க் கிரங்கித் தாரணி தனித்தனி புரக்கு
மன்னவர் செங்கோன் மனுநெறி மச்ச புராணமும் வாழிவா ழியவே. (கருசு)

மைப்புயல் வண்ணன் மச்சமா யுரைத்த மச்சமாம் புராணத்தைத் தமிழா
லிப்புவிக் கெண்ணூற் றெண்பத்தி ரண்டாண் டிசைந்திடு மவ்விய வருடத்
தைப்பசி மதியி லொப்பிலாத் தினத்தி லமுதெனக் கனியென வார்க்குஞ்
செப்பிய விரசை வடமலை மகிபன் செல்வமோ டினிதுவா ழியவே. (கருஎ)

ஐம்பத்தெட்டாவது

தாரகாசுரவதவத்தியாயம் முற்றிற்று.

ஆக உத்தரகாண்டம். ககூஅசு.

ஆக காண்டம். ருOOகூ

மச்சபுராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

மச்சபுராணம்.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	அநுக்கிரமணி	... 11
2.	நைமிசாரணியச்சிறப்பு	... 5
3.	பாயிரம்	... 1
	பூருவகாண்டம்.	
4.	அக்கினிமான் சிராத்த வத்தியாயம்	... 66
5.	அக்கினிவமிச வகுப்பத்தியாயம்	... 184
6.	அகத்தியர் பூசை யத்தியாயம்	... 217
7.	அங்காரகவிரத வத்தியாயம்	... 251
8.	அசுரசாப கலியுக தன்மமுரைத்த அத்தியாயம்	... 164
9.	அசூனிய சயனவிரத வத்தியாயம்	... 249
10.	அத்திரியாச்சிரம வருணனை யத்தியாயம்	... 341
11.	அனங்கதான விரத வத்தியாயம்	... 244
12.	அனந்த திரிதிகைவிரத வத்தியாயம்	... 222
13.	ஆச்சிரமதன்ம வத்தியாயம்	... 131
14.	ஆதிசிருட்டி யத்தியாயம்	... 26
15.	ஆதித்தசயன விரத வத்தியாயம்	... 200
16.	ஆதித்தபூசை யத்தியாயம்	... 292
17.	ஆர்த்திரானந்தகரி திரிதிகைவிரத வத்தியாயம்	... 229
18.	இமயகிரி வருணனையத்தியாயம்	... 340
19.	இரம்மியக வருடாதி வருணனை யத்தியாயம்	... 331
20.	இராவதி நதி வரலாறத்தியாயம்	... 338
21.	இளாசங்கம வத்தியாயம்	... 48
22.	உரோகணி சந்திரசயனவிரத வத்தியாயம்	... 205
23.	கசன்வித்யாப்பியாச அத்தியாயம்	... 97
24.	கமல சத்தமிவிரத வத்தியாயம்	... 262
25.	கர்ப்பசொரூப விசார வத்தியாயம்	... 128
26.	கருமயோக அத்தியாயம்	... 189
27.	கல்யாண சத்தமிவிரத வத்தியாயம்	... 255
28.	கவுரிநாம அட்டோத்தரசதக வத்தியாயம்	... 55
29.	காசிபர் மரபுரைத்த வத்தியாயம்	... 33
30.	கார்த்தவீரியன் மகிமை யத்தியாயம்	... 139
31.	கிரகசொரூபானு கீர்த்தன வத்தியாயம்	... 285
32.	கிருட்டிணாட்டமி விரதவத்தியாயம்	... 204
33.	குருசுக்கிர பூசைவிரத வத்தியாயம்	... 254

77½

பக்கம்.

34. கோதானபல வத்தியாயம் ... 314
35. சங்கிராந்திவிரத வத்தியாயம் ... 294
36. சத்தமிசாந்திவிதி யத்தியாயம் ... 236
37. சத்தியவதி சொரூபகதன வத்தியாயம் ... 61
38. சந்திரசூரிய கிரகணதானவிதி யத்தியாயம் ... 234
39. சந்திரோற்பத்தி அத்தியாயம் ... 90
40. சபிண்டீகரண சூதகாசூச அத்தியாயம் ... 73
41. சம்புத்தீவு வர்ணனை யத்தியாயம் ... 349
42. சர்வாதிக்க பட்டாபிஷேக வத்தியாயம் ... 40
43. சரசுவதிவிரத வத்தியாயம் ... 232
44. சருவபவத்தியாக வத்தியாயம் ... 290
45. சவுபாக்கிய சயனவிரத வத்தியாயம் ... 215
46. சற்காரசத்தமி விரத வத்தியாயம் ... 260
47. சஷ்டிவிரத வத்தியாயம் ... 300
48. சாகத்தீவாதி ஆறுதீவுரைத்த வத்தியாயம் ... 353
49. சாந்திகிரக யஞ்ஞவிதி யத்தியாயம் ... 277
50. சிராத்தானுகமன அத்தியாயம் ... 79
51. சிவசதுர்த்தசி விரத வத்தியாயம் ... 287
52. சுக்கிரன் வரமடைந்த வத்தியாயம் ... 156
53. சுபசத்தமிவிரத வத்தியாயம் ... 264
54. சூரிய சந்திரகதி யத்தியாயம் ... 357
55. சூரியரத வர்ணனை யத்தியாயம் ... 362
56. சூரியன் மரபுரைத்த வத்தியாயம் ... 51
57. சோமவமிசோற்பத்தி அத்தியாயம் ... 94
58. தடாகவிதி யத்தியாயம் ... 210
59. தருமபுத்திரன் பட்டாபிஷேக வத்தியாயம் ... 324
60. தான்ய பருவதாதி தசபருவத தானமான்மிய வத்தியாயம் ... 269
61. திதிமான்மியத்தி லெறும்புச்செய்கை அத்தியாயம் ... 81
62. தீர்க்கதமசுக்குக் குருசாபவிமோசன வத்தியாயம் ... 168
63. தீர்த்த சிராத்தவிதி அத்தியாயம் ... 86
64. தீர்த்தயாத்திராவிதி யத்தியாயம் ... 316
65. துருவப் பிரசங்கிதை யத்தியாயம் ... 365
66. தெய்வயானி ஆட்சேப அத்தியாயம் ... 103
67. தெய்வயானி கல்யாண வத்தியாயம் ... 106
68. தெய்வயானிகோப அத்தியாயம் ... 101
69. தெய்வயானி சந்தோட வத்தியாயம் ... 104
70. தெய்வயானிசாப அத்தியாயம் ... 100
71. நட்சத்திர புருடவிரததான அத்தியாயம், ... 197
72. பலசத்தமி விரத வத்தியாயம் ... 259
73. பவுரவ வமிசத்தில் அருச்சுனன்வமிச வத்தியாயம் ... 179

		பக்கம்.
74.	பவுரவ வமிச வத்தியாயம்	... 172
75.	பாரதவருட வத்தியாயம்	... 332
76.	பிதிர்மகிமை யத்தியாயம்	... 83
77.	பிதிர்வமிசானுவர்ணனை அத்தியாயம்	... 63
78.	பிரமமுகவுற்பத்தி யத்தியாயம்	... 23
79.	பிரமாண்டபேத வத்தியாயம்	... 20
80.	பிரயாகா கமனபல வத்தியாயம்	... 313
81.	பிரயாகையில் தேகபரித்தியாக வத்தியாயம்	... 319
82.	பிரயாகையில் பவ சொரூபகதன வத்தியாயம்	... 322
83.	பிருகுவிட்டுணுவைச் சபித்த வத்தியாயம்	... 149
84.	புராணவனுக்கிரமணி யத்தியாயம்	... 192
85.	புரூரவ சரித்திர வத்தியாயம்	... 337
86.	புவனகோச சமாத்தி யத்தியாயம்	... 370
87.	பூகோள மேருவருணனை யத்தியாயம்	... 327
88.	பூமியினிடத்தில் தேவராதியர் இரசங்கறந்த வத்தியாயம்	... 45
89.	பூருபட்டாபிடேக வத்தியாயம்	... 114
90.	பொதுச்சிராத்தவிதி யத்தியாயம்	... 69
91.	போசன் வமிசமுரைத்த வத்தியாயம்	... 141
92.	மச்சாவதார வத்தியாயம்	... 17
93.	மத்திரராஜன் வரமடைந்த வத்தியாயம்	... 346
94.	மதனத் துவாதசிவிரத வத்தியாயம்	... 37
95.	மந்தாரசத்தமி விரத வத்தியாயம்	... 263
96.	மன்வந்தர வகுப்பத்தியாயம்	... 42
97.	மார்க்கண்டர் தன்மர் சம்வாத வத்தியாயம்	... 311
98.	யமுனைமான்மிய வத்தியாயம்	... 320
99.	யயாதி அட்டகசம்வாத அத்தியாயம்	... 126
100.	யயாதி இந்திரசம்வாத அத்தியாயம்	... 123
101.	யயாதிசாப அத்தியாயம்	... 110
102.	யயாதிசுதர்சாப வத்தியாயம்	... 112
103.	யயாதி சுவர்க்கஞ்சேர்ந்த வத்தியாயம்	... 120
104.	யயாதி சுவர்க்கம் விட்டுவிழுந்த அத்தியாயம்	... 124
105.	யயாதி பிரமதத்தன் சம்வாத வத்தியாயம்	... 134
106.	யயாதி புத்திரோற்பத்தி அத்தியாயம்	... 108
107.	ரசகல்யாண விரத வத்தியாயம்	... 226
108.	வசுமான்சிபியுடன் சம்வாத அத்தியாயம்	... 136
109.	வசு ருத்திரோற்பத்தி யத்தியாயம்	... 30
110.	விசோகசத்தமி விரத வத்தியாயம்	... 257
111.	விசோகத் துவாதசிவிரத அத்தியாயம்	... 266
112.	விபூதித் துவாதசி விரத வத்தியாயம்.	... 298
113.	விருக்கவுச்சவ வத்தியாயம்	... 213

பக்கம்.
114. விருட்டுணிவமிசத்தில் கண்ணனவதார வத்தியாயம் ... 145
115. விஷ்ணுதரிசன வத்தியாயம் ... 343
116. வீமத்துவாதசி விரத வத்தியாயம் ... 239
117. ஸ்நானவிதி யத்தியாயம் ... 306

உத்தர காண்டம்.

118. ஆபிசார வீறழிந்த வத்தியாயம் ... 402
119. ஆயுதவெட்டுப் பரிகார வத்தியாயம் ... 397
120. இரணியகசிபு சபாப்பிரவேச அத்தியாயம் ... 387
121. இரணியகசிபுவத வத்தியாயம் ... 418
122. இரணியகசிபு வரமடைந்த வத்தியாயம் ... 376
123. இரதநிருமாண வத்தியாயம் ... 482
124. இருடி மான்மிய வத்தியாயம் .. 533
125. இருபத்தைந்து பேதமுரைத்த வத்தியாயம் ... 463
126. கபாலமோசன வத்தியாயம் ... 452
127. கலாசொரூப வருணனை யத்தியாயம் ... 460
128. காலநேமி பார்செய வத்தியாயம் ... 552
129. கிரசனன்வத வத்தியாயம் ... 559
130. குமாரசாமி யுற்பத்தி அத்தியாயம் ... 581
131. சக்கரபாணி தேவர்க் கபயப்பிரதானஞ்செய்த வத்தியாயம்.. 390
132. சங்குலயுத்த வத்தியாயம் ... 414
133. சங்குலயுத்த வத்தியர்யம் ... 550
134. சர்ப்பதிட்ட பரிகார வத்தியாயம் ... 399
135. சிவசொரூபகதனமுரைத்த வத்தியாயம் ... 423
136. செம்பன்வத வத்தியாயம் ... 565
137. சேனுவத வத்தியாயம் ... 415
138. சோடணன்வத வத்தியாயம் ... 405
139. தயித்திய சேனுபங்க வத்தியாயம் .. 495
140. தாரகன் விசய வத்தியாயம் ... 574
141. தாரகாசுர உற்பத்தி யத்தியாயம் ... 540
142. தாரகாசுரவத வத்தியாயம் ... 594
143. தாரகாட்சன்வத வத்தியாயம் ... 499
144. தானவர்சம்போக வத்தியாயம் ... 504
145. திக்கயங்கள் வீறழிந்த வத்தியாயம் ... 401
146. திரிபுர நிருமாணமுரைத்த வத்தியாயம் ... 471
147. திரிபுரநிருமாண வருணனை வத்தியாயம் ... 473
148. திரிபுரம் சமுத்திரத்திலோடிய அத்தியாயம் .. 497
149. திரிபுரவிசய வத்தியாயம் ... 512

		பக்கம்.
150.	துர்ச்சகுன தெரிசன வத்தியாயம் ...	417
151.	துர்ச்சொப்பன தெரிசன வத்தியாயம் ...	475
152.	தேவரிருடியர் சம்வாத வத்தியாயம் ...	524
153.	தேவாசுரர் படையெழுச்சி யத்தியாயம் ...	545
154.	நாரசிங்கவுற்பத்தி யத்தியாயம் ...	412
155.	நாரதர் திரிபுரத்தில்வந்த வத்தியாயம் ...	485
156.	பத்திமான்மியவத்தியாயம் ...	438
157.	பரமேசுரர் தோத்திர வத்தியாயம் ...	478
158.	பரமேசுவரர் தேவர்கட் கபயங்கொடுத்த வத்தியாயம் ...	449
159.	பிரகலாத தேவேந்திர சம்வாத வத்தியாயம் ...	407
160.	பிரகலாதன் பட்டாபிடேக வத்தியாயம் ...	420
161.	பிரசாதபதன வத்தியாயம் ...	404
162.	பிராமணர் சொரூபமுரைத்த வத்தியாயம் ...	393
163.	பிரமவிட்டுணு சம்வாத அத்தியாயம் ...	443
164.	புரூரவாமகிமை யத்தியாயம் ...	514
165.	மகாவிட்டுணு சேடற்குபதேசஞ்செய்த வத்தியாயம் ...	457
166.	மன்வந்தரயுக வர்ணனை யத்தியாயம் ...	527
167.	மன்வந்தரானுகற்பச் சக்ரவர்த்திலட்சணமுரைத்தவத்தியாயம்	520
168.	வயிரவவுற்பத்தி யத்தியாயம் ...	445
169.	விட்டுணுதெரிசன வத்தியாயம் ...	410
170.	வித்துன்மாலி வத வத்தியாயம் ...	487
171.	வித்துன்மாலிவத் வத்தியாயம் ...	508
172.	விஷ்ணுபராசெய வத்தியாயம் ...	561
173.	விஷ்ணு புருடபாரசெய வத்தியாயம் ...	382
174.	யோக சாத்திரத்தின் வண்மையுரைத்த வத்தியாயம் ...	426
175.	யோகவிக்கின முரைத்த வத்தியாயம் ...	434

பிழை திருத்தம்.

முகவுரை.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	12	தோந்த	தோக்த
,,	18	முக்திபேற்றிற்கு	முக்திப்பேற்றிற்கு
16	20	சொல்லைத்	சொல்லைச்

முதலாவது பூர்வகாண்டம்.

4	7	பின்மூவா	மீரோழா
5	8	வழிவில	வழுவில
9	30	சவுமயங்	சவுமியஞ்
,,	13	ளணைத்தும்	ளணைத்தும்
10	25	மிகுந்த	மிகுத்த
11	10	மாதியின்றிரு	மாதியிற்சிரு
,,	25	சிரார்த்த	சிராத்த
12	8	வாறும்	வாறு
,,	32	மாறு	மாறுந்
15	31	செழிந்திரு	செழுந்திரு
17	31	ரன்ற	ரன்றோ
19	15	றலவில்	றலைவில்
20	17	குவலயம்	குவலயப்
,,	18	பெற்ருன்	பெற்ருள்
21	6	பிரளைய	பிரளய
,,	9	வ்ளி	வழி
,,	,,	நாண்	காண்
,,	32	மடங்கஞேடு	மடங்களோடு
23	10	நரித்த	தரித்த
23	14	ழமல	லமல
,,	12	பொருகுட்டின்	பொகுட்டின்
24	19	சுத்தம்	சத்தம்
26	4	சொல்லை நீ	சொலை நீ
,,	12	மன்ரு	மன்ருல்
27	5	வின்ருன்	வின்ருள்
,,	36	யயமதத்தன்	யியமதத்தன்
28	8	சாக்குடப்	சாக்குடற்
29	6	பதின்மருத்	பதின்மருந்
44	38	மற்றிடு	ளற்றிடு
46	4	மாயாஞல்	மாயஞல்
47	19	திருந்தி	திருந்திய
50	10	கிர்த்தி	கீர்த்தி
60	16	பிறர்க்கரு	பிறக்கரு
62	5	பேறருள்வ	பேறருளு
65	2	தென்றிசா	தென்றிசை
,,	27	கொடும்பார்	கொடுப்பார்
66	25	எட்டக்கரங்கர்	எட்டக்கரங்கள்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
70	20	பூரண	பூரணை
71	36	மறுந்த	மனந்த
74	15	வொண்பதினன்	வெண்பதினன்
84	18	வாறின்	வாற்றின்
112	26	மன்னிலென்	மன்னவென்
114	20	பூதயவினல்	பூததயையினல்
120	8	கலைமாள்	கலைமான்
126	21	மிச்காய்க்	மிக்காய்
127	31	மிக்கா	மிக்காய்
130	21	கருமைமயஞ்	தருமையஞ்
140	31	சிகணைப்	சிகற்
146	3	ஞோரார்வ	ஞோர்வ
,,	27	கனற்றெழிச்	கனற்றெழில்
155	32	முடிப்பவென்ன	முடிப்பவளென்ன
158	13	யொழுதி	யொழிதி
163	19	வெள்ளிப்	வெள்ளி
,,	30	தமருகந்தான்	தமருகத்தான்
174	28	வளிதனன்	வளித்தனன்
178	33	கேட்போப்	கேட்போர்
182	33	டிரபி	டிறலபி
192	24	பரப்பாய்ப்த்	பரப்பாய்த்
193	26	ன்றன்மந்	னதன்மந்
194	8	முட்ஞட்	முன்ஞட்
,,	32	மாவனபு	வாமனபு
212	18	றத்திற்	றடத்திற்
220	34	யாரு	யாவரு
221	31	பூசை	பூசை
255	11	மாயேன்	மாயோன்
257	24	ஆலச்சர்க்கரை	ஆலைச்சர்க்கரை
265	7	ணசரா	ணரசா
266	30	கதிளே	கதியே
270	22	கீழ்த்திரை	கீழ்த்திசை
,,	32	போற்றறித்	போற்றித்
277	3	கென்னே	கென்ன
,,	4	உரை	உமை
281	33	பலர்சிலை	பலாசிலை
283	24	நகருறு	மலையுறு
317	12	யாத்தரைக்கே	யாத்திரைதனக்கே
325	1	உஉரு	௬உரு
331	3	ருடாதி	வருடாதி
343	30	தனிதன்	தனதன்
348	8	ஞேன்கண்	ஞெண்கண்
351	31	ஞங்கண்	ஞங்க
353	1	வத்தியாயம்	யத்தியாயம்
365	9	கவனத்தோடும்	ககனத்தோடும்
369	21	கின்ஞேர்	ரின்ஞேர்.

பிழைதிருத்தம்.

இரண்டாவது உத்தரகாண்டம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
377	23	சகிபன்	கசிபன்
,,	28	லிரணி	லிரணி
379	30	யீத்தெமைக்	மீங்தெமைக்
384	12	நேகதுமாலன்	கேதுமாலன்
386	8	ப்ழி	பகழி
395	29	தீர்த்த	தீர்த்து
397	34	னென்று	றென்று
416	14	முடியட	முடிபட
418	33	பிரணிய	யிரணிய
420	24	அகல்புவி	அகன்புவி
427	30	காண்பாலி	காண்பானி
432	26	பாவனேகன்	பாவனேகள்
435	27	சுக்களாக	பசுக்களாக
457	35	மார்	மால்
462	2	ரமமா	ரம்மமா
465	32	ரீர்த்தண்டலே	ஈர்ந்தண்டலே
472	14	யதலும்	யாலும்
481	18	சங்ரா	சங்கரா
492	22	சீத்தப்	சீய்த்தப்
498	14	ஞாற்று	ஞாற்று
503	10	பொன்	பொன்னேர்
504	13	காநாக்	காகாக்
,,	14	பூசை	பூச
514	21	னனிற்றிஞன்	னவிற்றுவான்
526	26	சத்தியப்	சத்தியம்
531	26	மிகுத்ததர்	மிகுத்தவர்
533	26	றுறெனு	முறெனு
535	35	முண்டி	வுண்டி
551	35	ராக்குங்	காக்குங்
552	7	கங்குலபுத்த	சங்குலயுத்த
554	17	குத்தின்	குத்தின
,,	25	மார்த்த	ஆர்த்த
562	17	னனடவாய்	னடைவாய்
590	24	நண்ணுர	நண்ணுற
,,	27	காவனெ	காவன